

தமிழ்நாடு மாநில நிர்வாக அறிக்கை

1989-90

தமிழ்நாடு மாநில நிர்வாக அறிக்கை

1989-90

108-4—A

முன்னுரை

1989-90 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு மாநிலத்தின் நிருவாகம் பற்றிய இந்த அறிக்கை மாநில அரசின் பல்வேறு துறைகள் ஆற்றிய பணிகள் குறித்து விரிவாக விளக்குகிறது.

2. 1989-90 ஆம் ஆண்டில், தென்-மேற்கு பருவ மழை இயல்பை விட அதிக மாகவே அதாவது 341.8 மி.மீ. பெய்துள்ளது. இயல்பான மழை அளவு 308.6 மி.மீ. ஆகும். எனினும் ஜூன் மாதத்தில் இயல்பான அளவைவிட குறைவாக மழை பெய்த தாலும் நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் போதுமான அளவில் இல்லாததாலும், மாநிலத்தில் சாகுபடி முழு வீச்சில் நடைபெறவில்லை. ஜூன் மாதம் 12 ஆம் தேதி திறந்து விடப்பட வேண்டிய மேட்டூர் அணை மிகவும் கால தாமதமாக ஆகஸ்டு 20ஆம் நாளன்று திறந்து விடப்பட்டதாலும், 1989 ஆகஸ்டு மாதத்தில் இயல்பாகப் பெய்ய வேண்டிய 94.6 மி.மீ. மழைக்குப் பதிலாக 42.6 மி.மீ. மட்டுமே பெய்ததாலும் நெல் சிறு தானியங்கள் விளைவிக்கபடும் பகுதியில் குறிப்பாக கழிமுகப் பகுதியில் கனிச மான அளவிற்கு இழப்பு ஏற்பட்டது. அங்கு உழவர்கள் ஒரே ஒரு பயிரை மட்டும் விளைவித்து திருப்தி அடைய வேண்டியதாயிற்று, தென் மேற்கு பருவ மழையின் மூலம் அதிக மழை பெய்ய வேண்டியதற்கு மாறாக, வடகிழக்குப் பருவ காலத்தில் வறட்சியால் பாதிப்பட்ட தென் மாவட்டங்களில் கணிசமாக மழை பெய்தது. இருந்த போதிலும் இயல்பாக பெய்ய வேண்டிய 448 மி. மீட்டருக்கு பதிலாக 304 மி.மி. மழை மட்டுமே பெய்தது. இந்த ஆண்டில் மாநிலத்தில் 62.32 இலட்சம் மெட்ரிக் டன்ஸ் அரிசி உற்பத்தி செய்யப்பட்டது.

3. பரந்த அளவிலான செம்மையான பொது விநியோக கூட்டமைப்பின் கீழ் மாநிலத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற 21,134 நியாய விலைக் கடைகளின் மூலம், 129 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு குறைந்த விலையில் அரிசி சர்க்கரை, கோதுமை, மண்ணெண்ணெய், பாமாலின் எண்ணெய், போன்ற இன்றி யமையாப் பொருட்கள் வினியோகிக்கப்பட்டன.

4. ஆதி திராவிடர்கள், பழங்குடியினருக்கு வீட்டுமனைகள் ஒதுக்கீடு செய்யும் திட்டம் 1989-90 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல் படுத்தப்பட்டது. இதன் மூலம் 34,879 வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டன.

5. தொழில் துறையைப் பொருத்த வரையில், 12,196 நிரந்தர 38,531 தற்காலிக சிறு தொழிற் பிரிவிற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. 7000 கைத் தொழில் பிரிவுகள் பதிவு செய்யப்பட்டன. படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் 8,692 பேர்க்கு வங்கிகளிடமிருந்து ரூ. 1518.78 இலட்சம் கடன்கள் கிடைக்க வகை செய்யப்பட்டது.

6. அறிக்கை ஆண்டில் 648 பேரூராட்சிகளில் 257 பேரூராட்சிகளில்" விரிவான குடிநீர் வழங்கும் திட்டம் " செயற்படுத்தப்பட்டது.

7. கல்வித் துறையைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டில் 6 முதல் 11 வரை யிலான வயதுத் தொகுதியைச் சேர்ந்தவர்கள் 100 சதவீதமும், 11 முதல் 14 வரை யிலான வயதுத் தொகுதியைச் சேர்ந்தவர்கள் 80 சதவீதமும் பள்ளிகளில் சேர்ந்து பயிலுகின்றனர். தொடக்கக் கல்வி நிலையில் படிப்பை பாதியிலே நிறுத்திவிடுபவர் களின் வீதம் மிகுவாகக் குறைந்துவிட்டது. மேல் நிலைப் பள்ளி நிலையில் வாழ்க்கைத் தொழில் கல்வி அவிப்பதிலும் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. மேல்நிலைப் பள்ளிகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வாழ்க்கைத் தொழில் கல்விகள் கற்பிக்கப் படுகின்றன. மொத்தம் 108 வாழ்க்கைத் தொழில் கல்விகள் கற்பிக்கப் படுகின்றன. 4.42 இலட்சம் மேல் நிலைப் பள்ளி மாணவர்களுள் 93,141 பேர் 1989-90 ஆம் ஆண்டில் வாழ்க்கைத் தொழில் கல்வி கற்றனர்.*

8. கிராமப்புற சுகாதார மையங்கள், நோய்த் தடுப்பு பணிகளையும் நோய் நிதிச்சைப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றன. இந்த மாநிலத்தி 31-3-1990 அன்றுள்ளபடி, 1386 தொடக்க சுகாதார நிலையங்கள் (72 சமுதாய சுகாதார நிலையங்கள் உட்பட) செயல்பட்டு வந்தன. 145 தொடக்க சுகாதார நிலையங் களில் கண் பார்வை இழப்பைத் தடுக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரு கின்றது.

9. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சுமார் 4080.120 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டது. இதனால் 2,21,509 குடும்பங்கள் பயனடைந்தன. 1,10,470 ஆதி திராவிடர்/பழங்குடியினர் பயனடைந்தனர். இதில் 77,336 பேர் மகளிர் ஆவர்.

10. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், (தமிழ்நாடு இளைஞர் சுய வேலை வாய்ப்புத் திட்டம் 1989-90 இல் 13,252 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டது. இவர்களில் 5,613 பேர் ஆதி திராவிடர்கள், 68 பேர் பழங்குடியினர் ஆவர். 2,710 பேர்களுக்கு சுய வேலை வாய்ப்பும் 6,646 பேர்களுக்கு ஊதிய வேலை வாய்ப்பும் அளிக்கப்பட்டது.

11. ஆதி திராவிடர்/பழங்குடியினர் நலன் கருதி 1989-90 இல் 41,666 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டன. ரூ. 112.00 இலட்சம் செலவில் 7,456 கிராமப்புற கழிவு றைகள் கட்டப்பட்டன.

12. ஆதி திராவிடர் நலனில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது மற்றொரு அம்சமாகும். மருத்துவம், பொறியியல் மற்றும் பிற தொழில் கல்வி நிலையங்கள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்களில் ஆதி திராவிடர் / பழங்குடியினருக்கு முறையான பிரதிநிதித்துவம் அளிக்கப்படும் வகையில் ஒவ்வொரு படிப்பிலும் ஆதி திராவிடர்/ பழங்குடியினருக்கு 18 சதவீதம் இடங்கள் ஒதுக்கப் பட்டுள்ளன. ஆதி திராவிடர்/ பழங்குடியினர் நலனைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கு மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய படிப்புதவித் தொகை, மெட்ரிக் படிப்பிற்கு பிந்தைய படிப்புதவித் தொகை ஆகிய வையும். கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு தேசிய சேமிப்புச் சான்றி தழ்கள் வடிவில் ரூ. 1000. முதல் ரூ. 4,000 வரை ரொக்க மானியமும் வழங் கப்பட்டன. குடிநீர்க் கிணறுகள் தோண்டுதல், வீடுகள் கட்டுதல், கருவிகளையும், துணை கருவிகளையும் இலவசமாக வழங்குதல், பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களை யும், நிலக் குடியேற்றக் கூட்டுறவுச் சங்கங்களையும் அமைத்தல் ஆகியவை ஆதி திராவிடர்களின் நலன் கருதி செயற்படுத்தப்படும் சில திட்டங்களாகும்.

13. சட்டம்-ஒழுங்கு பராமரிப்பு, குற்றங்கள்நிகழாமல் தடுத்தல், அவற்றைக் கண்டு பிடித்தல் ஆகியவை கட்டுப் பாட்டின் கீழ் உள்ளவை.

14. தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் பணிகளும், அவற்றின் சாதனை களும் இந்த அறிக்கையில் சுருக்கமாகத் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இது பொது மக்க ளுக்கு பயனுள்ள தகவலை அளிக்கும் என நம்பப்படுகிறது.

டி. வி. வெங்கட்டராமன், இ. ஆ. ப.
தலைமைச் செயலாளர்,
தமிழ்நாடு அரசு.

உள்ளடக்கம்.

அத்தியாயம் 1—பொது :

	பக்கம்
1. நிருவாகம். .	1
2. மேதகு ஆளுநரின் சுற்றுப்பயணம்	2–5
3. 1989–90 ஆம் ஆண்டில் சீர் பெருமக்கள் வருகை	6–15

அத்தியாயம் 2—ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் :

4. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்	16–23

அத்தியாயம் 3—வேளாண்மைத் துறை :

5. வேளாண்மை	24–26
6. வேளாண்மைப் பொறியியல்	26–31
7. வேளாண்மை விற்பனைத் துறை	32–34
8. வேளாண்மைப் பல்கலைக்கழகம் . .	34–35
9. தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள்	36–37
10. எண்ணெய் வித்துக்கள்	38–40
11. விதைச் சான்றளிப்பு	40–43
12. வேளாண்மை விளைபொருள் விற்பனை வாரியம்	43–44
13. தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம்.	45–48
14. தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம்.	48–49

அத்தியாயம் 4—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை :

15. கால்நடை பராமரிப்பு . .	50–53
16. பால் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை . .	53–55
17. பால்வளம்	56–60
18. மீன்வளம்	60–64
19. தமிழ்நாடு பால உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ...	64–66

அத்தியாயம் 5—பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை.

20. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன் ..	67 69
21. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்	69–72

அத்தியாயம் 6—வணிகவரி மற்றும் அறநிலையத் துறை :

22. வணிக வரிகள்	73–7
23. இந்து சமய அற நிறுவனங்கள்	75–80
24. ஆவணப் பதிவு மற்றும் ஸ்டாம்ப்	80–87
25. முத்திரைத் தாள்கள் (அஞ்சல சாராதவை)	87–92
26. தமிழ்நாடு விற்பனை வரி மேல் முறையீடு தீர்ப்பாயம்	93
27. வங்கிகள் ...	94–97

பக்கம்

அத்தியாயம் 7—கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை :

28. கூட்டுறவு 97—100

29. குடிமைப் பொருள் 101—104

அத்தியாயம் 8—கல்வித் துறை :

30. அழகப்பா பல்கலைக்கழகம் 104—107

31. அண்ணா பல்கலைக்கழகம் 107—109

32. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 109—111

33. பாரதியார் பல்கலைக் கழகம் 112—115

34. பாரதிதாசன் பல்கலைக் கழகம் .. 116—118

35. கல்லூரிக் கல்வி .. 118—121

36. கன்னிமாரா (மாநில மைய) நூலகம் 121—123

37. அரசுத் தேர்வுகள் 123—125

38. தொலை உணர்வு மையம் 125—127

39. சட்டக் கல்வி .. 128—129

40. மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 130—135

41. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் 136—139

42. தேசிய மாணவர் படை .. 139—140

43. பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி 141—144

44. பொது நூலகங்கள் 144—146

45. பள்ளிக் கல்வி 146—152

46. விளையாட்டு மற்றும் இளைஞர் அணி 152—157

47. தமிழ்நாடு ஆலணைக் காப்பகம் .. 157—161

48. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் 162—163

49. தமிழ் பல்கலைக்கழகம் 163—165

50. தொழில் நுட்பக் கல்வி 166—168

51. தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மையம் 168—171

52. தமிழ்நாடு மாநிலஅறிவியல் தொழில் நுட்பக் குழு 172—174

53. சென்னைப் பல்கலைக்கழகம் 174—177

அத்தியாயம் 9—சுற்றுப்புற சூழ்நிலைக் கட்டுப்பாடு மற்றும் வனத்துறை :

54. சின்கோனா .. .. 178—180

55. வனங்கள் .. .. 181—183

56. மரம வளர்ப்பு 183

பக்கம்

அத்தியாயம் 10—நீதித் துறை :

57. கூட்டுறவுத் தணிக்கை — 184

58. அரசு தகவல் தொகுப்பு மையம் .. 185—186

59. நிறுவன நீதி 187—189

60. உள்ளாட்சி நீதித் தணிக்கை 190

61. சிறு சேமிப்பு ... 190—192

62. அரசு வணிக திட்டங்கள் .. 192

63. மாநில நீதி 192—201

64. தமிழ்நாடு பரிசுச் சீட்டுகள் 202

65. சுருளுலங்கள் மற்றும் கணக்குகள் .. 202—204

அத்தியாயம் 11—கைத்தறி துணிகள் மற்றும் கதர்த் துறை :

66. கைத்தறியும் பஞ்சாலையும் 205—208

67. பட்டு வளர்ப்பு 208—211

அத்தியாயம் 12—நீலவாழ்வு இந்திய மருத்துவம், ஓமியோபதி மற்றும் குடும்ப நலத் துறை :

68. பிறப்பு மற்றும் இறப்பு மற்றும் திருமணப் பதிவு .. 212—215

69. தொற்று நோய்ச் கட்டுப்பாடு மற்றும் பிறப்பு மற்றும் இறப்பு புள்ளி விவரங்கள். 216—219

70. டானிடா உதவி பெறும் தமிழ்நாடு பகுதி திட்டம் 220—221

71. மருந்துகள் கட்டுப்பாடு நிர்வாகம் 222—224

72. இந் நோய்த் தடுப்பு மருந்து நிறுவனம் 225—226

73. மருத்துவக் கல்வி 226—229

74. மருத்துவப் பணிகள் மற்றும் குடும்ப நலம் ... 229—233

75. டாக்டர் எம்.ஜி.ஆர், பல்கலைக் கழகம் .. .. 233—238

76. மனநோய் நலம் ... 239—241

77. ஆரம்ப சுகாதார நிலையங்கள் — 241—243

78. தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்து 243—244

79. இந்திய முறை மருத்துவம் மற்றும் ஓமியோபதி 244—251

அத்தியாயம் 13—உள் துறை :

80. திரைப்படங்கள் .. ... 252—254

81. குடிமைப் பாதுகாப்பு 254

82. உரிமையியல் நீதிமன்றங்கள் 255—262

83. குற்றவியல் நீதி .. — 263—266

84. தீயணைப்புப் படையினர் ... ... — 267—269

பக்கம்

அத்தியாயம் 3—உள்துறை—தொடர்ச்சி.

85. தடய அறிவியல் 269—271

86. சென்னை மாநகரக் காவல் 272—274

87. இயக்கு ஊர்திகள் நிர்வாகம் 274—281

88. சிறைகள் மற்றும் நன்னடத்தைப் பிரிவு 281—283

89. தமிழ்நாடு காவல் 284—287

அத்தியாயம் 14—வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை :

90. இடவசதிக் கட்டுப்பாடு 288

91. வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள். . 288—291

92. நகர் ஊரமைப்புத் திட்டம் 291—293

அத்தியாயம் 15—தொழிற் துறை :

93. தொழில் மற்றும் வணிகம். . 294—299

94. மாநில புவியியல் மற்றும் சுரங்கம் 300—305

95. சர்க்கரை 305—306

அத்தியாயம் 16—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை :

96. செய்தி மற்றும் மக்கள் தொடர்பு 306—314

97. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை 314

98. சுற்றுலா 315—317

அத்தியாயம் 17—தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை :

99. வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி 318—322

100. தொழில் நிறுவனச் சட்டங்கள் 323—326

101. தொழிலாளர் நலன் 327—331

102. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிறுவனம் 332—333

103. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் 333—334

அத்தியாயம் 18—சட்டத் துறை :

104. சட்டம் இயற்றுதல் 335—343

அத்தியாயம் 19—தமிழ்நாடு சட்டமன்ற பேரவைச் செயலகம் :

105. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 344—346

அத்தியாயம் 20—நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை :

106. கோயம்புத்தூர் மாநகராட்சி 347—348

107. சென்னை மாநகராட்சி 349—351

108. மதுரை மாநகராட்சி 352—353

109. நகராட்சி நிர்வாகம் 353—358

110. நகரட்சி மற்றும் தேர்தல்கள் 358

பக்கம்

அத்தியாயம் 21—பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை :

111. அண்ணா மேலாண்மை நிறுவனம் 359—360

112. குடிமுறைப் பணியாளர் பயிற்சி 360—361

113. பணியாளர் நிருவாக சீர்திருத்தத் துறை 361—362

114. தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் கூட்டுக் குழு 362—363

115. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 363—365

116. ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயம் 365—368

117. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு 368—370

அத்தியாயம் 22—திட்டமிடல் மற்றும் வளர்ச்சித் துறை :

118. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி 371—372

119. விலைவாசிப் புள்ளியல் 373—376

120. மாநில திட்டக் குழு 377—378

அத்தியாயம் 23—மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை :

121. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை 379—382

அத்தியாயம் 24—பொதுத் துறை :

122. கர்நாடக உதவித் தொகை 383

123. மக்கள் தொகை மற்றும் தேர்தல்கள் 383—387

124. முதலமைச்சரின் சிறப்பு அலுவலகம் 388

125. முறையீட்டுப் பிரிவு 388—389

126. முன்னாள் படைவீரர்கள் நலம் 390—392

127. பர்மா, இலங்கை மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்புவோரின் மறுவாழ்வு. 392—397

128. பிராந்தியப் படை 397—399

129. தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் .. 400—401

அத்தியாயம் 25—பொதுப்பணித் துறை

130. கொதிகலன்கள் 402—404

131. மின் ஆய்வுத் துறை 404—408

132. நிலத்தடி நீர் 409—411

133. பாசனம் 411

134 பொதுப் பணித் துறை (கட்டிடங்கள்) 412—413

135 தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்.. 413—414

பக்கம்

அத்தியாயம் 26—வருவாய்த் துறை :

136. வேளாண்மை வருமான வரி 414—416

137. நிலமற்ற ஏழைமக்களுக்கு நிலங்களை ஒப்படைச் செய்தல் 417

138. வெள்ளம் ... 417—418

139. நிலச் சீர்திருத்தம் ... 418—422

140. நில வரி ... 423—424

141. மனுநீதித் திட்டம் ... 424

142. நில அளவையும் நிலப்பதிவேடுகளும் ... 424—426

143. எஸ்டேட்டுஒழிப்புத் திட்டம் ... ... 426—428

144. நகர்ப்புற நிலவரி மற்றும் நகர்ப்புற நில உச்ச வரம்பு 428—430

அத்தியாயம் 27—ஊரக வளர்ச்சித் துறை:

145. பூமிதானமும் கிராமதானமும் 431—432

146. ஊராட்சி வளர்ச்சி 432—439

147. பஞ்சாயத்து காடுகள் ... 439—440

148. பேரூராட்சிகள் ... 441—444

அத்தியாயம் 28—சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறை:

149. சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் ஒழுக்கக் கண்காணிப்புப் புணி.. 445—449

150. முதியோர் உதவித்தொகைத் திட்டம் ... 450—451

151. தமிழ்நாடு முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் 451—452

152. சமூக நலம் ... ... 453—462

153. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டசத்துத் திட்டம் 462—463

அத்தியாயம் 29—தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத்துறை,

154. தொல்பொருள் இயல் 464—467

155. அரசு அருங்காட்சியகங்கள் 468—471

156. உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் 472—473

157. தமிழ் வளர்ச்சி 474—477

158. தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு 477—478


அத்தியாயம் 30—போக்குவரத்துத்துறை,

159. நெடுஞ்சாலைகள் மற்றும் ஊரகப் பணிகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகள் .. .. 479—490

160. சாலைப் போக்குவரத்து நிறுவனம் ... 491—492

161. சிறு துறைமுகங்கள் .. ... 492—493

162. தமிழ்நாடு இயக்கூர்திகள் பராமரிப்புத் துறை ... 494—495



பதிவு எண் . 38-1/91-10000.
© தமிழ் நாடு அரசு பதிப்புரிமை பெற்றது.
சில அளவை மத்திய அலுவலகம், சென்னை-5. விலை ரூ.1/-

அத்தியாயம்—1—பொது.

• நிருவாகம்.

தமிழ்நாட்டில் ஆளுநராக டாக்டர் பி. சி. அலெக்ஸாண்டர் அவர்கள் 17—2—1988 அன்று பொறுப்பேற்று இவ்வறிக்கை காலம் முழுவதும் தொடர்ந்து பதவி வகித்தார்.

2. முதலமைச்சர் டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையிலான அமைச்சரவை 27—1—1989 அன்று பதவி ஏற்று 8—3—1990 வரை கீழ்க்கண்ட அமைச்சர் களுடன் பணியாற்றி வந்தது :—

1. பேராசிரியர் கே. அன்பழகன்
2. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
3. திரு. நாஞ்சில் கி. மனோகரன்
4. திரு. மு. கண்ணப்பன்
5. திரு. கே. பி. கந்தசாமி
6. திரு. கோ. சி. மணி
7. திரு. ஆற்காடு என், வீராசாமி
8. திரு. பொன். முத்துராமலிங்கம்
9. திரு. வீரபாண்டி ஆறுமுகம்
10. திரு. துரைமுருகன்
11. திருமதி. சுப்புலட்சுமி ஜகதீசன்
12. டாக்டர். இ. இராமகிருஷ்ணன்
13. டாக்டர் பொன்முடி என்கிற தெய்வசிகாமணி
14. திரு. கே. என். நேரு
15. டாக்டர் கே. சந்திரசேகரன்
16. திரு. எள். தங்கவேலு

3. திரு. ஆற்காடு என். வீராசாமி அவர்கள் அமைச்சரவையிலிருந்து 9—3—1990 அன்றிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

4. திரு. ஆற்காடு என். வீராசாமி அவர்கள் அமைச்சரவையிலிருந்து விடுவிக்கப் பட்டவுடன் முதலமைச்சர் டாக்டர் மு. கருணாநிதி தலைமையின் கீழ் கீழ்க்கண்ட அமைச்சர்களுடன் இவ்வறிக்கை காலம் முழுதும் அமைச்சரவை இயங்கி வருகிறது :—

1. பேராசிரியர் கே. அன்பழகன்
2. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
3. திரு. நாஞ்சில் கி. மனோகரன்
4. திரு. மு. கண்ணப்பன்
5. திரு. கே. பி. கந்தசாமி
6. திரு. கோ. சி. மணி
7. திரு. பொன். முத்துராமலிங்கம்
8. திரு. வீரபாண்டி ஆறுமுகம்
9. திரு. துரைமுருகன்
10. திருமதி. சுப்புலட்சுமி ஜகதீசன்
11. டாக்டர் இ. இராமகிருஷ்ணன்
12. டாக்டர் பொன்முடி என்கிற தெய்வசிகாமணி
13. திரு. கே. என். நேரு
14. டாக்டர் கே. சந்திரசேகரன்
15. திரு. எள். தங்கவேலு

மேதகு ஆளுநரின் சுற்றுப்பயணம்.

1. ஆளுநரின் சுற்றுப்பயணம் :

மாநிலத்திற்குள் மேற்கொண்ட சுற்றுப்பயணம் :

ஏப்ரல் 1989 :—ஏப்ரல் திங்கள் 18ஆம் நாளிலிருந்து நான்கு வாரத்திற்கு ஆளுநர் உதகமண்டலத்தில் தங்கியிருந்தார். அவர் 19ஆம் நாளன்று குடியரசுத் தலைவரை உதகமண்டலத்தில் வரவேற்றார். இவர், ஏப்ரல் 19, 20ஆகிய இரு நாட்களிலும் முறையே நடைபெற்ற பள்ளி ஒன்றின் விழா நிகழ்ச்சியிலும் (லவ்டேலில் உள்ள லாரன்ஸ் பள்ளி) வானொலி வானியல் மையத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சியிலும் கலந்துகொண்டு அவற்றிற்குத் தலைமை தாங்கினார் ; அவ்விரு நாட்களிலும் நடை பெற்ற அவ்விரு விழாக்களிலும் குடியரசுத் தலைவர் கலந்து கொண்டு அவற்றைத் தொடங்கி வைத்தார்.

மே :—காஞ்சிபுரம் சங்கரமடத்தில் மே திங்கள் 24ஆம் நாளன்று நடைபெற்ற இராஷ்டிரீய சங்கர ஜெயந்தி மகோத்சவத்தின் நிறைவு நாள் விழாவில் பங்கேற்றார்.

ஜூலை—11 : ஆம் நாளிலிருந்து 4 நாட்கள் திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தார். மீம்பிட்டக்குரிச்சி கிராமத்தில் இந்திரா வீட்டு வசதி திட்டத்தில் கட்டப்பட்ட ஆதி திராவிடர்களுக்கான குடியிருப்புகளை அவர் 11 ஆம் நாளன்று திறந்து வைத்தார். 12ஆம் நாளன்று முடைந்துறை வன விலங்குகள் சரணாலயத்தை பார்வையிட்டார். 13 ஆம் நாளன்று குற்றாலத்தில் படகுத் துறையைத் திறந்து வைத்தார். 14 ஆம் நாளில் திருநெல்வேலியில் மாவட்ட வளர்ச்சித் திட்டங்களின்கீழ் கடன்களை வழங்கினார்.

ஆகஸ்டு :—வேலூரிலுள்ள (வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டம்) கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரியில் ஆகஸ்டு 12ஆம் நாளன்று எட்வர்டு கால்ட் நினைவு நூலகம் ஒன்றினைத் தொடங்கி வைத்தார். சாத்தமதுரை கிராமத்தில் பல நலப்பணி பிரிவுகளைப் பார்வையிட்ட பின்னர், பாகாயத்தில் கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரியின் சமுதாய சுகாதாரத்துறை நடத்திவரும் ஆதார மருத்துவமனையைப் பார்வையிட்டார். காந்தி கிராமத்தில் (மதுரை மாவட்டம்) ஜவஹர் நேரு நூற்றாண்டு விழாத் தொடர்பாக நடைபெற்ற தேசியக் கருத்தரங்கில் 28 ஆம் நாளன்று சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்.

செப்டம்பர்—10 : ஆம் நாளன்று பாபநாசத்தில் சில தொகுதி வீட்டு வசதித் திட்டங்கள், குடிதண்ணீர் வழங்கும் திட்டங்கள் ஆகியவற்றைத் தொடங்கி வைத்தார். 11 ஆம் நாளன்று ஆடுதுறையிலுள்ள (தஞ்சை மாவட்டம்) வேளாண் ஆராய்ச்சி நிலையத்தைப் பார்வையிட்டார்.

செப்டம்பர்—15 :—15 ஆம் நாள் முதல் 18 ஆம் நாள் வரையில் அவர் மதுரை, திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டங்களில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். 15 ஆம் நாளன்று கொடைக்கானலிலுள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டார். 18 ஆம் நாளன்று அவர் குடிநீர் வழங்கும் திட்டங்கள், தொகுதி வீட்டுவசதித் திட்டங்கள் ஆகியவற்றைத் தொடங்கி வைத்ததுடன், பழநியில் நடைபெற்ற விழா ஒன்றில் நலிவுற்ற பிரிவினருக்குக் கடன் தொகைகளை வழங்கினார்.

நவம்பர்—12 : ஆம் நாளன்று அரிமா சங்கத்தின் பன்னாட்டு இயக்கத்தின் நல் ஆதரவுடன் திருச்சிராப்பள்ளியில் சமூகப்பணி மையம் ஒன்றை அவர் தொடங்கி வைத்தார். அன்று மாலையில் நடைபெற்ற பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் ஆண்டுப் பட்டமளிப்பு விழாவிற்கு அவர் தலைமை தாங்கினார். 13 ஆம் நாளன்று அண்ணாமலை நகரில் (தென் ஆற்காடு மாவட்டம்) நடைபெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆண்டுப் பட்டமளிப்பு விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

டிசம்பர் :—திருச்சிராப்பள்ளியில் வட்டாரப் பொறியியல் கல்லூரியினால் ஏற்பாடு செய்யப்பட்ட ''அறிவியல் பூங்கா'' ஒன்றினை டிசம்பர் 7 ஆம் நாளன்று ஆளுநர் தொடங்கி வைத்தார். மதுரையிலுள்ள ''கேந்திரிய வித்யாலயாவின்'' புதிய கட்டிடம் ஒன்றை 8 ஆம் நாளன்று அவர் திறந்து வைத்தார். 14 ஆம் நாளன்று நடைபெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வைர விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதுடன் அப் பல்கலைக் கழகத்தின் சிறப்புப் பட்டமளிப்பு விழாவிலும் அவர் பங்கேற்று தலைமை தாங்கினார்.

டிசம்பர்—28 : ஆம் நாளன்று அவர் கோயம்புத்தூரிலுள்ள அவினாசிலிங்கம் மகளிர் மனையியல்—உயர்நிலைக்கல்வி நிறுவனத்தின் (நிகர் நிலைப் பல்கலைக் கழகம்) முதல் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்.

1990 பிப்ரவரி :—பிப்ரவரி 12 ஆம் நாளன்று மதுரையில் உள்ள மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தின் ஆண்டுப் பட்டமளிப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தலைமை தாங்கினார்.

மார்ச் :—அவர் மதுரையிலுள்ள மதுரைக் கல்லூரியின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளை மார்ச் திங்கள் 18 ஆம் நாளன்று தொடங்கி வைத்தார். 19 ஆம் நாளன்று காரைக்குடியில் உள்ள அழகப்பா பல்கலைக் கழகத்தின் ஆண்டுப் பட்டமளிப்பு விழாவிற்கு அவர் தலைமை தாங்கினார்.

மாநிலத்திற்கு வெளியே மேற்கொண்ட சுற்றுப்பயணம் :

ஏப்ரல் : 1989.—7 ஆம் நாளன்று அவர் போர்ட் பிளேர் சென்று அந்தமான் நிக்கோபார் நிருவாகமும் தென் மண்டலப் பண்பாட்டு மையமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த ''இவு மகோத்சவம்—89'' என்னும் பண்பாட்டு விழாவினைத் தொடங்கி வைத்தார்.

ஜூன் :—புதுடெல்லியிலுள்ள தின்மூர்த்திபவனில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் நேரு அறப் பொறுப்புக் கழகம் ஜூன் 3 ஆம் நாளன்று நடத்திய அறங்காவலர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

செப்டம்பர் :—பூனாவிலுள்ள தென்மண்டல இராணுவத் தலைமையிடத்தில் நடைபெற்ற பொது நிருவாக—இராணுவத் தொடர்புக் கருத்தரங்கின் ஆண்டு விழாவினை தொடங்கி வைத்தார். தேசிய இராணுவப் பயிற்சிக் கல்லூரிக்குச் சென்று இராணுவத்தினரிடையே உரையாற்றினார்.

டிசம்பர் :—அவர் டிசம்பர் 29 ஆம் நாளன்று ஆகாலை (கேரள மாநிலம்) சென்று, தென்மண்டலப் பண்பாட்டு மையம் ஏற்பாடு செய்து நடத்திய பழங்குடியினர் கலை விழாவினைத் தொடங்கி வைத்தார். கேரள மாநிலம் பத்தானாம் திட்டாவிலுள்ள இந்தியன் ஆர்த்தடாக்ஸ் தேவாலயத்தின் திருத்தவத்திரு பேதெலியஸ் கிரிகோரிஸ் 11 மறைவு நினைவு நாள் குறித்த வெள்ளி விழா நிகழ்ச்சிகளை டிசம்பர் 31 ஆம் நாளன்று அவர் தொடங்கி வைத்தார்.

சென்னை மாநகரில் ஆளுநர் பங்கேற்ற முக்கிய நிகழ்ச்சிகள் :

1989 ஏப்ரல் :—ஏப்ரல் 2 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் மௌலானா அபுல் கலாம் ஆசாத்தின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்தார். 5 ஆம் நாளன்று அனைத்து இந்திய கோடை கால வரலாற்றுக் கல்வி நிறுவனத்தைத் தொடங்கி வைத்தார். பின்னர் அவர், சுடலோடிகள் தேசிய நாள் விழா ''National Maritime Day நிகழ்ச்சியில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டார். ஏப்ரல் 15 ஆம் நாளன்று தமிழ்நாட்டில் விரைந்த தொழில் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் குறித்த கருத்தரங்கம் ஒன்றினைத் தொடங்கி வைத்தார். ஏப்ரல் 18 ஆம் நாளன்று சுகாதாரத் தொண்டு நிறுவனம் (Voluntary Health Services) (V.H.S) நடத்திய வெள்ளி கொண்டாட்டங்களுக்கு அவர் தலைமை தாங்கினார். தென் இந்தியத் விழா தென் இந்திய திரைப்பட சங்கம் நடத்திய பொன்விழா மலரை வெளியிட்டார். மேற்குறிப்பிட்ட இருவிழாக்களிலும் குடியரசுத் தலைவர் கலந்துகொண்டு அவற்றைத் தொடங்கி வைத்தார்.

மே :—சென்னை ரோட்டரி சங்கம் 24 மே திங்கள் நடத்திய வைரவிழா நிகழ்ச்சிகளுக்கு ஆளுநர் தலைமை தாங்கினார். குடியரசுத் துணைத் தலைவர் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டார். 27-ஆம் நாளில் மின்னணுவியல்-தொலைபேசித் தொடர்புப் பொறியாளர்கள் அமைப்பு நடத்திய ஆண்டுத்தொழில் நுட்ப கூட்டத்தில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு அக்கூட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

ஜூன் :— ஜூன் திங்கள் 24-ஆம் நாளன்று ''அனைத்திந்திய ஒய்வூதியம் பெறுவோர் இணையத்தின்'' ஆண்டு மாநாட்டுக் கூட்டத்தைத் தொடங்கி வைத்தார்; பின்னர் அன்று மாலையில் ''செயிண்ட் ஜான் ஆம்புலன்ஸ் சங்கத்தின்'' மாவட்ட உள்ளூர் பிரதிநிதிகளின் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.. 27-ஆம் நாளன்று பாரதிய வித்யா பவனில் அனைத்திந்திய சிறிய, நடுத்தர செய்தித்தாள்களின் ஆசிரியர்கள் கூட்டத்தில் நிறைவுரை ஆற்றினார். அவர் ஜூன் திங்கள், 30-ஆம் நாளன்று காந்தி கிராமோத்யோக் பவனில் அனைத்திந்திய கதர்-கிராமத் தொழில்கள் பொருட்காட்சியைத் தொடங்கி வைத்தார்.

ஜூலை :—மேதகு ஆளுநர் அவர்கள் ஜூலைத் திங்கள், முதலாம் நாளன்று, எண்ணூரில், சென்னை அனல் மின் திட்டப் பகுதியில் குடியிருப்பு ஒன்றிற்கு அடிக்கல் நாட்டினார். மின் திட்டத்தின் கட்டுமானப் பணிகளை இந்தியக் குடியரசுத் தலைவர்

தொடங்கி வைத்தார். ஜூலைத் திங்கள் 7-ஆம் நாளன்று, இந்திய ரிசர்வ் வங்கிப் பணியாளர் பயிற்சிக் கல்லூரியின் வெள்ளிவிழாக் கொண்டாட்டங்களில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டார். 20-ஆம் நாளன்று இந்திய ரப்பர் நிறுவனத்தின் சார்பில் நடைபெற்ற விழாவில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு, கருத்தரங் தரங்கம் ஒன்றைத் தொடங்கி வைத்தார். பின்னர், அதே நாளில், அண்ணா பல்கலைக் கழகத்தில் மாணவர் இல்லக் கட்டிடங்கள் இரண்டைத் திறந்து வைத்தார். 22-ஆம் நாள் ஆளுநர் அவர்கள் கிழ்ப்பாக்கத்திலுள்ள சி.எஸ்.ஐ. பெயின் பள்ளியின் வைர விழாக் கொண்டாட்டங்களுக்குத் தலைமை தாங்கினார். அவர் ஜூலைத் திங்கள் 27-ஆம் நாளன்று ஆவடியிலுள்ள மத்திய சேமக் காவல் படையின் பொன்விழா நினைவு அஞ்சல் தலையை வெளியிட்டார். 28-ஆம் நாளன்று ''ஒட்டல் அம்பாசடர் பல்லவா'' வில் அனைத்து நாட்டு இளைஞர் (Y'S Men International Convention) மாநாட்டில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு, அதனைத் தொடங்கி வைத்தார். அவர் ஜூலைத் திங்கள் 29-ஆம் நாளன்று, மாணவர் புத்தகக் கண் காட்சியைத் தொடங்கி வைத்தார். பின்னர் வரதட்சணை ஒழிப்புப் பேரவையில் முதன்மை உரையாற்றினார்.

ஆகஸ்டு :—ஆகஸ்டு திங்கள், 2-ஆம் நாளன்று துணை வேந்தர்களின் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி, பல்கலைக்கழகங்கள் தொடர்பான பொருட்கள் குறித்து விவாதித்தார். அவர் 4-ஆம் நாளன்று, இந்திய சிறுதொழில் சங்கங்களின் கூட்டமைப்பு ஏற்பாடு செய்த ஏற்ற, இறக்கங்களை எதிர்ப்படும் இந்தியப் பொருளா தாரத்தில் சிறிய தொழில் நிறுவனங்களின் பங்கு (Roll of Small Enterprise in a Vibrant Indian Economy) குறித்த சிறப்புக் கூட்டத்தில் தலைமை விருந் தினராகக் கலந்து கொண்டார். ஆகஸ்டு திங்கள் 8-ஆம் நாளன்று, மறைந்த திரு. சி. எம். கோத்தாரி அவர்களின் 101-ஆம் பிறந்த நாள் விழாவில் தலைமை விருந்தின ராகக் கலந்து கொண்டார். அவர் ஆகஸ்டு திங்கள் 25-ஆம் நாளன்று வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டு 20 ஆண்டுகளில் நிறைவடைந்ததைக் குறிப்பிடும் வகையில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஏற்பாடு செய்த ''வளர்ச்சி குறித்து விழிப்புணர்வை ஏற் படுத்தும் திட்டம்'' தொடர்பான கூட்டத்தில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டார். அவர் ஆகஸ்டு திங்கள் 31-ஆம் நாளன்று பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத் தொடக்க விழாவிற்குத் தலைமை தாங்கினார். இந்தியக் குடியரசுத் தலைவர் இந்நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்.

செப்டம்பர் :—செப்டம்பர் திங்கள் முதலாம் நாள், தமிழ்நாடு உடற் பயிற்சி விளையாட்டுச் சங்கம் ஏற்பாடு செய்த அனைத்திந்திய தேசிய உடற்பயிற்சி விளையாட்டுக்களைத் தொடங்கி வைத்தார். பின்னர், சிண்டியில் தொழிற்பேட்டை தயாரிப்பாளர் சங்கம் ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். இந்தியக் குடியரசுத் தலைவர் இந்நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். அவர், செப்டம்பர் திங்கள் 2-ஆம் நாள், சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞர்கள் சங்கத்தின் நூற் றாண்டு விழா கொண்டாட்டங்களையொட்டி தொகுக்கப்பட்ட விழா மலரை வெளியிட்டார். இந்தியக் குடியரசுத் தலைவர் இந்நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். அவர் 5-ஆம் நாளன்று பாரதியே வித்யா பவனில் மறைந்த டாக்டர் எஸ். இராதா கிருஷ்ணன் அவர்களின் நூறாவது பிறந்தநாள் விழாவில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டார். அவர் 8-ஆம் நாளன்று சட்டம், மருத்துவம், குற்றத்தடயவியல் குறித்த மூன்றாம் இந்தோ-பசிபிக் மாநாட்டைத் (Third Indo-Pacific Congress) தொடங்கி வைத்தார். பின்னர் அவர், மேற்சொன்ன மாநாட்டிற்கு வருகை தந்த பேராளர்களுக்குத் தேநீர் விருந்தளித்தார். அவர் 20-ஆம் நாளன்று தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் தொடக்க விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

அக்டோபர் :—5-ஆம் நாளன்று, இந்திய இயற்கை வளம் குறித்த உலக ளாவிய அறக்கட்டளை நிதி நிறுவனம் (World-wide Fund For nature India) ஏற்பாடு செய்த ''பயோபெக்ஸ்-89'' (Biopex-89) கண்காட்சியைத் தொடங்கி வைத்தார். 7-ஆம் நாளன்று சுருக்கெழுத்தாளர் சங்கத்தின் பொன்விழாக் கொண் டாட்டங்களைத் தொடங்கி வைத்தார்; அக்டோபர் திங்கள் 20-ஆம் நாளன்று, குழந்தைகள் பாதுகாப்பு குறித்த சென்னை சங்கத்தின் பவளவிழா—80 ஆம் ஆண்டு நிறைவு விழாவில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நவம்பர் :—நவம்பர் திங்கள் 14-ஆம் நாளன்று தமிழ்நாடு அரசு சார்பில் நடைபெற்ற நேரு நூற்றாண்டு விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

டிசம்பர் :—டிசம்பர் திங்கள் 3-ஆம் நாளன்று டாக்டர் இராசேந்திர பிரசாத் அவர்களின் பிறந்தநாள் விழாவில் தலைமை விருந்தினராகக் கலந்துகொண் டார். 9-ஆம் நாளன்று, இராஜாஜி நினைவு மண்டபத்தில் இராஜாஜி அவர்களின் பிறந்த நாள் விழாவில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டார்; டிசம்பர் திங்கள் 15-ஆம் நாளன்று கடற்படை இல்லத்தில் கடற்படை வாரக் கொண்டாட்ட விழாவின் வரவேற்பில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

1990 ஜனவரி :—மேதகு ஆளுநர் அவர்கள் ஜனவரித் திங்கள் 7-ஆம் நாளன்று சென்னை கேரள சமாஜத்தின் (Madras Kerala Samaj) பொன்விழாக் கொண்டாட்டங்களைத் தொடங்கி வைத்தார். அவர் ஜனவரித் திங்கள் 12-ஆம் நாளன்று பள்ளிசாராக் கல்வீக்கான மாநில நிதி ஆதார மையத்தின் (State Resource Centre For Non-Formal Education) சார்பில் அனைத்து நாடுகள் எழுத்தறிவு ஆண்டைத் தொடங்கி வைத்தார். அவர் ஜனவரித் திங்கள் 19-ஆம் நாளன்று சென்னை நிருவாகச் கெத்தின் (Madras Management Association) ஆண்டு மாநாட்டில் முக்கிய உசைங்ரயாற்றினார் ; அவர் 22-ஆம் நாளன்று, வள்ளுவர் கோட்டத்தில் ''இந்தியாவில் சோவியத் பத்திரிகை விழா''வில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு அதனைத் தொடங்கி வைத்தார். மேதகு ஆளுநர் அவர்கள், 27-ஆம் நாளன்று குடியரசுத் தலைவரின் காவல் விருது வழங்கு விழாவில் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு காவல்துறை, ரியணைப்புத்துறை அலுவலர்கள் பணியாளர்களுக்குக் குடியரசுத் தலைவரின் காவல் துறைப் பதக்கங்களை வழங்கினார். அவர், 28-ஆம் நாளன்று மத்திய தோல் ஆராய்ச்சி நிலையத்தில் தோல் பதனிடுவோரின் வெள்ளிவிழாக் கொண்டாட்டங்களைத் தொடங்கி வைத்தார். அவர் 29-ஆம் நாளன்று சென்னைப் பல்கலைக் கழகத்திலுள்ள பேராசிரியர் சத்தியநாத ஐயர் அறக்கட்டளை நிறுவனத்திற்குத் தலைமை விருந்தினராக வருகைதந்தார். அவர் 31-ஆம் நாளன்று மொரீசியஸ் நாட்டின் பிரதமர் திரு. அநிருத்த ஜகந்நாத் அவர்களையும் அவருடைய துணைவியார் திருமதி சரோஜினி ஜகந்நாத் அவர்களையும் விமான நிலையத்தில் வரவேற்றார். பின்னர் மாலையில் அவர்களை வழியனுப்பி வைத்தார்.

பிப்ரவரி :—அவர், பிப்ரவரித் திங்கள் 2-ஆம் நாளன்று, பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் ''யுனிஃபெஸ்ட்'' (Unifest) எனப்படும் தென்னிந்தியப் பல்கலைக்கழகங்களுக்கிடையேயான பண்பாட்டு விழாவைத் தொடங்கி வைத்தார்; அவர் 9-ஆம் நாளன்று செயிண்ட் மேரி ஆங்கிலோ இந்திய மேனிலைப் பள்ளியின் 150-ஆம் ஆண்டு நிறைவு விழாவில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

மார்ச்சு :—மேதகு ஆளுநர் அவர்கள், அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ''வேளாண்மையில் மழை நீரின் பங்கு'' குறித்த தேசியக் கருத்தரங்கின் தொடக்க நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். அவர், மார்ச்சுத் திங்கள் 21-ஆம் நாளன்று, தென்னகப் பண்பாட்டு மையத்தின் திருவாசகக் குழுக் கூட்டத்திற்கும், ஆட்சி மன்றக் கூட்டத்திற்கும் தலைமை தாங்கினார். பின்னர், ஆளுநர் மாளிகை வளாகத்தில் மரம் நடும் விழாவில் கலந்து கொண்டார். அவர் மார்ச்சுத் திங்கள் 25-ஆம் நாளன்று இலங்கையிலிருந்து திரும்பிய இந்திய அமைதி காக்கும் படையினரைச் சென்னைத் துறைமுகத்தில் முறையாக வரவேற்றார்.

1989—90 ஆம் ஆண்டில் முக்கிய மற்றும் மிக முக்கிய பிரமுகர்கள் வருகை.

மிக முக்கிய பிரமுகர்களின் விவரங்கள்.	வருகை புரிந்த நாள்.	வருகை புரிந்த இடம்.
(1)	(2)	(3)
1. எச். இ. அலீஜகாரியா-அல்-அன்சாரி இந்தியாவில் உள்ள குவைத் நாட்டு தூதர்	2—4—1989 முதல் 5—4—1989 வரை.	சென்னை.
2. டாக்டர் ஜான் ஆர். ஹப்பர்டு, இந்தியாவிலுள்ள அமெரிக்க நாட்டுத் தூதர்.	4—4—1989 முதல் 6—4—1989 வரை.	சென்னை.
3. திரு. ஆர்கன் பெர்னர், இந்தியாவில் உள்ள ஸ்வீடன் நாட்டுத் தூதர்.	3—4—1989 முதல் 6—4—1989 வரை.	சென்னை.
4. திரு. நிருபம் சென், இலங்கையின் இந்தியத் துணைத் தூதர்.	8—4—1989 முதல் 9—4—1989 வரை.	சென்னை.
5. இந்தியக் குடியரசுத் தலைவர்	9—4—1989 முதல் 10—4—1989 வரை.	மதுரை, காந்தி கிராமம்.
6. திரு. ஜே. என். தீட்சித், கொழும்புவிலுள்ள இந்தியத் தூதர்.	9—4—1989 முதல் 10—4—1989 வரை.	சென்னை.
7. திரு. தொண்டமான், இலங்கையின் துணித்தொழில், ஊரகத்தொழில்வளர்ச்சி அமைச்சர்.	12—4—1989 முதல் 24—4—1989 வரை.	சென்னை.
8. திரு. எம். எஸ். செல்லசுவாமி, இலங்கையின் போக்குவரத்துத் துறை துணை அமைச்சர்.	12—4—1989 முதல் 18—4—1989 வரை.	சென்னை, திருச்சி.
9. மேதகு ஆயான்பதராம் கிரிபாடி, அரசின் வணிகம், தொழில், தொழிலாளர் நலத்துறை அமைச்சர். மேதகு ஆயான்பதராம்	16—4—1989 முதல் 18—4—1989 வரை.	சென்னை.
10. இந்தியக் குடியரசுத் தலைவர்	14—4—1989 முதல் 21—4—1989 வரை.	சென்னை, மதுரை, மீழக்கரை, திரு நெல்வேலி-கட்ட பொம்மன், தூத் துக்குடி, காந்தி கிராமம், நீலகிரி, கோயம்புத்தூர்.
11. திரு. பி. பி. தேவராஜ், இலங்கையின் இந்து சமய பண்பாட்டு விவகாரத்துறை துறையின் துணை அமைச்சர்.	18—4—1989	சென்னை.
12. மேதகு திரு. அமீர் பின் ஜாஃபர், இந்தியாவிலுள்ள மலேசிய நாட்டுத் தூதர்.	19—4—1989 முதல் 21—4—1989 வரை.	சென்னை.

13. திரு. ஜூலியின் கிரில், மேற்கு ஆஸ்தி ரேலிய நாட்டு பொருளாதார வளர்ச்சி தொழில் சுற்றுலாத் துறை அமைச்சர்.	14—5—1989 முதல் 17—5—1989 வரை.	சென்னை.
14. திரு. தொண்டமான், துணித்தொழில் ஊரகத்தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர், இலங்கை.	12—5—1989 முதல் 14—5—1989 வரை.	சென்னை.
15. திரு. டபிள்யூ. ஜே. எம். லோக் பண்டாரா, இலங்கை கல்வி, பண்பாட்டு விவகாரம், தகவல் துறை அமைச்சர்.	18—4—1989 முதல் 24—5—1989 வரை.	சென்னை.
16. இந்தியக் குடியரசுத் தலைவர்	23—5—1989 முதல் 25—5—1989 வரை.	சென்னை, காஞ்சி புரம், பாண்டிச் சேரி, காரைக் கால், நாகூர், வேளாங்கண்ணி, திருநள்ளாறு, திருச்சி, ஸ்ரீரங் கம், திருவானைக் கோயில்.
17. திரு. டி. கே. செட்ரி, வங்க தேசத் திலுள்ள பூட்டான் நாட்டுத் தூதர்.	19—5—1989 முதல் 26—5—1989 வரை.	சென்னை.
18. இந்தியக் குடியரசுத் தலைவர்	24—5—1989 முதல் 25—5—1989 வரை.	இடைத்தங்கல் வருகை, சென்னை.
19. திரு. தொண்டமான், இலங்கை துணித் தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர்.	2—6—1989 முதல் 5—5—1989 வரை.	சென்னை, திருச்சி.
20. டாக்டர் சி. இராஜதுரை, இலங்கை அரசின் முன்னாள் அமைச்சர்.	3—6—1989 முதல் 16—6—1989. வரை.	திருச்சி.
21. இந்தியப் பிரதமர் (இடைத்தங்கல் வருகை).	15—6—1989	சென்னை விமான நிலையம்.
22. திரு. ஆர். பி. துவா, இலங்கையில் உள்ள இந்தியாவின் உதவித் தூதர்.	1—7—1989 முதல் 2—7—1989 வரை.	சென்னை.
23. இந்தியக் குடியரசுத் தலைவர்	1—7—1989 முதல் 2—7—1989 வரை.	சென்னை, காஞ்சி புரம்.
24. திரு. தொண்டமான், இலங்கை ஊரகத் தொழில் வளர்ச்சி அமைச்சர்.	4—7—1989 முதல் 5—7—1989 வரை.	சென்னை, திருச்சி.
25. வங்கதேசத்து வெளியுறவு அமைச்சர்.	7—7—1989 முதல் 8—7—1989 வரை.	சென்னை.

26. ஜெர்மனிய நாட்டு நாடாளுமன்றக்குழு (எப்.ஆர்.ஜி.)	7–7–1989 முதல் 9–7–989 வரை.	சென்னை.
27. இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் (இடைத் தங்கல் வருகை).	9–7–1989 முதல் 11–7–1989 வரை.	சென்னை.
28. திரு. தொண்டமான், இலங்கையின் ஊரக தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர்.	9–7–1989 முதல் 11–7–1989 வரை.	சென்னை.
29. நிக்காரகுவாவின் தூதர் மற்றும் சான்ச்சலர்.	12–7–1989 முதல் 13–7–1989 வரை.	சென்னை.
30. திரு. செல்லசாமி, இலங்கை போக்கு ஸ்ரத்துத் துறை அமைச்சர்.	11–7–1989 முதல் 15–7–1989 வரை.	சென்னை.
31. திரு. ரெய்னா, இந்தியத் தூதரகம், கொழும்பு.	7–7–1989	சென்னை.
32. திரு. வோகுலந்தாரா, இலங்கை கல்வி, பண்பாட்டுத் துறை அமைச்சர்.	16–7–1989 முதல் 27–7–1989 வரை.	சென்னை.
33. ஜே. பி. மெர்சிடஸ், பிலிப்பைன்ஸ் உதவிச் செயலாளர்.	18–7–1989	சென்னை.
34. டாக்டர் வோஜேனே ஜாசிக், யூகேஸ்லாவியாவின் தூதர்.	18–7–1989	சென்னை.
35. திரு. மெஹரோத்ரா, இந்திய கொழும்பின் தூதர்.	18–7–1989	சென்னை.
36. திரு. தேவராஜ் வீராசாமி, நாடாளுமன்ற உறுப்பினர், மொரீசியஸ்.	18–7 1989 முதல் 21–7–1989 வரை.	சென்னை.
37. திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், திரு. அமிர்தலிங்கத்தின் மனைவி, தமிழர் விடுதலை முன்னணி இயக்கப் பொதுச் செயலாளர் (டி.யூ.எல்.எப்.), இலங்கை.	26–7–1989 முதல் 30–7–1989 வரை.	சென்னை.
38. திரு. சி. ராஜதுரை, இலங்கை முன்னாள் அமைச்சர்.	3–8–1989	சென்னை.
39. திரு. மாசா ப்யூஜியாகா, ஆசிய மேம் பாட்டு வங்கியின் தலைவர்.	20–7–1989	சென்னை.
40. திரு. ஜான் ஆர். ஹப்பார்டு, இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதர்.	1–8–1989 முதல் 5–8–1989 வரை.	சென்னை.

(1)	(2)	(3)	(4)
41.	திரு. ரஞ்சன் விஜயரத்னே, இலங்கை வெளியுறவு அமைச்சர்.	4–8–1989 முதல் 5–8–1989 வரை.	சென்னை.
42.	திரு. மெஹ்ரோத்ரா, கொழும்பிலுள்ள இந்திய தூதர்.	6–8–1989	சென்னை.
43.	திரு. யூ. பி. விஜீகூன், திரு. ஜான் அமரலிங்கா. இலங்கை அமைச்சர்.	17–8–1989 முதல் 19–8–1989 வரை.	சென்னை.
44.	திரு. மேதகு இளவரசி கிருட்டினா பார்பென், ஸ்பெயின் நாட்டு இளவரசி.	19–8–1989 முதல் 23–8–1989 வரை.	சென்னை.
45.	மேதகு திரும்தி ஷெவி செங்கோர், சோசலிசக் குடியரசு ஒன்றியத்தின் சோவியத் துணைத் தலைவர்.	20–8–1989 முதல் 23–8–1989 வரை.	சென்னை.
46.	திரு. ஸ்டோலெரு, பிரெஞ்சு நாட்டின் திட்டத் துணை அமைச்சர், இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர்.	26–8–1989 முதல் 27–8–1989 வரை.	மதுரை, காந்தி கிராமம்.
47.	திரு. ஜான் அமரதுங்கா, இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர்.	29–8–1989	சென்னை.
48.	திரு. எஸ். எல். மாலிக், ஹங்கேரியில் இந்தியத் தூதராக நியமனம் பெற்றுள்ளவர்.	22–8–1989 முதல் 23–8–1989 வரை.	சென்னை.
49.	திரு. அகர்வால், ஐவரி கோஸ்ட் நாட்டின் இந்தியத் தூதர்.	21–8–1989 முதல் 27–8–1989 வரை.	சென்னை.
50.	இந்தியக் குடியரசுத் தலைவர்	31–8–1989 முதல் 2–9–1989 வரை, 5–9–1989 முதல் 6–9–1989 வரை.	சென்னை. திருச்சி, தஞ்சாவூர்.
51.	இந்தியக் குடியரசுத் தலைவர்	26–8–1989 முதல் 27–8–1989 வரை.	மதுரை.
52.	திரு. எல். எல். மெஹ்ரோத்ரா, இந்தியத் தூதர், கொழும்புவில்.	6–8–1989 முதல் 7–9–1989 வரை.	சென்னை
53.	திரு. தொண்டமான், இலங்கை அமைச்சர், தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர்.	14–9–1989 முதல் 17–9–1989 வரை.	மதுரை, திருச்சி
54.	இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் (இடைத்தங்கல் வருகை).	14–9–1989 முதல் 15–9–1989 வரை.	சென்னை. (இடைத்தங்கல் வருகை).

(1)	(2)	(3)	(4)
55.	திரு. அஹமத் ஜாகி. மாலத்தீவு அரசுத் தலைமை வழக்கறிஞர்.	14—9—1989 முதல் 15—9—1989 வரை.	சென்னை.
56.	பாரிலிருந்து வந்த நாட்டுக்கலை விழாவில் பங்குபெறும் கலைஞர் குழு.	16—9—1989 முதல் 21—9—1989 வரை.	சென்னை.
57.	மேதகு இடாபாகுஸ்ந்த்ரா. இந்தோனியத் தூதர்.	18—9—1989 முதல் 19—9—1989 வரை.	சென்னை.
58.	டாக்டர் பிரஹாம்பர்டன்ஃபீடர், ஆஸ்திரேலியத் தூதர்.	17—9—1989 முதல் 20—9—1989 வரை.	சென்னை.
59.	திரு. கி. இராஜதுரை இலங்கையின் முன்னாள் அமைச்சர்.	16—9—1989	
60.	திரு. இம்தியாஸ். பக்கீர் மார்க்கர், இலங்கை வீட்டுவசதித் துறை, துணை அமைச்சர்.	21—9—1989	சென்னை.
61.	திரு. ஆறுமுகம் பரசுராமன், கல்வி கலை பண்பாட்டுத்துறை அமைச்சர், மொரீஷியஸ்.	24—9—1989 முதல் 27—9—1989 வரை.	சென்னை.
62.	திரு. எப். எஸ். கி. பி. கல்பகே, இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதர்.	3—10—1989 முதல் 8—10—1989 வரை.	சென்னை.
63.	நெதர்லாந்து நாட்டின் கோப்பெருந்தாய் (தேசமாதர்) (இராஜமாதர்) மாட்சிமை தாங்கிய இளவரசி ஜூலியானா.	9—10—1989 முதல் 12—10—1989 வரை.	சென்னை.
64.	ஜாம்பியன் நாட்டுக்குழுவின் வருகை.	14—10—1989 முதல் 15—10—1989 வரை.	சென்னை.
65.	11 உறுப்பினர் அடங்கிய சோவியத் நாட்டுக்குழுவின் வருகை.	17—10—1989 முதல் 18—10—1989 வரை.	சென்னை.
66.	மேதகு திரு. மைக்கேல் சீக், இந்தியாவிலுள்ள சிங்கப்பூர் தூதர்.	22—10—1989 முதல் 26—10—1989 வரை.	சென்னை.
67.	திரு. கி. இராசதுரை, இலங்கையின் முன்னாள் அமைச்சர்.	2—11—1989	சென்னை.
68.	சந்திர பண்டாரா, இலங்கை பொது நிருவாகத்துறை துறை அமைச்சர்.	2 11 -1989	சென்னை.

(1)	(2)	(3)	(4)
69.	திரு. எல். எல். மெஹரோத்ரா, கொழும்பிலுள்ள இந்தியத் தூதர்.	12—11—1989 முதல் 13—11—1989 வரை.	சென்னை.
70.	இந்தியப் பிரதமர் அவர்கள்	5—11—1989 முதல் 8—11—1989 வரை.	திருவனந்தபுரம், திருச்சி, கோயம்புத்தூர், சென்னை, மதுரை.
71.	செக்கோஸ்லேவாக்கியாவின் பண்பாட்டுத் துறை துணை அமைச்சர் திரு. விராடிமிர் செரன்கா அவர்கள் தலைமையில் எட்டு உறுப்பினர்களைக் கொண்ட பிரதிநிதிகள் குழு.	15—11—1989 முதல் 17—11—1989 வரை.	சென்னை.
72.	திரு. கே. கே. எஸ். இராணா, மொரிசியஸ்விலுள்ள இந்தியத் தூதர்.	15—11—1989 முதல் 17—11—1989 வரை.	சென்னை.
73.	திரு. அலெக்ஸாண்டல் பிலான் இந்தியாவிலுள்ள கிரீஸ் நாட்டுத் தூதர்.	2—12—1989 முதல் 4—12—1989 வரை.	சென்னை.
74.	திரு. கிளட்ஸ்டோன், இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதர்.	1—12—1989 முதல் 2—12—1989 வரை.	சென்னை.
75.	திரு. டி. வி. குவெவெய், சீனத் தூதர்	1—12—1989 முதல் 2—12—1989 வரை.	சென்னை.
76.	திரு. தொண்டமான், தனித் தொழில் ஊரகத் தொழில்கள் அமைச்சர், ஸ்ரீலங்கா.	2—12—1989 முதல் 5—12—1989 வரை.	மதுரை.
77.	இலங்கையின் வெளிநாட்டு விவகாரத் துறை அமைச்சர் திரு. இரஞ்சன் விஜயரத்தினே அவர்களின் தலைமையில் வந்த தூதுக் குழுவினர்.	8—12—1989 முதல் 9—12—1989 வரை.	சென்னை.
78.	இந்தியப் பிரதமர் அவர்கள்	13—12—1989 முதல் 14—12—1989 வரை.	திருச்சி, தென் ஆற்காடு.
79.	திரு. மெஹரோத்ரா, இலங்கைக்கான இந்தியத் தூதர்.	12—12—1989 முதல் 13—12—1989 வரை.	சென்னை.
80.	திரு. தத்தோ. எஸ். சாமிவேலு, எரிசக்தி அமைச்சர், மலேசியா அரசு.	13—12—1989 முதல் 17—12—1989 வரை.	சென்னை.
81.	டாக்டர் இட்ஸோம், காவலர் கழக இயக்குநர், ஜெர்மானியக்கூட்டுக் குடியரசு.	30—12—1989 முதல் 31—12—1989 வரை.	சென்னை.

(1)	(2)	(3)	(4)
82.	திருமதி அனீசா அகமது, குடியரசுத் தலைவரின் முதுநிலை தேசிய மகளிர் குழு உதவியாளர் உறுப்பினர், மாலத் தீவு.	19—12—1989 முதல் 20—12—1989 வரை.	சென்னை.
83.	திரு. இராசதுரை, இலங்கையின் முன்னாள் அமைச்சர்.	20—12—1989	சென்னை.
84.	திரு. சந்திரா பண்டாரா, மாநிலப் பொது நிருவனத் துறை அமைச்சர், ஸ்ரீலங்கை.	28—12—1989 முதல் 29—12—1989 வரை.	சென்னை.
85.	திரு. காஜி சனத்கான், பலுஸ்னிதான், பாக்கிஸ்தான்.	28—12—1988	சென்னை.
86.	திருமதி அசீமாசுக்குர், திரு. அமீர் ஆகியோர் தலைமையில் வந்த இரு உறுப்பினர்கள் கொண்ட மாலத் தீவுப் பிரதிநிதிக் குழு.	16—12—1989 முதல் 17—12—1989 வரை.	சென்னை.
87.	திரு. இரஞ்சன் விஜயரத்தினே, இலங்கையின் வெளி விவகாரத்துறை அமைச்சர்.	4—1—1990 முதல் 5—1—1990 வரை	சென்னை
88.	திரு. மெஹரோத்ரா, கொழும்பில் உள்ள இந்தியத் தூதர்	4—1—1990 முதல் 5—1—1990 வரை	சென்னை
89.	இரஷ்யாவின் கடல் வாணிபத்துணை அமைச்சர் திரு. ஜி. டி. கிராசிம் சுக் அவர்கள் தலைமையில் வந்த ரஷ்யப் பிரதிநிதிகள் குழு.	15—1—1990 முதல் 19—1—1990 வரை	சென்னை.
90.	திரு. மெஹரோத்ரே கொழும்பிற்கான இந்தியத் தூதர்.	6—1—1990 முதல் 9—1—1990 வரை	சென்னை
91.	திரு. தொண்டமான், இலங்கையின் ஊரக தொழில் அமைச்சர்	13—1—1990 முதல் 27—1—1990 வரை	சென்னை.
92.	திரு. வரதராஜபெருமாள், முதலமைச்சர், வடகிழக்கு மாகாணம், ஸ்ரீலங்கா.	8—1—1990 முதல் 11—1—1990 வரை	சென்னை.
93.	திரு. எம். ஹெச். முகமது, ஸ்ரீலங்கா பார்லிமென்டின் சபாநாயகர்.	18—1—1990	டெ
94.	திரு. டாள்பிக்ஸ். தரூல்மான், தலைமைப் பதிப்பாசிரியர், இந்தோனிசியன் அல்சல்வார், ஜாகர்தா.	19—1—1990 முதல் 21—1—1990 வரை	டெ
95.	சோவியத் இந்திய நட்புறவுக் கழகத்தின் தலைவர் திரு. கோல்டின் அவர்கள் தலைமையில் வந்த ரஷ்யத்தூதுக்குழு.	29—1—1990 முதல் 31—1—1990 வரை	டெ
96.	திரு. பாதுல்லா ஜமீல், வெளிநாட்டு விவகாரத் இணை அமைச்சர், மாலத் தீவு.	29—1—1990 முதல் 30—1—1990 வரை	டெ

(1)	(2)	(3)
97. மொரிசியஸ் பிரதமர் அவர்கள்.	31—1—1990	சென்னை.
98. மொரிசியஸ் நாட்டுத் தூதர்.	31—1—1990 முதல் 1—2—1990	டெ
99. திரு. பீட்டல் சாம்பர்க் அவர்கள் தலைமையில் வந்த ஜெர்மனி ஜனநாயகக் குடியரசின் (டி.டி.ஆர்) பிரதிநிதிகள் குழு உறுப்பினர் அறுவர்.	4—2—1990 முதல் 8—2—1990 வரை	டெ
100. இந்தியப் பிரதமர் அவர்கள்.	3—2—1990	டெ
101. டாக்டர் ஏஜ. சந்தரோன்சென், ரஷ்ய நாட்டுத்துணை அமைச்சர்.	1—2—1990 முதல் 3—2—1990 வரை	டெ
102. திரு. தொண்டமான், இலங்கையின் துணித்தொழில், ஊரகத்தொழில்கள் அமைச்சர்.	8—2—1990 முதல்	டெ
103. திரு. எய்ஜிரோ, நோடா, ஜப்பான் நாட்டுத் தூதர்.	12—2—1990 முதல் 13—2—1990 வரை	டெ
104. இந்தியக் குடியரசு துணைத் தலைவர் இடைத் தங்கல் வருகை.	15—2—1990	சென்னை இடைத் தங்கல் வருகை.
105. திருமதி பண்டாரநாயக, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைவர்.	6—2—1990 முதல் 7—2—1990 வரை	டெ
106. திருமதி பண்டாரநாயக, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சித் தலைவர்.	11—2—1990 முதல் 19—2—1990 வரை	டெ
107. டாக்டர் ஹெர்மான் ஜோசப் உன்லேண்ட் அவர்கள் தலைமையில் ஏனைய அறு வருடன் வருகை தந்த ஜெர்மானியக் குடியரசின் நாடாளுமன்ற பொருளாதாரக் குழு.	24—2—1990 முதல் 27—2—1990 வரை	டெ
108. பைலோருஷ்ய சோவியத் சோசலிஸ்டு குடியரசின் போல்சாய் அரங்கின் மாநிலக் கலைக் குழுவின் 70 உறுப்பினர்கள் வருகை.	25—2—1990 முதல் 1—3—1990 வரை	சென்னை.
109. அமெரிக்கத் தூதர் திரு. வில்லியம் கிளார்க் (ஜூனியர்) மற்றும் அவருடைய துணைவாளர்.	28—2—1990 முதல் 2—3—1990 வரை	டெ
110. இந்தோனிசியா பாலியிலிருந்து வருகை தந்த இருபது உறுப்பினர்களைக் கொண்ட பண்பாட்டுக் குழு.	28—2—1990 முதல் 2—3—1990 வரை	டெ
111. திரு. ஆண்ட்ரேலீவின், பிரான்ஸ் நாட்டு தூதர்.	25—2—1990 முதல் 2—3—1990 வரை	டெ
112. திரு. பர்கத், மற்றும் திரு. குனிலாகேத், சுவீடன் நாட்டுத் தூதர்.	26—2—1990	டெ

(1)	(2)	(3)
113. பிளாட் (PLOT) டெலோ (TELO) ஆகிய தமிழர் அமைப்புகளின் இலங்கை தமிழர்களின் வருகை	17—2—1990 முதல் 24—2—1990 வரை	சென்னை.
114. திரு. குருபாச்சன்சிங், ஸ்ரீலங்காவின் முன்னாள் இந்திய தூதர்.	4—3—1990 முதல் 5—3—1990 வரை	டெ.
115. ஸ்ரீலங்காவிலிருந்து வருகை தந்த 18 உறுப்பினர்களைக் கொண்ட நடனக் குழு.	3—3—1990 முதல் 15—3—1990 வரை	டெ.
116. இந்தியப் பிரதமர் வருகை.	2—3—1990 முதல் 4—3—1990 வரை	சென்னை, காஞ்சிபுரம்.
117. திரு. அப்துல் அமீது கமில், வெளி விவகார அலுவலகத்தின் துணைச் செயலாளர், மலேசியா.	8—3—1990 முதல் 12—3—1990 வரை	சென்னை
118. திரு. ஃபாதுல்லா ஜமீல், வெளிநாட்டு விவகாரத் துணை அமைச்சர், மாலத்தீவு.	8—3—1990 முதல் 12—3—1990 வரை	டெ.
119. இங்கிலாந்து நாட்டில் இந்தியத் தூதரக நியமிக்கப்பட்டுள்ள திரு. குல்திப் நாயக்கர், அவரது துணைவியாரும்.	8—3—1990	டெ.
120. திரு. டத்தோ எஸ்சாமிவேல், அஞ்சல் தந்தித்துறை அமைச்சர், மலேசியா.	9—3—1990 முதல் 13—3—1990 வரை	டெ.
121. திரு. தித்தார்த்சிங், இந்திய ஜிம்பாப்வே நாட்டின் இந்தியத் தூதராக நியமிக்கபட்டுள்ளவர்.	11—3—1990 முதல் 14—3—1990 வரை	டெ.
122. திரு. ப்யூமிஹிட்டாமூரா, எம்.டி.., வெளி நாட்டு செய்தியாளர்கள் மையம், ஜப்பான்.	14—3—1990 முதல் 16—3—1990 வரை	சென்னை
123. திரு. டேவிட்குட்டால், இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் தூதர்.	20—3—1990 முதல் 23—3—1990 வரை	டெ.
124. திரு. கே.கே. பார்கவா, சார்க் தலைமைச் செயலகத்தின் பொதுச் செயலாளர்.	16—3—1990 முதல் 17—3—1990 வரை	டெ.
125. மாலத்தீவிலிருந்து வருகை தந்த திருவாளர்கள் ஆடம் மானக் மற்றும் அகமது லதீப் ஆகியோர்.	22—3—1990 முதல் 24—3—1990 வரை	டெ.
126. திரு. எல்.எல். மெஹரோத்ரா, ஸ்ரீலங்காவிற்கான இந்தியத் தூதர்.	16—3—1990 முதல் 17—3—1990 வரை	டெ.

127.	மலேயாவிலுள்ள அரசின் கல்வி மேம்பாட்டு வையத்தின் இயக்குநர் திரு. இப்ராஹிம் இஸ்மாயில், திட்டப்பணிகள் இயக்குநர் அப்துல் அமீது அவர்கள்.	24—3—1990 முதல் 25—3—1990 வரை	சென்னை.
128.	திரு. என். சி. செங்கியாத், மலேசிய நாட்டு சுகாதார அமைச்சர்.	25—3—1990	டெ
129.	திரு. முகமது, இலங்கை நாடாளுமன்றத்தின் பேரவைத் தலைவர்.	26—9—1990 முதல் 27—9—1990 வரை	டெ

அத்தியாயம்—2.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்.

1981 ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இம் மாநிலத்தில் மொத்த மக்கட் தொகை 484 லட்சம். இதனில் ஆதி திராவிடர் மக்கள் தொகை 88.81 லட்சம். அதாவது மொத்த மக்கட் தொகையில் 18.35 சதவீதம். பழங்குடியினர் மக்கட் தொகை 5.20 லட்சமும். அதாவது மாநிலத்தில் மொத்த மக்கள் தொகையில் 1.07 சதவீதம். ஆதி திராவிடர் மக்கட் தொகையில் கல்வியறிவு பெற்றவர்கள் 29.67 சதவீதம் ஆகும். பழங்குடியினர் மக்கட் தொகையில் கல்வியறிவு பெற்றவர்கள் 0.45 சதவீதம் ஆகும். இது மொத்த மக்கட் தொகையில் 20.46 சதவீதம்.

தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களின் மேம்பாட்டிற்கென கீழ்க்கண்ட அம்சங்களில் பல்வேறு திட்டங்கள் தமிழகத்தில் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

(1) கல்வி.
(2) வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு.
(3) சுகாதாரம், வீட்டுவசதி மற்றும் இதர திட்டங்கள்.
(4) பழங்குடியினர் நல துணைத் திட்டம்.

1. கல்வி :

ஆதிதிராவிடர் பழங்குடியினர் மாணவ/மாணவியர்கள் அனைவரும் கல்வியறிவு பெற்றிடல் வேண்டும் என்ற நோக்கத்துடன் கல்வி உதவித்தொகை அளிக்கப்படுகின்றன. மேலும் பள்ளிகள் மற்றும் விடுதிகள் நடத்தப்படுவதுடன் மதிய சத்துணவு, இலவச பாடப்புத்தகங்கள், குறிப்பேடுகள், பலகைகள், சீருடைகள் தரப்படுகின்றன. இவ்வாறான கல்வி மேம்பாட்டுப் பணிகளுக்கென ரூ. 4,497.24 லட்சம், 1989–90 ஆம் நிதியாண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. 100 பள்ளிகள் ஆதிதிராவிடர் மாணவர்களுக்கெனவும், 2, 3 பழங்குடியினர் பள்ளிகளும் 247 லட்சம் மாணவ/மாணவியர்களுடன் நடத்தப்பட்டு வருகிறது. பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் தொழில் கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கெனவும் விடுதி வசதியும் செய்து தரப்பட்டுள்ளன.

1989–90 ஆம் ஆண்டில் 3 கல்லூரி மாணவர் விடுதிகளும், 20 உயர்நிலைப்பள்ளி மாணவர் விடுதிகளும் 2 தொழிற்கல்வி பயிலும் மாணவர் விடுதிகளும் திறக்கப்பட்டன.

பழங்குடியினருக்கான விடுதிகள்—

	மாணவ/மாணவியர்களுக்கான விடுதிகளின் எண்ணிக்கை.	தங்கியுள்ள மொத்த மாணவர்கள்.
4. உயர்நிலைப்பள்ளி விடுதிகள்	22	1,005

கல்வி உதவித் தொகை :—

மேல்நிலைக்கல்வி, பட்டப்படிப்பு, மேல் பட்டப் படிப்பு மற்றும் தொழிற் கல்விப் படிப்பு பயிலும் இந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் மாணவ/மாணவியருக்கு மத்திய அரசின் விதிமுறைகளின்கீழ் உதவித் தொகை வழங்கும் திட்டம் 1989–90 ம் ஆண்டிலும் தொடர்ந்து மதம் மாறிய ஆதி திராவிட கிருஸ்தவர்களுக்கும் மாநில அரசு கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் உதவித் தொகை வழங்கப்பட்டது. மத்திய அரசு விதிமுறைகளின்படி உதவித் தொகை பெற பெற்றோருடைய ஆண்டு வருமானம் ரூ. 24,000 எனவும் மாநில அரசு விதிகளின்படி பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ. 15,000 எனவும் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது.

1989–90 ஆம் நிதியாண்டில் உதவித்தொகை வழங்கப்பட்ட விவரமும் பயனடைந்த மாணவர்/மாணவியர்களின் எண்ணிக்கையும் கீழே தரப்பட்டுள்ளன:—

	மாணவர்கள் எண்ணிக்கை	செலவிடப்பட்ட தொகை ரூபாய் லட்சத்தில்.
மத்திய அரசு உதவித் தொகை	74,857	805.44
மாநில அரசு உதவித் தொகை	6,926	36,88

மேற்குறித்த இலவயன்றி காந்தி நினைவு பரிசுத் தொகை, தகுதி வழிவகை பரிசுத் தொகை ஆகிய திட்டங்களின் கீழ் கல்வியறிவில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு சிறப்பு உதவித் தொகை 1989–90 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து வழங்கப்பட்டன. மேலும் இலவயன்றி ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிட சிறித்தவ மதத்தைச் சார்ந்தவர்களுக்கும் பள்ளியிறுதித் தேர்வில், மேல்நிலை கல்வியிறுதித் தேர்வில் 60 சதவீதம் அதற்கு மேலும் மதிப்பெண்கள் பெற்றிருப்பின் ரூ. 300 பரிசுத் தொகை வழங்கும் திட்டம் 1989–90 ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் 1989–90 நிதியாண்டில் ரூ. 19.34 லட்சம் செலவிடப்பட்டது.

பரிசுத்தொகை வழங்கும் நிட்டம் :

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிட மதம் மாறிய சிறித்தவர்களுக்கு பட்டப்படிப்பு மேல் படிப்பு அல்லது தொழில் கல்வி ஆகிய படிப்பில் இறுதி தேர்வில் 60 சதவீதமும் அதற்கு மேலும் மதிப்பெண்கள் பெற்ற முதல் தடவையிலேயே தேர்ச்சி பெற்றிருப்பின் பரிசுத் தொகை வழங்கும் நிட்டம் 1988–89 ஆம் ஆண்டில் துவங்கப் பெற்று 1989–90-ம் ஆண்டிலும் தொடர்ந்து நடைபெற்றது. இத்திட்டத்தின் கீழ் பரிசுத் தொகை ரூ. 1,000 முதல் ரூ. 1,500 வரை வழங்கப்பட்டது. 1989–90 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 332 மாணவ மாணவியர்கள் பயன் பெறுகின்றனர்.

கல்வி உதவித்தொகை பள்ளியிறுதி வகுப்பு வரையில் பயிலும் மாணவ/மாணவிகள் :

இத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பொதுக் கல்வி நிறுவனங்களில் மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் ஆதிதிராவடர்/பழங்குடியினர்/ஆதிதிராவிடர் மதம் மாறிய சிறித்துவ மாணவ மாணவியர்களுக்கு பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றவை. 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் ஆதிதிராவிட பழங்குடியின மதம் மாறிய மாணவ/மாணவியர்களுக்கு இலவச பாட புத்தகங்கள் கல்வித் துறையினரால் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன. மேலும் பொதுப் பள்ளிகளில் நான்காம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு முடிய பயிலும் ஆதிதிராவிட பழங்குடியின/மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களுக்கென நோட்டு புத்தகங்கள் இலவசமாக 1988–89 ஆண்டு முதல் இத்துறை முலம் வழங்கப்படுகின்றன.

இலவசக் கல்வி :

பட்டப் படிப்பு வரையில் (+1, +2, பி.ஏ., பி.எஸ்ஸி, பி.காம். மற்றும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மதம் மாறிய ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு மத்திய அரசு கல்வித் உதவித் தொகை பெற வாய்ப்பில்லாத மாணவ மாணவியர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் 1989–90-ம் நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. இவர்கள் கல்வி நிறுவனங்களுக்கு எவ்வித கட்டணமும் செலுத்தத் தேவையில்லை. இதற்கென ஆகும் செலவினத் தொகை இத்துறையில் நிதியினின்றும் பள்ளிக் கல்வி/கல்லூரி கல்வி இயக்குநருக்கு வழங்கப்படுகின்றன.

மைய அரசு நலவுதவி நிட்டம் :

இத்திட்டத்தின் கீழ் சாதி மத வேறுபாடின்றி வறண்ட கழிவறை துப்புறவு போன்ற சுகாதாரக் குறைவான தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் குழந்தைகளுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் 1989–90 ஆம் நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வந்தது.

இவர்களுக்கென அண்ணா மாவட்டம், திண்டுக்கல் மற்றும் வட ஆற்காடு மாவட்டம், ஆம்பூர், ஆகிய இடங்களில் பிரத்தியேகமாக இரு விடுதிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதனால் ஒவ்வொன்றிலும் 30 மாணவர்கள் தங்கிப் பயில்கின்றனர்.

உழவு மாடுகள் மான்யம் :

உழவு மாடுகள் வாங்க மான்யம் வழங்கும் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மதம் மாறிய ஆதிதிராவிட சிறித்தவர்களுக்கு ரூ. 500 அதாவது ஒரு ஜதை உழவு மாடுகளின் விலையில் மூன்றில் ஒரு பங்கு மான்யமாகவும், மூன்றில் இரண்டு பங்கு வங்கிகள் முலம் கடனாகவும் வழங்கப்பட்டது. அதனால் உழவு மாடுகள் ரூ. 2,400 மேற்படாமல் மேற்குறித்த முறையில் நிதியுதவி அளிக்கப்பட்டு 1989–90-ம் ஆண்டிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது.

பழங்குடியினர் கூட்டுறவு முறை :

பழங்குடியினர் பல்வேறு இடர்பாடுகளின் பிடியிலிருந்து விடுபடவும் அவர்கள் காட்டில் விளையும் பொருட்களை நல்ல விலைக்கு விற்கவும் வழிவகை செய்யும் வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஐந்து வனத் தொழிலாளர்கள் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள், மற்றும் இரண்டு பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் நிறுவி செயல்படுகின்றன.

பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் :

ஏழை ஆதி திராவிடர்கள் பயன்பெறும் வகையிலும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டும் பால் வழங்கு கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. இச்சங்கத்தில் உறுப்பினராகியுள்ள ஒவ்வொருவருக்கும் ஓர் ஜதை கறவை மாட்டிற்கு ரூ. 3,200 வீதம் நிதியுதவி அளிக்கப்படுகிறது. இதனில் 50 சதவீகிதம் அதாவது ரூ. 1,600 மான்யமாகவும் மீதமுள்ள ரூ. 1,600 வங்கிகள் மூலம் கடனாகவும் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றது.

குடிசைத் தொழில் :

குடிசைத் தொழில் பயிற்சி நிலையங்கள் தொடர்ந்து நடத்தப்பெற்று வருகின்றன. இந்நிலையங்கள் நிர்வாக வசதியின் பொருட்டு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தினால் நடத்தப்பெற்று வருகின்றன. இவற்றின் பராமரிப்பிற்குத் தேவையான நிதியினை ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை மற்றும் சமூக நலத்துறை இயக்குநரால் ஒவ்வொரு ஆண்டும் கொடுக்கப்படுகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை என்னும் இடத்தில் ஒரு தையல் மற்றும் நெசவுப் பயிற்சி நிலையம் இத்துறை மூலம் நேரிடையாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொழிற் கருவிகள் வழங்கும் திட்டம் செயல்பட்டு வருகிறது.

சிறப்பு மதிய உணவு :

ஆதிதிராவிடர்கள் பொருளாதாரத்தினை வீரைவாக மேம்படுத்தும் பொருட்டு இந்திய அரசாங்கம் இத்திட்டம் வகுத்தது. இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் தொகையானது தாட்கோ, மூலம் திட்டத்தை செயல்படுத்தும் துறைகளுக்கு விடுவிக்கப்படுகிறது.

சுகாதாரம் மற்றும் வீட்டு வசதிகள் மற்றும் இதர திட்டங்கள் :

சுகாதாரம் மற்றும் வீட்டு வசதியினை மேம்படுத்தும் பொருட்டு குடிநீர் கிணறு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, சமநிலை நீர்த்தேக்கங்கள், இணைப்புச்சாலைகள், மயானப் பாதைகள், மனைப்பட்டாக்கள் நடமாடும் சுகாதார நிலையங்கள் மற்றும் பல திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வீட்டு வசதி :

1989–90–ம் நிதியாண்டில் 42,000 வீடுகள் கட்டும் பணி ஊரக வளர்ச்சித்துறை மூலம் நிறைவேற்றப்படும் ஜவகர் வேலை வாய்ப்பு திட்டத்திற்கும் செய்து முடிக்கப்பட்டது.

தனியார் நிலத்தினை கையகப்படுத்தி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவச மனைப்பட்டாக்களை வழங்கும் திட்டம்.

இத்திட்டம் 1989–90 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. 1989–90 ஆம் ஆண்டில் 34,879 பட்டாக்கள் வழங்கப்பட்டன.

ஆதிதிராவிடர் காலனிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் :

அடிப்படை தேவைகளில் ஒன்றான குடிநீர் வசதியினை ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அரசு செயல்படுத்தி வருகிறது. குடிநீர் கிணறுகள் ரூ. 7,500 செலவிலும் மற்றும் தரைமட்ட நீர்த்தேக்கத்தொட்டி ரூ. 15,000 செலவிலும் தேவையான ஆதிதிராவிடர் காலனிகளில் அமைக்கப்படுகிறது.

வண்ணாந்துறை கட்டுதல் :

இத்திட்டம் 1978-79 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. கன்னிய மரியிலுள்ள ஆதிதிராவிடர் வண்ணான் இனத்தைச் சார்ந்தவர்களுக்கு முதலில் செயல்படுத்தப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டத்தைச் சார்ந்த செங்கோட்டை வட்டத்திற்கு விரிவுபடுத்தப்பட்டது. ஒவ்வொரு வருடமும் வண்ணாந்துறைகள் கட்டப்படுகின்றன. 1989-90-ல் இத்திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தாமரைக்குளம் மற்றும் சேம்பர் காலனியில் கட்டுவதற்கென ரூ. 30,000 ஒதுக்கப்பட்டது.

கலப்புத் திருமண தம்பதியருக்கு பரிசுகள் வழங்குதல் :

கலப்பு திருமண திட்டம் என்னும் சொல் அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்பு திருமண திட்டம் என மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் வருட வருமான வரம்பு ரூ. 6,000-லிருந்து ரூ. 12,000-க்கு உயர்த்தப்பட்டு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதன்படி திருமண செலவிற்கென பணமாக ரூ. 1,000-மும் மற்றும் ரூ. 4,000 தேசிய சேமிப்பு பத்திரத்தில் தம்பதியர் பெயரிலும் முதலீடு செய்யப்படுகிறது. 1989-90-ம் ஆண்டில் 578 கலப்புத் திருமண தம்பதியர் இத்திட்டத்தின் மூலம் பயனடைகின்றனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்கு வெகுமதி :

கிராம மக்களிடையே தீண்டாமை ஒழித்திட போட்டி மனப்பான்மையை உருவாக்கவும் அவர்களிடையே உண்மையான ஆர்வத்தை உண்டாக்கவும் ஒவ்வெரு மாவட்டத்திற்கும் (சென்னை நீங்கலாக) இரண்டு பரிசுகள் அளிக்கப்படுகின்றன. முதல் இடம் வகிக்கும் கிராமத்திற்கு பரிசாக ரூ. 2,000-மும் இரண்டாம் இடம் வகிக்கும் கிராமத்திற்கு ரூ. 1,000-மும் வழங்கப்படுகின்றது. 1989-90-ம் ஆண்டில் இத் திட்டத்தின் கீழ் ரூ. 40,000 செலவிடப்பட்டுள்ளது.

சுத்தமாக பராமரிக்கப்பட்ட ஆதிதிராவிடர் காலனிகளுக்கு பரிசுகள் வழங்குதல் :

தீண்டாமையை விரைவில் ஒழிக்கும் நோக்குடன் சுத்தமாக பராமரிக்கப்படும் ஆதிதிராவிட காலனிகளுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வட்டத்தில் ஆதிதிராவிடர் காலனிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு வானொலிப்பெட்டி பரிசாக வழங்கப்படுகின்றது. 1989-90-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 1.20 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் வார விழா கொண்டாடுதல் :

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 24-ந் தேதி முதல் 30-ந் தேதி முடிய ஆதிதிராவிட வாரவிழா கொண்டாடப்படுகிறது.

குடியுரிமை பாதுகாப்பு சட்டம் 1955— செயல்படுத்துதல் :

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1955-ன் கீழ் குற்றம் புரிந்தவர்களைத் தண்டிப்பதற்கென திருச்சி, மதுரை, திருநெல்வேலி மற்றும் தஞ்சை மாவட்டம், கும்பகோணம் ஆகிய இடங்களில் மாவட்ட நீதிபதிகள் நியமனம் அரசின் 2688 உள்துறை(1) 13-11-87 நாளிட்ட ஆணையின்படி பிரத்தியேகமாக நியமிக்கப்பட்டனர். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக வன்முறையைத் தூண்டும் செயல்களைக் கண்டிப்பதற்கென தமிழ்நாட்டில் 23 நடமாடும் காவல்துறை விழிப்பு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த நடமாடும் காவல்துறை விழிப்பு குழுக்கள் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர் உதவியுடன் சென்னையில் உள்ள காவல்துறை துணைத் தலைவர் மூலம் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1955 அமல்படுத்தப்பட்டு வருகின்றது. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தீண்டாமைக்கு எதிராக பிரச்சாரம் செய்வதற்கென ஒரு பிரச்சார அலுவலர், ஒரு உதவியாளர் மற்றும் இது தொடர்பான திரைப்படங்கள் இயக்க ஆப்பரேட்டர் ஆகியோர்களுடன் ஒரு நடமாடும் ஊர்தி இயங்கப்பட்டு வருகிறது. தற்போது தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்திற்கென கூடுதலாக ஒரு விளம்பரப் பிரிவும் திருச்சியில் செயல்பட்டு வருகிறது. 1985 முதல் தீண்டாமை பரவியுள்ள கிராமங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. 1989-ஆம் ஆண்டில் 414 கிராமங்கள் தீண்டாமை பரவியுள்ள கிராமங்களாக தேர்வு செய்யப்பட்டு, இவற்றை தனிக்கவனத்துடன் ஆய்வு செய்யப்பட்டு அனைத்து அடிப்படை வசதிகள் மிக முக்கியப் பணியாக மயானம் அமைத்தல், மற்றும் மயானத்திற்கு கழிப்பறை அமைத்தல் ஆகியவற்றிற்கு தேவையான நிலம் ஆர்ஜிதம் செய்யும் பணி 1986-89-ல் மேற்கொள்ளப்பட்டது.

சமுதாயக்கூடம் :

ஆதிதிராவிடர் வாழும் குடியிருப்புகளுக்கு திருமணம் மற்றும் சமூக நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு 1971-72 ஆம் ஆண்டிலிருந்து சமூகக்கூடங்கள் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் படிப்படியாக கட்டப்பட்டு வருகின்றன. 1987-88-ம் ஆண்டிலிருந்து ரூ. 5.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1974 முதல் 1990 வரை 137 சமுதாயக் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

பயிற்சித் திட்டங்கள் :

1988-89 ஆம் ஆண்டு முதல் இந்து மதத்தைச் சார்ந்த ஆதிதிராவிட மாணவர்களுக்கு வேலைவாய்ப்புள்ள பயிற்சித்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் கீழ் பயிற்சிக் கால முழுமைக்கும் ஆகும் செலவைத் தொகை அதாவது நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணம், மாணவர்களுக்கு உதவித்தொகை மற்றும் போக்குவரத்துக் கட்டணம் முழுவதும் அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு இப்பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சி :

ஆதிதிராவிடர் மாணவ மாணவியர் பயன்பெறும் வகையில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து பயிற்சி அளிக்கும் திட்டம் மத்திய நிறுப்பு நிதியுதவி திட்டத்தின் கீழ் 1988-89 முதல் செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டது.

சட்டப் பட்டதாரிகளுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் :

இந்து மதத்தைச் சார்ந்த ஆதிதிராவிட சட்டப் பட்டதாரி மாணவர்கள் வழக்குரைஞர் தொழில் துவங்கிட ஒருவருக்கு ரூ. 3,000 வீதம் மத்திய நிறுப்பு நிதியுதவியாக வழங்கப்படுகிறது. 1989-90-ல் 193 சட்டப் பட்டதாரி மாணவர்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்/பழங்குடியினர்க்கு இட ஒதுக்கீடு :

பொது நிறுவனங்களில் நேரடியாக பணியமர்த்தக்கூடிய பணியிடங்களுக்கு 18 சதவீதம் கீழே குறிப்பிட்டுள்ள பதவிகளுக்கு உயர்வில் 18 சதவீதம் ஆதிதிராவிடர்/பழங்குடியினர்களுக்கென இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்ற விதி அமுல்படுத்தப்பட்டது. இத்திட்டம் செயல்படும் விதத்தினை இதற்கென நியமிக்கப்பட்ட உயர்மட்டக் குழுவினால் கண்காணிக்கப்பட்டது.

(1) துணை ஆட்சியாளர்

(2) துணை வட்டாட்சியர்

(3) வர்த்தக வரி அலுவலர்

(4) துணை வர்த்தக வரி அலுவலர்

(5) உதவிப் பொறியாளர்

(6) துணைப் பதிவாளர் கிரேடு 2

(7) நில அளவையாளர்

(8) இளநிலை கணிப்பொறியாளர்

(9) மறு ஆக்க உதவியாளர்கள்.

} நில அளவை மற்றும் பதிவுகள் துறை

அரசின் எண் 1352, ஆதி திராவிடர் நலத் துறை, 27—7—1989 நாளிட்ட ஆணையில் 'ஏ' 'பி' 'சி' மற்றும் 'டி' பிரிவு பணியிடங்களில் தரம்பிரிக்கப்பட்ட மற்றும் பழங்குடியினர்களுக்கான ஒதுக்கப்பட்ட காலியிடங்களை ஒதுக்கீட்டு முறையில் நிரப்புவதை ரத்து செய்யும் முறையை நடைமுறைப்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாணை 1—4—1989 முதல் அமுல்படுத்தப்பட்டது. அனைத்து பணியிடங்களிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் 31—3—1990 வரை நிரப்பப்படாமல் உள்ள இடங்களை நிரப்புதவற்கு சிறப்புத் தேர்வுமுறை கையாளப்பட்டு, 18 சதவீதம் முழுமையடையவேண்டும் என அரசு உத்தரவிட்டது.

கல்வி நிலையங்களில் சேருவதிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியிவருக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் மருத்துவம், தொழியியல் மற்றும் இதர தொழில் படிப்பு வகுப்புகளில் 18 சதவீதம் இட ஒதுக்கீட்டு முறை 1988 89-ல் செயல்படுத்தப்படும் முறை தொடரப்பட்டது.

தனியார் மூலம் பயிற்சிகள் :

ரூ. 2,04,230 மொத்த முதலீட்டாக கொண்டு திருச்சி மாவட்டத்தில் 3 கிராமங்களில் ஆதிதிராவிடர்க்கு சுயவேலைவாய்ப்பு மற்றும் உற்பத்திக்கென ஓர் திட்டத்தினை (SCOPE) இயக்குநர் ஏற்படுத்தியுள்ளார்.

திருச்சி மாவட்டம் குளித்தலை தாலுக்காவில் 2 கிராமங்களில் 76 ஆதி திராவிடர்களை பெரும்பாலும் இளம் பெண்களுக்கு கைத்தறி மற்றும் செயற்கை வைரத் தயாரிப்பில் ஒரு வருடம் பயிற்சி அளிக்க ரூ. 2,90,250 வழங்கப் பட்டுள்ளது. இத்திட்டம் (SEVAI) மூலம் செயல்படுத்தப்பட்டது.

கொத்தடிமை ஒழிப்பு :

இத்திட்டம் 20 அம்ச திட்டத்தின் 6-வது அம்சமாக சேர்க்கப்பட்டுள்ள இத்திட்டம் வருவாய் மற்றும் சுவல் நலத்துறையினரின் ஒத்துழைப்புடன் மாவட்ட ஆட்சியரால் செயல்படுத்தப்படுகிறது.

2. கொத்தடிமை மூலம் ஒழிப்பு சட்டம் 1976-ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் திறம்பட செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் அமுலுக்கு வந்த நாள் முதல் 31—3—1990 முடிய 38,024 கொத்தடிமைகள் மீட்கப்பட்டு 37,547 பேர் வாழ்வு அளிக்கப்பட்டனர்.

இவர்களில் 24,945 நபர் தென்னார்க்காடு மாவட்டம் கல்வராயன் குன்றுகளிலிருந்து ஜாகிர்தாரர்களின் பிடிகளிலிருந்து மீட்கப்பட்டவர் ஆவார். மீதமுள்ளவர்களுக்கு மறுவாழ்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

1—4—89 முதல் 31—3—1990 முடிய கொத்தடிமைகள் மறுவாழ்விற்காக ரூ. 97.00 இலட்சங்கள் செலவழிக்கப்பட்டுள்ளது. கொத்தடிமைகள் மறுவாழ்விற்காக கிற்க்கண்ட திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

பழங்குடியினர் நலத்துறைத் திட்டம்.

1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில், சுமார் 5.20 இலட்சம் பழங்குடியினர் உள்ளனர். தமிழ்நாட்டில் மொத்த மக்கள் தொகையான 484.08 இலட்சத்தில் பழங்குடியினரின் தொகையானது 1.07 சதவிதமாகும். பழங்குடியினர்களில் திட்டத்தட்ட 36 உட்பிரிவுகள் உள்ளன.

பழங்குடியினர் நலத் துறைத் திட்டம் 1976ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் மக்கள் தொகை 10,000-த்திற்கு குறையாமலும் அதே சமயம் அவற்றில் 50 சதவிதம் மக்கள் பழங்குடியினராகவும் இருக்கும் பகுதியான ஒருங் கிணைந்த பழங்குடியினர் நல மேம்பாட்டுத் திட்டப் பகுதியாக அறிவிக்கப்பட்டது. திட்டப் பகுதியாக அடையாளம் செய்யப்பட்டது.

மாவட்டத்தின் பெயர்.	ஒருங்கிணைந்த பழங்குடியினர் நல மேம்பாட்டுத் திட்டப் பகுதி.	மொத்த மக்கள் தொகை.
(1)	(2)	(3)
(1) சேலம்	1. கொல்லிமலை	30,665
	2. ஏற்காடு ..	21,676
	3. கல்ராயன்மலை	20,665
	4. அறுநூத்துமலை	6,604
	5. பச்சைமலை ..	6,583
(2) வட ஆற்காடு	6. ஜவ்வாது/ஏலகிரி	19,962
(3) தென் ஆற்காடு	7. கல்ராயன்மலை	28,991
(4) தர்மபுரி ..	8. சித்தேரி மலை	23,076
(5) திருச்சிராப்பள்ளி	9. பச்சைமலை	20,835
		2,10,057

மேற்குறிப்பிட்டுள்ள 9 பகுதிகளின் மக்கள் தொகையான 2.10 இலட்சமாக தமிழ்நாட்டின் மொத்த பழங்குடியினர் மக்கள் தொகையின் 40.38 சதவிதமாகும். தமிழ்நாட்டின் மொத்தம் மக்கள் தொகையில் இது 0.45 சதவிதமாகும். பழங் குடியினர் நல மேம்பாட்டு திட்டத்தின் முதன்மை நோக்கமானது, 90 சதவித பழங்குடியினர்களை ஒரு செறிவுத் திட்டம் மற்றும் அடிப்படை வசதிகள் மூலம் வறுமைக் கோட்டிற்கு மேல் கொண்டு வருவது ஆகும். மிதமுள்ள 60 சதவிகித பழங்குடியினர், பழங்குடியினர் நல மேம்பாட்டுத் திட்டப் பகுதியில்லாத இடங்களில் வாழ்கின்றனர்.

இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பொருளாதார முன்னேற்றத் திட்டத்தில் தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்ப்பு, நில மேம்பாடு, விலங்குகள் பராமரிப்பு, கிராமத் தொழில்கள், தேனி வளர்ப்பு, பழங்கள் பதப்படுத்துதல் மற்றும் பல அடங்கும். இத்திட்டங்களை செயல்படுத்துவதில் தேவைப்படும் பொருட்கள் 50 சதவீத மான்யத்தில் (கல்ராயன் மலைப் பகுதியைத் தவிர) அனைத்து பகுதி களுக்கும் வழங்கப்பட்டது. கல்வராயன் மலைப் பகுதிக்கு மட்டும் 75 சதவிகித மான்யத்தில் வழங்கப்பட்டன. தோட்டக் கலையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு மட்டும் தேவையான பொருட்கள் 100 சதவிகித மான்யத்தில் வழங்கப்படுகின்றன.

16 பெரிய அளவிலான பல நோக்குச் கூட்டுறவுச் சங்கங்களும் (லேம்ப்) கூட்டுறவுத் துறையின் மூலம் பழங்குடியினர் நல மேம்பாட்டுத் திட்டப் பகுதியிலும் நடத்தப் படுகிறது. பெரிய அளவிலான பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் பழங்குடியின ருக்குத் தேவையான உள்ளீடுகள் மற்றும் விவசாயப் பொருட்கள் நியாய விலைக்கு வழங்க அவர்களிடமிருந்து பண்ணை மற்றும் காடுகளிலிருந்து கிடைக்கப்பெறும் பொருட்களை நியாய விலைக்கு வாங்கிக் கொள்கிறது. இச்சங்கங்கள் பண்ணைப் பொருட்களை உற்பத்தி செய்ய கடன்களும் வழங்குகிறது. இதே திட்டங்கள் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் தொடரப்படுகிறது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 46,979 குடும்பங்களுக்கு பொருளா தார உதவி அளிக்கப்படும். இதனால் இலக்கீடு செய்யப்பட்ட குடும்பங்கள் ஏழாவது ஐந்தாண்டு திட்டக் கால முடிவுகள் வறுமைக் கோட்டிற்கு மேல் வரமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதர பழங்குடியினர் நலத்திட்டங்கள் :

கல்வி :

தமிழ்நாட்டில் மொத்தம் 213 பழங்குடியினர் தங்கிப் பயிலும் பள்ளிகளும் ஒரு தங்கும் வசதியில்லாத பள்ளியும் உள்ளன. ஒவ்வொரு வருடமும் 10 புதிய பழங்குடியினர் தங்கும் வசதி பள்ளிகள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் பகுதிகளில் திறக்கப்படுகின்றன. இதைத் தவிர மொத்தம் 1,005 மாணவர்கள் தங்குவதற்கு 22 பழங்குடியினர் விடுதிகள் உள்ளன.

இலையன்றி உள்ளடங்கிய வனப் பகுதிகளில் வாழும் பழங்குடியின மக்களின் நலனுக்கென வனத்துறை 15 பள்ளிகள் மாணவ/மாணவியர்களுக்கு இலவசமாக உணவும் தங்கும் விடுதியும் அளிக்கப்பட்டு இருக்கின்றன. பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் சீருடைகளும் இலவசம வழங்கப்படுகின்றன. தேவையான இடங்களில் புதிதாக பழங்குடியின பள்ளிகளும்/விடுதிகளும் கூட்டப்படுகின்றன.

வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதார முன்னேற்றம் :

பழங்குடியின இனத்தைச் சார்ந்த விவசாயிகள் வாழ்க்கைத் தரம் மேம்பாடு அடைய உழவு மாடுகள் வழங்குவதற்கு மானியமாக ரூ. 800 (மாடுகள் விலையில் மூன்றில் ஒரு பாகம் வழங்கப்படுகின்றது) மீதமுள்ள 2/3 பாகம் வங்கிகள் மூலம் கடனாக வழங்கும் இத்திட்டம் 1989–90-லும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

குடிசைத் தொழில்கள் :

கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை என்னும் இடத்தில் பழங்குடி யினப் பெண்மணிகள் சேர்ந்து பயன்பெறும் வகையில் ஏற்கனவே உள்ள தையல் மற்றும் நெசவு, பயிற்சி நிலையம் 1989–90 ஆம் ஆண்டில் இத்துறை மூலம் தொடரப் பட்டது.

பயிற்சி மற்றும் உற்பத்தி மையம் :

பழங்குடியின மக்களுக்கு தொழில் நுட்பப் பிரிவு மற்றும் வேலைவாய்ப்பினை அளிக்கும் நோக்குடன் தையல் பயிற்சி மற்றும் உற்பத்தி மையங்கள் சமூக நலத் துறை இயக்குநர் மூலம் நடத்தப்பட்டு வருபவைகள் 1989–90 ஆண்டிலும் தொடரப் பட்டது.

தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்களுக்கு மானியம் வழங்கல் :

கருமார், தச்சர், தையல் மற்றும் 18 இதர தொழில்களில் பயிற்சி பெற பழங்குடியின மக்களுக்கு இலவசமாக தொழிற் கருவிகள் வழங்கும் திட்டம் 1989–90-ம் ஆண்டில் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன.

குடிநீர் இணறு வசதி அளித்தல் :

பழங்குடியினர் மக்கள் வாழும் பெரும்பகுதிகள் பிரதான கிராமங்களை விட்டு வெகு தொலைவில் அமைந்துள்ளபடியால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுமாதலால் அப் பகுதிகளுக்கு குடிநீர் வசதி செய்து தருவது இன்றியமையாததாகும். எனவே, தேவைக் கேற்றாற்போல் வசதியுள்ள இடங்களில் ரூ. 7,500 செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இணறுகளும் ரூ. 15,000 செலவில் கைதவிர மட்ட நீர்த்தேக்கங்களும் அமைக்கப்பட்டு வருகிறது.

வீட்டு வசதி :

பழங்குடியினருக்கு வீடுகட்டும் திட்டம் 1988-89-ம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது. மலைப்பாங்கான இடங்களில் ரூ. 9,000 செலவிலும் இதர பகுதிகளில் ரூ. 6,000 செலவிலும் வீடுகள் கட்டித்தரப்பட்டது. 1987-88 முடிய ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுப் பகுதித் திட்டத்தின்கீழ் 5,164 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

சுகாதாரம் :

மலைப்பகுதிகளில் பரவலாக உள்ள குடியிருப்புகளில் வாழும் பழங்குடியினரின் மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய 10 நடமாடும் மருந்தகங்கள் இயக்கப் பட்டு வருகின்றன. இவையன்றி 17 அரசு மருந்தகங்கள் 50 துணை சுகாதார மையங்கள் 7 சித்த வைத்தியசாலைகளை மற்றும் ஒரு நடமாடும் சித்த வைத்தியசாலை ஆகிய வையும் இயக்கப்பட்டு வருகின்றன.

போக்குவரத்து வசதிகள் :

போக்குவரத்து வசதிகளைப் பெருக்குவதற்கான பழங்குடியினர் வாழும் பகுதியில் அவர்கள் பிரதான பகுதியிலிருந்து இருப்பிடத்திற்கு சாலைகள்; இணைப்பு சாலைகள் அமைக்கப்பட்டு வசதி செய்து தரப்படுகின்றன.

மிகவும் பழங்குடியினர் :

இவர்கள் விவசாயத்தில் மிகவும் தொன்மை வாய்ந்த முறையினைப் பின்பற்றுபவர் கள். இவர்களது கல்வியறிவு மிகவும் குறைவு. இவ்வினத்தைச் சேர்ந்தவர்களாக மேற்க் குறித்த இவங்களை அரசு தேர்வு செய்துள்ளது. (1) தோடா (2) கோட்டா (3) பணியான் (4) குரும்பாஸ் (5) இருளர்கள் (6) காட்டுநாயக்கன்.

இதுவரையில் இப்பிரிவு மக்களுக்கென 47 முன்பள்ளிகள், ஒரு தோடர்களுக்கான பலநோக்குக் கூட்டுறவு சங்கம், ஒரு வாடிக்கைத் தொழிற் கல்வி வழிகாட்டி மையம், இரண்டு பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவு சங்கம் முதலியவை நிறுவப்பட்டுள் ளன. இவர்களுக்கு எருதுகள், உறவை மாடுகள் மற்றும் ஆடுகள் முதலியன வாங்கித் தருவதுடன் வீட்டு வசதியும் வழங்கப்படுகின்றது. 1989-90 ஆம் ஆண்டில் இப்பிரிவு மக்களின் பல்வேறு நலப் பணிகளுக்கென ரூ. 10.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு பிரிவு :

பழங்குடியினர் நலத் துணைத் திட்டத்தின்கீழ் சேராத பங்குடியினர் பழகுகளுக்கு மேம்பாட்டுப் பணிகளுக்கென மத்திய அரசு 1989-90-ல் ரூ. 19.39 இலட்சம் வழங்கி யுள்ளது.

சிதறிய பழங்குடியினர் :

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும் இடங்களில் அல்லாமல் இதர இடங்களில் வாழும் பழங்குடியினர் சிதறிய பழங்குடியினர் எனப்படுவர். 1989-90-ல் ரூ.19-637 இலட்சம் இவர்களின் மேம்பாட்டிற்கென, வளர்ப் பிற்கென ஆடுகள் வழங்கவும் வீடுகள் கட்டித் தரவும் செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 284 குடும்பங்கள் பயன் பெறுகின்றனர்.

கல்வி :

இத்துறை மூலம் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு திட்டப் பகுதியில் 213 பழங்குடியினர் உறைவிடப் பள்ளிகளும் 4 உயர்நிலைப் பள்ளிகள், மற்றும் 5 மேல்நிலைப் பள்ளிகள் உட்பட பழங்குடியின மக்களின் கல்வியறிவைப் பூர்த்தி செய்ய செயல்படுத்தப் பட்டு வருகின்றது. இப்பள்ளிகளில் மொத்தம் 13,950 மாணவ மாணவியர் பயில் கின்றனர். உணவு மற்றும் உறைவிட வசதிகள் இலவசமாக அளிக்கப்படுகின்றன. இவையன்றி 12 விடுதிகள் (14 மாணவர்களுக்கு மற்றும் 8 விடுதிகள் மாணவியர்களுக்கு) 1,000 மாணவ மாணவியரைக் கொண்டு நடத்தப்பெற்று வருகின்றது.

அத்தியாயம்—3.

வேளாண்மைத் துறை

வேளாண்மை

தமிழகத்தின் பொருளாதாரம் வேளாண் பிரிவை வெகுவாக சார்ந்துள்ளது என்ற உண்மையின் காரணமாக இப்பிரிவிற்கு முன்னுரிமை தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. வளர்ந்து வரும் மக்கட் தொகைக்குத் தேவையான குறைந்த அளவு உணவுத் தேவையை பூர்த்தி செய்வதே அரசின் எல்லாவித முயற்சிகளின் நோக்கமாகும். இக்குறிக்கோளை அடைய, மாநிலத்தில் நில உடைமையாளர்களில் சுமார் 80 சதம் மிகச் சிறு விவசாயிகளாகவும் 5 அல்லது 6 ஆண்டுகளுக்கு ஒரு முறையே நல்ல பருவ மழை கிடைக்கலாம் என்ற சூழ்நிலை நிலவுவதாலும், அரசு வேளாண்மைத்துறை உணவு உற்பத்தியை உயர்த்த முழு முயற்சியுடன் செயல்பட வேண்டிய கட்டாயம் உள்ளது.

1989–90 ஆம் ஆண்டு மாவட்ட மாறுபட்ட பருவ நிலை கொண்ட ஆண்டாக இருந்தது. தென்மேற்கு பருவ மழை காலத்தில் இயல்பான அளவான 308.6 மி.மீ-க்கும் அதிகமாக 341.8 மி.மீ. கிடைக்கப் பெற்றது. இருப்பினும் ஜூன் மாதத்தில் கிடைக்கப்பெற்ற மழை குறைவாக இருந்ததின் காரணமாகவும், நீர்நிலைகள் பாசனத்திற்கு போதிய அளவு நீர் இல்லாமை காரணமாகவும் மாநிலத்தில் பயிர் சாகுபடியில் போதிய முன்னேற்றம் காணப்படவில்லை. மேட்டூர் நீர் தேக்கம் வழக்கமாக ஜூன் 12–ம் நாள் திறக்கப்படாமல் தாமதமாக ஆகஸ்டு மாதம் 20-ம் நாள் திறக்கப்பட்டதாலும் ஆகஸ்டு மாதத்தில் இயல்பான மழை அளவான 94.6 மி.மீ-க்கு எதிராக 41.6 மி.மீ. அளவே பெய்ததாலும் நெல் மற்றும் சிறு தானிய சாகுபடி பரப்பில் இழப்பு ஏற்பட்ட தோடல்லாமல் காவிரி நதிப்படுகை விவசாயிகள் ஒரே போகத்துடன் திருப்தியடைய வேண்டிய நிலை ஏற்பட்டது.

தென்மேற்கு பருவ மழை போல் அல்லாமல் வடகிழக்கு பருவமழை இயல்பான அளவான 448.4 மி.மீ-க்கு குறைவாக 304.4 மி.மீ. அளவே பெய்த போதிலும் பரவலாக மழை பெய்தது. ஆனால் வட ஆற்காடு மாவட்டம் மிகக் குறைவான மழை அளவு காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டது. குறைவான வடகிழக்கு மழை காரணமாக காவிரி நதிப்படுகைகளில் சாகுபடியான ஒரு போக நெற்பயிரும் தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக ஜனவரி மாதத்தில் காய்ந்து போகும் அபாயம் ஏற்பட்டது. ஜனவரி மாதத்தில் பெய்த எதிர்பாராத மழை இயல்பான அளவான 29.75 மி.மீக்கு எதிராக 101.4 மி.மீ. பெய்ததாலும் குறிப்பாக தஞ்சையில் மட்டும் 108 மி.மீ. பெய்து பயிர் காப்பாற்றப்படாமல் இருந்திருந்தால் மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் கணிசமான பயிர் இழப்பு ஏற்பட்டிருக்கக்கூடும்.

இருப்பினும் 1989–90-ம் ஆண்டில் பயிர் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டு மீள்கானும் பரப்பும், உற்பத்தியும் அடையப்பட்டது:

பயிர்.	பரப்பு (இலட்சம் எக்டர்).		உற்பத்தி (இலட்சம் டன்).	
	இலக்கு.	சாதனை.	இலக்கு.	சாதனை.
நெல் (அரிசி)	24.00	20.15	60.00	51.33
சிறு தானியங்கள்	18.00	13.32	18.00	15.01
பயறு வகைகள்	12.00	9.74	5.20	3.87
கரும்பு (வெல்லமாக)	12.00	2.32	24.20	24.50
பருத்தி	2.30	2.60	5.00 (இலட்சம் பொதிகள்)	5.12 (இலட்சம் பொதிகள்)

இவ்வாண்டில் எடுத்துரைக்கும்படியாக உள்ள சாதனைகள் பின்வருமாறு :

1. எப்பொழுதும் இல்லாத அளவு உயர்ந்த அளவில் பித்தெய ஆண்டுகளின் சாதனையான 51.00 இலட்சம் டன்களைத் தாண்டி 62.32 இலட்சம் டன்கள் அரிசி உற்பத்தி அடையப்பட்டது.

2. சென்ற ஆண்டில் கரும்பு உற்பத்தியில் சாதனையான 22.83 இலட்சம் டன்கள் (வெல்லமாக) என்ற அளவு இவ்வாண்டில் 24.50 இலட்சம் டன்கள் அடைப்ப் பட்டு மிஞ்சப்பட்டது.

3. எக்டர் உற்பத்தி திறனில் சென்ற ஆண்டு அரிசி உற்பத்தியான எக்டருக்கு 3,032 கிலோ என்ற அளவு இவ்வாண்டில் 3,092 கிலோவாக உயர்த்தப் பட்டுள்ளது.

4. நெல் உற்பத்தி செய்யும் 8 மாவட்ட விவசாயிகள் நலனுக்காக ரூ. 8.72 கோடி மான்யம், துத்தநாக சல்பேட் விநியோகம், களைக் கொல்லி மூலம் களைகளைக் கட்டுபடுத்துதல் போன்ற புதிய முறைகளைக் கடைபிடிக்க செலவிடப்பட்டது.

5. விவசாயிகளுக்குத் தரமான விதைகள் வழங்க சான்றிதழுடன் கூடிய சிறு பைகளில் விற்பனை செய்யவும், மூட்டைகளைப் பிரித்து சில்லறையாக விற்பனை செய்வதற்கு தடையும் விதிக்கப்பட்டது.

6. துவரைக் காய்ப் புழுவைக் கட்டுப்படுத்தவும், கோடை பச்சைப் பயிருக்காகவும் சிறப்பு உணவு உற்பத்தி திட்டம் செயல்படுத்தப்பட்டது.

7. மானாவாரி சாகுபடி முறைகளை ஊக்குவிக்க 4,000 இடங்களில், 2 எக்டர் அளவு கொண்ட செயல் விளக்கங்கள் அமைக்கப்பட்டன.

8. உர உபயோகம் குறைவாக உள்ள பகுதியில் உர உபயோகத்தை அதிகரிக்க மைய அரசு, மாநில அரசு மற்றும் உர நிறுவனம் சம அளவில் பங்கேற்கும் திட்டம் தருமபுரி மாவட்டத்தில் துவக்கப்பட்டது.

9. தரமான பூச்சி மருந்துகள் வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் விவசாயிகளுக்குக் கிடைக்க மாதம் ஒரு முறை தீடீர் மாதிரிகள் எடுக்கும் முறை அறிமுகப் படுத்தப்பட்டது.

10. உரம் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் எளிதில் கிடைக்க வழி செய்ய 4 புதிய வேளாண் விரிவாக்க மையங்கள் துவக்கப்பட்டன.

11. வேளாண் விரிவாக்கப் பணிகளை மேம்படுத்த தனித்தனியாக இயங்கி வந்த இடுபொருட்கள் மற்றும் விரிவாக்கப் பிரிவு இணைக்கப்பட்டு வட்டத்திற்கு ஒன்று என ஒரே பிரிவாக அமைக்கப்பட்டது.

12. 'சிடா' உதவியுடன் செயல்படும் வேளாண் காடு வளர்ப்புத் திட்டத்தில் 50 இலட்சம் கன்றுகள் இலவசமாக அளிக்கப்பட்டதுடன் 70.65 எக்டர் பண்ணைத் திடல்களும் 50 எக்டர் ஒருமித்த நடவும் மேற்கொள்ளப்பட்டன.

13. நடவு செய்த மரங்களை பேணி காக்க உயிருடன் உள்ள மரங்களுக்காக ரூ. 15.13 இலட்சம் ஊக்கத்தொகை அளிக்கப்பட்டது.

14. அதிக அளவில் விவசாயிகள் பங்கேற்கும் வகையில் உழவர் பயிற்சி நிலைய உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களாக புதியவர்கள் அமர்த்தப்பட்டனர்.

ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் ஓய்வு ஊதியம் போன்ற நிர்வாகப் பணிகளில் முன்னேற்றம் செய்தும், தரமான இடுபொருள் விநியோகம் போன்ற தொழில் நுட்ப பணிகளில் முன்னேற்றம் கொண்டு சிறப்பான தலைமையின் கீழ் இத்துறை உற்பத்தி சாதனைகளுடன் நடைபோட்டது.

வேளாண்மை (வ. இ. ப. தி.) துறை

1. முன்னுரிமை—(பொதுவான விவரங்கள்) :

வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம் மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து செயல்படும் திட்டமாகும். இத்திட்டம் இம்மாநிலத்தில் 1974—75 முதல் செயல் படுத்தப்படுகிறது. தற்சமயம் இத்திட்டம் வறட்சிக்குட்பட்ட ஏழு மாவட்டங்களில் தர்மபுரியில் 12 வட்டாரங்களிலும், சிதம்பரனாரில் 8 வட்டாரங்களிலும், இராமநாதபுரத்தில் 7 வட்டாரங்களிலும், காமராசரில் 5 வட்டாரங்களிலும், பசும்பொன் தேவர் திருமகனில் 6 வட்டாரங்களிலும், புதுக்கோட்டையில் 4 வட்டாரங்களிலும் திருநெல்வேலி கட்டபொம்மனில் 1 வட்டாரத்திலும் ஆக 43 வட்டாரங்களில் செயல் படுத்தப்படுகிறது.

2. வேலைகள் :

இயற்கையாக உள்ள நிலம், நீர், தாவரம், விலங்குகள் மற்றும் மனிதவளம் ஆகியவற்றை பயன்படுத்தி வறட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சியை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின் மூலம் நிலவளத்தைப் பெருக்குதல், மண் அரிப்பை தடுத்தல், காடுகள் வளர்ப்பது மற்றும் நீர்நிலை ஆதாரங்களை விருத்தி செய்வது போன்றவை முக்கிய நோக்கங்கள் ஆகும். இப்பணியில் யாவும் சம்பந்தப்பட்ட துறையினரால் மாவட்ட வளர்ச்சி முகமைகள் கண்காணிப்பில் செயல்படுத்தப்படுகிறது.

3. வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்தில் 1989—90 ஆம் ஆண்டின் செயல் இலக்கு முடித்த செயல் நிதி ஒதுக்கீடு செலவினம் திட்டப் பணிகள் வாரியாக பின்வருமாறு :—

	நிதி இலக்கு		திட்டக்குறியீடு	
	நிதி ஒதுக்கீடு	செலவினம்	திட்டக் குறியீடு	முடித்த செயல்
மண்வள பாதுகாப்பு	182.860	145.398	21,987	19,267
காடுவளர்ப்பு மேம்பாடு	181.840	156.144	8,540	7,908
நீர்நிலை ஆதாரங்கள்	179.700	118.788	960	635
ஏனையவை	40.840	30.055	308	308
திட்டப்பணிகள்	71.760	83.588	..	..
மொத்தம்	657.000	533.973	31,795	2,8118

வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்திற்கு ஆண்டொன்றிற்கு ஆகும் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூ. 657.00 இலட்சமாகும். இந்தமொத்த மதிப்பீட்டு தொகையை மத்திய மற்றும் மாநில அரசு சம விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் அதன் பரப்பிற்கேற்ப ரூ. 15.00 இலட்சம் முதல் ரூ. 18.50 இலட்சம் வரை ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

வேளாண்மைப் பொறியியல்.

முன்னுரை :

வேளாண்மைப் பொறியியல் துறை, இம்மாநிலத்தில் இரண்டு இயற்கை வளங்களான மண் மற்றும் நீர் ஆகியவற்றினைப் பாதுகாத்திடவும் அபிவிருத்தி செய்யவும் மற்றும் திறம்பட நிர்வகிக்கவும் பொறுப்பேற்று செயல்படுகிறது. பாசன வசதிகளை உண்டாக்கவும், கிணறுகள், குளங்கள், ஏரிகள் மற்றும் ஆறுகள் மூலம் இடைக்கக்கூடிய பாசன நீரை திறம்பட உபயோகிக்கவும், பண்ணைப் பணிகளை நிறைவாகவும் குறைந்த நேரத்திலும், செய்து முடிக்க இயந்திரங்களைக் கொடுத்தும் உதவுகிறது. மேலும், வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற இயற்கை இன்னல்கள் நேரிடும்பொழுது தேவையான நிவாரணப் பணிகளை அளிப்பதில் முன்னோடியாகத் திகழ்வதோடு, கிராமப்புறங்களில் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அவர்களது வாழ்க்கை நிலையை உயர்த்தவும், வறுமையை ஒழிக்கவும், வேலையற்றோருக்கு பல நாட்கள் வேலை வாய்ப்புகளை அளிக்கக்கூடிய திட்டங்களையும் செயல்படுத்து கிறது.

கிடைக்கும் பாசன நீரைச் சிக்கனமாகவும், செம்மையாகவும் உபயோகித்து உற்பத்தியைப் பெருக்கிட எளிய சிக்கன பாசன முறைகளான, சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர் முறைகளை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தியும் இவற்றை நிறுவு வதற்கு தேவையான ஊக்கத்தை அளிப்பதற்கும் தகுந்த முயற்சிகளை மேற்கொள்ளு கிறது.

இவ்வாட்சி அறிக்கை 1989—90-ல் இத்துறை மூலம் செயல்படுத்தப்பட்ட பணி களைச் சுருக்கமாக விளக்குகிறது.

2. நிர்வாகம் :

தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) திரு. ச. சவடமுத்து, பி.டெக். (ஆனர்ஸ்), எம். டெக்., எம்.பிஏ., எம்.ஐ.எஸ்.ஏ.இ. அவர்கள் தலைமைப் பொறியாளர் பதவியினை இந்த ஆண்டு முழுவதும் வகித்தார். பொது நிர்வாகத்துடன் நில மேம்பாடு, சிறுபாசனம், மண் வளப்பாதுகாப்புப் பணிகள், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் வறட்சிக்கு இலக்காகும் பகுதி பணிகள் ஆகியவை இவரது தொழில் நுட்பம் மற்றும் நிர்வாகக் கட்டுப்பாட்டில் செயல்படுகின்றன.

திட்டங்களும் செயல்பாடுகளும் :—

நிலம் மேம்பாட்டுப் பணிகள் :

வேளாண்மைக்கு மிகவும் இன்றியமையாத இயற்கை வளங்கள், நீரும், நில்லும் ஆகும். தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றம், விவசாயத்திற்கு லாயக்கற்ற நிலங்களை இயந்திரங்களைக் கொண்டு சமப்படுத்தி விவசாயத்திற்குப் பயன்படுத்தவும், பாசன வசதிக்கேற்றவாறு நிலங்களைச் சமப்படுத்தவும், தேவையான பண்ணைக் இயந்திரங்கள் (புல்டோசார்கள்) மூலம் செய்து தரப்படுகின்றன. இவ்வாண்டில் மாநிலத்தின் பல்வேறு இடங்களில் இத்துறையைச் சேர்ந்த சுமார் 120 புல்டோசர்கள் 1,529 ஹெக்டர் பரப்பில் 1,88,225 பணிகள் பணி செய்தன.

திறமைக்குக் குறைவானதும், அதிக செலவானதுமான மனித சக்தி, கிராமங்களில் இருந்து, நகர்ப்புறங்களுக்குச் சென்றுவிட்டதனால், இயந்திர சக்தியை அதிக அளவில் பண்ணைப் பணிகளுக்கு உபயோகப்படுத்த வேண்டும் தேவை விவசாயிகளிடம் ஏற்பட்டு உள்ளது. பண்ணைப் பணிகளைத் தக்க தருணத்தில் செய்து முடிக்க உழுவைகள் (டிராக்டர்கள்) பெருமளவில் உதவுகின்றன. ஆனால், நிதி வசதி குறைந்த சிறு மற்றும் குறு விவசாயிகள் இந்த உழுவைகளைச் சொந்தமாக வாங்கி உபயோகிக்க இயலாத நிலையில் உள்ளனர். எனவே, புழுதி உழவு, சேற்று உழவு, விளை பொருட்களைக் கொண்டு செல்லுதல் ஆகிய பணிகளுக்கு இத்துறை மூலம் உழுவைகள் தகுந்த உபகரணங்களுடன் வாடகைக்கு வழங்கப்படுகின்றன. இவ் வாண்டில் 163 உழுவைகளின் உதவியால் 1,23,973 மணிகள் பணி செய்து சுமார், 35,421 ஹெக்டேர் நிலத்தில் பண்ணைப் பணிகள் முடிக்கப்பட்டு உள்ளன.

நிறுபாசனம் :

மாநிலத்தில் கிட்டத்தட்ட (பாசன நீர்) முழுமையாக உபயோகப்படுத்தப்பட்டு விட்டதால், உணவு உற்பத்திக்கு நிலத்தடி நீரை அதிகமாக நம்ப வேண்டிய நிலை உள்ளது. இதற்காக, இத்துறையில் 166 ஆழ் துளைக் கருவிகள், 144 பாறைவெடி மற்றும் நீள் துளைக் கருவிகள் 408 கைத்துறைக் கருவிகள், 19 காற்றழுத்தக் கருவிகள், 25 மின்தடைக் கருவிகள் மற்றும் 2 மின் அளவியல் கருவிகளும் உள்ளன, மாவட்டங் களில் முக்கிய இடங்களில் உள்ள அலுவலகங்கள் மூலம் இக்கருவிகள் விவசாயிகளுக்கு வாடகையில் நிலத்தடி நீர்வள இருப்பினைக் கணக்கிடல், குழாய் கிணறுகள், வடி முனைக் குழாய் கிணறுகள் அமைத்தல் மற்றும் பாறைக் கிணறுகளில் ஊற்று எடுக்க துளையிடுதல் மற்றும் வெடித்தல் ஆகிய பணிகளைச் செய்ய பயன்படுத்தப்படுகின்றன. 1989–90-இல் 6,011 ஆழ்துளைக் கிணறுகளும், 3,762 வடிமுனைக் குழாய் கிணறுகளும் அமைக்கப்பட்டன. இவற்றுடன் 6,316 கிணறுகளில் நீர்ப் பெருக்கத்திற்கு புத்துயிர் அளிக்கப்பட்டது.

பாசன நீரைச் சிக்கனமாக உபயோகிக்க எளிய முறையான சொட்டு நீர்ப்பாசன முறையைப் பிரபலப்படுத்த செயல்பாடுகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. மைய அரசின் உதவியுடன் சொட்டு நீர்ப்பாசன முறையைப் பிரபலப்படுத்த மானியம் வழங்கப் பட்டது. மைய அரசு உதவித் திட்டத்தின்கீழ், திண்டுக்கல்—காயிதேமில்வத் மற்றும் கோவை மாவட்டங்களில், சொட்டு நீர் கருவிகளை நிறுவ விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் மொத்த செலவில் 25 விழுக்காடும், 33 1/3 விழுக்காடும் முறையே சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப் பட்டது. இத்திட்டம், 31—5—1989 அன்று முடிவடைந்தது. 1989–90ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 16 விவசாயிகளுக்கு ரூ. 1.02 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது.

மண் மற்றும் நீர்வளம் பாதுகாப்புத் திட்டம் :

மாநிலத்தில் அதிக பரப்பளவு மானாவாரி நிலங்கள் மண் அரிப்பிற்கு உட்பட்டு, நிலச் சீரழிவிற்கு இலக்காகின்றன. மண்ணைப் பாதுகாத்து நீர்வளத்தைப் பரா மரித்து உற்பத்தித் திறனை உயர்த்த வேண்டியது மிக அவசியத் தேவையாக உள்ளது. வேளாண்மைப் பொறியியல் துறை, மலை மற்றும் சமவெளிப்பகுதிகள், காற்றரிப் பினால் பாதிக்கப்பட்ட நிலங்கள், மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகள், நீலகிரி மாவட்டத்தில் மலைப் பகுதிகள், குந்தா மற்றும் கீழ்பவானி நதிப்பள்ளத்தாக்குப் பகுதிகள் ஆகியவற்றில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகளைச் செயல் படுத்துகிறது. 1989–90-ல் இத்திட்டங்களின் சாதனைகள் தனியே தரப்பட்டுள்ளன.

காற்றரிப்புத் தடுப்புத் திட்டம் :

திறந்தவெளி நிலங்களில், மேற்பரப்பில் ஏதும் தாவரப் போர்வை இல்லாதிருக்கும் நிலையில் அதிகவேக காற்று மண் அரிப்பினை உண்டாக்குகிறது. இதனால் விலை நிலங்கள் பாழாவதுடன், கிணறுகள், குளங்கள் மற்றும் கால்வாய்கள் மணல் மேடிட்டு தூர்ந்து விடுகின்றன. காற்றினால், மண்ணரிப்பு மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குப் பகுதியில் கம்பம் பள்ளத்தாக்கில் அநேக இடங்களில் ஏற்படுகின்றன. திரு நெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் ராமநாதபுரம் தாலுக்காக்களிலும் வ. உ. சிதம்பரனார் மாவட்டத்தில் திருச்செந்தூர், தூத்துக்குடி வைகுண்டம் மற்றும் கோவில்பட்டி தாலுக்காக்களிலும்கூட இப்பிரச்சினை ஏற் பட்டுள்ளது.

அதிவேகக் காற்று வீசும் பருவத்தில் காற்றிற்கு குறுக்காக தாவர காற்றுவேலி அமைத்திடுதல் இப்பிரச்சினையைக் குறைக்கும் செயல்முறையாகும். தாவர வேலி ஒன்றுக்கொன்று 150 மீட்டர் இடைவெளியில் 10 மீட்டர் அகலத்தில் அமைக்கப் படுகின்றது. தகுந்த புதர்களும், மரவகைகளும் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஜூன் முதல் ஏழு வரிசைகளில் நடப்படுகின்றன. வளர்ந்த பின்னர் கூம்பு போன்ற உருவத்தை அடையும் வண்ணம் மரங்களும் புதர்களும் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இதனால்,

காற்றின் திசை மேல் நோக்கி திருப்பிவிடப்பட்டு, மண்ணைத்தாக்குவது தடுக்கப் படுகிறது. தாவர வேலி அமைப்பதில் மண் ஒரிடத்தில் அரிக்கப்பட்டு மற்றோர் இடத்தில் குவிவது முழுவதுமாகத் தடுக்கப்படுகிறது. மண் ஈரம் காக்கப்படுகிறது. விவசாயத்திற்கு ஏற்பற்றதென ஒதுக்கப்பட்ட நிலம் நாளடைவில் பண்படுத்தப் பட்டு மீண்டும் விவசாயத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. ஏராளமான மரங்களும், புதர்களும் தாவர எருவை அளிப்பதுடன், வறட்சியின் தன்மையைக் குறைத்து பறவை களின் காப்பிடமாக அமைகின்றன. கிணறுகள், வாய்க்கால்கள் மற்றும் சாலைகளில் வண்டல் படிதல் தடுக்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தினால், அப்பகுதியிலுள் ளோருக்கு வேலை வாய்ப்பும் உண்டாகிறது.

மலைவாழ் மக்கள் மேம்பாட்டிற்கு மண்வளப் பாதுகாப்புப் ப னிகள் :

மலைவாழ் மக்களின் (விவசாயிகள்) தரத்தினை மேம்படுத்துதலும் அவர்களை வறுமைக் கோட்டிற்கு மேல் உயர்த்தும் பொருட்டும், அவர்களுக்கு நில விளைச்சலைப் பெருக்கி பாதுகாத்து கொள்ளுதலும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

பலதரப்பட்ட துறைகள் வடஆற்காடு தென் ஆற்காடு, சேலம், திருச்சி மற்றும் தர்மபுரி ஆகிய ஐந்து மலைவாழ் மக்கள் வாழும் இடங்கள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அவர்களின் ஒருங்கிணைந்த முன்னேற்றத்திற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

மண்வளப் பாதுகாப்புப் பணியானது குன்றுகளில் வாழும் மக்களுக்கு சிக்கன மாகவும், வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தவும், வாய்ப்பு வளங்களை ஏற்படுத்தக் கூடிய மேலான அடிப்படைத் திட்டமாகும். மலைவாழ் மக்கள் பகுதிகளில் செயல் படுத்தக்கூடிய மண்வளப் பாதுகாப்பு பணிகளாவன :—

1. சம உயர கற்சுவர்
2. தடுப்பணைகள்
3. சுகிவு நீர்க்குட்டைகள்
4. நிலச்சமன் செய்தல்.

1989–90-ஆம் வருடத்தில் மேற்குறிப்பிட்ட 5 மாவட்டங்களிலும் சேர்ந்து, 419 ஹெக்டேர் செயலளவு சாதனையும் ரூ. 31.98 இலட்சம் நிதியளவு சாதனையும் செயல்படுத்தப்பட்டுள்ளன.

நிறப்பு ஒருங்கிணைப்புத் திட்டம் :

அனைத்து மண்வளப் பாதுகாப்புத் திட்டப் பணிகளிலும், ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் ஆதி திராவிட பழங்குடியினருக்கு போதிய உதவி கிடைக்க இத்திட்டத்தின் மூலம் வலியுறுத்தப்பட்டு உள்ளது. மேலும், ஆதி திராவிட பழங்குடியினரைச் சேர்ந்த விவ சாயிகளுக்கு செயல் நிதி ஆயவற்றின் இலக்கில் ஒரு பகுதியை செயல்படுத்த மாவட்ட அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டு உள்ளனர். 1989–90-ல் இத்திட்டத்திம் 4,612 ஆதி திராவிட வகுப்பினர் மற்றும் ஆதி திராவிட பழங்குடியைச் சேர்ந்த விவசாயிகள் பயனடைந்து உள்ளனர். இத்திட்டத்தில் ரூ. 24.34 இலட்சங்கள் நிதியளவு சாதனை செயல்படுத்தப்பட்டுள்ளது. இதைப்போன்றே பாசனப் பகுதி மேம்பாட்டு திட்டப் பணிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்கு தொடர்ச்சிமலை அபிவிருத்தி திட்டப் பனிகள் :

இத்திட்டத்தில் மண்வளப் பாதுகாப்பு பணிகள் நீர்ப்பிரிவு முகடு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலமாக சுற்றுப்புறச் சூழலைப் பேணிக் காலத்தில் மேம்படுத்துதல் போன்ற பணிகள் விஞ்ஞான அடிப்படையில் செயலாக்கப்படுகிறது.

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் உள்ள நீர்ப்பிடிப்பு பரப்பிற்கு தகுதி நிலை அறிக்கை தொலையுணர்வு உத்தியுடன் தயாரிக்கப்படுகிறது. மண்வளப் பாது காப்புத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தினை இது சுட்டிக் காட்டுகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் தரம் தாழ்ந்த நிலங்களில் நிலச் சீரமைப்புப் பணிகளின் பொருட்டு எரிசக்தி மரங்கள் வளர்ப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு, 200 ஹெக்டேர் நிலப்பரப்பில் ரூ. 15.97 இலட்சம் செலவில் 1989–90ஆம் ஆண்டில் பணிகள் மேற் கொள்ளப்பட்டு உள்ளது.

வரிசை எண்ணும் திட்ட விபரமும்.	1989-90-ம் ஆண்டின் சாதனைகள்.	
	செயல் (ஹெக்டேரில்.)	நிதி (ரூபாய் லட்சத்தில்.)
(1)	(2)	(3)
1. மலைப்பகுதி மற்றும் சமவெளிப் பகுதிகளில் மண் வளப் பாதுகாப்புப் பணிகள்.	61,240	472.20
2. திருநெல்வேலி மாவட்டத்தில் காற்றரிப்பு தடுப்புத் திட்டம்.	1,048	49.90
3. மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்	419	31.98
4. குந்தா மற்றும் கீழ்பவானி பகுதிகளில் நதிப்பள்ளத் தாக்குத் திட்டத்தின் கீழ் மண்வளப் பாது காப்புப் பணிகள்.	3,829	169.25
5. மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வைகை, அர்சுனா, சித்தார் மற்றும் அமராவதி நீர் பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளுதல், அதற்கான தகுதிநிலை அறிக்கை தயார் செய்தல்.	1,708	196.44
6. நீலகிரி மாவட்டத்தின் மலைப்பகுதி மேம்பாட்டுப் பணிகள்.	1,151	120.32

பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

காவிரி, கீழ்பவானி, சாத்தனூர், பரம்பிக்குளம்-ஆழியாறு பகுதிகளில் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெரியார், வைகை பகுதியில் உலக வங்கி உதவியுடன் நவீன திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பண்ணை மேம்பாட்டுப் பணிகளாக (1) நிலம் விட்டு நிலம் பாயும் பாசன முறையைத் தவிர்த்தல் : (2) சுழற்சி முறை நீர்ப்பங்கீட்டு முறையில் நீர் அதிகமாக மற்றும் குறைவாக உள்ள சமயங்களில் கிடைக்கும் நீரைச் சமமாகப் பங்கிட்டு அளித்தல் ஆகிய பணிகள் செயலாக்கப் படுகின்றன.

1989-90 ஆம் ஆண்டின் சாதனைகள் மேலே கொடுக்கப்பட்டுள்ளன :—

வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும்.	செயல் (ஹெக்டேரில்)	நிதி (ரூபாய் இலட்சத்தில்)
(1)	(2)	(3)
1. காவிரி பகுதி	23,608	351.30
2. கீழ்பவானி பகுதி	5,015	190.71
3. சாத்தனூர் பகுதி	2,062	73.53
4. பரம்பிக்குளம்-ஆழியாறு பகுதி	8,675	291.10
5. காவிரி மற்றும் கீழ்பவானி பகுதியில் சுழற்சி முறை நீர்ப்பங்கீட்டுத் திட்டப்பணிகள்.	4,068	12.86
6. பெரியார்—வைகை பகுதி		
(அ) பண்ணை மேம்பாட்டுப் பணிகள் ..	6,842	145.47
(ஆ) குதிரடிக்கும் களம் அமைத்தல் ..	60	26.22

நீர் மேலாண்மை திட்டத்தின் வெற்றி அந்த பகுதி விவசாயிகள் அதிக அளவில் பங்கு ஏற்பதாகும். கீழ்பவானி பகுதியில் விவசாயிகளால் நிறுவப்பட்ட பாசன அமைப்புகள் மூலம் நீர் மேலாண்மைத் திட்டத்தில் அவர்களின் பங்கினையும், பராமரிப்பினையும் இந்த வேளாண்மை பொறியியல் துறை முறைப்படுத்தி செயலாக்கி வருகிறது. இம்முறை மேலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் :

இத்துறையினால் ''ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம்'' என்ற சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் கசிவு நீர்க்குட்டைகள் கட்டப்படுகின்றன. கசிவு நீர்க்குட்டைகள், நிலதீதடி நீரை வளப்படுத்தியும் வேலை வாய்ப்பினை பெருக்கியும் பலதரப்பட்ட வழி வகைகளில் பயன்படும் சமுதாயச் சொத்தாக விளங்குகின்றன. 1989–90 ஆம் ஆண்டில் 446 கசிவு நீர்க் குட்டைகள் ரூ. 589.27 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன. 28.76 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டு, கிராமப்புற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை தந்துள்ளது.

வேளாண்மைப் பொறியியல் பயிற்சி மையம் :

தொழில் நுட்ப இயல் முன்னேற்றம் முடிவடையாது. நாளுக்கு நாள் தொடர்ந்து முன்னேற்றமடைந்து வருகிறது. எனவே, இத்துறைக்கு புதிய கண்டு பிடிப்புகளை அறிமுகப்படுத்தி எல்லா வழிகளிலும், மேம்படுத்த வேண்டியது மிக்க அவசியமாகும்.

நடைமுறையில் உள்ள பணிகளின் தொழில் நுட்ப இயல் முன்னேற்றத்தின் பொருட்டு, திருச்சியில் ஒரு கண்காணிப்புப் பொறியாளர் (வேளாண்மை பொறி யியல்) அவர்கள் தலைமையில் பயிற்சி மையம் ஒன்று நடைபெற்று வருகிறது. இப் பயிற்சி மையத்தில் இத்துறை பொறியாளர் மற்றும் களப்பணியாளர்களுக் கும் இயந்திரங்களின் பராமரிப்பு, நிலத்தடிநீர் மேலாண்மை மண் மற்றும் நீர் வனப்பாதுகாப்புப் பணிகள் மற்றும் நிர்வாகம் ஆகியவற்றுக்கு பயிற்சி அளிக்கப் படுகிறது.

1989–90 ஆம் ஆண்டில் இத்துறையைச் சார்ந்த பல பிரிவுகளில் தொழில் நுட்ப பணியாளர்கள் பயிற்சி பெறப்பட்ட விபரம் கீழே தரப்பட்டுள்ளன :—

வரிசை எண்.	பணியாளர்கள் விபரம்.	பயிற்சி அளிக்கப்பட்டோர் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1	செயற்பொறியாளர்கள்	31
2	உதவி செயற்பொறியாளர்கள்	68
3	உதவிப் பொறியாளர்கள்/இளநிலைப் பொறியாளர்கள்	178
4	உதவி மண்வளப்பாதுப்பு அலுவலர்கள் ..	97
5	வரையாளர்கள்	15
6	பண்டகக் காப்பாளர்கள்	15
7	துளைஞர்கள்/உதவி துளைஞர்கள் ..	14
8	பாறை துளைக்கருவி இயக்குபவர்	13
9	வேளாண்மைப் பொறியியல் முதல்வர்	12
10	காற்றழுத்தக்கருவி இயக்குபவர்	14
11	உழுவை ஓட்டுனர்	14
12	புவிஇயல் உதவியாளர்	12

இணைமில் இளைஞர்களுக்கு பயிற்சி அளித்தல் :

விவசாய இயந்திரங்களை இயக்கவும், அதனை பராமரிக்கவும், வேளாண் மையில் சுடுபட்டுள்ள இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கும்பொருட்டு, 1989–90 ஆம் ஆண்டில், திருச்சி, மதுரை ஆகிய இரண்டு இடங்களில் பயிற்சி பள்ளிகள் நிறுவப்பட்டு உள்ளன. அவர்களுக்கு நாளொன்றுக்கு ரூ. 10 வீதம் 30 நாட் களுக்கு பயிற்சி உதவிப் பணமும் பயிற்சி முடித்த பின்னர் அளிக்கப்படுகிறது. 1989–90 ஆம் வருடத்தில் 131 இளைஞர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

உழுவை பணிமனை:

இத்துறைக்குரிய உழுவைகள், மண்தள்ளும் இயந்திரங்கள் (பும்டோசர்), விசைத்துளைக்கருவிகள் மற்றும் அனைத்து கருவிகளையும் பழுதுபார்க்க வேலூர், கோயம்புத்தூர், திருச்சி, திருவாரூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் அரசினர் உழுவை பணிமனையும், சென்னையில் வேளாண்மைப் பொறியியல் பணிமனையும் அமைக்கப்பட்டு உள்ளன. இப்பணிமனைகள், காலமுறைப்பராமரிப்பினையும், பழுதுபட்ட இயந்திரங்களின் பராமரிப்பினையும் கவனித்து செயல்பட்டு இயந்திரங்கள் முழு அளவில் உபயோகப்படுத்த வழிவகை செய்கின்றன.

திருநெல்வேலி மாவட்டத்தில் தாழ்ந்த நிலப்பகுதிகளில் எரிசக்தி மரங்கள் வளர்த்தல்:

முறைசாரா எரிசக்தி துறையிலிருந்து, தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்தின்மூலம் இத்திட்டத்திற்கு தேவையான நிதி முழுவதும் பெறப்படுகின்றது. திருநெல்வேலி மாவட்டத்தில் தகுந்த வகையில் மர வகைகள் தேர்ந்தெடுத்து விஞ்ஞான அடிப்படையில் வளர வழிசெய்து மக்களுக்கு உதவுவதே இந்த எரிசக்தி மரங்கள் வளர்ப்புத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதன் மூலம் தரம் தாழ்ந்த மற்றும் தரிசு நிலங்களை செழிப்புள்ள நிலங்களாக மாற்றி மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.

523 ஹெக்டேர் நிலப்பரப்பில் எரிசக்தி மரம் நடும் பணிகள் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது. 1988–89 முதல் 4 ஆண்டுகளுக்கு செலவினமாக ரூ. 52.30 இலட்சங்கள் திட்டமிடப்பட்டுள்ளது.

1989–90 வருடத்தில் 200 ஹெக்டேர் நிலப்பரப்பில் ரூ. 15.97 இலட்சம் செலவில் எரிசக்தி மரம் நடும் பணிகள் முடிக்கப்பட்டு உள்ளன. இத்துடன் இவ்வாண்டு முடிய 523 ஹெக்டேர் நிலப்பரப்பில் மரம் நடும் பணிகள் ரூ. 39.91 இலட்சம் செலவில் முடிவடைந்துள்ளன. பின்வரும் ஆண்டுகளில் இம்மரங்கள் பராமரிக்கப்படும்.

நேபிய மானாவாரி அபிவிருத்தி திட்டம் :

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது மானாவாரி நிலப் பகுதிகளின் வேளாண்மை உற்பத்தியை பெருக்குவதாகும்.

1. விளைச்சல் நிலங்களைப் பாதுகாத்து மேம்படுத்தல் மற்றும் தரிசு நிலங்களை இன்றியமையாத இயற்கை வளமுள்ள நிலமாக மாற்றுதல்.

2. மண்வளப் பாதுகாப்பு வளங்களை தொழில்நுட்ப இயல் முறைகளில் பயன்கொண்டு வளர்ச்சியடையச் செய்தல் மற்றும் மாறுபட்ட தட்பவெப்ப சூழ் நிலைக்கேற்ற பயிர் உற்பத்தி செய்து பெருக்குதல்.

3. கிராமத்து சமுதாயச் சொத்துக்களான தீவனம், காடு, எரிபொருள், மரம், உண்ணத்தகாத எண்ணெய்வளங்கள் தகுந்த மாறுபட்ட வழிகளில் நிலத்தைப் பயன்படுத்தி வளர்ச்சியுறச் செய்தல்.

தர்மபுரி மாவட்டத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

1989–90 ஆம் ஆண்டில் 1,646 ஹெக்டேர் பரப்பு மற்றும் ரூ. 11.48 இலட்சம் செலவில் பணிகள் முடிக்கப்பட்டு உள்ளன.

1989–90 ஆம் ஆண்டு அதிகப்படியாக பெறப்பட்ட இயந்திரங்களின் எண்ணிக்கை :

1989–90 ஆம் வருடத்தில் 14 எண்கள் உழுவைகள் பெறப்பட்டு இதன் பயனாக உழுவை இயந்திரங்களின் மொத்த எண்ணிக்கை 177 ஆக அதிகரித்துள்ளது.

வேளாண்மையில் நீர்மேலாண்மை கருத்துக்கண்காட்சி தேசிய அளவில் 3–3–1990 முதல் 25–3–1990 முடிய சென்னையை அடுத்த காட்டுப்பாக்கத்தில் நடைபெற்றது. இதில் வேளாண்மைப் பொறியியல் துறையின்க ருத்துக் கண்காட்சியும் அமைக்கப்பட்டது. இக்கருத்துக் கண்காட்சிக்கு மாண்புமிகு வேளாண்மைத் துணை அமைச்சர் அவர்களும், மகாராஷ்டிரா மாநில மேதகு ஆளுநர் திரு. சி. சுப்ரமணியம் அவர்களும் வருகை புரிந்தார்.

இவ்வாறாக வேளாண்மைப் பொறியியல் துறையானது மாநிலத்தில் மண் மற்றும் நீர் வளங்களைப் பாதுகாத்து அதன் மேம்பாடு மற்றும் மேலாண்மைக்கு கட்டமைப்புனர்வுடன் பாடுபட்டு வருகின்றது.

வேளாண்மை விற்பனைத் துறை

முகவுரை .

1977 அக்டோபர் திங்களில் வேளாண்மை விற்பனைத் துறை துவங்கப்பட்டது. அதன் முக்கிய பணிகள் பின்வருமாறு :—

1. விற்பனை குழுக்கள் மூலம் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களை தோற்றுவித்தல்.

2. விவசாயிகள் கொண்டு வரும் விளைபொருட்களை உயர்ந்தபட்ச விலை கிடைக்க வழி செய்யும் வகையில் பொருட்கள் தரம் பிரிக்கப்படுதல்.

3. நுகர்வோர், பயன்பெறும் வண்ணம் 'அக்மார்க்' உணவுப் பொருட்களை தருவித்தல்.

4. சர்வே எடுத்தல்.

5. பருத்தியில் சுத்ததன்மையும் பிற இனங்கள் கலப்பினத்தை தடுக்க பருத்தி சான்றுரையும் சட்ட அமலும் படுத்துதல்.

நடவடிக்கைகள் :

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் :

விற்பனையை ஒழுங்குபடுத்துவதற்கும் இடைத்தரகர்களை தவிர்க்கவும் விவசாயிகள் கொண்டுவரும் விளைபொருட்களை உயர்த்தபட்ச விலைக்கு விற்றுதரவும் ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் நிறுவப்படுகின்றன. தற்போது தமிழ்நாட்டில் 270 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன.

அக்மார்க் தரம் பிரிப்பு :

உணவுப் பொருட்களில் கலப்படத்தை தவிர்க்கவும், நுகர்வோர் நல்ல தரமான நலவியல் உணவுப்பொருட்களை பெற வேண்டும் என்பதற்காக இத்திட்டம் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் கீழ்க்கண்ட பொருட்கள் 'அக்மார்க்' முத்திரையிடப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.

மத்திய கட்டுபாட்டிற்குட்பட்ட பொருட்கள் :

1. நல்லெண்ணெய், கடலெண்ணெய், தேங்காய் எண்ணெய், விளக்கெண்ணெய், நெய், தேன் மற்றும் மசாலாப்பொடிகள்.

மத்திய கட்டுப்பாட்டிற்குட்படாத பொருட்கள்.

(1) பருப்பு வகைகள், (2) அரிசி, (3) உருளைக்கிழங்கு, மற்றும் (4) முட்டைகள்

தற்போது தமிழ்நாட்டில் 35 அக்மார்க் ஆய்வு கூடங்கள் செயல்பட்டு வருகின்றன.

வணிகமுறை தரம் பிரிப்பு :

விவசாயிகள் கொண்டுவரும் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்வதற்காக இத்திட்டம் செயல்பட்டு வருகின்றது. தற்போது தமிழ்நாட்டில் 102 வணிக முறை தரம்பிரிப்பு மையங்கள் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் விவசாயிகள் நலம் கருதி செயல்பட்டு வருகின்றன.

பருத்தி தரம் பிரிப்பு :

நவீன கருவிகள் கொண்டு பருத்தியின் இழை நீளம், நிறம், ஈரப்பதம், அரவை சதவீதம் மற்றும் பிற கலவினங்கள் பற்றி ஆய்வு செய்து பருத்திக்கு தரம் நிர்ணயிக்கப்படுகிறது. தற்போது 11 இடங்களில் பருத்தி தரம்பிரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

புகையிலை தரம் பிரிப்பு :

தமிழ்நாட்டில் புகையிலைக்கென்று புஞ்சை புளியம்பட்டியில் மட்டும் ஒரு தரம் பிரிப்பு மையம் செயல்பட்டு வருகின்றது.

பருத்தி சான்றுரையும் சட்ட அமலும் :

பருத்தியின் சுத்த தன்மையை காக்கவும், பருத்தி அரவை மற்றும் அழுத்தும் ஆலைகளில் பிற இன பருத்தி கலப்பதை தவிர்க்கவும் இத் திட்டம் செயல்பட்டு வருகின்றது.

பயிற்சி மையம் :

அக்மார்க் மற்றும் வணிகமுறை தரம் பிரிப்பு பற்றியும் மற்றும் அறுவடைக்குப் பின் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளை விவசாயிகளுக்கு விளக்குவதற்காகவும் உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் விற்பனைக் குழு பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது.

இலக்கு மற்றும் சாதனை (1989—90).

வரிசை எண்.	திட்டத்தின் பெயர்.	1989-90, இலக்கு.	1989-90, சாதனை.
(1)	(2)	(3)	(4)
1	விற்பனைக்கூட வரத்து (ல.மெ.டன்)	7.28	5.65
2	தேங்காய் (ல. எண்கள்)	93.50	111.46
3	வாழைதார்கள் (ல. எண்கள்)	3.85	3.07
	அக்மார்க் தரம்பிரிப்பு :		
4	மத்திய கட்டுப்பாட்டிற்குட்பட்ட பொருட்கள் (குவி)	2,10,600	2,33,151
5	மத்திய கட்டுப்பாட்டிற்குட்படாத பொருட்கள் (குவி)	3,21,000	3,02,689
6	வணிகமுறை தரம்பிரிப்பு (குவி)	43,67,800	48,24,300
7	பருத்தி தரம்பிரிப்பு (குவி)	2,25,700	2,57,819
8	புகையிலை தரம்பிரிப்பு (குவி)	11,000	11,242
9	தரம்பிரிப்பாளர் பயிற்சி எண்	60	51
10	பருத்தி சான்றுரையும் சட்ட அமலும் உரிமங்கள் வழங்கியது (எண்கள்)	87,470	91,753
11	பயிர் சான்றுரை பரப்பளவு (ஏக்)	570	572

நிதி இலக்கு சாதனை (ரூ. இலட்சத்தில்).

வரிசை எண்.	திட்டத்தின் பெயர்?	1989-90, இலக்கு.	1989-90, சாதனை.
(1)	(2)	(3)	(4)
1	தரம் பிரிப்பு கட்டணம் :		
	மத்திய கட்டுப்பாட்டிற்குட்பட்டது	9.94	12.66
	மத்திய கட்டுப்பாட்டிற்குட்படாதது	0.16	0.76
	விற்பனைக்கூட வருவாய்	631.00	523.46
	பருத்தி சான்றுரையும் சட்ட அமல் மூலமாக வருவாய்	6.28	6.85

6 நிதி ஒதுக்கீடு மற்றும் செலவின விபரம் (ரூ. லட்சத்தில்) :

வரிசை எண்,	திட்டத்தின் பெயர்.	நிதி ஒதுக்கீடு. 1989–90,	செலவு.
(1)	(2)	(3)	(4)
1	ஊரக திட்டங்கள் கட்டுதல்	5.00	3.50
2	விற்பனைக்கூட வளர்ச்சி	4.00	4.00

முடிவுரை :

வேளாண்மை விற்பனைத்துறை விவசாயிகள் மற்றும் நுகர்வோரின் மேம்பாடு மற்றும் நலம் கருதி பல நல்ல திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

வேகாண்மைப் பல்கலைக் கழகம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் தன்னாட்சி உரிமை பெற்ற நிறுவனம். இது வேளாண்மை மற்றும் சார்புடைய துறைகளில் ஆராய்ச்சிகள் நடத்துவதோடு, வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மைப் பொறியியல் வனவியல், மனையியல் ஆகிய துறைகளில் இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்பு நடத்துகிறது, மேலும் பல்வேறு விரிவாக்கக் கல்வி நடவடிக்கைகளின் மூலமாக பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சி முடிவுகள் உழவர்களிடம் விரைவில் சென்றடைய உதவி புரிகிறது, இப்பல்கலைக்கழகம் மாநிலத்திலுள்ள மற்ற விரிவாக்கத் துறை களுக்குத் தேவையான எல்லா ஆராய்ச்சிகளையும் செயல்படுத்துவதன் மூலம் அவற் றின் ஆராய்ச்சித் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்கிறது.

பணிகள் :

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் கீழ்க்கண்ட பணிகளைச் செயல்படுத்தி வருகின்றது :—

1. வேளாண்மை மற்றும் சார்புடைய துறைகளில் ஏற்ற கல்வி பணி மேற் கொள்ளுதல்.

2. விவசாயம் மற்றும் சார்புடைய துறைகளில் தேவையான ஆராய்ச்சிப் பணிகளை செயல்படுத்துதல்.

3. பல்கலைக் கழகத்தில் பல்வேறு ஆராய்ச்சி நிலையங்களில் கண்டு பிடிப்புகளை தீரிய முறையில் விவசாயிகளிடையே சென்றடைய மற்ற விரிவாக்கத் துறைகளில் கூட்டுறவுடன் ஆவன செய்வது.

பணிகளின் முன்னேற்றம் :

1989-90 ஆம் ஆண்டில் இப்பல்கலைக்கழகத்தின் சாதனைகளை சுருக்கமாக மேலே குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்வி :

இவ்வாண்டில் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த நான்கு வளாகங்களில் இளமறிவி யலுக்கு 683 மாணவர்களும், மூதறிவியல் பட்டப்படிப்பிற்கு 340 மாணவர்களும் சேர்க் கப்பட்டனர். சுற்றுப்புற அறிவியல் மற்றும் வனவியல் பாடங்களில் மூதறிவியல் பட்டப் படிப்பு புதிதாக துவங்கப்பட்டது.

ஆராய்ச்சி :

நடப்பு ஆண்டில் 315 திட்டங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டன

பலகலைக் கழகத்தின் தீவிர ஆராய்ச்சிகளின் மூலம் 15 புதிய இரகங்கள் வெளியிடப்பட்டன.

விரிவாக்கக் கல்வி :

பல்கலைக் கழக விரிவாக்கக் கல்வி மையம் வெவ்வேறு ஆராய்ச்சி நிலையங்களின் சண்டுபிடிப்புகளை சிரியே முறையில் விவசாயிகளினடையே சென்றடைய ஆணை செய்துள்ளது, அவற்றின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

இப்பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ஆறு வேளாண்மை அறிவியல் மையங்கள், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, விருத்தாசலம், காட்டுப்பாக்கம் மற்றும் பாண்டிச்சேரி வேளாண்மை மற்றும் வேளாண்மை யுசார்ந்த துறைகளில் பயிற்சிகளை மையத்திலும், மையத்திற்கு வெளியிலும் நடத்தி வந்துள்ளன. அம்முறையில் 895 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன, இதன் மூலம் 20,624 உழவர்களும் 8,459 பல்கலைப் பெண்டிரும் 1,711 விரிவாக்க அலுவலர்களும், 1,859 இளைஞர்களும் 197 பலதரப்பட்ட பிரிவினரும் பயன் பெற்றனர்.

*பயில் மருத்துவ மையங்களிலுள்ள ஆராய்ச்சி வல்லுனர்கள் பயிற்சி வகுப்புகளும், பயிற்சிகளும் கூட்டங்களும், கண்டனை திங்களும். உழவர் தினங்களும் நடத்தி சிறந்த முறையில் பயிர்களுக்கு ஏற்பட்ட நோய்களுக்கு தீர்வுகள் கண்டுள்ளனர். மேலும் உழவர்களுக்குண்டான பிரச்சினைகளுக்கு தீர்வுகள் செய்யப்பட்டன.

* வானொலி வேளாண்மைப்பள்ளி மூலம் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புகளை நிர்வாகம், பருப்பு உற்பத்தி நுட்பங்கள், கால்நடை பராமரிப்பு போன்ற பாடங்கள் 2,281 உழவர் பெருங்குடி மக்களுக்கு நேரடியாகவும் மற்றும் ஆயிரக்கணக்கானோருக்கு மறைமுகமாகவும் பயன்படுமாறு நடத்தப்பட்டன. வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை பராமரித்தல், கோழி வளர்த்தல், மீன் மற்றும் பட்டுப்பூச்சி வளர்த்தல் போன்ற துறைகளில் தபால் மூலம் 13 பாடங்கள் நடத்தப்பட்டு சுமார் 676 உழவர் பெருமக்கள் பயன்பெற்றனர்.

* ஐந்து பொது விடியோ பாடங்களும், 16 வயலும் வாழ்வும் நிகழ்ச்சிகளும் தயாரிக்கப்பட்டு சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தின் மூலம் ஒலிபரப்பப் பட்டது.
* இரு வெவ்வேறு இடங்களில் அமைக்கப்பட்ட தகவல் தொடர்பு வசதிகளின் மூலமாக ஒவ்வொரு வாரமும் கண்ணைச் செய்திகள் பரப்பப்பட்டன.

முக்கிய நிகழ்ச்சிகள்

* நடப்பு ஆண்டில் பல்கலைக் கழகத்தின் பல்வேறு வளாகங்களில் ஏராளமான பணிமனைக் கூடங்கள், கருத்தரங்கங்கள் மற்றும் பயிற்சிகள் நடத்தப்பட்டன. கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பணிகளை மேம்படுத்தும் நோக்குடன் 31 விஞ்ஞானிகள் உயர் கல்விக்காகவும், பயிற்சிக்காகவும் அயல்நாடுகளுக்கு அனுப்பப் பட்டார்கள்.

* தமிழ்நாடு முன்னாள் வேளாண்மை அமைச்சர் மாண்புமிகு கோ. சி. மணி அவர்கள், மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் வலை வீடு கட்டுவதற்கு தூண்டல் 17, 1989-ல் அடிக்கல் நாட்டினார்.

* தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக வளாகத்தில் ஆடிட்டோரியம் கருத்தரங்கு 1989 ஜூன் 19 அன்று துவக்க விழா நடத்தப்பட்டது. கோயம்புத்தூர் வேளாண் அறிவியல் நிலையமும், கோயம்புத்தூர் நகர் கழல் சங்கமும் இணைந்து ஆடிப் பட்டம் கருத்தரங்கினை நடத்தியது. விரிவாக்கக் கல்வி இயக்குநரகத்தில் 1989 டிசம்பர் 4-ம் தேதி அன்று சர்வதேச மகளிர் விழா கொண்டாடப்பட்டது.

* மேட்டுப்பாளையம் வனவியல் ஆராய்ச்சி நிலையத்தில் ஜனவரி 1, 1990-ல் தமிழ்நாடு வேளாண்மை அமைச்சர் மாண்புமிகு வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் ஆய்வுக்கூடம் பகுதியினைத் திறந்து வைத்தார். மற்றும் குடியிருப்பு கட்டிடம் பயிற்சியாளர் விடுதி மற்றும் கலையரங்கம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டினார்.

சர்வதேச இயற்கை மற்றும் இயற்கை வனப் பாதுகாப்பு குழுவின் தலைவர் டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் அவர்கள் 1990 ஜனவரி 10-ம் நாளன்று தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக வளாகத்தில் நுண்ணுயிரியல் தொழில் நுட்பம் என்ற புதிய துறையினை துவக்கி வைத்தார்.

* தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் 1990 ஜனவரி 28-ம் நாளன்று தேசிய அறிவியல் நாள் கொண்டாடப்பட்டது.

5. நடப்பு ஆண்டில் புதியநிட்டங்கள் :

நடப்பு ஆண்டில் 57 புதிய திட்டங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டு நடைமுறை படுத்தப்பட்டன.

தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை.

தமிழ் நாட்டில் தோட்டக்கலைப்பயிர் பயிரிடுவதற்குத் தேவையான வளம் உள்ள பகுதிகளைக் கண்டறிந்து அப்பகுதிகளில் பழங்கள், காய்கறிப் பயிர்கள், மலைப்பயிர்கள், வாசனைத்திரவியப் பயிர்கள், மலைப்பயிர்கள் போன்றவற்றின் பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் 1979-ஆம் ஆண்டு தர்மபுரியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட ஆரம்பித்து தற்சமயம் நமது மாநிலத்தில் நிலவிவரும் வறட்சியையும், மாறுபட்ட பருவ நிலையினாலும் ஏற்படும் பாதிப்பை தவிர்க்க மானாவாரி நிலங்களில் பல ஆண்டுத் தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்யச்செய்து அதன் மூலம் விவசாயிகளின் நல் வாழ்வுக்கு வித்திட திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பை அதிகரிக்கவும், புதிய தொழில் நுட்ப உத்திகளை கடைப்பிடித்து உற்பத்தியை அதிகரிக்கவும் இத்துறையினால் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்சமயம் தமிழ்நாட்டில் நிலவிவரும் வறட்சியையும் மழை பொய்ததையும் கருத்தில் கொண்டும், தொழிலாளர் பிரச்சினையைக் கருத்திற் கொண்டும், அதிகமான விவசாயிகள் தோட்டக்கலைப் பயிர்களை பயிர்ட முன்வருகின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை தேவையான தரமான செடிகள் காய்கறி விதைகள் ஆகியவற்றை விநியோகம் செய்ய தேவையான நடவடிக்கைகள் இத்துறையால் எடுக்கப்பட்டு வருகின்றது. இதற்காக விவசாயிகளுக்கு 50 முதல் 100 சதம் மான்ய விலையில் விவசாயிகளுக்கு இடுபொருட்களை வழங்கி சாகுபடி பரப்பினையும் உற்பத்தியையும் பெருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம் :

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம் தமிழ்நாட்டில் 66 அலகுகளைக் கொண்டு செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாக மானாவாரியில் தற்சமயம் பயிரிடப்பட்டு வரும் வருடாந்திரப் பயிர்களை மாற்றி அவ்விடத்தில் பல ஆண்டு தோட்டக்கலைப் பயிர்களைப் பயிரிடச் செய்வதேயாகும். அத்துடன் விவசாயிகளுக்கு தேவையான காய்கறி விதைகளும் விநியோகம் செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்கள் 50 சத மான்ய விலையில் விநியோகம் செய்யப்படுகிறது. இத்திட்டத்தில் பணியாற்றும் களப் பணியாளர்கள் விவசாயிகளின் இல்லங்களுக்குச் சென்று தோட்டக்கலை தொழில் நுட்ப ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர்

அரசு தோட்டக்கலை பண்ணைகள் :

தோட்டக்கலைத்துறை தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் 54 அரசு தோட்டக்கலை பண்ணைகளை 2,532 ஹெக்டேர் பரப்பில் செயல்படுத்தி வருகிறது. இப்பண்ணைகளின் மூலம் தரமான பழச்செடிகள், மலைப் பயிர் செடிகள் வாசனை திரவியப் பயிர் செடிகள், அலங்காரச் செடிகள் போன்றவைகளையும் உற்பத்தி செய்து விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் தரமான சான்று பெற்ற காய்கறி விதைகளையும் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் இப்பண்ணைகள் அருகில் உள்ள விவசாயிகளுக்கு மாதிரிப் பண்ணையாகவும் செயல்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 200 இலட்சம் பலதரப்பட்ட செடிகளும், 39 மெ. டன் சான்று விதைகளும் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது.

ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம் :

இத்திட்டம் தமிழ்நாட்டில் சேலம், தர்மபுரி, திருச்சி, வடஆற்காடு,, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களிலும் உள்ள மலைப்பகுதிகளில வாழும் பழங்குடியினரின் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 2,600 பழங்குடியினர் குடும்பங்கள் பல ஆண்டுப் பழத்தோட்டங்கள் அமைப்பதில் ஈடுபடுத்தப்பட்டு அதன்மூலம் பயன்பெற்று வருகின்றனர். அவர்களுக்குத் தேவைப்படும் இடுபொருட்களான தரமான பழச்செடிகள், உரம், பூச்சி மருந்து, பண்ணைத்தளவாடங்கள் முதலியன ரூ. 1,000 மதிப்புக்கு முழு மான்ய விலையில் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் பழங்குடியினர் நலத்திற்காக தோட்டக்கலை தொழில் நுட்பங்களில் பயிற்சியும், சுற்றுலாவும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி அபிவிருத்தித் திட்டம் :

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் சுற்றுப்புற சூழ்நிலையை பாதுகாக்கும் முகமாக பல ஆண்டு தோட்டங்களை அமைக்கும் பொருட்டு மேற்கு தொடர்ச்சிமலைப் பகுதி அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்குத் தேவையான மா, சப்போட்டா, கொய்யா போன்ற செடிகள் 50 சத மான்ய விலையில் வழங்கப்படுகின்றன. இப்பகுதி மக்கள் குறிப்பிட்ட பரப்பில் உற்பத்தி பெருக்குவதற்காக விவசாயிகள் பல அடுக்கு பயிர்சாகுபடி முறையை அனுசரிக்க அனைகள் வழங்கப்பட்டுள்ளன.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

நீலகிரி மாவட்டத்தில் தொடர்ந்து காடுகள் அழிக்கப்படுவதினால் மண் அரிமானம் மற்றும் மண் சத்துக்குறைவு அதிகமாக ஏற்படுகிறது. இதனைத் தடுப்பதற் காக தோட்டக்கலைத் துறை மூலம் மாறுபட்ட பயிர் சாகுபடி முறையைக் கடைப் பிடித்து அதன் மூலம் தேயிலை, பழங்கள் மற்றும் பல ஆண்டு வாசனைத் திரவியப் பயிர்கள் போன்றவற்றை வருடாந்திரப் பயிர்களாக உருளைக்கிழங்கு, முட்டைக்கோஸ், பூக்கோஸ் போன்ற பயிர்களை, பயிரிடும் நிலங்களில் பயிரிடச் செய்கிறது. இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் 500 ஹெக்டேர் பரப்பளவில் பல ஆண்டு பயிர்களின்கீழ் கொண்டுவரப்படுகிறது.

பயிற்சி வழிதொடர்பு திட்டம் :

நீலகிரி மாவட்டம் மற்றும் திண்டுக்கல்-சுயிதே மில்லத் மாவட்டம், கொடைக் கானல் வட்டத்திலும் விவசாயிகளுக்கு அவர்களது பண்ணை இல்லங்களிலேயே புதிய தோட்டக்கலை தொழில் நுட்ப செய்திகளை அளித்து அதன்மூலம் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்க இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத் தின் மூலம் வேளாண்மை தோட்டக்கலை தொழில்நுட்ப செய்திகள் வேளாண்மை ஆராய்ச்சி மையங்களில் பெறப்பட்டு களப்பணியாளர்கள் மூலம் விவசாயிகளுக்கு தெரி விக்கப்படுகிறது.

முந்திரி அபிவிருத்தி திட்டம் :

மாநிலத்தில் முந்திரிப் பயிரின் பரப்பு மற்றும் உற்பத்தியைப் பெருக்குவதற்காக மத்திய அரசின் உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்குத் தேவையான அதிக மகசூல் தரும் இரகங்கள் கன்றுகள்/ பதியன்கள் முதலானவை இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் நவீன சாகு படி முறைகளை செயல்விளக்கத்தின் மூலம் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்படுகிறது.

இருபது அம்ச திட்டம் :

இத்துறையின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 35 இலட்சம் பலவகை மரச் கன்றுகள் விநியோகம் செய்யப்படுவதுடன் ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம் மூலம் 2,600 ஆதிவாசிகள் குடும்பமும் பயனடைகின்றன.

இத்துறையின் மூலம் 1990-ம் ஆண்டு செயல்படுத்தப்பட்ட பல்வேறான திட்டங்கள் மூலம் உற்பத்தியைப் பெருக்க திட்டமிடப்பட்டு பழங்கள் 25.65 லட்சம் மெ. டன்னும் காய்கறி பயிரில் 31.5 இலட்சம் மெ. டன்னும் மலைப்பயிரில் 1.25 இலட்சம் மெ.டன் னும் வாசனைத் திரவியப் பயிர்களில் 0.44 இலட்சம் டன்னும் குறியீடு அளிக்கப் பட்டு முறையே 26.164 இலட்சம் மெ. டன்னும் 28.82 மெ. டன்னும் 1.5. இலட்சம் மெ. டன்னும் 2.47 இலட்சம் மெ. டன்னும் 0.455 இலட்சம் மெ. டன்னும் சாதனை யாக அடையப்பட்டுள்ளது.

மொத்தத்தில் 1989-90-ம் ஆண்டில் 59.409 இலட்சம் மெ. டன் மொத்தத்தில் உற்பத்தி செய்ததைக் கருத்தில் கொண்டு 1990-91 ஆம் ஆண்டில் 62.39 இலட்சம் மெ. டன் குறியீடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

புதிய திட்டங்கள் :

1989-90 ஆம் ஆண்டில் பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டம், சின்னக்கல்ராயன் மலையில் சிறிய வாழைத் தோட்டத்தில் பணியாளர்களுக்கு குடி யிருப்புகள் கட்ட ரூ. 5.00 இலட்சம் ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

முடிவுரை :

இத்துறை மூலம் பல்வேறான தோட்டக்கலை திட்டங்கள் செயல்படுத்தப்படுவதன் மூலம் பழப்பயிர்களில் 12,087 ஹெக்டேரும் வாசனைத் திரவியப் பயிர்களில் 9,053 ஹெக்டேர், மலைப்பயிர்களில் 1,248 ஹெக்டேரும், மலர்ப்பயிர்களில் 143 ஹெக்டேரும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் 1992-2000 ஆம் ஆண்டில் ரூ. 500 இலட்சம் மதிப்புள்ள 1,87,235 மெ. டன் தோட்டக்கலை விளைப்பொருட்கள் ஒவ்வொரு ஆண்டும் உற்பத்தி செய்ய வாய்ப்புள்ளது.

எண்ணெய் வித்துக்கள்.

1. முன்னுரை

நம் மாநிலத்தில் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியையும் உற்பத்தி திறனையும் அதிகரிப்பது எண்ணெய் வித்துக்கள் துறையின் முக்கிய நோக்கமாகும். எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகரிப்பதற்கு இத்துறை கடைபிடிக்கும் அணுகுமுறைகளாவன:

அ. எண்ணெய வித்துக்கள் சாகுபடி. பரப்பை அதிகரித்தல்.

ஆ. மாற்றுப் பயிர் சாகுபடி.

இ. நவீன சாகுபடி முறைகள்.

ஈ. சிறந்த மானாவாரி சாகுபடிஉத்திகளைப் பயன்படுத்துதல்.

எண்ணெய் வித்துத் துறை ஆண்டுதோறும் சுமார் 12,000 டன் தரமான விதைகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்கிறது. துறை அலுவலர்களின் தீவிர மேற்பார்வையின்கீழ் உற்பத்தி செய்யப்படும் இந்த விதைகள் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலமாக விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

ரைசோபியம் நுண்ணுயிர், ஜிப்சம், நுண்ணூட்டச்சத்து, சிக்கன உழவுக் கருவிகள் ஆகிய இடு பொருட்களை உபயோகித்து எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் அதிகரிப்பது இத்துறை செயல்படுத்தும் நிட்டங்களின் மற்றொரு முக்கிய அம்சமாகும். பூச்சி நோய்க் கட்டுப்பாடு போன்ற அடிப்படைகளில் விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு மேற்கொள்ள உதவிகள் வழங்கப்படுகின்றன. தேசிய எண்ணெய் வித்துக்கள் அபிவிருத்தி நிட்டம் மற்றும் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி உந்துகை திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் திருந்திய தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றவும், இடுபொருட்கள் பயிர் பாதுகாப்புக் கருவிகள் சிக்கன உழவுக் கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தவும் விதை உற்பத்தி, விதை கொள்முதல் ஆகியவற்றுக்கும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மானியச் சலுகைகள் வழங்கப்படுகின்றன.

2. துறையின் செயற்பாடு :

தலைமையிடத்தில் ஒரு இணை வேளாண்மை இயக்குநர் (எஸ்) மற்றும் திருச்சியில் ஒரு இணை வேளாண்மை இயக்குநர் (தென்னை) ஆகியோரின் உதவியுடன் தமிழகத்தில் நல்வேறு எண்ணெய் வித்துக்கள் மற்றும் தென்னை அபிவிருத்திப் பணிகளை, துறைத் தலைவராக எண்ணெய் வித்துக்கள் இயக்குநர் செயல்படுத்துகிறார்.

மாவட்ட அளவில் 13 துணை வேளாண்மை இயக்குநர் (எஸ்)கள் கோட்ட அளவில் 58 உதவி வேளாண்மை இயக்குநர் (எஸ்)கள் 320 வேளாண்மை அலுவலர்கள், 250 உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் 507 வயல்வெளிக்க அலுவலர்கள் செயல்படுத்தும் திட்டப்பணிகளை கண்காணிக்கிறார்கள்.

1989-90-ம் ஆண்டில் மாநில அளவில் பணியாற்றும் அலுவலர்கள் விவரம் வருமாறு :

1. எண்ணெய் வித்துக்கள் இயக்குநர் .. திரு. லால் ராவ்னா சைலோ, இ.ஆ.ப. 1—4—89 முதல் 31—3—90.

2. இணை வேளாண்மை இயக்குநர் (எஸ்) — 1. திரு. அ. தியாகராஜன், பி.எஸ்.ஸி. (வேளாண்மை) 1—4—1989 முதல் 30—3—1990 பி. ப.

2. திரு. எஸ். வேங்கடேசன், எம்.எஸ். (வீவ) 30—3—1990 பி.ப. முதல் இன்று வரை.

3. இணை வேளாண்மை இயக்குநர் (சென்னை) — திரு. பி.முத்துமணி, பி.எஸ்.ஸி. (வேளாண்மை) 1—4—1989 முதல் இன்றுவரை.

4. இணை பதிவாளர், கூட்டுறவு சங்கங்கள் — திரு. கி. கே. சுப்பிரமணியன், எம்.எ., எச்.டி.சி. 1—4—1989 முதல் 15—12—1989 மு.ப.

1. திரு. பி. எஸ்.சம்பந்தம், எம்.ஏ., எச்.டி.சி. 15—12—1989 பி.ப. முதல் 23—5—1990 மு.ப.

3. திரு. எஸ். வெங்கடேசன், பி.எஸ்.சி.(விவ) 23—5—1990 பி.ப. முதல் 1—8—1990 மு.ப.

4 திரு. வி. தீர்த்தகிரி, பி.ஏ., (ஹானர்ஸ்), எம்.ஏ., 1—8—1990 மு.ப. முதல் இன்று வரை.

டணி முன்னேற்றம் பொருள் மற்றும் நிதி இலக்கு மற்றும் சாதனை விவரங்கள் :

அ. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி :

1989-90-ம் ஆண்டுகளில் 12.69 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் எண்ணெய் வித்துப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டது. இந்த சாகுபடி பரப்பிலிருந்து கணிப்பீடு செய்யப்பட்ட 13.05 இலட்சம் டன்கள் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

பயிர்கள்.	பரப்பு (இலட்சம் ஹெக்டேரில்).		உற்பத்தி (இலட்சம் டன்னில்).	
	இலக்கு.	சாதனை.	இலக்கு.	சாதனை.
(1)	(2)	(3)	(4)	(5)
1 நிலக்கடலை	11.25	10.81	14.16	12.46
2. எள்	1.60	1.37	0.61	0.35
3. சூரியகாந்தி	0.25	0.21	0.14	0.15
4. ஆமணக்கு	0.25	0.30	0.09	0.09
மொத்தம்	13.35	12.69	15.00	13.05

ஆ. தென்னை :

1989—90 ஆம் ஆண்டில் 12 இலட்சம் தென்னங்கன்றுகள் 6.440 ஹெக்டேர் பரப்பில் பயிரிட விநியோகிக்கப்பட்டது. இந்த 6.440 ஹெக்டேர் பரப்பில் இருந்து எதிர்பார்க்கப்படும் உற்பத்தி 5.07 கோடி தேங்காய்கள் ஆகும்.

இ. தரமான வகைகள் விநியோகம் :

1989—90-ல் கீழ்க்கண்டவாறு தரமான விதைகள் விநியோகம் செய்யப்பட்டது:

	இலக்கு	சாதனை
1. நிலக்கடலை	11,250 (டன்களில்).	8,245
2. எள்	120	106
3. சூரியகாந்தி	187	403
4. ஆமணக்கு	75	68

ஈ. தென்னங்கன்றுகள் விநியோகம் :

1989—90 ஆம் ஆண்டில் 8.83 லட்சம் நெட்டை ரக கன்றுகள் 4.01 லட்சம் நெட்டை மற்றும் குட்டை ரக கன்றுகளும், 0.04 இலட்சம் எண்ணிக்கை குட்டை மற்றும் நெட்டை ரக தென்னங்கன்றுகளும் விநியோகம் செய்யப்பட்டன.

உ. சிறு தளைகள் :

40,467 சிறு குறு விவசாயிகளுக்கு ரூ. 30,513 லட்சம் எண்ணெய்வித்து சிறு தளைகள் விநியோகத்துக்காக 1989-90 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டது.

ஊ. சிறப்பு பகுதி திட்டம் :

சிறப்பு பகுதி திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் வகுப்பு விவசாயிகளுக்கு உதவிட எண்ணெய்வித்துப் பயிர்களுக்கு பயிர் பாதுகாப்பு மருந்து விநியோகம், தென்னங் கன்றுகள் 25 சதம் முதல் 50 சதம் விலையில் விநியோகம் ஆகிய திட்டங்களுக்கு ரூ. 24.49 இலட்சம் 1989-90-ல் செலவிடப்பட்டது.

இம்மாநிலத்தில் பல்வேறு எண்ணெய்வித்துக்கள் மற்றும் தென்னை மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்திட 1989—90 ஆம் ஆண்டில் ரூ. 14.19 கோடி செலவீடும் பட்டிருக்கிறது.

5. புதிய திட்டங்கள் செயல்படுத்துதல் :

பகுதி இரண்டில் திட்டத்தின் கீழ் 1989—90-ல் [கிழ்க்கண்ட புதிய திட்டங்கள் செயலாற்றப்பட்டன:—

1. துரைராஜ்நகர் பிராந்திய கருவித்துப் பண்ணையில் விதைக்கிடங்கு கட்டுதல். 5.00 லட்சம்

2. முசரவாக்கும் ஆதார விதை உற்பத்தி மையத்தில் பணியாளர் குடியிருப்பு கட்டுதல் 4.95 லட்சம்.

மேற்குறிப்பிட்ட கட்டிடப்பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

முடிவுரை :

தமிழ்நாட்டில் நிலக்கடலை பெருமளவில் சாகுபடி செய்யப்படும் முக்கிய எண்ணெய்வித்துப் பயிராகும். ¼ எண்ணெய்வித்துத் துறை டிசம்பர் 1980 முதல் இயங்கி வருகிறது. 1979—80-ல் (எண்ணெய்வித்துத் துறை தனியானதொரு துறையாக அமைக்கப்படுவதற்கு முன்னதாக) நிலக்கடலை சாகுபடி பரப்பு 9,98,000 ஹெக்டேர் ; உற்பத்தி 10,63,000 டன்கள்; உற்பத்தித்திறன் ஒரு ஹெக்டேர் பரப்பிற்கு 1,062 கிலோ.இவை முறையே 10,81,000 ஹெக்டேர், 12,46,000 டன்கள் ஹெக்டேருக்கு 1,153 கிலோ என 1989—90-ல் சாதகமான பருவமழை இல்லாத பொழுதும் உயர்ந்தன.

விதைச் சான்றளிப்பு.

1. முன்னுரை :

வேளாண்மையில் வளமை காண நல்விதை, நல் உரம், நற்காப்பு ஆகிய மூன்றும் இன்றியமையாத இடுபொருள்களாகும். இவற்றுள் விதையே விளைச்சலுக்கு ஆதாரம். அதிக மகசூல் பெறுவதற்கு தரமான நல்விதைகளின் அவசியத்தை நம் வேளாண் பெருமக்கள் நன்கு உணர்ந்துள்ளதால், நமது மாநிலத்தில் தரமான விதைகளின் தேவை சீராக அதிகரித்து வருகிறது. சான்று பெற்ற விதையே நல்விதை ஆகும். விதைச் சான்றுத் துறை நல்ல தரமான சான்றிதழ் விதைகளின் உற்பத்திமற்றும் விநியோகத்தை ஒழுங்குப்படுத்தியும், உழவர்க்குத் தரமான விதைக்கு உத்திரவாதம் கொடுத்தும் நல் விதை உற்பத்தியாளர்களை ஊக்குவித்தும் வருகிறது. தரமான விதை உற்பத்தி மற்றும் விநியோக நடைமுறையில் விதைச்சட்டம், 1966 மற்றும் விதை விதிகள், 1968-ன் அடிப்படையில் விதைச்சான்றளிப்புத் திட்டம் செயலாற்றி வருகிறது.

விதைச்சான்று இயக்குநரின் கீழ் கீழேகுறிப்பிட்டுள்ள திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன :—

(1) விதைச்சான்று மற்றும் பயிற்சி,

(2) விதை ஆய்வு

(3) விதைப் பரிசோதனை.

செயல்பாடுகள் :

(1) விதைச்சான்று மற்றும் பயிற்சி :

விதைச்சான்றளிப்பு என்பது நெறிமுறைப்படுத்தும் ஒரு அமைப்பு, விதைகளில் போதுமான அளவு வம்சாவழித் தூய்மை, புறத்தூய்மை, வெளி முளிர்ச்சி ஆகிய குணங்கள் உள்ளதா என்பதை கவனிப்பதும், அவ்வித சிறந்த விதைகளையும் செழித்து வளரக் கூடிய ஒட்டுப் பயிர்களில் உயர் ரகங்களை உற்பத்திக்கு இருப்பு வைப்பதற்காகவுமே அவ்வித விதைகள் கிடைக்க வாய்ப்பளிக்கவும் ஏற்படுத்தப்பட்டது.

விதைச்சான்றளிப்பின் முக்கிய நோக்கம் மேற்கண்ட ஏற்பாட்டுடன் விதை உற்பத்தி செய்தல், சுத்தப்படுத்தி கீழே விவரிக்கப்படும் நோக்கங்களுக்காகவும் தேவைக்காகவும் இருப்பு வைப்பதாகும்.

மைய அரசு தெரிவித்துள்ள சான்றளிப்பு நடைமுறைகளைப் பின்பற்றி குறைந்த பட்ச சான்றளிப்புத்தர நிர்ணயப்படி பல நிலைகளிலும் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. மேலும் மறு ஆய்வு, மறு சுத்திப் பணிகள் மதிப்பீடு போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

விதைச்சான்றுப் பயிற்சி பிரிவு 1985–86 முதல் இத்துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது. விதைச்சான்றுத் துறையில் பணிபுரியும் விதைச்சான்று அலுவலர்களுக்கும் விதை உற்பத்தியில் ஈடுபடும் அரசு விதை உற்பத்தியாளர் மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்களுக்கும், விதைச்சான்றுப்பயிற்சி அளிக்கப்படுகிறது.

கல்வித் திட்டம் :—

(1) தகவல் விளம்பரம் :

விதைச்சான்றுத்திட்ட நடைமுறைகள் மற்றும் விதை உற்பத்தி தொழில் உத்திகள் சம்பந்த புத்தகம் மற்றும் துண்டு பிரசுரங்கள் இத்துறையால் அச்சிட்டு அரசு அலுவலர்களுக்கும், விதை உற்பத்தியாளர்கள், விவசாயிகட்கும் வழங்கப்படுகிறது தகவல் மற்றும் விளம்பரத்தின் கீழ் விதைச்சான்றுத் துறையின் சான்றளிப்பு பணி மற்றும் சாதனைகளை விளக்கி கீழ்க்கண்ட தலைப்பில் மூன்று வீடியோ படம் தயாரிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளும், உற்பத்தியாளர்களும் பார்த்து பயன்பெறும் வகையில், விவசாயிகள் கூட்டங்களிலும், விவசாயிகள், விதை விற்பனையாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கான பயிற்சியின் போதும் வீடியோ படம் திரையிட்டுக் காண்பிக்கப்படுகிறது.

(1) வசந்தம் வீசுகிறது.
(2) வளம் கொழிக்குது.
(3) வாழ்வு செழிக்குது.

(2) விதைச் ட்டம் அமுல் செய்தல் மற்றும் தரக் கட்டுப்பாடு :

தரமான விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதைக் கண்காணிக்க 1981-ம் ஆண்டு முதல் விதை ஆய்வு பிரிவு விதைச்சான்று இயக்ககத்தில் செயல்பட்டு, போலி விதைகள் மற்றும் தரக்குறைவான விதைகள் விநியோகிப்பவர்கள் மீது தக்க நடவடிக்கைகள்விதைச்சட்டத்தின்படி எடுக்கப்பட்டு வருகின்றன. தனி ஆய்வுக்குழு நிறுவப்பட்டு விதை விற்பனை நிலையங்கள் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்களில் திடீர் ஆய்வு நடத்தி தரம் குறைந்த விதை விற்பனை செய்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(3) விதைப்பரிசோதனை :

விதைச் சான்றளிப்பு துறையின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மூன்று விதைப் பரிசோதனை நிலையங்கள் முறையே கோயம்புத்தூர், மதுரை மற்றும் குடுமியான்மலை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகிறது. விதைப் பரிசோதனை நிலையங்களில் சான்றளிப்பு, விதை ஆய்வு மற்றும் பணி விதை மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டு முடிவுகள் உற்பத்தியாளர்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது.

இனத்தூய்மை பரிசோதனை :

அரசு விதைப்பண்ணை, கன்னியம் பாளையத்தில் வீரிய ஒட்டு பருத்தி மறறும் தாயாதி விதைகளுக்கு இனத்தூய்மை பரிசோதனை செய்யப்படுகிறது. இவ்வருடம் 738 மாதிரிகளுக்கு இனத்தூய்மை பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

கண்ணாடி ஆய்வுக்கூடம் :

இனத்தூய்மை பரிசோதனை நடத்திடவும், பயிர்களின் வெளிப்புற குணாதிசயங்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு கோவையில் கண்ணாடி ஆய்வுக்கூடம் ஒன்று கட்டி முடிக்கப்பெற்று பரிசோதனை நடைபெற்று வருகிறது. பல்வேறு பயிர்களின் அறிவிக்கப்பட்ட ரகங்களின் இனத்தூய்மையை பாதுகாக்க இனத்தூய்மை ரகக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

1989-90-ல் செயல் படுத்திய புதிய திட்டங்கள் :

(1) பகுதி-2 திட்டம்.

பயிற்சி பிரிவை வகைபடுத்த 1989-90 பகுதி-2 திட்டத்தில், ரூ. 1.75 லட்சம் ஒப்பளிப்பு செய்து பயிற்சி சாதனங்கள் வாங்கி தொகை செலவு செய்யப்பட்டு விட்டது.

2. மத்திய மான்யத் திட்டம் :

1989-90-ம் ஆண்டில் குடுமியான்மலை விதைப்பரிசோதனை நிலையத்திற்கு பெருட்கள் வாங்க, இந்திய அரசாங்கம் ரூ. 5.6 லட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு விதைப்பரிசோதனைக் கருவிகள் வாங்கப்பட்டு வருகிறது.

விதைச்சட்டம், 1966 மற்றும் விதை விதிகள், 1968-ன்படி தரக்கட்டுப்பாடு மற்றும் விதை உற்பத்தியாளர்களால் தரமான விதைகள் உற்பத்தி செய்தல் போன்ற விபரங்களை விளம்பரம் செய்ய வானொலி, செய்தித் தாள்கள் போன்ற மக்கள் தொடர்பு சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

சிறு விவசாயிகளும் சான்று பெற்ற விதைகளின் பயனை முழுமையாக பெற பெருமளவில் சான்று விதைகளை சிறு பைகளில் போட்டு தைத்து விநியோகம் செய்ய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மறைமுகப்பயன் :

விவசாயிகள் சான்றிதழ் விதைகளை (18,349 மெ. டன்) பயன்படுத்தியதன் மூலம் ரூ. 77 கோடி அதிக வருமானம் பெற்றுள்ளன. 3,325 மெ. டன். தரமற்ற விதைகள் விற்பனையை தடை செய்யப்பட்டதன் மூலம் ரூ. 45 கோடி விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுவது தடுக்கப்பட்டது.

1989-90-ம் ஆண்டின செயல், நிதி இலக்கு மற்றும் சாதனை ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது.

1989-90-ம் ஆண்டின் இலக்கு மற்றும் சாதனை.

1(அ) விதைச் சான்றளிப்பு :

வ. எண்.	பயிர்.	1989-90 இலக்கு சான்றளிப்பு பரப்பு (ஹெக்.)	விதைச் சான்றளிப் பின்கீழ் பதிவு செய்த பரப்பு 1989-90 (ஹெக்)	சான்றளிக் கப்பட்ட விதை அளவு, 1989-90 (மெ.டன்)
(1)	(2)	(3)	(4)	(5)
1.	நெல்	7,700	9,368	13,580
2.	வீரிய சிறு தானியம்	400	247	208
3.	இரக சிறுதானியம்	1,200	1,430	728
4.	வீரிய பருத்தி	300	369	275
5.	இரகப் பருத்தி	4,900	8,665	1,695
6.	பயறு வகைகள்	9,700	11,239	1,597
7.	எண்ணெய் வித்துக்கள்	1,500	1,424	243
8.	காய்கறிகள்	300	281	23
	மொத்தம்	26,000	33,023	18,349

வ. எண்.	விபரம்	1989-90 இலக்கு (எண்ணிக் கையில்.)	1989-90ல் சாதனை (எ ண்ணிக் கையில்).
(1)	(2)	(3)	(4)
1.	பயிற்சி :		
	(அ) ஆற்றுப்படுத்தும், புத்தூட்டப்பயிற்சி அரசு மற்றும் தனியார் விதை உற்பத்தி பணியாளர்கள், விதை விற்பனையாளர்களுக்கு சான்றளிப்புப் பயிற்சி.	9 020	9,892
2.	விதை ஆய்வு :		
	(அ) விதை விற்பனை நிலையங்கள் ஆய்வு..	8,000	8,669
	(ஆ) விதை மாதிரிகள் எடுத்தல்..	8,000	8,081
3.	விதை திரிகள் பரிசோதனை செய்தது	27,000	28,648

நிதிச் சாதனை

(ரூபாய் இலட்சத்தில்.)

திட்டத்தின் பெயர்.	1989-90-ம் ஆண்டு நிதி ஒதுக்கீடு.			1989-90-ம் ஆண்டு செலவினம்.		
	திட்டம்.	திட்டம் அல்லாதது.	மொத்தம்.	திட்டம்.	திட்டம் அல்லாதது.	மொத்தம்.
	(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
(அ) விதைச்சான்று	14.12	97.63	1,11.75	15.87	1,25.28	141.1
(ஆ) விதை ஆய்வு	0.25		0.25	0.43		0.4
(இ) விதைப் பரிசோதனை	0.78	9.65	10.43	0.94	12.08	13.00
மொத்தம் ..	15.15	1,07.28	1,22.43	17.24	1,37.36	1,54.65

1989-90-ம் ஆண்டின் வரவினம் : ரூ. 32.47 இலட்சம்.

(விதைச்சான்று மற்றும் விதை ஆய்வுக் கட்டணம், நிறனாய்வு கட்டணம், சான்றட்டைக் கட்டணம், மறு சுத்திகரிப்பு கட்டணம் ஆகியவற்றின் மூலம் வரப் பெற்ற வருவாய்.)

வேளாண்மை விளைபொருள் விற்பனை வாரியம் :

வேளாண்மைத் துறையின் 24-10-1970 ஆம் நாளிட்ட 2852 ஆம் எண் அரசாணையில், மாநில அரசு பிறப்பித்த நிருவாக ஆணையின் மூலம், அரசு வேளாண்மை விளைபொருள் விற்பனை வாரியம் அமைக்கப்பட்டது. இது 1970 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் இருந்து செயல்படத் தொடங்கியது.

அமைப்பு :

வாணிப நடவடிக்கைகளை கவனிக்க அமைக்கப்பட்ட இந்த வாரியம் வேளாண்மை உற்பத்தி ஆணையாளரை, அலுவல் முறை தலைவராகக் கொண்டு, அவருடைய தலைமையில் செயல்பட்டு வருகிறது.

பணிகள் :

அரசு வேளாண்மை விளைபொருள் விற்பனை வாரியமானது, அங்காடிக் குழுக்களின் தலைமை அமைப்பாகச் செயல்பட்டு, அங்காடிக் குழுக்களின் அன்றாட நிருவாகத்தில் சீராகவும் செம்மையாகவும் செயல்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, அரசுக்கும், அங்காடிக் குழுக்களுக்கும் இடையே நிறமை மிக்கச் சிறந்த இணைப்பாகச் செயல்பட்டு வருகிறது.

அரசு வேளாண்மை விளைபொருள் விற்பனை வாரியத்தின் ஏனைய பணிகள் வருமாறு :

(1) வேளாண்மை விளைபொருள் சந்தை மேம்பாடு தொடர்பான விளம்பர, பிரச்சாரப்பணிகள்.

(2) வேளாண் விளைபொருள்களின் முறையான விற்பனை குறித்து விவசாயிகளுக்கு எடுத்துக் கூறுதல்.

(3) விற்பனைக் குழுக்களின் கட்டிடப் பொறியியல் பணிகளை நிறைவேற்றுதல்.

(4) விற்பனைக் குழு பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

(5) அரசு அவ்வப்போது கட்டளையிடக் கூடிய ஏனைய பணிகளையும் மேற்கொள்ளுதல்.

நிறுவன அமைப்பு :

அரசு வேளாண்மை விளைபொருள் விற்பனை வாரியம் வேளாண்மை இணை இயக்குநர் பதவித்தரத்திலுள்ள இணைச் செயலாளரின் பொறுப்பில் இயங்கி வருகிறது.

இந்த இணைச் செயலாளருக்கு, வேளாண்மை உதவி இயக்குநர் பதவித் தரத்தி லுள்ள உதவிச் செயலாளரும், வேளாண்மை அலுவலரும் உதவி புரிகின்றனர்.

வட்டார அளவில், வேளாண்மைத் துறையைச் சேர்ந்த மூன்று உதவி இயக்குநர் கள் (விளம்பரம்— பிரச்சாரம்), மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தேவையான விளம்பர, பிரச்சார சாதனை வசதிகளுடன் பணியாற்றி வருகின்றனர்.

இந்த வாரியம் சுவரொட்டிகளில் பல வடிவமைப்புகளைக் கொண்டுவந்துள்ளது. வெவ்வேறு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் முந்தைய நாளில் அங்காடிக்கு வந்திருந்த வேளாண் விளைபொருள்கள், அவற்றின் உயரளவு, குறைந்த அளவு, மாதிரி விலைகள் ஆகிய விவரங்கள் கொண்ட அன்றாட அங்காடிச் செய்திகளையும் இந்த வாரியம் தமிழில் வெளியிட்டு வருகிறது. இச் செய்தி த் தாள்களுக்குச் சந்தாத் தொகை செலுத்தும் தனிப்பட்ட விவசாயிகள் தவிர அனைத்து ஒழுங்குமுறை விற்பனை கூடங்களுக்கும் அங்காடிக் குழுக்களுக்கும் இவை அனுப்பப்படுகின்றன.

பயிற்சிப் பிரிவு :

திருச்சியைத் தலைமையிடமாகக் [கொண்ட அரசு வேளாண்மை விளைபொருள் விற்பனை வாரியத்தின் பயிற்சிப் பிரிவுக்கு, வேளாண்மை அலுவலர் ஒருவர், போதுமான துணைப்பணியாளர்கள் ஆகியோரின் உதவியுடன் வேளாண்மைத் துறையின் உதவி இயக்குநர் ஒருவர் (பயிற்சி) பொறுப்பு வகிக்கிறார்.

அறுவடைக்குப் பின்னர் மேற்கொள்ள வேண்டிய தொழில் நுட்பம் உட்பட, வேளாண் விளைபொருள்களின் விற்பனை பற்றிய பலவேறு கூறுகள் குறித்து விற்பனைக் கூடங்களில் பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்க ஏற்பாடு செய்கிறது.

வரவு செலவுத் திட்டமிடுதல், கணக்குகள் மற்றும் கிடங்குகளைப் பராமரித்தல் ஆகியவை குறித்தும் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

''நேரடித் தொடர்பு திட்டத்தின்கீழ் '' வேளாண் விளைபொருட்களை முறையாக விற்பனை செய்வது குறித்து விவசாயிகள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

பொறியியல் பிரிவு :

இப் பிரிவு 2 கோட்டங்கள், 6 உட் கோட்டங்கள் ஆகியவற்றில் இப் பணியை மேற்கொள்ளும். மேற்பார்வை பொறியாளர் ஒருவரையும் உதவிப் பணியாளர் களையும் கொண்ட பொறியியல் பிரிவு ஒன்று விற்பனைக் கூடங்களுக்கான கட்டுமானப் பணிக்கு பொறுப்பேற்றிருக்கிறது. மத்திய, மாநில அரசுகளால் ஒரளவு நிதியுதவி அளிக்கப்படும், தேசிய ஊரகக் கிடங்கு அமைப்புக்கான திட்டத்தின் கீழ் வெவ்வேறு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் இதுவரை 93 ஊரகக் கிடங்குகள் கட்டப்பட் டுள்ளன. மேலும், விற்பனைக் கூடங்களுக்கான அடிப்படை வசதிகளுக்கு வகை செய்யும் பணியையும் இப்பிரிவு மேற்கொண்டிருக்கிறது.

தணிக்கைப் பிரிவு :

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், அரசு வேளாண்மை விளைபொருள் விற்பனை வாரியம் ஆகியவற்றின் கணக்குகளைத் தணிக்கை செய்ய கருவூலம்-கணக்குத் துறை யைச் சேர்ந்த உதவி கணக்கு அதிகாரி ஒருவர், அமைச்சுப் பணியைச் சேர்ந்த போது மான பணியாளர்களுடன் திருச்சிராப்பள்ளியை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறார்.

நிதி :

அரசு வேளாண்மை விளைபொருள் விற்பனை வாரியம் விற்பனைக் கூடங்களிட மிருந்து தனக்குத் தேவையான நிதியைத் திரட்டுகிறது. விற்பனைக் கூடங்கள் தங்க ளின் வருவாயில் 5 சதவிதத்தை வாரியத்திற்குப் பங்குத்தொகையாகச் செலுத்துகின்றன.

இந்த வாரியம் ஒரு சாசன கூறும் அமைப்பாக இருப்பதாலும், திட்டம் எதனையும் செயல்படுத்தாததாலும், இதற்கென ஒட்டு மொத்தமோ, நிதி இலக்கோ இல்லை. அரசின் ஆண்டு நிதிவரவுத்திட்டம், வாரியப் பராமரிப்புச் செலவுகளுக்கு மட்டுமே ஒரு சில நிதி வரவுகளை ஏற்படுத்தித் தருகிறது. இந்த வாரியம் பொருளாதார வகையில் தனித்து இயங்கக்கூடியதாக என்று பரிசீலிக்க வேண்டிய நிலை எதுவும் எழவில்லை.

மாநில அரசு, அண்மையில் தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் விற்பனைச் சட்டத்தை பிரகடனப்படுத்தியுள்ளது. இச்சட்டம் கொண்டுவரப்படும் போது, இம்மாநிலத்தில், பெரிய தினசரி விற்பனை நடவடிக்கைகளில், அரசு வேளாண் தினசரி விற்பனை வரியும் பெரும் பங்கு வகிக்கும், மேலும் வேளாண் பொருளாதாரத்தில் நிறைந்த ஈடுபாடும் விசுவாசமும், நன்முறையிலும் திட்டமிட்ட வகையிலும் சிறப்பாகப் பணிபுரியும்.

தமிழ்நாடு வேளாண் பொறியியல் பணி கூட்டுறவு இணையம் :

முன்னுரை : 7

தமிழ்நாடு வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையமானது 3-2-19 ம் நாள் முதல் வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைமை இணையமாகப் பதிவு செய்யப்பட்டு, 23-2-1972 ஆம் நாள் முதல் செயல்படத் தொடங்கியது.

நிறுவன அமைப்பு :

கூட்டுறவுத் துறையில் வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவு மையங்களை ஒன்றாகச் சேர்த்து இயக்குவதில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. உழவர்களுக்கு வேளாண் பொறியியல் மற்றும் பிற பணிகள் குறித்த வசதிகளுக்கு வகை செய்தல், இளம் பொறியாளர்கள் வேலை வாய்ப்பற்ற பொறியாளர்கள் மற்றும் தொழில் நுட்பத் திறமை பெற்ற பணியாளர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவை இந்த அமைப்பின் நோக்கங்களாகும். வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பு முறை கீழே குறிப்பிட்டுள்ளவாறு உள்ளது:

(1) மாநில அளவிளான வேளாண் பொறியியல் பணிக்கூட்டுறவு இணையம் ;

(2) (அ) 12 சங்கங்கள் பெருமளவு வியாபாரத் தொகையுடன் மாவட்ட கூட்டுறவு வேளாண் பணிச் சங்கங்களாகச் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) வட்டார அளவிளான வேளாண் பொறியியல் மற்றும் பணிக்கூட்டுறவு மையங்கள் 169.

வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையத்தின் வணிக நடவடிக்கைகள் :

வேளாண்மைக்கான எந்திரங்களை வழங்குவதில் வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையத்தின் பணிகளை ஏற்றுக் கொள்ளும் வகையில், தொடக்க நில வள வங்கிகளிடமிருந்து கடன் பெறுகின்றவர்களுக்கு டீசல் என்ஜின்/மின் மோட்டார் பம்பு செட்டுகள் மற்றும் பிற துணைப் பாகங்கள் ஆகியவற்றை வழங்குவதைச் சரிமைக்க 5 கூட்டுறவுத் துறையின் 12-10-1976 ஆம் நாளிட்ட 715-ஆம் எண்ணுள்ள ஆணையில் வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையந்திற்கு அரசு ஏகபோக உரிமை வழங்கியுள்ளது. சரிமைக்கும் திட்டமானது, இந்த ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டுள்ளது. 146 டீசல் என்ஜின் பம்பு செட்டுகளையும், 196 மின் மோட்டார் பம்பு செட்டுகளையும் வழங்குவதற்கு வேளாண் பொறியியல் பணிக்கூட்டுறவு இணையம் அனுப்புகை உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தது.

பம்பு செட்டுகள் :

சரிமைக்கும் திட்டத்துடன் பல்வேறு அரசுத் துறைகளுக்கு 67 பம்பு செட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

தெளிப்பான்கள் :

(விசைத் தெளிப்பான்கள், கையினால் இயக்கப்படும் தெளிப்பான்கள்.)

வேளாண் பொறியியல் பணிக்கூட்டுறவு இணையம், அரசுத் துறைகள், மாவட்ட வட்டார அளவிலான மையங்கள் ஆகியவற்றுக்கு ரூ. 85.7 இலட்சம் மதிப்புள்ள விசைத் தெளிப்பான் மற்றும் கையினால் இயக்கப்படுகின்ற தெளிப்பான்கள் 9,336-ஐ வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

உரங்கள் :

வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம், 1989-90 ஆம் ஆண்டில் ரூ. 33.236 இலட்சம் மதிப்புள்ள உரங்களைக் கொள்முதல் செய்து உறுப்பினர் சங்கங்கள் மூலம் அவற்றை வழங்கியுள்ளது.

ஏனைய நடவடிக்கைகள் :

இந்த ஆண்டில் ரூ. 73.66 இலட்சம் மதிப்புள்ள குழாய்கள், துணைப் பாகங்கள், டயர்கள், டியூப்புகள், மின்கலங்கள் முதலானவையும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

சாலைவசதி செய்யும் உருளைகள் :

கிராமங்களை எளிதில் சென்றடையும் வகையில், சாலைகள் மேம்படுத்துவதற்கு ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் நல்ல சாலைகள் அமைக்க, அவற்றுக்கு வாடகைக்கு விடுவதற்காக, வேளாண் பொறியியல் பணிக்கூட்டுறவு இணையம், சாலையைச் சமன் செய்யும் உருளைகளைத் தன்னிடம் வைத்துள்ளது. 1989–90 ஆம் ஆண்டில் இந்த உருளைகள் மூலம் 2.46 இலட்சம் ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது.

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் உழவர்களுக்கான வேளாண்மைப் பணிமையங்களை ஏற்படுத்துதல், வேளாண்மைக் கருவிகளைப் பயன்படுத்துவதை பிரபலமடைய செய்தல் :

உழவர்களுக்கான வேளாண் பணி மையங்களை ஏற்படுத்த வேளாண்மைப் பணிக் கூட்டுறவு இணையம், 1984–85 ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன :

(1) எந்திரங்களை வாடகைக்கு விடுவதற்கு உழவர்களுக்கான வேளாண்மைப் பணி மையங்களை ஏற்படுத்துதல்.

(2) நவீன வேளாண்மைக் கருவிகள் மற்றும் கையினால் இயக்கப்படும் கருவிகளைக்கொண்டு செயல் விளக்கங்கள் செய்து காட்டுதல் :

(3) நவீன வேளாண்மைக் கருவிகளையும். கையினால் இயக்கப்படும் கருவிகளையும். உழவர்களுக்கு சலுகை விலையில் பிரபலப்படுத்துதல்.

1989–90 ஆம் ஆண்டில் அரசு, மொத்தம் 37.448 இலட்சம் ரூபாய்க்கு அனுமதியளித்துள்ளது. இதில் மத்திய அரசின் பங்குத் தொகை 9.652 இலட்சம் ரூபாயாகும், மாநில அரசின் பங்குத் தொகை 9.652 இலட்சம் ரூபாயாகும். எஞ்சிய தொகையான 18.144 இலட்சம் ரூபாய் வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் உறுப்பினர் சங்கங்கள் உழவர்களால் ஏற்கப்பட்டது. இதற்கு 1990 மார்ச்சு திங்கள் இறுதியில்தான் அரசு அனுமதி கிடைத்துள்ளதால், தமிழ்நாடு அரசின் அனுமதியுடன் இத்திட்டம், இந்த ஆண்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

துளைக்கிணறுகளை இறக்குதல் :

1989–90 ஆம் ஆண்டில் 250.90 இலட்சம் ரூபாய் செலவில் சுமார் 1670 துணைக் கிணறுகளை அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது.

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் பம்பு செட்டுகளைச் சீரமைத்தல் :

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் சுமார் 4,000 டீசல் எஞ்சின் பம்புசெட்டுகளைச் சீரமைப்பதற்கான செயற்குறிப்பு ஒன்றினை வேளாண் பொறியியல் பணிக்கூட்டுறவு இணையம் அனுப்பியுள்ளது. தமிழ்நாடு அரசும், மத்திய அரசுக்கு இதனைப் பரிந்துரைத்து செயற்குறிப்புக்கு மத்திய அரசின் அனுமதியைக் கோரியுள்ளது. அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

150 டீசல் எஞ்சின் பம்புசெட்டுகளைச் சீரமைக்கும் பணியை 1989–90 ஆம் ஆண்டில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனத்திடம் ஒப்படைத்தது. இப்பணியும் முடிக்கப்பட்டது. மேலும் 200 பம்புசெட்டுகளைச் சீரமைக்கும் பணியை 1990–91 ஆம் ஆண்டில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் அளித்துள்ளது. இப்பணி நடைபெற்று வருகிறது.

ஆதாயம் இழப்பு விவரங்கள் :

வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம், 1989–90 ஆம் ஆண்டில் 56.45 இலட்சம் ரூபாய் வணிக ஆதாயம் ஈட்டியுள்ளது. 20.66 இலட்சம் ரூபாய் நிகர ஆதாயத்தைத் (தற்காலிகமாக) ஈட்டி, இழப்பு முழுவதையும் சரி செய்துள்ளதுடன் 3.00 இலட்சம் ரூபாயை உபரியாகவும் பெற்றுள்ளது.

வருங்கால திட்ட நடவடிக்கைகள் :

1. **மத்திய அரசுத்துறை திட்டத்தின் கீழ் வேளாண் பணி மையங்களை ஏற்படுத்துதல் :**

1990–91 ஆம் ஆண்டில், மத்திய அரசுத் துறைத் திட்டத்தின் கீழ் உழவர்களுக்கான 66 வேளாண் பணி மையங்களை ஏற்படுத்துவது குறித்து கருதிப் பார்க்கும்படி வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது.

2. வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையத்திற்கு தேசிய கடனுதவி வளர்ச்சிக் கழகம் தொடக்க நிதியுதவி வழங்கல் :

1990–91 ஆம் ஆண்டில் வேளாண் பொறியியல் பணிக்கூட்டுறவு இணையம் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ள தேசிய கடனுதவி வளர்ச்சிக் கழகத்திடமிருந்து தொடக்க நிதியுதவி பெறுவதற்கான செயற்குறிப்பு ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. தேவைப்படுகின்ற மொத்த நடைமுதல் மூலதனம் சுமார் 210 இலட்சம் ரூபாயாகும். வணிக வங்கிகளிடமிருந்து நடைமுதல் மூலதனத்தைப் பெற தேசிய கடனுதவி வளர்ச்சிக் கழகத்திடமிருந்து 52.05 இலட்சம் ரூபாய் கோரப்பட்டுள்ளது.

3. தமிழ்நாடு வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையங்களின் வட்டார மேலாளர் :

அலுவலகங்களில் கணிப் பொறியைப் பயன்படுத்துதல் :

வட்டார அளவிலான மையங்களையும், மாவட்ட அளவிலான சங்கங்களையும் செவ்விய முறையில் கட்டுப்படுத்தி, உன்னிப்பாக மேற்பார்வையிடுவதற்கு வகை செய்யும் பொருட்டு ஒவ்வொரு வட்டாரத்திற்கும், சொந்தப் பயனுக்கான கணிப் பொறி ஒன்றை வழங்கக் கருதப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையத்திற்குக் கடன் உதவித் தொகையாக ரூ. 6.15 இலட்சம் வழங்கு மாறு, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

4. எட்டாம் ஐந்தாண்டு திட்டச் செயற்குறிப்புகள் :

மொத்தம் ரூ. 80 இலட்சம் செலவில், 38 டிராக்டர்களை வாங்குவதற்கு, தமிழ் நாடு வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளது.

5. தென் ஆற்காடு மாவட்டத்துதில் வேளாண் பணி மையங்கள் அமைக்கப்படாத வட்டாரங்களில் 15 வேளாண் பணி மையங்களை அமைத்தல் :

தென் ஆற்காடு மாவட்டத்தில் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ், திட்ட ஆலோசகரான திருவாளர்கள், நபேசன் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி தன்னுடைய திட்ட அறிக்கையில், (1) வட்டார அளவிலான 15 மையங்களை அமைக்கவும், (2) இரண்டு கம்பெரசர்கள், கழல் துளையிடும் கருவி ஒன்று துளையிடும் கருவி ஆகியவற்றை வாங்கவும், (3) மையங்களிலுள்ள பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கவும் ரூ. 177.816 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது.

6. சென்னை மாநகராட்சிக்கு டிராக்டர்களை வாடகைக்கு விடுதல் :

கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக, சென்னை மாநகராட்சிக்கு 1989–90 ஆம் ஆண்டில், ஒன்பது கருவிகளுடன் இணைந்த டிராக்டர்கள் வாடகைக்கு விடப் பட்டு, ரூ. 6 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டது.

7. ஆயில் எஞ்ஜீன் பம்புசெட்டுகளைச் சரிசெய்தல் :

1990–91 ஆம் ஆண்டில், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி முகவரமைப்பு 200 எண்ணெய் என்ஜின்களைச் சரிபார்க்கும் பணியை ஒப்படைத்தது இப்பணி நடைந்தேறி வருகிறது.

8. விற்பனை மையங்களுக்கு தேசியக் கடனுதவி வளர்ச்சிக் கழகத்திடமிருந்து தொடக்க நிதியுதவி பெறுதல் :

வட்டார அளவிலான 58 மையங்கள் தேசியக் கடனுதவி வளர்ச்சிக் கழகத்திட மிருந்து தொடக்க நிதியுதவியைப் பெறுவதற்கான செயற்குறிப்பு, அரசின் பரிந் துரைக்காக அனுப்பப்பட்டுள்ளது. இச்செயற்குறிப்பை அரசு பரிந்துரைத்துள்ளது. தேசியக் கடனுதவி வளர்ச்சிக் கழகத்திடமிருந்து கேட்கப்பட்டிருந்த தொடக்க நிதியுதவி மையம் ஒன்றுக்கு ரூ. 1 இலட்சமாகும்.

இத்திட்டத்தின் கீழ், இப்கோ, கிரிப்கோ போன்ற முன்னணி முகவரமைப்புகள், விற்பனை நிலையத்திற்கான சாதனங்கள், அறைகலன்கள், பொருத்திகள் ஆகியவை தொடர்பாக மையம் ஒன்றுக்கு ஆதரவு உதவித் தொகையாக வழங்கும் தொகை ரூ. 12,000 ஆகும்.

9. 10,000 புட் வால்வுகளை மாற்றியமைத்தல் :

பழைய சாதாரண ஃபுட் வால்வுகளை மாற்றியமைப்பதன் மூலம் உராய்வற்ற 10,000 ஃபுட் வால்வுகளை வழங்கி, நிறுவும் பணியைத் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் ஒப்படைத்துள்ளது. இப்பணி நடந்தேறி வருகிறது. இதற்கான மொத்தச் செலவு ரூ. 16 இலட்சமாகும்.

10. இரும்புக் கதவுகள் ஆர். சி. சி. சட்டங்கள் வழங்குதல் :

1990–91 ஆம் ஆண்டில், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழுள்ள தொகுதி வீடுகளுக்கு 4680 இரும்புக் கதவுகள், ஆர்.சி.சி. சட்டங்கள் ஆகியவற்றை வழங்கும் பணியைச் செங்கை அண்ணா மாவட்டாட்சியரிடம் ஒப்படைத்துள்ளார். இப்பணி நடந்தேறி வருகிறது. இப்பணியின் மொத்த மதிப்பு ரூ. 40 இலட்சமாகும். ஏனைய மாவட்டங்களிடமிருந்தும், இது போன்ற பணிகளைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

11. தமிழ்நாடு குடிநீர்–வழங்கல் வடிகால் வாரியத் திட்டத்தின் கீழ் குளைக் கிணறுகளைத் தோண்டுதல் :

1990–91 ஆம் ஆண்டில், மதுரை, திண்டுக்கல், வட ஆற்காடு, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் குளைக் கிணறுகள் இறக்கும் பணியைத் தமிழ்நாடு குடிநீர் வழங்கல்—வடிகால் வாரியம் ஒப்படைத்துள்ளது. இப்பணி நடந்தேறி வருகிறது.

12. ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக வேலை வாய்ப்புத் தேசியத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் தொகுதி வீடுகளுக்கு குடிநீர் வழங்கும் ஏற்பாடுகளாகிய குளைக் கிணறுகளுக்குத் துளையிடுதல், தளங்கள் கட்டுதல், வார்ப்புக் குழாய்கள், கைப் பம்புகள் ஆகியவற்றை வழங்கி நிறுவுதல் போன்ற பணிகளை, பெரியார் மாவட்டாட்சியர் ஒப்படைத்துள்ளார். ஏனைய மாவட்டங்களிடமிருந்தும் இது போன்ற பணிகளை பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் :

தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் ஜனவரி திங்கள் முதல் நாள் 1981 ஆம் ஆண்டின் தேசிய பால்வள வாரியத்தில் எண்ணெய்வித்துக்கள் மற்றும் தாவர எண்ணெய் அபிவிருத்தித் திட்டங்கள் தமிழ்நாட்டில் அமுல்படுத்தும் நிறுவனமாக பதிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் எண்ணெய்வித்து உற்பத்தியாளர்கள் சமூக பொருளாதார வளர்ச்சிக்கென்று தேசிய பால்வள வாரியத்தின் உதவியுடன் நிலக்கடலை உற்பத்தி பெருக்க கொள்முதல் பதப்படுத்துதல், விற்பனை ஆகியவைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தி வருகிறது.

இவ்வினையத்தில் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 5 கோடியாகும். இதில் இணையத்தின் திட்டப்பகுதியில் உள்ள எண்ணெய்வித்துக்கள் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கங்களும், தேசிய பால்வள வாரியமும் உறுப்பினர்களாக இருக்க வகை செய்யப்பட்டுள்ளது. இதில் தேசிய பால்வள வாரியம் ரூ. 98.88 இலட்சம் பங்கு மூலதனமாகவும், மீதித் தொகையான ரூ. 56.78 இலட்சம் எண்ணெய்வித்துக்கள் கூட்டுறவு உற்பத்தியாளர்களின் சங்கங்கள் பங்கு மூலதனமாக பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீடு ஏழு ஆண்டுகளுக்கு ரூ. 15.60 கோடி., அவற்றில் 8.40 கோடி (54 சதவீதம்) கடனாகவும் ரூ. 7.20 கோடி (46 சதவீதம்) மானியமாகவும் தேசிய பால்வள வாரியத்தினால் அளிக்கப்படுகிறது. ரூ. 3.45 கோடி வினை இணையம் வளர்ச்சிப் பணிக்கென பயன்படுத்தியுள்ளது. விரிவுத் திட்டத்தின் ஒரு பகுதியனை தேசிய பால்வள வாரியம் ரூ. 29·10 கோடி ஒதுக்கீட்டினை உயர்த்தியுள்ளது.

இத்திட்டம் வட ஆற்காடு, தென்னாற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள 20 (இருபது) வட்டங்களில் 335 எண்ணெய்வித்து கூட்டுறவு சங்கங்களை உருவாக்கி 82.000 உற்பத்தியாளர்களை, உறுப்பினர்களாக்கி 92,000 எக்டேர் நிலப்பரப்பை சாகுபடி பரப்பை திட்ட வளர்ச்சி பணியில் கொண்டுவர உள்ளது.

இதுவரை (ஏப்ரல் 1989 முதல் மார்ச் 1990 வரை) 335 எண்ணெய்வித்து கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கங்களில் 65,167 உறுப்பினர்களாக்கி 1,12,978 எக்டேர் நிலப்பரப்பு சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும் இலுப்பை, தென்னை (102 எக்டேரில்) விதைகள் உற்பத்திக்காகவும், உற்பத்தியாளர்கள் இந்நிர்வாக உறுப்பினர்கள் சங்கச் செயலாளர்கள் மற்றும் இணையத்தின் அலுவலர்கள் பயிற்சிக்கென்றும் ஒரு உழவியல் பயிற்சி மையத்தினை அமைத்துள்ளது. இம்மையம் தற்போது மத்திய அரசாங்கத்தினால் (ICAR) ஒரு மூல விதை உற்பத்தி மையமாக அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளது. இம்மையம் 75 டன்கள் கருவித்து விடுதலைகளையும் (Breeder Seeds) 15 டன்கள் ஆதார விதைகளையும் (Foundation Seeds) 31—3—1990 முடிய உற்பத்தி செய்துள்ளது. இதுவரை 1,046 டன்கள் பெறுமதிக்குவிதைகள் விநியோகிக்கப்பட்டு 12,230 டன்கள் நிலக்கடலை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு (டான்பெட்) சொந்தமான இரண்டு எண்ணெய் பிழியும் ஆலைகளை (திருவண்ணாமலை மற்றும் விருத்தாசலம்) 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்து உற்பத்தியாளர்கள் இணையம் (டான்காப்) அரசாங்கத்தின் மூலமாக ரூ. 305 இலட்சம் செலுத்தி ஏற்றுக்கொண்டது. மேலும் இந்த ஆலைகளை ரூ. 461 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிப்பதற்கும் செம்மைப்படுத்துவதற்கும் திட்டமிட்டு அதன்படி திருவண்ணாமலையில் உள்ள எண்ணெய் பிரிவு விரிவாக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக எண்ணெய் பிழியும் திறன் நாளொன்றுக்கு 174 டன்களாக அதிகரிக்கப் பட்டுள்ளது.

திருவண்ணாமலையில் ஆலை புதுப்பித்தப்பின் ஆலை இயக்கம் ஆண்டிற்கு 28 சதவிதம் ஆகும். அதேபோல் தற்போது விருத்தாசலத்தில் ஆலை இயக்கம் ஆண்டிற்கு 41 சதவிதமாகும். மேற்படி சதவிகித ஆலை இயக்கம் டான்காப்பின் மணிலா இருப்பும், வர்த்தகம் பண்ணுவது ஆகியவற்றைக்கொண்டு செயல்படுகிறது. இதுவரை இந்த இரண்டு ஆலைகளிலும் 11,784 டன்கள் நிலக்கடலை பருப்பு பிழியப் பட்டு 4,417 டன்கள் பிழியப்பட்ட எண்ணெயாகவும் 785 டன்கள் சுத்திகரிக்கப் பட்ட எண்ணெயாகவும் 7,220 டன்கள் பிண்ணாக்கும் 212 டன்கள் பிண்ணாக்கிலிருந்து பிழியும் எண்ணெயும் 2,821 டன்கள் எண்ணெய் எடுத்த பிண்ணாக்கும் 1—4—1989 முதல் 31—3—1990 முடிய பதப்படுத்தப்பட்டுள்ளது.

இத்துடன் சென்னையில் உள்ள கிண்டியில் எண்ணெய் நிர்ப்புவதற்கான ஒரு கொள்கரன் நிரப்பு நிலையத்தினை (நாள் ஒன்றுக்கு 15 டன்கள்) திட்டத்தின் ஒரு அங்கமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த பரப்பு நிலையம் 15 கிலோ (டின்கள்) 5 கிலோ (அடைப்பான்களில்) 1 கிலோ (பாலிதின் பைகள், புட்டிகள்) 0.5 கிலோ (புட்டிகள், பாலிதின் பைகள் நுகர்வோர்க்கென்று நிரப்பி விற்பனைக்கு அளிக்க வழி செய்துள்ளது. இணையத்தின் இரண்டு எண்ணெய்களான, 'பியூர்நெட்' (பிழியப்பட்ட நிலக்கடலை எண்ணெய்) வின்னர் (சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்) அங்காடிகளில் விற்பனைக்கு கொண்டுவந்து இதுவரை 4,014 டன்கள், 'பியூர்நெட்' எண்ணெயும் 771 டன்கள் 'வின்னர்' எண்ணெயினையும் 3,651 டன்கள் பிண்ணாக்கினையும் 241 டன்கள் பிண்ணாக்கிலிருந்து பிழியும் எண்ணெய்யினையும் 2,812 டன்கள் எண்ணெய் எடுத்த பிண்ணாக்கினையும் விற்பனை செய்துள்ளது. அத்துடன் 76 டன் மொச்சை எண்ணெய்யினையும் 1—4—1989 முதல் 31—3—1990 முடிய விற்பனை செய்துள்ளது.

இந்திய அரசாங்கம் அளிக்கும் பாமலின் எண்ணெயை தமிழ் நாட்டில் பொது விநியோகம் முறையில் விற்பனை செய்ய ஒரு கிலோ பாலிதின் பைகளில் அடைத்துக் கொடுக்கும் பணியை இணையம் 1988 ஜூன் முதல் செவ்வனே செய்து வருகிறது. இணையம் கிண்டியிலுள்ள எண்ணெய் நிரப்பும் நிலையத்தில் பனித் திறனை நாளொன்றுக்கு 15 டன்னிலிருந்து 45 டன் வரை உயர்த்தவும் திருவண்ணாமலையில் நாளொன்றுக்கு 30 டன் கடலை எண்ணெய் நிரப்பவும் ரூ. 15 இலட்சம் முதலீடு செய்துள்ளது. மேற்கூறிய பணிகளை செவ்வனே நடத்திச் செல்வதற்கு இணையம் நடை முதல் மூலதனமாக ரூ. 200 இலட்சத்தைப் பயன்படுத்தி ஒரு கிலோ அடைக்கப்பட்ட எண்ணெய்க்கு தோராயமாக ரூ. 1 இலாபம் என்பதற்கு திட்டம் வகுத்து செயல்படுத்தி வருகிறது. இணையம் கடந்த மே 1990-லிருந்து மாதம் 700 டன்களை பாமாலின் எண்ணெய் ஒதுக்கீடு பெற்று வருகிறது.

அரசு தனது ஆணை எண் 500-ன்படி இத்திட்டம் எண்ணெய்வித்துக்கள் விளையும் சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், பெரியார், திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் மேலும் விரிவு படுத்த உள்ளது. இந்த கூட்டுறவு அமைப்பு கிராம அளவில் எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களாகவும் மாவட்ட அளவில் மண்டல கூட்டுறவு ஒன்றியங்களாகவும் மாநில அளவில் இணைய மாகவும் 3 நிலைகளில் ரூ. 29.20 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். விரிவாக்கும் 6 லட்சம் எக்டேர் நிலப்பரப்பில் 665 எண்ணெய் வித்து உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களைக் கொண்டு இயங்கும். மேலும் 400 டன்கள் உற்பத்தியை பெருக்குவதுடன் அதைச் சார்ந்த வசதிகளையும் அம்மாவட்டங்களுக்காக ஏற்படுத்து இறது.

அத்தியாயம்-4.

கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை.

கால்நடைப் பராமரிப்பு.

கால்நடைப் பராமரிப்புத் துறை சென்னையை தலைமையிடமாகக் கொண்டு கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநரின் பொறுப்பில் இயங்கி வருகிறது.

கால்நடைப் பராமரிப்பு இயக்குநருக்கு தலைமையிடத்தில் மூன்று கூடுதல் இயக்குநர்கள் முறையே கால்நடை அபிவிருத்தி, திட்டங்களும் பண்ணைகளும் கால்நடை மருந்தகப் பணிகள் செவ்வனே நடைபெற உதவி புரிகின்றனர்.

இந்த மாநிலம் நிர்வாக வசதிக்காக 15 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலமும் கால்நடைப் பராமரிப்பு இணை இயக்குநர் ஒருவரின் பொறுப்பின் கீழ் இயங்கி வருகிறது. மாநிலத்தில் 64 கால்நடைப் பராமரிப்பு கோட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு கோட்டமும் கால்நடைப் பராமரிப்பு உதவி இயக்குநரின் மேற்பார்வையில் செயல்பட்டு வருகிறது.

கால்நடை அபிவிருத்தி :

கால்நடை வளர்ப்பில் முக்கிய நோக்கம் உள்ளூர் இன, பசு, எருமைகள் அதிக அளவு பால் கொடுக்க செய்வதாகும். 1982 ஆம் ஆண்டு கால்நடை கணக்கெடுப்பின் படி மொத்த கால்நடைகளின் எண்ணிக்கை 103.66 லட்சம். எருமை இனம் 32.12 லட்சம் அவற்றில் இனவிருத்திக்கு தகுந்த பசுவினம் 34.88 லட்சம், எருமையினம் 17.20 லட்சம் ஆகும். இம்மாநிலத்தில் உள்ள பசு, எருமைகளை அயலின பொலி காளைகளான ஜெர்சி, பிரியன் மற்றும் முராபொலி காளைகளைக் கொண்டு இனவிருத்தி செய்வதின் மூலம் அவைகளின் பால் அபிவிருத்தி திறன் வெகுவாக உயர்த்தப்படுவதற்கு நமது அரசு திட்டங்களை வகுத்து வருகிறது. செயற்கைமுறை கருவூட்டல் கால்நடை அபிவிருத்திக்கு செயல்பட்டு வருகிறது. தற்போது 2770 நிலையங்கள் மூலம் இம்மாநிலத்தில் செயற்கைமுறை கருவூட்டல் பணி கிராமங்கள் தோறும் செயல்பட்டு வருகிறது. உறைவிந்து மூலம் செயற்கை முறை கருவூட்டல் புதிதாக செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் சேகரிக்கப்பட்ட விந்து நீண்ட நாட்களுக்கு பாதுகாக்கப்பட்டு வெகு தூரத்தில் உள்ள இடங்களுக்கு அனுப்பப்படுகிறது. 1819 நிலையங்களின் மூலம் உறைவிந்து மற்றும் 951 நிலையங்களின் மூலம் திரவவிந்து பயன்படுத்தப்படுகின்றன. இத்துறையின் மூலம் 43 பொலிகாளை நிலையங்கள் நிறுவப்பட்டு அங்கிருந்து திரவவிந்து பல்வேறு நிலையங்களுக்கு செயற்கைமுறை கருவூட்டல் பணிக்கு அனுப்பப்படுகிறது. இம்மாநிலத்தில் இரண்டு உறைவிந்து வங்கிகள் தஞ்சை மாவட்டம் ஈச்சங்கோட்டையிலும், திருநெல்வேலி கட்டப்பொம்மன் அபிசேகப்பட்டியிலும் செயல்பட்டு வருகிறது. அங்கு ஜெர்சி, பிரியன், முராபொலி காளைகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. அவற்றிலிருந்து விந்து சேகரிக்கப்பட்டு பல்வேறு கருவூட்டல் நிலையங்களுக்கு செயற்கைமுறை இனவிருத்திக்காக அனுப்பப்படுகிறது. நடப்பாண்டில் 25.77 லட்சம் செயற்கைமுறை கருவூட்டல்கள் நடைபெற்றுள்ளது. அவற்றில் 5.84 லட்சம் அதிகம் பால்தரும் கலப்பின கன்றுகள் பிறந்துள்ளன. 16.31 லட்சம் உறைவிந்து மூலம் கருவூட்டலும், 9.46 லட்சம் திரவவிந்து மூலம் செயற்கைமுறை கருவூட்டல் நடைபெற்றுள்ளன. அவற்றின் மூலம் 3.41 மில்லியன் டன் பால் உற்பத்தி அதிகரித்துள்ளது. அதனால் ஆள் ஒன்றுக்கு 169 கிராம் பால் கிடைக்கிறது.

12 தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டங்கள் மூலமும் 8 கேந்திர கிராம திட்டங்களின் மூலம் செயற்கைமுறை கருவூட்டல் உறைவிந்து மூலம் நடைபெறுகிறது. மேற்கண்ட திட்டங்கள் மூலம் கால்நடைகளின் நலப்பணியும், பசுந்தீவன விநியோகமும் நடைபெறுகின்றன.

நடப்பாண்டில் 76 கால்நடை உதவி மருத்துவர்களுக்கும் 250 கால்நடை ஆய்வாளர்களுக்கும் உறைவிந்து மூலம் செயற்கைமுறை கருவூட்டல் தொழில் நுட்ப பயிற்சி அபிசேகப்பட்டி மற்றும் ஈச்சங்கோட்டை நிலையங்களில் அளிக்கப்பட்டன.

கால்நடை பண்ணைகள் :

கால்நடைப் பராமரிப்புத் துறை எட்டுப் பண்ணைகளையும் ஒரு உயரின கால்நடை பெருக்குப்பண்ணையையும் பராமரித்து வருகிறது. இப்பண்ணைகள் உள்நாட்டு இனம் மற்றும் அயலின பசுக்களையும் உள்நாட்டு எருமை இனத்தையும் தேர்ந்தெடுத்து இனவிருத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளது.

ஈச்சங்கோட்டையில் நிறுவப்பட்டுள்ள உயரின கால்நடை பெருக்குப்பண்ணை ஜெர்சி இன மாடுகளை உற்பத்தி செய்வதற்காக பிரத்தியேக பணிகளில் செயல்பட்டு வருகிறது.

மலைவாழ் மக்கள் முன்னேற்ற திட்டத்தின் கீழ் ஒரு உறைவித்து வங்கி உதக மண்டலம் மாவட்ட கால்நடைப் பண்ணையில் செயல்பட அரசு அனுமதித்துள்ளது. கட்டிட வேலைகள் மற்றும்* அதற்கான தளவாடங்கள் வாங்குதல் போன்றவை வேக மாக நடைபெற்று வருகிறது. 1990–91 ஆம் ஆண்டு இதன் செயல்பாடு துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரத்தநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையில் மூர்ரா எருமை இனப்பெருக்கத் திற்கு வம்சாவழி ஆய்வுத் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இதே போல் சித்தி இன பெருக்கத்திற்கு ஒரு வம்சாவழி திட்டம் ஒசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் செயலாற்றி வருகிறது.

இத்திட்டம் தமிழ்நாட்டில் விவசாயிகள் கலப்பின கிடேரி கன்றுகளை நல்ல பால் தரும் பசுக்களாக வளர்ப்பதற்கு நிதி உதவி தேசிய வங்கி மூலம் வழங்கப்பட் டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் 5 கலப்பின கிடேரி கன்றுகள் கொண்ட அலகு ஒன்று வாங்குவதற்கும் அவைகளின் பராமரிப்பிற்கும் நிதி உதவி பெற வங்கி கடன் உதவி செய்யப்படுகிறது. தவிர இக்கன்றுகளின் மருத்துவ பராமரிப்பிலும் கால்நடை பரா மரிப்புத்துறை உதவி செய்கிறது. 1332 அலகுகள் கொண்ட 6660 கலப்பின கிடேரிக் கன்றுகள் இத்திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் சேர்க்கப்பட்டுள்ளன. எனவே ஏழை விவசாயிகளிடையே இத்திட்டம் பிரசித்தி பெற்றவையாக இருக்கிறது. இத்திட்டத்தின் பயனாக பால் உற்பத்தி வேகமாக பெருகும் என்பது நிச்சயம்.

செம்மறி மற்றும் வெள்ளாடு வளர்ப்பு :

இம்மாநிலத்தில் இரண்டு ஆட்டுப்பண்ணைகள், ஒன்று தென்னாற்காடு மாவட் டத்தில் சின்னசேலத்திலும் மற்றொன்று காமராஜர் மாவட்டத்தில் சாத்தூரிலும் உள்ளன. மேலும் நான்கு ஆடு வளர்ப்பு பிரிவுகள் ஒசூர், புதுக்கோட்டை, செட்டிநாடு, அபிசேகப்பட்டி கால்நடை பண்ணைகளில் இயங்குகின்றன. விஞ்ஞான முறையில் செம்மறி ஆடுகள் மற்றும் வெள்ளாடுகளை தரம் உயர்த்தி அவைகள் சுற்றுப்புறத்தில் உள்ள அனைத்து கிராம விவசாயிகளுக்கும் வழங்கப்படுகின்றன. இது தவிர புதுக்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணையில் மேழக்காரிசல் இன செம்மறி ஆடுகளை ''டார்செட்'' உயர் இன செம்மறிகளோடு கலப்பினம் செய்து விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இக்கலப்பின ஆடுவளர்ப்புத் திட்டம் விவசாயிகளிடம் பெரும் வரவேற்புள்ளது.

புதுக்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணையில் தலைச்சேரி இன வெள்ளாடு வளர்ப்பு பிரிவும், சின்னசேலம் ஆடு வளர்ப்பு பண்ணையில் ஜமுனாபரி வெள்ளாடு வளர்ப்பு பிரிவும் செயல்பட்டு வருகிறது. இப்பிரிவுகளில் இனவிருத்தி செய்து பிறந்த 174 ஆடுகளை கிராமங்களில் உள்ள வெள்ளாடுகளின் தரத்தை உயர்த்துவதற்காக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கோழி வளர்ப்பு :

கால்நடைப் பராமரிப்புத் துறை இரண்டு குஞ்சுபொரிப்பகங்களை, ஒசூர் மற்றும் காட்டுப்பாக்கத்தில் செயல்பட்டு வருகின்றன. மேலும் 27 இடங்களில் கோழி விரிவாக்க நிலையங்களும் இயங்கி வருகின்றன. இந்த நிலையங்கள் விவசாயிகளுக்கு தேவைப்படும் தரமான 12 வாரங்கள் வரை வளர்க்கப்பட்ட கோழிகளை வழங்கி வருகின்றன.

கோழி நோய் கண்டறியும் ஆய்வு கூடம் ஒன்று ஈரோட்டில் நிறுவப்பட்டுள்ளது. இங்குள்ள அலுவலர்கள் அப்பகுதிகளில் தோன்றும் கோழி நோய்களை கண்டறிந்து அவற்றை கட்டுப்படுத்துவதற்கான முன்னடவடிக்கைகளை எடுக்க அறிவுரைகள் வழங்கி பணியாற்றுகின்றனர். மேலும் கோழி தீவனங்களின் மாதிரிகளை நுண்ணாய்வு செய்து குறைபாடுகளை கண்டு அவற்றை நிவர்த்தி செய்யவும் நல்ல தரமான கலப்பு உணவு களை வழங்கவும் அறிவுரையாற்றுகின்றனர்.

பன்றி வளர்ப்பு :

பன்றிகளை அபிவிருத்தி செய்யும்பொருட்டு மூன்று பன்றி வளர்ப்பு பிரிவுகள் ஒசூர், புதுக்கோட்டை, செட்டிநாடு மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் செயல்பட்டு வரு கின்றன. மேலும் ஒரு பன்றி வளர்ப்பு பிரிவு சைதாப்பேட்டை கால்நடை மருத்துவ மனையிலும் செயல்பட்டுவருகிறது. இப்பிரிவுகளில் 'யார்க்ஷயர்' இன வெண் பன்றிகள் தரமாய் வளர்க்கப்பட்டு விவசாயிகளுக்கு உள்நாட்டில் பன்றிகளின் தரத்தை உயர்த்தும் பொருட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

பசுந்தீவனப் பயிர் வளர்ப்பு :

கால்நடைப் பராமரிப்பில் மட்டும் கவனம் செலுத்துவதோடல்லாமல், கால்நடை களின் பசுந்தீவனப் பயிர் வளர்ப்பிலும் முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. விவசாயி களுக்கு தேவையான பசுந்தீவனப் பயிர் நறுக்குகள், விதைகள் மற்றும் தாற்றுகளை

உற்பத்தி செய்து விநியோகிக்கும் பொருட்டு மாநிலத்தில் 8 தீவனப் பயிர்விளை உற்பத்தி நிலையங்களை கால்நடைப் பராமரிப்புத் துறை செயல்படுத்தி வருகிறது. மாவட்ட கால்நடைப் பண்ணைகளும் பசுந்தீவனப்பயிர்கள் சோளம், கௌபி, என் 9. 21 ஆகியன முதலியன உற்பத்தி செய்கின்றன. தீவன நறுக்குகள் தவிர கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டம் மற்றும் கேந்திர கிராம நிலையங்களில் உள்ள விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. முறையான திட்டங்களின் கீழ் 2,300 விவசாயிகளுக்கு சிறிய நாற்றுப் பண்ணை அமைக்கப்பட்டு பசுந்தீவன பெருக்கத்திற்கு உதவியுள்ளது.

105.85 லட்சம் பசுந்தீவன நறுக்குகளும், 19.30 மெ. டன் தீவன விதைகளும் 3.06 லட்சம் மரக்கன்றுகளும் நடப்பாண்டில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கால்நடை நலப் பணி திட்டங்கள் :

கால்நடைகளுக்கு சிகிச்சையும், தடுப்பூசி, உடல் நலம் பேணும் பணியும் கால் நடைப் பராமரிப்புத் துறையின் முக்கிய பணியாகும். பல்வேறு கால்நடை அபிவிருத்தி திட்டங்களின்மூலம் ஏற்படும் சாதனைகளை பாதுகாத்து அவற்றை மேம்படுத்து வதற்கும், பலதரப்பட்ட நோய்களில் இருந்து கால்நடைகளை பாதுகாப்பதுமான வசதிகள் அளிக்கப்படவேண்டும். எனவே இக் கால்நடைகளின் நலம் பேணுவதற்கு 817 கால்நடை நிலையங்கள், 2,226 கிளை நிலையங்கள் இப்பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன. 11 கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள், மாவட்ட தலைமையகங்களில் செயல்பட்டு வருகின்றன. இப்பிரிவுகள் கால்நடை மருத்துவர்களுக்கு கால்நடை வியாதிகளை கட்டுப்படுத்துவதில் உதவி புரிகின்றன. தவிர 50 நடமாடும் கால்நடை பிரிவுகளும் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு சிகிச்சை அளித்து உடல் நலம் பேணுகின்றன. கால்நடை மருந்தகங்களுக்கு வெகுதூரத்தில் உள்ள கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கும் பொருட்டும் இப்பிரிவுகள் உதவி புரிகின்றன.

கால்நடைகளை தாக்கும் கொடிய தொற்று நோயான வெக்கைநோய் கால் நடைகளை தாக்கி விவசாயிகளுக்கு பெரும் நஷ்டத்தை உண்டுபண்ணும் கால்நடைப் பராமரிப்புத்துறை இந்நோயை கட்டுப்படுத்துவதில் சிறப்பு பணிகளை செய்துவருகிறது. 18 மாவட்டக் குழுக்களும், 10 சோதனை சாவடிகளும், 10 கண்காணிப்பு குழுக்களும் தகுந்த நேரத்தில் வெக்கைநோய்த் தடுப்பூசிகள் போட்டு இந்த கொடிய நோயை கட்டுப்படுத்துகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கால்நடைகளுக்கும், கன்னியாகுமரியிலுள்ள காவல்கிணறு சோதனைச்சாவடி முதல் திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டத்தில் 40 கிலோ மீட்டர் சுற்றளவு பகுதி யிலுள்ள கால்நடைகளுக்கு இலவசமாகப் தடுப்பூசிகள் போடப்படுகின்றன. இவ்வாறாக நோய் கட்டுப்பாடு முறையினால் ''நோயற்ற தூய்மை மண்டல'' வடபகுதிக்கும் சிறிது சிறிதாக நீட்டிக்க முடிகிறது. கால் நோய், வாய் நோய் கால் நடைகளுக்கு அறவே வராமல் தடுக்க ஒரு தனி திட்டம் தேசிய பால்வள கழகத்தின் உதவியினால் செயல்படுத்தப்பட்டது. ஒரு குறிப்பிட்ட இடைவேளை காலத்தில் இந்த நோய் பரவாமல் தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றன.

நாய் வெறி கடி நோய் தடுப்பு பிரிவு ஒன்று கோவையில் இயங்கி வருகிறது. வீடு களில் வளர்க்கப்படும் நாய்களுக்கு வெறி கடி நோய் தடுப்பூசிகள் போடுவதின் அவசியத்தையும் அந்நோயால் மனிதர்கள் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள் என்பதை பற்றியும் விளக்கங்கள் கூறி மக்களுக்கு இது பற்றி விழிப்புணர்வு ஏற்பட இப்பிரிவு உதவி புரிகிறது.

இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம் கால் நடைகள் மற்றும் கொழிகளைத் தாக்கும் தொற்றுநோய்களை தடுக்க தேவைப்படும் தடுப்பூசி மருந்துகளை உற்பத்தி செய்யும்பொருட்டு 26 பிரிவுகள் தொடர்ந்து பணி யாற்றி வருகின்றன. தவிர இந்நிலையத்தில் நோய்கள் பற்றிய நுண் ஆய்வுப் பணியும் நடைபெறுகிறது. மாநிலத்தில் கால்நடைகளுக்கு தொற்றுநோய் ஏற்பட்டுள்ளதை தெரிவிக்கப்பட்டதுடன் அந்நோயின் தன்மைகளை நேரில் சென்ற ஆய்வு செய்து தடுப்பு முறைகளுக்கான அறிவிரைகளையும் வழங்கி உதவி புரிகின்றது.

சிறப்புத் திட்டங்கள் :

சிறப்பு கால்நடை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 1,224 செம்மறி ஆடு வளர்ப்பு பிரிவுகளும், 25 பன்றி வளர்ப்பு பிரிவுகளும் நிறுவப்பட்டுள்ளன. வட ஆற்காடு, தென்னாற்காடு, சேலம், கோயமுத்தூர், மதுரை போன்ற மாவட்டங்களில் கன்று வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 3,606 கன்றுகள் சேர்க்கப்பட்ட மானியம் வழங்கப்பட் டுள்ளது. கோழி வளர்ப்புத்திட்டத்தின் கீழ் 601 கோழி வளர்ப்புப் பிரிவுகள் 1989—90 ஆம் ஆண்டு செங்கை—அண்ணா, வட ஆற்காடு, சேலம், மதுரை, தென்னாற்காடு, தர்மபுரி, பசும்பொன் முத்துராமலிங்கம், ராமநாதபுரம், காமராஜர், திண்டுக்கல் மற்றும் நெல்லை கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ளன.

மேற்கு மலை தொடர்ச்சி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு தீவன விழுக்குகள், விதைகள் 50 விழுக்காடு மானியத்தில் வழங்க அரசு ரூ. 1,50 இலட்சம் ஒப்புதல் அளித்துள்ளது.

மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலத்தில் உள்ள மாவட்ட கால்நடைப்பண்ணையில் உறைவித்து வங்கி நிறுவப்பட்டுள்ளது. அதற்கு 1989–90 ஆம் ஆண்டு ரூ. 38.55 இலட்சம் அரசு வழங்கியுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நல்ல தரமான கறவை மாடுகள், செம்மறியாடுகள், வெள்ளாடுகள் மற்றும் பன்றிகள் முதலியன சிறு/குறு மற்றும் வேளாண்மை தொழிலாளர்களுக்கு அவர்களுடைய வருமானத்தை பெருக்கிக் கொள்வதற்காக வழங்கப்பட்டன. இத்திட்டம் மாவட்ட ஆட்சியாளர்களால் செயல்படுத்தப்பட்டது.

உற்பத்திப் பெருக்கம் :

இம்மாநிலத்தில் பல்வேறு சிறப்பு திட்டங்கள் நிறைவேற்றப்படுவதால் கால்நடைகளின் உற்பத்தி அதிகரித்துள்ளது.

பால் :

1978–79 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட பாலின் அளவு 1.73 மில்லியன் டன்னிலிருந்து 1989–90 ஆம் ஆண்டு 3.41 மில்லியன் டன் அதிகரித்துள்ளது. 1978–79 ஆம் ஆண்டில் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு கிடைக்கும் பாலின் அளவு 99 கிராமிலிருந்து 1989–90 ஆம் ஆண்டு 169 கிராமாக அதிகரித்துள்ளது.

முட்டை :

1978–79 ஆம் ஆண்டு மதிப்பீடு செய்யப்பட்ட முட்டைகளின் எண்ணிக்கை 782 மில்லியனிலிருந்து 1989–90 ஆம் ஆண்டு 2,461 மில்லியனாக உயர்த்துள்ளது. 1978–79 ஆம் ஆண்டு நபர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு கிடைத்த முட்டைகளின் எண்ணிக்கை 16-லிருந்து 1989–90 ஆம் ஆண்டு 44 முட்டைகளாக அதிகரித்துள்ளது.

பால் கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை

பால் கூட்டுறவுகளின் தணிக்கை:

தேசிய பால் வாரியத்தின் (முன்னாள் இந்திய பால் வளர்ச்சிக் கழகம் ஆலோசனையின்பேரில் நிறுவப்பட்ட பால் கூட்டுறவுகளின் தணிக்கைக்குழு 1—10—1983 முதல் பால் கூட்டுறவு சங்கங்களை தொடர் தணிக்கை முறையில் தொடர்ந்து தணிக்கை செய்து வந்தது. பின்னர் அத்தணிக்கைக்குழு கலைக்கப்பட்டு, 1—10—1987 முதல் அரசுக்துறையாக மாற்றப்பட்டு ''பால் கூட்டுறவுகளின் தணிக்கைத்துறை'' என்ற பெயரில் சிறப்புற செயல்பட்டு வருகிறது.

இந்த தணிக்கைத் துறையானது பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறையின் நிர்வாகத்தின்கீழ் இயங்கும் பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் மாநிலத் தலைமைச் சங்கமான பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் தணிக்கையும் மேற்கொள்கிறது. மேலும், மேற்படி சங்கங்களைத் தணிக்கை செய்வது மட்டுமின்றி தணிக்கை கட்டணம் மற்றும் அடிப்படை விதி 127ன் கீழ் கட்டணம் ஆகியவற்றையும் வசூலித்து அரசு வருவாய்க் கணக்கில் சேர்க்க ஏற்பாடு செய்கின்றது.

1. தணிக்கை முன்னேற்றம் :

(1) 1989–90 ஆம் ஆண்டில் தணிக்கை மேற்கொள்ளப்பட்ட பிரதம பால் கூட்டுறவு சங்கங்களும், மாவட்ட பால் கூட்டுறவு ஒன்றியங்களும் பின்வருமாறு :

பிரதம பால் கூட்டுறவு சங்கங்கள்	—	8,115
மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள்.	—	17

இது தவிர தலைமைச் சங்கமான தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தையும் இந்த தணிக்கைத்துறை இயக்குநரால் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு சான்றளிக்கப்பட்டு வருகிறது.

(2) தமிழ் நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம், மாவட்ட அளவிலான ஒன்றியங்கள் மற்றும் பிரதம பால் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றின் தணிக்கை முன்னேற்றம் பின்வருமாறு :—

(அ) தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் தணிக்கை முன்னேற்றம்.

(1) 1984 ஆம் ஆண்டிற்கான தணிக்கை முடிக்கப்பெற்று தணிக்கைச் சான்றிதழ் 9—8—1990-ல் வழங்கப்பட்டுள்ளது.

(2) 1985 ஆம் ஆண்டிற்கான தணிக்கை முடிவுறும் முன்னேற்ற நிலையில் உள்ளது.

(அ) மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் தணிக்கை முன்னேற்ற நிலுவை:

வரிசை எண்.	விபரம்.	வருட வாரியான புள்ளி விபரம். 1984—85	1985—86	1986—87	1987—88	1988—89
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1	மாவட்ட ஒன்றியங்களின் மொத்த எண்ணிக்கை.	15	16	16	17	17
2	31—3—1989-ல் தணிக்கை மேற்கொள்ளப்பட்ட ஒன்றியங்கள்.	15	16	10		
3	1—4—1989 முதல் 31—3—1990 வரை தணிக்கை மேற்கொள்ளப் பட்ட ஒன்றியங்கள்.		—	6	17	3
4	31—3—1990-ல் தணிக்கை செய்யப்பட்ட ஒன்றியங்கள்.	15	16	16	17	3
5	31—3—1990-ல் நிலுவை					14
6	31—3—1989 வரை வழங்கப் பட்ட தணிக்கைச் சான்றிதழ்கள்	12	6			
7	1—4—1989 முதல் 31—3—1990 வரை வழங்கப்பட்ட தணிக்கைச் சான்றிதழ்கள்.	3	10	16	17	3
8	31—3—1990 வரை வழங்கப் பட்ட தணிக்கைச் சான்றிதழ்கள்.	5	16	16	17	3

இ. பிரதம பால் கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை முன்னேற்றம்:

வரிசை எண்.	விபரம்.	வருட வாரியான புள்ளி விவரம் 1982—83	1983—84	1984—85	1985—86
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	தணிக்கை செய்யப்பட்ட பிரதம கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள்.	6,373	7,826	8,374	8,797
2	31—3—1989 வரை தணிக்கை செய்யப் பட்ட சங்கங்கள்.	5,285	7,418	7,820	8,166
3	1—4—1989 முதல் 31—3—1990 வரை தணிக்கை செய்யப்பட்டது.	5	15	26	37
4	31—3—1990 வரை தணிக்கை மேற் கொள்ளப்பட்ட சங்கங்கள்.	5,290 *870	7,433	7,846	8,203
5	31—3—1990-ல் நிலுவை	213	393	528	594
6	31—3—1989 வரை வழங்கப்பட்ட தணிக்கைச் சான்றிதழ்	5,276	7,405	7,802	8,135
7	1—4—1989 முதல் 31—3—1990 வரை வழங்கிய தணிக்கைச் சான்றிதழ்.	12	23	35	49
8	31—3—1990 வரை வழங்கப்பட் தணிக்கைச் சான்றிதழ்கள்.	5,288 *870	7,428	7,837	8,184

	வருடவாரியான புள்ளி விவரம்		
	1986–87 (7)	1987–88 (8)	1988–89. (9)
1 தணிக்கை செய்யப்பட்ட பிரதம கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள்.	9,219	9,175	8933
2 31—3—1989 வரை தணிக்கை செய்யப் பட்ட சங்கங்கள்.	8,411	8,000	
3 1—4—1989 முதல் 31—3—1990 வரை தணிக்கை செய்யப்பட்டது.	51	178	—
4 31—3—1990 வரை தணிக்கை மேற் கொள்ளப்பட்ட சங்கங்கள்.	8462	8178	7566
5 31—3—1990—ல் நிலுவை	757	997	1365
6 31—3—1989 வரை வழங்கப்பட்ட தணிக்கைச் சான்றிதழ்	8314	6919	—
7 1—4—1989 முதல் 31—2—1990 வரை வழங்கிய தணிக்கைச் சான்றிதழ்.	118	1197	6940
8 31—3—1990 வரை வழங்கப்பட்ட தணிக்கைச் சான்றிதழ்	7462	7116	6940

* 870 தணிக்கைச் சான்றிதழ்கள் கூட்டுறவுத் தணிக்கை இயக்குநரால் வழங்கப் பட்டது.

2. இத்தணிக்கைத் துறையானது பால் கூட்டுறவுச் சங்கங்களை சிறப்புற தணிக்கை மேற்கொள்வதுடன் சங்கங்களிலிருந்து தணிக்கைக் கட்டணம் மற்றும் அரசுப்பணி யாளர்களின் பணிகளுக்கான அடிப்படை விதிக்கட்டணம் ஆகியவற்றை வசூலித்து அரசு வருவாயில் சேர்க்க ஏற்பாடு செய்கிறது.

(ஆ) 1—4—89 முதல் 31—3—90 வரையான காலத்திற்கு வசூலிக்கப்பட்ட தணிக்கைக் கட்டணம் மற்றும் அடிப்படை விதிக்கட்டணம் விபரம் பின்வருமாறு :—

	கேட்பு (ரூபாய் இலட்சத்தில்)	வசூல்
1 தணிக்கைக் கட்டணம்	21,85	20,93
2 அடிப்படை விதிக் கட்டணம்	27,21	26,20

செலவினங்கள் : இத்துறையின் நிர்வாகத்திற்காக 1—4—89 முதல் 31—3—90 வரை ரூ. 104.87 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை.

பால்வளம்.

முன்னுரை :

தமிழ்நாட்டில் பால் உற்பத்தி திட்டங்கள் குஜராத் மாநிலத்தில் உள்ள பால் கூட்டுறவு சங்கங்களின் அமைப்பை ஒட்டி செயல்படுத்தப்படுகின்றன. அதாவது கிராமங்களில் ஒரு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம், மாவட்டந்தோறும் ஒரு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் மற்றும் மாநில அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் என்ற மூன்றுபடி அடிப்படையில் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் மொத்தம் 8,302 பால் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், கிராம அளவில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள், பால் வழங்கும் சங்கங்கள், பால் வழங்கும் ஒன்றியங்கள் மற்றும் நுகர்வோர் பால் கூட்டுறவு சங்கங்கள் என பல்வகை பால் கூட்டுறவு அமைப்புகள் உள்ளன. மேற் கூறிய மொத்த சங்கங்களில் 6,963 சங்கங்கள் ஒன்றியங்கள் செயற்படும் சங்கங்களாகவும், மீத முள்ளவை செயலற்ற சங்கங்களாகவும் உள்ளன. மாவட்டங்களில் ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் என 17 பால் கூட்டுறவு ஒன்றியங்களும் மாவட்ட அளவில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. மேலும், 17 துணைப்பதிவாளர் (பால்பதம்) அலுவலகங்கள், முதன்மை பால் கூட்டுறவு சங்கங்களின் பணிகளைக் கவனிக்கவும், மற்றும் அச்சகங்களை நல்ல முறையில் செயலாற்றவும் மற்றும் மேற்கூறிய 17 பால் கூட்டுறவு ஒன்றியங்களுடன் இணைந்த பால் உற்பத்திக்கான பணிகளைக் கவனித்து வருகின்றனர். தற்போது சராசரியான நாள் ஒன்றுக்கு 15.30 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

2. குறிக்கோள்கள் :

(அ) பால் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் பாலுக்கு நிலையான நியாயமான விலை கிடைக்க உறுதி செய்தல் ;

(ஆ) நுகர்வோருக்கு நியாயமான விலையில் பால் மற்றும் பால் பொருட்களை விநியோகித்தல் ;

(இ) தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்ட விதி முறைகளின் அடிப்படையில் பால் கூட்டுறவு சங்கங்களை செயல்படுத்துதல்.

3. செயல்கள் :

மேற்சொன்ன குறிக்கோளின் அடிப்படையில் பால் பெருக்குத் துறையில் கீழ்க்குறித்த முக்கிய பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

(அ) பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் உள்ள உறுப்பினர்களின் கறவை மாடுகளுக்கு, கால்நடை மருத்துவர்கள் மூலம் கால்நடை மருத்துவ வசதி, செயற்கை முறை கருவூட்டல், மற்றும் சமதிலைப் படுத்தப்பட்ட கால்நடைத் தீவனம் வழங்குதல், இதன் மூலம் உறுப்பினர்கள் பால் உற்பத்தியின் பயனை முழுமையாக பெறுதல் ;

(ஆ) பால் உற்பத்தித் தடங்கள், பால் குளிரூட்டும் நிலையங்கள், பால் பதப்படுத்தும் தொழிற்சாலை, பால் பவுடர் தொழிற்சாலை, மற்றும் நுகர்வோரின் அத்தியாவசிய தேவைக்கேற்ப அனைத்து உள்ளமைப்புகளும் இதில் அடங்கும் ;

(இ) அனைத்து மாவட்டங்களிலுள்ள பால் கூட்டுறவு சங்கங்களை/ஒன்றியங்களை முழுமையான அளவில் செயல்படுவதற்கும், அந்தந்த மாவட்டங்களிலுள்ள துணைப்பதிவாளர் (பால்பதம்) அவருக்குள்ள தமிழ்நாடு கூட்டுறவு சங்க விதிகளிலுள்ள சட்ட விதி முறைகளின்படி நேரடியாகச் செயல்படுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

4. அனைத்து மாவட்டங்களில் உள்ள மொத்த 31.30 லட்ச பால் உற்பத்தியாளர் உறுப்பினர்களில் 7.5 லட்ச உறுப்பினர்களிடமிருந்து உற்பத்தி செய்யப்படும் பாலை சம்பந்தப்பட்ட பால் உற்பத்தியாளர், பால் வழங்கும் சங்கங்களுக்கு அனுப்பப்படுகிறது. முதன்மை உற்பத்தி சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்ட பாவினை உள்ளூர் வீற்பனை செய்யப்பட்டு, அதிகப்படியாக உள்ள பாவினை சம்பந்தப்பட்ட மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கும் பின் ஒன்றியம் சென்னை மாவட்ட பால் நுகர்வோரின் தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு தமிழ்நாடு கூட்டுறவு பால் உறபத்தியாளர் இணையத்திற்கும் அனுப்பப்படுகிறது.

5. முதன்மை சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் பாலிற்கு, கொழுப்புச் சத்தின் அடிப்படையில் பாலிற்கு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. 3 சதவீதம் கொழுப்புச் சத்து அடங்கிய பசும்பாலிற்கு குறைந்த பட்ச விலை ரூ. 3.36. 5.5 சதவீதம் கொழுப்புச் சத்து அடங்கிய பசும்பாலுக்கு அதிக பட்சமாக ரூ. 3.86 என விலை நிர்ணயம் செய்யப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது. அதேபோன்று, 6.6 சதவீதம் கொழுப்புச் சத்து அடங்கிய எருமை பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ. 4.04-ம், 10 சதவீதம் கொழுப்புச் சத்து அடங்கிய பாலுக்கு அதிக பட்சமாக ரூ. 5.98 என நிர்ணயம் செய்து வழங்கப்படுகிறது.

6. திட்டங்கள் மற்றும் நிதி ஆதாரங்கள் :

தமிழகத்தில் உள்ள 21 மாவட்டங்களில், 15 மாவட்டங்களில் தேசிய பால்வள வாரியம்மூலம் கடன்/மானியம் பெற்று பல்வேறு பால் உற்பத்தித் திட்டங்கள் நிறை வேற்றப்படுகின்றன. அம்மாவட்டங்களாவன: சென்னை, செங்கை-அண்ணா, தென் னாற்காடு, வடாற்காடு அம்பேத்கார், சம்புவராயர்-திருவண்ணாமலை, தருமபுரி, சேலம், பெரியார், கோயம்புத்தூர், நீலகிரி, மதுரை, திண்டுக்கல்-காயிதே-மில்லத், திருச்சி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை. மேற்கூறிய நிறுவனம் மூலம் 70:30 என்ற விகிதத்தின் அடிப்படையில் கடன்/மானியம் பெற்று பால் உற்பத்தித் திட்டங்கள் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தால் நிறைவேற்றப் படுகின்றன.

மீதமுள்ள பால்பெருக்குத் திட்டங்கள் அமுலில் இல்லாத பிற மாவட்டங்களான இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன், காமராஜர், திருநெல்வேலி-கட்டபொம்மன், வ.உ.சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் அரசு மானிலத் திட்டங்கள், ஊரக ஒருங்கிணைப்பு வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் வறட்சி பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் நிதி உதவி பெற்று பால் வளர்ச்சி திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன.

7. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் திட்டத் தலைப்பின்கீழ் பால் பெருக்குத் திட்டம் அமுலில் இல்லாத மாவட்டங்களுக்கு பால் உற்பத்தித் திட்டங் களுக்கு ரூ. 500 லட்சங்கள், இத்துறைக்கு குறிப்பிடப்பட்ட நிதி ஒதுக்கீடு ஆகும். அவற்றில் மொத்தம் 332.84 லட்சம் மட்டுமே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. ஐந்தாண்டுகளில் செலவிடப்பட்ட செலவினங்கள் கீழ்க்கண்டவாறு :

ஆண்டு.	செலவினம்.
1985–86	39.53 லட்சங்கள்.
1986–87	35.40 லட்சங்கள்.
1987–88	83.19 லட்சங்கள்.
1988–89	81.77 லட்சங்கள்.
1989–90	92.95 லட்சங்கள்.
மொத்தம்	332.84 லட்சங்கள்

ஏழாம் ஐந்தாண்டு திட்ட சாதனைகள் :

வ. எண். மற்றும் பொருள்.	ஆறாம் ஐந்தாண்டு திட்டத்தின் முடிவில் அதாவது 1984–85)	ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம்.				
		1985–86	1986–87	1987–88	1988–89	1989–90
1. பால் கூட்டுறவு தொடக்க சங்கங்கள் எண்ணிக்கை.	5301	5550	5804	6024	6346	7257
2. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள்.	15	16	16	17	17	17
3. பால் உற்பத்தி/ லட்சங்கள்/லிட்டர் (நாள் ஒன்றுக்கு)	8.83	10.75	11.00	11.05	12.57	15.30

9. 1989-90-ம் ஆண்டின் சாதனைகள் :

(i) (அ) 911 கூடுதல் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் தோற்று விக்கப்பட்டன. தற்பொழுது தமிழ்நாட்டில் மொத்தம் 8,302 சங்கங்கள் உள்ளன.

(ஆ) முதன்மை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் பால் உற்பத்தி 12.57 லட்சம் விட்டரிலிருந்து, 15.30 லட்சம் லிட்டராக அதிகமாக உற்பத்தி செய்யப் பட்டுள்ளது.

(ii) அரசு திட்டங்கள் :

(அ) மாதவரம் பால் பண்ணையில் உள்ள கட்டிடங்களை பழுது பார்க்க 1989-90-ம் ஆண்டுக்கு ரூ. 2.00 லட்சம் அரசு வழங்கியுள்ளது.

(ஆ) மேலும், மாதவரம் பால் பண்ணையில் உள்ள அரசு குடியிருப்புகள், கட்டி டங்களில் உள்ள மின்கம்பிகளை புதுப்பிக்க அரசு 1989-90-ம் ஆண்டில் ரூ. 2.25 லட்சம் வழங்கியுள்ளது.

(இ) ஒருங்கிணைந்த பால்வள திட்டத்தின் கீழ் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவன உதவியுடன் பால் பண்ணை அமைக்கும் திட்டம்.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் ரூ. 705 லட்சம் செலவில், ஒருங்கிணைந்த பால் வளத் திட்டத்தின் கீழ் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவன நிதி உதவியுடன் பால் பண்ணை உருவாக்க அரசு அங்கீகாரம் செய்து ஆணை பிறப் பித்தது. மேற்கூறிய திட்டத்தின் மொத்தத் தொகையில் 70 சதவீதம் தொகை ரூ. 493.50 லட்சங்கள் கடனாக தேசிய கூட்டுறவு மேம்பாட்டு நிறுவனத்தாரிடம் இருந்து பெற்றும், 30 சதவீதம் தொகை ரூ. 211.50-ஐ, மாநில அரசு நிலை உதவி பங்குத் தொகையாக வழங்குவது எனக் கருதி இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் ஐந்தாண்டிற்குள் அதாவது 1992-ல் முடிவு பெற வேண்டும்.

(இ) திட்டத்தின் சாராம்சம் :

(1) புதியதாக 651 பால் கூட்டுறவு சங்கங்கள் உருவாக்குதல்.

(2) 73,000 கால்நடைகளை கூட்டுறவு பால் உற்பத்தித் திட்டத்தின்கீழ் கொண்டு வருதல்.

(3) 851 பால் கூட்டுறவு சங்கங்களுக்கு கால்நடை மருத்துவ வசதி.

(4) சங்கரன் கோவில் மற்றும் கோவில்பட்டி ஆகிய இடங்களில் பால் குளிரூட்டும் நிலையங்கள் நிறுவுதல்.

(5) நாள் ஒன்றுக்கு தற்போதுள்ள 50,000 லிட்டர் லட்சங்கள் கொள்ளளவு கொண்ட பால் பண்ணையினை 1,00,000 லிட்டருக்கு உயர்த்துதல்.

(6) நாள் ஒன்றுக்கு விற்பனையில் 75,000 லிட்டர் இத்திட்டத்தின் மூலம் 53,000 விவசாயிகள் பயன் பெறுவர். பால் உற்பத்தியினை நாள் ஒன்றுக்கு 28,000 லிட்டரி லிருந்து 75,000 லிட்டருக்கு உயர்த்துதல்.

(ஈ) நிதி வழங்கிய விவரங்கள் :

	தேசிய கூட்டுறவு மேம்பாட்டு நிறுவனம் கடன் தொகை 70 சதவீதம் (ரூ. 493.50 லட்சம்)	மாநில அரசு வழங்கும் நிதி உதவி/மூலதனத் தொகை (ரூ. 211.50 லட்சங்கள்).
1987-88	இல்லை.	ரூ. 52.875 லட்சங்கள்.
1988-89	ரூ. 123.375 லட்சங்கள்.	ரூ. 50.000 லட்சங்கள்.
1989-90	ரூ. 23.625 லட்சங்கள்.	ரூ. 63.000 லட்சங்கள்.

(iii) மலைவாழ் பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

மலைவாழ் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1989-90ம் ஆண்டுக்கு நீலகிரி மாவட்டத்தில் பால் உற்பத்தியினைப் பெருக்குவதற்கும், கால்நடை சிகிச்சை மற்றும் கால்நடை வளர்ப்புக்கு ரூ. 3.52 லட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

(iv) மேற்கு மலை அபிவிருத்தி திட்டம் :

இத்திட்டத்தின் கீழ், கோவை மாவட்டத்தில் உள்ள அன்னூரில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட, ஒரு பால் குளிரூட்டும் நிலையம் ரூ. 25,000 லட்சம் மதிப்பீட்டில் அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 1986-87-ல் ரூ. 7.000 லட்சமும், 1987-88-ல் ரூ. 14,000 லட்சமும், 1989-90-ம் ஆண்டில் ரூ. 1.000 லட்சமும் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டம் நிறைவேற்றப்பட்டு 31-7-1989 முதல் பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட்டு வருகிறது.

(v) ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் :

(அ) இத்திட்டத்தின்கீழ் காமராஜர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கு பால் பரிசோதனை மற்றும் கிடங்கு கட்டுவதற்கு ரூ. 2.05 லட்சம் 1989-90-ம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) திண்டுக்கல்-காயிதே-மில்லத் மாவட்டத்தில் உள்ள அய்யம்பாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திற்கு பால் பரிசோதனைக் கருவிகள் மற்றும் பால் கேன் வாங்குவதற்கு 1989-90-ம் ஆண்டில் ரூ. 19,956 வழங்கப்பட்டுள்ளது.

(இ) பெரியார் மாவட்டத்தில் தீவன அபிவிருத்தித் திட்டத்திற்கு 1989-90-ம் ஆண்டிற்கு ரூ. 1.035 லட்சம் பெரியார் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

(vi) ஆதித் திராவிடர் நலத் திட்டங்கள்: சிறப்பு மத்திய நிதி உதவி: கறவை மாட்டுமாவியத் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் பால் கூட்டுறவு சங்கங்களில் உள்ள ஆதித் திராவிட இனத் தினைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு கறவை மாடு வாங்குவதற்கு கடன் வசதி வழங்கப் படுகிறது. இதன் மூலம் கறவை மாடு வாங்குவதற்கு ரூ. 320 என விலை நிர்ணயம் செய்யப்பட்டு, இதில் 33 1-3 விழுக்காடு ஆதித் திராவிட உறுப்பினர்களுக்கு மானியமாக அரசு வழங்கியுள்ளது.

1989-90-ம் ஆண்டிற்கு வழங்கப்பட்ட கறவை மாடு மானியத் தொகை கீழ்க்கண்ட வாறு :

திட்டங்கள்.	நிதிக்குறியீடு.	பயனடைவோரின் எண்ணிக்கை.
	(ரூ. லட்சத்தில்)	
(1) ஆதித் திராவிடர் மற்றும் மலைவாழ் மக்களின் நலன் (ஆதித் திராவிடர் வரவுசெலவுத் திட்டம்)	106.70	10,000
(2) சிறப்பு மத்திய நிதி உதவி (தமிழ்நாடு ஆதித் திராவிடர் லீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்).	315.42	29,561
மொத்தம்	422.12	39,561

10. எட்டாம் ஐந்தாண்டு திட்டங்கள் :

எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கு (1990-95) ரூ. 500.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கீழ்க்கண்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன:

திட்டங்கள்.	(ரூபாய் லட்சத்தில்)	
(1) காமராஜர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால்வளத் திட்டம் ஒன்றினை நிறைவேற்றுதல் (ஸ்ரீவில்லிப் புத்தூரில் பால் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைத்தல் உட்பட)		147.00
(2) நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தில் பால் பொடி தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்.		200.00
(3) இதர திட்டங்கள் :		
(அ) நெல்லை மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால் வளத் திட்டம் செயல்படுத்துதல்.	46.00—	
(ஆ) பால் பெருக்குத் திட்டம் அமுலில் இல்லாத மாவட்டங்களிலுள்ள பால் கூட்டுறவு சங்கங்களுக்கு உள்ளீடு வசதிகள் அளித்தல்.	77.00—	153.00
(இ) சூரிய சக்தி அடுப்புகள் அமைத்தல்.	30.00—	
கூடுதல்		500.00

(i) காமராஜர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால் வளர்ச்சித் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் காமராஜர் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவில்லிப்புத்தூரில் 50,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் பண்ணை ஒன்று, ரூ. 490 லட்சம் செலவில் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவன நிதி உதவியுடன் அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மொத்தத் தொகையில் ரூ. 343 லட்சம், தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து கடனாகப் பெற்றும், மீதியுள்ள தொகை ரூ. 147 லட்சம் அரசுப் பங்காக/மானியமாக பெற்று, நிறைவேற்றத் திட்டமிடப் பட்டுள்ளது.

(ii) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் பால்பவுடர் ஆலை அமைத்தல் :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் 10 மெட்ரிக் டன் கொள்ளளவில், ரூ. 667 லட்சம் மதிப்பீட்டில் ஒரு பால் பவுடர் ஆலை, தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவன நிதி உதவியுடன் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. மொத்த மதிப்பீட்டுத் தொகையில் ரூ. 467 லட்சம் தேசிய கூட்டுறவு நிதி நிறுவனத்திடமிருந்து கடனாகப் பெற்றும், எஞ்சியுள்ள ரூ. 200 லட்சம் அரசுப் பங்காக/மானியமாக பெற்று நிறை வேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

(iii) ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துதல் :

தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்திற்காக எட்டாவது ஐந் தாண்டு திட்ட காலத்திற்கு ரூ. 46 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பரிட்டுள்ளது. (இத் திட்டம் ஏழாவது ஐந்தாண்டு காலத்திலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.)

(iv) பால்திட்டம் செயற்படுத்தாத பால் கூட்டுறவு சங்கங்களுக்கு உள்ளமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் :

பால் பெருக்குத் திட்டம் செயற்படாத கன்னியாகுமரி, திருநெல்வேலி-கட்ட பொம்மன், சிதம்பரானார், காமராஜர், இராமநாதபுரம் மற்றும் பசும்பொன் தேவர் திருமகன் ஆகிய மாவட்டங்களில் உள்ள பால் கூட்டுறவு சங்கங்களுக்கு உள்ளமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கு அதாவது பால்சோதனைக் கருவிகள், கால் நடை மருந்துகள், வேளாண்மை மானியம், மற்றும் இதர இனங்களுக்கான எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்கு ரூ. 77.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சூரிய அடுப்பு வழங்குதல் :

இத்திட்டத்தின் கீழ் எட்டாவது ஐந்தாண்டு காலத் திட்டத்தில் 5 பால் பண்ணை களுக்கும், மற்றும் 5 பால் குளிரூட்டும் நிலையங்களுக்கும், சூரிய அடுப்புகள் வழங்கு வதற்கு ரூ. 30.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மீன் வளம்.

1. தமிழ்நாடு 1,000 கி. மீ. நீளமுள்ள கடற்கரையும், 41,412 சதுர கி.மீ. கடற்படு நிலத் தொடரையும் (Contenental Shelf) பெற்றுள்ளது. 3.71 லட்சம் எக்டேர் பரப்பளவுள்ள நிரந்தர, நீண்ட பருவகல மற்றும் குறுகிய பருவகால நன்னீர் நிலைகளும் உள்ளன. 1989–90-ல் தமிழக மீன் உற்பத்தி 2.89 லட்சம் டன்களெனவும், உள்நாட்டு மீன் உற்பத்தி 0.75 லட்சம் டன்களெனவும் கணக்கிடப்பட்டுள்ளன.

தமிழக மீன்துறையின் முக்கிய நோக்கங்கள்வன :

மீன் உற்பத்தியைப் பெருக்கி மக்களுக்கு நியாயமான விலையில் மீன் கிடைக்கச் செய்தல்.

ஏழை மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலைமையை முன்னேற்றுதல்.

2. கடல் மீன்வளம் :

2.1. தமிழகத்தின் கடலோரப் பகுதியில் மொத்தம் 50,574 படகுகள் மற்றும் கட்டுமரங்கள் மீன் பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. அவற்றுள் 3,896 மரத்தாலான மற்றும் கண்ணாடியிழை இயந்திரப் படகுகளும், 1,315 உள் இயந்திரம் பொருத்தப் பட்ட நாட்டுப் படகுகளும், 2,896 வெளி இயந்திரம் பொருத்தப்பட்ட கட்டு மரங்களும், 35,338 கட்டுமரங்களும், 6,917 நாட்டுப் படகுகளும், 212 மாகலா படகுகளும் அடங்கும்.

2.2. கடல் மீன்பிடிப்பை முறைப்படுத்தவும், மீன் வளத்தைப் பாதுகாக்கவும், தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்கு சட்டம், 1983 அமுல் படுத்தப்பட்டுள்ளது.

2.3. நாட்டுக்கலங்களை இயந்திர மயமாக்குதல் :

1989–90-ம் ஆண்டில் நாட்டுப் படகுகளை இயந்திரமாக்குவதற்காக 50 சதவீதம் மான்யமாக மாநில மற்றும் மத்திய அரசுப் அதிகபட்சமாக ஒரு படகுக்கு ரூ. 7,500 வீதம் ஒப்பளித்துள்ளது. இத்தத்தவிர கடல் பொருள் ஏற்றுமதி அபிவிருத்திக் சுழகம் வெளிப்பொருத்திய இயந்திரம் வாங்க மீனவருக்கு ரூ. 5,000 மான்யமாக வழங்குகிறது. இத்திட்டத்தில் கீழ் 1989–90-ல் 350 வெளிபொருத்திய இயந்திரமும், 11 உள்பொருந்திய இயந்திரமும் வழங்கப்பட்டுள்ளன.

2.4. 20 சதவீதம் மாலியத்தில் கட்டுமரம் மற்றும் விசைப்படகுகள் வழங்கல் :

1989–90-ல் பகுதி-2 திட்டத்தின்கீழ் 65 கட்டுமரங்கள் (ஒரு கட்டுமரத்திற்கு அதிகபட்சமாக ரூ. 3,000-ம்) மற்றும் 27 மீன்பிடி விசைப் படகுகள் (ஒரு படகிற்கு அதிகபட்சமாக ரூ. 1 லட்சமும்) மான்யத் தொகை ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

2.5 படகு தங்கு தளம் மற்றும் இறங்குதள வசதிகள் :

இயந்திரப் படகுகள் தங்குவதற்கும், அவை பழுது பார்க்கவும், படகுகளில் இருந்து மீன்களை இறக்கவும், பதப்படுத்தவும், எடுத்துச் செல்லவும், வலைகள் பின்னவும் ஏற்ற வகையில் மீன்பிடித்துறைமுகங்கள், படகு தங்கு தளங்கள், இறங்கு தளங்கள் மற்றும் அடிப்படை வசதிகள் மீனவர்களுக்காக செய்யப்பட்டு வருகின்றன. இவ்வசதிகள் 9 இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 1989-90ஆம் வருடத்தில் தொண்டி மீன்பிடித்துறைமுக கட்டுமானப் பயிற்சி துரிதப்படுத்தப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளது. சின்னமுட்டம் மற்றும் வாலிநோக்கம் மீன்பிடித்துறைமுகம் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

2.6. அடிப்படை வசதிகள் :

மீனவர்கள் பிடித்த மீன்களை நல்ல முறையில் கரையில் கையாளவும், அவைகளைத் தக்கபடி எடுத்துச் செல்லவும், பதப்படுத்தவும் தேவைப்படும் ஆதார வசதிகளான பதனக் கூடங்கள், பணிமனைகள், இணைப்புச் சாலைகள், சமூகக் கூடங்கள், ஏலக் கூடங்கள், வலை பழுதுபார்க்கும் கூடங்கள், தண்ணீர் மற்றும் மின்சார வசதிகள் மீனவர்களுக்காக நகுந்த முக்கிய இடங்களில் செய்து தரப்படுகின்றன. இந்த வசதிகள் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பழையார் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள முட்டம் ஆகிய இடங்களில் செய்யப்பட்டுள்ளன. இந்த வசதிகள் ஏர்வாடி, தொண்டி மற்றும் வாலிநோக்கம் ஆகிய இடங்களில் செய்யப்பட்டு வருகிறது.

2.7. படகு பழுது பார்க்கும் நிலையங்கள் :

இயந்திர மீன்பிடி படகுகளின் இயந்திரங்களைப் பழுதுபார்க்க மீன்துறையின் படகு பழுது பார்க்கும் நிலையங்கள் இராமேஸ்வரத்திலும், தூத்துக்குடியிலும், செயல்பட்டு வருகின்றன. மல்லிப்பட்டினத்திலுள்ள நிலையம் அங்குள்ள மீனவ கூட்டுறவு சங்கத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

2.8. வழிகாட்டி விளக்குகள் :

58 கிராமங்களில் வழிகாட்டி விளக்குகள் அமைக்க அரசு ஒப்பளிப்பு அளித்துள்ளது. மீனவர்கள் பாதுகாப்பாக கரைசேர உதவும் வகையில் 52 வழிகாட்டி விளக்குகள் இதுவரை அமைக்கப்பட்டுள்ளன.

2.9. பனிக்கட்டி நிலையம் மற்றும் குளிர்பதன அறை :

இத்துறையின் கட்டுப்பாட்டில் 5 பனிக்கட்டி நிலையங்களும் 1 குளிர்பதன அறையும் செயல்பட்டு வருகின்றது. நாகப்பட்டினம் மற்றும் கீழ்க்கரையில் உள்ள நிலையங்கள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

2.10. சங்கு குளிப்பு மற்றும் முத்தெடுத்தல் :

1989–90-ல் சிதம்பரனார் மாவட்டம் தூத்துக்குடியில் சங்கு குளிப்பு 1—12—1989-ல் துவங்கப்பட்டது. திருச்செந்தூர் தங்கு கடல் சங்கு குளிப்பு 13—2—1990-ல் துவக்கி 10—5—1990-வரை நடைபெற்றது. 31—3—1990 வரை பெறப்பட்ட சங்குகளின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

முழு அளவு தரம் 1 (75 மி.மீ. மேல்) — — —	18,628
முழு அளவு தரம் 2 (64 முதல் 75 மி.மீ. வரை) — —	57,370
கொத்தை சங்குகள் — — — — —	49,064
சிறு அளவு சங்குகள் — — — — —	16,267
	1,41,329

இராமநாதபுரம் மாவட்டத்தில் இவ்வாண்டு கன்னிராஜபுரம் மற்றும் இராமேஸ்வரத்தில் 22—11—1989-ல் துவங்கி சங்கு குளிப்பு நடைபெற்றது. இராமநாதபுரம் மாவட்டத்தில் பெறப்பட்ட சங்குகளின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளது:—

	ஜாதி.	பட்டி.
முழு அளவு தரம் 1 (75 மி.மீ. மேல்) —	1,898	1,735
முழு அளவு தரம் 2 (64 முதல் 75மி.மீ. வரை)	8,655	11,227
சொத்தை சங்குகள் — — —	5,117	678
சிறு அளவு சங்குகள் — — —	3,019	365
	18,689	14,005

இயற்கை சூழ்நிலை சாதகமின்மையால் இந்த வருடம் முத்துக்குளிப்பு நடைபெறவில்லை.

2.11. அண்மைக்கடல் மீன்பிடி மற்றும் அளவாய்வு :

சென்னை, கடலூர், மல்லிப்பட்டினம், இராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரியில் உள்ள அண்மைக் கடல் மீன்பிடிப்பு மற்றும் அளவாய்வு நிலையங்கள் 20 பாகம் ஆழம் வரையிலான கடல் பகுதிக்குள் இயந்திரப் படகு மீன்பிடிப்பிற்கேற்ற இடங்களை ஆய்வு செய்தும், நவீன மீன்பிடி முறைகளைச் செயல்படுத்திக் காட்டியும் வருகின்றன.

2.12. மீனவர் பயிற்சி :

சென்னை, கடலூர், நாகப்பட்டினம், மண்டபம், தூத்துக்குடி மற்றும் குளச்சல் ஆகிய ஊர்களிலுள்ள மீனவர் பயிற்சி நிலையங்கள் மீனவ இளைஞர்களுக்கு நவீன மீன்பிடி தொழில் நுட்பம், படகு பராமரிப்பு போன்றவற்றில் பயிற்சியளிக்கப்படுகின்றன. பயிற்சிக் காலத்தில் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ரூ. 75 உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்நிலையங்களில் இவ்வாண்டு 181 மீனவ இளைஞர்கள் பயிற்சி பெற்றார்கள். மேலும், 50 பேர் தூத்துக்குடி, குளச்சல் மற்றும் நாகையில் இளநிலை கம்மியர் பயிற்சி பெற்றனர்.

3. உள்நாட்டு மீன் வளம் :

3.1. நடப்பு ஆண்டில் இயற்கை மீன்குஞ்சு சேகரிப்பு மூலம் 19.35 மில்லியன் மீன் குஞ்சுகள் சேகரிக்கப்பட்டன. தூண்டுதல் முறையில் 170.35 மில்லியன் மீன்குஞ்சுகள் துறையின் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதைத் தவிர 19.90 மில்லியன் மீன்குஞ்சுகள் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையும், 53.06 மில்லியன் மீன்குஞ்சுகள் தமிழ்நாடு மீன் வளர்ச்சி அபிவிருத்திக் கழகமும் உற்பத்தி செய்துள்ளன.

விரலளவு மீன்குஞ்சுகளின் மொத்த தேவை 170 மில்லியன் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதில் துறையின் பண்ணை, மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மற்றும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மூலம் பெற்ற மொத்த மீன் குஞ்சு உற்பத்தி 68 மில்லியன் ஆகும்.

3.2. பெருநீர்த்தேக்க மீன்வளம் :

தமிழகத்திலுள்ள 55 பெரும் நீர்த்தேக்கங்களில் 9 நீர்த்தேக்கங்களின் மீன்பிடி உரிமை தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு வணிக ரீதியில் மீன்பிடிப்பதற்கு வழங்கப்பட்டுள்ளன. மீன்பிடி உரிமை ஏலம் விட்டு வழங்கும் முறை பெருநீர்த்தேக்கங்களில் நடைமுறையில் உள்ளது. நடப்பு ஆண்டில் துறையினைச் சேர்ந்த பெருநீர்த் தேக்கங்களில் 163.31 லட்சம் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு 927.368 டன் மீன் பிடிக்கப்பட்டது. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் நிர்வகிக்கும் பெருநீர்த்தேக்கங்களில் 43.23 லட்சம் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு 509.810 டன் மீன் பிடிக்கப்பட்டது.

3.3. நிவர உள்நாட்டு மீன் உற்பத்தி மற்றும் விற்பனை :

நிவர உள்நாட்டு மீன் உற்பத்தி மற்றும் விற்பனைத் திட்டம் மதுரை மற்றும் தென்னார்காடு மாவட்டத்தில் நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் 5,693 எக்டேர் பரப்பளவுள்ள பாசன நீர் நிலைகள் எடுக்கப்பட்டுள்ளன. 1989—90ஆம் ஆண்டு 43.984 டன் மீன் பிடிக்கப்பட்டது. தண்ணீர் குறைவாக இருந்ததே காரணம்.

3.4. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் :

தமிழகத்தில் 13 மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் தற்சமயம் இயங்குகின்றன. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 4,512.89 எக்டேர் பரப்பளவுள்ள நீர் நிலைகள் 5,207 நபர்களுக்கு வழங்கப்பட்டது. 1989–90ஆம் ஆண்டு ரூ. 182.93 லட்சம் மதிப்புள்ள 2,186.70 டன் மீன் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையைச் சேர்ந்த குளங் களிலிருந்து பிடிக்கப்பட்டது.

4. உவர் நீர் மீன்வள மேம்பாடு—

1989–90ஆம் ஆண்டு 10 மாதிரி இறால் வளர்ப்பு பண்ணைகளிலிருந்து 7,414.430 மெட்ரிக் டன் இறால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

5. மீனவ சமூகப் பொருளாதார மேம்பாடு—

5.1. கூட்டுறவு மூலம் மேம்பாடு :

தமிழகத்தில் சுமார் 4.97 லட்சம் கடல் மீனவர்களும் 1.5 லட்சம் உள்நாட்டு மீனவர்களும் உள்ளனர். இதில் முழுநேர கடல் மீன்பிடிப்பில் 1.09 லட்சம் பேரும், உள்நாட்டு மீன்பிடித் தொழிலில் சுமார் 0.5 லட்சம் மக்களும் ஈடுபட்டுள்ளனர். மீனவர்களுக்கு கடன் வழங்குவது தவிர அரசாங்கத்தின் நலத் திட்டங்கள் உள்நாடு மற்றும் கடல் மீனவர்களுக்காக செயல்படுத்தப்படுகின்றன. மீனவ பெண்களின் மேம்பாட்டிற்காக 53 மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 10 மீனவர் கூட்டுறவு சம்மேளனங்களும், 5 இறால் வளர்ப்பு கூட்டுறவு சங்கங்களும், ஒரு படகு கட்டும் சங்கமும், 16 மீன் விற்பனை சங்கங்களும் உள்ளன. தமிழ்நாட்டில் மொத்தம் 648 மீனவர் கூட்டுறவு சங்கங்கள் 1.52 லட்சம் மீனவ அங்கத்தினர்களுடன் செயல்பட்டு வருகின்றன.

5.2. அரசின் பங்கு மூலதன கடன் :

1989-90ஆம் ஆண்டு ரூ. 4.15 லட்சம் அரசாங்கத்தின் பங்கு மூலதனக் கடனாக கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டது.

5.3. நாட்டு படகு மீனவர்களுக்கு நைலான் வலைகள் விநியோகம் :

1981–82 முதல் 1987–88 முடிய ரூ. 8 லட்சம் மதிப்புள்ள நைலான் வலைகள் ஒவ்வொரு ஆண்டிற்கும் 20 சதவீதம் மான்யமும் 80 சதவீதம் கடனும் என்ற அடிப்படையில் வழங்கப்பட்டு வந்தது. மீனவர்களிடமிருந்து இந்தக் கடன் மிகக் குறைந்த அளவே வசூல் ஆனதால் அரசு இத்திட்டத்தை 1988–89 முதல் கீழ்க் கண்டவாறு திருத்தியுள்ளது:—

	சதவீதம்
மீனவர்களின் பங்கு .. .. (நைலான் வலையின் விலையில் 20 சதவீதம் மான்யமாக வழங்கப்படுகிறது. இதில் ஒரு மீனவருக்கு அதிக பட்சமாக ரூ. 500 வழங்கப்படுகிறது)	20
அரசின் மான்யம்	20
தனி நபர் வங்கியிலிருந்து பெற வேண்டிய கடன் ..	60

1989-90ஆம் ஆண்டு அரசு 20 சதவீதம் மான்யமாக ரூ. 2.50 லட்சம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இவ்வருடம் 250 மீனவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

5.4. மீனவர் கூட்டு காப்புறுதித் திட்டம் :

இத்திட்டத்தின்கீழ் மீனவர்களுக்கு ஆயுள் மற்றும் விபத்துக் காப்புறுதி செய்யப்பட்டுள்ளது. தொழில் செய்யும்போது விபத்தில் இறந்து போகும் மீனவர் குடும்பத்திற்கு ரூ. 15,000-மும் ஊனமுறுவோருக்கு ரூ. 7,500-ம் வழங்கப்படுகிறது. காப்புறுதி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய காப்புறுதித் தொகையை மத்திய மற்றும் மாநில அரசுகள் சமமாக ஏற்றுக்கொள்கின்றன. 1989–90-ம் ஆண்டு 1.5 லட்சம் மீனவர்கள் இத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர். 157 இறந்தவர், ஊனமுற்றோர்களின் குடும்பங்களுக்கு 21.92 லட்சம் நிவாரணமாக அளிக்கப்பட்டது. 1984–85 முதல் 1989–90 வரை இத்திட்டத்தின்கீழ் 746 குடும்பங்களுக்கு ரூ. 1,04,42,500 நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளன.

5.5. மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணநிதி :

மீன் பிடிப்பு குறைவான காலத்தில் மீனவர்களின் சிரமத்தைப் போக்கிட அரசு, தமிழ்நாடு கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரண நிதி என்னும் நிதியை உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தில் சேர விரும்பும் மீனவரிடம் மாதம்

ரூ. 10 வீதம் வருடத்தில் 9 மாதங்கள் வருலிக்கப்படுகிறது. அதற்கு இணையாக அரசின் மான்யம் ரூ. 90-ம் சேர்க்கப்படுகிறது. மொத்தத் தொகை ரூ. 180ஐ மாதம் ரூ. 60 வீதம் மீன் பிடிப்பு குறைவாக உள்ள மூன்று மாதங்களுக்கு மீனவர்களுக்கு திருப்பி வழங்கப்படுகிறது. 1989-90ஆம் ஆண்டு இத்திட்டத்தினால் 59, 796 மீனவர் பயன் பெற்றுள்ளனர். அவர்களுக்கு அரசின் பங்காக ரூ. 49.36 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

5.6. வீட்டு வசதி :

மீனவர் இலவச வீட்டு வசதி திட்டத்தின்கீழ் 14,893 வீடுகள் கட்ட ஒப்புளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 1988–89 வரை இதில் 11,517 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இதில்லாமல் 1989–90-ம் ஆண்டு மீனவர்களுக்கு இலவச வீடு கட்டும் திட்டத்தின்கீழ் 3,000 வீடுகள் கட்ட அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

6. மீனவ மகளிர் விரிவாக்கத் திட்டம் —

மீனவ மகளிரின் மேம்பாட்டுக்காக இயங்கும் தனித்தன்மை வாய்ந்த இத் திட்டம் தமிழ்நாட்டில் மட்டும் செயற்படுத்தப்படுகிறது. நமது மாநிலத்தில் 53 மீனவ மகளிர் கூட்டுறவு சங்கம் இயங்கி வருகின்றன. இதில் 6 சங்கங்கள் 1989–90-ல் பதிவு செய்யப்பட்டவை. இவ்வாண்டு 4 சங்கங்களுக்கு ரூ. 90,000 பங்கு மூலதனக் கடனாக அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மீன் விற்பனை, வலை பின்னுதல், சிறு சேமிப்பு, தையல் பயிற்சி, நியாய விலைக் கடைகள், குழந்தைக் காப்பகங்கள், வயது வந்தோர் கல்வி, சுகாதார நிலையங்கள் போன்றவை செயல் படுத்தப்படுகின்றன. இந்த நடவடிக்கைகள் மீனவ மகளிர் வருமானத்தை பெருக்குவதுடன் அவர்களுக்கு சமூக பொருளாதார நிலையையும் கல்வி அறிவையும் உயர்த்த உதவுகிறது. இவைகள் மீனவ சமுதாயம் மேன்மை பெற காரணமாகிறது.

7. ஆராய்ச்சி முன்னேற்றம் —

7.1. பவானிசாகர், உதகமண்டலம், சென்னை, தூத்துக்குடி, மரக்காணம், பரங்கிப்பேட்டை, முத்துப்பேட்டை, கன்னியாகுமரி மற்றும் மண்டபம் முதலிய இடங்களிலுள்ள ஆராய்ச்சி நிலையங்களில் மாநில மீன்வள ஆராய்ச்சிக் குழுவினரால் பரிந்துரைக்கப்பட்டு ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1989-90ஆம் ஆண்டு 19 ஆராய்ச்சித் திட்டங்கள் மேற்குறிப்பிட்ட நிலையங்களில் ஆராய்வு செய்யப்பட்டது.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்,

1. பால் உற்பத்தியாளர்களுக்கு இலாபகரமான நியாயமான விலையை அளிக்கவும் வாடிக்கையாளர்களுக்குத் தரமான பால் மற்றும் பால் பொருட்களை நியாயமான விலையில் முறையாக வழங்குவதற்கும், பால் உற்பத்தியினை பெருக்கும் பொருட்டு மாநில அரசு கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களையும், மாவட்ட அளவில் ஒன்றியங்களையும், மாநில அளவில் இணையத்தின் தலைமை அமைப்பையும் ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் 25—12—1980 அன்று பதிவு செய்யப்பட்டு 1—2—1981 முதல் தமிழ்நாடு பால் வளத்தின் பணிகளை மேற்கொண்டது.

2. இணையத்தின் முக்கிய குறிக்கோள்கள் :

(1) பால்பண்ணையும் பால்பண்ணைப்பணிகளையும் மேம்படுத்துதல்.

(2) பால், பால் பொருட்கள் விற்பனையை மேம்படுத்துதல்.

(3) பாலில் தன்னிறைவு ஏற்படுத்துவதற்காக கிராமப்பகுதிகளில் பால்பண்ணையின் உற்பத்தியைப் பெருக்குதல்.

(4) வாடிக்கையாளர்களுக்கு தரமான பாலுடன் நியாயமான விலையும், சரியான அளவையும் அளிப்பதற்கு வசதி செய்வதுடன் உற்பத்தியாளர்களுக்கும் ஆதாயம் தரத்தக்க விலையை அளித்தல்.

தற்போது பால்வளத் திட்டங்களை அந்தந்த மாவட்டப் பால் உற்பத்தி கூட்டுறவு ஒன்றியங்களே பால்வள வாரியத்தின் தொழில்நுட்ப உதவியுடன் இவ்வினையத்தின் உதவியுடனும் செயல்படுத்தி வருகின்றன.

3. இத்திட்டத்திற்கு தேசிய பால்வள வாரியம் (முன்னாள் இந்திய பால்பண்ணைக் கழகம்) திருப்பிச் செலுத்தக்கூடிய கடன் மற்றும் மானியம் 70:30 என்ற விகிதத்தில் அளிக்கின்றது. இவ்வினையம் பால்வளத் திட்டங்களை பால்பெருக்குத்

திட்டங்களின் கீழ் தேயிலை பால்வள நிறுவனத்தின் நிதி உதவியுடன் தமிழ்நாட்டில் உள்ள 14 மாவட்டங்களான :—சென்னை, செங்கை-அண்ணா, தென் ஆற்காடு, வட ஆற்காடு, சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், நீலகிரி, பெரியார், மதுரை, திண்டுக்கல் காமிதேமில்லத், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை, மாவட்டங்களில் செயல்படுத்தி வருகின்றது. பால்வளத் திட்டங்கள் செயல்படாத, காமராசர், நெல்லை கட்டபொம்மன், வ. உ. சிதம்பரனார், பசும்பொன் தேவர் திருமகன், இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் தமிழக அரசு சிறப்புத் திட்டங்களான மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஆதிதிராவிடர் நலத் திட்டம் ஆகியவற்றின்கீழ் செயல்படுத்தப்படுகின்றன. மேலும், இவ்வினையம், பெருநகர் பண்ணைகளில் பெறப்படும் பால், சென்னையில் நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் உற்பத்தி செய்யும் பால் பொருட்களை தமிழகத்திலும் மற்ற மாநிலங்களிலும் விற்பனை செய்ய உதவி புரிகின்றன.

பால் கொள் முதல் :

17,39,828 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் அடங்கிய 6,726 கிராம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின், உள்ளூர்த் தேவையை நிறைவு செய்த பின்னர் பால் கொள்முதல் செய்யப்பட்ட பதப்படுத்துவதற்கான அருகிலுள்ள பாலகக் குளிர்வைக்கும் மையங்கள் மற்றும் பால் பண்ணைகளுக்கு கொண்டு செல்லப்பட்டு பால் கெடாமல் பதப்படுத்தப்பட்டு, பின்னர் அம்பத்தூர், மாதவரத்திலும் பெருநகர் பால் பண்ணைகளுக்கு டேங்கர்களிலும் இரயில் டேங்கர்களிலும் கொண்டு செல்லப்படுகிறது.

1989-90ஆம் ஆண்டில் நாளொன்றுக்குச் சராசரியாக 12.91 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது திட்ட கால இறுதியில் பால் கொள்முதல் நாளொன்றுக்கு 20 இலட்சம் லிட்டராக அதிகரிக்கும். கிராம ஒன்றியங்களில் உள்ள பால் பண்ணைகளில் கொள்திறனை நாளொன்றுக்கு 9.62 இலட்சம் லிட்டர்களிலிருந்து நாளொன்றுக்கு 15.92 இலட்சம் லிட்டர் சென்னை பெருநகர் பண்ணைகளில் கொள் திறனாக நாளொன்றுக்கு 4.75 இலட்சம் லிட்டர்களிலிருந்து நாளொன்றுக்கு 9.75 இலட்சம் லிட்டர்களாகவும் திட்டக்கால இறுதியில் அதிகரிக்கப்பட உள்ளது.

பால், பால் உற்பத்திப் பொருள்கள் வழங்குதல் :

நாளொன்றுக்கு 6.12 இலட்சம் லிட்டர் நிலைப்படுத்திய பால் 536 பால் வழங்கும் நிலையங்கள் 51 பாலகங்கள், 99 பைபர் பிளாஸ்டிக் தொட்டிகள் 136 தானியங் பால் வழங்கு நிலையங்கள் ஆகியவை மூலம் வழங்கப்பட்டு வருகிறது. வாடிக்கையாளர் களுக்கு வழங்கும் பால், இத்திட்டக்கால இறுதியில் நாளொன்றுக்கு 10 இலட்சம் லிட்டராக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பால் நுகர்வோர்களின் நலனுக்காக வும், அவர்களுக்கு இன்னும் சிறந்த முறையில் பணியாற்றும் கருத்துடனும் 31 நுகர் வோர் கூட்டுறவுச் சங்கங்கள் சென்னையில் இயங்கி வருகிறது. இது தவிர, மாவட்ட ஒன்றியங்கள் தயாரித்த தரமான பால் பொருட்கள் மாநிலத்திற்கு வெளியேயும், மாநிலத்திற்குள்ளும் நியாயமான விலையில் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கிறது. பாலாடைக்கட்டி, மற்றும் அப்சேடிக் பாக்கில் பால் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. 1989—90ல் கீழே குறிப்பிட்டுள்ள அளவு பால் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டது.

	மெட்ரிக் டன்.
பால் தூள்	6,518
வெண்ணெய்	1,494
நெய்	3,089
பாலாடைக்கட்டி	50

கால் நடைத் தீவனம் :

கால்நடைகளின் மேம்பாட்டிற்காக சத்தான தீவனம் மலிவான விலையில் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்குவதற்காக கால்நடைத் தீவன ஆணைகள், சென்னை ஈரோடு (சித்தோடு) ஆம்பூரில் (ஆம்பூரில் கூட்டுறவு சர்க்கரை ஆலையிலிருந்து குத்தகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது) அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாலைகளில் 1989—90 இல் 30.402 டன்கள் கால்நடைத் தீவனம் உற்பத்தி செய்யப்பட்டது. மேற்படி உற் பத்தி செய்யப்பட்ட அனைத்து தீவனமும் விற்பனை செய்யப்பட்டது.

பசுந்தீவனம் : இவ்வினையம் சத்தான கால்நடை கலப்புத் தீவனம் உற்பத்தித் தவிர, தரிசு நிலங்களைப் பசுந்தீவனம் பயிரிடவும் நடவடிக்கை எடுத்து வருகிறது. 9189-90ஆம் ஆண்டில் 2,260 ஹெக்டேர் நிலப்பரப்பில் தீவனம் பயிரிடப்பட்டுள்ளது.

பால் கொள்முதல் விலை :— பால் உற்பத்தி மற்றும் கால்நடைகளின் பராமரிப்புச் செலவு அதிகரித்ததாலும், கொள்முதல் விலை விவசாயிகளுக்கு அடிக்கடி மாற்றியமைக்கப்பட்டது. தற்போது (1—11—1988 முதல்) எருமைப்பாலின் கொள்முதல் விலை ஒரு லிலோ கொழுப்பு சத்துக்கு ரூ. 58ம் பசும்பால் ஒரு லிலோ மொத்த சத்துக்கு ரூ. 28ம் ஆக உள்ளது.

விற்பனை விலை :—அதிகப்படியான கொள்முதல் விலை உற்பத்தியாளர்களுக்கு கொடுத்ததாலும், பால் விநியோக போக்குவரத்து செலவு,மற்றும் பாலிதின் பை விலை அதிகரித்ததாலும் விற்பனை விலையை அவ்வப்போது மாற்றப்பட்டது. பாலிதீன் பைகளில் விற்கும் பால் லிட்டர் ஒன்றுக்கு 16—11—1988 முதல் பால் அட்டைகளுக்கு ரூ. 5 ஆகவும் ரொக்கத்திற்கு ரூ. 5.20 ஆகவும் தானியங்கி நிலையங்களில் விற்கும் பால் ரூ. 4.90 ஆகவும் விற்கப்படுகிறது.

சிறப்புத்தகவல் :

1989-90ஆம் ஆண்டில் தென் மாவட்டங்களிலிருந்து சென்னை பால் பண்ணைகளுக்கு மீட்டர்கேஜ் இரயில் டேங்கர் மூலமாக பால் கொண்டுவரப்பட்டது. மேலும் சென்னைக்கும், கல்கத்தாவுக்கும் இரயில் மூலம் பால் அனுப்ப இரயில்வே நிர்வாகத்திடமிருந்து அனுமதி பெறப்பட்டது. இதைத் தவிர ஈரோடு/சேலம் போன்ற இடங்களிலிருந்து அதிக அளவில் பால் கொண்டு வர தேவிய பால் வள நிறுவனத்திடமிருந்து கூடுதல் ரெயில் டேங்கர்கள் பெறப்பட்டது.

சேலம் மாவட்ட பால்பண்ணையில் டெட்ராபேக் மற்றும் சுவையூட்டிய பால் உற்பத்தி செய்யப்பட்டது. டெட்ராபேக் இயந்திரத்தின் மிகைப்பட்ட கொள்திறனை மாற்ற அரசு நிறுவனங்கள் பழசாறு போன்றவை நிரப்ப அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆத்தியாயம் 5.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன் :

முன்னுரை :

பிற்படுத்தப்பட்டோர் நலன்களை கவனிக்க இந்திய ஆட்சி பணி அலுவலரை தலைவராக கொண்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்கம் 1969 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டதும், அதை தொடர்ந்து மாவட்ட அளவில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் நியமனமும் பிற்படுத்தப்பட்ட நலன்களை உயர்த்த எடுத்துக் கொள்ளப்பட்ட முதல் நடவடிக்கையாகும். அதிலிருந்து பிற்படுத்தப்பட்டோர் மேம்பாட்டுக்காக மாநில அரசு மேற்கொண்ட நலப்பணிகள் பன்மடங்கு பெருகியுள்ளன. மேலும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்களை கவனிக்க மார்ச் 1989 ஆம் ஆண்டில் இந்திய ஆட்சிப்பணி அலுவலரை தலைவராகக் கொண்ட இயக்கம் உருவாக்கப்பட்டுள்ளன.

பிற்படுத்தப்பட்டோர் மேம்பாட்டிற்கு மிகவும் இன்றியமையாத திட்டம் கல்வியே ஆகும். இத்திட்டங்கள் பிற்படுத்தப்பட்டோருக்கு பல்வேறு ஊக்குவிப்பாளர்களை அளித்துள்ளன. உதாரணமாக உபகார சம்பளம், தங்கும் விடுதிகள், பள்ளி மாணவர்களுக்கு சீருடை வழங்குதல், விடுதிகளில் உணவிட நிதி உதவி, பரிசுகள் வழங்குதல், பேரறிஞர் அண்ணா மற்றும் தந்தை பெரியார் நினைவு பரிசு வழங்குதல், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகளுக்கு தனிப்பயிற்சி நிலையம் மூலம் பயிற்சி அளித்தல், சட்டத்துறையில் முத்த வழக்கறிஞர்களிடம், பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு சட்டப் பட்டதாரிகளுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் வேலை வாய்ப்பு பயிற்சி அளித்தல் (தங்கும் விடுதிகள் உட்பட) சிறுபான்மையினர் நலம் ஆகியவை பிற்படுத்தப்பட்ட நலத் திட்டங்களாகும். இத்துறையினால் நிறைவேற்றப்பட்ட சில முக்கிய திட்டங்கள் பற்றிய சுருக்கமான விளக்கம் பின்வருமாறு :

உதவித் தொகைகள் :

1. பள்ளிக்கல்வி உதவித் தொகைகள் :

பள்ளிக் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. மாணவர்கள் செலுத்த வேண்டிய தனிக் கட்டணம் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு ஈடு செய்யப்படுகிறது. அதே போன்ற தேர்வுக் கட்டணமும் சம்பந்தப்பட்ட துறைக்கு ஈடு செய்யப்படுகிறது. ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவனுக்கு சுமார் ரூ. 67ம் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவனுக்கு ரூ. 101 ம் உதவித் தொகையாக செலவழிக்கப்படுகிறது. இவ்வுதவித் தொகையை பெற பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ. 12,000 க்குள் இருக்க வேண்டும்.

2. கல் லூரிக்கல்வி தெவித் தொகை :

கல்லூரிக் கல்வி உதவித் தொகைகளை உதவித் தொகை அறிவிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட விதத்தில் வழங்கும் அதிகாரம் கல்வி நிறுவன தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கான ஆண்டு வருமானம் ரூ. 12,000 க்குள் இருக்க வேண்டும். உண்டி உறையுள் வசதி இல்லாமல் வழங்கப்படும் தொகை தனிக்கட்டணம், அரசுச்சம்பளம், புத்தகக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணத்தை உள்ளடக்கி ஒரே தவணையில் வழங்கப்படுகிறது. உண்டி உறையுள் கட்டண வித உதவித் தொகை இரண்டு தவணைகளாக ஜூலை/ஆகஸ்ட் மாத முதலிலும் அடுத்த தவணை டிசம்பர் மாதத்திலும் வழங்கப்படுகிறது.

3. பரிசுகள் வழங்கல் :

ஒவ்வொரு ஆண்டிலும் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுகளின் விவரம் மேலே குறிப்பிடப்பட்டு உள்ளது. இதற்கான ஆண்டு வருமான உச்ச வரம்பு ஏதுமில்லை.

		பிற்படுத்தப் பட்ட வகுப்பினர்.	
			ரூ.
மேல்நிலைப்பள்ளி பொதுத் தேர்வு.	இரண்டு முதல் பரிசுகள்.	1 மாணவர் மற்றும் 1 மாணவி.	3,000
பத்தாம் வகுப்பு	இரண்டு முதல் பரிசுகள்.	1 மாணவர் மற்றும் 1 மாணவி.	1,500
மாவட்ட அளவில் வழங்கப்படும் பரிசுகள் :			
மேல் நிலைப் பள்ளி	இரண்டு முதல் பரிசுகள்.	1 மாணவர் மற்றும் 1 மாணவி.	1,500
பத்தாம் வகுப்பு	இரண்டு முதல் பரிசுகள்.	1 மாணவர் மற்றும் 1 மாணவி.	500
	இரண்டு 2வது பரிசுகள்.	1 மாணவர் மற்றும் 1 மாணவி.	250
	இரண்டு 3வது பரிசுகள்	1 மாணவர் மற்றும் 1 மாணவி	150
எட்டாம் வகுப்பு	இரண்டு முதல் பரிசுகள்.	1 மாணவர் மற்றும் 1 மாணவி	250
	இரண்டு 2வது பரிசுகள்.	1 மாணவர் மற்றும் 1 மாணவி.	150

4. பேரறிஞர் அண்ணா மற்றும் பெரியார் நினைவுப் பரிசுகள் :

ஒவ்வொரு மாவட்டத்திலும் மேல்நிலைப்பள்ளித் தேர்வில் அதிக மதிப்பெண்கள் மற்றும் அதற்குத்த அதிக மதிப்பெண்கள் பெற்ற தொழிற் கல்வி பயிலும் இரண்டு மாணவர் மற்றும் இரண்டு மாணவியருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 2,000 வீதம் பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது. இது போன்ற பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் மற்றும் அதற்குடுத்த அதிக மதிப் பெண்கள் பெற்ற பல்தொழில் நுட்பக் கல்வி பயில்வோருக்கு தந்தை பெரியார் நினைவுப் பரிசுகள் வழங்கப்படுகிறது. இதற்கென ஆண்டு வருமான உச்சவரம்பு பேதுமில்லை.

5. விடுதிகள் :

இத்துறையால் நடத்தப்படும் 390 விடுதிகளில் 21,525 மாணவ மாணவியர்கள் பயன் அடைகின்றனர், விடுதிகளின் விவரம் பின்வருமாறு :—

(1) கல்லூரி விடுதிகள்	...		56
(2) உயர்நிலைப் பள்ளி விடுதிகள்	...	...	334

பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ. 12.000 க்கு மேற்படாத மாணவ மாணவியர் இந்த விடுதிகளில் சேரத் தகுதியுடையவராவார், விடுதிகளில் வழங்கப்படும் மாத உணவுச் செலவிலும் பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது, இது பத்து மாதங்கட்கு வழங்கப்படும்,

	சென்னை மாநகரம்,	வெளியூர்
(1)	(2)	(3)
	ரூ.	ரூ.
(1) கல்லூரி மற்றும் தொழிற் கல்வி விடுதிகள்,	140	135
(2) உயர்நிலைப் பள்ளி விடுதிகள் —	85	85

உயர்நிலைப்பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்குத் தீபாவளிக்கு ஒரு ஜோடி சீருடையும். பொங்கல் பண்டிகைக்கு ஒரு ஜோடி சீருடையும் ஆக இரண்டு ஜோடி சீருடைகள் வழங்கப்படுகின்றன, ஆதிதிராவிடர் மற்றும் முற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களும் இவ்விடுதிகளில் சேர்க்கப்படுகின்றனர்,

6. உணவு மான்யம் :

அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியாரால் நடத்தப்படும் 39 மாணவர் விடுதிகளுக்கு மாணவர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 70 வீதம் பத்து மாதங்கட்கு உணவு மான்யமாக வழங்கப்படுகிறது,

8. இதரத் திட்டங்கள்.

(1) சிறப்பு பயிற்சி நிலையம் :

அனைத்திந்திய அரசு பணிகளுக்கான தேர்வெழுதும் பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் வகுப்பினர் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க இத்துறை மூலம் சிறப்புப் பயிற்சி நிலையம் நடத்தப்படுகிறது, ஒப்பளிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை 50 ஆகும், இதில் சேர பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ, 24,000க்குள் இருக்க வேண்டும், இந்நிலையத்தில் இலவச உண்டி. உறையுள் வசதி செய்துத் தரப்படுகிறது,

(2) வேலை வாய்ப்புப் பயிற்சித்திட்டம் :

பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் சீர்மரபினர் சேர்ந்த 50 மாணவர் மற்றும் 50 மாணவியர்களுக்கு குரோம்பேட்டையில் உள்ள சென்னைத் தொழில் நுட்பக் கல்லூரியில் ஆறு மாத கால கம்ப்யூட்டர் பயிற்சி அளிக்கப்படுகிறது, இலவச உண்டி. உறையுள் வசதியும் செய்து தரப்படுகிறது. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 6000 க்கு மேற்படாத மாணவ, மாணவிகளுக்கு விடுதி வசதி செய்து தரப்படுகிறது ரூ. 9.000 க்குள் ஆண்டு வருமானம் உள்ள வர்களுக்குப் பயிற்சி மட்டும் அளிக்கப்படுகிறது,

(3) சட்டப் பட்டதாரிகளுக்குப் பயிற்சி :

ஆண்டுதோறும் 20 சட்டப் பட்டதாரிகளைத் தெரிந்தெடுத்து அவர்கள் நீதித்துறையில் அனுபவம் பெறும் பொருட்டு பல்கேறு சட்டப் பிரிவுகளில் திறந்து விளங்கும் முதுநிலை வழக்குரிஞர்களிடம் 3 ஆண்டுகள் ப்யிற்சி பெறும் திட்டத்தினை செயற்படுத்தி வருகிறது, பயிற்சி காலத்தில் பயிற்சி பெறுவோருக்கு ரூ. 500 மாதந்தோறும் ஊக்கித்தொகை வழங்கப்படுகிறது, முதுநிலை வழக்குரிஞர்களுக்கு ஆண்டுதோறும் ரூ. 5.001 மதிப்பூதியமாக வழங்கப்படுகிறது, இப்பயிற்சியில் சேர ஆண்டு வருமானம் ரூ, 12,000 க்குள் இருக்க வேண்டும்,

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை.

முன்னுரை :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் நலனுக்கென ''மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்கம் என்ற ஒரு துறை கடந்த 1989ஆம் ஆண்டு மார்ச் 13ஆம் நாள் தோற்றுவிக்கப்பட்டது. இத்துறை ''இந்திய ஆட்சிப் பணி'' அலுவலர் ஒருவரின் தலைமையில் 14–3–1989 முதல் செயல்பட்டு வருகிறது. இத்துறையினால் நிறைவேற்றப்படும் திட்டங்கள் மூன்று முக்கிய தலைப்புகளில் அடங்கும்.

(1) கல்வி;
(2) பொருளாதார மேம்பாடு மற்றும்
(3) வீட்டுவசதி மற்றும் இதர திட்டங்கள்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைப் போன்றே மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினரும் சீர்மரபினரும் கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். கல்வியில் இவர்கள் நிலையை மேலும் உயர்த்துவதற்கு பல திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. அவைகளாவன.—*(1) கல்வி உதவித் தொகை, (2) 10 ஆம் வகுப்பு முதல் மூன்று ஆண்டு பட்டப்படிப்பு முடிய வருமான வரம்பின்றி இலவசக் கல்வி; (3) சத்துணவு வழங்குதல்; (4) பள்ளிக் கல்லூரி/தொழிற் கல்லூரி மாணவ மாணவியர்க்கு உண்டி உறையுள் வசதியுடன் இலவச தங்கும் விடுதிகள்; (5) சீர் மரபினருக்கு இலவச மாக சிலேட்டு பாடப் புத்தகம், நோட்டுகள் வழங்குதல்; (6) பள்ளிகள் நடத்துதல்*

(7) பள்ளிவிடுதி மாணவ மாணவியர்க்கு சீருடைகள் அளித்தல் மற்றும் (8) மாநில, மாவட்ட அளவில் முதல் மூன்று மதிப்பெண்கள் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்குதல் மற்றும் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா நினைவுப் பரிசு வழங்குதல், சீர்மரபினர் பள்ளி ஆசிரியர்க்கு வீட்டு வசதி முதலியவை ஆகும்.

பொருளாதார நிலைகளில் இவர்களை மேம்பாடு அடையச் செய்வதற்காகவும், சுய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், சலவைப் பெட்டிகள், முடி திருத்தும் கருவிகள் மற்றும் கல் உடைக்கும் தொழிற் கருவிகள் வழங்கப்படுகின்றன. மற்றும் குறைந்த வட்டியுடன் கூடிய வங்கிக் கடன் மற்றும் அரசு மானியம் வழங்கி முடி திருத்தகம் மற்றும் சலவையகம் அமைத்தல் பெண்களின் முன்னேற்றத்திற்கென மதுரை மாவட்டத்தில் ஒன்றும் மற்றும் திருநெல்வேலியில் ஒன்றும் ஆக இரு தையற் பயிற்சி நிலையங்கள் நடத்துதல், வீட்டு வசதி திட்டங்களின் கீழ் வீட்டு மனைகள் வழங்குதல், சீர் மரபினர் மற்றும் நரிக் குறவர்களுக்கு வீடு கட்டித் தருதல், சலவைத் தொழைகள் கட்டுதல் போன்ற திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர்களுக்கு 20 விழுக்காடு தனி ஒதுக்கீடு.

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்காக 20 விழுக்காடு இட ஒதுக்கீட்டின் கீழ் 1989–90 ஆம் ஆண்டில் தொழிற் பட்டப் படிப்பு கல்லூரிகளில் கீழ்க்கண்ட எண்ணிக்கையில் மேற்குறிப்பிட்ட இன மாணவர்கள் சேர்க்கப்பட்டனர்.—

	மாணவர்களின் எண்ணிக்கை.
(1) மருத்துவக் கல்லூரி	189
(2) பொறியியற் கல்லூரி	685
(3) வேளாண்மைக் கல்லூரி ..	90
(4) சட்டக் கல்லூரி	325
(5) கால்நடை மருத்துவக் கல்லூரி	37

கல்வி உதவித் தொகை, பள்ளிப் படிப்பு உதவித் தொகை சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு 4 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பள்ளிப் படிப்பு உதவித் தொகை திட்டப்படி. இலவசமாக குறிப்பிட்ட பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. 6 ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை சிறப்புக் கட்டணம் சலுகை சேர்த்து அளிக்கப் படுகிறது. மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 9 ஆம் வகுப்பு முதல் மற்றும் 10 ஆம் வகுப்புக்கு குறிப்பிட்ட பாட புத்தகங்கள் சிறப்புக் கட்டணம் வழங்கப்படுகின்றன. 10 ஆம் வகுப்பு மாணவ மாணவியருக்கு இத்துடன் தேர்வுக் கட்டணமும் வழங்கப் படுகிறது.

கல்லூரிப் படிப்பு தெவித் உதவைகை :

பிளஸ் 1 வகுப்பு முதல் மூன்றாண்டு பட்டப் படிப்பு எம்.ஏ., எம்.எஸ்ஸி. போன்ற பட்ட மேற் படிப்புகள், தொழிற் பட்டப் படிப்புகள் மற்றும் பாலிடெக்னிக், ஐ.டி.ஐ. போன்ற படிப்புகளில் பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ மாணவியருக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை உதவித் தொகை அறிவிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட விகிதப்படி உதவித் தொகை வழங்கப்படுகிறது. உதவித் தொகையில் அரைப் படிப்புக் கட்டணம், சித்தரக் கட்டணம், சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் போன்றவையும் விடுதியில் தங்கியுள்ளோருக்கு உண்டி, உறையுள் கட்டணமும் அடங்கும்.

உதவித் தொகை பெற பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமான வரம்பு ரூ. 6000-லிருந்து ரூ. 12,000 ஆக உயர்த்தப்பட்டது. இது 1989–90 ஆம் ஆண்டு முதல் நடை முறைக்கு வந்தது. 1989–90 ஆம் ஆண்டில் 44,943 மாணவர்கள் பயனடைந்தனர். இதற்கான செலவு ரூ. 77.06 லிலட்சம் ஆகும்.

இலவசக்கல்வி உதவித் தொகை :

பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமானம் வரம்பினைக் கணக்கிற் கொள்ளாமல் 10 ஆம் வகுப்பு முதல் மூன்றாண்டு பட்டப் படிப்பு (சட்டப் படிப்பு நீங்கலாக) படிக்கும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் மாணவ மாணவியருக்கு 1989–90 ஆம் ஆண்டு முதல் இலவசக் கல்விச் சலுகை அளிக்கப்படுகிறது. இச்சலுகைப்படி மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் மாணவர்கள் கல்வி நிறுவனங்களில் சேரும் பொழுது சாதிச் சான்றிதழ், சமர்ப்பித்தால் போதும், கட்டணங்கள் ஏதும் செலுத்த வேண்டியதில்லை. இச்சலுகைப் படி மாணவ மாணவியர் கல்வி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் மற்றும் நூலகக் கட்டணம், ஆய்வுக்கூடக் கட்டணம் போன்ற

அனைத்து கட்டாயக் கட்டணங்கள் ஆகியவைகளைச் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. அதனால் ஏற்படும் இழப்புத் தொகையை கல்வி நிறுவனங்களுக்கு ஈடு செய்யப்படுகிறது. இத்திட்டத்தால் 1989-90 ஆம் ஆண்டில் 64,160 மாணவ மாணவியர் பயனடைந்தனர். ரூ. 141.49 இலட்சம் செலவானது.

தமிழ்நாடு அரசு சத்துணவுத்திட்டம் :

இத்துறையினால் நடத்தப்படும் சீர்மரபினர் பள்ளிகளில் பயிலும் 5 வயது முதல் 15 வயது வரையுள்ள மாணவ மாணவியர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் சத்துணவு வழங்கப்படுகிறது. மாதமிருமுறை முட்டையும் வழங்கப்படுகிறது. 1989-90 ஆம் ஆண்டில் 38.20 இலட்சம் ரூபாய் செலவில் 41,872 பேர்கள் பயனடைந்தனர்.

3. விடுதிகள் :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்கள் விடுதிகளில் தங்கி கல்வி பெற விடுதி வசதிகள் செய்யப்பட்டுள்ளது. இவ்விடுதிகளில் சேருவதற்கு பெற்றோர்/ பாதுகாவலர் ஆண்டு வருமான வரம்பு ரூ. 6,000-லிருந்து ரூ. 12,000 ஆக உயர்த்தப்பட்டது. இது 1989-90 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது. பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு தனித் தனியே விடுதிகள் நடத்தப்பட்டு வருகிறது. இவ்விடுதிகளில் உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளி, கல்லூரி, தொழிற் கல்வி டட்டக் கல்லூரி, தொழிற் கல்வி ஆகியவை படிக்கும் மாணவ மாணவிகளை சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். கல்வி நிறுவனத்திலிருந்து இருப்பிடத்திற்கு 5 கி.மீ. தூரத்திற்கு மேலுள்ள மாணவர் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். மாணவிகளை போறுத்த மட்டில் தொலைவு தூரம், விதி ஏதுமில்லை. இலவச உண்டி, உறையுள் 10 மாதங்களுக்கு அளிக்கப்படுகிறது. இத்துறையினால் 306 விடுதிகள் நடத்தப்படுகிறது. 1989-90-ல் புதிதாக 14 மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதிகளும் 2 சீர்மரபினர் மாணவர் விடுதிகளும் திறக்கப்பட்டன. உண்டி, உறையுள் கட்டணம் பின்வருமாறு அளிக்கப்படுகிறது.

	நகரில்.	கிராமப்புறத்தில்.
(1)	(2)	(3)
பள்ளிப்படிப்பு ..	85	85
கல்லூரிப் படிப்பு	140	135
தொழிற் கல்வி படிப்பு	140	135

மேலும் 208 மிகப் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளும், 98 சீர் மரபினர் விடுதிகளும் உள்ளன். அவைகளில் 11 கல்லூரி மாணவர்களுக்கும், 7 கல்லூரி மாணவிகளுக்கும் செயல்பட்டு வருகின்றன. 1989-90 ஆம் ஆண்டு 327.71 இலட்சம் செலவில் 18,309 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர்.

உண்வு மான்யம் :

தனியார் நிறுவனம் மூலம் நடத்தப்படும் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு உணவு மானியமாக மாதம் ரூ. 70 வீதம் ஆண்டொன்றுக்கு 10 மாதங்களுக்கு அளிக்கப்படுகிறது.

சீருடைகள் :

சீர்மரபினர் முன்னேற்றத்திற்கென நடத்தப்படும் இத்துறை பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கு, உயர்நிலைப் பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் ஆண்டுக் கொருமுறை இரு செட் சீருடைகள் இலவசமாக வழங்கப்படுகிறது. 1989-90 ஆம் ஆண்டில் 38.62 இலட்சம் ரூபாய் செலவில் 59,975 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

பள்ளிகள் :

சீர்மரபினர் கல்வி வளர்ச்சிக்காக அரசு தனிக் கவனம் செலுத்தி பள்ளிகளை நடத்தி வருகிறது. இத்துறையில் 3 மேல்நிலைப் பள்ளிகள், 7 உயர்நிலைப் பள்ளிகளும், 43 நடுநிலைப் பள்ளிகளும், 235 துவக்கப் பள்ளிகளும் வடாற்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவர்யார், தர்மபுரி, பெரியார், கோவை, சேலம், மதுரை, திண்டுக்கல் காமிதே மில்வத், இராமநாதபுரம், காமராஜர் மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகிறது. 1989-90 ஆம் ஆண்டில் 391.08 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மெற்கண்ட பயனடைந்த மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை 53,776 ஆகும். இத்துறையில் ஆண்டு மேல் நிலைப் பள்ளிகளுக்கு 16 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் 1989-90 இல் தோற்றுவிக்கப்பட்டன.

வேளாண்மை :

இரு ஏக்கர் விவசாய நிலங்களுக்கு குறையாமல் அனைத்து வைத்து இருக்கும் சிர்மரபினர் விவசாயிகளுக்கு புதிதாக இணறு தோண்டவும், ஏற்கனவே உள்ள கிணற்றை ஆழப்படுத்தப்படவும் ரூ. 2,500 மானியம் பணிகளின் பல்வேறு நிலைகளில் மூன்று தவணைகளாக வழங்கப்படுகிறது. இதன் மூலம் 0.35 இலட்சம் ரூபாய் செலவில் 1989–90 ஆம் ஆண்டில் 38 நபர்கள் பயனடைந்தனர்.

இலவச தொழிற்கருவிகள் வழங்கல் :

சலவையாளர், முடிதிருத்துவோர் மற்றும் கல் உடைப்போர் தத்தம் தொழிலை திறமையாக செய்ய சலவைப் பெட்டி முடிதிருத்தும் மற்றும் கல் உடைக்கும் கருவிகள் வழங்கப்படுகின்றன. 1989–90 ஆம் ஆண்டில் இத் திட்டத்தின்கீழ் பயனடைந்தோர் மற்றும் செலவு வருமாறு.—

	எண்ணிக்கை.	செலவு.
(1)	(2)	(3)
		(ரூபாய் இலட்சத்தில்.)
(1) சலவைப் பெட்டிகள்	4,000	24.92
(2) முடிதிருத்தும் பெட்டிகள்	500	0.90
(3) போயர் கருவிகள்	500	1.67

ரூ. 179.90 மதிப்புள்ள சவரக் கருவிகளும், சலவைத் தொழிலாளிகளுக்கு ரூ. 623 மதிப்புள்ள் சலவைப் பெட்டியும், கல் உடைப்பதற்கு ரூ. 333.75 மதிப்புள்ள போயர் கருவிகளும் வழங்கப்படுகிறது. 1989–90 ஆம் ஆண்டு 27.49 இலட்சம் ரூபாய் செலவில் 5,000 குடும்பங்கள் இத்திட்டத்தால் பயனடைந்தனர்.

சிர்மரபினருக்கு தொழிற் பயிற்சி :

சிர்மரபினர் சுயமாக தொழிற்புரிய வகை செய்யும் வகையில் 3 பொது நோக்கு பொற்றியற் பயிற்சி நிலையங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இப்போழுது இவற்றின் நிலை தொழிற்பயிற்சி நிலைக்கு உயர்த்தப்பட்டு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் நிர்வாகத்தில் செயல்படுகின்றன. ஆனால் இவற்றிற்கான செலவுத் தொகை இத்துறை மூலம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. 1989–90 இல் 13.69 இலட்சம் ரூபாய் இதற்காக செலவிடப்பட்டுள்ளது. மேலும் சிர்மரபினர் பெண்களுக்கு மதுரை மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டங்களில் தலா ஒரு ஆயத்த உண்ட தயாரித்தல் தையல் மற்றும் பூவேலை பயிற்சி அளிக்க பயிற்சி நிலையங்கள் தொடர்ந்து நடை பெற்று வருகிறது. இதற்கென ரூ. 0.76 இலட்சம் செலவிடப்பட்டது. 70 மாணவியர் பயனடைந்தனர்.

சலவைத்துறை கட்டுதல் :

சலவைத் தொழிலாளர் சுகாதார முறையில் சலவைத் தொழிலை திறம்பட செய்திட தண்ணீர் வசதி உள்ள நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதியில் சலவைத் துறைகள் கட்டப்பட்டு வருகின்றன. சலவைத்துறைக் கட்டுமான செலவில் 75 சதவீதம் மானியமும். 20 உள்ளாட்சியின் பங்கும், மீதி 5 சதவீதம் பயனாளிகளின் பங்கும் ஆகும்.

1989 90-ல் 2 சலவைத் துறைகள் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது. ரூ. 1.64 இலட்சம் மானியமாகவும், ரூ. 0.47 இலட்சம் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.

வீட்டு மனைகள் வழங்குதல் :

சொந்த வீடோ, வீட்டுமனையோ அற்ற மிக ஏழ்மை நிலையிலுள்ள முடிதிருத்து வோர், சலவைத் தொழிலாளர், நரிக்குறவர் மற்றும் ஓட்டர் ஆகியோருக்கு குடும்பம் ஒன்றுக்கு வீடு கட்டுவதற்கு தனியார் பட்டா நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகிறது. 1989–90 ஆம் ஆண்டில் 1,321 குடும்பங்களுக்கு ரூ. 13.16 இலட்சம் செலவில் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. மேலும் திருச்சி மாவட்டம், தேவராயநேரி கிராமம், நரிக்குறவர் காலனியில் உள்ள 184 நரிக் குறவர் வீடுகளும், ஒரு குடிநீர் கிணறும் ரூ. 2.53 இலட்சம் செலவில் செப்பனிடப்பட்டுள்ளன.

அத்தியாயம்—6

வணிகவரி மற்றும் அறநிலையத் துறை.

வணிக வரிகள்.

1.1. வணிக வரித் துறையின் நிர்வாகம் கீழ்க்கண்ட சட்டங்களை நிர்வாகம் செய்து வருகிறது:—

(அ) தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம், 1959

(ஆ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச்சட்டம், 1970

(இ) தமிழ்நாடு விற்பனை வரி (உபரி வரி) சட்டம், 1971

(ஈ) தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம், 1939

(உ) தமிழ்நாடு உள்ளாட்சி நிர்வாக நிதி சட்டம், 1961

(ஊ) தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1935

(எ) தமிழ்நாடு ஆடம்பர விடுதிகள் (மற்றும்) தங்கும் இல்லங்கள் மீதான வரிச் சட்டம், 1981

(ஏ) தமிழ்நாடு விளம்பர வரிச்சட்டம், 1983

(ஐ) தமிழ்நாடு நுழைவு வரிச்சட்டம், 1989

(ஒ) தமிழ்நாடு விற்பனை வரிச்சட்டம், 1956

2. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் :

தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின்கீழ் 1988-89-ஆம் ஆண்டில் 2,61,324 ஆக இருந்த பதிவு பெற்ற வணிகர்களின் எண்ணிக்கை 1989-90இல் 2,83,507 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 1988-89இல் 1,28,012 ஆகயிருந்த வரிவிதிப்புக்கு உட்பட்ட வணிகர்களின் எண்ணிக்கை 1989-90-ல் 1,37,019 ஆக உயர்ந்துள்ளது.

2.2. தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், 1970 :

1—4—1989 முதல் இக்கூடுதல் வரி விகிதம் 1.25 சதவிதம் விழுக்காடுகள் என்ற அளவில் ரூபாய் 10 இலட்சம் முதல் ரூபாய் 40 இலட்சம் வரையான விற்பனைத் தொகையின் மீதும், ரூபாய் 40 இலட்சத்திற்கு மேற்பட்ட விற்பனை தொகையின் மீது 1·50 சதவீதம் விழுக்காடுகள் என்ற அளவிலும் சட்டம் 21/69-ன்படி ஒரு கோடிக்கு மேற்பட்ட தொகையின் மீது 2 சதவிதம் விழுக்காடுகள் என்ற அளவில் விதிக்கப்பட்டு வருகிறது. இச்சட்டம் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் 1959-க்குத் துணைச் சட்டமாகும்.

2-3. தமிழ்நாடு உபரி வரிச் சட்டம் 1971 மற்றும் கூடுதல் வரிச் சட்டம், 1981 :

இச்சட்டத்தின் கீழ் முதல் முதலாக சென்னை நகரத்தில் செலுத்தப்படும் விற்பனை வரியின் மீது 5 விழுக்காடுகள் என்ற அளவில் 31—3—1989 வரையிலும் மற்றும் 1—4—1989 முதல் 10 சதவிதம் விழுக்காடுகள் என்ற அளவில் மதுரை, கோவை ஆகிய நகரங்களிலும் அதனை சார்ந்த புறநகர் பிரிவுகளிலும் அமுல்படுத்துவதோடு நகராட்சி ஆகிய இடங்களிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும் மற்ற இடங்களில் 8 சதவிதம் விழுக்காடு என்ற அளவில் 1—4—1989 முதல் விதிக்கப்பட்டு வருகிறது. அவசரச்சட்டம் 2/89—ன் படி கூடுதல் உபரி வரி 5 விழுக்காடு என்ற அளவில் 1—7—1989 முதல் சென்னை மற்றும் அதனையொட்டி 32 கிலோ மீட்டருக்குள் வரும் புறநகர் பகுதிகளிலும் அமுலில் உள்ளது.

2.4. தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம் மற்றும் உள்ளாட்சி நிறுவன நிதிச் சட்டம், 1961:

இவ்விரு சட்டங்களும் திரையரங்குகள் மற்றும் குதிரைப்பந்தயங்கள் நுழைவு கட்டணத்தின் மேலான வரி விதியை முறைப்படுத்துகின்றன. திரையரங்குகளில் விதிக்கப்படும் கேளிக்கை வரி, கூடுதல் வரி, உபரி வரி போன்றவற்றை ஒருங்கிணைத்து கேளிக்கை வரி கட்டணத்தின் மொத்தத்தில் 40 விழுக்காடு உபரி வரியாக 1—7—1989 முதல் அமுல் படுத்தப்பட்டுள்ளது. மேலும் கூடுதல் உபரி வரி தமிழ்நாடு உள்ளாட்சி நிறுவன நிதிச்சட்டம் 1961-ன்படி குதிரைப் பந்தயத்திற்கு மட்டும் விதிக்கும்படி 1—7—1989 முதல் அமுல் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு உள்ளாட்சி நிதி நிர்வாகச் சட்டம் நகராட்சிகள், மாநகராட்சிகள், ஊராட்சிகள் ஆகிய இடங்களில் தமிழ்நாடு

கேளிக்கை வரிச்சட்டத்தின் கீழ் மேல் வரிவிதிக்க அரசு அதிகாரம் அளிக்கிறது. கேளிக்கை வரிச்சட்டத்தின் கீழ் பெரும்பான்மையாக வருவாயும் உள்ளாட்சி நிதி சட்டத்தின் கீழ் வரும் முழுவதும் மேலே சொல்லப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கப்படுகின்றது.

இம்மாநிலத்தில் மொத்தம் 2,506 திரையரங்குகள் உள்ளன.

(1) நிலையான திரையரங்குகள்	1,300
(2) குளிர் சாதனம் பொருத்தப்பட்ட திரையரங்குகள்	122
(3) திறந்த வெளி திரையரங்கம்	5
(4) முழுவதும் நிரந்தரமற்ற திரையரங்கம்	227
(5) நடமாடும் திரையரங்கம் ..	852
மொத்தம்	2,506

2.5. தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1935 :

சென்னை (மற்றும்) உதகை ஆகிய நகரங்களில் குதிரைப் பந்தயம் நடைபெற்று வருகிறது. மேலும் பெங்களூர், பம்பாய், கல்கத்தா மற்றும் ஐதராபாத் ஆகிய நகரங்களில் நடைபெற்று வரும் குதிரைப் பந்தையங்கள் மீது நிகழ்விட பந்தயங்கள் நடைபெற அனுமதிக்கப்பட்டுள்ளது.

2-6. தமிழ்நாடு ஆடம்பர வீடுகிகள் மற்றும் தங்கும் இல்லங்கள் மீதான வரிவிதிப்புச் சட்டம், 1951 :

இச்சட்டத்தின் கீழ் உணவு வீடுதிகள் மற்றும் தங்கும் இல்வங்களில் அளிக்கும் ஆடம்பரத்தின் மீது வரிவிதிக்கப்படுகிறது.

2.7. தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம், 1983 :

திரையரங்குகளில் காண்பிக்கப்படும் விளம்பரம் மற்றும் விளம்பர ஸ்லைடுகளின் மீதும் வரிவிதிப்பதற்கு இச்சட்டம் வகை செய்கிறது.

2-8. தமிழ்நாடு நுழைவு வரிச் சட்டம், 1989 :

இச்சட்டம் மாநிலங்களுக்கிடையேயான விளம்பரம் மற்றும் வணிகத்தின் மீது விதிக்கப்படும் வரியை ஒட்டியதாகும். 1988-89ல் 1,61,749 ஆகயிருந்த வணிகர்களின் எண்ணிக்கை 1989-90ல் 1,71,516 ஆக உயர்ந்துள்ளது.

3. தணிக்கை சாவடிகள் :

இம்மாநிலத்தில் உள்ளேயும் மற்றும் அதன் எல்லைப்புறங்களிலும் அமைக்கப்பட்டுள்ள மொத்த தணிக்கை சாவடிகளின் எண்ணிக்கை 48.

4. உள்ளீட்டு தணிக்கை :

இத்துறையில் இதற்பொழுது மொத்தம் 43 உள்ளீட்டு தணிக்கை பிரிவுகள் இயங்கி வருகின்றன.

5. அலுவலர் பயிற்சி நிலையம் :

இத்துறை அலுவலர்கட்கு அடிப்படை மற்றும் மறு பயிற்சி அளிப்பதற்காக ஒரு பயிற்சி நிலையம் நிறுவப்பட்டு 1982-ம் ஆண்டு மே மாதம் முதல் செயல்பட்டு வருகிறது.

6. பல்வேறுப்பட்ட வணிக வரி சட்டங்களில் வருவாய் விவரம் பின்வருமாறு :—

	(ரூபாய் கோடியில்).
(1) தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம் மற்றும் அதனை யொட்டிய சட்டங்கள்.	1,426.05
(2) மத்திய விற்பனை வரிச்சட்டம் 1956	240.03
(3) தமிழ்நாடு கேளிக்கை வரிச்சட்டம் 1939 மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி நிறுவன நிதிச்சட்டம் 1961 மற்றும் தமிழ்நாடு விளம்பர வரிகள்.	68.72
(4) தமிழ்நாடு பந்தைய வரிச்சட்டம்	5.70
(5) தமிழ்நாடு ஆடம்பர வீடுதிகள் கற்றும் தங்கும் இல்லங்கள் மீதான வரிவிதிப்புச் சட்டம் 1981.	17.97
(6) தமிழ்நாடு நுழைவு வரிச்சட்டம்	0.55
(7) விளம்பர வரி	..
மொத்தம்	1,759.02

இந்து சமய அற நிறுவனங்கள்.

1. அற நிலையங்கள் அதாவது, திருக்கோயில்கள், மடங்கள், மற்றும் குறிப்பிட்ட கட்டளைகள் தவிர, அறக்கட்டளை, ஜெயின் நிறுவனங்கள் அறநிலையச் சட்டம் 1959-ல் கண்ட ஷரத்துக்கள்படி, நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

2. மேற்படி சட்டத்தின்படி, ஆணையர், துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர்கள் " தக்க அலுவலர்கள் " இருப்பினும், இரண்டு இணை ஆணையர்கள், துணை ஆணையர் அந்தஸ்தில் ஒரு நேர்முக உதவியாளர், மற்றும் உதவி ஆணையர் அந்தஸ்தில் ஒரு கூடுதல் நேர்முக உதவியாளர் ஆணையருக்கு உதவியாக உள்ளனர்.

3. அறநிலையங்கள், அறக்கட்டளைகள் மற்றும் ஜெயின் நிறுவனங்களில் அன்றாட நிர்வாகம் மேற்படி சட்ட ஷரத்தின்படி நியமனம் செய்யப்பட்ட அறங்காவலர்கள் மற்றும் செயல் அலுவலர்கள் பொறுப்பில் உள்ளது.

4. தமிழ்நாட்டில் மொத்தம் 35,150 அறநிலையங்கள், அறக்கட்டளைகள் மற்றும் ஜெயின் நிறுவனங்கள் உள்ளன. அவைகளின் விவரம் கீழ்வருமாறு :—

	எண்ணிக்கை.
1. திருக்கோயில்கள்	33,112
2. மடங்கள்	56
3. மடத்தைச்சார்ந்த திருக்கோயில்கள் ..	55
4. குறிப்பிட்ட கட்டளைகள்	1,721
5. அறக்கட்டளைகள் ..	189
6. ஜெயின் நிறுவனங்கள்	17
ஆக மொத்தம்	35,150

5. துறை நிதி (வரவு மற்றும் செலவு)

இத்துறை '' பட்டுவாடா துறை '' என்கிற தலைப்பில் வருகிறது. இத்துறையின் வருமானம் அறநிலையங்களிலிருந்து, அற நிலையச் சட்டம் 1959 பிரிவின்படி. செலுத்தும் உதவித் தொகை மற்றும் தணிக்கை கட்டணமே, அறிக்கைக்குட்பட்ட காலத்தின் வருமானம் ரூ. 5,73 கோடி. செலவு ரூ. 4.46 கோடி.

6. பணியாளர்கள் :

6.1. இத்துறையின் தலைவர் ஆணையர் என அழைக்கப்படுகிறார். இவர் ஒரு இந்திய ஆட்சி பணி அலுவலர் அதிகாரி. ஏற்கெனவே கூறியதுபோல், 2 இணை ஆணையர் மற்றும் 2 நேர்முக உதவியாளர்கள் அவருக்கு உதவி புரிகின்றார். தவிர, மாவட்ட வருவாய் துறை அதிகாரி அந்தஸ்தில் ஒரு அதிகாரியும், ஒரு கண்காணிப்புப் பொறியாளர், மற்றும் ஒரு முதுநிலைக் கணக்கு அலுவலர் தலைமை அலுவலகத்தில் இவருக்கு உதவியாக உள்ளனர். மாநிலம் 8 கோட்டங்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு கோட்டமும், துணை ஆணையரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. 8 துணை ஆணையர்கள் உள்ளனர். தவிர, 17 உதவி ஆணையர்கள், 8 உதவி ஆணையர்கள் (சரிபார்த்தல்) உள்ளனர். மாநிலத்தில் 180 ஆய்வர்கள் களப் பணியாளர்களாக உள்ளனர். உதவி ஆணையர் (சரிபார்த்தல்) திருக்கோயில் நகைகள் ஆகியவற்றை மதிப்பிடு செய்தல் மற்றும் சரிபார்த்தல் பொறுப்பிலும், அவருக்கு உதவியாக தொழில்நுட்ப உதவியாளரும் உள்ளனர்.

6.2. திருக்கோயில் திருப்பணி மற்றும் கட்டுமான வேலைகளைக் கவனிக்க கண்காணிப்புப் பொறியாளர் உள்ளார். ஆணையர் அலுவலகத்தில் இவருக்கு உதவியாக 2 கோட்டப் பொறியாளர்கள் உள்ளனர். ஒவ்வொரு துணை ஆணையர் அலுவலகத்திலும், ஒரு உதவிக் கோட்டப் பொறியாளரும், ஒவ்வொரு உதவி ஆணையர் அலுவலகத்தில், ஒரு இளநிலைப் பொறியாளரும் உள்ளனர். இந்த தொழில்நுட்பப் பணியாளர் திருக்கோயில் சம்பந்தப்பட்ட கட்டுமான வேலைகள் பொறுப்பில் உள்ளனர்.

6.3. அறநிலையங்கள் தணிக்கைகள் தனியாக '' தணிக்கைப் பிரிவு '' அலுவலர்களால் தலைமை தணிக்கை அதிகாரி தலைமையிலும், மேற்படியார் ஆணையரின் கட்டுப்பாட்டிலும் இருந்து நடத்தப்படுகிறது. ஒவ்வொரு துணை ஆணையர் சரகத்திற்கும் ஒரு மண்டல தணிக்கை அதிகாரியும், உதவி ஆணையர் கோட்டத்தில் உதவித் தணிக்கை அதிகாரியும் உள்ளனர்.

6.5. திருக்கோயில்களுக்கு அறங்காவலர் தவிர செயல் அலுவலர்களும் பொறுப்டாக உள்ளனர். செயல் அலுவலர் பதவி 1 முதல் 4 நிலை உள்ளது. இம்மாநிலத்தில் 472 செயல் அலுவலர்கள் பணி புரிகின்றார்கள். தவிர, 10 இலட்சத்திற்கு மேல் வருமானம் வரக்கூடிய திருக்கோயில்களுக்கு இணை/துணை உதவி ஆணையர் அந்தஸ்தில் 5 செயல் அலுவலர்களும், துணை ஆணையர் அந்தஸ்தில் 4 செயல் அலுவலர்களும், உதவி ஆணையர் அந்தஸ்தில் 12 செயல் அலுவலர்களும் பணியில் உள்ளனர்.

7. திருப்பணி மற்றும் கட்டுமான வேலைகள் :

7.1. தமிழ்நாட்டில் திருப்பணி வேலைகள் செய்ய வேண்டிய திருக்கோயில்கள் உள்ளன. இவைகளுக்கு, நிதி உதவி கொடுக்கப்படுகிறது. திருப்பணி மற்றும் இதர வேலைகளுக்கு அறிக்கைக்குட்பட்ட காலத்தில் வழங்கப்பட்ட அனுமதி விவரம் இதனடியில் கொடுக்கப்படுகிறது:—

அனுமதி விவரம்.	வேலை விவரம்.	வேலை எண்ணிக்கை.	தொகை (இலட்சத்தில்).
(1)	(2)	(3)	(4)
நிர்வாக அனுமதி	திருப்பணி	264	1,218.5
	இதர கட்டுமான வேலைகள்	91	80.64
தொழில்நுட்ப அனுமதி	திருப்பணி	114	327.79
	இதர கட்டுமான வேலைகள்	39	99.87

7.2. திருப்பணி வேலைக்கு ஆணையர் பொதுநலநிதி, அரசு மான்யம் மற்றும் திருக்கோவிலிலுள்ள உபரி நிதி ஆகியவைகள் நிதியுதவியாக கொடுக்கப்படுகிறது. இந்த அறிக்கைக்குட்பட்ட காலத்தில், இவைகள் சம்பந்தப்பட்ட விவரம் இதனடியில் கொடுக்கப்படுகிறது;—

விவரம்.	திருக்கோயில்(எண்ணிக்கை.	தொகை லட்சத்தில்).
(1)	(2)	(3)
1. அரசு மான்யம்	50	47.70
2. ஆணையர் பொது நல நிதி	24	6.78
3. இதர திருக்கோவில் உபரி நிதி ...	74	27.66

7.3. அறிக்கைக்குட்பட்ட காலத்தில் 113 திருக்கோவில்கள் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது.

7.4. இத்துறை 14 திருக்கோவில்களில் பலநோக்கு வர்த்தக அங்காடி மற்றும் கல்யாண மண்டபம் ஆகியவைகள் கட்டுவதற்குண்டான '' திட்டம் '' ஏற்பாடு செய்துள்ளது. மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரஸேவரர் திருக்கோவிலுக்குச் சொந்தமான '' ஏழு கடல் '' திட்டம் என்கிற பலநோக்கு வர்த்தக அங்காடி 93-92 இலட்சம் செலவில் கட்டவுள்ளது. அம்மாதிரியே, திருத்தணி, அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோவிலுக்குச் சொந்தமான அங்காடி ரூ. 35 இலட்சம் செலவில் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, முடியும் தருவாயில் உள்ளது.

8. ஒரு கால பூஜை திட்டம் :

8.1. நித்தியப்படி பூஜைக்கான நிதி வசதியில்லாத, திருக்கோவில்களுக்கு, நிதி உதவி செய்யும் திட்டம் 1984ஆம் ஆண்டு அமுலாக்கப்பட்டது. இதற்காக, ரூ. 5 கோடி முதலீடு செய்யப்பட்டு, அதிலிருந்து கிடைக்கக்கூடிய வட்டியை, இந்த செலவிற்கு பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு திருக்கோவிலும், ஆண்டுக்கு ரூ. 2,500 பெறுகின்றன. இம்மாதிரி, இந்த நிதியாண்டில், 978 திருக்கோவில்களுக்கு மொத்தம் ரூ. 24.45 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

9. திருக்கோவில் பணியாளர்கள்—உம்பளம் கொடுத்தல் :

9.1. திருக்கோவில் பணியாளர்கள் மேம்பாட்டிற்காக அரசால் 1984ஆம் ஆண்டு ஒரு திட்டம் அனுமதிக்கப்பட்டது. இந்த திட்டத்தின்படி, ஒரு கோடி ரூபாய் மூலதனத்தை முதலீடு செய்து, அதில் கிடைக்கக்கூடிய வட்டியைக்கொண்டு, திருக்கோவில் பணியாளர்கள் சம்பள நிலுவை கொடுக்கப்படுகிறது. நிர்வாக அறிக்கைக்குட்பட்ட காலத்தில், இத்திட்டத்தினால் 1,097 திருக்கோவில்களில் பணிபுரியும் 2,672 திருக்கோவில் பணியாளர்கள் மொத்தச் செலவு ரூ. 42.12 இலட்சத்தில் பயனடைந்துள்ளனர்.

10. ஓதுவார் ஓய்வூதிய திட்டம் ;

10.1. அரசாணை நிலை 591, வணிகவரி மற்றும் அறநிலையத்துறை, நாள் 15—4—1988 உத்தரவில், ஓதுவார்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கும் திட்டம் அனுமதிக்கப்பட்டது. இதனால், இதுவரை 103 ஓதுவார்கள் பயனடைந்துள்ளனர். மாத ஓய்வூதியம் ரூ. 250, அறிக்கைக்குட்பட்ட காலத்தில் 8 ஓதுவார்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. 1989-90ஆம் ஆண்டு மொத்தச் செலவு ரூ. 2,31;655.

11. திருக்கோவில் பணியாளர்கள் குடும்ப நல நிதித் திட்டம்

11.1. அரசாணை எண். 110, நிலை, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 12—10—1987 உத்தரவுப்படி, இந்தத் திட்டம் 1987ஆம் ஆண்டு முதல் அமுலாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், திருக்கோவில் பணியாளர்கள் பணிக்காலத்தில் இறந்துவிட்டால், அவர் குடும்பத்திற்கு நிதியுதவியாக ரூ. 10,000 வழங்கப்படுகிறது. இந்த ஆண்டில், 110 திருக்கோவில் பணியாளர்களுக்கு மொத்தம் ரூ. 6.90 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

12. திருக்கோவில் நிலம் மற்றும் கட்டிட வருமானம் :

12.1. திருக்கோவிலுக்குச்சொந்தமான நன்செய், புன்செய், விவசாய நிலங்கள், கட்டிடங்கள் மற்றும் மனைப்பகுதிகள் ஆகியவைகளிலிருந்து வருமானம் சென்ற ஆண்டைக் காட்டிலும், இந்த ஆண்டு அதிகம் வந்துள்ளது. இதன் விவரம் கீழ்வருமாறு :

தலைப்பு :	வருமானம்-பசலி (இலட்சத்தில்).		
	1397	1398	1399
(1)	(2)	(3)	(4)
நன்செய், புன்செய் நிலங்கள்	379	547	772
கட்டிடங்கள், மற்றும் மனைப்பகுதி	433	424	396
மொத்தம்	812	971	1,168

13. நகைகள் மற்றும் விலையுயர்ந்தவைகள் :

13.1. நிர்வாக அறிக்கைக்குட்பட்ட காலத்தில் 462 திருக்கோவில்கள் நகைகள் முதல் மதிப்பீடும், 204 திருக்கோவில்கள் நகைகள் புனர் மதிப்பீடும் மற்றும் 272 திருக்கோவில்கள் பிற்சேர்க்கை மதிப்பீடும் செய்யப்பட்டுள்ளன.

14. திருக்கோயில்கள் நகைகள் மற்றும் விலையுயர்ந்தவைகள் பாதுகாப்பு நடவடிக்கை :

14.1. திருக்கோவில்களில் களவு தவிர்க்கப்படுகிறது. இவைகளுக்காக எல்காட் நிறுவனத்தினரால் தயாரிக்கப்படும் ''கொள்ளையர் எச்சரிக்கை மணி'' நிறுவ வேண்டும் என இவ்வலுவலக ந.க. 61655/89/ஜி2/நாள் 4—2—1990 குறிப்பில் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. களவுகளை எளிதில் கண்டுபிடிக்க உதவியாக திருக்கோவில் விக்கிரகங்கள், புகைப்படம் எடுத்தல், அவைகளுக்கான புகைப்படம் தொகுப்பினை பேணுதல் மற்றும் பழங்காலப் பொருட்கள் மற்றும் புதைப்பொருள் சட்டம் 1972—ன் படி விக்கிரகங்களை பதிவு செய்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில், விக்கிரகங்கள் பாதுகாப்பிற்காக பல கோவில்களுக்குச் சொந்தமான 345 விக்கிரகங்களை திருவாரூர் விக்கிரக பாதுகாப்பு மையத்தில் கொண்டு வரப்பட்டுள்ளன. தவிர, இதுவரை, 3,983 திருக்கோவில்கள் சம்பந்தப்பட்ட 21,505 விக்கிரகங்கள் புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளன. அம்மாதிரியே, 2,271 திருக்கோவில்கள் சம்பந்தப்பட்ட 22,551 விக்கிரகங்கள் 1972 ஆம் ஆண்டு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

15. அறநிலையங்களின் கணக்கு தணிக்கை :

15.1. நிர்வாக அறிக்கைக்குட்பட்ட காலத்தில், தணிக்கைப் பிரிவு: திருக்கோவில் கணக்குகளில் 8,37,75,159 தொகைக்கான ஆட்சேபணைகள் எழுப்பியுள்ளது. இவைகளில், 5,12,90,121 தொகைக்கான ஆட்சேபணைகள் முடிக்கப்பட்டு உள்ளன. இவைகள் விவரம் கீழ்வருமாறு :—

விவரம்.	பத்திகள்.	தொகை:- ரூ. பை.
ஆரம்ப இருப்பு	6,16,546	51,67,10,546.00
எழுப்பப்பட்டவை	64,120	8,36,75,159.00
மொத்தம் —	6,80,666	60,03,85,705.00

விவரம்.	பத்திகள்.	தொகை. ரூ. பை.
(1)	(2)	(3)
மொத்தம் முடிக்கப்பட்டவை —	6,80,666	60,03,85,705.00
முடிக்கப்பட்டவை	66,543	5,12,90,121.00
நிலுவை —	6,14,123	54,90,95,584.00

16. சமூக நலத் திட்டம் :

16.1. திருக்கோவில் நிதி சமூக நலத் திட்டங்களான பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், முதியோர் இல்லங்கள் மற்றும் அன்பு இல்லங்கள் போன்றவை நடத்தவும் செலவிடப்படுகிறது.

16.2. மாநிலத்தில், திருக்கோவில்கள் 25 அன்பு இல்லங்கள் நடத்தி வருகிறது. இதில், 1,030 மாணவ, மாணவிகள் உள்ளனர். இவைகள் தவிர, பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் திருக்கோவில்களால் நடத்தப்படும் விவரம் கீழ்வருமாறு :—

1	கல்லூரிகள்	6
2	மேல்நிலைப் பள்ளிகள்	16
3	உயர்நிலைப் பள்ளிகள்	9
4	மெட்ரிக் பள்ளிகள்	1
5	தொழில் நுட்பப் பள்ளிகள்	2
6	ஆரம்பப் பள்ளிகள்	6
7	நடுநிலைப் பள்ளிகள்	3
8	வேத ஆகம பாடசாலை	2
9	தேவார பாடசாலை	1
10	நாதஸ்வரம் மற்றும் தவில் பள்ளி	1
11	செவிடர், ஊமைப் பள்ளி	1
12	சித்த மருத்துவ மனை	18
13	முதியோர் இல்லம்	3
14	அருங்காட்சியகம்	1

16.3. திருக்கோவில் நிதி, ஏழை இந்து குடும்ப கல்யாணத்திற்காக நிதியுதவியாக கொடுக்கப்படுகிறது. ஆணையாளர் நி.மு. 79557/89. நாள் : 17—7—1989 குறிப்பில் இம்மாதிரி கல்யாணத்திற்கு, கல்யாணம் ஒன்றிற்கு ரூ. 1,250 செலவிட் திட்டம் ஏற்படுத்தி, அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் ரூ. 3.75 இலட்சம் செலவில் 268 திருமணங்கள் நடத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தினால், 198 தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் குடும்பமும், 78 பின்தங்கிய வகுப்பினர் குடும்பமும் பயனடைந்துள்ளது.

16.4. திருக்கோவில் சேவார்த்திகள் நன்மைக்காக ஆணையர் ந.க. 78683/80. நாள் : 27—7—1989 உத்தரவில் உச்சிக்கால பூஜை ஜயின்போது குழுமியுள்ள சேவார்த்திகளுக்கு பிரசாதம் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பெரிய திருக்கோவில்களில் குறைந்தது 200 சேவார்த்திகளுக்கு இம்மாதிரி பிரசாதம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

16.5. ஒவ்வொரு ஆண்டும் அண்ணா நினைவு நாள் '' பிப்ரவரி 3ஆம் தேதி '' மற்றும் சுதந்திர தினம் '' ஆகஸ்ட் 15 '' ஆகிய தேதிகளில் விசேஷ விருந்து ஜாதி, மதம், இனம் வேறுபாடின்றி நடத்தப்படுகிறது. இதன் விவரம் இதனடியில் கொடுக்கப்படுகிறது:—

		15-8-1989 '' சுதந்திர தின விழா ''. (2)	3-2-1990 '' அண்ணா நினைவு நாள்' (3)
1.	திருக்கோவில் எண்ணிக்கை	1,200	449
2.	தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் கலந்துகொண்ட எண்ணிக்கை.	2,94,444	1,34,468
3.	இதர வகுப்பினர் கலந்துகொண்ட எண்ணிக்கை.	2 47,770	2,24,928
4.	மொத்தம்	5,42,216	3,59,330
5.	மொத்தச் செலவு (ரூபாய் இலட்சத்தில்)	13.76	[illegible]

17. திருக்கோவில் :

17.1. இத்துறையால் '' திருக்கோயில் '' என்கிற மாதாந்திர இதழ் வெளியிடப் படுகிறது. இதன் விலை ரூ. 3 . இதற்காக 1,100 ஆயுள் சந்தாதாரர்கள் உள்ளனர். தவிர, நூலகங்கள், தனிப்பட்ட நபர்கள் இதற்கு சந்தா செலுத்துகின்றனர். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசுச் செலவில் ஒவ்வொரு மாதமும் இந்த இதழ் அனுப்பப்படுகிறது.

18. முடிவுரை :

18.1. பழமையான திருக்கோவில்கள் திருப்பணி, திருக்கோவில் வருமானத்தைப் பெருக்குதல், நல்ல முறையில் திருக்கோவில் பழக்க வழக்கத்திற்குட்பட்டு திருக்கோவில் மற்றும் அதன் சொத்துக்களை நிர்வகித்தல் போன்றவை இத்துறையின் முக்கிய பொறுப்பு. இத்துறை, திருக்கோயில் நிதிகள் மற்றும் சொத்துக்கள் தவறான வழியில் போவதைத் தடுத்து நிறுத்த மேலும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

ஆவணப் பதிவு மற்றும் ஸ்டாம்ப் ஆவணப் பதிவு.

(1) ஆவணப் பதிவு.

1. தலைமை முத்திரை வருவாய் கட்டுப்பாட்டு அதிகாரி :

பதிவுத் துறைத் தலைவர் அறிக்கை காலத்தில், முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அதிகாரியாக பணியாற்றினார். முதன்மை வருவாய்க் கட்டுப்பாட்டு அதிகாரியாக இக்காலத்தில் 125 மேல்முறையீடுகள் பெறப்பட்டு 76 வழக்குகளின் மீது இந்திய முத்திரைச் சட்டப்பிரிவு 56(1)-ன்படி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்திய முத்திரைச் சட்டப்பிரிவு 57(1)-ன்படி உயர்நீதிமன்றத்தில் 2 வழக்குகள் பற்றி ஆணை கோரப்பட்டது.

2. முத்திரைத் தீர்வை மூலம் வருவாய் :

உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் மிகுவரி உட்பட 1988–89இல் ரூ. 176.33 கோடியாக இருந்த பதிவான ஆவணங்கள்மீது செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வை அறிக்கை காலத்தில் 1989–90-ல் ரூ. 230.20 கோடியாக உயர்ந்துள்ளது.

இத்தொகையில் ரூ. 68.13 கோடி மிகுவரியாக வசூலிக்கப்பட்டது.

3. புள்ளி விவரங்கள் :

பதிவுகள்.—அறிக்கைக்கு முந்தையக் காலத்தில் 10,46,671–ல் இருந்த ஆவணங்களின் பதிவு எண்ணிக்கை அறிக்கை காலத்தில் 10,44,812 ஆக குறைந்துள்ளது.

ஆவண வகைகள் :

பதிவுச் சட்டத்தின்கீழ் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டிய ஆவணங்களின் எண்ணிக்கை 9,44,182-லிருந்து 9,21,256ஆகக் குறைந்துள்ளது. அறிக்கை காலத்தில் குறிப்பிடத்தக்க அல்லது புதுமையான ஆவணங்கள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை.

5. உயில் மற்றும் தத்துவ ஆவணங்கள் :

1. அறிக்கை காலத்தில் பதிவான உயில்களின் எண்ணிக்கை 28,818. கடந்த ஆண்டில் இவ்வெண்ணிக்கை 24,072 ஆக இருந்தது.

2. அறிக்கை காலத்தில் பதிவான தத்து ஆவணங்களின் எண்ணிக்கை 588. இது கடந்த ஆண்டில் 724ஆக இருந்தது.

3. அறிக்கை காலத்தில் 1,118 உயிர்கள் அடங்கிய உறைகள் பாதுகாப்புக்கு தாக்கல் செய்யப்பட்டன. கடந்த ஆண்டில் இவ்வெண்ணிக்கை 391 ஆகும்.

6. பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் சொத்து பதிப்பு :

1. இக்காலத்தில் பதிவான ஆவணங்களின் மொத்த சொத்து மதிப்பு ரூ. 2,784.97 கோடியாகும். இது சென்ற ஆண்டில் ரூ. 2,294.28 கோடி ஆக இருந்தது.

2. அறிக்கை காலத்தில் பதிவான ஒரு ஆவண சொத்தின் சராசரி மதிப்பு ரூ. 86,405.60-லிருந்து ரூ. 26,655.22 ஆகக் குறைந்துள்ளது.

3. அறிக்கை காலத்தில் பதிவான ஒரு ஆவணத்தின் சராசரி பதிவுக் கட்டணம் ரூ. 293.31 சென்ற ஆண்டில் ரூ. 262.55.

7. தேடுதல்களும் நகல்களும் :

1. அறிக்கை காலத்தில் வில்லங்கச் சான்றுக்கான மனுக்களின் எண்ணிக்கை 5,60,182. சென்ற ஆண்டில் 5,85,078.

2. அறிக்கை காலத்தில், தனித்தேடுதல் மனுக்களின் எண்ணிக்கை 1,64,368. சென்ற ஆண்டில் 1,49,481.

3. அறிக்கை காலத்தில் நகல் மனுக்களின் எண்ணிக்கை 1,50,883. சென்ற ஆண்டில் 1,56,768.

4. அறிக்கை காலத்தில், பலவகை தேடுதல் மனுக்களின் எண்ணிக்கை 30,062 சென்ற ஆண்டில் 15,526.

5. அறிக்கை காலத்தில் பலவகை நகல் மனுக்களின் எண்ணிக்கை 18,312 சென்ற ஆண்டில் 8,128.

8. கூட்டுறவுச் சங்கங்கள், நிலவள வங்கிகள் மற்றும் வணிக வங்கிகளுக்காக ஆற்றிய பணிகள்:

1. அறிக்கை காலத்தில், கூட்டுறவுச் சங்கங்களுக்கும், நிலவள வங்கிகளுக்கும், இத்துறை ஆற்றிய பணிகளுக்காக செய்யப்பட்ட தொகை ரூ. 44,06,785. சென்ற ஆண்டில் ஈடு செய்யப்பட்ட தொகை ரூ. 16.40 இலட்சங்கள்.

2. வணிக வங்கிகளுக்காக ஆற்றிய பணிக்கென ஈடு செய்யப்பட்ட தொகை ரூ. 12,048. சென்ற ஆண்டில் இத்தொகை ரூ. 14,418.50 ஆகும்.

9. வருமானம் :

1. அறிக்கை காலத்தில் பதிவுக் கட்டணமாக வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 2,550.7 இலட்சம். சென்ற ஆண்டில் இத்தொகை ரூ. 1,901 இலட்சமாக இருந்தது.

2. அறிக்கை காலத்தில் வசூலான தேடுதல் கட்டணம் ரூ. 215.85 இலட்சம். சென்ற ஆண்டில் வசூலானது ரூ. 180.78 இலட்சம் ஆகும்.

3. அறிக்கை காலத்தில் வசூலான நகல் கட்டணம் ரூ. 18.79 இலட்சம். சென்ற ஆண்டில் நகல் கட்டணம் ரூ. 16.62 இலட்சம் வசூலாகியது.

4. அறிக்கை காலத்தில் பதிவுச் சட்டப்படி இதர இனங்களுக்காக வசூலான தொகை ரூ. 258.99 இலட்சம். சென்ற ஆண்டில் இந்த இனங்களுக்கான ரூ. 184.48 இலட்சம் வசூல் செய்யப்பட்டது.

5. அறிக்கை ஆண்டில் இத்துறையில் இந்தியப் பதிவுச் சட்டத்தின்கீழ் மற்றும் மொத்த வருமானம் ரூ. 31.47 கோடி. சென்ற ஆண்டில் இந்திய பதிவுச் சட்டத்தின் கீழ் மட்டும் வசூல் ரூ. 22.81 கோடியாகும்.

10. செலவினம் :

அறிக்கை காலத்தில் இத்துறை சார்ந்த செலவு ரூ. 11.38 கோடியாகும். சென்ற ஆண்டில் 9.84 கோடியாக இருந்தது. இந்த உயர்வுக்கு காரணம் 5 ஆவது ஊதியக் குழுவின் படி. ஊதிய விகிதம் புதிய நிலையில் நிர்ணயிக்கப்பட்டது. அப்போதைக்கப்போது அகவிலைப்படி அதிகரிக்கப்பட்டது ஆகியவைகளே காரணமாகும்.

II. சீட்டு நிதி.

1982 ஆம் ஆண்டு சீட்டுநிதிகள் சட்டம் (மத்திய சட்டம் 40/82) இம் மாநிலத்தில் 18–4–1984 ஆம் நாள் முதல் செயலுக்கு வருகிறது. 1982 ஆம் ஆண்டு சீட்டுநிதிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 40/82) 90 (1) ஆம் பிரிவின்கீழ் தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் ரத்து செய்யப்பட்டது. இம் மாநிலத்தில் தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டுச் சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் செயல்பட்டு வருகின்ற அத்தகைய சீட்டுநிதி நிறுவனங்களுக்குப் பொருந்துகின்ற அதே முறையில் இந்தச் சட்டம் செயல்படத் தொடங்கிய நாளன்று செயல்படுகின்ற சீட்டு நிதி நிறுவனங்களுக்கு தொடர்ந்து பொருந்த 90 (2) ஆம் பிரிவு வகை செய்கிறது.

2. மூலச்சட்டம் (24/1961) 14/1975 ஆம் சட்டத்தினால் திருத்தி அமைக்கப் பட்டது. அதன்படி இச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் கருவூலங்கள் தொகையை வைப்பீடு செய்வதன் மூலம் முதலாள் ஒவ்வொரு பிணையத் தொகையையும் படிநிலை ஏற்றமுறை விதத்தின்கீழ் செலுத்தும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். மேற் சொன்ன திருத்தங்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை சென்னை உயர் நீதிமன்றம் 8–1–1976 ஆம் நாளன்று தள்ளுபடி செய்தது. தீர்ப்புக்கெதிராக 5 முதலாட்கள் புதுடில்லி உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடுகளைத் தாக்கல் செய்து தடையாணையைப் பெற்றுள்ளனர். வேறு சில முதலாட்களும் சென்னை, உயர் நீதி மன்றத்தில் ரிட் மனுக்களைத் தாக்கல் செய்து இந்த விதித்துறைகளுக்கு எதிராக நிபந்தனை தடையாணையைப் பெற்றுள்ளனர்.

கட்டணத்தில் ஏற்பட்ட உயர்வு :

அரசு வணிகவரிகள் அற நிலையத்துறையின் 23–9–1981 ஆம் நாளிட்ட 1075 ஆம் ஆணையில் 14/1975 ஆம் சட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய கட்டணத்தைத் திருத்தியமைத்தது. திருத்தி அமைக்கப்பட்ட கட்டணத்தால் பாதிக்கப்பட்ட முதலாட்கள் ரிட் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். 1.8 ஆம் பிரிவின் செய்யப் பட்ட திருத்தமும், தமிழ்நாடு 1964 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் விதிகளின் இணைப்பு II-ல் கட்டண அட்டவணைக்கு 8ஏ பிரிவைச் சேர்த்ததும் செல்லாதனவாகும் என்று 20–3–1985 ஆம் நாளன்று சென்னை உயர்நீதி மன்றம், சென்னை 9471/82 ஆம் ரிட் மனுவிலும், 44 வழக்குகள் குறித்த ரிட் மனுக்களிலும் தீர்ப்பளித்தது. சென்னை உயர்நீதி மன்றத்தின் இந்த ஆணைகளுக்கு எதிராக, புதுடில்லி இந்திய உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனு ஒன்றைத் தாக்கல் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

4. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் ஆகியவற்றின்கீழ் செய்யப்பட்ட பணி பற்றி விவரங்கள் 1 முதல் 6 வரையிலான அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:—

அட்டவனை 1.

1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பணி குறித்த விவர அறிக்கை.

	1989–90.
1. சீட்டுகள்:	
இந்த ஆண்டு தொடக்கத்தில் செயல்பட்டு வந்த சீட்டு நிறுவனங்களின் எண்ணிக்கை.	799
இந்த ஆண்டில் செயல்படத் தொடங்கியுள்ள சீட்டுகளின் எண்ணிக்கை.	
இந்த ஆண்டில் ரத்து செய்யப்பட்ட அல்லது முடிவு செய்யப் பட்ட சீட்டு நிறுவனங்களின் எண்ணிக்கை.	233
இந்த ஆண்டு இறுதியில் செயல்பட்டு வந்த சீட்டு நிறுவனங்கள்.	566
இந்த ஆண்டு இறுதியில் இயங்கி வந்த அனைத்து சீட்டு நிறுவனங்களின் மொத்த சீட்டுத் தொகை.	ரூ. 79,55,517.50
இந்த ஆண்டின் இறுதியில் சீட்டு பதிவாளரிடம் பிணையமாக வைப்பீடு செய்யப்பட்ட மொத்த தொகை.	ரூ. 84,71,140.50

2. துணை விதிகள் :

	1989–90
(1) இந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட துணை விதிகளின் எண்ணிக்கை.	
(2) பதிவு செய்யப்பட்ட துணை விதிகளில் செய்யப்பட்ட திருத்தங்களின் எண்ணிக்கை.	
(3) இந்த ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட சீட்டு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை.	
(4) இந்த ஆண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிணையத் தொகைகள் செலுத்துவதற்காக வரப் பெற்ற மனுக்களின் எண்ணிக்கை.	
(5) இந்த ஆண்டில் வியாபாரம் தொடங்குவதற்கு வழங்கப் பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை.	--
(6) தாக்கல் செய்யப்பட்ட சட்டப் படிப்புக்கான ஏனைய ஆவணங்களின் எண்ணிக்கை.	439

3. ஆய்வு :

(1) முதலாள் சீட்டுப் புத்தகங்கள் எத்தனை முறை ஆய்வு செய்யப்பட்டது என்பதன் எண்ணிக்கை.	178
(2) தணிக்கையிடப்பட்ட சீட்டு கணக்குகளின் எண்ணிக்கை (பிரிவு 51).	24

4. தணிக்கை :

(1) 30 ஆம் விதியின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட தணிக்கையிடப்பட்டு ஐந்தொகை கணக்குகளின் எண்ணிக்கை.	15
(2) துணை விதி (1) தொடர்பாக சீட்டு தணிக்கையாளர் மேலே (அ)-வில் குறிப்பிட்ட தணிக்கையிடப்பட்ட ஐந்தொகை கணக்குகளின் தணிக்கையிடப்பட்டவைகளின் எண்ணிக்கை.	2
(3) துணைவிதி தொடர்பாக மேலே (அ)-வில் குறிப்பிடப்பட்ட தணிக்கையிடப்பட்ட ஐந்தொகை கணக்குகளின் ஏனைய தணிக்கையாளர்களால் தணிக்கையிடப்பட்டவைகளின் எண்ணிக்கை.	1
(4) 59 ஆவது பிரிவின்கீழ் பதிவுகள் செய்யப்பட்ட தேர்வுகளின் எண்ணிக்கை.	
(5) நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்ட புகார்களின் எண்ணிக்கை.	
(6) (1) சோதனையிடப்பட்ட இடங்களின் எண்ணிக்கை (2) வழங்கப்பட்ட நகல்களின் எண்ணிக்கை	

அட்டவணை 2.

கட்டணங்கள்.	1989–90 (தமிழ்நாடு சீட்டு நிதிச் சட்டம்.)
(1)	(2)
	ரூ.
(1) துணை விதிகள் மற்றும் துணை விதிகளுக்கான திருத்தங்கள் பதிவு செய்வதற்கு.	25.00
(2) இதர ஆவணங்களைத் தாக்கல் செய்வதற்கு	2,591.00
(3) சீட்டு புத்தகங்கள் (பிரிவு 3) பதிவுருக்கள் [பிரிவு 5 (4)] ஆகியவற்றை ஆய்வு செய்வதற்கு.	--

தணிக்கைக்கு :

(1) ஐந்தொகை கணக்கு	..
(2) கணக்குகள் ..	--

தேடுவதற்கு :

(1) தேடுவதற்கான	
(2) நகல்களுக்கு	

அட்டவணை 3.

1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு சீட்டுநிதி, சீட்டுநிதிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4019/82)-ன்கீழ் இந்த ஆண்டிற்குரிய வருவாய் இனங்கள், செலவினம் மற்றும் நிகர வருவாய்.)

	1989–90.
	ரூ.
(1)1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு சீட்டுநிதிகள் சட்டத்தின்கீழ் மொத்த வரவுகள்.	2,916.00
(2) 1982 ஆம் ஆண்டு சீட்டுநிதிகள் சட்டத்தின்கீழ் மொத்த வரவுகள்.	41,84,029.00
(3) 1982 ஆம் ஆண்டு சீட்டுநிதிகள் சட்டத்தின்கீழ் மொத்த செலவு.	
(4) 1982 ஆம் ஆண்டு சீட்டுநிதிகள் சட்டத்தின்கீழ் மொத்த செலவு.	30,25,185.00
மொத்த வரவுகள் (1+2)	41,86,945.00
மொத்த செலவு (3+4)	30,25,186.00
நிகர வருவாய்	11,61,780.00

அட்டவணை 4.

1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 40/1982),

	1989–90.
1. சீட்டுகள் :	
(1) இந்த ஆண்டில் முன் அனுமதி வழங்கப்பட்டவைகளின் எண்ணிக்கை.	12,088
(2) இந்த ஆண்டில் இயங்கி வரும் சீட்டு நிறுவனங்களின் மொத்த சீட்டுத் தொகை.	48,28,39,350
(3) சீட்டுப் பதிவாளரிடம் நிறுத்தி வைக்கப்பட்ட (குறித்த கால வைப்பீட்டுத் தொகை பிணையத் தொகையின் மொத்த மதிப்பு)	49,39,47,100
(4) அரசுப் பிணையங்கள்	3,86,000
(5) இயங்காச் சொத்துக்கள்	88,05,000
2. ஒப்பந்தங்கள் :	
(1) இந்த ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட ஒப்பந்தங்களின் எண்ணிக்கை.	12,191
(2) செய்யப்பட்ட திருத்தங்களின் எண்ணிக்கை	207
(3) வழங்கப்பட்ட தொடக்கச் சான்றிதழ்களின் எண்ணிக்கை ...	8,971
(4) தற்போது செயல்பட்டு வரும் சீட்டு நிதிகளின் எண்ணிக்கை	30,938
(5) இறுதி செய்யப்பட்ட சீட்டுகளின் எண்ணிக்கை	8,634
(6) இந்த ஆண்டு இறுதியில் செயல்பட்டுவரும் சீட்டுக்களின் எண்ணிக்கை.	23,003
3. பிணையங்கள் :	
(1) விடுவிக்கப்பட்ட பிணையங்கள்	9,37
(2) குறித்த கால வைப்பீட்டுத் தொகையில் வைக்கப்பட்டுள்ள பிணையத் தொகையின் மொத்த மதிப்பு.	64,35,48,950
(3) அரசு பிணையங்கள்	6,87,00
(4) இயங்காச் சொத்துக்கள்	4,79,09 98

அட்டவனை 5.

(வரவினங்கள்,)

1982 ஆம் ஆண்டு சிட்டுநிதிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 49/1982-ன் கீழ்)

கட்டணங்கள்:

	1989–90.
(1) கட்டணவித விவர அட்டவணையின் 1ஆம் பிரிவின்கீழ் சீட்டைத் தொடங்குவதற்கு முன் அனுமதி கட்டணம்.	ரூ. 27,58,59
(2) கட்டணவித விவர அட்டவணையின் 1ஆம் பிரிவின்கீழ் சீட்டு ஒப்பந்தத்தை தாக்கல் செய்வதற்கான கட்டணம்	73,092
(3) கட்டணவித விவர அட்டவணைகள் பற்றிய 3ஆம் பிரிவின் வருமான விவர அறிக்கையைத் தாக்கல் செய்வதற் காகவும் சான்றிதழ்கள் வழங்குவதற்காகவும் கட்டணம்.	31,314
(4) நடவடிக்கைக் குறிப்பின் நகல் இணைப்பு 2-ல் காணப்படும் கட்டணவித விவர அட்டவணையின் 5ஆம் பிரிவின்கீழ் ஏனைய ஆவணங்கள் ஆகியவற்றைத் தாக்கல் செய்வதற்கான கட்டணம்.	5,17,901
(5) (அ) கட்டணவித விவர அட்டவணையின் 6ஆம் பிரிவின்கீழ் தணிக்கையிடப்பட்ட ஐந்தொகை கணக்குகளைத் தாக்கல் செய்வதற்கான கட்டணம்.	1,58,256
(ஆ) கட்டணவித விவர அட்டவணையின் 8ஆம் பிரிவின்கீழ் சீட்டுநிதி தணிக்கையாளர் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கான கட்டணம்.	2,34,396
(இ) கட்டணவித விவர அட்டவணையின் 10 (அ) (ஆ) பிரிவின்கீழ் மனுச் செய்ய.	86,376
(6) கட்டணவித விவர அட்டவணையின் 18ஆம் பிரிவின்கீழ் அளிக்கப்படும் சீட்டுநிதியுடன் தொடர்புடைய பதிவுருக்களை நகல் எடுக்க.	93,781
(7) கட்டணவித விவர அட்டவணையின் 14ஆம் பிரிவின்கீழ் இச் சட்டத்தின் நடவடிக்கைகள் எதனையும் ஒத்திவைக்க.	6,725
(8) பல்வகைச் செலவு	2,23,695
	41,84,029

அட்டவனை 6.

தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு சிட்டுநிதிச் சட்டம் (மத்தியச் சட்டம் 40-1982) சிட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் இந்த ஆண்டிற்கான மொத்த வரவு—செலவு, நிகர வருவாய் வருமாறு:—

	1989–90.
	ரூ.
(1) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சிட்டுநிதிகள் சட்டத்தின்கீழ் மொத்த வரவு.	2,916.00
(2) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு சிட்டுநிதிகள் சட்டத்தின்கீழ் மொத்த வரவு.	41,84,029.00
மொத்தம்	41,86,945.00
(3) தமிழ்நாடு 1961—ஆம் ஆண்டு சிட்டுநிதிகள் சட்டத்தின்கீழ் மொத்தச் செலவு.	..
(4) தமிழ்நாடு 1982—ஆம் ஆண்டு சிட்டுநிதிகள் சட்டத்தின்கீழ் மொத்த வரவு.	30,25,185.00
மொத்த வரவுகள் [(1)+(2)] ..	41,86,945.00
மொத்த செலவுகள் [(3)+(4)] ..	30,25,185.00
	11,61,760.00

தமிழ்நாடு சீட்டு நிதி நிறுவனம் :

(1) இது தமிழ்நாடு அரசு பொறுப்பேற்கும் நிறுவனம். இது 11-4-1984-ஆம் நாளிலிருந்து செயல்படத் தொடங்கியது. இது 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டது. இதன் பதிவு எண் 70586-1984, சென்னை தமிழ்நாடு நிறுவனத்தின் சீட்டுநிதிக் கழகத்திற்கு வணிக வரிகள்-மைய அறநிலையத் துறையின் 11-5-1984-ஆம் நாளிட்ட 411 அரசாணையில் கண்டுள்ள 1961-ஆம் ஆண்டு சீட்டுநிதிகள் சட்டத்தின் 3-ஆம் பிரிவைத் தவிர ஏனையவற்றின் விதித் துறைகளிலிருந்து தமிழ்நாடு அரசு விலக்களித்தது. தமிழ்நாடு சீட்டுநிதி கழகத்தை மூடிவிடுமாறு வணிகவரிகள் அறநிலையத் துறை 11-5-1989-ஆம் நாளிட்ட அதன் 25033-ஜி 89-1 ஆம் எண் கடிதத்தில் ஆணை பிறப்பித்துள்ளது.

(2) 1982-ஆம் ஆண்டு சீட்டுநிதிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 40/1982)கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள்.—

(அ) 1989-90-ஆம் ஆண்டில் (1) பிரிவின்கீழ் வழங்கப்பட்ட முன்அனுமதிகள் 12,088.

(ஆ) 1989-90-ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட சீட்டு ஒப்பந்தங்கள்—9,696.

(இ) 1989-90-ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட சட்டு ஒப்பந்தங்கள் குறித்த திருத்தங்களின் எண்ணிக்கை 207.

(ஈ) 1989-90-ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட சீட்டுநிதி தொடங்கப்பட்டது தொடர்பாக வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை—8,634.

(உ) 1989-90-ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற்று வந்த சீட்டுகளின் எண்ணிக்கை— 23,003.

1. சீட்டு தொகையின் மதிப்பும் பிணையமும் :

(அ) 1989-90-ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற்று வந்த சீட்டுகளின் மொத்த மதிப்பு ரூபாய் 48,28,39,350 ஆகும்.

(ஆ) இந்த ஆண்டின் இறுதியில் சீட்டுநிதி பதிவாளரிடம் இருந்து பிணையத் தொகையின் மதிப்பு.—

	1989-90. ரூபாய்.
(1) குறித்தகால வைப்புத் தொகை ..	49,39,47 100
(2) அரசு பிணையத் தொகைகள் ..	3,86,000
(3) அசையாச் சொத்துக்கள்	88 05,000

(இ) 1989-90 ஆம்-ஆண்டு தொடக்கத்தில் சீட்டுகள் வகையில் இருந்து சீட்டுத் தொகைகளின் மொத்த மதிப்பு ரூபாய் 48,28,39,350.

(ஈ) 1989-90-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சீட்டுக்களுக்காகப் பெறப்பட்ட பிணையத் தொகைகளின் மொத்த மதிப்பு ரூபாய் 49,37,47,100.

4. தணிக்கை செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட ஐந்தொகை கணக்குகள் —

1988-89-ஆம் ஆண்டு ..	..	1,278
1989-90-ஆம் ஆண்டு ..	..	12,625

பட்டயக் கணக்கர்களால் தணிக்கையெடுக்கப்பட்ட ஐந்தொகைக் கணக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

சட்ட நடவடிக்கைகளுக்கு உட்பட்டவை.:

	1989-90.
இக் கால அளவில் அதிகாரபூர்வமற்றவைகளை கண்டுபிடிக்கப் பட்ட இனங்கள் தொடர்பாக மேற்கொண்ட வழக்குகள்.	279
நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் ..	279
தீர்ப்பு வழங்கப்பட்ட இனங்கள்	175

தண்டனை வழங்கப்பட்டவை :

சிறைத்தண்டனை வழங்கப்பட்டோர் ..	இல்லை
அபராதம் விதிக்கப்பட்டோர் .. —	8
விடுதலை வழங்கப்பட்டோர்	இல்லை.
81 ஆம் பிரிவின் கீழ் இணக்கம் செய்யப்பட்டு ஒருங்கிணைக்கப் பட்ட வழக்குகள்.	816
இணக்கக் கூட்டுக் கட்டணம் வசூலிக்கப்பட்ட இனங்கள்	ரூ 28,898
1982-ஆம் ஆண்டு சீட்டுநிதிகள் சட்டத்தின் கீழ் மீறப்பட்ட, ஏனைய விதித் துறைகள் தொடர்பாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள்.	இல்லை.
ஆண்டின் இறுதியில் நிலுவையாக இருந்த வழக்குகள்	இல்லை.

9. நடுவர் மன்ற வழக்குகள்

வரப்பெற்ற நடுவர் மன்ற வழக்குகள் ..	3,053
தீர்ப்பு வழங்கப்பட்டவை	1,995
தீர்ப்பு வழங்கப்படாமலுள்ளவை	1,008

61. ஆம் பிரிவின் கீழ் வசூலிக்கப்பட்ட கூட்டுக் கட்டணம் :

10. வரவும் செலவும் :	ரூபாய். 1989–90
மொத்த வரவு	41,84,029.00
மொத்த செலவு	30,25,185.00
	11,58,844.00

முத்திரைத்தாள் (அஞ்சல் சாராதவைகள்).

பொது :— முத்திரைத்தாள் நிர்வாகம் என்பது கீழ்க்கண்ட இருபெரும் பணிகள் அடங்கியதாகும்:—

1. முத்திரைத்தாள் வருவாய்க் கட்டுப்பாடு;
2. முத்திரைத்தாள் வரவு மற்றும் விநியோகம்.

முத்திரைத்தாள் வருவாய்க் கட்டுப்பாடு, நிதித்துறை விஸ்லைகள் மற்றும் தாள்களைப் பொறுத்தவரை அரசு (உள்துறை)யிலும் நீதிசாரா முத்திரைத் தாள்களைப் பொறுத்தவரை பதிவுத் துறைத் தலைவர் அவர்களாலும் மேற்கொள்ளப்படுகிறது.

முத்திரைத்தாள் விநியோகம், கருவூலக் கணக்குத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் முத்திரைத் தாள் கண்காணிப்பாளரால் மேற்கொள்ளப்படுகிறது. முத்திரைத் தாள்கள் நாசிக் பாதுகாப்பு அச்சகத்திலிருந்தும், ஐதராபாத் பாதுகாப்பு அச்சகத்திலிருந்தும், பெறப்பட்டு மாவட்ட கருவூலங்களிலும் (அகக்கிடங்கு), சார்க் கருவூலங்களிலும் (துணைக் கிடங்கு) இருப்பு வைக்கப்படுகின்றன.

இவ்விநியோகம் பற்றிய முத்திரைத் தாள் கண்காணிப்பாளரின் பணிகள் பின் வருமாறு :—

(1) தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டக் கருவூலங்களுக்கும் தேவையான அனைத்து முத்திரைத்தாள் வகைகளையும், நீதிசாரா முத்திரைத்தாட்களில் உயர்ந்த மதிப்பு இனங்களுக்காக தேவைக் கோரிக்கையினை நாசிக் பாதுகாப்பு அச்சகத்திற்கு நீதிசாரா முத்திரைத்தாட்களின் குறைந்த மதிப்பு இனங்களுக்கான தேவைக்கோரிக் கையினை ஐதராபாத் பாதுகாப்பு அச்சகத்திற்கும் அனுப்புதல்.

(2) தமிழ்நாட்டிலுள்ள எல்லா மாவட்டக் கருவூலங்களுக்கும் நாசிக் மற்றும் ஐதராபாத் பாதுகாப்பு, அச்சகங்களிலிருந்து வரும் முத்திரைத்தாள் வரவைக் கண் காணித்தல்.

(3) நாசிக் மற்றும் ஐதராபாத் பாதுகாப்பு அச்சகங்களில் இருந்து தயார் செய் யப்பட்டு, தமிழ்நாடு மாநிலத்திற்கு விநியோகம் செய்யப்படும் முத்திரைத்தாள்களுக் கான உற்பத்திச் செலவை, சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அச்சகங்களுக்கு வழங்குதல்.

(4) '' 2030 '' மற்றும் *'' 0030 ''* என்ற தலைப்புகளின் மதிப்பீடுகள், திருத்திய மதிப்பீடுகள் இறுதி மற்ற மதிப்பீடுகள் மற்றும் இறுதிச் சரண் கருத்துருக்கள் அனுப்புதல்.

(5) வரவு செலவுக்கான கணக்குகளை மாநிலக் கணக்காய்வுத் தலைமையகத்தி லுள்ள ஏடுகளை ஒப்பிட்டுச் சான்றிதழ் வழங்குதல்.

(6) இருப்பு விவரங்களை கூர்ந்தாய்வு செய்து தேவைக்கேற்ப மாவட்டங் களுக்கிடையே அகமாற்றங்கள் செய்தல் :

மேற்சொன்ன பணிகள் நீங்கலாக, இந்திய முத்திரைச் சட்டம் விதி எண். 9(1) ன் படி முத்திரைத்தாள் கண்காணிப்பாளரின் கீழ் பணிபுரியும் உதவி முத்திரைத்தாள் கண் காணிப்பாளர் '' முறையான அலுவலராக '' நியமிக்கப்பட்டுள்ளார். இதன்படி அவர் சிறப்புஒட்டு வில்லைகளை இருப்பு வைத்து, பொது மக்களால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் சிறப்பு ஒட்டு வில்லைகள் ஒட்டி முத்திரையிட்டுத் தருவார்.

செயல்முறைத் திட்டம் :— பாதுகாப்பு அச்சகத்தின் பொது மேலாளர், முத்திரைத் தாள் அச்சுக்குத் தேவையான மூலப் பொருட்களை காலத்தே சேகரிக்கும் பொருட்டு, ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 15ஆம் தேதி முந்தைய மூன்று ஆண்டுகளில் விற் பனை, அதன் சராசரி, நடப்பு ஆண்டுத் தேவை, கையிருப்பு, வரும் ஆண்டுத் தேவை ஆகிய விவரங்கள் அடங்கிய முன்னறி மதிப்பீட்டு அறிக்கை அனுப்பப்படுகிறது. மேலும், ஒவ்வொரு காலாண்டிற்கும் அனைத்து வகை முத்திரைத்தாள்களுக்கும் தேவைக் கோரிக்கை கீழ்க்காணும் தேதிகளிலும் நாசிக் மற்றும் ஐதராபாத் அச்சகங் களுக்கு அனுப்பப்படுகிறது.

காலாண்டு :— நாசிக் மற்றும் ஐதராபாத் அச்சகத்திற்கு அனுப்பும் நாள்.

(2) நடப்பு ஆண்டு ஏப்ரல் முதல் ஜூன் முடிய காலாண்டிற்கான தேவைப் பட்டியல் இந்திய ஆண்டின் டிசம்பர் மாதம் 15ஆம் தேதி அனுப்பப்படுகிறது.

(3) நடப்பு ஆண்டு ஜூலை முதல் செப்டம்பர் முடிய காலாண்டிற்கான தேவைப் பட்டியல் நடப்பு ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் தேதி அனுப்பப்படுகிறது.

(4) நடப்பு ஆண்டு அக்டோபர் முதல் டிசம்பர் முடிய காலாண்டிற்கான தேவைப் பட்டியல் நடப்பு ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் தேதி அனுப்பப்படுகிறது.

(5) நடப்பு ஆண்டு ஜனவரி முதல் மார்ச் முடிய காலாண்டிற்கான தேவைப் பட்டியல் முந்தைய ஆண்டு செப்டம்பர் மாதம் 15ஆம் தேதி அனுப்பப்படுகிறது.

இத்தேவைக் கோரிக்கை அனுப்பும்போது எல்லா மாவட்டக் கருவூலங்களிலும் சார்நிலைக் கருவூலங்களிலும் போதுமான இருப்பு உள்ளதா என்பதை ஆய்வு செய்யப் படுகிறது. இதற்கான விலைப்பட்டியல்கள் வரப்பெற்று மாவட்டக் கருவூலங்களின் சான்றிதழின் பேரில் நாசிக் மற்றும் ஐதராபாத் அச்சகங்களுக்கு உற்பத்திச் செலவிற்கான பணம் உதவி முத்திரைத்தாள் கண்காணிப்பாளரால் வழங்கப்படுகிறது.

முத்திரைத்தாள் விநியோகம் :— பொது மக்களுக்கு கீழ்க்காணும் முறைகளில் முத் திரைத்தாள் விநியோகம் செய்யப்படுகிறது.

(1) பதிவுத்துறை அலுவலர்களால், உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனை யாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் விற்பனை உச்சவரம்பு ஒரு தனி நபருக்கு ஒரு நாளில் ரூ. 6,000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் முத்திரைத்தாள்களைச் சார்கருவூலங்களிலிருந்து

பெறுகின்றனர். நீதிசாரா முத்திரைத்தாள் மற்றும் நீதித் துறை முத்திரைத் தாள் வகைகளில் ரூ. 2,000 மதிப்புள்ள இனங்கள் வரை கழிவுத் தொகையுடனும் அதற்கு மேற்பட்ட மதிப்புள்ள ரூ. 3,000, ரூ. 5,000 வரை முத்திரைத் தாள்களுக்கு கழிவுத் தொகை இல்லாமலும் முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் முத்திரைத்தாள் களைப் பெற்று பொது மக்களுக்கு விற்பனை செய்கின்றனர்.

(2) 1987–க்கு முன்பு அனைத்து மாவட்டக் கருவூலங்களுக்கும், நாசிக் அச்சகத் தார் நேரடியாக முத்திரைத்தாள்களை அனுப்பி வந்தனர். இவ்வாறு அனைத்து கரு வூலங்களுக்கும் நேரடியாக அனுப்புவது நாசிக் அச்சகத்திற்கு கடினமாக இருந்த காரணத்தால் அவர்கள் இத்துறையினரை மாநிலத்திலுள்ள சில மாவட்டக் கருவூலங்களை மையங்களாக பணிபுரியுமாறு குறிப்பிடக் கேட்டனர். இதன்படி அந்த மாவட்ட கரு வூல மையங்களுக்கு நாசிக் அச்சகத்தால் தங்கள் பணியாளர்கள் மற்றும் பாதுகாப்பு பணியாளர்கள் மூலம் முத்திரைகளை அனுப்பி வந்தனர். இந்த முறை ஜூன் 1987 முதல் ஜூலை 1988 வரையில் பின்பற்றப்பட்டு வந்தது. பின்னர் தனது பணியாட் களையும் பாதுகாப்பு பணியாளர்களையும் அனுப்புவது தொடர்பாக இடர்ப்பாடுகள் ஏற்பட்டதால் இந்த மாநில அரசுத் துறையிலிருந்து பணியாளர்களை, பாதுகாப்பு காவலர்கள் உட்பட, நாசிக்கிற்கு அனுப்பி முத்திரைகளை பெறுமாறு தெரிவித்தனர். இதற்காக அவர்கள் முத்திரைத்தாட்களை இரயில்வே தனிப்பெட்டி களில் (வேகன் லோட்) இணைத்து அனுப்புவதற்கு ஒப்புக் கொண்டனர். தற்பொழுது அரசும் இந்த கருத்துருவை ஏற்றுக்கொண்டுள்ளது. இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரும் வரையிலான காலத்தில் நாசிக் அச்சகத்தார் நேரடியாக மாவட்டக் கருவூலங் களுக்கு குறைந்த அளவில் முத்திரைகளை அனுப்பி வந்தனர். இதனால் நீதிசாரா முத்திரைத்தாட்களுக்கு குறிப்பாக ரூ. 10 முதல் ரூ. 1,000 வரையிலான இனங்களுக்கு ரூ. 750 நீங்கலாகத் தட்டுப்பாடு ஏற்பட்டது.

நீதிசார முத்திரைத்தாட்களில் குறைந்த மதிப்பு இனங்களான ரூ. 1 முதல் ரூ. 5 வரையிலானவை ஐதராபாத்திலுள்ள இந்திய பாதுகாப்பு அச்சகத்தில் அச்சிடப்பட்டு நேரடியாக கருவூல அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. எனவே, இந்த இனங்களில் அனைத்து மாவட்டச் கருவூலங்களிலும் போதுமான அளவு இருப்பு உள்ளது. நீதிசாரா முத்திரைத்தாட்களின் உயர்ந்த மதிப்பு இனங்களிலும் மற்றும் எல்லா வகை முத்திரைகளிலும் தமிழகத்தின் எல்லா மாவட்டக் கருவூலங்களிலும் போதிய இருப்பு பெற கருவூலக் கணக்குத் துறையால் எல்லா துரித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

(3) மேலும் அரசு இந்திய முத்திரைச் சட்டம் விதி (9) (1)–ன்கீழ் எல்லா சார் பதிவாளர்களையும் முறையான அலுவலர்களால் நியமித்து ரூ. 2,500 வரை சிறப்பு ஒட்டு வில்லைகள் விற்பனை செய்ய அதிகாரம் அளித்துள்ளது.

(4) நாசிக்கிலிருந்து டெறப்படும் முத்திரைத்தாள் வரவு, மாவட்டக் கருவூலங் களிலுள்ள முத்திரைத்தாள் இருப்பு ஆகியவை பதிவுத் துவறத் தலைவர் அவர்களால் மாதாந்திரக் கட்டங்களில், ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

(5) நீதிசாரா முத்திரைத் தாட்களில் உயர்வீத மதிப்பு இனங்கள் முத்திரைத் தாள் விற்பனையாளர்களிடம் கிடைக்காததால் அனைத்து சார்நிலைக் கருவூல அலு வலர்க்கும் பதவி வழி விற்பனையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் உயர் மதிப்புள்ள தாள்களை பொது மக்களுக்கு நேரடியாக விற்பனை செய்கின்றனர்.

(6) சார்பதிவாளர்களுக்கு ரூ. 5,000 வரை பணமாகவே முத்திரைத் தீர்வை யாக வருலக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

(7) வட்டாட்சியர்கள் நீதிமன்ற வில்லைகளின் ரூ. 10,000 மதிப்பிற்கும் சார் பதிவாளர்கள் நீதிசாரா முத்திரைத்தாள்கள் விற்பனை செய்யும் வரம்பு அரசு ஆணை எண். 1420, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை நாள் 31—12—1987–ன் படி கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது.

பதிவாளர் அலுவலகம்.	உயர்ந்தபட்ச விற்பனை வரம்பு.
(1)	(2)
	ரூபாய்.
1. சார்பதிவாளர் அலுவலகங்கள்	20,000
2. உயர்நிலை சார்பதிவாளர் அலுவலகங்கள்	30,000
3. மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள்	30,000
4. உயர்நிலை மாவட்டப் பதிவாளர் அலுவலகம்	50,000

சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு ரூ. 2,500 வரை சிறப்பு ஒட்டு வில்லைகள் அவசரத் தேவைகளுக்காக வழங்கப்படுகிறது.

(8) சென்னை நகரத்தில் உயர்நீதிமன்றத்திலும், கோட்டை–தண்டையார்ப் பேட்டை தாலுகா சார்நிலை கருவூலத்திலும் அரசு ஊதியம் பெறும் முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் வட்டாட்சியரால் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்போது இப்பதவிகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

(9) 1925ஆம் ஆண்டு இந்திய முத்திரை விதிகள் 9(1) விதியின்படி ஆவணங்களில் முத்திரை வில்லைகள் ஒட்டவும் முத்திரை பொறுத்தவும் '' தகுதி அலுவலர்கள் '' நியமிக்கப்பட்டுள்ளனர். எல்லா கருவூல அலுவலர்களும் சார்நிலைக் கருவூல அலுவலர்களும் உதவி முத்திரைத்தாள் கண்காணிப்பாளரும், எல்லா சார்பதிவாளர்களும் இத்தகைய '' தகுதி அலுவலர் '' ஆவர்.

(10) உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்களுக்கு முத்திரைத்தாட்கள் விற்பனை செய்யும்போது முத்திரைத்தாள் விதித் தொகுப்பில் உள்ள விதிகளின்படி கழிவுத் தொகை அனுமதிக்கப்படுகிறது.

(11) முத்திரைத் தீர்வையைக் குறைக்கும் நோக்கோடு, சொத்து மதிப்பீடுகளை குறைத்துக் காட்டுவதைத் தவிர்க்க 11 மாவட்டாட்சியர்கள் அலுவலகங்களுக்கு தனி அலுவலர்களை அரசு நியமித்துள்ளது.

முத்திரைத்தாள் வருவாய்க் கணக்குகள் :

முத்திரைத் தீர்வை, ஆவணத்தைத் தயாரிக்கப்பயன்படுத்தப்படும் தாள்கள் அல்லது வில்லைகளின் வாயிலாக வசூலிக்கப்படுகிறது. அதோடு, சில சமயங்களில் இத்தீர்வை முத்திரைத்தாள் பற்றாக்குறை ஏற்படும்போது சார்பதிவுத் துறை அலுவலர்களால் ரூ. 5,000 வரை பணமாக வசூலிக்கப்படுகின்றது. சொத்து மதிப்பைக் குறைத்து காட்டியமைக்காக ஆவணங்கள் கைப்பற்றப்பட்டால் அத்தகைய ஆவணங்களின் பேரில் செலுத்த வேண்டிய மிகைத் தீர்வை பணமாகவே மாவட்டாட்சியர்களால் வசூலிக்கப்படும். இவ்வருவாய்கள், மாதத்திற்கான தொகுப்பு வருவாய் அறிக்கைகளைத் தயாரிக்கும் பொருட்டு, உதவி முத்திரைத்தாள் கண்காணிப்பாளருக்குத் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. அத்தொகுப்பு அறிக்கைகள் மாவட்டக் கருவூலத்திலும், மற்றும் மாநிலக் கணக்காய்வுத் தலைவர் அலுவலர் அலுவலகங்களிலும் ஒத்திகை செய்யப்படுகின்றன.

நாகைக்கிலிருந்து முழு அளவில் எல்லா முத்திரை வகைகளிலும் சரக்கு பெற எல்லா துரித முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முத்திரைத்தாள் மற்றும் வில்லைகள் உபரியாக உள்ள மாவட்டக் கருவூலங்களில் இருந்து தேவைப்படும் கருவூலங்களுக்கு அகமாற்றம் செய்யப்படுகின்றது. சொத்துக்களின் விலை உயர்வின் காரணமாக முத்திரைத் தீர்வையின் மூலம் வசூலாகும் வருவாய் ஆண்டுக்காண்டு ஏறுமுகமாகவே உள்ளது. சொத்து மதிப்பீட்டிற்கு வழிமுறை விதிகள் வகுத்து முத்திரைச் சட்டம் பிரிவு 47ஏ-யின்கீழ் அனுப்பப்படும் ஆவணங்கள் மீது நடப்பு மதிப்பை நிர்ணயம் செய்யத் தனி அலுவலர்கள் நியமித்ததினாலும் புலனாய்வுக் குழு மற்றும் துறையின் இதர அதிகாரிகளுக்கு சுட்டடம் சம்பந்தமாக ஆய்வு செய்திடும் ஆவணங்களிலிருந்தும் வரும் வருவாய் அதிகரித்து வருகிறது.

முத்திரைத்தாள் நிர்வாகம் இரண்டு முக்கிய பிரிவுகளைக் கொண்டது.

(1) நீதிமன்ற முத்திரைகளின் விற்பனை. (2) நீதிசாரா முத்திரைத்தாட்களின் விற்பனை. இத்துடன் கீழே உள்ள வரவு அறிக்கையிலுள்ள 1989–90ஆம் ஆண்டில் நீதிமன்ற முத்திரைகளின் விற்பனையை 1988–89ஆம் ஆண்டுடன் ஒப்புநோக்கும்போது, 1989–90ஆம் ஆண்டில் நீதிமன்ற முத்திரைகளின் விற்பனை உயர்ந்துள்ளது. மேலும், நீதிசாரா முத்திரைத்தாட்களின் விற்பனை மீண்டும் இரு இணைப்பிரிவுகளாக அதாவது (1) முத்திரைகளின் விற்பனை. (2) ஆவணங்களின் மீதான முத்திரை மதிப்பினை பதிப்பதற்கான தீர்வை என்று பிரிக்கப்படுகிறது. முத்திரைகளின் விற்பனை என்பது உண்டி, முத்திரைத்தாட்கள், வருவாய் வில்லைகள் மற்றும் நீதிசாரா முத்திரைத்தாட்கள், பங்கு மாற்று வில்லைகள், அயல்நாட்டு வில்லைகள், காப்பீட்டு வில்லைகள், சான்றுருதி வில்லைகள் மற்றும், தரகர் வில்லைகளின் விற்பனையாகும். சார் பதிவாளர், வருவாய் துறை அதிகாரிகள் மூலமாக வசூலிக்கப்படும் தீர்வை மற்றும் சிறப்பு ஒட்டு வில்லைகளின் விற்பனை ஆவணங்களின் மீதான முத்திரை மதிப்பினை பதிப்பதற்கான தீர்வையாக கருதப்படுகிறது. இத்துடன் கீழே உள்ள வரவு அறிக்கையிலுள்ள 1989–90ஆம் ஆண்டின் நீதிசாரா முத்திரைத்தாட்களின் விற்பனையை 1988–89ஆம் ஆண்டுடன் ஒப்பு நோக்கும்போது 1989–90ஆம் ஆண்டில் நீதிசாரா முத்திரைத்தாட்களின் விற்பனை உயர்ந்துள்ளது. எனவே, பொதுவாக 1989–90ஆம் ஆண்டின் மொத்த நிகர வருவாய் 1988–89ஆம் ஆண்டில் வருவாயைக் காட்டிலும் அதிகரித்துள்ளது.

1989–90 ஆம் ஆண்டுக்கு முத்திரைத் தீர்வை வசூலித்திட ரூபாய் 222.74 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் ரூ. 233.21 கோடிகள் வசூலிக்கப்பட்டது.

மொத்தத்தில் முத்திரைத்தாள் நிர்வாகம் 1989–90 ஆம் ஆண்டில் மன நிறை வளிக்கும் வகையில் செயல்பட்டுள்ளது.

இரு தொடர் ஆண்டுகளுக்கான 0030 வருவாய் மற்றும் 2030 செலவினங்களுக்கான பட்டியல் ஒப்பு நோக்கத்திற்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

முத்திரைகள் என்ற தலைப்பின்கீழ் 1988–89 மற்றும் 1989–90 ஆண்டு களுக்கான வரவு-செலவு விவரங்கள்.

		1988–89.	1989–90.
		ரூ. பை.	ரூ. பை.
0030. ஆ. வில்லைகள்—			
நீதிமன்ற வில்லைகள்—			
01. நீதி மன்ற வில்லைகள்		13,58,50,566.10	14,93,14,201.46
02. திருப்பிக் கொடுத்தவை			
03. நீதிமன்ற வில்லைகள்	(—)	47,58,482.12	1,02,01,911.50
		13,10,92,083.98	13,91,12,289.96
0030. ஆ. வில்லைகள்—நீதிமன்ற வில்லைகள்—			
அ. ஆ. முத்திரைகள் விற்பனை—			
01. நகல் முத்திரைதாட்கள்		23,33,342.85	15,03,926.05
02. திருப்பிக் கொடுத்தவை		13,34,25,426.83	14,06,16,216.01
1. பழுதடைந்த முத்திரைகள்	(–)		46,634.00
2. பல்வகை	(—)	2,92,942.70	2,480.00
		13.31.32,484,13	14.05,67,102 01
0030. ஆ. வில்லைகள்—			
நீதிமன்ற வில்லைகள்—			
ஆ. இ. இதர வரவுகள்—			
01. தண்டப்பணம்	( )	5,198.85	38,98,567.90
02. பல்வகை	( )	2,483.20	6,73,116.00
03. திருப்பிக் கொடுத்தவை	(—)	40,826.25	
		13.30.99,339.93	14,51,38,785.91
0030. இ. முத்திரைகள்—			
நீதிசாரா முத்திரைகள்—			
அ. முத்திரைத்தாள் விற்பனை.—			
01. உண்டி முத்திரைத்தாள்கள்.		35,92,373.50	30,10,952.00
02. இதர முத்திரைத்தாள்கள்—			
01. வருவாய் வில்லைகள்		4,93,03,452.60	4,35,90,803.60
02. இதர முத்திரைகள்		141,10,38,282.20	184,91,14,384.
		159,70,33,448.23	204,08.541,4139

(1)	(2)	(3)
	ரூ. பை.	ரூ. பை.
முன்பக்கத் தொகை ...	1,59,70,33,448.23	2,04,08,54,931.41
03. திருப்பிக் கொடுத்தவை.		
01. பல்வகை முத்திரைகள்—		
இறந்த முத்திரைத்தாள் விற்பனை யாளர்களிடமிருந்து பெறப் பட்டவை		
02. பழுதடைந்த முத்திரைகள் (—)	68,99,295.60	1,65,99,783.10
03. பல்வகை .. .. (—)	1,25,15,556.45	2,44,68,782.70
	1,57,76,18,596.18	1,99,97,86,365.61
0030. இ. முத்திரைகள் —		
அஅ. முத்திரைகள் முத்திரையிட்ட ஆவணங்களுக்கு தீர்வை.—		
01. இதர முத்திரைகளின் வரவு(+)	...	1,49,56,200.80
02. முத்திரையில்லாத (ஆ) முத்திரை குறைவான ஆவணங்கள் மறு வரவு ... .. (+)	27,62,80,824.79	22,47,10,531.90
03. இதர வரவுகள் ... (+)	9,52,65,019.05	12,22,71,405.05
	1,94,91,64,440.02	2,36,17,24,503.36
0030. முத்திரைகள் —நீதிசாரா முத்திரைகள்—அ.இ. இதர வரவுகள்—		
01. தண்டல் பணம் (அ) மற்றும் தண்டல் (அ) தொகை ..	52,830.76	50,74,910.80
02. பல்வகை ... (+)	88,06,434.00	61,98,221.17
	1,95,80,23,704.78	2,37,29,97,635.33
ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கிய தொகை .. .. .. (—)	54,35,68,291.85	69,22,33,003.35
	1,41,44,55,412.93	1,68,07,64,631.98
2030. முத்திரைகள்—செலவுகள்—		
1. முத்திரைத்தாட்கள் விற்றதில் தள்ளுபடி .. .. (—)	75,17,984.35	83,40,337.88
2. நிர்வாகச் செலவுகள் (—)	21,28,055.35	41,43,431.50
3. உற்பத்தி செலவு (முத்திரைத் தாள்கள் .. .. (—)	91,59,852.00	37,86,635.00
நிகர வருவாய் ...	1,39,56,49,521.23	1,66,44,94,228.20

தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்.

இத்தீர்ப்பாயம், தமிழ்நாடு பொது விற்பனைவரிச் சட்டம் மத்திய விற்பனை வரி சட்டம், தமிழ்நாடு கூடுதல் வீற்பனை வரிச்சட்டம் மற்றும் தமிழ்நாடு மேல்வரிச் சட்டம் ஆகியவற்றின்படி இயங்கும் இரண்டாம் நிலை தீர்ப்பாயமாகும். இத்தீர்ப்பாயம் செயல்முறைகளிலும் வலைமுறைகளிலும் 1989-90 நிதியாண்டில் எவ்வித மாற்றமும் இல்லை.

2. தமிழ்நாட்டில் மொத்தம் நான்கு தீர்ப்பாயங்கள் இயங்கி வருகின்றது. இதில் மாநில தலைநகரான சென்னை மாநகரத்தில் முதன்மை தீர்ப்பாயமும், ஒரு கூடுதல் தீர்ப்பாயமும், இயங்கி வருகின்றன. இதைத் தவிர மதுரை கோயம்புத்தூர் ஆகிய இரு பெரு நகரங்களிலும் முறையே ஒவ்வொரு கூடுதல் தீர்ப்பாயம் இயங்கி வருகின்றன.

3. முதன்மை தீர்ப்பாய தலைவரே இத்துறையில் அலுவலர் ஆவார். முதன்மை தீர்ப்பாயம், தலைவர், இரண்டாம் உறுப்பினர் துறை உறுப்பினர் என மூன்று உறுப்பினர்களைக் கொண்டதாகும். இத்தீர்ப்பாயமே தமிழ்நாடு விவசாய வருமான வரி மேற்முறையீட்டுத் தீர்ப்பாயமாகவும் பணிபுரிந்து வருகின்றது. இத்தீர்ப்பாயத்தில் முதல்டம் தலைவருக்கே.

4. கூடுதல் தீர்ப்பாயங்கள் துறை உறுப்பினர், நீதித்துறை உறுப்பினர் என இரு உறுப்பினர்களைக் கொண்டதாகும்.

5. ஒவ்வொரு தீர்ப்பாயத்திலும், அதன் செயல்முறைகளைக் கவனிக்க ஒரு செயலாளர் உண்டு. இவர் மேல்முறையீடுகளில் பதிவுகளைச் செயல்படுத்துபவர் ஆவார்.

6. கடந்த நிதியாண்டில் திரு. பா. தாமோதரன், பி.ஏ., பி.எல்., தலைவராக 30—11—1987-லிருந்து 30—9—1990 வரையும் திரு. கே. வி. தருமராஜன், எம்.ஏ (தலைவர் முழு கூடுதல் பொறுப்பு) 1—10—1990 முதல் தொடர்கிறார். தலைவரின் பொறுப்பின் கீழ் நான்கு தீர்ப்பாயங்களும் பதினெட்டு மேல்முறையீட்டு உதவி ஆணையர் அலுவலகங்களும் இயங்கி வருகின்றன. தலைவர் இவ்வலுவலகங்களை ஆய்வு செய்யும் அதிகாரம் பெற்றுள்ளார்.

தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் செயல்பாடுகள் :

7. 1—4—1989 தேதியில் 4,206 மேல்முறையீடுகளும் 32 தீர்ப்பாய பரிசீலனை மனுக்களும் நிலுவையாக அனைத்து தீர்ப்பாயங்களிலும் இருந்தன. கடந்த நிதியாண்டில் 2,728 மேல்முறையீடுகளும் 23 பரிசீலனை மனுக்களும் பதிவுப் பெற்றன. இதனால் தீர்வு காணவேண்டிய முறையீடுகள் 6,934 ஆகவும் பரிசீலனை மனுக்கள் 55 ஆகவும் உயர்ந்தன. இவற்றில் 3,335 முறையீடுகளும் 20 பரிசீலனை மனுக்களும் தீர்வு காணப்பட்டன. 31—3—1990 தேதியில் 3,599 முறையீடுகளும் 35 பரிசீலனை மனுக்களும் தீர்வுக்காக வேண்டி நிலுவையில் உள்ளன.

தமிழ்நாடு விவசாய வருமான வரி மேல் முறையிட்டுத் தீர்ப்பாயம் :

8. இத்தீர்ப்பாயம் தமிழ்நாடு விவசாய வருமான வரி சட்டம் 1956-ன் கீழ் இயங்கும் இரண்டாம் நிலை முறையீட்டுத் தீர்ப்பாயமாகும். கடந்த நிதியாண்டில் ஆரம்பத்தில் (1—4—1989-ல் 167 மேல்முறையீடுகள் நிலுவையாக இருந்தன. இந்த ஆண்டில் 174 முறையீடுகள் பதிவு பெற்றன. இதன் மூலம் மொத்தம் 341 மேல் முறையீடுகள் தீர்வு காண்பதற்கு வந்தன. இவற்றுள் 247 மேல்முறையீடுகள் முடிக்கப் பட்டன. 31—3—1990 ஆம் நாளில் 94 முறையீடுகள் நிலுவையில் உள்ளன.

செயல்பாடுகளின் விவரம் :

10. நான்கு மேல்முறையீட்டு உதவி ஆணையர்கள், சென்னை பெருநகரிலும், காஞ்சிபுரம், வேலூர், கடலூர், தஞ்சை, திருச்சி, மதுரை (வடக்கு), மதுரை (தெற்கு), விருதுநகர், நெல்லை, சேலம், கோவை (முதன்மை), கோவை (கூடுதல்), பொள்ளாச்சி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் முறையே ஒரு ஆணையராக மொத்தம் 18 மேற்முறையீட்டு உதவி ஆணையர்கள் (வணிகவரி) உள்ளனர்.

11. தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம் மத்திய விற்பனை வரிச்சட்டம், கூடுதல் விற்பனைவரி மற்றும் உபரிவரி ஆகியவற்றின் கீழ் மொத்தம் 17,411 முறையீடுகள் நிலுவையாக 1—4—1989-ல் இருந்தன. நிதியாண்டில் மொத்தம் 17,577 முறையீடுகள் வரப்பெற்றன. முடிவுரவேண்டிய மொத்த முறையீடுகளின் எண்ணிக்கை 34,988 ஆகும். இவற்றுள் 17,237 முறையீடுகள் முடிக்கப்பட்டன. 31—3—199 0அன்று 17,751 முறையீடுகள் நிலுவையில் உள்ள.

வக்ஃபுகள்.

தமிழகத்தில் 1954 ஆம் வருடத்திய வக்பு சட்டம் 1955 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் நாள் அமுலுக்கு வந்தது, வக்ஃபு மற்றும் வக்பு சொத்துக்களின் கணக்கெடுப்பு 1957-ல் முடிவுற்றது.

வாரியத்தின் தோற்றம் :

1958 ஆம் ஆண்டு பிப்ரவரியில் முதல் வாரியம் அமைக்கப்பட்டது. தற்போதைய வாரியம் 29—5—1989-ல் அமைக்கப்பட்டது. ஜனாப் அல்ஹாஜ் எம். அப்துல் லத்தீப் சாஹிபு, எம்.ஏ., எம்.எல்., அவர்கள் தலைவராயுள்ளார்கள்.

வக்ஃப்கள் :

தமிழகத்தில் மொத்தம் 6,100 வக்ஃப்கள் உள்ளன. அவற்றில் 53 வக்ஃப்கள் சியா பிரிவினருக்கானவை. மொத்த வக்ஃப்களில் 2,560 வக்ஃப்களின் வருட வருமானம் ரூ. 100-க்கும் குறைவாக உள்ளது.

பணியாளர்கள் :

அரசால் மாவட்ட வருவாய் அலுவலர்/துணை ஆட்சியர் அந்தஸ்தில் நியமிக்கப் படும் அதிகாரியான செயலாளர் வாரியத்தின் முதன்மை நிர்வாக அதிகாரி ஆவார்.

அரசு அலுவலகங்கள்

வரிசை எண்ணும், சரகத்தின் பெயர். (1)	சரகத்தின் தலைமையகம். (2)	சரகத்தில் உள்ளடக்கிய மாவட்டங்கள். (3)
1 வடசரகம்	சென்னை ..	சென்னை மற்றும் செங்கை-அண்ணா.
2 வேலூர் சரகம்	வேலூர்	வேலூர் அம்பேத்கார் மற்றும் திருவண்ணா மலை சம்புவராயர்.
3 தென் ஆற்காடு சரகம்	பண்ருட்டி	தென் ஆற்காடு.
4 மேற்குச் சரகம்	சேலம்	சேலம், தர்மபுரி மற்றும் பெரியார்.
5 கோவைச் சரகம்	மேட்டுப்பாளையம்	கோவை மற்றும் நீலகிரி.
6 தஞ்சை சரகம்	தஞ்சாவூர்	தஞ்சாவூர்.
7 மத்திய சரகம்	திருச்சி	திருச்சி மற்றும் புதுக் கோட்டை.
8 தெற்குச் சரகம்	மதுரை	மதுரை மற்றும் திண்டுக் கல் காயிதேமில்லத்.
9 முகவைச் சரகம்	வெளிப்பட்டினம், .. (இராமநாதபுரம்).	இராமநாதபுரம், பசும் பொன் தேவர் திரு மகன் மற்றும் காம ராசர்.
10 நெல்லைச் சரகம்	திருநெல்வேலி	திருநெல்வேலி கட்ட பொம்மன், சிதம்பர னார் மற்றும் கன்னியா குமரி.

மேற்படி ஒவ்வொரு சரகத்திலும் ஒரு கண்காணிப்பாளரும் அவருக்குக் கீழ் வக்ஃபு ஆய்வாளர்களும் களபணியாற்றி வருகிறார்கள். மேலும் வாரியத்தின் நேரடி நிர்வாகத் தின்கீழ் சில வக்ஃப்கள் உள்ளன. வாரியத்தால் நியமிக்கப்பட்ட 7 நிர்வாக அதிகாரிகள் தனிப்பட்ட வக்ஃப்களை நிர்வகித்து வருகிறார்கள். சென்னை மற்றும் செங்கை-அண்ணா மாவட்டத்தில் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தில் இருக்கும் 10 வக்ஃப்கள் கண்காணிப்பாளர் அந்தஸ்தில் உள்ள ஒரு நிர்வாக அதிகாரியால் நிர்வகிக்கப்படுகிறது.

நிதி நிலை :

வாரியத்தின் மிக முக்கிய நிதி ஆதாரமாக வக்ஃபு நிறுவனங்களிலிருந்து வசூல் செய்யப்படும் 6 சதவீத சகாயத் தொகையுள்ளது. இந்த சகாயத் தொகையில் மத்திய வக்ஃப் கழகத்திற்குச் செலுத்தப்படும் 1 சதவீத தொகை, தல நிதி தணிக்கை

அலுவலகத்திற்கும் செலுத்தப்படும், தொகை மற்றும் வழக்குச் செலவினங்களுக்காகச் செலவிடப்படும் தொகை போக மீதி தொகையே வாரிய நிர்வாகத்திற்கு பயன்படுத்தப் படுகிறது.

1–4–1989 முதல் 31—3— 1990 வரையிலான "கேட்பு வசூல் மற்றும் நிலுவை" பட்டியல் வருமாறு :—

		ரூ.	பை.
கேட்பு :			
31–3–1989	வரையிலான நிலுவையில்	24,42,222	89
1–4–1989	முதல் வரையிலான நடப்பில்	18,03,795	62
	மொத்தம்	42,46,018	51
வசூல் :			
நிலுவையில்		12,77,689	49
நடப்பில் ..		13,74,638	57
முன் வசூல்		2,99,254	71
		29,51,582	77
நிலுவை :			
நிலுவையில்		11,64,533	40
நடப்பில் ..		4,29,129	05
		15,93,690	45

வசூல் வணிக வாரியச் செயலாளரின் தீவிர ஆய்வினால் முடுக்கிவிடப்படுகிறது.

செலவினங்கள் :

1. வாரிய ஊழியர்களின் சம்பளம் மற்றும் பயணப்படி மற்றும் வாரிய உறுப்பினர் களின் பயணப்படி மற்றும் வாரியக் கூட்டப்படி ஆகியவையே செலவினங்களில் முதன்மை வகிக்கிறது.

2. அடுத்த முக்கியச் செலவினமாக வழக்குச் செலவுத் தொகை உள்ளது.

3. மத்திய வக்ஃபு கழகத்திற்குச் செலுத்தப்படும் ஒரு விழுக்காடு சகாயத் தொகை அடுத்த பெரிய செலவினமாக உள்ளது.

4. தணிக்கை துறைக்குச் செலவிடப்படும் தொகை இன்னொரு பிரதான இடத்தை வகிக்கிறது.

தணிக்கை :

ஆண்டு வருமானம் ரூ. 100-க்கும் அதிகமாகவும் ரூ. 5,000-க்குக் குறைவாகவும் உள்ள வக்ஃபுகளின் தணிக்கை வாரிய அலுவலர்களாலும் ரூ. 5,000-க்கும் அதிகமாக ஆண்டு வருமானம் இருக்கும் வக்ஃபுகளின் தணிக்கை தல நிதி தணிக்கை க்குழுவாலும் செய்யப்படுகிறது.

வழக்குகள் :

பராதீனம் செய்யப்பட்ட வக்ஃபு சொத்துக்களை மீட்க வாரியம் தொடுத்த சுமார் பதினோராயிரம் வழக்குகளில் 1,927 வழக்குகள் நிலுவையில் உள்ளன. வாரியத்திற் கெதிராக முத்தவல்லிகள் மற்றும் பிறரால் தொடுக்கப்பட்ட வழக்குகளில் 1,162 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

ஆக்கிரமிப்புகள் :

தமிழகத்தில் 34 வக்ஃபு சொத்துக்கள் ஆக்கிரமிப்புக்குள்ளாயுள்ளன. ஆக்கிர மிப்பாளர்கள் மீது நடவடிக்கை எடுத்து வக்ஃபு சொத்துக்களை மீட்டுத் தர சம்பந்தப் பட்ட மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

கபர்ஸ்தான் நிலங்கள் மீதான அச்சுறுத்தல் :

இரயில்வே துறையால் எடுத்துக்கொள்ளப்படுவதாக அச்சுறுத்தலிலுள்ள கபர்ஸ்தான் நிலங்கள் பற்றிய சிறுபான்மைக் குழு உறுப்பினரின் பரிந்துரைக்கேற்ப ஒரு சம்பவம் அரசின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு அரசால் துறைக்கு இது குறித்து எழுதப்பட்டுள்ளது.

புனரமைப்பு மான்யம் :

தமிழக அரசால் வாரியம் மூலமாக வக்ஃப் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுவரும் புனரமைப்பு மான்யம் 1973–74 முதல் 1982–83 வரை 798 எளிய வக்ஃப் நிறுவனங்களுக்கு ரூ. 35,00,000 வழங்கப்பட்டுள்ளது. பின்னர் அரசு 1983–84 மற்றும் 1984–85 ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியது. அதில் ரூ. 50,00,000 1,026 வக்ஃப் நிறுவனங்களுக்கு 1983–84 மற்றும் 1984–85-ல் வழங்கப்பட்டது. மீதித் தொகையான ரூ. 50,00,000 இல் 31-3-1990 வரை 538 வக்ஃப் நிறுவனங்களுக்கு ரூ. 46,46,500 வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 1989–90-க்கான புனரமைப்பு மான்யத் தொகையாக அரசு வழங்கிய ரூபாய் மூன்று இலட்சத்தில் சுமார் 30 வக்ஃப் நிறுவனங்கள் பயன்பெற உள்ளன.

நகர்ப்புற வக்புகள் சொத்துக்கள் அபிவிருத்திக் கடன் :

வாரியப் பணிகளில் நகர்ப்புற வக்ஃப்பு சொத்துக்களைப் அபிவிருத்தி செய்து அவற்றின் வருவாயை பெருக்குவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. வக்புகள் நகர்ப்புற வக்ஃப் சொத்துக்களை அபிவிருத்தி செய்வதால் அவைகள் பொருளாதார தன்னிறவை பெறுவதுடன் முஸ்லீம்களின் சமூக நலம் மற்றும் தரும காரியங்கள் செய்வதற்கும் உதவப்படுகிறது. வாரியத்தின் இக்குறிக்கோள் நிறைவேறுவதற்கு மாநில அரசு மத்திய வக்ஃப் கழகமும் உதவி வருகிறது.

நகர்ப்புற வக்ஃப் சொத்துக்களின் மேம்பாட்டுக்காக தமிழக அரசு 1976–77 முதல் ரூ. 46,00,000 கடனாக வழங்கியுள்ளது. அதிலிருந்து 31–3–1990 வரை 43 வக்ஃப் நிறுவனங்களுக்கு ரூ 45,25,000 வழங்கப்பட்டுள்ளது.

மத்திய வக்ஃப் கழகமும் தமிழ்நாட்டில் உள்ள 22 வக்ஃப் நிறுவனங்களுக்கு ரூ. 1,86,75,000 நகர்புற வக்ஃப் சொத்துக்கள் அபிவிருத்திக் கடனாக வழங்கியுள்ளது.

நலப்பணிச் செயல்பாடுகள் :

'' தமிழ்நாடு வக்ஃப் வாரிய நல்வாழ்வு நிதி '' என்ற ஒரு நிதி ஆதாரம் பொது மக்களிடமிருந்து பெறப்பெறும் நன்கொடையிலிருந்து உருவாக்கப்பட்டு மனிதாபிமான அடிப்படையில் இதுவரை 381 ஏழைகளுக்குத் திருமண உதவி, மருத்துவ உதவி மற்றும் கல்வி உதவி போன்ற வகையில் ரூ. 2,23,404.15 வழங்கப்பட்டுள்ளது.

உபகாரச் சம்பளம் :

மத்திய வக்ஃப் கழகம் தொழிற் கல்வி, (டிப்ளமா) மேனிலைக் கல்வி மற்றும் இஸ்லாமியக் கல்விபயிலும் முஸ்லீம் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்க ரூ. 15,000 வழங்கியது. வாரியமும் ரூ. 15,000 சமபங்குத் தொகையை உபகாரச் சம்பள நிதிக்கு வாரிய நலப்பணி நிதியிலிருந்து ஒதுக்கியது. மொத்த தொகையான ரூ. 30,000-ல் 1989-90க்கான மத்திய வக்ஃப் கழக தமிழ் நாடுவக்ஃப் வாரிய உபகாரச் சம்பள திட்டத்தின்கீழ் சுமார் 82 மாணவர்கள் பயனடைவர்.

சாதனைகள் :

1. பதினோராண்டுக் காலமாக வக்ஃப் வாரியத்தால் வெளியிடப்பட்டுவரும் இஸ்மி மாத இதழின் மூலம் வக்ஃப் சட்டத்தின்படி அவ்வப்போது உருவாக்கப்படும் சட்டங்கள் வக்ஃப் நிர்வாகிகளின் கடமைகள் மற்றும் வாரியத்தின் நலப்பணிச் செயல்பாடுகள் மற்றும் சாதனைகள் பிரசுரிக்கப்படுகிறது.

2. வாரிய ஊழியர்கள் தொழுகை நடத்துவதற்காக அலுவலகக் கட்டிடத்தில் ஒரு பள்ளிவாசல் நிர்வகிக்கப்பட்டு வருவதோடு பள்ளிவாசலின் பேஷ் இமாம் அவர்களுக்கு வாரிய நிதியிலிருந்து ரூ. 500 மாதச் சம்பளம் அளிக்கப்பட்டு வருகிறது.

3. வாரியத்திற்கென ஒரு சொந்த அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்காக சென்னை ஜார்ஜ் டவுன் ஜாபர் சேலடம் தெருவில் 13,204 சதுர அடி நிலம் அரசிடமிருந்து ரூ. 3,07,692 கடன் பெற்று வாங்கப்பட்டுள்ளது. கட்டிடத்தைக் கட்டுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

அரசுக் கடன்கள் :

நிர்வாகத் தேவைகளுக்காக 1968 முதல் 1974 வரை ரூ. 5,50,000-ம் அலுவலகக் கட்டிடம் கட்ட நிலம் வாங்கிய வகைக்கு 1981ல் ரூ. 3,07,692-ம் வழக்குச் செலவு களுக்காக 1983ல் ரூ. 1,20,000-ம் அரசு கடனாக வாரியத்திற்கு வழங்கி இருந்தது.

அரசு தனது அரசாணை எண் 300, நாள் 28—4—1989 மூலமாக, மொத்த கடன் தொகையில் ஐம்பது விழுக்காடு தொகையான ரூ. 4.89 இலட்சத்தை மான்யமாகவும் மீதி தொகையான ரூ. 4.89 இலட்சத்தை வட்டியில்லா அரசு கடனாகவும் கருத உத்தரவிட்டுள்ளது.

அத்தியாயம் 7.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை.

கூட்டுறவு.

2. முன்னுரை :

தமிழ்நாட்டில் 1904-ம் ஆண்டு கூட்டுறவு இயக்கம் அரசு ஆதரவுடன் தொடங்கப் பட்டது. மக்களின் பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்தக்கூட்டுறவுத்துறை ஒரு பாலமாக இருந்து வருகிறது. இத்துறை மாநில அளவில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரையும், மாவட்ட அளவில் மண்டல இணைப்பதிவாளர்களையும், சரக அளவில் துணைப் பதிவாளர்களையும் கொண்டு துறைப் பணிகளை செயலாக்கி வருகின்றது. 1955-ம் ஆண்டுக்குப் பிறகு, இவ்வகை கூட்டுறவுச் சங்கங்கள் இதர துறைகளின் தலைவர்களுக்கு மாற்றப்பட்டதால் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் நீங்கலாக, 15 ஏனைய துறைத் தலைவர்கள் கட்டுப்பாட்டில் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. மொத்தமுள்ள சுமார் 30,000 கூட்டுறவு நிறுவனங்களில், கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் கட்டுப்பாட்டில் 11,447 கூட்டுறவு நிறுவனங்கள் செயல்படுகின்றன.

வேளாண்மை உற்பத்தி மற்றும் அபிவிருத்திக்கு கடனுதவி அளித்தல், நகர்புறக் கடன் வசதியளித்தல், வேளாண்மைப் பொருட்களைப் பதப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தலுக்கு உதவுதல், வேளாண்மை இடு பொருட்கள் விநியோகித்தல், மாநிலம் முழுமைக்கும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நுகர்வோர் பொருட்களை வழங்குதல், கூட்டுறவுக் கல்வி மற்றும் விளம்பரம் ஆகியவை பதிவாளரின் கட்டுப் பாட்டில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய பணிகளாகும்.

3. பணிகள் :

வேளாண்மை உற்பத்தி மற்றும் அபிவிருத்திக்குக் கடனுதவி அளித்தல், நகர்ப் புறக் கடன் வசதியளித்தல், வேளாண்மைப் பொருட்களைப் பதப்படுத்தி மற்றும் விற்பனை செய்தலுக்கு உதவுதல், வேளாண்மை இடு பொருட்கள் விநியோகித்தல் மாநிலம் முழுவதும் சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் நுகர் பொருட்களை வழங்குதல் மற்றும் பொது வினியோகத் திட்டத்தின் கீழ் கட்டுப்பாட்டுப் பொருட்களை வழங்குதல் ஆகியவை பதிவாளரின் கட்டுப்பாட்டில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய பணிகளில் அடங்கும்.

கூட்டுறவுத் துறையின் சட்டபூர்வ பணிகள் :

கூட்டுறவுச் சங்கத்தில் எழும் தகராறுகளை தாவா மனுக்கள் மூலம் நடுவர் தீர்ப்புக்கு கொண்டு வரும் நடவடிக்கைகள் நிறைவேற்று நடவடிக்கைகள், தண்டத் தீர்வை நடவடிக்கைகள், கூட்டுறவுச் சங்கங்களின் பேரில் தெரிவிக்கப்படும் கருவமயான புகார்கள் தொடர்பாக அவற்றின் அன்றாட நடைமுறைகள் குறித்து மேற்கொள்ளப் படும் விசாரணை, ஆய்வு மற்றும் புலனாய்வு நடவடிக்கைகள் மற்றும் கலைத்தல் நடவடிக்கை போன்ற சட்டப்பூர்வ பணிகள் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983-ன் பல்வேறு பிரிவுகளின் கீழும் அவற்றின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் கீழும் கூட்டுறவுத்துறையில் மேற்கொள்ளப்படுகின்றன.

சட்டபூர்வ பணிகளில் 1989—90 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பின்வருமாறு :—

வரிசை எண்ணும் விவரமும்.	31-3-89-ல் நிலுவை.	1989—90-ல் வரவு.	மொத்தம்.	1989—90ல் தீர்வு செய்தது.	31-3-90 தீர்வு வேண்டிய நிலுவைகள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1. தாவா மனுக்கள்	61,716	2,01,759	2,63,475	2,26,839	36,636
2. நிறைவேற்று மனுக்கள்	3,53,990	93,435	4,47,425	55,799	3,91,626
3. தண்டத் தீர்வை வழக்குகள்	453	308	761	357	404
4. விசாரணை	198	373	571	387	184
5. ஆய்வு	103	246	349	274	75
6. கலைத்தல் நடவடிக்கை	1,11	35	1,183	140	1,043

4. பல்வேறு திட்டங்களின் கீழ் ஏற்பட்ட முன்னேற்றம் :

4 (i) வேளாண்மைக் கடன்கள் (குறுகிய மற்றும் மத்தியக் காலக் கடன்கள்):

தமிழ்நாட்டிலுள்ள 4,655 தொடக்க விவசாய கூட்டுறவு வங்கிகளில் இம் மாநிலத்திலுள்ள மொத்த நில உடமையாளர்களில் 74.4 சதவீத அளவிற்கு உறுப்பினர்களாக உள்ளனர். அறிக்கை ஆண்டில் குறுகியக் காலக் கடன்கள் வழங்குவதற்கான குறியீடான ரூ. 250.00 கோடி மற்றும் மத்திய காலக் கடன்கள் வழங்குவதற்கான குறியீடான ரூ. 37.55 கோடியில், இச்சங்கங்கள் ரூ. 233.84 கோடி அளவிற்கு குறுகிய காலக் கடன்களும், உழவு மாடுகள் மற்றும் கறவை மாடுகள் வாங்குதல், ஆடு வளர்ப்பு கோழிப்பண்ணை அமைத்தல் மற்றும் விவசாயத்திற்குத் தேவையான கருவிகள் வாங்குதல் போன்ற வேளாண்மை தொடர்பான துணைத் தொழில்களுக்காக ரூ. 41.11 கோடி அளவிற்கு மத்தியக் காலக் கடன்களும் வழங்கியுள்ளன.

தொடக்க விவசாய கூட்டுறவு வங்கிகள் வழங்கிய மொத்த குறுகிய காலக் கடன்களில் 7.5 சதவீதமும் மத்தியக் காலக் கடன்களில் 18.3 சதவீதமும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்த அங்கத்தினர்களுக்கு வழங்கியுள்ளன.

தொடக்க விவசாய கூட்டுறவு வங்கிகள், மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றின் பங்குத்தொகை (அரசு பங்குத் தொகை நீங்கலாக) 31—3—1990 அன்று ரூ. 133.89 கோடியாகும்.

4 (ii) விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம் :

மைய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம், இம்மாநிலத்தில் 1—4—1985 முதல் செயலாக்கப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட பகுதிகளில், நெல், சோளம், கம்பு, கேழ்வரகு, நிலக்கடலை, எள் மற்றும் சூரியகாந்திப் பயிர்களுக்கு, கூட்டுறவு வணிக மற்றும் மண்டல கிராமிய வங்கிகளில் வழங்கப்படும் பயிர்க் கடன் முழுவதும், ஒரு விவசாயிக்கு ரூ. 10,000-க்கு மிகாமல், ஈட்டுறுதி செய்யப்படுகிறது. நெல், சோளம், கம்பு மற்றும் கேழ்வரகு பயிர்களுக்கு ஈட்டுறுதி செய்த தொகையில் இரு சதவீதமும் நிலக்கடலை எள் மற்றும் சூரியகாந்திப் பயிர்களுக்கு ஈட்டுறுதி செய்த தொகையில் ஒரு சதவீதமும், பிரிமியமாக வசூலிக்கப்படுகிறது. மத்திய அரசின் சார்பாக பொதுக்காப்பீட்டுக் கழகமும், மாநில அரசின் சார்பாக மாநில அரசால் அமைக்கப்பட்ட தமிழ்நாடு பயிர் பாதுகாப்பு நிதிக் குழுவும் இணைந்து, இத் திட்டத்தினை செயல்படுத்துகின்றன. பிரிமியம் மற்றும் ஈட்டுத் தொகையினை மைய அரசும் மாநில அரசும் 2:1 என்ற விகிதத்தில் பங்கேற்கின்றன. இத் திட்டத்தில் இணையும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு அவர்கள் செலுத்த வேண்டிய பிரிமியத் தொகையில் 50 சதவீதம் மாண்யமாக அனுமதிக்கப்படுகிறது. இச்செலவினை மைய அரசும், மாநில அரசும் சம அளவில் பங்கேற்கின்றன.

4 (iii) நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் :

தமிழ்நாட்டில் பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் 3,780 தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளும், 29 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும் செயல்பட்டு வருகின்றன. 1989—90 நிதியாண்டில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ. 976.91 கோடி மதிப்புள்ள நுகர்பொருட்களை விற்பனை செய்தன. இவ்வாண்டில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்திற்கு வெளிச் சந்தை அரிசி வாங்குவதற்கு ஏதுவாக ரூ. 10.00 இலட்சம் விளிம்புப் பண உதவி வழங்கப்பட்டது. மத்திய ஆதரவு திட்டத்தின் ரூ. 10.30 இலட்சம் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், ரொம்ப் பகுதி நுகர்வோர் திட்டத்தைச் செயலாக்க ரூ. 134.85 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளது. ரூ. 513.61 இலட்சம் மதிப்புள்ள தேசிய மயமாக்கப்பட்ட பாட நூல்களையும் ரூ. 41.75 இலட்சம் மதிப்புள்ள மலிவு விலை நோட்டுப் புத்தகங்களையும், இச்சங்கங்கள் விற்பனை செய்துள்ளன.

''ஒரு வருவாய் கிராமத்திற்கு ஒரு கடை'' என்று துவக்கப்பட்ட திட்டத்தின் கீழ் 17,353 கிராமக் கடைகள் கூட்டுறவுத் துறையின் கீழ் இயங்கி வருகின்றன. நாட்டத்தில் இயங்கும் கிராமக் கடைகளுக்கு அரசு மாண்யத் தொகை வழங்குகிறது. 1989—90-ம் ஆண்டில் கிராமக் கடைகள் மூலம் ரூ. 376.08 கோடி அளவிற்கு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ், அறிக்கை ஆண்டில் 20,198 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இக்கடைகள் மூலம் 118 லட்சம் குடும்ப அட்டைகளுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

5. இவ்வாண்டு செயலாக்கப்பட்ட புதிய திட்டங்கள் :

(i) ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் :

நாட்டில் சில தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சியை செயற்படுத்துவதற்கெனத் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளது. பிரதம கூட்டுறவு சங்கங்களின் பணிகளை வேளாண்மை மற்றும் தோட்டக்கலை, பட்டுப்பூச்சி வளர்த்தல், பன்றி வளர்த்தல், கோழிப் பண்ணை, மீன் வளர்ப்பு போன்ற வேளாண்மை சார்ந்த பிரிவுகள் மற்றும் கைத்தறி, கிராமக் கைத்தொழில், கைவினைஞர் தொழில் போன்ற பண்ணை சாரா பிரிவுகள் முதலியவற்றில் பண்முனைப்படுத்தல் பெருக்குதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். சங்கத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் பகுதி அடிப்படையிலான வளர்ச்சி காண்பதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

1989–90 ஆம் ஆண்டில் இத்திட்டம் இம்மாநிலத்தில் நெல், சோளம், கம்பு, ராகி, நிலக்கடலை, எள் மற்றும் சூரியகாந்தி பயிர்களுக்கு செயல்படுத்தப்பட்டது. திட்டம் செயலாக்க விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது :—

வரிசை எண் மற்றும் விவரம்.	பருவகாலம்.	
	காரிப் 1989	ராபி 1989-90
1. திட்டத்தில் இணைந்த விவசாயிகள் எண்ணிக்கை	1,07,347	92,664
2. திட்டத்தில் கொண்டுவரப்பட்ட நிலப்பரப்பு (ஹெக்டேரில்).	1,73,317	1,24,400
3. ஈட்டுறுதி செய்த தொகை (ரூ. இலட்சத்தில்)	3,429.12	3,405.96
4. வசூலிக்கப்பட்ட பிரிமியத் தொகை (ரூ. லட்சத்தில்)	63.55	63.47

3. 1989–90-ம் ஆண்டில் ராபி, 1988—99-இல் ஈட்டுறுதி செய்த விவசாயிகளுக்கு ஈட்டுத் தொகையாக ரூ. 18.85 இலட்சம் வழங்கப்பட்டது. காரிப் 1989-ல் ஈட்டுறுதி செய்த விவசாயிகளுக்கு ரூ. 57.95 இலட்சமும் மற்றும் ராபி 1989—90-ல் ஈட்டுறுதி செய்த விவசாயிகளுக்கு ரூ. 15.85 இலட்சமும் ஈட்டுறுதித் தொகையாக வழங்கப்பட வுள்ளது.

4 (ii) நீண்டகாலக் கடன்கள் :

தமிழ்நாடு மாநில நிலவள வங்கி மாநில அளவிலும், 181 பிரதம நிலவள வங்கிகள் வட்டம் அல்லது வட்டாரங்கள் அளவிலும் தமிழ்நாட்டில் ஈரடுக்கு முறையில் நீண்ட காலக் கடன்களை வழங்கி செயல்பட்டு வருகின்றன. பிரதம நிலவள வங்கிகள், விவசாயிகளுக்கு சிறு பாசனத் திட்டங்கள் மற்றும் தோட்டப் பயிர் பயிரிடுதல், ஆடுகள் வளர்ப்பு, மாடுகள் வளர்ப்பு மற்றும் கோழிகள் வளர்ப்பு திட்டங்களான சிறு பாசனம் அல்லாத பல்வேறு காரியங்களுக்கு நீண்ட காலக் கடன்கள் வழங்கி வருகின்றன. ரூ. 8.44 கோடி அளவிற்கு கடன் வழங்கும் வகையில் 58 சிறு பாசன திட்டங்களும் ரூ. 47.63 கோடி அளவிற்கு கடன் வழங்கும் வகையில் 279 சிறு பாசனம் அல்லாத திட்டங்களும் செயல்பாட்டில் உள்ளன. மேற்குறிப்பிட்ட திட்டங்களுக்கு கடன் வழங்குவதுடன், பிரதம நிலவள வங்கிகள், சாதாரண திட்டத்தின் கீழும் கடன் வழங்குகின்றன. பிரதம நிலவள வங்கிகள் நிலமற்ற விவசாயிகளுக்கு பல்வேறு காரியங்களுக்கு நில அடமானமின்றி கடன்கள் வழங்க ரூபாய் 6 கோடி அளவிற்கு அரசு உத்திரவாதம் வழங்கியுள்ளது.

2. 1989–90 ஆம் ஆண்டில் நிலவள வங்கிகள் நீண்ட காலக் கடன்சள் வழங்குவதற்கு அரசு நிர்ணயித்த மொத்தக் கடன் குறியீடான ரூபாய் 30.00 கோடியில் பிரதம நிலவள வங்கிகள் சிறப்பு மற்றும் சாதாரண கடன் திட்டத்தின்கீழ் ரூபாய் 24.74 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கியுள்ளன.

3. பிரதம நிலவள வங்கிகளின் கடன் வழங்கும் தகுதி, முக்கியமாக அவை களின் முந்தைய ஆண்டில் கடன் வசூலைப் பொறுத்தே நிர்ணயிக்கப்படுகின்றன. 31—3—1990–ல் பிரதம நிலவள வங்கிகளில் அங்கத்தினர்களின் கடன் நிலுவை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

	(ரூபாய் கோடியில்.)
(அ) கேட்பு	84.01
(ஆ) வசூல்	7.18
(இ) நிலுவை	76.83
(ஈ) சதவீதம்	91.5 (விழுக்காடு)

4 (iv) கூட்டுறவு விற்பனை :

பிரதம கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாயிகளுக்கு அவர் தம் வேளாண் விளை பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க பெரிதும் உதவுகின்றன. தமிழ்நாட்டில் இரண்டு கூட்டுறவு விற்பனை இணையங்களும், பதினொறு பயிரிடுவோர் கூட்டுறவு சங்கங்களும், 446 காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் 112 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் செயல்படுகின்றன. இவ்வாண்டில் இச்சங்கங்கள் ரூபாய் 229.57 கோடி மதிப்புள்ள வேளாண் விளை பொருட்களை விற்பனை செய்துள்ளது. இது கடந்த ஆண்டின் சாதனையைவிட 15.00 கோடி அதிகமாகும். இச் சங்கங்களால் விற்கப்படும் முழுமையான வேளாண் விளை பொருட்கள், நிலக்கடலை, பருத்தி, மிளகாய், மஞ்சள் சூரியகாந்தி, விதைகள், உரங்களுக்கிழங்கு, கரும்பு மற்றும் காய்கறிகள் முதலியனவாகும். 38 கூட்டுறவு விற்பனை சங்கங்களுக்கு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக திட்டத்தின் கீழ் புத்துயிருட்ட மேம்பாட்டிற்காக ரூபாய் 275.50 இலட்சம் பங்கு மூலதன நிதி உதவி வழங்கப்பட்டது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம், நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கம் மற்றும் துடியலூர் கூட்டுறவு விவசாய சங்கம் ஆகியவற்றின் மூலம் உரம், விதைகள், பூச்சி மருந்துகள் மற்றும் விவசாய உபகரணங்கள் ஆகியவை ரூபாய் 9,286.00 லட்சத்திற்கு அறிக்கையாண்டில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இத்திட்டத்தைச் செயற்படுத்த காமராசர் மாவட்டம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. காமராசர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை ஐந்து ஆண்டுகளில் 862.51 இலட்ச ரூபாய் செலவில் நிறைவேற்ற அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டம் 8—10—1989 அன்று மாண்புமிகு தமிழக முதல்வரால் துவக்கி வைக்கப்பட்டது. 1989–90-ஆம் ஆண்டில் இத்திட்ட செயலாக்கத்திற்காக முதலாண்டு உதவியாக அரசு ரூபாய் 219.395 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதே போன்று ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தினை விரிவாக்கும் பொருட்டு, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் தென் ஆற்காடு மாவட்டத்தினையும் ஒப்புதல் செய்துள்ளது. இதற்கான திட்ட அறிக்கை தயாரிக்கும் பொறுப்பினை நடேசன் கூட்டுறவு பயிற்சிக் கல்லூரிக்கு அளிக்கப்பட்டுள்ளது. நடேசன் கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியால் அளிக்கப்பட்ட வரைவு திட்ட அறிக்கை பரிசிலிக்கப்பட்டு முடிவான அறிக்கை தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்தின் அங்கீகாரத்திற்கு அனுப்ப தயாரிக்குமாறும் அக்கல்லூரி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. திட்ட அறிக்கை தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டபின், 1990–91 ஆண்டில் இத்திட்டம் தென்னாற்காடு மாவட்டத்தில் செயல்படுத்தப்படும்.

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தினை, கோவை மற்றும் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்களுக்கு விரிவுபடுத்த தேர்ந்தெடுக்கப்பட்டு, இம்மாவட்டங்களுக்கு திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியினை முறையே அக்ரிகல்சுரல் பைனான்ஸ் கன்சல்டன்சி லிட்., மற்றும் டாடா எகனாமிக் கன்சல்டன்சி சர்வீசஸ் ஆகிய நிறுவனங்களை தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் அங்கீகரித்துள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தினை அமுல்படுத்த தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான திட்ட அறிக்கையினை தயார் செய்யத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(ii) பிரதம நிலவள வங்கிகளால் வழங்கப்படும் நகைக்கடன் :

பிரதம நிலவள வங்கிகள் 1989–90 முதல் நகைகளின் பேரில் கடன் வழங்க அவ்வங்கிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பிரதம நிலவள வங்கிகளால் இவ்வாண்டில் ரூபாய் 6.10 கோடிக்கு நகைக் கடன் வழங்கப்பட்டது.

(iii) இலவச அரிசி விநியோகம் :

1989–90 ஆம் ஆண்டு மாத வருமானம் ரூபாய் 300-ம் அதற்குக் குறைந்த வருமானம் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு அதாவது தமிழ் புத்தாண்டு, மாண்புமிகு முதலமைச்சரின் பிறந்த நாள், மறைந்த முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள், தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகை காலங்களில் ஐந்து கிலோ இலவச அரிசி வழங்கப்பட்டது. பொது விநியோகத் திட்டத்தை அமுல்படுத்தும் கூட்டுறவுச் சங்கங்கள் இலவச அரிசியை அரசின் சார்பில் தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கின.

5. முடிவுரை :

கூட்டுறவு இயக்கம் தமிழ்நாட்டில் கடந்த ஆண்டுகளைப் போலவே அறிக்கையாண்டிலும் கடன் வழங்குதல், விற்பனை, விவசாய விளைபொருள், பதனிடுதல், அத்தியாவசிய பொருட்களை விநியோகித்தல் ஆகிய அனைத்து துறைகளிலும் நிலையான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.

குடிமைப் பொருள்

1. உணவு நிலைமை பொது :

தமிழ்நாட்டில் சாதாரணமாக ஆண்டொன்றுக்கு 20.15 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் பயிரிடப்படுகிறது. இதனால் ஆண்டொன்றுக்கு சாதாரணமாக 55 லட்சம் டன் அரிசி உற்பத்தியாகிறது. இது மாநிலத்தின் இயல்பான தேவையைப் பூர்த்தி செய்யப்போதுமானதாகும். முன் மதிப்பிட்டறிக்கையின்படி, 1989-90-ஆம் ஆண்டில் அரிசி உற்பத்தி 62.32 லட்சம் டன்கள் என மதிப்பிடு செய்யப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம் முழுமையாகவும், தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள சிதம்பரனார் மற்றும் காட்டுமன்னார் கோவில் வட்டங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆவுடையார் கோவில் மற்றும் அறந்தாங்கி வட்டங்களிலும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் முசிரி, லால்குடி குளித்தலை, திருச்சிராப்பள்ளி, அரியலூர், உடையார்பாளையம் வட்டங்களிலும் ஏகபோக கொள்முதல் திட்டம் அமுலில் உள்ளது. ஏகபோக கொள்முதல் திட்டம் செயல்படும் பகுதியை தவிர மாவட்டங்களிலுள்ள பிற பகுதிகளிலும், ஏனைய மாவட்டங்களிலும் 50 சத விகிதம் வர்த்தகர் வெளித்திட்டம் அமுல் உள்ளது.

1989-90-ஆம் ஆண்டின் நெல்/அரிசி கொள்முதல் விலை பின்வருமாறு :

வரிசை எண்ணும் தரமும். காலம் மற்றும் விலை/குவிண்டால்.

	1—4—1989 முதல் 13—8—1989	14—8—1989 முதல் 31—3—1990.
1. நெல்— சாதாரணம்	ரூ. 160.00	ரூ.175.00
சன்னம்	ரூ. 170.00	ரூ.185.00
மிக சன்னம்	ரூ. 180.00	ரூ. 195.00

2. அரிசி:

	புழுங்கல் அரிசி.	பச்சரிசி.	புழுங்கல் அரிசி.	பச்சரிசி.
(1)	(2)	(3)	(4)	(5)
			(ரூபாய்கள்)	
சாதாரணம்	251.15	257.40	273.30	280.25
சன்னம்	265.95	272.65	288.10	295.50
மிக சன்னம்	280.70	287.90	302.90	310.75

ஏகபோக நெல் கொள்முதல் திட்டமுள்ள இடங்களில் நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் விலையைவிட கூடுதலாக குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 35 வீதம் அரசுக்கு நெல் ஒப்புவிப்பு செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்க உத்திரவிடப்பட்டது.

3. (அ) பொது விநியோகத் திட்டம் :

தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டம் தனியாரிடமிருந்து முழுமையாக அகற்றப்பட்டு, கூட்டுறவுத் துறையினராலும். நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும் செயல்படுத்தப்பட்டு வருவது ஒரு சிறப்பான அம்சமாகும். தற்போது தமிழ்நாட்டில் பொது விநியோக திட்டத்தின் கீழ் 21134 நியாயவிலைக் கடைகள் இயங்கி வருகிறது. இதன் மூலம் சுமார் 129 லட்சம் குடும்ப அட்டைதாரர்கள் பயனடைந்து வருகிறார்கள். இவற்றில் 17382 நியாயவிலைக் கடைகள் கிராமங்களிலும், 3752 நியாயவிலைக் கடைகள் நகர்புறங்களிலும் செயல்படுகின்றது.

அரசால் அவ்வப்போது நிர்ணயம் செய்யப்படும் விநியோகிப்பாரப்படி குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி சர்க்கரை. சமையல் எண்ணெய் கோதுமை மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. பொது மக்கள் அடிக்கடி பொது விநியோக அங்காடிகளுக்குச் சென்று சிரமப்படாமல் அரிசி மற்றும் மண்ணெண்ணெய் ஆகியன தவிர ஏனைய அனைத்து அத்தியாவசியப் பொருட்களையும் ஒரே சமயத்தில் பெற்றுக் கொள்வதற்கான கூடவழிக்கை செய்யப்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் 129 இலட்சம் குடும்ப அட்டைகள் புழக்கத்திலுள்ளன.

(ஆ) பொது விநியோக திட்டத்தின் கீழ் நுகர்வு விவரம்

நடப்பாண்டில் அத்தியாவசியப் பண்டங்கள் நுகர்வு விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

வரிசை எண்.	பொருள்.	அளவு. (லட்சம் டன்னில்)
	(2)	(3)
1	அரிசி	14.50
2	கோதுமை	2.18 2.78
3	லெவி சர்க்கரை	
4	மண்ணெண்ணெய்	7.46 (லட்சம் கிலோ)
5	சமையல் எண்ணெய்/உதிரி	0.16
6	சமையல் எண்ணெய்/பவுச் மற்றும் டின்	0.08

இந்திய அரசு பொது விநியோகத்திற்கான 40.000 மெட்ரிக் டன் அரிசியை ஒதுக்கீடு செய்திருந்த போதிலும் பொது விநியோகத்தின் மூலம் 1.05 லட்சம் மெட்ரிக் டன் அரிசி விநியோகிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகப்படியான அரிசி நுகர்வு அளவு தமிழக அரசால் கொள்முதல் செய்யப்பட்ட இருப்பிலிருந்து சரிகட்டப்படுகிறது. இது போன்று சமையல் எண்ணெய் 13,000 மெட்ரிக் டன் சர்க்கரை 31,000 மெட்ரிக் டன் மண்ணெண்ணெய் 84,568 கிலோ லிட்டர் தேவையிருந்த போதிலும் முறையே 1300 மெட்ரிக் டன். 22,554.4 மெட்ரிக் டன் மார்ச் முதல் ஜூன் வரை 61281 கிலோ லிட்டர் எனவும் ஜூலை முதல் அக்டோபர் வரை மாதம் 66057 கிலோ லிட்டர் எனவும் நவம்பர் முதல் பிப்ரவரி வரை 73611 கிலோ லிட்டர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சர்க்கரை :

பொது விநியோக முறையில் சர்க்கரை குடும்ப அட்டைதாரர்களுக்கு நபர் ஒன்றுக்கு 600 கிராம் என்ற அடிப்படையில் குடும்ப அட்டை ஒன்றுக்கு அதிகபட்சமாக 2 கிலோ வழங்கப்படுகிறது. லெவி சர்க்கரை மாதம் மாண்றுக்கு முறையே 22554 மெட்ரிக் டன் ஒதுக்கீடுசெய்யப்பட்டு வருகிறது. அட்டைதாரர்கள் குவிர அனுமதிக்கப்பட்ட ஏஜென்சி நிறுவனங்களுடன் இணைக்கப்பட்ட விற்பனை அரசு மற்றும் தனியாரால் நடத்தப்படும் அனாதை இல்லங்கள் பணி செய் மகளிருக்கான தங்கும் விடுதிகள் ஆகியவற்றும் அவை லாப நஷ்டமில்லாமல் செயல்படுபவைகளாக இருப்பின் லெவி சர்க்கரை வழங்கப்படுகிறது.

மண்ணெண்ணெய் :

எரிபொருள் மற்றும் சமையல் காரணங்களுக்கான பயன்படுத்தப்படுவதால் மண்ணெண்ணெய் ஒரு இன்றியமையாப் பொருள் என கருதப்படுகிறது. குடும்ப அட்டைதாரர்களுக்கு பொது விநியோக அங்காடிகள் மூலமும் தனியார் சில்லரை உரிமைதாரர்கள் மூலமும் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இது தவிர வீட்டு உபயோகத்திற்காக உரிமம் பெற்ற வைவண்டிக்காரர்கள் மூலமும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. பருவகால நிலையின் அடிப்படையினால் தமிழ்நாட்டில் 1988–89 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு 8,15,846 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்துள்ளது.

6. கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்கள் :

பொது விநியோக முறை மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்காக இந்திய அரசினால் இம்மாநிலத்திற்கு ஒவ்வொரு மாதமும் பாமாலின் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 1989–90 ஆம் வருடத்தில் இந்திய அரசினால் 10,050 மெட்ரிக் டன் உதிரி பாமோலினும், 1 கிலோ பாக்கெட்டில் அடைத்து வழங்குவதற்காக 5,700 மெட்ரிக் டன் பாமோலினும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்திய அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட சராசரி அட்டைக்கு ஒரு கிலோ வீதம் மாதம் ஒன்றுக்கு தேவைப்படும் அளவு 13,000 மெட்ரிக் டன் 5 ஆகும். உதிரி பாமொலின் தற்போதைய சில்லரை விலை ஒரு கிலோவிற்கு ரூ. 16.30 உதிரி பாமோலினைத் தவிர இந்துஸ்தான் வெஜிடேபில் ஆயில் கார்ப்பரேஷன் மற்றும் டான்காப்பினால்

ஒரு கிலோ பாக்கெட் எண்ணெயும் வழங்கப்படுகிறது. 1 கிலோ பாக்கெட்டின் ஒதுக்கீடு அளவு பாமோலினை வைத்து, சென்னை நகர் மற்றும் புறநகர் பகுதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒவ்வொரு மாதமும் அட்டைக்கு 1 கிலோ பாமோலின் வழங்கப்படுகிறது. இது போக மீதமுள்ள எண்ணெய் ஒரிரு மாவட்டங்களுக்கு சுழற்சி முறையில் வழங்கப்படுகிறது.

கட்டுப்பாடு ஆணைகளை அமுல்படுத்துதல் :

1955—ஆம் ஆண்டு அத்தியாவசியப் பண்டங்கள் சட்டத்தின் விதிகளை மீறியதற்காக வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு :—

1. கடத்தல்	1,358
2. பதுக்கல்	241
3. கள்ளச்சந்தை	547
மொத்தம்	2,146

1989—90 ஆம் ஆண்டில் உணவுப் பொருள் வழங்குதல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலர்களால் கைப்பற்றப்பட்ட பொருட்களின் மதிப்பு ரூ. 158.48 லட்சங்கள். பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு ரூ. 98.54 லட்சங்கள்.

நுகர்வோர் பாதுகாப்பு :

மாநில நுகர்வோர் பாதுகாப்புக்குழுவின் நோக்கம் நுகர்வோர் உரிமை மற்றும் நலன் காக்கப்பட வேண்டும் என்பதாலும் மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழுவின் கீழ் நான்குக் கிளை குழுக்கங்களை பொது சேவைப் பணிகள் பொது விநியோக திட்டம் எடைகளும் மற்றும் அளவைகளும் மருந்துகளும் ஒப்பனைப் பொருட்களும், உணவுக்கலப்படம் நுகர்வோர் கல்வி ஆகிய தொடர்புடைய பிரச்சினைகள் குறித்து விவாதித்து மாநில குழுவுக்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள அறிக்கை அனுப்பி உள்ளன. 7—6—1989, 20—10—1989 ஆகிய நாட்களில் மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழு கூடி அரசுக்கு பயனுள்ள கருத்துக்களை தெரிவித்துள்ளது. நுகர்வோரின் நலன் குறித்து மாணவர்களை பயிற்றுவிக்க 9-ம் வகுப்பு பாட திட்டத்தில் ''நுகர்வோர் நலன் காத்தல்'' என்ற தலைப்பில் ஒரு பாடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நுகர்வோரியலைப் பற்றி அறியும் வகையில் ''க்ரூசெட்'' என்ற ஒரு சிறிய திரைப்படம் மாநிலம் முழுவதும் திரையிடப்பட்டது. ''எல்.பி.ஜி. செய்திகள் என்ற மாதாந்திர பத்திரிக்கை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டு நுகர்வோர் உரிமைகள் மற்றும் நலம் குறித்து அது சமையல் எரிவாயு நுகர்வோரின் நலத்தை தெரிவிக்கிறது. 1—4—1989 முதல் 31—3—1990 முடிய உள்ள காலத்தில் 2,918 நுகர்வோர் குறைகள் மனுக்கள் பெறப்பட்டு தீர்வு செய்யப்பட்டன.

மத்திய மற்றும் மாநில அரசுகள் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுக்கு போதிய நிதி உதவி அளித்து வருகின்றன. திருச்சியில் உள்ள தன்னார்வ நுகர்வோர் அமைப்பு ஒன்று நுகர்வோர் கல்விக்காக ஒரு நாள் நிகழ்ச்சி நடத்துவதற்காக ரூ. 5,000 வழங்கப்பட்டது. சென்னை மாநில நுகர்வோர் சங்கம் ''நுகர்வோரியல்'' குறித்து ஒரு நாள் நிகழ்ச்சி நடத்த ரூ. 5,000 வழங்கப்பட்டது. 25—3—1990 அன்று மிக சிறப்பாக மாநில அளவிலான கருத்தரங்கு கோவை மாவட்டம் கல்லூரியில் நடத்தப்பட்டது. 15—3—1990 அன்று ''நுகர்வோர் தினமாகவும்'' கொண்டாடப்பட்டது. மேற்படி கருத்தரங்கினை நடத்த மத்திய அரசு ரூ. 25,000 வழங்கியது.

நுகர்வோரியல் பணிகளில் தீவிர பங்கேற்கும் இளைஞர்களுக்காக மத்திய அரசு இளைஞர் விருது திட்டத்தினை அறிமுகப்படுத்தி உள்ளது. மாநில அரசாங்கமும் இதுபோன்ற விருது திட்டக்குழு அறிமுகப்படுத்தி, தகுதி உள்ள இளைஞர்கள் மாவட்ட ஆட்சியர்களுக்கு மனு செய்து கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம் 1989—90 :

இம் மாநிலத்தில் ஜூலை மாதம் 1982 முதல் இத்திட்டம் அமுலுக்கு வந்தது. ஆரம்ப காலத்தில் இத்திட்டம் வயது 2 முதல் 4 வரை உள்ளவர்களுக்கு அமுலாக்கப்பட்டது. பின் 15 வயது வரையிலான பள்ளி செல்லும் குழந்தைகளுக்கும் இத்திட்டம் விரிவாக்கப்பட்டது. உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் 5 வயதுமுதல் 9 வயது வரை(முதல் வகுப்பு மட்டும்) மற்றும் 10 வயது முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு கட்டுப்பாடு

காரியாக இருக்கிறார். மதிப்பீட்டு அங்காடிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் பள்ளி கல்வி இயக்குநர் தேவைக்கு ஏற்றபடி, அரசிடமிருந்து அங்கீகாரம் பெற்ற பின், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அவர்களால் போதுமான நிதி ஒதுக்கீடு தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிபக் கழக உணவு பொருள் விநியோகம் செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. உணவு பொருள் அதிகாரிகள் மேற்படி தலைப்புகளில் செய்யப்படும் செலவினத்தை கண்காணித்து வருகிறார். மதிப்பீட்டு அதிகாரிகளால் செலவு செய்யும் தொகை மாநில தலைமை கணக்காயர் பதிந்த புள்ளி விவரங்களுடன் ஒப்பிடப்பட்டு சரிபார்க்கப்பட்டு வருகிறது. செலவின விவரம் அவ்வப்போது அரசுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

அத்தியாயம் 8.

கல்வித் துறை.

அழகப்பா பல்கலைக் கழகம்,

முன்னுரை :

அழகப்பா பல்கலைக்கழகம் 1985 ஆம்–ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட பொழுது நான்கு முதுகலைப் புலத்துறைகளையும். இரண்டு இணைக்கல்லூரிகளையும் பெற்றிருந்தது, கடந்த ஆறு ஆண்டு குறுகிய கால எல்லையில் அழகப்பா பல்கலைக்கழகம் 11 நிறைவுடைய புலத்துறைகளைப் பெற்றுள்ளது, அவை தமிழியல், கணிதவியல், இயற்பியல், தொழிலக வேதியியல், வணிகவியல், கணிப்பான பயன் பட்டியல், நிறுவனச் செயலரியல், கல்வியியல், உடற்கல்வியியல், மகளிர் படிப்பியல், வங்கி மேலாண்மையியல் முதலியனவாகும், ஒவ்வொரு துறையும், முதுகலைப்படிப்பு, எம்ஃபில் படிப்பு, பி.எச்டி, ஆய்வுகளுடன் இயங்கி வருகிறது,

செயற்பாடுகளும் சாதனைகளும் :

இந்தியப் பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பிலும். காமன்வெல்த் பல்கலைக் கழகங்களின் கூட்டமைப்பிலும் அழகப்பா பல்கலைக்கழகம் ஓர் உறுப்பினராக உள்ளது. கல்வியியல், ஆய்வியல் இணைச் செயற்பாட்டு நோக்கில் மாணவர் ஆசிரியர் பரிமாற்றம் தூலகச் செய்திகளும் பொருள்களும் பரிமாற்றம் ஆகியவற்றில் இருமுகப் பயன் நோக்கில் இணைந்து செயற்பட இப் பல்கலைக்கழகம் அமெரிக்க நாட்டு விஸ்கான்சிங்-மில்வாகே பல்கலைக்கழகத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்வது, விஸ்கான்சிங்-மில்வாகே பல்கலைக்கழகத்தில் பொறியியல் பயன்பாட்டு அறிவியல் கல்லூரியுடன் கூட்டுநிலைச் கல்விச் செயல்கள் ஆய்வுத் திட்டங்கள் ஆகியவற்றில் இணைந்து செயற்படவும், இரு பல்கலைக்கழகங்களின் துறைகளில் ஆசிரியர்களின் தோழ தொடர்பையும், கூட்டுறவு செயற்பாட்டையும், ஆக்கூலக்கம், மற்றொரு கூட்டு செயற்பாட்டு ஒப்பந்தத்தையும், இப்பல்கலைக்கழகம் செய்து கொண்டுள்ளது. யுகோஸ்லோவியா நாட்டு டுப்ரோவனிக் என்னும் இடத்தில் உள்ள முதுகலைத் துறைகளின் பல்கலைக்கழகம் மையத்திலும் அழகப்பா பல்கலைக் கழகம் ஓர் உறுப்பினராக உள்ளது,

அழகப்பா பல்கலைக்கழகத்தில் புதுமையும் சமுதாயப் பயன்பாடும் மிக்கப் படிப்புகள் திட்டமிடப்பட்டுச் செயற்படுத்தப்பட்டுள்ளன.

1. எம். ஏ. தமிழும் கோயிற் கலையும்
2. எம். ஏ. முதியோர் முறை சாராக் கல்வியியல்
3. எம். ஏ. மகளிர் படிப்பியல்
4. எம். சி. ஏ. கணிப்பான் பயன் பட்டியல்
5. எம். சி. எஸ். நிறுவனச் செயலரியல்
6. எம். பி. எம். வங்கி மேலாண்மையியல்
7. எம். எஸ்ஸி. தொழில் வேதியியல்,

ஆகியன இவ்வகையில் ஏற்படுத்தப்பட்ட புதிய துறைகளாகும்,

பல்கலைக்கழக மானியக்குழு உதவியுடன் இப் பல்கலைக்கழகத்தில் கணிப்பான் மையம் ஒன்று 14 லட்ச ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. விப்ரோ 386 சிறு கணிப்பான் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் பலவேறு வேறுபட்ட பன்முகச் செயற்பாட்டுக்கு வழியுடைய இக்கணிப்பானை ஆசிரியர்களும், மாணவர்களும் பயன் படுத்தி வருகின்றனர்.

கணிப்பான் பயன்பட்டியில் துறையின் எம்.ஃபில்., முதுகலைப் பட்டப் படிப்பு மாணவி இணைமனித ஆற்றல் முன்மாதிரித் திட்டத்துறை ஏற்பிசைவு தந்துள்ளதோடு நடப்புச் செலவு அல்நடப்புச் செலவு முழுமைக்கும் சிறப்புப் பொருளுதவியும் செய்கின்றது.

இப்பல்கலைக்கழகத்தின் மகளிர் படிப்பியல் துறை பல்கலைக்கழக மான்யக் குழுவால் மகளிர் படிப்பியல் ஆய்வு மையமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது, எனவே இம்மையம் நடப்புச் செலவு, அல்நடப்புச் செலவுக்கான மானியமும் பெறும் இத்துறையில் மகளிர் மையம் தமிழ்நாடு அரசுடன் இணைந்து பள்ளி செல்வதை விட்ட மகளிர்க்கென 'ட்ரைசம்' செயல்திட்டம் ஒன்றை நடத்துகின்றது, அதன்மூலம் வீட்டுப் பயன்பாட்டு மின்கருவிகள், ஸ்கிரீன் பிரிண்டிங், மின்மோட்டார் சீர் செய்தல், தொலைக்காட்சிப் பெட்டி சீர் செய்தல் ஆகியவற்றில் பயிற்சியளித்து சுய வேலை வாய்ப்பிற்கு வழி செய்கின்றது.

பல்கலைக்கழக மானியக்குழு இப்பல்கலைக்கழகத்திற்கு 50 முதியோர் கல்வி மையங்களை அனுமதித்துள்ளது, சாக்கோட்டை ஊராட்சி ஒன்றிய எல்லைக்குட்பட்ட பகுதியில் கல்லாமையை அகற்ற இம்மையங்கள் செயற்பட்டு வருகின்றன.

கிராமப்புற மேம்பாட்டுக்கென கனரா வங்கி 5 லட்ச ரூபாய் முதலீட்டுடன் இப்பல்கலைக்கழகத்தில் ஏவப்புநிதித் திட்டம் அமைந்துள்ளது, இதன்மூலம் சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு உதவுமாறு கிராம நலத் திட்டங்கள் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றன.

மானியம்.

ஆய்வு மேம்பாட்டு நோக்கில் பிளச்டி ஆய்வு மாணியம் திங்கள் தோறும் ரூ. 600-ம் ஆண்டு செலவுக்கென ரூ. 700-ம் இப்பல்கலைக்கழகம் வழங்குகின்றது.

தேசிய சேவைத் திட்டம் :

100 தொண்டர்களையுடைய இப்பல்கலைக்கழக தேசிய சேவை அணி கிராமப்புற மக்களிடம் முதியோர் கல்வி வளர்ச்சி, சுற்றுச்சூழல் தூய்மை, அறிவியல் விழிப்புணர்வு முதலியவற்றுக்காகத் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது.

நிறைவுற்ற திட்டங்கள் :

மாநில அரசின் முழு உதவியினால் 75 லட்ச ரூபாய் செலவில் பல்கலைக்கழக அலுவலகக் கட்டிடம் கட்டப்பட்டது, இது மாண்புமிகு முதலமைச்சரால் 1990 சனவரித் திங்கள் திறந்து வைக்கப்பெற்றது, திராவிட பாணியில் அமைந்த வானளாவிய இக்கவர்ச்சிமிகு கட்டிடத்தின் கட்டமைப்பு புதுமையும் பயன்பாடும் நீர்பாசனப் பேரழகும் இனிது கலந்த ஏற்றமுடையது.

உடற்கல்வி துறைக்கான அலுவலகக் கட்டிடமும் ஆராய்ச்சி மையமும், 26,5 லட்ச ரூபாய் செலவில் 1988-89-ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பெற்றன.

பல்கலைக்கழக மைய நூலகம் 50 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பெற்று தமிழ் நாட்டின் மாண்புமிகு கல்வி அமைச்சரால் 1990-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் திறந்து வைக்கப்பட்டது, நூல்கள், இதழ்கள் வைப்பதற்கும், படிப்போர் அமர்வதற்கும் விரிவிடம் உடைய இக் கட்டிடத்தில் ஆராய்ச்சி மாணவர்களுக்காக தனித் தடுப்பறைகள் படிப்பதையும் எழுதுவதையும் இன்பச் செயற்பாடாக்குமாறு வடிவமைக்கப் பெற்றுள்ளன.

மாணவிகள் உறையுளுக்காக புதுமை வசதிகளோடு கூடிய மகளிர் விடுதி ஒன்று ரூ. 20 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது.

20 லட்ச ரூபாய் செலவில் புதிய அறிவியல் கட்டிடம் ஒன்றும் கட்டப்பட்டு, அதில் தொழில் வேதியியல் துறை செயல் பட்டு வருகின்றது.

ஆசிரியர் குடியிருப்புகள் 20 லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகின்றன.

எட்டாம் திட்ட வளர்ச்சி ஏற்பாடுகள் (பல்கலைக்கழக மானியக்குழு இசைவு பெற்றவை). (1990-95-க்குரியவை).

8-ம் திட்ட காலமான 1990—95-க்கான இப்பல்கலைக்கழக வளர்ச்சிப்பணிக்கு உதவியாகப் பல்கலைக்கழக மானியக்குழு தற்காலிக இசைவாக 125 லட்ச ரூபாய் ஒப்புதல் தந்துள்ளது.

(பகுதி 1-க்கு 85 லட்ச ரூபாயும், பகுதி 2-க்கு 40 லட்ச ரூபாயும்).

கல்வித் துறைகள் :

அ. முதுகலைப்படிப்புகள் :

1. எம்.ஏ. தமிழும் கோயிற்கலையும்
2. எம்.ஏ. மகளிர் படிப்பியல்
3. எம். ஏ. முதியோர் முறைசாராக் கல்வியியல்
4. எம்.எஸ்ஸி. கணிதவியல்
5. எம்.எஸ்ஸி. இயற்பியல்
6. எம்.எஸ்ஸி. தொழிலக வேதியல்
7. எம்.சி.எஸ். முதுகலை நிறுவனச் செயலரியல்
8. எம்.காம்.
9. எம்.சி.ஏ. முதுகலைக் கணிப்பான் பயன் பாட்டியல்
10. எஇ.பி.எம். முதுகலை வங்கி மேலாண்மையியல்
11. எம்.பி.எட்: முதுகலை உடற்கல்வியியல்
12. பி.எட். இளங்கலைக் கல்வியியல்
13. எம்.எட். முதுகலைக் கல்வியியல்

எம்.பிஃல் ஆய்வுகள் :

14. எம்.பிஃல் தமிழும் கோயிற்கலையும்
15. எம்.பிஃல் கணிதவியல்
16. எம்.பிஃல் இயற்பியல்
17. எம்.பிஃல் தொழிலக வேதியில்
18. எம். பிஃல் கணிப்பான் பயன்பாட்டியல்
19. எம். பிஃல் வணிகவியல்
20. எம்.பிஃல் நிறுவனச் செயலரியல்
21. எம்.பிஃல் வங்கி மேலாண்மையியல்
22. எம்.பிஃல் உடற்கல்வியியல்
23. எம்.பிஃல் கல்வியியல்

பி.எச்,டி. ஆய்வுகள் :

எல்லாத் துறைகளிலும் முழு நேர பகுதி நேர பி.எச்.டி. ஆய்வுக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

தொலைக்கல்வித் தொடர்பு நிட்டம் :

கணிப்பான் பயன்பாட்டிலும் உறுப்புகளிலும் பெருஞ் சான்றிதழ்ப் படிப்பு உள்ளது

மாணவர் எண்ணிக்கை

1989—90.

அழகப்பா பல்கலைக்கழகம் பதினொரு முதுகலைத் துறைகளும் இரு கல்லூரி களை தன்னகத்தே உடையது. 1,156 மாணவர்கள் இங்கு பயில்கின்றனர். 812 முழு நேர மாணவர்களும் 344 தொலை கல்வி மாணவர்களும் உளர் துறைதோறும் கீழ்க்கண்டவாறு மாணவர்கள் பயிலுகின்றனர்.

	ஆண்.	பெண்.	கூடுதல்.
1. பதினொரு முதுகலைத் துறைகள்	403	202	605
2. கல்லூரிகள் :			
கல்வியற் கல்லூரி	55	67	122
உடற்கல்வியியல் கல்லூரி	68	17	85
3. தொலை தூரக் கல்விமையம் 1989—90.			
கணிப்பான பயன்பாட்டியலும்			
கணிப்பான் உறுப்புகளும் பெருஞ் சான்றிதழ் —	283	61	344
கூடுதல் —	80	347	156

அண்ணா பல்கலைக் கழகம்.

1989—90—ஆம் வருடத்திற்குரிய இப் பல்கலைக்கழகத்தில் முக்கிய நிகழ்ச்சி களையும் செயல்களையும், கல்வித் திட்டம், ஆராய்ச்சி, முன்னேற்றச் செய்திகள், நிதியுதவி, பொதுச் செய்திகள் என்ற விரிவான தலைப்புகளின் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

கல்வித் திட்டம் :

மொத்த மாணவர்கள்.—1989-1990-ஆம் வருடத்தில் இப்பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை 4,878. அவர்களுள் 703 பேர் தாழ்த்தப்பட்ட பழங்குடி வகுப்பினர். 27 பேர் அயல்நாட்டு மாணவர்கள், மற்றும் 767 பேர் மாணவிகள். சேர்ந்துள்ள 4,878 மாணவர்களுள், 3,503 பேர் பட்டப் படிப்பையும், 1,060 பேர் முதுநிலை பட்டப் படிப்பையும், 315 பேர் ஆராய்ச்சிப் படிப்பினையும் சார்ந்தவர்கள்.

பட்டம் அளித்தல் :

இப்பல்கலைக்கழக பத்தாவது பட்டமளிப்பு விழா 1990-ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 23ஆம் தேதி நடைபெற்றது. அப்போது டாக்டர் வசந்த் கௌரிகர் அவர்கள், செயலாளர், அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை, இந்திய அரசு, பட்டமளிப்பு விழா உரையாற்றினார். 1,306 பேர் பட்டத்தைப் பெற்றனர். இத்துடன் சேர்த்து இப்பல்கலைக் கழகத்தில் 8,444 பேர் பட்டத்தை பெற் றுள்ளனர்.

ஆராய்ச்சி செயல்கள் :

ஆராய்ச்சி படிப்பு.—இந்த ஆண்டு 61 ஆராய்ச்சி மாணவர்கள் (பி.எச்.டி) பட்ட காக சரிபதிவு பெற்றிருந்தனர்.

ஆராய்ச்சிக் கட்டுரைகள் :

430-க்கு மேற்பட்ட ஆராய்ச்சியின் ஆய்வு கட்டுரைகள் இப் பல்கலைக் கழகத்தின் பல துறைகளைச் சார்ந்த ஆசிரியர்களால் எழுதப்பட்டன. அவைகள் தேசிய மற்றும் அனைத்துலக மதிப்புமிக்க அளவிலான அறிவியல் இதழ்களிலும் ஆய்வு மாநாடுகளிலும், பயிலரங்குகளிலும் மற்றும் குறுகியகாலப் பயிற்சி பள்ளிகளிலும் இவ்வாண்டு பதிப்பாகியுள்ளன.

ஆராய்ச்சி திட்டங்கள் :

பல்வேறு நிதியுதவும் நிறுவனங்கள் அளித்த நிதி உதவித் தொகையான ரூ. 753.00 இலட்சத்தைக் கொண்டு 65 ஆய்வுத் திட்டங்கள் இப்பல்கலைக்கழகத்தில் இவ்வாண்டு நடந்தேறிவருகின்றன.

மேம்பாடு பற்றிய செயல்கள் :

மத்திய அரசால் பெறப்பட்ட நிதியுதவி :

1989-1990-ஆம் வருடத்தில் மத்திய அரசிடமிருந்து '' மூன்று பெரிய திட்டத்தின் '' கீழ் ரூபாய் 127.50 இலட்சம் பெறப்பட்டுள்ளது. அதன் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

		(ரூபாய் இலட்சத்தில்)
1.	ஆறாவது திட்டத்தில் 1989-1990 ஆம் வருடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொடர் செலவினத் தொகை.	15.00
2.	ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் ஒப்புதல் பெறப்பட்ட புதிய திட்டங்கள் :—	
	(1) அச்சுத் தொழில் நுட்ப இளநிலை (B. E.) பொறியியல் படிப்பு.	30.00
	(2) பொறியியற் கல்லூரி நூலகத்தை நவீனமயமாக்குதல்	10.00
	(3) பொறியியற் கல்லூரி பட்டறையை நவீனமயமாக்குதல்	15.00
	(4) பொறியியற் கல்லூரி இயற்பியல் ஆய்வுக்கு கூடத்தை நவீனமயமாக்குதல்.	5.00
	(5) சென்னைத் தொழில்நுட்ப நிறுவன தொழில் பட்டறை மற்றும் உற்பத்திப் பொறியியல் ஆய்வுக்கூடம் நவீனமயமாக்குதல்	15.00
	(6) சென்னைத் தொழில்நுட்ப நிறுவன கருவியமைப்புப் பொறியியல் ஆய்வுக் கூடத்தை நவீனமயமாக்குதல்.	10.00
	(7) இரப்பர் தொழில்நுட்ப ஆய்வுக்கூட வசதிகளை உருவாக்குதல்.	20.00
	(8) சென்னைத் தொழில்நுட்ப நிறுவன உந்தூர்திப் பொறியியல் ஆய்வுக் கூடத்தை நவீனமயமாக்குதல்.	7.50
	மொத்தம்	127.50

பல்கலைக்கழக மானியக் குழு அண்ணா பல்கலைக்கழகத்தில், தேசிய அளவில் அனைத்துப் பல்கலைக்கழக படிக வளர்ச்சி மையத்தை அமைப்பதற்காக ரூபாய் 1.5 கோடியை அளித்துள்ளது.

பல்கலைக்கழக மானியக் குழு எட்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்கு அறிவியல் மற்றும் மானிடவியல் துறைக்கு முதற் பகுதியாக ரூபாய் 85 இலட்சத்தையும் இரண்டாவது பகுதியாக ரூபாய் 45 இலட்சத்தையும் அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது.

தமிழக கல்வி அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் டாக்டர் க. அன்பழகன் அவர்கள் இப்பல்கலைக் கழகத்தில் நலவாழ்வு மைய கட்டிடம் மற்றும் மொழிப் பெயர்ப்பியகத்தையும் 26-2-1990 அன்று திறந்து வைத்தார்கள். மேலும் அதே நாளில் ஒய்வு பெற்றவர்கட்கு நினைவுப் பரிசை வழங்கி ஆங்கில பாடநூல் ஒன்றையும் வெளியிட்டார்கள்.

நிதியுதவி :

1989-90 ஆம் வருடத்திற்கு தமிழக அரசும், பல்கலைக்கழக மானியக் குழுவும் மற்றும் இந்திய அரசும் முறையே ரூபாய் 621.32 இலட்சமும் ரூபாய் 259.77 இலட்சமும், ரூபாய் 130.96 இலட்சமும் அளித்துள்ளன.

பொதுவான செய்திகள் :

1989-90 ஆம் ஆண்டில் இப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் வா. செ. குழந்தைசாமி அவர்கள், பல குழுக்களிலும். நிறுவனங்களிலும் முக்கிய பங்கேற்க நியமிக்கப்பட்டுள்ளார்கள், அவற்றுள் முக்கியமானவையாவன :—

அவர்கள் தேசிய அளவிலான அனைத்துப் பல்கலைக் கழக நிறுவனத்திற்கு (Association of Indian Universities) தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்,

(i) தலைவர் — சென்னை மாநகரிலுள்ள இந்திய தொழில் நுட்ப நிறுவனத்தின் திருத்தி அமைக்கப்பட்ட நிலையான அவை,

(ii) துணைத் தலைவர் — தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையம்,

(iii) பகுதி நேர உறுப்பினர்.. — தமிழ்நாடு மாநில திட்டக் கழகம்,

(iv) உயர்மட்டக்குழு உறுப்பினர், — தேசிய பல்கலைக்கழக அணு அறிவியல் மையம், புது டில்லி,

(v) — 1991 காமன்வெல்த் நாட்டுப் பல்கலைக் கழகங்களின் மாநாடு செயல்படுத்துவதற்காக அரசாங்கத்துடன் நிர்வாகம், நிதி நிலைமை, முன் ஏற்பாடுகள். மற்றும் ஆலோசனைக்காக உயர்மட்டக்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

(vi) உறுப்பினர் — உயர்மட்டக்குழு. இந்திய தொழில்நுட்ப நிறுவனம். சென்னை,

(vii) துணைத் தலைவர் — பன்னாட்டு தமிழ் ஆராய்ச்சிக் கழகம்,

(viii) துணைத் தலைவர் .. — பன்னாட்டு தமிழ் கல்வி நிறுவனம்,

(ix) துணைத் தலைவர் — ஆசிய கல்வி நிறுவனம்,

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

1980-ஆம் ஆண்டின் பல்கலைக்கழக நடவடிக்கைகளில் நிறைவான அம்சங்களையும் பிற கல்வி நடவடிக்கைகளின் முக்கிய நிகழ்ச்சிகளையும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன, இந்த ஆண்டில் கல்வி தொடர்பாக நிகழ்ந்துள்ள செயற்பாடுகளும் நிகழ்ச்சிகளும், பல்கலைக்கழகம் பல துறைகளிலும் வளர்ந்துள்ள கற்பித்தல் ஆராய்ச்சி ஆகிய செயல் திறன்களும், வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் மிக உயர்ந்த நிலையை அடைவதற்கு பல்கலைக்கழகம் இந்த ஆண்டு புதிய அறிவை வளர்ப்பதிலும் அதைப் பரப்புவதிலும் எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகளும் இவ்வறிக்கையில் விளக்கப்பட்டுள்ளன, நாட்டு நலப் பணி திட்ட அமைப்பு தேசிய மாணவர் படை அமைப்பு, சமூக நலத்திட்ட அமைப்பு ஆகிய விவரங்கள் இவ்வறிக்கையில் தரப்பட்டுள்ளன,

பல்கலைக் கழகத்தின் வைரவிழா 1989 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14, 15 ஆகிய தேதிகளில் நடைபெற்றது, மேதகு இந்திய குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் விழாவினைத் துவங்கி வைத்தார், மேதகு தமிழக ஆளுநரும் இப் பல்கலைக்கழக வேந்தருமான டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் விழாவிற்கு தலைமை தாங்கினார். கணிப்பொறியியல் அறைக் கட்டி

டத்தை திறந்து வைத்தார், டாக்டர் ராஜா சர், முத்தையாச் செட்டியார் அவர்களின் வாழ்க்கை வரலாறு அடங்கிய புத்தகத்தை வெளியிட்டார். தமிழக முதல்வர் மேன்மைமிகு டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் வைரவிழாச் சொற்பொழிவினை நிகழ்த்தினார், வைரவிழாச் சிறப்பு மலரை வெளியிட்டார்.

சிறப்பு பட்டமளிப்பு விழா ஒன்று வைரவிழாவின் அம்சமாக 14—12—1989 அன்று மேதகு தமிழக ஆளுநரும் இப்பல்கலைக்கழக வேந்தருமான டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதில் நாட்டிற்கு பல்வாற்றானும் தொண்டாற்றி தத்தம் துறையில் வல்லமை புரிந்த சிறந்தோர் சிலருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது,

வைர விழாவினையொட்டி, சுவியரங்கம், பழைய மாணவர்கள் கூட்டம், சிறப்பிக்கும் விழாக்கள் ஆகியவை 15—12—1989 அன்று நடந்தது. சிறப்பிக்கும் விழாவிற்கு தமிழக அரசின் கல்வி அமைச்சர் மேன்மைமிகு டாக்டர் சு. அன்பழகன் அவர்கள் தலைமை ஏற்று தமிழக முதல்வர் மேன்மைமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் எழுதிய குறளோவியம் என்ற நூலின் ஆங்கில பெயர்ப்பை வெளியிட்டார். வைரவிழாவினையொட்டி கண்காட்சி ஒன்றும் 16, 17 டிசம்பர் திங்களில் நடந்தது.

தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் கல்வி மையம் ஒன்று கோயம்புத்தூரில் 14—06—1989 அன்று திறந்து வைக்கப்பெற்றது.

பல்கலைக்கழக நூலகம் மற்றும் செய்தியியல் துறையில் எம்.பில், பி.எச்.டி. படிப்புகள் துவங்க ஒப்புதல் பெறப்பட்டது.

இயந்திரம் மற்றும் உற்பத்தி பொறியியல் துறையில் வேலையில்லாத இளைஞர்களுக்கு தச்சுத் தொழில், பிட்டிங் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 1990—ம் ஆண்டு தேர்விலிருந்து பல்கலைக்கழக தேர்வுகளை மறு மதிப்பீடு செய்யும் முறையினை அனுமதிப்பது என்று கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பல்வேறு துறைகளிலிருந்து ஆராய்ச்சியைத் துரிதப்படுத்தவும், ஆய்வேட்டை கொடுப்பது, மதிப்பிடுவது போன்றவற்றில் ஒழுங்குபடுத்தப்பட்டு கால விரயம் ஆவதைத் தடுத்து முடிவு விரைவில் தெரிவிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தக் கல்வியாண்டில் 41 மாணவர்களுக்கு பி.எச்.டி. பட்டமும், 226 மாணவர்களுக்கு எம். பில். பட்டமும் அளிக்கப்பட்டுள்ளது.

தரம் குறையா முறையில் ஆராய்ச்சியை ஊக்குவிக்க ஆராய்ச்சி பட்டம் பதிவு செய்யும் முறை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட முதுகலைப் படிப்பு உள்ள பிற கல்லூரிகள் பிற ஆராய்ச்சி துறைகளில் உள்ளவர்கள் ஆராய்ச்சி பட்ட படிப்புக்குப் பதிவு செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது. மேலாளர், இணை மேலாளர் முறையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு பல்கலைக் கழகம் கீழ்க்கண்ட புதிய பாடத் திட்டங்களை ஏற்படுத்தியுள்ளது.

(1) நூலகம் மற்றும் செய்தித் துறையில் முதுகலைப் பட்டம்.

(2) கணிப்பொறியியல்—பொறியியல் இளங்கலைப் பட்டம்.

(3) மின் அணு மற்றும் கருவிப் பொறியியல் பகுதி நேர பொறியியல் இளங் கலை.

(4) ஜியோ மெக்கானிக்கல் எஞ்சினியரிங்—பொறியியல் முதுகலைப் பட்டம்.

(5) ஜெனிடிக்ஸ் மற்றும் ப்ளான்ட் பிரீடிங் என்ற பாடத்தில் வேளாண்மை முதுகலைப்பட்டம்.

(6) அரிசி பக்குவப்படுத்தும் டெக்னாலஜியில் சான்றிதழ்.

(7) நெல் பக்குவப்படுத்துப் டெக்னாலஜியில் சான்றிதழ்.

(8) எதிர் காலவியலில் எம்.டெக். பட்டம்.

(9) மின் அணு கருவிப் பொறியியல் துறையில் முதுகலை மேல் சான்றிதழ்.

(10) கருத்து மாற்றத்துக்கு ஆங்கிலம்—சான்றிதழ் படிப்பு.

கீழ்க்காணும் புதுப் பாடத்திட்டங்கள் தொலைதூரக் கல்வித் துறையில் இந்த ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

(1) கன்ஸ்ட்ரக்ஷன் மேனேஜ்மன்ட் முதுகலை அளவில் மேல் சான்றிதழ்
(2) கூட்டுறவு மேனேஜ்மண்ட் முதுகலை அளவில் மேல் சான்றிதழ்.
(3) வங்கியியலில் மேல் சான்றிதழ்.

17—04—1989 அன்று மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன், கல்வி அமைச்சர், தமிழ்நாடு அரசு அவர்கள் பொன்விழாக் கட்டிடத் திறப்பு, வைரவிழா கொண்டாட்டங்களை தொடங்கி வைத்தல், சில தமிழறிஞர்கள் பெயரால் அறக்கட்டளைகளை ஏற்படுத்தியது, பல்கலை வெளியீடுகள் ஆகியவை நடத்தி வைத்தார்கள்.

பல்கலைக்கழக இரண்டாம் நிறுவனர் டாக்டர் ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்களின் 86 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா 05—08—1989 அன்று சீரிய முறையில் நடைபெற்றது. அன்று இந்தியன் வங்கி தலைவர் திரு. எம். கோபால கிருஷ்ணன் நிறுவனர் நினைவுச் சொற்பொழிவினை ஆற்றினார்.

55 ஆம் நிறுவனர் நினைவு நாள் 30—09—1989 அன்று கொண்டாடப்பட்டது. அப்பொழுது மாண்புமிகு மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் அவர்கள் நிறுவனர் நினைவுச் சொற்பொழிவினை ஆற்றி தொலைதூரக் கல்வி நுறையில் கூடுதல் கட்டிடங்களையும் திறந்து வைத்தார்.

பல்கலைக்கழகத்தின் 57-வது பட்டமளிப்பு விழா 13—11—1989 அன்று நடைபெற்றது. மாண்புமிகு டாக்டர் பி. சி. அலெக்சாண்டர், தமிழக ஆளுநர் மற்றும் வேந்தர் தலைமை தாங்கினார். இதில் 2,206 மாணவ மாணவிகள் பட்டம் பெற்றனர். 853 பேர் நேரிலும் மற்றவர்கள் அஞ்சல் மூலமும் பட்டம் பெற்றனர்.

இந்த ஆண்டில் 31 டிசம்பர் திங்கள் முடிய மாணவர்கள் எண்ணிக்கை 7,905. தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் மாணவர்களின் எண்ணிக்கை 48,879.

பல்கலைக்கழக வேலைவாய்ப்புத்துறை மற்றும் வழிகாட்டி நிறுவனம் வேலையில்லாத பொறியியல் மாணவர்களை சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், சிறு தொழில்களைத் தொடங்குமாறு ஊக்குவித்து வருகிறது. அதோடு தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய தனிப் பயிற்சி வகுப்புகள் மற்றும் பணிக்கு முந்தைய பயிற்சிக்கும் ஏற்பாடு செய்து வருகிறது. இதனால் பல மாணவர்கள் பயனடைந்தனர்.

தேசிய மாணவர் படை 580 மாணவர்களுடன் கீழ்க்கண்ட மூன்று பிரிவுகளால் இயங்கி வருகின்றது.—

(1) 4 தமிழ்நாடு கூட்டுத் தொழில்நுட்பக் குழு.
(2) 6 தமிழ்நாடு படைப் பிரிவு.
(3) 5 தமிழ்நாடு கடற்படைப் பிரிவு.

மேலும் பட்டாளப் பயிற்சி, நன்னடை நல்கல் ஆகியவற்றுடன் இளைஞர்கள் உடலுறுதியும் உள்ள எழுச்சியும் உடையவர்களாகி வாழ்க்கையில் எந்த சவாலையும் சமாளிக்கத் தக்கவர்களாக விளங்குமாறும் நல்ல தொண்டு செய்து வருகிறது.

நாட்டுப் பணித்திட்டம் என்ற அமைப்பானது 2,000 மாணவர்களைக் கொண்டது. இது பல பல மாணவர்களையும் ஈடுபடுத்தி ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சிப் பணி முகாம்களை அடிக்கடி சுற்றுப்புறக் கிராமங்களில் நடத்தி வருவதின் மூலம் மிக நல்ல பணியைச் செய்து வருகின்றது. செயல் முறை ஏகக் கல்வித் திட்டம் இதனால் ஒரு புதிய முக்கியத்துவம் பெற்றுள்ளது. இத்திட்டத்தில் 1,000 மாணவர்களுக்கு மேல் கலந்துகொண்டனர்.

இந்த ஆண்டில் பல்கலைக்கழகத்திற்கு அதன் வளர்ச்சிக்கென பல்கலைக்கழக மானியக்குழு, தமிழக அரசு, மத்திய அரசு மற்றும் பல உதவி நிறுவனங்களிலிருந்து ஸ்தாபனங்கள் கிடைத்துள்ளன.

பாரதியார் பல்கலைக் கழகம்

அறிமுகம் :

பாரதியார் பல்கலைக்கழகம் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பாரதியார் பல்கலைக்கழகச் சட்டம் 1981-ன்படி (தமிழ்நாடு சட்டம் 1இ 1982) மருதமலைத் தொடரைப் பின்புலமாகக் கொண்டு, கோவை நகரிலிருந்து 16 கி.மீ. தூரத்தில் சுமார் 1,000 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டது. இது ஒரு தொழிற்பயிற்சி அல்லாத கல்வி நிறுவனங்களைக் கொண்டு கோவை, பெரியார், நீலகிரி ஆகிய மூன்று மாவட்டத்துக் கல்லூரிகளையும் ஒருங்கிணைத்து இயங்குகிறது. இப் பல்கலைக்கழகம் பல்கலைக் கழக மானியக் குழுவினால் 1985 ஆம் ஆண்டு மே மாதம் முதல் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

இப் பல்கலைக்கழகம் வேதியியல், இயற்பியல், விலங்கியல், தாவரவியல், சமூகவியல், உளவியல், பொருளியல், கணிதவியல், புள்ளியியல் என ஒன்பது ஆய்வுத்துறைகளுடன் இயங்கத் தொடங்கியது. தொடக்கத்தில் இப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டிற்குக் கீழ் 33 கல்லூரிகள் இயங்கின. தற்பொழுது பல்கலைக் கழகத்தில் மேலாண்மைத் துறையுடன் 19 துறைகள் இயங்குகின்றன. பல்கலைக் கழக மானியக் குழு மற்றும் மத்திய மாநில அரசுகளின் கல்வித் திட்டங்களின் அடிப்படையில் சமுதாயத் தொடர்புள்ள துறைகள் தொடங்கப்பட்டு வருகின்றன. புதிய துறைகளாக மொழியியல், அறிவியல், உடலியற்கல்வி, மேலாண்மை, சுற்றுப்புறச் சூழல் அறிவியல், உயிர்த் தேனீழில் நுட்பத்துறை, கல்வித்தொழில் நுட்பத்துறை, வணிகவியல் துறை ஆகியன செயல்படுகின்றன.

பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகள் :

மனித வள மேம்பாட்டிற்கு இப் பல்கலைக்கழகம் சிறந்த தலைமை அளித்ததால் இதில் இணைந்த கல்லூரிகள் இதன் எல்லைக்குள் திறன்பட்ச் செயல்படுகின்றன. 1989–90 கல்வியாண்டில் 27 கலையியல் மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 9 தொழிற் கல்விக் கல்லூரிகளும், 2 கல்வியியற் கல்லூரிகளும் ஒரு சட்டக் கல்லூரியும், ஒரு உடலியற் கல்லூரியும், ஒரு விமானப்படை நிர்வாகக் கல்லூரியும் ஆக 41 கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்தின் கீழ் செயலாற்றுகின்றன. இவற்றுள் 24 கல்லூரிகள் இரு பாலரையும் மாணாக்கராகக் கொண்டவை. 9 கல்லூரிகள் ஆண்கள் கல்லூரிகளாகவும், 8 கல்லூரிகள் பெண்கள் கல்லூரிகளாகவும் அமைந்துள்ளன. இப் பல்கலைக்கழகம் 8 கல்லூரிகளுக்குத் தன்னாட்சி உரிமத்தினையும், ஒரு கல்லூரிக்குப் பகுதி தன்னாட்சி உரிமத்தினையும் வழங்கியுள்ளது. இக்கல்லூரிகள் பல புதுமையான தொழில்திறன் அடிப்படையிலான கல்வியை வளர்ப்பதில் மிக ஈடுபாட்டுடன் செயல்படுகின்றன. இவை மாணவர்களின் வேலை வாய்ப்புக்கான வளர்நிலைக் கல்வி நிறுவனங்களாக வளர்ந்துள்ளன.

பல்கலைக்கழகத் துறைகளிலும், இணைப்புக் கல்லூரிகளிலும் 36 அறிவியல் துறைகளும், 21 கலைத் துறைகளும், 8 வணிகவியல் துறைகளும் 7 கல்வித் துறைகளும் 8 சமுதாய அறிவியல் துறைகளும், 8 சட்டத் துறைகளும், 8 மருத்துவத்துறைகளும் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப் படிப்புக்கு என ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 8 ஆயிரம் இளங்கலை, 1,250 முதுகலை, 3,000 பொறியியல் மற்றும் தொழில்துறை, 260 சட்டப்படிப்புத் துறை, 350 இளம் ஆய்வாளர்கள் மற்றும் 175 முதுநிலை (டாக்டர்) ஆய்வாளர்கள் என்ற அளவில் மாணாக்கர்கள் பட்டம் பெறுகின்றனர். இப் பல்கலைக்கழகம் இளநிலை, முதுநிலை ஆய்வுக்கென 67 வேறுபட்ட துறைகளை அனுமதித்துள்ளது. மேலும் இப் பல்கலைக்கழகம் 10 கல்வி நிறுவனங்களுக்கு இளநிலை, முதுநிலை ஆய்வுக்காக அறிந்தோப்பு அளித்துள்ளது.

தேர்வுமுறையும் சீர்திருத்தமும் :

இணைப்புக் கல்லூரிகளில் உள்ள பல்வேறு நிலையிலான மாணவர்களின் தேவையின் அடிப்படையிலான தேர்வு முறையின்|கிறன்களிலேயே பல்கலைக்கழகத்தை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்காகச் செய்யப்படும் சோதனை அமைந்துள்ளது. கல்விக் குழுவும், ஆட்சிக்குழுவும் பல்வேறு கல்வித்துறைக்கு வெற்றிகரமாக வழி காட்டியுள்ளன. இவை பாடத்திட்டம் (Curriculam) தயாரிப்பதற்கும், பாட அமைப்பிற்கும், பாடத் திட்டக் கருத்திற்கும் வழிகாட்டி உயர்ந்த கல்வித் தரத்தை கடந்த ஆண்டுகளில் பெறச் செய்துள்ளன. பல்கலைக்கழக மானியக் குழுவின் பொதுவான விதிகளின் பரிந்துரைகளின்படி பல்கலைக்கழகத் தேர்வுமுறை அமைக்கப் பட்டது. அனைத்து வகுப்புகளுக்கும் அனைத்து நிலைகளுக்கும் 'இது அல்லது அது' என்ற முறையின் அடிப்படையில் கேள்விகள் தயார் செய்யப்பட்டன. பாடத்திட்டம் அலகுகளாக எல்லா நிலைகளிலும் எல்லாத் துறைகளிலும் பின்பற்றப்படுகிறது. விண்ணப்பங்களை ஒழுங்கு செய்தல், தேர்வு நுழைவுச் சீட்டு அளித்தல், போலி எண்ணிட்ட தேர்வு விடைத்தாளிலிருந்து உண்மை எண்ணுக்கு மதிப்பெண் பதிதல்,

தேர்வு முடிவு வெளியிடுதல், மாணவர்களுக்கு மதிப்பெண் படிவம் வழங்குதல் வரை தேர்வுமுறையை வெற்றிகரமாகக் கணிப்பான் மயமாக்கிய ஒரு சில கல்வி நிறுவனங்களில் பாரதியார் பல்கலைக்கழகமும் ஒன்றாகும். மாணவர் சேர்க்கை, அனுமதி, பதிதல், பாடப்பகுதி திட்டமிடுதல், பாடத்திட்டம் அமைத்தல், பட்டமளிப்பு விழா நடத்தல் போன்ற முக்கியமான செயல்கள் நிறனான ஆட்சியமைப்பினால் கடந்த ஆண்டுகளில் பல்கலைக்கழகத்தை சுமூகமாக நடத்திச் செல்லப்பட்டுள்ளன. மாணவர்களுக்காக அளிக்கப்பட்ட ஆய்வுக்கூடம், ஆய்வுக் கருவிகள், நூலகம் மற்றும் பொதுவான அடிப்படை வசதிகளை மதிப்பீடு செய்வதற்காக சிறப்பு நிபுணர்கள் குழு அமைத்தனால் அது பல்கலைக்கழகத்தை வளர்ச்சி பெறச் செயவதற்கும், உயர்ந்த கல்வி நிலையையும், சிறந்த தரத்தையும் பெறுவதற்கு உதவிகரமாக இருந்தது.

விரிவாக்கச் செலவுகள் :

அறிவின் பயன் இறுதியில் மக்களுக்குச் சென்றடைய வேண்டும். குறிக்கோளை நிறைவேற்றாத கல்வி பலனற்ற ஒன்று. முறை சார்ந்த நிறுவனங்களின் மூலம் திறமைகளுக்கும் இளைஞர்களுக்கும் துணை புரியும் சமுதாயத்திற்காக இது எந்த விதத்திலும் தொடர்பு அற்றது. பல்கலைக்கழகம் நாட்டு நலப்பணித் திட்டம், பல்கலைக்கழகம் வயது வந்தோர் தொடர் கல்வித் திட்டத்தின் மூலமாகவும் மக்களுக்கு நற்பணியாற்றுகிறது. நாட்டு நலப் பணித்திட்ட 10,300 மாணவர்களைக் கொண்டு, 100 மையங்களின் மூலமாக சமூக சேவையையும், மக்கள் சேவையையும் செய்கின்றது. பல்கலைக்கழகம் நடத்திய நாட்டு நலத் பணித்திட்டத்தின் முக்கியமான பணிகள்—கிராமங்களில் சாலை அமைத்தல், கிராமங்களில் பள்ளிக்காகவும், இளைஞர் மன்றங்களுக்காகவும் கட்டிடங்கள் நிர்மாணித்தல் போன்றவை. மேலும் இலவச மருத்துவ உதவி, எழுத்தறிவுத் திட்டம், இரத்த தானம் போன்றவைகளும் அதன் முக்கியப் பணிகளாகும். மாணவர்களுக்கும் கிராமவாசிகளுக்கும் இடையே தொடர்பை வளர்க்க இதுவரை 50 சிறப்பு முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பாரதியார் பல்கலைக்கழகம், பல்கலைக்கழக மானியக் குழுவின் மூலம் ரூ. 5,00,000.00 உதவியுடன் வயதுவந்தோர் கல்விமையம் ஒன்று நிறுவியுள்ளது. பல்கலைக்கழக அமைப்பும், இப்பல்கலைக்கழகத்தைச் சார்ந்த மற்ற கல்லூரிகள் நடத்தும் வயது வந்தோர் கல்வியமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளன. அதன்மூலம் கோவை, நீலகிரி, பெரியார் மாவட்டங்களில் உள்ள மலை சாதியினருக்கும், ஏழை எளியவர்களுக்கும் செயல்முறை எழுத்தறிவு மையங்கள் அமைந்துள்ளன. வயது வந்தோர் கல்வி வகுப்புகளில் சேர்ந்த 1,218 பேர்களிலே தாழ்த்தப்பட்டவர்களில் 435 வயதுவந்தவர்களையும், எழுத்தறிவு பெற்றவர்களாக மாற்றியுள்ளது. இப் பல்கலைக்கழகம் வயது வந்த கற்பவர்களுக்காக ஓர் சிறப்பு மலரை வெளியிட்டுள்ளது. கற்பவர்களுக்காக 8 துணை நூல்களும், வெளியிடும் தருவாயில் உள்ளது. பெரிய நாய்க்கன்பாளையம் பகுதியில் உள்ள ஆதிக்கடவு என்னும் இடத்திலும், சிறுவாணி மலைப் பகுதியிலும் 1987-ஆம் ஆண்டு இந்த அமைப்பு ஒரு மருத்துவ முகாமையும் கணக்கெடுப்பையும் செய்தது. இம்முகாம் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்கள் சுமார் 1,080 நபர்களுக்கு உதவிகரமாக இருந்தது. அட்டப்பட்டியின் மேற்குப் பகுதியில் மிகத் தொலைவில் உள்ள மலைஜாதி வாழும் இடம், காடர், புலையர், இருளர், மலசர் வாழும் திருமூர்த்தி மலைகள் போன்ற இடங்களிலும் இத்திட்டம் செயல்பட்டது. 1987-இல் ஒரிசாவில் உள்ள புவனேஸ்வர் என்னும் இடத்தில் நடைபெற்ற கிராமியக் கலை விழாவில் பாரதியார் பல்கலைக்கழக வயது வந்தோர் கல்வித்துறையின் மூலம் கற்றவர் தேசியத் தகுதி பெற்றுள்ளனர்.

பல்கலைக்கழக விளையாட்டுத்துறை :

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழகம் சார்ந்த கல்லூரி மாணவர்களின் விளையாட்டுத்திறனை வளர்க்க பல்கலைக்கழகம் பெருமுயற்சி எடுத்துள்ளது. பல்கலைக்கழக விளையாட்டுக்குழு உயர்தரம் வாய்ந்தது. பல குழுக்கள் பல பகுதி பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டன. கல்லூரிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் அமைப்பதற்காகவும், பல்வேறு பகுதியின் அடிப்படையிலான தேசிய அளவிலான விளையாட்டுக்களை அமைப்பதற்காகவும் இப்பல்கலைக்கழகம் சராசரியாக ரூ. 2,00,000.00 வரை செலவு செய்கின்றது.

துறைகளின் விவரணை :—

சென்னைப் பல்கலைக்கழகத்தின் 9 துறைகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பாரதியார் பல்கலைக்கழகம் பல புதிய துறைகளை ஆரம்பித்து தனின் கல்வி வளத்தினை உயர்த்தியது. சம்முமுன்வரை இப்பல்கலைக் கழகம் 16 துறைகளைக் கொண்டிருந்தது. உயிர்நுட்பவியல், கல்வி நுட்பவியல் மற்றும் வணிகவியல் துறைகளை சேர்க்கையால் மொத்தம் 19 துறைகளைக் கொண்டுள்ளது.

ஆய்வுப் பணி :

திறன் வாய்ந்த இளைய ஆய்வாளர்களை வளர்க்கும் முகமாகவும், அவர்களைக் கவருமுகமாகவும் 19 பல்கலைக்கழக ஆய்வாளருக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது. 1985-86-லிருந்து ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு துறைக்கும், ஒவ்வொரு ஆய்வாளருக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது. உதவித் தொகை மாதம் ரூ. 750-ம் வருடத்திற்கு இதரச் செலவுத் தொகை (தற்காலிகச் செலவுத் தொகை) ரூ. 2,000.00-ம் வழங்கப்பட்டன. பல்கலைக்கழக மானியக் குழு 15 இளநிலை ஆய்வாளருக்கு உதவித் தொகை வழங்கியது. மாதந்தோறும் ரூ. 1,800.00, வருடந்தோறும் தற்காலிகச் செலவுத்தொகை ரூ. 5,000.00 வழங்கியது. பல்கலைக்கழகம் ஆசிரியர்களின் கல்வித் திறனை வளர்க்கவும், உயர்கல்வி பெறவும் பலவழிகளில் உதவியுள்ளது. அதன் பலன் பல்கலைக்கழகத்தில் உள்ள மாணவர்களின் கல்வி விழிப்புணர்வையும், புதிய ஆய்வையும் உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. 1989-ஆம் ஆண்டில் மொத்தம் வழங்கப்பட்ட ஆய்வுப்படங்கள் இளநிலை ஆய்வு (Ph.D.) 82. முதுநிலை ஆய்வு (M.Phil.) 18.

மேலும் பல்கலைக் கழகத்துறை உறுப்பினர்களின் ஆய்வு வெளியிடுகளும் அதிகரித்துள்ளன. 1988-க்குமுன் 6 வருடங்களாக பல்வேறு ஆய்வு இதழ்களில் 700-க்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. 1989—90-ஆம் வருடத்தில், பல்வேறு துறையைச் சார்ந்தவர்களால் 252 ஆய்வுக் கட்டுரைகளும் 12 புத்தகங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

கணிப்பொறி மையம் :

கணிப்பொறி மையத்தை உருவாக்குவதில் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் அல்லாத பல்கலைக்கழகங்களில் பாரதியார் பல்கலைக்கழகம் முதன்மையாக இருக்கிறது. பல்கலைக்கழக மானியக் குழுவின் உதவியுடனும், பல்கலைக்கழக நிதியுடனும், 7-வது ஐந்தாண்டுத்திட்டத்தில் ரூ. 25,00,000.00 செலவில் அதி நவீன கணிப்பான்கள் நிறுவப்பட்டுள்ளன. இது, எல்லாத் துறைகளின் ஆய்வு, ஆய்வுத்திட்ட பணிகளுக்கு கணிப்பொறி யைப்பயன்படுத்த வழிவகை செய்கின்றது. மேலும் இது, முழுநேர MCA, MBA, PGDCA போன்ற வகுப்புகளும் நடந்த உதவுகிறது. கணிப் பொறித்துறை வங்கி ஊழியர் களுக்கான கணிப்பொறி பயிற்சியளித்தது. கணிப்பொறிப் பயிற்சிச் சான்றிதழ் அளிக்க வசதி செய்துள்ளது. பல்கலைக்கழகத் தேர்வுமுறை சம்பந்தமான பணி களிலும் இம்மையம் செயல்புரிந்து வருகிறது. அண்மையில் பல்கலைக் கழகத்தில் கணிப்பொறி மையத்தின் வசதிகளைப் பயன்படுத்துவோரின் தேவை மிகுதியாகி விட்டது.

1990-ஆம் ஆண்டு மார்ச்சு திங்களுக்குள் பின்வரும் துறைகளுக்குத் தேவையான ஆய்வு உபகரணங்களை (System Configurations) அளித்திடுவது என்று முடிவு செய்யப் பட்டது.—

(1) புள்ளியியல் துறை,
(2) கணிதத் துறை,
(3) தமிழ்த்துறை,
(4) பொருளியல் துறை,
(5) மக்கள் தொகை கல்வியியல் துறை,
(6) இயற்பியல் துறை
(7) மொழியியல் துறை.

சுற்றுப்புற மேம்பாடு :

ஏற்கனவே உள்ள மரம் நடுவதற்கான திட்டங்களுடன் தோட்டம் ஒன்றை உருவாக்குவதற்கான ஒரு தனித்திட்டம் ஒன்றை நிறுவுவதற்கென்று பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது. தமிழ்நாடு வனத்துறை பல்கலைக்கழக வளாகத்தில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் தோட்டம் ஒன்றை உருவாக்கத் திட்டம் தீட்டியுள்ளது. இப்படிப்பட்ட திட்டம் இந்திய நாட்டிலேயே பெரும்பாலும் இது ஒன்றே ஆக இருக்கக்கூடும். இத் தோட்டத்தை வளர்ப்பதற்கென்று தமிழ்நாடு வனத்துறையானது ரூ. 16.5 லட்சம் செலவிடத் திட்டமிட்டுள்ளது. ஐந்தாண்டு காலத்திற்கு இத்தோட்டத்தின் மேற் பார்வையும் பராமரிப்பும் வனத்துறையின் பொறுப்பில் இருக்கும். பின்னர் இப் பல்கலைக்கழகத்தின் பொறுப்பிற்கு வரும்.

சுற்றுபுற நிட்டமிடுதல் :

பல்கலைக்கழகத்தின் சுற்றுப்புறத்தை மேம்படுத்துவதற்கும், அதன் அவசியத் தையும் பல்கலைக்கழகம் உணர்ந்துள்ளது. மரம் நடுதல், தோப்பு உருவாக்குதல் போன்றன படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டு வருவதால் 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள பல்கலைக்கழக வளாகமானது பசுமைப் போர்வை போர்த்தப்பட்டுள்ளதுபோல் மிளிரும். இணைப்புக் கல்லூரிகள் இவ்வளாகத்தில் தோட்டங்களை நிறுவுவதற்கு சில திட்டங்களை தத்தமது நிதியுடன் செயல்படுத்த முன்வந்துள்ளன.

வருவாய் மற்றும் கணக்குகள் :

	ரூபாய்.
1, மாநில அரசு மானியம் :	
பராமரிப்புக்கான மானியம்	60,00000.00
பல்கலைக்கழக மானியக்குழு மூலம் வழங்கப்பட்ட ஊதிய நிலுவை.	26,00,000.00
பல்கலைக்கழக மானியக்குழுவால் வழங்கப்பட்ட ஊதியம்.	4,50,000.00
கட்டடங்கள் கட்டுவதற்காக	30,00,000.00
2. பல்கலைக்கழக மானிய குழுவின் மானியம் :	
மேலாண்மைத் துறை ஆசிரியர்க்கான குடியிருப்புக்காக ...	3,62,000.00
60 மாணவர்களுக்கான விடுதிக்காக	3,50,000.00
விருந்தினர் இல்லத்திற்காக	3,70,000.00
ஆசிரியர் குடியிருப்புக்காக	2,00,000.00
பல்கலைக்கழக மானியக் குழுவின் திட்டங்களுக்காக	5,31,000.00
பல்கலைக்கழக மானியக் குழு அல்லாதவையில்	2,31,000.00
உபகரணங்களுக்காக	19,00,000.00
நூல்களுக்காக	12,00,000.00
மகளிர் விடுதிக்காக	1,50,000.00
திறந்தவெளி விளையாட்டரங்கத்திற்காக ...	2,00,000.00
3. செலவினங்கள் :	
திரும்பப் பெறமுடியாத வகையில்	130,94,405.00
கட்டடங்களுக்காக	49,08,263.00
மூலதனம்	1,50,000.00
பிற திட்டங்களுக்காக	2,87,052.25
பல்கலைக்கழக மானியக் குழு :	
(1) நூல்களுக்காக	4,61,346.00
(2) உபகரணங்களுக்காக	6,95,969.15
(3) ப.மா. குழு கூட்டங்கள்	46,02,000.00
(4) ப.மா. குழு திட்டங்கள்	4,76,754.67
(5) ப.மா. குழு அல்லாத வகையில் ...	6,66,122.07

1989–90 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய படிப்புகள் :

கல்லூரியின் பெயர்.	அறிமுகப்படுத்தப் பட்ட படிப்பு.
1. சி.பி.எம். கல்லூரி ..	பி.பி.எம்.
2. வேளாளர் கல்லூரி ..	பி.எஸ்.சி.
3. தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழக்கல்லூரி	பி.காம்.
4. இரத்தினவேல் சுப்பிரமணியம் கல்லூரி ..	எம்.சி.ஏ.
5. டாக்டர் ஜி. ஆர். தாமோதரன் கல்லூரி ..	எம்.ஏ. (சமூகநலம்).
6. ஸ்ரீநேரு மகாவித்யாலயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி.	பி.எஸ்.சி., பி.பி.ஏ & பி.காம்.

பாரதிதாசன் பல்கலைக் கழகம்.

பாரதிதாசன் பல்கலைக்கழகம் :

முன்னுரை :

பாரதிதாசன் பல்கலைக் கழகம் 1982-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. திருச்சிராப் பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்கள் இதன் ஆட்சிக்குட்பட்ட பகுதிகள். 1989-90 ஆம் ஆண்டு கால கட்டத்தில் இப்பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளும் செயற்பாடுகளும் கீழே தரப்பட்டுள்ளன. அவை கல்வித் திட்டங்கள், ஆய்வுப் பணிகள், துறைப் பணிகள், நிதி, கல்வி சாராப் பணிகள் ஆகிய தலைப்புகளில் இடம் பெறுகின்றன.

ஆட்சிக் குழு:

இவ்வாண்டில் ஆட்சிக் குழு ஒன்பது முறை கூடி, பல்கலைக்கழகத்தில் கல்விச் செயற்பாடுகள் மற்றும் நிர்வாகம் தொடர்பான முக்கியமான முடிவுகள் பலவற்றை எடுத்தது. அத்துடன் பல முக்கிய கருத்துக்களும் ஆட்சிக் குழுவின் சுற்றுக்கு விடப் பட்டு முடிவெடுக்கப்பட்டன.

பேரவைக் குழு :

இந்த அறிக்கையாண்டில் இணைவு பெற்று கல்லூரிகளின் முதல்வர்கள் நீங்க லாக பிற ஆசிரியர்களிடமிருந்து 38 புது உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அறிக்கையாண்டில் 26-4-1989 அன்றும் 23-12-1989 அன்றுமாக இக்கூட்டங்கள் நடைபெற்றன. அதில் 26-4-1989 அன்று நடந்தது ஆண்டுக் கூட்டம் மேற்கூறிய கூட்டங்களில் நடைபெற்ற கருத்துப் பரிமாற்றங்களும் சிந்தனைகளும் வளர்ந்து வரும் இப்பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிப் பணிகளுக்குப் பெரிதும் உதவுவனவாக அமைந்தன.

கல்வித் திட்டங்கள் :

இணைப்பு பெற்ற கல்லூரிகள் :

இணைவு பெற்ற மற்றும் ஒப்புதல் பெற்ற கல்வி நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை கடந்த ஆண்டில் 47 ஆக இருந்தது. இந்த அறிக்கையாண்டில் இந்த எண்ணிக்கை 48 ஆக உயர்ந்தது.

புதிய வகுப்புகள் :

இந்த ஆண்டில் கீழ்க்காணும் வகுப்புகள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டன.—

1. பல்கலைக் கழக துறைகள் :

   1. வருங்காலவியல்.

   2. வருங்காலக் கல்வியியல் எம்.ஃபில்.

   3. கல்வி நுட்பவியலில் எம்ஃபில்.

2. இணைவு பெற்றக் கல்லூரிகள் :

   1. முது அறிவியல் — செயலுறு இயற்பியல், கனிப்பொறி மின்னணுவியல்

   2. முது அறிவியல் — வேதியியல்.

   3. முதுகலை — வணிகவியல்.

   4. இலம் அறிவியல் — இயற்வியல்.

   5. இளம் அறிவியல் — செயலுறு தானியங்கி அறிவியல்

   6. நடைமுறையிலிருந்து பொருளாதாரவியல் படிப்பு கிராமப்புற நிர்வாகத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் இளங்கலை பொருளாதாரவியல் படிப்பாக மாற்றப்பட்டது.

   7. பட்டமேற்படிப்புச் சான்றிதழ் வணிகத் தரவுச் செயல் முறையாக்கம்.

   8. பட்டமேற்படிப்புச் சான்றிதழ் செயல்திட்ட ஆய்வியல்.

9. இளங்கலை வணிகவியல்

10. இளம் அறிவியல் கனிப்பொறியியல்

11. எம்ஃபில் வணிகவியல்

12. எம்ஃபில் வரலாறு

13. பட்ட மேற்படிப்புச் சான்றிதழ், கனிப்பொறியியலும் பயன்பாடுகளும்

14. சான்றிதழ், பரதநாட்டியம்

கடந்த 2½ ஆண்டுக்கான இடைவெளியில் கல்விக் கழக ஆசிரியர் கல்லூரி இதுகாறும் 10 இணைப்புப் பயிற்சி வகுப்புகளையும் இரண்டு புத்தொளிப் பயிற்சி வகுப்புகளையும் நடத்தியுள்ளது. இந்த இணைப்புப் பயிற்சி வகுப்புகளில் பங்கு பெற்ற ஆசிரியர்கள் ஒன்றிலிருந்து ஏழு ஆண்டுகள் வரை அனுபவம் பெற்றவர்கள். இவர்களுக்குப் பயிற்சியளிக்க பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்த பல துறை வல்லுநர்கள் பயன்படுத்தப்பெற்றனர்.

கல்வி சிராக்கம், விரிவாக்கம் மற்றும் வளர்ச்சிப் பணிகள் :

புதிய கண்டுபிடிப்புகள், விரிவாக்கம் மற்றும் வளர்ச்சிப் பணிகள் என்ற நிலையில் விரிவான பல கல்விப் பணிகள், துறைகளிலும் இணைவு பெற்ற கல்லூரிகளிலும் இந்த அறிக்கையாண்டில் குறிப்பிடத்தக்க அளவில் நடைபெற்றுள்ளன.

மாணவர் சேர்க்கை : இவ்வாண்டில் பல்கலைக் கழகத்தின் இணைவு பெற்ற கல்லூரிகளின் அனுமதிக்கப்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

பட்டப் படிப்பு	12,855
பட்ட மேற்படிப்பு	2,558

மாணவர் சேர்க்கை :

தேர்வுகளைக் குறித்த காலத்தில் நடத்தியும் முடிவுகளை உரிய நேரத்தில் வெளியிட்டும் இப்பல்கலைக் கழகம் தனது நற்பெயரை நிலை நிறுத்தியுள்ளது.

ஆறாவது பட்டமளிப்பு விழா 1989 நவம்பர் 12 ஆம் நாள் நடைபெற்றது. இந்தியாவில் தலைமை நீதிபதி மாண்புமிகு ஈ. எஸ். வெங்கடராமய்யா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். 8,667 இளங்கலை மாணவர்கள் 1920 முதுகலை மாணவர்கள், 383 எம்ஃபில், 1,920 பட்ட மேற்படிப்பு, 20 பி.எச்.டி., 56 சட்டம், 43 மருத்துவம், 764 பொறியியல் மாணவர்கள் (நேரிலும் அஞ்சல் வழியாகவும்), பட்டம் பெற்றவர்.

நூலகம் :

இந்த அறிக்கைக் காலத்தில் 2,431 நூல்கள் வாங்கி சேர்க்கப் பெற்றன. 160 ஆய்வித்தழ்களுக்கு உறுப்பினர் கட்டணம் செலுத்தப்பட்டது. நூலக உறுப்பினர் எண்ணிக்கை 5,500 ஆக உயர்ந்தது. ஏழாவது திட்டத்தின் சிறப்பு நிதியுதவியின் கீழ் நூல்கள் மற்றும் ஆய்வித்தழ்கள் வாங்குவதற்காகப் பல்கலைக் கழக மானியக் குழு 10 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்தது.

ஆய்வு :

பல்கலைக் கழகங்கள் அனைத்திற்கும் மைய நோக்கமாக விளங்குவது ஆய்வே. பாரதிதாசன் பல்கலைக் கழகமும் ஆய்விற்குச் சிறப்பிடம் அளிக்கிறது. பல்கலைக் கழகத் துறைகள், ஆய்வுப் பள்ளிகள் அனைத்திலுமாக மொத்தம் 133 எம்ஃபில் ஆய்வாளர்களும், 63 பி.எச்.டி. ஆய்வாளர்களும் உள்ளனர். இவர்களைத் தவிர இணைவு பெற்ற கல்லூரிகளும் எம்ஃபில் ஆய்வுக்காக 263 ஆசிரியர்களையும் பி.எச்.டி.க்காக 146 ஆசிரியர்களையும் பதிவு செய்துள்ளன.

ஆய்வுத்திட்டங்கள் :

தமிழக அரசு முதலான பல்வேறு நிறுவனங்களின் நிதியுதவி பெற்று பல்கலைக் கழகப் புலங்கள் பல ஆய்வுத் திட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. அறிக்கைக் காலக் கட்டத்தில் 80 இலட்சத்திற்கும் அதிகமாக நிதி ஒதுக்கீட்டில் 24 ஆய்வுத் திட்டங்கள் நடைபெற்றன. வழக்கம்போல், இந்த ஆண்டும் பல்கலைக் கழகத்தில் பல உறுப்பினர்கள் பலரும் பல பரிசுகளையும் சிறப்புகளையும் பெற்றுள்ளனர்.

வளர்ச்சிப் பணிகள் :

U.G.C., C.I.S.R., D.S.T., D.O.E.N., D.O.D., I.C.A.R.

இந்திய மைய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சர் மாண்புமிகு பி. வெ. சங்கர் அவர்களால், நமது பல்கலைக் கழகப் பணியாளர் குடியிருப்புகள் 28–8–1989 அன்று துவக்கி வைக்கப்பெற்றன.

நிதிக் குழு :

ஆட்சிக்குழு உறுப்பினர்களான திரு. வி. கார்த்திகேயன், இ.ஆ.ப., (ஓய்வு பெற்றவர்) முனைவர் ஜி. ரங்கசாமி, பேரா. எஸ், இராமமூர்த்தி ஆகியோர் நிதிக் குழு உறுப்பினர்களாகவும் தொடர்ந்து செயலாற்றினர். துணைவேந்தரின் தலைமையில் கூடிய நிதிக் குழு 1989–90ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கையைத் தயாரித்தது. தொடர்ந்து இவ்வறிக்கை ஆட்சிக் குழுவின் ஒப்புதலையும் பெற்றது.

கல்வி செயற்பாடுகளுக்கான நிலைக்குழு :

புதிய பாடத் திட்டக் குழுகள் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏழு புதிய தலைவர்கள், கல்விச் செயற்பாடுகளுக்கான நிலைக் குழுவின் உறுப்பினர்களாயினர். இந்த நிலைக்குழு 31–5–1989 முதல் 31–10–1989 வும் ஆக இரு முறை கூடியது. பல்வேறு கல்விச் சிக்கல்களுக்குத் தீர்வு காணப்பட்டன. மேற்கொண்டும் புதிய வகுப்புகள் தொடங்குவது பற்றிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. இளங்கலை :—

கணக்கியல் (இரண்டாண்டு ஏ.டி.எஸ்.சி. கணக்கியல் வகுப்பு மாற்றியமைக்கப்பட்டது.)

2. ஒருங்கிணைந்த ஐந்தாண்டு முது அறிவியல் :

இரண்டாண்டு எம்.ஆர்.எஸ்.சி. வகுப்பு மாற்றியமைக்கப்பட்டது.

3. இளம் அறிவியல் மருந்து வேதியியல் :

மருந்தியல் உதவியாளர் கல்வியில் இரண்டாண்டு ஏ.டி.எஸ்.சி. வகுப்பு மாற்றியமைக்கப்பட்டது.

கல்விச்சாராச் செயற்பாடுகள் :

கல்லூரி மாணவர்களிடையே தொண்டு மனப்பான்மையை ஏற்படுத்தவும், அவர்களது ஆளுமைத் திறனை மேம்படுத்தவும் வாய்ப்பளிக்கும் வகையில் பாரதிதாசன் பல்கலைக் கழகம் 43 கல்லூரிகளில் தேசிய சேவைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. இந்த அறிக்கைக் காலத்தில் மொத்தம் 21,600 மாணவர்கள் தேசிய சேவைத் திட்டத்தில் பங்கு பெறும் வாய்ப்பைப் பெற்றனர்.

கல்லூரிக் கல்வி.

முன்னுரை :

தமிழ்நாட்டில் கல்லூரிக் கல்வியின் ஒருங்கிணைந்த முன்னேற்றத்தையும் கல்லூரிக் கல்வி விரிவு படுத்துதலையும் நோக்கமாகக் கொண்டு, பொதுக் கல்வித் துறையிலிருந்து 1965 ஆம் ஆண்டு அக்டோபர் கல்லூரிக் கல்வி இயக்ககம் உருவாக்கப்பட்டது. கல்லூரிக் கல்வி இயக்ககம் தனியாக உருவாக்கப்பட்ட பின்னர் இத்துறை வேகமாக முன்னேறி வளர்ச்சி அடைந்துள்ளது.

இவ்வியக்ககம் உருவாக்கப்பட்ட போது தமிழ்நாட்டில் 92 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் 18 கல்வியல் கல்லூரிகளும் இருந்தன. தற்போது 210 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் (54 அரசுக் கல்லூரிகள், 132 அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகள், 25 அரசு உதவி பெறாத தனிநிதி கல்லூரிகள், 21 கல்வியியல் கல்லூரிகளும் (7 அரசு கல்லூரிகள், 14 அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகள்), 15 தொழிசை மொழிக் கல்லூரிகளும், 3 உடற்கல்வியியல் கல்லூரிகளும், 2 சமூகப் பணி கல்வி நிறுவனங்களும் மொத்தம் 252 கல்லூரிகளுடன் சிறப்புற செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் பயிலும் மாணவர்களின் 1989-90 ஆம் ஆண்டிற்கான எண்ணிக்கை இத்துடன் இணைப்பில் அளிக்கப்பட்டுள்ளது.

இம்மாநிலத்திலுள்ள 252 கல்லூரிகளும் சென்னை பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்துடன் (Affiliated) இணையப்பெற்றுள்ளது. இக்கல்லூரிகளில் பட்டப் படிப்பு பட்ட மேற்படிப்பு இரண்டும் பல்வேறு பாடப் பிரிவுகளில் வழங்கப்படுகின்றன. சில கல்லூரிகளில் எம்.பில்., பி.எச்டி. போன்ற ஆராய்ச்சி படிப்புகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

சுயநிதிக் கல்லூரிகள் :

தமிழ்நாட்டில் உள்ள ஆயிரக்கணக்கான மேல் நிலைப்பள்ளியிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் 2 தேர்வில் வெற்றி பெறும் மாணவர்கள் எண்ணிக்கை கூடுவதையும், அதனால் கல்லூரிக் கல்வி பயிலுவோர் எண்ணிக்கை கூடுவதை ஈடு கட்டும் நோக்கத்துடன் கடந்த சில ஆண்டுகளில் அரசு உதவி பெறாத சுயநிதி அடிப்படையில் இயங்கும் 22 தனியார் சேவை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளது. மக்களுக்கு சேவை செய்யும் மனப்பான்மையுடன் புதிய கல்லூரி தொடங்க முன்வரும் கல்வி முகமைகளுக்கு ஊக்கம் அளிக்கலாம் என தற்போதைய அரசு முடிவு எடுத்துள்ளதால் 1989-90 ஆம் கல்வியாண்டில் இரண்டு நிதி உதவி பெறாத தனியார் கல்லூரிகளை (Unaided Private Arts and Science Colleges) தொடங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

தன்னாட்சிக் கல்லூரிகள் :

தமிழ்நாட்டில் உள்ள அரசு கல்லூரிகளில் 4 கல்லூரிகளுக்கும் அரசு மானியம் பெறும் தனியார் கல்லூரிகளில் 31 கல்லூரிகளுக்கும் தன்னாட்சி உரிமை (Autonomous Status) வழங்கப்பட்டுள்ளது. அனைந்திந்தியாவிலும் பிற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ் நாட்டில் தான் மிக அதிக அளவில் தன்னாட்சி உரிமை பெற்றுள்ள கல்லூரிகள் உள்ளன. சென்னைப் பல்கலைக் கழகம் சென்னையிலுள்ள ஒய். எம். சி. ஏ. உடற்பயிற்சிக் கல்லூரிக்கு தன்னாட்சி உரிமை அளித்துள்ளது.

கூடுதல் பட்ட வகுப்புகளும், புதிய பாடங்களும் :

கல்லூரிகளில் சேர விழையும் மாணவர் எண்ணிக்கை அதிகரித்ததின் பொருட்டு 1989-90 ஆம் கல்வியாண்டில் அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகளில் 7 இளநிலை பட்ட வகுப்புகளும், 12 முதுநிலை பட்ட வகுப்புகளும் தொடங்கப்பட்டது. ஆனால் அரசு கல்லூரிகளில் புதிய இளநிலை பட்ட வகுப்பு முதுநிலை பட்ட வகுப்புகள் துவங்க நிதி ஒதுக்கீடு ஏதும் அரசால் செய்யப்படாததால் 1989-90 ஆம் கல்வியாண்டில் அரசு கல்லூரிகளில் புதிய வகுப்புகள் ஏதும் துவக்கப்படவில்லை. தனியார் கல்லூரிகளில் துவக்கப்பட்ட பட்ட வகுப்புகள் பெரும்பாலும் வேலை வாய்ப்பு அதிகமுள்ள (Job-Oriented) பாடங்களாக உள்ளவை என்பது கோடிட்டு காட்டப்பட வேண்டிய தகவல் ஆகும்.

மானியங்கள் :

1989-90 ஆம் ஆண்டில் இத்துறைக்கென வரவு-செலவு திட்டத்தில் ரூபாய் 114 கோடியே 92 லட்சம் (திட்டம் மற்றும் திட்டமில்லா மானியம்) வழங்கப்பட்டுள்ளது. இத் தொகை பொதுக் கல்விக்காக பல்கலைக் கழகங்களுக்கு வழங்கும் மானியம் அரசுக் கல்லூரிகளுக்கான கட்டிடச் செலவு மற்றும் மாணவர்களுக்கான படிப்புதவித் தொகை இத் தொகையில் அடங்கும். 1989-90 ஆம் ஆண்டில் இம்மாநிலத்திலுள்ள பல்கலைக் கழகங்களுக்கும் ரூ. 18 கோடியே 87 லட்சத்து 84 ஆயிரம் தொகுப்பு மானியமாக (Block grants) அரசு ஒதுக்கியுள்ளது. மாணவர்களுக்கு படிப்புதவித் தொகைகளில் தேசிய படிப்புதவித் தொகைத் திட்டம், தேசியக் கடன் படிப்புதவித் தொகை திட்டம், பள்ளி இறுதி வகுப்பு மெட்ரிகுலேஷன் தேர்வுகளில் மாநிலத்தில் அதிக மதிப் பெண்கள் பெற்ற மாணவர்களுக்கான படிப்புதவித் தொகை திட்டம், முறைசாரா மானியத் தொகைத் திட்டம் (Adhoc grant) இராணுவப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கான படிப்புதவித் தொகைத் திட்டம் முன்னாள் இராணுவ வீரர்களின் பிள்ளைகளுக்கான படிப்புதவித் தொகை திட்டம், பணிக் காலத்தில் மரணமடைந்த முன்னாள் அரசு ஊழியர்களின் பிள்ளைகளுக்கான கல்விச் சலுகைகள் வழங்குதல் திட்டம், கல்லூரிகளில் தமிழ் வழியின் பயிலும் மாணவர்களுக்கான ஊக்கத் தொகைத் திட்டம் ஆகிய அனைத்தும் சேர்ந்து ரூபாய் 46,57,000 ஒதுக்கப்பட்டு இந் நிதியாண்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கல்லூரிகளில் வசதிகள் :

அரசு மானியம் பெறும் கல்லூரிகளில் சிற்றுண்டி சாலைகளையும், சாப்பாட்டு அறைகளையும் கட்டுதல், குடிநீர் வசதி செய்தல், சைக்கிள் நிறுத்தும் கொட்டகை கட்டுதல் போன்ற அடிப்படை வசதிக்காக திட்ட தலைப்பில் ரூபாய் 4 லட்சத்து 12 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது.

பல்கலைக் கழக மானியக் குழுவின் ஆசிரியர் படிப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (F.I.P. Scheme) 1989-90 ஆம் ஆண்டில் தனியார் கல்லூரிகளில் பணிபுரியும் 202 ஆசிரியர்களுக்கு எம். பில். பி.எச்டி. பயில அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ஜவஹர்லால் நேரு அறிவியல் புத்தகம் வழங்கும் திட்டம் :

கல்லூரி மாணவர்களிடையே அறிவியல் பாடம் கற்பதிலும் அறிவியலில் திறமையை வளர்க்கவும் ஊக்குவிக்கும் எண்ணம் 1989-90 ஆம் ஆண்டில் ரூ. 6,33,000 செலவில் 3,168 மாணவர்களுக்கு ஜவஹர்லால் நேரு நினைவாக அறிவியல் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவச பட்டப்படிப்புத் திட்டம் :

இத்திட்டம் அரசு மற்றும் அரசு உதவி பெறும தனியார் கல்லூரிகளில் 12-9-1989 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பெற்றோருடைய ஆண்டு வருமானம் ரூ. 12,000 வரை உள்ள ஏழை மற்றும் நடுத்தர வகுப்பு மாணவிகள் பயன்பெறும் வகையில் பட்டப் படிப்பு மற்றும் இலவசக் கல்வி இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக 1989-90 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை ரூபாய் 14.07 லட்சம், பயனடைந்த மாணவியர்களின் எண்ணிக்கை 5,444.

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கான கல்விச் சலுகைகள் :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபைச் சார்ந்த மாணவ/மாணவியர்களின் கல்வி நலம் காக்க, இலவசக் கல்வி படிப்புக் கட்டணம் (Tuition fees) தனிக் கட்டணம் (Special fees) தேர்வுக் கட்டணம் (Examination fees) மற்றும் கட்டாயக் கட்டணங்கள் வருமான வரம்பின்றி சலுகை அளிக்கும் திட்டம் 29—7—89 முதல் (1989-90 ஆம் கல்வியாண்டு) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆதிதிராவிடர்—பழங்குடியினர் மாணவ, மாணவியர்களுக்கான கல்விச் சலுகைகள் :

ஆதி திராவிடர்கள், பழங்குடியினர்கள் மதம் மாறிய திருத்துவர்கள் கல்வி நலம் காக்க ஆதி திராவிட பழங்குடியினத்தைச் சார்ந்த மாணவ மாணவியர்கள் மத்திய அல்லது மாநில அரசின் உதவித் தொகைகள் ஏதும் பெறாமல் இருந்தால், அவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானத்தை கணக்கில் கொள்ளாமல் பட்டப்படிப்பு வரை சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் வழங்கும் திட்டம் 1—8—89 முதல் அரசால் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. 1989-90 ஆம் கல்வியாண்டில் இத் திட்டத்திற்காக அரசால் செலவிடப்பட்ட தொகை ரூபாய் 14,67,850. இத் திட்டத்தின் கீழ் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 4,707.

மாணவர்களுக்கான படிப்புதவித் தொகை :

இத்துறையின் மூலம் 1989-90 ஆம் நிதியாண்டில் மாணவர்களுக்கென வழங்கப்பட்ட சில முக்கிய படிப்புதவித் தொகை திட்டங்களின் விவரம் பின்வருமாறு :

1. தேசிய படிப்புதவித் தொகைத் திட்டம் அளிக்கப்பட்ட தொகை ரூ. 45 லட்சம்.
   பயன்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 4,049.

2. தேசிய கடன் படிப்புதவித் தொகைத் திட்டம்.
   அளிக்கப்பட்ட தொகை ரூபாய் 29,61,500.
   பயன்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 3,002.

3. பள்ளி ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கான மாநில படிப்புதவித் தொகை திட்டம்
   அளிக்கப்பட்ட தொகை ரூ. 69,370.
   பயன்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 116.

4. பள்ளியிறுதி வகுப்பு, ஆங்கிலோ இந்திய பள்ளியிறுதி வகுப்பு, மெட்ரிகுலேஷன் போன்ற தேர்வுகளில் மாநிலத்திலேயே மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கான படிப்புதவித் தொகைத் திட்டம்.
   அளிக்கப்பட்ட தொகை, பயன்பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை—ஆங்கிலோ இந்திய மாணவர்களுக்கான உதவித் தொகை விண்ணப்பங்கள் ஏதும் கிடைக்கப் பெறவில்லை.

5. கல்லூரிக் கல்வி மாநில உதவித் தொகைத் திட்டம்.
   அளிக்கப்பட்ட தொகை ரூபாய் 43,290.
   பயன்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 147.

6. முறைசாரா ஹட்ஹாக் மான்யத் தொகை திட்டம். (60 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண் பெற்ற ஆதி திராவிடர் பழங்குடியினர் மற்றும் திருத்துவ மதத்திற்கு மாறியவர்களுக்கும்) அளிக்கப்பட்ட தொகை ரூ. 6 லட்சம்.
   பயன்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 1,928.

7. இராணுவப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கான படிப்புதவித் தொகைத் திட்டம்.
   அளிக்கப்பட்ட தொகை ரூபாய் 6,461.
   பயன்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 17.

8. முன்னாள் இராணுவ வீரர்களின் பிள்ளைகளுக்கான படிப்புதவித் தொகைத் திட்டம்.

அளிக்கப்பட்ட தொகை ரூ. 2,148.25 பைசா.

பயன்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை .

பணிக் காலத்தில் மரணமடைந்த முன்னாள் அரசு ஊழியர்களின் பிள்ளைகளுக்கு கல்விச் சலுகைகள் வழங்கும் திட்டம்.

அளிக்கப்பட்ட தொகை ரூபாய் 80,000.

பயன்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 33.

தமிழ் வழி பயிலும் மாணவர்களுக்கு ஊக்குவிப்பு :

கல்லூரிகளில் தமிழ் பயிற்று மொழியை ஊக்குவிக்கும் வகையில் பட்ட வகுப்புகளின் தமிழ் மொழி மூலம் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 180 வீதம் ஊக்கத் தொகை ஒவ்வொரு கல்வி ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. 1989-90 ஆம் ஆண்டில் இதற்காக மொத்தம் செலவிடப்பட்ட தொகை ரூ. 40,51,800 இதன் மூலம் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 22,510.

தமிழ் நாட்டிலுள்ள அரசு மற்றும் தனியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் ஆசிரியர்களின் பணிப்பளுவை நிர்ணயிக்கும்பொருட்டு 15 நபர்கள் அடங்கிய குழு 8—12—1989 முதல் ஏற்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சென்ற ஆண்டுகளைப் போன்றே உயர் கல்வியின் வளர்ச்சிக்கு தொடர்ந்து இல்வியக்கம் பாடுபட்டு வருகிறது.

கன்னிமாரா (மாநில மைய) நூலகம்.

சென்னையிலுள்ள சுன்னிமாரா பொது நூலகம், அது தோன்றுவதற்குக் காரணமாக இருந்த கன்னிமாரா பிரபுவின் பெயரைக் கொண்டு ஆங்கிலோ இத்தாலிய கட்டிடப்பாணியில் கட்டப்பட்ட கட்டிடத்தில் 5—12—1896 அன்று சென்னை அரசால் ஆரம்பிக்கப்பட்டது.

1950-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்த நூலகம், 1948ம் ஆண்டின் தமிழ்நாடு பொது நூலகச் சட்டத்தின்படி மாநில மைய நூலகம் ஆயிது, 1955-ம் வருடம் செப்டம்பர் திங்கள் 10-ம் நாளுக்குப் பிறகு இந்தியாவில் வெளியாகும் எல்லா மொழி பிரசுரங்களையும் இலவசமாகப் பெறும் நான்கு தேசிய சேமிப்பு நூலகங்களில் ஒன்றாக ஆயிது.

2. இடவசதி :

இடப் பற்றாக்குறையை ஈடுசெய்யும் வகையில் ரூ. 12,7 லட்சம் செலவில் மூன்று மாடிக் கட்டிடம் கட்டப்பட்டது, இந்நூலகம் 1—4—1974 முதல் இப் புதிய கட்டிடத்தில் பணியாற்றி வருகிறது.

71,700 சதுர அடி இட வசதியும் 29,000 அடி கொள்ளளவுற்ற நூல அடுக்கு கொண்ட இந்நூலகத்தில் ஒரே சமயத்தில் 350 வாசகர்கள் அமர்ந்து படிக்கலாம்.

3. சிறப்பு பிரிவு :

இந்நூலகம் 1956 ஆம் ஆண்டு யுனெஸ்கோ வெளியீடுகள் பெறும் மைய நூலகமாகவும் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் வெளியீடுகளைப் பெறும் அமைப்பாகவும் விளங்குகிறது.

1, குறிப்புதவி

2, பாடநூல் பணி

3, வீட்டு நூல் விநியோகிக்கும் பணி

4, நூல்கள் இரவல் வழங்கும் பணி

5. நூற்றொகைப் பணி

6. பத்திரிகைப்பணி

7. ஒளிக்காட்சிப் பிரிவு

8. நகலெடுக்கும் பிரிவு

9. பிற பணிகள்,

5. குறிப்புதவி பிரிவு I

உடனுதவும் குறிப்புதவும் நூல்கள் பிரிவு ஒன்று ஆராய்ச்சியாளர்களுக்கும் ஆய்வு மாணவர்களுக்கும் உதவும் வகையில் 1—11—1981 முதல் தனிப் பிரிவாக இயங்கி வருகிறது. இங்கு கலைக் களஞ்சியங்கள் அகராதிகள். ஆண்டேடுகள் மற்றும் கை யேடுகள் போன்ற குறிப்புதவும் புத்தகங்கள் வைக்கப்பட்டு வாசகர்களுக்கு இப்பிரிவு பணியாற்றி வருகிறது,

6. பாட நூல் பிரிவு :

இப்பிரிவில் கல்லூரி பல்கலைக் கழகங்கள் நிர்ணயித்துள்ள பாட நூல்களைக் கொண்ட பிரிவு 1—11—1981 முதல் செயலாற்றி வருகிறது,

7. வீட்டு நூல் விநியோகப் பிரிவு :

இப்பிரிவின் வாயிலாக அங்கத்தினர்களுக்கு தேவையான நூல்களை அவர்களது இல்லங்களுக்கு சென்று விநியோகிக்கப்படுகிறது, இதற்காக ஒவ்வொரு வீடுவழிநூல் வாசகர்களிடமிருந்து (உறுப்பினர் வைப்பு கட்டணம் நீங்கலாக) மாதம் ரூ. 1 வசூலிக் கப்படுகிறது,

8. நூல் இரவல் பணி :

1—1—1930 முதல் சென்னை நகரில் வாழும் மக்களுக்கு நூல்கள் இரவல் வழங்கும் பணியினை இந்நூலகம் மேற்கொண்டு வருகிறது, இந்நூலகத்தில் 31—3—1990 வரை 42,540 (விலகல் நீங்கலாக) உறுப்பினர்கள் சேர்ந்துள்ளார்கள், இவர்களுக்கு 1988—89 ஆண்டில் மொத்தம் 2,05,879 நூல்களை இரவலாக வழங்கப்பட்டுள்ளது,

1963-ம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் குழந்தைகளுக்கான தமிழ் நாடு குழந்தை கள் நூற்றொகை என்னும் திங்கள் வெளியீட்டினையும் 1964-ம் ஆண்டு சூலை திங்கள் முதல் தமிழ் புத்தகங்களுக்கான தமிழ்நாடு நூற்றொகை என்னும் திங்கள் வெளியீட்டி னையும் வெளியிட்டு வந்தது. இவ்விரண்டையும் இணைத்து 1969-ம் ஆண்டு முதல் தமிழ்நாடு நூற்றொகை என்னும் பெயரில் திங்கள்தோறும் வெளியிட்டு வருகிறது. திங்கள்தோறும் வெளியாகும் இந்நூற்றொகை தொகுதி ஆண்டு வெளியீடாக அச்சிட்டப் படுகிறது.

9. பத்திரிகைப் பகுதி :

நூல்கள் விநியோகச் சட்டத்தின்கீழ் பெறப்படும் பருவ வெளியீடுகள் அவ்வப் போது பதிவு செய்யப்படுகிறது. மற்ற பருவ வெளியீடுகள் வாசகர்கள் படிப்பதற் காக மேசை மேல் வைக்கப்பட்டுள்ளது. பருவ வெளியீடுகள் பதிவு அட்டைகள் முதலில் மொழிவாரியாகவும் பின்னர் அகர வரிசையாகவும் வைக்கப்பட்டுள்ளது.

நூல்கள் மற்றும் செய்தித்தாள்களின் சட்டத்தின் கீழ் பல்வேறு மொழி யிலுள்ள செய்தித் தாள்கள் பயன்பாட்டிற்காக தொகுத்து வைக்கப்பட்டுள்ளது. 1989—90-வது ஆண்டில் மொத்தம் 3,320 பருவ இதழ்களும் 255 செய்தித் தாள்களும் இந்நூலகத்தில் பெறப்பட்டுள்ளன.

10. ஒளிக்காட்சிப் பிரிவு :

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பிரிவில் வாசகர்கள் தேர்வு செய்யும் ஒளிக் காட்சிகள் தொலைக்காட்சியில் பார்க்கும்படி வசதிகள் செய்யப்பட்டுள்ளது. இப் பிரிவு 11—8—1989 முதல் செயல்பட்டு வருகிறது.

12. நகலெடுக்கும் பிரிவு :

நூல்கள் நகல் எடுக்கும் வசதி 1—2—1985 முதல் இந்நூலகத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. முதல் நகல் ஒன்றுக்கு ரூ. 0.75 பைசாவும் கூடுதல் நகல் ஒவ்வொன்றுக் கும் 0.50 பைசாவும் வசூலிக்கப்படுகிறது. இப்பணி ஆராய்சியாளர்களுக்கும் மாணவர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

13. பிற பணிகள் :

மேற்கூறிய பணிகள் தவிர்த்து மேலும் சில பணிகள் இந்நூலகம் மேற்கொண்டுள் ளது.

1. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங்கில நூல்களின் காலாண்டு பட்டியலை தயார் செய்து தமிழ்நாட்டிலுள்ள எல்லா மாவட்ட நூலகங்களுக்கும் இந்தியாவிலுள்ள பெரிய நூலகங்களின் குறிப்பிற்காக அனுப்பி வருகிறது.

2. ஒரு குறிப்பிட்ட தலைப்பின் சம்பந்தப்பட்ட புது புத்தகங்கள் வாசகர் களுக்கு தெரிவிக்கும் வகையிலும் அண்மையில் நூலகத்தில் சேர்க்கப்பட்ட நூல்களை அவ்வப்பொழுது வாசகர்களின் பார்வைக்கு காட்சியாக வைக்கப்படுகிறது.

3. சென்னைக்கு அப்பாற்பட்ட இடத்தில் வசிப்பவர்கள் இந்நூலகத்தில் உள்ள நூல்களை இரவலாக எடுத்துப் படிக்க வேண்டுமெனில் நூலக ஆணைக் குழுவின் கீழ் இயங்கும் மாவட்ட மைய நூலகத்தின் வாயிலாக எடுத்து படிக்கவும் அவர்களுக்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

4. மூன்று மாதத்திற்கு ஒரு முறை கல்வி, கலாச்சாரம்,பண்பாடு சம்பந்தப்பட்ட படக் காட்சிகள் வாசகர்களுக்கு இலவசமாக காட்டப்படுகிறது.

14. பணி நேரமும் பணி நாளும் :

இந் நூலகம் 1—4—1989 முதல் கீழ்க்குறிப்பிட்டுள்ள மூன்று தேசிய விடுமுறை நாட்களைத் தவிர்த்து அனைத்து நாட்களிலும் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை நாள்தோறும் 12 மணி நேரமும் வருடத்தில் 362 நாட்களும் பொது மக்களின் பயிற்சிக்காக திறந்து இயங்கி வருகிறது

15. தேசிய விடுமுறை நாட்கள் :

அ. இந்திய குடியரசு தினம்.

ஆ. இந்திய சுதந்திர தினம்.

இ. மகாத்மா காந்தி பிறந்த நாள்.

16. ஆய்வுப் பிரிவு :

1930 ஆம் ஆண்டிற்கு முன் வெளியான பருவ இதழ்கள், புத்தகங்கள், செய்தித் தாள்கள் மற்றும் மத்திய மாநில அரசிதழ்கள், நிறுத்திட்டம், மதிப்பீடுகள், மக்கள் கணக்கெடுப்பு மற்றும் அதன் சார்பு வெளியீடுகள் ஆகியவைகள் பாதுகாக்கப்பட்டு வாசகர்களுக்கு வழங்கப்படுகிறது.

1—4—1989 முதல் 31—3—1990 வரை நூல்கள் இருப்பு, வாசகர்கள் எண்ணிக்கை, உறுப்பினர்கள் எண்ணிக்கை மற்றும் நூல்களின் பயன் ஆகிய விவரங்கள்.

நூல்கள்.	வாசகர்கள்.	உறுப்பினர்கள்.	இரவல்.	குறிப்புதவியல்.	மொத்தம்.
4,47,975	8,84,849	42,640	2,05,879	24,64,577	26,70,556

அரசுத் தேர்வுகள்

முன்னுரை : பொதுக்கல்வி இயக்குநர்/பள்ளிக் கல்வி இயக்குநரைத் தலைவ ராகக் கொண்டு பிப்ரவரி 1975 வரை அரசுத் தேர்வுகளின் ஆணையாளர் அலுவலகம் என அழைக்கப்பட்டு வந்த இத்துறை பிப்ரவரி 1975-க்கு பின் அரசுத் தேர்வுகள் இயக்ககம் என பெயர் மாற்றப்பட்டு இத்துறைக்கு தனி இயக்குநர் ஒருவர் நியமிக்கப் பட்டார்.

இத் தேர்வுத்துறை 41 மாநிலந்தழுவிய தேர்வுகளை நடத்தி வருகின்றது. ஓர் ஆண்டில் சுமார் 12 இலட்சத்திற்கும் மேற்பட்ட தேர்வர்கள் மேற்படி தேர்வுகளில் கலந்து கொள்கின்றனர்.

2. தற்சமயம் 5 மண்டல அலுவலகங்கள் ஒவ்வொன்றும் கோவை, மதுரை, திருச்சி, சென்னை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. இவ்வைந்து மண்டல இயக்ககங்களும் இடைநிலைப்பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வின் முன்நிலைப் பணிகளையும் மற்றும் மேல்நிலைத் தேர்வுகளுக்கான தேர்வு மையங்களுக்கு எழுதுப் பொருட்டுகள் அனுப்பி வைக்கும் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றன.

முறைச்சாரக் கல்வித் தேர்வுகள் :

1. 1980 ஆம் ஆண்டு முதல் தனித் தேர்வர்களுக்கென்றே எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு நடத்தப்படுகிறது. இதற்கு குறைந்தபட்ச கல்வித் தகுதி தேவையில்லை. ஆனால் இத்தேர்வு எழுத குறைந்த பட்சம் 13 வயது நிரம்பியவர்களாக இருத்தல் வேண்டும்.

2. இந்த எட்டாம் வகுப்பு தேர்வில் ஆங்கிலப் பாடத்துடன் தேர்ச்சி பெற்றவர்களும், பள்ளியில் படித்து எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களும், ஆண், பெண் தனித் தேர்வர்களாக நேரிடையாக எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வினை எழுதலாம். இவர்கள் 15 வயது நிரம்பியவர்களாக இருத்தல் வேண்டும்.

3. இவ்வாறு எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வினை தனித் தேர்வராக எழுதி தேர்ச்சி பெற்றவர்கள் மேல்நிலைத் தேர்வினை செய்முறைத் தேர்வுப் பாடங்கள் இல்லாமல் பொதுக்கல்வித் தொகுதியின் கீழ் தேர்வு எழுதலாம். இவர்கள் மார்ச்/ஏப்ரல் தேர்வுக்கு ஏப்ரல் முதல் தேதியிலும், செப்டம்பர்/அக்டோபர் தேர்வுக்கு அக்டோபர் முதல் தேதியிலும் 17 வயது நிரம்பியவர்களாக இருத்தல் வேண்டும்.

இதர மாநிலச் சான்றிதழ் உபயோர்க்கு சலுகைகள் :

இதர மாநில வாரியங்களின் 10–ம் வகுப்பு தேர்ச்சிக்கான சான்றிதழ்களைப் பெற்றுள்ளவர்களுக்கு இம்மாநில வாரியத்தில் தேர்ச்சிக்கான 35 சதவீதம் மதிப் பெண்களை வலியுறுத்தாமல் இம்மாநில வாரியத்தால் நடத்தப்படும் மேல்நிலைத் தேர்விற்கு தனி மாணவர்களாக அனுமதிக்கப்படுகிறது. இதனால் இதர மாநில வாரியங்களால் நடத்தப்படும் பல்வேறு விதமான தேர்வுகளில் தேர்ச்சி பெற்று சான்று பெற்றுள்ளவர்கள் எவ்வித இடையூறுமின்றி இம்மாநிலத்தில் தங்கள் கல்வித்தரத்தை உயர்த்திக் கொள்ள ஏதுவாகிறது. இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டுமே மனி தாபிமான அடிப்படையில் இச்சலுகை அளிக்கப்படுகிறது.

மேல்நிலைத் தேர்வு, எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு, ஆங்கிலோ இந்தியன் தேர்வு மற்றும் மெட்ரிகுலேஷன் தேர்வு எழுதிய தேர்வர்களுக்கு மேற்படிப்பிற்கு விண்ணப்பிக்க தேர்வு மதிப்பெண்கள் தேவைப்படுவதால் மார்ச் 1988 முதல் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட மறுநாளே மதிப்பெண் பட்டியல்கள் தேர்வர்களுக்கு விதிவோகிக்கப் பட்டு வருகிறது.

வினாத்தாள் மறுபரிசீலனை செய்தல் :

எஸ்.எஸ்.எல்.சி. மேல்நிலைத் தேர்வு, ஆங்கிலோ இந்தியன் தேர்வு மற்றும் மெட்ரிகுலேஷன் தேர்வுகளின் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட பின்னர் விடைத்தாள்களை மறுபரிசீலனை செய்ய கோரும் மாணாக்கர்களின் விண்ணப்பங்கள் மறுபரிசீலனை செய்யப்படுகிறது.

மைய மதிப்பீடு முறை :

மேல்நிலைத் தேர்வு, எஸ்.எஸ்.எல்.சி., ஆங்கிலோ இந்தியன் தேர்வு மற்றும் மெட்ரிகுலேஷன் தேர்வுகளின் விடைத்தாள்கள் தமிழ்நாட்டில் பல்வேறு மதிப்பீட்டு மையங்களில் முகாம் அலுவலர்களின் முன்னிலையில் திறம்பட்ட கண்காணிப்பில் திருத்தும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அட்டவனை மதிப்பெண் பட்டியல் வழங்குதல்:

அரசாணை எண் 577, கல்வித்துறை, நாள் 29–5–1989-ன்படி மதிப்பெண் சான்றிதழ்களை தாமதமின்றி உடனடியாக மாணவர்களுக்கு வழங்குவதற்கு ஏதுவாக மேல்நிலைப்பள்ளிகளுக்கு மதிப்பெண் பட்டியல் ஒன்றும் வழங்கப்படுகிறது. இம்முறை ஆசிரியர் கல்வி பட்டயத் தேர்வுக்கும் ஏப்ரல் 1990 முதல் வழங்கப்படுகிறது.

அகில இந்திய அளவிலான தேர்வுகள் :

(அ) தேசிய கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதத்தில் தேசிய திறனாய்வு முதல் கட்டத் தேர்வுத்துறையால் நடத்தப்பட்டு வருகிறது.

(ஆ) பள்ளிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் +2 மாணவர்களுக்கு புதுடெல்லி தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன வேண்டு கோளின் பேரில் அறிவுத்திறன் தேர்வினை 21—1—1990-ல் இத்துறையால் நடத்தப் பட்டது.

(இ) புதுடெல்லி மத்திய பணியாளர் தேர்வாணையம் இத்துறையின் இயக்குநரை ஒருங்கிணைப்பு மேற்பார்வையாளராக அமர்த்தி, இந்திய ஆட்சி பணி ஆரம்ப நிலை மற்றும் முக்கிய நிலை தேர்வுகளையும் ஏனைய மத்திய பணியாளர் தேர்வாணைய தேர்வுகளையும் நடத்துவதற்கான முன்னேற்பாடுகளை இத்துறை செயல்படுத்துகிறது.

மேலும், இதே தகுதியில் இத்துறை இயக்குநர் (புதுடெல்லி) அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளை நடத்துவதற்கான முன்னேற்பாடுகளையும் அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு மண்டல அலுவலகம் சென்னை மூலமாக மேற் கொள்கிறார்.

அரசாணை நிலை எண் 1457 கல்வி நாள் : 7—10—1989ன்—படி. மேல்நிலைத் தேர்வில் ஏதாவது ஒரு குறிப்பிட்ட தொகுதியின் கீழ் ஏற்கனவே தேர்வு எழுதி அனைத் துப் பாடங்களிலும் தேர்ச்சி பெற்றவர்கள் தாங்கள் பெற்ற மதிப்பெண்களை உயர்த் திக்கொள்ள ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டப் பாடங்களிலோ அதே தொகுதியில் மீண்டும் தேர்வு எழுத விண்ணப்பிக்கலாம். தேர்வர்கள் இம்முறையில் தேர்வு எழுத இரண்டு முறை மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

புள்ளி விவரங்கள் :

1990 மார்ச்சில் மேல்நிலைத் தேர்வேழுத பதிவு செய்த மாணவர்கள் மொத்த எண்ணிக்கை பள்ளி மற்றும் தனித் தேர்வு மாணவர்கள்	2,86,305
தேர்ச்சி விகிதம்	68.06
1990 ஏப்ரலில் எஸ்.எஸ்.எல்.சி. தெர்வெழுத பதிவு செய்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை பள்ளி மற்றும் தனித் தேர்வு மாணவர்கள்	5,65,317
தேர்ச்சி விகிதம்	57.5

மார்ச் 1990-ல் மேல்நிலைத் தேர்வு, எஸ்.எஸ்.எல்.சி. ஆங்கிலோ இந்தியன் தேர்வு மற்றும் மெட்ரிகுலேஷன், தேர்வுகளில் பாடவாரியாக முதன்மை மதிப்பெண் பெற்ற வர்களும், மொத்த பாடத்தில் சேர்த்து சிறப்பிடம் பெற்ற தேர்வர்களின் விவரங்களும் வெளியிடப்பட்டது.

இத்துறையில் மிகப்பெரிய அளவிலான எஸ்.எஸ்.எல்.சி. மேல்நிலைத் தேர்வு மற்றும் இதர 39 தேர்வுகள் 12 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் எவ்வித புகாருக்கும் இடமின்றி மத்தணித் தன்மையுடன் வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகிறது.

தொலை உணர்வு மையம்.

தமிழகத்தில் உள்ள இயற்கை வளங்களைக் கண்டறிய தமிழக அரசு 1982-ம் ஆண்டில் தொலை உணர்வு நிறுவனத்தை அண்ணா பல்கலைக் கழகத்தின் பொறுப்பில் நிறுவியது, இந்தப் புதிய அமைப்பு பொறியியல் கல்லூரியின் மூத்த பேராசிரியர் ஒருவரை இயக்குநராகக் கொண்டு இயங்கி வருகிறது. ஏற்கனவே தேர்ச்சி பெற்ற அனுபவம் உள்ள தமிழக அரசின் பல்வேறு துறைகளில் பனிபுரிந்து வரும் விஞ்ஞானிகள் சிலர் இந்த அமைப்பில் பணியாற்றி வருகிறார்கள். மேலும், இந்த நிறுவனத்தின் பணிகளைத் தமிழக அரசு தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட உயர் மட்டக்குழு ஒன்று ஆண்டு தோறும் கூடிப் பரிசீலித்து வருகிறது.அத்துடன் அண்ணா பல் கலைக் கழகத் துணை வேந்தரைத் தலைவராகக் கொண்ட ஆலோசணைக் குழு ஒன்று இத்துறையின் வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனைகளை அவ்வப்போது வழங்கி வருகிறது.

இந்த நிறுவனத்தின் அடிப்படைக் குறிக்கோள்கள்:

(1) தொலை உணர்வு அறிவியலில் அரசுத்துறை அதிகாரிகளுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குகிறது.

(2) தகவல் மையம் என்ற பிரிவை ஏற்படுத்தி, அதில் இயற்கை வளங்களைப் பற்றிய தகவல்களைச் சேகரித்துப் பாதுகாத்து வருவது. அதன் மூலம் அரசுத்துறை களுக்கு உதவி அளித்து வருவது.

(3) இயற்கை வளங்களை ஆராய்ந்து, மேம்பாட்டுத் திட்டங்கள் வகுத்திட வழி செய்வது.

(4) அரசுத்துறைகளின் திட்டப் பணிகளுக்கு இந்த நிறுவனம் ஆலோசனை வழங்குவது.

(5) பல்கலைக்கழகத் தொலை உணர்வு பட்ட மேற்படிப்புப் பணிகளுக்குத் துணை செய்வது.

1989-90-ம் ஆண்டின் தொலை உணர்வு மையத்தில் நடைபெற்ற பணி பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. பயிற்சித் திட்டங்கள் :

தமிழக அரசுத்துறையைச் சேர்ந்த அலுவலர்களுக்கு அடியிற்கண்ட பட்டியலின் பிரகாரம் இவ்வாண்டு பயிற்சி அளிக்கப்பட்டது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட காமராசர், தேவர் திருமகனார், நெல்லை கட்ட பொம்மன் ஆகிய மாவட்ட அரசு அலுவலர்களுக்கு தொலை உணர்வு அறிவியலில் பயிற்சியும், எல்லா மாவட்ட கிராம வடிவமைப்புத்துறை அலுவலர்களுக்கு, தொலை உணர்வு அறிவியல் மூலம் நில உபயோக வரைபடங்கள் தயாரிக்க பயிற்சியும் அளிக்கப் பட்டன. மொத்தம் 181 பேர் பலன் பெற்றனர்.

2. பல்வேறு தொலை உணர்வுத் தகவல் ஆதாரங்கள் சேகரித்தல் :

தொலை உணர்வு நிறுவனத்தின் செயல்பாட்டுக்கு ஆதாரமான (விமானங்கள் மற்றும் செயற்கைகோள்களால் எடுக்கப்பட்ட) புகைப்படங்கள், நிலஅளவு வரை படங்கள் முதலியவைகளை இந்திய அரசின் நில அளவுத்துறை மற்றும் வானவியல் துறைகளிலிருந்து தொடர்ந்து பெறப்படுகின்றன. தமிழ்நாட்டின் நிலவள புகைப் படங்கள் நில அளவு வரை படங்களை இம்மையம் ஆண்டுதோறும் சேகரித்து வருகிறது. 1989-90ம் ஆண்டில் விமானத்திலிருந்து எடுக்கப்பட்ட சுமார் 3000 புகைப் படங்களும், செயற்கைகோளிலிருந்து எடுக்கப்பட்ட 200 புகைப்படங்களும் சேகரிக்கப்பட்டன.

3. திட்டப் பணிகள் :

1989-90-ஆம் ஆண்டிம் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்ட திட்டப்பணிகளின் விவரம் வருமாறு :—

(1) தமிழ்நாட்டில் ஏழு வறட்சி பாதிப்பிற்குரிய மாவட்டங்களில் நீர் சேகரிக்க தகுந்த ஆதார இடங்கள் கண்டறியப்பட்டு வரைபடங்கள் ரூ. 8.50 லட்சம் செலவில் தயாரிக்கப்பட்டது.

(தமிழக அரசு வழங்கிய திட்டம்)

(2) வேதாரண்யம் கடற்கரை ஈர நிலப்பகுதிகளில் சுற்றுப்புறசூழல் பாதிப்பு பற்றி ரூ. 3.25 லட்சம் செலவில் ஆராய்ந்து அறிக்கை தயாரிக்கப்பட்டது.

(3) தமிழகத்தின் கிழக்கு கடற்கரை நிலவரம் பற்றிய வரைபடங்கள் சுமார் ஐம்பத்து நாலாயிரம் செலவில் தயாரிக்கப்பட்டது.

(மைய அரசின் வானவியல் துறை வழங்கிய திட்டம்)

(4) ஒன்றுபட்ட ராமநாதபுரம் மாவட்டத்தில் நிலத்தடி நீர் ஆதாரங்கள் பற்றி ஆராய்ந்தறிந்து வரைபடங்கள் சுமார் 3.78 லட்சம் செலவில் தயாரிக்கப்பட்டது.

(தமிழக அரசின் அறிவியல் தொழில் நுட்ப கழகம் வழங்கியது)

(5) தேசிய குடிநீர் ஆய்வு தீவிர திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் நிலத்தடி நீர் ஆதாரங்கள் பற்றி ரூ. 1.1 லட்ச செலவில் வரைப்படம் தயாரித்தல்.

(மைய அரசின் வானவியல் துறை :வழங்கியது)

(6) தொழில் மயமான சென்னைப் பெருநகரின் சுற்றுப்புற சூழல் பாதிப்பு பற்றி ரூ. 7 லட்சம் செலவில் ஆய்ந்தறிந்து அறிக்கைத் தயாரிக்கப்பட்டது.

1989—90 ஆம் ஆண்டு நடைமுறையில் உள்ள திட்டங்கள்/விவரங்கள் :

(1) குந்தாநீர்த் தேக்கத்தில் வண்டல் சேர்வது குறித்து வான் மற்றும் செயற்கை

(2) தமிழ்நாட்டில் நெல் சாகுபடியாகும் நிலப்பரப்பு செயற்கை கோள் ஆதார வரை படங்களிலிருந்து மதிப்பிடும் பணி ரூ. 11.50 செலவில் நடந்து வருகிறது.

(மைய அரசு வானியல் துறை மற்றும் தமிழக அரசு விவசாயத்துறை வழங்கிய திட்டம்.)

(3) உதக மண்டலத்தின் நிலப் புகைப் படங்கள் பெரிய அளவில் ரூ. 4.83 லட்சம் செலவில் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

(தமிழக அரசு வழங்கிய திட்டம்).

(4) சென்னை நகர வரைபடங்களும் பெரிய அளவில் வானவூர்தியிலிருந்து எடுக்கப் பட்ட புகைப்படங்களிலிருந்து ரூ. 14.4 லட்சம் செலவில் தயாரிக்கப்பட்டு வரு கின்றன.

(சென்னை குடிநீர் வடிகால் வாரியம் வழங்கிய திட்டம்).

4. தமிழக அரசுத்துறை திட்டப்பணிகளுக்கு உதவுதல் :

தமிழக நில அளவுத்துறை, இம் மையத்திலுள்ள புகைப்படங்களையும் கருவி களையும் பயன்படுத்தி வட்ட அளவில் பல்வேறு வரை படங்களைப் புதுப்பித்து வருகின்றது.

5. தொலை உணர்வு உயர்கல்வி படிப்புக்கு உதவுதல் :

அண்ணா பல்கலைக்கழகம் தொலை உணர்வு அறிவியலில் பட்ட மேற்படிப்பு (எம். டெக்.) நடத்தி வருகிறது. தொலை உணர்வு நிறுவனத்தில் உள்ள விஞ்ஞானிகள் சில பாடங்களை இப்பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு கற்பிக்கிறார்கள். மாண வர்கள் மேற்கொள்ளும் ஆராய்ச்சி பணிகளுக்கும் உதவுகிறார்கள். இப்பட்ட மேற்படிப்புக்கான 10-15 இடங்களில் சுமார் 50 சதவிகிதம் இடங்கள் அரசுத்துறை அலுவலர்களுக்கு ஒதுக்கப்பட்டு வருகிறது.

6. விஞ்ஞானக் கருவிகள் :

தொலை உணர்வு நிறுவனத்தில் உள்ள பலவகைப் பட்ட அறிவியல் கருவிகள் ஆய்வுத் திட்டங்கள் தயாரிப்பதிலும் பயிற்சி அளிப்பதிலும் முறையாகப் பயன்படுத்தப் படுகின்றன. 1989–90-ல் சுமார் ரூ. 5 இலட்சம் மதிப்புள்ள வரைபடங்கள் தயாரிக்க மின்னியல் வரைபடக்கணிப் பொறி (Electronic Draftsman System) வாங்கப் பட்டது.

7. வெளிநாட்டு உதவி :

மேற்கு ஜெர்மன் அரசு, இந்திய அரசுடன் ஏற்பட்ட தொழிற் நுட்ப ஒத்துழைப்பு திட்டத்தின் கீழ், தொலை உணர்வு மையத்தை நவீனப்படுத்த 1985-ம் ஆண்டு முதல் நவீன கருவிகள் மற்றும் பயிற்சி அளித்து உதவி வருகிறது. 1989-90-ம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் இரண்டு இம்மைய விஞ்ஞானிகள் மேற்கு ஜெர்மனியில் 1 மாதப் பயிற்சி பெற்று திரும்பினர். மேலும் மேற்கு ஜெர்மன் விஞ்ஞானிகள் இம் மையத் திற்கு வந்து பயிற்சி அளித்து வருகிறார்கள்.

நெதர்லாந்து அரசு இம்மையத்தை சேர்ந்த நான்கு விஞ்ஞானிகளுக்கு தனது நாட்டில் ஒவ்வொருவருக்கும் நான்கு மாதம் தொலை உணர்வு கணிப்பொறி பயிற்சி அளித்தது.

முடிவுரை :

தொலை உணர்வு நிறுவனம் அடிப்படைக் குறிக்கோள்களான 1, பயிற்சி அளித்தல், 2, முன் மாதிரி திட்டம் அமைத்தல், 3, ஆராய்ச்சிப் பணி நடத்துவது, 4, தொலை உணர்வுத்துறையில் தகவல் மையம் உருவாக்குவது போன்ற அம்சங்கள் பலவற்றிலும் திறம்பட பணியாற்றிக் குறிப்பிட்ட முன்னேற்றம் அடைந்துள்ளது. மேலும், தமிழக அரசுத் துறைகளுக்கு உதவுவதோடு தேசிய மட்டத்திலும், மேல்நாடு அளவிலும் சிறப்பான உதவி பெறும் அளவுக்கு இந்த நிறுவனம் திறம்பட இயங்கி வருகிறது.

சட்டக் கல்வி.

1891-ஆம் ஆண்டில் சென்னை சட்டக் கல்லூரி துவங்கப்பட்டது. இதன் பெயர் தற்போது டாக்டர் அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரி என மாற்றப்பட்டுள்ளது. 1974-ஆம் ஆண்டு மதுரை சட்டக் கல்லூரியும் 1979-ஆம் ஆண்டில் திருச்சி மற்றும் கோவை ஆகிய இரு இடங்களிலும் தலா ஒரு சட்டக் கல்லூரி வீதம் மொத்தம் நான்கு அரசு சட்டக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.

1983–84 ஆம் கல்வியாண்டு முதல் சட்டக் கல்லூரிகளில் மூன்றாண்டு சட்டப் படிப்பைத் தவிர ஐந்தாண்டு சட்டப்படிப்பும் தொடங்கப்பட்டுள்ளது. பிளஸ் 2 தேர்வுகளில் தேர்ச்சியடைந்த மாணவர்கள் 5 ஆண்டு சட்டப்படிப்புக்கு சேரத் தகுதி யுள்ளவர்களாகக் கருதப்படுகின்றனர்.

டாக்டர் அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரி, சென்னை மற்றும் மதுரை சட்டக் கல்லூரிகளில் 1986–87-ஆம் ஆண்டு முதல் சட்ட மேற்படிப்பு (எம்.எல்) வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. முதுநிலைச் சட்டப் பாடங்களின் விவரங்கள் அடியிற் கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது:—

டாக்டர் அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரி :

பிரிவு 2 — குற்றவியல் மற்றும் தீங்கியல்

பிரிவு 3 — ஒப்பந்தவியல் தொழிற்சாலை சம்பந்தப்பட்ட சட்டம் (உட்பட)

பிரிவு 4 — சொத்துரிமை சட்டம்

பிரிவு 5 — தொழிற்சாலை சட்டம்.

மதுரை சட்டக் கல்லூரி :

பிரிவினர் சொத்துரிமைச் சட்டம் :

பணியிலிருப்போருக்காக 1966-67-ம் கல்வியாண்டிலிருந்து டாக்டர் அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரியிலும் 1979–ஆம் ஆண்டிலிருந்து மதுரை சட்டக் கல்லூரியிலும் மாலை நேரச் சட்டப்படிப்பு தொடங்கப்பட்டு இந்திய வழக்கறிஞர் மன்றத்தின் அறிவுரைகளின்படி 1979 80 ம் ஆண்டுடன் மாலைநேரச் சட்டப்படிப்பு நிறுத்தப் பட்டிருந்தது. பிறகு இந்திய வழக்கறிஞர் மன்றத்தின் அனுமதியைப் பெற்று மீண்டும் 1983 84 ஆம் கல்வியாண்டு முதல் இத்துறையின்கீழ் இயங்கும் நான்கு அனைத்து சட்டக் கல்லூரிகளிலும் மாலை நேரச் சட்டப்படிப்பு வகுப்புகள் தொடங்கப்பட்டு செம்மையாக நடைபெற்று வருகின்றன.

டாக்டர் அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரி சென்னை மற்றும் மதுரை சட்டக் கல்லூரிகள் அரசுக்குச் சொந்தமான சட்டவகுப்புகளிலும் திருச்சி மற்றும் கோவை சட்டக் கல்லூரிகள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன

கோவை சட்டக் கல்லூரியைப் பொறுத்தவரை கல்லூரிக் கட்டடம் மற்றும் விடுதி க் கட்டடம் கட்டுவதற்கு 104,39 இலட்சங்கள் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது கோவை சட்டக் கல்லூரி கட்டடம் கட்டும் பணி தற்போது முடிவடையும் நிலையி லுள்ளது.

திருச்சி சட்டக் கல்லூரிக் கட்டடம் மற்றும் விடுதிக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ரூபாய் 120 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது, பாரதிதாசன் பல்கலைக்கழகத் திற்கு சொந்தமான இடத்திலிருந்து சுமார் 10,80 ஏக்கர் நிலம் இத்துறையில் பெறப்பட்டது, திருச்சி சட்டக் கல்லூரிக் கட்டடம் ரூ. 1,02 கோடி ரூபாய்க்கான திட்டம் மற்றும் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு அரசின் ஆட்சியொப்பம் பெற அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மதுரை சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு மற்றும் மாணவர்களுக்கு விடுதி கட்ட டங்கள் கட்டி முடிக்கப்பட்டு 1886-87 ஆம் கல்வியாண்டு முதல் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. மேலும் இவ்விடுதிகளில் இடவசதி போதுமானதாக இல்லாததால் கூடுதல் கட்டடங்கள் கட்ட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இத்துறையில் ஆண்டுதோறும் (year Bocth of Legal studies) சட்டக் கல்வி ஆண்டு மலர் வெளியிடப்படுகிறது. இவ்வெளியீட்டில் வழக்கறிஞர்கள் சட்ட பேராசிரியர்கள் போன்றோர்கள் கட்டுரைகள் மற்றும் கருத்துகள் வெளியிடப் படுகின்றன.

இத்துறையின்கீழ் இயங்கி வரும் நான்கு அரசு சட்டக் கல்லூரிகளில் மொத்தம் 5660 மாணவர்கள் பயின்று வருகின்றனர். மூன்றாண்டு பகல் மற்றும் மாலைநேர சட்டப்படிப்பு மற்றும் 5 ஆண்டு சட்டப் படிப்பு வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை அடியிற்கண்டவாறு தரப்பட்டுள்ளது:—

வரிசை எண் மற்றும் கல்லூரியின் பெயர்.	3 ஆண்டு சட்டப் படிப்பு (பகல் நேரம்.)	3 ஆண்டு சட்டப் படிப்பு (மாலை நேரம்.)	5 ஆண்டு சட்டப் படிப்பு.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)
1. டாக்டர் அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரி, சென்னை	810	720	900	2430
2. மதுரை சட்டக் கல்லூரி	480	360	750	1590
3. திருச்சி சட்டக் கல்லூரி	240	180	400	820
4. கோவை சட்டக் கல்லூரி	240	180	400	820
	1770	1440	2450	5660

இத்துறையில் நான்கு அரசு சட்டக் கல்லூரிகளிலும் உள்ள ஆசிரியர் பணியிடங்களின் எண்ணிக்கை அடியிற்கண்டவாறு தரப்படுகிறது :—

முதல்வர்	4
விரிவுரையாளர் (தேர்வு நிலை)	12
விரிவுரையாளர் (மேல்நிலை)	48
விரிவுரையாளர் (மேல்நிலை சட்டமன்ற பாடம்)	25
பகுதிநேர விரிவுரையாளர்	38
மொத்தம்	127

அனைத்து சட்டக் கல்லூரிகளில் இலவச சட்ட உதவி மையம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தினால் சட்ட ஆலோசனைத் தேவைப்படும் ஏழை மற்றும் மக்கள் பயன்பெறுகிறார்கள்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

முன்னுரை :

பல்கலைக்கழகம். பல்கலைக் கழகத்தில் இணைவிக்கப் பெற்ற ஏற்புத் தெரிவிக் கப்பெற்ற கல்வி நிலையங்களின் மொத்த எண்ணிக்கை இவ்வாண்டில் 118 ஆகும். இவ்வாண்டு முதுநிலைப் பட்டப் படிப்புகளுக்கும், பட்டப் படிப்புகளுக்கும், பதினான்கு கல்லூரிகளுக்கும், இணைவிப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத் தில் கற்பித்தல் மற்றும் ஆய்வில் ஈடுபட்டுள்ள துறைகள் மொத்தம் 47 உள்ளன. இணைவிக்கப் பெற்ற மற்றும் ஏற்புத் தெரிவிக்கப்பெற்ற கல்லூரிகள் பல்கலைக் கழகத் துறைகள், அஞ்சல் வழிக் கல்வி மற்றும் தொடர் கல்வி நிலையம், வெளி பல்கலைக்கழக அமைப்பு, மாலைக் கல்லூரி ஆகியவற்றில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 1,23,492 ஆகும்.

துணை வேந்தர் :

டாக்டர் எம். இலட்சுமணன் கழகத்தின் துணை வேந்தராக 20–1–1989 ஆம் நாள் பதவி ஏற்றார்.

பதிவாளர் :

டாக்டர் ஜி. சிவசங்கரன் பல்கலைக் கழகப் பதிவாளராகத் தொடர்ந்துள்ளார்.

ஆட்சிப் பேரவை :

ஆட்சிப் பேரவை இவ்வாண்டில் 1989 மார்ச்சு 29 அன்றும் 1989 நவம்பர் 8 அன்றும் இருமுறை கூடியது. ஆட்சிப் பேரவையின் சிறப்புக் கூட்டம் 4–1–1989 அன்று நடந்தது.

ஆட்சிக் குழு :

ஆட்சிக்குழு இவ்வாண்டில் 11 முறைகள் கூடியது. சில வழக்கமான இனங்களை சுற்று மடல் வழியும் ஆட்சிக்குழு ஆராய்ந்து ஒப்புதல் அளித்தது.

கல்விசு பேரவை :

கல்விப் பேரவை இவ்வாண்டில் 10–3–1989 அன்றும், 24–10–1989 அன்றும் இருமுறை கூடியது.

நிதிக் குழு :

நிதிக்குழு இவ்வாண்டு 2–9–1989 அன்றும், 7–12–1989 அன்றும் இருமுறை கூடியது.

மாணவர் நல்லொழுக்கம், நல்வாழ்வு மற்றும் தங்குமிடம் பற்றிய ஆட்சிக்குழு :

குழு இவ்வாண்டில் பல்வேறு தேர்வு மையங்களிலிருந்து புகார் தெரிவிக்கப்பட்ட தீயொழுக்க வழக்குகளை விசாரித்து முடிவெடுக்க நான்கு முறை கூடியது. கல்லூரி களிலிருந்து விலக்கப்பட்ட மாணவர்களின் வழக்குகளும் ஆராயப்பட்டன.

இக்குழு பல்கலைக்கழக அலுவலர் நல்லொழுக்கப் பிரச்சினை தொடர்பான வழக்குகளையும் ஆராய்ந்தது.

பாடத் திட்டக் குழுக்கள் :

பலகலைக் கழகத்தில் 48 பாடத் திட்டக் குழுக்கள் உள்ளன. இவ்வாண்டு பின் வரும் புதிய பாடத் திட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.—

(1) உயிர் வேதியியல்;
(2) உயிரி தொழில் நுட்பவியல்;
(3) கணிப்பான் அறிவியல் (முதுநிலை).

கற்பித்தல் :

பல்கலைக் கழகத் துறைகள் முதுநிலை, எம்.பில்., பி.எச்.டி., நிலைகளில் கற்பித்தல் மற்றும் ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்து செய்து வருகின்றன.

புதிய படிப்புகள் :

இவ்வாண்டில் பின்வரும் புதிய படிப்புகளை அறிமுகப்படுத்தப்பட்டன.

1. பல்கலைக் கழக துறைகளில்

(1) மருத்துவமனை வேளாண்மையில் முதுகலைப்படிப்பு.

(2) ஆங்கில மொழிக் கல்வியில் முதுகலைப்படிப்பு.

(3) கல்வியியல் தொழில் நுட்பவியல் முதுகலைப்படிப்பு.

2. அஞ்சல் வழிக்கல்வி மற்றும் தொடர்கல்வி நிலையத்தில் :

(1) நூலகம் மற்றும் தகவல் அறிவியல் சான்றிதழ் படிப்பு.

(2) அலுவலக மேலாண்மையில் கணிப்பான்கள்.

(3) தொழிற் நுட்பங்களில் மேற்சான்றிதழ் படிப்பு

(4) வரிவிதிப்புச் சட்டங்களில் மேற்சான்றிதழ் படிப்பு.

(5) இதழியல் மற்றும் மக்கள் தொடர்புள்ள முதுநிலை மேற்சான்றிதழ் படிப்பு.

(6) சுற்றுலா மேலாண்மையில் முதுநிலை மேற்சான்றிதழ் படிப்பு.

3. இணைக்கப்பெற்ற கல்லூரிகளில் :

உயிர் வேதியியல் பி.இ.

எம்.ஃபில் பட்டப்படிப்பு :

பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளில் பல்வேறு படிப்புகளில் எம்.ஃபில் படிப்பிற்கு 244 புதிய மாணவர்களும் ஆசிரியர் மேற்படிப்புத் திட்டத்தின் கீழ் 92 ஆசிரியர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

நூலகம் :

1989–90 ஆம் ஆண்டில் நூல்கள் வாங்குவதற்கும் ஆய்விதழ்கட்கும் சந்தா செலுத்துவதற்காக ரூ. 17.8 இலட்சத் தொகைப் பல்கலைக் கழகம் ஒதுக்கியுள்ளது.

பல்கலைக் கழக மானியக்குழு 7 ஆம் திட்டத்தின் கீழ் நூல்கள் ஆய்விதழ்கள் வாங்குவதற்கு ரூ. 5 இலட்சத் தொகையும் பல்கலைக்கழக நூலகத்திற்கு ஒதுக்கியுள்ளது.

இந்திய அறிவியல் மாநாடு நடத்தப்படல்:

1988 சனவரி முதல் 12 வரை எழுபத்து ஆறாவது இந்திய அறிவியல் மாநாடு பல்கலைக் கழகத்தால் நடத்தப்பட்டது. 7—1—1989-ல் மாண்புமிகு பிரதம அமைச்சர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் 76-வது மாநாட்டைத் துவங்கி வைத்தார்கள். மேன்மைதாங்கிய தமிழக ஆளுநரும் பல்கலைக்கழக வேந்தருமான டாக்டர் பி. ஜி. அலெக்சாண்டர் மலரை வெளியிட்டார். மாண்புமிகு அறிவியல் மற்றும் தொழிற் நுட்பவியல் இணையமைச்சர் திரு. கே. ஆர். நாராயணன் 75 வது விழா மலரை வெளியிட்டார். ஐ.எஸ்.ஐ.ஆர். இன் தலைமை இயக்குநரும், 76 வது இந்திய அறிவியல் மாநாட்டின் பொது தலைவருமான டாக்டர் எம்.பி. மித்ரா, எஃப்.ஆர்.எஸ்., தலைமை யுரையாற்றினார். மாநாட்டின் மூலக்கருத்தாவது இந்தியாவில் அறிவியலும் தொழில் நுட்பவியலும் தொழில் நுட்பக் குழுக்கள் ஆகியவையாகும்.

மாண்புமிகு பிரதம அமைச்சர் பரிசு பெற்றவர்களுக்கு சர் அசுதோசு முகர்ஜி தங்கப்பதக்கமும் பேராசிரியர் ஹிராலால் சக்ரவர்த்தி பரிசும் வழங்கியதோடு பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் டாக்டர் சி. வி. திருட்டிணசாமி அவர்களின் திருவுருவப்படத்தையும் திறந்து வைத்தார். 1989 சனவரி 5 மற்றும் 6 ஆம் தேதிகளில் இந்திய தேசிய அறிவியல் கழகத்தின் ஆண்டுக் கூட்டம் நடைபெற்றது. இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறைச் செயலாளர் டாக்டர் வசந்த் ஆர். கோவாரிகர் 1989 சனவரி 8 இல் பணிக்குழுவின் அறிக்கையை முன் வைத்தார். 1989 சனவரி 9 இல் இளம் அறிவியலறிஞர்களுக்கான சிறப்புக் கூட்டத்தில் தலைமை தாங்கினார். ஏராளமான அரசுக்கழக (Royal Society) உறுப்பினர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

1989 சனவரி 6 முதல் 18 வரை 76 வது இந்திய அறிவியல் மாநாட்டுச் சங்கத் தினையொட்டிய அறிவியல் கண்காட்சி மதுரை மருத்துவக் கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்டது. இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் இணைய மைச்சர் திரு. கே. ஆர். நாராயணன் கண்காட்சியைத் துவங்கிவைத்தார். இணை வேந்தர் டாக்டர் எ. பத்மநாபன் சிறப்பு ஆணையாளரும் தமிழக அரசின் கல்வித்துறை செயலாளருமான டாக்டர். எச். பி. என். செட்டி, இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையின் செயலாளர் டாக்டர் வசந்த் கோவரிகர், காரைக்குடி மத்திய மின் வேதியல் ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர் டாக்டர் செ. ஐ. வாசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்..

இந்தியா முழுவதிலிருந்து கலந்துகொண்ட 3,000 திறமைமிகு அறிவியல் அறிஞர் கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுடன் சோவியத் ரஷ்யா, பாகிஸ்தான், அமெரிக்கா, ருசியா, பிரான்சு, ஜெர்மனி, சுவிடன், போலந்து, சப்பான், கனடா, ஹங்கேரி, நேபால், இலுபா, நெதர்லாந்து, செக்கோஸ்லாவியா, தாய்லாந்து, இங்கிலாந்து போன்ற பல்வேறு நாடுகளிலிருந்து சுமார் 50 வெளிநாட்டு அறிவியலறிஞர்கள் இம்மாநாட்டில் கலத்து கொண்டனர். ஒவ்வொரு மாலையிலும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

பட்டமளிப்பு விழா :

பல்கலைக்கழகத்தின் இருபத்திராண்டாம் ஆண்டுப் பட்டமளிப்பு விழா டாக்டர் மு. வ. அரங்கில் 1989 ஆம் மார்ச்சு 16 ஆம் நாள் வியாழக்கிழமை நடைபெற்றது. புதுடில்லி, இந்திய அரசின் உயிர்த் தொழில்நுட்பவியல் துறைச் செயலாளர் டாக்டர் எஸ். ராமச்சந்திரன் பட்டமளிப்பு விழாச்சொற்பொழிவு நடத்தினார். 239 பேர் பட்ட மளிப்பு விழாவில் நேரில் கலந்துகொண்டு பட்டங்களைப் பெற்றனர். தமிழக ஆளுநரும் பல்கலைக் கழக வேந்தரும் ஆன மேதகு டாக்டர் பி. சி. அலெக்சாந்தர் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.

ஆய்வுப்பட்டங்கள் :

இவ்வாண்டின் போது 43 ஆய்வு மாணவர்களும் 47 ஆசிரியர்களும் பி.எச்டி. பட்டத்திற்கு பதிவு செய்யப்பட்டனர். இவ்வாண்டில் 100 ஆய்வாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடுகள் டாக்டர் பட்டம் வழங்கப் பல்கலைக்கழகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

ஆய்வுத் திட்டங்கள் :

பல்கலைக்கழக மானியக்குழு, அறிவியல், தொழில் நுட்பவியல் துறை, அணு ஆற்றல் துறை, கல்வி ஆய்வு மற்றும் பயிற்சிக்கான தேசியக்குழு சி.எஸ்.ஐ.ஆர். ஐ.சி.எம்.ஆர்., ஜீ.சி.எஸ்.எஸ்.ஆர்., போன்ற பல்வேறு நிதியுதவி நிறுவனங்கள் பல்கலைக் கழக துறையின் ஆய்வுத் திட்டங்கள் 160 இதற்குத் தொடர்ந்து நிதியுதவின. இந்நிறுவனங்கள் ஆய்வுத் திட்டங்கட்கு வழங்கியுள்ள மொத்த தொகை ரூ. 10,94,21,210.

ஆய்வுக் கட்டுரைகள் :

பல்வேறு பல்கலைக் கழகத் துறைகளால் தேசிய மற்றும் உலக அளவிலான ஆய்விதழ்களில் 300 ஆய்வுக் கட்டுரைகளுக்கு மேல் இவ்வாண்டில் வெளியிடப்பட்டுள்ளன.

ஆசிரியர் மறுபயிற்சிக் கல்லூரி :

புதிதாக பணியமர்த்தப்பட்டுள்ள கல்லூரி மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர் களுக்கு பயிற்சித் திட்டங்களும் திணையியல், விலங்கியல், எனும் துறைகளில் தற்போ துள்ள பேராசிரியர்கள் மற்றும் இணை பேராசிரியர்கள் தவிரவுள்ள பிற ஆசிரியர் கட்டுப் புத்தாக்கப்படிப்புகளும் ஆசிரியர் மறு பயிற்சி கல்லூரியால் நடத்தப்பெறு கின்றன.

ஒளி, ஒலி ஆய்வு மையம் :

இம்மையம் 30 நிகழ்ச்சிகளை உருவாக்கியது. இவற்றுள் 25 நிகழ்ச்சிகள் ஏற்கனவே தொலைக்காட்சி நிலையத்தினால் நாடுதழுவிய கல்விக் கூடத்திட்டத்தின் கீழ் தேசிய ஒளிப்பரப்பின் ஒலிப்பரப்பப்பட்டது. பல்கலைக் கழக மானியக் குழுவிடமிருந்து திரும்பப் பெறும் உதவித் தொகையாக ரூ. 6 இலட்சமும், திரும்பப் பெறாத உதவியாக ரூ. 4 இலட்சமும், பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. 1989 ஜூலை 5 ஆம் நாள் ஒலிபரப்பு அறையைத் தமிழக முதலமைச்சர் டாக்டர் மு. கருணாநிதி திறந்து வைத்தார். 1989 டிசம்பரில் பல்கலைக்கழக மானியக் குழுவின் பிரிவுநிலை அனைந்திந்திய ஒலிப்பரப்பு விழாவை நடத்தத் தெரிந்தெடுக்கப்பட்டது.

எஸ்.சி./எஸ்.டி. அறை :

இந்திய அரசு மற்றும் பல்கலைக்கழக மானியக் குழுவின் நடத்துதல், திருத்துதல், மற்றும் கொள்கைகள் நிகழ்ச்சிகளின் திட்டமிடுதல் ஆகியவற்றினை செயல்படுத்தும் இயந்திரத்தினை எலுப்படுத்தித் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு சலுகைகள் தரவேண்டி ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் பல்கலைக்கழக மானியக் குழு எஸ்.சி./எஸ்.டி. சிறப்பு அறையை அமைத்துள்ளது. இந்தப் பல்கலைக்கழகத்திலும் ஒரு எஸ்.சி./எஸ்.டி. அறை அமைக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரையின்படி துணை வேந்தர் தலைவராகக் கொண்டும் எஸ்.சி./எஸ்.டிக்கு தகுந்த பிரதிநிதித்துவம் கொடுத்தும் ஒரு நிலைக்குழு அமைக்கப்பெற்றுள்ளது. நிலைக்குழு 1989 ஏப்ரல் 15 இல் இப்பல்கலைக்கழகத்தால் கூடியது.

உலகத் தமிழ்ப்பணி :

மலேசியா, சிங்கப்பூர், தமிழ் மாணவர்களுக்கான கடல்கடந்த அஞ்சல்வழி கல்வியினைத் தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் மாண்புமிகு டாக்டர் எம். தமிழ்க் குடிமகன் துவங்கி வைத்தார். அறுபத்தி ஐந்து மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் பெற்றிருக்கின்றனர். (மலேசியா 24 மாணவர்கள், பி.ஏ., தமிழ்பாடம், சிங்கப்பூர் 40 மாணவர்கள் பி.ஏ., தமிழ்பாடம் 1 மாணவர் பி.ஏ., அரசியல் அறிவியல்.).

தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் டாக்டர் எம். தமிழ்க்குடிமகன் மாதிரி நாடாச் சுருளையும் வெளியிட்டார். சங்கத் தமிழ்க் கதைகள் பிஜி தமிழ் மாணவர்களுக்கு பயிற்றுவிப்பதற்காக சரியான தமிழ் உச்சரிப்புகளைக் கொண்ட (உதாரணமாக வேறுபட்ட ஒலிகள் ல, ள, ழ, ள, ண, ந, ர, ற) பிஜி தமிழ்ப் பாடநூல்களிலிருக்கும் தரவுகளடங்கிய இரண்டு நாடாக்கள் வெளியிடப்பட்டன.

பேராசிரியர் சீனி கிருட்டிணசாமி தொழில் பொருளியல் மாநாட்டு அறக்கட்டளை நிதி ரூ. 18,0000.

பதிப்புத்துறை :

இருபத்தி ஒன்பது நூல்கள் விரைவில் வெளியிடப்படத் தயாராக உள்ளன.

உயிரியல் கல்வி பற்றிய இதழ் :

இதழின் மூன்று எண்கள் வெளியிடப் பெற்றுள்ளன. நான்காம் எண், அச்சில் உள்ளது. வெளியீட்டுப் பிரிவோடு இதழ் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டுள்ளது.

பல்கலைக்கழக அறிவியற்கருவி மையம் :

பேராசிரியர் சி. சீனிவாசன் மையத்தின் பொறுப்புப் பேராசிரியராகத் தொடர்ந்துள்ளார் மையத்தின் முதன்மையான நோக்கங்கள் வருமாறு :— (1) பயன்படுத்துவோருக்கு மின்கருவியைப் பழுதுபார்த்தல் முதலான வழிகளில் பராமரிக்கத் தொழில்நுட்ப உதவியை வழங்குதல் (2) அறிவியல் ஆய்வாளரது குறிப்பிட்ட தேவைக் கேற்ப் புதிய கருவிகளை வடிவமைத்து அமைத்துக் கொடுத்தல் (3) பகுப்பாய்வுத் தொண்டு செய்தல் இவ்வாண்டு பல்கலைக்கழகத் துறைகள் மற்றும் கல்லூரிகளில் உள்ள 170-க்கும் மேற்பட்ட கருவிகள் பழுதுபார்க்கப்பெற்றுள்ளன. பயன்படுத்துவோர் கேட்டுக்கொண்டபடி சிறப்பு மாதிரி அளவுகளுக்கான 15-க்கும் மேற்பட்ட கருவிகள் இவ்வாண்டு வடிவமைத்து அமைத்துக் கொடுக்கப்பெற்றுள்ளன.

கணிப்பான் மையம் :

இவ்வமையம் ஆசிரியர்கள், ஆய்வுமாணவர்கள், நிருவாகத்தினர் ஆகியோருக்குத் தன் தொண்டினைத் தொடர்ந்துள்ளது. முந்திய ஆண்டைப் போன்றே 1989-ஆம் ஆண்டு ஜூன், ஜூலையில் இம்மையம் திட்டமிடுதலில் ஒரு படிப்பினை நடத்தியது.

அறிவியற் கல்விமையம் :

டாக்டர் இ. பழனியாண்டி மையத்தின் இயக்குநர் பொறுப்பாளராகத் தொடர்ந்துள்ளார். இம்மையம் 1989 சனவரியில் நடைபெற்ற 76 வது இந்திய அறிவியல் மாநாட்டுக் கண்காட்சியில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டது. மையத்தால் அமைக்கப்பட்டிருந்த ஸ்டால் சிறப்பானதாக அறிவிக்கப்பட்டு அதற்கு முதற்பரிசும் வழங்கப்பட்டது. கல்கத்தா தேசிய அறிவியல் குழு அருங்காட்சியகத்தால் உருவாக்கப்பட்ட தேசிய அளவிலான சுற்றுலா இராமன் நூற்றாண்டுக் கண்காட்சியானது 1989 பிப்ரவரியில் 20 நாட்கள் காட்சிக் கூடத்தில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் பயன் கருதி வைக்கப்பட்டது.

படிப்பு மையங்களும் தகவல் மையங்களும் :

தற்போது மூன்று படிப்பு மையங்களும் தகவல் மையங்களும் மதுரை, பாளையங்கோட்டை, நாகர்கோவில் ஆகிய இடங்களில் உள்ளன. வழக்கம்போல் இம்மையங்கள் உள்ளூர் கல்லூரி மற்றும் அஞ்சல் வழிக்கல்வி மாணவர்கள் ஆகியோருக்குப் பாடநூல்கள் பார்வை நூல்கள் ஆகியவற்றைக் கிடைக்கச் செய்வதன் வழி தங்கள் பணியைத் தொடர்ந்துள்ளன.

விளையாட்டுகளும் போட்டிகளும் :

உடற்பயிற்சிக் கல்வி முதுநிலைப்படிப்பில் இவ்வாண்டில் 12 மாணவர்கள் சேர்க்கப்பெற்றனர். பல்கலைக்கழகப் போட்டிகளில் கீழ்க்கண்ட போட்டிகளில்-பல்கலைக்கழகக் குழுக்கள் பங்கேற்றன.

ஆடவர்.— கைப்பந்து, கூடைப்பந்து, கபடி, கிரிக்கெட், டென்னிஸ் ஹாக்கி, கால்பந்து, ஈரூர்க்குதல் மற்றும் ஓட்டப்பந்தயங்கள்.

மகளிர். பேட்மிட்டன் கோக்கோ, கைப்பந்து, கூடைப்பந்து, மற்றும் ஓட்டப் பந்தயங்கள்.

அனைத்திந்திய பல்கலைக் கழகங்களுக்கிடையேயான ஈரூர்க்கும் போட்டியில் 56 கிலோ பிரிவில் திருவிதாங்கோடு முஸ்லீம் கலைக்கல்லூரியை சேர்ந்த திரு. டி. மொனி முதலிடத்தைப் பெற்றார். 60 கிலோ ஈரூர்க்கும் பிரிவில் திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரியைச் சேர்ந்த திரு. இ. சேர்மசேகரன் இரண்டாமிடத்தைப் பெற்றார். பல்கலைக் கழகங்களுக்கிடையேயான தென்வட்டார 'ஆ' ஹாக்கிப் போட்டிகளில் ஆண்களுக்கான ஹாக்கிப்போட்டியில் பல்கலைக்கழகக்குழு இரண்டாம் இடத்தைப் பெற்றது. அனைத்திந்திய வட்டாரங்களின் போட்டிகளில் விளையாடத் தகுதி பெற்றது. பல்கலைக்கழகங்களுக்கிடையிலான தென் மேற்கு போட்டிகளில் பெண்கள் பிரிவுக் கைப்பந்துப் போட்டியில் பல்கலைக்கழகக்குழு நான்காம் இடத்தை பெற்றது. சண்டிகாரில் அனைத்திந்திய வட்டாரப் போட்டிகளில் தென்வட்டாரப் பிரிதிநிதிகளாகப் பல்கலைக்கழகத்தின் 7 ஆடவரும் 1 பெண்ணும் ஒட்டப்பந்தய வீரர்களாகத் தகுதி பெற்றனர்.

தேசிய மாணவர் படை :

57 இணைக்கப்பட்ட கல்லூரிகளில் தற்போதைய தேசிய மாணவர் படையின் எண்ணிக்கை ஆண்கள் 4,128, பெண்கள் 984 ஆகும். 1989 அக்டோபரில் பாபநாசம் அம்பாசமுத்திரத்தில் எல்.டபிள்யு. பெண் மாணவர்களுக்கான திருநெல்வேலி (3) டி. என். பெண்கள் பி. எண். தேசிய மாணவர் படையால் ஒரு டிரக்கிங் படை யெடுப்பு நடத்தப்பட்டது.

இளைஞர் நலத்துறை :

1989 மார்ச்சு 19 முதல் 21 வரை திருட்டிணன் கோயில் அருள்மிகு கலசலிங்கம் பொறியியற் கல்லூரியில் பத்தாவது ஆண்டு விழா நடத்தப்பட்டது. துறை ஒரு தகவல் கண்காட்சியை நடத்தியது. 1989 நவம்பரில் மாணவர் தொண்டு பற்றிய நான்கு நாள் படிப்புகள் நடத்தப்பட்டன.

பல்கலைக்கழக வேலை வாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டுதல் நிலையம் :

பதிவு செய்துள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 1,162 ஆகும். பதிவு செய்யும் போது அவர்களுக்கு வழிகாட்டுதல் செய்யப்பட்டது.

நாட்டுத் தொண்டு திட்டம் :

நாட்டுத் தொண்டுத் திட்ட மாணவர் தொகை 22,500 ஆகும். 1989 ஜனவரி 12-ம் நாள் பல்கலைக் கழக நகர் வளாகத்தில் ஒரு நாள் தேசிய நாள் மற்றும் நாட்டுத் தொண்டு திட்ட நாள் கொண்டாடப்பட்டது. 1989 சனவரி 26ம் தேதி புது தில்லியில் நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பில் 6 பெண்கள் மற்றும் 5 ஆண்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். 1989 பிப்ரவரி 21 முதல் மார்ச்சு 2 வரை கன்னியாகுமரி விவேகானந்தா கேந்திரத்தில் இந்திய அரசின் இளைஞர் செயல்கள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளால் உதவியளிக்கப்பட்ட தேசிய ஒருமைப்பாடு மையம் நடத்தப்பட்டது.

தேசிய வயது வந்தோர் கல்வித் திட்டம் :

இத்திட்டத்தில் இப்பல்கலைக்கழகத்தில் 63 கல்லூரிகள் பங்குபெறுகின்றன. 1989 பிப்ரவரி 25, 2,600 நகர கல்லூரி மாணவர்களுக்காக நாட்டுப்புற வளர்ச்சிக் கான அறிவியல் மற்றும் தொழில் நுட்ப விண்ணப்பத்தில் இரண்டு நாள் பணிக்களம் ஒன்று நடத்தப்பட்டது. அதில் 60 கல்லூரிகள் பங்கேற்றன. அதில் 5,475 எழுத் தறிவுக் கருவிகள் கல்லூரிகளுக்கு விநியோகிக்கப்பட்டன 20—9—1989 அன்று பெண் தன் முனைப்பு அமைப்புகள், சமூகநலத் துறைகள், மற்றும் நகர கல்லூரி மாணவர்கட்காக குடும்பநலத்திட்டத்தின் மீதான செயல்கள் பற்றி ஒரு நாள் கருத்தரங்கு நடத்தப்பட்டது. பரப்பு அடி. அணுகுமுறையின் கீழ் யு.ஜி.சி. 14 தொடர்களின் மூலமும் 4 பல்கலைக்கழகத்தின் மூலமும் நடத்தப்பெறுகின்றன.

அஞ்சல் வழி கல் லூரி மற்றும் தொடர் கல்வி நிலையம் :

40,292 மாணவர்களோடு இந்நிலையம் தனது 19—வது ஆண்டுக் கல்விப் பணியில் அடியெடுத்து வைத்துள்ளது. இவ்வாண்டு பின்வரும் புதிய படிப்புகள் அறிமுகப் படுத்தப் பெற்றுள்ளன.

(1) நூலகம் மற்றும் தகவல் அறிவியல் சான்றிதழ் படிப்பு.

(2) அலுவலக மேலாண்மையில் கணிப்பான் சான்றிதழ் படிப்பு.

(3) தொழில் சட்டங்களில் மேற்சான்றிதழ் படிப்பு.

(4) வரிவிதிப்புச் சட்டங்களில் மேற்சான்றிதழ் படிப்பு.

(5) இதழியல் மற்றும் மக்கள் தொடர்புத்துறையில் முதுநிலை மேற்சான்றிதழ் படிப்பு.

(6) சுற்றுலாவில் முதுநிலை மேற்சான்றிதழ் படிப்பு.

மாலைக் கல்லூரி :

இவ்வாண்டில் பட்டப்படிப்பு முதுநிலைப்படிப்பு, எம்.ஃபில், பகுதிநேரப்படிப்புகள் ஆகியவற்றில் கல்லூரி மாணவர் தொகை 1,221 ஆகும்.

அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்.

அறிமுகம் :

மகளிர் சிக்கல்களை ஆராயும் நோக்குடன் தமிழகத்தில் உருவாக்கப்பட்டுள்ள ஒரே பல்கலைக்கழகம் என்ற விதத்தில் உயர் கல்வி நிலைய அமைப்பில், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் தனித்த ஓரிடத்தைப் பெறுகிறது. தமிழக அரசுச் சட்டம் 15-ன்கீழ் 1984-ல் அப்பல்கலைக்கழகம், மகளியரைப் பொறுத்த மட்டிலும் மாநில முறைமையிலான தொடர்பு படுத்தும் பொறுப்பு, ஆலோசனை நல்கும் பணிகள் ஆய்வு ஏற்றுச் செய்தல் ஆகிய நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ளது.

அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், ''சரிநிகர் சமானம்'' என்ற கவிஞர் பாரதியின் கவிதை தொடரை சமத்துவ சமூக அமைப்பு வேண்டி விடுத்த அழைப்பை '' Towards Equal Status '' என்று ஆங்கிலப்படுத்தி அதனை மூத்திரை மொழியாக (Motto) கொண்டுள்ளது.

இப்பல்கலைக் கழகம் மகளிரியல் பற்றிய ஆய்வுடன் வேறு பல இன்றியமையாத நோக்கங்களையும் கொண்டு செயல்பட்டு வருகிறது. அந்நோக்கங்களாவன :—

(1) தேசிய நிலையில் மாநில அளவில் எல்லா நிலைகளிலும் மகளிர் கல்வியை செயல்படுத்துதல்.

(2) தேசிய நிலையில் மாநில அளவில் மகளிர் கல்வி முன்னேற்றத்திற்கு ஆலோசனைகளை நல்குவது.

(3) பின் தங்கிய பகுதிகளில் வாழும் மகளிர் கைவிடப்பட்ட மகளிர் மற்றும் வறுமையுற்ற மகளிர்களின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்துவது.

செயல்பாடுகள் :

(அ) கல்வி : முறைப்பட்ட மற்றும் அஞ்சல் வழி கல்வித்துறை:

முறைப்படுத்தப்பட்ட முறையிலும், கோடை விடுமுறையிலும் நடத்தும் ஆய்வு நிலை வகுப்புகள் தவிர, ஆங்கிலத் துறையில் கலந்தாய்வும், அறிவுரைத் துறையில் சமூகவியலும் மேல்நிலைப்பட்ட படிப்புகள் ஆரம்பிக்கப்பட்டன.

முதுநிலை கணிப்பொறியியல் பட்டப்படிப்பு தவிர பாட்டுத் துறையில் இரண்டு வருட டிப்ளோமா ஆரம்பிக்கப்பட்டது.

அஞ்சல்வழி கல்வித்துறையில் முதுநிலைப்பட்டப் படிப்புக்கும் கணிப்பொறியியல் பட்டப்படிப்புக்கும் மாணவிகள் அனுமதிக்கப்பட்டனர்.

ஆய்வு :

பொருளாதாரம், கல்வி, ஆங்கிலம், மனையியல், வரலாறு, சமூகவியல், உளவியல், தமிழ் ஆகிய துறைகளில் ஏறத்தாழ 200 மாணவிகள் ஆய்வு மேற் கொண்டுள்ளனர். இந்தக் காலக்கட்டத்தில் பின்வரும் ஆய்வுத் திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன :—

(1) கொடைக்கானலில் வாழும் பெண்களில் ஒருங்கிணைந்த கிராமிய வளர்ச்சித் திட்டத்தின் பாதிப்பு.

(2) கொடைக்கானல் மேல் மலையில் பெண் விவசாயக் கூலிகள்.

(3) கொடைக்கானலில் பெண்கள் சமுதாயக் காடுகள் வளர்க்கும் திட்டத்தின் பாதிப்பு.

(4) பெண் மேல் நிலையாளர்கள் பின்னணியும் சமூக அந்தஸ்தும்.

(5) மீனவப் பெண்களுக்கு தொழில் நுட்பத்தின் பயன்.

(6) காந்திக் கிராமத்தில் வேலை பார்க்கும் பெண்களின் பொருளாதார நிலை.

(7) கொடைக்கானலில் உள்ள பெண் காய்கறி வியாபாரிகளின் பொருளாதார நிலைமை.

(8) தமிழில் வரதட்சிணை பிரச்சினைகளைப் பற்றி ஓர் ஆய்வு.

இக்கால கட்டத்தில் வெளிவந்த வெளியீடுகள்:

(1) பெண்கள் எழுத்தறிவின்மையை நீக்கும் ஒருங்கிணைந்த செயல்முறை அமைப்பு.

(2) சார்பற்ற கல்வியின் இனப்பாகுபாடற்ற படிக்கும் மூலப் பொருள்.

(3) இனப் பாகுபாட்டிலிருந்து இனப் பாகுபாடற்ற முறையை நோக்கி நகர்த்திக்கும் மூலப் பொருள்.

(4) தமிழ்நாடு கிராமத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆரோக்கியம்.

(5) மீனவப் பெண்களுக்கு தொழில் நுட்பத்தின் பயன்.

விரிவாக்கப் பணி :

கருத்தரங்கு; ஆய்வரங்கு.—மார்ச் 15 ஆம் தேதியிலிருந்து 21 ஆம் தேதிவரை பொருளாதாரத்துறை நுண்வோர் பாதுகாப்பு வரம்பு, கொண்டாடியது.

கல்வித்துறை ஏப்ரல் 8–9 ஆம் தேதிகளில் சுதேசி விஞ்ஞானக் கழகம் மத்திய ஆராய்ச்சிக் கழகத்துடன் இணைந்து நடத்தவதையில் விஞ்ஞான ஆராய்ச்சி கூட்டம் நடத்தியது.

கல்வித்துறை மனையியல் துறையுடனும், உளவியல் துறையுடனும் இணைந்து ஜூன் 1 ஆம் தேதியிலிருந்து 3 ஆம் தேதிவரை ஆசிரியர் ஒழுக்கம்—பௌவன பருவத்து உளவியல்—ஆசிரியப் பயிற்சி சார்ந்த படிப்பு பற்றி கோத்தகிரியில் உள்ள ஒரு பள்ளியில் 100 ஆசிரியர்களுக்கு மறுபயிற்சி வகுப்பு நடத்தினர்.

ஆங்கிலத்துறை மார்ச் முதல் தேதியன்று இச்சனின் நாடகமான 'பொம்மை வீடு' பற்றி ஒரு கருத்தரங்கு நடத்தப்பட்டது. இதே துறை மார்ச் 5, 6 மற்றும் 8 தேதிகளில் தேசிய பெண்கள் தினம் கொண்டாடியது. அதையொட்டி ஆங்கிலத் துறையினர் 'இந்தியப் பெண்கள்—சுற்றுப்பனை எழுத்தாளர்களுக்கு ஒரு சவால்' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடத்தினார்கள்.

மனையியல் துறை வயது முதிர்ந்தோர் கல்வி சங்கங்களின் ஊக்குனர்களுக்கு ஜனவரி 27 ஆம் தேதி ஒரு மறுபயிற்சித் திட்டம் தொடுத்தனர்.

தமிழ்த்துறையினரால் பிப்ரவரி 15 ஆம் தேதியன்று மகாகவி பாரதி பற்றி ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது. மார்ச் 25 மற்றும் 26 தேதிகளில் தமிழ் துறையினர் தமிழிலக்கியம், பெண்ணியல் நோக்கு என்ற தலைப்பில் சென்னை, எத்திராஜ் கல்லூரியில் இரு நாட்கள் கருத்தரங்குகள் நடத்தினர்.

வயதானோர் கல்வித் திட்டத் துறையினர் ஜனவரி 5 ஆம் தேதியன்று தேசிய எழுத்தறிவு தினத்தைக் குறிக்கும் விளம்பர் தட்டிகள் தயாரித்து ஒருநாள் கண்காட்சி நடத்தினார்கள். பெண் குழந்தைகளைப் பற்றி சமதர்ம எடுத்துக்காட்டு என்ற தலைப்பில் பெண்கள் சங்கத்தினர் அங்கத்தினர்கள்கூட ஒரு கருத்தரங்கு நடைபெற்றது.

கணிப் பொறியியல் துறை தர்வு ஒழுங்கு முறைகள் பற்றியும் கட்டுமான அமைப்பில் அணுகுமுறையின் வருங்கால இயல் படிப்பு பற்றி விரிவுரைகள் நடத்தப் பெற்றன.

நவம்பர் 15 ஆம் தேதியன்று பல்கலைக்கழக பெண்கள் சங்கத்தின் கூட்டோடு மாறுபட்டவரும் சமூகத்தில் பெண்களின் பிரிகும், அவர்கள் கவனிக்கப்படும் என்ற தலைப்பின்கீழ் கருத்தரங்கு நடைபெற்றது.

பயிற்சி வகுப்புகள் :

ஜூலை 10 ஆம் தேதியிலிருந்து 15 ஆம் தேதி முடிய, 17 ஆம் தேதியிலிருந்து 27 ஆம் தேதி முடிய வங்கி நுழைவுத் தேர்வுக்கான பெண்களுக்கு கொண்டாகவினரும், மற்றும் மையத்திலும் பயிற்சி கொடுக்கப்பட்டது.

நவம்பர் 5 ஆம் தேதிமுதல் 10 ஆம் தேதி முடிய பாரத வங்கி தே. வினைத் திட்டம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் ஆதிவோரின் நட்பு நிறுவனமும் கொடைக்கானல் மண்டல வருவாய்த்துறை அதிகாரியால் 10 பெண்களுக்கு மூயல் வளர்ப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

தேசிய சமூக நலத்திட்டம் :

பிப்ரவரி 19 ஆம் தேதியிலிருந்து 25 ஆம் தேதிவரை 'பண்ணைக்காடு' என்ற கிராமத்தில் கிராமிய பார்வை நடத்தப்பட்டது.

ஏப்ரல் 23 மற்றும் 24 தேதிகளில் தேசிய சமூக நலத் தொண்டர்கள் பழநியிலிருந்து கொடைக்கானல் வரை மலையேற்றம் சென்றனர்.

விழாக்கள் :

செப்டம்பர் 15 ஆம் தேதியன்று நமது மாநில ஆளுநர் மேதகு பி. வி. அலெக்சாண்டர் தலைமையில் முன்றாவது பட்டமளிப்பு விழா நடத்தப்பட்டது.

மே 15 ஆம் தேதியன்று கொடைக்கானலில் நடைபெற்ற மலர் கண்காட்சியில் 'மங்கையர் ஆழ்வு மலர்' என்ற குறிக்கோளை உணர்த்தும் வகையில் ஒரு காட்சியை அமைத்தது.

மாணாக்கியர்களின் எண்ணிக்கை :

(1) பிளச்.டி. முழுநேரம்	2
(2) பிளச்.டி. பகுதி நேரம் .. —	3
(3) எம்.ஃபில். முழுநேரம்	21
(4) எம்.ஃபில். பகுதி நேரம்	42
(5) எம்.ஏ. பெண்ணியல் முழு நேரம் ..	3
(6) எம்.ஏ. பெண்ணியல் தொலை தூரக்கல்வி	52
(7) கணிப்பொறி முழுநேரம்	27
(8) கணிப்பொறி தொலை தூரக்கல்வி —	56

நூலகம் :

இந்த நூலகத்தில் பெண்ணியலைப் பற்றியும், உளவியல், சமூகவியல், வரலாற்றியல், கல்வியியல், பொருளியல், ஆங்கிலவியல், தமிழியல் பற்றியும் 40 ஆயிரம் புத்தகங்கள் உள்ளன.

இக்கால கட்டத்தில் ஒரு கோடி ரூபாய்க்கான புத்தகங்கள் வாங்கப்பட்டன. 70-க்கும் மேற்பட்ட நாட்குறிப்பு புத்தகம் வாங்கப்பட்டன திட்டம் மற்றும் தலைப்பு வாரியாக நிதிப் பணிகளின் நடைமுறையில் சாதனைகளின் முன்னேற்ற விவரம்:—

(1)	(2)	செலவு. (3)
(1) தேசிய சமூக நலத்திட்டம்	13,655.00	13,523.40
(2) நீபா	9,093.00	9,093.00
(3) மலையேற்றப் பயிற்சி	13,000.00	..
(4) இளைஞர் நடத்தும் கண்காட்சி	15,750.00	11,725.75

இந்த வருடத்தில் புகுத்தப்பட்ட புதுத் திட்டங்கள்:

(1)	மானியம் (2)	செலவு. (3)
வயது வந்தோர் கல்வித் திட்டம் ... — —	1,00,000.00	28,276.00
நூலகப் புத்தகங்கள் — —	10,00,000.00	12,845.75

கல்வி மற்றும் ஆய்வு போன்ற விரிவாக்கப் பணிகளுக்கான செலவுகளை பராமரிப்பு மானியத்திலிருந்து கொடுக்கப்பட்டன.

பிறப்புச் செய்திகள் :

கானடாவின் ஹாலிபேக்ஸன் மவுண்ட் செயின்ட் பல்கலைக் கழகத்தின் சூசன் குளார்க் என்பவரும் எடபோராடவ் என்பவரும் அயல்நாட்டு பல்கலைக் கழகத்துக்கும் இந்த பல்கலைக் கழகத்துக்கும் கல்வித்தொடர்பு ஏற்படுத்துவது பற்றி கலந்தாலோசிக்க வந்திருந்தனர். ஏப்ரல் 10 ஆம் தேதி விரிவுரையாற்றினர்.

சோமாலியாவிலிருந்து திரு. முஷர் ஒமர் அஹமத் அவர்கள் 'சோமாலியாவில் பெண்கள்' பற்றி ஆகஸ்ட் 10 ஆம் தேதி பேசினார்கள்.

டாக்டர் வனஜா துருவராஜ் அவர்கள் பெண்ணியல் ஆராய்ச்சி பற்றி ஆகஸ்ட் 5 ஆம் தேதி பேசினார்கள்.

அயல்நாட்டு பல்கலைக்கழகக் கல்வித் தொடர்பு :

'ஆலிஸ்' செயற்பாட்டுத் திட்டத்தின் துவக்கமாக இங்கிலாந்து நாட்டின் கென்ட் பல்கலைக் கழகத்தின் முதல் பேராசிரியை ஆன் செல்லர் ஜனவரி 11 ஆம் தேதியிலிருந்து பிப்ரவரி 20 ஆம் தேதி முடிய இந்த பல்கலைக் கழகத்திலிருந்து பாடத்திட்ட விரிவாக்கம் பற்றியும், பெண்ணியல் பற்றியும் கருத்தரங்குகளும், சொற்பொழிவுகளும் நடத்தினார்கள்.

இந்தப் பல்கலைக்கழகத்திலிருந்து சமூகவியல்துறை பேராசிரியர் டாக்டர் ரதி தேவி ஜனவரி 11 ஆம் தேதியிலிருந்து பிப்ரவரி 20 ஆம் தேதி வரை கென்ட் பல்கலைக் கழகத்தில் தங்கி பல கருத்தரங்குகளில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினார்கள்.

முடிவு :

இந்தப் பல்கலைக்கழகம் பெண்ணியல் கல்வி மூலமாக பெண்களிடையே அவர்களின் திறமைகளை, சக்தியை பற்றிய ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி பொருளாதார சுய நிறைவையும், திறனாற்றும் திறமையையும் ஏற்படுத்தி, பெண்களின் நிலையை மேம்படுத்துவது குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இந்த குறிக்கோளை அடையும் நோக்கோடு எங்கள் துறைகளின் பாடத்திட்டம் திருத்தியமைக்கப்படுகிறது.

பெண்களின் சிக்கல்கள் பற்றி ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. வயது வந்தோர் கல்வித் துறையும், சமூக நல சேவைத் துறையும் விரிவாக்கப் பணியை மேற்கொண்டுள்ளது.

இந்தப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் தேவையான அடிப்படைத் தேவையான பல ஏக்கர் நிலம் பெறுவதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன.

தேசிய மாணவர் படை.

1. அணி வகுப்பு :

தேசிய மாணவர் படை அணிவகுப்பில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு உயர்ந்துள்ளது. அவ்விவரம் பின்வருமாறு:—

	முதுநிலைப் பிரிவு.	இளநிலைப் பிரிவு .
(1)	(2)	(3)
	(சதவிகிதத்தில்.)	
1. தரைப்படைப் பிரிவு	83	80
2. கடற் படைப்பிரிவு	70	85
3. விமானப்படைப் பிரிவு	81	89
4. பெண்கள் பிரிவு	82	92

ஆண்டுப் பயிற்சி முகாம் :

இந்த ஆண்டில் மொத்தம் 66 முகாம்கள் நடைபெற்றன. 19,272 மாணவர்கள் இந்த முகாம்களில் கலந்து கொண்டனர்.

அனைத்திந்திய மாணவர் தேசியபடை முகாம் :

இந்த இயக்ககம் 'அனைத்திந்திய முகாம்கள்' ஏற்பாடு செய்து அவற்றைச் சிறப்பாக நடத்தியது. இது தவிர இந்நாட்டின் பிற மாநிலங்களில் உள்ள இயக்ககங்கள் ஏற்பாடு செய்திருந்த 22 முகாம்களிலும் நம்முடைய மாணவர்கள் கலந்து கொண்டனர் மொத்தம் 4,531 மாணவர்கள் இம் முகாம்களில் கலந்து கொண்டுள்ளனர்.

தேசிய ஒருமைப்பாட்டு முகாம் :

4 இந்த இயக்ககம் இளநிலை மாணவியர் பிரிவிற்கென்று ஒன்றும் இளநிலை மாணவர் பிரிவிற்கென்று இரண்டும் ஆக 3, தேசிய ஒருமைப்பாட்டு முகாம்கள் நடத்தியது. டில்லி, உத்தரப் பிரதேசம், ஒரிசா ஆகிய இடங்களில் உள்ள தேசிய மாணவர் படை இயக்கங்கள் நடத்திய தேசிய ஒருமைப்பாட்டு முகாம்களிலும் நம் மாணவர்கள் கலந்து கொண்டனர். மொத்தம் 2,004 மாணவர்கள் இம் முகாம்களில் கலந்து கொண்டனர்.

முப்படைப் பிரிவுடன் இணைந்த பயிற்சி :

தேசிய மாணவர் படை பகுதி நேர அதிகாரிகள் 10 பேரும் இராணுவப் படை பிரிவு மாணவர்கள் (மு.பி.) 573 பேரும், பல்வேறு இராணுவப் பிரிவுகளுடன் இணைந்து பயிற்சி பெற்றுள்ளனர்.

கடற்படைப் பிரிவைச் சேர்ந்த அதிகாரி ஒருவரும் முதுநிலைப் பிரிவு மாணவர் 31 பேரும், கடற்படைப் பணியாளர்களுடன் சேர்ந்து கடற்படைப் பயிற்சி பெற்றுள்ளனர்.

7. விமானப் படைப் பிரிவைச் சேர்ந்த பகுதி நேர அதிகாரி ஒருவரும், 21 மாணவர்களும், இந்த விமானப் படையுடன் இணைந்து பயிற்சி பெற்றுள்ளனர்.

மாணவர் பிரிவைச் சேர்ந்த (மு.பி.) 30 மாணவியர்கள், விமானப் பிரிவில் சேர்ந்து பயிற்சியை முடித்துள்ளனர்.

சுமைதாங்கிச் செல்லும் அனைத்திந்திய பயணம் :

தேசாயம்பத்தூரிலுள்ள தேசிய மாணவர் படைப் பிரிவு தலைமையிடம் ஏற்பாடு செய்திருந்தபடி ஊட்டியில், மாணவியர் பிரிவிற்கென்று சுமை தாங்கிச் செல்லும் அனைத்திந்திய பயணம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டது. இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர் தவிர, ஏனைய பிரிவு இயக்கங்கள் பதினைந்திலிருந்து வந்தவர்களும் இப்பயணத்தில் பங்கு கொண்டுள்ளனர். உத்தரப் பிரதேசம், கர்நாடகம், மகாராட்டிரம் ஆகிய இடங்களிலுள்ள தேசிய மாணவர் படை இயக்கங்கள் நடத்திய சுமைதாங்கிச் செல்லும் மாணவர்களிலும் நம்முடைய மாணவர்கள் பங்கேற்றுள்ளனர். இந்த இயக்கத்தைச் சேர்ந்த 823 பேர் இத்தகைய பயணங்களில் கலந்து கொண்டுள்ளனர்.

இளைஞர் கருத்துப் பரிமாற்றம் வகுப்பு :

1989 ஜூன் முதல் 1990 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் நாள் நடைபெற்ற இளைஞர் கருத்துப் பரிமாற்ற வகுப்பில் முதுநிலைப் பிரிவைச் சேர்ந்த மாணவர்களும் முதுநிலைப் பிரிவைச் சேர்ந்த 5 மாணவியரும் கலந்து கொண்டுள்ளனர்.

வீரதீரச் செயல்கள் :

சைக்கிள் பயணம்.—இந்த இயக்கத்தின் பல்வேறு பிரிவுகள் 23, சைக்கிள் பயணங்களுக்கு ஏற்பாடு செய்து நடத்தியுள்ளன. மொத்தம் 244 மாணவர்கள் மேற்சொன்ன பயணங்களில் கலந்து கொண்டுள்ளனர். அவர்கள் 5,774 கி.மீ. தொலைவு பயணம் செய்துள்ளனர்.

மலையேறும் பயிற்சி வகுப்புகள் :

இயக்கத்தின் 11 மாணவர்கள், மலையேறும் பயிற்சி நிறுவனத்தில், மலையேறும் அடிப்படைப் பயிற்சியை முடித்துள்ளனர்.

பாரா செயிலிங் (Para Sailing) விண்ட் சர்ப்பிங் (Wind Surfing) போன்றவற்றில் வீரதீரச் செயல்கள் நடத்திக் காட்டியுள்ளனர். பாரா செயிலிங் பயிற்சியில் 6 மாணவர்களும், விண்டு சர்ப்பிங் பயிற்சியில் 36 மாணவர்களும் இவ்வாண்டில் பயிற்சி பெற்றனர்.

சமூக நலப் பணிகள் :

கிராமங்களைத் தேர்ந்தெடுத்து சமூக நலப் பணிகளைக் கவனித்தல், சாலை பராமரிப்பு, பழுது பார்த்தல், போக்குவரத்தை முறைப்படுத்தும் பணிகள், மருத்துவ மனைகளுக்குச் சென்று நோயாளிகளுக்கு உதவுதல், முதியோர் காப்பகங்களுக்குச் சென்று அவர்களுக்கு முதியோர் கல்வித் திட்டம், வரதட்சிணை ஒழிப்பு நடவடிக்கை, தொழு நோய் ஒழிப்பு நடவடிக்கை, இரத்த தானம் செய்தல், கண் தானம் உறுதி மொழி ஏடுத்தல், மரக் கன்றுகளை நடுதல் போன்ற பல்வேறு சமூக நலப்பணிகளில், தேசிய மாணவர் படை இயக்கத்தைச் சேர்ந்த மாணவர்கள் ஏற்கனவே பங்கேற்றுள்ளனர்.

இரத்த தானம்.—1,603 மாணவர்கள் மொத்தம் 3,81,900 மி. லிட்டர் இரத்தத்தைத் தானமாக அளித்துள்ளனர்.

மரக்கன்றுகளை நடுதல்.—தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவர்கள் பல்வேறு இடங்களில் 19,252 மரக்கன்றுகளை நட்டுள்ளனர்.

கண்தானம் உறுதிமொழி எடுத்தல்.—கண்தானம் செய்வதற்காக 1,125 மாணவர்கள் உறுதி மொழி எடுத்துள்ளனர்.

பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வித்துறை :

பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவில் உள்ள, 6–14 வயதுத் தொகுதியில் உள்ள பள்ளிக்குச் செல்லாதவர்கள், பள்ளிப்படிப்பை இடையில் விட்டவர்கள், சமூக காரணங்களுக்காக படிக்க இயலாதவர்கள் ஆகியோருக்கு அடிப்படை கல்வி அறிவு புகட்டி அவர்களை பொதுவாக கல்வி ஓட்டையில் இணைப்பதற்காக 1976ல் முழு அளவிலான இவ்வியக்ககம் தனியே நிறுவப்பட்டது.

2. நடுவண அரசினால் 1978ல் ஆண்டு பெருமளவிலான "தேசிய வயது வந்தோர் கல்வி திட்டம்" கொண்டு வரப்பட்டபோது அத் திட்டத்தினை செயல்படுத்தும் பொறுப்பும் இவ்வியக்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

3. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வித்துறையின் பணியன்றி மும்மாநிலத்தில் செயல்படுத்தப்படும் அனைத்து வயது வந்தோர் கல்வித் திட்டங்களின் கண்காணிப்பாளராகவும், ஒருங்கிணைப்பாளராகவும் பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநர் செயல்படுகிறார். மேலும் பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி பற்றிய கொள்கை வகுக்கும் "மாநில வயது வந்தோர் கல்வி வாரியத்தின்" உறுப்பினர் செயலாளராகவும் பணிபுரிகிறார். இவ்வியக்ககத்தின் தலைவர் மாண்புமிகு கல்வி அமைச்சராவார்.

1989–90-ம் ஆண்டில் இத்திட்டங்களுக்கென ரூ. 8.65 கோடி நிதி ஒதுக்கப்பட்டது.

மாநில வயது வந்தோர் கல்வித் திட்டம் :

மாநில வயது வந்தோர் கல்வித் திட்டத்தின்கீழ் 71 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொன்றுக்கும் 100 மையங்கள் வீதம் செயல்பட்டது. இம்மையங்களில் பயில வயது வந்த கல்லாதோரை ஈர்க்கும் பொருட்டு ஒவ்வொரு மையத்திலும் அந்த பகுதிக்கு ஏற்றவாறு தொழிற்கல்வி பயிற்றுவிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் பயன் அடைந்தோர் விவரம் கீழ்வருமாறு அமைந்தது:

திட்ட எண்ணிக்கை : 71.

திட்ட மையங்கள் : 7,100

பயனடைந்தோர்.			தாழ்த்தப்பட்டோர்.			மலைவாழ்வோர்.		
ஆண்.	பெண்.	மொத்தம்	ஆண்.	பெண்.	மொத்தம்.	ஆண்.	பெண்	மொத்த
73,202	1,57,398	2,30,600	34,197	53,734	87,931	1,504	1,061	2,165

ஊரக செயல்முறை எழுத்தறிவுத் திட்டம் :

இத்திட்டம் அரசின் முழு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் 27 இடங்களில் நடைபெறுகிறது. இந்த 27 திட்டப்பகுதிகளில் ஒவ்வொன்றிலும் 300 மையங்கள் வீதம் 8,100 மையங்கள் செயல்படுத்தப்பட்டது. ஒவ்வொரு திட்டப்பகுதியும் இரண்டு அல்லது மூன்று ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கி உள்ளது. இத்திட்டத்தின் மூலம் பயனடைந்தோர் விபரம் மேலே தரப்பட்டுள்ளது.

திட்டப் பகுதி : 27.

திட்ட மையங்கள் : 8100

பயனடைந்தோர்.			தாழ்த்தப்பட்டோர்.			மலைவாழ்வோர்.		
ஆண்.	பெண்.	மொத்தம்.	ஆண்.	பெண்.	மொத்தம்.	ஆண்	பெண்	மொத்தம்
1,00,558	1,62,566	2,63,124	43,795	62,459	1,06,254	453	671	1,124

மக்கள் கல்வி நிலையம் (Janashikshan Nilayam)

தேசிய எழுத்தறிவு முனைப்பு இயக்கக அறிக்கையின்படி நடுவண அரசு நாடு முழுவதும் படிப்படியாக மக்கள் கல்வி நிலையங்களை ஊரக செயல்முறை எழுத்தறிவுத் திட்டத்தின்மூலம் புதிதாக கல்வி பயின்றோருக்காக பயன்படுத்த முடிவெடுத்தது.

இத்திட்டத்தின்கீழ் நடுவண் அரசு 700 மக்கள் கல்வி நிலையங்களை தமிழ் நாட்டில் நூறு சதவீத நிதி உதவியுடன் ஏற்படுத்த அனுமதி வழங்கியது. இதன்படி 5,000 மக்கட்தொகை கொண்ட பகுதிகளுக்கு ஒன்றாக 3—4 கிராமங்களை ஒருங் கிணைத்து மத்தியப் பகுதியில் இம்மையங்கள் நிறுவப்பட்டது.

இம்மக்கள் கல்வி நிலையங்கள், தொடர்பாளர் ஒருவரால் நிருவகிக்கப்படுகிறது. இவை சிறிய நூலகமாகவும் சமுதாய நிலைய மையமாகவும் செயல்படுகிறது. இந்த நிலையங்களில் நாளேடுகள், வார மாதப் பத்திரிகைகள் சஞ்சிகைகள் ஆகியவையும் கணிதம் மற்றும் இதர புத்தகங்கள் புதிதாக கல்வி பயின்றோர் பயிலுவதற்கு ஏற்றதாக வாங்கி வைக்கப்பட்டுள்ளது. இவை தவிர கைப்பந்து, கால்பந்து, டெனிகாய்டு, கேரம், செஸ் போன்ற விளையாட்டுச் சாதனங்களும் இந்த நிலையங்களில் வாங்கி வைக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு நிலையத்திற்கும் ரூ. 14,000 முதலாண்டில் செலவிடப் படுகிறது.

வயது வந்தோர் கல்விப் பணியில் ஈடுபட்டுள்ள இதர நிறுவனங்கள் :

தொண்டு நிறுவனங்கள், நேரு இளைஞர் மையங்கள், கல்லூரிகள் முதலியவை களும் வயது வந்தோர் கல்விப் பணியில் ஈடுபட்டு வருகின்றன. இதன் மூலம் பயன் பெற்றவர்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

தொழிலாளர் கல்வி நிலையம் (Shramith Vidyepeeth)

அமைப்பு ரீதியில் இல்லாத தொழிலாளர் குடும்பங்களைச் சார்ந்த இளைஞர் களும், பெண்களும் ஓரளவு தொழிற்கல்வி பெறுவதற்காக நகரப் பகுதிகளில் நடுவண் அரசின் நூறு சதவீத நிதி உதவியுடன் தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, திருச்சி ஆகிய நகரங்களில் தொழிலாளர் கல்வி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் சுமார் 70,830 பேர் பயனடைந்துள்ளனர்.

பள்ளிசாராக் கல்வி :

சிவகாசி, சாத்தூர், வெம்பக்கோட்டை ஆகிய காமராசர் மாவட்டப் பகுதிகள் மற்றும் வடாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த குடியாத்தம் பகுதியில் உள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரிகிறார்கள். பயன்பெறுவதற்காக 1985-ம் ஆண்டு மொத்தம் 110 மையங்கள் திறக்கப்பட்டன. இம்மையங்களில் சேரும் தொழிலாளர்கள் மூன்றாண்டு காலத்துக்கு பயிற்சி அளித்து எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதத் தக்க அளவில் கல்வி பயிற்றுவிக்கப்படுவர். இவர்கள் 1989-ம் ஆண்டில் 8-ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதினார்கள்.

வரிசை எண், இட்டத்தின் பெயர்.	இட்டத்தின் எண்ணிக்கை.	மையங்களின் எண்ணிக்கை.	கற்போர் எண்ணிக்கை.			கற்போரில் தாழ்த்தப்பட்டோர்.			கற்போரில் மலைவாழ்வோர்.		
			ஆண்.	பெண்.	மொத்தம்.	ஆண்.	பெண்.	மொத்தம்.	ஆண்.	பெண்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)
1 தொண்டு நிறுவனங்கள்	20	1,820	15,258	41,905	57,163	8,285	22,161	30,446	423	735	1,158
2 கல்லூரிகள்	11	356	4,014	6,612	10,625	2,067	3,400	5,467	270	252	542
3 நேரு இளைஞர் மன்றம்	10	834	11,061	14,041	25,102	4,600	6,415	11,016	112	89	201
4 மக்கள் எழுத்தறிவு இயக்கம் (பொது) ..			22,062	19,825	41,986	6,651	5,705	12,326	30	15	45
5 மக்கள் எழுத்தறிவு இயக்கம் (என்.எஸ்.எஸ்) ..			42,710	7,290	50,000				—	—	—

இத்துறை (Universalisation of Primary Education) மற்றும் 15–35 வயதுத் தொகுதியினருக்கு நூறு சதவீத கல்வி என்ற இலக்கினை நோக்கி நடை பெறுவதால் இத்துறையின் பொறுப்பு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருவதும் குறிப்பிடத் தக்கதாகும்.

பொது நூலகங்கள்.

சிறப்பு அம்சங்கள் :

1. முதலீடு :

நூலகப் பணி மனித வளர்ச்சிக்கு ஒரு நல்ல முதலீடு.

இது பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது. இதனால் பயிற்சி கொண்ட மனிதத் திறம் பெறுகிறோம். இது வளர்ச்சிக்கு நல்ல சூழ்நிலையையும் மனோபாவத்தையும் உண்டாக்குகிறது.

2. தமிழ்நாடு சட்டம் :

நூலகப் பணியின் சிறப்பை உணர்ந்த தமிழ்நாடு அரசு 1948 இல் தமிழ்நாடு பொது நூலகச் சட்டத்தை இயற்றி பரந்த கிராமிய நகர நூலகப் பணிக்கு வழிவகை செய்தது.

3. பணி முனைகள் :

தமிழ்நாடு பொது நூலகச் சட்டப்படி தற்போது தமிழ் நாட்டின் மேற்கானும் பணிமுனைகள் செயல்பட்டு வருகின்றது.

அரசுத்துறை :

மாநில மைய நூலகம் (கன்னிமாரா பொது நூலகம் சென்னை-8)	1
மாவட்ட மைய நூலகங்கள்	18
இயங்கு நூலகங்கள்	9
இணை நூலகங்கள்	1,515
மொத்த பணிமுனைகள்	1,543

பொது நூலகத்துறை : புள்ளி விவரங்கள் 1989–90 ஆம் ஆண்டு.

வரிசை எண்.	பணி அலகுகள்.	பணி முனைகள்.	அனுமதிக் கப்பட்ட பணி யிடங்கள்	நூல் இருப்பு.	வாசகர்கள்.	உறுப்பினர் கள்.	படித்த நூல்கள்.	இரவல் கொடுத்த நூல்கள்.	மொத்தம் உபயோகப் படுத்தப்பட்ட நூல்கள்.
(1)		(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(10)
1.	கன்னிமாரா பொது நூலகம், சென்னை	1	119	4,47,975	8,84,849	42,540	24,64,577	2,05,879	26,70,456
2	செங்கை அண்ணா	120	267	12,52,917	30,89,677	1,32,870	3,41,047	10,91,415	14,32,462
3	கோயமுத்தூர்	104	217	12,64,480	27,00,318	1,68,169	55,47,645	11,99,424	67,,47,069
4	தருமபுரி	39	88	2,94,669	11,91,849	57,450	2,47,997	3,00,704	5,48,701
5	திண்டுக்கல் காயிதே மில்லத்	51	82	1,19,342	9,73,235	38,082	2,53,778	3,89,618	6,43,396
6	காமராசர்	84	114	3,78,029	15,76,608	61,404	2,04,500	3,94,203	5,98,703
7	கன்னியாகுமரி	8	34	71,930	2,10,457	8,361	23,112	1,11,985	1,35,097
8	சென்னை	135	266	24,62,985	54,32,046	1,21,126	21,58,983	13,52,726	35,11,709
9	மதுரை	113	237	13,42,542	29,72,465	1,22,869	10,28,246	12,21,810	22,50,056
10	நீலகிரி	40	66	32,78,563	8,66,942	54,952	1,25,141	3,23,665	4,48,806
11	வட ஆற்காடு	91	173	7,09,625	28,34,902	1,19,827	5,93,434	8,18,879	14,12,313
12	பெரியார்	95	158	8,11,109	15,78,683	98,485	2,81,444	5,60,613	8,42,057
13	புதுக்கோட்டை	30	72	1,92,236	5,13,232	24,201	1,52,039	1,44,816	2,96,855
14	பசும்பொன் தேவர் திருமகன்	93	145	4,47,514	16,71,573	79,333	2,37,334	4,17,271	6,54,605
15	சேலம்	90	210	7,70,477	22,10,268	1,71,801	3,72,970	8,66,140	12,39,110
16	தென்னாற்காடு	115	216	5,48,263	20,34,778	92,245	1,58,009	5,81,684	7,39,693
17	திருச்சிராப்பள்ளி	95	244	7,66,796	23,01,048	88,142	6,81,691	6,02,924	12,84,615
18	தஞ்சாவூர்	105	265	9,30,096	29,42,082	1,38,985	8,62,529	12,65,032	21,27,561
19	திருநெல்வேலி	134	289	8,69,036	34,00,273	1,33,059	2,91,485	8,56,200	11,47,685
	மொத்தம்	1,543	3,262	1,69,60,584	3,93,85,285	17,52,901	1,60,25,961	1,27,04,988	2,87,30,949

5. நிதி :

இம்மாநிலத்தில் நூலகப் பணிக்காக மொத்தம் ரூ. 7.98 கோடி செலவிடப்படுகிறது. அரசுத்துறை நூலகங்களும் நூலக ஆணைக் குழுக்களுக்கும் இத் தொகை செலவிடப்பட்டது

1. மதிப்பீடு 1989-90 :

1. அடிப்படைச் செய்திகள் :
மொத்த மக்கள் தொகை 4,84,08.077
(1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்குப்படி)

மொத்த படித்தவர் தொகை .. 2,26,37.659

2. மாநிலத்தின் மொத்த செலவினம் : ... ... ரூ. 4,134 கோடி.

(1) மொத்த மக்கள் தொகைக்கான சராசரி செலவினம் ரூ. 854.13
(செலவினம் மக்கள் தொகை.)

3. கல்விக்கான செலவினம்: (பட்ஜெட் எஸ்டிமேட்) ரூ. 900 கோடி.

(1) மொத்த மக்கள் தொகைக்கான சராசரி செலவினம் ரூ. 185.95
(செலவினம் மக்கள் தொகை).

(ii) மொத்த மக்கள் தொகையில் சராசரி கல்விக்கான
செலவினம் .. .. ரூ. 398.23
(செலவினம்—படித்தவர் தொகை).

4. நூலகப் பணிக்கான செலவுத் தொகை .. .. .. ரூ. 7.98 கோடி

(i) மொத்த மக்கள் தொகைக்கான சராசரி
செலவினம் .. .. ரூ. 1.65
(செலவினம்—மக்கள் தொகை).

(ii) படித்தவர்களுக்கான சராசரி தலா செலவினம்
(செலவினம்—படித்தவர் தொகை) .. ரூ. 3.53

(iii) வாசகர்களுக்கான சராசரி தலா செலவினம்
(செலவினம்—வாசகர்கள்) .. .. .. ரூ. 2.03

(iv) உறுப்பினர்களின் சராசரி தலா செலவினம் ரூ. 45.52
(செலவினம்—உறுப்பினர்கள்)

5. முடிவு :

குறைந்த செலவில் நிறைந்த மக்களுக்குச் சிறந்த படிப்பு அளிப்பதே நூலகப் பணியின் குறிக்கோள் ஆகும்.

பள்ளிக் கல்வி.

அமைப்பு :

பள்ளிக் கல்வி மற்றும் மாநிலக் கல்வி ஆராய்ச்சி நிறுவனம் தொடர்பாக திட்டமிடுதல், திட்டப் பணிகளை விரிவுப்படுத்துதல் முதலான பணிகளுக்கு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களே, தலைமை நிர்வாக அலுவலர் ஆவார். பள்ளிக் கல்வி வளர்ச்சி சம்பந்தமான பணிகளைக் கவனித்துக் கொள்ளவும் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு உதவி புரியும் பொருட்டு வருவாய் மாவட்ட அளவில் முதன்மைக் கல்வி அலுவலர்கள் உள்ளனர். முதல் நிலைப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி சம்பந்தமான பணிகளை கவனிக்கும் பொருட்டு மாவட்டக் கல்வி அலுவலர், மகளிர் பள்ளி ஆய்வாளர், உதவிக் கல்வி அலுவலர்கள் உள்ளனர். உடற்கல்வி சம்பந்தமான பணிகளை முதன்மை உடற்பயிற்சி ஆய்வாளர் கவனிக்கிறார். ஆங்கிலோ இந்தியப் பள்ளி, மெட்ரிக்குலேஷன் பள்ளி இவைகளை மேற்பார்வையிடும் பொருட்டு முறையே ஆங்கிலோ இந்தியப் பள்ளி ஆய்வாளர், மெட்ரிக்குலேஷன் பள்ளி ஆய்வாளர் உள்ளனர். கல்வி வளர்ச்சி திட்டப்பணிகளைத் தகுந்த முறையில் நடைமுறைப்படுத்துவதும் பள்ளிகளை நலலமுறையில் நிர்வகிப்பதும் இந்த ஆய்வு அலுவலர்களின் பொறுப்பாகும்.

30—9—1989 முடிய உள்ள பள்ளிகள், மாணவர் ஆசிரியர்கள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :

	பள்ளிகளின் எண்ணிக்கை.	ஆசிரியர் களின் எண்ணிக்கை (இலட்சத்தில்)	மாணவர் களின் எண்ணிக்கை
(1)	(2)	(3)	(4)
தொடக்கப்பள்ளிகள் (1—5 வகுப்புகள்)	29.491	1.19	54.68
நடுநிலைப்பள்ளிகள் (1—8 அல்லது 6—8 வகுப்புகள்).	5.651	0.86	29.98
	35.142	1.85	84.44
உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் (பொதுவாக 6—10 6—12 வகுப்புகள்)	4.949	1.13	38.24
	40.91	2.98	122.68

வகுப்புத் தொகுதி வாரியாக மாணவ மாணவியரின் எண்ணிக்கை வருமாறு :

வகுப்புகள்.	மாணவர்.	மாணவியர்	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
		(இலட்சத்தில்)	
1— 5	41.40	35.38	76.78
6— 8	17.57	12.76	30.33
9—10	6.83	4.24	11.07
11—12	2.63	1.87	4.50
மொத்தம்	68.43	54.25	122.68

தொடக்கக் கல்வி :

தேசியக் கல்விக் கொள்கை பின்வரும் இரு முக்கிய அம்சங்களை வலியுறுத்துகிறது:

1. 6— 14 வயது வரையிலுள்ள குழந்தைகள் அனைவரையும் தொடக்கப் பள்ளிகளில் சேர்த்து இடையில் நின்றுவிடாமல் கல்வி பயிலச் செய்தல்.

2. தொடக்கக் கல்வியின் தரத்தைப் பெருமளவில் மேம்படுத்துதல்.

2. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக்கால இறுதிக்குள் (1989-90 ல்-6— 11 வயது குழந்தைகள் 100 சதவிகிதமும், 11— 14 வயது குழந்தைகளுக்கு 75 சதவிகிதமும், பள்ளிகளில் சேர்க்கப்படவேண்டும். என்பது இந்திய அரசு கருதியுள்ள இலக்கு ஆகும். தமிழ்நாட்டில் 6— 11 வயது தொகுதியில் 100 விழுக்காடும், 11— 14 வயது தொகுதியினருள் 80 விழுக்காடும் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுவிட்டனர். என்பது மகிழ்ச்சி யாகும்.

தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகளில் 1989–90-ல் கூடுதலாக சேர்க்கப்பட்டோரின் எண்ணிக்கை வருமாறு :

வயதுத்தொகுதி.	மாணவர்.	மாணவியர்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
	(இலட்சத்தில்)		
6—11	0.51	0.52	1.03
11—14	0.66	0.63	1.29
மொத்தம் ..	1.17	1.15	2.32

தொடக்கக் கல்வி வளர்ச்சியில் நீவிரக் கவனம் செலுத்தும் நோக்குடன் 12—7—1986-விருந்து ஆரம்பக் கல்விக்கென இயக்குநரகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பிப்ரவரி 1985 முதல் இவ்வியக்கம் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

குழந்தைகள் காப்பகங்கள் 28268 ஒவ்வொன்றிலும் தற்போது ஓர் இளஞ்சிறார் பள்ளி வகுப்பும் நடத்தப்படுகிறது. இளம் சிறுமியர் தங்கள் தம்பி தங்கையரைக் கவனித்துக் கொள்ள வீட்டில் நிறுத்தப்படுவதைத் தவிர்க்கவும் இவை உதவும். 1—8 படிப்படியாக 5 வகுப்புகளில் பயிற்றுவிக்க மகளிரையே ஆசிரியர்களாக அமர்த்தப் பட வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. 1989–90ல் ஆதிதிராவிடர் பழங்குடியினர் 50 குடியிருப்புகளில் தொடக்கப் பள்ளி துவக்கப்பட்டு 100 இடைநிலை ஆசிரியர் புதிதாக நியமிக்கப்பட்டனர்.

புத்தக வங்கி :

அனேகமாக அனைத்து பள்ளிகளிலும் புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன உயர் வகுப்புச் செல்லும் மாணவர்கள் வழங்கும் புத்தகங்களைக் கொண்டும் பெற்றோர் ஒத்துழைப்புடனும் சமூகத் தொண்டு நிறுவனங்கள் உதவியுடனும் இப்புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மகளிர் கல்வி :

1990 ஆம் ஆண்டு சிறுமியர் ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளதை கருத்திற்கொண்டு மாணவிகள் படிப்பைத் தொடராமல் நின்றுவிடும் நிலையை போக்க தனி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பெண் கல்வியை ஊக்குவிக்கும் விதத்தில் வேலூர் இராமாமிர்தம் அம்மையார் உதவித் திட்டம் என்ற ஒரு புதிய திட்டம் 1989–90-லிருந்து தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 8-ம் வகுப்பும் (பழங்குடியினர் மாணவியருக்கு 5-ம் வகுப்பு அதற்கு மேலும் படித்த ஏழை பெண்டிருக்கு ரூ. 5,000 திருமண நிதியுதவி வழங்கப்படுகிறது. மொத்தம் ரூ. 5.05 கோடி செலவில் இத்திட்டத்தின் மூலம் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பெண்கள் பயன் அடைந்துள்ளனர்.

கொடைத்தன்மை வாய்ந்தோர் 1—8 வகுப்புகளில் பயிலும் சிறுமியரை தத்து எடுத்து அச்சிறுமியரின் பெற்றோருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 250 வழங்குவது வளர்ப்பு பெற்றோர் திட்டம் என்ற புதுமையான திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பள்ளிகளில் சேர்ப்பவர்கள். தொடர்ந்து பயிலாமல் இடையில் நின்றுவிடும் நிலை சிறுமியரிடையே அதிகமாக உள்ளது. இதனை சீர் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1987–88-ம் ஆண்டிலிருந்து மைய அரசு பொறுப்பு ஏற்கும் திட்டமாக கரும் பலகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆரம்பக் கல்வி நிலையில் பெரும் அளவில் முன்னேற்றம் கொண்டு வருவதும் வசதிகளை பெருக்குவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் முக்கியமான மூன்று அம்சங்கள் பின்வருமாறு:

1. ஆரம்பப் பள்ளிக்கு தேவையான இட வசதிகளை உருவாக்குவது.

2. ஓர் ஆசிரியர் பள்ளிகளை ஈராசிரியர் பள்ளிகளாக மாற்றுவது.

3. கற்பிப்பதற்கு இன்றியமையாத துணையாகும் பொருள்களை படிப்படியாக எல்லா ஆரம்பப் பள்ளிகளுக்கும் அளித்தல்.

இத்திட்டம் 1987–89 முதல் 1988–90 முடிய இம்மாநிலத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு அனைத்து தொடக்கப் பள்ளிகளும் பயன் பெற்றுள்ளன. 1000க்கும் மேற்பட்ட பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட்டு உள்ளன. ஒராசிரியர் பள்ளிகளில் இரண்டாவது ஆசிரியர் நியமனம் செய்வதற்காக 1,686 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் வழங்கப்பட்டு உள்ளன. பாடநூல், தேசப்படங்கள், கரும்பலகைகள், உலக வடிவகோளங்கள், விளையாட்டுக் கருவிகள், இசைக்கருவிகள் போன்ற கற்பிப்பு சாதனங்கள் வழங்கப்படுவதுடன், குடிநீர் வசதியும் எல்லா ஆரம்பப் பள்ளிகளுக்கும் செய்யப்பட்டு வருகின்றன. இக்கருவிகளை கையாளுவதற்காக பத்துநாட்கள் பயிற்சி ஒன்றும், ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மாநில அரசுக்கு ரூ. 25 கோடிக்கு மேல் மைய அரசு நிதி உதவி செய்துள்ளது.

நடுநிலைப் பள்ளிகளில் அறிவியல் கல்வியை மேம்படுத்துவதற்கான திட்டம் :

மைய அரசு பொறுப்பேற்கும் மற்றொரு திட்டத்தின்கீழ் தேசிய கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சிக்குழு உருவாக்கிய அறிவியல் கருவிப் பெட்டிகள் நடுநிலைப்பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காக இதுவரை ரூ. 33 இலட்சம் மைய அரசின் நிதியுதவி கிடைத்து உள்ளது. மேலும் ரூ. 27 லட்ச நிதியுதவி கோரப்பட்டுள்ளது.

தொழில் நுட்பவியல் மூலம் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக மைய அரசு அளித்த ரூ. 30 இலட்சம் நிதியுதவியைக்கொண்டு ஒவ்வொன்றும் ரூ. 1.125 மதிப்புள்ள வானொலி மற்றும் ஒலிப்பதிவுக் கருவிகள் 2.665 ஆரம்பப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் 7,000 பள்ளிகளுக்கும் இக்கருவிகளை வழங்கிட ரூ. 70 லட்சம் நிதியுதவி கிடைத்துள்ளது.

ஆரம்பப் பள்ளி கட்டிடங்கள் :

ஆரம்பப் பள்ளிகளில் கூடுதலாக சேர்க்கப்படும் மாணவர்களுக்கு போதிய இடவசதி தற்போது இல்லை. எனவே கிராமப்புற ஆரம்பப்பள்ளி கட்டடங்கள் சீரிவர பராமரிக்கவும் பழுதுபார்க்கவும் ரூபாய் 3 கோடி 1990–91 நிதி ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

சத்துணவு திட்டம் :

1 முதல் 10ம் வகுப்புகளில் படிக்கும் மாணவர்களில் 82.10 இலட்சம் மாணவ–மாணவியர்களுக்கும் 1989–90ல் சத்துணவு வழங்கப்பட்டது.

இலவச சீருடை :

இத்திட்டத்தில் 62.10 இலட்சம் 1—8 வகுப்பு மாணவ மாணவியர்கள் 1989–90ல் பயனடைந்தனர். - இதற்கான செலவுத் தொகை ரூ. 18 கோடியாகும்.

இலவச பாடப்புத்தகம் :

1—8 வகுப்பு பயிலும் மாணவர்களில் 62.10 இலட்சம் பேர்கள் 1989–90ல் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளனர்.

இலவச கால்வி :

இத்திட்டத்தினால் 1–8 வகுப்பு மாணவமாணவியர்கள் 22 லட்சம் பேர் பயனடைந்தனர். 1989–90-ல் இதற்கான செலவு ரூ. 3.16 கோடியாகும்.

ஊராட்சி மற்றும் நகராட்சி தொடக்கப்பள்ளிகள் :

நகராட்சிகள், நகரியம், மாநகராட்சிகள் ஆகியவற்றின் நிருவாகத்தின் கீழ் உள்ள பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதவர் 1—6—1986 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். இப்பணியாளர்களை அரசுப் பணியில் ஈர்த்துக்கொள்வதற்கு வழிமுறைகளை வகுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒருங்கிணைப்புக்குழு தனது பரிந்துரைகளை அளித்துள்ளது. அவை அரசின் ஆய்வில் உள்ளன. ஊராட்சி மன்ற பள்ளிப் பணியாளர்கள் தொடக்கப் பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் ஆகியோரின் நிருவாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். இவர்களுக்கான ஊதியம் 1—4—1990 முதல் அரசு நிதியில் இருந்து அளிக்கப்படும். 1989–90-ல் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகள் நிருவகித்து வந்த தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 1.550 (1.127 தொடக்க பள்ளிகள், 423 நடுநிலைப்பள்ளிகள்) ஆகும். அவைகளில் 16,571 ஆசிரியர்கள் பணி புரிகின்றனர்.

உயர்நிலைப் பள்ளிக் கல்வி.

1989–90-ல் தமிழ்நாட்டில் 14—16 வயதுத் தொகுதியினரான 19—20 இலட்சம் பேர்களில் 57.69 விழுக்காடாகிய 11.07 இலட்சம் பேர் உயர்நிலைப் பள்ளியில் 9—10ம் வகுப்புகளில் பயின்று வந்தனர். 1989–90ல் உயர்நிலைப்பள்ளி வகுப்புகள் நடைப் பெற்று வந்த பள்ளிகளின் விவரம் வருமாறு.

	சாதாரண பள்ளிகள் (ஆங்கிலோ இந்திய மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகள்) உட்பட	நடுவன் உயர்நிலைப் பள்ளிக் கல்வி வாரியம் போன்ற வற்றோடு இணைந்தவை.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
உயர்நிலைப் பள்ளிகள்	2,945	89	3,0
மேல்நிலைப் பள்ளிகள்	1,828	87	1,9
மொத்தம்	4,773	176	4,9

1989-90ல் மேற்கண்ட பள்ளிகளில் வெவ்வேறு பள்ளிகளில் பயின்றுவந்த மாணவர் களின் எண்ணிக்கை வருமாறு :

	மாணவர்களின் எண்ணிக்கை. (இலட்சத்தில்)
1— 5 வகுப்புகள்	3.24
6— 8 வகுப்புகள்	19.43
9—10 வகுப்புகள் ...	11.07
11—12 வகுப்புகள் ...	4.50
மொத்தம்	38.24

1989–90-ல் 110 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டன.

மேல்நிலைப் பள்ளிக் கல்வி.

தமிழ்நாட்டில் 1989–90-ல் செயல்பட்டு வந்த 1,828 மேல்நிலைப் பள்ளிகளின் நிருவாக அடிப்படையான விவரங்கள் வருமாறு :

பள்ளிகளின் வகை :

அரசுப் பள்ளிகள்—

பள்ளிக் கல்வித் துறை		764
ஆதி திராவிடர் நலத்துறை	30	
சமூகநலத்துறை	2	
வனத்துறை	1	48
விளையாட்டுத்துறை ...	1	
தொழில்நுட்பக் கல்வித்துறை	14	
		812

தனியார்	737	
ரகராட்சி மற்றும் மாநகராட்சி		1,607
மெட்ரிகுலேசன் ...		192
ஆங்கிலோ இந்தியன் ...		29
		1,828

இப்பள்ளிகளில் 1989–90-ல் புதியதாகத் தொடங்கிய பள்ளிகள் 103 (அரசு 39, தனியார் 29, நகராட்சி மாநகராட்சி 6 மெட்ரிகுலேசன் 34) மேற்கண்ட 1.828 மேல் நிலைப் பள்ளிகளில் நடுவன் உயர்நிலைப்பள்ளிக் கல்வி வாரியம் CBSE உடன் இணைந்த பள்ளிகள் சேர்க்கப்படவில்லை.

1989–90 ஆம் ஆண்டில் மேற்கூறிய மேல்நிலை வகுப்புகளில் பயின்றுவந்த மாணவ, மாணவியர் எண்ணிக்கை பின்வருமாறு :

	மாணவர்.	மாணவியர்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
பொதுப் பாடங்கள்	2,10,491	1,38,227	3,48,718
தொழிற்பாடங்கள்	47,941	45,200	93,141
மொத்தம்	2,58,432	1,83,427	4,41,859

பயிற்று மொழி :

மேல்நிலைப் பள்ளி நிலையில் தொழிற்பாடங்களைப் பொறுத்தவரையில் தமிழ் நாட்டில் சாதனை அனைத்திந்திய மட்டத்தில் பாராட்டினைப் பெற்றுள்ளது. 1989–90 மொத்தம் 1,375 மேல்நிலைப் பள்ளிகளில் 108 வகையான தொழிற்பாடங்கள் கற்பிக்கப்பட்டன. 1989–90ல் மேல்நிலைப் பள்ளிகளில் பயின்றுவந்த 4.42 இலட்சம் மாணவர்களில் 93,141 பேர் பின்வரும் விவரப்படி தொழிற்பாடங்களைப் பயின்று வந்தனர்:—

தொழிற்பாடங்கள்.	மாணவர்.	மாணவியர்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
1. வேளாண்மை ...	5,691	179	5,870
2. மனையியல்	103	5,152	5,255
3. வணிகத்துறை	23,037	22,113	45,150
4. பொறியியலும் தொழில் நுட்பவியலும்.	18,848	1,391	20,239
5. உடல் நலம்	262	5,431	5,693
6. ஆசிரியர் பயிற்சி		10,934	10,934
மொத்தம்	47,941	45,200	93,141

மேல்நிலை வகுப்புகளில் தொழில் சார்ந்த பாடங்கள் கற்பித்தலுக்கான மைய அரசு பொறுப் பேற்கும் திட்டம் :

ஆண்டுதோறும் மாநிலத்திற்கு 100 பள்ளிகள் வீதம் மேல்நிலை வகுப்புகளில் தொழிற்கல்வி கற்பிப்பதற்கு மைய அரசு பொறுப்பேற்கும் திட்டம் ஒன்றைச் செயல் படுத்த ஒப்புதல் அளித்துள்ளது. மைய அரசு முதற்கட்டமாக 1987–88-ல் இம்மாநிலத்துக்கு ரூ. 192 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்து, இதில் 112 இலட்சத்தினை

கட்டடங்கள் உபகரணங்கள் முதலியவற்றிற்காக அளித்துள்ளது. இத்தொகை பள்ளிக் கல்வி இயக்குநருக்கும் தொழில் நுட்பக் கல்வி இயக்குநருக்கும் அளிக்கப்பட்டுள்ளது. தொழிற்கூடங்கள் கட்டுமானப்பணி முடிக்கப்பட்டு தலைமை ஆசிரியர்களிடம் ஒப் படைக்கப்பட்ட விட்டன. கருவிகளை வழங்கும் பொறுப்பை தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்திடம் பள்ளிக் கல்வி இயக்குநர் ஒப்படைத்துள்ளார்.

இரண்டாவது கட்டமாக (1988–89-ல்) மேலும் 100 பள்ளிகளில் இத்திட்டத் தின் னச் செயல்படுத்த ரூ. 225 இலட்சத்தை ஐம்மாநிலத்துக்கு மைய அரசு அனுமதித் துள்ளது.

விளையாட்டுமேற்றும் இளைஞர் அணி.

தமிழகத்தில் விளையாட்டினை ஊக்குவிக்கும் பொருட்டு அதற்கென்று தனியாக ஒரு துறையை 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் தமிழக அரசு ஆரம்பித்தது.

இத்துறை ஆரம்பிக்கப்பட்டதும் பல்வேறு திட்டங்கள் விளையாட்டினை வளர்ச்சியடையச் செய்வதாய் அமைத்தது.

1989-90 ஆம் ஆண்டிற்கு பட்ஜெட் ஒதுக்கீடு ரூ. 307.42 இலட்சம்.

விளையாட்டுத் திட்டங்கள்:

இத்துறை நடத்துகின்ற பல்வேறு திட்டங்களில் குறிப்பிடத்தக்கதாய் விளங்கு வது விளையாட்டு விடுதிகளும், விளையாட்டுப் பள்ளிகளும் ஆகும். இத்திட்டத்தின் கீழ் மிக இளமையிலேயே விளையாட்டுத் திறமைகளைப் பெற்றிருப்பவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இலவச விடுதி வசதியும், மிகவும் சத்துள்ள உணவு வகைகளும் வழங்கப்படுகிறது. இப்பள்ளிகளில்/விடுதிகளில் சேர்க்கப்படும் மாணவர் களுக்கு இலவச விளையாட்டுக் கருவிகளும் வழங்கப்படுகின்றன. கீழ்க்கண்ட இடங் களில் விளையாட்டுப் பள்ளிகள்/விடுதிகள் செயல்படுகின்றன :—

1. ஒய்.எம்.சி.ஏ. கல்லூரி, விளையாட்டுப் பள்ளி, சென்னை-35.

2. எஸ். ஆர். கே. மாருதி கல்லூரி விளையாட்டுப் பள்ளி, பெரியநாயக்கன் பாளையம், கோயம்புத்தூர்.

3. என். எல். சி. விளையாட்டுப் பள்ளி, நெய்வேலி.

4. விளையாட்டு விடுதி, திருச்சி.

5. விளையாட்டு விடுதி, மதுரை.

6. விளையாட்டு விடுதி, திருநெல்வேலி.

7. ஒ.சி.பி.எம். பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மதுரை. (பெண்களுக்கு மட்டும்)

இப்பள்ளி/விடுதிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் சேர்க்கை நடைபெறுகிறது. மேற்படி பள்ளிகளில் பயிலுகிற பயின்ற மாணவ மாணவியர்கள் பள்ளிகளுக்கான விளையாட்டு களில் நிறைய விருதுகளைப் பெற்றிருப்பதுடன் மற்ற வெளி விளையாட்டுகளிலும் வாகை சூடியுள்ளனர். இத்துறையின் கீழ் அமல்படுத்தப்படுகின்ற பிற திட்டங்களாவன :

1. இந்திய பள்ளிகள் விளையாட்டு இணையம் நடத்தும் விளையாட்டுப் போட்டி கள் மற்றும் பாரதியார் தின விளையாட்டுக்கள்.

2. 10 பள்ளிகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள்.

3. இடைநிலைப் பள்ளி விளையாட்டுக்கள்.

4. மிக இளமையில் தெரிந்தெடு விளையாட்டுப் போட்டிகள்.

5. இளமையில் தெரிந்தெடு விளையாட்டுப் போட்டிகள்.

6. விளையாட்டு ஊக்கத் தொகை.

7. உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கு விளையாட்டுப் பயிற்சி அளித்தல்.

8. வட்டார அளவிலான விளையாட்டுப் போட்டிகள்.

9. தனியார விளையாட்டுக் குழுக்களுக்கு நிதியுதவி அளித்தல்.

10. விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிக் கல்வி முதலிய துறையில் ஆராய்ச்சி செய்வோருக்கு உபகார ஊதியம் வழங்குதல்.

தமிழர் விளையாட்டு மடல் :

தமிழ்நாட்டின் விளையாட்டு வளர்ச்சியை அவ்வப்போது பதிவு செய்யும்பொருட்டு ஒரு மாத இதழ் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு அது பிரதிமாதம் 'தமிழர் விளையாட்டு மடல்' இதழை வெளியிடுகிறது.

நூலகம்-விளையாட்டுக்களைப் பற்றிய திரைப்படங்கள் :

பல்வேறு விளையாட்டுக்கள் அவற்றைப் பயிற்றுவிக்கும் முறைகள் பற்றிய அதிதொழில்நுட்பமான திரைப்படங்கள் வாங்கப்பட்டு அவை எல்லா பள்ளிகளுக்கும் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் சமயத்திலும் திரையிடப்பட்டு விளையாட்டும் பயிற்சியாளர்களுக்கிடையேயும் பொது மக்களிடையேயும் விளையாட்டில் ஆர்வத்தினை ஏற்படுத்தப் பயன்படுகிறது.

இளைஞர் நலன் :

1. இளைஞர் மன்றங்கள் :

1989-90-ல், 124 இளைஞர் மன்றங்களுக்கு ரூ. 1,09,120 வழங்கப்பட்டது.

2. மாநில இளைஞர் விழா :

1989-90-க்கான மாநில இளைஞர் விழா அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் நடத்த அனுமதி வழங்கப்பட்டு அவர்கள் மார்ச் 90-ல் நடத்தினர். இவ்விழாவினை செம்மையான முறையில் நடத்த ரூ. 1.30 லட்சம் வழங்கப்பட்டது.

3. இளைஞர் விடுதிகள் :

மதுரையில் ஒரு இளைஞர் விடுதி கட்டி முடிக்கப்படும் தருவாயில் உள்ளது. மேலும் ஒரு இளைஞர் விடுதி தஞ்சையில் கட்டப்பட்டு வருகின்றது. கட்டுமான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

4. விழைபணி மையங்கள் :

எட்டு மாவட்டங்களில் விழைபணி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் ரூ. 3,000 வீதம் மையங்களுக்கு பொருட்கள் வாங்கவும், மற்றும் இதர கலைகளில் பயிற்சி பெறவும் மாவட்ட அளவிலான போட்டிகள் நடத்தும் பொருட்டும் மான்யம் வழங்கப்பட்டது. மொத்தம் ரூ. 24,000 வழங்கப்பட்டது.

5. ஊரக விளையாட்டு மையங்கள்:

1989-90 ஆம் ஆண்டு புதிதாக 28 ஊரக விளையாட்டு மையங்கள் துவக்கப்பட்டுள்ளன. இத்துடன் மொத்தம் 377 ஊரக விளையாட்டு மையங்கள் செயல்பட்டு அவற்றிற்கு நிதியுதவியாக ரூ. 6,55,100 வழங்கப்பட்டது.

6. ஊரக அளவிலான விளையாட்டுப் போட்டிகள் :

இப்போட்டிகளுக்கு ரூ. 250 வீதம் ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் அளிக்கப்பட்டு இப்போட்டிகள் மொத்தம் ரூ. 96,250 செலவு செய்து நடத்தப்பட்டது.

7. இளமையில் தேர்ந்தெடுத்தல் :

16 வயதிற்குட்பட்டவர்களை தேர்ந்தெடுத்து போட்டிகள் நடத்தப்பட்டன. இதற்காக ரூ. 3 லட்சம் வழங்கப்பட்டது.

8. சிறார்களைக் கண்டு தேர்ந்தெடுத்தல் :

அனைத்து மாவட்டங்களிலும் சிறார்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நடத்தப்படும் இப்போட்டிகளுக்காக ரூ. 1 இலட்சம் வழங்கப்பட்டது.

9. உடற்கல்வி இயக்குநர்கள் ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் :

இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ. 3,900 வீதம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வழங்கப்பட்டு உடற்கல்வி இயக்குநர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு விளையாட்டுவகை பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்கான மொத்த செலவு ரூ. 81,900 ஆகும்.

தேசிய வேலைத் திட்டம் :

1989-90 ஆம் ஆண்டில் தேசிய சேவைத் திட்ட மாணவர்களின் எண்ணிக்கை 90,000. மக்கள் சேவையை மாணவர்களுக்கு கற்பிக்கும் வகையில் இத்திட்டம் அகில இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடம் பெற்று செயலாற்றி வருகிறது. இந்தத் திட்டம் மேல்நிலைப் பள்ளிகளுக்கும், பாலிடெக்னிக்குகளுக்கும் விஸ்தரித்து செயலாற்றி வருவது சிறப்பானதாகக் கருதப்படுகிறது. தேசிய சேவைத் திட்டத்தை சிறந்த வகையில் பணியாற்ற செய்ய மாநில அளவிலான பிரிவு ஒன்று இயக்ககத்தில் தொடங்கப்பட்டது.

தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகம் :

தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகம் 1984-ம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் தோற்றுவிக்கப்பட்டது.

கீழ்க்காணும் விளையாட்டு நிகழ்ச்சிகள் 1989-90 ஆம் ஆண்டு நிறைவேற்றப் பட்டுள்ளன :

1. மாநில பொங்கல் விளையாட்டுப் போட்டிகள் :]

1989-90 ஆம் ஆண்டு மாநில அளவிலான பொங்கல் விளையாட்டுப் போட்டிகள் கீழ்க்கண்ட விளையாட்டுக்களில் 31-1-1990 முதல் 4-2-1990 முடிய மதுரை மாவட்டத்தில் நடைபெற்றது :—

(1) தடகளம்.
(2) கூடைப்பந்து.
(3) றிறகுப் பந்து.
(4) கபாடி.
(5) கையுந்துப் பந்து.
(6) கால்பந்து.
(7) வளைகோல்.

மேற்காணும் விளையாட்டு நிகழ்ச்சிகளில் சுமார் 2,500 நபர்கள் கலந்து கொண்டனர்.

2. அகில இந்திய ஊரக விளையாட்டு போட்டிகள் :

1989-90 ஆம் ஆண்டிற்கான அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகள் கீழ்க்கண்டவாறு நான்கு பகுதிகளாக நடைபெற்றன :—

1. குரூப்—1	தடகளம்	தஞ்சாவூர் 4-1-1990 முதல் 7-1-1990 வரை.
2. குரூப்—2	பளு தூக்குதல் ஜிம்னாஸ்டிக்ஸ் நீச்சல்.	தார்வார் (கர்நாடகம்) 14-12-1989 முதல் 17-12-1989 வரை.
3. குரூப்—3	கூடைப்பந்து கையுந்துப்பந்து கால்பந்து வளைகோல்	கும்லா (பீஹார்) 18-1-1990 முதல் 21-1-1990 வரை.
4. குரூப்—4	கோ.கோ கபாடி. வில்-அம்பு	கோலாப்பூர் (மகாராஷ்டிரா) 28-1-1990 முதல் 31-1-1990 வரை.

மேற்கண்ட போட்டிகளில் தேசிய அளவில் பங்கு பெறுவதற்காக, சென்னையில் 15 நாட்களுக்கான பயிற்சி முகாம் நடைபெற்றது. இதற்கான மாநில தேர்வும் சென்னையிலே நடைபெற்றது.

மூடிவுகள் :

1. தடகளம் :	தங்கம்	11
	வெள்ளி	7
	வெண்கலம்	1
	தமிழ்நாடு அனைத்து தடகள விளையாட்டுப் போட்டி களிலும் முதன்மை பெற்றது.	
2. பளு தூக்குதல்	தங்கம்	4
	வெள்ளி	3
	வெண்கலம்	3
3. கூடைப்பந்து	ஆண்கள் பிரிவில் முதல் இடம்.	பெண்கள் பிரிவில் மூன்றாம் இடம்.
கையுந்துப்பந்து	ஆண்கள் மற்றும் பெண்கள் இரண்டாம் இடம்.	
4. கோ. கோ.	ஆண்கள் இரண்டாம் இடம்.	பெண்கள்
கபாடி.	மூன்றாம் இடம்.	

3. தேசிய விளையாட்டுத் திறன் போட்டிகள் (9-12) வயதிற்குட்பட்டவர்கள் :

தேசிய விளையாட்டுத் திறன் போட்டிகள் ஒவ்வொரு வருடமும் அனைத்து விளையாட்டுக்களிலும் 9 வயது முதல் 12 வயதிற்குட்பட்ட பள்ளி சிறுவர்களுக்கும் சிறுமியர்களுக்கும் நடத்தப்பெற்று வருகின்றன. அதுபோல் 1989-90 ஆம் ஆண்டிற்கான போட்டிகள் கீழ்க்காணும் விளையாட்டுக்களில் நடைபெற்றன :

குரூப்— 1	தடகளம் கையுந்துப்பந்து	பெங்களூர்.
குரூப்— 2	கால்பந்து ஜிம்னாஸ்டிக்	கல்கத்தா.
குரூப்— 3	மல்யுத்தம் நீச்சல் கூடைப்பந்து	காந்திநகர்.
குரூப்— 4	மேசைப்பந்து	கௌஹாத்தி.
குரூப்— 5	வளைகோல் சிறகுப்பந்து	பாட்டியாலா.

தேசிய விளையாட்டுத் திறன் போட்டிகளில் பங்கு பெற்ற சிறார்களில் 17 பேர் இந்திய விளையாட்டுக் குழுமத்தின் (சாய்) விளையாட்டுப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர்.

4. தேசிய உடற்பயிற்சி வாரவிழா :

தேசிய உடற்பயிற்சி வாரவிழா போட்டிகள் கீழ்க்கண்ட விளையாட்டுப் போட்டி களில் நடைபெற்றன :—

1. தடகளம்.
2. மேசைப்பந்து.
3. டென்னிஸ்.
4. சிறகுப்பந்து.
5. மிதிவண்டி.

இப்போட்டிகள் மூன்று வகையான வயதிற்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கு நடத்தப்பட்டன.

பிரிவு— 1	வயது 35 முதல் 45 வரை.
பிரிவு— 2	வயது 46 முதல் 55 வரை.
பிரிவு— 3	56 வயதிற்கு மேல்.

மேற்கண்ட போட்டிகள் சென்னை பல்கலைக்கழக விளையாட்டுத் திடலில் நடை பெற்றது.

5. அண்ணா மிதிவண்டி பந்தயப் போட்டி :

இப்போட்டிகள் ஒவ்வொரு வருடமும் காலஞ்சென்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளான செப்டம்பர் 15 தினங்களில் நடைபெற்று வருகின்றன. இப்போட்டிகளில் வெற்றிபெறும் விளையாட்டு வீரர்/வீராங்கனைகளுக்கு முதல் இடம், இரண்டாம் இடம் மற்றும் மூன்றாம் இடங்களுக்கு பரிசுகள் வழங்கப்பெறுகின்றன.

6. விளையாட்டு வளர்ச்சி திட்டப் பகுதி பயிற்சி முகாம் (கோடைகால பயிற்சி முகாம்):

இளையோர் மற்றும் மிக இளையோருக்கான கோடைக்காலப் பயிற்சி முகாம் 21 நாட்களுக்கு கீழ்க்கண்ட விளையாட்டுக்களில் நடைபெற்றது.

1. தடகளம்.

2. கூடைப்பந்து.

3. வளைகோல்.

4. கால்பந்து.

5. கையுந்துப்பந்து.

மேற்கண்ட பயிற்சி முகாம் நாகர்கோவில் மற்றும் கொடைக்கானல் ஆகிய இரண்டு இடங்களில் நடைபெற்றன.

7. தேசிய மகளிர் விளையாட்டு போட்டிகள் :

அகில உலக பெண்கள் ஆண்டு 1975 கொண்டாடும் வகையில் மறைந்த முன்னாள் இந்திய பிரதமர் திருமதி. இந்திரா காந்தி அவர்களின் நினைவு நாளையொட்டி தேசிய மகளிர் விளையாட்டுப் போட்டிகள் 1975 முதல் நடைபெற்று வருகின்றன. இப்போட்டிகள் கீழ்க்கண்ட விளையாட்டுக்களில் நடைபெற்றன :

1. தடகளம்.

2. கூடைப்பந்து.

3. கையுந்துப்பந்து.

4 வளைகோல்

5 கோ-கோ

6 கபாடி

7 ஜிம்னாஸ்டிக்

8 மேசைப்பந்து

9 டென்னிஸ்

10 சிறகுப்பந்து மற்றும் நீச்சல்

இப்போட்டிகள் வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும் மற்றும் மாநில அளவிலும் நடைபெற்றன. மாநில அளவிலான தேர்வுப் போட்டிகள் சென்னையில் நடைபெற்றன மாவட்ட அளவிலான தேர்வுப் போட்டிகள் அந்தந்த மாவட்டங்களில் நடைபெற்றன. தேசிய அளவிலான மகளிர் விளையாட்டுப் போட்டிகள் கட்டாக் மற்றும் புவனேஸ்வர் ஆகிய இடங்களில் 14-3-1990 முதல் 18-3-1990 வரை நடைபெற்றன.

மாநிலத் தேர்வுகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 15 நாட்களுக்கான தொடர் பயிற்சி முகாம் நடைபெற்றது.

முடிவுகள் : 1. தடகளம் — தங்கம் 9.

அனைத்து விளையாட்டுப் போட்டிகளிலும் தமிழ்நாடு அணி இரண்டாம் இடத்தைப் பெற்றது.

8. லெம்பம் விளையாட்டுப் போட்டிகள் :

லெம்பம் விளையாட்டுப் போட்டிகள் 21-3-1990 முதல் 23-3-1990 வரை திருநெல்வேலி மாவட்டத்தில் மாநில அளவில் நடைபெற்றது. இதில் 500 விளையாட்டு வீரர்கள் பங்கு பெற்றனர். இதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இப்போட்டிகள் மாநில அளவிலும் நடத்த இந்திய விளையாட்டுக் குழுமம் ரூ. 50,000 மான்யம் அளிக்கின்றது.

9. நீச்சல் பயிற்சி முகாம் :

சென்னை அண்ணா நீச்சல் குளம் மற்றும் சேனாய்நகர் நீச்சல் குளம் ஆகிய இடங்களில் சிறுவர்/சிறுமியர்களுக்கு நீச்சல் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இதில் 300-க்கும் மேற்பட்ட சிறுவர்/சிறுமியர் கலந்து கொண்டனர்.

10. விளையாட்டுக் கழகங்களுக்கு நிதியுதவி :

1989-90 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேசிய அளவிலான/மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்திடவும், அவற்றில் பங்கேற்கவும், பல்வேறு மாநில விளையாட்டுக் கழகங்களுக்கு மான்யம் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகத்தால் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஆவணக்காப்பகம்.

முன்னுரை :

முந்தைய சென்னை பதிவுரு அலுவலகமான (Madras Record Office) இந்த தமிழ்நாடு ஆவணக் காப்பகம், அதற்கென்று வடிவமைக்கப்பட்டு, கட்டப்பட்ட பிரத்யேகமான கட்டிடத்தில் 1909 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. பிரிட்டிஷாரின் ஆட்சிக் காலத்தில் அவர்களின் மன்ற அறையில் உருவாக்கப்பட்ட ஆவணங்களில் ஒரு சிறிய காப்பகமே இப்போதைய தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் முன்னோடியாகும்.

1670 ஆம் ஆண்டு முதல் 1985 ஆம் ஆண்டு வரையிலான தலைமைச் செயலகத்தின் சுமார் 50 அரசு துறைகளைச் சார்ந்த மந்தணம் மற்றும் மந்தணமில்லா (Confidential & non-Confidential) ஆவணங்கள் இக்காப்பகத்தில் பாதுகாப்படுத்தப்பட்டுள்ளன. இவை களைத் தவிர, முன்னாள் வருவாய் வாரியம், வனத்துறை காப்பாளர் அலுவலக (C.C.F.), உயர்நீதிமன்றம் போன்ற அலுவலகங்களின் ஆவணங்கள், சிப்பாய் கலகத் திற்கு முந்திய(Pre-muntiny records)காலத்தினைச் சார்ந்த மாவட்ட ஆட்சியர் அலுவலக ஆவணங்கள் மற்றும் கூட்டுறவு பத்திரப் பதிவுத்துறையினரின் அடமான பத்திரங்கள், ஒப்பந்தங்கள் போன்ற ஆவணங்களும், அரசினால் நியமிக்கப்பட்ட குழுக்கள் மற்றும் ஆணையங்களின் (Defunct Committee and Commission) ஆவணங்களும் இக்காப்பகத்தில் பாதுகாப்பிற்கு வைக்கப்பட்டுள்ளன. இக்காப்பகத்தின் ஓர் அங்கமாகிய ஆவணக் காப்பக நூலகமானது (Archives Library) 1867 ஆம் ஆண்டிலிருந்து அச்சகம் மற்றும் புத்தகங்கள் பதிவுச் சட்டம் (Press and Registration of Books Act, 1867) நடைமுறைக்கு வந்த பின்னர், வெளியிடப்பட்ட பல மொழிகளில் உள்ள அரிய நூல்கள் மற்றும் அறிக்கைகளின் திரட்டுக்கள்(rare Collection of Books and reports)ஆகியவைகளை தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நூலகமானது பார்வை நோக்கத்திற்கு மட்டுமே (Reference Purpose) செயல்படுவது அன்றி பொது மக்களின் பார்வைக்கு அல்ல.

செயல்பாடுகள் :

தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் தலைமை அலுவலர் தமிழ்நாடு ஆவண காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறையின் ஆணையராகும். ஆணையர் தான் ஆவணக் காப்பியலின் தலைமை அதிகாரி மற்றும் ஆவணக் காப்பகம் சம்பந்தப் பட்ட தொழில்நுட்ப விஷயங்களுக்கு கலந்தறிதற்குரியர். இவர், இந்திய வரலாற்று ஆவணங்களின் ஆணையத்தில் தமிழ்நாட்டின் பிரதிநிதியாவார்.

ஆவணக் காப்பகத்தின் முக்கிய பணிகள் பின்வருமாறு :

அரசுத்துறையின் நிர்வாக நோக்கங்களுக்குத் தேவையான ஆவணங்கள் மற்றும் தகவல்கள் அளித்தல், ஆராய்ச்சியாளர்களின் ஆராய்ச்சிக்குத் தேவையான ஆவணங்கள் அளித்தல் மற்றும் தனிப்பட்ட நபர்களுக்கு அவர்களது பிறப்பு, இறப்பு அவரது முன்னோரது பணி குறித்து விவரமளித்தல், பொது மக்களின் கோரிக்கைகிணங்க அவர்களிடமிருந்து கட்டணம் வசூலித்த பின்னர் அரசிதழ் நகல்கள் வழங்குதல் போன்றவை.

ஆராய்ச்சி செய்வதற்கான வசதிகள் :

இக்காப்பகத்தில் பராமரிக்கப்படும் பழமையான ஆவணங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாதலால் ஆராய்ச்சியாளர்களுக்கு அவை மிகவும் பயன்படுகின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, 1930 ஆம் ஆண்டு வரலாற்று ஆராய்ச்சியில் ஓர்

திருப்பு கட்டமாக அமைந்தது. அது முதல் ஆராய்ச்சிப் பணியில் அதிக அக்கறை காண்பிக்கப்பட்டு உலக நாடுகள் அனைத்திலிருந்தும் ஆராய்ச்சியாளர்கள் இக்காப்பகத்திற்கு வந்து இக்காப்பகத்தில் உள்ள ஆவணங்களைக் கலந்து ஆராய்ந்து பயன்பெறும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது. 30 ஆண்டுகட்கு உட்பட்ட நடப்பு ஆவணங்களைத் (Current Records) தவிர அனைத்து ஆவணங்களும் மத்தண ஆவணங்களும் உட்பட தகுதி வாய்ந்த (Bonafide) ஆராய்சியாளர்களுக்குப் பார்வைக்கு வழங்கப்படுகின்றன. இவ்வாண்டில், அதாவது 1989-90-ல் 403 ஆராய்சியாளர்களுக்கு ஆவணங்களைப் பார்வையிட அனுமதி அளிக்கப்பட்டு 23—,141 ஆவணங்கள் அவர்களின் பார்வைக்கு வழங்கப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த 23 அலுவலர்களுக்கு அவர்களுடைய ஆராய்ச்சித் திட்டங்கள் சம்பந்தமான ஆவணங்கள் பார்வைக்கு வழங்கப்பட்டுள்ளன.

வெளியீடுகள் :

1670 ஆம் ஆண்டு முதல் 1760 ஆம் ஆண்டு வரையிலான ஆவணங்கள், 310-க்கும் மேற்பட்டவை தொகுப்புகளாக (in extens:) பிரசுரிக்கப்பட்டுள்ளன. இவைகளைத் தவிர டச்சு ஆவணங்கள், ஆனந்தரங்கம்பிள்ளை டைரி போன்ற ஆவணங்களிலிருந்தும் தொகுப்புகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. நிர்வாகத்தினர் மற்றும் ஆராய்சியாளர்களின் இன்றைய தேவைகளை கருத்தில் கொண்டு மேற்கண்ட தொகுப்புகள் பிரசுரிக்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது. திருத்தியமைக்கப்பட்ட வெளியீட்டுப் பிரிவு, தேர்ந்தெடுத்த ஆவணத் தொகுப்புகளை வெளியிடும் பணியினை மேற்கொண்டுள்ளது. மேலும் இப்பிரிவு இவ்வாண்டிற்கான 4 காலாண்டுகளுக்கான ஆவண அமுதம் இதழ்களையும் வெளியிட்டுள்ளது. தற்பொழுது இக்காப்பக வெளியீட்டுப் பிரிவு பின் வரும் ஆவண தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுப்புகள் வெளியிடும் பணிக்காக விவரங்கள் மற்றும் ஆதார விஷயங்களைச் சேகரித்து வருகிறது.

1. குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் திட்டம்.
2. வேளாண்மை சட்டங்கள்.
3. சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்கள்.
4. வனத்துறை நிர்வாகம் 1947-க்குப் பிறகு.

பின்வரும் தலைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆவணத் தொகுப்புகள் வெளியிடப்பட்டுவிட்டன:—

1. திருநெல்வேலி கலவரம், சதி திட்டம் மற்றும் ஆஷ் கொலை வழக்கு.
2. சென்னை மாநில சிறைகைதிகள் உதவி சங்கம்.
3. இந்திய வழக்குரைஞர் சமூகம்.
4. சென்னை/ஷெரீப்.
5. நிதிகள்.
6. சென்னை எஸ்டேட் நிலச்சட்டம்.
7. முனிசிபாலிடி தோற்றமும் வளர்ச்சியும்.
8. பயிற்று மொழி.

''கூட்டுறவு—தோற்றமும் வளர்ச்சியும்'' என்ற தெரிந்தெடுக்கப்பட்ட ஆவணத் தொகுப்பு தற்பொழுது அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும், மாவட்ட விவரச் சவடிகளும் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டு வருகின்றன.

ஆவணங்கள் பாதுகாத்தல்.

இக்காப்பகம் அதன் தோற்றம் முதல் விஞ்ஞான ரீதியான ஆவண பாதுகாப்பு முறைகளை பின்பற்றுவதில் முன்னோடியாக இருப்பதால் இக்காப்பக ஆவணப் பாதுகாப்பு முறைகள் மிகவும் குறிப்பிடத்தக்கவையாக கருதப்படுகின்றன. ஆவணங்களை செப்பனிடுதல் இரண்டு விதமாகும் : சிப்பான் எனப்படும் துணி கொண்டு செப்பனிடுதல் ஒரு முறை, மேலோட்டல் (Laminating) எனப்படுதல் மற்றொருமுறை. இம்முறையில் அசிடேட்பாயில் மற்றும் டிஷ்யூ தாள்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன. பல தேவையான வசதிகள் கொண்ட புத்தகம் கட்டும் பிரிவும் இக்காப்பகத்தில் உள்ளது.

மேற்கண்ட சிப்பான் மற்றும் டிஷ்யூ மற்றும் அசிடேட் பாயில் கொண்டு செப்பனிடுதல் முறை அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பு ஆவணங்கள் உலர் மற்றும் ஈரத்தன்மை நீக்கல் முறை(Wet and dry deacidification) மூலம் ஆவணங்கள் செப்பனிடப்பட்டன.இவ்விரு முறைகளும் இப்பொழுதும் பின்பற்றப்படுகின்றன. பாராடிக்ளோரைட் பென்சைன் என்னும் ராசாயனப் பொருளின் உபயோகத்துடன், ஆவணங்கள் ஒரு மர அலமாரியில் வைக்கப்பட்டு புகையூட்டப்படுகின்றன.மேலும் புகையூட்டுதலுக்கென (Fumigation chamber) அமெரிக்காவிடமிருந்து தருவிக்கப்பட்ட இயந்திரத்தின் மூலம், எட்டாக்ஸைட் என்ற நச்சுத் தன்மை கொண்ட் வாயு உபயோகப்படுத்தப்பட்டு ஒரே முறையில் ஆவணங்களில் உள்ள இருமிகள் அதிக அளவில் அழிக்கப்படுகின்றன.

மைக்ரோ பிலிம் பிரிவு.

இக் காப்பகத்தின் மைக்ரோபிலிம் படப்பிரிவு நிறுவப்பட்டு 1982ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. மிகப் பழமையான ஆவணங்கள் மைக்ரோபடமெடுக் கப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர போட்டோ நகல்களை எடுக்கும் இயந்திரமும், மினோல்டா வெற்றுத்தாள் நகல் எடுக்கும் கருவியும் இக்காப்பகத்தில் உள்ளன.. ஆராய்சியாளர்களுக்கு தேவைப்படும் ஆவணங்களின் ஜெராக்ஸ் நகல்கள் அதற்குரிய கட்டணம் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் அளிக்கப்படுகின்றன.

எலக்ட்ரானிக்ஸ் டென்சில் கட்டிங்.

முக்கியமான மற்றும் மதிப்பு வாய்ந்த ஆவணங்களை மறு அச்சு செய்வதற்காக (Re-printing) மின் அணுப்படிப்பெருக்கி இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆவணத் தொகுப்புகளை அச்சிடும் பணி இவ்வியந்திரத்தின் உதவியால் மேற்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழு.

தகுதியும் திறமையும் வாய்ந்த நபர்களுக்கு உதவித் தொகையளித்து தென்னிந்தியாவைப் பற்றிய பல்வேறு வாழ்க்கை வரலாறுகள் சம்பந்தமான ஆராய்ச்சிக் கட்டுரைகள் தயாரிக்க ஊக்கமளிப்பது இக்குழுவின் நோக்கமாகும். இம்மன்றம் ஆண்டு தோறும் 2 ஆராய்சியாளர்கள் மற்றும் 10 பொருள் கட்டுரையாளர்கள் ஆகியோரை தேர்ந்து எடுத்து அவர்களின் ஆராய்ச்சிப் பணிக்கு உதவித் தொகை வழங்குகிறது. தமிழக அரசின் மாண்புமிகு கல்வி அமைச்சர் இம்மன்றத்தின் தலைவர் ஆவார். தமிழ்நாடு ஆவணக் காப்பக ஆணையர் இம்மன்றத்தின் உறுப்பினர்/செயலாளராகவும் தமிழக அரசின் கல்வித்துறை ஆணையர் மற்றும் செயலர் ஓர் உறுப்பினராகவும், மற்றும் மூன்று அலுவல் சார்பற்ற உறுப்பினர்கள் ஆகியோருடன் இம்மன்றம் செயல்பட்டு வருகிறது.

விவரச் சுவடி பிரிவு

இந்தியாவில் பண்பாடு, பொருளாதார நிலைமை மற்றும் கிடைக்கக்கூடிய இயற்கை வன ஆதாரங்கள் ஆகியவற்றை பற்றிய நுண்ணறிவை அறியவேண்டும் என்று பிரிட்டிஷாரின் ஆர்வம் மாவட்ட விவரச்சுவடி மற்றும் கையேடுகள் தயாரிக்கப்பட வழிகோலியது.

மிகப்பழமையான மாவட்ட கையேடுகள் (District Manual) வழக்கற்றுப் போன பின்னர், இந்திய சுதந்திரத்திற்கு முன்னர் மாவட்ட விவரச் சுவடி நூல்கள் வெளியிடப்பட்டன. இவை முன்னர் வழக்கில் இருந்த மாவட்ட கையேடுகளின் மேம்பாடு ஆகும். பிரிட்டிஷாரின் நிர்வாகத்தைப்பற்றி மட்டுமல்லாது, வரலாறு மற்றும் பண்பாட்டு ஆகியவற்றைப்பற்றியும் ஒளிவு மறைப்பு செய்யாது இவ்விவரச் சுவடிகள் படம் பிடித்து காட்டுகின்றன.

முந்தைய விவரச்சுவடிகளில் காணப்படும் ஒரு சில குறைபாடுகள் ஏதேனும் இருந்தால் அவைகளை களையவும் மற்றும் இந்திய சுதந்திரத்திற்கு பின்னர் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைச் சிறப்பாக வெளிப்படுத்துவதற்கும் ஏதுவாக விவரச்சுவடிகளை தகுந்தபடி திருத்தியமைத்து வெளியிடும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே விவரச்சுவடிகள் பெரும்பாலான வாசகர்களின் தேவையை பூர்த்தி செய்வது மட்டுமல்லாது சாதாரண மனிதர்கள் மற்றும் அலுவலர்களுக்கும் உதவும்படியாக அமைய வேண்டும் என்பது தெளிவாகிறது. இக்காப்பகத்தின் முன்னாள் காப்பாளராகிய டாக்டர் பி. எஸ். பாலிகா அவர்களின் யோசனைக்கிணங்க அரசு அதன் ஆணை எண். 867, வருவாய், நாள் 6—4—1954-ல் இவ்விவரச்சுவடிகளை திருத்தியமைத்து வெளியிடவேண்டும் என்ற திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.

இந்திய அரசின் கல்வி மற்றும் கலாச்சாரம் துறையானது இந்நாட்டில் உள்ள மாவட்ட விவரச்சுவடிகள் அனைத்தும் ஒரே மாதிரியாக திருத்தி வெளியிடப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் 1955-ஆம் ஆண்டில் ஒரு திட்டத்தை வகுத்தது. அதன் பேரில் 1961 ஆம் ஆண்டில் விவரச்சுவடி பிரிவானது, முன்னாள் வருவாய் வாரியத்தின்

முதல் உறுப்பினரின் தலைமையின் கீழ் இக்காப்பகத்திலேயே அமைக்கப்பட்டது. 1974-ம் ஆண்டு முதல் தமிழ்நாடு ஆவணக்காப்பகத்துடன் இணைக்கப்பட்டு, ஆவணக்காப்பக மற்றும் வரலாற்று ஆராய்ச்சித்துறை ஆணையரின் மேற்பார்வையில் இயங்கி வருகிறது. புதுக்கோட்டை மாவட்டத்திற்கான விவரச்சுவடி 1983 ஆம் ஆண்டில் வெளியிடப் பட்டது. தர்மபுரி மாவட்டத்தின் விவரச்சுவடியானது அரசினால் அங்கீகரிக்கப்பட்டு அச்சுக்கு அனுப்பப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. இதே போன்று கன்னியாகுமரி மாவட்ட விவரச்சுவடியும் அரசினால் அங்கீகரிக்கப்பட்டு அச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தற்போது நீலகிரி மாவட்ட விவரச்சுவடி தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 31—12—1989 ஆம் தேதியில் நீலகிரி மாவட்டத்திற்கான 19 அத்தியாயங்களில் 11 அத்தியாயங்கள் முடிக்கப்பட்டன. 1—1—1990 முதல் 30—6—1990-க்கான அரையாண்டில் மீதமுள்ள 8 அத்தியாயங்கள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினை செயல்படுத்துவது தொடர்பான இலக்கு 100 சதவீதம் எட்டப்பட்டுள்ளது.

மீதமுள்ள மாவட்டங்களுக்கான விவரச்சுவடிகள் தயாரிப்பதில் அரசு அதன் அரசாணை எண். 468, கல்வி, நாள் 2—4—1990-ல் ஒரு கால அட்டவணையை நிர்ணயித்துள்ளது. இதன்படி இப்பணி 31—3—2007-க்குள் முடிக்கப்பட வேண்டும்.

நீலகிரி மாவட்டத்திற்கான வரைவு அத்தியாயங்கள் மீது சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் அறிஞர்களிடமிருந்து குறிப்புகளும் அபிப்பிராயங்களும் கேட்கப்பட்டுள்ளன. இப்பணி விரைவில் திட்டமிட்டபடி முடிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் அரசு அதன் அரசாணை எண். 19, கல்வி, 4—1—1990-ல் கல்வித்துறையின் ஆணையாளர் மற்றும் செயலரின் தலைமையிலான ஒரு குழுவை அமைத்துள்ளது. அரசு வருவாய் துறையின் ஆணையர் மற்றும் செயலர் வருவாய் நிர்வாக சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர், தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித்துறை ஆணையர் மற்றும் சென்னை பல்கலைக்கழக துறையின் தலைவர் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர். விவரச்சுவடிகள் தயாரிப்பதில் பணி முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்வதும், அதற்கு தக்க வழிகாட்டுவதும் இக்குழுவின் நோக்கமாகும். இக்குழுவின் கூட்டம் விரைவில் கூட்டப்படவிருக்கிறது.

புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கான விவரச்சுவடிகளை தமிழாக்கம் செய்யும் பணி முடிக்கப்பட்டுவிட்டது. இராமநாதபுரம் மாவட்டத்திற்கான விவரச்சுவடியில் தமிழ் பிரதி 30—8—1990-க்கு முன்னரே வெளியிடப்பட்டுவிட்டது. புதுக்கோட்டை மாவட்டத்திற்கான தமிழ் விவரச்சுவடி விரைவில் வெளியிடப்படும். தர்மபுரி மாவட்ட விவரச்சுவடியினை தமிழாக்கம் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

தமிழ்நாடு சரித்திர ஆவணங்கள் வட்டாரக் குழு

தனியார் மற்றும் தனியார் நிறுவனங்கள், வியாபார நிறுவனங்கள், கோவில்கள், தேவாலயங்கள், மடாலயங்கள் ஆகியவற்றில் இருக்கும் ஆவணங்களை சேகரித்து கையகப்படுத்துவது இக்குழுவின் முதன்மையான பணியாகும். தனியார் வசமுள்ள ஆவணங்களின் முக்கியத்துவத்தை வெளிக்கொணர ஏதுவாக மாவட்ட அளவிலான குழுக்கள் அமைக்க கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

பயிற்சிப் பிரிவு

அரசுத்துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் ஆவண அறைகளில் பணிபுரியும் அலுவலர்களுக்கு ஆவண மேலாண்மை பயிற்சி இப்பிரிவின்மூலம் அளிக்கப்படுகிறது. இந்த ஆவண மேலாண்மைப்பயிற்சி தனியார் நிறுவன அலுவலர்களுக்கு அளிக்கப்படுகிறது. அரசாணை எண். 1370, கல்வி, நாள், 27—9—1989-ல் உள்ள ஆணைகளின்படி தனியார் நிறுவனங்களிலிருந்து வரும் பயிற்சியாளர்களுக்கு ரூபாய் 500 கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இத்திட்டம் இவ்வாண்டிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது. ஒரு உதவி ஆணையரின் தலைமையின்கீழ் இப்பயிற்சி பிரிவு இயங்கி வருகிறது.

இடைநிலை ஆவணக் காப்பகம்.

நடப்பில் இல்லாத ஆவணங்களிலிருந்து 30 ஆண்டுகட்குட்பட்ட ஆவணங்களை தனியே பிரித்தெடுத்து வகைப்படுத்த இடைநிலை ஆவண காப்பகம் 1987 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இவ்வாறு தனியே பிரித்தெடுக்கப்பட்ட 30 ஆண்டுகட்குட்பட்ட ஆவணங்கள் தற்போது தனியான ஆவண பிரிவில் வைக்கப்பட்டு இக்காப்பகத்தின் ஒரு அங்கமாக நிறுவப்பட்டு 1990-ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் இயங்கிவருகிறது.

சிறப்பு தகவல்கள் :

இந்திய வரலாற்று ஆவணங்கள் ஆணையத்தின் 53-வது அமர்வு அஸ்ஸாம் மாநில தலைநகர் கௌஹாத்தியில் 1990-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் நடைபெற்றது. ஆவணக்காப்பாளர்களின் தேசிய குழு (National Committee of Archives) கூட்டம் ஹைதராபாத்தில் 9—8—1990 அன்று நடைபெற்றது.

தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின் செயல்பாடுகளைப் பற்றி ஆராய டாக்டர் எஸ். கோபால் அவர்களின் தலைமையில் ஒரு குழுவினை தமிழ்நாடு அரசு அமைத்தது. இக்குழுவின் அறிக்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

ஆவணக்காப்பக நிர்வாகத்தினை பொறுத்தவரை, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாக ஆவணக்காப்பக கொள்கைகள் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அரசின் பல்வேறு துறைகள், அனைத்து துறைத்தலைமை அலுவலகங்கள் மற்றும் இதர அரசு அலுவலகங்கள் ஆகியவற்றில் உள்ள ஆவணங்கள் எவ்வாறு கவனமுடன் பாதுகாக்கப்பட்டு நிர்வகிக்கப்படவேண்டும் என்று முறைப்படுத்துவதை இத்தீர்மானம் விளக்குகிறது. இத்தீர்மானம் சட்டமாக்கப்படும் நிலையில் உள்ளது.

வருடாந்திர ஏற்பு.

(1) அரசு தலைமைச்செயலகத்தின் பல்வேறு துறைகள்	260 கட்டுகள்.

மாவட்ட ஆவணக்காப்பகம்.

(1) கோயம்புத்தூர்	9,346 கோப்புகள்.
(2) தென்னாற்காடு மாவட்டம் (கடலூர்)	11,724 கோப்புகள் மற்றும் 270 புத்தகங்கள்.
(3) மதுரை	1,499 கோப்புகள் மற்றும் 376 புத்தகங்கள்.
(4) சேலம்	11,650 கோப்புகள்.
(5) திருச்சிராப்பள்ளி	3,05,546 கோப்புகள்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் :

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் 4–3–1970 அன்று நிறுவனச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, தமிழக அரசின் ஒரு சார்பு திறுவனமாக இயங்கி வருகிறது. அதே நாளில் முன்னாள் அரசுத்துறை '' தமிழ் பிரசுர குழுமம் '' என்பதும் பாடநூல் நிறுவனத்துடன் இணைக்கப்பெற்றது. தமிழ் நாட்டிலுள்ள அனைத்து பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கான பாட நூல்களை நாட்டுடமையாக்கும் திட்டத்தின்கீழ் இந்நிறுவனம் 1 முதல் 12 வகுப்புகளுக்கான தமிழ் வழி பாட நூல்களையும் 6 முதல் 12 வகுப்புகளுக்கான ஆங்கில வழிப் பாட நூல்களையும் 1 முதல் 10 வகுப்புகளுக்கான மலையாளம், கன்னடம் உருது மற்றும் தெலுங்கு வழி பாடநூல்களையும் அச்சிட்டு விநியோகித்து வருகிறது.

1. பள்ளிப்பாடநூல் (புதிய கல்விக்கொள்கை திட்டப்படி) :

அரசாணை எண். 2054, கல்வி நாள் : 19–12–1986-ன்படி 1 முதல் 12ஆம் வகுப்புகளுக்கான பாடத்திட்டங்களை புதிய கல்வி கொள்கைக்கேற்ப, திருத்தி அமைக்க டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் தலைமையின் கீழ் உயர்மட்டக்குழு அன்று அமைக்கப்பட்டது. அக்குழு வழங்கிய நெறிமுறைகளின்படி புதிய பாடநூல்களுக்கான கையெழுத்துப் படிகளை தயாரிக்க ஒர் உட்குழு அமைக்கப்பட்டது. புதிய பாடத்திட்டத்தின்படி நூல்களை வெளியிடுவதில் இரண்டாவது கட்டமாக 1989-90 ஆம் கல்வி ஆண்டில் 2, 4, 7, 9 மற்றும் 11 ஆம் வகுப்புகளுக்கு உட்குழு தயாரித்து அளித்த புதிய பாடநூல்களை இந்நிறுவனம் உரிய நேரத்தில் அச்சிட்டு விநியோகித்தது. கடைசி கட்டமாக 1990-91 ஆம் கல்வி ஆண்டில் 5, 8, 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கு புதிய பாடநூல்கள் தயாரித்து விநியோகம் செய்ய 1989-90 நிதி ஆண்டிலேயே பெரும்பகுதி நடவடிக்கைகள் முடிக்கப்பெற்றது.

குறிப்பேடு :

குறிப்பேடுகள் தயார் செய்து வழங்கும் பொறுப்பை 1979–ஆம் ஆண்டு முதல் நிறுவனம் ஏற்றுள்ளது, இக்குறிப்பேடுகள் நடுவன் அரசினரால் ஒதுக்கிடு செய்யப்படும். சலுகை விலைத் தாளினால் தயார் செய்யப்பட்டு இந்நிறுவனம் வட்டார கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டு மாணவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், அரசுத்துறை நிறுவனங்கள் மூலமாகவும். மாணவர்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது தமிழ் நாட்டிலுள்ள மாணவர்களுக்குத் தேவையான குறிப்பேடுகள் தயாரிக்க ஆண்டு ஒன்றுக்கு சுமார் 16 ஆயிரம் டன் தாள் தேவைப்படுகிறது. ஆனால் அரசு ஆண்டு ஒன்றுக்கு 2768 டன் சலுகை விலைத்தாள் மட்டுமே இந்நிறுவனத்திற்கு குறிப்பேடு தயாரிப்புக்கு ஒதுக்கீடு செய்கிறது, இதனால் மொத்தத் தேவைளல் 17.3 விழுக்காடு மட்டுமே இந்நிறுவனம் பூர்த்தி செய்ய இயலுகிறது. மிதம் உள்ள தேவை கூட்டுறவு மற்றும் தனியார் நிறுவனங்கள் தயாரிக்கும் குறிடபேடுகளைக் கொண்டு பொதுச் சந்தை விற்பனை மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது. 1989–90 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் ரு. 2 கோடி மதிப்புள்ள குறிப்பேடுகளை ஆதிதிராவிட நலத்துறை, பிற்பட்டோர் நலத்துறை, கள்ளர் சீரமைப்புத்துறை மூலமாக மாணவர்களுக்கு வழங்கியுள்ளது. 1989–90 ஆம் நிதியாண்டில் இந்நிறுவனத்திற்கு சலுகை விலைத்தாள் ஒதுக்கிடு கிடைத்தும் தாள் விநியோகம் முழுமையாக கிடைக்கவில்லை.

கல்லூரி நூல் :

ஆங்கில வழி பயிற்சியிலிருந்து தமிழ்மொழி வழி பயிற்சியினை கல்லூரிகளில் செயல்படுத்தும் முகமாய் நடுவன் அரசு எடுத்து தேசிய கொள்கையின்கீழ் 1968–ல் நடுவன் அரசு ரூ. 1 கோடியினை தமிழ்மொழி நூல்களை கல்லூரி மாணவர்களுக்கு தயாரித்து வழங்குவதற்காக தமிழ் வெளியீட்டுக் கழகத்திற்கு அளித்தது, இதுதொகையை கொண்டு இந்நாள் வரை 911 தலைப்புகளின் கீழ் கலை. அறிவியல். சட்டம் பொறியியல். விவசாயம் மற்றும் மருத்துவம் ஆகிய துறைகளின் கீழ் கல் லூரி மாணவர்களுக்கு பயன் அளிக்கும் வகையில் தமிழ் வழி நூல்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டன, இப்புத்தகங்களை விற்றுக் கிடைத்த தொகையிலிருந்து மேலும் 254 தலைப்புகளில் ஏற்கனவே வெளியிடப்பட்ட நூல்களை மறுபதிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, இவைகள் தவிர மத்திய விவரத் சுவடியினை வெளியிடும் பொறுப்பும். இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது, தமிழ். தமிழ் அகராதி மற்றும் சிறப்பு வெளியீடுகளை இந்நிறுவனம் தயாரித்து வெளியிட்டுள்ளது,

விநியோகம் : .

இந்நிறுவனம் தயாரிக்கும் பாடநூல்கள் மாநிலம் முழுவதிலும் கூட்டுறவுத் துறையின் கீழ் இயங்கும் மொத்த மற்றும் வட்டார விற்பனையாளர்கள் 56 பேர்கள் மூலம் விற்பனையாகின்றன, சென்னை மாநகரைப் பொறுத்த மட்டில் அங்கிகரிக்கப்பட்ட

84 சில்லரை விற்பனையாளர்களுக்கு இந்நிறுவனம் நேரடி விலியோகம் செய்கிறது, நிறுவன தலைமை இடத்தில் ஓர் விற்பனை நிலையமும் செயல்படுகிறது. வெளி மாவட்டங்களில் கூட்டுறவுத்துறை விநியோகத்தை சென்னையில் உள்ள கூட்டுறவு இணையம் கண்காணிக்கிறது. மொத்தத்தில் தனியார் துறை சில்லறை விற்பனையாளர்கள் 2,450 மற்றும் கூட்டுறவுத் துறை சில்லரை விற்பனை நிலையங்கள் 1,043 மூலமாக மாணவர்களுக்கு பாடநூல்கள் விற்பனை செய்யப்படுகின்றன. 1985-86ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சரது இலவச பாட நூல் வழங்கும் திட்டத்தின்கீழ் 1 முதல் 8 ஆம் வகுப்புகளில் உள்ள மதிய உணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் மாணவர்களுக்கு பாடநூல்கள் இலவசமாகவும் வழங்கப்படுகின்றன. 1989-90 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ. 24,66 கோடி மதிப்புள்ள பாடநூல்கள் மாநிலத்தில் உள்ள 396 உதவி கல்வி அலுவலர்கள் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும் அரசு நலத்துறைகள் இந்நிறுவனத்திலிருந்து பாடநூல்களை நேரடியாக விலைக்கும் பெற்று ஆதி திராவிடர் பழங்குடியினர், சீர்மரபினர், மி.பி. வகுப்பினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினர் மாணவர்களுக்கு விநியோகிக்கின்றன.

நிதி உதவி :

இந்நிறுவனம் தொடங்கிய பொழுது அரசிடம் பெற்ற வழிவகை முன்பணம் ரூ. 23.83 லட்சம் ஆகும், இத்தொகை அரசுக்கு முழுமையாக திருப்பி அளிக்கப்பட்டது, பொது விற்பனை மூலமாக கிடைத்த உபரி நிதியினைக் கொண்டு ரூ. 34 லட்சம் மதிப்புள்ள மூன்று மாடி கட்டிடம் மற்றும் 1,20 கோடி மதிப்புள்ள 10 மாடி கட்டிடம் இந்நிறுவனத்தால் கட்டப்பட்டுள்ளது, மைய மற்றும் மாநில அரசுத்துறைகளில் பல அலுவலகங்களுக்கு 10 மாடி கட்டிடத்திலும் இடம் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. மூன்று மாடி கட்டிடத்தின் தரைப்பகுதியில் ஒரு வங்கிக்கும். இடம் வாடகைக்கு விடப்பட்டுள்ளது, ஆனால் அரசு அலுவலகங்கள் சில வாடகையை முறையாக செலுத்துவதில்லை, 1981-82 ஆம் ஆண்டு முதல் 1985-86 ஆம் ஆண்டு வரை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 25 லட்சமும். 1986-87 ஆம் ஆண்டு முதல் ரூ. 50 லட்சமும் பள்ளிக் கூடங்களின் கூடுதல் கட்டிடங்கள் கட்டுவதற்காக பள்ளி கல்வி இயக்குநருக்கு அரசாணையின்படி வழங்கப்பெற்றது, இதுவரை ரூ. 2,25 கோடி இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது, இலவசப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வினியோகிக்கப் பட்ட நூல்களுக்கான தொகை தமிழக அரசிடமிருந்து முழுமையாகப் பெறப்படாத தால் 1989-90 ஆம் ஆண்டு மாநில கூட்டுறவு வங்கியில் ரூ. 9 கோடி மிகைப்பற்று பெறவேண்டிய நிலை ஏற்பட்டது.

முடிவுரை :

பாடநூல் நிறுவனம். சென்னை-6 கல்லூரிச் சாலையில் தனது சொந்த கட்டிடத்தில் இயங்கி வருகிறது. நிறுவனம் ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ பத்து கோடி எண்ணிக்கை பாடநூல்களை அச்சிடுகிறது, இலட சுமார் 140 தனியார் அச்சகங்கள் மூலம் அச்சாகின்றன, நிறுவனத்திற்கென சொந்தமாக அச்சகம் இன்னும் கூட்டப்பெறவில்லை, சென்னையில் திருவான்மியூர் பகுதியில் 3 ஏக்கர் காலி நிலம் அச்சகத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது, அதே பகுதியில் நிறுவனத்திற்கு சொந்தமான 6 இடங்குகள் உள்ளன, நிறுவனத்தின் சென்னை வட்டாரக் கிளை அலுவலகமும் அங்கு செயல்படுகிறது. வெளி மாவட்டங்களில் விழுப்புரம், கும்பகோணம், திருச்சி, புதுக் கோட்டை. மானாமதுரை. கோவில்பட்டி. நெல்லை, மதுரை, கோவை, உதகை, ஈரோடு. சேலம். திருஷ்ணகிரி மற்றும் இராணிப்பேட்டை ஆகிய இடங்களில் வட்டார அலுவலகங்களும். கிடங்குகளும் வாடகைக்கு இடம் பெற்று செயல்படுகின்றன. மதுரையில் மட்டும் கூட்டுறவுத் துறை கிடங்கில் நிறுவனம் செயல்படுகிறது.

தமிழ்ப் பல்கலைக் கழகம்.

தமிழ்ப் பல்கலைக் கழகம் 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் தொடங்கப்பட்டது. தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டு ஒன்பது ஆண்டுகள் ஆகின்றன. தமிழ் பல்கலைக் கழகச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள பல்கலைக் கழகத்தின் நோக்கங்கள் பாராட்டத் தக்க வகையில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

நிலை. நீர்ப்பகுதிகளில் கள ஆய்வுகள் நடத்தியும், கல் வெட்டுகளை ஆய்வு செய்தும் மலையின மக்கள் குறித்த ஆய்வுகள் செய்தும் பல்கலைக் கழகம் தம் பணியைச் செம்மையாகச் செய்து வருகிறது. மேலும் புதிய தடயங்கள் கண்டு தமிழ்நாட்டில் விடுபட்ட வரலாற்றுப் பகுதிகளை இட்டு நிரப்புதல், இசை நாடகம், நாட்டுப்புறக் கலைகள், சிற்பம் போன்ற பழந்தமிழர் தம் நுண்கலைகளையும் இலக்கியத்தையும் ஆய்வு செய்தல், அவற்றின் தூய்மை கெடாது பாதுகாத்தல், புதிய செய்திகள் தெரிதல், பழம் ஏட்டுச்சுவடிகள், அரிய கையெழுத்துச் சுவடிகள் போன்றவற்றைச் சேகரித்துப் பாதுகாத்தல், உலகெங்கிலும் வாழும் தமிழர் குறித்து ஆய்வு செய்தல் அவர் தம் மொழி, பண்பாடு ஆகியவற்றைப் பேணிப் பாதுகாக்க உதவுதல், கண்ப்போறி மூலம் தானியங்கி மொழிபெயர்ப்பு சொல்லடைவு, பொருளடைவு தயாரித்தல் தமிழில்

அறிவியல் கலைச் சொல்லாக்கம் உருவாக்குதல், மக்களிடையே அறிவியல் செய்தி களைப் பரப்புதல், சமுதாயச் சிக்கல் குறித்து ஆய்வு, சமய ஆராய்ச்சி, களஞ்சியங்கள், அகராதிகள், பேரகராதி ஆகியவை தயாரித்தல், வயது வந்தோர் கல்வித் திட்டம் போன்ற பல பயனுள்ள பல்கலைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ளது.

திருச்சி, வல்லம் சாலையில் இருமருங்கிலும் அமைந்த 975 ஏக்கர் நிலப்பரப்பில் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. இதன் மையங்களாக 1, களஞ்சியமுள்ள தத்துவமையமும், 2. உதகமண்டலத்தில் மலையின மக்கள் ஆய்வு மையமும், மண்டபத்தில் நீரகமாய்வு மையமும் உள்ளன. தஞ்சையில் பல்கலைக்கழகத்திற் கான நிர்வாகக் கட்டடம், அறிவியல் புலக்கட்டடம், தத்து மையக் கட்டடம், ஆசிரியர் குடியிருப்புகள் ஆகியன 1989-90-இல் கட்டி முடிக்கப்பட்டு 15—5—1990 அன்று குடியரசு துணைத் தலைவர், தமிழக முதல்வர், தமிழக ஆளுநர், கல்வி யமைச்சர் ஆகியோரால் திறக்கப்பெற்று இயங்கி வருகிறது. மொழிப்புலக் கட்டடம், புலவிருந்தகம், நான்கு வகைக் குடியிருப்புகள் ஏற்கெனவே நிறைவு பெற்றுள்ளன. நடப்பாண்டில் நடைபெற்று வரும் கட்டடப் பணிகள் :—

1. மலையின மக்கள் ஆய்வுமையக் கட்டடம் 10 லட்சம் ரூபாய்

2. ஈப்பாளர் கட்டடங்கள்—2.. 35 லட்சம் ரூபாய்

உலகில் வாழ்வியலிலும் அறிவியலிலும் ஏற்பட்டுள்ள வியத்தகு வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு, தமிழில் 14 தொகுதிகளில் வாழ்வியல் களஞ்சியம் ஒன்றையும் 20 தொகுதிகளில் அறிவியல் களஞ்சியம் ஒன்றையும் வெளியிடும் நோக்கில் அமைக்கப் பட்ட களஞ்சிய மையம் இதுவரை வாழ்வியலில் 10 தொகுதிகளையும் அறிவியலில் ஐந்து தொகுதிகளையும் வெளிபிட்டுள்ளது

தமிழ்ப் பெருஞ் சொல்லகராதியொன்றை 10 தொகுதிகளில் வெளியிடுவதை நோக்கமாகக் கொண்டு பெருஞ்சொல்லகராதித்துறை, பெருஞ்சொல்லகராதியின் இரண்டு தொகுதிகளை வெளியிட்டுள்ளது தூயதமிழ்ச் சொல்லாக்க அகரமுதலி, கலைச் சொல்லகரமுதலி கலைச்சொல்லாக்க அகரமுதலி எனும் மூன்று அகரமுதலிகள் தயாரிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளது.

தமிழ்மொழி, அறிவியல் சொல்வளத்தில் பின் தங்கிவிடாதிருக்கப் பிற மொழி களிலுள்ள பயனுள்ள நூல்கள், இதழ்கள், கட்டுரைகள் ஆகியவற்றை உடனுக்குடன் தமிழில் மொழி பெயர்க்கும் நோக்கில் கனிப்பொறி மையம் தானியங்கி மொழி பெயர்ப்பு ஆய்வில் ஈடுபட்டுள்ளது தமிழ், மலையாளம், வங்காளம், இந்தி, கன்னடம், தெலுங்கு ஆகிய ஐந்து மொழிகளில் உடனுக்குடன் வரிவடிவ மாற்றம் செய்யும் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

கனிப்பொறி வழி சங்க இலக்கியப் பொருட் களஞ்சியத் தயாரிப்புப்பணி நிறைவுறும் நிலையிலுள்ளது கனிப்பொறிவழி, சிற்ப சாத்திரச் செல்லடைவு ஒன்றும் உலகெங்கிலுமுள்ள தமிழ் ஓலைச்சுவடிகளுக்கான ஐந்து தொகுதிகள் கொண்ட பட்டியல் ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது

முறைகளில் நடைபெறும் நிறைவுபெற்ற அரிய பணிகள் :

ஓலைச்சுவடிகள் பட்டியலிடவென இவ்வாண்டு தேசிய ஆவணக்காப்பக நல்கை ரூ. 50,000 பெறப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது. தேசிய ஆவணக் காப்பகம் வழங்கிய 1.36 இலட்சம் நல்கை வழி மோடி ஆணைத் தமிழாக்கப்பணி நடைபெற்று வருகிறது. மேலும் தேசிய ஆவணக் காப்பகம் அரிய கையெழுத்துச் சுவடிகள் பராமரிப்பிற்கு ரூ. 0.66 இலட்சம் நல்கை வழங்கியுள்ளது.

கல்வெட்டுத்துறை நிகழ்த்திய கொடுமணல் அகழாய்வில் கிட்டிய தொல் பொருட்கள் வகைப்படுத்தப்பட்டு ஒளிப்படங்கள் எடுக்கப்பட்டன. சேலம் மாவட்டத்தில் 55 ஊர்களில் சுமார் 225 கல்வெட்டுக்கள் படியெடுக்கப் பெற்றுள்ளன. படியெடுத்த கல்வெட்டுக்களை பெயர்த்தெழுதும் பணி நடைபெற்று வருகிறது. கொடுமணல் நான்காம் பருவ அகழாய்வு தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டு துறை யுடன் சென்னை பல்கலைக்கழகத் தொல்லியல் மற்றும் பழம் வரலாற்றுத்துறையும், தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறையும் சேர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

அயல்நாட்டு மாணவர்களுக்கு ஓர் தமிழ்ப்பாட நூல் 'பீஜியில் தமிழ்' என்னும் தமிழ் நூலை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 'அயல் நாட்ட வர்க்குத் தமிழ் கருத்துப்பரிமாற்ற இலக்கணம்' என்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

'அகத்தியர் வைத்திய சிந்தாமணி வெண்பா' எனும் நூல் 50க்கும் மேற்பட்ட கவடிகள் மற்றும் அச்சு நூல்களிலிருந்து தொகுத்து ஒப்புநோக்கப்பட்டு எழுதி முடிவடையும் தருவாயில் உள்ளது. மூவிகைகளில் ஆய்வு செய்பவர்களுக்கு 'அட்

யாளம் காண உதவும்பொருட்டு மூலிகை உயிர் தாவரங்கள் சேகரிக்கப்பட்டுப் பாது காக்கப்படுகிறது. அதுவரை 500 மூலிகை உலர் தாவரங்கள் அட்டைகளில் ஒட்டப்பட்டுள்ளன. சுவிட்சர்லாந்து நெஸ்டெக் ஆய்வு மையத்தில் நிதியுதவியுடன் மூல மருத்தியல் ஆய்வு நடைபெற்று வருகிறது.

இசைத்தமிழ் வரலாறு முதற்பகுதி-தொல்காப்பியக்காலம் முதல் கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரையிலான இடைப்பட்ட கால கட்டத்தில் ஏற்பட்டுள்ள இசைத்தமிழ் வளர்ச்சி பற்றிய வரலாறு இந்நூலில் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் நுண்ணாய்வு செய்யப்பட்டு அச்சிடும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பரத நாட்டியத்தில் தமிழிசைப்பாடல்கள், சிலப்பதிகாரத்தில் காணப்படும் இசைப்பாடல்கள் நுண்ணாய்வு செய்யப்பட்டுள்ளது.

சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகம் பாடல்களில் 100 பாடல்கள் தொகுக்கப் பட்டு நாடக கலைஞர்களைக் கொண்டு அவற்றைப் பாடச் செய்து ஒலிப்பதிவு செய்யப் பட்டுள்ளன. இப்பாடல்களுக்குச் சுருதிஞக் குறிப்புகள் எழுதப்பட்டுள்ளன. இந்நூலில் அச்சுப் பணியும் நிறைவேற்றியுள்ளது. விரைவில் இந்நூல் வெளியிடப் பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

சங்க இலக்கியத் தாவரம் (அறிவியல், ஆங்கிலம், இலக்கியம் மற்றும் பொதுப் பெயர்கள் கொண்ட கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது). மீண்டும் அன்றும்-இன்றும் ஆய்வு நூல் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தென்னிந்திய கடல்சார் வரலாறு என்னும் பி. எஸ். ஜி. ஆர். திட்ட ஆய்வாளர் களால் சேகரிக்கப்பட்ட வாய்மொழிச் செய்திகள் வினா நிரலிலிருந்து அட்டவணைப் படுத்தப்பட்டு 400 பக்கங்களுக்கு அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு 20 படிகள் பி.எஸ்.ஐ.ஆர். புதுடில்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சங்க இலக்கியப் பொருட்களஞ்சியத்தின் ஐந்தாம் தொகுதி நிறைவு பெற்றுள்ளது. ஆங்கில மொழி பெயர்ப்பு இரண்டாவது தொகுதி முடிவுற்றது.

அருங்காட்சியகத்தை மாற்றியமைத்தல், களப்பணி மூலம் பொருள்கள் சேகரிப்பு, சேகரித்த பொருட்களை உரிய பதிவேடுகளில் பதிவு செய்தல், பொருள்களைப் பாது காத்தல், பார்வையாளர்களுக்குக் கல்விப்பணி ஆகியன செய்யப்பட்டு வருகின்றன. பல்கலைக்கழக மான்யக் குழுவிலிருந்து பொருள் சேகரிக்கவும் உபகரணங்கள் வாங்கவும் மற்றும் அருங்காட்சியக நூலகத்திற்கு நூல்கள் வாங்கவும் ரூ. 4 இலட்சம் நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளது.

Colour Blindness among school going Tribal Children of Nilgiris & Sociological study of Leprosy among Malayalis of Salem and Thiruchirapalli District of Tamil Nadu Socio-economic changes among the Kanniakaram Women in a rural setting in Tamil Nadu Teachor's Manual of Irula Teachers

போன்ற ஆய்வுப் பணிகள் முனைவர் எம். சேதுராமன் திரு. டி. எஸ். நடராசன், முனைவர் ஜா. பார்த்தசாரதி, முனைவர் தேவராஜ் வீரராகவராஜ். முனைவர் ஆர். பெரியாழ்வார் ஆகியோரால் உதகை மலையின மக்கள் ஆய்வு மையத்தில் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

வயது வந்தோர் துறை சார்பாகப் பல்கலைக்கழக மான்யக்குழு இத்துறையை ஆராய்ச்சித்துறையாகக் கருதியுள்ளதால், மூன்று ஆராய்ச்சித் திட்டங்கள் தொடங்கு வதற்குத் திட்ட வரைவுகள் பல்கலைக்கழக மான்யக் குழுவிற்குக் அனுப்பப்பட்டுள்ளன. விவரம் பின்வருமாறு :—

1. எழுத்தறிவு நூல்கள் தயாரித்தல்-

2. ' வயது வந்தோர் முன்னேற்றத்திற்கு வயதுவந்தோர் கல்வியின் விளைவு கள்—ஓர் ஆய்வு '.

3. வயது வந்தோர் கல்வித் திட்டத்திற்குத் தமிழ்நாட்டின் இருமொழி வழக்கு எல்லையில் வசிக்கக்கூடிய மக்களின் மொழித் தேர்வும் விருப்பமும் ''.

துறைகளின் சார்பில் ஏறக்குறைய 22 கருத்தரங்குகள்/பணிப் பட்டறைகள்/ பயிற்சி வகுப்புகள்/மாநாடுகள் நடைபெற்றன. துறையினர் ஏறத்தாழ 212 கருத் தரங்குகள், மாநாடுகள், பயிற்சி வகுப்புகள் ஆகியவற்றில் பங்கேற்றனர்.

தமிழ்நாடு அரசு பராமரிப்பு மற்றும் பிற இனங்களுக்கான மொத்தம் ரூ. 1,67,23,139 ரூபாயும், பல்கலைக்கழக நல்கைக்குழு மற்றும் பிற இதர நிறுவனங் களின் நல்கையாகக் கூடுதல் ரூ. 37,54,133 ரூபாயும் நல்கையாக வரப்பெற்றன.

தொழில் நுட்பக் கல்வி.

1957 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட தொழில் நுட்பக் கல்வித் துறையானது கீழ்க்கண்டவாறு பல்வேறு வகைகளில் தொழில் நுட்பக் கல்வியை திட்டமிட்டு வளர்த்து வருகிறது.

பாலிடெக்னிக்குகள் —டிப்ளமா மற்றும் போஸ்ட் டிப்ளமா.

பொறியியற் கல்லூரிகள் —பட்டம் மற்றும் பட்டமேற்படிப்பு.

கலை மற்றும் கைத்தொழில் சிற்பக் கல்லூரிகள் டிப்ளமா மற்றும் பட்டப்படிப்பு

தொழில் நுட்பக் கல்விக்காக 1989–90 ஆம் நிதியாண்டிற்காக (கட்டிடங்கள், கடன்கள் அண்ணா பல்கலைக் கழகத்திற்கு மானியம் ஆகியவற்றுக்காக நிதி ஒதுக்கீடுகள் உட்பட) ரூ. 29 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில் நுட்பக் கல்வித் துறையின் நேரடி கட்டுப்பாட்டில் கீழ் செயல்படும் தொழில் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை அவற்றில் ஆண்டுதோறும் புதிதாகச் சேர்க்கப்படும் மாணவர்கள் எண்ணிக்கை ஆகியவை பின்வருமாறு :—

கல்வி நிறுவனங்கள்.	எண்ணிக்கை.	ஆண்டுதோறும் புதிதாக சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
பொறியியற் கல்லூரிகள	36	பட்ட வகுப்புகள் :—
	திருச்சியிலுள்ள வட்டாரப் பொறியியற் கல்லூரி (தமிழ்நாட்டு மாணவர்களுக்கான இடஒதுக்கீடு உட்பட	1. முழு நேரம் 6,827
		2. பகுதி நேரம் 1,160
		பட்ட மேற்படிப்பு :—
		1. முழு நேரம் 276
		2. பகுதி நேரம் 56
		பட்டமேற்படிப்பு பட்டயம்:
		1. முழு நேரம் 21
		2. பகுதி நேரம் 5
பல்தொழில் பயிலகங்கள் (பாலிடெக்னிக்) மற்றும் சிறப்புப் பட்டயப்படிப்பு நிறுவனங்கள் (கலை கைத் தொழில் மற்றும் சிற்பக் கலைக்கல்லூரிகள் உட்பட)	131	பட்டய வகுப்புகள் :
		1. முழு நேரம் 22,332
		2. பகுதி நேரம் 1,675
		பட்டய மேற்படிப்பு :
		1. முழு நேரம் 263
		2. பகுதி நேரம் 90
		சான்றிதழ் வகுப்பு :
		1. முழு நேரம் 70
		2. பகுதி நேரம் 210
மேல் நிலைப்பள்ளி (வாழ்க்கை)		முழு நேர 40

தற்போது 74 சுயநிதி பாலிடெக்னிக்குகள் துவக்கப்பட்டுள்ளதாலும் 1983–84 ஆம் ஆண்டிலிருந்து ஏழு பாலிடெக்னிக்குகளில் ஷிப்ட் முறை துவக்கப்பட்டு உள்ளதாலும் பாலிடெக்னிக்குகளில் மாணவர்கள் சேர்க்கை அதிகரித்துள்ளது.

சுயநிதி பொறியியற் பயிலகங்கள் :

பொறியியற் கல்லூரிகள் :

கடந்த சில ஆண்டுகளாக பல சுயநிதி பொறியியற் கல்லூரிகளை துவக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பயிலகங்களில் போதுமான அளவு வசதிகள் இல்லை என்றும் போதிக்கப்படும் கல்வியின் தரமும் மோசமாக உள்ளது என்றும் அரசுக்கு அதிகமான புகார்கள் வந்தன. இதைத் தவிர பல குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியும் அரசுக்குப் புகார்கள் வந்தன. ஆகையினால் புதிய சுயநிதி பொறியியற் கல்லூரிகள் துவக்குவது தவிர்க்கப்பட்டு வருகிறது. தற்போது செயல்பட்டுவரும் சுயநிதி பொறியியற் கல்லூரிகளின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்து தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. இக்கல்லூரிகளை ஆய்வு செய்யும் பொருட்டு அண்ணா பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்களின் தலைமையில் ஓர் உயர்மட்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

பாலிடெக்னிக்குகள் :

1987–88 ஆம் ஆண்டு வரை 74 சுயநிதி பாலிடெக்னிக்குகள் துவக்கப்பட்டன. 1988–89 ஆம் ஆண்டில் மணலியில் எம்.ஆர்.எச். பாலிடெக்னிக் 1989–90 ஆம் ஆண்டில் ஏஐடிடிஇ-யின் அங்கிகாரம் பெற்ற பின்னர் செயல்பட அரசால் அனுமதி வழங்கப்பட்டது. 1989–90 ஆம் ஆண்டிலேயே அப்பயிலகம் செயல்படத் துவங்கியது.

புதிய பாடங்கள் :

கம்ப்யூட்டர் சயின்ஸ் அண்டு அப்ளிகேஷன்ஸ் என்ற பி.இ. பட்டப் படிப்பானது ஏற்கனவே தியாகராஜர் பொறியியற் கல்லூரியில் துவக்கப்பட்டு விட்டது. கம்ப்யூட்டர் புரோகிராமிங் ஒரு கட்டாயப் பாடம் ஆக்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பயிலகங்கள் அனைத்திலும் கம்ப்யூட்டர் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பணியாளர்கள் தகுதி, பணி முதலிய விவரங்கள் மற்றும் துறை சம்பந்தப்பட்ட பல்வேறு புள்ளி விவரங்கள் கம்ப்யூட்டர் பொறியில் பதிவு செய்து தொகுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

தேர்வுப்பணிக்கு கம்ப்யூட்டர்களை பயன்படுத்துதல் :

பல்வேறுபட்ட டிப்ளமா தேர்வுகள் எழுதும் மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. இதன் காரணமாக ஏற்பட்டுள்ள அதிகப்படியான வேலைகளை கவனிக்கும் பொருட்டு சுடந்த சில ஆண்டுகளாக பல்வேறு பட்டயத் தேர்வுகள் குறித்த தேர்வாளர் பட்டியல், தேர்வு அனுமதிச் சீட்டு, மதிப்பெண் அட்டை, பட்டயச் சான்றிதழ் முதலியவற்றை தயாரித்தல், தேர்வு முடிவுகளை வெளியிடுதல் போன்ற அனைத்துப் பணிகளுக்கும் கம்ப்யூட்டர் பயன் படுத்தப்படுகின்றது. பட்டயத் தேர்வுக்கான விடைத்தாள்களை மதிப்பீடு செய்ய மைய மதிப்பீட்டு முறை தொடங்கப்பட்டுள்ளது. இம்முறையினால் தேர்வு முடிவுகள் வெளியிடப்படுவது துரிதப்படுத்தப்பட்டதுடன் தபால் செலவுகள் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டது. தேர்வுப் பணியாளர்களுக்கும் உடனுக்குடன் சிறப்பூதியம் வழங்கப்படுகிறது. டேபுலேஷன் பணியில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு மதிப்பீட்டு மையம் அமைக்கப்பட்டு மாற்றி அமைக்கப்பட்டது. இதன் காரணமாக தேர்வு முடிவுகள் வெளியிடும் பணியானது துரிதப்படுத்தப்பட்டது.

வணிகவியல் பாடங்களில் தேர்வுகள் :

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் வணிகவியல் பாடங்களான தட்டச்சு, சுருக்கெழுத்து, வணிகக் கணக்கு முதலிய பயிற்சி வகுப்புகளின் தேர்வுகளையும் நடத்தி வருகிறார். ஆண்டுதோறும் இரு தடவை அதாவது மே மற்றும் நவம்பர் மாதங்களில் இத்தேர்வுகள் நடைபெறுகின்றன.

நேரடி மத்திய உதவி :

நேரடி மத்திய உதவித் திட்டத்தின் கீழ் பொறியியற் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக்குகளின் ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களுக்கு மத்திய அரசு நிதியுதவி அளிக்கிறது. இந்நிதியானது பயிலகங்களில் உள்ள துறை மற்றும் சோதனைக் கூடங்களை நவீனப்படுத்துவதற்காக வழங்கப்படுகிறது.

சமுதாயப் பாலிடெக்னிக்குகள் :

இராமப்புற மக்களுக்கும் பயன்படும் வகையில் தொழில் நுட்பத்தினை கற்றுத்தர சில பாலிடெக்னிக்குகள் மத்திய அரசால் சமுதாய பாலிடெக்னிக் என்ற திட்டத்தின் கீழ் சமுதாய பாலிடெக்னிக் என்று பெயர் இடப்பட்டுள்ளது. இவ்வகை சமுதாயப் பாலிடெக்னிக்குகளுக்கு அவைகளின் திட்டங்களையும் நடவடிக்கைகளையும் நிறைவேற்ற மத்திய அரசு நிதியுதவி அளிக்கிறது.

ஆசிரியர் திறன் முன்னேற்றம் :

தரமேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பொறியியற் கல்லூரி ஆசிரியர்கள் உயர் படிப்புக்கு ஐ.ஐ.டி. பெங்களூரிலுள்ள ஐ.ஐ.எஸ்.சி. போன்ற பயிலகங்களுக்கு முனைவர் பட்டம் (டாக்டரேட்) பெற அனுப்பப்படுகின்றனர். டி.டி.டி.ஐ.-யில் பயிற்சி பெற பாலிடெக்னிக்குகளிலுள்ள ஆசிரியர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

தன்னாட்சி நிலை :

இதுவரை 10 பாலிடெக்னிக்குகளுக்கு பயிலக தன்னாட்சி நிலையும் 5 பாலி டெக்னிக்குகளுக்கு துறை அளவில் தன்னாட்சி நிலை வழங்கப்பட்டுள்ளது. 1989—90 ஆம் ஆண்டில் எந்த பாலிடெக்னிக்குகளுக்கும் தன்னாட்சி நிலை வழங்கப்படவில்லை.

பணியமர்த்தும் பிரிவு:

கரியர் கைடன்சிங் ஒரு பகுதியாக அனைத்து அரசு மானியம் பெறும் கல்விப் பயிலகங்களிலும் பணியமர்த்தும் பிரிவுகள் தோற்சி பெற்ற மாணவர்கள் வேலை வாய்ப்பு பெற உதவும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

ஒரு மாணவர்க்காகும் செலவு (1989—90) :

ஒவ்வொரு மாணவர்க்கும் பல்வேறு பயிலகங்களில் ஆகும் செலவு பின்வருமாறு :—

பாலிடெக்னிக்குகள் — ரூ. 12,340 — படிப்பு கால முழுமைக்கும்

பொறியியற் கல்லூரிகள் — ரூ. 35,610 — படிப்பு கால முழுமைக்கும்

மாணவர் ஆசிரியர் விகிதம் :

பயிலகங்களிலுள்ள மாணவர் ஆசிரியர் விகிதம் பின்வருமாறு

பயிலகம்.	ஆசிரியர்.	மாணவர்.
(1)	(2)	(3)
பாலிடெக்னிக்குகள்	1	13
பொறியியற் கல்லூரிகள்	1	9

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்.

தமிழக அரசு தனது அரசாணை எண். 1035 (கல்வி), நாள் 10—6—1980-ல் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையங்களை தமிழ் நாட்டில் சென்னை, திருச்சிராப் பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களுக்கும் நிறுவ அனுமதி வழங்கியது. மேலும் இதற்கான ஆரம்ப வேலைகளை கவனிக்க ஒரு தனி அதிகாரியை நியமித்தது. அரசு மாநில அளவில் தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மையம் செயல்படுவதற்காக தமிழக கல்வி அமைச்சரின் கீழ் ஒரு மாநில திட்டக் குழுவை நியமித்தது. இத்திட்டக் குழு 10—2—82 அன்று கூடி ஒரு கழகத்தை தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மையம் என்ற பெயரில் இயக்கலாம் என்று பரிந்துரை செய்தது. தன்னாட்சி பெற்ற இக்கழகம் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையங்கள் என்ற பெயரில் 22—2—82 முதல் செயல்பட ஆரம்பித்தது.

இக் கழகம் தமிழ்நாடு கழக பதிவு விதி 1975 விதிகளின்கீழ் பதிவு செய்யப்பட்டு உள்ளது.

இக்கழகத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு :

(1) தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் அறிவியல் தொழில்நுட்ப மையங்கள் அமைத்தல், முன்னோடியாக சென்னை, திருச்சி., கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் அறிவியல் தொழில்நுட்ப மையங்கள் அமைத்தல்.

(2) பொது மக்கள் மற்றும் மாணவ, மாணவியர் தெரிந்துகொள்ளும் அளவில் அறிவியல் தொழில்நுட்ப அடிப்படை கருத்துக்களைக கண்காட்சி பொருள்களில் அமைத்தல்.

(3) அறிவியல் தொழில்நுட்பக் கருத்துக்களை கிராம மக்களும் தெரிந்து கொள்ளும் வகையில் தெரிவித்தல்.

(4) அறிவியல் தொழில்நுட்ப காட்சிப் பொருள் அளவில் அமைத்து அறிவியலை மக்கள் மனதில் பதியச் செய்தல்.

(5) மக்கள் வாழும் பகுதிகளில் சுற்றுப்புறச் சூழ்நிலை எவ்வாறு அறிவியல் தொழில் நுட்ப உதவியால் மேம்படுத்துதல் என்பதை எடுத்துரைத்தல்.

(6) பள்ளி மற்றும் கல்லூரிகளில் தரும் அடிப்படை அறிவியல் கல்வியை தொழில் நுட்ப ரீதியாக பெருக்கிக் கொள்ள உதவுதல்.

(7) பள்ளிக்கூடங்களில் அறிவியல் கூடங்கள், மாதிரி கூடங்கள் அமைத்துப் பயிற்சி அளிக்க உதவி செய்தல்.

(8) தமிழ்நாட்டில் அறிவியல் கல்வியில் பயன்பெறும் வகையில் உபகரணங்களை பயன்படுத்த அறிவியல் ஆசிரியர்களுக்குக் சொல்லிக் கொடுத்தல்.

(9) அறிவியல் தொழில்நுட்ப அருங்காட்சி பொருட்களை நமது மாநிலத்தில் பல பகுதிகளிலிருந்து சேகரித்துப் பாதுகாத்தல் மற்றும் புதுமைப்படுத்துதல்.

(10) தொழில்கள் வளரும் விதத்தில் தொழில்நுட்ப கருத்துக்களை மாற்றம் செய்து கொள்ளல்.

2. சென்னை, திருச்சி மற்றும் கோவை ஆகிய மூன்று மாநகரங்களிலும் கீழ்க்கண்ட திட்டங்கள் முதலில் செயல்படுத்தப்படும். தொழில்நுட்ப மையத்தின் திட்டக்குழு கீழ்கண்ட கூடுதல் நிகழ்ச்சிகளை அமுல்படுத்தப் பரிந்துரை செய்துள்ளது:—

1. நடமாடும் அறிவியல் கண்காட்சி :

தொழில்நுட்ப கருத்துக்கள் பாமர மக்கள் மனதிலும் பதியும் வண்ணம் நடமாடும் அறிவியல் தொழில் நுட்ப கண்காட்சியை அமைத்தல்.

2. அறிவியல் கருத்துக்கள் :

பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் இம்மாதிரி அறிவியல் கருத்தரங்குகளில் உரையாற்றவும் கருத்துக்களை கலந்துரைக்கவும் அழைக்கப்படுவார்கள்.

3. அறிவியல் போட்டி.

மாணவ, மாணவியர்களிடத்தில் அறிவியல் போட்டிகளை ஒரு முறைக்கு இரண்டு குழு வீதம் அழைத்துப் போட்டிகள் நடத்தப்படும். இத்திட்டத்தை ஆண்டு முழுவதும் வெவ்வேறு ஊர்களில் நடத்தலாம்.

4. பிரசித்தி பெற்ற அறிவியல் வல்லுநர்கள் :

பாமர மக்களும் உணரும் வண்ணம் அறிவியல் தொழில் துறையில் பிரசித்தி பெற்ற சொற்பொழிவாளர்களைக் கொண்டு உரையாற்றச் செய்தல்.

5. அறிவியல் கல்வி உபகரண மையங்கள் :

பள்ளிகளிலும் அமைக்கும் வண்ணம், பள்ளிகளுக்கு அறிவியல் கல்வி உபகரணங்கள் கொடுத்தல், இத்துறையின் ஆசிரியர்களை இதற்கென ஆயத்தப்படுத்துதல்.

6. தற்காலிக கண்காட்சி.

காட்சி பொருட்களை காலத்திற்கேற்றவாறு மாற்றி அமைத்து மக்களை மாணவ மாணவியர்கள் கவரும் வண்ணம் கண்காட்சி கூடங்களை அமைத்தல்.

7. பொதுச் சாதனங்கள் மூலம் பங்கேற்றல் :

அகில இந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றங்களை பொதுமக்களை அறியும் வண்ணம் அமைத்தல். இதை கருத்தில் அரசு கல்வித்துறை தனது ஆணை எண். 1307, நாள் 13—7—1989-ல் கோட்டூரில் கிராமம், சர்வே டி.எஸ். 9, 10 மற்றும் 21, 25 ஏக்கர் நிலப்பரப்பை பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம் நிறுவ அளித்தது. இதற்கிடையில் பிரபித்தி பெற்ற தொழில் அதிபர் திரு. ஜி. கே. பிர்லா அவர்கள் பெரியார் அறிவியல் மைய வளாகத்தினுள் ஒரு கோளரங்கத்தை ரூ. 1.59 கோடி செலவில் அமைக்க ஒப்புக் கொண்டு தமிழக அரசும் ஆணை எண். 182, நாள் 20—2—84 (மின்னணு) அறிவியல் கல்வித்துறையில் இதற்கு ஒப்புதல் அளித்தது. இக்கோளரங்கத்தினை பி. எம். பிர்லா கோளரங்கம் என்று அழைக்கவும் அரசு ஒப்புதல் அளித்தது. இக் கோளரங்கம் முடிவில் ரூ. 1.95 கோடி செலவில் கட்டப்பட்டு இந்திய குடியரசு தலைவர் அவர்களால் 11—5—1988 அன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. கோளரங்கத்தில் 236 இருக்கைகள் கொண்டது. மார்ச் 1989 வரை கீழ்க்கண்ட மூன்று வானவியல் நிகழ்ச்சிகளைத் திரையிட்டுள்ளது.

(1) ஞாயிற்றுக் குடும்பத்தைப் பற்றிய ஓர் ஆய்வு.

(2) கட்டு மீறிய பேரண்டம்.

(3) நாட் மட்டும் இப்பேரண்டத்தில் இருக்கிறோம்?

இக்காட்சிகளை 3,08,100 பேர்கள் கண்டு மகிழ்ந்துள்ளார்கள். வசூல் ரூபாய் 8,91,686.

அறிவியல் பூங்கா :

கோளரங்கத்திற்கு அருகில் ஒரு அறிவியல் பூங்கா சுமார் ரூ. 3.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு இதனை இதுவரை 3,08,100 பேர்கள் கண்டு களித்துள்ளனர். இதில் 30 காட்சிப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன.

கட்டுமானப் பிரிவு :

கூட்டிடங்கள் கட்டுவதற்காக ஒரு கட்டுமானப் பிரிவு அமைக்கப்பட்டு கீழ்க்கண்ட பொறியாளர்களால் அது நிருவகிக்கப்பட்டுள்ளது.

1 [illegible] சாதனைகள் பின்வருமாறு :

1. நடமாடும் அறிவியல் கண்காட்சி :

கிராமப்புற பள்ளி செல்லும் மாணவர்களுக்கு அறிவியல் செய்திகளை எடுத்துச் சென்று பரப்புவதே நடமாடும் அறிவியல் கண்காட்சியின் நோக்கமாகும்.

பல்வேறு வடட அறிவியல் கருத்துக்களைக் கொண்ட வகையில் பார்வையாளர்களை கவர்ந்திழுக்கும், மற்றும் பங்கேற்கச் செய்யும் வகையில் அமைந்துள்ள 24 காட்சிப் பொருட்களுடன் கண்காட்சிப் பேருந்து 3—1—90 அன்று தன் பயணத்தை துவக்கியது. நடமாடும் அறிவியல் கண்காட்சியால் பயன் அடைந்தவர்கள் விபரம் வருமாறு : 3—1—90 முதல் 31—3—90 வரை :

கண்காட்சி பேருந்து இயக்கத் துவக்கிய நாள்	3—1—90
பார்வையாளர்கள் எண்ணிக்கை ..	26,029
பயன் அடைந்த பள்ளிகள்	30
பயன் அடைந்த கிராமங்கள்	30

கண்காட்சி பேருந்தில் உள்ள காட்சி பொருட்கள் :

(1) எடை மாயை

(2) வடிவத் தோற்றமும் பின்னணியும்

(3) சந்திரன் மாயை

(4) முகம் திரும்புதல்

(5) மாறக்கூடிய படங்கள்

(6) வண்ணத் தோற்றமும் பின்னணியும்

(7) மாடுதல்

(8) திரு[illegible]ரோன்ஸ்

(9) நினைவாற்றல்

(10) மூளையின் உண்ர்வு— அறிவுப் பகுதிகள்

(11) கண்மணியைப் பார் !

(12) கூட்டுக் காட்சிக் கண்

(13) கம்புகளும் கூம்புகளும்

(14) அடுத்தடுத்து தோன்றும் வண்ணத் தோற்றம்

(15) வண்ணப் பார்வை

(16) விலங்குகளின் வண்ணப் பார்வை

(17) இரு வழிப் பார்வை

(18) இருட்டில் பார்வை

(19) கண்ணோடு கை ஒத்துப் போதல்

(20) கண்ணின் அசைவு

(21) ஒரே நேரத்தில் இருவித ஒலியைக் கேட்டல்

(22) இருவழியில் ஒரேவித ஒலியைக் கேட்டல்

(23) தொடுதலின் மூலமாக தொடர்பு

கோளரங்கம் :

கோளரங்கத்தில் மேற்கண்ட வானவியல் நிகழ்ச்சிகள் 1989-90-ல் திரையிடப்பட்டன ''வானமும் பருவக் காலங்களும்''. 1989-90-ல் 2,32,701 நபர்கள இந்நிகழ்ச்சிகளை கண்டு களித்தார்கள், 1989 ஆம் ஆண்டு வருமானம் ரூ. 7,07,411.

பெரியார் அறிவியல் கண்காட்சி :

பெரியார் அறிவியல் கண்காட்சியகத்திலும் அதனுடைய எட்டு கூடங்களும் மிகத் அரிதமாக வேலை நடைபெற்று முடிவு பெறும் நிலையிலுள்ளது. சுமார் 250 கண் கர்ட்சி பொருட்கள் செய்யப்பட்டு முடியும் நிலையிலுள்ளது, மேற்கண்ட காட்சி கூடங்கள் உள்ளே அலங்கார வேலைகளுடன் தயார் நிலையில் இருக்கின்றன:—

(1) போக்குவரத்துக் காட்சிக் கூடம்,

(2) மின்னணு மற்றும் தொடர்பு கர்ட்சிக் கூடம்,

(3) இயல் பௌதிக அறிவியல் கூடம்,

(4) சிறுவர் காட்சி கூடம்,

4. பெரியார் காட்சி கூடம் :

இதைத் தவிர பெரியார் அவர்கள் பெயரில் அமைக்கப்பட்ட ஒரு காட்சிக் கூடம் நுழை வாயிலில் அமைவதாக இருந்தது, இதில் பெரியார் தேசத் தலைவர்களுடன் இருக்கும் படங்களும் பெரியாரின் பொன் மொழிகளும் காட்சிப் பொருட்களாக அமைக்கப்பட்டுள்ளன,

5. பயிற்சி :

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மைய செயல் இயக்குநர் இலண்டனுக்குச் சென்று அருங்காட்சியகங்களைப் பார்வையிட்டார், இணை இயக்குநர் (பொறியியல்) அவர்கள் இங்கிலாந்துக்குச் சென்று அருங்காட்சியங்களை முன்னரே பார்வையிட்டார். இருவரும் இம்மையத்திற்கு அன்பளிப்பாக சில காட்சிப் பொருள்களை பெற்றதுடன் சில பயன்பெறும் தகவல்களையும் கொண்டு வந்தனர்,

1989-90-ல் தொடர் செலவு ரூ. 37,89 இனட்சங்கள்,

முடிவுரை :

அறிவியல் கண்காட்சி பெரியார் பிறந்த நாளில் (17—9—90-ல்) திறக்கப்பட உள்ளது.

தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில் நுட்ப குழு :

தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில் நுட்பவியல் மன்றம் தமிழக அரசினால் 31—8—1984-ல் நிறுவப்பட்டு தன்னாட்சி நிறுவனமாக இயங்கி வருகிறது. முதலில் டாக்டர் மால்கம் எஸ். ஆதிசேசய்யா அவர்கள் ஆனந்தராவ் உறுப்பினர் செயலராகவும், பல்கலைக் கழகங்கள், ஆராய்ச்சிக் கூடங்கள், அரசு அலுவலகங்கள், பொது நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் போன்ற நிறுவனங்களிலிருந்து 29 உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டு இவ்வமைப்பின் பொதுக்குழு இயங்கி வருகிறது. பொதுக் குழுவின் 11 உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழு ஒன்று உருவாக்கப்பட்டு செயற்படுகின்றது.

சமுதாயத்தின் சமூகப் பொருளாதார வளர்ச்சியை உயர்த்தும் நோக்குடன் கல்வி, உடல் நலம், வேளாண்மை போன்ற துறைகளில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் பயன்பாடுடைய திட்டங்களில் நடைமுறைப்படுத்தத் தக்கவற்றைத் தெரிந்தெடுத்துச் செயல்படுத்தும் பொறுப்பினை இம்மன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது.

இம்மன்றம் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்களைத் தேர்ந்தெடுத்து ஞானியங்கள் வழங்கி அவற்றின் பணியைக் கண்காணித்து வருகிறது.

அறிவியல் தொழில் நுட்ப விழிப்புணர்ச்சியை மக்களிடையே ஏற்படுத்துவதும் பயன்களைப் பரப்புவதும் இதனுடைய குறிக்கோளாகும்.

வேலைவாய்ப்பைப் பெருக்கும் திட்டத்தையும் மேற்கொண்டுள்ளது.

பல்கலைக் கழகங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கிடையே இணைப்புப் பாலமாகவும் செயல்படுகிறது.

இம்மன்றம் இளம் விஞ்ஞானிகளை ஊக்குவிப்பதற்காக அவர்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகளை கருத்தரங்குகளில் படிப்பதற்கான போக்குவரத்துச் செலவைக் கொடுத்து உதவுகிறது.

இவையன்றி, ஆராய்ச்சிப் பணியாளர்களுக்கும் இளநிலை நிர்வாகிகளுக்குமிடையே கூட்டங்கள், விவாதங்கள் ஆகியவற்றையும் இம்மன்றம் நடத்தி ஆராய்ச்சியின் விளைவுகளைக் களத்தில் பயன்படுத்த உதவுகிறது.

1. ஆராய்ச்சி மற்றும அபிவிருத்தி செயல்கள் :

மாநில அரசின் அபிவிருத்தி துறைகளினாலும் நிபுணர்களின் உதவியாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்களை ஊக்குவிப்பதே இம்மன்றத்தின் முக்கியமான குறிக்கோளாகும்.

1984ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட மன்ற உறுப்பினர்களின் பதவி காலாவதியாகி விட்டதால் மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் மன்ற தலைவராகவும், டாக்டர் மால்கம் எஸ். ஆதிசேஷய்யா அவர்கள் துணைத் தலைவராகவும் கொண்ட புது பொதுக்குழு ஒன்று உருவாக்கப்பட்டது. டாக்டர் மால்கம் எஸ். ஆதிசேஷய்யா செயற் குழுவின் தலைவராகவும் நியமனம் செய்யப்பட்டார். டாக்டர் பி. இளங்கோ அவர்கள் 1989ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் மன்ற உறுப்பினர் செயலராக பதவி ஏற்றார். அவர் நடந்து கொண்டிருந்த திட்டங்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் நடைபெற வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்.

மாநிலத்திலுள்ள கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இளம் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சித் திறமையை ஊக்குவிப்பதற்காக மன்றத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்களின் குறிப்புகள் அவர்களுக்கு அனுப்பப்பட்டன. இதைத் தொடர்ந்து ஏறக்குறைய 150 ஆராய்ச்சித் திட்டங்கள் பெறப்பட்டன. அவைகள் நிபுணர்களால் மதிப்பிடப்பட்டு ஏழு புது ஆராய்ச்சித் திட்டங்கள் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டன. இதற்கான செலவு ரூ. 12.61 இலட்சம் ஆகும்.

இளம் விஞ்ஞானிகள் தேசிய/உலக அளவிலான விஞ்ஞானக் கருத்தரங்குகளில் கலந்து கொள்வதற்காக ஐம்பது சதவிகிதம் பயண உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு 16 விஞ்ஞானிகளுக்கு ரூ. 85,120 உதவித் தொகை அளிக்கப்பட்டது.

அறிவியல் தொழில்நுட்ப மாநாடு மற்றும் கருத்தரங்குகளுக்கான உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் எட்டு நிறுவனங்கள் பயன்பெற்றன. இதற்காக ரூ. 60,000 உதவித் தொகை வழங்கப்பட்டது.

4. தொழில் நுட்பங்களைப்பரப்பும் செய்தி மையம் :

தொழில் நுட்பங்களைப் பரப்பும் செய்தி மையம் ஒன்றை மாநில அரசு 1988-ம் ஆண்டு டிசம்பர் 22-ம் நாள் ஒரு தனி அதிகாரியை நியமித்ததன் மூலம் நிறுவியது.

மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், கோவைப் பாரதியார் பல்கலைக் கழகம் மற்றும் திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகங்களில் அந்தந்த பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளுடன் தொடர்பு கொள்ளும் பொருட்டு தனித்தனி அமைப்புகள் ஆரம்பிக்கப்பட்டு அவைகள் சிறந்த முறையில் செயலாற்றி வருகின்றன. இந்த மையத்தில் பணிபுரியும் துணைவேந்தர்களையும், அந்த அமைப்புகளின் தனி அதிகாரிகளையும் சந்தித்து விரிவான ஆலோசனை நடத்தினார்.

ஒவ்வொரு துறையிலுமுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பாடப்பிரிவு.

பரிசோதனைச் சாலையின் அபிவிருத்தி வேலை செய்வதற்கான தகுதிகள் மற்றும் சோதனை செய்வதற்கான வசதிகள் போன்ற குறிப்புகள் பல்கலைக் கழகங்களில் அமைந்துள்ள எல்லா பொறியியல் நிறுவனங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்டன. இம்மைய தனி அதிகாரி மாநிலத்திலுள்ள எல்லா பெரிய தொழிற் சாலையில் இயங்கும் கூட்டமைப்புகளுடனும் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளார். சென்னையிலுள்ள தென்னிந்திய பொறியியல் தொழிற்சாலையின் கூட்டமைப்பு மற்றும் திண்டிவனத்திலுள்ள சிறு தொழிற்சாலைகளின் கூட்டமைப்புகளுடனும் தொடர்பு கொண்டுள்ளார்.

முக்கியமான பொறியிற் தலைப்புகளில் கருத்தரங்குகள் நடத்துவதன் மூலம் மிகவும் நெருக்கமான தொடர்பை தொழிற் நிறுவனங்களுடன் ஏற்படுத்த எளிதாகிறது. கோயம்புத்தூரில் செப்டம்பர் 1989-ல் கோயம்புத்தூர் சிறு தொழிற்சாலைகள் கூட்டமைப்புடன் "D.C. Motor Technology" என்ற கருத்தரங்கு சிறு தொழிற்சாலைகளிடையேயும் மற்றும் அந்தப் பகுதியிலுள்ள பொறியியல் நிறுவனங்களிடையேயும் ஒரு நல்ல தொடர்பினை ஏற்படுத்தியது.

இதேபோல் 1990 பிப்ரவரி 5 முதல் 7 வரை அம்பத்தூர் தொழில் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பின் மைய வளாகத்தில் "Low Cost Automation" என்ற தலைப்பில் தொழில் விரிவாக்கத் திட்டம் ஒன்று நடைபெற்றது.

5. தேசிய அறிவியல் தினவிழா கொண்டாட்டங்கள் :

இந்த ஆண்டு தேசிய அறிவியல் தினவிழா மிகவும் உற்சாகத்துடனும், திறமையாகவும் என்றுமில்லாத அளவிற்குக் கொண்டாடப்பட்டது. தமிழக அரசு ரூ. 6 லட்சம் நிதியை அளித்தது. மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை ரூ. 6 லட்சம் சம ஈட்டு நிதியாக வழங்கியது. இந்த அளவுக்கு, அதாவது ரூ. 12 லட்சம் செலவு செய்து தேசிய அறிவியல் தினவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடிய மாநிலம் நமது நாட்டிலேயே தமிழகம் ஒன்றுதான் என்று கூறினால் மிகையாகாது.

(1) அறிவியல் கண்காட்சிகள் :

இந்த மன்றம் மாவட்டத்திற்கு ஒன்று அறிவியல் கண்காட்சி வீதம் நமது மாநிலத்தில் இருபது அறிவியல் கண்காட்சியை அமைத்திருந்தது. 19 தொழில் நுட்பக் கல்லூரிகளிலும், ஒரு பொறியியற் கல்லூரிகளிலும் அறிவியல் கண்காட்சிகள் நடத்தப்பட்டன. ஏராளமான கண்காட்சிகள் இந்த மையங்களில் நல்ல முறையில் அமைக்கப்பட்டிருந்தன. ஏராளமான பள்ளிக் குழந்தைகளும், ஆசிரியர்களும், பொது மக்களும் பயனடைந்தனர். இந்த மன்றத்தின் அதிகாரிகள் இந்தக் கண்காட்சிகளைப் பார்வையிட்டனர்.

(2) பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி :

ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அறிவியல் மற்றும் கணிதப் பாடங்களில் பயிற்சியளிக்கும் நோக்கத்துடன் மாநிலத்திலுள்ள 21 வெவ்வேறு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 21 பணியிடைப் பயிற்சி முகாம்களை இந்த மன்றம் அமைத்திருந்தது. இதன்மூலம் அறிவியல் பாடங்களில் அளிக்கப்பட்டது. பயிற்சி நடைபெறும் பொழுது மன்ற அதிகாரிகள் முகாம்களைப் பார்வையிட்டு மிகவும் சிறந்த முறையில் நடைபெறுவதைக் கண்டனர்.

(3) அறவியலை மக்களிடையே பரப்புதல் :

அறிவியல் கண்காட்சி, சக்தி, சுற்றுப்புற சூழல் போன்ற தலைப்புகளில் விரிவுரைகள், தடுப்பு ஊசி முகாம், கருத்தரங்குகள், கேள்வி பதில் போட்டி போன்ற அறிவியலைப் பரப்பும் செயல்கள் இந்த மன்றத்தின் மூலம் செயல்படும் 6 தன்னிச்சை அமைப்புகளால் நடைபெற்றன.

(4) ஆட்சிக் குறிப்புகள் :

இந்த 1989–90ஆம் ஆண்டிலும் டாக்டர் மால்கம் எஸ். ஆதிசேஷய்யா அவர்கள் தமிழ்நாடு மாநில அறிவியல் நுட்ப மன்றத்தின் தலைவராகப் பணியாற்றினார். டாக்டர் வி. ஆனந்தராவ் அவர்கள் மன்ற உறுப்பினர் செயலர் பதவியிலிருந்து 31–5–1989-ல் ஓய்வு பெற்றார். அதன்பின் டாக்டர் பி. இளங்கோ அவர்கள் உறுப்பினர்-செயலாளராக 1989 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பணியில் சேர்ந்தார்.

சென்னைப் பல்கலைக் கழகம்.

பேரவை :

பல்கலைக்கழகப் பேரவைக்கூட்டம் அறிக்கை ஆண்டில் மூன்று முறை நடை பெற்றது.

(1) சாதாரணக் கூட்டம் 30–9–1989 அன்று நடைபெற்றது.

(2) ஆண்டுக் கூட்டம் 31–3–1990 அன்று நடைபெற்றது.

(3) சிறப்புக் கூட்டம் 30–9–1989 அன்று நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பட்டயங்களும் பெருஞ்சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

ஆட்சிக்குழு :

பல்கலைக்கழகச் செயல் திட்டங்களை நிறைவேற்றும் அமைப்பாகிய ஆட்சிக் குழு அறிக்கை ஆண்டில் பதினான்கு முறை கூடி இன்றியமையாத முடிவுகளை நிறைவேற்றியது. அத்துடன் சில அவசரப் பொருள் பற்றிய முடிவுகளும் ஆட்சிக் குழுவின் சுற்றுக்கு விடப்பெற்று எடுக்கப்பட்டன.

கல்வி அவை :

கல்வி அவை 6–9–1989 அன்றும் 3–3–1990 அன்றும் கூடியது.

பாடத்திட்டக் குழுக்கள் :

அறிக்கை ஆண்டின் தொடக்கத்தில் 74 பாடத் திட்டக் குழுக்கள் இருந்தன. 34 பாடத் திட்டக் குழுக்கள் புதுக்கி அமைக்கப்பட்டன.

சட்டக் கல்வி குறித்த பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு ஆயை பாடத் திட்டக் குழுக்கள் ஒன்றாக இணைக்கப்பட்டன.

டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டதனால் 1. யுனானி, 2. மருந்தியல் (பட்டப்படிப்பு), 3. மருந்தியல் (பட்டமேற் படிப்பு), 4. ஆயுர் வேதம் ஆகிய நான்கு பாடத் திட்டக் குழுக்களும் உரிய காலம் முடிந்த பின்னும் புதுக்கி அமைக்கப்படவில்லை.

31–3–1990 அன்றைய நிலவரப்படி மொத்தம் 69 பாடத் திட்டக் குழுக்கள் இருந்தன.

சட்ட விதிகள் :

(1) விதிமுறைகள் :

அறிக்கை ஆண்டில், பின்வரும் மாற்றங்களும் சேர்க்கைகளும் விதிமுறைகளில் செய்யப்பட்டு அவை பேரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வேந்தரின் ஒப்புதலைப் பெற்றன.

(அ) தொகுதி 1 பல்கலைக்கழக ஆணையேடு 1985:

(1) விதிமுறைகளின் இயல் VI, VII ஆகியவற்றிற்குத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு, பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு ஊதிய விகித உயர்வுக்கேற்றவாறு துணை வேந்தர், பதிவாளர், தேர்வாணையர்ஆகியோரது ஊதிய விகிதம் உயர்த்தப் பட்டது.

இயல்-VIII விதிமுறை 5 இல் மாற்றம் செய்யப்பட்டு, அண்ணா ஆய்வியல் மையம் என்னும் பெயர் அண்ணா தொழு வாழ்வியல் மையம் என்று மாற்றியமைக்கப்பட்டதுட

60 வயதுக்கும் மேற்பட்ட பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஓய்வுபெறும்போது, மறுவேலையளிப்பு முறையின்கீழ் உரிய கல்வியாண்டு முழுதும் அவர்களின் பணிக் காலத்தை நீட்டிக்க இயல் IX லிதிமுறை 29 (IV)-க்கு மாற்றம் கொணரப்பட்டது.

(i) 1–1–1986 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ பதவி ஓய்வுபெறும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா ஊழியர்களுக்குப் பணி ஓய்வுப் பலன்கள் நல்குவதற் காகத் தேவைப்படும் உரிய பணிக்காலத்தை கணக்கிடவும்.

(ii) ஆசிரியர், ஆசிரியர் அல்லாத ஊழியர்களுக்குக் குடும்பநல நிதித்தொகையினை 20 ஆயிரத்திலிருந்து 40 ஆயிரத்துக்கு உயர்த்தவும் வகைசெய்யும் இயல் IX, XXIV ஆகியவற்றின் விதிமுறைகளில் உரிய சேர்க்கைகள் செய்யப்பட்டன.

பல்கலைக்கழக மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்குத் தொழில் ஒழுங்குமுறைகளை வரையறுக்கும் வகையில் இயல் IX, XXVI ஆகியவற்றின் விதிமுறைகளில் உரிய சேர்க்கைகள் செய்யப்பட்டன.

பட்டமளிப்பு விழாக்கள், இவ் விழாக்களில் அணியும் ஆடைகள் முதலான விதி முறைகள் XXI, XXII ஆகியவற்றில் மாற்றங்கள் கொணரப்பட்டன.

இப் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்து வேறு பல்கலைக்கழகத்திலோ அல்லது நிறுவனத்திலோ பணிபெற்றுச் சென்றோர்க்கும் வேறு பல்கலைக்கழகத்திலோ அல்லது நிறுவனத்திலோ பணியாற்றி, பின் இப் பல்கலைக்கழகத்தில் பணிபெறுவோர்க்கும் ஓய்வூதியச் சந்தா தொகையினை மாற்றிக் கொள்வதற்கு ஏற்பளிக்கும் வகையில் சட்ட விதிகள் இயல் XXIV இல் உரிய சேர்க்கைகள் செய்யப்பட்டன.

தன்னாட்சிக் கல்லூரிகள் தொடர்பான பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் திருத்தியமைக்கப்பட்ட வழிமுறைகளுக்கேற்ப, தன்னாட்சிக் கல்லூரிகளின் பாடத் திட்டக் குழுக்கள் தொடர்பான விதிமுறைகள் இயல் IX(F)i இல் உரிய மாற்றங்கள் செய்யப்பட்டன.

(ஆ) தொகுதி I; பல்கலைக் கழக ஆணையேடு, 1970

இதன் இயல் XXXVII விதிமுறை 1(அ) இல், கிளை 4 வேதியியல் பட்டமேற்படிப்புக் குரிய வாய்மொழித் தேர்வுக் கட்டணம் நிர்ணயித்தல் தொடர்பாகச் சேர்க்கைகள் செய்யப்பட்டன.

(iii) பாடத் திட்டங்கள் :

(அ) பின்வரும் வகுப்புகள்/பிரிவுகள்/பாடங்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டன.

1. பொதுவாழ்வியல் பட்ட மேற்படிப்பு.

2. சுற்றுலா நிர்வாகம் பட்ட மேற்படிப்பு.

3. உயிரியல் தொழில் நுட்பவியல் பட்ட மேற்படிப்பு.

4. பொருட்கள் அறிவியல் பட்ட மேற்படிப்பு.

5. இளங்கலை, இளங்கலை அறிவியல், இளங்கலை வணிகவியல், தமிழ் பி.லிட்., இளங்கலை கல்வியியல் (பருவமுறை).

6. இளங்கலை அறிவியல் பார்வைக் கருத்துத் தொடர்பியல்.

7. இளங்கலை மனிதவள மேம்பாடு (பருவமுறை).

8. இளங்கலை சுற்றுச்சூழல் நிர்வாகம் (பருவமுறை).

9. இளங்கலை இந்தியச் சமயங்கள் (பருவ முறை).

10. பெருஞ்சான்றிதழ் சைவசித்தாந்தம்.

11. பகுதிநேரப் பெருஞ்சான்றிதழ் பொது வாழ்வியல்.

12. இளங்கலை சமூக சேவை பிரிவு 17.

13. பிரிவு—5 இளங்கலை அறிவியல் தாவரவியல் பாடத்தில் தொடர்புடைய பாடங்களாக (அ) சித்த மருத்துவம், (ஆ) காய்கறி உற்பத்தி ஆகியன புதிதாகச் சேர்க்கப்பட்டன.

பட்டமளிப்பு விழா ;

1989 ஆம் ஆண்டுக்கான ஆண்டுப் பட்டமளிப்பு விழா 5—9—1989 அன்று நடைபெற்றது. தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்தினார். 30—3—1990 அன்று 1989ஆம் ஆண்டுக்கான துணைப் பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

அஞ்சல் வழிக் கல்வி:

அஞ்சல் வழிக் கல்வி நிறுவனம் 1981—82ஆம் கல்வியாண்டில் நிறுவப்பட்டது. இது நாட்டின் முக்கியமான தொலைக் கல்வி மையமாக விளங்குகின்றது.

1—4—1989 முதல் 31—3—1990 வரையிலான காலத்தில் அஞ்சல் வழிக் கல்வி நிறுவனத்தில் 1,12,740 மாணவர்களைக் கொண்டு நிறுவனம் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. கடந்த ஆண்டில், 1,04,370 மாணவர்கள் இந்நிறுவனம் வழியாகப் பயின்றனர்.

ஆராய்ச்சி திட்டங்கள் :

அறிக்கை ஆண்டில் 226 பேர் பி.எச்.டி. பட்டம் பெற்றனர். ஒருவர் டி.எஸ்சி. பட்டம் பெற்றார். இவ் ஆண்டில் 682 பேர் பி.எச்.டி., திட்டத்திலும் 850 பேர் எம்.பில்., திட்டத்திலும் பதிவு செய்துக்கொண்டுள்ளனர்.

ஏற்பு அளிப்பு :

1989—90ஆம் கல்வியாண்டில் பல்கலைக் கழகம் பின்வரும் சுயநிதிக் கல்லூரியினைத் தொடங்குவதற்கு ஏற்பளித்தது.

கலை அறிவியல் கல்லூரி :

தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரி, விழுப்புரம், தென்னாற்காடு, மாவட்டம்.

1989—90ஆம் கல்வியாண்டுவரை இப் பல்கலைக் கழகத்தில் இணைக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை பின்வருமாறு :—

1. கலை அறிவியல் கல்லூரிகள்—75
2. தொழிற் கல்லூரிகள்—
   - (அ) பொறியியல் கல்லூரிகள்—14.
   - (ஆ) கல்வியியல் கல்லூரிகள்—10.
   - (இ) சட்டக் கல்லூரிகள்—2.
   - (ஈ) உடற் கல்வியியல் கல்லூரிகள்—2
3. ஒப்புக்கொள்ளப்பட்டவை—7

நூலகம் மற்றும் விவரத் தொகுப்பு :

(அ) பல்கலைக் கழக நூலகம்:

1989—90இல் 5,193 தொகுதிகள் சேர்க்கப்பட்டன. வழக்கம்போல கலைக் கழக நூலகத்தில் புதிதாகச் சேர்க்கப்படும் தொகுதிகளின் மாதாந்தரப் பட்டியல் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்னும் நோக்கில் வழக்கம் போல ஒவ்வொரு மாதத்தின் முதல் நாளிலும் வெளியிடப்பட்டது.

ஆராய்ச்சி மாணவர்களுக்கு அவரவர் ஆராய்ச்சித் துறை தொடர்பான வெளியீடுகளைப் பற்றிய பட்டியல் தந்துதவுவதற்காகத் தனிப்பட்ட எதிர்ப்பார்ப்புப் பார்வை உதவி (பார்ஸ்) இவ்வாண்டும் தொடரப்பட்டது.

(ஆ) துறை நூலகங்கள் :

1989—90இல் பல துறை நூலகங்களில் 2,693 புத்தகங்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டன.

(இ) இண்டி வளாக நூலகங்கள் :

நடப்பு ஆண்டில் 1,259 புதிய புத்தகங்களும் 770 கட்டடம் செய்யப்பட்ட பருவ இதழ்களின் தொகுதிகளும் சேர்க்கப்பட்டன.

(ஈ) டாக்டர் ஏ. எல். முதலியார் பட்டமேற்படிப்பு அறிவியல் நிறுவனம், தரமணி, மைய நூலகம்.

இவ்வாண்டில் 512 புத்தகங்கள் நூலகத்தில் சேர்க்கப்பட்டன. மருத்துவயியல் தொடர்பான 82 பருவ இதழ்களும் பெறப்பட்டன.

சுற்றுப்புற சூழ்நிலைக் கட்டுப்பாடு மற்றும் வனத்துறை

சின்கோனா :

சின்கோனாத் துறை தமிழ்நாடு அரசின் ஒரு வணிகப் பிரிவாகும். இத்துறை, சின்கோனா பயிரிடுவதிலும், கொயினா தயாரிப்பதிலும் முக்கியமாக ஈடுபட்டு வருகிறது. மருந்து—நறுமணச் செடிகளைப் பயிரிடுதல், வணிக மதிப்பு வாய்ந்த மருந்துப் பொருட்கள், நறுமணத் தைலங்கள் ஆகியவற்றைத் தயாரித்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டு இத்துறை தனது பணி நடவடிக்கைகளை விரிவுப்படுத்தியுள்ளது. ஜெரேனியம் (Geranium), சிம்போபோகன் விண்டீலியானஸ் (Cymbop gon Winterianus) நீலகிரிதைல மரங்கள் யூகலிப்டஸ் குலோபுலஸ் (Eucalp.us Globulus) இவலங்கம் சின்னமோமம் சைலாணிக்கம் (Cinnamomum Zeylanicum) டயஸ்கோரியா (Diascorea) முதலியன போன்ற மருந்து—நறுமணச் செடிகளை இத்துறையின் மலை தோட்டங்களில் பயிரிடுதவதன் மூலம் வருவாயைப் பெருக்கவும், நீலகிரி மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டம், திண்டுக்கல்—காயிதே மில்லத் மாவட்டம் ஆகிய மாவட்டங்களின் மலைப் பகுதிகளில் வாழும் கிராமமக்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை அளிக்கவும், இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்துறை, கீழே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று மாவட்டங்களிலுள்ள பகுதிகளில் பயிரிட்டு வருகிறது.

	ஆனைமலை. ஹெக்.ஏர்ஸ்.	நீலகிரி. ஹெக். ஏர்ஸ்.	கொடைக்கானல்.	மொத்தம்.
சின்கோனா	1460.60	517.12		1977.81
மருந்து-நறுமணச் செடிகள்.	324.27	681.70	138.25	1,144.22
விறகுமரம் பயிரிட்டுள்ள பகுதிகள்.	530.79	160.88	34.00	725.67

கொயினாப் பொருட்களை நம் நாட்டில் விற்பனை செய்ததில் 27,724.00 ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டது.

மருந்து—நறுமணத் தைலங்கள் ரூ. 43,37,829·60க்கு விற்பனை செய்யப்பட்டன. இலவங்கப்பட்டை, இலவங்க இலை, மிளகு, சின்கோனாப்பட்டை, பைரத்ரம் பூக்கள் (Pyrethrum Flowers) ஏலக்காய் முதலியன போன்ற பலவகையான பொருட்கள் ரூ. 55,095·00 அளவிற்கு விற்பனை செய்யப்பட்டன,

சத்துணவுத் திட்டத்தின் கீழ், கிராமப் பகுதியிலுள்ள குழந்தைகளுக்கு ரூ. 3,93,330·00க்கு இலவசமாக பற்பொடி வழங்கப்பட்டது,

விற்பனை :

துறையின் தயாரிப்புப் பொருட்களின் விற்பனையின் மூலம் மொத்தம் ரூபாய் 1,17,94,634.00 வருவாய் ஈட்டப்பட்டது.

சின்கோனா மருந்துச் செடிகள் ஏனைய சின்கோனா வகைகள் ஆகியன 1989—90ஆம் ஆண்டில் புதிதாக பயிரிடப்பட்டன. அவ்விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. சின்கோனாப் பொருட்களுக்குக் குறைந்த அளவு தேவையே இருந்ததால், கடந்த சில ஆண்டுகளாக சின்கோனா பயிரிடுவது நிறுத்தி வைக்கப்பட்டது. இவ்வாண்டு அவற்றின் விலைகளும் திருத்தியமைக்கப்பட்டன.

1,	ஜெரேனியம் ...	43.75 எக்டேர்.
2,	சிம்போபோகன் விண்டாரியானஸ் ...	8.00 எக்டேர்
3,	யூகலிப்டஸ். சிட்ரியோடோரா	16.50 எக்டேர்.
4,	ரோஸ்மேரி ...	0.25 எக்டேர்.
5,	சின்கோனா	77.00 எக்டேர்.

சின்கோனாப்பட்டைகளை சேகரித்தல் :

1989—90—ஆம் ஆண்டில் மொத்தம் 1,60,582 கி. கிராம் சின்கோனா மரப் பட்டைகள் சேகரிக்கப்பட்டன.

மருந்து-நறுமணத் தைலங்கள் தயாரித்தல் :

1989–90–ஆம் ஆண்டில் மலைத் தோட்டங்களில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அளவிற்கு மருந்து நறுமணத் தைலங்கள் (பக்குவம் செய்யாதது) தயாரிக்கப்பட்டன:—

1,	ஜெரேனியம்	1.269,750 கி. கிராம்,
2,	நீலகிரித் தைலமரங்கள் (யூகலிப்டஸ் குளோபுலஸ்)	2,908,800 கி. கிராம்
3,	சூலிப்டஸ் சிட்ரியோடோரா	4.975,700 கி. கிராம்
4,	ஜாவா சிட்ரோநெல்லா	2.230,850 கி. கிராம்
5,	ரோஸ்மேரி தைலம்	76,500 கி. கிராம்
6,	பைரத்ரம் பூக்கள்	38,680 கி. கிராம
7,	ஒசிமம் கிராடிசிமம்	15,240 கி. கிராம்
8,	யூகலிப்டஸ் ஸமிதி	36,500 கி. கிராம்
9,	கற்பூரத்தைலம் (ஒசிமம் கேம்ஃபோரா தைலம்)	0,950 கி. கிராம்
10,	கற்பூர இலைகள் (ஒசிமம் கேம்ஃபோரா இலைகள்)	752,000 கி. கிராம்
11,	எலுமிச்சைப்புல் தைலம்	18,250 கி. கிராம்
12,	இலவங்கம் (சின்னமோமம் சைலானிகம்)	1,900 கி. கிராம்
13,	கசப்பு நாரத்தை தைலம்	3,250 கி. கிராம்
14,	டயோஸ்கோரிய கிழங்கு (டியூபர்ஸ்)..	3.087,000 கி. கிராம்
15,	மிளகு	5,500 கி. கிராம்
16,	ஏலக்காய் ...	205,000 கி. கிராம்

ஆனை மலையில் உள்ள கொயினா தொழிற்சாலை, கொயினா மருந்து பொருட்களை உற்பத்தி செய்து வருகின்றது. நடுவட்டத்திலுள்ள, மருந்து நறுமனத் தைலத் தொழிற்சாலை, மருந்து, நறுமனத் தைலங்கள், தூய்மைப்படுத்தி தரப்படுத்தும் பணியில் ஈடுபட்டுவருகிறது, 3,38.530 பற்பொடிப் பொட்டலங்கள் (ஒவ்வொன்றும் 30 கிராம்) தயாரிக்கப்பட்டு இம்மாநிலத்தின் எட்டு மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டன. இத்திட்டம் அரசினால் நிறுத்தப்பட்டதால். 1989 ஜூன் திங்களிலிருந்து பற்பொடி வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது.

சந்தையில் போதிய விற்பனை வாய்ப்பு இல்லாத காரணத்தால் நடுவட்டத்திலுள்ள மருந்து தைலத் தொழிற்சாலையில் 1989–90ஆம் ஆண்டில் கஃபின் உற்பத்தி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

ஆய்வுக்கூடப்பணி :

மருந்து தைலங்களைச் சுத்தம் செய்தல், தரம் பிரித்தல், சோதனை செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மாநிறி சோதனைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட கொயினாப் பொருட்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன, உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தரம் நன்னிலையில் பேணி பராமரிக்கப்பட்டது.

அரசினர் கொயினாத் தொழிற்சாலை தயாரித்த சின்கோனா :

1,07,938 கிலோ கிராம் சின்கோனாப் பட்டைகள் பதப்படுத்தப்பட்டு பின்வரும் பொருட்கள் தயாரிக்கப்பட்டன:—

1,	கொயினா சல்பேட் ...	2.141,075 கி. கிராம்
2,	கொயினா சல்பேட் (மாதிரி உற்பத்தி)	400,00 கி. கிராம்
3,	சின்கோனா ஃபெப்ரிஃபியூம் ...	2.000,00 கி. கிராம்
4,	சின்கோனா ஃபெப்ரிபியூம் (மாதிரி உற்பத்தி)	112,00 கி. கிராம்
5,	சின்கோவிடைன் ...	6,100 கி. கிராம்
6,	கொயினா சல்பேட் ...	5,000 கி. கிராம்

சின்கோனாப்பட்டை மாதிரிகள் பணி முடிக்கப்பட்டப் பொருட்கள். இரசாயணப் பொருட்கள், மாதிரிகள். பல்பொடியின் மூலப் பொருட்கள் ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்யும் பணிகள் சோதனைக் கூடங்களில் மேற்கொள்ளப்பட்டன. இச் சோதனைக் கூடங்களில் மலைத் தோட்டங்களிலிருந்து வரும் சின்கோனாப்பட்டைகளை எடை போடுதல் மாதிரிகள் தயாரித்தல். பயன்படுத்தப்பட்ட பட்டைகளையும் இடை நிலை உற்பத்திப் பொருட்களையும் வாலரியமாக பகுப்பாய்வு செய்தல். போன்ற பணிகளுடன் மேற்குறிப்பிட்ட பணிகளும் கூடுதலாக மேற்கொள்ளப்பட்டன.

தமிழ்நாடு ஸ்பிராய்டுகள் தொழிற்சாலை தயாரித்த சின்கோனா :

1989–90-ஆம் ஆண்டில் 6,750 கிலோ கிராம் டிஸ்கோரியா ழெங்குகள் உற்பத்தி செய்முறையின் பொருட்டு ஊறவைப்பதற்காக வழங்கப்பட்டன. அந்த ஆண்டு 3,000 கிலோ கிராம் டயோஸ்ஜெனின் உற்பத்தி செய்யப்பட்டது. அந்த ஆண்டு டயோஸ்ஜெனிக்கு போதுமான தேவை இல்லை.

3. மாவட்டத்திலுள்ள மருந்து தைலத் தொழிற்சாலை

1989–90-ஆம் ஆண்டில் பின்வரும் மருத்துவப்பயன் தைலங்கள் சுத்தம் செய்யப்பட்டு, தரப்படுத்தப்பட்டு செய்யப்பட்டன:—

1. யூகலிப்டஸ் தைலம்	3,363.000 கி. கிராம்
2. ஜெரேனியம்	1,352.187 கி.கிராம்
3. யூகலிப்டஸ் சிட்ரியோடோரா	4,375.800 கி. கிராம்
4. ஜாவா சிட்ரோவெல்லா	415.800 கி. கிராம்
5. கற்பூரத் தைலம்	14.645 கி. கிராம்
6. கற்பூர வில்லை	1,13,870 எண்ணிக்கை
7. ரோஸ்மேரி தைலம்	78.395 கி. கிராம்
8. ஓசிமம் கிராடிஸமம்	15.255 கி. கிராம்
9. சில்விபிரேஷ	1,16,400 லிட்டர்.
10. சின்ஸ்பிரே	255 லிட்டர்.
11. சின்னரோமா	5.000 கி. கிராம்
12. தொட்ட பெட்டா மிஸ்ட்	7.000 கி. கிராம்

தொழிலாளர் :

மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம் விதிகளின் கீழ் தொழிலாளர்களுக்குச் செய்து கொடுக்கப்பட வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன, மலைத் தோட்டங்களில் குழந்தைகள் காப்பகங்கள் நடத்தப்பட்டன. ஆய்விற்குரிய ஆண்டில் தொழிலாளர் இளர்ச்சி எதுவும் நடைபெறவில்லை. தொழிலாளர்களுக்கு அரசு நிர்ணயித்த ஊதியம், விலைவாசி குறியீட்டுடன் அடிப்படையில் அகவிலைப் படியும் வழங்கப்பட்டன. நிருவாகத்திற்கும் தொழிலாளர்களுக்குமிடையில் சுமுகமான உறவு நிலவியது.

திட்டப் பணிகள் :

ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், அனுமதி வழங்கப்பெற்றுள்ள திட்டப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. ஆணைமலையிலுள்ள அரசினர் சின்கோனா மலைத் தோட்டதில் மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ஜெரேனியம் பயிரிவதற்கான திட்டங்களும் நீலகிரியில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஜாவா சிட்ரனெல்லா பயிரிடுவதற்கான திட்டங்களும் மாநிலத் திட்டப் பணிகளின்கீழ் இந்த ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

பொது :

சென்னை சுற்றுப்புறச் சூழல் வனத்துறையின் (சின்கோனா) 3—4—1990-ஆம் நாளிட்ட 221-இல் விதி அரசாணையின்படி சின்கோனாத்துறை 1—4—1990-ஆம் நாளிலிருந்து தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

வனங்கள் :

மனித இனம் வாழ்வதற்கு வன சூழலியல் பாதுகாப்பு மிக அவசியமானது. மாநிலத்தில் சமுதாயப் பொருளாதார வளர்ச்சிக்கு வனத்துறை முக்கியத்துவம் வகிக்கிறது. வனப் பகுதியில் செலவிடும் நிதி, கிராமப்புற மக்களை சென்று அடைகிறது. வனங்களில் வன ஆதாரங்கள் புதுப்பிக்கக்கூடியவை. வனங்களின் வேலை வாய்ப்பு அளிக்கும் திறன் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவும். முக்கியமான வனத்துறையின் வேளாண்மை நடவடிக்கைகள் கீழ்வருமாறு :—

(1) வனப்பரப்பை சாத்தியமான இடத்தில் பெருக்குதல்

(2) வனவிலங்கு புகலிடங்களை அபிவிருத்தி செய்தல்

(3) சமூக வனத்திட்டங்கள் மூலம் வேலை வாய்ப்பு பெருக்குதல்

(4) கிராமப் புறங்களில் சொத்துக்களை ஏற்படுத்தி கிராம மக்கள் பங்கேற்பின் மூலம் லாபம் பெறச் செய்தல்.

(5) பழங்குடியினர் வாழ்க்கை ஆதாரத்திற்கு கானகத் திட்டத்தை வலுப்படுத்துதல், காடுகளை நம்பி இருக்கும் கிராமப்புற கால் நடைகளுக்கு மேய்ச்சல் வசதிகளைப் பெருக்குதல்.

(7) வளர்ச்சிக்குன்றிய தரிசு நிலங்களில் வன வளங்களைப் பெருக்குதல்.

(8) கானகத்தைச் சார்ந்த தொழில் நிறுவனங்களுக்கு மூலப் பொருட்களை விநியோகம் செய்தல்.

(9) சந்தனம், ரப்பர், தேயிலை, முந்திரி போன்ற வனப்பொருட்கள் விற்பனையினை ஊக்குவித்தல்.

(10) விவசாயத்துடன் மரம் பயிரிடுவதை மேம்படுத்துதல்.

(11) வனச் செல்வத்தை பாதுகாக்க தீவிர வழிமுறைகளைப் பாதுக்காக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

(12) முக்கியமான ஆறுகளின் நீர்ப்பிடிப்பு பகுதியில் வனங்களைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

(13) ஆராய்ச்சி சம்பந்தமான பிரிவை முனைப்படுத்தல்.

(14) திட்டங்களின் மதிப்பு ஆய்வு மற்றும் முன்னேற்றம் அளவிடுவதற்கான அமைப்பை ஏற்படுத்தல்.

தமிழ்நாடு மாநிலத்தில் மொத்தப்பரப்பு 130.057 சதுர கிலோ மீட்டராகும். அதில் காடுகளின் மொத்தப் பரப்பு 22.699 சதுர கிலோ மீட்டராகும். இது மொத்தப் பரப்பில் 17.35 விழுக்காடு ஆகும். காடுகளின் பரப்பு மொத்தம் பரப்பின் மூன்றில் ஒரு பங்காக்குவதே தேசிய வனக் கொள்கை வனத்துறையில் நடத்தப்பட்ட ஆய்வுப் படி மொத்த வனப்பரப்பில் 30 சத வீதம் அதாவது சுமார் 6.00.000 எக்டேர் வளர்ச்சிக்குன்றியதாக உள்ளது. நிறுவப்பட்ட காட்டு நிறுவனங்களில் உற்பத்தி யினை பராமரிக்கவும் மற்றும் பெருக்கவும், பசும் காடுகளை பாதுகாக்கவும், நவீன முறையில் மரம் நடுதல் மற்றும் நிர்வாகித்தல் போன்ற அம்சங்களிலும், அழிந்து போன காடுகளை மீண்டும் புதுப்பித்தல் ஆகிய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

வனத்துறையின் முக்கிய ரானப் பணிகள் கீழ் வருமாறு:

(1) காப்பு வனம் மற்றும் வன விலங்குகள் வாழும் பரப்புகளிலுள்ள இயற்கை சூழல் அமைப்பினை பாதுகாத்தல்.

(2) தமிழ்நாடு வன பாதுகாப்புச் சட்டம், வனவிலங்குகள் (காப்பாற்றுதல்) சட்டம், வனப் பராமரிப்புச் சட்டம் ஆகியவை செயலில் கொண்டு வருதல்.

(3) காடுகளின் வனப் பரப்பினை முடிந்த அளவு பெருக்குதல்.

(4) முக்கியமான ஆறுகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் குறிப்பாக வனப் பகுதி களில் மண்வளப் பாதுகாப்புப் பணிகளைச் செய்தல்.

(5) தமிழகத்தின் வன ஆதாரங்களை நம்பி வாழ்வாதாரத்துவக்கப்பட்டுள்ள தொழிலாளர்களின் வளர்ச்சிக்கும் மக்களின் தேவைக்கும் தேவையான மூலப் பொருட்களை வழங்குதல்.

(6) வனப் பகுதிகளில் வாழும் மலைவாழ் மக்களுக்கு வாழ்க்கை வசதிகளை அமைத்துத் தரும் பணியினை செவ்வனே செயல் படுத்துதல்.

4. பணிமுன்னேற்றம் : :—

திட்டம்.	இலக்கு மற்றும் சாதனை செயல் இலக்கு.	சாதனை.	நிதி இலக்கு.	சாதனை.
	செயல்			
(1)	(2)	(3)	(4)	(5)
		(ரூபாய் லட்சத்தில்)		
(1) மண் வளப்பாதுகாப்பு திட்டம்..	2,025 ஹெக்டேர் 0.50 லட்சம் நாற்றுகள் வழங்கப் பட்டன.	2,052 ஹெக்டேர். 0.50 லட்சம் நாற்றுகள் வழங்கப் பட்டன.	102.84	130.89
(2) மாநிலத் திட்டம்	28,161 1,055 கி.மீ. 1,130 ஹெக் 460 டேர்	28,815 ஹெ 9,024 கி.மீ. 1,035 ஹெக்டேர் 410 ஹெக்டேர்	2262.92	2,562.92
(3) தன்னாட்சி பெற்ற நிறுவன உதவி திட்டம்			3.29	3.64
(4) மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்			0.01	106.65
(5) மத்திய மாநில அரசும் சமமாகப் பங்கேற்கும் திட்டம்	4,000 ஹெக். 15 கி.மீ.	3,724 ஹெக் 15 கி.மீ. டேர்	219.33	269-07
(6) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்	985 10.00 லட்சம்.	1,051 ஹெக். 10.00 லட்சம்.	213.31	192.28
(7) மேற்குமலை தொடர் மேம்பாட்டுத் திட்டம்	18,25 எக். 230 கி.மீ.	1,844 எக். 230 கி.மீ.	190.00	190.85
(8) வரட்சி நிவாரணப் பணிகள்			100.00	101.06

திட்டம்.	சுருக்கம். ரவலை இலக்கு.	சாதனை.	நிதி இலக்கு.	சாதனை.
(1)	(2)	(3)	(5)	(4)
1. மரம் வளர்த்தல்	36,996 ஹெக்டேர்	37,486 ஹெ	3,091.70	3,571.90
2. வரிசை நடவு	1,300 கி.மீ.	1,147 கி.மீ.		
3. தீவிர காப்பணி	460 ஹெக்டேர்	410 ஹெக்டேர்		
4. அடர்த்தி குறைத்தல்	1,130 ஹெக்டேர்	1,035 ஹெக்டேர்		
5. செடி விநியோகம்	12.60 லட்சம்.	12.10 லட்சம்.		

5. நடப்பு ஆண்டில் புதியதிட்டங்கள் செயல்படுத்துதல்:

1988-98 ஆம் ஆண்டு வானூர்தி மூலமாக விதை தூவும் திட்டம் முன்னோடி திட்டமாக தரம் குறைந்த காடுகளை செப்பனிடுவதற்கும், இயற்கை சூழலியலை சமப் படுத்துவதற்கும் 1.000 எக்டேரில் மேற்கொள்ளப்பட்டது, 1989-90ம் ஆண்டில் இத்திட்டம் ரூ, 51,74 லட்சம் செலவில் 7,5000 எக்டேர் புதிய பரப்பிலும் 1.000 எக்டேர் பழைய பரப்பிலும் செயல்படுத்தப்பட்டது,

மேலும் நகரங்களில் சூழலியலை மேம்படுத்த பெரிய நகரங்களில் செடிகள் நடுதல் திட்டம் மேற்கொள்ளப்பட்டது, மேலும் சென்ற ஆண்டின் தொடர் திட்டங்கள் மேம்படுத்தப்பட்ட முறைகள் மற்றும் தரங்களுடன் இவ்வாண்டிலும் செயல்படுத்தப்பட்டது,

6. நிதி சம்பந்தமான முதலீடு வரவு செலவு விவரங்கள் மற்றும் :
பொருளாதார நிலையைத் திருத்தல் நிலை
1989-90 ஆம் ஆண்டில் வருவாய் மற்றும் செலவு முறையே ரூ, 49,25 கோடி மற்றும் ரூ, 48,41 கோடி ரூபாய் ஆகும்,

7. சிறப்பு விவரங்கள் :

1989-90 ஆம் ஆண்டில் தமிழ்நாடு காடுகளில் குடியிருக்கும் பழங்குடியினரின் மேம்பாட்டுத் திட்டத்திற்காக 127.50 லட்சம் செலவிடப்பட்டது.

8. முடிவுரைகள் :

தற்போதைய நிலையில் காடுகள் வருவாய் தரும் ஆதாரமாக மட்டும் கொள்ளக் கூடாது, காடுகள் புத்துயிர்க்கக்கூடிய ஆதாரமாகும், அது சுகாதாரமான சூழலியலுக்கு அத்தியாவசியமானதாகும், மண்வளம், நீர் மற்றும் தட்பவெப்ப நிலை மீது காடுகளுக்கு அதிகம் உள்ளது, காடு சம்பந்தப்பட்ட பணிகள் லட்சோப லட்சம் மனித வேலை நாட்களை கிராமப்புற மக்களுக்கு உருவாக்கித் தருவதுடன் அவர்களின் கஷ்டங்களை நீக்கவும் உபயோகிக்கப்படுகிறது,

காடுகளை புத்துயிர்க்கவும், உருவாக்கவும் ஆதலினால் மக்களுக்கு நன்மை பயக்கவும் ஒருங்கிணைந்த செயல்பாடு அத்தியாவசியமாகிறது, எனவே காடுகளை வளர்ப்படுத்தும் பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்தல் வேண்டும் மற்றும் நிதி பெருவாரியாகத் நடும் பணிக்கு தடையாக இருக்கலாகாது, காடுகள் பற்றிய தேசிய கொள்கையின் அடிப்படையில் நிலப்பரப்பில் 1/3 பாகம் மர உறையின் கீழ் வரவழைத்தல் நமது தலையாய நோக்கமாகும், இதனையடைய எந்த முயற்சியும் நழுவ விடக்கூடாது, மேற்படி குறியீட்டினை அடைய மரம் வளர்ப்பு காடுகள் எல்லா நிலப்பரப்பிலும் பெருமளவு மேற்கொள்ள வேண்டும், காடு வளர்க்கும் திட்டங்கள் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்குக் குறிப்பாக கிராமப்புற பின் தங்கிய மக்களுக்கும் பெண்களுக்கும் பெருமளவு உதவுவதுடன் இயற்கைச் சூழலைப் பேணிகாத்து நாட்டு நலனைப் பேணுவதில் பெரும்பங்கு வகிப்பவனவாகும்,

மரம் வளர்ப்பு:

உலக வன நாள் 21—3—1990 அன்று கொண்டாடப்பட்டது, ரூபாய் 10.000—ம் உலக வன நாளை கொண்டாட ஒதுக்கப்பட்டது, மரம் நடுதலை ஊக்குவிக்க கவரொட்டிகள் ஒட்டப்பட்டன, விளக்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன, 1989-90 ஆம் ஆண்டின் 1.015,45 லட்சம் கன்றுகள் இருபது அம்ச திட்ட மூலம் நடப்பட்டன

அத்தியாயம் 10.

நிதித் துறை.

கூட்டுறவுத் தணிக்கைத்துறை

முன்னுரை :

இக்கூட்டுறவுத் தணிக்கைத் துறை தனியாக ஏற்படுவதற்கு முன் கூட்டுறவுத் தணிக்கைப் பணி, பதிவாளர் கட்டுப்பாட்டில், தலைமைத் தணிக்கை அலுவலரின் கீழ் ஒரு தணிக்கைப் பிரிவாகப் செயல்பட்டு வந்தது. அரசாணை எண். 677, கூட்டுறவுத் துறை, நாள் : 22—11—1978ன்படி கூட்டுறவுத் தணிக்கை தனித் தன்மை பெறும் பொருட்டு தணிக்கைப் பிரிவினை கூட்டுறவுத் துறையிலிருந்து பிரித்து கூட்டுறவு சர்க்கரை மற்றும் நூற்பாலைகள் உட்பட மாநிலத்தில் உள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கையை மேற்கொள்ளும் பொருட்டு கூட்டுறவுத் தணிக்கை துறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்துறை 17—6—1981 முதல் அரசு நிதித் துறையின் நிர்வாக ஆளுகையின் கீழ் இயங்கி வருகிறது.

செல்பாடுகள் :

தலைமையிடத்தில்—

கூட்டுறவுத் தணிக்கை இயக்குநருக்கு உதவியாக தலைமை இடத்தில் இணை இயக்குநர் ஒருவரும், நேர்முக உதவியாளர் ஒருவரும், உதவி இயக்குநர் ஒருவரும் உள்ளனர்.

நகர்ப்புறங்களில்—

இணை இயக்குநர் கட்டுப்பாட்டில் மதுரையில் ஒரு மண்டல அலுவலகம் உள்ளது. அவர் 12 கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநர் சரகங்களில் செயல்பாடுகளை கண்காணித்து வருகிறார்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள 21 மாவட்டங்கள் 28 கூட்டுறவுத் தணிக்கைச் சரகங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் துணைப் பதிவாளர் தகுதியில் உள்ள கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநர் பொறுப்பில் உள்ளது.

அனைத்து தலைப்புகள் மற்றும் திட்டங்களின் குறியீடுகள் மற்றும் சாதனைகள் குறித்து முன்னேற்றம் :

இக்கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட நடைமுறைக்கான ''செயல் பதிவாளர்கள் என்றழைக்கப்படும் மற்ற துறைத் தலைவர்களின் கட்டுப்பாட்டிலும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டிலும் உள்ளது. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டிலும் மற்ற செயல் பதிவாளர்களின் கட்டுப்பாட்டிலும் உள்ள 1988—89ஆம் ஆண்டிற்கு தணிக்கை மேற்கொள்ள வேண்டிய மொத்த சங்கங்களின் எண்ணிக்கை 20,756.

முடிவுரை :

இத்துறை தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் விதிகளின் கீழ்வரும் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளைச் சட்டபடித் தணிக்கை செய்வதற்கான கட்டுப்பாட்டினை நிறைவு செய்கிறது.

அரசு தகவல் தொகுப்பு மையம்.

பொது விவரங்கள் :

வெளியீடுகளை உருவாக்கி அவற்றைத் தொகுத்து சேமித்தலும் இத்தகவல் தொகுப்பு மையத்தின் நோக்கங்களாகும்.

1972ஆம் ஆண்டு தமிழக அரசு நிதித்துறைக் கட்டுப்பாட்டின் கீழ் நிதித்துறை, கல்வித் துறை, வணிகத் துறை போன்ற துறைகளில் தகவல்களைத் தொகுத்து அவைகளை ஒழுங்குபடுத்தி சீராக்குவதற்காக இம்மையம் அமைக்கப்பட்டது. விற்பனை வரி பற்றிய தகவல்களைத் தொகுத்து ஆய்ந்து அவற்றைத் தக்க முறையில் செயலாக்கவும் வரி வருவாய் இனத்தில் தக்க கோட்பாடுகள் முடிவு செய்திடவும் உதவுகிறது. வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள தகவல் தொகுப்புகளை ஒழுங்குபடுத்துவதும் மற்றும் புள்ளி விவரங்களை கணிப்பான் மூலம். தொகுத்தளிப்பதும் முக்கிய நோக்கங்களாகும்.

பணி:

நிதி சம்பந்தப்பட்ட தகவல்களைத் தொகுத்தளிக்க மின் கணிப்பான் முறை தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இம்முறைப்படி தற்சமயம் தமிழகத்தி லுள்ள 22 மாவட்ட கருவூலங்களும் 5 சம்பளக் கணக்கு அலுவலகங்களும் அரசு வரவு செலவு பற்றிய தகவல் தொகுப்புகளை துணைக் கணக்குகள் மூலம் அனுப்புகின்றன.

பட்டியல்களின்றி காசோலைகள் மூலம் பெறும் துறைகளைப் பொறுத்தவரையில் பொதுப்பணித்துறையைச் சார்ந்த 165 செயற்பொறியாளர்களிடமிருந்தும் நெடுஞ்சாலைத் துறையிடம் இருந்தும் 74 வனத்துறைக் கோட்ட அலுவலர்களிட மிருந்தும் மாதாந்திரக் கணக்குகள் பெறப்படுகின்றன. உள்ளீடுகளில் நேரப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்டு மின் கணிப்பான் மூலம் பல்வேறு அறிக்கைகள் சேகரிக்கப்படுகின்றன.

தேர்வு முடிவுகள் பற்றிய தகவல்களை 1974 அக்டோபர் முதல் இம்மையம் தொகுத்தளித்து வருகின்றது. இத்தொகுப்புகள் தேர்வுக்கு முன் தேவைப்படும் தகவல்களும் தேர்வுக்குப் பின் செயல்பட வேண்டிய தகவல்களையும் இரு பிரிவு களாக உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டு மார்ச் மற்றும் அக்டோபரில் நடைபெறும் இரு தேர்வு முடிவுகளில் சம்பந்தப்பட்ட விவரங்கள் தொகுத்தளிக்கப் படுகின்றன.

இதுவரை மேனிலைக் கல்வி, பள்ளி இறுதி வகுப்பு ஆகிய தேர்வுகளுக்காக விடைத்தாள்களை திருத்தும் பணிக்காக மாநிலம் முழுவதும் தகுதிவாய்ந்த தேர்வாளர்களின் பணிகளைப் பயன்படுத்தவும் அவர்களின் தனிச் சிறப்புகளைக் கொண்டு வகைப்படுத்தியும், தேர்வு செய்து ஒருங்கிணைப்படுகின்ற பணிகளை அரசு தேர்வுத்துறை இயக்குநரகம் செய்து வந்தது. இக்கடினப் பணியை எளிதாக்கும் முகமாக இம்மையத்தின் அரசு தேர்வுத்துறையின் மாபெரும் கூட்டு முயற்சியுடன் நன்கு நிறைவேற்றி முடிக்கத் தக்க வகையில் தேர்வு அடிப்படையிலான புள்ளி விவர முறை தயாரித்து அளிக்கப்படுகின்றது.

பணி முன்னேற்றங்கள் :

ஏப்ரல் 1988 முதல் உயர்நிலைக் கல்வி தேர்வில் மாநில மாற்று எண்களை சில குறிப்பிட்ட பாடப் பிரிவுகளுக்கு அறிமுகப்படுத்தி மதிப்பெண்கள் தொகுக்கப் படுகிறது. மாற்று எண், பதிவேடும் பள்ளி வாரியான மதிப்பெண் பதிவேடுகளும் தயாரிக்கப்படுகின்றன. தேர்வில் தேர்ச்சி பற்றி செய்தி வெளியான அந்த தினத்திலேயே பள்ளிகளில் சான்றிதழ் பெற வழிவகைச் செய்யப்பட்டுள்ளது.

மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கில இந்தியப் பள்ளித் தேர்வு பற்றிய முடிவுகள் தொகுப்பையும் செப்டம்பர் 1987 முதல் இம்மையம் செயல்படுத்தும் மற்றதொரு பணியாகும்.

ஆசிரியர்களின் புள்ளி விவரங்களை சேகரித்து, பகுத்து, அதன்பின் தேர்வாளர் களாகத் தேர்வு செய்யப்படுகின்றது. இதற்கென தனியாக உள்ளடக்கிய தமிழக மாநிலங்களில் உள்ள மேல்நிலை உயர்நிலைக் கல்வியகங்களிலுள்ள தோராயமாக 15,000 ஆசிரியர்கள் பற்றிய விவரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

புதிய திட்டங்கள் நிறைவேற்றுதல்

அரசு புள்ளி விவர மையத்தில் உருவாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் தலைமைச் செயலகத்தில் உள்ள 400க்கும் மேற்பட்ட தானே பணம்பெறும் அலுவலர்களின் சம்பளப் பட்டியல் மற்றும் மேதகு மந்திரிகளின் சம்பளப் பட்டியலும் கணிப்பானில் தொகுக்கப்படுகிறது.

இம்முறை மேலும் விரிவுபடுத்தப்பட்டு தலைமைச் செயலக ஊழியர்களுக்கும் உதவ விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

நிதி, இலக்கு, செலவினம் :

கடந்த ஆண்டில் இத்துறையில் அலுவலர்கள் ஊதியம் இயந்திரம் மற்றும் தளவாடங்கள் குறித்த பராமரிப்புச் செலவு, மோட்டார் வாகனம், மற்றும் கணிப்பான் ஆகியவற்றிற்காக செலவாக ரூ. 85 இலட்சம் செலவிடப்பட்டது.

இறப்பு செய்திகள்

பழைய துளையீடு கார்டு இயந்திரங்களை மாற்றி இவ்வருடம் 30 புள்ளி விவர நுழைவு இயந்திரம் (Dataentry) அமைக்க அரசு ஒப்பளித்துள்ளது. 30 புள்ளி விவர நுழைவு இயந்திரம் 4 தனிப்பட்ட கணிப்பான்கள் IPC XT 7 மற்றும் IPC AT (386) இவ்வருடம் நிறுவப்பட்டுள்ளது. இந்த இயந்திரங்களின் மூலம் தகவல்கள் பிளாப்பி டிஸ்குகளில் ஏற்றப்பட்டு பின்னர் கணிப்பானில் தொகுக்கப்படுவதற்காக மின்காந்த நாடாக்களில் சேமிக்கப்படுகிறது. இப்புதிய முறை இயந்திரங்களின் மிகக் குறைவான சத்தம், தூசி, வெப்பம் உள்ளது.

இவ்வருடம் அரசு முதன்மை கணிப்பான் வாங்குவதற்கு ஒப்பளித்துள்ளது. அரசின் ஒப்பளித்தல் பெற்றபின் இயந்திரத்தை வாங்குவதற்கான விலைப்புள்ளி குறித்து விவரங்கள் சேகரிக்கப்பட்டு பின்னர் குழுவில் ஒப்புதலோடு முதன்மை கணிப்பான் வாங்கப்பட்டு விட்டது. 1990–91 ஆம் ஆண்டு முதல் முதல் கணிப்பான் இயங்கத் துவங்கும்.

முடிவுரை :

மேற்படி தொகுப்புரை இம்மையம் ஆற்றும் பணிகளில் சிறுக்கமான விளக்கமே யாம். இம்மைய முக்கிய பணி அரசுத்துறை புள்ளி விவரங்களைத் தொகுத்து நவீனப்படுத்தி வகைப்படுத்தி முடிப்பதில் முன் எச்சரிக்கையுடனும் தீர்க்கமான முடிவுகளெடுப்பதற்கு ஒத்துழைப்பதற்கும் உதவிகரமாக இம்மையம் அமைந்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

நிறுவன நிதி.

முன்னுரை :

(பணியின் நோக்கங்கள், புரியக் கருதப்பட்ட பணியின் தன்மை முதலியவற்றின் பொதுவான தகவல்.)

வணிக வங்கிகள், வட்டார ஊரக வங்கிகள், குறித்த காலக்கடன் வழங்கு நிறுவனங்கள் போன்ற நிதி நிறுவனங்கள் மூலம் பொதுத்துறை, தனியார்துறை ஆகிய இரு துறைகளுக்கும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. முன்னுரிமைத் துறைகளுக்கும் நலிந்த பிரிவினர்களுக்கும், வளர்ச்சிப் பணி நடவடிக்கைகளுக்கும் பல்வேறு நிதி ஆதாரங்களிலிருந்து நிறுவன நிதியுதவியளிப்பதை சீராக்குவதே இதன் நோக்கமாகும்.

அலுவலர்கள் :

வங்கியிலிருந்து வேளாண்மைத்துறை, தொழில்துறை, பணித்துறைகள் ஆகிய வற்றிற்கு உரிய நேரத்தில் கடன் வழங்குவதற்கும், மாவட்டங்களுக்கும், மாநிலம் முழுவதற்கும் நீண்டகால, ஆண்டுக்கடன் திட்டத்தைத் தயாரித்து செயல்படுத்து வதைக் கண்காணிப்பதற்கும், அரசுக்கும் வங்கிகளுக்கும் இடையே செவ்விய ஒத் துழைப்பு நிலவ நிதித் (நி.நி.) துறை இதில் முக்கியப் பங்காற்றுகிறது.

அனைத்துத் தலைப்புகளின் / திட்டங்களின் கீழ் அடைந்த பணி முன்னேற்றம் திட்ட நிதி இலக்கு திட்ட நிதி வகையிலான சாதனைகள் ஆகியவை குறித்த விவரங்கள் தனித்தனியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1989–90 ஆம் ஆண்டில் பல்வேறு வங்கிகள் அடைந்த பணிமுன்னேற்றம் :

வங்கி தொகுதி.	கிளைகள்.	மொத்த வைப்பீடு.	மொத்த முன் பணம்.	கடன்/ வைப்பீடு விகிதாச் சாரம்.
(1)	*(2)*	*(3)*	*(4)*	*(5)*
பாரத ஸ்டேட் வங்கி .. .. (மற்றும் அதன் கிளை அமைப்புகளும்).	642	2,461.12	2,693.77	109.40
தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்	2,497	6,800.46	5,865.67	86.30
தனியார் வங்கிகள்	874	1,114.19	780.77	70.00
வட்டார ஊரக வங்கிகள்	11	312.31	717.00	229.60
அயல்நாடு வங்கிகள்	211	38.58	58.16	150.70
மொத்தம்	4,235	10,726.66	10,115.37	94.30

மொத்தம்

வங்கி தொகுதி.	மொத்த கணக்குகள்.	தொகை.	மொத்த முன்பண விகிதாச்சாரம்.
(1)	*(6)*	*(7)*	*(8)*
பாரத ஸ்டேட் வங்கி .. .. (மற்றும் அதன் கிளை அமைப்புகளும்).	9,846	1,125.19	41.80
தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்	31,476	2,731.15	46.60
தனியார் வங்கிகள்	1,984	284.87	36.50
வட்டார ஊரக வங்கிகள்	2	35.07	44.90
அயல்நாடு வங்கிகள்	1,516	44.19	76.00
மொத்தம்	44,824	4,220.47	41.70

வங்கி தொகுதி	மொத்த முன்பணம்		
	மொத்த கணக்குகள்.	தொகை.	மொத்த முன்பண விகிதாச்சாரம்
(1)	(9)	(10)	(11)
பாரத ஸ்டேட் வங்கி (மற்றும் அதன் கிளை அமைப்புகளும்).	1,124	16.34	0.70
தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்	2,980	41.97	0.80
தனியார் வங்கிகள்	136	2.03	0.30
வட்டார ஊரக வங்கிகள்	0	0.00	0.00
அயல்நாடு வங்கிகள்	9	0.09	0.00
மொத்தம்	4,249	60.43	0.70

1989-90-ஆம் ஆண்டில் உணவுத்தானிய சிறப்பு உற்பத்தித் திட்ட செயல்பாடு குறித்த விவரங்கள் வருமாறு :—

நிறுவனங்கள்,	திட்ட இலக்கு,	சாதனை,	சாதனை சதவீதம்,
(1)	(2)	(3)	(4)
		(ரூபாய் கோடிகளில்),	
வணிக வங்கிகள்	78.00	72.37	92,78
கூட்டுறவு வங்கிகள்	63.10	69.30	109,83
மொத்தம்	141.10	141,67	100,40

1989-90-ஆம் ஆண்டிற்கான ஆண்டு செயல் திட்டத்தின் கீழ் துறைவாரியான ஒதுக்கீடு, சாதனை ஆகியவை குறித்த விவரங்கள் வருமாறு :

துறை,	ஒதுக்கீடு,	சாதனை,	சாதனை சதவீதம்,
(1)	(2)	(3)	(4)
		(ரூபாய் இலட்சத்தில்),	
கேளாண்மை	1,027,83	1,155,87	112
தொழில்	276,80	278,88	101
பணிகள்	287,07	296,16	103
மொத்தம்	1.591,78	1.730,90	109

அறிக்கையாண்டில் செயல்படுத்தப்பட்ட புதிய திட்டங்கள் (ஒவ்வொரு திட்டத்திற்கும் உரிய திட்ட நிதி குறித்த நோக்கங்கள், இலக்குகள் சாதனைகள்),

'' பணித்திட்டப் பகுதி அணுகு முறை '' எனப்படும் ஊரகக்கடன் வழங்கு புதிய திட்டம் 1—4—1990-லிருந்து செயலுக்கு வந்தது, வழங்கப்பட்ட வட்டாரத்திற்கு மீண்டும் கடன் வழங்குவதைத் தவிர்ப்பதும். கடன் வழங்குவதில் எளிய நடைமுறையை உருவாக்குவதும். பணித் திட்டப்பகுதிகளில் பற்றாக்குறையைத் தவிர்ப்பதும் இந்தப் புதிய நடைமுறையின் முக்கிய நோக்கமாகும். நாடாளுமன்றத்தில் 11—10—1989 அன்று அறிவிக்கப்பட்ட நகர்ப்புற சிறு தொழில் திட்டம் 1981-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 10,000-க்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட பெருநகர்ப் பகுதிகளில் மாநகர்களில் நகரங்களில் வேலை வாய்ப்பற்றோருக்கும் போதிய வேலை வாய்ப்பில்லாத ஏழைகளுக்கும் வேலை வாய்ப்பு அளிப்பதற்காக இம் மாநில அரசால் தொடங்கப்பட்டுள்ளது.

கழகத்தின் நிறுவனங்களில் மூலதனம் உட்பட நிதி. ஏற்பட்ட செலவு. பொருளாதார ரீதியில் தனித்தியங்கவல்ல நிலை,

நலிந்த பிரிவு முன்னுரிமைத்துறை. வேறுபடும் வீதத்திலான வட்டி. வீதத்தொகை ஆகியவற்றிற்கான கடன்கள். வேளாண்மைக்கான நேரடி நிதியுதவி ஆகியவற்றைப் பொறுத்தவரை. அவ்வப்போது இந்திய ரிசர்வ் வங்கி பிறப்பித்த விதிகள் வணிக வங்கிகளுக்கு வழிகாட்டுகின்றன,

தனித்தகவல் :

1985-90 வங்கிக் கிளை விரிவுத்திட்டம் 30—9—1990 அன்றுடன் முடிவடைவதாக இருந்தது, இத்திட்டம் 1991 மார்ச் வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது,

முடிவுரை :

1990 மார்ச் இறுதி நிலவரப்படி. வணிக வங்கிகள் ரூபாய் 10,562·26 கோடி வரையில் வைப்பீடுகளைப் பெற்று மொத்தம் ரூபாய் 9,921·16 கோடி வரையில் முன்பணம் வழங்கி சாதனை புரிந்துள்ளன,

உள்ளாட்சி நிதித் தணிக்கை.

1) முனுரை : (துறைச் சம்பந்தப்பட்ட வேலைத் தொடர்புடையன).

இத்துறைக்கு சட்டப்படியான சட்டபூர்வமில்லாத உள்ளாட்சி நிறுவனங்கள் குழுக்கள், கழகங்கள், ஆகியவற்றின் தணிக்கை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்துறையே; நகராட்சி, பேரூராட்சி மற்றும் நகரிய நகராட்சிகள் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதிய திட்டத்தை நிர்வகிக்கிறது. அறக்கட்டளைகளில் முகவர் பணியும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2) பணிகள் : — —

சட்டப்படியான, சட்டப்பூர்வமில்லாத உள்ளாட்சி நிறுவனங்கள், குழுக்கள், கழகங்களின் கணக்குகளை இத்துறை தணிக்கை செய்கிறது. நகராட்சி, பேரூராட்சி மற்றும் நகரிய நகராட்சிகளின் பணியாளர்களின் ஓய்வூதிய திட்டத்தை நிர்வகித்து, ஓய்வூதியம் அனுமதிக்கிறது. அறக்கட்டளைகளின் முகவர் பணியினையும் செய்து வருகிறது.

3) வேலை முன்னேற்றம் தொடர்பானவை :

1989–90 ஆம் ஆண்டில் இத்துறை ரூ. 1020.27 கோடி ரூபாய் வரவுகளையும் ரூ. 974.67 கோடி ரூபாய் செலவுகளையும் தணிக்கை செய்துள்ளது. நிறுவனங்களால் வருடாந்திர கணக்குகள் சரியாக தரப்படாமையும் ஆவணங்கள் முழுமையாக வழங்கப்படாமையும் தணிக்கை நிலுவையில் இருப்பதற்கு முக்கிய காரணம் பெறுகிறது.

4) இந்த ஆண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் : நில

அரசாணை நிலை எண். 751, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 25–8–1988-ல் வெளியிடப்பட்ட ஆணையின்படி 14–1–1970 ஆம் அல்லது அதற்கு முன்னதாக காலஞ் சென்ற நகராட்சி ஊழியர்களின் குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியம் வழங்க வழிவகை செய்துள்ளது. இதன்படி பெறப்பட்ட 120 மனுக்களில் 108 மனுக்கள் முடிக்கப்பட்டிருக்கின்றன.

5) முடிவுரை : — — —

இத்துறையால் கடுமையான முறை கேடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட தலைமை துறைகளுக்கும் அரசுக்கும் பெறப்பட்ட அறிக்கைகளின் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

சிறு சேமிப்பு.

பொது விவரங்கள் :

சிறு சேமிப்புத் துறை பல்வேறு நிலையிலுள்ள மக்களிடையே சேமிக்கும் பழக்கத்தை வளர்ப்பதற்காகவும், வீட்டுக்காக சேமிக்கும் பணத்தை நாட்டுக்காக பயன்படுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. சேமிப்பு ஒரு தேசிய இயக்கம் என்பதை செயல்படுத்த இத்துறை பெரும் முயற்சி செய்து வருகிறது.

பணி :

சென்னை மாநகரில் அரசால் நிர்ணயிக்கப்பட்ட சிறு சேமிப்பு இலக்கான ரூ. 103 கோடி., சிறு சேமிப்பு துறை, சென்னை மாவட்ட ஆட்சியர், சென்னை மாநகராட்சி ஆணையர் ஆகிய மூன்று அலுவலர்களாலும் வகுலிக்கப்பட்டது. இப்பணிக்காக இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த நான்கு உதவி இயக்குநர்கள், நான்கு மாவட்ட சேமிப்பு அலுவலர்கள் மற்றும் பதினைந்து கள அலுவலர்களுடன், மாநகராட்சி, மாவட்ட ஆட்சியர் அலுவலக அலுவலர்களுடன் ஈடுபடுத்தப்பட்டனர்.

மாவட்டங்களில் வளர்ச்சிப் பிரிவு அலுவலர்களாலும், வருவாய்ப் பிரிவு அலுவலர்களாலும் சிறு சேமிப்பு வசூல் பெரிதும் திரட்டப்படுகிறது. இது தவிர இதர துறைகளுக்கும் சிறு சேமிப்பு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணி முன்னேற்றம் தீவிரமாக ஆய்வு செய்யப்பட்டது.

பணி முன்னேற்றம் :

1989–90 ஆம் நிதி ஆண்டிற்கு அரசால் சிறு சேமிப்புக் குறியீடு மாநிலம் முழுவதற்கும் ரூ. 400 கோடி (நிகரம்) என நிர்ணயிக்கப்பட்டது. இத் தொகையில் ரூ. 345.32 கோடி (நிகர வசூல் சதவிதம் தற்காலிகம்) எய்தி முடிக்கப்பட்டுள்ளது. இக் குறியீட்டில் 86 சதவிதம் ஆகும்.

புதிய திட்டங்கள் நிறைவேற்றுதல் :

மத்திய அரசு ஓய்வு பெறும் அரசு அலுவலர்களுக்கான முதலீட்டுத் திட்டம் ஒன்றை இந்த ஆண்டு அறிவித்தது.

தேசிய சேமிப்பு பத்திரம், தேசிய சேமிப்புத் திட்டம் ஆகியவைகளில் ரூ. 1000-மும் அதற்கு மேலும் 1–12–1989 முதல் 31–3–1990 வரை முதலீடு செய்பவர்களுக்கு 1 சதவிகித சிறப்பு ஊக்கத் தொகை வழங்கப்பட்டது. மேலும் முகவர்களுக்கு அவர்கள் பெறும் ஊருக்குத் தொகையில் 50 சதவிகிதம் ஊக்கத் தொகையில் மாநில அரசு வழங்கியதால், சிறுசேமிப்பு வசூல் கணிசமாக உயர்ந்துள்ளது.

ஒரு சிறப்பு இலவச பரிசுக் கூப்பன் டிசம்பர் 1989 முதல் மார்ச் 1990 வரை முதலீடு செய்பவர்களுக்காக அரசு அறிவித்தது. இப்பரிசுத் திட்டத்தின் பிரகாரம், ஒவ்வொரு ரூ.1000 முதலீட்டுக்கும் ஒரு இலவச பரிசுக் கூப்பன் வழங்கப்பட்டு கண்டசார் கார் முதல் சுவர்கடிகாரம் வரை பல சிறப்பான பரிசுகள் வழங்கப்பட்டன. வரிசைக்கு 2 இலட்சம் கூப்பன்கள் வீதமாக 10 வரிசைகள் வெளியிடப்பட்டன. இந்த பரிசுக் கூப்பன் திட்டத்திற்கு பொது மக்களிடையே நல்ல ஆர்வமும், வரவேற்பும் இருந்ததுடன் இதுவரை கானாத அளவு ரூ. 345.32 கோடி நிகர வசூலை சிறுசேமிப்பு எட்டியது.

மாவட்ட ஆட்சியர்களால் அக்டோபர் திங்கள் 30 ஆம் நாள் உலக சிக்கன நாள் மற்றும் சஞ்சாயிகா தினம் கொண்டாடப்பட்டன. நாளைய மக்களான பள்ளி மாணவ மாணவியிடையே சிக்கனம் மற்றும் சேமிப்பு பற்றிய விழிப்புணர்ச்சியை உண்டாக்கவே இவ்விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

மேலும் வர்த்தக பொருட்காட்சியில் இத்துறை பங்கு கொண்டு ஒரு அரங்கினை அழகாக அமைத்து சிறுசேமிப்பு திட்டங்கள் பற்றி பல விவரங்களை மக்களுக்கு எடுத்துக்கூறும் வகையில் விளம்பரம் செய்தது.

நிதி, இலக்கு, செலவீனம் :

இத்துறைக்கு 1989-90 நிதி ஆண்டில் ரு. 400 கோடி இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டதில் ரூ. 345.32 கோடி (நிகரம்) வசூலிக்கப்பட்டது. இத்தொகை இலக்கில் 86 சதவிகிதம் ஆகும்.

கடந்த ஆண்டில் இத்துறையால் அலுவலர்கள் ஊதியம், விளம்பரம், பிரிண்டிங் பல் வேறு ஊக்கத்தொகைகள் (முதலீட்டாளர்கள், முகவர்கள்) ஆகிய தலைப்புகளில் ரூ.2.73 கோடி செலவிடப்பட்டது. இத்தொகை வசூலில் 0.76 சதவீதம் ஆகும். கடந்த நிதி ஆண்டில் சிறுசேமிப்பு வசூலுக்காக ரூ.203.25 கோடி மத்திய அரசால் மாநில அரசுக்கு நீண்ட கால கடனாக வழங்கப்பட்டது (நிகர வசூலில் 3/4 பங்கு).

சிறப்பு செய்திகள் :

அரசு தேசிய சேமிப்பு ஆலோசனைக் குழுவை மீண்டும் அமைத்து, மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ அவர்களை இக்குழுவில் துணைத் தலைவராக 31-3-1991 வரை நியமனம் செய்தது. இந்த ஆண்டு நிதித்துறை செயலர் மற்றும் சிறுசேமிப்பு இயக்குநர் அவர்களால் ஆய்வுக் கூட்டங்கள் கூட்டப்பட்டதால் பிரச்சினைகள் உடனுக்குடன் முடிவெடுக்கப்பட்டு மொத்த வசூல் அதிகமாவதற்கும் மிக்க உறுதுணையாக இருந்தது.

முடிவுரை :

திட்டச் செலவிற்கு சிறுசேமிப்பு வசூல் நிதி உதவி செய்வதில் முக்கியத்துவம் பெற்றுள்ளதாலும், மக்கள் மத்தியில் சேமிப்பு பழக்கத்தை வளர்க்க வேண்டி இருப்பதாலும், சிறுசேமிப்பு வசூலை அதிகப்படுத்த மிக்க கவனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசு வணிகத் திட்டங்கள்.

பணிகள் :

இத்துறை அரசு நிறுவனங்கள் மற்றும் அரசு சார்புள்ள நிறுவனங்கள் உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் வாரியங்களின் கணக்கு தணிக்கை மற்றும் இருப்பு பொருள் சரி பார்த்தல்.

பணியின் குறிபிடு மற்றும் முன்னேற்ற அறிக்கை:

1989-90-ம் ஆண்டில் அரசு நிறுவனங்கள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்கள் 6,901. இவற்றில் 4,680 இனங்கள் பல்வேறு அரசு துறை நிறுவனம் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களில் தணிக்கை செய்யப்பட்டுள்ளது. இவற்றில் மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி மற்றும் பிற அரசு சார்பு பிற வாரியங்களும் உள்ளடங்கியவை ஆகும். (உதாரணம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் போன்றவை) தணிக்கை செய்யப்பட்ட மொத்த நிறுவனங்கள் 4677,

மொத்த வரவு	..	..	ரூ. 8,225.99 லட்சங்கள்.
மொத்த செலவு	...	...	ரூ. 4,953.72 இலட்சங்கள்

சிறப்பினங்கள் :

அரசின் அறிவுரைகளுக்கு ஏற்ப சிறப்பு கணக்குகளுக்கு தனிக்கைகள் மற்றும் இருப்பு பொருள் தணிக்கைகள் இத்துறை மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

முடிவுரை:

இத்துறை அரசு நிறுவனங்கள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களின் கணக்கு தணிக்கை மற்றும் வரவு-செலவு, இருப்பு பொருள் கண்டறிதல் தணிக்கையில் காணப்படும் கடும் குறைபாடுகள் இவை சம்பந்தப்பட்ட துறை தலைவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது. இவ்வாறு காணப்படும் கடும் குறைகள் தகுதியுடையவை அரசின் உரிய நடவடிக்கைகளுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

மாநில நிதி.

மாநில நிதி :

1989-90 ஆம் ஆண்டுக்கான வருவாய்க் கணக்கு குறித்த வருவாய்-செலவு மூலதனக்கணக்கு குறித்த செலவு பற்றிய கணக்கு விவரங்கள் அட்டவணைகள் 1, 2, 3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

ரொக்க இருப்பு :

தமிழ்நாடு அரசின் ரொக்க இருப்பு 1-4-1989 அன்று ரூ. (-) 12.05 கோடியாகும், 31-3-1990 அன்று ரூ. (-) 2.66 கோடியாகும்.

வருவாய் கணக்கு :

1989-90 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மாநிலத்தின் மொத்த வருவாய் ரூ. 41,99,78.38 இலட்சமாகும். ஆனால், அந்த ஆண்டுக்கான செலவு ரூ.45,50,08.58 இலட்சமாகும். வருவரய்க்கு கூடுதலாக உள்ள செலவு (பற்றாக்குறை) ரூ. 3,50,30.20 இலட்சமாகும்.

மொத்த மூலதனச் செலவு ரூ. 2,15,29.91 இலட்சமாகும். இதில் தொழில், கனி மங்கள் குறித்த மூலதனக் கணக்கின் செலவு 42,33.78 இலட்சமாகும். வேளாண்மை, அது தொடர்பான பணிகள் குறித்த மூலதனக் கணக்கின் செலவு ரூ.39,54.80 இலட்சம். பாசனம், வெள்ளக் கட்டுப்பாடு, திட்டங்கள் குறித்த மூலதனக் கணக்கின் செலவு ரூ. 38,47.44 இலட்சம், போக்குவரத்து குறித்த மூலதனக் கணக்கின் செலவு ரூ. 34,50.60 இலட்சம், சமூக பணிகள் குறித்த மூலதனக் கணக்கின் செலவு ரூ.39,01.81 இலட்சம் ஆகியவை முக்கிய இனங்களாகும்.

தனி நிதிகள்.

பஞ்ச நிவாரண நிதி :

இந்நிதி 1936 ஆம் ஆண்டு சென்னை பஞ்ச நிவாரண நிதிச் சட்டத்தின் கீழ் ஏற் படுத்தப்பட்டது; இது கூடுமையான வறட்சி, வெள்ளம், பஞ்சம் உட்பட ஏனைய இயற் கைச் சீற்றங்கள் ஆகிய துயர்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு ஏற்படுத்தப் பட்டது:—மேலும், பர்சனத்திற்குப் பாதுகாப்பு அளிப்பது அல்லது பஞ்சத்தைத் தடுப்பதற்குரிய ஏனைய பணிகளை மேற்கொள்வதற்கான செலவுகளுக்கு பயன்படுத்து வதற்காக இந்நிதி ஏற்படுத்தப்பட்டது. 30—9—1953 அன்று இந்நிதியிலிருந்த இருப்பு தொகை ரூ. 11.79 இலட்சமாகும். 31—10—1955 அன்று இந்நிதியில் முடிவு இருப்பு ரூ. 22.11 இலட்சமாகும். இதில் ரொக்கம் ரூ. 2.38 இலட்சமாகும். சுட்டுறு திப் பத்திரங்களின் மதிப்பு ரூ. 19.73 இலட்சமாகும். (கொள்முதல் விலை) 1956 ஆம் ஆண்டு மாநில சீரமைப்புச் சட்டத்திற்கிணங்க, அடுத்தடுத்து வருகின்ற மாநில அரசு களுக்கிடையே இந்த இருப்பு தொகையை ஒதுக்கீடு செய்யும் வகையில் இருப்பு தொகை அனைத்தும் சீரமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் கணக்குகளின் தற்காலிகமாக சேர்க் கப்பட்டுள்ளது. 1989—90 தொடக்கத்தில் இந்நிதியில் இருந்த இருப்பு ரூ. 20.00 இலட்சமாகும். இதில் சுட்டுறுதிப் பத்திரங்களின் மதிப்பு ரூ. 20.00 இலட்சமாகும். (கொள்முதல் விலை). 31—3—1990 அன்று இந்நிதியில் இருந்த இருப்பு ரூ. 20.00 இலட்சமாகும். இதில் சுட்டுறுதிப் பத்திரங்களின் மதிப்பு ரூ. 20.00 இலட்சமாகும். (கொள்முதல் விலை). ஆட்டாவது நிதிக்குழுவின் பரிந்துரைகளின்படி, ஒரான்டில் செலவிடப்படாமல் உள்ள இருப்பு தொகை அடுத்தாண்டின் கணக்குகளுக்குப் பெய ரளவு கொண்டு செல்லப்பட வேண்டும், மத்திய அரசின் நிதியுதவியின் அளவைத் தீர் மானிக்கும்போது, மத்தியக்குழு பஞ்ச நிவாரண நிதியில் செலவிடப்படாமல் உள்ள இருப்பு தொகையைக் கணக்கில் எடுத்துக் கொள்ளும்.

பொதுமக்கள் வங்கி நிறுவனங்களிடமிருந்து திரட்டப்படும் கடன்கள்:

பொது :

30—9—1953 அன்று சென்னை கூட்டு மாநிலத்தில் நிலுவை பொதுக்கடன், 1953 ஆம் ஆண்டு ஆந்திர மாநிலச்சட்டத்தின் ஏழாவது விவர அட்டவணையில் உள்ள விதித்துறைகளுக்கிணங்க ஆந்திர பிரதேசம், கருநாடகம், தமிழ்நாடு அரசுகளுக்கிடையே ஒதுக்கீடு செய்ய வேண்டியுள்ளது. 1—11—1956 முதற் கொண்டு மாநிலச் சீரமைப்பை அடுத்து, 31—10—1956 அன்று உள்ள நிலுவைக் கடன் 1956 ஆம் ஆண்டு மாநிலச் சீரமைப்புச் சட்டத்தின்படி கேரள, கருநாடக, தமிழ்நாடு மத்திய அரசுகளுக்கிடையே மேலும் ஒதுக்கீடு செய்ய வேண்டியுள்ளது. வெளிச்சந்தைக் கடன்கள் மீதான பொறுப் புகள் அனைத்தும் தமிழ்நாடு அரசையே சாரும். ஆனால் ஆந்திர பிரதேச, கருநாடக, கேரள அரசுகள், மத்திய அரசு ஆகியவை கடன் செலவுகளில் தங் களுடைய பங்கை தாங்கள் செலுத்த வேண்டியபோதெல்லாம் தமிழ்நாடு அரசுக்குச் செலுத்தும். மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன்களைப் பொறுத்தவரையில், ஒவ் வொரு மாநில அரசும், கடன் செலவுகளில் தங்களுடைய பங்கினை இந்திய அரசுக்கு உரிய நாட்களில் நேரிடையாக செலுத்தும் 1953 ஆம் ஆண்டு ஆந்திர மாநிலச் சட்டம், 1956 ஆம் ஆண்டு மாநில சீரமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள கோட்பாடு கள் நெறிமுறைகளின்படி, பொதுக்கடன் குறித்து இறுதி ஒதுக்கீடு செய்யப்படும் வரை யில் மக்கள் தொகை விகிதாச்சாரத்தில் கடன் செலவுகள் குறித்த தங்களுடைய பங்கு வகையில் தமிழ்நாடு ஆந்திர பிரதேசம், கர்நாடகம், கேரள அரசுகள் மத்திய அரசுக்கு தற்காலிகமாக தொகையைச் செலுத்தி வருகின்றன.

முன்னாள் திருவாங்கூர்—கொச்சின் மாநிலம் திரட்டிய வெளிச்சந்தை கடன் தொகைக்கான பொறுப்பு, கேரள அரசையே முழுவதும் சாரும். ஆனால், தமிழ் நாடு அரசு கடன் செலவுக்கான தனது பங்கினை செலுத்த வேண்டும்போதெல்லாம் கேரள அரசுக்கு செலுத்தும். முன்னாள், திருவாங்கூர்—கொச்சின் மாநிலம் மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன் தொகையைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு அரசு தன் னுடைய பங்கினை நேரிடையாக மத்திய அரசுக்குச் செலுத்தியுள்ளது.

வெளிச்சந்தை கடன்கள்.

ஆய்வாண்டில் தமிழ்நாடு அரசு இரண்டு நிலைகளில் ரூ. 2,00,42 இலட்சத்திற்கு வெளிச்சந்தை கடன்களை (தொகு மொத்தம்) திரட்டியது. இவ்வாண்டில் வெளியீட்ட நில உச்ச வரம்பு இழப்பீட்டுப் பத்திரங்களுக்கான (தொகையைத் திருப்பிச் செலுத்து தல் உட்பட வெளிச்சந்தை கடன்களின் மொத்த தொகை ரூ. 31,15 இலட்சமாம

அறிக்கை—1.

		1989—90 ஆம் ஆண்டின் கணக்குகள் வருவாய் (ரூபாய் ஆயிரத்தில்).
வரி வருவாய் :		
0021	கூட்டுநிறுவன வரி நீங்கலாக ஏனைய வருமானம் மீதான வரிகள்.	2,99,49,73
0022	வேளாண்மை வருமானம் மீது வரி	8,99,90
0029	நில வரி	13,82,27
0030	முத்திரைத்தாள்கள், பத்திரப் பதிவு கட்டணங்கள் ..	2,08,33,81
0035	வேளாண்மை நிலம் நீங்கலாக ஏனைய இயங்காச் சொத்து மீது வரி.	2,60,370
0039	மாநில ஆயத்தீர்வைகள்	3,01,81,87
0040	விற்பனை வரி ...	16,54,98,26
0041	வண்டிகள் மீது வரிகள் ...	1,96,00,75
0042	சரக்குகள் மீது வரிகள்	97,60
0043	மின்சாரத்தின் மீது வரிகளும் தீர்வைகளும் ...	5,27,27
0045	பண்டங்கள் பணிகள் மீதான ஏனைய வரிகளும் தீர்வைகளும்.	96,19,07
	மொத்தம் பண்டங்கள் பணிகள் மீது வரிகள்	27,88,50,90
வரி அல்லாத வருவாய்கள் :		
0047	ஏனைய வரி விதிப்புப் பணிகள்	6.59
0049	வட்டி வரவுகள்	37,04,12
0050	ஆதாயப் பங்குகளும் ஆதாயங்களும்	1,25,45
0051	அரசுப் பணியாளர் தேர்வாணையம்	44,05
0055	காவல்	9,30,23
0056	சிறைச்சாலைகள்	3,58,92
0058	எழுதுபொருள்—அச்சு	1,47,32
0059	பொதுப்பணிகள்	3,81,24
0070	ஏனைய நிருவாகப் பணிகள்	29,53,62
0071	ஓய்வூதியம், ஏனைய ஓய்வு-கால பலன் குறித்த பங்குத் தொகைகளும் வசூல்களும்.	3,48,24
0075	பல்வகைப் பொதுவான பணிகள்	18,49,86
0202	கல்வி, போட்டி விளையாட்டு, கலை மற்றும் பண்பாடு	14,95,04
0210	மருத்துவம், பொதுச் சுகாதாரம்	26,24,13
0211	குடும்ப நலன்	44,49

		1989—90 ஆம் ஆண்டின் கணக்குகள் வருவாய். (ரூபாய் ஆயிரத்தில்)
வரி அல்லாத வருவாய்கள் :—தொடர்ச்சி.		
0215	குடிநீர் வழங்கல், துப்புரவு	1,63,47
0216	வீட்டு வசதி	5,94,04
0217	நகர்ப் பகுதி வளர்ச்சி	4,88
0220	செய்தி விளம்பரம்	1,78,02
0230	தொழிலாளர் நலனும் வேலை வாய்ப்பும்	2,91,87
0235	சமூகப் பாதுகாப்பும் நலனும்	6,10,48
0250	ஏனைய சமூகப் பணிகள்	2,46,61
0401	பயிர் வளர்ப்பு	47,74,04
0403	கால்நடை வளர்ப்பு	2,08,65
0404	பால் பண்ணை வளர்ச்சி	59,86
0405	மீனவளம்	75,01
0406	காடு வளர்ப்பும் வனவிலங்கு பாதுகாப்பும்	49,25,03
0407	மலைத் தோட்டப் பயிர்கள்	1,17,24
0415	வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் கல்வி	1
0425	கூட்டுறவு	7,63,05
0435	ஏனைய வேளாண்மைத் திட்டங்கள்	1,39,16
0506	நிலச் சீர்திருத்தம்	9
0515	ஏனைய கிராம வளர்ச்சித் திட்டங்கள்	3,41,26
0551	மலைப் பகுதிகள்	1,13,03
0701	பெரிய மற்றும் நடுத்தர பாசனம்	1,57,62
0702	சிறு பாசனம்	2,19,87
0801	மின் விசை	1,53
0802	பெட்ரோலியம்	12
0810	நவீன எரிசக்தி ஆதாரங்கள்	(—) 15
0851	கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும்	18,89,51
0852	தொழில்கள்	1,67,24
0875	ஏனைய தொழில்கள்	26,96
1051	துறைமுகங்களும் கலங்கரை விளக்ககங்களும்	45,01
1054	சாலைகளும் பாலங்களும்	9,99,02
1055	சாலைப் போக்குவரத்து	12
1056	உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து	81,57

		1989–90 ஆம் ஆண்டின் வருவாய். (ரூபாய் ஆயிரத்தில்.)
வரி அல்லாத வருவாய்கள்—தொடர்ச்சி.		
1425	ஏனைய அறிவியல் ஆராய்ச்சி	5,56
1452	சுற்றுலா	53,09
1453	வெளிநாட்டு வாணிக்மும் ஏற்றுமதி வளர்ச்சியும்	1
1456	நுகர் பொருள் வழங்கல்	1
1475	ஏனைய பெர்துவான் பொருளாதார்ப் பணிகள்	2,82,34
	மொத்தம் வரி அல்லாத வருவாய்கள் ...	3,47,13,87
உதவி மானியங்களும் பங்குத்தொகைகளும் :		
1601	மத்திய அரசிடமிருந்து உதவி மானியங்கள் ...	4,16,35,83
1603	மத்திய ஆயத்தீர்வை வருவாய் மாநிலங்களின் பங்கு ...	6,47,77,78
	மொத்தம் உதவி மானியங்களும் பங்குத் தொகைகளும்.	10,64,13,61
	மொத்தம்—வருவாய் கணக்கில் வரவுகள் ...	41,99,78,38

A. பொதுவான பணிகள்.

(1)	(2)	1989—90 ஆண்டின் செலவுகள். (ரூபாய் ஆயிரத்தில்.) (3)
2011	மாநிலச் சட்ட மன்றங்கள்	2,18,99
2012	ஆளுநர்	65,69
2013	அமைச்சரவை	1,03,32
2014	நீதி நிருவாகம்	29,66,39
2015	தேர்தல்கள்	18,16,90
2020	வருமானம், செலவினங்கள் மீதான வரிகளை வசூலித்தல்.	1,52,27
2029	நிலவரி	23,90,34
2030	முத்திரைத் தாள்கள், பத்திரப் பிரிவு	13,13,04
2035	சொத்துரிமை, மூலதனப் பற்று—வரவு மீதான ஏனைய வரிகளை வசூலித்தல்.	1,19,57
2039	மாநில ஆயத் தீர்வைகள்	5,87,32
2040	விற்பனை வரி	24,65,58
2041	வண்டிகள் மீதான வரிகள்	4,37,19
2045	பண்டகங்கள், பணிகள் மீதான ஏனைய வரிகளும் தீர்வைகளும்.	96,18
2047	ஏனைய வரி விதிப்பு பணிகள்	3,02,25
2048	கடன் குறைப்பு அல்லது தவிர்ப்பிக்கான நிதி ஒதுக்கம் ..	27,77,49
2049	வட்டி கொடுத்தல்	3,35,70,04
2051	அரசுப் பணியாளர் தேர்வாணையம்	2,36,36
2052	தலைமைச் செயலகம்—பொதுவான பணிகள்	13,09,15
2053	மாவட்ட நிருவாகம்	83,00,77
2054	கருவூலம்—கணக்குகள் நிருவாகம்	20,53,98
2055	காவல்	1,72,15,63
2056	சிறைச்சாலைகள்	14,89,38
2058	எழுதுபொருள் அச்சு	19,21,33
2059	பொதுப்பணிகள்	35,39,68
2070	ஏனைய நிருவாகப் பணிகள் ..	26,96,89
2071	ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்	2,63,56,19
2075	பல்வகைப் பொதுவான பணிகள் ..	16,64,75

B சமூகப் பணிகள்.

2202	பொது கல்வி	10,03,59,43
2203	தொழில் நுட்பக் கல்வி	39,66,98

(1)	(2)	1989-90 ஆண்டின் செலவுகள் (ரூபாய் ஆயிரத்தில்) (3)
2204	போட்டி விளையாட்டுகளும் இளைஞர் பணிகளும்	8,25,58
2205	கலை பண்பாடு	11,16,94
2210	மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரம்	2,65,00,74
2211	குடும்ப நலன்	48,93,73
2215	குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு	1,57,28,95
2216	வீட்டு வசதி	15,50,69
2217	நகர்ப் பகுதி வளர்ச்சி	38,42,83
2220	செய்தி—விளம்பரம்	5,64,43
2225	ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்	1,16,67,17
2230	தொழிலாளர் நலனும் வேலைவாய்ப்பும்	34,81,04
2235	சமூகப் பாதுகாப்பும்	1,40,42,81
2236	சத்துணவு	1,39,77, 12
2245	இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	14,33,25
2250	ஏனைய சமூகப் பணிகள்	6,29,72
2251	தலைமைச் செயலகம் சமூகப் பணிகள்	4,32,29
	C. பொருளாதாரப் பணிகள்.	
2401	பயிர் வளர்ப்பு	1,48,11,65
2402	மண்வள நீர்வளப் பாதுகாப்பு	17,88,12
2403	கால்நடை வளர்ப்பு	44,17,36
2404	பால்பண்ணை வளர்ச்சி	3,35,75
2405	மீனளம்	6,93,50
2406	காடு வளர்ப்பும் வனவிலங்குகளும் பாதுகாப்பும்	23,13,42
2407	மலைத் தோட்டப் பயிர்கள்	2,92,15
2408	உணவு, சேமிப்பு கிடங்கு வசதி	5,00
2415	வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் கல்வி	20,32,32
2425	கூட்டுறவு	79,14,69
2435	ஏனைய வேளாண்மைத் திட்டங்கள்	12,38,56
2501	ஊரக வளர்ச்சிக்காள சிறப்புத் திட்டங்கள்	33,18,27
2505	ஊரக வேலை வாய்ப்பு	41,05,54
2506	நிலச் சீர்திருத்தம்	24,06
2515	ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள்	73,28,92
2551	மலைப் பகுதிகள்	7,41,31

(1)	(2)	1989—90 ஆண்டின் செலவுகள். (ரூபாய் ஆயிரத்தில்) (3)
2701	பெரிய மற்றும் நடுத்தரப் பாசனம்	27,86,50
2702	சிறு பாசனம்	21,02,08
2801	மின்விசை	2,91,75,00
2851	கிராம தொழில்களும் சிறு தொழில்களும்	1,17,15,89
2852	தொழில்கள்	8,26,27
2853	இரும்புசாரா, சுரங்கவியல், உலோகவியல் தொழில்கள்	1,29,94
3051	துறைமுகங்கள், கலங்கரைவிளக்கங்கள்	98,57
3052	கப்பல் போக்குவரத்து	1
3053	பொதுமக்கள் விமானப் போக்குவரத்து	6,23
3054	சாலைகளும், பாலங்களும்	1,01,50,26
3055	சாலைப் போக்குவரத்து	4
3056	உள்நாட்டு நீர்வழி போக்குவரத்து	32,03
3425	ஏனைய அறிவியல் ஆராய்ச்சி	1,70,75
3435	உயிரின வாழ்க்கைச்சூழல் சுற்றுச் சூழல்	4
3451	தலைமைச் செயலகம்—பொருளாதார பணிகள்	4,57,36
3452	சுற்றுலா	83,48
3454	மக்கள் தொகை கணக்கெடுப்பு, ஆய்வு புள்ளி விவரங்கள்	5,66,52
3456	நுகர்ப்பொருள் வழங்கல்	1,94,00,92
3475	ஏனைய பொதுவான பொருளாதார பணிகள்	3,21,66
	C. மொத்தம் பொருளாதாரப் பணிகள்	12,93,84,17
	D. உதவி மானியங்களும் பங்குத் தொகைகளும் :	
3604	உள்ளாட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி நிறுவனங்களுக்கும் அளிக்கப்படும் இழப்பீட்டுகளும் ஒதுக்கீடுகளும்.	44,44,04
	மொத்தம் D. உதவி மானியங்களும் பங்கு தொகைகளும்.	44,44,04
	மொத்தம்— வருவாய் கணக்கில் செலவு.	45,0,08,58

அறிக்கை—3.

A. பொதுவான பணிகளின் மூலதனக் கணக்கு :

(1)	(2)	1989—90 ஆண்டின் செலவுகள் (ரூபாய் ஆயிரத்தில்) (3)
4058	எழுதுபொருள் அச்சுத்துறை குறித்த மூலதனச் செலவு,	14,85
4059	பொதுப் பணிகள் குறித்த மூலதனச் செலவு	10,26,99
4070	ஏனைய நிருவாகப் பணிகள் குறித்த மூலதனச் செலவு	7,97
	மொத்தம்—பொதுவான பணிகளின் மூலதனக்கணக்கு.	10,49,81

B. சமூகப் பணிகள் குறித்த மூலதனக் கணக்கு :—

4202	கல்வி . போட்டி விளையாட்டு. கலை மற்றும் பண்பாடு குறித்த மூலதனச் செலவு . .	10,39,09
4210	மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரம் குறித்த மூலதனச் செலவு,	7,40,03
4211	குடும்ப நலன் குறித்த மூலதனச் செலவு —	1,70,43
4215	குடிநீர் வழங்கல். துப்புரவு. குறித்த மூலதனச் செலவுகள்	3,72,48
4216	வீட்டு வசதி குறித்த மூலதனச் செலவு — —	7,44,07
4220	செய்தி—விளம்பரம் குறித்த மூலதனச் செலவு —	55,49
4225	ஆதிதிராவிடர் பழங்குடியினர். ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு	60,70,00
4235	சமூகப் பாதுகாப்பு. நலன் குறித்த மூலதனச்செலவு —	4,36
4236	சத்துணவுக் குறித்த மூலதனச் செலவு — —	45,02
4250	ஏனைய சமூகப் பணிகள் குறித்த மூலதனச் செலவு —	59,84
	மொத்தம்—சமூகப் பணிகள் குறித்த மூலதனக் கணக்கு.	39,01,81

C, பொருளாதாரப் பணிகள் குறித்த மூலதனக் கணக்கு :—

4401	பயிரினவளர்ப்பு குறித்த மூலதனச் செலவு —	1,17,37
4402	மண்வள நீர்வளப் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு	1,90,72
4403	கால்நடை வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு —	15,77
4404	பால் பண்ணை வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு —	67,25
4405	மீன்வளம் குறித்த மூலதனச் செலவு —	73,31
4406	காடுவளர்ப்பு. வனவிலங்குகள் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு,	21,23,06
4407	மலைத் தோட்டப் பயிர்கள் குறித்த மூலதனச் செலவு	6,52
4408	உணவு சேமிப்பு கிடங்கு வசதி குறித்த மூலதனச்செலவு,	30,00
4415	வேளாண்மை ஆராய்ச்சி. கல்வி குறித்த மூலதனச்செலவு,	26,84

4425	கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு ...	13,02,66
4435	ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு,	1,30
4515	ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு,	5,99
4551	மலைப்பகுதிகள் குறித்த மூலதனச் செலவு ...	4,68,07
4575	ஏனைய சிறப்புப் பகுதிகளின் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு,	8,71
4701	பெரிய, நடுத்தர பாசனம் குறித்த மூலதனச் செலவு ...	32,46,52
4711	வெள்ளக் கட்டுப்பாடுத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு,	1,05,00
4851	இராமத் தொழில்கள். சிறு தொழில்கள் குறித்த மூலதனச் செலவு,	43,44
4858	பொறியியல் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு ...	9,60
4859	தொலைத் தொடர்பு மின்னணுவியல் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு,	1,17,94
4860	நுகர்பொருள் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு ...	24,03,69
4875	ஏனைய தொழில்கள் குறித்த மூலதனச் செலவு ...	16,59,11
5051	துறைமுகம், கலங்கரை விளக்கம் குறித்த மூலதனச்செலவு,	17,20
5052	கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு ...	...
5054	சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு ...	34,89,17
5055	சாலைப் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு ...	1
5056	உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு,	31,15
5075	ஏனையப் போக்குவரத்துப் பணிகள் குறித்த மூலதனச் செலவு,	3,07
5452	சுற்றுலா குறித்த மூலதனச் செலவு	99,03
5465	பொதுவான நிதி—வணிக நிறுவனங்களில் முதலீடுகள்	41,12,55
5475	ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள் குறித்த மூலதனச் செலவு	8,62
	மொத்தம்—பொருளாதாரப் பணிகள் குறித்த மூலதனக் கணக்கு,	1,65,79,82
	மொத்தம்—வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு,	2,15,29,91

தமிழ்நாடு பரிசுச் சீட்டுகள்.

காலஞ்சென்ற முன்னாள் முதலமைச்சர் திரு. சி. ஏன். அண்ணாதுரை அவர்களால் 15—8—1968 அன்று பரிசுச் சீட்டு திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 12—9—1975 முதல் தற்காலிகமாக இத்திட்டம் நிறுத்தப்பட்டது. பின்• 7—8—1976 முதல் மீண்டும் இத்திட்டம் துவக்கப்பட்டு, 30—9—1976-ல் முதல் குலுக்கல் நடத்தப்பட்டது. இத் திட்டத்தின் முக்கிய நோக்கம் பல்வேறு நல திட்டத்திற்கு இதன் மூலம் மாநில வருவாய் பெருக்குவதாகும்.

ஆரம்பத்தில் மாதத்திற்கு ஒரு முழு குலுக்கல் நடத்தப்பட்டது. அதற்கு பின் மே 1981-ல் 15 நாட்களுக்கு ஒரு குலுக்கலும், பின் மார்ச் 1982 முதல் மாதத்திற்கு மூன்று குலுக்கல்களும் நடத்தப்பட்டன. மேலும் தமிழ்நாடு பரிசுச் சீட்டுக்கு அதிக வரவேற்பு இருந்ததாலும் 1985 முதல் வாரக் குலுக்கல்கள் நடத்தப்பட்டன. பின் 21—5—1986 முதல் வாரம் இரண்டு குலுக்கல்களும் 22—8—1986 முதல் வாரம் மூன்று குலுக்கல்களும் நடத்தப்பட்டன. மேலும் சாதாரண வாரக் குலுக்கலைத் தவிர மூன்று மாதத்திற்கு ஒரு முறை சிறப்புக் குலுக்கலும் நடத்தப்பட்டன. இம்முறை இரண்டு மாதத்திற்கு ஒரு சிறப்புக் குலுக்கலாக மாற்றப்பட்டது. தற்பொழுது மாதம் இரண்டு சிறப்புக் குலுக்கல்கள் நடத்தப்படுகின்றன.

அச்சிடப்படும் பரிசுச்சீட்டுகள் அனைத்தும் விற்கப்பட வேண்டும் என்ற நோக்கத் தில் குறியீடும் எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. பரிசுச்சீட்டு விற்பனை சந்தையில் நிலவரத்தை பொறுத்து விற்பனையில் ஏற்றத்தாழ்வு ஏற்படுகிறது. 1989–90 ஆம் ஆண்டுவரையிலான வரவு-செலவு அட்டவணை I-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

நிகர வருவாயில் 75 சதவிகிதம் பல சமூக நல திட்டத்திற்கு ஒதுக்கப்படுகிறது. அவை கள் கிராமங்களுக்கு தண்ணீர் வசதி செய்து கொடுத்தல், வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பொது மக்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுத்தல் மற்றும் பல வேறு நல திட்டங்களுக்குக் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விபரங்கள் அட்டவணை II-ல் கொடுக்கப் பட்டுளளது.

அட்டவணை–I.

வரவு-செலவிற்கான பட்டியல் 1–4–1989 முதல் 31–3–1990 வரை

வருடம்.	நிகர வருமானம். ரூ.	மொத்த செலவினம் ரூ.	நிகர் வருவாய் ரூ.
1989–90	13,16,42,955.85	10,71,82,800.65	2,44,60,175.24

அட்டவணை–II

சமூக நலத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை

வருடம்.	மொத்த தொகை சமூக நலத்திற்கு ஒதுக்கப்பட்டது			
	ஊரக குடிநீர் திட்டம்.	சமூக சேவை மற்றும் நலம்.	சிறப்பு நல நிதி	முன்னாள் படை வீரர்கள் நிதி.
1989–90	—	—	1,76,54,449.00	9,20,910.00

கருவூல மற்றும் கணக்குத் துறை.

முகவுரை :

இக்கருவூலக் கணக்குத் துறையானது வருவாய்த் துறையிடமிருந்து தனியே பிரிக்கப் பட்டு 1–4–1962 முதல் இயக்குநர் அவர்களின் கீழ் ஒரு தனித்துறைத் தலைமையகமாக செயல்பட்டு வருகிறது.

இத்துறையின் இயக்குநர் கருவூலக் கணக்குத் துறையின் நிர்வாகத்தினையும் செயல் திறனையும் தமிழ்நாடு முழுதும் தன் கீழ் இயங்கி வரும் 23 மாவட்ட மற்றும் 199 சார்நிலைக் கருவூலங்கள், சென்னையில் இயங்கும் 5 சம்பளக் கணக்கு அலுவலகங்கள், ஒரு ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், ஒரு முத்திரைத்தாள் வழங்கும் அலுவலகம், ஒரு வைப்பு நிதிக் கணக்கு அலுவலகம், மதுரையில் இயங்கும் ஒரு சம்பளக் கணக்கு அலுவலகம் மற்றும் ஆறு மண்டலத் துணை இயக்குநர் அலுவல கங்கள் இவைகளின் மூலம் நடத்துவதின் பொறுப்பை ஏற்றுச் செயல்படுகிறார்.

இயக்கம் :

கணக்கிடுதல்.—இத்துறை மாநில அரசின் கீழ் இயங்கும் அனைத்துத் துறைகளுக்கும் ஒரு பிரதிநிதியாக (Agent) செயற்படுகிறது. அத்துறைகளின் வரவுகளைப் பெற்றும், அரசு இடும் உத்தரவிற்கிணங்க தொகையினை வழங்கியும் பின் அவ்வகைகளின் கணக்குகளைத் துறை வாரியாக தொகுத்து தலைமைக் கணக்காயருக்கு அனுப்பியும் பணிபுரிகிறது.

ஓய்வூதியம் வழங்குதல்.—இத்துறை மத்திய, மாநில அரசுகள் மற்றும் இராணுவம் இவைகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களுக்கும், இறந்த அரசு ஊழியரின் கும்பங்கள் விடுதலை வீரர்கள் மற்றும் இதரப் பலவகை ஓய்வூதியங்களை மாதந்தோறும் வழங்கும் பணியினை ஏற்று நடத்துகிறது. ஒவ்வொரு மாதமும் 3,03,771 ஓய்வுதாரர்கள் மாவட்ட மற்றும் சார்நிலைக் கருவூலங்கள், சென்னையில் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் இவைகளின் மூலம் வங்கிகள் மற்றும் நேரடியாக ஓய்வூதியம் தங்குதடையின்றி கிடைத்திட வழி செய்கிறது. இவ்வாறு வழங்கிய ஓய்வூதியங்களைப் பற்றிய கணக்குகளைத் தலைமை கணக்காயருக்கு அனுப்பி விடுகிறது.

ஓய்வூதியர்களின் குறைகளைக் கவனிக்க தனி அமைப்பு (Cell) ஒன்றுள்ளது. மாவட்ட ஆட்சியர் மூலம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட்டங்களை நடத்தி அவர்களின் குறைகளைக் களைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1989–90-ம் வருடத்திற்கு 1955 கடிதங்கள் ஓய்வூதியதாரர்களிடமிருந்து வரப்பெற்று 1,455 கடிதங்களில் கண்டுள்ள குறைகள் களையப்பட்டன.

பங்கு (Share) சான்றிதழ்களை வைத்திருத்தல் :

இத்துறை அரசு ஏற்று நடத்தும் பொதுத்துறை நிறுவனங்களின் அரசின் பங்குகளை தனது பொறுப்பில் ஏற்று காத்து வருகிறது. கீழ்க்கண்ட பொதுத் துறை நிறுவனங்களுக்கு இயக்க (Functional) தலைமைத்துறையாகவும் செயல்பட்டு வருகிறது.

1. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்.
2. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்.
3. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.
4. சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் வடிகால் வாரியம்.
5. தமிழ்நாடு காதி மற்றும் கிராம கைத்தொழில் வாரியம்.

கடன் மற்றும் முன்பணம் வகைகளுக்கான கணக்குகளைப் பராமரித்தல்:

இத்துறை மோட்டார் கார் மற்றும் இதர வாகன முன் தொகைகளை அரசிடமிருந்து பெற்று கடன் பெறுவோர்க்கு தொகை இருப்பினை தெரிவிப்பதோடு அவைகளைப்பற்றி ஆண்டு மதிப்பீட்டுக் கணக்குகளையும் பராமரித்து வருகிறது. இதைத் தவிர திருமணம், கல்வி, பண்டிகை இவைகளின் முன்பணத் தொகைக்கான மதிப்பீட்டுக் கணக்கினையும் பராமரித்து வருகிறது. வாகன முன் தொகைகளுக்கான காப்பீடு சான்றிதழ்களையும் கடன் பத்திரங்களையும் ஆய்வு செய்கிறது.

முத்திரைத் தாள்களை வழங்குதல் :

இத்துறையின் மூலம் மத்திய அச்சகம், நாசிக்கிலிருந்து அரசு முத்திரைத்தாள்கள் மற்றும் நீதிமன்ற கட்டண முத்திரைத் தாள்களை மாவட்ட மற்றும் சார்நிலைக் கருவூலங்கள் மூலம் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி வழங்க ஏற்பாடு செய்கிறது. சில இடங்களில் சான்றிதழ் பெற்றவர்களுக்கு அதனை வழங்கவும் ஏற்பாடு செய்கிறது.

அரசின் காப்புரிமை பத்திரங்கள் மீது வட்டி வழங்குதல்.—அரசு வெளியிடும் பலவகை காப்புப் பத்திரங்களுக்கான வட்டியை ரிசர்வ் வங்கி மற்றும் பொதுக் கடன் பத்திரங்களை வெளியிடும் நிறுவனங்கள் குறிக்கும் காலங்களில் உரிய நபர்களுக்கு வழங்கி அதற்கான கணக்குகளை அந்நிறுவனங்களுக்கு தெரிவிக்கிறது.

தமிழ்நாடு சமூக நல பாதுகாப்புத் திட்டம் :

இத்திட்டத்தின்கீழ் பொது மக்களிடமிருந்து குறிப்பிட்டத் தொகை சந்தாவாகப் பெற்று குறிப்பிட்ட காலத்திற்குப்பின் அதனை மாதந்திர ஓய்வூதியமாக வங்கிகளின் மூலம் தர ஏற்பாடு செய்கிறது.

தமிழ்நாடு மோட்டார் வாகன வரிச் சட்டம் :

இச்சட்டத்தின்கீழ் வரிகளைப் பெற்று வாகன அட்டைகளை (Disc) உரிமதாரர்களுக்கு வழங்குகிறது.

பலவகை வைப்புத் தொகைகளின் கணக்குகளைப் பேணுதல் :

அரசின் வேலைகளை ஏற்று நடத்த வசூலிக்கப்படும் பலவகையான வருவாய் வைப்புத் தொகை, வேலைக்கான வைப்புத் தொகை, எச்சரிக்கை வைப்புத் தொகை இவைகளைப் பெற்றுக் கணக்கில் வைத்துப் பின் அரசு உத்திரவின்பேரில் இவைகளைத் திரும்ப வழங்கும் பணியினை செய்து வருகிறது.

தமிழ்நாடு தொழில் நிறுவனங்களில் ஊழியர்களின் வருங்கால வைப்புத் தொகைக் கணக்கு விதி 1969 :

இவ்விதிகளின்கீழ் தமிழ்நாடு தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களை உறுப்பினர்களாக்கி, ஒரு குறிப்பிட்டத் தொகையினை மாதந்தோறும் பெற்று வருகிறது. அத்தொகையின் கணக்குகளைப் பராமரிப்பதோடு உறுப்பினர்களுக்கு இருப்புத் தொகை தெரிவித்தல், கடன் வழங்குதல், திரும்பப் பெருந்தொகை வழங்குதல் பற்றிய பணிகளையும் செய்து வருகிறது. 1989–90 ஆம் வருட காலத்திற்கு 381 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு மொத்த உறுப்பினர் தொகையினை 23,465-க்கு உயர்த்தி உள்ளது. சராசரியாக மாதந்தோறும் ரூபாய் 3.50 முதல் ரூ. 4 இலட்சத்திற்கு வரவாகப்பெற்று கிட்டத்தட்ட ரூ. 5 இலட்சம் வரை தொகை வழங்கப்பெற்றுள்ளது.

இது ஒரு சமூக நலப் பணியாகக் கருதப்பட்டு உறுப்பினர்கள் அதிக அளவில் சேர்க்க முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

உள் தணிக்கை :

கீழ்க்கண்ட வகையினங்களின் உள் தணிக்கை மண்டல துணை இயக்குநர்களின் மூலமாக அனைத்து அரசு அலுவலகங்களிலும் நடத்தப்படுகிறது :—

1. தமிழ்நாடு அரசு குடும்ப பாதுகாப்பு நிதி.

2. தனி ஊதியப்பட்டியலை தானே பெறும் அலுவலர்களின் ஊதியப் பட்டியல்கள்.

3. தமிழ்நாடு அரசு சிறப்புப் பணிக்கொடை நிதி.

சிறப்புநிதிக் கணக்குத் தணிக்கை :

தாசில்தார்கள் மூலமாக ஒவ்வொரு மாதமும் கிராமக் காவலர் மற்றும் கிராமப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் தொகையினை கணக்குகளைப் பேணுதல் மற்றும் அத்தொகையினை கணக்குகளைத் தணிக்கை செய்தல் பற்றிய வேலைகளையும் செய்து வருகிறது.

சிறப்பு செம்நிகள் :

தற்போது 23 மாவட்டக் கருவூலங்கள் மற்றும் 199 சார்நிலைக் கருவூலங்களின் உதவியோடு இத்துறை செவ்வனே செயல்பட்டு வருகிறது. மாவட்டத்தில் உட்புக முடியாத தூரத்தில் உள்ள அரசு அலுவலகங்களுக்கும் ஓய்வூதியர்களுக்கும் செவ்வனே செயல்பட புதிய சார்நிலைக் கருவூலங்களைத் திறக்க அரசுக்கு திட்டங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

இதனை ஒட்டி வடாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்குங்கால் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திற்கு ஒரு மாவட்டக் கருவூலம் தனியாக அமைக்கப்பட்டு 30—9—1989 முதல் இயங்கி வருகிறது.

மேலும் கீழ்க்கண்ட சார்நிலைக் கருவூலங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளது:

1. ஒசூர்-தர்மபுரி மாவட்டம்.
2. குடியாத்தம்-வடாற்காடு மாவட்டம்.

முடிவுரை :

இத்துறை அரசின் வரவு-செலவுத் திட்டக் கணக்குகளை தலைமைக் கணக்காயருக்கு சரிவர அனுப்பி அரசின் கணக்குத் துறையினை மிகக் கூர்ந்து கண்காணித்து வருகிறது.

இதன் மூலம் அரசின் திட்டப் பணிகளின் தொகையினை சரிவர ஒதுக்கீடு செய்யப் பேருதவி செய்து வருகிறது.

• அத்தியாயம் 11

கைத்தறி துணிகள் மற்றும் கதர்த்துறை:

கைத்தறி மற்றும் பஞ்சாலையும்.

1. அறிமுகம் :

வேளாண்மைக்கு அடுத்து வேலைவாய்ப்பு உள்ளாற்றலில் உள்ள கைத்தறித் தொழில் அரசின் கருணை ஆதரவில் பஞ்சாலை பிரிவில் இருந்தும் விசைத்தறியில் இருந்து வரும் போட்டியில் இருந்தும் எஞ்சியிருக்க இயலுகிறது. கைத்தறித் தொழில் தனக்கென உள்ளார்ந்த பலமும் தனி உடமை அங்காடியும் எஞ்சி வாழ்வதற்குக் கொண்டு இருந்தாலும் இந்திய அரசு மற்றும் தமிழக அரசின் உதவி, அமைக்கப்பட்ட பஞ்சாலை பிரிவிலிருந்தும், காப்பாற்றுவதற்கு அவசியமாக இருக்கிறது.

2. செய்கடமைகள் :

கைத்தறித் தொழிலின் வளர்ச்சி மற்றும் உயர்வுக்கான நிகழ்ச்சி நிரல்களை திட்டம் இடுவதற்கும், அமைப்பதற்கும் அமுல்படுத்துவதற்கும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை முகமையாக தொடர்ந்து வருகிறது கைத்தறி இயக்குநர் 14 சரக கைத்தறி மற்றும் துணி நூல் உதவி இயக்குநர்களால் உதவப்பட்டு வருகிறார். தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளின் கீழ் அதிகார ஒப்படைப்பு பெற்று இந்த உதவி இயக்குநர்கள் நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களை பதியவும், கட்டுப்படுத்தவும் வழிகாட்டவும் இயக்குநர் சார்பாகவும் அவரிடம் இருந்து நேரத்திற்கு நேரம் அளிக்கப்படும் அறிவுரைகள்படியும் செயற்படுகிறார்கள்.

3. வேலை இயக்கு மற்றும் சாதனைகள் செயல், நிதி இரண்டும் பற்றிய அனைத்து தலைப்பின் இழ உள்ள நிட்டங்களின் முன்னேற்றம் பற்றி தனியாக :

(1) நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை மற்றும் தறிகளின் எண்ணிக்கை.—மாநிலத்திலுள்ள 4.27 இலட்சம் கைத்தறிகளில் 2.85 இலட்சம் தறிகள் 1680 பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 31 மார்ச் 90 முடிய அமைச்சுப் பெற்றுள்ளன.

(2) பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உற்பத்தி மற்றும் விற்பனை.—1989—90 ஆம் ஆண்டுக்கு குறியீடாக 1900 இலட்சம் மீட்டர் உற்பத்தி நிர்ணயிக்கப்பட்டு எய்துவதற்காக சம்பந்தப்பட்ட கைத்தறி மற்றும் துணி நூல் உதவி இயக்குநர்கள் மூலம் பகிரப்பட்டுள்ளது. அதன்படி ரூ 23,607.98 இலட்சம் மதிப்புள்ள 1,367.07 இலட்சம் மீட்டர் உற்பத்தி செய்யப்பட்டு ரூ. 27,004.90 இலட்சம் மதிப்புள்ள 1551.79 இலட்சம் மீட்டர் 31—3—1990 வரை விற்பனை செய்யப்பட்டுள்ளது.

(3) கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு சலுகை நிதி ஏற்பாடு செய்து கொடுத்தல்.—தமிழ்நாட்டிலுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோஆப்டெக்ஸ் இரண்டும் பயன்படுத்திய நடை முதல் ரூபாய் 190 கோடியாகும். 1989—90ன் போது அரசு வட்டி மான்யமாக ரூ. 150 இலட்சம் வாங்கியுள்ளது.

(4) கைத்தறி தொழிலை பாதுகாக்கவும் அதற்கு புத்துயிர் ஊட்டும் பொருட்டும் மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காகவும் அரசு கீழ்க்கண்ட திட்டங்களை செயற்படுத்தி வருகிறது—

1. வீடு மற்றும் தொழிற் கூட திட்டம்.
2. ஜனதா துணி திட்டம்.
3. கள்ளுபடி மானியத் திட்டம்
4. சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்
5. மத்திய சிக்கன நிதித் திட்டம்.
6. கைத்தறி நெசவாளர்களை விடுவிக்கும் திட்டம்.
7. கைத்தறிகளை நவீனப்படுத்தும் திட்டம்.
8. கைத்தறி நெசவாளர்களின் பிள்ளைகளுக்கு அவர்களின் மேல்படிப்புக்காக உதவி.
9. சீருடை துணி விநியோகம்.
10. கோஆப்டெக்ஸிற்கு அங்காடி உள்ளமைப்பு மற்றும்
11. கைத்தறி ஒதுக்கீடு கோட்பாடு மற்றும் செயலாக்கு பிரிவு நிறுவுதல்.

அறிக்கை ஆண்டில் செயற்படுத்தப்படும் புதிய திட்டங்கள், நோக்கங்கள் இலக்குகள் மற்றும் சாதனைகள் :

1. நொராடு திட்டம் :

கிராமப்புறங்களில் வாழும் தறியற்ற ஏழை மகளிர் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பளித்து அதன்மூலம் அவர்கள் வருவாய் பெற்று வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற நன்னோக்கத்தின் அடிப்படையில் நார்வே நாட்டு நிதி உதவி திட்டத்தின் கீழ் மகளிருக்கென 10 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன. இவை மட்டுமின்றி மேலும் 4 மகளிர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் 1990–91 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகத்தால் கீழ்க்காணும் வகையில் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

	ரூ.
1. நிலம் கொள்முதல் செய்ய	50.000
2. தொழிற்கூடம் கட்ட	5,50,000
3. தறிகள் மற்றும் உபகரணங்கள்	2,50,000
4. பயிற்சி	1,50,000
மொத்தம்	10,00,000

மேற்குறிப்பிட்டுள்ள 1989–90 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 10 மகளிர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 1000 பெண் நெசவாளர்கள் தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளது மட்டுமின்றி மேலும் 400 பெண் நெசவாளர்கள் 1990–91ல் ஆரம் பிக்கப்படவுள்ள 4 மகளிர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் சேர்க்கப்பட உள்ளனர்.

2. சொந்தத்தில் தறியற்ற ஏழை பெண் நெசவாளர்களுக்கு தறிவழங்கும் திட்டம் :

மகளிர்க்கு நிரந்தர வேலைவாய்ப்பளித்து, வருவாய் அளிக்கும் பொருட்டு மற்றொரு திட்டம் தீட்டப்பட்டு அதன் அடிப்படையில்தறியற்ற 1000 மகளிர்க்கு தறிகள் வழங்கி, அவர்களை பல்வேறு பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் அங்கத்தினர்களாக சேர்க்கவும் திட்டமிடப்பட்டது. இந்த 1000 பெண் நெசவாளர்கள் தற்போது இயங்கும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வழங்கப்போகும் தறியின் விலை ரூ. 2,500ல் ரூ. 1,000/- மானியமும் ரூ. 1,500/- கடனும் ஆகும். இதனை மாதம் ஒன்றுக்கு ரூ. 25 வீதம் 60 மாத தவணைகளில் திருப்பி செலுத்த வேண்டும்.

கோ–ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல் ஒத்துழைப்புடன் ஏற்றுமதி ரகங்கள் உற்பத்தி செய்யும் பொருட்டு, மேலும் 4,000 தறியற்ற மகளிர்க்கு தறிகள் வழங்கவும் திட்டமிடப் பட்டுள்ளது.

3. இலவச கைத்தறி சேலைகள் மற்றும் வேஷ்டிகள் வறுமை கோட்டின்கீழ் வரும் குடும்பங் களுக்கு அளித்தல் :

1989–90ல் ஒரு குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சியாக நாட்டில் முதல் முறையாக சேலை கள் மற்றும் வேஷ்டிகள் ரூ. 45.83 கோடி செலவில் ஏழை வீட்டாருக்கு வழங்கிட அதன் செயல்முறைத் திட்டமிட்டுள்ளது. இது இரண்டு அடுக்கு நோக்கங்கள் கொண்டது.

(அ) ஏழைகள் மீது அரசு கொண்டுள்ள கருணையின் அடையாள செயலாக வறுமை கோட்டின் கீழே வாழ்ந்து கொண்டிருக்கும் ஏறத்தாழ 84 லட்சம் மக்களுக்கு இலவச ஆடை வழங்குதல்.

(ஆ) ஏழை நெசவாள வீட்டாரை சார்ந்த 1 இலட்சம் பேருக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு அளித்தல், இத்திட்டம் 1989–90-ல் மிகச் சிறந்த முறையில் எந்தவித குறைபாடுகளுக்கும் இடமளிக்காமல் செயல்படுத்தப்பட்டது.

4. நிதி முதலீடு மற்றும் உள்ள படியான செலவினங்கள் அடங்கியது மற்றும் கூட்டாண்மை தொழில் நிறுவனங்களின் பொருளாதார நிலைத்திருக்கும் தன்மை.

(1) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் :

கூட்டுறவு அமைப்பிற்கு அப்பாற்பட்டுள்ள கைத்தறி மற்றும் துணை தொழிலுக்கு தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகம் (வரை) நிதி உதவியினை கடன்கள் வடிவில் ஏற்பாடு செய்து வருகிறது. 1989–90-ல் கைத்தறி கழகம் 2778 தனியார் துறை கைத்தறி நெசவாளர்களுக்கு நடைமுறை மூலதனம் ரூ. 385.80 இலட்சம் தொகை வழங்கியுள்ளது.

(2) தமிழ்நாடு ஜிகை ஆலை காஞ்சிபுரம் :

அரசு ரூ. 13.20 இலட்சம் பங்கு மூலதனமாக இந்நிறுவனத்தில் முதலீடு செய்துள்ளது. இந்நிறுவனம் 1989–90-ம் ஆண்டின்போது 13,318 மார்க் தங்கநூல் ஜரிகை உற்பத்தி செய்து ரூ. 292.97 லட்சத்திற்கு மதிப்பிடப்பட்ட விற்பனையினை பவனிட்டுள்ளது.

(3) தமிழ்நாடு துணிநூல் கழகம் :

தமிழ்நாடு துணிநூல் கழகம் ஏப்ரல் 1969ல் உருவாக்கப்பட்டு ஒரு நிறுவனமாக கம்பெனிகளின் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு துணிநூல் கழகத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 500 இலட்சம் மற்றும் அதன் அளிக்கப்பட்ட பங்கு முதலீடு ஆனது ரூ. 154 லட்சம் ஆகும். அரசு இக்கழகத்தினை மத்திய முகமாக விளைத்தறி உள்ளீடு கடன் மற்றும் விற்பனை தேவைகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு உபயோகிக்க தீர்மானித்துள்ளது.

(4) கோ ஆப்டெக்ஸ் :

நடப்பு ஆண்டு தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து ரூ. 84.00 கோடி மதிப்புள்ள துணிகளை கொள்முதல் செய்துள்ளது. மேலும் ரூ. 150 கோடி மதிப்புள்ள கைத்தறி சரக்குகளை விற்பனை செய்துள்ளது.

(5) கூட்டுறவு நூற்பாலைகள் :

4.65 இலட்சம் நூற்பு கதிர்கள் கொண்ட 18 கூட்டுறவு நூற்பாலை நிறுவப்பட்டுள்ளது இந்த நூற்பாலைகள் ரூ. 14.891.00 இலட்சம் மதிப்புடைய நூலினை உற்பத்தி செய்துள்ளது இக்காலத்தில் செயலாக்கம் செய்யப்பட்டுள்ள மொத்த விற்பனை ரூ. 14,453.41 லட்சம் என மதிப்பிடப்படுகிறது.

(6) தமிழ்நாடு கூட்டுறவு நுனிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு :

வெளுப்பாக்கம், சாயம் தோய்த்தல் பதனிடுதல், தோய்த்தல் மற்றும் திரை அச்சு முதலியவை செய்யதக்கதான உள்ளமைப்பு வசதிகளை தமிழ்நாடு கூட்டுறவு நுனிநூல் பதனிடும் ஆலை கொண்டுள்ளது. இவ்வாலை 17.93 இலட்சம் மீட்டர் அளவு கொண்ட சாயம் தோய்த்தல் மற்றும் வெளுப்பாக்குதல் பணியினை 1989–90-ன் போது புரிந்துள்ளது.

நலத்திட்டங்கள் :

(அ) கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் :

கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம் 15–11–1975 ஆம் நாள் முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்ட நெசவாளர்கள் அனைவரும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் கீழ் வைக்கப்படுகிறார்கள். சற்றேறக்குறைய 1,30,210 நெசவாளர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகின்றனர். இந்தத் திட்டத்தில் சேர்ந்துள்ள நெசவாளர் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தாம் பெறும் கூலியில் ரூபாய் ஒன்றுக்கு 0.06 காசு சந்தாவாகச் செலுத்த வேண்டும். மாறில அரசு நெசவாளர் பெற்ற கூலியில் ஒரு ரூபாய்க்கு 0.03 காசு வீதம் வழங்குகிறது. இவ்வகையாகச் சேர்ந்த பணத்திற்கு அரசு வட்டியும் வழங்கி உறுப்பினரது கணக்கில் சேமித்து வருகிறது.

இத்திட்டத்தில் சந்தாதாரர் ஒருவர் அவர் 55 வயது அடையும் முன்னரே இறந்து விடுவாரெனில், அவருடைய நியமனதாரர் அல்லது அவருடைய சட்டப்பூர்வமான வாரிசுதாரருக்கு ரூ. 3,000 இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்தும் மற்றும் அரசு பங்குத் தொகை மற்றும் அதற்குண்டான வட்டியுடன் அவர் கணக்கில் இருப்பில் உள்ள தொகை ஆகியவை வழங்கப்படும். இதுவன்றி கோ-ஆப்டெக்ஸ் தனது பொன் விழா ஆண்டை நினைவு கூறும் விதத்தில் ரூ. 2,000 மற்றும் இந்திய காப்பீட்டுக் கழகத்திடமிருந்து ரூ. 3,000 மொத்தம் ரூ. 5,000 வீதம் 1—7—1984 முதல் வழங்கி வருகிறது

(ஆ) மத்திய சிக்கன நிதித்திட்டம் :

1985–86 முதல் மத்திய அரசு, மத்திய சிக்கன நிதி திட்டம் எனும் ஒரு புதிய திட்டம் தொடங்கியுள்ளது. மத்திய சேமிப்பு திட்டம் போலவே மத்தியத் திட்டமும் மான்யமாக ரூபாய்க்கு மூன்று காசுகள் என்ற விதத்தில் அதிக பட்ச தொகையாக ஆண்டுக்கு ஒரு நபருக்கு ரூ. 90 அளிக்கிறது. மத்திய உதவியாக எல்லா நெசவாளர்களுக்கும் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தில் அவர் அளித்துள்ள தொகைக்கு ஏற்றவாறு செலுத்துகிறது. மத்திய அரசு ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் தமிழகத்

இதற்கு ரூ. 1,33,394 வழங்கியுள்ளது. 1989–90 ஆம் ஆண்டில் மத்திய சிக்கன நிதி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மத்திய அரசு ரூ. 66,09.600 அங்கீகரித் துள்ளது.

8. நெசவாளர் விட்டு வசதித்திட்டம் :

1962 ஆம் ஆண்டிற்குப் பின்னர் கைவிடப்பட்ட நெசவாளர் வீட்டு வசதித் திட்டம் மாற்றியமைக்கப்பட்டு, சீராக்கப்பட்ட நெசவாளர் வீட்டு வசதி திட்டமாக 1979–80 முதல் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. ஆறாவது ஐந்தாண்டு திட்டம் காலத்தில் 3,027 வீடுகள் கட்டப்பட்டன. 1—7—1982 ஆம் நாள் முதல் ஹட்கோ (வீட்டு வசதி மற்றும் நகரிய மேம்பாட்டுக் கழகம்) இத்திட்டத்தினை மாற்றியமைத்தது. அதன்படி ஒரு வீட்டிற்கு மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு ரூ. 12,000 ஆகும். அதற்கு ஹட்கோவிடமிருந்து கிடைக்கக்கூடிய கடன் தொகை ரூ. 9,700 ஆகும். மாநில மத்திய அரசாணை வீட்டிற்கு ரூ. 1,000க்கு நிதித்தொகை அளிக்கும். மீதமுள்ள தொகையான ரூ. 1,300 பயனாளர்களிடமிருந்து பெறப்பட வேண்டும். 1985–86ம் ஆண்டிலிருந்து இந்திய அரசு புதிய ஜவுளி கொள்கையின் கீழ் வீடு மற்றும் தொழில் கூடத்திற்கு முறையே ரூ. 1,000 +ரூ. 1,500 (மொத்தம் ரூ. 2,500) மான்யம் அளிக்க ஆரம்பித்துள்ளது. இது போலவே மாநில அரசும் சம பங்காக முறையே ரூ. 1,000 +ரூ. 1,500 (மொத்தம் ரூ. ரூ. 2,500 வழங்குகிறது. ஆக நற்போது இருக்கும் நடைமுறை திட்டத்தின் கீழ் ஒரு வீட்டிற்கு ரூ. 5,000 மான்யமும் மற்றும் ஹட்கோ உதவி திட்டத்தின் கீழ் ரூ. 10,000 வழங்கப்படுகின்றது. தறியுடன் கூடிய தொழிற்கூடத்திற்கான விவரங்கள் கீழே கொடுக் கப்பட்டுள்ளது. மொத்தம் ஒரு வீட்டிற்கு ஆகும் செலவு ரூ.15,000.

	ரூ.
1. ஹட்கோவிடம் இருந்து கடன் ...	10,000
2. மத்திய அரசின் மான்யம்	2,500
3. மாநில அரசின் மான்யம்	2,500
மொத்தம்	15,000

1989–90 ஆம் ஆண்டிற்குள் 2,500 தொழிற்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டத் திட்டம் வகுப்பட்டு, 1,323 வீடுகள் முடிக்கும் நிலையில் உள்ளது.

பட்டு வளர்ப்பு.

சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு 1979ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட இத்துறை இம் மாநிலத்தில் பட்டு உற்பத்தியை அதிகரிப்பதிலும் வேளாண்மைத் தொழிலும் கிராமப்புறங்களிலும் வேலை வாய்ப்பை உருவாக்குவதிலும் பத்தாண்டுகள் சாதனை நிகழ்த்தியுள்ளது.

அலுவல்கள் :—

பட்டுப்புழு வளர்ப்புத் துறையின் இன்றியமையா அலுவல்கள் பின்வருமாறு:—

(அ) முசுக்கட்டைச் செடி பயிரிடுவதிலும், பட்டுப் புழு வளர்ப்பிலும் உழவர் களுக்குப் பயிற்சி அளித்தல்.

(ஆ) நோயில்லாத முட்டைகள் கிடைப்பதை உறுதி செய்தல்.

(இ) பட்டுப்புழு நோய்கள் காரணமாக ஏற்படுகின்ற இழப்புகளைத் தடுக்கும் வகையில், பட்டுப்புழு வளர்ப்போருக்கும் நிதியுதவி அளித்தல்.

(ஈ) பட்டுப் புழுக் கூடுகளை ஆதரவு விலையில் வாங்கி விற்க அங்காடிகளை நடத்துதல்.

(உ) பட்டுப் புழுக் கூடுகள் கிடைப்பது சீராக இல்லாத காலங்களில் அரசு பட்டுநூலிழைப் பிரித்தெடுக்கும் பிரிவில் பதப்படுத்துவதன் மூலம் சுச்சாப்பட்டு உற் பத்தியை அதிகரித்தலும், தனியார் துறையில் நூலிழைப் பிரித்தெடுக்கும் பணியை மேம்படுத்தலும்

திட்ட நிதிச்சாதனை :

1989–90 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட நடந்தேறிவரும் திட்டங்கள் குறித்த விவரங்கள் வருமாறு:

திட்டப்பணி:—1989–90 ஆம் ஆண்டில் 3,650 ஏக்கரில் முசுக்கட்டைச் செடிகள் பயிரிடுவதென இலக்கு நிர்ணயிக்கப்பட்டதற்கு ஆண்டில் 4,068 ஏக்கரில் பயிரிடப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 6,094 உழவர்கள் கொண்டுவரப்பட்டனர். 1989–90ல் மொத்தம் ரூ.568.44 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்க இத்திட்டப்பணியின் கீழ் ரூ. 542.10 இலட்சம் செலவிடப்பட்டது.

இவ்வாண்டில் பட்டுப்புழு உற்பத்தி வழங்கும் திட்டம் தொய்வின்றி நிறைவேற்றப் பட்டது. இம் மாநிலத்தில் 16 மில்லியன் முட்டைக் குவியல்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டுமென இலக்கு நிர்ணயித்திருக்க பட்டுப் புழு முட்டை உற்பத்தி நிலையங்களில் 17.3 மில்லியன் முட்டை குவியல்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

88 இலட்சம் கிலோ பட்டுப் புழுக்கூடுகள் உற்பத்தி செய்வதென இலக்கு நிர்ணயித் திருக்க 99.30 இலட்சம் கிலோ பட்டுப் புழுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டன. அதே போன்று இவ்வாண்டில் 3.35 இலட்சம் கிலோ கச்சாப்பட்டு உற்பத்தி செய்வதென இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 3.43 இலட்சம் கிலோ கச்சாப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

1989–90ல் 193 ஏக்கரில் முசுக்கட்டைச் செடி பயிரிடுவதென இலக்கு நிர்ணயித் திருந்த 200 ஏக்கரில் இது பயிரிடப்பட்டுள்ளது. மலைப்பகுதிகளில் வட கிழக்குப் பருவ மழை தவறியதால், இக்குறைவு, அரசு இவ்வாண்டில் ரூ. 14.65 இலட்சம் ஒதுக்கியது. அதில் ரூ. 14.13 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் :

மலைப் பகுதிகளில் வாழ்கின்ற பழங்குடியினர் குடும்பங்களின் சமூகப் பொரு ளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன் சேலம், திருச்சிராப்பள்ளி, தென் ஆற்காடு, தருமபுரி வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களின் மலைப் பகுதிகளில் இணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பட்டுப்புழு வளர்ப்புத் திட்டம் செயலாக்கப் பட்டு வருகின்றது. நடப்பாண்டில் பட்டுப் புழு வளர்ப்புத் தொழிலில் 340 குடும்பங் களை ஈடுபடுத்துதல் என்கிற இலக்கின்படி 340 பழங்குடியினர் குடும்பங்கள் இத்திட்டத் தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்த ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 69.67 இலட்ச மாகும். ரூ. 71.46 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம்:—மாதிரி நர்சரிப் பண்ணைகள், நாற்றங்கால் அடைத்தல், பயனீட்டாளர் நலனை நோக்கமாகக் கொண்ட திட்டங்கள் போன்ற பல்வேறு வளர்ச்சிப் பணிகள் திருநெல்வேலி, அண்ணா, காமராஜர், கோயம் புத்தூர், கன்னியாகுமரி மாவட்டங்களில் மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 200 ஏக்கர் பரப்பில் முசுக்கட்டைச் செடி பயிரிடப்பட வேண்டும் என்று ஆண்டு இலக்கு நிர்ணயிக்கப்பட் டிருக்க, 400 உழவர்கள், 200 ஏக்கர் பரப்பில் முசுக்கட்டைச் செடியை பயிரிடப் பட்டுள்ளனர். இந்த ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட மூலதனச் செலவு ரூ. 10 இலட்ச மாகும். ஏற்பட்ட செலவு ரூ. 10.83 இலட்சமாகும்.

5. அறிக்கை ஆண்டில் செயலாக்கப்பட்ட புதிய திட்டங்கள். (திட்டம் ஒவ்வொன்றுக்குமான நோக் கங்கள், இலக்குகள் திட்டநிதிச் சாதனைகள் :

(1) தேசிய பட்டுப்புழு வளர்ப்புத்திட்டம் :

உலக வங்கி கமிஸ் நாட்டு மேம்பாட்டுக் கூட்டுறவு, கமிஸ் வங்கி ஆகியன அளித்த ரூ. 41.79 கோடி நிதி உதவியுடன் தேசிய பட்டுப்புழு வளர்ப்புத் திட்டம், இம் மாநிலத் திலுள்ள பத்து மாவட்டங்களில் தற்போது செயலாக்கப்பட்டு வருகின்றது. இந்த ஐந்தாண்டுத் திட்டம் இம் மாநிலத்தில் முசுக்கட்டை பயிரிடும் பரப்பை மேலும் 12,000 எக்டேருக்கு அதிகரிப்பதையும் இத் திட்டக்காலத்தில் ஒரு இலட்சம் டேருக்கு கூடுதல் வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டதாகும்.

(2) இம் மாநிலத்தில் கச்சாப்பட்டு உற்பத்தித் திறன் இப்போது சுமார் 700 மீட்டராக இருக்க இத்திட்டம் செயலாக்கி முடிக்கப்பட்ட பின்னர் இது 1500 மீட்டராக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களை எய்தும் பொருட்டு பட்டுப்புழு வளர்ப்புத் துறை இத்திட்டத்தில் கருதப்பட்ட பல பணிகளை முதலாண்டிலேயே தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளக் கருதப் பட்டுள்ள முக்கியப்பணிகள் :—

(அ) உயர்ரக முசுக்கட்டைச் செடிய்ர்களுக்குக் கொண்டு கூடுதல் பரப்பில் முசுக்கட்டைச் செடிகளைப் பயிரிடுதல்.

(ஆ) உழவர்களுக்கும், பட்டுநூலிழைப் பிரித்தெடுப்போருக்கும் பயிற்சி வசதி அளித்தல்.

(இ) உழவர்களுக்கும், பட்டுநூலிழைப் பிரித்தெடுப்போருக்கும் கடன் வசதி அளித்தல்.

(ச) அரசு பட்டுப் புழு முட்டை. உற்பத்தி நிலையங்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் மூலமும் தனியார் பட்டுப் புழு முட்டை உற்பத்தி நிலையங்களுக்கு ஊக்கமளிப்பதன் மூலமும் இம்மாநிலத்தில் பட்டுப் புழு முட்டை உற்பத்தித் திறனைப் பெருக்குதல்,

(உ) பட்டுப் புழுப் பண்ணைகள் பட்டுப்புழுக்கூடு அங்காடிகள். தொழில் நுட்பப் பணி மையம் முதலியன போன்ற அடிப்படை வசதிகளை அதிகரித்தல்,

3. இம்மாநிலம். இத்திட்டத்தில் கருதப்பட்ட அனைத்துத் திட்டங்களையும் மேற் கொண்டுள்ளது, நடப்பு ஆண்டில் எய்தப்பட்ட சில முக்கியமான சாதனைகள் வருமாறு—

(1) இம்மாநிலத்தில், இத்திட்டப்பணிகளின் முன்னேற்றத்தை. கண்காணிக்க, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தலைமையில் மாநில அளவிலான கண்காணிப் புக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது,

இத்திட்டம் தொடர்பான செயற்குறிப்புகளுக்கு அனுமதி அளித்து, காலதாமத மின்றி நிதி வழங்க அனுமதி அளிக்க, தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு ''அதிகாரமளிக்கப்பட்ட குழு'' என்று அமைக்கப்பட்டது,

மாவட்ட அளவில் திட்டப்பணியைக் கண்காணிப்பதற்கு. மாவட்ட ஆட்சித் தலைவர்களைத் தலைமையாகக் கொண்டு மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுக் கள் அமைக்கப்பட்டுள்ளன,

1989—90ஆம் ஆண்டிற்கான திட்டம் :—

முசுக்கட்டை செடி வளர்ப்புத் திட்டத்தின் கீழ். சுமார் 5,115 உழவர்கள் கூடுதலாக 1,367 எக்டேர் நிலப்பரப்பில் முசுக்கட்டை பயிரிடப்பட்டுள்ளது, மொத்தம் 5,115 உழவர்களில். 570 பேர் ஆதி திராவிடர்களும், 282 பேர் பழங்குடியினரும். மொத்தத்தில் 1,207 மகளிரும் அடங்குவர்,

16,34 பயனீட்டாளர்களுக்கென ரூ. 144 இலட்சம் கடனாகத் தரப்பட்டுள்ளது, இதில் 357 பேர் பெண்களாவர்,

(இ) நோய் பற்றாத முட்டைகளில் உற்பத்தி இலக்கு 160 இலட்சமாக இருக்க இந்த ஆண்டில் இம்மாநிலத்தில் பட்டுப் புழு முட்டை உற்பத்தி 173 இலட்சமாகும், குறிப் பிட்ட இந்த ஆண்டில் இந்த மாநிலத்தில், இது உயரளவு உற்பத்தி என்று பதிவாகி யுள்ளது,

(ஈ) இந்த ஆண்டில், பட்டுப் புழு முட்டை உற்பத்தி செய்யும் தனிப்பட்ட நால்வருக்கு உரிமங்கள் வழங்கப்பட்டன, பட்டுப்புழு முட்டை உற்பத்திச் செய்யும் தனிப்பட்டோரை ஊக்குவிக்கும் வகையில். இதன் தயாரிப்பாளர்கள் தேவையான சாதனங்களைப் பெற அரசு 25 சதவீத உதவித் தொகையை இவர்களுக்கு வழங்குகிறது.

(உ) இந்த ஆண்டில் 26 புதிய தொழில்நுட்பப் பணி மையங்கள் அமைக்கப் பட்டன,

(ஊ) முட்டை வளர்ப்புப் பண்ணைகளில் மேம்படுத்தப்பட்ட பல்வேறு முசுக்கட்டை செடி வகைகளைக் கொண்டு மீண்டும் செடி வளர்க்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன,

(எ) இத்திட்டத்தில். மொத்தம் ரூ. 3,5 கோடி மூலதனச் செலவில் தனி கட்டுமானத் திட்டங்களை மேற்கொள்வதற்கு மேற்பார்வைப் பொறியாளரின் தலைமை யில் துணைப்பணியாளர்களுடன் பொறியியல் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது,

(ஏ) இந்த ஆண்டில் 12,000 பேர்களுக்கு கூடுதலாக வேலைவாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளன,

(ஐ) பட்டுநூல் சுற்றும் 175 சாதனங்கள் கூடுதலாக நிறுவப்பட்டன,

(ஒ) மொத்தம் 1093 உழவர்களுக்கும், பட்டுநூல் சுற்றும் பணியார்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது, இவர்களில் 555 பேர் பெண்கள் ஆவர்,

(ஓ) நிதி ஒதுக்கீடு ரூ. 188 இலட்சமாயிருக்க செலவிடப்பட்ட தொகை ரூ. 80,282 இலட்சமாகும்,

II. போர்டு பவுன்டேஷன் உதவி பெறும் திட்டம் :

1984 ஆம் ஆண்டில் சுமார் 200 பெண்களுக்கு சுய வேலை வாய்ப்பு அளித்து உதவும் பொருட்டு தொடங்கப்பட்ட ஃபோர்டு ஃபவுன்டேஷன் உதவி பெறும் நிலை (1) திட்டம். 31—12—1988 ஆம் நாளுடன் முடிவடைந்தது. இத்திட்டத்தின் தொடர்ச்சியாக இதன் இரண்டாம் நிலைப் பணிகள் ரூ. 33,48 இலட்சம் முழு மானியத் தொகையுடன் தொடங்கப்பட்டு மூன்று ஆண்டுகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத் தின்படி பட்டுநூல் சுற்றுதல், பச்சைப் புழு வளர்த்தல் போன்ற பணிகளில் நலிவுற்றப் பிரிவினரைச் சேர்ந்த பெண்களை ஈடுபடச் செய்யும் வகையில் தருமபுரி, சேலம், பெரியார் ஆகிய மாவட்டங்களிலுள்ள கிராமப்பகுதிகளில் மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் ஐந்து தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. பட்டுப்புழு வளர்ப்புத் திட்டத்தின் மூலம், இப்பெண்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் இப் பெண்களுக்கு சுய வேலை வாய்ப்பு அளிப்பதற்கு. ஃபோர்டு ஃபவுன்டேஷன் நிறுவனத் திடமிருந்து இறுதி மானியமாக 75,000 அமெரிக்க டாலர்கள் எதிர்பார்க்கப்படுகிறது. இது வரையில் இத்திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்ற 79 மகளிருக்கு சுய வேலைவாய்ப்புக் காக ரூ. 3,160 இலட்சம் உதவி அளிக்கப்பட்டுள்ளது.

III. மேம்பாட்டுக் கூட்டுறவுகளின் நிதியுதவித் திட்டம் :—

1987 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் சுவிட்சர்லாந்துக்கும் இந்திய அரசுக்கும் இடையே ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, நமது மாநில அரசிடமிருந்து 21,90 இலட்சம் ரூபாய் மற்றும் சுவிஸ் அரசிடமிருந்து 99,90 இலட்சம் ரூபாய் பங்குத் தொகை உதவியுடன் மூன்றாண்டுகளில் பெரியார் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன.

மேம்பாட்டு சுவிஸ் நிதியுதவித் திட்டத்தின் மற்றொரு கூறு மழை பொழிவதைப் பார்த்து மரங்களை வளர்ப்பதாகும். இத்திட்டத்தின் கீழ். 7,20 இலட்சம் நாற்றுக்கள் வளர்க்கப்பட்டு நடுவதற்காக உழவர்களுக்கு வழங்கப்பட்டன. இதுவரை 170 எக்டேர் நிலப்பரப்பில் அவை நடப்பட்டுள்ளன, தொற்று நோய்த் தடுப்பு பிரிவுகளுக்கும், பட்டுப் புழுக் கூடு இயல் அங்காடிகளுக்கும் ஊர்திகள் வழங்கப்படுகின்றன. அவை பட்டுப்புழு முட்டைகள் காணப்படும் இடங்களிலும், பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள கிராமப்பகுதிகளிலும் இயங்குகின்றன. இத்திட்டத்தைக் கண்காணிக்க நிலுவாகப்பிரிவு ஒன்றும் செயல்படுகின்றது.

4. அனைத்து நாட்டுத் தொழிலாளர் அமைப்பின் நிதியுதவித் திட்டம் :

அனைத்து நாட்டுத் தொழிலாளர் அமைப்பின் நிதியுதவி பெறும் பட்டுப்புழு வளர்ப்புத் திட்டம் 500 ஏக்கர் பரப்பில் முசுக்கட்டை மரங்கள் வளர்ப்பதையும் மோசிக் வேலைவாய்ப்பை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம், தருமபுரி மாவட்டத்தின் வடமேற்குப் பகுதியில் தனிவட்டாரத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டில் 50 ஏக்கரில் முசுக்கட்டைப் பயிரிடவேண்டுமென்ற திட்ட இலக்கு முழுவதுமாக எய்தப்பட்டுள்ளது. 1,113 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டிருக்க, இதற்கான மொத்தச் செலவு 1,027 இலட்சம் ரூபாயாகும்.

5. அனைத்து நாட்டு வேளாண்மை மேம்பாட்டு நிதி :

அனைத்து நாட்டு வேளாண்மை மேம்பாட்டு நிதியின் உதவி பெறும் பட்டுப்புழு வளர்ப்புத் திட்டங்கள் தருமபுரி மாவட்டத்தில் மகளிரின் பொருளாதார முன்னேற்றத் துக்காக, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 47 பேருக்கு பயன் திட்டச் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க 1989—90 ஆண்டில் மகளிர் 171 பேர் இத்திட்டத்தினால் பயனடைந்தனர். இத்திட்டத்திற்காக 2,406 இலட்சம் ரூபாய் செல விடப்பட்டுள்ளது.

நல்வாழ்வு இந்திய மருத்துவம் ஓமியோபதி மற்றும் குடும்ப நலத்துறை

பிறப்பு—இறப்பு மற்றும் திருமணப்பதிவு:

•

1. பிறப்பு இறப்பு :

1. 1986-ம் ஆண்டு பிறப்பு இறப்பு திருமணப் பதிவுச் சட்டம் (1986-ம் வருடத்திய மத்திய சட்டம்) இந்தச் சட்டத்தின் கீழ் பிறப்பு இறப்பு பதிவுகள் விருப்பத்துக்குட் பட்டவை. இந்த சட்டம் ஜனத்தொகையில் சிறுபான்மையினரிடையே அமுல்படுத்தப் இறது. அதாவது கிறித்துவ சிறுபான்மையினரிடையே அமுல்படுத்தப்படுகிறது. அதாவது கிறிஸ்துவ மதத்தைச் சார்ந்தவர்களுக்கும் இந்திய வாரிசுரிமை சட்டம் நடைமுறையில் உள்ளவர்களுக்கு மட்டுமே. இந்த சட்டத்தின் கீழ் எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தாசில்தார்கள், துணைத் தாசில்தார்கள், மாவட்டப் பதி வாளர்கள், சார்பதிவாளர்கள், மற்றும் இந்திய கிறிஸ்துவ திருமணச் சட்டம் 1872-ன் படி திருமணப் பதிவாளர்கள் ஆகியோர் பிறப்பு, இறப்புப் பதிவாளர்கள் ஆவார்கள். இந்தப் பதிவாளர்கள் யாவரும் நகல்களை ஒவ்வொரு காலாண்டு பிறப்பு, இறப்பு, திருமணங்கள் தலைமைப் பதிவாளருக்கு அனுப்பப்படவேண்டும், இவ்வடிப்புகளின் நகல்கள் அட்டவணை செய்யப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.

இவ்வாண்டில் பிறப்பு இறப்புகள் ஏதும் பதிவு செய்யப்படவில்லை. இதுபோல் முந்தைய ஆண்டிலும் பிறப்பு இறப்புகளை ஏதும் பதிவு செய்யப்படவில்லை.

2. தமிழ்நாடு மாநகர் முனிசிபல் சட்டம் 1919 :

(அ) சென்னை, மதுரை, மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் தங்கள் பதிவு செய்யும் வெளி நாட்டவர்கள் பிறப்பு இறப்புகளில் வடிப்புகளை தலைமைப் பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். சென்னை, மதுரை மாநகராட்சி சுகாதார அதிகாரிகள் இவ்வடிப்புகளை அனுப்புகிறார்கள். இவ்வலுவலக இவ்வடிப்புகள் அட்டவணை செய்யப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன இம்மாதிரி பிறப்பு, இறப்புகள் பற்றி இவ்வாண்டு சென்னை மாநகராட்சியிடமிருந்து அறிக்கைகள் வரப்பெறவில்லை. கடந்த ஆண்டு 56 அறிக்கை கள் பெறப்பட்டன.

இவ்வாண்டு மதுரை மாநகராட்சியிடமிருந்து பிறப்பு, இறப்புகள் குறித்து அறிக்கைகள் ஒன்றும் வரப்பெறவில்லை. முந்தைய ஆண்டில் பிறப்பு, இறப்பு பற்றி அறிக்கைகள் பெறப்படவில்லை.

கோயம்புத்தூர் மாநகராட்சியிடமிருந்து பிறப்பு, இறப்பு பற்றிய அறிக்கைகள் ஏதும் பெறப்படவில்லை.

3. தமிழ்நாடு 1929 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டம் :

இம்மாநிலத்தில் உள்ள நகராட்சிகள் வெளிநாட்டவர்களின் பிறப்பு, இறப்பு குறித்த பதிவு நகல்களை இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும் குறித்த காலங்களில் பிறப்பு, இறப்பு குறித்த பதிவு நகல்கள் பெறப்பட்டு அட்டவணை செய்து பாதுகாக்கப்படுகின்றன. இந்த அறிக்கை ஆண்டில் 20 பிறப்புப் பதிவுகளும் 25 இறப்பு பதிவுகளும் பெறப்பட்டன. கடந்த ஆண்டு 10 பிறப்பு பதிவுகளும் அறிக்கைகளும் 7 இறப்பு பதிவுகளும் பெறப்பட்டன.

கண்டோன்மெண்ட் கோர்ட் :

தமிழ்நாட்டில் உள்ள கண்டோன்மெண்டுகளில் பதியப்படும் வெளிநாட்டவர்களில் பிறப்பு இறப்புகளில் பதிவு நகல்கள் வெலிங்டன் (நீலகிரி மாவட்ட) கண்டோன் மெண்டுகளிலிருந்தும் பதிவு நகல்கள் பெறப்பட்டு அட்டவணை செய்து இவ்வலுவலகத் தில் பாதுகாக்கப்படுகிறது. இவ்வாண்டு பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் பெறப்பட வில்லை. முந்தைய ஆண்டு பிறப்பு மற்றும் இறப்பு அறிக்கைகள் பெறப்படவில்லை.

5. 1965 ஆம் ஆண்டு பிறப்பு, இறப்பு பதிவு சட்டம் :

கிராமப் புறங்களில் பிறப்பு, இறப்புகள் பற்றி இச்சட்டத்தின் கீழ் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டும். இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வெளி நாட்டவர்கள் பிறப்பு, இறப்பு பதிவு நகல்கள் பிறப்பு, இறப்பு பதிவு துறை தலைவர் அவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும். இவ்வாறு பெறப்படும் பதிவுநகல்கள் இவ்வலுவலகத் தில் அட்டவணை செய்து பாதுகாக்கப்படுகின்றன. இந்த ஆண்டில் 35 பிறப்பு அறிக்கைகளும் 21 இறப்பு அறிக்கைகளும் பெறப்பட்டன. சென்ற ஆண்டில் பிறப்பு, இறப்பு அறிக்கைகள் ஏதும் பெறப்படவில்லை.

4. திருமணங்கள் :

(அ) 1872ஆம் ஆண்டு இந்திய கிறிஸ்துவ திருமணச் சட்டம் :

இந்தச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்விக்கக்கூடியவர்கள் வருமாறு :—

1. பிரிவு 7-ன்படி திருமணப் பதிவாளர்கள்.

2. பிரிவு 6 மற்றும் 9-ன்படி உரிமம் பெற்றவர்கள்.

3. ரோம், இங்கிலாந்து. ஸ்காட்லாந்து தேவாலய பாதிரிமார்கள்.

ரோம், இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, கிறிஸ்துவ தேவாலய பாதிரிமார்கள் அல்லாத ஏனைய தேவாலயங்களில் நியமிக்கப்பெற்ற பாதிரிமார்கள் வெளிநாட்டவர்களின் திருமணப் பதிவுகளின் நகல்களை உரிமதாரர்கள் பாதிரிமார்கள் மாதந்தோறும் அனுப்புகிறார்கள். இந்திய கிறிஸ்துவர்களின் திருமணப் பதிவு நகல்கள் ஒவ்வொரு காலாண்டுக்கும் அனுப்பப்படுகின்றன. இவ்வாறு பெறப்படும் பதிவு நகல்கள் இவ்வலுவலகத்தில் அட்டவணை செய்து பாதுகாக்கப்படுகின்றன.

இந்த அறிக்கை ஆண்டில் 25,436 திருமணப் பதிவு நகல்கள் பெறப்பட்டன. அவற்றில் 5 வெளிநாட்டவர்களையும், 25,431 இந்திய கிறிஸ்துவர்களையும் சார்ந்தவை. கடந்த ஆண்டு பெறப்பட்ட 23,768 திருமணப் பதிவு நகல்களில் 7 பதிவு நகல்கள் வெளிநாட்டவர்களையும் 23,761 பதிவு நகல்கள் இந்திய கிறிஸ்துவர்களையும் சார்ந்தவை.

1936 ஆம் ஆண்டு பார்சி திருமணம் மற்றும் விவாகரத்துசட்டம் :

இந்தச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டுள்ள இந்தியப் பதிவுச் சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட மாவட்டப் பதிவாளர்கள் ஆவார்கள், திருமணம் நடத்திக் கொடுத்த புரோஹிதர் திருமணம் செய்து முடித்தப்பின் திருமணச் சான்று ஒன்றை மாவட்டப் பதிவாளருக்கு அனுப்பப்பட வேண்டும். இதைப் பதிவாளர் பதிவேட்டில் பதிவு செய்யவேண்டும். பதிவேட்டில் பதிவு செய்துள்ள சான்றின் நகல்களை இவ்வலுவலகத்திற்கு ஒவ்வொரு காலாண்டுக்கும் அனுப்பவேண்டும். இந்த சான்றின் நகல்கள் அட்டவணை செய்யப்பட்டு இவ்வலுவலகத்தில் பாதுகாக்கப்படுகிறது. இந்த அறிக்கை ஆண்டின் திருமணங்கள் ஏதும் பதிவு செய்யப்படவில்லை. கடந்த ஆண்டில் திருமணம் பதிவு செய்யப்படவில்லை.

தேடுதல்களும் நகல்களும் :

தேடுதல்கள் :— அறிக்கை ஆண்டில் பிறப்பு—இறப்பு மற்றும் திருமணங்கள் தொடர்பாக செய்யப்பட்ட பதிவுகளின் நகல்களும் ஒப்புறுதி தொடர்பான 149 தேடுதல்களும் செய்யப்பட்டன, ஆனால் முந்தைய ஆண்டில் 15 தேடுதல்களும் செய்யப்பட்டன, இவற்றில் இவ்வாண்டில் வெளி நாடுகளில் வசிப்பவர்களிடம் இருந்து 13 தேடுதல் விண்ணப்பங்கள் பெறப்பட்டன. ஆனால் அதற்கு முந்தைய ஆண்டில் 10 பெறப்பட்டன.

நகல்கள் :— அறிக்கை ஆண்டில் இவ்வாண்டில் 138 பிறப்பு—இறப்பு திருமணச் சான்று நகல்கள் வழங்கப்பட்டன. இவற்றில் 18 வெளிநாட்டில் வசிப்பவர்களுக்கு வழங்கப்பட்டன. முந்தைய ஆண்டு 170 சான்றளிக்கப்பட்ட நகல்கள் வழங்கப் பட்டன. இவற்றில் 20 வெளிநாட்டில் வசிப்பவர்களுக்கு வழங்கப்பட்டது.

நிதி நிலைமை :— முந்தைய ஆண்டில் ரூ. 2,07,772.20 வருவாய் கிடைத்திருக்க இத்தொறை நிர்வகித்து வரும் பிறப்பு—இறப்பு மற்றும் திருமணங்கள் தொடர்பாக பல்வேறு சட்டங்களின் கீழ் அறிக்கையாண்டின்படி ரூ. 2,49,545.30 கிடைத்தது. முந்தைய ஆண்டில் ரூ. 2,07,779.20 வருவாய் கிடைத்தது. பணியாளர்களைக் குறித்து எற்பட்ட செலவு முந்தைய ஆண்டில் ரூ. 84,900.10 ரூபாய் ஆக இருக்க அறிக்கை ஆண்டில் ரூ. 89,947.40 ஆக உள்ளது.

விவர அறிக்கை. I.

1886 ஆம் ஆண்டு பிறப்பு—இறப்பு, திருமணம் பதிவு சட்டத்தின்கீழ் சட்டம் 6/1886 :

அலுவலர்களின் எண்ணிக்கை.	பதிவு அலுவலர்கள் எண்ணிக்கை.	பிறப்பு-இறப்பு களின் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை.	பிறப்பு-இறப்பு பதிவு களின் எண்ணிக்கை.	
			பிறப்புகள்	இறப்புகள்.
(1)	(2)	(3)	(4)	(5)
பதிவுத்துறை அலுவலர்கள்	626			
வருவாய்த்துறை அலுவலர்கள்.	1,217			
1872ம் ஆண்டு சட்டத்தின் கீழ் திருமணப் பதிவாளர்கள்.	23			
1988–89ஆம் ஆண்டில் மொத்தம்.	1,866			
1989–90ஆம் ஆண்டில் மொத்தம்.	1,866			

விவர அறிக்கை II.

தமிழ்நாடு மாநிலத்தில் செயல்படும் தமிழ்நாடு 1989ம் ஆண்டு மாநகராட்சி சட்டம், (2) தமிழ்நாடு 1920ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சியின் சட்டம், (3)கன்டோன்மென்ட், (4) 1907ம் ஆண்டு பிறப்பு-இறப்பு பதிவுச் சட்டம் ஆகியவற்றின் கீழ் அயல் நாட்டவர் பிறப்பு—இறப்பு ஆகியவற்றின் விவர அறிக்கை பதிவேடு நகல்கள் :

பெயர்.	பிறப்புகள்.		இறப்புகள்.	
	1988–89	1989–90	1988–89	1989–90
தமிழ்நாடு மாநகராட்சி சட்டம் (4/1919)	இல்லை.	இல்லை.	இல்லை.	இல்லை.
தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (5/1920)		20		25
கன்டோன்மென்ட் விதியின கீழ் 1907 ஆம் ஆண்டு பிறப்பு-இறப்பு பதிவாளர் சட்டம் (18/1969)	..	35	..	21
மொத்தம்	..	55	..	46

விவர அறிக்கை III.

இந்திய இருத்துவ திருமணச் சட்டம், 1972-ன்படி திருமணங்கள் நடைபெற்றவை.

தமிழ்நாட்டில் நடைபெற்ற திருமணங்கள்.	வெளிநாட்டவர்.		இந்திய கிறிஸ்துவர்.	
	1988–89	1989–90	1988–89	1989–90
(1)	(2)	(3)	(4)	(5)
1. திருமணப்பதிவாளர்கள் (பிரிவின்படி)		...	...	12
2. உரிமைதாரர்கள் (பிரிவு 6 மற்றும் 7)			—	...
3. ரோம், இங்கிலாந்து, ஸ்காட்லாந்து தேவாலயங்களைத் தவிர ஏனைய தேவாலயங்களைச் சேர்ந்த பாதிரியார்கள்	7	5	23,761	25,436
மொத்தம்	7	5	23,761	23,448

1936ம் ஒருடத்திய பார்சி திருமணம் மற்றும் திருமண சட்டத்தின்கீழ் 1989–90ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட திருமணங்கள் ஏதும் இல்லை.

1935 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம்,

இச்சட்டம் 1—4—1968ஆம் நாள் முதற்கொண்டு தமிழ்நாட்டில் செயலுக்கு வந்தது. இந்து திருமணச் சட்டம். அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகள் ஆகியவற்றை நிருவகிக்கும் தலைமைக் கட்டுப்பாட்டு அதிகாரியாகப் பிறப்பு—இறப்பு திருமணங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்யும் தலைமைப் பதிவாளர் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்,

2, 1948ஆம் ஆண்டு இந்தியப் பத்திரம் பதிவுச் சட்டத்தின் 6ஆம் பிரிவின் கீழ், நியமிக்கப்பட்ட அனைத்து மாவட்டப் பதிவாளர்கள், சார்பதிவாளர்கள் (உறுதி மொழி) அனைவரும் அவருடைய அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதியில் திருமணப் பதிவு அதிகாரிகளாகத் தொடர்ந்து பணியாற்றுகின்றனர், மேலும் 1959ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட கோயில் நிருவாக அதிகாரிகள், அவர்கள் பணிபுரியும் கோயில்களில் இந்து திருமணங்களைப் பொறுத்தவரையில் திருமணப் பதிவாளர்கள் தொடர்ந்து பணியாற்றுகின்றனர்,

இந்து திருமணச் சட்டத்தின்கீழ் தற்போது 627 திருமணப் பதிவாளர்கள் பணியாற்றி வருகின்றனர், இவர்களுள் கோயில் நிருவாக அதிகாரிகளான 253 பதிவாளர்களும் எஞ்யுள்ளவர்கள் பத்திரப் பதிவு துறையைச் சேர்ந்த பதிவாளர்களும் ஆவர்,

3, இச்சட்டத்தின் கீழ் நிருவாகப் பணியை மேற்கொள்வதற்காக பத்திரப்பதிவு துறையைச் சேர்ந்த பணியாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர், இச்சட்டம் செயல் படுத்தத் தொடங்கிய பின்னர். இவ்வலுவலகத்தின் பிறப்பு—இறப்பு திருமணங்கள் ஆகியவற்றைப் பதிவுச் செய்யும் பிரிவின் பணிச்சுமை உயர்ந்துள்ளதைக் கருத்தில் கொண்டு. பத்திரப்பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில், உதவியாளர் பதிவு ஒன்றைக் கூடுதலாக ஏற்படுத்த 1967ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டது, இச்சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளைக் கவனிப்பதற்காக. மாவட்ட பதிவாளர் அலுவலகம். சார்பதிவாளர் அலுவலகம். கோயில் நிருவாக அதிகாரிகள் அலுவலகம் ஆகியவற்றில் தனியான அமைப்பு ஏதும் இல்லை,

3. இச்சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள்— திருமணங்களைப் பதிவு செய்தல் :—

இந்த ஆண்டில் 16898 திருமணங்கள் பதிவு செய்யப்பட்டன, கடந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட திருமணங்களின் எண்ணிக்கை 12698 ஆகும்,

(2) பதிவுறுக்களைத் தேடுதலும் நகல்கள் வழங்குதலும் :

அறிக்கை ஆண்டில் 5821 பதிவுருக்கள் தேடப்பட்டன, கடந்த ஆண்டில் 3467 பதிவுருக்கள் தேடப்பட்டன, ஆறிக்கையாண்டில் 16023 பதிவுகளின் சான்றளிக்கப்பட்ட நகல்கள் வழங்கப்பட்டன. கடந்த ஆண்டில் வழங்கப்பட்ட பதிவுகளின் நகல்களின் எண்ணிக்கை 14,673 ஆகும். இந்த ஆண்டில் தனியார் வீடுகளில் செய்யப்பட்ட 242 திருமணங்கள் பதிவு செய்யப்பட்டன, கடந்த ஆண்டில் மேற்சொன்ன வகையில் செய்யப்பட்ட 248 திருமணங்கள் பதிவு செய்யப்பட்டன,

4, நிதி நிலை விவரம் :

இந்த ஆண்டில் இச்சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட தொகை ரூ, 1,71,592.50 ஆகும், கடந்த ஆண்டு வசூல் தொகை ரூ, 1,16,533.40 ஆகும்,

தனிப்பட்ட பணியாளர் அமைப்பு எதுவும் இக்காரியத்திற்காக இல்லாததால் இச்சட்டத்தின் கீழ் தொகை எதுவும் செலவிடப்படவில்லை,

5. புள்ளி விவரம் :

1989-90 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் புள்ளிவிவரம் மேலே கொடுக்கப்பட்டுள்ளது,

அட்டவணை.

1989—90 ஆம் ஆண்டில் 1988 ஆம் ஆண்டு இந்த திருமணச் சட்டத்தின் கீழ் மேற் கொள்ளப்பட்ட பணி குறித்த புள்ளி விவரம் :

		காலம் 1989—90.
1.	இந்த ஆண்டில் பதிவு, செய்யப்பட்ட இந்துத் திருமணங்களின் எண்ணிக்கை ..	16898
2.	எத்தனைப் பதிவுருக்கள் தேடப்பட்டன என்பதன் எண்ணிக்கை ..	5821
3.	வழங்கப்பட்ட சான்றிதழ் நகல்களின் எண்ணிக்கை ..	16023
	இச்சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட தொகை ..	1,71,592.50

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு.

முன்னுரை :

தமிழ் நாட்டில் நல்வாழ்வுப் பணிகள், பொது சுகாதாரம், நோய்த் தடுப்புத்துறை, மருத்துவத்துறை, ஆரம்ப சுகாதார நிலையங்கள், குடும்பநலத்துறை, மருத்துவக் கல்வித்துறை, டாண்டா நல்வாழ்வுத் திட்டம், இந்திய மக்கள் தொகை திட்டம்-85, பொது சுகாதாரப் பயிற்சி தொடர்கல்வித் துறை, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி, மருந்துக் கட்டுப்பாட்டுத்துறை மற்றும் மாநில சுகாதாரப் போக்கு வரத்துத்துறை மூலமாக அந்தந்த துறை இயக்குநர்களின் அறிவுரைகளின்படி நிறை வேற்றப்பட்டு வருகின்றது.

குழந்தை உயிர் பிழைப்பு நெறி முறைகள் :

தடுப்பூசித் திட்டம்:

பெரியம்மை, நரம்புச் சில்லந்தி நோய் மற்றும் பிளேக் ஆகிய நோய்களை அறவே ஒழித்துவிட்ட நிலையில் மாநில அரசு இளம்பிள்ளைவாத நோயினை 1994 ஆம் ஆண்டிற்குள் ஒழித்திட உறுதி பூண்டுள்ளது. இத்தனை அடையும் நோக்கில் நெறி முறைகள் திட்ட நேரத்தில் இதர தடுப்பூசியினால் தடுக்கக் கூடிய வியாதிகளான தொண்டை அடைப்பான், கக்குவான் இசிவுநோய், காச நோய், மற்றும் தட்டம்மை நோய்களின் பணி மற்றும் இறப்பினைக் குறைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இசிவு நோய்க்குத் தடுப்பூசி :

கர்ப்பிணிகளுக்கு இசிவு நோயினைத் தடுக்க 2 தவணை இசிவு நோய்த்தடுப்பூசி நான்கு வார இடைவெளியில் போடப்படுகிறது, 1989-90-ல் 11,83 லட்சம் கர்ப்பிணிகளுக்கு இசிவு நோய்த்தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது.

இளம் பிள்ளைக் காச நோய்க்கெதிரான தடுப்பூசி:

குழந்தைகளுக்கு அவை பிறந்த 6 வாரத்திலிருந்து 12 மாதங்களுக்குள் குழந்தைகளுக்கு 3 தவணை வாய்வழி சொட்டு மருந்து ஒவ்வொரு அளவுக்கும் 4 வார இடைவெளியில் கொடுக்கப்படுகிறது. அடிப்படையாக 3 தவணை சொட்டு மருந்து கொடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஊக்குவிப்புத் தவணை 16வது மாதத்தில் கொடுக்கப்படுகிறது. 1989-90ஆம் ஆண்டு 11.18 லட்சம் குழந்தைகளுக்கு மருந்து கொடுக்கப்பட்டது. பிறந்த குழந்தைகளுக்கு சொட்டு மருந்து கொடுக்கும் திட்டம் தமிழ் நாட்டில் துவங்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. இது தவிர 9ம் மாதத்தில் தட்டம்மை ஊசியுடன் இளம்பிள்ளை வாத சொட்டு மருந்து கொடுப்பதும் ஊக்குவிக்கப் படுத்தப்படுகிறது.

தொண்டை அடைப்பான் கக்குவான் இசிவு நோய்களுக்கெதிரான தடுப்பூசி :

6 வாரம் முதல் 12 வயது வரை குழந்தைகளுக்கு 3 தவணை முந்நோய் தடுப்பூசி (DPT) நான்கு வார இடைவெளியில் போடப்படுகிறது, நடப்பு ஆண்டில் 11·03 லட்சம் குழந்தைகளுக்கு இத்தடுப்பூசி போடப்பட்டது.

தட்டம்மைக்கெதிரான தடுப்பூசி :

தட்டம்மைக்கெதிரான தடுப்பூசி 9 முதல் 12 மாத குழந்தைகளுக்குப் போடப்படுகிறது. ஒரே ஒரு தவணை மட்டுமே போடப்படுகிறது. 10.93 லட்சம் குழந்தைகளுக்கு இத்தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

பி.சி.ஜி. (காசநோய்க்கெதிரான தடுப்பூசி) :

பி.சி.ஜி. தடுப்பூசி பிறந்த குழந்தைகளுக்கும் ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் போடப்படுகிறது, நடப்பு ஆண்டில் 11.93 லட்சம் குழந்தைகளுக்கு இத் தடுப்பூசி போடப்பட்டது.

கர்ப்பகாலத்தில் ஊட்டச்சத்துக்குறை ரேகை தடுப்பு :

ஊட்டச்சத்துக்குறைவு, சோகை நோய் கர்ப்பிணிகளிடையே கடைசி 3 மாத கர்ப்ப காலத்தில் பரவலிர்க்க உள்ளது. இதைத் தடுக்க இரும்பு மற்றும் போலிக் அமிலம் மாத்திரைகள் (FST) பெரியவை கொடுக்கப்படுகிறது, ஆரம்ப க்கா

தார நிலைய மருத்துவ அலுவலர் சமூக நல செவிலியர் பகுதி செவிலியரது மேற் பார்வையில் கிராம நல செவிலியரால் இத்த இரும்புச் சத்து மாத்திரை கொடுக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1989–90 ல் 13,40 லட்சம் கர்ப்பிணிகள் இலக் கிற்கு எதிராக 12·12 லட்சம் கர்ப்பிணிகளுக்கு இரும்புச் சத்து மாத்திரை வழங்கப் பட்டது.

குழந்தைகளிடையே இரத்த சோகைத் தடுப்பு :

இரும்பு மற்றும் போலிக் அமிலம் மாத்திரைகள் (FST) சிறியவை மற்றும் இரும்புச் சத்து டானிக் 1 முதல் 5 வயது குழந்தைகளுக்கு இரத்த சோகையைத் தடுப் பதற்காக கொடுக்கப்படுகிறது. 1989–90ல் 26,82 லட்சம் குழந்தைகளுக்கு மேற் கண்ட மாத்திரை மற்றும் திரவம் கொடுக்கப்பட்டது.

குழந்தைகளிடையே தடுக்கக்கூடிய பார்வைக்குறைவு தடுப்பு :

5 வயதுக்குக் குறைவான குழந்தைகளிடையே உயிர்ச்சத்து 'எ' குறைபாடு காரணமாக ஏற்படும் பார்வைக்குறைவு நோயைத் தடுக்க 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு 6 மாதம் தொடங்கி 5 வயது வரை 6 மாத இடைவெளியில் 2· லட்சம் அகில உலக அளவு உயிர்ச்சத்து எ' திரவம் வாய் வழி கொடுக்கப்படுகிறது. 1989–90ல் இத்திட்டத்தின் கீழ் 100 விழுக்காடு இலக்கு (அதாவது 30 லட்சம்) எட்டப்பட்டது.

வாய் வழியாக உடல் நீர் வறட்சி போக்கு சிகிச்சைத் திட்டம் :

வாய் வழியாக உடல் நீர் வறட்சிப் போக்கும் சிகிச்சைத் திட்டம் மத்திய அரசு உதவியுடன் 1986–87 முதல் தமிழ்நாடு அரசினால் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் சில மாவட்டங்கள் வீதம் பல வட்ட அடிப்படையில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. 1989–90ல் தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது.

கடுமையான மூச்சுக்குழல் தொற்றுக்கட்டுப்பாடு திட்டம் :

இத்திட்டம் தமிழ்நாட்டில் சேலம், தென்னாற்காடு மாவட்டங்களில் டானிடா திட்டத்தின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் முன்மாதிரித் திட்டமாக இந்திய அரசு உதவியுடன் இராமநாதபுரம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் செயல்பட உள்ளது.

ஒருங்கிணைந்த மலைவாழ் மக்களின் நலத்திட்டம் மற்றும் துணைத் திட்டம் :

நமது இந்திய அரசின் வரையீட்டின்படி, மலைவாழ்பகுதியில் 3,000 மக்கள் தொகைக்கு ஒரு சுகாதார நிலை நிலையம் அமைக்கப்படுகிறது. இதன்படி 61 சுகா தார நிலை நிலையங்கள் மலை பகுதி வளர்ச்சித் திட்டத்திலும், 50 சுகாதார நிலை நிலையங்கள் ஒருங்கிணைந்த மலைவாழ்பகுதி வளர்ச்சித் திட்டத்திலும் செயல் படுத்தப்படுகிறது.

தொற்று நோய் கட்டுப்பாடு :

கடுமையாக குடல் இறைப்பை நோய்கள், கடுமையான வயிற்றுப்போக்கு வாந்தி பேதி, மலேரியா முறைக்காய்ச்சல், டைபாய்டு காய்ச்சல் யானைக்கால் நோய், மூளைக்காய்ச்சல் ,கூசநோய் முதலானவை பெரிய அளவில் பரவும் தொற்று நோய் கள் ஆகும். தடுப்பூசி மூலம், கட்டுப்படுத்தக்கூடிய நோய்கள், இளம்பிள்ளை வாதம் தட்டம்மை, சுக்குவான் இருமல், தொண்டை அடைப்பான், இவ்வு நோய், ஆகியவையாகும். இந்நோய்கள் கட்டுப்படுத்த நிறைவேற்றிடும் திட்டங்களினால் இந்நோய்களினால் ஏற்படும் இறப்புகள் மற்றும் நலிவுகள் குறைந்து உள்ளது. தொழு நோய், பால்வினை நோய்கள் (STD மற்ற AIDS) ஆகியவைகளும் முக்கிய சுகாதாரப் பிரச்சினையாகும். இதனை அடியோடு ஒழிப்பதற்கு தகுந்த கட்டுப் பாட்டு திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

தொற்று நோய்கள் :

தொற்று நோய்களினால் மக்கள் நலம் மற்றும் பொருளாதார்ம் பாதிக்கப்படு வதுடன் நோய்களையும் உயிரிழப்புக்களையும் ஏற்படுத்துகின்றன. தகுந்த நோய் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் செய்வதன் மூலம் இந்நோய்கள் பரவு வதை தடுக்க முடியும். 1939ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்நாடு பொது சுகா தாரம் சட்டத்தின் 56 மற்றும் 6 பிரிவுகளில் தொற்றுநோய்கள் கண்டவுடன் பொது மக்கள், தனி மருத்துவர்கள் மற்றும் மருத்துவ நிலையங்கள் கட்டாயமாக அறிவிப்பு செய்ய வழிவசை செய்யப்பட்டுள்ளது.

வயிற்றுப் போக்கு :

இந்நோய் தண்ணீரின் மூலம் வெகுவிரைவாகப் பரவுவதுடன் அதிக அளவில் உயிரிழப்புக்களை ஏற்படுத்துவதால் இது மிக கடுமையானது தொற்றுநோய்களில் முதலாவதாக கருதப்படுகிறது. ஆண்டு முழுவதும் இந்நோய் ஏற்படும்போது தக்க தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட அதிக கவனம் செலுத்தப்படுகிறது. 1989–90ம் ஆண்டில் 26,162 நபர்கள் கடுமையான குடல் இறைப்பை நோய்களாலும் 3,122 நபர்கள் வாந்தி பேதி நோயாலும் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

ஒருங்கிணைந்த நோய் நுண்ணுயிர் கட்டுப்பாட்டுத் திட்டம் :

மலேரியா, மூளைக்காய்ச்சல், யானைக்கால், நோய், நரம்பு சிலந்தி மற்றும் பிளேக், முதலான நுண்ணுயிர் வழி பரவும் நோய்களை கட்டுப்படுத்தும் திட்டம் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. சுண்காணிப்பு (மற்றும்) நோய்நுண்ணுயிர் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மலேரியா ஒழிப்புத் திட்டம், நரம்பு சிலந்தி நோய் ஒழிப்புத் திட்டம் (மற்றும்) யானைக்கால் நோய் கட்டுப்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின்கீழ் பணிபுரியும் பணியாளர்களைக் கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது.

மலேரியா (மற்றும்) தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டம் :

தேசிய மலேரியா ஒழிப்புத்திட்டம் திருத்தப்பட்ட செயல் திட்டமாக மாநிலத்தில் 1977ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டது. 1989–90ம் ஆண்டிற்கான மலேரியா நோயால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 94,512 இதில் சென்னை மாநகரத்தில் மட்டும் 50.05 பதிவாகி உள்ளது.

மூளைக் காய்ச்சல் நோய் :

கடந்த காலத்தில் மாநிலம் முழுவதிலும் பரவி வந்த இந்நோயானது தென்னாற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் வடாற்காடு மாவட்டங்களில் மேலும் சேலம், திருநெல்வேலி (மற்றும்) மதுரை மாவட்டங்களில் ஆங்காங்கே இருந்து வருகிறது. இந்நோயை ஒழிப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகளை மலேரியா திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களாலும் மற்றும் இது சம்பந்தப்பட்ட சாதனங்களாலும் நிறைவேற்றப்படுகிறது. 1989–90 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் 9 மாவட்ட சுகாதாரப் பகுதிகளில் மூளைக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் 330 என்றும் இறந்தவர்களின் எண்ணிக்கை 196 நபர்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

யானைக்கால் ஒழிப்புத் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் 21 நோய்க் கட்டுப்பாட்டு பிரிவுகளும் 42 இரவு நேர சிகிச்சைகளும் நிலையங்களும் தலைமை நிலைய பிரிவு ஒன்றும் சென்னையில் ஆய்வு பிரிவு ஒன்றும் 70 இலட்சம் மக்களின் பாதுகாப்பிற்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1989–90 ஆம் ஆண்டில் 10,53,671 ரத்த மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. அவர்களில் 9,316 பேருக்கு பைலேரியா புழு இருப்பதாகவும் அவர்களுள் 1,002 பேர்களுக்கு நோய் உள்ளதாகவும் கண்டறியப்பட்டது.

பிளேக் நோய் :

1965 லிருந்து தமிழ்நாட்டின் மனிதருக்கு பிளேக் நோய் இல்லை. பிளேக் நோய் பரவும் பகுதிகள் சிலவற்றில் காட்டெலிகளிடையே பிளேக் தொற்று நோய் இருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டது. தருமபுரி, பெரியார், நீலகிரி, வட ஆற்காடு மாவட்டங்களிலும், வேலூர், குன்னூர் உதகமண்டலம் நகராட்சிகளிலும் நோய் பகுதிகளில் எலி ஒழிப்புப் பணி மேற்கொள்ளப்படுகிறது.

காலா ஆஜார் :

1989 ஆம் ஆண்டு 5 நபர்களுக்கும் 1990 ஆம் ஆண்டு இதுவரை 8 நபர்களுக்கும் இந்நோய் இருப்பதாகத் தெரிய வருகிறது. இதில் பீகார் மாநிலத்தில் இருந்தும் நேபாளத்தில் இருந்தும் வந்த 2 நபர்கள் ஆவர். இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதுடன் இந்நோயை ஒழிக்க தீவிர கண்காணிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பிறப்பு இறப்பு பதிவு :

குடிமுறை பதிவு :

1969 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட மத்திய அரசின் பிறப்பு இறப்பு சட்டம் மற்றும் அதை ஒட்டி 1977 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்நாட்டு பிறப்பு இறப்புப் பதிவு விதிகளின்படி பிறப்பு இறப்புகளை பதிவு செய்தல் மாநில முழுவதும் கட்டாய மாக்கப்பட்டது. தமிழ்நாட்டில் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துத் துறை இயக்குநர் தலைமை பதிவாளராக செயல் படுகிறார்.

மாதிரி பதிவுத் திட்டம் :

பிறப்பு இறப்பு வீதங்களில் சரியான மதிப்பீடுகளை அறியும் நோக்கத்துடன் இந்திய அரசின் முதன்மை பதிவாளரின் தொழில் நுட்ப வழிகாட்டுதல்படி தமிழ் நாட்டில் அமுல் படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் பொது சுகாதாரத் துறையின் பார்வையில் 150 கிராமப் பிரிவு மக்கள் தொகை கணக்கெடுப்புத் துறை பார்வையில் 40 கிராமப் பிரிவு மற்றும் 40 நகர்ப்புற பிரிவுகளிலுமாக அமல் படுத்தப்பட்டுள்ளது. இந்திய அரசின் முதன்மை பதிவாளரால் வெளியிடப்பட்ட மாதிரி பதிவு திட்டத்தின்கீழ் மதிப்பீடு செய்யப்பட்ட பிறப்பு இறப்பு வீதம் பின் வருமாறு :—

பிறப்பு விவரம்.

வருடம்.	கிராமப்புறம்.	நகர்ப்புறம்.	இரண்டும் சேர்ந்து.
(1)	(2)	(3)	(4)
1988	23.2		

இறப்பு விவரம்.

வருடம்.	கிராமப்புறம்.	நகர்ப்புறம்.	இரண்டும் சேர்ந்து.
(1)	(2)	(3)	(4)
1988	10.2	7.1	9.2

சிசுக்களின் விவரம்.

வருடம்.	கிராமப்புறம்.	நகர்ப்புறம்	இரண்டும் சேர்ந்து.
1988 தற்காலிகம்	84	51	74

முன்மாதிரி பதிவுத் திட்டம் :

இத்திட்டம் 1965 ஆம் ஆண்டு இயற்றப்பட்டு கிராமப்புறங்களில் இறப்பிற்கான காரணங்களைப் பற்றிய புள்ளி விவரங்களை சேகரிக்கும் நோக்கத்துடன் அமல் படுத்தப்பட்டு தற்சமயம் 64 ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பொது சுகாதார சட்ட அமலாக்கம் :

தமிழ் நாட்டில் 1939 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பொது சுகாதார சட்டத்தின் பல்வேறு பிரிவுகளில் பொது சுகாதாரத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் சமூக அளவிலான சுகாதார பாதுகாப்பிற்காகவும், சுகாதார மேம்பாட்டிற்காகவும் தனி வர்த்தகங்கள், உள்ளாட்சி மன்றங்கள் போன்ற பல்வேறு நிர்வாக அமைப்புகளுடன் குறுக்கீடு செய்து தங்கள் அதிகாரங்களை பிரயோகிக்க வழி வகுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பொது சுகாதாரத் துறை இயக்குநர் அல்லது அவரது துறையைச் சார்ந்த அலுவலர்கள் பிரயோகிக்கக்கூடிய அதிகாரங்களை அவ்வப்போது செயல்பாடுகளை ஆய்வு செய்தல், மேற்பார்வையிடல் மற்றும் கண்காணித்தல் போன்ற அதிகாரங்களை அரசு மேற்கொள்கிறது.

டேனிடா மக்கள் நலவாழ்வுத் திட்டம்.

1. முன்னுரை:

இந்திய மற்றும் டென்மார்க் அரசுகளிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, 1981 முதல் தமிழ்நாடு மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய இரண்டு இந்திய மாநிலங்களிலும் அடிப்படை சுகாதார வசதியைப் பெருக்கும் திட்டம் ஒன்றை செயல்படுத்த டேனிடா உதவி செய்து வருகிறது. தமிழ்நாட்டில் அடிப்படை சுகாதார வசதி குறைவாக உள்ள சேலம் மற்றும் தென்னார்காடு மாவட்டங்களில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

அடிப்படை சுகாதார வசதிகளை மேம்படுத்தவும், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலப் பணிகளில் திறமையையும் மற்றும் பயனையும் மேம்படுத்தவும் அதன் மூலம் இவ்விரு திட்ட மாவட்டங்களிலும் கிராம மக்களின் நலவாழ்வை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் முதற்கட்டப் பணிகள் ரூ. 20·24 கோடி செலவில் 31–3–1988 அன்றுடன் நிறைவேற்றி முடிக்கப்பட்டது. முதல் கட்டப் பணியில் பூர்த்தி யடையாத பணிகளை நிறைவேற்றும் பொருட்டு ரூ. 94 இலட்சம் செலவில் இடைக்காலத் திட்டமாக 1988–89இல் நிறைவேற்றப்பட்டது.

இத்திட்டத்தின் இரண்டாம் கட்ட நிலை 1989–90 முதல் 1991–92 வரை ரூ. 16.26 கோடி மதிப்பில் ஒப்புதல் அளிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

2. திட்ட அமைப்பு:

இத்திட்டப் பணிகள் சென்னையில் திட்ட இயக்குநராலும், சேலம் மற்றும் கடலூரில் மாவட்ட திட்ட அலுவலர்களாலும் திட்ட அமைப்பாகக் கொண்டு செயல்படுத்தப்படுகின்றன. திட்ட அமைப்பு சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், பொது சுகாதாரத் துறை, ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவத்துறை, பொது சுகாதாரப் பயிற்சி, பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலை மற்றும் பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து திட்டப் பணிகளை நடைமுறைப்படுத்தி வருகிறது. திட்ட இயக்குநரகத்திலும், மாவட்ட திட்ட அலுவலகங்களிலும் தேவையான ஆதரவுப் பணியாளர்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

3. திட்ட செயல்பாடுகள் :

தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர் தலைமையிலான மாநில திட்ட ஒருங் கிணைப்புக் குழு மற்றும் உயர்மட்டக் குழுவில் 1989–90க்கான 51 செயலாக்கங் களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு 1989–90க்கான திருத்த திட்ட மதிப்பீடான ரூ. 201.56 இலட்சத்தில் ரூ. 218.13 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1989–90க்கு கீழ்க்கண்ட முக்கிய செயல்பாடுகள் இத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது.

1. சுலபமான இரணமற்ற பிரசவத்திற்கான 684 மகப்பேறு சாதனங்கள் துணை சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்பட்டது.

2. 581 துணை சுகாதார நிலையங்களுக்கு கம்பி வலை பொறுத்தப் பட்டது.

3. 17 துணை சுகாதார நிலையங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி வழங்கப்பட்டது.

4. இசுக்கள் மூச்சுத் திணறலால் இறப்பதைத் தடுக்க 682 துணை சுகாதார நிலையங்களுக்கு ''அம்புக் பை'' வழங்கப்பட்டது.

5. 782 ஆண் பணியாளர்கள் மற்றும் 478 ஆண் சுகாதார மேற்பார்வையாளர் களுக்கு பயிற்சியும், 1500 தாதியர்களுக்கு பேறு காலங்களில் திறம்பட உதவ மறுபயிற்சியும் அளிக்கப்பட்டது.

6. சமுதாய ஒத்துழைப்பைப் பெறவும் குடும்ப நலப் பணிகளில் மக்கள் செவ்வனே பங்கு கொள்ளவும் 400 கிராம நலக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

7. சமுதாயத்தில் சுகாதார விழிப்புணர்ச்சி ஏற்படுவதற்காக 207 கலை நிகழ்ச்சிகளும், 222 மக்கட் தொகை கல்வி கருத்தரங்குகளும் நடத்தப்பட்டன.

8. குழந்தைகளுக்கு ஏற்படும் சுவாச நோய்களை தடுக்க 115 துணை சுகாதார நிலையங்களுக்கு மருந்துகள் வழங்கப்பட்டன.

இதைத்தவிர, திட்ட மாவட்டங்களில் 65 சமூக நல நிலையங்களில் கூடுதல் ஆய்வுக்கூட உதவியாளர்கள் நியமனம் செய்யப்பட்டனர். அனைத்து 69 சமூக நல நிலையங்களுக்கும் தேவையான எழுதுபொருட்கள், வேதியல் பொருட்கள் மற்றும் ஒலி ஒளி கருவிகள், வழங்கப்பட்டன.

இச்சமூக நல நிலையங்களுக்கு வட்டாரத் தொடர்புக் குழுவிற்குத் தேவையான இதர செலவுகளுக்கான தொகையும், கருவிகள் மாற்றம் செய்ய வேண்டிய தொகையும் வழங்கப்பட்டுள்ளன.

4. சிறப்புத் திட்டங்கள் :

சுகாதாரம் மற்றும் குடும்ப நலம் சம்பந்தமான சேவைகளின் முன்னேற்றத்திற்கும், மகப்பேறு பணியில் கவனத்தை அதிரிக்கவும், தரத்தை உயர்த்தவும் தேவையான புதுமையான மாற்றுத் திட்டங்கள் பரிட்சித்துப் பார்க்கக் கீழ்க்கண்ட திட்டங்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன:—

1. மலைவாழ் மக்களுக்கு சுகாதார வசதி அளிக்கும் முறையில் கிராம சுகாதார நலக் கூடம் கல்ராயன் மலையில் சனாட்டில் செயல்பட்டு வருகிறது.

2. கர்ப்பிணிகள் பதிவுகளை மேம்படுத்த காடாயம்பட்டி சமூக நல நிலையத் தின்கீழ் உள்ள ஒவ்வொரு துணைச் சுகாதார நிலையத்திற்கும் இரு பெண் பணியாளர்கள் வீதம் இரு மடங்கு பணியாளர்களாக்கப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளனர்.

3. பிறப்பு பதிவுகளை மேம்படுத்த, அறிவிப்பு தொகையாக ரூ. 5 ஒவ்வொரு தாதியருக்கும் பிறப்பு பற்றிய அறிவிப்புக்காக வழங்கப்படுகிறது.

4. பயிற்சி மற்றும் மனிதவள மேம்பாடு :

முதற் கட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட ஆறு மாவட்டப் பயிற்சிக் குழுக்களும் ஒருங்கிணைக்கப்பட்டு, சேலம் மற்றும் விழுப்புரத்தில் ஒன்று வீதம் இரண்டு சுகாதார மனித வள மேம்பாட்டு நிலையங்களாக மாற்றப்பட்டு கீழ்க்கண்ட பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன :—

1. சுகாதாரப் பணியாளர்களுக்கும் சுகாதார மேற்பார்வையாளர்களுக்கும் பணியிடப் பயிற்சி.

2. மருந்து அலுவலர்களுக்கு நிர்வாகப் பயிற்சி.

3. குறிப்பிட்ட திட்டப் பணிகளுக்காகப் பயிற்சி.

4. சுகாதாரப் பணியாளர்களுக்கு கருத்தடை சாதனங்கள் பொருத்தும் பயிற்சி.

5. பெண் சுகாதார மேற்பார்வையாளர்களுக்குப் பொது சுகாதார செவிலியர் களுக்கான பயிற்சி இத்திட்டத்தின் உந்துதலால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

6. வழிப்படுத்துதல் மற்றும் மதிப்பீடு :

வழிப்படுத்துதல் மற்றும் மதிப்பீடு குழு இத்திட்ட நடவடிக்கைகளை வழிப் படுத்த அமைக்கப்பட்டுள்ளது. பல்லவன் போக்குவரத்து ஆலோசனைக் குழு மற்றும் பொது சுகாதாரத் துறையின் ஆலோசனையுடன் சுகாதாரம் மற்றும் குடும்பநலத்திற்கான தகவல் மேம்பாட்டுத் திட்டம் மூலம் எளிதாக்கப்பட்டு கள ஆய்வு செய்யப்பட்டு ஒரே மாதிரியாக மேற்கொள்ளப்பட்டது. கல்ராயன் மலைப் பகுதியில் வாழும் மலைவாழ் மக்களின் தற்போதைய சுகாதார மற்றும் சத்துணவு நிலையை பற்றிய ஓர் ஆய்வும், பிரசவத்தின் போது உபயோகிக்கப்படும் பேறு காலப் பையின் உபயோகித்தலை கண்டறிய ஓர் ஆய்வும், தாய் மற்றும் சேய் நலப் பணிகள் மற்றும் பேறு கால சிக்கல்களில் ''திட்ட நடைமுறை ஆராய்ச்சி செயல்பகுதி ''யை மேம்படுத்த ஓர் ஆய்வும் முன்னோடி நிலையங்களுக்குக் கொடுக்கப் பட்டது.

மருந்துகள் கட்டுப்பாடு நிர்வாகம்.

1. முன்னுரை :

தமிழ்நாட்டில் மருந்துக் கட்டுப்பாடு நிர்வாகம் மாநில மருந்துக் கட்டுப்பாடு அலுவலரைத் தலைவராகக் கொண்டு 26—11—1981 முதல் தனித்துறையாக இயங்கி வருகிறது.

2. தற்போதைய அமைப்பு :

(அ) மாநில மருந்து கட்டுப்பாடு அலுவலர் இத்துறையின் தலைவராவார். மூன்று துணை மாநில மருந்துக் கட்டுப்பாடு அலுவலர்கள் மற்றும் ஒரு உதவி மாநில மருந்துக் கட்டுப்பாடு அலுவலர் ஆகியோர் அவருக்கு உதவியாக தலைமையகத்தில் உள்ளனர்.

(ஆ) மாநில மருந்துக் கட்டுப்பாடு அலுவலர், மருந்துகள் (அலோபதி, ஆயுர்வேத மருந்துகள், சித்தா, யுனானி மற்றும் ஹோமியோபதி உட்பட) உற்பத்தி செய்ய உரிமங்கள் வழங்குவதற்கும் அவைகளைப் புதுப்பிப்பதற்குமான உரிமம் வழங்கும் அதிகாரி ஆவார். துணை மாநில மருந்துக் கட்டுப்பாடு அலுவலர்கள் உரிமம் வழங்குவதற்கும், நிர்வாகம் சம்பந்தப்பட்ட விஷயங்களிலும் அவருக்கு உதவியாக இருந்து வருகின்றனர்.

(இ) மருந்துகள் மற்றும் அழகுச் சாதனச் சட்டத்தின் கீழ் மருந்துகள் விற்க உரிமம் வழங்கும் பணி முழுவதும் பன்முகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக இந்த மாநிலம் பத்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஓர் உதவி மாநில மருந்துக் கட்டுப்பாடு அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். அவரே அந்த மண்டலத்திற்குரிய விற்பனை உரிமம் வழங்குவதற்கும் விற்பனை உரிமங்கள் புதுப்பிப்பதற்குமான உரிமம் வழங்கும் அதிகாரி ஆவார்.

(ஈ) இம்மாநிலத்தில் 13 முதுநிலை மருந்தாய்வாளர்கள் மற்றும் 72 மருந்து ஆய்வாளர்கள் பணியிடங்கள் உள்ளன. அவற்றில் 10 முதுநிலை மருந்து ஆய்வாளர்கள் மற்றும் 69 மருந்து ஆய்வாளர்களை பணியிடங்கள் மண்டலங்களிலும், மற்றைய மூன்று முதுநிலை மருந்து ஆய்வாளர்கள் பணியிடங்கள் சட்டம் மற்றும் புலனாய்வுப் பிரிவின் தலைமையகத்திலும் உள்ளன.

(உ) இந்தத் துறையில் சட்ட பிரச்சினைகளை கவனிப்பதற்கும், மற்ற இதர புலனாய்வுக்கும் ஒரு சட்டம் மற்றும் புலனாய்வுப் பிரிவு ஒரு துணை மாநில மருந்துக் கட்டுப்பாடு அலுவலரின் பொறுப்பில் இயங்கி வருகிறது.

(ஊ) மருந்து நிர்வாகத்தில் கணக்குகளை தணிக்கை செய்வதற்கும், வரவு செலவு களை கண்காணிக்கவும் ஒரு தணிக்கைப் பிரிவு உதவி கணக்கு அலுவலரின் பொறுப்பில் இயங்கி வருகிறது.

(எ) மருந்தாய்வாளர்கள் எடுத்த மாதிரிகளையே சாதிப்பதற்காக இந்நிர்வாகத்தின் கீழ் அரசுப் பகுப்பாய்வாளரை தலைவராகக் கொண்ட மருந்து பரிசோதனை ஆய்வகம் ஒன்றுள்ளது. அதில் இரு உதவி அரசுப் பகுப்பாய்வாளர்கள், 15 முதுநிலைப் பகுப் பாய்வாளர்கள் மற்றும் 24 இளநிலைப் பகுப்பாய்வாளர்கள் பணியிடங்கள் உள்ளன.

மருந்துக் கட்டுப்பாடு நிர்வாகம் கீழ்க்காணும் சட்டங்களை செயல்படுத்துகிறது—

(அ) மருந்துகள் மற்றும் அழகு சாதனச் சட்டம் —

இச்சட்டம் தரமுள்ள மருந்துகள் தயாரித்து விற்க உதவி வருகிறது. தவறு செய்பவர்கள் மீது வழக்குகள் தொடரப்படுகின்றன.

(ஆ) மருந்துகள் விலை கட்டுப்பாடு ஆணை —

இச்சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட விலையில் மருந்துகள் விற்கப்படுகின்றனவா என்று கண்காணிக்கப்பட்டு, அப்படி அதிக விலைக்கு விற்கப்பட்டால் தவறு செய்பவர் கள் மீது வழக்குகள் தொடரப்படுகின்றன.

(இ) மருந்துகள மற்றும் மாயக்குணமளிப்புகள் (ஆட்சேபகரமான விளம்பரங்கள்) சட்டம், இச்சட்டத்தின் கீழ் இந்த நிர்வாகம், மக்களின் நலத்திற்காக ஆட்சேபகரமான பொய்யான தவறான மருந்து விளம்பரங்கள் செய்பவர்களின் மீது நடவடிக்கை எடுக் கிறது.

(ச) போதை மருந்துகள் மற்றும் மயக்க மருந்துகள் சட்டம் 1985 :

இச்சட்டத்தின் கீழ் இந்த நிர்வாகம் போதை மருந்துகள் மற்றும் மயக்க மருந்துகளை சட்டத்திற்கு புறம்பாக விற்பனை செய்பவர்களின் மீது நடவடிக்கை எடுக்கிறது.

(உ) இறக்குமதி சட்டம்:

இறக்குமதி கட்டுப்பாடு உத்தரவின்படி மருந்து மற்றும் அழகு சாதனங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் இறக்குமதி தேவைகளைப் பெற மாநில மருந்துக் கட்டுப்பாடு அலுவலர் பரிந்துரை செய்கிறார்.

4. ஆய்வு வசதிகள் :

இம்மாநிலத்தில் தயாரிக்கப்பட்டு மற்றும் விற்பனை செய்யப்பட்டு வரும் மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்களின் தரத்தினை கண்காணிக்கும்பொருட்டு நவீன கருவிகள் பொருத்தப்பட்டுள்ள இத்துறையில் மருந்து ஆய்வு கூடத்தில் மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் ஆய்வுச் செய்யப்படுகிறது.

5. சாதனைகள் :

(அ) மருந்து கட்டுப்பாடு கவனிக்கப்பட்டு பொதுமக்களுக்குத் தேவையான மருந்துகள் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மாநிலத்தில் தயாரிக்கப்படும் மருந்துகளும், விற்பனைக்கு வரும் மருந்துகளும் தரமுள்ளவையா என தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. அரசு மருத்துவ மனைகளிலிருந்து பொதுமக்களுக்கு வழங்கப்படும் மருந்துகளும் தரமுள்ளவையாக இருக்க கண்காணிக்கப்படுகிறது.

(இ) சட்ட விரோதமான வழிகளில் வரும் போதை மருந்துப் பொருட்களைத் தீவிரமாக கண்காணிக்க போதை மருந்து புலனாய்வுத் துறையுடன் இத்துறை இணைந்து செயல்பட்டு வருகிறது.

(ஈ) மருந்துக் கட்டுப்பாடு நிர்வாகச் சட்ட விதிமுறைகளை நன்கு செயல்படுத்துவதற்காக மருந்தாய்வாளர்கள் கூடுதலாக நியமிக்கப்பட்டுள்ளனர். பகுப்பாய்வாளர்கள் மேலும் நியமிக்கப்பட்டு மருந்து ஆய்வுக் கூடத்தில் ஆய்வு செய்வதற்கான வசதிகள் பெருக்கப்பட்டுள்ளன.

(உ) மேற்கண்ட இனங்களில் தேவையான மருந்து மாதிரிகளை எடுப்பதற்கு விஞ்ஞான ரீதியான வழிமுறைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது:—

(1) மருந்து தயாரிக்கும் இடங்கள்.

(2) மொத்த விற்பனையாளர்கள்/மருந்து விற்பனையாளர்கள்/மருந்து கடைகள்.

(3) மருத்துவமனைகள்.

(ஊ) இதுபோன்ற, மாநிலத்திற்கும், மாநிலத்திற்கு வெளியேயும் தயாரிக்கப்படும் மருந்துகளை கண்காணித்து, மருந்து மாதிரிகளை எடுப்பதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(எ) ஆய்வுகள் முறைப்படுத்தப்பட்டும், பல்வேறு நிலைகளில் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டும் பணியாற்றுவோரின் செயலாக்கம் மதிப்பிடப்படுகிறது.

(ஏ) இரத்த சேமிப்பு வங்கிகளில் செயல்பாடுகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

(ஐ) சென்னையில் உள்ள மருந்து விற்பனை செய்ய உரிமம் பெற்றிராத ஒரு நிறுவனத்தார் பம்பாயிலிருந்து பெருமளவில் கொண்டு வரப்பட்ட 'நோவால்ஜின்' மாத்திரையின் தரத்தில் சந்தேகம் ஏற்பட்டு அம்மருந்தினை விநியோகிப்பதற்கு முன்னரே கண்டுபிடிக்கப்பட்டு அந்நிறுவனத்தின் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

(ஒ) சென்னையிலுள்ள அரசு மருத்துவ மனை ஒன்றில் மருந்திற்குப் பதிலாக உணவுப் பொருளை (Food Supplement) மாற்றிக் கொடுத்ததும், அதனை மிக அதிக விலைக்கு விற்றதும் கண்டு பிடிக்கப்பட்டு, குற்றம் புரிந்தவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. ஒரு சில நிறுவனங்கள் தயாரித்த ஊசி மூலம் செலுத்த திரவ மருந்துகளில் (Transfusion Solutions) குறைகள் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் உரிமங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்டது.

மருந்துக்கட்டுப்பாடு நிர்வாகத்தின் செயல்முறை சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்கள் 1—4—1989 முதல் 31—3—1990 வரை .

ஆய்வுகள்.		மருந்து மாதிரிகள் எடுத்தல்.		வழக்குகள்.	
இலக்கு.	சாதனை.	இலக்கு.	சாதனை.	இலக்கு.	சாதனை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
36,000	36,339	4,000	4,137	150	135

குறிப்புரை—வழக்கு விவரம்—

"அ" மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருள்கள் சட்டம் 1940.

1	தரம் குறைந்த மருந்துகள் தயாரித்தல்/விற்பனை செய்தல் ..	13
2	மருத்துவர்களுக்கு மாதிரிக்காக வழங்கப்படும் மருந்துகள் விற்பனைக்கு வைத்திருத்தல்.	3
3	உரிமம் இல்லாமல் மருந்துகள் விற்பனை செய்வது ...	57
4	போலி கலப்பட மருந்துகள் விற்பனை செய்தல்	3
5	மருந்தாளுநர் கண்காணிப்பின்றி மருந்துகள் விற்பனை செய்தல்.	22
6	மற்ற குற்றங்கள்	30
	(ஆ) மருந்துகள் விலைக் கட்டுப்பாடு ஆணை	7
	மொத்தம்	135

இங் நோய்த் தடுப்பு மருந்து நிறுவனம்.

1. இங் பொது சுகாதார மற்றும் நோய் தடுப்பு மருந்துப் பிரிவு இண்டியில் 1899 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழ்நாடு அரசு நிறுவனமாகும். இவ நோய் தடுப்பு மருந்துகள் தயாரித்து விநியோகிக்கும் துறையாக செயல்படுகிறது. இந்நிலையம் ஓர் கல்வி போதிக்கும் இடமாகவும் 'இல நோய் தடுப்பு மருந்துகள் மற்றும் குருதிநீர் உற்பத்தி செய்யும் இடமாகவும் ஆராய்ச்சி செய்யும் இடமாகவும் அமைந்துள்ளது.

2. இண்டியில் உள்ள நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் கீழ்க்கண்ட பல்வேறு துறைகள் செயல்பட்டு வருகின்றன. அத்துறை ஒவ்வொன்றிலும்தயாரிக்கப்படும் நோய் தடுப்பு மருந்து மற்றும் குருதிநீர், ஏனைய ஆக்கச் செயல் விளக்கப்பட்டுள்ளது.—

வரிசை எண்.	துறையின் பெயர்.	தயாரிக்கப்படும் நோய் தடுப்பு மருந்துகளும் மற்றும் செயல் திட்டங்களும்.
(1)	(2)	(3)
1	நாய்க்கடி நோய் தடுப்பு மருந்து தயாரிக்கும் துறை.	நாய்கடி நோய் தடுப்பு மருந்து.
2	நுண்ணுயிரற்ற சுரைசல் நீர் துறை	பல்வேறு சுரைசல்கள்.
3	சிரம் ஒருமுனைப்படுத்தும் துறை ..	டெட்டனஸ் சிரம் (பி.டி.எ.பி.) மற்றும் மனித உபயோகம்.
4	தொண்டை அலற்சி நோய் துறை	டெட்டானஸ்டாக்ஸ்டு டெட்டானஸ் டாக்ஸின்; டிப்திரியா டாக்ஸைடு.
5	வைராலஜி பிரிவு	மருத்துவம், நுண்ணுயிர் பரிசோதனைகள்.
6	வளர்பொருள் பிரிவு	நுண்ணுயிர்களை வளர்க்க. அடிப்படை வளர்மம். தேர்ந்தெடுத்த வளர்மம். குறிப்பிட்ட வளர்மம். எடுத்துக் காட்டு வளர்மம்.
7	உயிரியல் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு..	அட்டவணை சி மற்றும் சி1 மருந்துகள் மற்றும் அழகு சாதன விதிகள் 1940-ன்படி ஆராய்ச்சி.
8	பொருள்கள் அடைக்கும் பிரிவு ..	பல்வேறுபட்ட பகுப்பு நீர்களை புட்டிகளிலும், குப்பிகளிலும் அடைத்தல்;
9	நோய் தீர்க்கும் வாக்சின் துறை ..	பல்வேறு நோய் தீர்க்கும் திரவங்கள் மற்றும் குருதி நீர் தயாரித்தல்.
10	இரத்த வங்கி	குருதி பகுப்பு நீர் தயாரித்தல்.

3. நூலகம்:

நுண்ணுயிரியல் தொடர்பான எல்லாத் தரமான குறிப்பேடுகளும், புத்தகங்களும் இங்கு வைக்கப்பட்டு மாணவர்களின் ஆராய்ச்சி திட்டங்களுக்கு உபயோகமானதாக இந்நிலையத்தில் ஓர் நூலகம் உள்ளது.

(2) தடுப்பு 'ஊசி நிலையம், வெளி நாட்டிற்குச் செல்லும் பிரயாணிகளுக்கு 'மஞ்சள் வீஷக் காய்ச்சல்' தடுப்பூசி போடப்படுகிறது.

(3) எரிவாயு குளிர் பதன அறைகள் மற்றும் ஆய்வுக் கூடங்களை நிர்வகிக்க இயந்திர ஸ்தாபனப் பிரிவு இங்கு இயங்கி வருகிறது.

4. பயிற்சி முகாம்கள் மற்றும் பயிற்சிப் பிரிவு:

(1) இந்நிலையம் நுண்ணுயிர் கல்வி கழகமாக இயங்கி வருகிறது. நுண்ணுயிரியல் பட்ட மேற்படிப்புக்கு மற்றும் ஆராய்ச்சி ஆயினைகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

(2) இந்நிலையத்தில் ஆய்வக நுட்புனர் பயிற்சி 1944-ல் தொடங்கப்பட்டு,—

(அ) ஆய்வக நுட்பநர் நிலை 1 மற்றும்
(ஆ) ஆய்வக நுட்பநர் நிலை 2

என இரண்டு பிரிவினருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

ஆய்வக நுட்பநர் பயிற்சிப் பள்ளியொன்று 1958-ல் அரசாங்கம் அனுமதி வழங்கப்பட்டு, மிகச் சிறந்த கல்விக் கழகமாக இப்பள்ளி விளங்குகிறது.

அரசு மருத்துவமனைகளிலும், மருந்தகங்களிலும் பணி புரியும் நபர்களில் 37 பேர்கள் ஆய்வக நுட்பநர் தரம் 1 பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு 28-2-1990-ல் பயிற்சியில் சேர்ந்தார்கள்.

வெவ்வேறு மருத்துவமனைகள், மருந்தகங்களிலிருந்து 43 பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆய்வக நுட்பநர் தரம் 2-க்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

5. புதிய கட்டிடங்கள் :

இந்நிலையத்தில் உள்ள 'காலரா வெக்ஸின் துறையின்' மேற்பகுதியில் முதல் மாடிக் கட்டிடம் ஒன்று 1986-ல் தமிழக அரசால் அனுமதியளிக்கப்பட்டு மேற்படி கட்டிடம் 1989-90 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தபின் இந்நிலையத்திடம் ஒப்படைக்கப் பட்டது

தொண்டை அயற்சி நோய் துறை பகுதியில் டெட்டனஸ் டாக்ஸைடு' மற்றும் 'டிப்தீரியா டாக்ஸைடு' மருந்துகள் உற்பத்தி செய்ய அத்துறையில் சில புதிய மாற்றங் கள் 1989-90 செய்யப்பட்டது.

இந்நிலையத்தில் உள்ள நுண்ணுயிர் ஆய்வுக் கூடத்தினை விரிவுபடுத்தும் அரசு திட்டத்தின்படி நான்கு குளிர் பதனச் சாதனங்களும் அதற்குரிய இடங்குப் பகுதிகளை யும் 1989-90 ஆம் ஆண்டு அரசால் அனுமதியளிக்கப்பட்டது.

1989-90 ஆம் ஆண்டில் இந்நிலையத்தில் பாம்புகள் வளர்க்க இருப்பறைகள் புதிதாகத் தோற்றுவிக்க அரசினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

மருத்துவக் கல்வி.

மருத்துவக் கல்வி இயக்குநரகம், மருத்துவக் கல்வி இயக்குநர் மற்றும் 2 கூடுதல் இயக்குநர்கள், 3 இணை இயக்குநர்கள், 5 துணை இயக்குநர்கள், ஒரு உதவி இயக்கு நருடன் செயல்படுகிறது.

இந்த இயக்குநரகத்தின் கீழ் 9 மருத்துவக் கல்லூரிகளும் ஒரு பல் மருத்துவக் கல்லூரியும் 32 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளும் 14 மருந்தகங்களும் செயல் படுகின்றன.

1989-90 ஆம் ஆண்டில் பல வகையான மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த பட்ட படிப்புகளுக்கும் பட்ட மேற்படிப்புகளுக்கும் மாணவர்கள் தேர்வு செய்யப் பட்டுள்ளார்கள். அதன் விவரமாவது:—

எம்.பி.பி.எஸ் ..	1,172
பல் மருத்துவம் ..	45
மருந்தாக்கியல் ..	56
இயற்பியல் ..	50
செவிலியர் ..	30
அடிப்படை செவிலியர்	25

இளநிலை பட்ட மேற்படிப்பில் மொத்தம் 17 சிறப்பு பிரிவுகளில் 484 மாணவ மாணவியர்கள் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

மருத்துவ பட்ட மேற்படிப்பிற்கு மருத்துவம் சார்ந்த வகையில் 17 தனி பிரிவு களில் மொத்தம் 263 மாணாக்கர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பட்ட மேற்படிப்பு அறுவை சிகிச்சை பிரிவில் 5 சிறப்பு சேவைகளில் 150 மாணாக்கர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள். பல் மருத்துவ பட்ட மேற்படிப்பு 7 பிரிவுகளுக்கு மொத்தம் 20 மாணாக்கர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இளநிலை பட்ட மேற்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்புகளுக்கு மட்டுமேயல்லாமல் சிறப்பு உயர்மட்ட பட்ட மேற்படிப்பு வகுப்புகளுக்கும் மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள். மருத்துவம் உயர்மட்ட சிறப்பு பட்ட மேற் படிப்பில் 4 சிறப்பு பிரிவுகளில் மொத்தம் 17 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இம்மாநிலிய அறுவை சிகிச்சை பிரிவில் 7 சிறப்பு சேவைகளில் மொத்தம் 36 மாணாக்கர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

மருத்துவம் சார்ந்த பயிற்சி வகுப்புகளில் மருந்தாக்கியல் பட்டயப் படிப்பும் செவிலியர் பட்டயப் படிப்பும் மிகவும் முக்கியமானவையாகும். மருந்தாக்கியல் பட்டயப் படிப்பில் 3 அரசு கல்லூரிகளில் 240 மாணாக்கர்களுடன் செயல்படுகிறது. இதைத் தவிர தனியார் துறையில் 21 மருந்தாக்கியல் கல்லூரிகளில் மருந்தாக்கியல் பட்டயப் படிப்பு போதிக்கப்பட்டு அவர்கள் அனைவருக்கும் மருத்துவக் கல்வி இயக்குநரால் தேர்வுகள் நடத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

செவிலியர் பட்டயப் படிப்பில் 675 மாணவிகள் 6 மாதங்களுக்கு ஒரு முறை ஜனவரி மற்றும் ஜூலை மாதத்திலும் தேர்வு செய்யப்பட்டு 9 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பயிற்சி பெறுகின்றனர். இவை மட்டுமேயன்றி தனியார் துறையிலும் பல மருத்துவமனைகளில் இக்கல்வி போதிக்கப்படுகின்றது.

மற்ற மருத்துவம் சார்ந்த பயிற்சி வகுப்புகளும் அதில் அனுமதிக்கப்படும் மாணவ மாணவியர்களின் விவரங்களும்.—

	மாணவர்கள்.
1 கதிர்வீச்சு உதவியாளர் சான்றிதழ்	20
2 இருட்டறை உதவியாளர் ..	40
3 ஆய்வுக்கூட நுட்புநர் பயிற்சி தரம் 1	32
4 ஆய்வுக்கூட நுட்புநர் தரம் பயிற்சி 2	25
5 பல் சீரமைப்பு பயிற்சி .. —	6
6 பல் துப்புரவு செய்தல் பயிற்சி	6
7 கண்ணொளி நிர்ணயம் செய்தல்	30
8 கண் சிகிச்சை உதவியாளர் ..	30
9 அவசர வாகன வண்டி உதவியாளர்	8
10 மின்னலை மூளை செயல்திறன் அறிதல்	3

தமிழகத்தில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட 3 தனியார் மருத்துவக் கல்லூரிகள் செயல்படுகின்றன. 1989 ஆம் ஆண்டு திரு. ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு தாமரை என்ற ஒரு தனித்து செயல்படும். கல்லூரியாக அமைக்கப்பட்டுள்ளது. வேலூர் கிறித்துவ மருத்துவக் கல்லூரி பல்லாண்டுகளாக மருத்துவ பட்ட மேற்படிப்பு, பட்டப்படிப்பு, மேலும் மருத்துவம் சார்ந்த பயிற்சிகள் அளித்து வருகிறது.

அரசு மருத்துவக் கல்லூரிகளில் பட்டப் படிப்புக்கும் பட்ட மேற்படிப்புக்கும் மாணவர்கள் நுழைவுத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுமதிக்கப்படுகிறார்கள். பட்டப் படிப்பிற்கு 12-ம் வகுப்பில் பெறப்பட்ட மதிப்பெண்களும், நுழைவுத் தேர்வில் பெறப்படும் மதிப் பெண்களும் சேர்த்து மதிப்பிட்டு அதிகப்படியான மதிப் பெண்கள் பெற்றவர்கள் அரசு நிர்ணயிக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டு விதிமுறைகளின் படி வரிசைப்படுத்தி தேர்வு செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறார்கள். பட்ட மேற் படிப்பிற்கு நுழைவு தேர்விற்கு 90 மதிப் பெண்களும் அவர்களது மக்கள் சேவைக்கு 10 மதிப் பெண்களுமாக வரிசைப்படுத்தி அரசு இட ஒதுக்கீட்டு விதிகளின்படி தேர்வு செய்யப்பட்டு கல்லூரிகளில் அனுமதிக்கப்படுகிறார்கள்.

மருத்துவப் பாடங்கள் போதிப்பதும் தேவையான நடைமுறை பயிற்சி அளிப்பதும் மருத்துவக் கல்வித் துறையின் இரு முக்கிய வேலைகளாகும்.

மருத்துவக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு நேரடி பயிற்சி அளிக்க தமிழகத்தில் இந்த இயக்குநரகத்தின் கீழ் 32 பயிற்றுவிக்கும் மருத்துவமனைகள் செயல் படுகின்றன.

தமிழக மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகள் பெரும்பாலும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலிருந்தும், வட்ட தலைமை மருத்துவமனைகளிலிருந்தும் ஆரம்ப பொது சுகாதார மருத்துவமனைகளிலிருந்தும் அனுப்பப்படுபவர்கள் ஆவார்கள். இம்மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மொத்தம் 16,384 படுக்கை வசதிகள் உள்ளது.

எல்லா மருத்துவ மனைகளிலும் பல தரப்பட்ட சிறப்பு சேவை பிரிவுகள் செயல் படுகின்றன. இவைமட்டுமல்லாமல் 9 தனி சிறப்பு சேவை மருத்துவமனைகளும் இயங்குகின்றன. அவையாவன :—

1 பெண்கள மற்றும் குழந்தைகள் மருத்துவமனை	3
2 குழந்தைகள் மருத்துவமனை	1
3 காசநோய் மற்றும் மார்பு நோய் மருத்துவமனை	3
4 மனநல மருத்துவமனை	1
5 கண் மருத்துவமனை	1
6 புற்றுநோய் மருத்துவமனை	1
7 செயற்கை கை கால்கள் பொருத்தி மறுவாழ்வு அளிக்கும் மருத்துவமனை	2
8 தொற்றுநோய் மருத்துவமனை	1
9 காலரா மருத்துவமனை	1

மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஏறக்குறைய 50 சிறப்புப் பிரிவுகள் செயல்படுகின்றன.

இந்திய துணைக் கண்டத்தில் செயல்படும் எல்லா சிறப்பு சேவை பிரிவுகளும் தமிழக மருத்துவமனைகளில் செயல்படுகின்றன.

1989-90ஆம் ஆண்டு தமிழக மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் சுமார் 2 கோடி வெளிப்புற நோயாளிகளும் 6.55 இலட்சம் உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்றுள்ளார்கள். இந்த ஆண்டு இம்மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் 80,138 குழந்தைகள் பிறந்துள்ளன.

மாண்புமிகு தமிழக முதல்வர், முதல்வர் நிவாரண நிதியிலிருந்து 1 கோடி ரூபாய் வழங்கி சென்னை அரசு பொது மருத்துவமனையில் இருதய மாற்று இரத்தக் குழல் அறுவை சிகிச்சைப் பிரிவை ஏற்படுத்தி செயல்பட வைத்திருக்கிறார். இதனால் இருதய நோயால் பாதிக்கப்பட்டுள்ள பல ஏழை எளிய மக்கள் மறுவாழ்வு பெறுகிறார்கள். இப்பிரிவு மிகவும் திறம்பட செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் உடல் முழுவதும் நுண்ணாய்வு செய்து படம் எடுக்கும் கருவி ஒன்று நிறுவி செயல்பட துவங்கி உள்ளது. இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவர்கள் மற்றும் நுட்புனர்கள் பயிற்சி பெற்று செயல்படுகிறார்கள்.

சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் அரசு பொது மருத்துவமனையில் மூளை மற்றும் நரம்பியல் துறையும் உயிர் வேதியல் துறையும் நோய் குறியியல் துறையும் இருதயம் மற்றும் மார்புக் கூட அறுவை சிகிச்சை துறையும் இருதய மாற்று இரத்தக் குழல் சிகிச்சை துறையும் மயக்க மருந்து அளிக்கும் துறையும் மூட்டு வாதம் கீல்மூட்டு வாத துறையும் பல முன்னேற்றங்கள் கண்டுள்ளன.

ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் இருதயவியல் இருதய இரத்தக் குழல் சுதிர் வீச்சியல் துறை மற்றும் சுதிர் வீச்சியல் துறை ஆயிவை மேம் பாடு செய்யப்பட்டுள்ளது.

கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் செரிமான நலத் துறை, இருதயம் மற்றும் பார்வுக் கூட அறுவை சிகிச்சை துறை, சிறுநீரகவியல் துறை மற்றும் நீரிழிவுத் துறை இவைகள் முன்னேற்றம் கண்டுள்ளன.

அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் சரும நோய் துறை பிரிவுபடுத்தப் பட்டுதுள்ளது.

அரசு மண்டல கண் மருத்துவமனையில் நோய் குறியியல், நுண்ணுரியியல், உயிர் வேதியல் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

செங்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருதயவியல் பிரிவு மேம் படுத்தப்பட்டுள்ளது. செங்கை மருத்துவக் கல்லூரி முதல்வருக்கு ஓர் மோட்டார் கார் வாகனம் வழங்கப்பட்டுள்ளது.

தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் கோபால்ட் கதிர் வீச்சு சிகிச்சைப் பிரிவு திறம்பட இயங்க கூடுதல் பணியாளர்கள் வழங்கப்பட்டிருக்கிறார்கள்.

மதுரை மருத்துவக் கல்லூரி மற்றும் இராசாசி மருத்துவமனையில் கூடுதலாக ஆசிரியர்கள் 11 பிரிவுகளில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்திய மருத்துவக் குழுவின் விதிகளின்படி திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் கூடுதல் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இங்கு இருதயவியல் துறை எல்லாவித வசதிகளுடனும் பணியாளர்களுடனும் ஏழை எளிய மக்களுக்கு சிறந்த சேவை அளிக்க இயங்கத் தொடங்கி இருக்கிறது. பிறந்த இளம் குழந்தைகளின் பிரத்தியேகச் சிகிச்சைக்காக ஒரு பிரிவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கோவை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் இந்திய மருத்துவக் குழுவின் விதிகளின்படி கூடுதல் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த ஆண்டு 4 புதிய சிறப்பு சேவை பிரிவுகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. கணிசமான அளவு மருத்துவமனை உபகரணங்களும் அறுவை சிகிச்சை உபகரணங்களும் கதிர்வீச்சு கருவிகளும் குளிர்சாதன வசதிகளும் நீராவி சலவைக்கூட உபகரணங்களும் இருதய இரத்தக் குழல் நுண்ணாய்வு உபகரணங்களும் பெறப்பட்டிருக்கின்றன.

மதுரை இராசாசி மருத்துவமனையில் 2 மாடிக் கட்டிடம் அமைத்து கண் சிகிச்சை பிரிவிற்கும் இரத்தக் குழல் அறுவை சிகிச்சை பிரிவிற்கும் வழங்கப்பட்டிருக்கிறது.

பட்ட மேற்படிப்பு மாணவர்களின் விடுதிகளில் சமையல் கூடம் விரிவுபடுத்தப் பட்டுள்ளது.

கிண்டி கிங் நிலையத்தில் வைராலஜி பிரிவிற்காக 7 இலட்சம் ரூபாய் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கோவை மருத்துவக் கல்லூரியில் நுண்ணுயிரியல் ஆய்வுக் கூடம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மகளிர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனையில் ஒரு நீராவி சலவைக் கூடம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இங்கே ஒரு மைய இரத்த வங்கி அமைக்க கட்டிடத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இராயப்பேட்டை மருத்துவமனையில் இரத்த வங்கி இரத்தம் எடுக்கும் அறைக்கு குளிர் பதன வசதி செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இயங்கும அரசு அனைத்து மருத்துவக் கல்லூரிகள் மற்றும் அவற் றைச் சார்ந்த மருத்துவமனைகள் இவற்றிற்காக1989–90ஆம் ஆண்டில் ரூ. 89,09,87,000 செலவிடப்பட்டுள்ளது.

மருத்துவப் பணி மற்றும் குடும்ப நலம்.

மருத்துவத் துறைக்கு இயக்குநர் தலைவராக உள்ளார், இவருக்கு இரண்டு கூடுதல் இயக்குநர்களும் தொழுநோய் ஒழிப்புத் துறைக்காகவும்) ஐந்து இணை இயக்குநர்களும் 9 மருத்துவம். காசநோய் கிட்டமும் மற்றும் வளர்ச்சியும். ஒரு துணை இயக்குநர் (நிர்வாகம்) ஒரு முதன்மை கணக்கு அலுவலர் மற்றும் பல அதிகாரிகள் உதவி வருகின்றனர்.

வட்டார அளவில் அமைப்பு :

மாவட்ட அளவில் (வருவாய் மாவட்டம்). மாவட்ட மருத்துவமனைகளுக்கும். வட்டார மருத்துவமனைகளுக்கும், தாலுகா அல்லாத மருத்துவமனைகளுக்கும், மாவட்ட அலுவலர், முதன்மை மருத்துவ அலுவலராக இருக்கிறார். மாவட்டத் தொழுநோய் அலுவலர். தொழுநோய்த் திட்டத்தை கவனித்துக்கொள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்பட்டு வருகிறார், இவர்களுக்கு மாவட்ட மருத்துவ அலு வலருக்கும் இணையாக திட்டத்தை செயல்படுத்தும் அதிகாரம வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட மருத்துவ அலுவலருக்கு உதவிட நிர்வாக செயலர் மற்றும் பொருளாளர் தரம் 1 (அ) தரம் 22 (மருத்துவமனைகள் எண்ணிக்கைக்கு ஏற்ப) ஒரு உதவி மாவட்ட மருத்துவ அலுவலர் தலைமை மருத்துவமனைகளில் சிறப்பு சிகிச்சைப் பிரிவுகளில் மருத்துவம் பார்க்க முதன்மை மருத்துவ அலுவலர்களும் பணிபுரிகின்றனர்.

வட்டார அளவில் அமைப்பு :

மாவட்ட மருத்துவ அலுவலரின் கீழ் வட்டார மருத்துவமனை, தாலுகா அல்லாத மருத்துவமனைகள், மருந்தகங்கள் மற்றும் நடமாடும் மருத்துவமனைகள் செயல் பட்டு வருகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நாகர்கோவிலில் அரசு காசநோய் மருத்துவ மனை ஒன்று கண்காணிப்பாளர் (முதன்மை மருத்துவ அலுவலர்) அவர்களின் கீழ், இயக்குநர் அலுவலகத்தின் நேரடி கண்காணிப்பில் இயங்கி வருகிறது.

தொ.அ.ஈ. திட்டம்.—இதில் நிர்வாக அமைப்பு சென்னை, கோவை, மதுரை மற்றும் சேலம் என நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, மண்டல நிர்வாக மருத்துவ அலுவலரின் (முதன்மை மருத்துவ அலுவலர்) கீழ் நான்கு மண்டல நிர்வாக மருத்துவ அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன, சென்னை மண்டல அலுவலகம் மட்டும் இயக்குநர் அலுவலகத்தில் கூடுதல் இயக்குநரின் (தொ.அ.ஈ.) மருந்தகங்கள், துணை இயக்குநரின் (தொ.அ.ஈ.) கீழ் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்கள் மாநிலம் முழுவதும் உள்ள தொ.அ.ஈ. மருந்தகங்களில் நிர்வாகத்தை கவனித்துவரும் அதிகாரம் படைத்தவர்களாக செயல்பட்டு வருகின் றனர். மருத்துவப் பணி இயக்குநர் அவர்களின் நேரடி கண்காணிப்பின் மாநிலத்தின் ஏழு தொ.அ.ஈ. மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன.

துறை செயல்படும் விதம் :

மருத்துவத்துறையில் மக்களுக்குப் போதிய மருத்துவ சிகிச்சை அளிக்க மாநிலம் முழுவதும் 20 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளும் 121 தாலுகா மருத்துவ மனைகளும் 72 தாலுகா அல்லாத மருத்துவ மனைகளும் 15 மருந்தகங்களும் மற்றும் அரசு காசநோய் மருத்துவ நிலையங்களும் தொ.அ.ஈ. மருந்தகங்களும் இயங்கி வருகின்றன.

1989-90ஆம் ஆண்டில் செய்யப்பட்ட மேம்பாடுகள் (அரசு தலைமை மருத்துவ னை களில் வட்டாரமருத்துவமனைகளில் மற்றும் தாலுகா அல்லாத மருத்துவமனைகளில்.)

1. வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் குடியாத்தம் அரசு மருத்துவமனை யில் கதிரியக்கப் பிரிவிற்காகக் கட்டிடம் கட்டுதல்,

2. தர்மபுரி மாவட்டம், ஊத்தங்கரை, அரசு மருத்துவ மனையில் கதிரியக்கப் பிரிவிற்காகக் கட்டிடம் கட்டுதல்.

3. கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவில், அரசுத் தலைமை மருத்துவ மனையில் அவசர இருதய சிகிச்சைப் பிரிவுக் கட்டிடம் கட்டுதல்.

4. சேலம் மாவட்டம். ஊத்தங்கரை, அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை அரங்கிற்காகக் கட்டிடம் கட்டுதல்,

5. தென்னாற்காடு மாவட்டம், கட லூர் அரசுத் தலைமை மருத்துவமனையிலும் வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், வேலூர், அரசுத் தலைமை மருத்துவமனை யிலும் பத்து படுக்கைகள் கொண்ட கண் சிகிச்சை வங்கிக்காக கட்டிடம் கட்டுதல்,

1989–90ஆம் ஆண்டில் கூடுதலாக அதிகரிக்கப்பட்ட படுக்கைகள் எண்ணிக்கை :—

	படுக்கைகள் எண்ணிக்கை,
1 அரசுத் தலைமை மருத்துவமனை, வேலூர்	10
2 அரசுத் தலைமை மருத்துவமனை, கடலூர்	10
3 அரசுத் தலைமை மருத்துவமனை, இராமநாதபுரம்	12
4 அரசுத் தலைமை மருத்துவமனை, பெரியகுளம்	48
5 அரசு மருத்துவமனை பண்ருட்டி, தென்னாற்காடு மாவட்டம்	8
6 அரசு மருத்துவமனை எடப்பாடி, சேலம்	1

1989-90ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட சிறப்புப்பிரிவு சிகிச்சை நிலையங்கள் :—

முட நீக்கியல் சிகிச்சை நிலையங்கள்	3	(அரசு மருத்துவமனை. சாத்தூர். குன்னூர். முதுகுளத்தூர்),
அவசர சிகிச்சைப் பிரிவுகள் ...	2	(மாவட்டத் தலைமை மருத்துவ மனை, நாகர்கோவில் மற்றும் புதுக் கோட்டை.)
தோல் சம்பந்தப்பட்ட சிகிச்சைப் பிரிவு	3	(அரசுத் தலைமை மருத்துவமனைகள் வேலூர். கடலூர் மற்றும் தர்மபுரி,)
மருத்துவ ஆவணக் காப்பகம்	2	(மாவட்ட தலைமை மருத்துவமனை கள். இராமநாதபுரம் மற்றும் திண்டுக்கல்.

1989-90 ஆம் ஆண்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் :

(1) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் புதியதாகக் கட்டப்பட்ட 10 படுக்கைகள் கொண்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சை வார்டு கட்டிடத்தை மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் 15—5—1989 அன்று திறந்து வைத்தார்,

(2) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம். திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் புதியதாகக் கட்டப்பட்ட 20 படுக்கைகள் கொண்ட வார்டு மற்றும் அறுவை சிகிச்சை அரசுக் கட்டிடத்தை மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் 1-6—5—1889 அன்று திறந்து வைத்தார்,

(3) தர்மபுரி மாவட்டம். கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் கண் சிகிச்சை முகாம் 3—6—1989 அன்று நடைபெற்றது, 1—6—1989 அன்று மாத்தூர். காவேரிப்பட்டணம், கிருட்டிணகிரி. வேதாரண்யம், வேப்பனப்பள்ளி, பர்கூர் போன்ற ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட மக்களின் கண்கள் சோதித்துப் பார்க்கப்பட்டன, 77. பேர்கள் கண் அறுவை சிகிச்சைக்காக தேர்வு செய்யப்பட்டு 2—6—1989 உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டனர், 3—6—1989 அன்று 77 கண் அறுவை சிகிச்சைகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன, சென்னை எழும்பூர் அரசு கண் சிகிச்சை மருத்துவமனையில் இயக்குநர் மற்றும் மண்டலக் கழகத்தின் கண் காணிப்பாளரால் 77 கண்ணாடிகள் வழங்கப்பட்டன,

(4) திருச்சி மாவட்டம், பள்ளப்பட்டி அரசு மருத்துவமனையில் புதியதாகக் கட்டப்பட்ட 20 படுக்கைகள் கொண்ட அறுவை சிகிச்சை அரங்குடன் கூடிய பிரசவ வார்டுகள் கட்டிடத்தை 31-6-1989 அன்று முன்னாள் மருத்துவப் பணி இயக்குநர் அவர்கள் திறந்து வைத்தார்.

(5) நாங்குநேரி அரசு மருத்துவமனையில் புதியதாகக் கட்டப்பட்ட 20 படுக்கைகள் கொண்ட தொழுநோய் சிகிச்சை வார்டு கட்டிடத்தை பாளையங்கோட்டையில் 12-9-1989 அன்று நெல்லை மாவட்ட ஆட்சியர் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

(6) மேற்கண்ட நிகழ்ச்சியின்போது (12-9-1989) தென்காசி அரசு மருத்துவ மனையில் புதியதாகக் கட்டப்பட்ட குளிர்சாதன வசதியுடன் 6 படுக்கைகள் கொண்ட வார்டு மற்றும் அறுவை சிகிச்சை அரங்கு கட்டிடங்கள் மாண்புமிகு தமிழக முதல மைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

(7) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் மற்றும் திருவண்ணாமலை சம்புவ ராயர் மாவட்டம் துவக்க விழாவில் வேலூர் அரசு பெண்ட்லண்டு மருத்துவமனையில் புதியதாகக் கட்டப்பட்ட 10 படுக்கைகள் கொண்ட கண் சிகிச்சை வார்டுக் கட்டிடத்தை 30—9—1989 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

(8) கிருட்டிணகிரி அரசு மருத்துவமனையில் புதியதாகக் கட்டப்பட்ட இழ்க் கண்டவைகளுக்கான கட்டிடங்களை மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் 2—2—1990 அன்று திறந்து வைத்தார்.

6 படுக்கைகள் கொண்ட வார்டு குடும்ப நல அறுவை சிகிச்சைக் கூடம் (குளிர் சாதன வசதியுடன்) புதிய புற நோயாளிகள் பிரிவு, 40 படுக்கைகள் கொண்ட வார்டு 20 படுக்கைகள் கொண்ட வார்டு மற்றும் சமையல் கூடம்.

தேசிய கண்ணொளி இழப்பு தடுப்புத் திட்டம் :

இத்திட்டத்தினை செயல்படுத்த 15 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் தேர்வு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன. கீழ்க்கண்ட மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் நடமாடும். கண் சிகிச்சை அலகுகள் செயல்பட்டு வருகின்றன.—

(1) அரசினர் தலைமை மருத்துவமனை, சேலம்.
(2) அரசினர் தலைமை மருத்துவமனை, ஈரோடு.
(3) அரசினர் தலைமை மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி.
(4) அரசினர் தலைமை மருத்துவமனை, கடலூர்.
(5) அரசினர் தலைமை மருத்துவமனை, வேலூர்.

மேலும் திருச்சி அரசினர் தலைமை மருத்துவமனையில் ஒரு கண் வங்கி அரசாணை எண் 526, சுகாதாரம், நாள் 28–3–1989-ன்படி செயல்பட்டு வருகிறது.

இத்துறைக்கு 1989-90-ல் ஆண்டிற்கு பார்வை தடுப்பு திட்டத்திற்கென ஒதுக்கப் பட்ட இலக்கு கீழ்க்கண்டவாறு ஏற்கப்பட்டுள்ளது.—

1989–90.

	ஒதுக்கீடு. (1)	எய்த இலக்கு. (2)
மாவட்டங்கள் 15,000		11,017
நடமாடும் கண் சிகிச்சைப் பிரிவு ..	5,000	3,500

பார்வையின்மையை அறவே ஒழிக்கும் திட்டம் :

1989–90 ஆம் ஆண்டில் அரசாணை எண் 32, சுகாதாரம், நாள் 18–1–1990-ன்படி கீழ்க்கண்ட மாவட்டங்களில் பார்வையின்மையை அறவே ஒழித்திட தேர்வு செய்யப் பட்டன.—

(1) செங்கை-அண்ணா மாவட்டம்.
(2) திருச்சி மாவட்டம்.
(3) மதுரை மாவட்டம்.

மருத்துவப்பணி இயக்குநர் அலுவலகத்தின் கீழ் செயல்படும் அரசு மருத்துவ மனைகளில் தாய் சேய் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, அப்பணிகள் மாநில குடும்பநல இயக்குநரால் ஆய்வு செய்யப்படுகின்றன. இதேபோல் அரசு மருத்துவ மனைகளில் நோய்த் தடுப்புத் திட்டங்கள் மருத்துவமனை மருத்துவம் மற்றும் தலைமை மருத்துவ அலுவலர்களால் செயல்படுத்தப்பட்டு, பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவத்துறை இயக்குநரால் ஆய்வு செய்யப்படுகின்றன.

தேசிய காச நோய்த் தடுப்புத் திட்டம் :

தேசிய காச நோய்த் தடுப்புத் திட்டம் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங் களிலும் அமுலாக்கப்பட்டுள்ளது. காசநோயைக் கண்டறியவும், சிகிச்சை அளிக்கவும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசினர் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலை யங்கள் போன்றவைகளிலும் இலவச வசதிகள் செய்யப்பட்டுள்ளன. நோய் கடுமையாக உள்ள நோயாளிகளுக்கு காசநோய் சிகிச்சை நிலையங்கள் மற்றும் பொது மருத்துவ மனைகளிலும் உள்ள காசநோய்ப் பிரிவுகளில் உள் நோயாளிகளுக்கான சிகிச்சை அளிக்கப்படுகிறது.

20 அம்சத் திட்டத்தில் கீழ், காசநோய்த் தடுப்புத் திட்டத்தின் கீழ்க்கண்ட சாதனைகள் 1989–90 ஆம் ஆண்டில் அடையப்பட்டன.

(1)	குறியீடு. (2)	சாதனை. (3)	விழுக்காடு. (4)
1 புதிதாகக் கண்டறியப்பட	1,10,000	1,22,267	111
2 (அ) ஆரம்ப சுகாதார நிலையங்களில் செய்யப் பட்ட சளி பரிசோதனைகள்.	2,41,800	1,09,525	45
(ஆ) அலகுகளும் சளியில் காசநோய்க் கிருமிகள்— கண்டறியப்பட்டவர்களின் எண்ணிக்கை.	குறியீடு ஏதுமில்லை.	737	..

காச நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் 1989–90 ஆம் ஆண்டில் அடையப்பட்ட சாதனைகள் :—

1. மார்பு எக்ஸ்ரே எடுக்கப்பட்டவர்கள் 4,29,873
2. சளி பரிசோதனை செய்யப்பட்டவர்கள் 4,61,056

3.	(அ) கண்டறியப்பட்ட புதிய காச நோயாளிகள்	..	1,22,157
	(ஆ) அவர்களுள் சளியில் காச நோய்க் கிருமிகள்	..	17,753
4.	முழு சிகிச்சை பெற்ற நோயாளிகள்	..	27,630
5.	காச நோயால் இறந்தவர்கள்	..	451

தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம்.

1989–90 ஆம் ஆண்டுக்கான நிர்ணயிக்கப்பட்ட இலக்கும் சாதனைகளும் பின்வருமாறு :

	புதிய கண்டு பிடிப்புகள்.	சிகிச்சைக்கு உட்படுத்தப் பட்டவை.	நோய் ஒழிக்கப் பட்டவை.
இந்திய அரசால் நிர்ணயிக்கப் பட்ட குறியீடு.	(1) 65,000	(2) 65,000	(3) 1,40,000
சாதனைகள்.	1,14,732	1,10,719	1,43,603
சாதனை சதவீதம்.	176	178	102

டாக்டர் எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகம்.

இப்பல்கலைக் கழகத்தை நிர்வாகம் செய்யும் இச்சட்டமானது 1987 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் செயலுக்கு வந்தபோதிலும், இப்பல்கலைக் கழகமானது, 1988 ஜூலை மாதத்திலிருந்தே திறம்படச் செயல்படத் தொடங்கியது. அப்போது இப்பல்கலைக் கழகத்தில் தற்போது உள்ள முதல் துணைவேந்தர் பதவி ஏற்றார்.

டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தை நிறுவுதல் :

தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு மருத்துவப் பல்கலைக் கழகச் சட்டத்தை (பின்னர் இச்சட்டம் தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகச் சட்டம் என திருத்தப்பட்டது) இயற்றியதன் மூலம் 24–9–1987 ஆம் நாளன்று புதிய மருத்துவப் பல்கலைக் கழகத்தை தமிழ்நாடு அரசு நிறுவியது. இப்பல்கலைக் கழக அதிகார வரம்பு 1928 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கூட்டத்தில் விளக்கம் அளித்தவாறு அண்ணாமலை பகுதி நீங்கலாக தமிழ் நாடு மாநிலம் முழுவதற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டம் இயற்றியதன் மூலம் தமிழ்நாட்டில் ஆங்கில முறை மருத்துவத்திலும் சித்த, ஆயுர்வேத, யூனானி மற்றும் ஓமியோபதி போன்ற மரபுவழி முறை மருத்துவத்திலும் மருத்துவக் கல்வி புகட்டுகின்ற மருத்துவக் கல்வி நிலையங்கள் அனைத்தும் மேற்கொள்ள பல்கலைக் கழக ஆட்சி வரம்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. துணை மருத்துவத்திலும் மருந்தாக்கியல், செவிலியர், இயல் மருத்துவம், வாழ்க்கைத் தொழில் சார்ந்த மருத்துவம் போன்ற சம்பந்தப்பட்ட மருத்துவ அறிவியல் துறைகளிலும் கல்வி புகட்டும் நிலையங்கள் காரணத்தையும் இந்த பல்கலைக் கழகத்தின் ஆட்சி வரம்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த கல்வி நிலையங்கள் சென்னை, மதுரை, காமராஜ், பாரதிதாசன் மற்றும் பாரதியார் போன்ற பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் முன்பு இணைக்கப்பட்டிருந்தன.

சுகாதாரம், இந்திய முறை மருத்துவம், ஓமியோபதி மற்றும் குடும்ப நலத் துறையின் 23 8–1988 ஆம் நாளிட்ட 1628 ஆம் எண்ணுள்ள அரசுத் துறையில் அரசு அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. அதன்படி, 1–3–1988 ஆம் நாளுக்குப் பிறகு மருத்துவம் மற்றும் துறை மருத்துவம் (பாரா மெடிகல்) தொடர்பான பல்வேறு பாட முறைகளில் சேர்ந்த மாணவர்கள் இந்த மருத்துவப் பல்கலைக் கழகத்தின் கீழ் வந்துள்ளனர்.

பல்கலைக் கழகத்தின் நிருவாக அலுவலகம் :

இப்பல்கலைக் கழகத்தின் நிருவாக அலுவலகம், எண். 52, இ.வி.கே. சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை-7 என்ற முகவரியில் பெரியார் அறங்காவலர் குழு விற்குச் சொந்தமான கட்டிடத்தின் ஏழாவது மாடியில் வாடகை அடிப்படையில் செயல்பட்டு வருகிறது.

பல்கலைக்கழக அதிகாரிகள் :

இச்சட்டத்தின் 17-வது பிரிவின் கீழ் வரையறுத்த பல்கலைக் கழக அதிகாரிகளின் விவரம் பின்வருமாறு :

1. ஆட்சிப் பேரவை
2. ஆட்சிக் குழு
3. நிதிக்குழு
4. கல்வி நிலைக்குழு
5. பல்கலைக் கழக அறிவியல் துறைகள்

6. ஆய்வுக் குழுக்கள்
7. திட்டமிடும் குழு
8. சட்டம் இயற்றுவதின் மூலம் அறிவிக்கக்கூடிய அதுபோன்ற ஏனைய அதிகாரிகள்.

பல்கலைக் கழகத்திற்கான சட்டங்களை இயற்றி தேர்தல்கள் நடத்துவதன் மூலம் அதிகார மன்றங்களாக ஏற்படுத்தும் வகையில் இரண்டு ஆண்டு ஆயத்தகால அளவுக்கு இச்சட்டம் வரை செய்கிறது. இக்கால அளவில், இச்சட்டத்தின் 49 (5) ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பட்ட அதிகாரக் குழுக்கள், வரையறுத்த அலுவல்களை நிறைவேற்றி வந்தன. மருத்துவக் கல்வி முறை மேம்பாட்டுத் தேவைக்கான மறு ஆய்வு செய்யும் வகையிலும் கல்வி மற்றும் தேர்வு சீர்திருத்தப் பணிகள் பலவற்றைச் செயல்படுத்தும் வகையிலும் பல்வேறு ஆய்வுக் குழுக்கள் உட்பட அதிகாரம் பெற்ற குழுக்கள் செயல்பட்டு வரமுடிந்தன.

5. இயற்றப்பட்ட சட்டங்கள் :

இப்பல்கலைக் கழகத்தால் உத்தேசிக்கப்பட்ட கீழ்க்காணப் பெறும் கூட்டங்கள் ஆட்சிக் குழுவின் ஒப்புதலுக்காக அதன் முன்பு வைக்கப்பட்டுள்ளது. அவையாவன :

1. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் பொதுச் சட்டங்கள்.

2. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகச் (மருந்தாக்கியல் கல்லூரிகளைச் சேர்த்து) சட்டங்கள்.

3. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழக பணியாளர் நட்த்தைச் சட்டம்.

4. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ கல்வி (மருத்துவக் கல்லூரிகளைச் சேர்த்தல்) சட்டங்கள்.

5. 1989 ஆம் ஆண்டு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகச் (பல்கலைக் கழகத்தின் அதிகார மன்றத் தேர்வுகளை நடத்துவதற்கான நடைமுறை) சட்டங்கள்.

பல்கலைக் கழக வேந்தரின் இசைவு பெற வேண்டி தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் பொதுச் சட்டங்கள் அவருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

கல்வி முறையில் சீர்திருத்தங்கள் :

ஆய்வுக் குழு மற்றும் கல்வி நிலைக் குழு ஆகியவற்றின் பரிந்துரைகளின் அடிப்படையில் ''எம்.பி.பி.எஸ்.'' பாடத் திட்டத்தில் சேர்ந்து படிக்கும் மாணவர்களுக்கான பயிற்சித் திட்டத்தில் முதன் முறையாக பல புதிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

நாட்டில் அவ்வப்போது மாறிமாறிவரும் தேவைகளுக்கு இணங்க மருத்துவக் கல்வி பாட முறைகளில் செய்யத் தேவைப்படும் மாற்றங்கள் குறித்து ஆய்வு செய்யும் பொருட்டு கல்லூரிக் கல்விக் குழுக்களை ஏற்படுத்த வேண்டுமென இப்பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள மருத்துவம் மற்றும் துறை மருத்துவ அறிவியல் கல்வி தொடர்பான அனைத்துக் கல்வி நிலையங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. மருத்துவக் கல்வி தொடர்பான பல்வேறு பாட முறைகளில் செய்யத் தேவைப்படும் மாற்றங்களைச் செய்யும் பொருட்டு கல்லூரிக் குழுக்கள் செய்த பரிவுரைகள் ஆய்வுக் குழுக்களால் ஆய்வு செய்யப்பட்டு கல்வி நிலையக் குழுவின் முன்பு சரியாக வைக்கப்படுகின்றன. கல்வி நிலையங்களில் பல்வகைக் கடிதத்தின் நடவடிக்கைகள் செயல்படுத்தப்படுவதை ஒருங்கிணைக்க கல்வி நிறுவனத் தலைவரின் நம்பிக்கையைப் பெற்ற வர்களும், பணியாளர்களிடையேயும், மாணவர்களிடையேயும் பிரபலமானவர்களுக்கென பணி மூப்பு நிலையிலுள்ள பணியாளர்கள் கண்டறியப்பட்டு தொடர்பு அதிகாரிகளாகப் பல்கலைக் கழகத்தினால் நியமிக்கப்படுகின்றனர்.

இ.பி. 2000 ஆண்டிற்குள் அனைவருக்கும் உடல் நலம் என்ற தேசிய கொள்கைக்கு இணங்க, மருத்துவக் கல்விக்கும், சுகாதாரப் பாதுகாப்பு அளிக்கும் ஏற்பாட்டிற்கு மிடையே தேவையான இணைப்பை மேம்படுத்த பல்கலைக் கழகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

7. தேர்வு முறையில் சீர்திருத்தங்கள் :

தேர்வினை நடத்துவதில் தற்போது பல்வேறு சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

1988 மே திங்கள் முதல் 1990 ஜூன் திங்கள் வரையிலான கால அளவில் நடத்தப்பட்ட பல்கலைக்கழகத் தேர்வுகளின் மொத்த எண்ணிக்கை குறித்த விவரம் கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

	பட்ட மேற்படிப்பு பட்டய மேற்படிப்பு.		பட்டப்படிப்பு
	மருத்துவம் மற்றும் மருத்துவ துணைப் பணித் தேர்வு.	மருத்துவம்	மருத்துவத் துணைப் பணித் தேர்வு.
(1)	(2)	(3)	(4)
மார்ச்/மே 1989	89	11	59
செப்/டிசம்பர் 1989	81	13	74
மார்ச்/ஜூன் 1990	203	26	1

8. நடத்தப்படும் வகுப்புகள் :

இப்பல்கலைக் கழகம் 6 பட்டப்படிப்பு வகுப்புகளையும் 65 பட்டமேற்படிப்பு வகுப்புகளையும் நடத்துகிறது.

9. பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சித் திட்டங்கள் :

முதற்கட்டமாக, இப்பல்கலைக்கழகம், இந்திய அரசின் மத்திய அறிவியல் கருவிகள் நிறுவனத்துடன் (ம.அ.க.நி. பிரிவு) இணைந்து பின்வரும் துறைகளின் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காகத் தெரிந்தெடுத்துள்ளது.

(1) இருதயவியல், நரம்பியல், சிறுநீரகவியல், நச்சுவியல், ஊட்டச்சத்து மூதலியவை போன்ற துறைகளுடன் தொடர்புடைய சோதனைமுறை மருந்துகளின் பல்வேறு பிரிவுகளில் நிபுணத்துவ முறைகளை மேம்படுத்துதல்.

(2) நவின கருவிகள் மையம்.

10. ஆராய்ச்சித் திட்ட செயற்குறிப்புகள் :

இப்பல்கலைக்கழகம், எட்டாம் ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் ரூ. 150 கோடி மதிப்பீட்டுச் செலவில் மேலே குறிப்பிட்டுள்ள பல்வேறு ஆராய்ச்சி நிலையங்களை நிறுவுவதற்கான பேராற்வமிக்க செயற்குறிப்புகளைக் கொண்டுள்ளது.—

(1) வட்டார மருத்துவ நூலகம்.

(2) பாடத்திட்ட மேம்பாட்டு மையம்.

(3) மருத்துவத்துறைப்பற்றி சுகாதார அறிவியல் பட்ட மேற்படிப்பு நிலையம்.

(4) பொதுச் சுகாதார ஆராய்ச்சி நிலையம்.

(5) சோதனை முறை மருந்துகள் நிலையம், மத்திய நவின மருத்துவ ஆராய்ச்சிக் கருவி நிலையம்.

(6) மருந்தக மருந்து ஆராய்ச்சி பட்ட மேற்படிப்பு நிலையம், மருத்துவ மனைக் கட்டிடம்.

(7) மரபுவழி மருத்துவ முறை ஆராய்ச்சி நிலையம்.

(8) ஒட்டுண்ணி நோய்கள் குறித்த பட்டமேற்படிப்பு நிலையம்.

(9) மருந்தக அறிவியல் ஆராய்ச்சி நிலையம்.

(10) தொடர் மருத்துவக் கல்வி திட்டத்தின் கீழ் ஆசிரியல் பயிற்சி நிலையம்.

(11) செவிலியல் பயிற்சி பட்ட மேற்படிப்பு நிலையம்.

11. தொடர் மருத்துவக் கல்வித் திட்டத்தின்கீழ் விவாத அரங்குகளும் கருத்தரங்குகளும் :

மருத்துவ, சுகாதாரப் பணியாளர்களின் அறிவையும், திறனையும், நாளது தேதிவரையிலானதாக ஆக்கவும், சுகாதாரத்துறையில் அவர்களைத் திறம்படச் செயலாற்றச் செய்ய இயலும் வண்ணம் அவர்களுடைய உளப்போக்கில் மாற்றங்களை ஏற்படுத்தவும் தொடர் மருத்துவக்கல்வித் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. தொடர் கல்வியின் நோக்கம் சுகாதாரப் பாதுகாப்புத் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பது என்றால் சுகாதாரக் குழுக்களின் அறிவாற்றலை நாளது தேதி வரையிலானதாக துறைகளுக்கிடையேயான, பாடத்துறைகளுக்கிடையேயான அணுகுமுறைகளை மேற்கொள்வதன் விரும்பத்தக்க தன்மையைக் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இந்நோக்கத்தை மனதில்கொண்டு சுகாதாரப் பாதுகாப்பு அளிக்கும் பணியில் சம்பந்தப்பட்டுள்ள சுகாதாரப் பணியாளர்களுக்கு முறையான விவாத அரங்குகளையும், கருத்தரங்குகளையும் டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் நடத்தி வருகின்றது.

(அ) டாக்டர் எம். ஜி. ஆர். பல்கலைக் கழகம் தமிழ்நாடு பல்வேறு விவாத அரங்குகளுக்கும் கருத்தரங்குகளுக்கும் ஏற்பாடு செய்தது.

12. ஆய்வு உதவித் தொகை :

மருத்துவர்கள் ஏனைய சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோர் சுகாதார அறிவியல் துறையில் ஆய்வு மற்றும் வளர்ச்சிப் பணி மேற்கொள்வதை ஊக்குவிக்கும் பொருட்டு மருத்துவ அறிவியல் துறையில் ஆய்வு உதவித் தொகைகள் வழங்கும் திட்டத்தை இப்பல்கலைக் கழகம் 1988-89ஆம் ஆண்டில் செயல்படுத்தியது. வரப்பெற்ற 26 விண்ணப்பங்களில், ஏழு விண்ணப்பங்கள் தெரிந்தெடுக்கப்பட்டன.

ஒவ்வொரு திட்டமும், திங்கள் ஒன்றுக்கு ரூ. 2,000 என்ற வீதத்தில், ஆண்டொன்றுக்கு ரூ. 24,000 வரையில் அதிகபட்சம் மூன்று ஆண்டுகளுக்கு நிதியுதவிப் பெற தகுதியுடையதாகும்.

13. பி. எச். டி. ஆய்விற்குப் பதிவு செய்தல் :

பி.எச்.டி. ஆய்வு மேற்கொள்வதற்கும், பதிவு செய்துகொள்ளும் முறைக்கு நல்ல வரவேற்பு இருந்ததை மருத்துவ பி.எச்.டி. பட்டம் பெறுவற்கென மேற்கொள்ளப்படும் ஆய்விற்கு இப்பல்கலைக் கழகத்தில் பதிவு செய்து கொள்வதற்குரிய விண்ணப்பங்கள் தொடர்ந்து வரத் தொடங்கியிருந்தன. கழலை மருத்துவம் (Oncology), மருத்துவ இரசாயனம் (Medical Chemistry), மன நோய் மருத்துவம் (Psychiatry) மருத்துவம், குழந்தை மருத்துவம், சுரப்பி வகை சார்ந்த . (Endocrinology) மருத்துவம், மரபியல் மற்றும் உயிர்நூல் ஆராய்ச்சி (Genetics), இயற்பியல் விதிமுறை, உயிர்நூல் ஆராய்ச்சி (Bio-Physics) ஆகிய பிரிவுகளில் பி.எச்.டி. ஆய்வு செய்திட 1989 ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து 1990 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரையிலான கால் அளவில் சுமார் 13 விண்ணப்பங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

முழு நேர ஆய்வாளர்களும் கல்வி உதவித்தொகை அல்லது உதவித்தொகை எந்தவொரு ஆதாரத்திடமிருந்து ஊதியம் ஆகிய எதனையும் பெறாதவர்களும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 2,000 என்ற வீதத்தில் உயரளவு மூன்றாண்டுகளுக்கு ஆய்வு உதவித்தொகை வழங்கக் கருதப்படுகிறது.

14. மாணவர் நல நடவடிக்கைகள் :

1. விளையாட்டுப் போட்டிகள் : —

மருத்துவம் பயிலும் மாணவர்களை விளையாட்டு நடவடிக்கைகளில் ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு, விளையாட்டுகள்-இளைஞர் பணிகள் இயக்கு நரின் அறிவுரையின்பேரில் மருத்துவப் பல்கலைக்கழக, கல்லூரிகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளைப் பல்கலைக்கழகம் 1990, பிப்ரவரி திங்களில் நடத்தியது. இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள கல்வி நிலையங்களைச் சேர்ந்த மாணவர்கள், அதிக ஆர்வத்துடன் இப்போட்டிகளில் கலந்து கொண்டு பங்கேற்றனர்.

15. இணைத்தல் :

மருத்துவம், பல்மருத்துவம், செவிலிப்பணி, மருந்தாக்கியல் போன்ற தொழில் பாட வகுப்புகளை தொடங்குவதற்கு தனியார் பொறுப்புக் கழகங்கள், கல்விச் சங்கங்கள் ஆகியவற்றிடமிருந்து எண்ணற்ற விண்ணப்பங்கள் வந்தன.

உயர்நீதிமன்றத்தில் உத்திரவுகளுக்கிணங்க சுயநிதியில் செயல்படும் பல் மருத்துவக் கல்லூரிகள் இரண்டினை இணைப்பதற்கு இந்தப் பல்கலைக்கழகம் அனுமதி வழங்கியது.—

1. பாலாஜி பல் மருத்துவக் கல்லூரி, சென்னை, செப்டம்பர் 1989.

2. இராஜா பல் மருத்துவக் கல்லூரி, வடக்கன்கோலம், அக்டோபர் 1989.

டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்துடன் 42 கல்வி நிறுவனங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

16, மருத்துவப் பல்கலைக் கழகம் பட்டப் படிப்புகளை அங்கீகரித்தல் :

தமிழ்நாட்டிலுள்ள மருத்துவப் பல்கலைக் கல்லூரிகள் மேலே கொடுக்கப்பட்டுள்ள நான்கு பல்கலைக் கழகத்துடன் முன்னர் இணைக்கப்பட்டுள்ளன, அவையாவன :—

(1) சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

(2) மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

(3) பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்,

(4) பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.

மேற்சொன்ன பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பட்டிருந்த கல்வி நிலையங்களில் சுகாதார அறிவியல் சம்பந்தப்பட்ட பல்வேறு பாடமுறைகளில் பயிலுகின்ற மாணவர்களுக்கு சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் பட்டங்களை வழங்கியுள்ளது. பெரும்பாலான இந்தப் பட்டங்கள் / பட்டயங்கள் சம்பந்தப்பட்ட இந்தியத் தொழில் படிப்புச் சங்கங்கள் முதலியவை போன்றவற்றால் ஏற்கெனவே ஏற்பளிக்கப்பட்டுள்ளன. 1—3—1988 ஆம் நாளன்று அல்லது அதற்கும் பின்னர் மருத்துவ பாட முறையில் பல்வேறு பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் மட்டுமே இப்பல்கலைக்கழக அதிகார வரம்பிற்கு வருவர். மேல் கூறிய கருத்துக்களைத் தெரிவித்து இப்பல்கலைக்கழகம் அளிக்கும் பட்டங்களை அங்கீகரிப்பதற்கு பல்வேறு தேசிய சங்கங்களை அணுகியுள்ளது, பட்டப் படிப்பிற்கு அங்கீகாரம் பெறுவதற்கு மாநில, மத்திய அரசு மூலமாகவும் இக்குழுக்களை அணுகியுள்ளது.

இந்திய பல்மருத்துவ மன்றம் பல் மருத்துவப் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு பட்டயங்களுக்கு அங்கீகாரம் அளிக்கச் செய்துள்ளது. இதன் அடிப்படையில், மத்திய அரசு மக்கள் நல்வாழ்வு குடும்பநல அமைச்சகத்தின் 1948 ஆம் ஆண்டு பல் மருத்துவர் கள் சட்டத்தை திருத்தி 5—6—1990 அன்று அறிவிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்த அறிவிக்கையின் மூலம் செய்யப்பட்ட சட்டத்திருத்தத்தின் வாயிலாக 24—9—1987 அன்று அல்லது அதற்குப் பின்னர் இப் பல்கலைக்கழகத்தில் வழங்கப்பட்ட பல் மருத்துவப் பட்டப் படிப்பு பட்ட மேற்படிப்பு பட்டயங்களுக்கு அங்கீகாரம் அளிக்கப் பட்டுள்ளது.

அதைப் போலவே, இந்திய மருந்தாக்கியல் மன்றம் அவர்களுடைய கழகத்தின் ஒப்புதல் பெற வேண்டியது கட்டாயமான ஒன்று என்று நமக்கு தெரிவித்துள்ளது. பட்டப் படிப்புகளுக்கு அங்கீகாரம் வழங்குவது செவிலியர் மன்றமும், இந்திய மூறை மருத்துவ மத்திய மன்றமும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன, நினைவூட்டுக் கடிதங் கள் மூலமாகவும், நேரடித் தொடர்பு மூலமாகவும் அவை குறித்துத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

18, பல்கலைக்கழக மானியக்குழுவின் அங்கீகாரம் :

இப்பல்கலைக் கழகத்தின் பல்வேறு ஆராய்ச்சித் திட்டப் பணிகளுக்குச் செல விடும் பொருட்டு அவற்றின் நிதி நிலையை மேம்படுத்தும் நோக்குடன், 1956 ஆம் ஆண்டு, பல்கலைக் கழக மானிலக் குழுச் சட்டத்தின் 12-பி பிரிவின்கீழ் மானியங்கள் பெறத் தகுதி பெறுவதற்குரிய நிறுவனம் இது, என்பதற்கான அங்கீகாரம் அளிக்கு மாறு மாநில அரசு பல்கலைக் கழக மானியக்குழுவை ஏற்கெனவே கேட்டுக் கொண்

டுள்ளது. இப்பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற பரிந்துரைக்குமாறு மத்திய அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளரும் பல்கலைக் கழகமானிய குழுத் தலைவரைக் கேட்டுக் கொண்டுள்ளார், பல்கலைக்கழக மானியக் குழுவின் நடவடிக்கைகளை விரைவுபடுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள் வதன் மூலம் பல்கலைக்கழகம் தொடர்ந்து முயற்சிகளை எடுத்து வருகின்றது.

தற்போதுள்ள பல்கலைக் கழகங்களின் பட்டியலில் இந்த மருத்துவ பல்கலைக் கழகத்தையும் சேர்ப்பது குறித்து, பல்கலைக் கழக மானியக்குழு 24—2—1989 அன்று அறிவித்துள்ளது. இதன்மூலம் இப்பல்கலைக்கழகம், பல்கலைக்கழக மானியக் குழுவின் அனைத்துப் பணி நடவடிக்கைகளிலும் பங்கேற்க இயலும். எனினும், 1956 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியச் சட்டத்தின் 12-பி பிரிவின்கீழ் இயற்றியுள்ள விதிகளின்படி. மத்திய அரசின் நிதியுதவி பெறுவதற்கு இப் பல்கலைக் கழகம் தகுதியுடையதென பல்கலைக்கழக மானியக்குழு இன்னும் அறிவிக்கவில்லை,

19. சென்னைப் பல்கலைக் கழகத்திலிருந்து எம். ஜி. ஆர். மருத்துவ பல்கலைக் கழகத்திற்கு நிறுவன நிதி சொத்து முதலியவற்றை மாற்றுதல் :

தமிழ்நாடு 1987-ம் ஆண்டு டாக்டர் எம், ஜி, ஆர், மருத்துவ பல்கலைக் கழகச் சட்டத்தின் 67 (5) பிரிவில் பின்வருமாறு வகை செய்யப்பட்டுள்ளது: அதாவது அறிவிக்கப்பட்ட நாளுக்கு முன்னர் சென்னைப் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான சென்னை தரமணியில் உள்ள பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள நிலங்கள், கட்டிடங்கள், சாதனங்கள், புத்தகங்கள், நூலகம், ஆகியவை உள்பட அனைத்து அசையும் அல்லது அசையா சொத்துகளும், இப் பல்கலைக் கழகத்திடம் நிலைப் பெற்றுள்ள அல்லது இப்பல்கலைக் கழகத்தின் பொறுப்பில் வைத்துள்ள அனைத்து உரிமைகளும் இந்த வளாகத்தில் அப் பல்கலைக்கழகத்தில் உள்ள சட்டப்படி நிலை நிற்கும் ஏனையப் பொறுப்புகளும் அறிவிக்கப்பட்ட நாளுக்கு முன்னர் தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழகத்தில் மாற்றப்பட்டுள்ளதாக கருதப் படும். இது, 24—9—1987 அன்று சட்டப்படி செயலுக்கு வந்தது. இது குறித்து அரசின் ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னைப் பல்கலைக் கழகம், அறிவிக்கப்பட்ட நாளன்று அதன் நிதியிலிருந்து தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு அரசு சென்னை பல்கலைக் கழகத்தின் ஆலோசனையுடன் குறிப்பிடக்கூடிய அத்தகைய தொகையைக் கொடுக்க மருத்துவப் பல்கலைக் கழகத்தின் சட்டத்தின் 59-வது பிரிவு வரையறுக்கிறது, இது தொடர்பாக தேவையான மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

20. கணினி பயிற்சி கணினி மயமாக்குதல் :

இப் பல்கலைக் கழகத்தின் நிருவாகத்தை முறைப்படுத்துவதற்காக மத்திய அரசின் நிறுவனமான கணினி பராமரிப்புக் கழகத்திடம் இப்பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைப் பணிகளைக் கணினி மயமாக்க சாத்தியக்கூறு குறித்து ஆய்வு ஒன்றை நடத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது, மேற் சொன்ன சாத்தியக்கூறு அறிக்கையின் அடிப்படையில் இப் பல்கலைக் கழகப் பணியாளர்களுக்கு இரண்டு தொகுதிகளாக, கணினிப் பயிற்சித் திட்டத்தில் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

21. பல்கலைக்கழகத்தின் சின்னம் :

இந்த மருத்துவ பல்கலைக் கழகத்திற்குச் சிறந்த சின்னம் ஒன்றை தெரிந் தெடுக்க அச் சின்னத்தை வரைந்து தயாரித்து அளிக்க ஓவியர்கள், வரைப்பட் கலைஞர்களுக்கிடையே போட்டி ஒன்று நடத்தப்பட்டது,

இக்குழு மேற் சொன்ன கலைஞர்களின் சில படைப்புகளைத் தெரிந்தெடுத்தது. தெரிந்தெடுக்கப்பட்ட படைப்புகளில், சென்னை மருத்துவக் கல்லூரி ஓவியர்— புகைப்படக்காரர் திரு, கந்தசாமி என்பவரின் படைப்புச் சின்னம், மருத்துவப் பல்கலைக் கழகத்தின் நோக்கங்கள், கருத்துகளுக்கு ஓரளவே ஏற்புடைய வகையில் இருந்தது, மேற் சொன்ன இந்தப் படைப்புச் சின்னம் மாண்புமிகு முதலைச்ச ராலும் அமைச்ச ஆளுநராலும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மனநலம்.

தமிழ்நாட்டில் ஒரே ஒரு மனநல மருத்துவ நிலையமாக திகழும் இம்மனநல காப்பகம் தன்னுடைய 119 வது ஆண்டை கடந்துள்ளது. பசுமையான சூழலில் அமையப் பெற்ற இந்த மருத்துவமனை சுமார் 28 ஏக்கர் பரப்பளவை கொண்டதாக இருக்கின்றது. 200 கட்டிடங்களை தன்னகத்தே கொண்டுள்ள இந்த மருத்துவமனை 1,800 படுக்கை வசதிகளை பெற்றுள்ளது. குற்றவியல் பிணியாளர்கள், ஆடவர் மற்றும் பெண்டிருக்கென பிரத்யேக பிரிவு உள்ளது. மனநல மருத்துவத் துறையில் விரைவான மாறுதல்கள் நிகழ்ந்து வருகின்றன. இம்மருத்துவ நிலையமும் அதற்கேற்ற வாறு புதிய விதிமுறைகளை பின்பற்றி இயங்கி வருகிறது.

ஆராய்ச்சி விவரங்கள் :

(i) குடிப்பழக்கத்திற்கு வாழ்க்கைத் துணையின் எதிர் நடவடிக்கை.
(ii) மூளை பாதிப்பு நோய் பரவியுள்ளதன் காரணங்கள்.
(iii) பக்கவாத நோய் பிடித்தவர்களின் மனநிலை பாதிப்பு.
(iv) முதுமையின் இயலாமை பற்றிய கணிப்பு.

இது தவிர ஏனைய மாநில, தேசிய கருத்தரங்குகளிலும் மாநாடுகளிலும் சிறப்பு கட்டுரைகள் வாசிக்கப்பட்டுள்ளன.

புதுகட்டிடங்கள் :

போதை நீக்கு மருந்தியலுக்கென்று புதிதாக கட்டப்பட்டு வரும் 40 படுக்கை வசதிகள் கொண்ட ஒரு பிரிவின் கட்டிடப் பணிகள் முடியும் தருவாயிலிருக்கிறது.

பயிற்சி :

இக்காப்பகத்தில் பயிலும் டி.பி.எம்., எம்.டி. (மனநலம்) மற்றும் பி.எச்.டி. மாணவர்களோடு, சென்னை மற்றும் அதன் சுற்றுப் புறத்தைச் சார்ந்த ஏனைய கல்லூரிகளிலிருந்தும் கல்வி நிலையங்களிலிருந்தும் மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்தும் வரும் மாணவர்கள் இங்கு நடைபெறும் வகுப்புகளிலும், நடைமுறைப் பயிற்சிகளிலும் பங்கு பெறுகின்றனர்.

இம்மருத்துவ நிலையத்தின் நூலகம் மனநலம் மற்றும் மனநலம் சார்ந்த சிறப்பு புத்தகங்களையும், மருத்துவப் பத்திரிகைகளையும் கொண்டதாக விளங்குகிறது.

சேவைகளும் புள்ளி விவரங்களும் :

சென்னை மருத்துவக் கல்லூரியின் மனநலப் பிரிவின் பேராசிரியரும் பொறுப்பாளரும் இக்காப்பகத்தின் தலைமைப் பொறுப்பேற்றிருக்கிறார். இவ்வாண்டறிக்கைக்கான காலத்தில் டாக்டர் ம. பீட்டர் பொன்னாண்டஸ் இம்மருத்துவமனையின் கண்காணிப் பாளராக இருந்து வருகிறார். நிர்வாகத்தில் அவருக்கு உதவியாக ஒரு துணை கண் காணிப்பாளர், ஒரு நிலைய மருத்துவ அலுவலர், ஒரு செவிலியர் கண்காணிப்பாளர், மற்றும் ஏனைய நிர்வாக அதிகாரிகள் பணிபுரிகின்றனர்.

புறநோயாளிப் பிரிவில் 'குழந்தை வழிகாட்டல்', 'குமரப் பருவம், 'முதியோர் மனநலம்', 'வலிப்பு நோய்', 'இளநிலை மனநோய்', 'போதை அடிமை நீக்கம்', 'தரம்பு மனநோய்' போன்ற சிறப்புப் பிரிவுகள் உள்ளன. இ.இ.ஜி. நுண்கதிர் பிரிவு, ஆய்வுக் கூடம், மருத்துவ நூலகம் போன்றவைகளும் பிணியாளர்களுக்கு ஆற்றும் சேவைக்கு தனது பணியைச் செம்மையாக செய்கின்றன. மாத்திரைகள், மனோதத்துவ சிகிச்சை, மின்வலிப்புச் சிகிச்சை, இவை தவிர தொழில் வழி மருத்துவமும், பொழுது போக்கு மருத்துவமும் நோயாளிகளுக்கு அளிக்கப்படுகிறது. மருத்துவ நிலையத்தில் தங்கி சிகிச்சை பெற வேண்டிய அவசியமில்லாத, ஆனால் வீட்டில் வைத்தும் பராமரிக்க முடியாத நிலையில் நோய்வாய்ப்பட்டுள்ள மனநலப் பிணியாளர்களுக்கென பலதரப் பட்ட மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காக ''பகல் நேர மருத்துவமனை'' என்கிற பிரிவு இங்குகிறது.

நோய்குறியின் காரணத்தை அறிந்து கொள்ள உதவும் பிரிவுகள் :

1. கதிரியக்கம்.
2. மின் அலைகளை பயன்படுத்தும் மின் வலிப்பு சிகிச்சை.
3. ஆய்வுக் கூட்டம்.
4. மனோதத்துவம்.

சிகிச்சைப் பிரிவுகள் :

தற்போது நடைமுறையில் உள்ள பலதரப்பட்ட சிகிச்சை முறைகள் இங்கு அளிக்கப்படுகின்றன. அவையாவன :

(அ) மருந்து

(ஆ) உடற்பயிற்சியியல்

(இ) பொழுது போக்கு மருத்துவம்.

(ஈ) தொழில் வழி மருத்துவம்.

(உ) மனோதத்துவ முறைகள்.

1989–90-ம் ஆண்டில் புறநோயாளிப் பிரிவில் 4,556 பிணியாளர்கள் (ஆண்கள் 76.16 சதவீதம், பெண்கள் 23.84 சதவீதம்) புதிதாக சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப் பட்டார்கள். அதே நேரத்தில் 88,338 பழைய பிணியாளர்களும், சிகிச்சை பெற்றிருக் கிறார்கள். பழையதும் புதியதுமாக 3,162 சிறுவர்கள் அவர்களுக்கென நடத்தப்பெறும் 'குழந்தை வழிகாட்டல்' பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டனர். இந்த ஆண்டில் 4,552 பேர் உட்பிணியாளர்களாக அனுமதிக்கப்பட்டார்கள். (75.90 சதவீதம் ஆண்கள், 24.10 சதவீதம் பெண்கள்) 4,556 பிணியாளர்கள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு நாளில் அதிகபட்சமாக இருந்த நோயாளிகளின் எண்ணிக்கை 1,723. இந்த ஆண்டின் ஒரு நாளைய சராசரி கணக்கெடுப்பு 1,691.

இவ்வறிக்கை ஆண்டில் பிணியாளர்களாக சேர்க்கப்பட்டவர்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை 121. தாமாகவே சிகிச்சைக்கு வந்து சேர்ந்தவர்களின் எண்ணிக்கை (4,220–92.69 சதவீதம்) சான்றளிக்கப்பட்டு சேர்ந்தவர்களின் எண்ணிக்கையைவிட (333–7.31 சதவீதம்) பன் மடங்கு அதிகமானது. சிகிச்சைக்காக சேர்ந்தவர்களில் 36.41 சதவீதத்தினர் 25–34 வயது வரம்புக்குட்பட்டவர்களாக இருந்திருக்கிறார்கள். 79 சதவீதம் பணம் செலுத்தாத நோயாளிகளாக சேர்க்கப்பட்டிருக்கின்றனர். முது நிலை மனநோய்க்காக 74.2 சதவிகிதத்தினரும், இளநிலை மனநோய்க்காக 18.87 சதவிதத்தினரும், மூளை வளர்ச்சி குறைபாட்டிற்காகவும் 6.93 சதவிதத்தினர் சேர்க்கப்பட்டனர். சிகிச்சை பெற்றவர்களில் பெரும்பான்மையினர் (53.14 சதவிகிதம்) மனச் சிதைவிற்காக மருத்துவ உதவியை நாடியவர்கள், அவர்களின் எண்ணிக்கை 2,445. பிணியாளர் சேர்ப்பில் 68.07 சதவிகிதம் சென்னையை சார்ந்தவர்கள். 10.63 சதவிகிதம் செங்கையை சார்ந்தவர்கள். 18.34 மற்ற மாவட்டத்தையும் 2.97 சதவிகிதம் பிற மாநிலங்களையும் சார்ந்தவர்கள்.

20 ஆண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் :

ஒரு பிணியாளர் சராசரியாக தங்க வேண்டிய நாட்கள் 24 மாதங்கள் என்றிருந்த நிலை மாறி தற்போது 155 நாட்கள் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. சிகிச்சை முறையில் ஏற்பட்டுள்ள சிறப்பான முன்னேற்றம் என்று இதை கூறலாம். இதற்கு நவீன சிகிச்சை முறைகளும் நவீன மருந்துகளும் அடிப்படை காரணங்கள். இதைத் தவிர நோயாளி களின் உள்சேர்க்கையும் விடுவிப்பும் சம அளவில் இருந்ததற்கு அனுமதி முறை எளிமை யாக்கப்பட்டதே ஒரு முக்கிய காரணமாகும்.

பிற நடவடிக்கைகள் :

நாட்பட மனச் சிதைவு நோயாளிகளுக்காகப் (உள் நோயாளிகள் மற்றும் புற நோயாளிகள்) புனரமைப்பு, ஒரு ''மாதிரிப் பட்டறையாக'' விளங்குகிறதொழில் வழி மருத்துவ மையத்தின் மூலம் முயற்சி செய்யப்படுகின்றது. மன நோயாளிகளுக்குள்ளே மறைந்திருக்கும் திறமைகளை வெளிக் கொணர்ந்து, சிதறிப்போன அவர்கள் கவனத்தை ஒருமுகப்படுத்தி, வாழ்க்கைத் தொழில் கல்வி மூலம், வாழ்க்கைக்குப் பயனுள்ள வகையில் அவர்களின் திறமையைப் பயன்படுத்துவதே இப்புனரமைப்பின் முக்கியக் குறிக்கோளாகும். இம் மாதிரி தொழிற்பட்டறை, தையற்காரர், நெசவு ஆசிரியர், கைவினைஞர்கள் போன்ற பல தொழில் நுட்பப் பணியாளர்களைக் கொண்டு இயக்குனர் தலைமையில் இயக்கப்படுகிறது. காகித உறைகள், துணிப் பொம்மைகள், துவாலைகள், சோப்பு தயாரித்தல் போன்ற பல பணிகளில் நோயாளிகள் ஈடுபடுத்தப்படுகின்றனர். மேலும் ரொட்டி உற்பத்திச் சாலை ஒன்றும் இம்மாதிரிப் பட்டறையின் கீழ் நடத்தப் படுகிறது. இதன் மூலம் தயாரிக்கப்படும் ரொட்டிகள், இம்மருத்துவமனைத் தேவை களைப் பூர்த்தி செய்வதோடு மட்டுமின்றி பல மருத்துவமனைகளுக்கும் வழங்கப் படுகின்றன.

புறநகர் மருத்துவச் சேவையாகப் பூவிருந்தவல்லியில் 'ஒரு மனநல மருத்துவப் பிரிவும், மேல்பாக்கம் பராமரிப்பு மையத்தில் ஒரு மருத்துவப் பிரிவும் வாரம் ஒரு முறை இயங்கி வருகிறது. பல மனநோயாளிகள் இப்புறநகர் மனநலப் பிரிவு மூலம் சிகிச்சைப் பெறுகின்றனர்.

போதை மருந்து உட்கொள்ளுதல் மற்றும் குடிப்பழக்கத்திற்கு அடிமையாதல் ஆகிய இந்நோயை ஆரம்ப காலத்திலேயே கண்டறிந்து தடுத்து நிறுத்துவதற்குரிய சிகிச்சை முறைகளைக் கையாளுதல் பற்றிய கருத்தரங்கு ஒன்று 26—12—1989 அன்று இக்காப்பகத்தில் நடந்தேறியது. பல மாவட்டங்களிலிருந்து சுமார் 40-க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் இக்கருத்தரங்கில் பங்கேற்று பயனடைந்தார்கள். எல்லா தேசிய விழாக்களும் கொண்டாடப்பட்டு அதில் மன நோயாளிகள் பங்கெற்றனர்.

ஆரம்பசுகாதார நிலையங்கள்.

ஊரக சுகாதாரப் பணிகள் :

கி.பி. 2000-க்குள் எல்லோருக்கும் நல்வாழ்வு என்ற இலக்கினை அடைந்திட 1057 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏழாவது திட்டக் காலத்தில் ஏற்படுத்திட வேண்டும் என குறியிடு நிர்ணயிக்கப்பட்டது. கிராமப்புற மக்கட் தொகைப் பெருக்கத்தின் குறைவு ஏற்பட்டதன் காரணமாக மேற்கண் குறியீடு 950 ஆகக் குறைக்கப்பட்டது. 31—3—1990-ல் உள்ளபடி இம்மாநிலத்தில் 1,386 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 72 சமுதாய நல நிலையங்கள் உள்பட ஏற்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாரம்ப சுகாதார நிலையங்கள் தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புற மக்களுக்கு நோய்த் தடுப்பு நல மேம்பாடு மற்றும் நோய் சிகிச்சை போன்ற பணிகளை அளித்து வருகின்றன.

மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள்:

மொத்தம் உள்ள 1,386 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 73 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகவே செயல்பட்டு வருகின்றன. இவைகள் ஏற்கெனவே உள்ள 6 படுக்கை வசதிகளுடன் கூடிய வார்டுகள் ஊடகதிர்பிரிவு மற்றும் கூடுதல் உபகரணங்களோடும் இம்மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் சிறப்பு சிகிச்சை அளித்திடும் வகையில் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சிறப்பு சிகிச்சை அளித்திடும் நிலையமாக ஊடகதிர் பிரிவு உபகரணங்கள், பிரசவ அறை வசதியோடு இரத்தச் சேமிப்பு வங்கியுடன் உள்நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்திடும் வகையில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 30 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள உதவி சர்ஜன் பதவிகள் சிவில் சர்ஜன் பதவிகளாக மேம்படுத்தப்பட்டுள்ளன.

சிறு காதார நிலையங்கள் ;

இதுவரையில் 209 சிறு சுகாதார நிலையங்கள் கிராமப்புற மக்களுக்குத் தொண்டு நிறுவனங்கள் ஒத்துழைப்புடன் சுகாதாரப் பணிகளை அளித்து வந்தது. தற்போது இச்சிறு சுகாதார நிலையங்கள் இத்தொழிலின் கட்டுப்பாட்டிலிருந்து இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து சென்னை-600 006, அவர்களின் கட்டுப்பாட்டிற்கு 1989-90 மாற்றப்பட்டுள்ளது.

மருத்துவ நிலையங்கள் (எம்.யு.டி.பி.) சென்னை மாநகர அபிலிருந்தித் திட்டம் பிரிவு 2ன் கீழ் சென்னை நகரக் குடியிருப்புப் பகுதிகளில் ஏழுகளுக்கு மருத்துவ வசதி செய்யும் பொருட்டு 22 மருத்துவ நிலையங்கள் ஏற்படுத்த அனுமதியளிக்கப்பட்டு அவை செயல்பட்டு வருகின்றன.

கட்டிடங்கள் :

தமிழ்நாட்டில் செயல்படுகின்ற 1,386 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் 581 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்தகக்கட்டிடங்கள் உள்ளது. மற்றும் 293 ஆரம்ப சுகாதார நிலையங்களின் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் உள்ளன.

ஆவைகளின் விவரம் பின்வருமாறு :

கட்டிடங்கள்.	வழங்கப் பட்டது.	கட்டிமுடிக்கப் பெற்றவை.	கட்டிட நிலையில் உள்ளவை.	கட்டிடம் கட்ட தொடங்கல்
(1)	(2)	(3)	(4)	(5)
ரெகுலர் ஆரம்ப சுகாதார நிலையங்கள்	309	306	..	3
கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள்	31	15	7	9
மாற்றப்பட்ட மருந்தகங்களின் மற்றும் சமுதாய நல நிலையங்கள்	222	222		
மொத்தம்	562	543	7	1

பணியாளர் குடியிருப்பு :

கட்டிடங்கள்.	வழங்கப் பட்டவை.	கட்டிமுடிக்கப் பெற்றவை.	கட்டிட நிலையில் உள்ளவை.	கட்டிடம் கட்ட தொடங்கல்
(1)	(2)	(3)	(4)	(5)
ரெகுலர் ஆரம்ப சுகாதார நிலையங்கள்	239	239		
கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள்	31	15	7	9
மாற்றப்பட்ட மருந்தகங்கள் மற்றும் சமுதாய நல நிலையங்கள்	23	23		
மொத்தம்	293	293	7	

97 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச் சுவர் உள்ளது.

மருந்தகக்கட்டிடம் கட்டப்பட வேண்டியுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் 824

பணியாளர் குடியிருப்பு கட்டப்படவேண்டியுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் 1,093

பழங்குடியினர் நலத்திட்டம் :

இத்திட்டத்தின்கீழ் 9 ஒன்றியப் பகுதியில் பழங்குடி மக்கள் வாழும் பகுதியாக குறிக்கப்பட்டுள்ளது. அதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கு முன்னரே இவ் வொன்றியம் பகுதிகளின் ஒவ்வொன்றிலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வந்துள்ளது. அவைகளில் ஒன்று மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக்கப் பட்டுள்ளது.

1987–88இல் அரசு வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், ஜவ்வாது மலையில் உள்ள நம்மியம்பட்டு கிராமத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்திட ஆணை வழங்கியது. 1987–88இல் மேலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தென்னாற்காடு மாவட்டம், கல்வராயன் மலையில் உள்ள மேற்காட்டில் ஏற்படுத்திட அரசு ஆணை வழங்கியுள்ளது. இது தவிர 1—6—1987இல் இருந்து மருத்துவத்துறைக் கட்டுப் பாட்டின் கீழ் இருந்த 12 மருந்தகங்கள் இத்துறைக்கு மாற்றப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையங்களாக செயல்பட்டு வருகின்றன. சில நவீன பழங்குடி மக்களுக்காக கன்னி யாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறையில் 1988–89இல் ஒரு ஆரம்ப சுகாதார மையம் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

கண் பார்வை குறைவுத் தடுப்புத் திட்டம் :

தேசிய கண் பார்வை குறைவு தடுப்புத் திட்டம், சாதாரண கண் நோய் சிகிச்சை அளித்திடவும், கண்ணாடி வழங்கவும், பள்ளிக் குழந்தைகளுக்கு கண் பாதுகாப்பு முறைகளை விளக்கவும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்படுத்தப்படுகின்றனது.

இத்திட்டம் தற்போது 145 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒரு தனி சிகிச்சை உதவியாளர் பணியில் அமர்த்தப்பட்டு செயல்பட்டு வருகின்றனர். இது ஒரு 100 சத வீத மத்திய உதவி பெறும் திட்டமாகும். இதற்காக மத்திய அரசு ரூ. 3,000 மதிப்புள்ள உபகரணங்களை வழங்கின்றது. மாநில அரசு ரூ. 2,000 மதிப்புள்ள உபகரணங்களை வாங்குகியது. இந்த 145 ஆரம்ப சுகாதார நிலையங்களில் கண் சிகிச்சை உதவியாளரும் பயிற்சி பெற்ற மருத்துவ அலுவலர்களும் சாதாரண கண்நோய்களுக்குச் சிகிச்சை, கண் பரிசோதனை செய்து மூக்குக்கண்ணாடிக்கு குறிப்பளிக்கின்றனர். இது தவிர, கண்புரை கேஸ்கள் பார்க்கப்பட்டு அறுவை சிகிச்சைக்காக அருகில் உள்ள தலைமை மருத்துவ மனைக்கு அல்லது நடமாடும் கண் சிகிச்சை பிரிவிற்கு அனுப்பப்படுகின்றனர். பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டு லைட்டமின் ''ஏ'' மருந்து கொடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது இத்திட்டத்தை மேலும் 10 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 1989–90 ஆம் ஆண்டிற்கு விரிவு படுத்திட அரசுக்குக் கருத்துக்கள் அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்படாவிட்டாலும் நீலகிரி மாவட்டத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குத் தேவையான வசதிகள் செய்யத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இதற்காக 1989–90ஆம் ஆண்டில் அரசு ரூ. 2.8 இலட்சம் இரண்டு மகேந்திர ஜீப்கள் வாங்கி அரசு ஆணை எண். எஸ். என். 148, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை (டி.சி.2), நாள் : 19—7—1989இல் ஆணை வழங்கியுள்ளது.

தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத்துறை

1. 1974ஆம் ஆண்டுக்கு முன் குறைந்த அளவிலிருந்த மக்கள் நல்வாழவுப்பணிகளை ஊர்களை பராமரிக்கும் பொருட்டு, மண்டல போக்குவரத்து அலுவலர் என்னும் அதிகாரியின் கீழ் ஒரு சிறு பிரிவு பொது சுகாதாரத்துறை இயக்குநர் அலுவலகத்தில் செயல்பட்டு வந்து பின் மலேரியா, தொழுநோய் கட்டுப்பாடு ஆகியவைகளுக்காக யூனிசெப் நிறுவனத்திடமிருந்து ஜீப்கள் பெறும்போது இந்திய அரசு ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின்படி 1974இல் மாநில சுகாதார போக்குவரத்து அலுவலர் என்ற மாநில அதிகாரி அந்தஸ்துடன், ஏற்படுத்தி அவர்கீழ் 3 மண்டல பணிமனைகள் ஒரு மத்திய பணிமனை, 15 நடமாடும் பணிமனைகளுடன் சுமார் 240 பணியாளர்களுடன் மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை நிறுவனம் நிறுவப்பட்டது.

2. பின்னர் சுகாதாரம் மற்றும் மருத்துவத் துறைகளில் மோட்டார் வாகனங்களின் அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டும், மருத்துவ அலுவலகத்திற்கு பணிக்குத் தடங்கள் நேராவண்ணம் வாகனங்களை உடனுக்குடன் பழுது பார்க்கவும், சீராக பராமரிக்கவும், 1981இல் இந்நிறுவனம் தனித்துறையாக ஆக்கப்பட்டு, இதன் இயக்குநருக்கு ஒரு துறைத் தலைவருக்குண்டான முழு அதிகாரமும் அளிக்கப்பட்டது. தற் பொழுது ஏறத்தாழ 2,149 ஊர்திகள் இத்துறையில் பேணப்பட்டு வருகின்றன.

3. துறையின் விரிவாக்கத்தினால், மூன்று மண்டலப் பணிமனைகள், 9 மாவட்டப் பணிமனைகள், 5 நடமாடும் பணிமனைகள் மற்றும் மறு நிலைப்படுத்தும் பிரிவு மற்றும் வாகனங்களின் மேற்கூடு பழுது பார்க்கும் பிரிவு ஆகியவை தோன்றின. இத்துறையின் நிமித்தம் தற்போது 672 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

4. இதனால், 1974இல் 20·8 விழுக்காட்டில் இருந்த ஓடா நிலையிலுள்ள வாகனங்களின் எண்ணிக்கை 1—1—1990இல் 6·3 விழுக்காட்டிற்கு குறைக்கப்பட்டது.

5. மேலும், பகுதி 2 திட்டங்கள் நிதி உதவி கொண்டு மாவட்டத்தோறும் வாடகையிடத்தில் இயங்கி வந்த மாவட்ட, மண்டலப் பணிமனைகளில் 8 பணிமனைகள் இவ்வியக்ககத்தின் சொந்தக் கட்டிடங்களில் இயக்கத்துவங்கின.

6. ஒரு வாகனத்தில் என்ஜின், கியர்பாக்ஸ், போன்ற முக்கிய உதிரி நிரட்டுக்கள் (Assemblies) ஒரு குறிப்பிட்ட வருடத்திற்கு பின் மறுசீர் படுத்தப்பட்டால் அது மீண்டும் புத்துயிர் பெற்று புதிய என்ஜின் போல் புதிய ஓட்டத்தைக் கொடுக்கும் இதைக் கருத்திற் கொண்டு, சென்னையில் ஒரு மறுசீர் பத்தும் பிரிவு ஏற்படுத்தப்பட்டு அதன் மூலம் பல என்ஜின் நிரட்டுக்கள், கியர் பாக்ஸ் நிரட்டுக்கள் ஆகியவை மறு நிலைப்படுத்தப்பட்டன. இதனால் ஒரு வாகனத்தின் என்ஜின் பழுது ஏற்பட்டால் அதனை சீராக்கும் வரை அந்த வாகனம் ஓடா நிலையிலிருக்கும் நிலைமாறி உடனடியாக மறுநிலைப்படுத்தி தயாராக உள்ள என்ஜின்களைப் பொறுத்தி விரைவில் ஓட வைக்கும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மறு நிலைப்படுத்தும் பிரிவு தற்போது ஏற்கெனவே உள்ள மண்டலப் பணிமனையில் ஓர் ஒதுக்குப்புறத்தில் செயல்பட்டு வருகிறது. இம் மறு சீர் பகுதியின் முக்கியத்துவத்தை அரசுக்கு உணர்த்தி, இதற்கென சென்னையில் ரூ. 10.75 இலட்சம் செலவில் சொந்தமாக ஒரு கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

7. மோட்டார் வாகனத்தில் (டீசலில் இயங்குவது) எரிபொருள் குழாய் (Fuel Pump) என்னும் முக்கிய உறுப்பு அடிக்கடி பரிசோதிக்கப்பட வேண்டிய ஒன்று. இது சீராகச் செயல்படாவிட்டால் அதிகப்படியான எரிபொருள் செலவானது தவிர்க்கப்படுவதுடன் காற்றில் மாசு அதிகமாக உண்டாகி மக்களுக்கு ஊறு ஏற்படுத்துவது குறையும். இம்மாதிரி பியுயல் பம்புகளை தனியார் பட்டறைகளில் கொடுத்து பழுது பார்ப்பதில் ஆகும் கால தாமதம் மற்றும் அதிக செலவுகள் ஆகியவைகளைக் கருத்தில் கொண்டும், சென்னையில் ஒரு பியுயல் டெஸ்ட் பெஞ்ச் (Fuel Test Bench) நிறுவப்பட்டது.

8. இத்துறையில் 1979இல், 20 வருடத்திற்கு மேல் புழக்கத்தில் இருந்து வந்த ஊர்திகள் ஏறத்தாழ 600 ஆகும். அவைகளில் பல பூனிசெப் நிறுவனம் மூலம் வெளி நாட்டிலிருந்து பெறப்பட்டதாகும். இத்தகைய பழைய ஊர்திகள் பராமரிப்பதிலும், இயக்குவதிலும், அடிக்கடி பழுதுபடும் நிலையை அரசுக்கு விளக்கி, ஆண்டுதோறும், இத்துறை ஊர்தி உபயோகிப்பாளர் சார்பாக, இவ்வியக்ககமே அரசுக்குத் தகுந்த முறையில் குறிப்புரை அனுப்பி வருடா வருடம் சராசரியாக 30 முதல் 40 ஊர்திகள் மாநில அரசு நிதி உதவியுடனும், மத்திய அரசு நிதி உதவியுடனும் பதிலமர்த்தப்படுகின்றது. இவ்விதம் பதிலமர்த்தப்படும் மோட்டார் வாகனம் 20 வருடம் அல்லது 8 இலட்சம் கிலோ மீட்டர் ஓடிய பின் கழிவு செய்யப்படும். இவ்விதம் பதிலமர்த்தப்பட்டு புதிதாக பெறப்பட்ட மோட்டார் வாகனங்களை அந்தந்த வாகனம் விநியோகிப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு, விரைவில் பெற்று, அவைகளைப் பதிவு செய்து அதன் உபயோகிப்பு அலுவலர்களுக்கு அவர்கள் வாசலிலேயே கொண்டு சேர்கிறது இத்துறை. இது வாகன உபயோகிப்பு அலுவலர்களுக்கு மிகவும் உதவியாக இருப்பதுடன் ஒரு வாகனம் கழிவு செய்ய ஆகும் காலம் அதற்குப் பதிலாக புதியவாகனம் வாங்கும் காலம் ஆகிய காலங்களைத் தவிர்த்து உடனுக்குடன் புதிய வாகனம் கிடைக்க ஆவன செய்யப்படுகிறது.

9. மேற்கண்ட திட்டங்கள் தொடர்வதோடு மட்டுமல்லாது, எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் (1) 20 படுக்கைகளுக்கு மேலுள்ள ஒவ்வொரு மருத்துவமனைக்கும் ஒரு ஆம்புலன்ஸ் வழங்குதல், (2) தார்பாலின் கூரை கொண்ட ஜீப்புகளை பைபர் கிளாஸ் கூரை கொண்ட ஜீப்புகளாக மாற்றுதல் போன்ற புதிய திட்டங்களை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. மற்றும் (3) பணி செய்யும் பணியாளர்களின் வசதி கருதி குளிர்ந்த நீர் வழங்கும் இயந்திரம் மற்றும் காற்று வீசும் இயந்திரம்; போதிய அளவு இடம் கொண்ட புதிய கட்டிடங்கள் கட்டுதல் என்பவையும் எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி.

இந்திய மருத்துவமுறை புராதன இந்தியாவில் மிக உயர்ந்த முழுமையான, சிறப்பான நிலையை அடைத்துள்ளது. நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்காலம் வரை இந்திய நாட்டு சுகாதார பராமரிப்பு முறையை ஆங்கில மருத்துவ முறை ஆதிக்கம் செலுத்தியது. நாடு சுதந்திரம் அடைந்த பின்பு, மத்திய, மாநில அரசுகளின் பராமரிப்பின்கீழ் இது மேலும் வலுப்பெற்றது. தமிழக அரசு, இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித்துறையின், குறிப்பாக சித்த மருத்துவத்தின் வளர்ச்சிக்காகவும், மேம்பாட்டிற்காகவும் தனிக் கவனம் செலுத்தியுள்ளது.

சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்தில், 1970 ஆம் ஆண்டு முதல் இந்திய மருத்துவ இயக்ககம் தனியாகச் செயல்பட்டு வருகிறது. மருத்துவப் பணி மற்றும் குடும்ப நல இயக்ககத்தின் கட்டுப்பாட்டிலிருந்த

ஓமியோபதி மருத்துவம் 1984-ல் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொணரப்பட்டது. தமிழக அரசு, தலைமைச் செயலகத்தில், இந்திய மருத்துவத்திற்காக ஒரு தனி துறை 1984 முதல் இயங்கி வந்தது. பின்னர் அது மக்கள் நல்வாழ்வுத் துறையுடன் ஒன்றாக இணைக்கப்பட்டது.

நிதி முதலீடு :

கடந்த ஐந்தாண்டு காலத்தில், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறையின் வளர்ச்சிக்கான ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டான பெருக்கம் பற்றிய விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது:—

வருடம்.	வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு
(1)	(2)
	(ரூபாய் இலட்சத்தில்.)
1986—87	348.82
1987—88	406.06
1988—89	451.14
1989—90	519.27
1990—91	615.91

மருத்துவ நிவாரணம் :

பொது மக்களுக்கு இந்திய மருத்துவம், மற்றும் ஓமியோபதி மருத்துவ முறையின் மூலம் மருத்துவ வசதியளிக்கும் பொருட்டு, இவ்வியக்ககத்தின் கீழ் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவமுறை கீழ்க்கண்ட மருத்துவ நிலையங்களில் செயல்படுகின்றன:—

(1) 250 படுக்கை வசதி கொண்ட, பாளையங்கோட்டை, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனை.

(2) சென்னையில் அறிஞர் அண்ணர் அரசினர் இந்திய மருத்துவமனையில் 209 படுக்கை வசதிகளுடன் கூடிய இந்திய மருத்துவ முறை சிகிச்சை.

(3) மதுரை, திருமங்கலத்தில் அரசினர் ஓமியோபதி மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த 25 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனை.

(4) திருச்சி, மாவட்டத் தலைமை மருத்துவமனையில் 16 படுக்கை வசதிகளுடன் சித்த மருத்துவப் பிரிவு.

(5) கீழ்க்கண்ட மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் 15 படுக்கை வசதிகளுடன் கூடிய சித்த மருத்துவப் பிரிவு —

(1) இராமநாதபுரம்; (2) தர்மபுரி; (3) தூத்துக்குடி; (4) கடலூர்.

(6) கீழ்க்கண்ட மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் 25 படுக்கை வசதிகளுடன் கூடிய சித்த மருத்துவப் பிரிவு —

(1) ஈரோடு; (2) நாகப்பட்டினம்; (3) வேலூர்; (4) திண்டுக்கல்.

(7) எஞ்சியுள்ள 10 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் படுக்கை வசதி பெற்ற சித்த மருத்துவப் பிரிவுகள் (வெளி நோயாளிகள் மட்டும்).

(8) 19 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் ஓமியோபதி மருந்தகங்கள்.

(9) திண்டுக்கல் மாவட்ட மருத்துவமனையில் 15 படுக்கை வசதிகள் உட்பட 10 மாவட்ட மருத்துவமனைகளில் சித்த மருத்துவப் பிரிவு.

(10) 6 மாவட்ட மருத்துவமனைகளில் ஓமியோபதி மருந்தகங்கள்.

(11) 13 மாவட்டம் சாரா மருத்துவமனைகளில் சித்த மருத்துவப் பிரிவுகள்.

(12) 252 தொடக்க நல நிலையங்களில் சித்த மருத்துவப் பிரிவுகள்.

(13) 21 அரசினர் ஊரக சித்தா மருந்தகங்கள்.

(14) 11 அரசினர் சித்தா மருந்தகங்கள்.

(15) 5 அரசு ஆயுர்வேத மருந்தகங்கள்.

(16) 5 அரசு ஓமியோபதி மருந்தகங்கள்.

(17) 3 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் பஞ்சகர்மா பயிற்சி உள்ளிட்ட ஆயுர்வேத மருத்துவப் பிரிவுகள்.

(18) மலைப்பகுதிகளில் ஏழு சித்த மருத்துவப் பிரிவுகள்.

(19) மலைப்பகுதியில் (சேலம் மாவட்டம்) ஒரு நடமாடும் சித்தா மருந்தகம்.

பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனை :

இது சித்த மருத்துவ முறைக்கென்றே அமைந்த 250 படுக்கைகளைக் கொண்ட மருத்துவமனை இணைந்த கல்வி நிறுவனமாகும். இதில் 24 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவும் அடங்கும். பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் பி.எஸ்.,எம்.எஸ். படிப்பு ப்பிலும் மாணவர்களுக்கு இந்த மருத்துவமனை கல்வி வசதிகளை அளிக்கிறது.

அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை, சென்னை :

இந்த மருத்துவமனை இந்திய முறை மருத்துவம் மூன்றிலும் (சித்தா, ஆயுர்வேதா, யுனானி) ஒரே இடத்தில் புற நோயாளிகளுக்கும், உள் நோயாளிகளுக்கும் சிகிச்சை அளிக்கிறது. சித்த மருத்துவத்திற்கு 65 படுக்கைகளும், ஆயுர்வேத மருத்துவத்திற்கு 55 படுக்கைகளும், யுனானி மருத்துவத்திற்கு 54 படுக்கைகளும், தொகுக்கண மருத்துவத்திற்கு 10 படுக்கைகளும் உள்ளன. இம் மருத்துவமனையில் அனைத்து இந்திய மருத்துவ முறைகளிலும் அரசுப் பணியாளர்களுக்காக தனிப் பகுதியில் புற நோயாளிப் பிரிவு உள்ளன. 25 படுக்கைகள் கொண்ட வர்ம மருத்துவப் பிரிவும் 12–11–1986 முதல் சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் செயல்படுகிறது. மகப்பேறு அறையுடன் கூடிய 10 படுக்கைகள் கொண்ட மகப்பேறு பிரிவு ஒன்றைக் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கட்டிடம் கட்டும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

சித்த மருத்துவத்திற்கென்றே அகநோயாளிச் சிகிச்சைப்பிரிவுகள் கட்டுதல் :

மருத்துவமனையில் தங்கி சிகிச்சைப் பெறும் வசதிகள் செய்து கொடுப்பதன் மூலம் இம்மருத்துவ முறையை மேம்படுத்துவதற்காக இராமநாதபுரம், தருமபுரி, கடலூர், தூத்துக்குடி மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும், சிதம்பரம் வட்ட மருத்துவமனை மற்றும் சுடையநல்லூர், வட்டத் தலைமையிடமல்லாத மருத்துவ மனையிலும் 15 படுக்கைகள் கொண்ட பிரிவிற்கும் (புற நோயாளிப் பிரிவுடன்) ஈரோடு, நாகப்பட்டினம், வேலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், சேலம் மற்றும் திருப்பூர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் 25 படுக்கைகள் கொண்ட சித்த மருத்துவப் பிரிவுகளுக்கும் (புற நோயாளிப் பிரிவுடன்) திருச்சி மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் 16 படுக்கைகள் கொண்ட பிரிவுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. 14 மருத்துவப் பிரிவுகளில் 10 பிரிவுகள் முடிந்து இயங்கிக் கொண்டிருக்கிறது. எஞ்சியுள்ள நான்கு சித்த மருத்துவப் பிரிவுகள் முன்னேற்ற நிலையில் உள்ளது.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவப் பிரிவுகள் :

தமிழகத்தில் 252 ஆரம்ப சுகாதார் நிலையங்களில் சித்த மருத்துவப் பிரிவுகள் செயல்படுகின்றன.

ஓமியோபதி மருந்தகங்கள் :

மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் 19 ஓமியோபதி மருந்தகங்களும், சென்னை நகரத்தில் 5 ஓமியோபதி மருந்தகங்களும், வட்ட மருத்துவமனைகளில் ஆறு ஓமியோபதி மருந்தகங்களும் செயல்படுகின்றன.

பழங்குடியினர் நலத் துணைத் திட்டத்தின் கீழ் அரசு சித்த மருந்தகங்களும், நடமாடும் சித்த மருத்துவப் பிரிவும் :

தமிழகத்தில் பழங்குடியினர் நலத்துணைத் திட்டத்தின் மலைப் பகுதிகளில் ஏழு சித்தா மருந்தகங்களும், ஒரு நடமாடும் சித்த மருத்துவப் பிரிவும் செயல்படுகின்றன.

மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் அரசினர் ஓமியோபதி மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனை :

25 படுக்கை வசதிகள் கொண்ட இம்மருத்துவமனை அரசினர் ஓமியோபதி மருத்துவக் கல்லூரியில் பயிலும் பி.எஸ்.எம்.எஸ். மாணவர்களுக்கு மருத்துவமனைக் கல்விப் பயிற்சி அளிப்பதுடன் வெளி உள் நோயாளிகளுக்கும் சிகிச்சை அளிக்கிறது.

மருத்துவக்கல்வி :

மருத்துவக் கல்வி அளிக்கும் பொருட்டு, இவ்வியக்ககத்தின் கட்டுப்பாட்டின்கீழ் நான்கு இந்திய முறை மருத்துவக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன —

(1) அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை.
(2) அரசினர் யுனானி மருத்துவ கல்லூரி, சென்னை.
(3) அரசினர் ஓமியோபதி மருத்துவக் கல்லூரி, திருமங்கலம், மதுரை மாவட்டம்.
(4) அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பழனி.

அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை :

அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை 1961 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. மருந்தாய்வக வசதியுடன் மேற்கண்ட பாடமுறைகள் இக்கல்லூரியில் கற்பிக்கப்படுகின்றன. இத்துடன் 50 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனை இணைக்கப்பட்டுள்ளது.—

பாட முறையின் பெயர்.	பாட முறையின் கால அளவு. (ஆண்டுகள்)	இடங்களின் எண்ணிக்கை.	படிப்பு உதவித் தொகை விவரங்கள்.
(1)	(2)	(3)	(4)
பி.எஸ்.எம்.எஸ்.	5½	100	70 மாணவர்களுக்கு திங்கள் தோறும் ரூ. 75 வீதம் படிப்புதவித் தொகை அளிக்கப் படுகிறது.
எம்.டி. (சித்த மருத்துவம்) குணபாடம் மற்றும் மருத்துவம்	3	41 ஒவ்வொரு பிரிவிற்கும் 10 இடங்கள் இந்திய அரசின் நியமனதாருக்கு ஏதாவது ஒரு பிரிவில் ஒரு இடம் ஒதுக்கப் படுகிறது.	இப்பாட முறைக்கு அளிக்கப்படும் உதவித் தொக்க பின்வருமாறு:— (1) முறையான பணியிலிருந்து 5 ஆண்டுகள் பணியாற்றிய தகுதிகாண் பருவத்தினருக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 650. (2) முறையான பணியிலிருந்து 5 ஆண்டுகள் முடிக்காதவர்களுக்கு திங்களொன்றுக்கு ரூ. 500. (3) பணியில் இல்லாத மாணவர்களுக்கும் தற்காலிகப் பணியில் உள்ளவர்களுக்கும் திங்களொன்றுக்கு ரூ. 325.
சித்த மருத்துவ மருந்தாக்கியல் தகுதிப் பட்டயப் படிப்பு.	2	50	அனைத்து மாணவர்களுக்கும் திங்களொன்றுக்கு ரூ. 30 படிப்புதவித் தொகை வழங்கப் படுகிறது.

அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பழனி:

அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பழனி, கீரியதே மில்லத் மாவட்டத்தில் 18-11-85 முதல் சித்த மருத்துவர் பட்டப் படிப்பு (பி.எஸ்.எம்.எஸ்.) ஐம்பது மாணவர்கள் படிக்கும் விதத்தில் துவக்கப்பட்டது.

1987–88 நிதியாண்டில் கல்லூரி, விடுதிகள், மருத்துவமனை மற்றும் மருந்து செய்யகம் ஆகியவற்றைக் கட்டுவதற்காக 41.32 ஏக்கர் நிலத்தை கையகப் படுத்துவதன் பொருட்டு 35.54 இலட்சங்களில் அனுமதி வழங்கியது.

மருத்துவப் பயிற்சி, மாணவர்கள் நடைமுறை பயிற்சியடையும் விதத்தில் 25 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையும், அதற்குண்டான அலுவலர்கள், தளவாட சாமான்கள் ஆகியவையும் அனுமதித்து அஃது தற்சமயம் ஒரு தனியார் கட்டிடத்தில் இயங்கி வருகின்றது.

மேற்கண்ட மாணவர்களுக்கு ஆய்வக பயிற்சி அளிப்பதன் பொருட்டு பழனி ஆண்டவர் ஆர்ட்ஸ் கல்லூரியில் தற்காலிகமாக பயிற்சி அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அரசு யுனானி மருத்துவக் கல்லூரி, சென்னை :

1986–87 ஆம் ஆண்டு முதல் சென்னையில் யுனானி மருத்துவப் பயிற்சியளிப்பதன் பொருட்டு 16 மாணவர்களுக்கு 5½ வருட பயிற்சியும், 6 மாதம் உள்ளுரை மருத்துவமும் கொண்ட பி.யு.எம்.எஸ். (BUMS) என்ற பட்டமும் வழங்கப்பட்டு வருகிறது. புதிய கட்டிடம் கட்டும் வரை சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனை வளாகத்தில் தற்சமயம் இயங்கி வருகிறது.

4.15–9–1975 இல் சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் அரசு ஓமியோபதி கல்லூரி துவக்கப்பட்டது. மேற்கண்ட கல்லூரி மற்றும் 25 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை மதுரை மாவட்டம், திருமங்கலத்திற்கு 28–8–1982 இல் மாற்றப்பட்டது. 1985–86 முதல் 22 ஓமியோபதி மருத்துவப் பட்டப் படிப்பு மாணவர்கள் (பி.எச்.எம்.எஸ்.) (BHMS) படிக்கும் விதத்தில் 5½ வருடப் பட்டப் படிப்பு பயிற்சியில், ஒரு வருடம் உள்ளுரை பயிற்சியும் சேர்த்து அளிக்கப்பட்டு வருகின்றது.

சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனையில் இந்திய மருத்துவத்திற்கு செவிலியர் பயிற்சி அளித்தல் :

சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி மருத்துவத்தில் செவிலியர் பயிற்சியளிப்பதன் பொருட்டு 15 செவிலியர்களுக்கு மூன்று மாத பயிற்சி இவ்வாண்டு துவக்க ஆவன செய்யப்படுகிறது.

சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ்மனையில் மருந்தாளுநர் பட்டயப் படிப்பு பயிற்சி நடப்பது குறித்து :

சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் ஒவ்வொரு ஆண்டும் 50 நபர்களுக்கு மருந்தாளுநர் பட்டயப் படிப்பு வழங்குவதற்கு உண்டான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

மருந்து செய்யகங்கள்:

மூன்று மருந்துசெய் நிலையங்கள் உள்ளன.

(1) சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையுடன் இணைந்த மருந்துசெய் நிலையம்.

(2) நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம், பாளையங்கோட்டையில் அரசு சித்த மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருந்துசெய் நிலையம்.

(3) நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், பாளையங்கோட்டை வண்ணாரப் பேட்டையில் மண்டல மருந்துசெய் நிலையம்.

இதைத் தவிர புதுக்கோட்டை, திருச்சி மற்றும் திண்டுக்கல்லில் 1985–86 இல் மருந்துசெய் நிலையம் துவங்க அனுமதி வழங்கியுள்ளது.

அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனையுடன் இணைந்த மருந்து நிலையம், சென்னை.

இம்மருந்துசெய் நிலையம் 6 லட்சம் ரூபாய் பெறுமான சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி மருந்துகளை தயார் செய்கிறது. இம்மருந்துசெய் நிலையத்தில் அறிஞர் அண்ணா மருத்துவமனையும் அதனைச் சார்ந்துள்ள 11 சித்தா மருந்தகங்களுக்கு தயாரிக்கப்படும் மருந்துகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. இம்மருந்துசெய் நிலையம் மத்திய அரசு உதவி நிதியுடன் இயந்திர மயமாக்கப்பட்டு தற்சமயம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

மாவட்ட மருந்து செய் நியைங்கள், புதுக்கோட்டை, திருச்சி மற்றும் திண்டுக்கல் :

அரசு 1985–86 இல் திருச்சி, திண்டுக்கல் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் மருந்துசெய் நிலையங்கள் துவக்க ஆணையிட்டது. பிறகு அரசு ஆணை எண் 128, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, நாள் 27–10–1987 இல் ரூ. 15.00 இலட்சம் அனுமதி வழங்கி, புதுக்கோட்டை மாவட்டத்தில் மருந்துசெய் நிலையம் கட்டப்பட உள்ளது. மற்ற இரண்டு மாவட்டங்கள் பிற்பாடு துவக்கலாம் எனவும் அரசு கூறியுள்ளது. புதுக்கோட்டை மாவட்டம், மேலூர் கிராமம், திருமங்கலம் தாலுக்காவில் கட்டிடப் பணி துவங்கி கட்டிடம் இத்துறைக்கு ஒப்படைக்கும் நிலையில் உள்ளது.

மருந்துகள் ஆய்வகக்கூடம், சென்னை :

அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்தில் மத்திய அரசு நிதி உதவியுடன் தமிழ்நாடு அரசால் நிலம் ஒதுக்கப்பட்டு தனி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இம்மருந்து ஆய்வுக்கூடம் துவங்குவதற்கு ஆரம்ப நிலையில் சில பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு அனுமதி வழங்கியுள்ளது.

ஆயுர்வேத மொழி பெயர்ப்புப்பிரிவு :

சித்த மருத்துவப் பட்டப் படிப்பு மருத்துவப் பயிற்சி மாணவர்களுக்கு பாடப் புத்தகமாக ஆக்குவதன் பொருட்டு, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநர் அலுவலகத்தில், ஒரு கௌரவ தனி அலுவலரின் கீழ், சமஸ்கிருத மொழியிலிருந்து தமிழ் மொழியாக மாற்றுவதற்குகாக ஒரு ஆயுர்வேத மொழி பெயர்ப்புப் பிரிவு துவக்கப் பட்டுள்ளது. இப்பிரிவு தற்சமயம் மூன்று புத்தகங்களான (1) அஷ்டாங்க சங்கிரகம், 2)சரகசம்ஹிதா பாகம், 1 மற்றும் பாகம் 2 ஆகிய புத்தகங்கள் மொழி பெயர்க்கப் பட்டு, அச்சிட்டு புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளது. மேலும் சரக சம்ஹிதா மூன்றாம் பாகம் தற்சமயம் அச்சில் உள்ளது.

தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியம் சென்னை

அரசாணை எண் 409, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, நாள் 7-3-1989 இல் தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியம் ஒழிக்கப்பட்டு இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை இயக்குநரகத்துடன் இணைத்திட அரசு ஆணையிட்டது. சித்த மருத்துவ வாரியத்தைச் சார்ந்த பெரும்பாலான வேலைகள், இவ்வியக்குநரகத்துடன் இணைக்கப்பட்டது.

புத்தகங்கள் மொழி பெயர்ப்பு :

சித்த இலக்கிய நூல்களை தமிழ் மொழியிலிருந்து ஆங்கில மொழி பெயர்ப்பு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியம் இதற்கென கீழ்க்கண்டபடி, சில விவரங்களை சேகரித்துள்ளது.—

(1) அரிய மறுபதிப்பு செய்யும் நூல்கள்	947
(2) ஓலைச்சுவடிகள் ...	867
(3) கையெழுத்துப் பிரதிகள் ...	314
(4) தட்டச்சு செய்த பிரதிகள்	362
(5) தட்டச்சு செய்த மூப்பு சம்பந்தப்பட்ட பிரதிகள்.	2 பாகங்கள்
(6) ஏற்கனவே வெளியிடப்பட்ட சித்த மருத்துவ நூல்கள்.	67

1988-89 இல் 147 ஓலைச்சுவடிக் கட்டுகள் எழுதப்பட்டும் 1989-90 இல் 64 கட்டுகள் எழுதப்பட்டும் உள்ளது.

1989-90 இல் 27 சித்த மருத்துவ நூல்கள் பதிப்பு செய்ய கொடுக்கப்பட்டது. அவற்றில் 12 நூல்கள் சித்த மருத்துவப் பட்டப் படிப்பிற்காக அச்சிட்டு வெளியிடப் பட்டு, மீதமுள்ள 15 நூல்கள் அச்சில் உள்ளது.

விற்பனைப் பிரிவு :

சித்த மருத்துவ வாரியத்துடன் 9-11-1984 இல் மேற்கண்ட பிரிவு மாற்றப்பட்டு, அச்சிட்டு வெளியிடப்பட்ட சித்த ஆயுர்வேத மற்றும் யுனானி நூல்கள் விற்பனை செய்யப்படுகிறது. 52 வகை நூல்கள் சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி பிரிவுகள் சம்பந்தமாக பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

1985 இல் அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனையுடன் இணைந்திருந்த நூலகம், தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியத்திற்கு மாற்றப்பட்டு மத்திய நூலகம் மற்றும் விற்பனை பிரிவு என பெயரிடப்பட்டுள்ளது. அரசு 1987 இல் 16.35 இலட்சங்கள் செலவில், மேற்கண்ட நூலகத்திற்கான புதிய கட்டிடம் கட்ட அனுமதித்து, அக்கட்டிடம், அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்தில் கட்டப் பட்டுவருகிறது

தமிழ்நாடு இந்திய மருத்துவக்கழகம், சென்னை : ஒருங்கிணைக்கப்பட்ட மருத்துவக்கழகம், சென்னை: மற்றும் ஹோமியோபதி கவுன்சில் :

31-12-1989 வரை தமிழ்நாடு இந்திய மருத்துவக் கழகம், ஒருங்கிணைந்த மருத்துவக் கழகம் மற்றும் ஹோமியோபதி கவுன்சில் ஆகியவற்றில் பதிவு செய்துள்ள பயிற்சி பெற்ற மருத்துவர்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன,—

1. தமிழ்நாடு இந்திய மருத்துவக் கழகத்தில் பதிவு செய்துள்ளவர்கள் விவரம் :

சித்தா	.. ..	10,245
ஆயுர்வேதா	.. ..	2,703
யுனானி	.. ..	760
	மொத்தம்	13,708

2. ஒருங்கிணைந்த மருத்துவக்கழகத்தில் பதிவு செய்துள்ளவர்கள் விவரம் :

சித்தா	296
ஆயுர்வேதா	431
யுனானி	46
மொத்தம்	773

3. ஹோமியோபதி கவுன்சிலில் பதிவு செய்துள்ளவர்கள் விவரம் :

'A' வகுப்பு	.. ..	405
'B' வகுப்பு	.. ..	3,953
'C' வகுப்பு	.. ..	1,223
	மொத்தம்	15,581

இயற்கை மருத்துவம் :

செங்கல்பட்டு மாவட்டம் முட்டுக்காடு என்னுமிடத்தில் 10 படுக்கை வசதிகள் கொண்ட இயற்கை மருத்துவமனை அமைப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது, அது தொடர்பாக முட்டுக்காட்டில் நிலம் கையகப்படுத்துதல் பணி நடந்து வருகிறது.

சித்த மருத்துவப் பயிற்சி பரம்பரை சித்த வைத்தியர்களுக்கு முதியோர்களுக்கான உதவிப் பணம் வழங்கல் :

தலைமுறை தலைமுறையாக சித்த மருத்துவத்தில் ஈடுபட்டு வரும் 60 வயதோர் அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய சித்த மருத்துவர்களுக்கு மாதம் ரூ. 150 வழங்க அரசு ஆணையிட்டுள்ளது, மேற்குறிப்பிட்ட தொகையை பெற தமிழ்நாடு இந்திய மருத்துவக் கழகம், சென்னை, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளவர்கள் கேரளா கழகம் ஆகியவற்றில் பெயர்களை பதிவு செய்தவர்களாகவும் தொடர்ந்து வேலை செய்ய முடியாதவர்களாகவும் அவர்களுடைய வருட வருமானம் (ரூ. 3,600-க்குக் குறைவாகவும்) 15-9-1986 முதல் வருமான வரம்பு ரூ. 6,000-க்குக் குறைவாகவும் இருத்தல் வேண்டும், மேற்கண்ட தகுதியுடையவர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இலவச மருத்துவ முகாம் :

அனைத்து மாவட்ட சித்த மருத்துவர்களால் மாதத்திற்கு இருமுறை ஊரக கிராமங்களில் இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

தேசிய சித்த நிலையம் நிறுவுதல் :

சென்னைக்கருகில் செங்கை-அண்ணா மாவட்டத்தில் நீண்ட கால தேவையான தேசிய சித்த நிலையம் அமைப்பதற்கான தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

செங்கை அண்ணா மாவட்டம், பணப்பாக்கம் கிராமத்தில் தேசிய சித்த மருத்துவ நிலையம் நிறுவ அரசு ஆணையிட்டுள்ளது. இந்த நிலையம் நிறுவுவதற்கு இட்டங்களை விரைவு படுத்தி நிறைவேற்றிட செயல் முனைப்பு குழு ஒன்றையும் அரசு ஏற்படுத்தியுள்ளது.

யோகா :

அரசு யோகா மருத்துவத்தையும் ஒரு சிகிச்சை முறையாக தமிழகத்தில் ஏற்றுக் கொண்டுள்ளது, மேலும் அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை, சென்னை மற்றும் அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை ஆகியவற்றில் குறுகிய கால யோக வகுப்புகள் நடத்துவதற்கும் அரசு ஆணை இட்டுள்ளது. இவ்வகுப்புகளில் கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ரீடர்கள், மாவட்ட மருத்துவ அலுவலர்கள், உதவி மருத்துவ அலுவலர்கள் மற்றும் உதவி விரிவுரையாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவும் அவர்களுக்கு யோகா வகுப்பு எடுக்க யோகி எஸ்.எ.ஏ. ராமய்யா. எம். ஏ. என்பவரை மாதம் ரூ. 300 மதிப்பூதியத்தில் மேற்படி பயிற்சி வகுப்புகளை நடத்த அரசு ஆணை எண் 118, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை, நாள் 10–9–1986 இல் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதன் முதல் கட்டமாக யோகி எஸ்.எ.ஏ. ராமய்யாவால் மருத்துவ அலுவலர்கள் மற்றும் உதவி மருத்துவ அலுவலர்கள் ஆகியோர்களுக்கு 29–4–1987 முதல் 27–5–1987 வரை பயிற்சி வகுப்புகள் எடுக்கப்பட்டு அதற்குண்டான சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆராய்ச்சி நடவடிக்கைகள் :

மத்திய ஆராய்ச்சி நிலையம் (சித்தர்) :

அறிஞர் அண்ணா அரசினர் மருத்துவமனை வளாகத்தில் உள்ள புதிய கட்டிடத்தில், தமிழக அரசு மத்திய ஆராய்ச்சி நிலையம் நடவடிபெற வசதி செய்து கொடுத்துள்ளது. இந்நிலையம் ஆயுர்வேதா மற்றும் சித்த ஆராய்ச்சி மத்திய கவுன்சில், புதுடில்லியின் கீழ் இயங்கி வருகிறது. இந்நிலையம் 30 படுக்கை வசதிகளுடன் உள் நோயாளிப் பிரிவையும் உள்ளடக்கியுள்ளது, புற்று நோய், நீரிழிவு நோய் மற்றும் மஞ்சள் காமாலை மேலும் பல வியாதிகளைப் பற்றிய ஆராய்ச்சியை இந்நிலையம் நடத்தி வருகிறது.

கேப்டன் ஸ்ரீவாசா மூர்த்தி ஆராய்ச்சி நிலையம் :

இந்நிலையம் இந்திய மருத்துவ கூட்டுறவு மருந்தகம் மற்றும் விற்பனை நிலையம், சென்னை-20 வளாகத்தில் இயங்கி வந்தது. 1976 முதல் இந்நிலையம் மத்திய சித்த ஆராய்ச்சி நிலையத்திற்காக கட்டப்பட்ட கட்டிடத்தில் 2 ஆம் மற்றும் 3 ஆம் மாடிகளில் இயங்கி வருகிறது. இந்நிலையம் ஆயுர்வேதா மற்றும் சித்தா ஆராய்ச்சி மத்திய கவுன்சில், புதுடில்லியின் கீழ் இயங்கி வருகிறது. இந்நிலையம், மூலிகை வேதியியல் ஆராய்ச்சி மற்றும் ஆயுர்வேத மாத்திரைகளின் தரக் கட்டுப்பாடு ஆகிய பணிகளைச் செய்து வருகிறது.

மண்டல யுனானி ஆராய்ச்சி நிலையம் :

மத்திய யுனானி ஆராய்ச்சிக் கவுன்சில் மண்டல யுனானி ஆராய்ச்சி நிலையத்தை சென்னை ராயபுரத்தில் நிறுவியுள்ளது. அறிஞர் அண்ணா அரசினர் மருத்துவமனையில் ஒரு யுனானி ஆராய்ச்சி பிரிவு மத்திய யுனானி ஆராய்ச்சி கவுன்சிலினால் 1971 முதல் நடத்தப்பட்டு வருகிறது.

அத்தியாயம் 13.

உள் துறை.

திரையரங்குகள் :

இந்திய அரசு திரைப்படங்களை வெளியிடுவதற்கான உரிய சான்றிதழ்களை வாங்குவதற்குள், திரையரங்குகள் கட்டுதலை ஒழுங்குபடுத்துவதற்கும் திரையரங்குகள் சட்டம் (மத்தியச் சட்டம் 1952) இயற்றியுள்ளது.

2. தமிழக அரசும், தமிழ்நாடு திரைப்பட (ஒழுங்கு) சட்டம் 1955-ஐ (சட்டம் 1955) இயற்றியுள்ளது. இந்தச் சட்டம் தனிப்பட்டவர்களுக்கு திரையரங்குகளில் திரைப்படம் காட்ட உரிமம் வழங்க வழி வகுத்துள்ளது. இந்தச் சட்டத்தில் வழி வகுத்துள்ள விதிகளின்படி மாவட்ட ஆட்சியரே மாவட்டங்களில் உரிமம் வழங்கும் அதிகாரியாக உள்ளார். சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் காவல் ஆணையர் உரிமம் வழங்கும் அதிகாரியாவர். திரைப்படச் சட்டத்தின் கீழ் சென்னை மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் ஏதுமில்லை.

திரைப்படச் சட்டத்தின் கீழ் திரையரங்குகளுக்கு உரிமம் வழங்குவதில் கீழ்க் கண்டவாறு இரண்டு நிலைகள் உள்ளன.

1. தடையின்மைச் சான்று வழங்குதல்.
2. 'சி' படிவ உரிமம் வழங்குதல்.

தடையின்மைச்சான்று வழங்கும் நிலை

நகரும் திரையாங்கோ நிரந்தர அல்லது பகுதி நிரந்தரத் திரையரங்கோ அமைக்க விரும்பும் நபர் முதலில் உரிமம் வழங்கும் அதிகாரிக்கு தடையின்மைச் சான்று வழங்கக் கோரி மனுச் செய்ய வேண்டும். உரிமம் வழங்கும் அதிகாரி, ஊராட்சி மன்றத்தையும் மாவட்ட காவல் கண்காணிப்பாளரையும், வணிகவரித் துறை மற்றும் மாவட்ட சுகாதார அலுவலர்களையும் கலந்தாலோசித்து தடையின்மைச் சான்று வழங்குவதற்கோ அல்லது மனுவினை நிராகரிப்பதற்கோ தக்க காரணங்களைக் கூறி ஆணை பிறப்பிப்பார்.

'சி' படிவ உரிமம் :

நிரந்தரத் திரையரங்கு அமைக்க தடையின்மைச் சான்று பெற்றவர் மூன்று வருடத்திற்குள்ளும், நகரும் திரையரங்கம் அமைக்க தடையின்மைச் சான்று பெற்றவர் ஆறு மாதத்திற்கும் திரையரங்கம் கட்டி முடித்து 'சி' படிவ உரிமம் வழங்கக் கோரி மனு செய்ய வேண்டும். உரிமம் வழங்கும் அதிகாரி 'சி' படிவ உரிமம் வழங்கியோ அல்லது தக்க காரணங்களுடன் நிராகரித்தோ ஆணை பிறப்பிப்பார். இந்த உரிமம் தலைமை மின் ஆய்வாளரின் சான்றிதழ் மற்றும் கட்டிட உறுதிச் சான்று கால அளவிற்குட்பட்டு வழங்கப்படும். பகுதி நிரந்தர திரையரங்குக்கு வழங்கப்படும் உரிமத்தின் கால அளவு ஐந்து ஆண்டுகள் ஆகும். நகரும் திரையரங்குகள் பொறுத்த மட்டில் ஆண்டுக்கொருமுறை புதுப்பிக்கும் வகையில் திரையரங்கு உரிமதாரர் ஐந்தாண்டு காலம் கழித்து அதே இடத்தில் அதே நபர் திரையரங்கு நடத்த விரும்பினால், புதிதாகத் தடையின்மை சான்று பெற அவசியமில்லை. ஆனால் மேற்படி, திரையரங்குகளுடன் அனைத்து விதிகளையும் நிறைவு செய்து உரிமம் வழங்கும் அதிகாரிக்கு உரிமம் வழங்கக் கோரி மனுச் செய்து கொள்ளலாம். ஒரு திரையரங்கில் 'சி' படிவ உரிமம் ஏதோ ஒரு காரணத்தால் புதுப்பிக்கப்படாமல் இருக்கும்போது திரையரங்கம் தொடர்ந்து நடக்க ஏதுவாக 'சி' படிவ உரிமம் வழங்கப்படும் வரைமின் சான்றிதழ் மற்றும் கட்டிட உறுதிச் சான்றிதழ் கால அளவு முடியாமல் இருந்ததால் உரிமம் வழங்கும் அலுவலர் 'ச' படிவ தற்காலிக உரிமம் வழங்கலாம்.

உரிம மாற்றம் :

ஒரே திரையரங்கிற்கு வழங்கப்பட்ட உரிமத்தை மாற்ற திரையரங்கின் உரிமதாரரும் மேற்படி உரிமத்தினை மாற்றக் கோரும் நபரும் சேர்ந்து மனுச் செய்து கொள்ளும் பட்சத்தில் உரிமம் வழங்கும் அதிகாரி உரிமத்தை மாற்றி ஆணை பிறப்பிக்கலாம். இவ் வுத்திரவினால் பாதிக்கப்பட்ட நபர் விரும்பினால் சிறப்பு ஆணையர் மற்றும் நில நீர்வாக ஆணையருக்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

உரிமம் வழங்கும் அதிகாரியின் அதிகாரங்கள் :

திரைப்பட விதிகளிலுள்ள விதிகளை நிறைவு செய்யாது திரையரங்கு இயங்கும் பட்சத்தில், உரிமம் வழங்கும் அதிகாரிக்கு அத்திரையரங்கின் உரிமத்தை தற்காலிகமாக ரத்து செய்யவோ அல்லது தடை செய்யவோ அதிகாரம் உண்டு. உரிமம் வழங்கும் அதிகாரிக்கு திரையரங்கின் உரிமத்தை ஒரு நபரிடமிருந்து வேறு நபருக்கு சம்பந்தப்பட்ட நபர்களின் கோரிக்கையின் பேரில் மாற்ற அதிகாரம் உண்டு.

மேல் முறையீட்டு அதிகாரியின் அதிகாரங்கள் :

திரைப்படச் சட்டம் மற்றும் விதிகளின்படி நிர்வாக ஆணையரே மேல்முறையீட்டு அதிகாரி ஆவார். திரையரங்கு அமைக்க தடையின்மை சான்று வழங்கப்பட்டோ அல்லது நிராகரிக்கப்பட்டதாலோ 'சி' படிவ உரிமம் வழங்கப்பட்டோ அல்லது நிராகரிக்கப்பட்டதாலோ அவ்வுரிமம் புதுப்பிக்கப்பட்டோ அல்லது புதுப்பிக்க மறுக்கப் பட்டதாலோ உரிமம் மாற்றம் செய்யப்பட்டோ அல்லது நிராகரிக்கப்பட்டதாலோ பாதிக்கப்பட்ட நபர் மேல் முறையீடு அதிகாரிக்கு ஆணை பெற்று 30 நாட்களுக்குள் மேல்முறையீடு மனு தாக்கல் செய்யலாம். மேல்முறையீட்டு அதிகாரி மேற்படி நபர் 30 நாட்களுக்கு மேல் 60 நாட்கள் வரை மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்வதில் ஏற்படும் காலதாமதத்திற்கு தக்க காரணங்கள் வரப்படும் பட்சத்தில் மனுவினை ஏற்றுக்கொள்ளலாம். இந்த மேல்முறையீட்டின் மீது முடிவான ஆணை பிறப்பிப்பதற்கு முன்னாள் மேல்முறையீட்டு மனுதாரரையோ அல்லது அவரது வழக்குரைஞரையோ நேரிடை விசாரணை நடத்திய பிறகுதான் மனுக்கள் முடிவு செய்யப்படுகின்றன. இந்த மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்வதற்கு கட்டணம் ரூ. 300 செலுத்த வேண்டும். மேல்முறையீட்டு மனு மீது பிறப்பிக்கப்பட்ட உத்திரவினால் பாதிக்கப்பட்ட நபர் அரசிற்கு சீராய்வு மனு செய்து கொள்ளலாம்.

மாநில அரசின் அதிகாரங்கள்:

விதிகளை ஏற்படுத்தும் அதிகாரம் மாநில அரசைச் சார்ந்ததாகும். சட்டம் மற்றும் விதிகளிலிருந்து விளக்களிக்க மாநில அரசிற்கு முழு அதிகாரம் உண்டு. மேல்முறையீட்டு அதிகாரி பிறப்பித்த உத்தரவினால் பாதிக்கப்பட்ட நபர்கள் தாக்கல் செய்யும் சீராய்வு மனுக்களைப் பெற அரசிற்கு அதிகாரம் உண்டு.

திரையரங்குகளின் வகைபாடுகள்:

தமிழ்நாட்டில் மொத்தம் மூன்று வகையான திரையரங்குகள் செயல்படுகின்றன

1. நிரந்தர திரையரங்கு.
2. பகுதி நிரந்தர திரையரங்கு.
3. நகரும் திரையரங்கு.

1970ஆம் வருடம் பகுதி நிரந்தரத் திரையரங்கு அரசால் புதியவகையாக அறிமுகப் படுத்தப்பட்டது. இது நிரந்தரத் திரையரங்குகள் என்றே எல்லா வகையிலும் கருதப் படுகிறது. இத்திரையரங்கு ஆரம்பித்த 5 வருடம் முதல் 7 வருடக் காலத்திற்குள்ளான திரந்தரத் திரையரங்காக மாற்றப்பட்டதாகும். நிரந்தரத் திரையரங்குகளுக்கு உரிய விதிகளே பகுதி நிரந்தரத் திரையரங்கிற்கும் கடைபிடிக்கப்படுகிறது.

மேற்கூறிய மூன்று திரையரங்கு வகைகளைத் தவிர திறந்தவெளி திரையரங்குகளும் உள்ளது. இந்த திறந்தவெளி திரையரங்கு 1975ம் வருடம் செங்கற்பட்டு மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், சோமங்கலம் கிராமத்தில் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த திறந்தவெளி திரையரங்குகள் அமைக்க அரசால் தமிழ்நாடு திரைப்பட 52 (4) 53, 57இ, 64, 74 (1) மற்றும் 91 விதிகளின்று விலக்களிக்கப்பட்டு அனுமதி வழங்கி வரப் பட்டது.

திரையரங்குகளின் இருப்பிடம்

ஒரு திரையரங்கிற்கும், மற்றொரு திரையரங்கிற்கும் இடையே உள்ள தூரத்தைப் பொறுத்தமட்டில் சில வரையறைகள் உள்ளது. அது என்னவெனில் நிரந்தரத் திரை யரங்கிற்கும், நகரும் திரையரங்கிற்கும் 1,609 மீட்டர் தூரம் குறைந்தபட்சம் இருக்க வேண்டும். இது நகரும் நிரையரங்கங்களிடையே 0.402 மீட்டர் தூரம் இருக்க வேண்டும். ஆனால் இரு திரையரங்கிற்கிடையே இந்த வரைமுறைகள் ஏது மில்லை. நிரந்தரத் திரையரங்கு உரிமைதாரருக்கும் நகரும் திரையரங்கம் உரிமதார ருக்கும் இடையே தொழில்முறைப்போட்டி ஏற்படாமல் தடுக்கவே மேற்கூறிய விதிகள் அமுல்படுத்தப்படுகின்றன. திரையரங்குச்சட்டம் மற்றும் விதிகள் யாவும் பொதுவாக ஒழுங்குப்படுத்தும் தன்மையில் அமைந்தனவாகும். இவற்றினை கூடிய மட்டில் முழுமை யாக கடைபிடிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கடந்த 31—3—1990-ந் தேதி நிலவரப்படி மாநிலத்தில் உள்ள நிரந்தரத் திரையரங்கம் பகுதி நிரந்தரம், நகரும் திரையரங்குகளின் எண்ணிக்கை மேற்கண்ட அட்டவணையில் தரப்பட்டுள்ளது:—

வரிசை எண்.	வகைப்பாடு.	மொத்தம்.
(1)	(2)	(3)
	நிரந்தரத் திரையரங்குகள் :	
1	காற்றுப்பதனம் செய்யப்பட்டது	122
2	பகுதியாக காற்றுப்பதனம் செய்யப்பட்டது	17
3	காற்றுப்பதனம் செய்யப்படாதது	1,302
2.	பகுதி நிரந்தரத் திரையரங்குகள் ...	234
3.	திறந்தவெளி	14
4.	நகரும் திரையரங்கம் ...	984

குடிமைப்பாதுகாப்பு

சென்னை நகரம் மட்டுமே உள்நாட்டுப்பாதுகாப்பிற்காக பகுதி 'அ' நகரமாக மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனினும் அதற்குத் தேவையான ஊழியர்களும், உள்ளமைப்பும் இன்னமும் ஒப்பளிக்கப்படவில்லை. இதுகாறும் உள்நாட்டு பாதுகாப்பு தொண்டர்படை அமைக்கப்படவில்லை.

உள்நாட்டு பாதுகாப்பிற்காக 1 காவல்துறைத் துணைத்தலைவர், 2 காவல்துறை துணை கண்காணிப்பாளர்கள் 8 ஆய்வாளர்கள், 4 உதவி ஆய்வாளர்கள், 1 நேர்முக உதவியாளர் (நிர்வாகம்) 1 கண்காணிப்பாளர் 2 உதவியாளர்கள், 2 இளநிலை உதவியாளர்கள், 2 கருக்கெழுத்து தட்டச்சர்கள், 1 தட்டச்சர், 2 அலுவலக உதவியாளர்கள் 1 பதிவறு எழுத்தர், 1 தலைமைக்காவலர், மற்றும் 3 காவலர்கள் தலைமையகத்திற்காகவும் கட்டுப்பாட்டு அறை மற்றும் பயிற்சி நிலையம் சென்னையிலும் அமைக்கப்பட தேவையான கருத்துரு அரசுக்கு ஒப்பளிப்பாணை கோரி அனுப்பப்பட்டுள்ளது. அரசின் ஆணை எதிர்நோக்கப்பட்டுள்ளது.

உரிமையியல் நீதிமன்றம்.

உரிமையியல் நீதிமன்றம், செங்கை உயர்நீதிமன்றத்தின் மேல் முறையீட்டுப் பிரிவு.

பின்வரும் வகை வழக்குகளின் எண்ணிக்கை மட்டுமே அதிகரித்திருப்பது தெரிய வந்துள்ளது. அதாவது :—

(1) அசல் வழக்கு மேல் முறையீடுகள்.

(2) புனைவுரிமைப் பட்டயம் தொடர்பான மேல்முறையீடுகள்.

(3) இரண்டாம் மேல்முறையீடுகள்.

(4) ஆணைகளுக்கு எதிரான மேல்முறையீடுகள்

(5) உரிமை இயல் சீராய்வு மனுக்கள்

(6) வரி வழக்கு மனுக்கள்

(7) திருமண வழக்குகள்.

(8) சிறப்பு நடுவர் மன்ற மேல்முறையீடுகள்.

(9) நீதிமன்ற அவமதிப்புள்ள மேல்முறையீடுகள்.

(10) வணிகக்குறி வழக்குகள்

(11) மேல் பரிசீலனை மனுக்கள்

உயர்நீதிமன்ற அசல் வழங்குப்பிரிவு, சென்னை :

உயர்நீதிமன்றத்தில் நிறைவேற்று மனுக்களின் எண்ணிக்கை மட்டுமே அதிகரித்து உள்ளது. ஏனைய வகை வழக்குகளை அதாவது உரிமை இயல் வழக்குகள் உயில் குறித்த அசல் வழக்குகள், திருமண வழக்குகள் அசல் மனுக்கள் ஆகியவை தாக்கல் செய்ய வருவது குறைந்துள்ளது.

மாநகர உரிமை இயல் நீதிமன்றம், சென்னை:

அசல் வழக்குகள், உரிமையியல் பல்வகை மனுக்கள், இடைநில்ல விண்ணப்பங்கள், நில எடுப்பு அசல் மனுக்கள் மூல மனுக்கள் ஈ. ஐ. அசல் மனுக்கள் (E.I.OS.) ஆகியவை தாக்கல் செய்வது அதிகரித்துள்ளது. உரிமையியல் மேல் முறையீடுகள் அசல் மனுக்கள், நிறைவேற்று மனுக்கள் ஆகியவை தாக்கல் செய்வது குறைந்துள்ளது. தாக்கல் செய்யப்படும் உரிமையியல் பல்வகை மேல் முறையீடு மனுக்களின் எண்ணிக்கை ஒரே சீராக உள்ளது.

சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை :

வாடகைக் கட்டுப்பாட்டு மேல் முறையீடுகள் தாக்கல் செய்யப்படுவது கணிசமாக அதிகரித்துள்ளது. ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வெளியேற்றுதல் மேல் முறையீடுகள், மேல் முறையீடுகள் மனுக்களின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மோட்டார் விபத்து இழப்பீட்டுக் கோரிக்கை நடுவர் மன்ற அசல் மனுக்களின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட நிறைவேற்று மனுக்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. சிறு குற்ற வழக்குகள் பல்வகை மனுக்கள் வாடகைக் கட்டுப்பாட்டு அசல் மனுக்கள் புதிய வழக்கு விண்ணப்பங்கள் நிறை வேற்று மனுக்கள் ஆகியவைத் தாக்கல் செய்யப்படுவது குறைந்துள்ளது. அவசர சட்டத்தின் கீழ் நகராட்சி வரி விதிப்பு மேல் முறையீடுகள், நகர அமைப்புத் திட்ட மேல் முறையீடுகள், தேர்தல் மனுக்கள், நகராட்சி விண்ணப்பங்கள குற்றவியல் அசல் நடவடிக்கை சட்டக் கோவை ஆகியவை தாக்கல் செய்யப்படவில்லை எனக் கூறப் படுகிறது.

வெளியூர் நீதி மன்றங்கள் :

அசல் வழக்குகள் :

மேல்நிலை நீதிமன்றங்கள்

தாக்கல் செய்யப்படும் வழக்குகளின் எண்ணிக்கை மொத்தத்தில் 16,938-லிருந்து 18,298 ஆக அதிகரித்துள்ளது. பெரியார், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, திண்டுக்கல் காயிதே மில்லத், சேலம், தருமபுரி மாவட்டங்கள் தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மேல் நிலை நீதிமன்றங்கள் :

தாக்கல் செய்யப்படும் வழக்குகளின் எண்ணிக்கை மொத்தத்தில் 95,589-லிருந்து 1,00,551 ஆக அதிகரித்துள்ளது. வட ஆற்காடு, செங்கை அண்ணா, கோயம்புத்தூர், கன்னியாகுமரி, மதுரை, இராமநாதபுரம், தருமபுரி, கிழக்குத் தஞ்சாவூர், மேற்குத் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, நீலகிரி மாவட்டங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்படுவது அதிகரித்துள்ளது. ஏனைய மாவட்டங்களில் அதாவது, தென் ஆர்க்காடு, பெரியார், திண்டுக்கல்-காயிதே மில்லத், சேலம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை குறைந்து உள்ளது.

உரிமையியல் மேல் முறையீடுகள் :

மேல்நிலை நீதி மன்றங்கள் :

மொத்தத்தில், தாக்கல் செய்யப்படும் வழக்குகளின் எண்ணிக்கை மொத்தத்தில் 6,519-லிருந்து 7,381 ஆக அதிகரித்து உள்ளது தெரிய வந்துள்ளது. வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கை-அண்ணா, கோயம்புத்தூர், கன்னியாகுமரி, திண்டுக்கல், காயிதே மில்லத், கிழக்குத் தஞ்சாவூர் மேற்கு தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக் கோட்டை, திருநெல்வேலி, நீலகிரி, ஆகிய மாவட்டங்களில் மட்டுமே உரிமையியல் மேல் முறையீடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

உரிமையியல் பல்வகை மேல்முறையீடுகள் :

மேல் நிலை நீதிமன்றங்கள் :

தாக்கல் செய்யப்படும் வழக்குகளின் எண்ணிக்கை மொத்தத்தில் 2,699-லிருந்து 2,990 ஆக அதிகரித்துள்ளது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் மேல் முறையீடுகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது. கோயம்புத்தூர், மதுரை, திண்டுக்கல், காயிதே மில்லத், இராமநாதபுரம், சேலம், தருமபுரி, மேற்குத் தஞ்சாவூர், புதுக் கோட்டை, திருநெல்வேலி, மாவட்டங்களிலும் மேல்முறையீடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆனால், தென் ஆர்க்காடு, செங்கை-அண்ணா, பெரியார், கன்னியா குமரி, கிழக்குத் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் மேல் முறையீடுகள் தாக்கல் செய்யப்படுவது குறைந்துள்ளது.

நிறுகுற்ற வழக்குகள் :

மேல்நிலை நீதிமன்றங்கள் :

கோயம்புத்தூர், மதுரை மாவட்டங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்படுவது குறைந்துள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வழக்குகளின் எண்ணிக்கை அதி கரித்துள்ளது. ஏனைய மாவட்டங்களின் வழக்கு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்று கூறப்படுகிறது.

தாக்கல் செய்யப்படும் வழக்குகளின் எண்ணிக்கை மொத்தத்தில் 858-லிருந்து 700 ஆகக் குறைந்துள்ளது.

கீழ்நிலை நீதிமன்றங்கள் :

தென் ஆர்க்காடு, பெரியார், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, சேலம், தருமபுரி மேற்குத் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, நீலகிரி மாவட்டங் களில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. ஆனால், செங்கை-அண்ணா, மதுரை, திண்டுக்கல்-காயிதே மில்லத், இராமநாதபுரம், கிழக்குத் தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. வடஆர்க்காடு மாவட்டத்தில் வழக்குகளின் எண்ணிக்கை அதிகரிக் கவோ, குறையவோ செய்யாமல் சீராக உள்ளது. தாக்கல் செய்யப்படும் வழக்கு களின் எண்ணிக்கை மொத்தத்தில் வெகுவாக குறைந்துள்ளது. அதாவது 3256 லிருந்து 2,825 ஆகக் குறைந்துள்ளது.

உரிமையியல் பல்வகை மனுக்கள் :

மேல்நிலை நீதி மன்றங்களிலும் கீழ்நிலை நீதிமன்றங்களிலும் தாக்கல் செய் யப்படும் வழக்குகளின் எண்ணிக்கை மொத்தத்தில் அதிகரித்துள்ளது. மேல்நிலை நீதி மன்றங்கள் மற்றும் கீழ்நிலை நீதிமன்றங்களின் முறையே 144,365-லிருந்து 163,182 ஆகவும் 2,64,523-லிருந்து 303,998 ஆகவும் அதிகரித்துள்ளது.

ஊடகை நடுவர் மன்ற மேல் முறையீடுகள் :

மேல்நிலை நீதி மன்றங்களில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளின் எண்ணிக்கை மொத்தத்தில் 333-லிருந்து 592 ஆக அதிகரித்துள்ளது. கீழ்நிலை நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளின் எண்ணிக்கை (4-லிருந்து 1 ஆக) குறைந்துள்ளது.

அசல் மனுக்கள் :

மொத்தத்தில் மேல்நிலை, கீழ்நிலை நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளின் எண்ணிக்கை முறையே 11,176-லிருந்து 15,256 ஆகவும் 4,727-லிருந்து 5,246 ஆகவும் அதிகரித்துள்ளது.

நொடிப்பு நிலை அறிவிப்பு மனுக்கள் :

மேல்நிலை நீதி மன்றங்களில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளின் எண்ணிக்கை மொத்தத்தில் 447 -லிருந்து 472 ஆகவும், கீழ் நிலை நீதி மன்றங்களில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளின் எண்ணிக்கை 46-லிருந்து 97 ஆகவும் அதிகரித்துள்ளது.

நிறைவேற்று மனுக்கள் :

மேல்நிலை நீதி மன்றங்களில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளின் எண்ணிக்கை 6,161-லிருந்து 6,702 ஆகவும் கீழ்நிலை நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளின் எண்ணிக்கை மொத்தத்தில் 39,121-லிருந்து 41,004 ஆகவும் அதிகரித்திருப்பது தெரியவந்துள்ளது.

வாடகைக் கட்டுப்பாடு அசல் மனுக்கள் :

தாக்கல் செய்யப்படும் வழக்குகளின் எண்ணிக்கை மொத்தத்தில் 4,113-லிருந்து 4,427 ஆக அதிகரித்துள்ளது.

தொழிலாளர் நீதிமன்றங்கள் சென்னை

தொழில் தகராறுகள் சட்டத்தின் 10-ஆம் பிரிவின்கீழ் தொழில் தகராறுகள் குறித்து தாக்கல் செய்யப்படும் வழக்குகளின் எண்ணிக்கை 857-லிருந்து 1,200 ஆகவும் தொழில் தகராறுகள் சட்டத்தின் 33, 33-ஏ, 33-பி, (2) பிரிவுகளின் கீழ்த் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 1,288லிருந்து 1,204 ஆகவும் அதிகரித்துள்ளது.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள், மதுரை:

தொழில் தகராறுகள் சட்டத்தின் 10-ஆம் பிரிவின்கீழ் தாக்கல் செய்யப்படும் தொழில் தகராறுகள் குறித்த வழக்குகள் மற்றும் தொழில் தகராறுகள் சட்டத்தின் 33, 33-ஏ; 33(பி) (2) பிரிவுகளின் கீழ்த்தாக்கல் செய்யப்படும் மனுக்களின் எண்ணிக்கை முறையே 568லிருந்து 623 ஆகவும், 590லிருந்து 1,550 ஆகவும் அதிகரித்துள்ளது.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள் கோயம்புத்தூர்:

தொழில் தகராறுகள் சட்டத்தின் 10-ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்படும் தொழில் தகராறுகள் குறித்த வழக்குகளின் எண்ணிக்கை 451லிருந்து 955 ஆக அதிகரித்துள்ளது. தொழில் தகராறுகள் சட்டத்தின் 33, 33-ஏ, 33(பி) (2) பிரிவுகளின் கீழ்த் தாக்கல் செய்யப்படும் மனுக்களின் எண்ணிக்கை 449லிருந்து 306 ஆக குறைந்துள்ளது.

தொழில் நடுவர் மன்றம் சென்னை :

தொழில் தகராறுகள் சட்டத்தின் 10-ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்படும் தொழில் தகராறுகள் குறித்த வழக்குகளின் எண்ணிக்கை அதாவது 120லிருந்து 127 ஆக அதிகரித்துள்ளது. தொழில் தகராறுகள் சட்டத்தின் 33, 33ஏ. 33(பி) (2) பிரிவுகளின் கீழ்த் தாக்கல் செய்யப்படும் மனுக்களின் எண்ணிக்கை 246லிருந்து 178 ஆகக் குறைந்துள்ளது.

1—4—1989 முதல் 31—3—1990 வரையில் செய்யப்பட்டுவந்த தற்காலிக நீதிமன்றங்களின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை :

(1) கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள் உட்பட மாவட்ட நீதி மன்றங்கள்.	10
(2) மாவட்ட நீதிபதிகள் (JUDGES) பதவித்தரத்தில் சென்னை மாநகர் உரிமையியல் நீதி மன்றத்தில் இயங்கும் தற்காலிக நீதிமன்றங்கள்.	8
(3) சென்னை. தனியார் கல்லூரிகள் மேல் முறையீட்டு நடுவர் மன்றம்.	1

(4) சென்னை கூட்டுறவு சங்க வழக்குகள் தனி நடுவர் மன்றம் 1

(5) மதுரை கூட்டுறவு சங்க வழக்குகள் தனி நடுவர் மன்றம், 1

(6) மதுரை தொழிலாளர் நலக் கூடுதல் நீதி மன்றம் ... 1

(7) சென்னை தொழிலாளர் நலக்கூடுதல் நீதி மன்றம் III 1

(8) கூடுதல் துணை நீதிமன்றங்கள் (புதிய இடங்களில் உள்ள நீதிமன்றங்கள் உட்பட ஆனால் தற்காலிகமான, 5

(9) சென்னை மாநகர் உரிமை இயல் நீதி மன்றத்தினுள்ள கூடுதல் உதவி நீதிபதிகள் நீதிமன்றங்கள் (XI முதல் XIX வரையிலான உதவி நீதிபதிகள் நீதிமன்றங்கள்), 8

(10) துணை நீதிபதிகள் பதவித்தரத்தில். சென்னை சிறு வழக்குகள் நீதிமன்றத்தில் உள்ள துணை நீதிபதிகள், 3

(11) மாவட்ட முன்சீப் கூடுதல் நீதிமன்றங்கள் (புதிய இடங்களில் கட்டப்பட்டுள்ள ஆனால் தற்காலிகமான முன்சீப் நீதி மன்றங்கள் உட்பட), 25

(12) சென்னை சிறு வழக்குகள் நீதிமன்றத்தில் மாவட்ட முன்சீப் பதவித்தரத்தில் உள்ள வாடகைக் கட்டுப்பாடு குறித்த தற்காலிக நீதிமன்றங்கள், 4

(13) 1982. 83, 1983-84, 1984-85, 1986-87, 1987-88, 1988-89, 1989-90-ஆம் ஆண்டுகளில் அனுமதி மதிக்கப்பட்ட கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள். நீதிபதிகள், இல்லாததால் இவை செயல்படத் தொடங்கவில்லை,

(14) ஆரணி. துணைநீதிமன்றம். 6—6—1988 அன்று நிலையான நீதிமன்றமாக ஆக்கப்பட்டது,

(15) அரூர், மாவட்ட முன்சீப் நீதிமன்றம் 6—6—1988 அன்று நிலையான நீதிமன்றமாக ஆக்கப்பட்டது.

சென்னை உயர்நீதிமன்றம் அசல் வழக்கு பிரிவு :

தொடர் எண்,	வழக்குகளின் தன்மை,	தாக்கல் செய்யப் பட்ட வழக்குகள், 1—4—89 முதல் 31—3—90 வரை.	தீர்ப்பான வழக்குகள், 1—4—89 முதல் 31—3—90 வரை.	நிலுவையாக உள்ள வழக்குகள், 1—4—89 முதல் 31—3—90 வரை,
(1)	(2)	(3)	(4)	(5)
1	உரிமையியல் வழக்குகள்	1,111	403	6,459
2	உயில் தொடர்பான அசல் வழக்குகள்,	21	12	188
3	திருமண வழக்குகள்	26	23	118
4	அசல் மனுக்கள்	566	448	979
4	நிறைவேற்று மனுக்கள்	206	102	268
	மொத்தம்	1,930	988	7,952

சென்னை உயர்நீதிமன்றம், மேல் முறையீட்டாளர் தரப்பு :

வரிசை எண் மற்றும் வழக்கின் தன்மை.	தொடரப்பட்ட வழக்குகள் 1–4–1989 முதல் 31–3–1990 வரை.	முடிக்கப்பட்ட வழக்குகள் 1-4-1989 முதல் 31–3–1990 வரை.	நிலுவையாக உள்ள வழக்குகள் 1–4–1989 முதல் 31–3–1990 வரை.
(1)	(2)	(3)	(4)
1 முதல் மேல்முறையீடுகள்	1,467	630	8,694
2 முதலேற்பு மேல்முறையீடுகள்	357	239	1,081
3 உரிமை பட்டயம் தொடர்பான மேல் முறையீடுகள் ..	179	209	238
4 ரிட்மேல்முறையீடுகள்	1,177	2,230	1,896
5. இரண்டாவது மேல்முறையீடுகள்	2,116	1,077	13,618
6 ஆணைகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீடுகள் ..	1,296	711	6,038
7 மேல்முறையீட்டுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகள்	57	23	377
8 சிவில் மனு ஆய்வு மனுக்கள்	3,701	3,529	9,451
9 வரி வழக்குகள்	1,093	451	12,792
10 வரி வழக்கு மனுக்கள்	523	538	456
11 ஆய்வுரை கோரும் மனுக்கள்	1	3	80
12 திருமணம் குறித்த மனுக்கள்	45		150
13 ரிட் மனுக்கள்	15,349	17,356	53,706
14 உச்சநீதி மன்ற (அனுமதிகோரும்) மனுக்கள்	16	34	102
15 சிறப்பு நடுவர் மன்ற வழக்குகள்	19	10	201
16 அவமதிப்பு குறித்த மேல்முறையீடுகள்	15	9	32
17 வணிக முத்திரை குறித்த மேல் முறையீடுகள்	16	2	66
18 வணிக முத்திரைகுறித்த இரண்டாவது மேல்முறையீடுகள் ..	—	—	3
19 ஆய்வு கோரும் மனுக்கள் ..	25	31	38
20 சிவில் பல்வகை மனுக்கள் ..	41,094	47,445	70,235
மொத்தம் ..	68,546	74,526	1,79,254

மாநகர் சிவில் நிதிமன்றம், சென்னை:

மதாடர் ஆணை, நடவடிக்கையின் தன்மை.	தொடரப் பட்ட வழக்குகள் 1-4-1989 முதல் 31-3-1990 வரை.	முடிவுற்ற வழக்குகள். 1-4-1989 முதல் 31-3-1990 வரை.	நிலுவையி லுள்ள வழக்குகள் 1-4-1989 முதல் 31-3-1990 வரை.
(1)	(2)	(3)	(4)
1 முதலேற்பு வழக்குகள் ...	12,046	13,120	22,096
2 சிவில் மேல்முறையீடுகள் ..	477	610	490
3 சிவில் பல்வகை மேல்முறையீடுகள்	222	265	141
4 சிவில் பல்வகை மனுக்கள் ..	26,777	25,669	23,606
5 இடைக்கால நிவாரண மேல்முறை யீடுகள் முதலேற்பு மனுக்கள் ...	506	486	340
6 நிலம் கையகப்படுத்துவது குறித்து மனுக்கள்	70	106	380
7 நிறைவேற்று மனுக்கள் ...	3,101	3,517	5,114
8 வெளியேற்றுகை தொடிப்பு குறித்த மனுக்கள்	116	153	335
மொத்தம்	43,395	43,926	52,502

சிறுவழக்குகள் நிதிமன்றம், சென்னை :

வரிசை எண்ணும் நடவடிக்கையின் தன்மை.	தொடரப் பட்ட வழக்குகள் 1-4-1989 முதல் 31-3-1990 வரை.	முடிக்கப் பட்ட வழக்குகள் 1-4-1989 முதல் 31-3-1990 வரை.	நிலுவையி லுள்ள வழக்குகள் 1-4-1989 முதல் 31-3-1990 வரை
(1)	(2)	(3)	(4)
1 சிறு வழக்குகள் ..	7,642	9,903	8,510
2 பல்வகை மனுக்கள்	23,236	21,541	13,376
3 மோட்டார் வண்டி விபத்துக்கோரிக்கை முத்துயர்வு மனுக்கள்	2,847	2,005	5,847
4 வாடகை கட்டுப்பாடு முதற்குறைவு மனுக்கள்	4,069	4,942	6,588
5 புதிய வழக்கு விசாரணைகள் ...	24	42	39
6 வாடகைக்கட்டுப்பாடு மேல் முறை யீடுகள்	926	905	1,189
7 நகராட்சி வரி விதிப்பு மேல் முறை யீடுகள்	...	...	
8 வெளியேற்றம் குறித்த மேல்முறை யீடுகள்	11	10	21
9 நகரமைப்பு மேல்முறையீடுகள் ...	...	...	...
10 நிறைவேற்று மனுக்கள் ...	509	238	686
11 ஊதியம் வழங்கும் திட்டத்தின் கீழ் செய்து கொள்ளப்பட்ட மேல் முறையீடுகள்	4	6	18
12 தேர்தல் மனுக்கள்			
13 நகராட்சி விண்ணப்பங்கள் ...			
14 குற்றவியல் அசல் மனுக்கள் ...			
15 எ1, ஐ சி,ஒ-களின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட நிறைவேற்று மனுக்கள் ...	119	111	105
மொத்தம்	39,387	39,703	36,329

தொழிலாளர் நீதிமன்றங்கள் சென்னை, மதுரை கோயம்புத்தூர்—தொழிலாளர் நடுவர் மன்றம் சென்னை.

தொடர் எண்.	நீதிமன்றங்கள் நடுவர் மன்றங்கள்,	தொடரப்பட்ட வழக்குகள்.		முடிக்கப்பட்ட வழக்குகள்.		முடிவுறாத வழக்குகள்.	
		தொழிற்தகராறுகளின் பிரிவின்கீழ் தகராறுகள் 1-4-89 முதல் 31-3-90 வரை.	33, 33ஏ, 33(2) (ஆ) பிரிவின்கீழ் பயப்பட்டுள்ள 1-4-89 முதல் 31-3-90 வரை செய்யப்பட்டுள்ள ஆணைகள் மனுக்கள்	தொழிற் தகராறுகள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின்கீழ் தொழிற்தகராறுகள் 1-4-89 முதல் 31-3-90 வரை.	33, 33ஏ, 33(2) (ஆ) கீழ் பிரிவுகளின் கீழ் செய்யப்பட்டுள்ள ஆணைகள் மனுக்கள் 1-4-1989 முதல் 31-3-1990 வரை.	தொழிற் தகராறுகள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் தகராறுகள் (தொழிற் தகராறு கள்,) 1-4-1989 முதல் 31-3-1990 வரை,	33, 33ஏ, 33, (2) (ஆ) கீழ் பிரிவுகளின் கீழ் செய்யப்பட்டுள்ள ஆணைகள் மனுக்கள் முதல் 31-3-1990 வரை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1.	தொழிலாளர் நல நீதிமன்றங்கள் சென்னை. — — —	1,200	1,204	545	1,086	2,335	3,147
2.	தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மதுரை. — — —	623	1,550	359	1,889	1,581	2,350
3.	தொழிலாளர் நல நீதிமன்றங்கள் கோயம்புத்தூர். —	955	306	211	248	1,302	1,254
	மொத்தம் —	2,778	3,060	1,115	3,223	5,218	6,751
	தொழிலாளர் நடுவர் மன்றங்கள். சென்னை	127	178	97	190	346	324

முதலேற்பு வழக்குகள்.

வெளியூர் நீதி மன்றங்கள்.

1988—89-ஆம் ஆண்டில் வெளியூர் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது1

மாவட்டங்கள்.	தொடரப்பட்ட வழக்குகள்.		முடிக்கப்பட்ட வழக்குகள்.		நிலுவையிலுள்ள வழக்குகள்.	
	மேல்நிலை நீதிமன்றங்கள்.	கீழ்நிலை நீதிமன்றங்கள்.	மேல்நிலை நீதிமன்றங்கள்.	கீழ்நிலை நீதிமன்றங்கள்.	மேல்நிலை நீதிமன்றங்கள்.	கீழ்நிலை நீதிமன்றங்கள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
மூல வழக்குகள் — —	18,298	100,551	16,689	103,546	33,151	166,226

மேல்நிலை நீதிமன்றங்களில உள்ள வழக்குகள்.

1989-90 ஆம் ஆண்டுக்குரிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டங்கள்,	தொடரப்பட்ட வழக்குகள்,	முடிக்கப்பட்ட வழக்குகள்,	நிலுவையான வழக்குகள்,
(1)	(2)	(3)	(4)
மேல்நிலை நீதிமன்றங்களில் உரிமையியல் மேல்முறையீடுகள்	7,381	7,228	8,194
மேல்நிலை நீதிமன்றங்களில் உரிமையியல் பல்வகை மேல்முறையீடுகள்	2,990	3,280	4,370

சிறு வழக்குகள்.

1989-90-ஆம் ஆண்டில் வெளியூர் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது,

	தொடரப்பட்ட வழக்குகள்.		முடிக்கப்பட்ட வழக்குகள்.		நிலுவையிலுள்ள வழக்குகள்.	
	மேல்நிலை நீதிமன்றங்கள்.	கீழ்நிலை நீதிமன்றங்கள்.	மேல்நிலை நீதிமன்றங்கள்.	கீழ்நிலை நீதிமன்றங்கள்.	மேல்நிலை நீதிமன்றங்கள்.	கீழ்நிலை நீதிமன்றங்கள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
சிறு வழக்குகள்	700	2,825	1,326	3,126	812	1,316
பல்வகை உரிமையியல் மனுக்கள்	163,182	303,998	156,441	285,011	43,162	139,558
நடுவர் மன்றத்திடம் வாடகை குறித்து செய்யப்பட்ட மேல்முறையீடுகள்	591	1	353	3	965	5
முதல் வழக்குகள்	15,256	5,246	11,593	4,961	20,893	1,511
நொடிப்புநிலை அறிவிப்பு மனுக்கள்	472	97	331	71	1,204	89
	நிறைவேற்றக்கோரும் மனு.					
நிறைவேற்றம் கோரும் மனுக்கள்	6,702	41,004	6,297	39,591	9,507	46,513

கீழ்நிலை நீதிமன்றங்களில் வீட்டு வாடகைக் கட்டுப்பாடு மூலமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டவை தீர்வுசெய்யப்பட்ட, நிலுவையாக உள்ள வழக்குகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

தொடரப்பட்டவை,	தீர்வுசெய்யப்பட்டவை,	நிலுவையாக உள்ளவை.
(1)	(2)	(3)
4.427	5.437	10.293

விவர அறிக்கை "ஏ"

1—4—1989 லிருந்து 31—3—1990 வரையிலான கால அளவில் தமிழ் நாட்டில் செஷன்ஸ் கோர்ட்டில் நிதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கைகள் குறித்தும் அறிக்கை.

தொடர் எண்.	மாவட்டத்தின் பெயர்.	தொடரப்பட்டவை.		முடிக்கப்பட்டவை.		விசாரணையில் உள்ளவை.	
		1988—89	1989—90	1988—89	1989—90	1988—89	1989—90
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1	வட ஆற்காடு	192	227	132	243	184	168
2	தென் ஆற்காடு	223	312	154	210	275	377
3	செங்கற்பட்டு	244	225	148	226	385	384
4	கோயம்புத்தூர் ..	132	192	147	173	72	91
5	உதகமண்டலம் ..	18	20	29	10	14	24
6	பெரியார் ..	133	169	152	159	43	53
7	தருமபுரி ..	110	96	73	77	187	206
8	கன்னியாகுமாரி	90	85	81	64	133	154
9	மதுரை தெற்கு	268	273	202	274	450	449
10	மதுரை, வடக்கு	88	108	107	90	122	140
11	புதுக்கோட்டை	63	85	51	57	20	48
12	இராமநாதபுரம்	209	241	222	181	230	290
13	சேலம்	165	195	268	229	167	133
14	தஞ்சாவூர் கிழக்கு	74	93	92	93	40	40
15	தஞ்சாவூர் மேற்கு	90	157	103	150	129	128
16	திருச்சிராப்பள்ளி	172	225	194	155	123	193
17	திருநெல்வேலி ..	315	402	271	310	698	790
18	சென்னை ..	146	196	109	139	132	189
	மொத்தம்	2,732	3,301	2,525	2,848	3,404	3,857

விவர அறிக்கை "பி"

பாகம்

1—4—1969 லிருந்து 31—3—1990 வரையிலான கால அளவில் தமிழ்நாட்டில் சார்நிலை நீதிமன்றத்தில் தொடரப்பட்ட முடிக்கப்பட்ட விசாரணையில் உள்ள குற்ற வழக்குகள் எண்ணிக்கையை குறிக்கும் விவர அறிக்கை.

தொடர் எண்.	மாவட்டத்தின் பெயர்.	தொடரப்பட்டவை.		முடிக்கப்பட்டவை.		விசாரணையில் உள்ளவை	
		1988–89	1989–90	1988–89	1989–90	1988–89	1989–90
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1	வட ஆற்காடு	44,382	86,730	50,311	78,175	11,674	20.221
2	தென் ஆற்காடு	61,401	67,314	58,647	61,903	17,900	22,711
3	செங்கல்பட்டு	56,109	106,339	61,566	98,910	25,997	33,426
4	கோயம்புத்தூர்	36,336	58,236	35,743	49,041	10,910	17,105
5	நீலகிரி	8,546	9,936	8,025	8,028	4,036	5,944
6	பெரியார்	46,452	52,180	38,454	56,785	27,771	23,166
7	தருமபுரி	10,114	23,981	11,110	21,158	5,157	7,980
8	கன்னியாகுமரி	17,698	25,946	14,320	24,118	13,250	15,078
9	மதுரை	90,684	128,529	96,322	117,580	23,143	34,982
10	புதுக்கோட்டை	14,722	25,267	15,744	21,206	4,254	18,795
11	இராமநாதபுரம்	44,586	75,662	43,749	69,722	12,853	18,795
12	சேலம்	44,906	64,486	49,562	62,049	9,359	11,796
13	தஞ்சாவூர்	48,309	84,465	46,273	82,117	28,761	31,109
14	திருச்சிராப்பள்ளி	40,936	62,287	39,091	34,789	13,990	21,488
15	திருநெல்வேலி	57,284	70,112	49,270	86,074	30,483	14,521
16	சென்னை	284,571	327,513	280,610	322,013	41,384	46,884
	மொத்தம்	907,576	1,265,963	898,797	1,213,666	280,322	332,616

2—4—1989 முதல் 31—3—1990 வரையிலான காலத்திற்கு "பி" பாகம் 1-ல் காட்டப்பட்டுள்ள மொத்த வழக்குகளில் கடுமையான குற்ற வழக்குகளைக் காட்டும் விவர அறிக்கை.

தொடர் எண்.	மாவட்டத்தின் பெயர்.	தொடரப்பட்ட வழக்குகள்.		முடிக்கப்பட்ட வழக்குகள்.		நிலுவையாக உள்ளவை.	
		1988–89	1989–90	1988–89	1989–90	1988–89	1989–90
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1	வடஆற்காடு	553	2,759	296	1,902	262	1,119
2	தென் ஆற்காடு	1,085	708	891	886	616	448
3	செங்கல்பட்டு	2,198	3,257	2,613	1,979	2,074	3,352
4	கோயம்பத்தூர்	452	544	256	547	336	339
5	நீலகிரி	38	30	22	28	32	34
6	பெரியார்	874	331	244	839	732	24
7	தருமபுரி	177	111	496	105	169	175
8	கன்னியாகுமரி	256	299	278	172	195	322
9	மதுரை	3,481	3,820	3,141	2,633	3,126	4,313
10	புதுக்கோட்டை	141	332	150	234	88	186
11	ராமநாதபுரம்	460	680	379	679	390	391
12	சேலம்	258	212	198	224	130	119
13	தஞ்சாவூர்	479	427	604	538	330	289
14	திருச்சிராப்பள்ளி	1,065	733	897	926	419	220
15	திருநெல்வேலி	1,071	988	1,461	627	660	1,021
16	சென்னை	402	278	486	240	253	291
		13,990	15,589	12,412	12,559	9,806	13,836

1—4—1989 முதல் 31—3—11990 வரையிலான காலத்திற்கு "பி" பாகம் 1-ல் காட்டப்பட்டுள்ள இனங்களின் மொத்த எண்ணிக்கையில் மது விலக்குகள் மற்றும் வனம் வழக்குகளை காட்டும் விவர அறிக்கை.

தொடர் எண்.	மாவட்டத்தின் பெயர்.	மது விலக்கு வழக்குகள்.		வன வழக்குகள்.	
		1988—89	1989—90	1988—89	1989—90
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	வட ஆற்காடு	1,704	40.453	295	2,089
2	தென் ஆற்காடு ..	4,294	29,626	157	92
3	செங்கல்பட்டு	4,865	57,569	14	31
4	கோயம்பத்தூர்	4,074	14,315	88	142
5	நீலகிரி	586	5,377	434	374
6	பெரியார்	17,311	28,364	216	366
7	தர்மபுரி..	845	12,785	136	346
8	கன்னியாகுமரி	1,971	13,193	605	123
9	மதுரை	3,850	46,519	380	891
10	புதுக்கோட்டை	4,406	18,562	27	40
11	ராமநாதபுரம்	4,594	35,316	23	159
12	சேலம்	6,658	30,516	205	543
13	தஞ்சாவூர்	17,110	53,395	13	52
14	திருச்சிராப்பள்ளி	12,440	46,751	152	111
15	திருநெல்வேலி	5,279	20,349	142	55
16	சென்னை	1,939	41,109	38	14
	மொத்தம்	91,931	4,94,201	2,923	5,206

தீயணைப்புப் படை

தமிழ்நாடு தீயணைப்புத் துறை, அரசு உள்துறையின் கீழ் ஒரு தனிப்பட்ட துறையாக செயல்படுகிறது. நம் நூட்டிலேயே மிகவும் நிறமையுடன் பணியாற்றும் தீயணைப்புத் துறையாக தமிழ்நாடு தீயணைப்புத் துறை தொடர்ந்து இருந்து வருகிறது. மனித உயிர்களுக்கும், ஜொத்துக்களுக்கும் தீயினாலும் வெள்ளத்தாலும் ஏற்படும் சேதத்தை தடுத்து பாதுகாப்பு அளிப்பது இத்துறையின் தலையாய பணியாகும். இரவு, பகல் எந்த நேரங்களிலும் பொதுமக்களுக்கு இத்துறை சேவை புரிகிறது. இத்துறை கண்காட்சிகளிலும், விழாக்கள் முதலியவைகளுக்கு தீப்பாதுகாப்பு அளித்தல், இடிந்த • கட்டிடங்கள், கிணறுகள், வெள்ளம், இவைகளில் சிக்கிக் கொண்ட உயிரினங்களை காப்பாற்றுதல் முதலிய பணிகளை மேற்கொள்கிறது. சில முக்கிய நகரங்களில் நோயாளர் ஊர்திகளும் (ஆம்புலன்ஸ்) பராமரிக்கப்பட்டுவருகிறது. இவைகள் நோயாளிகள் மற்றும் காயம் அடைந்தவர்களை மருத்துவமனைகளுக்கு அகற்றுதல் முதலியவைகளுக்கு பெயரளவில் சொற்பக் கட்டணங்களைப் பெற்றுக் கொண்டு செயல்படுகின்றன. விபத்தில் சிக்குண்டவர்களை இலவசமாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

நியணைப்பு நிலையங்கள் :

1990ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதியில் உள்ள நிலவரப்படி 192 தீயணைப்பு நிலையங்கள் இயங்கிக் கொண்டு வருகின்றன. புதிய ஊர்திகள் கட்டுமானம் செய்து வழங்கும் பொருட்டு வண்டி அடிச்சட்டங்கள் அரசுப் போக்குவரத்துக் கழகங்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றது. 1–4–1989 முதல் 31–3–1990 முடிய உள்ள காலத்தில் 46 புதிய ஊர்திகள் கட்டப்பட்டு கண்டம் செய்யப்பட்ட ஊர்திகளுக்குப் பதிலாக வழங்கப்பட்டன.

தீ விபத்து மற்றும் அவசர அமைப்புகள் :

இவ்வருடம் மாநிலத்தில் உள்ள அனைத்து தீயணைப்பு நிலையங்களும் 10,330 அழைப்புகளுக்குச் சென்று பணியாற்றின. அதில் 91 போலி அழைப்புகளும், 2,670 அவசரம் மற்றும் மீட்சி அழைப்புகளுக்கும், 7,569 உள்ளபடி தீ விபத்துகளும் ஆகும். அதாவது உள்ளபடி ஏற்பட்ட தீ விபத்துகளில் 161 பெருந் தீ விபத்துக்கள் ஆகும். அதாவது ஒவ்வொரு பெருந் தீ விபத்திலும் தொகை ரூ. 50,000 அல்லது உயிரிழப்புகள் ஏற்பட்டன. 441 அழைப்புகள் நடுத்தர தீ விபத்துகள் அதாவது ஒவ்வொரு தீ விபத்திலும் ரூ. 10,000க்கு மேல் மற்றும் ரூ. 50,000–க்குள் பொருட்கள் சேதமடைந்தவைகள் ஆகும். 6,967 சிறிய தீ விபத்துக்கள். அதாவது ஒவ்வொரு தீ விபத்திலும் ரூ. 10,000 மதிப்புள்ள அல்லது அதற்குக் குறைவான மதிப்புள்ள பொருட்கள் சேதமடைந்தன. தமிழ்நாடு முழுவதும் சுமார் ரூ. 4.72 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் சேதமடைந்தன. சுமார் ரூ. 64.23 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் காப்பாற்றப்பட்டன.

நோயாளர் வண்டி அழைப்புகள் :

1989–90 ஆம் ஆண்டு 5,121 நோயாளர் வண்டி அழைப்புகளுக்குச் சென்று பணியாற்றின. அவற்றில் 729 அழைப்புகள் விபத்துக்கள் அல்லது இலவச அழைப்புகளாகும். 4,392 கட்டண அழைப்புகளுக்குச் சென்று பணியாற்றின. கட்டண அழைப்புகளுக்குச் சென்று பணியாற்றிய வகையில் ரூ. 2,17,318 வருலிக்கப்பட்டது.

மற்ற பணிகள் :

சென்னை எழும்பூர் தீயணைப்பு நிலையத்தில் ஒரு அவசரகால ஊர்தி உள்ளது. இவ்ஊர்தியில் விபத்தினால் சிதைந்த மோட்டார் வாகனங்களை அகற்றவும் மீட்பு பணியின்போது பெரும் பாரமான, கட்டிடப் பணிகளை அகற்றவும் தனித் துணைக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. எளிய தீயணைப்புச் சாதனங்களைக் கொண்டு குடிசைகள் நிறைந்துள்ள இடங்களில் 27 புறத் தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட்டன. இப்புறத் தீயணைப்பு நிலையங்கள் தீ விபத்துக்களை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தி பெருஞ் சேதத்தை தவிர்த்தன. இந்தியன் ஆயில் நிறுவனம் இப்புறத் தீயணைப்பு நிலையங்களில் தண்ணீரை சேகரித்து வைக்கும் பொருட்டு 150 பெரிய டிரம்களை நன்கொடையாக வழங்கியுள்ளது. இப்புறத் தீயணைப்பு நிலையங்கள் குடிசைப் பகுதிகளில் விபத்துக்கள் ஏற்படாவண்ணம் பெரிதும் உதவின. அப்பகுதிகளில் உள்ள விருப்பமுள்ள சிலரை தேர்ந்தெடுத்து தீயணைப்புப் பற்றிய சில பயிற்சிகள் அளித்து தீயினைக் கட்டுப்படுத்துவதில் உதவிட தயார் செய்யப்பட்டனர். இச்செயல்களினால் சென்னை மாநகரில் தீ விபத்துக்கள் இந்த ஆண்டில் கணிசமாக குறைந்துள்ளது. கோடைக் காலம் தவிர்த்த மற்ற காலங்களில் இத்துறை அலுவலர்கள் பள்ளிகளுக்குச் சென்று மாணவ/மாணவியருக்கு தீயணைப்பு மற்றும் தீத்தடுப்பு பற்றிய முறைகளைப் பற்றி எடுத்துக் கூற அறிவுறுத்தப்பட்டனர்.

பணி முன்னேற்றம் :

இத்துறையின் முன்னேற்றத்தில் அரசு மிகவும் அக்கறை கொண்டு இத்துறை செயல்பாட்டினை மேம்படுத்தும் வகையில் சில பணி இலக்குகளை நிர்ணயித்துள்ளது.

புதிய திட்டங்கள் செயல்படுத்துதல்.—

1989–90 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட 18 தீயணைப்பு நிலையங்கள் அவைகளுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள நாளில் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன:—

நிலையம்.	திறந்த நாள்.
1. உத்திரமேரூர்	17—06—1989
2. தண்டராம்பட்டு	18—07—1989
3. அரவாக்குறிச்சி	28—07—1989
4. குடவாசல்	30—07—1989
5. ஏற்காடு	31—07—1989
6. பெண்ணாகரம்	31—07—1989
7. சங்கராபுரம்	15—09—1989
8. கொடைக்கானல்	25–09–1989
9. கடலூர் (சிப்காட்)	28–09–1989
10. நிலக்கோட்டை	25–10–1989
11. வள்ளியூர்	29–10–1989
12. முதுகுளத்தூர்	14–12–1989
13. தரங்கம்பாடி	27–12–1989
14. பல்லடம்	31–01–1990
15. புகளூர்	08–02–1990
16. கொல்லிமலை	27–02–1990
17. பாலக்கோடு	27–02–1990
18. பொன்னேரி	30–03–1990

புதிய தீயணைப்பு நிலையங்கள் திறப்பது தவிர வேறு திட்டங்கள் இத்துறையில் செயல்படுத்தப்படுவதில்லை.

துறையின் நிதி செலவினம் :

1989–90 ஆம் ஆண்டு இத்துறைக்கு ரூ. 13 கோடியே அறுபத்தொன்பது இலட்சத்து 81 ஆயிரம் ஒதுக்கப்பட்டது. அவற்றில் ரூ. மூன்று கோடியே இருபத்து நான்கு இலட்சம் ஊர்திகள் கட்டுமானம் செய்யும் பொருட்டு செலவிடப் பட்டது. இந்நிதி ஆண்டில் 48 ஊர்திகள் கட்டுமானம் செய்யப்பட்டன.

சிறப்பு குறிப்பு :

இத்தீயணைப்புத் துறையின் சேவையைப் பற்றியும் முக்கியத்துவத்தைப் பற்றியும் பொது மக்களின் கவனத்திற்கு எடுத்துரைக்க அரசு அகில இந்திய வர்த்தகப் பொருட்காட்சியில் தீயணைப்புத் துறையும் கலந்து கொள்வதற்கு தீர்மானித்து அதன்படி 1985 லிருந்து நடைபெற்ற பொருட்காட்சிகளில் தீயணைப்பு துறையும் கலந்து கொண்டு பல வெகுமதிகளும் பரிசுகளும் பெற்று வந்துள்ளது. இதன் மூலம் பொது மக்களுக்குத் தீயணைப்புத் துறையின் சேவைகளைப் பற்றியும் தீ விபத்துகளில் எவ்வாறு இத்துறையினர் பணி புரிகிறார்கள் என்பது பற்றியும் ஓர் படிப்பினைபாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுக் கருத்து :

இத்துறை, நீ விபத்து மற்றும் மீட்சி அழைப்புகளுக்குச் சென்று திறம்பட் செயல்பட்டு வருகிறது. இத்துறைப் பணியாளர்களின் சேவை பொதுவாக மக்களால் பாராட்டப்பட்டு வருகிறது.

கடந்த 6 ஆண்டுகளில் சென்னை நகரில் ஏற்பட்ட குடிசை நீ விபத்துக்களின் விவரங்கள்:

வருடம்.	நீவிபத்துகளின் எண்ணிக்கை.			
	பெருந் நீ விபத்து.	நடுத்தர நீ விபத்து.	சிறு நீ விபத்து.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)
1984	5	10	276	291
1985	9	7	264	280
1986	7	16	199	222
1987	3	9	179	191
1988	5	7	125	137
1989	11	23	644	678

தடய அறிவியல்.

ஆயிவிலேயே முதன் முறையாக 1849-ல் தனது தடய அறிவியல் பணியை துவக்கிய தடய அறிவியல் துறை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நீதித்துறை நிறுவனங்களுக்கும் சட்ட அமல்படுத்து பிரிவினருக்கும் நமிழகத்திலுள்ள மத்திய அரசின் பலவகைப்பட்ட பிரிவுகள் மற்றும் தேசிய வங்கிகளுக்கும் தனது பணியினை செய்து வருகின்றது.

இத்துறையின் தலைமை ஆய்வகத்தில் உயிரியல், துப்பாக்கியியல், வேதியியல், ஆவணம், கலால், கருவிகள் பிரிவு, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பிரிவு, குருதிவடி நீரியல் பிரிவு மற்றும் நஞ்சியல் என 13 பிரிவுகளும் உள்ளன. மேலும், மதுரை, நஞ்சாஜர், கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம், வேலூர் ஆகிய இடங்களில் வட்டார தடய அறிவியல் ஆய்வகம் இயங்கி வருகிறது. மதுரை, கோயம்புத்தூர் தஞ்சை ஆய்வகங்களில் மதுவிலக்கு மற்றும் நஞ்சியல் பிரிவுகள் மட்டும் உள்ளன. வட்டார தடய அறிவியல் ஆய்வகம், திருநெல்வேலியில் மதுவிலக்கு, நஞ்சியல் மற்றும் உயிரியல் பிரிவும் உள்ளன. வேலூர், சேலம் ஆகிய வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களில் மதுவிலக்குப் பிரிவு மட்டும் செயல்பட்டு வருகிறது. சென்னையில் உள்ள 24 மணி நேர இயங்கும் தடய அறிவியல் ஆய்வகம் உட்பட 24 காவல் மாவட்டங்களிலும் இயங்கும் தடய அறிவியல் ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன.

தனது அறிவியல் பணியுடன் கல்விப் பணியையும் இத்துறை செய்து வருகிறது. தடய அறிவியலில் முதறிவியல் மற்றும் முனைவர் பட்டத்திற்கான வகுப்புகளை பல்கலைக் கழகத்துடன் நடத்திவரும் தனித்தன்மை பெற்ற ஒரே அரசுத்துறை இத்துறையாகும். ஒவ்வொரு ஆண்டும் 15 மாணவர்கள் தடய அறிவியல் (முதறிவியல்) வகுப்பிற்காக சேர்க்கப்படுகின்றனர். மேலும் சுற்றுப்புற நஞ்சியல் முதறிவியல் பட்டத்திற்கான மாணவர்களுக்கும், குற்றவியல் முதுகலை பட்டத்திற்கான மாணவர்களுக்கும் தடய மருத்துவத்தில் முதுகலை பட்டத்திற்கான மாணவர்களுக்கும் இத்துறையில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தடய அறிவியல் முனைவர் (Ph.D.) பட்டத்திற்கான ஆராய்ச்சிக்கும் இத்துறை சென்னை மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது இத்துறையில் இயக்குநர் அவர்களையும் சேர்த்து 181 விஞ்ஞானிகளும் 213 இதர பணியாளர்களும் பணிபுரிகின்றனர். இத்துறையில் 1988-ஆம் ஆண்டில் 1–4–1989 முதல் 31–3–1990 முடிய 1,09,144 வழக்குகளும் 2,91,492 மாதிரிகளும் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

1989-90 ஆம் ஆண்டில் இத்துறையின் அறிவியல் நிபுணர்கள் 3,333 குற்ற வழக்குகளில் குற்ற நிகழ்விடங்களைப் பார்வையிட்டும், குற்றப் புனலனாய்வின் அறிவியல் கருத்துறை வழங்கியும் உளளனர். இத்துறையில் வல்லுநர்கள் 416 வழக்குகளில் வழக்காடு மன்றங்களில் சாட்சியம் அளித்துள்ளனர்.

மாஸ் செலக்டில் டிடெக்டருடன் கூடிய வாயு நிற ஆய்வுக்கருவி (ரூ. 0.2 இலட்சம்) ரூபாய் 15 இலட்சம் மதிப்புள்ள நுண்ணோய்வு மின் அணுணுன் உருப் பெருக்கி மற்றும் ஹெட் ஸ்பெஸ் அனலைசருடன் கூடிய வாயு நிற ஆய்வுக் கருவி, மிகுதிறன் திரவ நிற ஆய்வுக்கருவி, ப்ளாரசன்ஸ் மைக்ரோஸ்கோப், லை டிடெக்டர் ஆகிய கருவிகள் இத்துறையின் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் வாங்கப்பட் டுள்ளன.

இத்துறை பற்றிய பிற சிறப்பியல்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

1. இத்துறையானது, குற்ற புலனாய்விற்கு உதவுவதுடன், மருத்துவமனையில் விஷ முறிவு சிகிச்சைக்கு அனுமதிக்கப்படும் நோயாளிகளுக்கு உதவும் வகையில் அவர்களது குருதி, சிறுநீர் முதலியவற்றை ஆய்வு செய்து உடலில் உள்ள விஷம் பற்றிய குறிப்புகள் அளித்து வருகிறது. சர்ச்சைக்குரிய குழந்தைகள் பிறப்பினால் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க உதவிடும் வகையில் பெற்றோர் யார் என கண்டுபிடித்து உதவிடும் வகையில் ஆய்வுப் பிரிவு தனித்து நடத்தப்படுகிறது.

2. நாட்டிலேயே முதன்முறையாக மின் திருட்டு வழக்குகளை ஆய்வு செய்ய சிறப்புப் பணியாளர்களை இத்துறை அமர்த்தியுள்ளது.

3. சென்னை உயர்நீதி மன்றத்தில் நடைபெற்ற சர்ச்சைக்குரிய குழந்தையின் பெற்றோர் யார் எனும் வழக்கில் விஞ்ஞான பூர்வமான சான்றுகளை அளித்து உண்மையான பெற்றோரிடம் குழந்தையை சேர்க்க வழிவகுத்துள்ளது. இப்பணி அனைவராலும் பாராட்டப்பட்டதுடன் இது போன்ற மேலும் பல வழக்குகளை இத்துறைக்கு தற்பொழுது அனுப்பப்படுகின்றன. இந்த முதன்மைத் தீர்ப்புரை மற்ற நீதிமன்றங்களுக்கும் இதுபோன்ற சான்றுகளை ஏற்றுக்கொள்ள வழி முன்னோடியாக அமைத்தது.

4. இத்துறையின் இயக்குநராலும் மற்ற விஞ்ஞானிகளாலும் சுமார் 210 ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல்வேறு பன்னாட்டு மற்றும் தேசிய மாநாடுகளில் படித்தும் மற்றும் விஞ்ஞான இதழ்களில் பதிப்பிட்டும் உள்ளது.

5. இத்துறையின் இயக்குநர் செப்டம்பர் 1989-ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற மூன்றாவது இந்தோ பசிபிக் சட்ட மருத்துவம் மற்றும் தடய அறிவிய லுக்கான பன்னாட்டு மாநாட்டிற்கு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். சுமார் 34 நாடுகளைச் சார்ந்த 318 அறிவியலார் இம்மாநாட்டில் பங்கேற்றனர். இந்த ஆழ்ந்தாராய்வு இந்தியத் தடய அறிவியலார்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக அமைந்தது. இத்துறையின் இயக்குநருக்கு அமெரிக்கன் பயோகிராபிகல் இன்ஸ் டிட்யூட் ''டிஸ்டிங்குஸ்ட் லீடர்சிப்'' அவார்ட்ஸ் (Distinguished Leadership Award) என்னும் விருந்தளித்துச் சிறப்பித்துள்ளது.

மேலும் இத்துறையின் வளர்ச்சிக்காக கீழ்க்கண்ட திட்டங்கள் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது:—

1. இத்துறையின் கல்விப் பிரிவு தனித்து இயங்க ''தடய அறிவியல் கல்விக் கழகம்'' ஒன்றை தனியே துவக்கிடப்பட வேண்டும்.

2. இத்துறையின் பணியை விரிவாக்கிடும் வகையில் வெடி மருத்துவப் பிரிவு துவக்குதல் வேண்டும்.

3. மதுவிலக்கு மற்றும் கலால் பிரிவுகளில் பணியாளர் மற்ற தேவைகளை அதிகரித்து இப்பிரிவுகளை வலுப்படுத்துவதுடன் மாவட்டத் தடய ஆய்வகங்களை துவங்கி கலால் பிரிவப் பணியினை மேற்கொள்ளுதல்.

தலைமை ஆய்வகம்.	பெறப்பட்டவை.		ஆய்வு செய்தவை	
	வழக்குகள்.	மாதிரிகள்.	வழக்குகள்.	மாதிரிகள்.
(1)	(2)	(3)	(4)	(5)
சென்னை—				
துப்பாக்கிப் பிரிவு	196	2,367	188	2,293
உயிரியல்	1,498	7,871	1,573	8,162
வேதியியல்	521	1,548	497	1,449
ஆவணப்பிரிவு	448	79,038	441	45,382
கலால் ..	10,512	10.512	10,406	10,406
போதைப் பொருட்கள்	1,324	6,676	1,678	8,623
தெரியியல்	263	973	269	767
புகைப்படம்	1,057	50,011	1,070	52,964
மதுவிலக்கு	350	2,240	20,653	28,612
குருதி வடிநீரியல்	1,840	8,328	1,813	8,679
நஞ்சியல்	3,341	11,972	3,071	11,199
வட்டார தடய ஆய்வியல் ஆய்வகம், மதுரை—				
மதுவிலக்கு	482	917	7,443	9,914
நஞ்சியல்	1,565	7,035	1,218	5,492
வட்டார தடய அறிவியல் ஆய்வகம், கோவை—				
மதுவிலக்கு	289	577	6,855	9,928
நஞ்சியல்	1,733	7,912	1,688	7,592
கலால்	413	413	413	413
வட்டார தடய அறிவியல் ஆய்வகம், தஞ்சாவூர்—				
மதுவிலக்கு	2,228	3,815	17,326	22,087
நஞ்சியல் ..	2,844	12,004	1,869	7,673
வட்டார தடய அறிவியல் ஆய்வகம், திருநெல்வேலி—				
மதுவிலக்கு ..	2,591	4,613	10,046	15,906
நஞ்சியல்	1,363	5,969	1,295	5,629
கனால்	634	3,408	639	3,428
வட்டார தடய அறிவியல் ஆய்வகம், வேலூர்.—				
மதுவிலக்கு	657	817	9,478	12,406
வட்டார தடய அறிவியல் ஆய்வகம், சேலம்—				
மதுவிலக்கு ..	482	673	9,215	11,988
மொத்தம்	36,631	2,38,389	1,09,144	2,91,492

சென்னை மாநகர காவல்

1. அறிமுகம் :

1. சென்னை நகர காவல் துறை, மாநிலத்திலேயே மிகப் பழமையான அமைப்புகளில் ஒன்று. சென்னை ராஜதானிக்கு என தனியாக் காவல் அமைப்பு உருவாக்கப்படுவதற்கு முன்பே, கொத்தவால், தாணாக்காரர் ஆகியோர் காலந்தொட்டே பணிபுரிந்து வரும் பழம் பெருமையுடையது சென்னை நகர காவல் துறை.

லெப்டினெண்ட்—கர்னல் திரு. பௌல்டர்சன். என்பவர், 1856—ஆம் ஆண்டு சென்னை நகர காவல் ஆணையாளராகப் பணிபுரிந்த நாளிலிருந்து இன்று வரை பெருந்திறமை பெற்றோர் பலர் தலைமை தாங்கி நடத்தியுள்ளனர்.

2. நகர காவல் துறையின் லட்சியம், நோக்கம் என்பது, சுருங்கக் கூறின், சென்னை மாநகரினைக் காவல் புரிவது என்பதே. காவல் புரிவது என்பது, இன்றைய நிலையில் உள்ளார்ந்த அர்த்தங்கள் நிரம்பியது. சென்னையைப் போன்ற, ஒரு தலைநகரினைக் காவல் புரிவது என்பது பல்வகைப் பணிகள் அடங்கியது அவை :

1. சட்டம் ஒழுங்கு பராமரித்தல்.

2. குற்றங்களைத் தடுப்பதும், கண்டுபிடிப்பதும்.

3. போக்குவரத்து விதிகளை அமல்படுத்துவது.

4. மதுவிலக்கு/தளர்வு விதிகளை அமல்படுத்துவது.

5. கூட்டங்களை ஒழுங்குபடுத்துதலும், பாதுகாப்பு அளித்தலும்.

6. மற்ற மாநில/தேச, காவல் துறையினரோடு பரஸ்பர தொடர்பு கொண்டு பணி செய்தல் ஆகியன. அதாவது சாதாரண குடிமகன், பயமின்றி வாழ, சூழ்நிலையை உருவாக்கி, அதனைக் கட்டிக் காப்பதே சென்னை நகர காவல் துறையின் நோக்கமும் இலட்சியமும் மேலே கண்டவையே.

2. செயல்பாடுகள் :

சென்னை நகர காவல் துறை, பணியின் தன்மையினை ஒட்டி, பல பிரிவுகளில் இங்குகிறது. அதாவது, சட்டம் மற்றும் ஒழுங்கு, குற்றம், போக்குவரத்து, ஆயுதப்படை என்று பிரிவு வாரியாக இயங்குகிறது.

(1) காவல் ஆணையாளர், சென்னை நகர காவல் துறையின் தலைவர், அவருக்கு உதவியாளர் சட்டம் ஒழுங்கு பிரிவிற்கு மூன்று துணை ஆணையாளரும், குற்றப் பிரிவிற்கு இரண்டு துணை ஆணையரும், தலைமையிடம், போக்குவரத்து, ஆயுதப்படை ஆகிய பிரிவிற்குத் தலா ஒரு துணை ஆணையரும் பணிபுரிந்து வருகிறார்கள்.

(2) ஒவ்வொரு துணை ஆணையருக்கும் உட்கோட்ட அதிகாரிகளான உதவி ஆணையாளர்கள் உண்டு. உட்கோட்ட அதிகாரிகளான உதவி ஆணையாளர்கள், தங்களது ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் போன்ற காவல் நிலைய அதிகாரிகளைச் சார்ந்து பணிபுரிகிறார்கள்.

(3) 1—4—1989 முதல் 31—3—1990 வரையிலான காலத்தில் நகர காவல் துறையினரின் எண்ணிக்கை பின்வருமாறு :—

ஆய்வாளர்	துணை ஆணையர்.	கூடுதல் துணை ஆணையர்.	உதவி ஆய்வாளர்.	ஆய்வாளர்.	தலைமை காவலர்.	காவலர்.
1	9	2	47	223	675	1,206	8,015

4. மாநகராட்சியினரின் டிவிஷன்களை அடிப்படையாக்கி கொண்டு, மாநகரக் காவல் துறையினர், சரக வாரியாகப் பிரித்து பணியாற்றுகின்றனர்.

போக்குவரத்துப் பிரிவும் இதுபோன்று சரகங்களாகப் பிரிக்கப்பட்டே இயங்குகிறது.

ஆயுதப் படையும், இருபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இயங்குகின்றன.

சென்னைமாநகர காவல் துறை, தனது திறமையான இயக்கத்திற்கு மேற்கண்ட உட்கோட்டங்களையும், பிரிவுகளையும் சார்ந்து உள்ளது.

4. பணி நிலைகளில் அடைந்த முன்னேற்றமும் நிதிநிலை/இயக்க விஷயங்களில் அடைந்த சாதனைகளும் :—

1—4—1989 முதல் 31—3—1990 வரையிலான ஒரு ஆண்டிற்கு சென்னை நகர துறைக்கு நிதிநிலை அறிக்கையில் ரூ. 19,50,10,000 ஒதுக்கப்பட்டது. இதில் ரூ. 15,66,27,000 சம்பள விஷயங்களுக்காகப் போக, மீதமுள்ள பணம் மட்டுமே சென்னை நகர காவல் துறையின் பிற செலவினங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது. எனினும், ஒதுக்கப்பட்ட அனைத்து தொகையும் முறையாகச் செலவிடப்பட்டதே யல்லாமல், ஏறும் சரண் செய்யப்படவில்லை.

புரிந்த பணிகளும், பெற்ற சாதனைகளும் பற்றித் தொடங்கு முன்னர், இந்த ஆண்டு, சென்னை நகர காவல் துறையினர் மிக மிக சுறுசுறுப்பாக, தொய்வின்றிப் பணியாற்றிய ஆண்டு என்பதனைக் குறிப்பிடவேண்டும்.

இந்த ஆண்டில் பாராளுமன்றம்—சட்டமன்றத்திற்கான தேர்தல் நடைபெற்றது. சென்னை நகரில் தேர்தல் பந்தோபஸ்தும், பின்னர் பதவியேற்பு வைபவம் நடைபெற மாநகர காவல்துறை இடையறாது பணியாற்றியது. 2—12—1989 அன்று திரு. வி.பி. சிங் இந்திய பிரதமராகப் பதவியேற்றார்.

சென்னை தலைநகரமாக இருக்கும் காரணத்தால் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இந்த இடம் மையமானது. இதன் விளைவாக நகர காவல் துறை, ஊர்வலம், பொதுக்கூட்டம், ஆர்ப்பாட்டம் என்ற அனைத்திற்கும் பந்தோபஸ்தும் பாதுகாப்பு ஏற்பாடுகளும் இடையறாது செய்ய நேர்ந்தது. இதனூடே, முக்கியஸ்தர்களின் வருகை, புறப்பாடு இவற்றையும் கவனிக்க நேர்ந்தது.

தி.மு.க. சார்பில் நடத்தப்பட்டு, திரு. வி.பி. சிங், கலந்து கொண்ட ''ஜம்பெரும் விழா'' பந்தோபஸ்து ஏற்பாடுகள் அனைவராலும் பாராட்டப்பட்டன. இதனை அடுத்து உடனடியாக அ.இ.அ.தி.மு.க. சார்பில் நடத்தப்பட்டு முன்னாள் பிரதமர், திரு. ராஜீவ் காந்தி கலந்து கொண்ட, ''எம்.ஜி.ஆர். சிலை திறப்பு விழா'' நிகழ்ச்சி, கட்டுக்கடங்கா மக்களைக் கூட வைத்தது. இந்த நிகழ்ச்சியும், காவல் துறையினரின் அற்புதமான ஏற்பாட்டினால், சிறு சச்சரவு கூட இல்லாமல், அமைதியாக, சிறப்பாக முடிந்தது. சட்டம்—ஒழுங்கு பிரிவு, பெருமைப்படும் வகையில் பணியாற்றியது நிறைவைத் தரும் அம்சமாகும்.

குற்றப்பிரிவு, தனது இடையறா விழிப்புணர்வு, ரோந்து சுற்றல், பழைய குற்றவாளிகளைக் கண்காணித்தல் மூலமாக, குற்றங்கள் எண்ணிக்கை இந்த ஆண்டு அதிகரிக்கா வண்ணம் சிறப்பாகப் பணியாற்றியது. திருவல்லிக்கேணி—மைலாப்பூர் குற்ற சரகத்தினர், சுமார் 23 இலட்ச ரூபாய் பொருட்களை மீட்டுள்ளனர். இது போன்றே பிற சரகத்தினரும், இதற்கு ஈடான சாதனை புரிந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒட்டுமொத்த ''சுண்டுவிரல் நுனி'', திருப்தி தரும் விதத்தில் இருக்கிறது.

போக்குவரத்தினைப் பொறுத்தவரை, போக்குவரத்து விதிகளை தாட்சண்யமின்றி அமல்படுத்துவது, விதிக்கும், அதன் விளைவாக பாதுகாப்பும் பற்றி கற்பிப்பது, என இருமுனை நடைமுறை, தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டது. அதையொட்டி சரகத்தினர் போட்ட போக்குவரத்து வழக்குகள் மூலம், தண்டனைத் தொகையாக ரூ. 18,48,530 வசூலாகியுள்ளது. இதுபோன்ற சாதனைகளை, அனைத்து சரகங்களும் நிகழ்த்தியுள்ளன. பள்ளிக் குழந்தைகளுக்கு, போக்குவரத்து விதிகள் பற்றி பயிற்சிகள் தரப்பட்டன.

நெடுஞ்சாலை துறையினர், நகராட்சியினர் துணையோடு, சாலைத் தடுப்புகள் நடைபாதைத் தடுப்புகள் பொருத்தப்பட்டன. தானியங்கி விளக்குகளும், சமூக உதவி ஸ்தாபனங்கள், வங்கிகள் துணையோடு, பல இடங்களில் நிழற்குடையும் நிறுவப்பட்டன.

மொத்தத்தில், போக்குவரத்துக் காவலரின் பெரும்பான்மை, முனைப்பான பணியும், இடையறா கண்காணிப்பும், மாநகரத்தில் சாலை விபத்து எண்ணிக்கை அதிகமாகாமல், அடக்கி, தடுத்துள்ளது.

மாநகர காவல் கட்டுப்பாடு அறை வழக்கம்போல், இந்த ஆண்டும் ஏராளமான செய்திகள் வாங்கி அனுப்பி, இருபத்துநான்கு மணி நேரமும் விழித்திருந்தது. ரேடியோ தொடர்பு பொருத்தப்பட்ட 13 ரோந்து வண்டிகள் இடையறாது நகரில் ரோந்து வந்தன.

கடந்துவிட்ட ஆண்டில், மாநகர காவல் துறையினர் ஆற்றியுள்ள பணிகள் புரிந்துள்ள சாதனைகள் நிச்சயம பெருமைப்படத்தக்கவையே.

4. சிறப்பு செய்திகள் :

மாநகரினை, அதுவும் தலைநகரினைக் காவல் புரிவது நாளுக்குநாள் கஷ்டமாக மாறிவருவதை, மாநகர காவல் துறையினர் உணர்ந்தே வருகின்றனர். பெருங் குற்றவாளிகளும் பித்தலாட்ட ஏமாற்றுப் பேர்வழிகளும், பயங்கரவாத கும்பலும் வன்முறை நம்பிக்கையாளரும், நவீன உத்திகள், நவீன ஆயுதங்கள், நவீன பொருட்களை பிரயோகித்து விரையும்போது மாநகர காவல் துறை அவைகளை போதிய அளவு பெறாமல் உள்ளது. விஞ்ஞான யுகத்தின் பலன் மாநகர காவல் துறையினரை எவ்வளவு சீக்கிரம் அடைகிறதோ அவ்வளவு சீக்கிரம் மாநகரத்திற்கு இன்னும் சிறப்பாக சேவை கிட்டும்.

5. முடிவுரை :

ஏற்கனவே கூறியபடி, கடந்த ஆண்டில், மாநகர காவல் துறையினர் ஆற்றிய பணியும், புரிந்த சாதனைகளும், பெருமைக்குரியவையே. பொதுமக்கள், பத்திரிகை யினர் இவர்களின் பெருங்கண்டனம் எதற்கும் இடந்தராமல் நகர காவல் துறை இந்த ஆண்டினை சிறப்பாக கடந்தது.

போக்குவரத்துத் துறை.

முன்னுரை :

மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் அதன்கீழ் அமைந்த விதிகளையும் 1974ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தினையும் நிர்வாகம் செய்வதே இத் துறையின் தலையாய பனியாகும்.

பணிகள் :

இத் துறையின் கீழ்க்கண்ட பணிகள் இன்றியமையாப் பணிகளாகும்:—

(1) 1988ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்தினையும் அதன்கீழ் உருவாக்கப்பட்ட விதிகளையும் நிர்வாகம் செய்வது.

(2) 1974ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்களின் வரிவிதிப்பு சட்டத்தினையும் அதன்கீழ் உருவாக்கப்பட்ட விதிகளையும் நிர்வாகம்செய்வது.

(3) 7—3—1980 தேதியிட்ட உள் துறை அரசாணை பல்வகை எண். 696-ல் வழங்கப்பட்ட 1980ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் ஸ்பிரிட் மற்றும் உயர்வேக டீசல் எண்ணெய் ஆணையை நிர்வாகம் செய்வது மற்றும் மேற்கண்டவைகளை நடைமுறைப்படுத்துவது.

(அ) நிர்வாக அமைப்பு :

மாநிலம் :

மாநில அளவில் போக்குவரத்து ஆணையர் இத் துறையின் தலைவர். இவரது நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இத்துறை இயங்குகிறது. மோட்டார் வாகனச் சட்டத்தின்படி இவர் மாநில போக்குவரத்து அதிகாரியும் ஆவார். மாநில அளவில் போக்குவரத்து இணை ஆணையர் இருவர் உள்ளனர். அதில் ஒருவர் இவருக்குச் செயலாளராக இருந்து உதவி புரிகிறார். இவர் தவிர மூன்று துணைப் போக்கு வரத்து ஆணையாளர்கள் மாநிலப் போக்குவரத்து அதிகாரிக்குச் செயலாளர் களாக பணிபுரிகின்றனர். இங்கு மேலும் ஒரு போக்குவரத்துத் துணை ஆணை யாளர் செயலாக்கம் பற்றிய பணிகளை மாநில அளவில் மேற்கொள்கிறார். இங்கு மூன்று உதவிச் செயலாளர்களும், ஒரு உதவி பொறியாளரும் (மோட்டார் வாகனங்கள்) ஒரு தலைமைக் கணக்கு அலுவலரும், ஒரு கணக்கு அலுவலரும், ஒரு துறைப் பிரதிநிதியும், ஒரு புள்ளி இயல் உதவி இயக்குநரும் பணியாற்றுகின்றனர்.

(ஆ) மண்டலங்கள் :

நிர்வாக வசதிக்காக, இம் மாநிலம் ஆறு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மண்டலமும் ஒவ்வொரு போக்குவரத்து துணை ஆணையாளரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகிறது.

மண்டலப் போக்குவரத்துத் துறை ஆணையர்களுக்கு அவருடைய தலைமை அலுவலகத்தில் அமைச்சுப் பணியாளர் களும் மாவட்டங்களில் வட்டாரப் போக்கு வரத்து அலுவலர்களும் பணிபுரிகின்றனர். மேலும் பறக்கும் படைகளும், எட்டு உதவிக் கணக்கு அலுவலர்களும் சம்மந்தப்பட்ட மண்டலப் போக்குவரத்துத் துணை ஆணையாளரின்கீழ் பணிபுரிகின்றனர். தவிர செலத்திலும், மதுரையிலும் இயக்கூர்தி ஆய்வாளர்களின் பணிகளை மறு பரிசோதனைச் செய்வதற்கு இரு உதவிப் பொறியாளர்கள் (இயக்கூர்திகள்) உள்ளனர். மண்டலத் தலைமையிடத்தில் உள்ள பறக்கும் படைகளில் முதல்தர இயக்கூர்தி ஆய்வாளர் ஒருவரும் இரண்டாம் நிலை இயக்கூர்தி ஆய்வாளர் ஒருவரும் உள்ளவர். இவர்கள் சட்ட நுணுக்கங்கள் சரியாகச் செயலாக்கம் பெறும் பணிகளை மட்டும் செய்வர். மண்டலப் போக்குவரத்துத் துறை ஆணையாளரின் நேரடிக் கவனத்தின்கீழ் இவர்கள் பணிபுரிவர்.

(இ) வட்டாரம் :

இம் மாநிலத்தில் மொத்தம் 27 வட்டாரங்கள் உள்ளன. ஒவ்வொரு வட்டாரமும் ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலரின்கீழ் இயங்கி வருகின்றது. மேலும் பெரியார் மற்றும் தென்னாற்காடு ஆகிய இரண்டு வட்டாரங்களிலும் கூடுதல் வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் பணி புரிகின்றனர். சென்னை நகரம் தவிர ஏனைய மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆட்சியர்கள் வட்டாரப் போக்கு வரத்து அதிகாரி ஆவார். வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களும் கூடுதல் வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களும் முறையே அவரின் செயலாளர்கள் மற்றும் கூடுதல் செயலாளர்கள் ஆவர். ஆனால் சென்னை நகரத்தில் மட்டும் மண்டல போக்குவரத்து துணை ஆணையர் வட்டாரப் போக்குவரத்து அதிகாரியாக இருக்கிறார். அவருக்கு சென்னை நகரிலுள்ள நான்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களும் செயலாளர்களாக பணிபுரிகின்றனர்.

(ஈ) களப் பணி அலுவலர்கள் :

மாநிலத்தில் மொத்தம் 27 பகுதி அலுவலகங்கள் (Unit offices) உள்ளன. ஒவ்வொரு அலுவலகமும், முதல் நிலை இயக்கூர்தி ஆய்வாளர் களாலோ, அல்லது முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை ஆய்வாளர்களாலோ நிர்வகிக்கப் படுகிறது. இது அங்குள்ள வண்டிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து அமையும். ஆய்வாளர்கள். உதவிப் பதிவு மற்றும் உதவி உரிமம் வழங்கும் அதிகாரிகள் ஆவார்கள். வண்டிகள் சாலைகளில் செல்லத் தகுதியுடையனவா என்று சோதிக்கும் பொறுப்பு இவர்களுடையதாகும்.

(உ) சோதனைச் சாவடிகள்:

இங்கு மொத்தம் 12 சோதனைச் சாவடிகள் உள்ளன. அவை செங்கல்பட்டு மாவட்டத்தில் புழலிலும், பூந்தமல்லியிலும், வட ஆற்காடு மாவட்டத்தில் காட்பாடி யிலும், தர்மபுரியில் ஹோசூரிலும், கோயம்புத்தூரில் கந்தை கவுண்டன் சாவடியிலும், அம்பாரம்பாளையத்திலும், நீலகிரியில் கூடலூரிலும்; திருநெல்வேலியில் புளியரை யிலும், கன்னியாகுமரியில் களியக்காவிளையிலும், பெரியார் மாவட்டத்தில் பன்னாரி யிலும், மதுரையில் குமளியிலும், தென்னாற்காடு மாவட்டத்தில் திருச்சிற்றம்பலத்திலும் உள்ளன. ஒவ்வொரு சோதனைச் சாவடியிலும் போக்குவரத்துப் பணிகளைக் கவனிக்க தொழில் நுணுக்கப் பணியைச் சாராத (NON-TECHNICAL) 4 ஆய்வாளர்கள் உள்ளனர். சோதனைச் சாவடிகள் வழியாகச் செல்லும் வண்டிகளைச் சோதித்து வண்டிகளின் அனுமதி, நிலைமை, வரிகள் இவைகளில் குறையேதும் இருப்பின் கண்டுபிடித்து வரி ஏய்ப்பு மற்றும் கட்டணக் குறைபாடுகளை நிவர்த்தி செய்து அரசுக்கு கணிசமான நிதி ஆதாரம் சேர்கின்றனர்.

5. நீதிமன்றங்களில் வழக்குகள் :

(அ) மாநிலப் போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயம் :

இங்கு மாநிலப் போக்குவரத்து மேல் முறையீட்டு தீர்ப்பாயம் (S.T.A.T.) இயங்கி வருகிறது. இதன் தலைவர் மாவட்ட நீதிபதியின் நிலையில் உள்ளவர். மாநிலப் போக்குவரத்து அதிகாரி மற்றும் அவரது செயலாளர்கள் வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் மற்றும் அவர்களது செயலாளர்கள் ஆகியோரின் ஆணைகளுக்கு எதிராக வரும் மறுபரிசீலனைகளையும் மேல்முறையீடுகளையும் இவர் பரிசீலனை செய்வார். வட்டாரப் போக்குவரத்து அலுவலர் நிலையில் உள்ள ஒரு அலுவலர் இவருக்கு செயலாளராக இருந்து உதவி புரிகின்றார். இவர் தவிர, இவர் தகுதியிலுள்ள ஒரு துறைப் பிரதிநிதியும் இங்கு உண்டு. இவர் போக்குவரத்து ஆணையாளரின் அதிகார வரம்பிற்குள் பணிபுரிகின்றார். மாநில வட்டார போக்கு

வரத்து அதிகாரியின் ஆணைகளை ஆதரிப்பதே இவரது முக்கிய பணியாகும். இவை தவிர உயர்நீதி மன்றங்களிலும் பல ரிட் மனுக்கள் மற்றும் மேல் முறையீட்டு மனுக்கள் அனுமதிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரப்படி தீர்ப்புகள் வழங்கப்பட்டன.

	ரிட். (W.P.)	மேல் முறையீட்டு மனுக்கள். (C.R.P.)
	(1)	(2)
(1) ஆண்டுத் துவக்கத்தில் நிலுவையில் இருந்தவை	511	259
(2) ஆண்டில் பதியப்பட்டவை.	512	68
(3) ஆண்டில் நிர்த்து வைக்கப்பட்டவை.	317	63
(4) ஆண்டு இறுதியில் நிலுவை.	706	24

3. பொது மக்கள் பேர்க்குவர்த்து :

(அ) பேருந்துகள் :

பொது மக்கள், பொதுவாக அதிக எண்ணிக்கையில் பேருந்துகளையும் வேகமாகச் செல்லும் வசதிகளையும் பெற விரும்புகின்றனர். இதற்காக பேருந்துகளின் அனுமதிச் சீட்டு படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வருகின்றன. கீழ்க்கண்ட வழிகளில் கூடுதல் பேருந்து வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

(1) புதிய வழித்தடங்களில் புதிய அனுமதிச் சீட்டு மற்றும் தற்போதுள்ள வழித்தடங்களில் கூடுதல் பேருந்துகளும் வழங்கப்படுகின்றன.

(2) ஒரு தடத்தில் போக்குவரத்தை அதிகப்படுத்தியும் தடத்தின் ரத்தை அதிகப்படுத்தியும் நிர்வகிக்கப்படுகின்றன.

(3) தற்போது ஓடும் பேருந்துகளை அதிக மக்கள் பயணம் செய்யுமாறு பெரிய தாக்கியும், புதிய மாடல் வண்டிகளை அனுமதித்தும் வசதி செய்யப்படுகின்றன.

(4) பேருந்து வசதிகளை செய்துதர இயலாத மிகவும் உள்ளடங்கிய ஊரகப் பகுதிகளுக்கு சிறு பேருந்து மற்றும் ஜீப் பேருந்து வசதிகளும் செய்து தரப்படுகின்றன.

(ஆ) அனுமதிச்சீட்டு வழங்கப்படுதல் :

மாநிலத்திற்குள் ஓடும் பேருந்துகளுக்கு அனுமதிச் சீட்டு வழங்கும் அதிகாரம் சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளிடம் உள்ளன. வெளி மாநிலங்களில் ஓடும் பேருந்துகளுக்கு அனுமதிச்சீட்டு வழங்கும் அதிகாரம் மாநிலப் போக்கு வரத்து அதிகாரிகளிடம் உள்ளது. எனினும், மாநிலப் போக்குவரத்துக் கழகங்கள் உருவானபின் போக்குவரத்து வசதிகள்ளப் பெருக்கும் பொறுப்பு மாநிலப் போக்கு வரத்து நிறுவனங்களைச் சார்ந்ததாகும். மாநிலப் போக்குவரத்து நிறுவனங்கள் மக்களுக்குத் தேவையான பேருந்துகளைவிடத் தவறும் போது வட்டாரப் போக்கு வரத்து அதிகாரிகள் மாற்று ஏற்பாடுகளை செய்வர். இயக்கூர்திகள் சட்டத்தின்படி இவர்கள் வேறு மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களுக்கோ தனியார் நிறுவனங்களுக்கோ தேவையான அளவு பேருந்து உரிமங்களை வழங்கி பேருந்துகளை ஓடச் செய்வர்.

(இ) சிறிய பேருந்துகள் :

தமிழ்நாட்டில் உள்ளடங்கிய ஊரகப் பகுதிகளிலும் பெரிய வண்டிகள் போக முடியாத நகரப் பகுதிகளிலும், சிறிய பேருந்துகள் ஓடுகின்றன. தற்போது 78 பேருந்துகள் சேவை செய்கின்றன. ஒரு பேருந்திற்குத் தள்ளுபடி வரியாக ஒரு காலாண்டிற்கு ரூ. 50 மட்டுமே வசூலிக்கப்படுகின்றன. (வரி ரூ. 40, கூடுதல் வரி ரூ. 10).

(ஈ) ஜீப் பேருந்துகள் :

15 பேருந்துகளுக்குக் குறைவாக உட்காரக் கூடிய ஜீப்புப் பேருந்துகள் விடப்படுகின்றன. இயல்பு வரியில் 3/4 பங்கு வரி தான் இவைகளுக்கு விதிக்கப்படுகின்றன. 31—3—90-ல் தமிழகத்தில் மொத்தம் 23 வண்டிகள் இயங்குகின்றன.

7. பொதுமக்கள் போக்குவரத்தை நாட்டுடமையாக்கல் :

பயணிகள் போக்குவரத்தை நாட்டுடமையாக்கும் பணி 1967 லிருந்து தொடர்ந்து பல புதிய உத்திகள் மூலம் வெற்றிகரமாக கையாளப்பட்டு வருகின்றது. தற்போது மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களின்கீழ் 68 சதவிதம் பேருந்துகளுக்கு மேல் இயங்குகின்றன. நாட்டுடமையாக்கப்பட்ட இடங்களில் மக்களுக்கு தேவையான பேருந்துகளை விடுவது இந்நிறுவனங்களின் பொறுப்பாகும். இயக்குர்கள் சட்டம் பிரிவு 4—ன் படி அவர்கள் மக்களுக்குத் தேவையான திட்டங்களை வெளியிடுதல் வேண்டும்.

8. மாநிலப் போக்குவரத்து நிறுவனங்கள் :

மாநிலப் போக்குவரத்து நிறுவனங்கள் மொத்தம் 15 கழகங்களை நிறுவியுள்ளன. அனைத்து கழகங்களிலும் சென்ற ஆண்டில் இருந்து பேருந்துகளின் எண்ணிக்கையை விட நடப்பு ஆண்டில் 4.4 விழுக்காடு அதிகரித்துள்ளது. அவைகளின் விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன. 31—3—89 மற்றும் 31—3—90 ல் ஒவ்வொரு நிறுவனத்திலும் ஓடும் பேருந்துகளின் எண்ணிக்கை:

கழக எண்.	நிறுவனத்தின் பெயர்.	31—3—89—ல் உள்ளவாறு.	31-3-90 உள்ளவாறு.
(1)	(2)	(3)	(4)
1	அண்ணா போக்குவரத்துக் கழகம் லிமிடெட்.	1,095	991
2	சோழன் போக்குவரத்துக் கழகம் லிமிடெட்.	737	758
3	சேரன் போக்குவரத்துக் கழகம் லிமிடெட்.	1,383	1,491
4	ஜீவா போக்குவரத்துக் கழகம் லிமிடெட்.	625	633
5	கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் லிமிடெட்.	674	526
6	நேசமணி போக்குவரத்துக் கழகம் லிமிடெட்.	619	853
7	பாண்டியன் ரோடுவேஸ் போக்குவரத்துக் கழகம் லிமிடெட்.	957	1,058
8	மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் லிமிடெட்.	623	700
9	பல்லவன் போக்குவரத்துக் கழகம் லிமிடெட்.	2,192	2,329
10	பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் லிமிடெட்.	821	852
11	திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் லிமிடெட்.	699	704
12	தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் லிமிடெட்.	861	892
13	தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் லிமிடெட்.	571	571
14	இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் லிமிடெட்.	437	569
15	அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம் லிமிடெட்.	343	372
	மொத்தம்.	12,640	13,199

9. பேருந்துகள் தனியார் நிறுவனங்கள் தடங்கள் :

31—3—1990ல் பேருந்துகளை நடத்தும் தனியார் துறை நிறுவனங்களின் நிலை அவரவர் நடத்தும் பேருந்துகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் வழங்கப் பட்டுள்ளது.

நிறுவனங்களின் நிலை.	மொத்த பேருந்துகள் (மாற்றுப் பேருந்துகள் தவிர.)
(1)	(2)
ஒரு பேருந்து மட்டும்	2,365
இரு பேருந்துகள் மட்டும்	621
மூன்று பேருந்துகள் மட்டும்	226
நான்கு பேருந்துகள்	36
ஐந்து பேருந்துகள்	9
மொத்தம்	3,257

10. பொதுமக்கள் போக்குவரத்து செயலாக்கம் :

அ. பேருந்துகள் :

31—3—1990ல் தமிழகத்தில் மொத்தம் (உவரிப் பேருந்துகள் உள்பட) 18,937 பேருந்துகள் ஓடின. நடப்பு ஆண்டில் ஓடிய பேருந்துகளும், அவற்றின் செயலாக்கங் களும் கீழே தரப்பட்டுள்ளன—

வரிசை எண்.	விவரம்.	பொதுத் துறை.	தனியார் துறை.
(1)	(2)	(3)	(4)
(1)	**பெருநகர்ப் பேருந்து —**		
	தடங்களில் ஓடிய பேருந்துகள்	2,185	6
	தடங்களின் தூரம் கி.மீ.	28,877	234
	சேவை செய்த தூரம் கி.மீ.	3,91,451	180
	பயணிகளின் அளவு	1,28,546	494
(2)	**மாநகர், நகரப் பேருந்து —**		
	தடங்களில் ஓடிய பேருந்துகள்	5,098	1,212
	தடங்களின் தூரம் கி.மீ.	63,936	26,676
	சேவை செய்த தூரம் கி.மீ.	7,64,692	39,465
	பயணிகளின் அளவு	2,03,528	91,716
(3)	**வெளியூர் சாதாரணப் பேருந்துகள் —**		
	தடங்களில் ஓடிய பேருந்துகள்	4,635	3,561
	தடங்களின் தூரம் கி.மீ.	4,60,273	2,61,784
	சேவை செய்த தூரம் கி.மீ.	16,73,323	12,84,042
	பயணிகளின் அளவு	2,00,509	1,91,428

(4) வெளியூர் துரிதப் பேருந்து :

தடங்களில் ஓடிய பேருந்துகள்	101	31
தடங்களின் தூரம் கி.மீ.	2,93,452	2,526
சேவை செய்த தூரம் கி.மீ.	4,08,374	10,626
பயணிகளின் அளவு	48,136	1,844

மேலும் 31—3—1990இல் ஓடிய மொத்த தடங்களின் எண்ணிக்கை 12,153 ஆகும். அதன் விவரங்கள் கீழ்க்கண்டவாறு :—

வரிசை எண்.	பணியின் பெயர்.	தடங்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
(1)	பெருநகர்ப் பேருந்து	393
(2)	மாநகர் நகரப் பணி பேருந்து	5,384
(3)	வெளியூர் சாதாரணப் பணி பேருந்து	6,078
(4)	வெளியூர் துரிதப் பணி பேருந்து	398
	மொத்தம்	12,153

(ஆ) ஒப்பந்த ஊர்திகள் :

வாடகைக் கார்களுக்கும், சுற்றுலா வாடகைக் கார்களுக்கும் எவ்விதத் தடையுமின்றி மாநில முழுமைக்கும் அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன. 1988 ஆம் ஆண்டு மோட்டார் வாகன சட்டமும் அதன்கீழ் அமைந்த விதிகளும் அமலாக்கம் பெற்ற பின்னர் சுற்றுலா மேக்ஸி கேப் அனுமதிச் சீட்டுகள் மாநில அளவிலான மற்றும் தேசிய அளவிலான இயக்கசத்திற்கென வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், அகில இந்திய சுற்றுலா மோட்டார் கேப் அனுமதிச் சீட்டுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

31—3—1990ல் தமிழகத்தில் 21,345 சுற்றுலாச் சிருந்து வண்டிகளும் 382 அகில இந்திய சுற்றுலா இயக்கு வண்டிகளும் இயங்கி வருகின்றன. கீழ்காணும் பட்டியல் மாநிலத்திற்குள் ஓடிய அனைத்து ஒப்பந்த ஊர்திகளின் விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

வரிசை எண்.	வகை.	எண்ணிக்கை 31—3—1990
(1)	(2)	(3)
(1)	ஆட்டோ ரிக்ஷா	28,062
(2)	சாதாரண வாடகைக் கார்கள்	2,351
(3)	சுற்றுலாச் சிருந்து	21,345
(4)	ஒப்பந்தப் பேருந்துகள்	60
(5)	சொகுசு வண்டிகள்	29
(6)	அனைத்திந்திய சுற்றுலா இயக்கு வண்டிகள்	382
(7)	சுற்றுலா ஒப்பந்தப் பேருந்துகள் (35 பயணிக்கு மிகாமல்) ..	51
	மொத்தம்	52,280

(இ) சரக்கு வண்டிகள் :

வாணிப வளர்ச்சியை ஈடுகொடுப்பதற்காகவும், வாணிப பொருட்கள் சாலை வழியே வேகமாகச் செல்வதற்கும், சரக்கு வண்டிகளும் மாநிலம் தழுவிய அனுமதிகள் தடையின்றி வழங்கப்படுகின்றன. மாநிலங்களுக்கிடையே பொருட்களின் போக்கு வரத்து செம்மையாக நடைபெற மேற்கண்ட ஏற்பாடும் செய்யப்பட்டு உள்ளது. தமிழகத்துடன் பொருட்களின் போக்குவரத்து வசதியை விரும்பும் அண்டை மாநிலங்கள் தமிழகத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். அதன்படி, வரும் அனுமதிகளின் மேல் கையொப்பம் இடப்படும் அனைத்திந்திய அளவிலும் வாணிபப் பொருளான நடமாட்டம் அதிகரிக்க பொதுச் சரக்கு வண்டிகளுக்கு தேசிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

புதிய அனுமதி வழங்குவதிலிருந்து பங்கு முறை ஒழிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் வசிக்கும் எந்த ஒரு தனி மனிதரும் தேசிய அனுமதி கேட்கலாம். அவருக்கு 1988 ஆம் ஆண்டு இயக்கு ஊர்திகள் சட்டத்தில் உள்ள பிரிவுகளின்படி அனுமதி வழங்கப்படும்.

தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம், ஆந்திரப்பிரதேசம், மாகராட்டிரம், குஜராத் ஆகிய மாநிலங்களும் கோவா, டாமன், பாண்டிசேரி, டவா, நாகர்ஹவாலி ஆகிய மைய ஆட்சிக்குட்பட்ட இடங்களும் தென் மண்டலம் எனப் பிரிக்கப்பட்டுள்ளது. இத்தென் மண்டலத்திற்குள் ஒடும். வண்டிகளுக்கு ஒரு தனி ஒப்பந்தம் செயல்பட்டு வருகின்றது.

2. இயக்க கூர்திகள் வளர்ச்சி :

மாநிலத்தில் ஒடும் இயக்கூர்திகளின் எண்ணிக்கை அனைத்து இனங்களிலும் வேகமாக வளர்ந்து வருகின்றன. 1989ல் உள்ள எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் நடப்பு ஆண்டு சுமார் 22.7 விழுக்காடு அதிகரித்துள்ளதைக் காணலாம். அவைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.—

வரிசை எண்.	வகை.	வண்டிகளின் எண்ணிக்கை.	
		31—3—1989	31—3—1990
(1)	(2)	(3)	(4)
(அ)	பயணிகள் வண்டிகள் :		
(1)	பேருந்துகள்	18,452	18,937
(2)	ஒப்பந்த வண்டிகள்	46,852	52,280
(3)	தனியார் துறை வண்டிகள்	991	1,107
(ஆ)	சரக்கு வண்டிகள் :		
(4)	பொதுச்சரக்கு வண்டிகள் (டிரக்குகள்)	77,611	78,638
(5)	தனியார் சரக்கு வண்டிகள்	4,474	5,107
(6)	அனுமதியின்றி ஒடும் சரக்கு வண்டிகள்	9,988	7,378
(7)	டிரக்குகளின் இணைப்புகள்	229	136
(8)	அனுமதி பெற்று ஒடும் இழுவைகள்	17,133	16,551
(9)	இழுவைகளின் இணைப்புகள் (அனுமதியுடன்)	18,301	18,734
(10)	இணைப்பு வண்டிகள்	2,482	2,647
(இ)	இதர வகைகள் :		
(11)	அனுமதி அமைப்பின்கீழ் வராத இயக்கு ஊர்திகள்.	9,52,370	1,208,651
	மொத்தம்	1,148,884	1,410,166

10. வரவு–செலவு கணக்குகள் :

இத்துறை இயக்குர்திகளின்பால் வரிகளாகவும், கட்டணங்ளாகவும் வருவாய் ஈட்டுகிறது. அதிகமான வருவாய், வரிகளின் மூலம் பெறப்படுகிறது. பல தலைப்புகளில் வந்த வருவாய் கீழே தரப்பட்டுள்ளன :—

எண்	தலைப்புகள்.	1989–90 வருவாய் (ரூபாய் ஆயிரத்தில்).
(1)	(2)	(3)
(1)	இயக்கு ஊர்திகளின் கட்டணங்கள்	2,40,161
(2)	இயக்கு ஊர்திகளின் வரிகள்	17,11,196
(3)	இதர வருவாய்	8,768
	மொத்தம்	19,60,075

1989–90 ஆம் ஆண்டில் திருத்திய மதிப்பீட்டின்படி இத்துறை நிர்வாகத்திற்கு ரூ. 4.79 கோடி செலவாயின.

சிறைகள் மற்றும் நன்னடத்தைப் பிரிவு.

இம்மாநிலத்தில் 1989–90ஆம் ஆண்டில் இருந்து சிறைகளின் எண்ணிக்கை கீழ்வருமாறு:—

1. மத்திய சிறைகள்	8
2. பெண்கள் தனிச்சிறை, வேலூர் அண்டு மதுரை	2
3. பார்ஸ்டல் பள்ளி	1
4. திறந்த வெளிச் சிறைகள்	2
5. தனிக் கிளைச் சிறைகள்	2
6. கிளைச் சிறைகள்	3
மொத்தம்	116

சிறைவாசிகளின் எண்ணிக்கையும் சிறைகளில் இடவசதியும் :

இவ்வறிக்கைக்குரிய ஆண்டின் கிளைச் சிறைகள், திறந்த வெளிச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி நீங்கலாக சிறைகளில் சிறை வைக்கப்பட்ட எல்லா வகுப்பு சிறைவாசிகளின் தினசரி சராசரி எண்ணிக்கை 7,379 ஆகும். 31—3—1990 அன்று சிறையிலிருந்த சிறைவாசிகள் விபரம் பின்வருமாறு :—

1. தண்டனை சிறைவாசிகள் ..	3,542
2. காவல் மற்றும் விசாரணை சிறைவாசிகள் ..	7,647
3. கடன் சிறைவாசிகள்	6
4. பாதுகாப்பு சிறைவாசிகள்	542
மொத்தம்	11,737

மதுவிலக்கு சிறைவாசிகள் :

இவ்வருட ஆரம்பத்தில் தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்ட சிறைவாசிகளின் எண்ணிக்கை 1,407. நேரடியாக அனுமதித்தல், சிறை மாற்றம் மற்றும் இதர வகைகளில் அனுமதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 7,430 ஆகும். இதில் விடுதலை அடைந்தோர் 7,988. வருட இறுதியிலிருந்தவர்கள் 849 ஆவார்கள்.

சிறை குற்றங்கள் :

இவ்வறிக்கைக்குரிய ஆண்டில் சிறைவாசிகள் 462 குற்றங்களைச் செய்துள்ளனர். அவற்றில் தண்டனை வழங்கப்பட்டது 397 குற்றங்கள். மீதமுள்ள 65 வழக்குகளில் எச்சரிக்கப்பட்டு ஆணை வழங்கப்பட்டது.

தப்பித்தல், திரும்ப பிடித்தல் :

இவ்வறிக்கைக்குரிய ஆண்டில் 40 பேர் தப்பிச் சென்றனர். அதில் மீள பிடிக்கப்பட்டு சிறையிலடைக்கப்பட்டவர்கள் 18 பேர். இன்னும் பிடிக்கப் படாமலுள்ளோர் 22 பேர் ஆகும்.

பாதுகாப்பு சிறைவாசிகள் :

(காபிபோசா, என். எஸ். ஏ. மற்றும் டி.என். பி. டி—ன் கீழ் கைது செய்யப் பட்டவர்கள்.)

இவ்வறிக்கைக்குரிய ஆண்டின் ஆரம்பத்தில் 861 பாதுகாப்பு சிறைவாசிகள் இருந்தனர். இவ்வாண்டில் அனுமதிக்கப்பட்ட பாதுகாப்பு சிறைவாசிகள் 1,998 பேர். 2,407 பேர் விடுதலை செய்யப்பட்டு ஆண்டு இறுதியில் (31 3— 1990) 452 பேர் மீதமுள்ளனர்.

கல்வி :

இவ்வாண்டில் தொடர்ந்து மேல்கல்வி அனுமதி சிறைவாசிகளுக்கு வழங்கப் பட்டது. அதன்படி கல்வி பயின்றோர்களின் விபரம் பின்வருமாறு :—

1. தொடக்கக் கல்வி	9
2. அடிப்படைக் கல்வி	8
3. பி. ஏ.	13
4. பி. காம்.	3
5. எம். ஏ.	7
6. பி.யு.சி.	1
7. பி. எல்.	1
8. எஸ். எஸ். எல்.சி.	1

நீதி மற்றும் மத போதனைகள் :

நியமனம் செய்யப்பட்ட நீதி மற்றும் மத போதனையாளர்கள் மற்றும் ஆசிரியர்களால் நீதி மத போதனைகள் போதிக்கப்பட்டன. இவ்வறிக்கைக்குரிய ஆண்டில் இந்து மத போதனையாளர்களால் 294 போதனைகளும், முஸ்லீம், கிறிஸ்துவ மத போதனையாளர்களால் முறையே 252, 743 போதனைகளும் செய்யப்பட்டது. மத போதகர்களுக்குப் போக்குவரத்துப் படியாக வழங்கப்பட்ட வகையில் மொத்தச் செலவு ரூ. 2,569.70 ஆகும்.

சுகாதாரம் :

பொதுவாக சிறைவாசிகளின் உடல் நலம் திருப்திகரமாகவே இருந்தன.

பார்ஸ்டல் பள்ளி :

1. இவ்வறிக்கைக்குரிய ஆண்டில் பார்ஸ்டல் பள்ளியின் தினசரி சராசரி அடைப்பு 68 ஆகும்.

2. இப்பள்ளி சிறைவாசிகளுக்கு தினமும் 2 மணி நேரமும் எழுத்தறிவு கல்வியும், 5 மணி நேரம் தொழிற்கல்வி பயிற்சியும் அளிக்கப்பட்டது. இப்பள்ளி வாசிகளுக்கு அவர்களது தாய்மொழியிலேயே அதாவது தமிழிலேயே கல்வி போதிக்கப்படுகிறது.

4. மேற்க்கண்ட தொழிற்சாலைகளில் இப்பள்ளிவாசிகளுக்கு பயிற்சி அளிக்கப் பட்டது:—

(அ) தச்சு

(ஆ) கருமார்

(இ) புத்தகம் கட்டுதல்

(ஈ) தையல்

(உ) விவசாயம்

(ஊ) கொத்துவேலை

(எ) சலவை

(ஏ) பேண்டு வாத்தியப் பயிற்சி

பள்ளிவாசிகளின் திறமைக்கு ஏற்றாற்போல் தொழிற்கல்வி அளிக்கப்பட்டது.

திறந்தவெளிச் சிறைகள் :

5—ம் தோட்டம் (சேலம்), சிங்காநல்லூர் (கோயம்புத்தூர்) ஆகிய இடங்களி லுள்ள திறந்த வெளிச் சிறைகள் தொடர்ந்து நல்ல முறையில் இயங்கி வந்தன.

நன்னடத்தைப் பிரிவு :

1989—90—ஆம் ஆண்டில் நன்னடத்தைப் பிரிவு தொடர்ந்து நல்ல முறையில் இயங்கி வந்தது.

(அ) மண்டல நன்னடத்தை அலுவலர் மற்றும் நன்னடத்தை அலுவலர்களால் 1989—90ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்ட விசாரணைக்குரிய மொத்த எண்ணிக்கை	18,372
(ஆ) நன்னடத்தை அலுவலர்களின் அறிக்கையின் பேரில் 1989—90ல் நீதிமன்றத்திலிருந்து விடுதலை செய்யப் பட்டவர்களின் எண்ணிக்கை	27,864
(இ) 1989—90 ஆம் ஆண்டில் கண்காணிப்பில் வைக்கப்பட்டவர் களின் எண்ணிக்கை	10,867

தமிழ்நாடு காவல்.

1–4–1989 முதல் 31–3–1990 வரை மொத்தம் 33,971 சொத்து சம்மந்தப் பட்ட வழக்குகள் தாக்கலாகியுள்ளன. இதில் 22,391 வழக்குகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. கண்டுபிடிப்பு விழுக்காடு 66 ஆக உள்ளது.

(2) சென்னை புறநகர்ப் பகுதிகளில் தெரீடர் கொள்ளைகள் நிகழ்ந்தன. அண்டை மாநிலமான ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த குற்றவாளிகளின் குழுக்கள் இத் தொடர் கொள்ளைகளை நிகழ்த்தி வந்தன. இக் குற்றவாளிகளுக்குக் கிடைத்த தண்டனை 1990 ஆம் ஆண்டில் கொள்ளைகள் நடைபெறா வண்ணம் தடுக்க மெறுமளவில் உதவியளித்தது.

3. தமிழகக் காவல் துறையினரால் வெற்றிகரமாகக் கையாளப்பட்ட சில வழக்குகள் பின்வருமாறு :—

(1) ஆதாயத்திற்கான கொலை : திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம் செம் பட்டி காவல் நிலையக் குற்ற எண் 404/89.

10–10–1989 அன்று சித்தையன் கோட்டையில் மல்லையா என்பவரின் மனைவி ராஜம்மாள் என்பவர் கொலை செய்யப்பட்டு ரூபாய் 3,00,000 மதிப் புள்ள தங்க நகைகளும் ரொக்கமும் களவாடப்பட்டிருந்தன. திறமையான மற்றும் அயராத புலன் விசாரணை காரணமாக திண்டுக்கல்லைச் சார்ந்த குற்றப் சாட்டப்பட்ட அனந்த பத்மநாபன் என்பவரின் மகன் தண்டபானி மற்றும் அவனது கூட்டாளிகள் 4 பேர்களும் சம்பவம் நடந்த ஐந்து தினங்களில் கைது செய்யப்பட்டு அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன.

(2) சென்னை நகரம்—கே. 7 இ.பெ.தொ. குடியிருப்பு கா.நி.கு. எண் 272/90.

8–8–1990 அன்று அயன்புரம் பராக்கா சாலை ரயில்வே குடியிருப்பு கத விலக்கும் 331-ல் உள்ள ராசம்மாள், கு-பெ. மல்லையா என்பவர் கொலை செய் யப்பட்டு ரூ. 25,000 பெறுமானமுள்ள தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் கள வாடப்பட்டன. திறமையான புலன் விசாரணை காரணமாக அயன்புரத்தைச் சேர்ந்த கோதண்டம் என்பவர் கைது செய்யப்பட்டு சொத்துக்கள் அனைத்தும் மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்ற நிலுவையில் உள்ளது.

கொள்ளை :

(1) செங்கை அண்ணா கிழக்கு மாவட்டம் பூந்தமல்லி காவல் நிலையக் குற்ற எண் 1298/89.

10–6–1989 அன்று ஆந்திரா மாநிலம் குண்டூரைச் சார்ந்த பாலகோட் டய்யா என்பவரின் மகன் பாலராமசாமி மற்றும் அவனது கூட்டாளிகள் ஏழு பேர்கள் பூந்தமல்லி ருக்மணி நகரில் உள்ள 43 என்ற எண்ணுள்ள கங்காதரன் என்பவரது வீட்டினுள் புகுந்து அவரையும் அவர் வீட்டிலிருந்தோரையும் சுட்டை களால் தாக்கி பின்னர் அங்கிருந்து ரூ. 40,000 மதிப்புள்ள தங்க நகைகள் மற் றும் ரொக்கம் ஆகியவற்றை களவாடிச் சென்றனர். தீவிர புலன் விசாரணை காரணமாக 24–8–1989 மற்றும் 26–8–1989 ஆகிய தேதிகளில் குற்றம் சாட் டப்பட்ட 6 பேர்கள் கைது செய்யப்பட்டு ரூ. 20,000 மதிப்புள்ள சொத்துக்கள் மீட்கப்பட்டன. குற்றம் சாட்டப்பட்ட பரமாமய்யா மற்றும் பெத்த சாமிய்யா ஆகிய இருவரும் தலைமறைவாகியுள்ளனர். அவர்களை கண்டுபிடிக்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்படி குற்றம் சாட்டப்பட்டவர்கள் செங்கை அண்ணா (கிழக்கு) மாவட்டத்தில் 30–9–1988 முதல் 10–6–1989 வரை நடைபெற்ற இதே போன்ற கொள்ளைகளில் சம்மந்தப்பட்டுள்ளதோடு அவர்களிடம் இருந்து ரூ. 92,500 மதிப்புள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டன. குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிமன்ற விசாரணையில் உள்ளனர்.

(2) திருவண்ணாமலை–சம்புவராயர் மாவட்டம், செங்கம் காவல் நிலையக் குற்ற எண் 221/89.

5–7–1989 அன்று வரனந்தலைச் சார்ந்த புகார் மனுதாரர் சூசைநாதன் என்பவரது வீட்டினுள் குற்றம் சாட்டப்பட்ட காவடி முருகேசன் மற்றும் அவனது கூட்டாளிகள் ஏழு பேர்கள் புகுந்து அங்கிருந்து ரூ. 25,000 மதிப்புள்ள தங்க நகைகளைக் களவாடிச் சென்றனர். அரிவியல் மற்றும் முறையான புலன் விசாரணை காரணமாக, கிருஷ்ணகிரியைச் சார்ந்த கிருஷ்ணன் என்பவரின் மகன் காவடி முருகேசன் மற்றும் அவனது கூட்டாளிகள் 9 பேர்களும் கைது செய் யப்பட்டனர். 5–7–1989 முதல் 5–9–1989 வரை திருவண்ணாமலை–சம்புவ ராயர், செங்கை அண்ணா (கிழக்கு) மாவட்டம், வீரமுப்பரம் தர்மபுரி, செங்கை அண்ணா (மேற்கு) ஆகிய இடங்களில் தொடர்ந்து நடை பெற்ற ரூ. 1,07,925 மதிப்புள்ள கொள்ளை வழக்குகளில் இருபது பேர்கள் சம்மந்தப்பட்டிருந்தனர் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதில் ரூ. 87,000 மதிப்புள்ள சொத்துக்கள் மீட்கப்பட்டன. தலைமறைவாகியுள்ள எஞ்சியுள்ள குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. வழக்குகள் புலன் விசாரணையில் உள்ளன.

(3) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், மேற்பெண்ணாத்தூர் காவல் நிலையக் குற்ற எண் 31/90.

27–1–1990 அன்று மேற்பெண்ணாத்தூரில் விழுப்புரம் மாவட்டம் திருவண்ணை நல்லூரைச் சேர்ந்த சுந்தரம் என்பவனும் அவனது நான்கு கூட்டாளிகளும் சாய்ராம் பெட்ரோல் பங்கில் புகுந்து ராமகிருஷ்ணன் என்பவரை கொலை செய்து விட்டு ரூ. 5,000 மதிப்புள்ள தங்க நகைகள் மற்றும் ரொக்கம் ஆகியவற்றை களவாடிச் சென்றனர். அறிவியல் மற்றும் நிறமையான புலன் விசாரணை காரணமாக சுந்தரமும் அவனது நான்கு கூட்டாளிகளும் கைது செய்யப்பட்டனர். சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற இரண்டு வழிப்பறி வழக்குகளிலும் இக்குற்ற வாளிகள் சம்மந்தப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டு ரூ. 25,000 மதிப்புள்ள சொத்துக்கள் கைப்பற்றப்பட்டன. வழக்குகள் நீதிமன்ற நிலுவையிலுள்ளன.

3. வழிப்பறி :

(1) திருச்சிராப்பள்ளி மாவட்டம். தென்னிலை காவல் நிலையக் குற்ற எண் 136/89.

14–6–1989 அன்று டி.சி.பி. 2353 பதிவு எண்ணுள்ள தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகப் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த திருவரம்பூர் கூத்தப்பார் கிராமத்தைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணன் என்பவரின் மகன் அசோக் மற்றும் அவனைச் சேர்ந்த ஐந்து நபர்களும் தென்னிலை அரசு உயர் நிலைப் பள்ளி அருகே பேருந்தினை நிறுத்தி பயணிகளிடமிருந்து ரூ. 91,325— மதிப்புள்ள தங்க நகைகள், ரொக்கம் மற்றும் கைக் கடிகாரங்களை கொள்ளையடித்து சென்றனர். அசோக் என்பவனும் அவனுடைய கூட்டாளிகளும் முறையே 19–4–1990, 29–4–1990, 3–5–1990 மற்றும் 5–5–1990 ஆகிய நாட்களில் கைது செய்யப்பட்டனர். இக்குற்றவாளிகள் 5–8–1989 அன்று கும்பகோணத்தில் ரூ. 7,20,000 மதிப்புள்ள சொத்துக்களைக் கொள்ளையடித்ததும் (கும்பகோணம் நகர் தெற்கு கா.நி.கு. எண் 773/89) கண்டறியப்பட்டது. குற்றவாளிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தின்படி களவாடப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டன. வழக்குகள் நீதிமன்ற நிலுவையிலுள்ளன.

(2) கோவை ஊரக மாவட்டம், திருப்பூர் காவல் நிலையக் குற்ற எண் 55/90.

19–2–1990 அன்று திருப்பூரில் ஸ்கூட்டரில் சென்று கொண்டிருந்த சக்திவேல் என்பவரை சாலையின் குறுக்கே கயிறு கட்டி வழிமறித்து ஐந்து நபர்கள் அவரிடமிருந்து ரூ. 1,500 மதிப்புள்ள தங்க நகைகள் கைக்கடிகாரத்தினை பறித்து சென்றனர். தீவிர புலன் விசாரணையின் விளைவாக 18–7–1990 அன்று தேவராஜ் என்பவனும் அவனுடைய நான்கு கூட்டாளிகளும் கைது செய்யப்பட்டனர். மேலும் விசாரணையில் இக்குற்றவாளிகள் 13–8–1989 முதல் 7–5–1990 வரை திருச்சி, பகம்பொன் தேவர் திருமகன், திண்டுக்கல் - காயிதே மில்லத், மதுரை ஊரகம், ராமநாதபுரம், கோவை ஊரகம், பெரியார், தஞ்சை கிழக்கு மற்றும் மேற்கு, கன்னியாகுமரி மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் இதே போன்று வழிப்பறிகளில் ஈடுபட்டது கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களது ஒப்புதல் வாக்கு மூலத்தின் மூலம் ரூ. 98,000 மதிப்புள்ள சொத்துக்கள் மீட்கப்பட்டன. வழக்குகள் விசாரணையிலுள்ளன.

4. கள்ளக் களவு :

செங்கை அண்ணா மேற்கு மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலைய கு. எண் 603/89.

1989 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21 ஆம் நாள் அன்று காவலுரைச் சார்ந்த குற்றம் சாட்டப்பட்ட சாரங்கபாணி என்பவரின் மகன் நடராசன் என்ற பாஸ்கரனை மற்றும் அவனது கூட்டாளிகள் மூன்று பேர் ஸ்ரீபெரும்புதூரிலுள்ள ஆதிகேசவ பெருமாள் கோயிலின் பூட்டினை உடைத்து உள்ளே நுழைந்து அங்கிருந்து ரூ. 5,55,178 மதிப்புள்ள தங்க நகைகளைக் களவாடிச் சென்றனர். அறிவியல் மற்றும் முறையான புலன் விசாரணை காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் 1989 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29 ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டு அனைத்துச் சொத்துக்களும் அன்றே மீட்கப்பட்டன. இவ்வழக்கு தண்டனையில் முடிவுற்றது.

(2) திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் காவல் நிலைய குற்ற எண் 1238/89

1989 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் அன்று பகபதி பாளையத்தைச் சேர்ந்த குகநாதன், மகன் குமார் என்கிற கொளந்தைவேல் மற்றும் அவரது கூட்டாளி முனியப்பன் ஆகிய இருவரும் கரூர் ராஜாஜி தெருவில் கதவிலக்கம் 1-ல் வசிக்கும் புகார் மனுதாரர் திரு. விக்னேஸ்வரர் என்பவரின்

வீட்டை பூட்டை உடைத்து ரூ. 7,00,000 மதிப்புள்ள வைரம், தங்கம் மற்றும் வெள்ளி நகைகளைத் திருடிச் சென்றனர். தீவிர புலன் விசாரணை காரணமாக குற்றவாளிகள் இருவரும் 1989 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 6 ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டு அனைத்துப் பொருட்களும் அன்றே மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

(3) கோயமுத்தூர் ஊரக மாவட்டம், காட்டூர் காவல் நி.கு. எண் 1629/89.

1989ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30-ம் நாள் அன்று காந்திபுரத்தில் கதவிலக்கம் 1072ல் உள்ள ராஜேஸ்வரி நகைக் கடையில் முரளிதரன் மற்றும் அவனது கூட்டாளி சித்தங்கப்பர் ஆகியோர் பூட்டை உடைத்து உள்ளேநுழைந்து அங்கிருந்து ரூ. 4,00,000 மதிப்புள்ள தங்க நகைகளைக் களவாடிச் சென்றனர் அறிவியல் மற்றும் முறையான புலன் விசாரணை காரணமாக குற்றவாளிகள் 1989ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19 ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டு அனைத்துச் சொத்துக்களும் அன்றே மீட்கப் பட்டன. இவ்வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

5. திருட்டு :

(1) திருச்சிராப்பள்ளி மாவட்டம், கோட்டை கா.நி.கு.எண் 1740/89.

1989ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1ஆம் நாள் அன்று திருச்சிராப்பள்ளி தெப்பக் குளம் அருகில் உள்ள மெயின் காட் கேட்டில் திருச்சி ராம்ஜி நகரைச் சேர்ந்த பாண்டுரங்கன் என்பவரின் மகன் சரவணன் மற்றும் ஆறுமுகம் என்பவரின் மகன் மாணிக்கம் ஆகியோர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து களவாடப் பட்ட ரொக்கம் ரூ. 3,60,000-ஐ காவல் துறையினர் கைப்பற்றினர். அயராத புலன் விசாரணையின் காரணமாக இப்பணம் உத்திரப் பிரதேச மாநிலத்தில் லக்னோவில் தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஒன்றிலிருந்து களவாடப்பட்டது எனத் தெரிய வந்தது. இவ்வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

6. குற்றப்பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையினரின் குறிப்பிடத்தக்க சில பணிகள்:

(1) பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், குன்னக்குடி. கா.நி. கு. எண் 61/89.

1989 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29ஆம் நாள் அன்று மதுரை சாலையில் கூத்தம்பட்டியைச் சார்ந்த ராஜி சேர்வை என்பவரின் மகன் கண்ணன் மற்றும் பிச்சை மற்றும் திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டத்தைச் சார்ந்த ஆறுமுகம் என்பவர் மகன் பழனிவேல் மற்றும் சங்கர் ஆகியோர் எட்டு பஞ்சலோக சிலைகளுடன் கைது செய்யப்பட்டனர். புலன் விசாரணையின்போது அச் சிலைகள் நேமம் அருள்மிகு ஜெயங்கொண்ட சோளீஸ்வரர் கோயிலில் இருந்து களவாடப்பட்டவை எனத் தெரிய வந்தது. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

(2) குற்றப்பிரிவு, குற்றப் புலாய்வுத் துறையின்ரின் புலன் விசாரணையின்போது மொத்தம் ரூ. 3,00,000 மதிப்புள்ள உருக்கப்பட்ட தங்கம், வெள்ளிப் பாத்திரங்கள் துப்பாக்கி மற்றும் ரொக்கம் ஆகியவை பேபி என்கிற வர்கீஸ் என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. குற்றவாளிக்கு 1989 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 16ஆம் நாள் அன்று நீதிமன்றத்தில் ஏழு வருட கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது.

7. இதரப்பணிகளில் சாதனை :

தமிழ்நாடு காவல் துறை அணி 1989ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நடைபெற்ற 33ஆவது அகில இந்திய காவல் பணிப் போட்டிகளில் கலந்து கொண்டு 3 தங்கப் பதக்கங்களையும் 2 வெள்ளிப் பதக்கங்களையும் 4 வெண்கலப் பதக்கங்களையும் பெற்றது. 34ஆவது அகில இந்திய காவல் பணிப் போட்டிகளில் தமிழ்நாடு காவல் துறை அறிவியல் சாதனங்களைக் கொண்டு புலனாய்வு செய்யும் போட்டியில் முதல் மற்றும் இரண்டாம் இடங்களை வென்று தமிழ்நாட்டிற்கு பெருமை தேடித்தந்தது.

1. தமிழ்நாடு காவல்துறை :

1989-90-ம் ஆண்டில் (1-4-1989 முதல் 31-3-1990 வரை) சட்டம் ஒழுங்கு மற்றும் பிறவற்றில் தமிழ்நாடு காவல் துறையின் சாதனைகள் பற்றி சுருக்க விவரம்,

1989 ஏப்ரல் மாதத்திலிருந்து சுமார் இரண்டு மாத காலத்திற்கு மாநிலத்தில் உள்ள எதிர்க்கட்சிகள் மாநில அமைச்சர்களுக்கு எதிராக கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டங்கள் பலவற்றை தொடங்கினர். போராட்டத்தில் இப்பகுதி திறமையாகக் கையாளப் பட்டதன் விளைவாக பெருமளவில் அமைதிக்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய சம்பவம் எதுவும் நிகழவில்லை.

(2) 30–8–1989 அன்று நாடு தழுவிய 'பாரத் பந்த்' நடத்தக் கோரியும், எதிர்தரப்பினரால் இதற்கு எதிரான ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட, இது ஒரு பெரிய சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைத் தோற்றுவித்தது. 'பந்த்' நேரத்தில் நடத்தப்பட்ட இரயில் மறியல் மற்றும் பிற போராட்டங்களும் அமைதியாக நடைபெற்றன. காவல் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட விரிவான மற்றும் தீவிரமான பாதுகாப்பினால் பல மோதல்கள் தவிர்க்கப்பட்டன.

(3) அப்படி காரணங்களுக்காக இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே இங்கொன்றும், அங்கொன்றுமாக நடைபெற்ற மோதல் சம்பவங்களைத் தவிர வகுப்புவாதம் தொடர்பாக மாநிலம் பொதுவாக அமைதியாகவே இருந்தது. அவையும் கூட, நீண்டகாலப் பகை, நிலத் தகராறுகள், உற்சவம், மத ஊர்வலங்கள் இன்ன பிறவற்றால்தான் பெரும்பாலும் நிகழ்ந்தன. 1989-ம் ஆண்டு ஏப்ரல் மற்றும் ஆகஸ்டு மாதங்களில் முஸ்லீம் ஒருவரும், இந்து ஒருவரும் இறந்த இனச் சம்பவங்கள் நிகழ்ந்தன. அருப்புக்கோட்டையில், 1989-ல் ஆண்டு ஜூலை மாதத்தில், பக்ரீத் விழாவை யொட்டி, அவ்வூர் மாரியம்மன்கோயில் ஒன்றின் அருகில் முஸ்லீம்கள் தங்கள் கொடியை ஏற்றியதையடுத்து ஒரு பயங்கர இந்து முஸ்லீம் மோதல் நடைபெற்றது. மேற்படி இரு கால கட்டங்களிலும் நிலைமையைக் கட்டுப்படுத்த காவல் துறையினர் பெரிதும் சிரமப்பட நேர்ந்தது. கு.ந.ச. பிரிவு 107-ன்கீழ் பாதுகாப்பு நடவடிக்கைகளும் தொடங்கப்பட்டன. 1989 செப்டம்பரில், போடி நாயக்கனூரிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சாதிக் கலவரம் நிகழ்ந்தபோது அது மாநிலத்தின் பிற பகுதிகளுக்குப் பரவி அங்கும் வகுப்பு ஒற்றுமைக்கு குந்தகம் விளையாவண்ணம் காவல் துறையினர் அதனை அங்கேயே தடுத்து நிறுத்தினர். கலவரம் நடைபெற்ற நகர்ப் பகுதிகளில், தீவிர ரோந்து மற்றும் காவலர்களை நிறுத்தி கண்காணித்தல் போன்ற நடவடிக்கை மேற்கொண்டதோடு, அமைதிக்குழு அமைத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க ஏற்பாடு செய்தனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒவ்வொரு மூலை முடுக்கிற்கும் மூத்த காவல் அதிகாரிகள் வருகை தந்து, அமைதியை நிலைநாட்டுவதில் நற்பணியாற்றினர்.

(4) 1989 அக்டோபர்–நவம்பர் மாதங்களில் விஸ்வ இந்து பரிஷத் நடத்திய இராம லீலா நடவடிக்கையாக இந்து மத வகுப்புவாத இயக்கங்களுக்கு ஒரு பிடிப்பினை கொடுத்தது. மேலும், மாநிலத்தில் மிகவும் வலிவற்ற இயக்க நிலைக்கு அது சான்றாகவும் விளங்கியது. இந்த மதவாதக் குழுக்கள் மருதிகள் வழியாக மேளங்களை அடித்துக் கொண்டு ஊர்வலங்கள் எடுக்கும் தங்கள் உரிமையை நிலை நாட்டும் வகையில், இந்து மத உணர்வுகளைத் தூண்டவும் முயன்றன. இப்போக்கு சில இடங்களில் முஸ்லீம்களால் எதிர்க்கப்பட்டது. இராம லீலா ஊர்வல ரதங்கள் எடுத்து செல்லப்பட்ட ஊதகமண்டலம், கோயமுத்தூர், பாலக்கோடு, ஒசூர், ஆம்பூர், வேலூர், விஷாரம், ஜாம்பவானோடை, சங்கரப்பள்ளி, திண்டுக்கல், சென்னை—திருவல்லிக்கேணி மற்றும் சில இடங்களில் பதட்ட நிலை நிலவியது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மதத் தீவிரவாதிகளும் தங்கள் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை வியாபாரிகளிடமே வாங்குமாறு இந்துக்களை வலியுறுத்தினர். இரதங்கள் செல்லும் வழியெல்லாம் காவல் துறையினர் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து, அனைத்து மாவட்டங்களிலும் சட்டம் மற்றும் ஒழுங்கு பராமரிப்பை உறுதி செய்தனர்.

(5) 1989–ம் ஆண்டு நவம்பரில் நடந்த லோக்சபை தேர்தலின்போது, காவல் படை முழுவதும் முடுக்கிவிடப்பட்டது. தேர்தல்களின்போது, இங்கொன்றும், அங்கொன்று மாகச் சில சம்பவங்கள் நிகழ்ந்தாலும் பொதுவாக நிலைமை அமைதியாகவே இருந்தது.

(6) வேலை நிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள் போன்ற சில சம்பவங்களைத் தவிர்த்து, மாநிலத்தில் தொழிலாளர் நிலைமை அமைதியாகவே இருந்தது. தீபாவளி போன்ற விழாக்காலங்களில் போனஸ் வழங்குவது தொடர்பான வழக்கமான தொழிலாளர் பிரச்சினைகள் மாநிலத்தில் இருந்தன. இச்சம்பவங்களும் பெரிய பிரச்சினைகள் எதுவும் நிகழாவண்ணம் சாதுரியமாகக் கையாளப்பட்டன.

(7) தமிழ்நாட்டில் பயங்கரவாத நடவடிக்கைகள் எதுவும் தலையெடுக்க அனுமதிக்கப்படவில்லை. சட்ட விரோதமாக வெடி மருந்துகள் மற்றும் ஆயுதங்கள் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டுபிடித்து அகற்றும் பணிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டதுடன், தீவிர மற்றும் பயங்கரவாதக் குழுக்களினால் ஏற்படும் தொல்லைகளை காவல் துறையினர் கட்டுப்படுத்தினர். மொத்தத்தில் பரிசீலனையிலுள்ள கால கட்டத்தில் மாநிலத்தில் அமைதி நிலவியது.

அத்தியாயம் 14.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

இடவசதிக் கட்டுப்பாடு.

தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை-வாடகை கட்டுப்பாடு) சட்டம் 30—09—1960 அன்று செயலுக்கு வந்தது. இச்சட்டம், 1973 ஆம் ஆண்டு 23-ம் ஆம் சட்டத்தின் மூலம் மேலும் திருத்தப்பட்டது. குடியிருப்புக் கட்டிடங்களையும் குடியிருப்பு அல்லாத பிற கட்டிடங்களையும் வாடகைக்கு விடுவதை முறைப்படுத்துவதும், அத்தகைய கட்டிடங்களின் வாடகையைக்கட்டுப்படுத்துவதும் வீட்டு உரிமையாளர்கள் நியாய மற்ற முறையில் குடியிருப்போரை வெளியேற்றுவதினின்று அவர்களைப் பாதுகாப் பதும் அச்சட்டத்தின் நோக்கமாகும். இச்சட்டத்தின் 3(1) பிரிவின்படி தங்களுடைய ஆட்சி வரம்புப்பகுதிகளில் சென்னை மாநகரைப் பொருத்தமட்டில் சென்னை மாவட்ட ஆட்சித்தலைவரும் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகளாவர். ஏனைய பகுதிகளில் கோட்டாட்சித் தலைவர்களும் வீட்டு உரிமையாளர் குத்தகைதாரர் (குடியிருப்போர்) ஒரு கட்டிடம் காலி செய்யப்பட்ட ஏழு நாட்களுக்குள் அவ்வளாகம் காலியானது குறித்த தேவையான விவரத்தை அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டியது அவர்களுடைய கடமையாகும்.

அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி அக்கட்டிடத்தைத் தனது நிருவாகப் பொறுப் பில் எடுத்துக்கொண்ட பின்னர், அரசின் இடவசதி விருப்ப ஒதுக்கீட்டின்கீழ் இட மாற்றம் பெற்றவர், வீட்டைக் காலி செய்துவிட்டு இடவசதி இல்லாமல் இருப்போர், புதிதாக மணமானவர் என்று தங்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொண்டுள்ள தகுதி யுள்ள அரசுப் பணியாளர்களுக்கு அவர்களுடைய பதிவு முன்னுரிமை வரிசைப்படி குடியிருப்புக் கட்டிடங்களையும் மாநில அரசு அலுவலகங்களின் அலுவல் நோக்கங் களுக்குக் குடியிருப்பு அல்லாத பிற கட்டிடங்களையும் ஒதுக்குவார். வீட்டு உரிமை யாளர்கள் இச்சட்டத்தின் 3(A) பிரிவின்கீழ் தங்களுடைய சொந்தப் பயனுக்காகவும் இச்சட்டத்தின் 12(1) (a) பிரிவின்கீழ் பழுதுபார்ப்பதற்காகவும் இச்சட்டத்தின் 12(1) (b) பிரிவின்கீழ் பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு புதுப்பித்து கட்டுவதற்காகவும் அரசின் வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்திலிருந்து விடுபடுவதற்காக விண்ணப்பிக்கும் போது அரசின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அக்கட்டிடங்கள் உரிய விசாரணைக்குப் பின்னர் மேற்சொன்ன நிருவாகக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப் பட்டு அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

1989—90-ம் ஆண்டில் 211 அரசு அலுவலர்கள், வீடுகள் ஒதுக்கீட்டிற்காகத் தங்கள் பெயர்களை அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியிடம் பதிவு செய்து உள்ளனர்.

69 கட்டிடங்கள் குடியிருப்பு கட்டிட வகையின்கீழ் அறிவிக்கப்பட்டன. அறி விக்கப்பட்ட அக்கட்டிடங்களில் 65, கட்டிடங்கள் தகுதியுள்ள அரசுப் பணியாளர் களுக்கு குடியிருப்புக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டன.

அரசின் நிருவாகக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட கட்டிடங்களின் விவரங்கள் வருமாறு :

1. 3(A) (1) பிரிவின்கீழ் விடுவிக்கப்பட்டவை—8 கட்டிடங்கள்.
2. 12(1) (a) பிரிவின்கீழ் விடுவிக்கப்பட்டவை—ஏதுமில்லை.
3. 12(1) (b) பிரிவின்கீழ் விடுவிக்கப்பட்டவை—3 கட்டிடங்கள்.
4. 30 (ii) பிரிவின் கீழ் விடுவிக்கப்பட்டவை—ஏதுமில்லை.
5. நீதிமன்ற ஆணைகளின்படி விடுவிக்கப்பட்டவை—10 கட்டிடங்கள்.
6. அரசுப்பணிக்குத் தேவைப்படாது என விடுவிக்கப்பட்டவை—ஏதுமில்லை.

கூட்டுறவுச் சங்கங்கள் (வீட்டுவசதி)

1. முன்னுரை :

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களது ஆளுகையின்கீழ் செயல்பட்டு வந்த வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் பெருந் தலைவரது கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் பொருட்டு 1966 ஆம் ஆண்டு மாற்றப் பட்டது. வாரியத் தலைவரின்கீழ் இதர அலுவலர்களுடன் வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்களின் பணியினை கவனிக்கும் பொருட்டு இணைப்பதிவாளர் நிலையில் ஒருவர் பணிபுரிந்து வந்தார். பின்னர் இணைப்பதிவாளர் நிலை பதவியானது கூடுதல் பதி வாளர் நிலை பதவியாக உயர்த்தப்பட்டது. வாரியத்தலைவரின்கீழ் பணிபுரிந்து வந்த கூடுதல் பதிவாளரே 1979 முதல் வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாள ராக உயர்த்தப்பட்டு இத்துறையின் தலைவராக்கப்பட்டார்.

2. செயல்பாடுகள் :

பதிவாளருக்கு உதவியாக ஒரு இணைப்பதிவாளர் ஒரு துணைப்பதிவாளர்/நேர்முக உதவியாளர் மற்றும் இதர அலுவலர்கள் தலைமையிடத்தில் பணிபுரிந்து வருகின்றனர். வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்களைப்பற்றி வரும் புகார்களை விசாரிக்கவும், மற்றும் மேற்படி சங்கங்களை ஆய்வு செய்யும் பொருட்டும் பிரத்தியேகமாக இணைப்பதிவாளர் பதவியானது பதிவாளர் (வீட்டுவசதி) அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டது.

வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்களின் பணியினை நிறம்பட மேற்பார்வை செய்யவும், சட்ட பூர்வ பணிகளான விசாரணை, ஆய்வு, தாவா மனு நடவடிக்கை, நிறைவேற்று மனு நடவடிக்கை மற்றும் கலைத்தல் போன்ற பணிகளை கவனிக்கும் பொருட்டு இம்மாநிலத்தில் 9 மண்டல வீட்டுவசதி அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மண்டல வீட்டுவசதி துணைப்பதிவாளரும் 1 முதல் 5 மாவட்டங்களை இவர்களது அதிகார வரம்பிற்குள் பெற்றுள்ளனர்.

3. வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்களின் வகைகள் மற்றும் அதன் பணிகள் :

வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் இரண்டு திட்டப்பணிகளை செயல் படுத்தி வருகின்றார். இவை முறையே 1. தமிழ்நாடு கிராமிய வீட்டுவசதி திட்டம், 2. நகர் வீட்டுவசதி திட்டம். இத்திட்டப்பணிகள் மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் மூலமாகவும், புல அளவில் பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் மூலமாகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகரிய வீட்டுவசதி திட்டம் 950 நகர வீட்டுவசதி சங்கங்கள் மூலமாகவும், கிராமிய வீட்டுவசதி திட்டம் 165 வட்டத்தில் உள்ள ஒவ்வொரு வட்ட கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலமாகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு தலைமை கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தை தவிர்த்து 11 வகையான வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்கள் பின்வருமாறு செயல்பட்டு வருகின்றன:—

I தலைமைச் சங்கம் :

தமிழ்நாடு தலைமை கூட்டுறவு வீட்டுவசதி இணையம், சென்னை-7

II. பிரதமச் கூட்டுற வீட்டுவசதி சங்கங்கள் :

1.	கூட்டுறவு கட்டிடச் சங்கங்கள்	373
2.	கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள்	181
3.	கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள்	205
4.	கூட்டுறவு வீடு கட்டுமானச் சங்கங்கள்	43
5.	கூட்டுறவு நகரியம்	
6.	கூட்டுறவு வாடகை குடியிருப்பு சங்கங்கள்	
7.	தொழிலியல் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள்	31
8.	கூட்டுறவு வீட்டுமனைச் சங்கங்கள்	108
9.	வட்ட கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள்	165
10.	அரிசன கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள்	4
11.	கூட்டுறவு வீட்டு சேவை சங்கங்கள்	109
		1,224

இந்த வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்கள். உறுப்பினர்கள் கடனை திருப்பிச் செலுத்தும் திறன் மற்றும் மதிப்பீட்டின் பேரில் ரூ. 22,000-ல் இருந்து ஒரு லட்சம் வரை கடன் உதவி அளிக்கின்றன, சில சங்கங்கள் வீட்டுமனைச்சுரிய நிலங்களை கையகப்படுத்தி. அதனை மேம்படுத்தப்பட்ட வீட்டுமனைகளாக்கி உறுப்பினர்களுக்கு வழங்கி வருகின்றன,

4. திட்டம் குறியீடு மற்றும் சாதனைகள் :

1. இராம வீட்டு வசதி திட்டம் :

இராமப்புறத்தில் பொருளாதாரத்தில் நலிவுற்ற மாத வருமானம் ரூ. 700-க்கு உட்பட்டவர்களுக்கு புதிய வீடுகள் கட்டுவதற்காக கிராமிய வீட்டுவசதி திட்டத்தின் மூலம் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் வழியாக அரசினால் நிதிஉதவி

அளிக்கப்பட்டு வருகிறது. மேற்படி திட்டத்தை செயல்படுத்துவதற்கான நிதி உதவி யானது அரசு மற்றும் அட்கோ நிறுவனத்திடமிருந்து பெறப்படுகின்றன. இந்நிதி உதவியானது பொருளாதாரத்தில் நலிவடைந்த ஆதிதிராவிடர் அல்லாதவர்களுக்கு மட்டும் வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர்களுக்கு அரசினால் செயல்படுத்தப்படும் இதர திட்டங்களின் மூலம் இனாமாக வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு வருகிறது.

2. நகர வீட்டுவசதி திட்டம் :

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து கடன் உதவி பெற்று நகரிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்கு அளிக்கிறது. ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து ஆண்டுக்கு ரூ. 15 கோடி வரை அதிக அளவு கடனாக பெறும் பயனீட்டாளர்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். 1989–90 ஆம் ஆண்டில் நகர கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் 8,000 வீடுகள் கட்டுவதற்கு 36 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப்பட வேண்டும் என குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில் 7,428 வீடுகள் கட்டுவதற்கு 44.52 கோடி ரூபாய் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத் தால் கடன் உதவி அளிக்கப்பட்டுள்ளது.

5. அறிக்கையாண்டில் செயல்படுத்தப்படும் புதிய திட்டங்கள் :

1989–90 ஆம் ஆண்டில் நேரு ரோஸ்கார் யோசனா திட்டம் செயல்படுத்து வதற்கான அரசு உத்தரவு பெறப்பட்டு அதன்படி தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு 5000 குறியீடாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டமானது வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்களின் மூலம் ரூ. 4000-ம் செலவில் வீட்டினை மேம் படுத்தப்படுகிறது. இந்த தொகை ரூ. 4000-ல் ரூ. 1000-ம் மானியமாகும். இம் மானியத் தொகையில் 80 சதவிகிதம் மத்திய அரசின் பங்காகவும் 20 சதவீதம் மாநில அரசின் பங்காகவும் உள்ளது. இதற்கான மாநில அரசு மானியத் தொகையாக ரூ. 3,12,500 விடுவித்துள்ளது. அட்கோ நிறுவனம் வீட்டுவசதி கூட்டுறவு சங்கங் களுக்கு ரூ. 157,50 இலட்சம் கடன் அனுமதித்துள்ளது. இத்திட்டப்படி உள்ளூர் நகராட்சிகள் பயனீட்டாளர்களை தேர்ந்தெடுக்க வேண்டும். மொத்தம் உள்ள 5000 அலகுகளில் நகராட்சிகளால் 925 அலகுகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்களும் 2803 பயனீட்டாளர்களை தேர்வு செய்துள்ளன. இந்த பயனீட்டாளர்களின் பட்டியல் நகராட்சிகளின் இயக்குநரது அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதும் பயனீட்டாளர்களுக்கு கடன் தொகை வழங்கப்பட உள்ளது.

6. நிதிநிலை முதலீடு மற்றும் உள்ளபடியான செலவினங்கள் :

ஏற்கனவே செயல்படுத்தப்பட்ட கிராமிய வீட்டுவசதி திட்டம் நடப்பாண்டில் அரசினால் மறுபரிசீலனை செய்யப்பட்டு தமிழ்நாடு கிராமிய வீட்டுவசதி திட்டம் என்ற புதிய திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி இதற்கு முந்தைய ஆண்டு களில் அரசினால் வழங்கப்பட்ட கடன் தொகைக்கு பதிலாக மானியமாக வழங்கப் படுகிறது. இப்புதிய திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்ற நிதியுதவி குறித்த விபரம் பின் வருமாறு :

	சமவெளிப் பகுதியில்.	மனைப் பகுதியில்.
	ரூ. பை.	ரூ. பை.
அட்கோ கடன்	4,500.00	5,000.00
மாநில அரசின் மான்யம்	1,500.00	1,500.00
பயனீட்டாளர்களின் பங்கு	3,000.00	3,000.00
ஒரு வீட்டின் மொத்த செலவு	9,000.00	1,000.00

இத்திட்டப்படி 1989–90-ஆம் ஆண்டில் 3000-ம் வீடுகள் கட்டுவதற்காகும் மொத்த திட்ட செலவானது ரூ. 2703;75 இலட்சம் ஆகும். இதில் அட்கோ கடன் 1351.75 இலட்சம். அரசின் மானியத் தொகை ரூ. 450 இலட்சம் ஆகும். 30000 வீடு களுக்கான திட்ட அறிக்கைகள் வட்ட கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களினால் தயாரிக்கப் பட்டு அட்கோ நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டன. அட்கோ நிறுவனம் இதனை அனு மதித்து நிதி உதவியினை 1990 ஆம் ஆண்டு பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் தான் வழங்கியுள்ளது. ஆகவே 1989-90-ஆம் ஆண்டுக்கான குறியீடு 30000 வீடுகள் யாவும் 1990–91 ஆம் ஆண்டில் கட்டுவதற்காக (Spill over cases) எடுத்துக் கொள்ளப்பட்டன. இதுபோலவே 1988-89-ஆம் ஆண்டிற்கும் 21750 வீடுகள் கட்டு வதற்கான அட்கோ நிறுவனத்தின் நிதி உதவியும். ஆண்டின் சுனடசி சுர்வாண்டில் இடைக்குப்பெற்றதால் 21,750 வீடுகளும் 1989-90-ஆம் ஆண்டின் குறியீடாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

8. முடிவுரை :

1978க79-ஆம் ஆண்டு ஹரிஜன வீட்டுவசதி திட்டம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து வட்ட கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் மூலமாக பொருளாதாரத்தில் நலிவுற்றோர் பிரிவினர்களுக்கு வீடு கட்டி கொடுப்பதில் மிகப்பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 31-3-1990 உடன் முடிவடைந்த காலத்திற்கு 2,90 இலட்சம் வீடுகள் மேற்படி பிரிவினருக்கு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

நகர ஊரமைப்புத் திட்டம் :

சுற்றுப்புறச் சூழலின் தரத்தை மேம்படுத்துவது. இனிய சூழ்நிலையை உருவாக்குவது ஆகிய நோக்கங்களை எய்துவதற்கு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்டம் மிகவும் அவசியமானதாகும் என்று, நாட்டிலே முதன் முதலில் உயர்ந்த மாநிலம் தமிழ்நாடு ஆகும். இந்த முயற்சிகளுக்குச் சட்டப்படிக்கான வடிவம் கொடுப்பதற்காக 1920 ஆம் ஆண்டு நகர அமைப்புத் திட்டச் சட்டத்தை தமிழக அரசு இயற்றியது.

நாடு விடுதலை அடைந்தவுடன், பல இலட்சக்கணக்கான மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த அரசு, ஐந்தாண்டுத்திட்டங்களைத் தீட்டியது. இத்திட்டங்களினால் நகர நாட்டுப்புற அமைப்பை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்ட முக்கிய துறைகளில் பெருமளவுத் தொகையை முதலீடு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. பொருளாதார மேம்பாட்டிற்கும் அமைப்பின் மேம்பாடுகளுக்கும் சரியாக பொருந்தும் வகையில், துறை, எண்ணற்ற திட்டங்களைத் தயாரித்துள்ளது.

விடுதலை அடைந்த பின்னர் ஏற்பட்ட தேவைகளை நிறைவு செய்ய, 1920 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டம் போதுமானதாக இல்லாததால், 1972 ஆம் ஆண்டில் சட்டம் ஒன்று செயலுக்குக் கொண்டுவரப்பட்டது.

துறையானது வாலாயமான பணிகளை மட்டும் மேற்கொள்வதற்குப் பதிலாக எளிதில் வளர்ச்சியடையக்கூடிய பகுதிகளில் பொருத்தமான முதலீடுகளைச் செய்வது விரும்பக்கூடிய வகையில் சீரான மேம்பாடுகளைச் செய்யும் வகையில், பல்வேறு திட்டங்களைத் தயாரிப்பது போன்ற முறைப்படுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

அலுவல்கள் :

துறையின் முக்கிய அலுவல்கள் வருமாறு :—

(1) அமைப்புக்கான திட்டம் சார்ந்த பிரச்சினைகளை குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.

(2) திட்மிடல் மனைப்பிரிவு செய்தல் ஆகியவற்றில் உள்ளூர் அதிகார மன்றங்களுக்கு ஆலோசனை வழங்குதல்.

(3) அந்தந்த இனங்களுக்கேற்றவாறு, வட்டாரத் திட்டம், பெருந்திட்டம் அல்லது விரிவான மேம்பாட்டுத்திட்டம் ஆகியவற்றை தயாரிப்பதில் அனைத்துத் திட்ட அதிகாரிகளுக்கும் உதவி செய்தல்.

(4) பேரிடர் தடுப்புத் திட்ட வளர்ப்குதி ஆய்வுக் திட்டம் சிறப்பு பகுதி ஆய்வுத் திட்டம் போக்குவரத்துத்திட்டங்கள் போன்ற பணித் திட்டங்களைத் தயாரித்தல்.

(5) கட்டிடம் கட்டுவதற்கான விண்ணப்பங்கள் தொடர்பாக உள்ளூர் அதிகார மன்றங்களின் ஆணைக்குக்கெதிராக மேல் முறையீட்டு அதிகாரமன்றமாகச் செயல் படுதல்.

4. நிட்டங்களைத் தயாரித்தல் :

துறை பல்வேறு மாவட்டங்களுக்குரிய மாவட்ட அமைப்புத் திட்டங்களைத் தயாரிப்பதில் தற்போது ஈடுபட்டு வருகிறது. மக்கள் நெருக்கடிக்குத்தீர்வு உடனடியாக கவனம் செலுத்த வேண்டிய பகுதி நேர மக்கள் இயன்ற அளவு தூரத்திலும் ஒன்றிரண்டு நேரத்திலும், குறைந்த செலவிலும் தங்களுக்கு வேண்டியவற்றைப்பெற வகை செய்தல் ஆகியவற்றிற்கு இத்திட்டம் வழிவகை செய்யும்.

நகர்ப்புற அமைப்புத் திட்டம் :

இந்த அமைப்புத் திட்டம் அடுத்துவரும் 15 முதல் 20 ஆண்டுகளில் நகர்பகுதி மேம்பாட்டில் முக்கியத்துவம் அளிக்கக்கூடிய பல்வேறு துறைத் திட்டங்கள் பற்றி விளக்கும் திட்டமாகும். நகர்ப்புறம் எங்கும் அமைய வேண்டும் என்பதைவிட அது அமைய வேண்டியதன் இன்றியமையைக் கண்டறியமுயைக் கண்டறிவதே நகர்ப்புற அமைப்புத் திட்டத்தின் நோக்கமாகும். அப்பகுதியில் வாழ்கின்ற மக்களின் சமூகப் பொருளாதார மேம்பாடுகளுக்கு வழிவகுத்து ஒருங்கிணைப்பதே இந்த அமைப்புத் திட்டங்களின் நோக்கமாகும். இதுவரையில் இத்துறை, நர்ப்புற மேம்பாட்டுக்காகப் பெருந்திட்டமொன்றைத் தயாரித்து உள்ளன. இன்னென்ன பகுதிகளில் இந்தத்திட்டங்களை தொடங்கவேண்டுமென்ற வரையறுக்கப்பட்ட நிலப்பண்பாட்டுத் திட்டங்களை காலக்கெடு முறையில் படிப்படியாக நிறைவேற்றுவது குறித்து எடுத்தியம்பி வந்துள்ளது. இத்திட்டங்கள் தொடர்ந்து செயல் திட்டங்களை மேற்கொள்ள வில்லையென இத் திட்டங்களினால் பயனேதும் ஏற்படாது என்பதும் இந்த இடைவெளியை இட்டு நிரப்பவே அமைப்புத்திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

உள்ளூர் திட்டப் பகுதிகளுக்குரிய பெருந்திட்டம் :

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், தொழிற்சாலை பகுதிகளிலிருந்து எரிச்சலூட்டக் கூடிய கேடுமிக்க பகுதிகளிலிருந்து குடியிருப்புப் பகுதிகளைப் (அமைதியான பகுதிகளை) பாதுகாப்பதேயாகும். இத்துறை சென்னை பெருநகர்ப்பகுதிக்கு வெளியே அமைந்துள்ள 113 நகர்ப்பகுதிகளையும் 13 புதிய நகர்ப்பகுதிகளையும் தேர்ந்தெடுத்து உள்ளது. இப்பகுதிகளுக்காக, விரிவானைப் பெருந்திட்டங்களையும் புதிய நகர்த் திட்டங்களையும் தயாரிக்க வேண்டியுள்ளது.

விரிவான மேம்பாட்டுத் திட்டங்கள் :

எளிதில் பெரு வளர்ச்சி அடையக்கூடிய நகர்ப்பகுதிகளுக்கு விரிவான மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. சுமார் 130 திட்டங்கள் ஏற்கனவே தயாரிக்கப் பட்டுள்ளன. 850 திட்டங்கள் அறிக்கையிடப்பட்டு பல்வேறு நிலைகளில் தயாரிக்கப் பட்டு வருகின்றன.

இத்துறையின் ஏயை திட்ட நடவடிக்கைகள் :

இத்துறையின் ஏனைய திட்ட நடவடிக்கைகள் வருமாறு :—

1. பேரிடர் தீர்வு திட்டப்பணிகள்.

2. நகர்களை விமானத்திலிருந்து புகைப்பட வரைப்படம் தயாரித்தல்.

3. கிராம, நகர்ப்பகுதிகளில் தொழிற்சாலைகளை அமைப்பதற்குரிய பொருத்தமான நிலங்களை வகைப்படுத்தல்.

4. நகர்பகுதி தகவல் தொடர்பு அமைப்பு ஏற்படுத்தல்.

5. முக்கிய மாநகர்களுக்கு போக்குவரவு செயல் திட்டங்களைத் தயாரித்தல்.

6. மத்திய அரசு பொறுப்பேற்கும் சிறிய நடுத்தர நகர்பகுதிகளின் மேம்பாட்டு ஒருங்கிணைப்புத்திட்டம் ஆயை திட்டங்களைக் கண்காணித்தல்.

7. உலக வங்கியின் உதவித்தொகையில் சொம் தமிழ்நாடு நகர்பகுதி மேம்பாட்டுத்திட்டங்களின் மேற் மாநகர அளவிலான கண்காணிப்புக் குழுக்களின் மனித ஆற்றல் செயல்பாட்டிற்கு வகை செய்தல்.

8. பேருந்து நிலையங்கள் அங்காடிகள் அலுவலகக் கட்டிடங்கள் போன்ற பொதுமக்கள் பயனுக்காக கட்டுமானத்திட்டங்கள் குறித்து உள்ளூர் அதிகார மன்றங்களுக்கு ஆலோசனை வழங்குதல்.

9. குடியிருப்பு அண்டைப்பகுதி வீட்டுவசதி குடிசை மாற்று மேம்பாடுக்குறித்தத் திட்டங்கள், ஏனைய திட்டங்கள் ஆயவற்றைத் தயாரித்து நிறைவேற்றுவதில், தமிழ்நாடு விட்டுவசதி வாரியம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஆயவற்றிற்கு ஆலோசனை வழங்குதல்.

10. தமிழ்நாடு தொழிற்சாலை சட்டங்கள் விதிகள் ஆயவற்றின்கீழ் தொழிற்சாலை கட்டிடத் திட்டங்கள் வரைப்படங்கள் ஆயவற்றைச் சரிபார்த்து, ஏற்பளித்தல்.

விரிவான மேம்பாட்டுத் திட்டங்கள் :

	இலக்கு.	சாதனை.
(அ) இசைவளிக்கப்பட்டது	20	20
(ஆ) ஏற்பளிக்கப்பட்டது	25	25

நிதி ஒதுக்கீடு செலவு :

நகர்ப்பகுதி திட்டங்கள்.

	1989–90 ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்ட மதிப்பீடு.	1989–90 ஆண்டு இறுதி திருத்த நிதி யொதுக்கம்.	உண்மையில் ஏற்பட்ட செலவு.
(1)	(2)	(3)	(4)
திட்டம் சாராதவை	1,60,15.000	2,04,12.000	2,04,56.000
திட்டம் சார்ந்தவை	71,04,000	89,77.000	88,38.000
மாநில அரசு பொறுப்பேற்ற நகர்ப்பகுதி மேம்பாட்டு ஒருங்கிணைந்த இணைப்புத் திட்டம்	1,25,00.000		1,25,00.000
மத்திய அரசு பொறுப்பேற்ற சிறிய நடுத்தர நகர்ப்பகுதி மேம்பாட்டு ஒருங்கிணைப்புத் திட்டம்	2,00,00.000		2,00,00.000
	2,00,00.000		2,00,00.000

முடிவுரை :

திட்ட, நிதி இலக்குகளை எய்த துறை கடுமையாக உழைத்து, பெருமளவுச் சாதனைகள் எய்தியுள்ளது.

அத்தியாயம் 15—தொழிற்துறை.

தொழில் மற்றும் வணிகம்.

முன்னுரை :

மாநிலத்தின் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதில், குடிசைத் தொழில்கள், சின்னஞ்சிறிய கிராமத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றது. இத்தகைய தொழில்களின் வளர்ச்சிப் பணிகளைக் கவனிப்பதோடு, நடுத்தர மற்றும் பெரிய தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும் பொறுப்பினையும் தொழில் வணிக இயக்கம் கவனித்து வருகிறது. மாநில அரசின் கொள்கைத் திட்டங்களைச் செயலாக்கி வரும் முக்கிய அமைப்புகளின் ஒன்றாகத் திகழும் கிராமங்களிலும், நகரப் பகுதிகளிலும் மிக முக்கிய மற்றும் முக்கிய தொழில் துறைகளிலும் வளர்ச்சி குன்றிய பகுதிகள் மற்றும் ஓரளவு வளர்ச்சி பெற்ற பகுதிகள் ஆகியவற்றிற்கிடையே தொழில்களின் முன்னேற்றத்தைச் சீராகவும், துரிதமாகவும் பரவலாகவும் வளர்வதற்குரிய பல்வேறு நடவடிக்கைகளை, தொழில் வணிக இயக்கம் தொடர்ந்து எடுத்து வருகிறது.

ஏற்கெனவே உள்ள தொழில் நிலையங்கள் மற்றும் புதிய தொழில்கள் ஆகியவற்றிற்கு உதவி மற்றும் ஆலோசனை கூறுவது; சிறு தொழில்களையும், தொழிற் கூட்டுறவுச் சங்கங்களையும் பதிவு செய்வது; துணைத் தொழில்களை மேம்படுத்துவது; மூலப் பொருள்களையும், இயந்திர சாதனங்களையும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து கொள்ள இன்றியமையாத் தேவைச் சான்றிதழ்களை வழங்குவது; சிறு தொழில் உற்பத்திப் பொருட்களுக்கு விற்பனை வசதி அளிப்பது அவைகளுக்கு பகுப்பாய்வு மற்றும் பரிசோதனை வசதி அளிப்பதும்; வீட்டு உபயோக மின் சாதனங்களுக்குரிய தரக் கட்டுப்பாடு ஆணைகளைச் செயல்படுத்துவது; சிறு தொழில்களின் தொழில் நுட்பமுறைகளை மேம்படுத்துவதன் மூலம் அவற்றை நவீனமயமாக்குவது; படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு மைய அரசு நிதி உதவித் திட்டங்களின்கீழ் சுய வேலை வாய்ப்பு வசதியினை அளிப்பது; மாநிலத்திலுள்ள சிறு தொழில் நிலையங்களின் முதலீடு மற்றும் உற்பத்தி மூன்றாம் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு புள்ளி விவரங்களைப் பராமரிப்பது; கண்ணாடித் தொழில் நுட்பம், கருவிகள் மற்றும் அச்சு வடிவமைப்பு, மண்பாண்டம், மின் மற்றும் மின்னணு, பொது தொழில் நுட்பம் முதலியவற்றில் பயிற்சி அளிப்பது; பின் தங்கிய பகுதிகளில் செப்பனிட்ட மனைகள் மற்றும் அத்தியாவசிய வசதிகளுடன் கூடிய தொழிற் கூடங்களை கட்டி, தனித் தொழிற்பேட்டைகளை நிறுவுவது; 1952 ஆம் ஆண்டு தொழில் உரிமச் சட்டத்தின்கீழ் (வளர்ச்சி மற்றும் முறைப்படுத்துதல்) உரிமங்கள் வழங்குவதற்குரிய விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து, உரிமங்கள் வழங்குவதற்கு வழி வகுப்பது; தச்சு வேலை மற்றும் கருமான் பட்டறை தொழில்களில் கிராம கைவினைஞர்களுக்கு பயிற்சி அளிப்பது தயிறு வளர்ச்சி திட்டங்களைச் செயல்படுத்தி சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில் பிரிவின் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை மேம்படுத்துவது; ஆகிய பணிகளை இவ்வியக்கம் செய்து வருகிறது. நலிவுற்ற சிறு தொழில் நிலையங்களுக்கு மறு வாழ்வளிக்க துவக்க கால நிதி உதவி அளிப்பது; தகுதியுள்ள சிறு தொழிலில் நிலையங்களுக்கு வட்டியில்லா லிற்பனை வரி கடன்/தள்ளி வைப்புக் கடன் திட்டம்/கடன் தள்ளுபடி திட்டம் ஆகியவற்றை செயல்படுத்துவது; தொழில் பின் தங்கிய பகுதிகளில் ஏற்படுத்தப்படும் குறிப்பிட்ட சிறு தொழில்களுக்கு 15 சதவிகித மாநில மூலதன உதவித் தொகை மற்றும் 20 சதவிகித சிறப்பு மூலதன உதவித் தொகையினை வழங்குவது; சிறு தொழில் நிலையங்களுக்கு குறைந்தழுத்த மின் கட்டணச் சலுகை அளிப்பது; புதிய மின் பெருக்கி (Generator) வாங்குவதற்கு உதவித் தொகை வழங்குவது மற்றும் இந்திய தர நிர்ணய அமைப்பிலிருந்து தரக்கட்டுப்பாடு சான்றிதழ் பெறுவதற்கு பண உதவி அளிப்பது போன்ற பணிகளையும் இவ்வியக்கம் தொடர்ந்து செயலாற்றி வருகிறது,

மாவட்டத் தொழில் மையங்கள் :

தொழில் வளர்ச்சியில். குறிப்பாக சிறு தொழில்களின் வளர்ச்சியின் மாவட்டத் தொழில் மையங்கள் முக்கிய அங்கமாக விளங்குகின்றன, இம்மையங்கள் தொழில் முதலீட்டு ஆலோசனை மற்றும் மின்சாரம் உட்பட்ட சட்டரீதியிலான இதர பல அனுமதிகளை ஒரு முனைத் தீர்வுக் குழுவின் மூலம் சிறு தொழில்களுக்கு பெற்றுத் தருகின்றன. சிறு தொழில்களின் பதிவு என்பது தொழில் முனைவர்கள் கிடைப்பதற்குரிய மூலப் பொருட்களை பெறுவதற்கும் மற்றும் வங்கிகள் மற்றும் இதர நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெறுவதற்கும் வழி வகுக்கிறது, மாநிலத்தில் ஏற்கெனவே உள்ள மற்றும் புதிய தொழில்களுக்கு இம்மையங்கள் உதவியளிக்கின்றன, 1989—90 ஆம் ஆண்டில் குறிப்பிட்ட இலக்கு 12,000 மற்றும் 40,000 என்றிருக்க முறையே 12,196 நிரந்தர சிறு தொழில் சான்றிதழ்களும், மற்றும் 38,531 தற்காலிக சிறு தொழில் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. 1989—90 ஆம் ஆண்டில் 7000 சுயவினைத் தொழில்கள் பதிவு செய்யப்பட்டன, இந்த ஆய்வு ஆண்டில் 6,856 குடிசைத் தொழில்கள் கண்டறியப்பட்டு பதிவு செய்யப்பட்டன.

மைய மற்றும் மாநில அரசுகள் வழங்கும் உதவித் தொகை மற்றும் கடன்கள் சிறு தொழில் முனைவர்கள் பெறுவதில் இம் மாவட்டத் தொழில் மையங்கள் உதவியளிக்கின்றன, 1989—90 ஆம் ஆண்டில் இந்த இயக்கம் 118 தொழில்களுக்கு ரூ, 59,99

இவ்ட்சம் மாநில மூலதனத் தொழில்கள் மற்றும் சிறப்பு மூலதனத் தொழில்களுக்கு ஒப்புதலளித்துள்ளது. இதே ஆண்டில் 771 தீவிரத் தொழில் வாய்ப்புத் திட்டம் சிறு தொழில்களுக்கு ரூ. 25 இலட்சம் மின் கட்டண உதவித் தொகை ஒப்புதலளித்துள்ளது, 9 தொழில்களுக்கு மின் உற்பத்தி சாதனம் வாங்குவதற்கு (ஜெனரேட்டர்) ரூ. 5 இலட்சம் மின்கட்டண உதவித் தொகையாக ஒப்புதலளித்துள்ளது. நலிவுற்ற சிறு தொழில்களுக்கு துவக்க கால உதவித் தொகை வழங்கப்பட்டது, 1989–90 ஆம் ஆண்டில் 50 சிறு தொழில்களுக்கு ரூ. 15,00 இலட்சம் ஒப்புதலளிக்கப்பட்டது, இத்தொகையில் ரூ. 14,20 இலட்சம் வழங்கப்பட்டது, விற்பனை வரித்தள்ளி லெவிப்புத் திட்டத்தின்கீழ். 31–3–1990 இல் ரூ. 233.54 இலட்சம் அளவுக்கு 82 இன்றியமையாச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

படித்து வேலையற்ற இளைஞர்களுக்குரிய சுய வேலை வாய்ப்புத் திட்டம் :

1989 ஆம் ஆண்டிலும். படித்து வேலையற்ற இளைஞர்களுக்குரிய சுய வேலை வாய்ப்புத் திட்டம் தொடர்ந்து முனைப்பாக செயல்படுத்தப்பட்டது, 1989—90 ஆம் ஆண்டிற்கு 9,050 பேருக்கு உதவியளிக்க வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டது பல்வேறு மாவட்டத் தொழில் மையங்களில் நடவடிக்கைகள் முறையாக கட்டங்களை நடத்தி. வங்கிகளுக்கு விண்ணப்பங்களை பரிந்துரைத்து வருகின்றன, 1989–90 ஆம் ஆண்டில் 16.556 இனங்கள் வங்கிகளுக்கு பரிந்துரைக்கப்பட்டன, இவற்றில் 8692 பேருக்கு ரூ, 1,518,78 இலட்சம் அளவுக்கு கடன் ஒப்புதலிக்கப்பட்டுள்ளது, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 215 தொழில் முனைவர்களுக்கு ரூ, 40,05 இலட்சம் அளவுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டது,

சிறு தொழில் துறையில் வெற்றியடைந்துள்ள தொழில் முனைவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு மாநில மற்றும் மாவட்ட அளவில் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன,

மின் மற்றும் மின்னணுத் தொழில் :

தொழில் வளர்ச்சியில் மின்னணுத் தொழில் துறை முன்னேற்றத்தை அடைந்துள்ளது, இம் மாநிலத்தில் மின் மற்றும் மின்னணுத் தொழில்களின் வளர்ச்சி மேலும் வலுவடைய இந்த இயக்கம் தொடர்ந்து செயலாற்றி வருகிறது, மின் மற்றும் மின்னணு பிரிவு பின் வருகின்ற முக்கிய பணிகளை நிறைவேற்றி வருகின்றது,

1, தனித் தொழிற்பேட்டை. துணைத் தொழிற்பேட்டை மற்றும் செப்பனிட்ட மனைகளை அமைப்பதன் மூலம் அனைத்து அடிப்படை வசதிகளை அளிப்பது:

2, பரிசோதனை மற்றும் தரக் கட்டுப்பாடு வசதி அளிப்பது. தொழில் நுட்ப ஆலோசனை மற்றும் அடிப்படைத் தகவல்கள் வழங்குவது,

3, இந்திய அரசின் மின் மற்றும் மின்னணு குழுவோடு தொடர்பு கொண்டு மின் மற்றும் மின்னணு பொருளுக்குரிய உற்பத்தித் திட்டங்களுக்கு ஒப்புதல் பெறுவதில் உதவியளிப்பது;

4, மின் மற்றும் மின்னணு தொழில்களின் உற்பத்திபொருள்களுக்கு தர நிர்ணயங்களை வகுப்பதில் இந்திய தர நிர்ணய நிறுவனத்திற்கு உதவியளிப்பது,

5, வீட்டு உபயோக மின்சார சாதனங்களுக்குரிய தரக்கட்டுப்பாட்டு ஆணை நிறைவேற்றுவது,

தனி மற்றும் தனித் தொழிற்பேட்டை :

மின்சாரம், மின்னணு மற்றும் நுண்கருவி தொழில்களுக்கென்றே சென்னை, திருச்சி, கரூர், கோயம்புத்தூர், ஒசூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தனித் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இத்தொழிற்பேட்டைகள், சுமார் 5,000 பேருக்கு வேலையளிக்கின்றன. இத் தொழிற்பேட்டையைத் தவிர, பெருங்குடியில் 106 ஏக்கர் நிலப்பரப்பில் செப்பனிட்ட மனைத் தொழிற்பேட்டை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பரிசோதனை மற்றும் தரக் கட்டுப்பாட்டு வசதிகள்

மின் மற்றும் மின்னணு தொழில்களின் தரக் கட்டுப்பாடு மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. மற்றும் கார்களுரில் உள்ள மைய மின் ஆய்வுக்கூடம் மற்றும் மதுரையில் உள்ள மின்னணுப் பொருள் வளர்ச்சி மற்றும் பயிற்சி மையம் 1989–90 ஆம் ஆண்டில் 3,456 மாதிரிப் பொருட்களை பரிசோதனை செய்து ரூ. 5,43,140 பரிசோதனை கட்டணமாக வசூலித்துள்ளது திருவான்மியூரில் உள்ள மின்னணு தகவல் களஞ்சியம். மின் மற்றும் மின்னணு தொழில்களின் வளர்ச்சிக்கேற்ப

ஏற்கனவே உள்ள தொழில்களுக்கு புதிய தொழில் முனைவர்களுக்கும் ஆக்க பூர்வமான தகவல் அனைத்தையும் அளித்து வருகிறது. இத்தகவல் களஞ்சியத்தில் மின்சாரம் மற்றும் அவை சார்ந்த தொழில்களைப் பற்றிய புத்தகங்களைக் கொண்ட ஒரு நல்ல நூலகமும் இயங்கி வருகிறது.

கோயமுத்தூரில் மின்னணு பொது வசதி பணி மையம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. மின்னணு பொருள் அபிவிருத்தி மற்றும் பயிற்சி மையங்கள், திருச்சி, மற்றும் திருநெல்வேலியில் செயல்பட்டு வருகின்றன. ஒருங்கிணைந்த மின்னணு பொது வசதி பணி மையத்தின் வசதிகள் மேலும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

மின் மருத்துவக் கருவிகள் செப்பனிடும் நிலையங்கள்

மின் மருத்துவக் கருவிகளை செப்பனிடுவதற்காக அமைக்கப்பட்ட நிலையங்கள் சென்னை, கோயமுத்தூர், மதுரை மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் செயல் பட்டு வருகின்றன. இந்நிலையங்கள் மாநிலத்தில் உள்ள பல்வேறு அரசு மருத்துவ மனைகளில் உள்ள மின்னணு மருத்துவ சாதனங்களை செப்பனிட்டுத் தரும் பணியில் ஈடுபட்டுள்ளன. 1989–90 ஆம் ஆண்டில் 5,000 சாதனங்கள் பழுது பார்க்கப்பட்டு பரிசோதனைக் கூட்டணாக ரூ. 13,34,620 வசூலிக்கப்பட்டுள்ளது.

மூலப்பொருள் உதவி :—

கிடைப்பதற்கரியதாய் உள்ளதும், உள்நாட்டிலும் மற்றும் இறக்குமதி செய்யப் படும் மூலப் பொருட்களை, பதிவு செய்த சிறு தொழில்கள் பெறுவதற்கு இந்த இயக்ககம் உதவியளிக்கிறது. மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு முகவர் கள் மூலம் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை இந்த இயக்ககம் எடுத்து வருகிறது.

இறக்குமதி உரிமங்கள் :—

1989–90 ஆம் ஆண்டில் ரூ. 935 இலட்சம் மதிப்புள்ள இறக்குமதி உரிமங்கள் வழங்க இந்த இயக்ககம் உதவியுள்ளது.

நிலக்கரி மற்றும் கல்கரி :—

நிலக்கரி மற்றும் கல்கரி ஒதுக்கீட்டினை பெறுவதில் இந்த இயக்ககம் முனைப்பாக நடவடிக்கை எடுத்து வருகிறது. 1989–90 ஆம் ஆண்டிற்கு மாத மொன்றுக்கு 410 சரக்குப் பெட்டிகள் என்ற அளவில் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. நிலக்கரி மற்றும் கல்கரி ஒதுக்கீட்டினை அதிகமாக பெறுவதற்கு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

இரும்பு மற்றும் எஃகு :—

மாநிலத்திலுள்ள சிறு தொழில் நிலையங்களுக்கு மாதமொன்றுக்கு குறைந்தது 7,000 மெட்ரிக்டன் கிடைக்கும் வகையில் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இரும்பு கலவாத உலோகப் பொருட்கள் ;—

துத்தநாகம், நிக்கல், செம்பு, தகரம், ஈயம், சந்தகம், போன்ற இரும்பு கலவா உலோகப் பொருட்கள் பெறும் பொருட்டு சிறு தொழில் நிலையங்களிடமிருந்து பெறப் படும் விண்ணப்பங்களை கனி மற்றும் உலோக வர்த்தக நிறுவனம் போன்ற முகவர் அமைப்புகளுக்கு இந்த இயக்ககம் பரிந்துரை செய்கிறது. 1989–90 ஆம் ஆண்டில் 496.885 மெட்ரிக் டன் மதிப்புள்ள பொருட்கள் சிறு தொழில் நிலையங்களுக்கு வழங்கப்பட்டன.

தொழில் உதவிப் பிரிவு :—

இந்த இயக்ககம் பெருரக தொழில்கள் மற்றும் நடுத்தர தொழில்களுக்கு தொழில் உரிமம் வழங்குவதற்காக. தொழில் முனைவர்களிடமிருந்து பெறப்படுகின்ற விண்ணப் பங்களை பரிசீலனை செய்து. தொழில் அபிவிருத்தி தலைமை இயக்குநரிடத்தில் பதிவு செய்வதற்காக. பரிந்துரைக்கிறது, பெரிய மற்றும் நடுத்தர தொழிலுக்குரிய ஒருமனைத் தீர்வு உயர் மட்டக் குழுவில். தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத் துடன் இந்த இயக்ககம் உதவி புரிந்து வருகிறது, இந்த உயர்மட்டக் குழுவிற்கு தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்கள் உறுப்பினர் செயலாளர் ஆவார். இந்த இயக்கம். தொழில் முனைவர்களுக்கும் புதிய பெருரர் மற்றும் நடுத்தர தொழில்களை ஏற்படுத்துவதில். பல்வேறு நிலையங் களில் உதவியளித்து வருகிறது.

இரசாயனப் பிரிவு :—

தொழில் வணிக இயக்ககத்தின் இரசாயனப் பிரிவு தமிழ்நாட்டில் இரசாயனத் தொழில்களின் வளர்ச்சி நடவடிக்கையை கவனித்து வருகிறது. இப்பிரிவு ஆற்றி வரும் செயல்களாவன :—

1. சோதனை வசதிகள் அளிப்பது,

2. முன்னோடித் திட்ட ஆய்வுக்குரிய வசதிகளை வழங்குவது,

இரசாயனம் மற்றும் அதன் சார்புத் தொழில்களைப் பொறுத்தவரை தொழில் துப்பு ஆலோசனை சாத்தியக்கூறு அறிக்கைகள் மற்றும் திட்டத் தொகுப்புகளை அளிப்பது.

4, கிடைப்பதற்கரியதாயுள்ள மூலப் பொருட்களை இரசாயனம் மற்றும் அதன் சார்புடைய சிறு தொழில் நிலையங்களுக்கு கிடைக்கச் செய்வதில் உதவியளிப்பது;

1989—90 ஆம் ஆண்டில். சென்னை கிண்டியிலுள்ள இரசாயன பகுப்பாய்வுக் கூடம். மதுரை மற்றும் கோயமுத்தூரிலுள்ள லெட்டார ஆராய்ச்சி கூடங்கள். சேலத்தி லுள்ள சல்வாசிட் மற்றும் மாவு பொருள் ஆராய்ச்சி நிலையம். தூத்துக்குடியிலுள்ள உப்பு மற்றும் கடல்படு இரசாயனப் பொருட்களில் மாதிரி ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றில் பரிசோதனை வசதிகளை பயன்படுத்திய தொழில் நிலையங்களின் எண்ணிக்கை 7,661 ஆகும், பரிசோதனைக்காக 15,413 மாதிரி பொருள்கள் பெறப் பட்டு பரிசோதனைக் கட்டணமாக ரூ. 2,17,057 வசூலிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாதில உப்பு வாரியம், உப்பு உற்பத்தியாவதற்குரிய பகுதிகளை முறையாக ஆய்வு செய்வதற்கும், ஏற்கனவே உள்ள உப்புத் தொழிற்சாலைகளின் உப்பு உற்பத்தியை அதிகமாக்குவதற்கும், புதிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

சிறு தொழில்கள் பதிவு ஆய்வு மற்றும் புள்ளி விவரப் பதிவு :

சிறு தொழில்கள். அவற்றிற்குத் தேவைப்படுகின்ற பல்வேறு வசதிகளையும் உதவி களையும் பெறுவதற்கு, சிறு தொழில்களை பதிவுசெய்து கொள்ள வேண்டும் என்பது அத்தியாவியமாகும், இந்த இயக்கம் மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகளின் பலனாக நிரந்தர சிறு தொழில்களின் எண்ணிக்கை 1,13,688 ஆகவும் தற்காலிக் சிறு தொழில்களின் எண்ணிக்கை 1,13,692 ஆகவும் உயர்ந்துள்ளது.

தொழில் கூட்டுறவுச்சங்கங்கள் :

தமிழ்நாட்டில் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றன. 1989—90 ஆம் ஆண்டில் இவற்றின் வளர்ச்சி போற்றத் தக்கதாக உள்ளது, 31—3—90 இறுதியில் 397 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன, இவற்றின் விற்பனை மற்றும் உற்பத்தி முறையே ரூ. 108,72 மற்றும் ரூ. 127,39 கோடி ஆகும், இவை மார்ச் 1989 இல் ரூ. 80,90 கோடியாகவும். ரூ. 103,59 கோடியாகவும் முறையே இருந்தன,

தேயிலை தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் :

நீலகிரி மாவட்டத்தில் சுமார் 30.000 ஏக்கர் நிலப்பரப்பளவினை கொண்ட சுமார் 20.000 தேயிலை பயிரிடுவோர் உள்ளனர், பொருளாதாரத்தில் நலிந்துள்ள பிரிவினரை மேம்படுத்தும் பொருட்டு 14 தேயிலை தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன, இன்றைய நிலையில். 22,327 ஏக்கர் நிலப்பரப்பினை கொண்ட 12,290 சிறு தேயிலை பயிரிடுவோர் இந்த தேயிலை தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளனர், இவற்றில் மாநில அரசின் பங்கான ரூ. 296,96 உட்பட் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 503,68 இலட்சமாகும்,

நீப்பெட்டி தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் :

கையினால் ஆன பாதுகாப்பான நீப்பெட்டிகளைத் தயாரிப்பதில் தமிழ்நாடு பெயர் பெற்று விளங்குகிறது. இத் நீப்பெட்டித் தொழில்கள் தமிழ்நாட்டில் கடந்த 50 ஆண்டுகளாக உள்ளன. இவை நலிந்துள்ள மக்களுக்கு பயனுள்ள வேலை அளிக் கின்றன. 31—3—90 இல் தமிழ்நாட்டில் 22 நீப்பெட்டி தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. இந்த நீப்பெட்டி தொழிற் கூட்டுறவு பணி சங்கங்கள் அதன் உறுப்பினர் தொழில் நிலையங்களுக்கு மூலப் பொருட்களை பெற்று வழங்குகின்றன. அவர்களின் உற்பத்தி செய்யப்பட்ட நீப்பெட்டி கட்டுகளை பயனவிக்கக் கூடிய வகையில் விற்பனை செய்வதறகு ஏற்பாடு செய்கின்றன,

சவ்வரிசி மற்றும் மாவுத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் :

சவ்வரிசித் தொழிலில் இரண்டு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்ட பிறகு, உற்பத்தியாளர்களின் பொருள் விற்பனைத் திறன் அதிகரித்துள்ளது. இந்த இரு பணிச் சங்கங்களிலும் 630 தொழில் நிலையங்கள் உறுப்பினர்களாக உள்ளன. இச் சங்கங்கள் அதன் உறுப்பினர்களுக்கு அவர்களின் உற்பத்தி பொருள்களுக்கு பயனுள்ள விலையைப் பெறுவதில் உதவி அளிக்கிறது.

தொழிற் கூட்டுறவு வங்கி :

தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி சென்னை மற்றும் கோவில்பட்டி, சாத்தூர், மதுரை, திருச்சி, குன்னூர், நாகர்கோவில், வேலூர், சேலம் ஆகிய எட்டு இடங்களில் அமைந்துள்ளன. இவைகள் தேயிலை, தீப்பெட்டி, கயிறு தோல், பொருள், உலோகம், கைவினைப் பொருள், போக்குவரத்து வாகனங்கள் போன்ற தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு நிதி உதவி தொடர்ந்து அளித்து வரும் இந்த வங்கியில் 471 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ. 317.15 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்துடன் அங்கத்தினராகயுள்ளன.

கூட்டுறவு தொழிற்பேட்டைகள்:

ஐந்து கூட்டுறவு தொழிற் பேட்டைகள் செயல்பட்டு வருகின்றன. நான்கு கூட்டுறவு தொழிற்பேட்டைகள் புதியதாக பதிவு செய்யப்பட்டன. ஐந்து கூட்டுறவு தொழிற்பேட்டைகளில் 137 தொழிற்கூடங்கள் ஏற்கனவே ஒதுக்கப்பட்டன. மேலும் எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் நான்கு கூட்டுறவு தொழிற் பேட்டை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் ஏற்படுத்தப்படும் தொழிற் கூட்டுறவு தொழிற் பேட்டைகளுக்கு அரசின் பங்கு மூலதனம் ரூ. 25 இலட்சமாகும்.

தொழில் நுட்பத் தகவலகங்கள் :

தொழிலதிபர்கள், தொழில் முனைவர்கள் மற்றும் ஏனையவர்களுக்கும், தொழில் சம்பந்தப்பட்ட தகவல்களை அளித்து வருவதில் கிண்டியிலுள்ள தொழில் தகவலகம் முக்கிய பங்கினை வகிக்கின்றது. அறிவியல், பொறியியல், தொழில் நுட்பச் சஞ்சிகைகள், மாநில மைய அரசுகளில் தொழில் கொள்கைகளை விவரிக்கும் சஞ்சிகைகளை பல்வேறு சிறு தொழில் நிலையங்களுக்குரிய திட்டங்கள் மற்றும் தொகுப்புகள், இந்திய தர நிர்ணய குறியீடுகள், ஆண்டு புத்தகங்கள், டைரக்டரி மற்றும் பல்வகை தகவல்கள், குறிப்புகள் ஆகியவை தொடர்ந்து பெறப்பட்டு தொழில் நுட்ப நூலகங்களுக்கு வரும் வாசகர்களுக்கு பயன்படும் வகையில் வைக்கப்பட்டுள்ளன. கிண்டியிலுள்ள தொழில் நுட்பத் தகவல் மையத்தில் வரை 6,444 தொழில் நுட்ப நூல்கள் இருந்தன. 76 புதிய தொழிற் நுட்ப நூல்கள் வாங்கப்பட்டன. 20,423 வாசகர்கள் இங்குள்ள தகவல் வசதிகளைப் பயன்படுத்தியுள்ளனர். 26,069 நூல்கள் வாசகர்களால் பயன்படுத்தப்பட்டு, 22,000 கும் அதிகமான கட்டுரைகள் மற்றும் சஞ்சிகை குறிப்புகள் குறிப்பிட்டு அட்டவணைப்படுத்தப்பட்டன. நகல் எடுக்கும் வசதியும் இங்கு அமைந்துள்ளது. இது போன்ற ஏழு தொழில் நுட்பத் தகவல் பிரிவு நூலகங்கள் அம்பத்தூர், மதுரை, பேட்டை, காட்பாடி (வேலூர்), திருச்சிராப்பள்ளி, கோயமுத்தூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. இவற்றின் பணிகள் கிண்டி தொழில் நுட்பத் தகவல் மையத்தினால் கண்காணிக்கப்படுகிறது. இப்பிரிவுகளும் நூலகங்களும் தொழிற்பேட்டைகளிலுள்ள மற்றும் அதனைச் சுற்றியுள்ள தொழில் முனைவர் சமுதாயத்திற்கு தகவல் அளித்து வழிகாட்டி வருகின்றன. இந்த நூலகம் வாசகர்களின் குறிப்பிற்கென சுமார் 5,708 நூல்களும், இதர ஆவணங்களும் உள்ளன.

1989-90ஆம் ஆண்டில் இந்த ஏழு நூல் நிலையங்களில் 30,500 வாசகர்கள், 43,006 நூல்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

தொழில் நுட்பப்பயிற்சி மையம், கிண்டி :

கிண்டியிலுள்ள தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், பொறியியல் பட்டதாரிகளுக்கும், பொறியியல் தகுதிப் பட்டயம் பெற்றவர்களுக்கும் கருவிகள் மற்றும் வடிவமைப்பில் (உயர்நிலைப் பயிற்சி) சிறப்பு பயிற்சி அளித்து வருகிறது. 1989–90 ஆம் ஆண்டில் தகுதிப் பட்டயப் படிப்பில் (உயர்நிலைப் பயிற்சி) 10 மாணவர்களும் கருவிகள் மற்றும் வடிவமைப்புப் படிப்பில் 30 மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப் பட்டனர்.

கருவிகள் அச்சு வடிவமைப்புப் பயிற்சி நிலையம், திண்டுக்கல் :

கருவிகள் மற்றும் வடிவமைப்பு படிப்பில் மூன்று ஆண்டு தகுதி பட்டய பயிற்சியினை அளித்து வருகிறது. இத் தகுதி பட்டயப் படிப்பிற்கென ஒவ்வொரு ஆண்டும் 30 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். 1989-90 ஆம் ஆண்டில் இந்நிலையத்தில் பௌதிகம் மற்றும் இரசாயன பரிசோதனைக் கூடம் ஒன்று நிறுவப்பட்டது. கருவிகள் மற்றும் வடிவமைப்பு படிப்பில் இதுவரை 240 மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

தச்சுக் கொல்லுப்பட்டறை, அரக்கோணம் :

கிராமத்திலுள்ள தச்சு வேலை மற்றும் கொல்லுப் பட்டறை வேலையில் உள்ளவர்களுக்கு மேம்படுத்தப்பட்ட கருவிகள் மற்றும் தளவாடங்களின் மூலமாக நவீன வழிகளில் கதவுகள், சன்னல்கள், அறைகலச் சாமான்கள் மற்றும் விவசாய கருவிகள் போன்ற எளிய பொருட்களை தயாரிப்பதற்கு பயிற்சி அளிப்பதே இந்த நிலையத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

கிராமப் பணி ஆதார நிலையங்கள் :

அம்பாசமுத்திரத்தில் ஒன்றும், தென்காசியில் ஒன்றும் அம்பாசமுத்திரத்தில் லமையங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு பொருத்துதல், கடைசல் மற்றும் பற்றவைத்தல் ஆகிய தொழில் நுட்பங்களில், உதவித் தொகை அடிப்படையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

கிராமப்புற கைவினைஞர் திட்டத்தின் கீழும் இந்த மையங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மையத்திலும், ரூ. 25,000 மதிப்புள்ள தேவையான கருவிகள் வாங்கப்பட்டு பயிற்சியாளர்களுக்கு கிடைக்க வசதி செய்யப்பட்டுள்ளது. அம்பாசமுத்திரத்தில் பயிற்சிக்கென 11 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். தென்காசியில் 12 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு கிராமப் பணி ஆதார மையங்களில் இதுவரை 526 மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

மண்பாண்ட தொழில் நுட்பப்பயிற்சி நிலையம், விருத்தாசலம்:

மட்பாண்ட தொழிலில் பயிற்சி அளிப்பதற்காக விருத்தாசலத்தில் மட்பாண்டத் தொழில் நுட்பப் பயிற்சி நிலையம் அமைந்துள்ளது. மட்பாண்டத் தொழில் நுட்ப பகுதிப் பட்டயப் படிப்பில் ஒவ்வொரு ஆண்டும் 25 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இந்த நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளதும் நன்கு அமைந்துள்ளதுமான இரண்டு ஆய்வுக் கூடங்களில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பணிகளும், மட்பாண்ட மூலப் பொருள்கள் மற்றும் உற்பத்தி பொருள்களைச் சோதனை செய்யும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசு விஞ்ஞானக் கண்ணாடிப்பயிற்சி நிலையம், ஈரோடு :

இந்நிலையம், விஞ்ஞானக் கண்ணாடிக் கருவிகளைத் தயாரிப்பதில் பயிற்சி அளித்து வருகிறது. உதவித் தொகையின் அடிப்படையில் ஒவ்வொரு தொகுதியிலும் 25 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

கோயம்புத்தூரில் அமைக்கப்பட்டுள்ள நிலையமும் கோயமுத்தூர் மற்றும், அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலுள்ள கல்வித் துறைக்கும் இதர துறைகளுக்கும் விஞ்ஞானக் கண்ணாடி கருவிகளை உற்பத்தி செய்து வழங்கி வருகிறது.

தொழில் தொடர்பு பிரிவு :

அரசினது பொருள் கொள்முதல் திட்டத்தின்கீழ், அதிக அளவில் சிறு தொழில்கள் பங்கு பெறும் பொருட்டு, பொருள் வழங்கல் விற்பனை தலைமை இயக்ககத் துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்வதற்கென, இப்பிரிவு அமைக்கப்பட்டது. ஏற்றுமதி வளர்ச்சியில் இப்பிரிவு தேவையான உதவியளித்து வருகிறது.

இப்பிரிவு, துணைத் தொழில்களின் வளர்ச்சிக்கு துணை செய்வதுடன், இந்தியத் தர நிர்ணய நிறுவனத்தின் காலமுறையிலான தர நிர்ணயங்களை பரிசீலித்து தனது கருத்துக்களை தெரிவிக்கின்றது.

நவீன மயமாக்கும் பிரிவு :

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியினால், அங்கீகரிக்கப்பட்ட இப்பிரிவு, தகுதியுள்ள சிறு தொழில் நிலையங்களைக் கண்டறிந்து அவைகளின் தொழில் நுட்ப முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்கு உதவி புரிகிறது. 1989–80ஆம் ஆண்டில், காயிதேமில்லத், தென்ஆற்காடு, பெரியார் மற்றும் நெல்லை கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் தொழில் முனைவோர் வளர்ச்சி திட்டத்தினை நடத்துவதற்கென ரூ. 2 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பொருட்காட்சி பிரிவு :

தொழில் வணிகத்துறை ஆற்றி வரும் செயல்களையும் சாதனங்களையும் அறிவிக்கும் வகையில், குடியரசு விழா கொண்டாட்டத்தில் நடைபெற்ற ஊர்வலத்தில் இத்துறையின் அலங்கார வண்டி ஒன்று பங்கு கொண்டது.

1989ஆம் ஆண்டு சேலம், திருச்சி, மதுரை, கோயமுத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, உகமண்டலம் ஆகிய இடங்களில் நடைபெற்ற அரசு பொருட்காட்சியிலும் 1990ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற அனைத்திந்திய கற்றுலாப் பொருட்காட்சியிலும், இந்த இயக்ககம் கலந்து கொண்டது, மேலும் இந்த இயக்ககம் புதுடெல்லியில் நடைபெற்ற அனைத்துலக வர்த்தகக் கண்காட்சியிலும் கலந்து கொண்டது.

மாநில புவியியல் மற்றும் சுரங்கம்

முன்னுரை :

புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் குறிக்கோள்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(1) மாநிலத்தில் கனிமம் சார்ந்த தொழில்கள் அமைவதற்கென, வழக்கமான கனிம ஆய்வு முறைகளுடன் கூட்டு ஆய்வு முறைகளையும் பயன்படுத்தி புதிய கனிமப் படிவங்களை கண்டறிவதும் முன்னர் கண்டறியப்பட்ட படிவங்களை மறு மதிப்பீடு செய்வது, (2) பெரிய மற்றும் சிறிய வகைக் கனிமங்களை அறிவியல் பூர்வமான முறைகளில் வெட்டியெடுத்தலை உறுதிசெய்தல். அவைகளை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் எதிர்காலத் தொழிற்சோதனைக்கு பயன்படுத்துதல் போன்றவற்றுடன், (3) 1959ம் ஆண்டு சிறுகனிம சலுகை விதிகள் 1957-ம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (முறைப்படுத்துதல் மற்றும் வளர்ச்சி) சட்டம். 1960 ஆம் ஆண்டு கனிமச் சலுகை விதிகளை போன்றவற்றின் மூலம் சட்டத்திற்கு உட்பட்டு சுரங்கப்பணி மேற்கொண்டு கனிம வருவாயினைப் பெருக்குதல் முதலியனவாகும்.

2. செயற்பாடுகள் :

புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் பணிகள் இருவகைப்படும். (1) கனிம ஆய்வுகள் மற்றும் (2) கனிம நிர்வாகம் என்ற பணிகளை மாறிவத்தில் இருபிரிவுகளாக இத்துறை செயல்படுகிறது, இத்துறை ஆண்டிற்கு சராசரியாக 17 முதல் 20 கனிம ஆய்வுப் பணிகளை மேற்கொள்கிறது. அவற்றின் 3 அல்லது 4 தூரப்பணப்பணிகள் அடங்கும், இவைகள் பொதுவாக நிட்டவகை மற்றும் நிட்டம் சாராதவகை பணிகளுக்கு கீழ் அமைகின்றன. தமிழ்நாட்டின் தென்பகுதிகளில் புதிய கனிமப்படிவங்களைக் கண்டறிவதற்கென நிட்டவகைப் பணிகளின்கீழ் கூட்டு ஆய்வு முறைகளான, புவி இரசாயணம், புவி பௌதீகம், வானஊர்தி புகைப்பட ஆய்வு மற்றும் தொகை உணர்வு போன்ற ஆய்வு முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்துடன் முன்னர் பொருளாதார ரீதியில் வெட்டியெடுத்தல் இயலுதல் அமையுமா எனக் கருதிவந்த கனிமப்படிவங்களை மறு மதிப்பீடுச் செய்து, அவைகளை வெட்டியெடுக்கும் சாத்தியக்கூறுகள் ஆராயப்படுகின்றன, மலைப்பகுதி வளர்ச்சித்திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் புவி நுட்பவியல் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. இப் பணியில், நீலகிரி மாவட்டத்தில், நிலச்சரிவுகள் ஏற்ப்டுவதற்கான கர்ரணங்களையும் அவை நிகழக்கூடிய வாய்ப்புகள் உள்ள சரிவுகளையும் கண்டறிந்து நிலச்சரிவு நிகழா வண்ணம் தவிர்க்கக்கூடிய முன்தக்ளையும் அவ்வாறு நிகழ்ந்தால் மிகக்குறைந்த அளவு சேதங்களே அமையுமாறு வழிமுறைகளையும் விள்க்கி வருகின்றது. இப்புவிநுட்பவியல் ஆய்வுகள் மூலம் மண்வளப்பாதுக்காப்பு, பொதுப்பணித்துறை, பெருவழித்துறை, ஊரக வளர்ச்சித்துறை மற்றும் பிற தொடர்புள்ள துறைகள் பயன்பெறுகின்றன,

பெரிய் மற்றும் சிறுவகைக் கனிமங்களுக்கு குத்தகை அளிப்பதற்கென வழிமுறைகளை செயல்படுத்துதல் அலவல்களில் மாநில அரசிற்கு தொழில்நுட்ப பரிந்துரை அளித்தல் மற்றும் கனிமக் கொள்கைகளை தீவிரமாக செயல்படுத்துதல் போன்ற பணிகள் கனிம நிர்வாகப் பிரிவின்கீழ் செய்லபடுத்தப்படுகின்றன. இத்துறையின் அலுவலகங்கள் மாநிலத்தில் 17 மாவட்டங்களில் அமைந்துள்ளன. காலமுறை இடைவெளிகளில் சுரங்கங்களைப் பார்வ்யிடல், தொழிற்நுட்ப அறிக்கைகள் அளித்தல், சுரங்கங்களில் கனிம இருப்பினை மதிப்பிடுதல் மற்றும் பெருவகை கனிம உரிமவரி மற்றும் சிறுவகைக்கனிம உரிமவரி, குத்தகைத் தொக்கை மற்றும் பிறவரிகள் சேகரித்த லுக்கான ஆண்டுத்தேவை கணக்கிடுதல் மற்றும் வசூலித்தல் போன்ற பணிகளில் இத்துறை மாவட்டங்களான அலுவலகங்கள் ஈடுபட்டுள்ளன. மேலும், அரசுக்குமுக தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், தமிழ்நாடு மாகனசைட் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு கனிம நிறுவனம் போன்ற கனிமம் சார்ந்த தொழில் நிறுவனங்களுக்கு அவைகளின் விரிவாக்கத் தேவைக்கென அந்நிறுவனங்களின் சுரங்கக்குத்தகைப் பகுதிகளில், கனிமப் படிவங்களை மறுமதிப்பீடு செய்வதற்கு தொழிற்நுட்ப அறிவுரை வழங்குகிறது. மேலும் இத்துறை மாநிலத்தில் கனிம வருவாய் உயர்வீற்கு பெரும்பங்காற்றி வருகிறது. 1983 ஆம் ஆண்டின் இத்துறை கனிம நிர்வாகப் பணியினை மேற்கொண்டதிலிருந்து மாநிலத்தில் கனிம வருவாய் முறையாக உயர்ந்து வந்துள்ளது. இதன் மூலக் காரணம் தமிழ்நாடு சிறுகனிம விதிகள் மற்றும் சுரங்க சட்டங்கள் மற்றும் விதிகளை சீரியமுறையில் பின்பற்றுவதேயாகும். மேலும் கனிம வருவாயை உயர்த்துவதற்கான வழிமுறைகள் பற்றியும் அரசிற்கு அறிவுறுத்தப்ப்ட்டுள்ளன.

செயல் திட்ட இலக்கு மற்றும் நிதி அளிப்பு இலக்குகளில் பல :

தலைப்புகள் திட்டங்களின் பணி இலக்கு முன்னேற்றம் மற்றும் சாதனைகள் :

(1) பணி இலக்கு :

1989–90 ஆம் ஆண்டிற்கு புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநரகத்தின் ஆண்டு இலக்கு நிர்ணயம் பற்றிய தகவல்கள் :

கனிம ஆய்வுப்பணிகள் :

(1) தொடர்ந்து பணியாற்றப்படும் கனிம ஆய்வுகள் 12

(2) புதிய கனிம ஆய்வுகள் 10

தரவாரியான தகவல்கள்.

	தொடர்பணி.	புதியன.
(அ) 7-வது திட்ட கால ஆய்வுகள்	5	6
(ஆ) பிற புவியியல் ஆய்வுகள்—திட்டம் சாராதவை.	6	4
(இ) புவிநுட்பவியல் ஆய்வுகள்	1	..
	12	10

சோதனைக் கூடங்கள் மற்றும் பகுப்பாய்வு :

	மாதிரிகள்.
(அ) புவி இரசாயன மண்மாதிரி பகுப்பாய்வு பிரிவு	900
(ஆ) பொதுவான மற்றும் வழக்கமான கனிம மாதிரிகள்	900

கனிம நிர்வாகம் :

(அ) கனிம வருவாய்	ரூ. 1,000.00 இலட்சங்கள்(அல்லது) 10 கோடிகள்.
(ஆ) சுரங்கக் குத்தகை மனுக்கள் பரிசிலித்தல்.	80
(இ) சுருப்பு, இளஞ்சிவப்பு, சிவப்பு மற்றும் பலவண்ண பாறை குத்தகை மனுக்கள்.	200

(2) நிதி அளிப்பு இலக்குகள் :

வரிசை எண்.	திட்டம்.	1989–90 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை அளிப்பு.	1989–90 ஆம் ஆண்டிற்கு திருத்தப்பட்ட மதிப்பீடு.	1989–90 ஆம் ஆண்டிற்கான மொத்த செலவினங்கள்
(1)	(2)	(3)	(4)	(5)
		(ரூபாய் இலட்சங்களில்.)		
1	திட்டம் சாராத வகை	61.39	64.95	66.50
2	திட்டம் சார்ந்த வகை	46.40	53.10	56.56
3	மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம்.	4.50	4.76	4.76
	மொத்தம்	112.29	122.81	127.82

கனிம ஆய்வுகள்.

4. திட்டம் சார்ந்த ஆய்வுகள் :

(1) தருமபுரி மாவட்டம், இருட்டிணகிரி வட்டம் மகாராசகடை பகுதியில் தங்கப் படிவங்கள் கிடைப்பது பற்றிய விரிவான ஆய்வுகள்.

தங்க செரிவுகள் உள்ள 0.1 மீட்டர் முதல் 2.1 மீட்டர் அகலமுள்ள ஒன்றுடன் ஒன்று தொடர்பற்ற நான்கு தங்கப் படிவப்பகுதிகள் இருப்பது விரிவான ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் உள்ளப் பாறைகளில் கிடைக்கும் தாதுப்

படிவங்களில் ஒரு டன்னுக்கு 1.0 முதல் 3.5 கிராம் தங்கம் கிடைக்கும் என்று கணக் கிடப்பட்டுள்ளது. மேலும் விரிவான புவியியல் வரைபடம் தயாரித்தல், நீள்குமிழ்கள் இடுதல் மற்றும் புவிஇரசாயன மாதிரிகள் சேகரித்தல் ஆகிய ஆய்வுகள் நடத்தப்பட்டது.

சமதள மேடை நில அளவை (பிளேன் டேபிள் சர்வே) முறையில் 1:1000 என்ற அளவில் வரைபடம் தயாரிக்கப்பட்டதுடன் 850 மீட்டர் மொத்த நீளத்திற்கு 15 நீள்குழிகள் இடப்பட்டு 186 நீள்குமிழி மாதிரிகள் சேகரிக்கப்பட்டு தங்க இருப்புக்காக பகுப்பாய்வு செய்யப்பட்டது. அம்மாதிரிகளில் ஒரு டன்னுக்கு 0. 10 முதல் 0.30 கிராம் தங்கம் இருப்பதாக கணக்கிடப்பட்டது. இத்துடன் 1.200 மண் மாதிரிகளில் பகுப் பாய்வு விபரங்களைக் கொண்டு 9 தனிமுலங்களுக்கான வரைபடங்கள் தயாரிக்கப் பட்டது. கனிமப்படிவமைப்பில் ஆழத்தைக் கண்டறிய துரப்பண பணிகள் தொடங்கப் பட்டது. இப்பணியின் முதல் துரப்பணிந்துளையில் 480 மீட்டர் ஆழம்வரை துளையிடப் பட்டது. துளையிலிருந்து வெளிவரும் வண்டல்வீலிருந்து 27 மாதிரிகள் சேகரிக்கப்பட்டு தங்கம் கிடைப்பதுபற்றி அறிய சலித்து ஆராயப்பட்டது.

தென் ஆற்காடு மாவட்டத்தில் பழுப்பு நிலக்கரிக்கான விரிவான ஆய்வுகள்:

முதல்கட்டப் பணியில் வெள்ளாற்றுக்கு வடக்கில் அமைந்துள்ள 16.0 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் பழுப்பு நிலக்கரிக்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. நானூறு மீட்டர் முறையான இடைவெளியில் 27 துரப்பணத்துளைகள் இடப்பட்டன. இத்துளைகளின் ஆழம் 90.0 மீட்டர் முதல் 100.0 மீட்டர் ஆகும். மொத்தமாக 2,586 மீட்டர் ஆழத்திற்கு துரப்பனம் இடப்பட்டது. ஆய்வு செய்யப்பட்ட பகுதி களில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியின் தரம் திருவாளர்கள் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் சுரங்கத்தில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியின் தரத்தை ஒத்துள்ளது.

நிலமட்டத்திலிருந்து 55 மீட்டர் முதல் 60 மீட்டர் ஆழத்தில், 6 முதல் 13 மீட்டர் படிவத்தில் நிலக்கரி கிடைக்கிறது. நூற்றுக்கு மேற்பட்ட பழுப்பு நிலக்கரி மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது.

இரண்டாம் கட்ட ஆய்வுப்பணியில் திட்டமிடப்பட்ட 12 துரப்பனக்குழிகளில் நான்கு துரப்பனக்குழிகள் ஏற்கனவே முறையான இடைவெளியில் இடப்பட்டு, தொடர்ந்து பணி நடைபெற்று வருகிறது.

திருச்சிராப்பள்ளி மற்றும் பெரியார் மாவட்டங்களில் மணிக்கற்கள் மற்றும் சுறை மணிக் கருங்க்கான விரிவான ஆய்வுகள்:

திருச்சி மாவட்டம் கரூர் வட்டத்தில் சின்ன தாராபுரம் வெங்கடாபுரம் கிராமங் களில் சலீபையர் (நீலக்கல்) பற்றிய ஆய்வும் மணவாடி கிராமத்தில் ரூபி (சிகப்புக்கல்) பற்றிய ஆய்வும் தொடர்ந்து நடத்தப்பட்டன. சின்னதாராபுரம் பகுதியில் 10 சோதனைக்குழிகளும் 2 நீள்குழிகளும் ஒரு பெரிய நில அகழ்வும் செய்யப்பட்டு சலீபையர் இருப்பு பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 0.32 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிற்கு 1:1000 அளவில் புவியியல் அமைப்பினைக் காட்டும் விளக்கமான வரை படம் தயாரிக்கப்பட்டது. இக்குழிகளிலிருந்து மனுக்கள் தரமுடைய சலீபையர் ஏதும் கிடைக்கவில்லை.

மணவாடி பகுதியில் 32 ஆய்வுக்குழிகள் இடப்பட்டு தரமுடைய சிறுரூபி (சிகப்புக் கல்) துண்டுகள் பெறப்பட்டன. இங்கு 1 : 1000 என்ற அளவையில் 0.46 சதுர கிலோ மீட்டர் பரப்பிற்கு விரிவான வரைபடம் தயாரிக்கப்பட்டது.

திருச்சி மாவட்டம் குளித்தலை வட்டம் இரும்பூதிப்பட்டி பகுதியில் ரூபி மற்றும் சலீபையர் கற்களுக்கான முன்னோட்ட ஆய்வும் விரிவான ஆய்வும் நடத்தப்பட்டது. இங்கு 56 ஆய்வுக்குழிகள் இடப்பட்டு, நைந்த பாறைகட்கு மேல் அமைந்துள்ள ''கொல்லுவியம்'' எனப்படும் மண்ணிலிருந்து ரூபி (சிகப்புக்கல்) மற்றும் இளஞ் சிவப்பு கலந்த நீலக்கல் ஆகியவை பெறப்பட்டன. அவ்வாறு கிடைக்கப்பெற்ற ரூபி மற்றும் சலீபையர் மணிக்கற்கள் தரமுடையவையாக உள்ளன. குளித்தலை வட்டத் தில் மேட்டுப்பட்டி மற்றும் அய்யர்மலைப்பகுதிகளில் ஆய்வுகள் நடத்தப்பட்டு வரு கின்றன.

புவி பௌதிக மற்றும் புவி இரசாயன பிரிவுகள் அமைத்தல் :

மாநிலத்தில், மறைந்து கிடக்கும் உலோகம் மற்றும் உலோகக் கனிமப்படிவங் களைக் கண்டறிய புவிபௌதீக மற்றும் புவி இராசய முறைகள் ஒருங்கிணைக்கப்பட்டு ஆய்வுகள் நடத்தப்பட்டன. தருமபுரி மாவட்டத்தில் ஜவ்வாது மலைப்பகுதியில் சுமார் 120 சதுர கிலோ மீட்டர் பரப்பில் 120 ஒளைப்படிகளின் மாதிரிகளும், சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் சிங்கிலியங்கோம்பைப்பகுதியில் 300 சதுர கிலோமீட்டர் பரப்பில் 860 மாதிரிகளும் எடுக்கப்பட்டு கதிர்வீச்சு மூலகங்கள், வெள்ளீயம் மற்றும் கோல்ட் ஆகியவற்றுள் கண்டறிய பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. கன்னியா

குமரி மாவட்டத்தில் தோவாலா வட்டத்தில் உள்ள அருமநல்லூர் பகுதியில் புவி பௌதிகப்படி விரிவான ''சுயபின்னேற்ற'' ஆய்வு (செல்ப் பொடன்சியல் சரண்ட்) செய்யப்பட்டு (ரொபைட்) கவிமம் கண்டுபிடிக்க வேலைகள் நடத்தப்பட்டது. இவ் வாய்வில் 8 நோக்கோடுகளில் புழிபொறிக ஆய்வுகள் நடத்தப்பட்டன.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் புவித்தொழில் நுட்ப ஆய்வுகள்:

திட்டப்பகுதியான நீலகிரி மாவட்டத்தில் உதகை, குன்னூர், கோத்தகிரி மற்றும் கூடலூர் ஆகிய வட்டங்களில் 1340 சதுர கிலோ மீட்டர் பரப்பில் புவி தொழில்நுட்ப ஆய்வுகளை இத்துறையின் புவி தொழில்நுட்ப ஆய்வுப்பிரிவு மேற்கொண்டு நிலச் சரிவுகள் மற்றும் நிலச்சரிவுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளைக் கண்டறிந்து தடுப்பு முறைகளை கூறி வருகிறது. இதுவரை, புவியியல், நிலச்சாய்வு வரைபடம், வடிகால் அமைப்பு முதலியவைகள் பற்றிய வரைபடங்கள் தயாரித்து முடிக்கப்பட்டதுடன் பாறை/மண் பரவல், புவிமேற்பரப்பியல், நிலப்பயன்பாடு, புவியியற்குழல் முதலியவை பற்றிய வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இதுவரை பாறை/மண் பரவல் படம் 390 சதுர கிலோ மீட்டர் பரப்பிற்கும், புவி மேற்பரப்பியல் படம் 360 சதுர கிலோ மீட்டர் பரப்பிற்கும், நிலப்பயன்பாட்டுப் படம் 460 சதுர கிலோ மீட்டர் பரப்பிற்கும் புவி இயற்குழல் படம் 430 சதுர கிலோ மீட்டர் பரப்பிற்கும் வரையப்பட்டுள்ளது. புவிதொழில் நுட்ப கருவிகளான பிசோ மீட்டர் மற்றும் எக்ஸ்டென்சோ மீட்டர் ஆகியவற்றைக் கொண்டு காட்டேரி மல்லிக் கோரை மற்றும் சேலாஸ் கிராமங்களில் ஏற்பட்ட நிலச்சரிவுகள் கண்காணிக்கப்பட்டு வருகிறது. சுமார் 100 இடங்கள் ஆய்வு செய்யப்பட்டு வளர்ச்சிப் பணிக்கால நிலச் சரிவு தடுப்பு முறைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

திட்டம் தாராவகை ஆய்வுப்பணிகள் :

1. தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கான, பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் சிவகங்கைப் பகுதியில் ரொபைட் ஆய்வுகள் :

திருவாளர்கள் தமிழ்நாடு கனிம நிறுவனம் கேட்டுக் கொண்டதற்கிணங்க சிவ கங்கைப் பகுதியில் கிடைக்கும் ரொபைட் படிவங்களை, மறுமதிப்பீடு செய்ய, இத் துறையால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. ரொபைட் உள்ள பகுதியில் ஆறு ஆழ்துரப்பனக்குழிகளிட திட்டமிடப்பட்டுள்ளது. எண்பத்தெட்டு மீட்டர் ஐம்பத் தைந்து சென்டிமீட்டர் ஆழம்வரை துரப்பனமிடப்பட்ட முதல் குழியில் ரொபைட் கொண்ட மண்டலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டம் திருந்துறைப்பூண்டி வட்டத்தில் சிலிகா மணல் பற்றிய ஆய்வுகள்:

தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டத்தில் இல்லை விளாகம் பகுதியில் சுமார் 10 சதுர கிலோ மீட்டர் பரப்பில் சிலிக்கா மணல் பற்றிய ஆய்வுகள் நடத்தப் பட்டது. நான்கு திருகுதளைகள் இடப்பட்டு ஒரு சோதனைக்குழியும் தோண்டப் பட்டது. மணற்களிமண் மற்றும் பழுப்பு மணலுக்கிடை 0.15 முதல் 0.30 மீட்டர் படிமானத்திற்கு சிலிக்கா மணல் கிடைக்கிறது. உரிய சோதனைகள் நடத்த மணல் மாதிரிகள் சேகரிக்கப்பட்டுள்ளன. கடற்கரைவேரி கிராமங்களில் வெளிமிகுலைட் மற்றும் மைக்கா ஆகியவற்றிற்கு நடத்தப்பட்ட ஆய்வுகள்.

ஒன்றுக்கு ஐயாயிரம் மற்றும் ஒன்றுக்கு ஏழாயிரத்து தொள்ளாயிரத்து இருபது என்ற அளவுகளில் 10 சதுர கிலோ மீட்டர் பரப்பில் விளக்கமான வரைபடங்கள் தயாரிக்கப்பட்டது. நெட்டூர் பகுதியில் நான்கு ஆய்வுக்குழிகளும் கடங்கவேரி பகுதியில் ஒரு ஆய்வுக்குழியும் இடப்பட்டன. மேலும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

தென் ஆற்காடு மாவட்டத்தில் வெப்பந்தாங்கி களிமண் பற்றிய ஆய்வுகள் :

பண்ருட்டி மற்றும் கடலூர் வட்டங்களில் சில பகுதிகளில் கிடைக்கும் வெப்பந் தாங்கி களிமண்ணில் இருப்பு மற்றும் தரம்பற்றி அறிய மறுமதிப்பீட்டு ஆய்வுகணிகள் மேற்கொள்ளப்பட்டன. இருபத்தைந்து சதுர கிலோ மீட்டர் பரப்பில் 32 திருகு துளைகள் இடப்பட்டு பகுப்பாய்வு செய்ய 124 கணிமண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன.

புதிதாகத் தொடங்கப்பட்ட ஆய்வுகள் :

(1) திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் வேடசந்தூர் வட்டம், அய்யனார் கிராமப் பகுதியில் கிடைக்கும் மணிக்கற்கள் பற்றிய ஆய்வுகள்.

வேடசந்தூர் வட்டத்தில் அய்யஹரை அடுத்துள்ள வல்லிசெட்டிப்பட்டி மற்றும் தெங்கம்பட்டி கிராமங்களில் ''அக்குவாமன்றம்'' மற்றும் அதனைச் சார்ந்த குறை மணிக்கற்கள் வெங்கைக்கல் மற்றும் ''எம்ரால்டு'' (மரகதம்) சார்ந்த குறைமணிக்கற்களை பற்றிய ஆய்வுகள் நடத்தப்பட்டன.

கருப்பு கிரானைட்டுக்கான விரிவான ஆய்வுகள் :

தமிழ்நாட்டில் தொழிற்சாலை அமைக்க விரும்புவோர் மற்றும் ஏற்கனவே கற்களை அறுத்து மெருகூட்டும் தொழிற்சாலை உடையோருக்கு, அரசு நிலங்களில் உள்ள கருப்புகிராமைட் கற்களை குத்தகை மூலம் வழங்குவது என்ற அரசின் கொள்கைக்கு ஏற்ப, மூடி முத்திரையிட்ப்பட்ட டெண்டர் முறையில் குத்தகை வழங்குவதில் முதல் கட்டமாக வடஆற்காடு அபேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர், தென் ஆர்க்காடு சேலம், தருமபுரி, மற்றும் பெரியார் மாவட்டங்களில் 5.7845 87. ஹெக்டர் பரப்பளவில் இடைக்கும். பொறுக்கியெடுக்கப்பட்ட கருப்பு கிரேனட் படிவங்களை, இத்துறை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டது. இதில், முன் சுறப்பட்ட மாவட்டங்களில் 320.05.5 ஹெக்டர் பரப்பில் உள்ள கருப்பு கிரேனட் கற்கள் குத்தகைக்குவிட விளம்பரம் செய்யப்பட்டது. அவ்வாறு 10 ஆண்டிற்குக் குத்தகைக்கு விடப்பட்டதின் மூலம் 8.73 கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் கிடைத்தது.

இரசாயன பகுப்பாய்வுகள் :

டிரேஸ் எலிமெண்ட்ஸ் எனப்படும் அரிய மூலகங்களைக் கண்டறியவும் கனி மங்களின் தரத்தைக் காணவும் இத்துறையின் இரசாயன மற்றும் மண் பகுப்பாய்வு சோதனைச் சாலையில் கனிமம் உள்ளடங்கிய புவிஇரசாயன மண் மற்றும் பாறைகள் ஆகியவற்றின் 1900 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

கனிம நிர்வாகம் :

தமிழ்நாட்டின் 17 மாவட்டங்களில் துணை இயக்குநர்கள்/உதவி இயக்குநர்களின் கட்டுப்பாட்டில் உள்ள அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியாளர்கள் மற்றும் புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் ஆகியோருக்கு தொழில்நுட்ப ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் பெருவகை மற்றும் சிறுவகைக் கனிமங்களுக்கான சலுகைகள் வழங்குதல். சுரங்கங்கள் மற்றும் கற்குடைவுகளைப் பார்வையிடுதல். அரசுக்கு உரிய வரிகளை வசூல் செய்தல் மற்றும் முறையற்ற வகையில் கனிமங்கள் வெட்டுவதைத் தடுத்தல் ஆகிய பணிகளை தொடர்ந்து செய்து வருகிறது.

கடந்த ஐந்தாண்டுகளில் கனிமங்கள் சார்ந்த வருவாய் பற்றிய புள்ளி விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

ஆண்டு.	ரூபாய், (லட்சங்களில்)
1985—86	442.00
1986—87	408.88
1987—88	768.00
1988—89	922.00
1989—90	2153.00

பெருவகைக் கனிமக்குத்தகை தொடர்பான 19 மனுக்கள் பரிசிலனை செய்யப் பட்டு அவை மீதான தொழில்நுட்ப அறிக்கைகள் அரசுக்கு அனுப்பப்பட்டது, பதினேழு ரிட் மனுக்கள் மற்றும் பதினைந்து இரண்டாம் மேல்முறையீடு தொடர்பான பத்தி வாரிக்குறிப்புகள் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டன, சிறுகனிமங்கள் தொடர்பான மேல்முறையீடு பெறும் அலுவலர் என்ற முறையில் இயக்குநரால் 51 மனுக்களின் மீது உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டது.

சிறப்பு விவரங்கள் :

திருச்சி மாவட்டம் இருங்களூர் அருகில் செயற்கை மணிக்கற்கள் தொழிற்பேட்டை மற்றும் கருநில் பலவண்ண மணிக்கற்கள் தொழிற்பேட்டை அமைத்தல், திருச்சி மாவட்டம் இருங்களூர் அருகில் செயற்கை மணிக்கற்கள் தொழிற்பேட்டை அமைப் பதற்கு வேண்டிய தொழில்நுட்ப உதவி பெரும்பொருட்டு தமிழ்நாடு அரசு திருவாளர்கள் வைரம் மற்றும் மணிக்கற்கள் வளர்ச்சி நிறுவனத்தினரை அணுகியது, திருச்சிக்கருகி லுள்ள இருங்களூரில் 10 ஏக்கர் நிலம் பெறப்பட்டுள்ளது, செயற்கை மணிக்கற்கள் தொழிற்பேட்டையில் கலைஞர்களுக்கான 10 தொழிற்கூடங்கள் கட்டலாம் என்று முன்மொழிவுகள் உள்ளது, திருவாளர்கள் வைரம் மற்றும் மணிக்கற்கள் வளர்ச்சி நிறுவனம். உரிய எந்திரங்கள், உபகரணங்கள், கருவிகள் மற்றும் ரிக்கோனியா துகள் முதலியவற்றை சகாயவிலையில் வழங்கியுள்ளது. அத்நிறுவனம் நுட்பமான கருவி களைப் பயன்படுத்த கலைஞர்கட்கு பயிற்சி தரவும் இசைந்துள்ளது, மேலும் செயற்கை மணிக்கற்கள் தொழிற்பேட்டை கலைஞர்கட்குத் தேவையான அடிப்படை வசதிகள், ஆய்வு மற்றும் வளர்ச்சி விபரங்கள் மற்றும் விற்பனை வசதிகள் முதலிய வற்றை செய்து தரவுள்ளது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 1990 சனவரி 29-ம் நாளன்று அத்தொழிற்பேட்டை தொடங்குவதற்கான அடிக்கல்லை நாட்டினார் நவீன செயற்கை மணிக்கற்களை வெட்டி மெருகூட்டும் பொறிகள் இயக்கிக் காட்டப்பட்டது.

8, கனிமக் கொள்கைகள்:

மெருகூட்ட சுற்கள் பெறுவது தொடர்பான குவாரி குத்தகை வழங்கும் விதி முறைகளில் சிலவற்றை மாநில அரசு திருத்தியமைத்தது. மாநிலத்தில் சுற்கள் மெருகூட்டும் தொழில் வளர்ச்சி அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் முன்பு தளர்த்தப்பட்ட கொள்கைகளையே தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதென மாநில அரசு முடிவு செய்தது. அரசு நிலங்களில் உள்ள கிரனேட் சுற்களை வெட்டி எடுக்க மூடி முத்திரையிடப்பட்ட டெண்டர் மூலம் குத்தகை வழங்குவது என்பது அரசின் தற் போதைய கொள்கையாகும். கிரேனைட் சுற்களை வெட்டி மெருகூட்டும் தொழிற் சாலையை மாநிலத்தில் அமைத்துள்ளவர்களும் இரண்டாண்டுகளில் அத்தகைய தொழிற்சாலைகளை அமைக்க உறுதியான திட்டங்களை கொண்டுள்ளவர்களும் ''டெண்டர் முறை''-யில் கலந்து கொள்ளலாம். தொழிற்சாலையின் உற்பத்தித்திறனை அடிப் படையாகக் கொண்டு குவாரிக்குத்தகை வழங்குவதின் மூலம் ஒரு சிலரின் ஏக போகத்தை தடுப்பது இக்கனிமக் கொள்கையின் குறிக்கோளாகும், அவ்வாறு வழங்கப்படும் முதல் குத்தகை 10 ஆண்டு காலத்திற்காகும், முதல் தவணையில் செலுத்திய டெண்டர் தொகையைப்போல் 150 சதவிகிதம் செலுத்துவோருக்கு குத்தகை புதுப்பித்து வழங்கப்படும், தற்போதைய இக்கொள்கையானது. ஏற்கனவே அமைக்கப்பட்ட மற்றும் அமைக்கப்பட உள்ள தொழிற்சாலைகட்கு குத்தகை வழங்க வகை செய்வதுடன் குத்தகையாளர்கள் விஞ்ஞான ரீதியாக முறைப்படுத்தப்பட்ட சுரங்கம் வெட்டவும் ஊக்குவிக்கும், மாநிலத்திலிருந்து மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் நாட்டின் அன்னியச் செலாவணி பெருவதுடன் மாநிலத்தின் கனிம வருவாய் பெருகும் என்றும் மாநில அரசு எதிர்பார்க்கிறது.

சர்க்கரை

சர்க்கரை தொழில் குறித்த அணைத்து பணிகளையும் மேற்கொள்ள 1969 ஆம் ஆண்டில் சர்க்கரைத் துறை உருவாக்கப்பட்டது. கூட்டுறவு பொது மற்றும் தனியார் துறைகளில் சர்க்கரை ஆலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இயக்க அமைப்பு :

இத்துறை சர்க்கரைத்துறை ஆணையர் அவர்களின் மேற் இயங்கி வருகிறது. இவருக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் உதவி புரிந்து வருகிறார். சர்க்கரை துறை ஆணையர் தலைமையின் கீழ் ஒரு இணை ஆணையர், ஒரு கூடுதல் இயக்குநர், இரண்டு இணை இயக்குநர்கள், ஒரு சர்க்கரைத் தொழில் நுட்ப வல்லுநர் மற்றும் பலர் பணியாற்றி வருகின்றனர்.

பணி முன்னேற்றம்—குறிக்கோளும் நிறைவும் :

1989-90ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மொத்தம் 30 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன. அவற்றில் 13 கூட்டுறவு துறையிலும், 3 பொதுத்துறையிலும் மற்றும் 14 தனியார் துறையிலும் உள்ளன. இவ்வாலைகளின் மொத்த அறவைத்திறன் நாள் ஒன்றுக்கு 63.650 டன்கள் ஆகும். இவற்றில் கூட்டுறவு மற்றும் பொது சர்க்கரை ஆலைகளின் அரவைத் திறன் நாள் ஒன்றுக்கு 28.700 டன்கள் ஆகும்.

புதிய திட்டங்கள் :

(அ) அனல் மின் உற்பத்தித் திட்டம் :

புதிதாக நிறுவப்படும் செய்யார் மற்றும் எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் சோதனை அடிப்படையில் சர்க்கரை உற்பத்தியுடன் இணைந்த மின் உற்பத்தி திட்டத்தினை துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உயர் அழுத்த கொதிகலன்களை நிறுவி தற்போது உபயோகப்படுத்தப்படும் அதே அளவு கரும்பு சக்கையைப் பயன்படுத்தி, மின் உற்பத்தி செய்து, அதிகப்படியாகக் கிடைக்கும் மின்சாரம் மின்வாரியத்திற்கு வழங்கப்படும். இத்திட்டம் ஆசியாவிலேயே சர்க்கரைத் தொழிலில் நிறுவப்படும் முன்னோடித் திட்டமாகும். இதன் மொத்தச் செலவுத் தொகை ஒவ்வொரு ஆலைக்கும் ரூபாய் 5 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து தலா 1 கோடியை மானியமாக வழங்கும். மீதமுள்ள ரூபாய் 3 கோடியை சம்பந்தப்பட்ட ஆலைகள் நிதி நிறுவனங்களிடம் இருந்து கடனாகப் பெறும். மேலும், ஆண்டொன்றுக்கு பராமரிப்பு மானியமாக ரூபாய் 54.60 இலட்சத்தை ஆறு ஆண்டுகளுக்கு வழங்குவது குறித்து கோரிக்கை மாநில அரசின் பரிசீலனையில் உள்ளது. உபரியாக உற்பத்தி செய்யப்படும் 160 இலட்சம் யூனிட் மின்சாரத்தினை பொது விநியோகத்திற்காக தமிழ்நாடு மின்சார வாரியம் வாங்கிக்கொள்ளும்.

வடிப்பகம் :

தற்போது மாநிலத்தில் 8 வடிப்பகங்கள் தனியார் துறையில் செயல்பட்டு வருகிறது. புதிய சர்க்கரை ஆலைகளாலும், ஏற்கெனவே உள்ள சர்க்கரை ஆலைகளில் விரிவாக்கத் தினாலும் சர்க்கரை கசண்டு (மொலாசஸ்) உற்பத்தி அண்டொன்றுக்கு ரூபாய் 6.45 இலட்சம் டன்னிலிருந்து 7.7 இலட்சம் டன் வரை கிடைக்கும். எனவே, மேலும் இரண்டு வடிப்பகங்களை கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் அமைக்க மைய அரசு இசைவு கூடி தந்துள்ளது.

திட்ட நிதிச்செலவு மற்றும் பொருளாதார நிலைத்தன்மை :

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்படி மத்திய அரசு 9 சர்க்கரை ஆலைகளை நிர்மாணிக்க உரிமம் வழங்கியுள்ளது. அதில் 4 கூட்டுறவுத்துறையிலும், 5 தனியார் துறையிலும் ஆகும் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் காலகட்டத்தில் ஐந்து இடங்களில் புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்க விண்ணப்பங்கள் மத்திய அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் 15 சர்க்கரை ஆலைகளின் விரிவாக்கத்திற்கு மத்திய அரசு உரிமம் வழங்கியுள்ளது. இவற்றில் 8 சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத் துறையிலும், 2 சர்க்கரை ஆலைகள் பொதுத்துறையிலும, மற்றும் 5 சர்க்கரை ஆலைகள் தனியார் துறையிலும் ஆகும். இந்த விரிவாக்கத் திட்டம் செயற்படுத்திய பின்னர் ஆலைகளின் அரவைத் திறன் நாள் ஒன்றுக்கு 16,750 டன்களாக உயரும். மேலும் அனைத்து புதிய சர்க்கரை ஆலைகளும் மற்றும் ஏற்கெனவே உள்ள சர்க்கரை ஆலைகளின் விரிவாக்கம் ஆகியவைகளை சேர்த்து மொத்தத்தில் இந்த மாநிலத்தில் கரும்பு அரவைத்திறன் நாள் ஒன்றுக்கு 1,00,650 டன்களாக உயரும்.

தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள் நிலையான அளவில் சர்க்கரை உற்பத்தி செய்துவருகின்றன. சர்க்கரை உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு இந்தியாவின் உற்பத்தி சுமார் 10 சதவீதமாகும். இந்தியாவிலுள்ள சர்க்கரை ஆலைகளை ஒப்பிடும் பொழுது தமிழ் நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள் தான் அதிக நாட்கள் அரவை செய்கின்றன. அகில இந்திய அளவிலும் தமிழ் நாட்டிலும் கரும்பு அறவை, சர்க்கரை உற்பத்தி, சர்க்கரை கட்டுமானம் மற்றும் அறவை நாட்கள் ஆகிய விவரங்கள் கடந்த மூன்று அறவை பருவங்களுக்கும் (அக்டோபர் முதல் செப்டம்பர் வரை) கீழே கொடுக்கப்பட்டு உள்ளன.

ஆண்டு.	கரும்பு அறவை. (டன்கள் லட்சத்தில்)		சர்க்கரை உற்பத்தி. (டன்கள் லட்சத்தில்)		சர்க்கரை கட்டுமான சதவீதம்.	
	அகில இந்தியா.	தமிழ் நாட்டில்.	அகில இந்தியா.	தமிழ் நாட்டில்.	அகில இந்தியா.	தமிழ் நாட்டில்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1986-87	852.24	85.20	85.01	8.14	9.98	9.55
1987-88	939.43	85.05	91.10	7.85	9.70	9.23
1988-89	856.47	99.48	87.52	10.04	10.22	10.10

கரும்பு மகசூல்:

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் எடுக்கப்பட்ட முனைப்பான கரும்பு பெருக்க திட்டங்களின் பயனாக ஒரு ஹெக்டேருக்கு கரும்பு மகசூல் மற்றும் சர்க்கரை கட்டுமானம் உயர்ந்துள்ளது. கரும்பு அபிவிருத்திக்கென அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் ஆண்டு சராசரியாக ரூபாய் 650 இலட்சம் செலவிடுவதன் மூலம் இந்த உயர்வு ஏற்பட்டுள்ளது. இச்செலவு மாநில அரசு டன் ஒன்றுக்கு கரும்புக்கு அறிவித்த கொள்முதல் விலையை விட சராசரியாக ரூபாய் 14 அதிகமாகும். இதனால் இந்தியாவிலேயே, தமிழ் நாட்டில்தான் கரும்பு மகசூல் உயர்ந்துள்ளது. அகில இந்திய அளவில் கரும்பு மகசூல் ஒரு ஹெக்டேருக்கு 60 டன்களாக உயர்ந்துள்ளது. இதில் கரும்பு மகசூல் தமிழ் நாட்டில் சுமார் ஒரு ஹெக்டேருக்கு 107 டன்களாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

அத்தியாயம்—16

செய்தி மற்றும் சுற்றுலாத்துறை.

செய்தி மற்றும் மக்கள் தொடர்பு.

தமிழ்நாடு அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் மக்களுக்கு தெரிவிப்பதிலும், அரசுக்கும் மக்களுக்கும் இடையே நல்லுறவை உருவாக்கும் பணியில் பாலமாக அமைந்து செயல்படுவதிலும் செய்தி, மக்கள் தொடர்புத்துறை சீரிய தொண்டாற்றி வருகிறது. இப்பணியில் பாரம்பரியமாக வரும் கிராமியக் கலைகள் முதல் திரைப்படம் மற்றும் வீடியோ உட்பட அனைத்து மக்கள் தொடர்பு சாதனங்களையும் இத்துறை பயன்படுத்துகிறது. இத்துறை 1989–90 ஆம் ஆண்டில் ஆற்றிய பணிகள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் :

21 மாவட்டங்களிலும் செய்தி, மக்கள் தொடர்பு அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர். வளர்ச்சிப் பணிகளை மக்களுக்குத் தெரிவிக்கும் பணியில் அவர்கள் தொலைக்காட்சி, வானொலி மற்றும் பிற மக்கள் தொடர்புச் சாதனங்களையும் பயன்படுத்தி வருகின்றனர். திரைப்படக் காட்சிகளையும் வீடியோப் படக்காட்சிகளையும் ஏற்பாடு செய்வதுடன் பிற கலாச்சார நிகழ்ச்சிகளையும் நடத்துகின்றனர்.

1989–90–ஆம் ஆண்டில் திரைப்படக் காட்சிகளை நடத்தியுள்ளனர்.

மாவட்டங்களில் அரசு விழாக்களையும் தலைவர்களின் நூற்றாண்டு விழாக்களையும் நடத்துகின்றனர்.

வீடியோ திரைப்படக் கருவி பொருத்தப்பட்ட 10 வீடியோ வேன்கள் வாங்கப்பட்டு அரசின் செயல் திட்டங்களை வீடியோ திரைப்படக் காட்சிகள் மூலம் நடத்தி வளர்ச்சிப் பணி விபரங்கள் மக்களுக்குச் சென்றடைய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

செய்தி நிறுவனங்கள் :

1989-90 ஆம் ஆண்டில், சென்னை, மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய ஐந்து இடங்களில் ஆராய்ச்சி மாணவர்களுக்குப் பயன்படும் மேற்சொன்ன வசதியுடன் நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. பொதுமக்களின் வசதிக்காக அவ்வப்போது கேட்கப்படும் தகவல்களும் செய்திகளும் இந்நிலையங்களில் அளிக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர்கள், பிற முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் விழாக்களில் ஆற்றும் சொற்பொழிவுகள் பதிவு செய்யப்பட்டு கேசட்டுகள் பாதுகாத்து வைக்கப்படுகின்றன. செய்தி நிலையங்களில் உள்ள திரைப்படப் பிரிவு முறையாகத் திரைப்படக் காட்சிகளை நிலையங்களில் நடத்துவதுடன் வேண்டுகோளின் பேரில் கல்வி நிலையங்களிலும் திரையிட்டு காட்டுகிறது.

செய்தி வெளியீடு :

இத்துறைதான் பத்திரிகை தொடர்புகளுக்கான அரசின் அதிகாரபூர்வ அறிவிப்பாளராகச் செயல்படுகிறது.

அரசு சார்பிலான செய்தி வெளியீடுகளும், செய்திக் குறிப்புகளும் விழாக்கள் மற்றும் முக்கிய நிகழ்வுகள் குறித்த புகைப்படங்களும், செய்தி வெளியீட்டு பிரிவின் மூலம் வெளியிடப்பட்டு நாள்தோறும் அனைத்துப் பத்திரிகைகளுக்குப் அனுப்பப்படுகின்றன. 1989-90 ஆம் ஆண்டில் 744 செய்தி வெளியீடுகளும், 64 செய்திக் குறிப்புகளும் வெளியிடப்பட்டன.

ஓய்வு பெற்ற வறிய நிலையில் வாழும் பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது, இதுவரை 25 பேர் மாதம் ரூ. 400 வீதம் ஓய்வூதியம் பெருகின்றனர்.

அரசு அங்கீகாரப் பத்திரிகையாளர் சான்றிதழ், 239 பத்திரிகையாளர்களுக்கு 1989-90 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

அரசு விழாக்கள் மற்றும் அரசுத் துறை நிறுவனங்களின் விழாக்களுக்குத் தொலைக்காட்சி, வானொலி, திரைப்படப்பிரிவு, வீடியோ, ஆடியோ பதிவு செய்தல் ஆகிய வற்றையும் ஏற்பாடு செய்வதோடு நிகழ்ச்சிகளுக்குப் பத்திரிகையாளர்களை அழைத்து செல்லும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது.

வானொலி, தொலைக்காட்சித் திட்டங்களை விரைவாகச் செயல்படுத்த மத்திய அரசுடன் தொடர்புகொண்டு புதிய வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்கள் அமைக்க உதவி புரியப்படுகின்றது. மற்றும் அரசின் வளர்க்கிட் பணிகள், நல்வாழ்வுத் திட்டங்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் மக்களிடையே பரப்பப்படுகின்றன.

தமிழகத்தின் வளர்ச்சிப் பணிகள், திட்டங்கள் ஆகியவற்றைக் கண்டறிய தலைமையிடத்திலிருந்து பத்திரிகையாளர்கள் பிற மாவட்டங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

மாண்புமிகு முதல்வர், அமைச்சர் பெருமக்கள், அரசு செயலாளர்கள் ஆகியோருக்குச் செய்தியாளர்கள் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது, 1989-90 ஆம் ஆண்டில் நவம்பர் திங்கள் வரை 105 செய்தியாளர் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இவற்றில் 54 செய்தியாளர்கள் கூட்டம் மாண்புமிகு முதல்வருக்காக ஏற்பாடு செய்யப்பட்டது.

நினைவகங்கள் :

செய்தி, மக்கள் தொடர்புத் துறையின்கீழ் உள்ள நினைவகங்கள் பின்வருமாறு :

(1) வள்ளுவர் கோட்டம், (2) அண்ணா சதுக்கம், (3) காமராசர் இல்லம், (4) இராசாசி நினைவாலயம், (5) சென்னை கிண்டியிலுள்ள காமராசர் நினைவாலயம், (6) கன்னியாகுமரியிலுள்ள காந்தி மண்டபம், (7) எட்டயபுரத்திலுள்ள பாரதியார் மணிமண்டபம், (8) ஒட்டப்பிடாரத்திலுள்ள வ.உ.சி. இல்லம், (9) விருதுநகரிலுள்ள காமராசர் நினைவகம், (10) ஈரோட்டிலுள்ள பெரியார் அண்ணா நினைவகம், (11) தில்லையாடியிலுள்ள வள்ளியம்மை நினைவகம், (12) தருமபுரி மாவட்டம் தொரப்பள்ளியில் உள்ள இராசாசி நினைவகம், (13) காஞ்சிபுரத்திலுள்ள அண்ணா நினைவகம், (14) செய்குதம்பி பாவலர் நினைவகம், நாகர்கோயில், (15) சென்னை மெரினா கடற்கரையிலுள்ள முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவாலயம், (16) திருப்பூரில் திருப்பூர் குமரன் நினைவகம் ஆகிய அனைத்தையும் இத்துறை பராமரித்து வருகிறது.

மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து சென்னைவரும் சாலையில் சுத்திப்பாரா சந்திப்பில் இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருவின் சிலை பாரதப் பிரதமரால் 21-12-1987ல் திறந்து வைக்கப்பட்டது. திருச்சியில் வ.வே.சு. ஐயர் வாழ்ந்த இல்லத்தையும், சென்னை திருவல்லிக்கேணியில் மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லத்தையும் அரசு ஏற்றுள்ளது. அவற்றை நினைவகமாகப் பராமரிக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

கவிஞர் கண்ணதாசனுக்குக் காரைக்குடியில் சுமார் ரூ. 30 இலட்சம் செலவில் மணிமண்டபம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. வைக்கத்தில் தந்தை பெரியார் நினைவகம் ரூ. 15 இலட்சத்தில் கட்டப்படுகிறது. இந்நினைவு வளாகத்தில் தந்தை பெரியார் சிலை மற்றும் வைக்கம் போராட்டத்தில் பங்குபெற்ற முக்கிய கேரள மாநிலத் தலைவர்கள், பெயர் பொறித்த ஸ்தூபி, நூலகம், சிறுவர் பூங்காவுடன் கூடிப் தோட்டம், பொழுதுபோக்கும் திடல் ஆகியவை இடம் பெறும். இப்பணி கேரள பொதுப்பணித் துறையிடம் வைப்புத்தொகைப் பணியாக ஒப்படைக்கப்பட்டு கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. மருது சகோதரர்களுக்குப் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் திருப்பத்தூரில் நினைவு மண்டபம் அமைத்து, அதில் அவர்களது சிலை அமைக்கப்படவுள்ளது. சென்னை மெரினா கடற்கரையில் தியாகி சங்கரலிங்கனாருக்குச் சிலை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை :

கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறை அருகில் உள்ள சிறிய பாறை மீது திருவள்ளுவர் சிலை ஒன்றை அமைக்க அரசு உத்தேசித்துள்ளது. இச்சிலை மற்றும் பீடத்தின் உயரம் 133 அடியாகும். சிலை அமைக்கும் பணி 6—9—1990 அன்று கன்னியா குமரியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. சிலை செய்யும் பணி திரு. கணபதி ஸ்தபதியிடம் ஒப்படைக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

கலைவாணர் அரங்கம் சென்னை :

சென்னை அரசினர் தோட்டத்திலுள்ள கலைவாணர் அரங்கம் சீர்வளி வசதி பெற்ற அரங்கம் : அரசு விழாக்கள், தனியார் விழாக்கள், கலை நிகழ்ச்சிகள் போன்றவை இங்கே நடைபெறுகின்றன. அரசுத் துறைக்குச் சலுகைக் கட்டணத்தில் அரங்கம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த அரங்கத்தில் நவீன ஒலிபெருக்கி வசதியும் உண்டு. இந்த அரங்கத்தின் மேற்கூரையும், குளிர்சாதன வசதியும் ரு. 12 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

அண்ணா கலையரங்கம், வேலூர் :

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், வேலூர் அண்ணா கலையரங்கத்தில் அரசு விழாக்களும், கலைநிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன. திரைப்படக் காட்சிகளும் தினசரி நடத்தப்படுகின்றன.

மாவட்டத் தலைநகரங்களில் கலையரங்கம் செய்தி அரங்கங்களைக் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

அரசுப் பொருட்காட்சிகள் :

அரசின் திட்டங்களையும் ,சாதனைகளையும் மக்களுக்கு விளக்குவதோடு, நாட்டின் வளர்ச்சிப் பணிகளில் பொதுமக்களும் நேரடிப் பங்கேற்பதின் அவசியத்தை வலியுறுத்தியும், குறைந்த செலவில் நிறைவான பொழுதுபோக்கு அம்சங்களை வழக்குவதைச் சிறப்பு நோக்கமாகக் கொண்டும் மாவட்டத் தலைநகரங்களிலும், பெரிய நகரங்களிலும் தமிழக அரசு பொருட்காட்சிகளை நடத்திவருகிறது. 1978-ஆம் ஆண்டிற்கு முன்னால் தனியாரும், தனிப்பட்ட நிறுவனங்களும் மாவட்டத் தலை நகரங்கள், நகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்கள் மற்றும் சிறு நகரங்கள் ஆகிய

நகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்கள் மற்றும் சிறு நகரங்கள் ஆகிய இடங்களில் இலாப நோக்கோடு பொருட்காட்சியை நடத்திவந்தனர். தனியார் நடத்தும் பொருட்காட்சிகளில் அதிகமாகச் சூதாட்டமும் ஆபாச நடனங்களும் இடம் பெற்றன என்ற தகவல் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதால் ஆய்ந்த பரிசீலனைக்குப் பின்னர், 1978ஆம் ஆண்டிலிருந்து பொது இடங்களில் பொருட் காட்சிகளை நடத்தும் மற்றும் பொருட்காட்சி நடத்த அனுமதிக்கும் உரிமைகள் அனைத்தையும் அரசே எடுத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

அரசு நடத்தும் பொருட்காட்சிகளில் அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்கள் நிறைவேற்றிவரும் பல்வேறு பணிகள் மற்றும் சாதனைகள் விளம்பர அரங்குகள் மூலம் மக்களுக்கு வைக்கப்படுகின்றன. தனியார் துறை நிறுவனங்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விளம்பரம் செய்வதோடு விற்பனையையும் பெருக்கிக் கொள்கின்றன. மேலும் இப்பொருட்காட்சிகள் மூலம் நூற்றுக்கணக்கான சிறிய வியாபாரிகள், கலைஞர்கள், படித்து வேலையற்று இருக்கும் இளைஞர்கள் ஆகியோருக்கு வேலை வாய்ப்பு தொடர்ந்து கிடைக்கிறது.

முதன்முதலாக அரசுப் பொருட்காட்சி சேலம் நகரத்தில் 1978ஆம் ஆண்டு செய்தி, மக்கள் தொடர்புத்துறையினரால் நடத்தப்பட்டது. 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இதனைக் கண்டு களித்தனர்.

சேலத்தில் பொதுமக்களிடையே பொருட்காட்சிக்கு நல்ல வரவேற்பு இருந்ததால், செய்தி, மக்கள் தொடர்புத்துறையில் தனியாகப் பொருட்காட்சிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு, அப்பிரிவு கீழ்க்கண்ட இடங்களில் அரசுப் பொருட்காட்சிகளை அவ்வப்போது நடத்திவருகின்றது :—

1. சேலம்.
2. கோயம்புத்தூர்.
3. மதுரை.
4. திருச்சி.
5. திருநெல்வேலி.
6. திண்டுக்கல்.
7. ஈரோடு.
8. வேலூர்.
9. கடலூர்.

அரசு நடத்தும் ஒவ்வொரு பொருட்காட்சியிலும் 10லிருந்து 20க்கு மேற்பட்ட அரசுத்துறைகள், மத்திய அரசுத்துறைகள், மத்திய கள விளம்பரத் துறை மற்றும் பிற தனியார் கடைகள் ஏலம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு வாணிபம் செய்ய அனுமதிக்கப்படுகின்றன. ராட்சத ராட்டினம், குழந்தைகளுக்கான சிறிய ரயில், சிறிய வனவிலங்கு வளாகம் போன்ற பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த கேளிக்கைப் பகுதி தனியாக அமைக்கப்படுகிறது. ஒவ்வொரு பொருட்காட்சியும் பொருளாதார ரீதியாக லாபகரமாக நடத்தப்படுகிறது.

பொருட்காட்சிகளிலிருந்து கிடைக்கும் இலாபம் :

1990 மார்ச் மாதம் வரை 54 பொருட்காட்சிகள் மாவட்டத் தலைநகரங்களில் இத் துறையின் மூலம் நடத்தப்பட்டதில் அனைத்துச் செலவுகளும் போக அரசுக்குக் கிடைத்த நிகர வருமானம் ரூ. 288.69 இலட்சம் ஆகும். இப்பொருட்காட்சிகள் மூலம் கிடைக்கும் நிகர லாபத்தில் 50 சதவீதம் பொருட்காட்சி நடத்தப் பல்வேறு வழிகளில் உதவிடும் நகராட்சிகளுக்கு நகரத்திற்குத் தேவையான நலப் பணிகளை நிறைவேற்ற அரசால் அளிக்கப்படுகிறது.

விளம்பரம் :

அரசு விளம்பரக் கொள்கைக்கு ஒப்ப அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களின் விளம்பரங்கள் அனைத்தும் செய்தி, மக்கள் தொடர்புத் துறையின் மூலம் நாளிதழ்கள், பருவ ஏடுகள், சிறப்பு மலர்கள் முதலியனவற்றிற்கு வெளியிடப்படுகின்றன. இதனால் அரசின் விளம்பரச் செலவு இறம்படக் கட்டுப்படுத்தப்படுகின்றது. இத்தகைய மைய விளம்பர வெளியீடு மூலம் சிறு மற்றும் நடுத்தரப் பத்திரிகைகள் அரசின் மூலம் விளம்பர உதவி பெற்றுவருகின்றன.

அரசுத் திட்ட விளக்க முகாம் :

அரசு திட்டிச் செயல்படுத்திவரும் நல்வாழ்வு திட்டங்களைப் பொதுமக்கள் குறிப்பாகக் கிராமத்து ஏழை எளிய மக்கள் நன்கு புரிந்துகொண்டு, ஒரே நேரத்தில் அனைத்துத் துறைகளின் நேரடி. மேற்பார்வையில் அனைத்து அரசின் உதவிகளையும் அவர்கள் அடையும் வகையில், பிரசாரம், வீடியோ படங்கள் மற்றும் மரபு வழிக் கலைகள் போன்ற பிரச்சார சாதனங்களின் மூலம் மத்திய மாநில அரசுகளின் விளம் பரப் பிரிவுகள் மாவட்டங்களில் தீவிர அரசுத் திட்ட விளக்க முகாம் நடத்துகின்றன.

முகாம் ஏற்பாடுகள் :

எந்த மாவட்டத்தில் இம்மாதிரியான முகாம் நடத்துவது என்று முடிவானதும் ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே முகாம் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் செய்தி, மக்கள் தொடர்புத் துறை, மற்றும் ஏனைய துறைகள், அரசு சார்புத்துறைகள், மத்திய அரசுத்துறை, மத்திய அரசு சார்புத்துறை, வங்கிகள் போன்ற துறைகளின் அலுவலர்கள் கலந்துகொள்ளும் கூட்டம் நடத்தப்பட்டு முகாம் ஏற்பாடுகள் பற்றி விரிவாக விவாதிக்கப்படுகின்றது.

இதன் அடிப்படையில் அந்தந்தத் துறைகள் தங்கள் பணியை உடனடியாக மேற் கொள்கின்றன. மாவட்டங்களிலுள்ள செய்தி, மக்கள் தொடர்புத்துறையின் அலு வலர்கள், ஒவியர்கள், விளம்பரப் பிரிவுகள், வீடியோ பட வேன்கள் மற்றும் வாக னங்கள் மற்றும் சென்னையிலுள்ள தமிழ்நாடு திரைப்படப்பிரிவு, செய்தி மையம் போன்றவை அழைக்கப்பட்டு முகாம் நடைபெறும் மாவட்டத்தில் பணியில் ஈடுபடுத் தப்படுகின்றன. மேலும் மத்திய அரசின் கள விளம்பரப் பிரிவு மற்றும் பாட்டு, நாடகப்பிரிவு போன்றவைகளும் அதில் பங்குகொள்கின்றன. அனைத்துத் துறைகள் பங்குகொள்ளும் கண்காட்சி ஒன்றும் முகாம் நடைபெறும் நாட்களில் நடத்தப்படு கிறது. விளம்பரச் சுவரொட்டிகள், பேனர்கள், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் ஒலிபெருக்கிகள் மூலமும் விளம்பரம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஒவ்வொரு கோட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் தினசரி காலை 8–00 மணி முதல் இரவு 8–00 மணி வரை மேற்கண்டவாறு நல்வாழ்வுத்திட்டப் பணிகளை மேற்கொள்ள முடிவு செய்யப்படுகிறது :—

1. குழந்தைகள், மாணவ–மாணவிகளுக்கு இலவச மருத்துவப் பரிசோதனை.
2. கருவுற்ற தாய்மார்களுக்கு இலவச ஊட்டச்சத்து
3. கால்நடைகளுக்கு இலவச மருத்துவம்.
4. இலவச கண் பரிசோதனை.
5. முதியோர்களுக்கு ஒய்வுதியம் வழங்கத் தேர்ந்தெடுத்தல்
6. மக்கள் குறை தீர்க்கும் மனுக்கள் பெறுதல்.
7. வங்கிகள் கடன் வழங்க மனுக்கள் பெறுதல்.
8. மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடன்பெற தகுதியுடையவர்களைத் தேர்ந்தெடுத்தல்.
9. இலவச மரக்கன்றுகள் வழங்குதல்.
10. சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடன்பெற மனுக்கள் பெறுதல்.
11. இலவச மனைப்பட்டா வழங்க ஏற்பாடு செய்தல்.
12. குடும்ப நலம்.
13. சிறுசேமிப்பு.
14. ஊன முற்றோர்க்கு உதவி வழங்க ஏற்பாடு செய்தல்.
15. கைவினைஞர்களுக்கு உதவி வழங்க ஏற்பாடு செய்தல்.
16. குழந்தைகளுக்கு இலவச தடுப்பு ஊசி போடுதல்.
2. பிற்பகல் நிகழ்ச்சிகள்.

தீண்டாமை, மதுவிலக்கு, குடும்பநலம், சிறுசேமிப்பு, சட்ட ஒழுங்கு, வரதட்சனை ஒழிப்பு, மகளிர் கல்வி, முதியோர் கல்வி, சுற்றுப்புறச் சூழல், சாலை விதிகளைக் கடைப் பிடித்தல், அரசின் நலத்திட்ட உதவிகள் பெறுதல், அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் பற்றி குழு விவாதம், கலியரங்கம் மற்றும் பட்டிமன்றம் நடத்துதல்.

மாலை நிகழ்ச்சிகள் :

கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள், வில்லுப்பாட்டு, கரகம், மாணவ மாணவியர் களின் கலை நிகழ்ச்சிகள் அரசின் சாதனைகளை விளக்கும் திரைப் படக் காட்சிகள் மற்றும் வீடியோ காட்சிகள்.

முகாம் மற்றும் பொருட்காட்சி தொடக்க விழாவும், நிறைவு விழாவும் நடத்தப்படுகின்றன.

அரசுத் திட்ட விளக்க முகாம், பெரியார் மாவட்டம்:

இப்படிப்பட்ட அரசுத் திட்டு விளக்க முகாம் ஒன்றும், கண்காட்சி ஒன்றும் 7–7–1989 முதல் 16–7–1989 வரை பத்து நாட்களுக்குப் பெரியார் மாவட்டத்தில் மேலே குறிப்பிட்டவாறு நடத்தப்பட்டது. செய்தி, மக்கள் தொடர்புத் துறை மூலம் நடத்தப்பட்ட 40 நாடகங்கள் மூலமும், இந்தியக் கள விளம்பரத்துறை மூலம் நடத்தப்பட்ட 40 நாடகங்கள் மூலமும், குடும்ப நலத்துறை மூலம் நடத்தப்பட்ட 15 நாடகங்கள் மூலமும் மக்கள் நலப் பணிகள் விளம்பரப்படுத்தப்பட்டன. இம் முகாமிற்கு மக்களிடையே நல்ல வரவேற்பு இருந்தது. மக்கள் வெகுவாகப் பய னடைந்தனர்.

விழாக்கள் :

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளை மக்களுக்கு நினைவூட்டவும், மாபெரும் தலைவர்களின் மகத்தான தியாகங்களை மக்களுக்கு முக்கியமாக இளைய சமுதாயத்திற்கு எடுத்துச் சொல்லவும், தலைவர்களின் பிறந்த நாள் விழாக்கள், நினைவு நாள் விழாக்கள் போன்றவை இத்துறையால் நடத்தப்படுகின்றன. கீழ்க் கண்ட விழாக்கள் 1989–90-ல் அரசின் சார்பில் கொண்டாடப்பட்டன :

1. டாக்டர் அம்பேத்கார் பிறந்த நாள் விழா.
2. தித்திரை முழு நிலவு விழா.
3. சர் பி.ட்டி. தியாகராயர் பிறந்த நாள் விழா.
4. பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா.
5. வீரபாண்டிய கட்டபொம்மன் விழா.
6. காயிதே மில்லத் பிறந்த நாள் விழா.
7. பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழா.
8. பாவலர் செய்குத்தம்பி பிறந்த நாள் விழா.
9. வல்வில் ஓரி விழா.
10. விடுதலை நாள் விழா.
11. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. பிறந்த நாள் விழா.
12. பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா.
13. தந்தை பெரியார் பிறந்த நாள் விழா.
14. கவிமணி தேசிய விநாயகம் பிறந்த நாள் விழா.
15. அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா.
16. மயிலாடுதுறை வேதநாயகம் பிறந்த நாள் விழா.
17. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிறந்த நாள் விழா.
18. பசும்பொன் முத்துராமலிங்கம் பிறந்த நாள் விழா.
19. மாமன்னர் மருதுபாண்டியர் நினைவு நாள்.
20. தேசிய சமர்ப்பண நாள்.
21. தேசிய ஒருமைப்பாடு விழா.
22. மனித உரிமை நாள்.
23. மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா.
24. மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை நினைவு அஞ்சல் தலை வெளியிட்டு விழா 19–10–89 அன்று சென்னையில் நடைபெற்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தலைமைச் செயலக புதிய 10 மாடி கட்டிடத்திற்கு ''நாமக்கல் கவிஞர் மாளிகை'' எனப் பெயர் சூட்டப்பட்டது. மேலும் மறைந்த முதலமைச்சர் டாக்டர் எம். ஜி. இராமச் சந்திரன் நினைவு சிறப்பு அஞ்சல் தலை வெளியீட்டு விழாவும் 17–1–1990 அன்று சென்னையில் நடைபெற்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்.

தமிழ்நாடு திரைப்பட மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிலையம் :

வலிமை வாய்ந்த மக்கள் தொடர்பு சாதனமான திரைப் படத் துறையின் தெரிவி நுட்பங்களை மாணவர்களுக்கு ஆழ்ந்து சுற்பிப்பதையும். அதனால் ஆராய்ச்சித் திறன் மற்றும் வேலை வாய்ப்பை எளர்க்க வகை செய்வதும் இந்நிலையத்தின் நோக்க மாகும். இந்திய.ாவில் பூனாவைத் தொடர்ந்து இப்பயிற்சி நிலையம் மட்டும் அமைந்துள்ளது. திரைப்படம் மற்றும் தொலைக் காட்சித் துறைகளின் அனைத்து பிரிவுகளிலும் மாணவர்களுக்குப் பயிற்சி அளித்துப் பட்டயங்கள் வழங்கப்படுகின்றன. தற்போது 185 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இந்தியாவிலேயே இந்நிறு வனத்தில் மட்டும் தான் ''பிலிம் பிராசசிங்'' துறையில் பயிற்சி அளிக்கப்படுவதை பெருமையுடன் குறிப்பிடலாம்.

படப்பிடிப்புத் தளங்கள் மற்றும் தளவாடங்களைத் தனியாருக்கு வாடகைக்கு விடுவதன் மூலம் வருவாய் ஈட்டுவதுடன். மாணவர்கள் படப்பிடிப்பு அனுபவங்களை நேரில் காணவும் வழி செய்கிறது, இந்நிலையம். இங்கே பயின்ற மாணவர்கள் நாட்டின் பல்வேறு இடங்களில் குறிப்பாக திரைப் படத் துறையிலும், தொலை காட்சி நிலையங்களிலும் பணியாற்றி வருகின்றனர்.

தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக் காட்சிப் பயிற்சி நிலையத்தை மேம் படுத்தும் வகையில் ரூ. 6.75 இலட்சம் செலவில் சுற்றுச் சுவர் பொதுப் பணித் துறை யால் கட்டப்பட்டு வருகிறது. இப்பணி விரைவில் முடியவிருக்கிறது, மாணவர்கள் பயன்படுத்தப் புகைப்படம் மற்றும் ஒளிச் சாதனங்கள் வாங்குவதற்கு ரூ. 0.75 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. படத் தொகுப்புப் பிரிவிற்குக் கருவிகள் வாங்க ரூ, 0,50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ரி-ரிக்கார்டிங் பிரிவிற்கு ஒலிக் கருவிகள் வாங்க 0.65 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக் காட்சிப் பயிற்சி நிறுவனம் வெள்ளி விழாவைக் கொண்டாட ரூ. 0.50 இலட்சம் வழங்கப்பட்டது. அண்மையில் சென்னையில் நடை பெற்ற 22வது உலகத் திரைப்பட விழாவையொட்டி இந்நிலையத்தின் இரண்டு திரை அரங்கங்களும் மாறுதல் செய்யப்பட்டது.

தற்போது மாணவர்கள் எண்ணிக்கை பின்வருமாறு :

பாடத் திட்டம்.	கால வரையறை,	ஒவ்வொரு ஆண்டும் அனுமதிக்கப் படும் மாணவர்.
(1)	(2)	(3)
	(ஆண்டுகள்)	
1, இயக்குதல். திரைக்கதை எழுதுதல்	3	10
2, திரைப்படப் பதிவு	3	15
3, ஒலிப்பதிவு, ஒலிப்பொறியியல்	3	10
4, படச்சுருள் கழுவுதல்	3	10
5, படத்தொகுப்பு	3	10
6, நடிப்பு (சான்றிதழ் பெறும் பயிற்சி)	1	20

(மாணவர்கள் 10 பேர் மாணவியர் 10 பேர்)

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு :

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு 1968 ஆம் ஆண்டு அரசுக்காகச் செய்திப் படங்கள் தயாரிக்கும் நோக்கத்துடன் தொடங்கப்பெற்றது. கருப்பு வெள்ளையில் மட்டும் தயாரிக்கப்பட்டு வந்த செய்திப் படங்கள் வண்ணத்தில் தயாரிக்கப்படத் தொடங்கின ஆயிரம் அடி நீளமுள்ள 5 நிமிடம் ஓடக்கூடிய படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

செய்திப் படங்கள் மக்கள் எல்லோரையும் தக்க நேரத்தில் சேரும் வண்ணம் 1418 பிரதிகள் 200 பிரதிகளாக அதிகரிக்கப்பட்டு இந்தியத் திரைப் படப்பிரிவின் மூலமாகத் தமிழகத்தில் உள்ள சுமார் 2,500 திரையரங்குகளுக்கு ம் தமிழ்நி முன்றியில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன, இந்த விநியோக முறையில் ஏற்படும் காலதாமதம் படப் பிரதிகளுக்கேற்படும் பாதிப்புகள் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு மாநில அரசே நேரிடையாக விநியோகிப்பது பற்றி மத்திய அரசின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது, இது காறும் தமிழ்நாடு திரை படப் பிரிவு 356 செய்திப் படங்கள் தயாரித்துள்ளது,

காட்சி விளக்கப் படங்கள் :

செய்திப் படங்கள் தயாரிப்பில் சிறப்புற்ற பின்னர் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு காட்சி விளக்கப் படத் தயாரிப்பில் ஈடுபட்டு வருகிறது, அரசின் பல்வேறு துறைகளுக்காக, மக்கள் நலம், சமூக நலம், வேளாண்மை, பொருட் சுகாதாரம், வனவாழ்வியல், மாசுக்கட்டுப்பாடு, சமூக நலக்காடுகள் போன்ற பொருள்களில் அத்தத் துறைகளின் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப 35 மி.மீ, மற்றும் 16 மி.மீ, அகலத் திரைப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதுகாறும் 90 காட்சி விளக்கப் படங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளன. ஏழு படங்கள் தயாரிப்பில் உள்ளன. இக்காட்சி விளக்கப் படங்கள் செய்திப் படங்களுடன் சேர்த்துத் திரையரங்குகளில் காட்டப்படுகின்றன,

வானொலி பிரிவு (வீடியோ) :

1988 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு வானொலிப் பிரிவில் இறங்கியுள்ளது. ரூ, 30 இலட்சம் செலவில் இரண்டு வண்ண மாவிட்டர் கருவிகளும் ரூ, 1,20 இலட்சம் செலவில் வீடியோ புரொஜெக்டர் கருவியும் 1989 ஆம் ஆண்டு வாங்கப்பட்டது, 1990 ஆம் ஆண்டு வீடியோ காமிரா வாங்க ரூ, 7,50 இலட்சமும் சிறப்புக் கருவிகள் வாங்க ரூ, 10 இலட்சமும் அரசு வழங்கியுள்ளது, ரூ, 11,83 இலட்சம் செலவில் ஒரு வீடியோ அரங்கம் கட்டப்பட்டு வருகிறது, கட்டிடப் பணிகள் முடிக்கப்பட்டு மின்சாரம் குளிர்சாதனப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, வீடியோ செய்திப் படங்கள் 1989 ஆம் ஆண்டு முதல் தயாரிக்கப்பட்டு வருகின்றன, வீடியோ செய்திப் படங்கள் 60 முதல் 90 நிமிடங்கள் ஓடக் கூடிய அளவில் தயாரிக்கப்பட்டு 870 பிரதிகள் எடுக்கப்பட்டுத் தமிழகத்தின் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அனுப்பப்படுகின்றன, இவை நிரமப்புற மக்கள் கண்டுகளிக்கும் வகையில் 10 வீடியோ ஊர்திகளில் காட்டப்பட்டு வருகின்றன, இதுகாறும் நான்கு வீடியோ செய்திப்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன,

வீடியோ காட்சி விளக்கப் படங்கள் :

அரசின் பல்வேறு துறைகளுக்காக இதுகாறும் 13 வீடியோ காட்சி விளக்கப் படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 23 படங்கள் தயாரிப்பில் உள்ளன,

வீடியோ செய்தி மலர் :

அரசு நிகழ்ச்சிகள், விழாக்கள் போன்று எறக்குறைய 700 செய்தி மலர்கள் தயாரிக்கப்பட்டு தொலைக்காட்சி நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஒளிப்பதிவுத் துறையுடன் ஒலிப்பதிவுத் துறையிலும் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு ஈடுபட்டுள்ளது, தமிழ்நாடு திரைப்படப் பிரிவு தயாரித்த படங்களில் காட்சி தொகுப்புகள் நிழற்படங்கள் விற்பனை மூலம் வருவாய்க்கு வகை செய்யப்பட்டுள்ளது. இந்தியத் திரைப்படப் பிரிவு மூலம் தமிழகத் திரையரங்குகளில் திரையிடப்படும் செய்திப் படங்கள் வாயிலாக ஆண்டு தோறும் சுமார் ரூ. 20 இலட்சம் வருவாய்பெற்று வருகிறது. பல்வேறு மாநிலங்களின் பல்வகைக் கழகங்களில் பயிலும் மாணவர்கள் தமிழ்நாடு திரைப்படப் பிரிவுக்குத் தங்கள் ஆய்வுப் படிப்புக்காகவும் அனுபவப் படிப்புக்காகவும் வருகை புரிந்தவாறு உள்ளனர்.

தமிழரசு அலுவலகம் :

தமிழரசு'', தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிடப்படும் அரசின் இதழாகும். இவ்விதழ் அரசின் கொள்கைகள், வளர்ச்சிப்பணி நடவடிக்கைகள் பல்வேறு இட்டச் சாதனைகள் ஆகியவற்றை மக்களுக்கு எடுத்துச் சொல்கிறது. தமிழ் இதழ் திங்களிரு முறை 43,000 படிகளும், ஆங்கில இதழ் திங்களொருமுறை 3,500 படிகளும் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. தனிப்பட்ட முகவர்கள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்டங்களில் உள்ள செய்தி, மக்கள் தொடர்பு அலுவலர் மூலமும், சந்தாதாரர்களுக்கு நேரடியாகவும 'தமிழரசு'' பிரதிகள் விற்பனை செய்யப்படுகின்றன.

வெளியீடுகள் :

தமிழரசு அலுவலகத்திலுள்ள வெளியீட்டுப் பிரிவு'' அரசின் திட்டங்களையும், நல வளர்ச்சிப் பணிகளையும் விளக்கிடும் கையேடுகள், துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் ஆகியவற்றை வெளியிட்டு வருகிறது. அரசின் திட்டங்களை மக்களுக்கு விளக்கிச் சொல்லி அவற்றின் சிறப்பான செயலாக்கத்திற்கு மக்களின் நல்லெண்ணத்தையும், ஒத்துழைப்பையும் பெறுவதே நோக்கமாகும்.

முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள், நாடறிந்த கவிஞர்கள், எழுத்தாளர்கள், கலை உலகப் பெருமக்கள் ஆகியோரிடமிருந்து வரப்பெற்ற எழுத்தோவியங்களை தமிழரசு பொங்கல் மலர் போன்ற வெளியீடுகளுக்காக பெற்றுத்தரும் பணிகளையும் மேற்கொண்டுள்ளது.

தமிழரசு அச்சகம் :

தமிழரசு அச்சகத்தில், தமிழரசு'' தமிழ் இதழும் (திங்கள் இருமுறை), ''தமிழரசு'' ஆங்கில இதழும் (திங்கள் இருமுறை) அச்சிடப்படுகின்றன. வழக்கமாக இந்த அச்சேடுகள் தவிர, அழைப்பிதழ்கள், அரசின் சாதனைகளை விளக்கும் சிறு வெளியீடுகள், மடிப்பேடுகள், கையேடுகள் ஆகியவைகளும் தமிழரசு அச்சகத்தில் அவ்வப் போது அச்சடிக்கப்படுகின்றன.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை முதலில் 1831 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசிதழ்களை மட்டுமே அச்சிடுவதற்காக 10 தொழிலாளர்களுடன் தொடங்கப்பட்டது. பின்னர் அது படிப்படியாக வளர்ச்சியடைந்து தற்போது 6,243 நபர்கள் 31-3-1990 அன்று பணியாற்றுகிறார்கள். உடல் ஊனமுற்றோர்கள் மற்றும் பார்வை இழந்தோரும் இதில் அடங்குவர். சென்னை மாநகரத்தில் மூன்று அச்சகங்களும், வெளியூர்களில் ஐந்து அச்சகங்களும் இயங்கி வருகின்றன. எழுது பொருட்களை வழங்க எழுது பொருள் கிடங்கும் அரசு வெளியீடுகளை விற்பனை செய்ய இரண்டு நிலையங்களும் சென்னையில் இயங்கி வருகின்றன.

இத்துறையால் செய்யப்படும் பணிகள் :

பணியாளர் நிருவாகம், தொழில் உறவுகள், பொது நிருவாகம், மைய நிருவாக அமைப்பு, இயந்திரங்கள் வாங்குதல், அச்சுப் பிரிவுகளுக்குத் தேவையான பொருட்களைக் கொள்முதல் செய்தல், மாநிலத்திலுள்ள அரசுத்துறை அனைத்திற்கும் தேவைப்படும் எழுதுபொருட்கள், தட்டச்சுப் பொறிகள், படிபெருக்கிகள், சுணக்கேட்டுப் பொறிகள் முதலியவற்றைக் கொள்முதல் செய்து வழங்குதல் போன்ற பணிகள், தலைமைச் செயலகம், துறைத் தலைவர்கள், தமிழ்நாடு மாநிலக் கணக்குத் துறைத் தலைவர், அரசுத்துறை நிறுவனங்கள் ஆகியவை ஒப்படைக்கும் அச்சுப்பணிகள், வரவு-செலவுத் திட்ட ஆவணங்கள், தமிழ்நாடு அரசிதழ் மறைபொருள், தனி அறிக்கைகள், விதிக் கோவைகள், நடைமுறை நூல்கள், வாக்குச் சீட்டுகள், பொதுத் தேர்வுகளுக்கான விவாத்தாட்கள் போன்ற மிகவும் இரகசியத் தன்மைவாய்ந்த இனங்கள், நிலைப் படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் அச்சிடுதல் ஆகிய பணிகள், எழுதுபொருள் அச்சுத் துறையின்கீழ் வருகின்றன.

மற்ற அரசு கிளை அச்சகங்களில் மாவட்ட அரசிதழ்கள், நிலைப்படுத்தப்பட்ட் படிவங்கள், வரைதாட்கள், நில அளவை, நிலவரி ஏற்பாடுகள், ''ஓ'' பதிவேடுகள் அனுமதிச்சீட்டு, மாநிலக் கணக்காயரின் தணிக்கை அறிக்கைகள், பொதுப்பணித்துறை அட்டவணை வீதங்கள், மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு உரிமங்கள் போன்ற இனங்கள் அச்சிடப்படுகின்றன.

1989-90 ஆம் ஆண்டில் ரூ. 5.37 இலட்சம் செலவில் இயந்திரங்கள் வாங்கப் பட்டன. ரூ. 21.36 இலட்சத்தில், திருச்சி கிளை அச்சகம் இயங்க துவாக்குடியில் ஒரு புதிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

1990-91 ஆம் ஆண்டில் தலைமைச் செயலகத்தில் நிதித்துறையின் வரவு செலவுக் கணக்குகளைக் கணக்கிட்டு இயந்திரம் மூலம் செயல் படுத்துவதால் மத்திய அச்சகத்தில் அச்சடிக்கத் தேவையான தளவாடங்களை ரூ. 129.75 இலட்சத்திற்கு வாங்க அரசினர் ஒப்பளிப்பு அளித்துள்ளனர். மேலும் அரசு மத்திய அச்சகத்தில் மேற்படி நவீனமாக்கும் திட்டத்திற்கான கட்டுமானப் பணிகளுக்காக ரூ. 10.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அரசு அச்சகங்களிலுள்ள தொழிலாளர்களின் பணி நிலைமையையும், அச்சகங்களில் உள்ள பணிச்சுமைக்கு உகந்தாற் போல் தேவைப்படும் மனித ஆற்றல் மற்றும் இயந்திரங்கள் பற்றியும் அச்சகங்களில் புதிய தொழில் நுணுக்கங்களைப் புகுத்துதல் பற்றியும் பிறவற்றைப் பற்றியும் ஆய்வு செய்ய திரு. கே. மலைச்சாமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வல்லுநர் குழு தனது அறிக்கையை அரசினருக்கு சமர்ப்பித்துள்ளது.

சுற்றுலா.

சுற்றுலாத் தொழில் நாட்டுக்கு இன்றியமையாத அந்நியச் செலவாணியை ஈட்டித் தரும் வருவாயை பெருக்குகிறது.

வெளி நாட்டுப் பயணிகள் அதிக அளவில் இந்தியாவிற்கு வருகை தருகின்றனர். 1989 ஆம் ஆண்டு 13,37,232 அயல்நாட்டுப் பயணிகள் வந்தனர். இது 7.8 சதவீதம் 1988 ஆம் ஆண்டில் வருகையை (12,39,992) காட்டிலும் அதிகமாகும். தமிழ்நாட்டை பொறுத்தவரையில் 1986 ஆம் ஆண்டைக் காட்டிலும் (3,58,800) 6.3. சதவீதம் அதிகமாகும். 1989 ஆம் ஆண்டு வெளிநாட்டுப் பயணிகளில் வருகை (3.79,378) ஆக உயர்ந்துள்ளது.

சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருவதால் தங்குமிடம், பயணம், போக்குவரத்துத் தொடர்புகளின் வசதிகளில் தேவை அதிகரிப்பது அவசியமாகிறது. வெளிநாட்டுப் பயணிகள அதிகமாக வருவதினால் போக்குவரத்து தொடர்பு, உணவு விடுதிகள், பயண முகவர்கள் ஆகிய நிறுவனங்களில் அதிகமான வேலை வாய்ப்பு வசதிகளைக் கொடுக் கிறது. நிட்டமிடப்பட்ட மைய அரசிடமிருந்து பெறப்பட்ட தேவையான உதவிகளைக் கொண்டு வெளிநாட்டுப் பயணிகளைத்தமிழ்நாட்டுக்கு ஈர்ப்பதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை அளிப்பதற்கு மாநில அரசால் பல நடவடிக்கை எடுக்கப்படு கிறது.

திட்டமிதல்களும் திட்டங்களும் :

மத்திய அரசு உதவித் திட்டம் :

1989–90 ஆம் ஆண்டு மத்திய அரசு சுற்றுலாத் துறை ரூ. 22.16 லட்ச மதிப்பீட்டு செலவில் ஸ்ரீபெரும்புதூரில் சாலையோர வசதிகள் செய்வதற்கு நிதி உதவி செய்துள்ளது. இந்த ஆண்டில் கீழ்க்கண்டவைகள் துவக்கப்பட்டுள்ளன :—

1. கன்னியாகுமரியில் கடற்கரை குடில்கள்.

2. நாகப்பட்டினத்தில் யாத்ரி நிவாஸ் (ஒட்டல் தமிழ்நாடு).

3. குற்றாலத்தில் உணவு விடுதி மற்றும்

4. காஞ்சிபுரத்தில் யாத்ரி நிவாஸ் (ஒட்டல் தமிழ்நாடு).

மத்திய உணவு திட்டம் இந்த ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டன. அவைகள்.

(அ) மேட்டுப்பாளையம் மேல் மருவத்தூர் பழனி ஆகியவூர்களில் சாலை ஓர வசதிகள்.

(ஆ) கடலூரில் வன விடுதி.

(இ) கன்னியாகுமரியிலுள்ள விவேகானந்தர் நினைவுப் பாறையில் ஒளி வெள்ளம் அமைத்தல், கன்னியாகுமரி சுற்றுலா வளாகத்தில் சுய சேவை உணவு விடுதி அமைத்தல்.

(ஈ) கடலூரில் சுய வேலை உணவு விடுதி அமைத்தல்.

(உ) பாபநாசம் படித்துறையில் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகள் செய்தல்.

(ஊ) பிச்சாவரம், சிதம்பரம், தரங்கம்பாடி மற்றும் பூம்புகாரில் ஒருங் கிணைப்பு மேம்பாட்டுக்காக பெருந்திட்டம் தயாரித்தல்.

அதே ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்கள் பாகம் 2–ன் கீழ் எடுத்துக் கொளளப்பட்டன.

1. ரூ. 3 லட்சம் செலவில் தரங்கம்பாடியிலுள்ள ஆளுநர் மாளிகையை புதுப் பித்து பாதுகாத்து அழகுபடுத்துவதற்கு.

2. ரூ. 5 லட்சம் செலவில் கன்னியாகுமரி, மதுரை (பிரிவு 1) கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் ஆகிய ஊர்களில் உளள '' ஒட்டல் தமிழ்நாடு '' களின் வசதி களை அபிவிருத்தி செய்வதற்கு

குறித்த நகர்களில் மேம்பாட்டுத் திட்டத்தின் (HADP) கீழ் ரூ. 12 லட்சம் 1989–90 ஆண்டு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் குடிநீர், கழிப்பறை, உடைமாற்ற அறை, பேருந்து நிலையில் போன்ற வசதிகள் மாநில அளவில் சுற்றுலா மையங்களில் அனைத்து மாவட்டங்களை உளடக்கி மாவட்ட சுற்றுலா மையங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதுவரை 16 மையங்களில் மேம்பாட்டுக்காக ரூ. 50.50 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மேம்பாடு மற்றும் விளம்பரம் :

விளம்பரத்தின்கீழ் வெவ்வேறு சுற்றுலா இடங்களைப் பற்றி மடிப்பேடுகளும், 6 வகையான வண்ணச் சுவரொட்டிகளும் இத்துறையினால் தயாரிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா பயணிகளின் வருகையை அதிகரிக்கும் வகையில் மேலை நாட்டு பத்திரிகைகளிலும் மற்றும் செய்தித் தாள்களிலும் திட்டமிடப்பட்டு விளம்பரம் (Advertising Campaign) வெற்றிகரமாக துவங்கப்பட்டது. மேலும் இத்துறை, சுற்றுலா மேம்பாட்டின் ஒரு பகுதியாக கீழ்க்கண்ட சுற்றுலா விழாக்களை ஏற்பாடு செய்துள்ளது.

அ. சித்திரைப் பௌர்ணமி, பூம்புகார்.
ஆ. ஆடிப்பெருக்கு விழா, மேட்டூர்.
இ. சாரல் திருவிழா, குற்றாலம்.
ஈ. வல்வில் ஓரி விழா, கொல்லிமலை.
உ. குறிஞ்சி நகர்களில் கோடை விழா மற்றும்

ஊ. முக்கியமான சுற்றுலா மையங்களில் பொங்கல் விழா சுற்றுலா அதிகமான சுற்றுலாப் பயனிகளை ஈர்ப்பதற்கு மேலே கூறிய விழாக்கள் கொண்டாடப்பட்டன.

மேலும் இத்துறை, மாநிலத்திற்குள்ளும், புது டெல்லியிலும், நடைபெற்ற பொருட்காட்சிகளில் பங்கு பெற்றுள்ளது.

புள்ளி விவரங்கள்:

இத்துறையில், புள்ளி விவரப் பிரிவு திட்டங்கள் தயாரிப்பதற்கு முக்கிய உதவி புரிந்திருக்கிறது,

சாகச சுற்றுலா :

இந்த ஆண்டு 1989 90 சாகச சுற்றுலாவிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. கடின நடைபயணம் (Trekking) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சுற்றுலாத் துறையின் சுட்டுப்பாட்டின் கீழ் திருச்சிராப்பள்ளியில் உணவுக்கலை நிறுவனம் ஹோட்டல் தொழிலின் வெவ்வேறு வகையில் தொடர்ந்து பயிற்சி அளித்து வருகிறது.

ஓட்டல் தொழில் :

23 தங்குமிடத் திட்டங்களுக்கு இந்நிதி உதவிக்காகவும். 7 தங்குமிடங்களுக்கு (Hotel) (Fl Licence) மது வழங்க அனுமதிப்பதற்கும் அனுமதிப்பதற்கும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது,

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் :

தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்தும் முகத்தான வர்த்தக முறையில் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் (வரையறுக்கப்பட்டது) நிறுவப்பட்டது,

ஆரம்பத்தில் தமிழக அரசிடமிருந்து 5 சுற்றுலா மாளிகைகளை எடுத்துக் கொண்டது ஆரம்பத்தில் இரு நோக்கங்களை செயல்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக

(வி) தங்குமிடம் வசதி செய்தல் மற்றும்

(ஆ) ஒட்டு மொத்தப் பயணத் திட்டம் நடத்துதல் (Package Tour) 1989 90 ஆம் ஆண்டு மேற்கண்டவைகள் துவங்கப்பட்டன.

1. யாத்ரி நிவாஸ். காஞ்சிபுரம்.

2. இளைஞர் விடுதி. உதகை.

3. ஓட்டல் தமிழ்நாடு. நாகப்பட்டினம்.

மதுரையிலுள்ள ஓட்டல் தமிழ்நாடு சூரிய வெப்பநீர்த் திட்டம், 1989-90 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு எரிபொருள் சக்தி சேமிப்பதை நிரூபிக்கப்பட்டது.

குளிர்ச்சாதன வசதியுடன் பெரிய பேருந்துகள் இரண்டு சிறிய பேருந்துகள் ஐந்து. குளிர்சாதன வசதியற்ற சிறிய பேருந்து ஒன்று மற்றும் குளிர் சாதன வசதியுள்ள மூன்று சிருந்துகள் (cars) உடன் 26 உல்லாச வண்டிகளைத் தன்னகத்தே கொண்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பயணிகளுக்கு சேவை செய்து வருகிறது.

மேலே குறிப்பிட்ட உல்லாச வண்டிகளையும். வண்டிகளைப் பராமரிப்பதற்கு தேவையான தொழில் நுட்ப தகுதியுடையவர்களை வேலைக்கு அமர்த்தி சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சொந்தமாக மோட்டார் வண்டிகள் பராமரிக்குமிடம் (Garage) ஒன்று வைத்துள்ளது. இந்த ஆண்டில் சென்னைக்கு அருகிலுள்ள பறவைகள் சரணாலயம் மற்றும் வண்டலூர் உயிரியல் பூங்காவையும். அதிகமான பயணிகளைக் கவரும் வண்ணம் பயணத்திட்டம் (Conducted Tours) சேர்க்கப்பட்டுள்ளது.

பொருட்காட்சி :

சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சி நடத்துவது சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலையாய பணிகளில் ஒன்று, 1989-90 ஆண்டு இப்பொருட்காட்சி நடத்தியதன் மூலம் ரூ, 76,00 லட்சம் ஈட்டியுள்ளது.

மாநில அரசின் முதலீடு ரூ, 2,79 கோடியாக இருக்கையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பங்கு முதலீடு ரூ, 7 கோடியாகும், மொத்தமாக 1.007 ரூபாய்கள் இந்நிறுவனத்தின் தமிழகம் முழுவதும் வேலை செய்கின்றனர்.

அத்தியாயம் 17.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை.

(i) பயிற்சித்துறை.

கீழ்க்கண்ட திட்டங்கள் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்கத்தினரால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன,

---

கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் தரமான பயிற்சி கைவினைஞர் பெறும் செயல் திறமைக்கு நேரிடை தொடர்புடையது,

(i) வளர்ந்து வரும் நவீன தொழில் நுட்பத்திற்கு ஏற்றாற்போல் புதிய தொழில் பிரிவுகளை உரிய இடங்களில் அறிமுகப்படுத்துவது இன்றியமையாதது ஆகும், எனவே பயிற்சிக்கான உபகரணங்களும் கருவிகளும் நவீனமாக்கப்படுதலும், இன்றியமை யாதது ஆகும்,

(ii) உலக வங்கி உதவியின் கீழ் நவீனப்படுத்தும் திட்டமும் தொழில் நுட்ப மேம் படுத்தலும் :

இத்திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட 9 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ரூ. 21.74.41 லட்சம் என்ற மொத்த மதிப்பீட்டில் 1989–90 முதல் 1994–95 வரை யிலான காலத்துக்குள் படிப்படியாக இவை செயல்படும்,—

(1) தொழில் பயிற்சி நிலையங்களை நவீனப்படுத்துதல்,

(2) இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களை பராமரிக்க 6 பராமரிப்பு மையங் களையும் மாநில அளவிலான ஒரு பராமரிப்புப் பணிமனையையும் ஏற்படுத்துதல்,

(3) வகுப்பறை போதனா முறையை மேம்படுத்தும் வகையில் 38 தொழிற் பயிற்சி நிலையங்களில் ஒலி. ஒளி அமைப்புச் சாதனங்கள் வழங்குதல்,

(4) இரண்டு புதிய தொழிற் பிரிவுகளை அறிமுகப்படுத்துதல் மூலம் 16 தொழித் பயிற்சி நிலையங்களை விரிவுபடுத்துதல்.

(5) வேதியியல், தோல் மற்றும் உணவு வகை தொழில் நுட்பம் ஆகிய தொழிற் பிரிவுகளுக்காக ஒரு அடிப்படை பயிற்சி மையத்தை ஏற்படுத்துதல்,

(6) தொழில் பழகுநர் பயிற்சியை மேம்படுத்தும் வகையில் நான்கு தொடர் அறிவுரை மையங்கள் ஏற்படுத்துதல்.

(7) கோயம்புத்தூர். தொழில் பயிற்சி நிலையத்திலும் வாழ்வியற் முன்னேற்ற பயிற்சித் திட்டத்தினை விரிவுபடுத்துதல்.

(8) சேலம். திருச்சி. கோவை. மதுரை மற்றும் செங்கை ஆகிய இடங்களில் மகளிருக்காக 5 புதிய தொழிற் பயிற்சி நிலையங்களை மூன்று தொழில் பிரிவுகளுடன் தொடங்குதல்.

(9) உலக வங்கி திட்டத்தினை செயல்படுத்துவதற்காக திட்ட செயலாக்கப் பிரிவு ஒன்று இயக்ககத்தில் நிறுவுதல்.

தொழில்நுட்பப் பணியாளர்களுக்கான விரைவு முன்னேற்ற பயிற்சித் திட்டம் :

மின்னணுவியல் பொருட்கள் சம்பந்தமாக தொழிற்நுட்பம் பணியாளர்களுக்கான விரைவு பயிற்சி முன்னேற்றத் திட்டம் முழுநேர அளவில் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் அம்பத்தூர். கோயம்புத்தூர், மதுரை, நாகப்பட்டினம் மற்றும் தேனியில் 1987-ம் ஆண்டிலும், ஒஞ்பேட்டை, எஸ்.எம்.ஆர்வி (மகளிர்),நாகர்கோவிலில் 1988-ம் ஆண்டிலும் 1990-ல் அரக்கோணத்திலும் 6 மாத பயிற்சித் திட்டமாக அறிமுகப்படுத்தப் பட்டது.

தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்புத் திட்டம் :

தொழிற்சாலையில் பணிபுரியும் பணியாளர்களுக்காக இத்திட்டத்தில் 8 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் 1475 தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தில் 11 தொழில் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டம் :

தொழில் பழகுநர் சட்டம் 1961 ன்னின் கீழ் 130 தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது, பிரிவுகளிலு பல்வேறு தொழில் நிறுவனங்களில் தொழில் பழகுநர் களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது,

அரசு இளைஞர் வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம் :

இத்திட்டம் இத்துறையால் தொழில் நுட்பம் 1979 முதல் நடத்தப்பட்டு வரு கிறது, 35 அரசு தொழில் பயிற்சி நிலையங்களில் 22 தொழில் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது, ஒவ்வொரு பயிற்சியாளர்களுக்கும் தலா ரூ. 500, பெறுமான கருவிப் பெட்டி இலவசமாக வழங்கப்படுகிறது.

உற்பத்தி சார்புப் பயிற்சித் திட்டம் :

இத்திட்டம் அம்பத்தூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய 3 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் அமுலாக்கப்பட்டு வருகிறது. அரசு மற்றும் தனியார் தொழில் நிறுவனங்களிடமிருந்து பணிகள் பெறப்பட்டு அவைகள் ஆக்கப்பெற்ற பொருட்களாக செய்து தரப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஊக்கத் தொகையில் 50 சதவீதம் பணியாளர்களுக்கும், பயிற்சியாளர்களுக்கும், வழங்கப்படுகிறது.

பிளாஸ்டிக் வழிமுறை பணியாள் குழைம வழிமுறை செயலாளர். (Plastic Processing Operator Trade)

இத்தொழில் பிரிவு அரசினர் தொழில் பயிற்சி நிலையம், ஆகஸ்ட் 1989-ல் கிண்டியிலும், ஆகஸ்ட் 90-ல் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் கோவையிலும் துவக்கப்பட்டது.

இளநிலை பயிற்சி அலுவலர்களை மத்திய பயிற்சி நிலையத்திற்கு பயிற்சிக்கு அனுப்புதல் :

ஒவ்வொரு வருடமும் அரசினர் தொழில் பயிற்சி நிலையத்தில் பணியில் அமர்த்தப் படும் இளநிலை பயிற்சி அலுவலர் Advance Training Institute Central Training Institute நிலையங்களில் ஒரு வருட பயிற்சிக்கு அவர்களின் செயல் திறன் மற்றும் உளச் சார்பு முன்னேற்றத்திற்காக அனுப்பப்படுகிறார்கள். 25 இளநிலை பயிற்சி அலுவலர்கள் இவ்வருடம் மத்திய பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற வேண்டும்.

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் தொடர் அறிவுரை :
மையங்களுக்கு மரச்சாமான்கள் கொள்முதல் செய்தல் :

வகுப்பறை மரச்சாமான்கள் கொள்முதல் செய்வதற்காக ரூ. 1.50 இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் (மகளிர்) கிண்டிக்கு நிரந்தரக் கட்டிடம் கட்டுதல் :

அரசினர் தொழில் பயிற்சி நிலையம் (மகளிர்) கிண்டி, 1988 ஜுன் வரை வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவந்தது. அதற்கு பிறகு அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் (ஆண்கள்) கிண்டி வளாகத்திற்கு மாற்றப்பட்டது. இந்நிலையில் சொந்தக் கட்டிடம் இல்லாததால் பயிற்சியாளர்களும், பணியாளர்களும் பலவித இன்னல்களுக்குட்பட்டனர். அரசு ரூ.42.00 இலட்சம் செலவில் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் (மகளிர்) கிண்டிக்கென கட்டிடம் கட்ட அனுமதித்தது. நடப்பு (89-90-ம்) ஆண்டில் ரூ. 20.00 லட்சம் செலவிட அனுமதிக்கப்பட்டுள்ளது. கட்டிட வேலை நடைபெற்று வருகிறது.

அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் (மகளிர்), சேலம் ஆரம்பித்தல் :

அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு ஆகஸ்ட் 90-ல் சேர்க்கை நடை பெறும்.

இயக்ககத்தில் எஸ். பி. ஐ. யூனிட் ஏற்படுத்துதல் :

இத்துறையில் பயிற்சிப் பிரிவில் உலக வங்கிக் கடனுதவித் திட்டத்தின் கீழ் செயல் படும் திட்டங்களைக் கண்காணிக்க ரூ. 30.69 இலட்சம் செலவில் இயக்ககத்தில் எஸ்.பி ஐ. யூனிட் ஏற்படுத்தியுள்ளது.

அகில இந்திய தொழில் தேர்வு :

அகில இந்திய அளவில் நடந்த 25-வது திறனாய்வுத் தேர்வில் 12 தொழில் பிரிவுகளிலும் தமிழக அரசினர் தொழில் பயிற்சி நிலைய பயிற்சியாளர்கள் முதன்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதால் தமிழகம் அகில இந்திய அளவில் முதன்மையான மாநிலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

மாலியம் பெறும் தனியார் தொழில் பள்ளிகள் :

மாநிலத்திலுள்ள 175 தனியார் தொழிற் பள்ளிகள் 11,600 மாணவர்கள் பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளில் பயிற்சி பெறுகிறார்கள். இவ்வாண்டு 20 புதிய தொழிற் பள்ளிகளுக்கு மாநில அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(ii) வேலை வாய்ப்பு.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் வேலைவாய்ப்பு பிரிவினைப் பொறுத்தவரை நான்கு மண்டலத் துணை இயக்குநர்களின் அலுவலகங்கள் உள்பிரிட்ட 19 அலுவலகங்கள் தொடர்ந்து இயங்கி வருகிறது.

1. வேலை வாய்ப்பு அலுவலகங்களில் புள்ளி விவரங்கள் :

1—4—1989 முதல் 31—3—1990 வரையிலான காலத்தில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் மொத்தம் 6,63,049 விண்ணப்பதாரர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர். இந்த அலுவலகங்களுக்கு மொத்தம் 66,814 பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. 47,249 விண்ணப்பதாரர்கள் பணிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். 31—3—1990 தேதிய நிலவரப்படி மொத்தம் 30,27,759 விண்ணப்பதாரர்கள் அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களில் உயர் பதிவேட்டிலும் காத்திருக்கிறார்கள்.

2. வேலை நிலவரத் தகவல் :

வேலைவாய்ப்பு அலுவலகம் (சட்டப்படி காலியிட அறிவிப்புச் சட்டம்) 1959-ன்படி வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வேலை நிலவரத் தகவல்களை பல்வேறு நிறுவனங்களிலிருந்து, காலாண்டு இடைவெளியில் திரட்டுகின்றன.

காலாண்டு இடைவெளியில் தொகுக்கப்படுவதால், ஒவ்வொரு பிரிவிலும் வேலைவாய்ப்புகளில் தொடர்ச்சியாக ஏற்படும் மாற்றங்களை அளவிடும் அளவுகோலாக, இவை உதவுகின்றன. இத்தகவல்கள் மாநில மற்றும் தேசிய அளவிலான திட்டமிடல் மற்றும் நிர்வாக முறைகளுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளன.

3. தொழில் முறை வழிகாட்டும் திட்டம் :

மாணவர்கள் மற்றும் வேலை தேடுவோரிடையே தொழிலுக்கான திட்டமிடும் எண்ணத்தை பரப்பும் வகையில் உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் தொழில்முறை வழிகாட்டும் கண்காட்சிகள் அனைத்து மாவட்டந்திலும் நடத்தப்படுகின்றன. இத்தகைய கண்காட்சிகள் அனைத்து மாவட்டங்களிலும் 15 கண்காட்சிகள் நடத்தப்பட்டது.

4. தொழில் நெறி ஆய்வும் புத்தகங்கள் மற்றும் கையேடுகள் வெளியீடு :

பதிவுதாரர்களுக்கும், பொதுமக்களுக்கும் பயனளிக்கத்தக்க பல்வேறு தலைப்புகளில் கலெரொட்டிகள் மற்றும் வரைபடங்கள் இவ்வியக்கத் திரை அச்சுப் பிரிவில் வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்படுகின்றன.

வேலை வாய்ப்பு அலுவலகப் பணிகளை கம்ப்யூட்டர் மூலம் மேற்கொள்ளுதல் :

மத்திய திட்டத்தின் கீழ், சென்னை, கோவை மற்றும் திருச்சி வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகளை கம்ப்யூட்டர் மூலம் மேற்கொள்ளும் திட்டத்திற்கு மத்திய அரசின் நிதி உதவியுடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

வேலை தொடர்பு அலுவலர் :

தாயகம் திரும்பிய அகதிகளின் வேலைவாய்ப்பு, பயிற்சி மற்றும் நிதி உதவி தொடர்பாக இவ்வலுவலர் அலுவலகங்களுடன் நேரடித் தொடர்புகொண்டு தாயகம் திரும்பியவர்களுக்கு உதவி வருகிறார்.

தாயகம் திரும்பியோரை இவ்வறிக்கை ஆண்டில் தொழில் பழகுநர் பயிற்சிக் காலியிடங்களுக்கு பரிந்துரை செய்ததுடன் ஆடைகள் மற்றும் உள்ளடக்கிகள் தயாரிப்பு, மீன்பிடித்தல் போன்ற தொழில் பயிற்சிகள் பெறவும் உதவப்பட்டது.

தாயகம் திரும்பியோரிடமிருந்து இவ்வறிக்கைக் காலத்தில் வேலைவாய்ப்பு உதவி மற்றும் பயிற்சி கோரி 3,127 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவற்றின் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

வேலை வாய்ப்பு அற்றோர் நிவாரணத் திட்டம் :

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் உயிர்ப் பதிவேட்டில் 5 ஆண்டுகளுக்கும் மேலாக காத்திருக்கும் கீழ்க்கண்ட 7 பிரிவினருக்கும் (இவர்களில் குடும்ப மாத வருமானம் ரூ. 2,000-க்கு குறைவாக இருக்குமானால்) வேலை வாய்ப்பற்றோர் நிவாரணம் அளிக்கும் திட்டம் 1-7-1980 முதல் அமுல்படுத்தப்பட்டு வந்தது.

(1) பட்டதாரிகள்/முதுநிலைப் பட்டதாரிகள்.

(2) இடைநிலை தர ஆசிரியர்கள்.

(3) உயர் தொடக்க நிலை ஆசிரியர்கள்.

(4) உடற்பயிற்சி ஆசிரியர்கள் (உயர் தொடக்கநிலை/தொடக்கநிலை).

(5) தமிழ் ஆசிரியர்கள், பிறமொழி ஆசிரியர்கள்.

(6) கைவினைப் பயிற்சி ஆசிரியர்கள்.

(7) பொறியியல் பட்டயம்பெற்றவர்கள்.

8. சுய வேலை வாய்ப்புத் திட்டங்கள் :

கீழ்க்கண்ட திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த அறிக்கைக் காலத்தில் இவ்வியக்கத்தில் இயங்கும் சுய வேலை வாய்ப்பு பிரிவு கீழ்க்காணும் வகையில் சுய வேலைவாய்ப்பு திட்டங்களை செயல்படுத்தி யுள்ளது.

(அ) வீட்டுச் சேனை மையம் அமைத்தல் :

தொழில் பயிற்சி பெற்றோரிடையே சுய வேலைவாய்ப்பு முயற்சியை ஊக்கு விப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின்கீழ் சென்னையில் 9 மையங்களும், வெளி மாவட்டங்களில் 14 மையங்களும் இயங்கி வருகின்றன. இத்திட்ட காலத்தில் தஞ்சாவூரில் ஒரு மையம் துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 69 தொழில் நுட்பப் பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

(ஆ) தொழில் நுட்ப பயிற்சி சான்று பெற்றவர்களிடையே சுய வேலைவாய்ப்பை மேம்படுத்துதல் :

இத்திட்டத்தின் கீழ் தொழில் நுட்ப பயிற்சிச் சான்று பெற்றவர்கள் சுய வேலைவாய்ப்புத் தொழில் துவங்க குடும்பத்தில் ஒருவர் வேலைத் திட்ட நிதியிலிருந்து ஒருவருக்கு கடன் தொகையில் நாலில் ஒரு பங்கு அல்லது அதிக பட்ச மானியமாக ரூ. 2,000 உடன் அதிக பட்ச கடன் ரூ. 10,000 வரை வங்கிகள் மூலம் வழங்க அரசு அனுமதி அளித்ததின்பேரில் 36 நபர்கள் பயனடைந்து உள்ளார்கள். ரூ. 6.66 இலட்சம் மானியத்துடன் ரூ. 3.18 லட்சம் கடனுதவியாக ஒதுக்கப் பட்டது.

(இ) சுய வேலைவாய்ப்பு மேம்பாட்டுப் பிளவுகள் வேலூர் மற்றும் கோயம்புத்தூர்.

இப்பிரிவுகளின் முயற்சியின் காரணமாக சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தொழில் துவங்க 274 நபர்களுக்கு ரூ. 46.76 இலட்சம் வங்கிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. 1989-ம் ஆண்டில் மட்டும் இப்பிரிவுகள் மொத்தம் 3,920 மனுதாரர்கள் சுயவேலை வாய்ப்புக்காக பதிவு செய்திருந்தனர். அவர்களில் 3,265 மனுதாரர்கள் பெயர்களை வங்கிகள் மற்றும் மாவட்ட தொழில் மையங்களுக்கு நிதி உதவி வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர்.

9. ஆதி திராவிட பழங்குடியினருக்கான நல்வாழ்வுத் திட்டங்கள் :

பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் சேரும் பொருட்டு நடத்தப்படும் நுழைவுத் தேர்வுகளில் கலந்து கொள்ளும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த மாணவர்கள் பயன்பெறும் வகையில் அவர்களின் பயிற்சி வகுப்புகள் நடத்த அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, இப்பயிற்சி வகுப்புகள் சென்னை, கோயம்புத்தூர் திருநெல்வேலி மற்றும் திருச்சி ஆகிய நான்கு மண்டல மையங்களில் நடத்தப் பட்டன.

மேலும் ஆதிதிராவிட/பழங்குடியினர் பயன் பெறுவதற்கென கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி மற்றும் வேலூர் நகரங்களில் மொத்தம் நான்கு பயிற்சி மற்றும் வழிகாட்டி மையங்கள் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுகின்றன. இம்மையங்கள் மூலம் 5,093 ஆதிதிராவிட/பழங்குடியினர்கள் பயன் அடைந்துள்ளனர்.

மாநில அரசுத் துறைகளில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட பணியிடங்களில் உரிய மனுதாரரை நியமிப்பதற்காக 1–8–1989 முதல் 15–10–1989 முடிய சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் தொடர்பாக 370 பணி காலியிடங்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு அறி விக்கப்பட்டு 2262 மனுதாரர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 166 மனுதாரர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

10. பணியாளர் பயிற்சி :

இந்த அறிக்கை காலத்தில் ஆறு பணியாளர் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, இதன் மூலமாக 4 இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர்கள், 30 உதவியாளர்கள், 10 இளநிலை உதவியாளர்கள், 8 தட்டச்சர்கள், 2 சுருக்கெழுத்துத் தட்டச்சர் களும் பயிற்சி பெற்றனர்.

மேலும் இந்த பணியாளர்கள் பயிற்சிப் பிரிவின் வேலைவாய்ப்பு அலுவலகங் களில் பின்பற்றப்படும் நடைமுறைகளை ஆராய்ந்து அவ்வப்போது தேவை யான ஆணைகள் சார்நிலை அலுவலர்களுக்கு அனுப்பப்படுகின்றன.

11. ஆய்வுகள் மற்றும் மதிப்பீடு ஆய்வுகள் :

இந்த அறிக்கை காலத்தில் 45 சார்நிலை அலுவலகங்களின் வருடாந்திர ஆய்வுகள் இயக்கக அலுவலர்கள் மற்றும் மண்டலத்துறை இயக்குநர்களால் நடத் தப்பட்டது. இது தவிர 200 முன்னறிவிப்பற்ற ஆய்வுகளும், சார்நிலை அலுவலகங்களில் மண்டல துறை இயக்குநர்களால் நடத்தப்பட்டன.

இத்துடன் வேலை நிலவரத் தகவல், தொழில் நெறி வழிகாட்டும் பிரிவுகள், மற்றும் வேலை வாய்ப்பற்றோர் நிவாரணப் பிரிவுகள் ஆகியவற்றின் பணிகள் இயக்கக அலுவலர்களால் மதிப்பீட்டாய்வு செய்யப்பட்டன.

தொழில் நிறுவனச் சட்டங்கள்

தொழிற்சாலைகள் ஆய்வகத்துறை. 1948 ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் 15 இதர தொழிலாளர் சட்டங்களை அமுல்படுத்துகிறது. தொழிற்சாலைகளில் தொழிலாளர் சட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் தொழிலாளர்களின் உடல் நலம் பாதுகாப்பு மற்றும் பணி நிலைமைகள். ஆகியவை உறுதிப்படுத்தப்படுகின்றன,

1987ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (திருத்தப்பட்ட) சட்டம் செயலுக்கு வந்ததினைத் தொடர்ந்து அபாயகரமான இரசாயனப் பொருட்களை உபயோகிக்கும் தொழிற்சாலைக்கு சுகாதாரக்கேடு விளைவிக்கக்கூடிய பெரும் விபத்துக்கள் ஏற்படாத வகையில் நடுப்பு முறையினை முனைப்படுத்துவதில் பெரும் பங்கு கொள்ளப்பட்டுள்ளது. கேடு விளைவிக்கக்கூடிய (hazardus process) தொழிற் சாலைகளில் விபத்துக்கள் ஏற்படுவதற்கான அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகள் ஆகியவற்றை ஆராய்ந்து தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தொழிற் சாலை ஆய்வகத்துறை சட்டம் அமுல் நடத்தும் பிரிவாகவும் சோதனை மற்றும் பாதுகாப்புப் பிரிவாகவும் இரண்டு தொகுதிகளாக அமைக்கப்பட்டுள்ளன,

13 முறைப்படுத்தப்பட்ட (சட்ட அமுல் நடத்தும்) கோட்டங்களும். 10 சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்டங்களும் செயல்படுகின்றன, இத்தொழிலாளர் சட்டங்களினை செயல்படுத்தி நிர்வகிக்க இத்துறையில் முழுப் பொறுப்பினையும் தொழிற்சாலை தலைமை ஆய்வரைச் சாரும். தொழிற்சாலை தலைமை ஆய்வருக்கு உறுதுணையாக ஐந்து தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வர் 28 தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வர்கள், 46 தொழிற்சாலைகள் ஆய்வர்கள் ஒரு மகளிர் தொழிற்சாலை ஆய்வர். 44 தொழிற்சாலைகள் உதவி ஆய்வர்கள் ஒரு அறுவை சிகிச்சை மருத்துவர். எட்டு உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்கள் மற்றும் ஒரு கணக்கு அலுவலர் உள்ளனர்.

2. செயல் முறை :

இத்தொழிற்சாலை ஆய்வகத் துறையின் பணிகளாவன :

(1) தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய தொழிலாளர் சட்டங்களை நிர்வகித்தல் :

தொழிலாளர் சட்டங்களை செம்மையாக செயல்படுத்துவதற்கு இவ்வாய்வகத்துறை சிரிய நடவடிக்கை மேற்கொள்கிறது, ஆய்வின்போது காணப்படும் சட்ட விதிகளின் முரண்பாடுகளை நிர்வாகத்தினருக்கு தெரியப்படுத்தி அதனை களைவதற்கென தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன, கடுமையான முரண்பாடுகளை சுட்டிக்காட்டி அதனை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளாத சூழ்நிலையில் இறுதியாக வழக்கு தொடரப்படுகிறது.

வட்டார அலுவலர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாதந்தோறும் தொழிற் சங்க பிரதிநிதிகளைக் கூட்டி தொழிலாளர்களின் முறைகளை அறிந்து அதனை உடனுக்குடன் ஆய்வர்களால் கவனிக்கப்படுகிறது.

பாதுகாப்பு மற்றும் சுகாதாரமான சூழ்நிலையில் பணிசெய்யும் நிலையை உறுதிப்படுத்த தொழிற்சாலைகளின் வரைபடங்கள் தொழிற்சாலை ஆய்வகத்தினரால் ஒப்புதல் அளிக்கப்படவேண்டியுள்ளது, தொழிற்சாலை கட்டிடத்தின் உறுதித் தன்மை காற்றோட்டம், ஒளி. பணி செய்யும் சூழ்நிலைகள், குறிப்பாக உற்பத்தி செய்யும் முறையில் உள்ள ஆபத்துக்கள், இயந்திரங்கள் அமைப்பு பொருட்களை கையாளும் முறைகள் ஆகிய விவரங்களை கவனத்திற்கொண்டு வரைபடங்கள் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

1988ஆம் ஆண்டு தொழிலாளர் சட்டங்கள் (அறிக்கைகள் அளித்தல் மற்றும் பதிலேடுகள் பராமரித்தல்) சட்டம் குறைந்த தொழிலாளர்கள் பணியாற்றும் நிறுவனங்களுக்கு பதிலேடு பராமரிப்பிலும் அறிக்கைகள் அளிப்பதிலும் விதிவிலக்கு அளிக்க வகை செய்து 1—5—1989 முதல் இம்மாநிலத்தில் நடைமுறைப் படுத்தியுள்ளது, 1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு 19 தொழிலாளர்கள் உள்ளிட்ட தொழிற்சாலைகளுக்கு இச்சட்டம் பொருந்தும், அத்தொழிற்சாலைகள் இச்சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள பதிலேடுகள் மற்றும் அறிக்கைகளை (1) தொழிற்சாலைகள் சட்டம் (2) ஊதியம் வழங்குதல் சட்டம் (3) குறைந்த பட்ச ஊதியச் சட்டம் (4) சம ஊதியச் சட்டம் மற்றும் (5) ஒப்பந்த தொழிலாளர்கள் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம் ஆகியவற்றின்கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள பதிலேடுகள் மற்றும் அறிக்கைகளுக்கு பதிலாக பராமரித்து அனுப்ப செயல்படுகின்றது.

(2) பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பயிற்சி அளித்தல் :

போபாலில் நடந்த துக்கரமான விபத்துக்குப் பின் இந்திய அரசு தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் உடல் நலம் ஆகியவை குறித்து பல தொழிலாளர்கள் நலச் சட்டம் பிரிவுகளை மேலும் கடுமையானதாக மாற்ற விரும்பியது. அவ்வாறு மாறற விரும்பிய தொழிலாளர்கள் நலச் சட்டங்களில் தொழிற்சாலைகள் சட்டமும் ஒன்றாகும். தொழிலாளர் உடல் நலம் பாதுகாக்கவும், அபாயகரமான விளைவுகளால் உடல் நலம் பாதிக்கப்படும் நிலைமை இருப்பின் அதனின்று பாதுகாத்துக் கொள்ள உரிய பாதுகாப்பு நடைமுறைகளை மேற்கொள்ள வகைசெய்யும் தொழிற் சாலைகள் சட்டத்திற்கு 1987-ஆம் ஆண்டு இந்திய அரசு ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வந்தது. தொழில் பாதுகாப்பு என்ற குறிக்கோளை விரிவுபடுத்தி தொழிற்சாலைக்குள் பணியாற்றும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை மட்டும் அல்லாமல் அத்தொழிற்சாலைகளின் சுற்றுப்புறத்தில் குடியிருக்கும் பொது மக்களின் நலனையும், பாதுகாப்பையும் கருத்தில் கொள்ள வேண்டுமென்பதையும் திருத்தச் சட்டத்தில் இடம் பெற்றது.

நம் மாநிலத்தில் அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகள் இயங்கும் ஆறு பகுதிகளை அடையாளம் கண்டுள்ளோம். அவையாவன :—

மணலி, நெய்வேலி, கடலூர், ராணிப்பேட்டை. மேட்டூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களாகும். இந்த இடங்களைப் பொருத்தவரை அபாயகரமான உற்பத்தி முறை வகையாலும் தொழிலாளர்களுக்கு தொழிற்சாலைகளுக்குள் விபத்து ஏற்படாமல் தடுக்கும் முறைகளும், அவ்வாறு விபத்து ஏற்பட்டால் அதனை சமாளிக்கும் முறைகள் உள்ள நடைமுறை திட்டங்களும் (onsite Plan) தொழிற்சாலைகளை சுற்றியுள்ள பகுதியில் எந்தவிதமான பாதிப்பு ஏற்படும்போது மக்களை பாதிப்புக்கு உள்ளாக்காமல் பாதுகாப்பாக வெளியேற்றும் திட்டம், பாதுகாப்பு நடை முறைகள் (Offsite plan) ஆகியவை தீட்டப்படவேண்டும். சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்டம் மற்றும் பெரும் விபத்து தடுப்பு பிரிவும் (The Testing and safety Divisions and Mujor Accident Hazard controll cell) இணைந்து இத்திட்டங்களை தயாரிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

மேற்க்கண்ட இரு குழுக்கள் தலைமைத் தொழிற்சாலை ஆய்வர் பணி அமைப்பில் உறுப்பினர் செயலாளரின் கட்டுப்பாட்டின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(அ) பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்திற்கு மாநில அளவில் உயர் மட்ட முத்தரப்பு பாதுகாப்புக்குழு (State level Hga Power Tripartite Safety Committee) இது மாநிலத்தின் தொழில் பாதுகாப்பு மற்றும்சுகாதாரம் பற்றிய கொள்கைகள் வகுக்கும் மாநில அளவிலான முத்தரப்பு தலைமையிடமாகும்.

(ஆ) மாநில அளவில் வல்லுநர் குழு/பணிக்குழு (State level Expert Committee Task Force) தற்போதுள்ள இரசாயன மற்றும் கேடு விளைவிக்கும் தொழிற்சாலைகளின் போதுமான பாதுகாப்பு நிலைமைகளை மதிப்பிடவும், அன்றாடம் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் பெரும் இன்னல்களைத் தவிர்க்கவும் தகுந்த பாதுகாப்பு நிலைகளை செயல்படுத்த கருத்து தெரிவிப்பது இக்குழுவின் பணியாகும்.

தொழிற்சாலைகளில் சிறந்த பாதுகாப்பு செயல்களை தெரிந்து கொள்ளவும், தொழில் பாதுகாப்பில் ஆழ்ந்த பற்றுகொண்டு இயங்கச் செய்யும் நிர்வாகத்தினர்களுக்கு தமிழக அரசு மாநில பாதுகாப்புப் பரிசுகள் வழங்குகிறது.

விபத்து தவிர்க்கும் நிலைகள், உற்பத்தி திறன் அதிகமாக்குதல், மற்றும் தொழிலில் திறமைகளைக் காட்டுதல் போன்றவற்றில் சிரிய முறையில் பங்கு கொள்ள தொழிலாளர்களை ஊக்கப்படுத்த "ரெம் வீர் " பரிசுகள் வழங்கப்படுகிறது. பாதுகாப்பு பற்றிய கருத்துக்கள், அதிக உற்பத்தி தொழிலில் சிரத்தை மற்றும் வேலை வாய்ப்பு முறையில் புதிய கண்டுபிடிப்பு, முன்னேற்றம் சேதம் மற்றும் விபத்துக்களைக் குறைத்தல், ஆகியவற்றுக்கான கருத்துக்களை எடுத்துக் கூறும் தொழிலாளர்களுக்கு இப்பரிசு வழங்கப்படுகிறது.

அழுத்த இயந்திரங்கள் சோதனைகள் :

தமிழ்நாட்டில் 21,588 (Pressure vessels) அழுத்த இயந்திரங்கள் உள்ளன. தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு அழுத்த இயந்திரத்தையும் தகுதியுள்ள நபர்களால் காலமுறை தோறும் முழுமையாக ஆராய்ந்து அதன் பாதுகாப்புக்காக வேலை செய்யும் தன்மைக்கு தகுதிச் சான்று வழங்க வேண்டுமென தொழிற்சாலை சட்டம் மற்றும் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தொழிற்சாலை ஆய்வகத்துறை இப்பணியினை தாமே செய்து வருகின்றனர். அழுத்த இயந்திரங்களை சோதனை செய்ய சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்களுக்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சுகாதாரப் பராமரிப்பு முறை:

•

சுடும் விபத்து தடுப்புப் பிரிவுடன் (Major Accident Hajard Central Care) இணைந்துள்ள தொழிற்சாலை நுப்புறவு சோதனைக் [illegible]ட்டத்திற்கு அறுவை சிகிச்சை மருத்துவர் ஒருவர் பொறுப்பிலுள்ளார். இவ்வாய்வகத் துறையில் சேலை கோவை, வேலூர், சேலம், • திருச்சி, விகாசி, திருநெல்வேலி மற்றும் மதுரை ஆகிய 8 இடங்களில் உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்கள் பணியாற்றுகின்றனர்.

நடப்பு ஆண்டில் சுகாதாரம் மற்றும் நலவியல் ஆய்வு கூடத்திற்கு பலதரப்பட்ட தொழிற்சாலைகளிலிருந்து காற்றில் பரவும் நச்சுத்தன்மையுள்ள மாசுக்களை மதிப் பிடுவதற்கு நவீன தளவாடங்கள் வழங்கப்பட்டுள்ளன,

பம்பாயில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர் ஆலோசனை சேவை நிலைமை இயக்குநரகத்திலிருந்து பெறப்பட்டுள்ள நவீன தளவாடங்கள் மூலமாக அதிகப்படியான தொழில் சார்ந்த சுகாதார ஆய்வுகள் தொழிற்சாலை நுப்புறவு சோதனை கூடத்தினால் வரும் ஆண்டுகளில் மேற்கொள்ள முடியும்.

ஆய்வின்பொது, தொழிற்கூடம் நலன் மற்றும் தனி நபர் பற்றி பலதரப்பட்ட விற்பவர்களை அணுகி நிர்வாகம், மேற்பார்வையாளர்கள், தொழிலாளர்கள் தெளிவாக்கப்படுகிறார்கள்.

உற்பத்தி திறன் முறைகள் :

உற்பத்தி திறன் 20 அம்சத் திட்டத்தின் கீழ் வரும் ஒரு முக்கிய அம்சமாக இருப்பதால் தொழில் உற்பத்தித் திறனை மேம்படுத்த இந்திய அரசு மிகுந்த கவனம் செலுத்துகிறது.

இத்திட்டத்தைத் திறம்படச் செயல்படுத்துவதற்காக ஒரு தொழிசாலை ஆய்வரின் உதவியுடன் தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வர் (உற்பத்தித் திறன் குழு) பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழுவின் மேலும் இரண்டு உதவி தொழிற்சாலை ஆய்வாளர்கள் நியமித்து உற்பத்தித் திறன் நுணுக்கங்களை விரிவாக செயல்படுத்த வளப்படுத்தப்பட்டுள்ளது.

ஆலோசனை நல்கும் அமைப்பான உற்பத்தித் திறன் குழு உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் அதிக ஆதாரங்களைப் பயன்படுத்துதல், வீணாவதை நீக்குதல், கால ஆய்வு/இயக்க ஆய்வு நடத்துவதன் மூலம் பணிக்கோட்பாடுகளை வரை யறுத்தல், வேலை பகுப்பாய்வு வேலை பாதுகாப்பு பகுப்பாய்வு நடத்துதல், பரிசு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வருதல், தொழிலாளர்களுக்கும் மேற் பார்வையாளர்களுக்கும் முறையான பயிற்சி அளித்தல் போன்ற பணிகளைப் புரியும்.

சென்னை உற்பத்தித் திறன் குழுவின் ஆட்சிக் குழுமத்தில் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வரும், கோவை, மதுரை, சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள பிராந்திய உற்பத்தித் திறன் குழுவின் ஆட்சிக் குழுமத்தில் அப்பிரதேச எல்லையிலுள்ள தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வர் தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வர் உறுப்பினராக செயலாற்றுகின்றனர்.

தொழிலாளர் நலப் பணிகள் :

(அ) தேசிய குழந்தைகள் தொழிலாளர் திட்டம் :

மத்திய அரசால் ஏப்ரல் 1986ஆம் ஆண்டு விகாசியில் இத்தத் திட்டம் துவங்கப்பட்டது. நீப்பெட்டி தொழிற்சாலைகளில் குடும்பத்தின் வருவாய் பெருக்குவதற்காக 14 வயதுக்கு கீழ் உள்ள குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவதை நீக்குவதை அடிப்படையாகக் கொண்டு அக்குழந்தைகளுக்கு கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளை கொடுக்க வேண்டி மேற்கொள்ளப்பட்டது. 1975ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட சங்கத்தினரால் இத்திட்டம் செயலாற்றப்படுகிறது.

காமராசர் மாவட்ட ஆட்சித் தலைவர் இச்சங்கத்தின் தலைவராகவும், மாவட்ட வளர்ச்சி அதிகாரி (திட்ட இயக்குநராக) உறுப்பினர் செயலாளராகவும் இச்சங்கத்தில் உள்ளனர். இட்டத்திட்டத்தின்கீழ் பல அரசுத் துறைகளில் நட வடிக்கைகளை மேற்பார்வையிட ஒரு கமிட்டி தமிழக அரசினரால் அமைக்க பட்டுள்ளது.

(ஆ) தொழிலாளர் விபத்து ஆயுள் ஈட்டுறுதி தொகுதி திட்டத்தைப் அறிமுகப்படுத்தியது. பின்னர் தமிழகம் முழுமைக்கும் ஆன இதே தொழிற்சாலை களுக்கு விரிவுபடுத்தப்பட்டது.

இத்திட்டம் ஈட்டுறுதி செய்யப்பட்டவர்களுக்கும் பார்வை அல்லது கைகால்கள் இழப்பு அல்லது இறப்பு ஏற்பட்டால் நிவாரணம் அளிக்கும் வகையில் உருவாக்கப் பட்டுள்ளது. ஈட்டுறுதி செய்யப்பட்டவர்கள் உண்மையில் வேலை செய்து கொண்டிருக்கையில் விபத்து ஏற்பட்டுள்ளவர்களுக்கு மட்டும் என்று வரையறுக்காமல் விபத்துக்கான ஈட்டுறுதி தொகை வழங்கப்படும்.

இத்திட்டத்தினால் 14 வயது முதல் 65 வயது வரையிலான வயதுடைய தீப்பெட்டி பட்டாசு தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பயனடைவார்கள்.

இத்திட்டத்தின் கீழ் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிற்சாலைகளை அதிக அளவில் சேர்க்கும் பொருட்டு சந்தா தொகையினை ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 5 ஆக குறைக்கப்பட்டுள்ளது. இத்தொகையினை தொழிலாளர்கள் தொடர்பாக தொழில் அதிபர்கள் செலுத்தி பின்னர் தொழிலாளர்கள் ஊதியங்களிலிருந்து அத்தொகை பிடித்துக்கொள்ள படுகிறது. ஆனால் இச்செலவினத்தை தொழிற் அதிபர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். இத்திட்டம் தேசிய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனத்தின உதவியுடன் செயல்படுத்தப் படுகின்றன.

(5) புதிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட விபரம் :

	(ரூபாய் இலட்சத்தில்)
(1) மாநிலத்தில் உற்பத்தித் திறன் ஒருமுக முனைப்பாக செயல் படுத்தப்படுவதற்கென கூடுதல் பதவிகள் மற்றும் உப கரணங்கள் வழங்குதல்.	1.47
(2) தொழிற்சாலைகள் தலைமை ஆய்வர் அலுவலகத்தில் ஒரு கணக்கு அலுவலர் பதவி வழங்கியது.	0.36
மொத்தம்	1.83

(6) மூலதனம் உள்ளீட்ட நிதிநிலை மற்றும் உள்ளபடியான செலவினம் :

	ஒப்புதலளிக்கப் பட்ட மூலதனம்	(செலவு ரூபாய் (இலட்சத்தில்)
(1)	(2)	(3)
பாதுகாப்பு குழு அமைத்தல்	16.28	21.54
உற்பத்தித் திறன் குழு அமைத்தல்	3.03	3.61
தொழிற்சாலை ஆய்வகத்துறையை உருவாக்குதல்	22.98	33.76

(7) சிறப்புத் தகவல்கள் :

1987ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (திருத்தம்) சட்டம் 1—12—1987 முதல் அமுல்படுத்தப்படுகிறது. இச்சட்டத்தின் மூலம் அபராத விதிகள் கடுமையாக்கப் பட்டு உரிமையாளர் மற்றும் மேலாளர்களை பின் வாங்கச் செய்கிறது. இச் சட்டத்திற்கு எந்த ஒரு விதியினையாவது மீறுவதற்கு அதிகபட்சமாக ரூ. 2,000 விருந்து ரூ. 1,00,000 ஆக அபராதம் உயர்த்தப்பட்டுள்ளது. அதிகரிக்கப்பட்டுள்ள அபராத விதிகளாலும் செம்மையான சட்ட அமுலாக்கியதாலும் விதிமுறைகள் நவீன முறையில் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்துறையினால் அவ்வப்போது நடைமுறைப்படுத்தப்படும் நலத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் உண்மையில் தொழிலாளர்களுக்கும் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட வர்க்கத்திற்கும் போய்ச் சேரும் வகையில் தீட்டுவதில் தீவிரமாக செயல்பட்டு வருகிறது. தொழிலாளர் நலச் சட்டத்தை நீதிமன்ற ஆணைகள் தீர்ப்புகளை அமுல் செய்யப்படாதவர்களின் மீது குற்ற நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படாமலும், தொடர்ந்து இந்த அரசு தண்டனையோ அல்லது தண்டிப்ப தையோ மட்டும் வழிவகையாக எண்ணாமல் இன்னமும் சற்று தாழ்ந்து சுமுகமான முறையில் பிரசினைகளை தீர்வு காண்பதையே விரும்புகிறது. இந்த வகையில் தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்தினருக்குமிடையே எழுகின்ற பிரச்சினைகளை சமூக ரீதியில், நாட்டின் நலன் கருதியும், உற்பத்தி திறன் பாதிக்கப்படாமல் இருக்கும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு தொழிலாளர் நலம் பயக்கும் சட்டங்கள் நியாயமான முறையில் அமுல்படுத்தவும் தீவிர நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொழிலாளர் நலம்.

தமிழ்நாட்டில் தொழிலாளர்களுக்கிடையே சில கோரிக்கைகள் காரணமாக எழுகின்ற தொழிற் தகராறுகளை தக்க நேரத்தில் தலையிட்டு சமரச முறையில் தீர்த்து வைப்பதோடு மட்டுமல்லாமல் தொழில் அமைதி தொழிலாளர் நலம் மற்றும் சமுதாய நலம் ஆகியவற்றை பேணி காத்து வருவதே தொழிலாளர் முகவரின் முக்கிய நோக்கமாகும்.

தொழில் அமைதியை காத்து வருவதுடன், தொழிலாளர் நலச் சட்டங்களைத் தீவிரமாக அமல்படுத்துதல், சமூக பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்தல் ஆகியவை களின் மூலம் அமைப்பு ரீதியான மற்றும் அமைப்பு ரீதியில்லாத தொழிற் பிரிவுகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் பணிநிலை மற்றும் நலன் ஆகியவற்றின் உயர்வுக்கு இத்துறை வழி வகுக்குகிறது.

தமிழ்நாடு எடைகள் அளவைகள் சட்டம் மற்றும் எடைகள் அளவைகள் தரம் (சிப்பம் கட்டப்பட்ட பொருட்கள்) குறித்த விதிகள் செயலாக்கம் மூலம் நுகர்வோர் நலம் பாதுகாக்கப்படுகிறது.

செயல் முறை :

இத்துறை ஆணையாளரை கட்டுப்பாட்டு அதிகாரியாகக் கொண்டு இயங்கி வருகிறது. இவ்வறிக்கை ஆண்டில் திரு. கே. மலைச்சாமி, இ.ஆ.ப., அவர்கள் ஆணை யாளராக தொடர்ந்து பதவி வகித்து வருகிறார். தலைமையகத்தில் ஆய்வாளர் அவர்களுக்கு உதவி அலுவலர்களாக 2 தொழிலாளர் இணை ஆணையர்கள் (1) நிர்வாகம் மற்றும் (2) சமரசம் பதவி வகித்து வருகின்றனர்.

தொழிற்சாலை பிரிவு தொழிலாளர் துறையிலிருந்து 12—3—1987 முதல் பிரிக்கப்பட்டு தனியான துறையாக இயங்கி வருகிறது.

தொழிலாளர் ஆய்வகத்துறை பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களான 1947-ஆம் ஆண்டு தமிழ்நாடு சுடைகள் நிறுவனங்கள் சட்டம், 1958-ம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டம், 1936-ம் ஆண்டு சம்பளம் வழங்கும் சட்டம், 1981-ம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான அந்தஸ்து வழங்கல்) சட்டம், 1965-ம் ஆண்டு பணிக்கொடை வழங்கும் சட்டம், 1961-ம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம், 1923-ம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம், 1970-ம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்கல்) சட்டம், 1958-ம் ஆண்டு தமிழ்நாடு உணவளிக்கும் நிறுவனங்கள் சட்டம், 1970-ம் ஆண்டு சம ஊழியர் சட்டம் 1966-ம் ஆண்டு பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் சட்டம், (பணி நிலைமைகள்) 1951-ம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்கள் சட்டம், 1972-ம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நலச் சட்டம் போன்ற சட்டங்கள் தீவிரமாக அமுல்படுத்திக்கொண்டு வருகிறது.

1947 -ம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டம் :

இவ்வாண்டின் 1947-ம் ஆண்டு தொழிற் தகராறு சட்டம் பிரிவு 12 (3)-ன் கீழ் தொழிலாளர் துறை சமரச அலுவலர்களால் 2094 உடன்பாடுகள் ஏற்படுத்தப் பட்டன.

நீதிமன்றத் தீர்ப்பு :

555 தொழிற் தகராறுகள் (Labour Disputes) சென்னையில் உள்ள நடுவர் நீதிமன்றத்திற்கும் (Industrial Tribunal) மற்றும் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் நகரங்களில் இயங்கும் தொழிலாளர் நீதிமன்றங்களுக்குத் (Labour Court) தீர்ப்பிற்கு விடப்பட்டது.

இந்நிதி ஆண்டில், தமிழக அரசிதழில் (Tamil Nadu Govt. Gazette) சென்னை தொழில் நடுவர் நீதிமன்றத்திலும் மற்றும் சென்னை, மதுரை, கோயம் புத்தூர் ஆகிய நகரங்களில் உள்ள தொழிலாளர் நீதிமன்றத்திலும் (Labour Court) 33 (எ)-ன் கீழ் தொழிலாளர்களால் எழுப்பப்பட்ட வழக்குகள் உட்பட 952 தீர்ப்புகள் வெளியாகி உள்ளன.

இந்நிதி ஆண்டில் எழுப்பப்பட்ட10,270 தொழிற் தகராறுகளில் 9,787 தகராறு கள் தொழிலாளர் துறை அலுவலர்களின் தலையீட்டால் முடித்து வைக்கப்பட்டன.

வேலை நிறுத்தங்கள் மற்றும் கதவடைப்புகள் :

வேலை ஒழிகைகள் :

1989—90ம் நிதி ஆண்டில் 171 வேலை நிறுத்தங்களும் 21 கதவடைப்புகளும் ஏற்பட்டன, மேற்படி வேலை ஒழிகைகளால் இழக்கீப்பட்ட மனித உழைப்பு நாட்களின் எண்ணிக்கை 20,49,157 ஆகும், வேலை ஒழிகைகளுக்கான காரணங்கள் பொதுக் கோரிக்கைகள். போன்று மற்றும் ஊதிய உயர்வு பஞ்சப்படி. தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்காமை போன்றவைகளாகும்,

1926-ம் ஆண்டு தொழிற்சங்கச் சட்டம் :

இந்நிதி ஆண்டில் ஆரம்பத்தில் (1—4—1989) தமிழ்நாட்டில் 4,774 தொழிற் சங்கங்கள் இருந்தன, இவ்வாண்டிற்குள் 639 தொழிற்சங்கங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டன, 2 தொழிற் சங்கங்கள் கலைக்கப்பட்டன, 329 தொழிற் சங்கங்கள் இரத்து செய்யப்பட்டன, 10 தொழிற்சங்கங்களின் ரத்து செய்த ஆணை மீளப் பெறப்பட்டன, இந்நிதி ஆண்டு இறுதியில் (31—3—1990) தமிழ்நாட்டின் 4692 தொழிற்சங்கங்கள் இயங்கி வருகின்றன,

1947—ம் ஆண்டு தொழிற்சாலை வேலையளிப்பு (நில ஆணைகள்) சட்டம் :

1—4—1989 முதல் 31—3—1990 காலத்தில் தொழில் நிறுவனங்களில் 137 நிலை ஆணைகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டன,

1951-ம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டம் :

மேற்படி சட்டத்தின் கீழ் அடங்கிய நிறுவனங்களும் அதில் ட யிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் பின்வருமாறு :

தோட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை	தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை,
560	90,103

ஆய்வுகள் :

தோட்ட நிறுவன ஆய்வர்களால் 1,773 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன, தோட்ட நிறுவனங்களுக்கான மருத்துவ அதிகாரிகள் 1,167 ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்கள்,

வழக்குகள் :

இந்நிதி ஆண்டில் மேற்படி சட்டத்தின் கீழ் 58 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அவைகளுள் 54 வழக்குகளுக்கு தண்டனை வழங்கப்பட்டன. ரூ. 14.435 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது,

தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம் 1947ம் ஆண்டு :

1947ம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் உட்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கையும். பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் பின்வருமாறு :—

இச்சட்டத்தின் கீழ் வரும் மொத்த நிறுவனங்கள் எண்ணிக்கை,	ஆட்கள் உள்ளவை,	ஆட்கள் இல்லாதவை,	பணி அமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை,
(1)	(2)	(3)	(4)
3,10,885	95,390	2,15,486	3,07,649

ஆ வுகள :

இந்நிதி ஆண்டில் 4.79.917 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன,

ழக்குகள் :

இந்நிதி ஆண்டில் மேற்படிச் சட்டத்தின் கீழ் 23,647 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன, முந்தைய ஆண்டு நிறுவன வழக்குகளுடன் சேர்ந்து 26,553 வழக்குகள் தண்டனையில் முடிவுற்றன, அதன் மூலம் ரூ. 11,49,515 தண்டனைத் தொகையாக வசூலிக்கப்பட்டது,

1966-ம் ஆண்டு பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம் :

1966ம் ஆண்டு பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர் சட்டத்தின் பிரிவு 6(2)ன் டி தொழிலாளர் துணை ஆணையர் (ஆய்வுகள்) சென்னை அவர்கள் தலைமை ஆய்வாளராய் உள்ளார்.

பதிவுகள் :

தமிழ்நாட்டில் 260 வணிகக் குறி (Trade Mark) உரிமையாளர்கள் 1411 தொழில் வளாகங்களை நடத்தி வருகின்றனர், 11.557 தொழிலாளர்கள் மேற்படி தொழிற் சாலைகளில் வேலை செய்து வருகின்றார்கள், 2 1!2 லட்சம் வீட்டுத் தொழிலாளர்களும் பீடித் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள்,

இந்நிதி ஆண்டில் ரூ. 55.429 பிரிமியக் கட்டணமாக வசூல் செய்யப்பட்டுள்ளது.

ஆய்வுகள் :

இவ்வாண்டில் ஆய்வாளர்களால் 2.532 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன,

வழக்குகள் :

நீதிமன்றத்தில் 216 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன, அவற்றில் 152 வழக்குகள் (முந்தைய நிலுவை சேர்ந்து) தண்டனையில் முடிவுற்றன, ரூ. 75.940 தண்டனைத் தொகையாக பெறப்பட்டுள்ளது,

1961-ம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துச்சட்டம் :

11—8—1989 முதல் அரசு ஆணை எண், 1538. நாள் 1—8—1990ன்படி தொழிலாளர் துணை ஆணையர் (குறைந்த பட்ச கூலி) அவர்கள் தலைமை ஆய்வராக நியமிக்கப்பட்டுள்ளார், இம்மாநிலத்தில் மேற்படி சட்டம் 20 தொழிலாளர் ஆய்வர்களாலும். 65 தொழிலாளர் துணை ஆய்வர்களாலும் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர் துணை ஆய்வர்களால் முறையான ஆய்வுகளும். மேற்படி ஆய்வுகளில் 5 சதவீதம் தொழிலாளர் ஆய்வர்களால் சோதனை ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, இந்நிதி ஆண்டில் 1. 1.10.626 உரிமக் கட்டணமாக வசூலிக்கப்பட்டது.

மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை யும் மற்றும் அவைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் கீழேகொடுக் கப்பட்டுள்ளன,

மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் இயங்கும் நிறுவனங்கள்,	நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை.
(1)	(2)
1.673	89.669

ஆய்வுகள் :

இவ்வாண்டில் 6.847 ஆய்வுகள் ஆய்வர்களால் மேற்கொள்ளப்பட்டன,

வழக்குகள் :

இச்சட்டத்தின் கீழ் 526 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. முந்தைய ஆண்டு நிலுவை உட்பட 372 வழக்குகள் தண்டனையில் உள்ளமுடிவுற்றன, அவைகளின் மூலம் ரூ. 1.09.350 தண்டனைத் தொகையாகப் பெறப்பட்டுள்ளது,

1958-ம் ஆண்டு தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம் :

1958ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம் தமிழ்நாட்டில் சென்னை. மதுரை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள எல்லா மாநகராட்சி எல்லைகளிலும் நகரியங் களிலும் அனைத்துப் பேரூராட்சி எல்லைகளிலும் தொழிலாளர் உதவி ஆய்வாளர்களால் அமுல்படுத்தப்பட்டு வருகிறது,

இச்சட்டத்திற்குட்பட்ட மொத்த உணவு நிறுவனங்களின் எண்ணிக்கையும் அதில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

சட்டத்தின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை,	ஆட்கள் உள்ளவை,	ஆட்கள் இல்லாதவை.	மொத்த பணியாளர் களின் எண்ணிக்கை,
28.111	12.330	15.781	69.432

ஆய்வுகள் :

இவ்வாண்டில் 62.707 ஆய்வுகள் ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்டன.

வழக்குகள்:

நீதிமன்றத்தில் 2.773 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன, 2.434 வழக்குகள் தண்டனையில் முடிவுற்றன, ரூ. 200305 தண்டனைத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

தேசிய பண்டிகை விடுமுறைத் திட்டம் :

தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை சட்டம் 1958ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில் உள்ள கடைகள் மற்றும் நிறுவனங்களுக்கும் தோட்ட நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் வரும் தோட்ட நிறுவனங்கள். தொழில்முறை) சட்டத்தின் கீழ் வரும் தொழில் சாலைகளுக்கும் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கும் பொருந்தும்,

இச்சட்டத்தின் கீழ் 78.752 நிறுவனங்களும். 5.52.776 தொழிலாளர்களும் அடங்குவர்,

ஆய்வுகள் :

இந்நிதி ஆண்டில் 1.90.198 ஆய்வுகள் ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்டன,

வழக்குகள் :

4.831 வழக்குகள் இவ்வாண்டில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது, முந்தைய ஆண்டு நிலுவையைச் சேர்த்து 4,931 வழக்குகள் தண்டனையில் முடிவுற்றன. ரூ. 1.87.225 தண்டனைத் தொகையாக வசூலிக்கப்பட்டது,

ஊதிய நிர்ணயச் சட்டங்கள்.

1948-ம் ஆண்டு குறைந்த ஊதிய அளவுச் சட்டம் :

மேற்படி சட்டத்தின் கீழ் 44.853 நிறுவனங்கள் அடங்கும்.

ஆலோசனைக் குழு அமைத்தல் :

1, 1989-90ம் ஆண்டில் பின்வரும் வேலைகளுக்குக் குறைந்த ஊதிய விகிதங்களுக்கான ஆலோசனைக் குழு அரசு அமைத்துள்ளது,

(1) மின்னணுவியல் பணியாளர் அமைப்பு,

(2) காகிதம் மற்றும் அதனைச் சார்ந்த தொழில் புரியும் நிறுவனங்கள்,

(3) முந்திரி தொழில் வேலை,

(4) உணவகங்கள் மற்றும் தங்கும் வசதியுடன் கூடிய உணவகங்களில் வேலை,

(5) தேங்காய் நார் உரிக்கும் வேலை,

(6) வெளுத்தல் மற்றும் சாயம் தோய்த்தல் இரண்டும் சேர்ந்த வேலை

(7) பட்டுப் புழு வளர்க்கும் வேலை,

(8) அப்பளம் தயாரிக்கும் தொழில் வேலை,

2, விவர அட்டவணையில் சேர்க்கப்பட்ட தொழில்கள் :

1. ஏலத் தோட்டங்களில் வேலை ஏனைய தோட்ட நிறுவனப் பணிகளுடன் சேர்த்து.

3, பின்வரும் வேலைகளுக்குக் குறைந்த அளவு ஊதியவிதிதங்கள் திருத்தியமைத்து அல்லது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது,

நிர்ணயம் செய்யப்பட்டவை.

(1) கோணி தயாரிக்கும் வேலை,

(2 சொட்டி மற்றும் பிஸ்கெட்டுகள் தயாரிக்கும் வேலை.

திருத்தி அமைத்துள்ளது.

(1) விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த விவசாயப் பணிகள் அடங்கிய வேலை,

(2) புகையிலை உற்பத்தி (பீடி தயாரிக்கும்) தொழில் வேலை,

(3) கைத்தறி தொழில் வேலை,

(4) வெள்ளி. தங்க பொருட்கள் தயாரிக்கும் வேலை,

(5) கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் வேலை,

ஆய்வுகள் :

இவ்வாண்டில் 1.13.103 ஆய்வுகள் ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்டன.

வழக்குகள் :

இந்நிதி ஆண்டில் 2.000 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. அவைகளில் 1.718 வழக்குகள் தண்டனையில் முடிவுற்றன, ரூ. 2.75.798 தண்டனைத் தொகை யாக வசூலிக்கப்பட்டது.

1936-ம் ஆண்டு ஊதியம் வழங்கும் சட்டம் :

இச்சட்டத்தின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் தொழிலாளர் களின் எண்ணிக்கை பின்வருமாறு :

நிறுவனங்களின் எண்ணிக்கை	தொழிலாளர்களின் எண்ணிக்கை
(1)	(2)
14.720	2.62.630

ஆய்வுகள் :

இவ்வாண்டில் 61.008 ஆய்வுகள் ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்டன.

வழக்குகள் :

இச்சட்டத்தின் கீழ் 1.137 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. முந்தைய ஆண்டு நிலுவை வழக்குகளுடன் சேர்த்து 981 வழக்குகள் தண்டனையில் முடிவுற்றன, ரூ. 71.085 தண்டனைத் தொகையாக வசூலிக்கப்பட்டது.

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்.

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு 1978ஆம் ஆண்டு முதல் தர நிலையமாக உயர்த்தி அமைக்கப்பட்டது. 31—3—1988 வரை அரசு துறையாக இயங்கி வந்த இந்த கல்வி நிலையம் 1—4—1988 முதல் 1975ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தில் மீழ்பதிவு செய்யப்பட்டு தன்னாட்சி நிறுவனமாக ஒரு ஆளுகை குழுவினால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தொழிலாளர் நல அமைச்சர் இக்குழுவின் தலைவராவார்.

இந்த நிலையத்தின் பணிகளும் நோக்கங்களும் பின்வருமாறு :

நல்ல வளமான தொழிற் சங்கங்களை வளர்த்தல், நிர்வாகத்தினருக்கு தொழிலாளர்களுடன் இணக்கமான நெருக்கத்தினை தோற்றுவித்தல், தொழிலாளர் துறையிலும் தொழிற்சாலைகள் துறையிலும் பணியாற்றும் அலுவலர்களின் திறமைகளை வளர்த்தல் தொழிலாளர் நிர்வாகத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல் ஆகியவை ஆகும்.

நிர்வாக அமைப்பு முறை :

இந்த நிலையம், இயக்குநர் ஒருவர் தலைமையில் அவருக்கு உதவியாக இரண்டு துணை இயக்குநர்கள், ஒரு பேராசிரியர், ஒரு ஆராய்ச்சி அலுவலர், ஒரு நிர்வாக அலுவலர் இரண்டு உதவிப் பேராசிரியர்கள், மற்றும் அலுவலகப் பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

கருத்தரங்குகள் :

இக்கல்வி நிலையத்திலிருந்து கடைகள் நிறுவனச் சட்டம் மற்றும் உணவு நிறுவனங்கள் சட்டம், தொழிற்சாலைகளுக்குப் பொருந்தும் தொழிலாளர் நலச் சட்டங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் பாதுகாப்பு மற்றும் உற்பத்தி ஆகிய சட்டத்தின் கீழ் வியாபாரிகள், தொழிற்சாலைகளில் பணிபுரியும் இடைநிலை நிர்வாக பிரதிநிதி ஆகியோருக்கு கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

1—4—89 முதல் 31—3—1990 வரையிலான காலத்தில் இதுபோன்ற 42 கருத்தரங்குகள் நடத்தப்பட்டு அதில் 1,549 நபர்கள் பங்கு பெற்றுள்ளனர்.

பயிற்சித் திட்டங்கள் :

இக்கல்வி நிலையம், நிர்வாக பணியாளர்கள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கு தொழில் உறவும் ஊக்கமும், மற்றும் உற்பத்தி திறனும், தொழிலகத்தில் ஒழுங்கு உற்பத்தித் திறன், ஸ்ட்ரஸ்ரிலீப் உள் விசாரணை தொழிலாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையில் பயனுள்ள தொடர்பு, தோட்ட நிறுவனங்களுக்கும் பொருந்தும் தொழிலாளர்ச் சட்டங்கள் மற்றும் நீதிமன்ற செயல்முறைகள் போன்ற தலைப்புகளில் பயிற்சித் திட்டங்களையும் சமரச அலுவலர்கள் மற்றும் அமுலாக்க அலுவலர்களுக்கு மறுகவன பயிற்சிகளையும் நடத்தியுள்ளது.

இதுவரையில் புத்தாக்கப் பயிற்சி மற்றும் மறு கவன பயிற்சித் திட்டத்தின் கீழ் 27 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 487 பேர் பங்கு பெற்றுள்ளனர்.

பணியிட பயிற்சிகள் :

இக்கல்வி நிலையம், தொழிலாளர் நிர்வாகத்தில் பல்வேறு பணியிடப் பயிற்சிகளை பொதுத் துறைதனியார் துறை நிறுவனங்களைச் சேர்ந்த அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் கோவை, சௌத் இந்தியா விஸ்கோஸ் லிமிடெட் திண்டுக்கல் ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம், கோவில்பட்டி தென்னிந்திய தீப்பெட்டி தயாரிப்பாளர்கள் சங்கம், திருச்சி பி.எச்.இ.எல். நிறுவனம் ஆகியவைகளில் பயிற்சிகள் நடத்தியுள்ளது.

இக்கல்வி நிலையம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் 3—3—1990 வரையிலான காலத்திற்குள் 656 கருத்தரங்குகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள் நடத்தி 27,483 நபர்கள் பங்கு பெற்றுள்ளனர். இதில் 1—4—1989 முதல் 31—3—1990 வரை 2,223 பேர் பங்கேற்று 77 கருத்தரங்குகள் மற்றும் பயிற்சித் திட்டங்களும் அடங்கும்.

கல்விந் திட்டங்கள் :

1979ம் ஆண்டிலிருந்து இந்தக் கல்வி நிலையம் நடத்தும் தொழிலாளர் நிர்வாகம் சம்பந்தமான ஓராண்டு பட்டய மேற்படிப்பு சென்னை, அரசு பணியாளர் தேர்வாணையத்தினால் தொழிலாளர் பதவிக்கு தேர்வு செய்யப்படுவதற்கு முன்னுரிமை கல்வி தகுதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது இக்கல்வி நிலையத்தில் 31—3—1990 வரையில் 67 பட்டயங்க மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இக்கல்வி நிலையத்தில் 1988–89 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வரும் பி.எல்.எம். பட்டப் படிப்பில் 10ஆ மாணவர்களும் 1989–90–ம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டு நடத்தப்பட்டு வரும் எம்.எல்.எம். பட்ட மேற்படிப்பில் 38 மாணவர்களும் பயின்று வருகிறார்கள்.

நேரடிப் பார்வையின் மூலம் பயிற்சி :

இக்கல்வி நிலையத்தில் இறுதி ஆண்டில் பயிலும் பி.எல்.எம். மற்றும் எம்.எல்.எம். மாணவர்கள் சென்னையைச் சுற்றி அமைந்துள்ள 10 தொழில் நிறுவனங்கள், தொழிலாளர் துறையைச் சார்ந்த அலுவலகங்கள் மண்டல தொழிலாளர் காப்பீடு அலுவலகம் மற்றும் மண்டல வருங்கால வைப்பு நிதி அலுவலகத்திற்கு நேரடிப் பார்வையின் மூலம் பயிற்சி பெற அழைத்துச் செல்லப்பட்டனர் தொழிலாளர் நிறுவனங்களில் பணிபுரியும் திறமை பெற்ற மேலாளர் போன்றவர்களைக் கொண்டு சிறப்பு விரிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

பல்கலைக் கழகத் தேர்ச்சி விவரம் :

இக்கல்வி நிலையத்தில் பி.எல்.எம். பட்ட வகுப்பு மற்றும் எம்.எல்.எம். பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் பயிற்று மார்ச், ஏப்ரல் 90 பல்கலைக் கழகத் தேர்வு எழுதி தேர்ச்சிப் பெற்ற விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது :

பி.எல்.எம். முதல் வருடம்	38 சதவீதம்
பி. எல்.எம்.2–ம் வருடம்	66 சதவீதம்
பி. எல்.எம்.3–ம் வருடம்	87 சதவீதம்
எம்.எல். எம்.முதல் வருடம்	89 சதவீதம்
எம்.எல்.எம்.2–ம் வருடம்	100 சதவீதம்

இக்கல்வி நிலையத்தில் 1989–90-ல் பி.எல். எம். பட்ட வகுப்பு எம். எல். எம். பட்ட மேற்படிப்பு ஆகியவற்றில் பயிற்சி முதல் கட்டமாக மாணவர்கள் வெளியேறியுள்ளனர். மேலும் 2-ம் ஆண்டு எம்.எல்.எம். மாணவர்கள் முதல் வருடத்திலேயே 100 சதவிகிதம் தேர்ச்சி பெற்று சென்றுள்ளது இக்கல்வி நிலையத்தின் சாதனையாக அமைந்துள்ளது.

நூலகம் :

இந்தக் கல்வி நிலையத்தில் சிறப்பான நூலகம் ஒன்று இயங்கி வருகிறது. இதில் தொழிலாளர் நிர்வாகம் தொடர்பான 5334 நூல்களும் மற்றும் மாதாந்திர வெளியீடுகள் ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோருக்கு பயன் பட்டு வருகின்றன.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், தொழிலாளர் மற்றும் அவர்களது குடும்ப நலம் மேலிட 1—4—1975 முதல் தன்னாட்சி கொண்ட அமைப்பாக செயல்பட அமைக்கப்பட்டது. இவ்வாரியத் தலைவர் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் ஆவர்.

தொழிற்சாலைகள் சட்டம், தோட்ட நிறுவனங்கள் சட்டம், போக்குவரத்து வாகன சட்டம், ஐந்தும் அதற்கு மேற்பட்ட உணவு நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், தர்ம ஸ்தாபனங்கள் ஆகியவற்றின்கீழ் பணிபுரியும் தொழிலாளர்கள் 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின்படி ஆண்டொன்றுக்கு ரூ. 2 வீதம் நலநிதியும், ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 4 வீதம் வேலையளிப்பவரும் நிதி செலுத்தி வருகின்றனர். அரசும் ஆண்டுதோறும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 2 வீதம் நல நிதி அளித்து வருகிறது. இதைத் தவிர அபராதம் செலுத்தப்படாத கூடுதல் தொகை சம்பளத்திலிருந்து பிடித்தம் மற்றும் நன்கொடைகள் ஆகியவைகள தொழிலாளர் நல நிதியில் சேர்க்கப்படுகிறது. இம்மாநிலத்தில் 52 தொழிலாளர் நல மையங்கள் செயல்படுகின்றன. தொழிலாளர் நல வாரியம் கீழ்க்கண்ட ஆக்கப்பணிகளை மேற்கொள்ள உள்ளது.

(1) உதக மண்டலம், கொடைக்கானல், இராமேஸ்வரம், முதலிய இடங்களில் ஓய்வு இல்லங்கள் கட்டுதல்.

(2) காச நோயாளிகளுக்குத் தனியான காசநோய் சிகிச்சைப் பிரிவு கட்டுதல், இதனால் பெண்ணாத்தூர், வேலூர், ஆண்டிப்பட்டி, மதுரை முதலிய இடங்களில் உள்ள மருத்துவ மனைகளில் காச நோய் சிகிச்சைக்காக வரும் காச நோயாளிகள் பயன் பெறுவர்.

(3) சென்னையில் மே தின நூற்றாண்டு நிழனவு மண்டபம் கட்டுதல்.

தொழிலாளர் நல வாரியத்தால் அமல்படுத்தப்பட்ட நலத்திட்டங்களும் அதனால் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள்.

	1989–90.
(1) தொழிலாளர் நல மையங்கள் (தையற் பயிற்சி நிலையங்கள்).	
(அ) மொத்த தொழிலாளர் நல மையங்கள்	62
(ஆ) பயனடைந்த பயிற்சியாளர்கள்	2,198
(2) குழந்தைகள் காப்பகங்கள் :	
(அ) மொத்த மையங்களின் எண்ணிக்கை	52
(ஆ) பயனடைந்த குழந்தைகள் எண்ணிக்கை	2,117
(3) குழந்தைகள் காப்பகங்கள் (மகளிர் மன்றங்களால் நடத்தப்படுபவை)	1
(4) படிப்பகங்கள் :	
(அ) படிப்பகங்களின் மொத்த எண்ணிக்கை	10

தொழிலாளர் நல வாரியத்தால் அமல்படுத்தப்பட்ட திட்டங்கள் :

	பயனடைந்தோர். (1989–90)	தொகை.
(அ) மூக்கு கண்ணாடி வழங்கியதால் செலவு	3,520	2,11,200.00
(ஆ) தட்டெழுத்து சுருக்கெழுத்து பயிலும் மாணவர்களுக்கு பயில் தேர்வு எழுத வழங்கப்பட்ட தொகை	924	1,02,482.00
(இ) புத்தகம் வாங்க உதவித் தொகை (ரூ. 35 முதல் ரூ. 50 வரை 9 முதல் பட்ட மேற்படிப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது).	7,630	3,92,977.50
(ஈ) இறுதிச் சடங்கு செலவு	724	2,17,200.00
(உ) ஊனமுற்றவர்களுக்கு செயற்கை உறுப்புகள் வழங்கியதால் செலவு	11	7,588.00
(ஊ) காது கேட்கும் கருவி வழங்கியமை	8	7,060.00
(எ) ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டி வழங்கியதால் செலவு	2	2,510.00

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தினால் வழங்கப்பட்ட படிப்பு தனித் தொகை.

	பயனடைந்தோர். (1989–90)	தொகை.
1. பொறியியல் (பட்டம்)	136	1,36,000
2. பொறியியல் (பட்டயம்)	184	1,70,000
3. மருத்துவம் (பட்டயம்)	82	82,000
4. மருத்துவம் (பட்டயம்)	23	13,000
5. சட்டம் (பட்டப் படிப்பு)	19	2.19,000
6. வேளாண்மை (பட்டம்)	14	14,000
7. தொழிற் பயிற்சி	148	44,400
8. மேல்நிலைப் பள்ளி (மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு 600 வருடத்திற்கு வழங்கப்படுகிறது.)	99	49,500

சட்டத்துறை.

•

சட்டம் இயற்றுதல்.

•

1—4—1989 முதல் 31—3—1990 வரையிலான கால அளவில் நாற்பத்தி ஏழு தமிழ்நாடு சட்டங்கள் வெளியிடப்பட்டன, இதில் மூன்று சட்டங்கள் புதிதாக இயற்றப்பட்ட முழுமையான சட்டங்கள் ஆகும், எஞ்சியவை திருத்தச் சட்டங்களாகும்.

•

1, தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள். அங்காடிகள் (திருத்தம்) தனி அதிகாரிகள் நியமனத்தைச் செல்லுபடியாக்கும் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 8/1989),

இச்சட்டம் கோயம்புத்தூர் அங்காடிக் குழுவில் கால அளவை 10—5—89-க்குப் பின்னர் மேலும் ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிப்பதற்கும். புதுக்கோட்டை அங்காடிக் குழு, பெரியார் அங்காடிக் குழு ஆகியவற்றின் தனி அதிகாரிகள் நியமனத்தைச் செல்லுபடியாக்குவதற்கும் அரசுக்கு இயலும் வகையில் இயற்றப்பட்டது.

2, தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்தம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 9/1989).

எதிர்பாராச் செலவு நிதியை ரூபாய் ஐம்பது கோடியிலிருந்து ரூபாய் எழுபத்தைந்து கோடியாக உயர்த்த இயலும் வகையில் தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்காக இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது,

3, தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் (எண், 2) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1989),

பின்வருவனவற்றை நிறைவு செய்வதற்காக தேவைப்படுகின்ற தொகைக்கு மாநிலத்தில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து நிதி ஒதுக்குவதற்காக இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது,

(அ) 1989—90 ஆம் நிதியாண்டிற்காக மாநில அரசின் செலவுக்காக தமிழ்நாடு சட்டப் பேரவை அளித்த மானியம்,

(ஆ) இந்த நிதியாண்டிற்கு மேற்சொன்ன நிதி குறித்து காட்டியச் செலவு,

4, தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 11/1989),

இச்சட்டம் பின்வரும் நோக்கங்களை எய்துவதற்காக இயற்றப்பட்டுள்ளது, அவையாவன, (1) பேரவைச் செயலர் பதவிச் சம்பளத்தைத் தமிழ்நாடு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் பதவி சம்பளத்திற்கு நிகராகக் கொண்டு வருதல் ; பேரவைச் செயலருக்கு வாகனப் படிக்குப் பதிலாகக் கார் அளித்தல் ;

(2) இச்சட்டத்தில் தலைமைப் பேரவைச் செயலர் பற்றிய குறிப்பை நீக்கி விடுதல்.

(3) இந்தியக் குடிமகனாக இருப்பது அற்றுப்போன அல்லது வெளிநாட்டுக் குடியுரிமைத் தானாகவே பெற்ற அல்லது வெளிநாட்டின் குடியுரிமைக் கட்டுப்பாடு அல்லது பற்றுறுதியை ஒப்புக்கொள்கிற சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினருக்கு முத்தைய ஒரு நாளிலிருந்து ஓய்வூதியம் அளிப்பது நிறுத்தப்பட வேண்டும்,

5, தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு சட்ட உறுப்பினர் தகுதிவின்மையைத் தடைசெய்தல் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 12/1989),

இச்சட்டம், தேசிய சேமிப்பு மாநில ஆலோசனைக் குழுத் துணைத் தலைவர் பதவியை இச்சட்டத்தின் விவர அட்டவணையில் சேர்ப்பதற்காக இயற்றப்பட்டுள்ளது. இதனால், இப்பதவி வகிப்பவர் சட்டமன்ற உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்பட்ட காரணத்திற்காக அல்லது சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் காரணத்திற்காக அவரைத் தகுதியற்றவராக்க முடியாது அல்லது அவரைத் தகுதியற்றவராக்கச் செய்து ஆளாக ஒரு போதும் கருதமுடியாது.

6. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு சீர்திருத்தப்பள்ளிகள் (திருத்தம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 13/1989).

இச்சட்டம், தமிழ்நாடு 1925 ஆம் ஆண்டு சீர்த்திருத்தப்பள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1926) கீழ் 16 வயது முதல் 18 வயது வரையுள்ள சிறுவர்களைக் கொண்டு வரும் வகையில் இயற்றப்பட்டுள்ளது.

7. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு மாநகராட்சி இரண்டாம் (திருத்தச்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 14/1989).

இச்சட்டம் மாநகராட்சி தனி அதிகாரிகளின் பதவிக் காலம் 30—5—1989-க்கும் 29—7—1989-க்கும் இடையே முடிவடைவதால், இக்கால அளவை 30—9—1989 வரை நீட்டிப்பதற்கும் தமிழ்நாடு 1787 ஆம் ஆண்டு மாநகராட்சிகள் (சிறப்பு விதித் துறைகள் திருத்தச்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் இது தொடர்பாக இயற்றப்பட்ட சிறப்பு விதித்துறைகளை நீக்கி விடவும் இயற்றப்பட்டுள்ளது.

8. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு மாநகராட்சிகள் (மூன்றாவது திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 15/1989).

இச்சட்டம், பின்வரும் எண்ணிக்கையில் மாநகராட்சிகளால் 1 உறுப்பினராக அங்கம் வகிக்க ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கும், பெண்களுக்கும் அதிகப் பிரதிநிதித்துவம் அளிப்பதற்காக இயற்றப்பட்டது.

	ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினர்.	பெண்கள்.
1. சென்னை மாநகராட்சி	18	10
2. மதுரை மாநகராட்சி	8	6
3. கோயம்புத்தூர் மாநகராட்சி	8	6

9. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 16/1989).

இச்சட்டம் ஒரு நகராட்சியின் நிதிநிலை அச்சுறுத்தும் வகையில் இருந்தால் அதனைக் கலைப்பதற்கான விதித்துறைகளை நீக்கி விடுவதற்கும் மேற்சொன்ன சட்டத் தின் 23-ஏ, 40-சி ஆகிய பிரிவுகளை நீக்கி விடுவதற்கும் சில திருத்தங்களுடன் முந்தைய விதித்துறைகளைக் குறிப்பாக வரி விதிப்பு மேல்முறையீட்டுக் குழு அமைப்பில் மீண்டும் சேர்க்கவும் இயற்றப்பட்டுள்ளது.

10. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 17/1989).

1989-90 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட உரையில் பல்வேறு நலத்திட்டங் களுக்கு நிதியுதவி அளிப்பதற்காக, கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டும் நோக்கத் துடன் விற்பனை வரி விதங்களில் சில மாற்றங்களை அரசு அறிவித்துள்ளது. எந்திரத் தயாரிப்புச் சோப்புகளுக்கான வரி வீதம் 8 சதவீதமாக உயர்த்தப்படுகிறது. கையி னால் தயாரிக்கப்படும் சோப்புகளுக்கான வரி வீதம் 6 சதவீதமாகும். தொழிற்சாலை எந்திரத்திற்குத் தற்போதுள்ள 8 சதவீத வரிவீதம் 10 சதவீதமாக உயர்த்தப்படு கிறது. பெட்ரோலுக்கான வரிவீதம் 14 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக உயர்த்தப் படுகிறது. விமான எரி பொருளுக்கான வரி வீதம் 14 சதவீதத்திலிருந்து 20 சதவீத மாக உயர்த்தப்படுகிறது.

ஆண்டு வியாபாரத் தொகை ரூ. 10 இலட்சமாகும். அதற்கு அதிகமாகவும் உள்ள ஓட்டல்களிலும் சிற்றுண்டிச் சாலைகளிலும் உணவு/பானம் ஆகியவற்றின் விற் பனைக்கு 5 சதவீதம் வரி விதிக்க அரசு அறிவித்துள்ளது.

பல்முனை ஊற்பனை வரிவிதிப்பிலிருந்து ஒருமுனை விற்பனை வரிவிதிப்புக்குப் பொருட்களைக் கொண்டு வணிக பெருமக்கள் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) முதல் விவர அட்டவணையில் ஆயத்த உடைகள், மாட்டு வண்டி, குதிரை வண்டிகளுக்கான டியூபுகள், நரம்பு ஊசி போடுவதற்கான இரப்பர் தொகுதி சாதனங்கள் (Scalpvein Sets) இரத்தம் செலுத்தும் ரப்பர் குழாய்கள் (Blood administration sets) இரத்த தான ரப்பர் குழாய்கள் (Blood donor sets) நிரவப் பொருட்களைச் செலுத்தும் கொள்ளளவு அளவை சாதனங்கள், பற்றவைக்கும் கம்பிகள், பீடி இலைகள், ரப்பர்

பொருட்கள், தலைக் கவசங்கள், மேற்கூரை மென்தகடுகள், கடப்பைக் கல் பாளங்கள், சாஹபாத் கல் பாளம், கிரைனைட் கல் பாளங்கள் ஆகிய பொருள்களைச் சேர்த்து அவற்றை பல்முனை வரி விதிப்பிலிருந்து ஒரு முனை வரி விதிப்புக்குக் கொண்டுவர அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி 25—3—1989-லிருந்து மேற்சொன்ன முடிவுகளுக்குச் செயல் வடிவம் கொடுப்பதற்காக, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 59 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின்கீழ் அறிவிக்கைகள் வெளியிடப்பட்டன.

இம்மாநிலத்தில் தொழில் வணிக வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில் இச்சட்டத்தின் முதல் விவர அட்டவணையைத் திருத்தி 59 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் அரசு முன்னர் அறிவிக்கைகளை வெளியிட்டுள்ளது. அறிவிக்கை வெளியிட்டதன் மூலம் 7—10—1988-லிருந்து சில பொருள்கள், பல்முனை வரி விதிப்பிலிருந்து ஒரு முனை வரி விதிப்புக்காக மாற்றப்பட்டன.

பின்வருவனவற்றைச் சேர்க்கும் வகையில், முதல் அட்டவணையைத் திருத்துவதற்காக அறிவிக்கைகள் வெளியிடப்பட்டன.

(1) 1—1—1988-லிருந்து 3 ஆம் இனத்தில் தொடங்கல் (Flaps) மடிப்புகளைச் சேர்த்தல்.

(2) 1—1—1988-லிருந்து 36 ஆம் இனத்தில் வெவ்வேறு வடிவங்களில் தேயிலையை வகைப்படுத்தல்.

(3) 30—12—1987-லிருந்து 37 ஆம் இனத்தில் கையினால் தயாரிக்கப்படும் கோப்புகளைச் சேர்த்தல்.

(4) 1—4—1988-லிருந்து 178 ஆம் தனி இனத்தின் கீழ் சலவை நீலத்தை அல்லது கடல் நிலத்தை அல்ட்ரா மரைன் வகைப்படுத்தல்.

இச்சட்டத்தின் 59 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் கீழ், மேற் சொன்ன அறிவிக்கைகளுக்குப் பதிலாக சட்டமுன் வடிவு ஒன்று சட்டப் பேரவையில் கொண்டு வரப்படவுள்ளது. இந்த நோக்கங்களை எய்துவதற்காக இச்சட்டம் இயற்றப்பட்டு உள்ளது.

11. தமிழ்நாடு 1987-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டம் (இரண்டாவது திருத்தம்) (தமிழ்நாடு சட்டம் 18/1989).

பின்வரும் நோக்கங்களுக்காக இச்சட்டம் இயற்றப்பட்டது :—

(1) தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் 3(4) ஆம் பிரிவை நீக்குவதன் மூலம், உற்பத்திச் செலவைக் குறைப்பதோடு அருகிலுள்ள மாநிலங்களில் உற்பத்திச் செய்யப்படும் பொருட்களின் விலையை விடவும் இந்த மாநிலத்தில் உற்பத்திச் செய்யப்படும் பொருட்களின் விலையையும் குறைத்து விற்பனையை அதிகரிக்கச் செய்தல்.

(2) சில தொழிற்சாலைகள், நலிந்த தொழில் பிரிவுகள், நலிந்த நெசவாலைகள் ஆகியவற்றை குறித்த விற்பனை வரியைக் காலந்தாழ்த்திச் செலுத்தும் முறையைச் சட்டப்படி செல்லுறனாக்குதல்.

(3) சட்டப்படிக்கான காலவரையறைக்குச் சமமான காலம் வரையில் மேல் முறையீடுகளையும், மறுவிசாரணை மனுக்களையும் தாக்கல் செய்ததில் ஏற்படும் காலதாமதத்தை மன்னிப்பதற்கு மேல்முறையீட்டு மறுவிசாரணை அதிகார மன்றங்களுக்கு அதிகாரம் அளித்தல்.

(4) ஒரு முனை வரிவிதிப்பை மற்றும் பல்முனை வரிவிதிப்பாக மாற்றும்போது வணிகர்கள் வரியைச் செலுத்துவதற்குப் படுகின்ற இன்னல்களை நீக்குதல்.

12. தமிழ்நாடு 1989-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டம் (மூன்றாவது திருத்தம்) (தமிழ்நாடு சட்டம் 19/1989).

இச்சட்டம், தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தில் திருத்தம் செய்வதற்காகவும், ஓட்டல்களிலும் சிற்றுண்டிச்சாலைகளிலும் விற்பனையாகும் உணவு, குளிர்பானங்கள் ஆகியவற்றின் ஆண்டு விற்றுமுதல் தொகை இரண்டு இலட்சமாகும். அதற்கு அதிகமாகவும் இருந்தால் அதன் மீது பல்முனை வரிவிதித்தல், வணிகர்கள் இணக்க முறையின் மூலம் சலுகை விதத்தில் வரி செலுத்துதல், நேர்வித் தேற்ப இணக்க முறையின் கீழான வரியை அல்லது ஐந்து சதவிதப் பல்முனை வரியைச் செலுத்துவதற்கு அவர்களுக்கு விருப்பவுரிமை அளித்தல் ஆகியவற்றிற்காகவும் இயற்றப்பட்டுள்ளது.

13. தமிழ்நாடு 1989ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 20/1989).

அனைத்து மாநகராட்சிகளிலும், சிறப்பு நிலை நகராட்சிகளிலும், தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் கீழ் செலுத்தத்தக்க வரிகள் 10 சதவீதம் என்ற வீதத்தில் விற்பனை வரி மீதான மேல் வரியையும், கூடுதல் மேல் வரியையும் சீரமைக்கும் வகையிலும், ஏனைய பகுதிகளில் 8 சதவீதம் என்ற வீதத்தில் சீரமைக்கும் வகையிலும் இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

14. தமிழ்நாடு 1989ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி சீர்திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 21/1989) :

ரூபாய் 1 கோடியும் அதற்கு மேற்பட்டும் வியாபாரத் தொகை குறித்து கூடுதல் விற்பனை வரியை 2 சதவீதமாக அதிகரிக்க இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

15. தமிழ்நாடு 1989ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்தச்சட்டம்) (தமிழ்நாடு சட்டம் 22/1989) :

காமராசர், சேலம், திண்டுக்கல், காயிதே மில்லத், பசும்பொன் தேவர் திருமகன் சேங்கை அண்ணா, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள சில நகராட்சிகளின் நிலைகளில் மாற்றங்கள் செய்ததன் விளைவாக தமிழ்நாடு 1939-ம் ஆண்டு கேளிக்கை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 1-வது விவர அட்டவணையைத் திருத்துவதற்காகவும், கன்னியாகுமரி, திருச்சிராப்பள்ளி, தென்ஆற்காடு ஆகிய மாவட்டங்களிலுள்ள சில நகராட்சிகளின் நிலைகளில் மாற்றங்கள் செய்த காரணத்தால் மேற்கூறிய சட்டத்தின் 1-வது விவர அட்டவணையில் திருத்தம் செய்துள்ள மேற்கூறிய சட்டத்தின் 16ஏ பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவிக்கையை மாற்றுவதற்காகவும், செங்கற்பட்டு அண்ணா, பசும்பொன் தேவர் திருமகன் ஆகிய மாவட்டங்களின் பெயர்களை மாற்றிய காரணத்தால் மேற்கூறிய சட்டத்தின் விவர அட்டவணைகளைத் திருத்துவதற்காகவும் இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

16. தமிழ்நாடு 1989ஆம் ஆண்டு மதுவிலக்கு (மூன்றாவது திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 23/1989) :

ஆயத்தீர்வைகளின் பாக்கித் தொகைகளையும் ஏனைய கட்டணங்களையும் நிலவரி பாக்கியைப் போல் வசூலிப்பதற்கு வகை செய்து, மேற்படி சட்டத்தில் விதித்துறையை இயற்றும் வகையில் தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 10/1937) திருத்துவதற்கு இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

17. தமிழ்நாடு 1989ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்தம்) சட்டம் தமிழ்நாடு சட்டம் 24/1989) :

(1) ஊராட்சி ஒன்றியக் குழுவில் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கிற ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், மகளிர் ஆகியோரின் எண்ணிக்கையை மாற்றியமைக்கவும் மகளிர் ஆதிதிராவிடர்கள் பழங்குடியினரிடையே இருந்து வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான உறுப்பினர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் நியமனம் செய்யவும் அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்பட்ட அல்லது மற்ற உறுப்பினர்களைப்போல் சம உரிமை அளிக்கவும் உள்ள விதித்துறையை நீக்கவும் :

(2) மேற்படி சட்டத்தின் 12-ஆவது பிரிவைச் சேர்ந்த 47- அல்லது பிரிவு (1-இ) உட்பிரிவு (1-ஏ) உட்பிரிவு ஆகியவற்றையும் 149- , 151-பி ஆகிய பிரிவுகளையும் நீக்கவும் பொதுச் சுகாதாரம் பணியாளர் அமைப்புகளை ஊராட்சி ஒன்றியக் குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரதுவும், கட்டாயமாகத் தடுப்பு ஊசி போடுவதற்கு 93-ஆவது பிரிவை மீண்டும் செயலுக்குக் கொண்டுவரவும் இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

18. தமிழ்நாடு 1989-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதித்தல் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/1989) :

புதிதாக மோட்டார் பொருத்தப்பட்ட இரண்டு சக்கர வண்டிகளை வாங்கும் போது மோட்டார் வண்டி வரியை, ஒட்டுமொத்தமாகச் செலுத்தும் முறையைக் கொண்டு வரவும், தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 13/1974) கார்கள், ஆம்னி பேருந்துகள் வேன்கள் ஆகியவற்றைச் செலுத்தத்தக்க காலாண்டு வரியை அதிகரிப்பதற்காகவும் இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

19. தமிழ்நாடு 1989-ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்தல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 26/1987) :

தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வருவாய் வரியை ஒழிப்புச் சட்டத்தின் மூலம் (தமிழ்நாடு சட்டம் 36/1989) வருவாய் வாரியத்தை நீக்கிவிட்டதன் பேரில் இச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. 'வருவாய் வாரிய உறுப்பினர் பதவி தரத்திலுள்ள ஓர் அதிகாரி'' என்பதற்குப் பதிலாக ''நிலச்சீர்திருத்த ஆணையர்'' என்ற பதிவை அமைத்துக் கொள்வதன் மூலம் தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்தல்) சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 24/1978) 13-ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவைத் திருத்துவதற்காகவே இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

20. தமிழ்நாடு 1987-ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் (முறைப்படுத்தல்) (தமிழ்நாடு சட்டம் 27/1989) :

தமிழ்நாட்டில் வேளாண்மை விளைபொருள்களை வாங்குவதையும் விற்பதையும் முறைப்படுத்துவதற்காகவும், வேளாண் விளைபொருளுக்கான அங்காடிகளை ஏற்படுத்தி இயற்றவும் இவை தொடர்பான சட்டங்களைத் திருத்தவும், ஒழுங்கு சேர்க்கவும் இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

21. தமிழ்நாடு 1987-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காவது திருத்தச்) சட்டம்) (தமிழ்நாடு சட்டம் 28/1987) :

தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 3-ஆம் பிரிவில் (2-பி) என்ற புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் மேற்படி சட்டத்தின் கீழ் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அந்நிய மதுவின் மீது மதிப்புக் கூட்டிக் கொள்ளும் கோட்பாட்டினைச் சேர்க்கின்ற, சரிசெய்யும், எதிர் மாற்று விதித்துறையுடன் (with set off Provision incorporating the concept of value addition)

22. தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு பல்கலைக் கழகங்கள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 29/1989) :

ஏற்கனவே ஆறாண்டுகள் உறுப்பினராகப் பணியாற்றியுள்ள அல்லது அறிவார்ந்த நபர்களின் பணிகளைப் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு அவற்றில் இதுகாறும் தமிழ்நாடு மாநிலத்திலுள்ள பல்கலைச்சழகங்களைச் சேர்ந்த ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அதிகார மன்றங்கள் எவற்றில்லும் பொதுவாக ஆறாண்டுகள் உறுப்பினராக பதவி வகிக்கின்ற ஒருவர், பல்கலைச்சழகங்களின் எந்தவொரு அதிகாரி மன்றத்தில் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது நியமனம் செய்யப்படுவதற்குத் தகுதியுடையவராக மாட்டார் என்ற தடையை நீக்கி விடுவதற்காக இச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

23. தமிழ்நாடு 1989-ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தச் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 390/1989) :

தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தச் (நில உச்சவரம்பை நிர்ணயித்தல்) (திருத்தச்) சட்டத்தில் தமிழ்நாடு சட்டம் 3/1984 ஏனையவற்றிற்கிடையே, பின்வரும் திருத்தங்களைச் செய்யும் வகையில் இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அவையாவன :—

(1) அரசு தலைமைச் செயலாளரைத் தலைவராக நியமனம் செய்வது தொடர்பான விதித்துறையை நீக்கிவிடக் கருதப்பட்டுள்ளது. (2) இந்திய உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியுடன் கலந்தாலோசித்து சிறப்பு மேல்முறையீட்டு நடுவர் மன்றத்தில் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர் ஆகியோரை மாநில ஆளுநர் நியமனம் செய்வார்.

தலைவர், துணைத்தலைவர், உறுப்பினர் ஆகியோர் இரண்டாம் முறையாக பதவிக்கு மறு நியமனம் செய்வதற்குத் தகுதியுடையவராக்கப்படுகின்றனர்.

24. தமிழ்நாடு 1989ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 31/1969).

பின்வரும் நோக்கங்களை ஏற்கும் வண்ணம் தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தைத் திருத்துவதற்கு இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அவையாவன :—

(1) ஊராட்சிகள் ஒவ்வொன்றிலும் மகளிருக்கு 30 சதவீத இடங்களை ஒதுக்கீடு செய்தல்:—

(2) ஊராட்சி ஒன்றியக் குழுக்களை வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடுத்துவதற்காக, அரசால் அல்லது சட்டப்படிக்கான ஏதேனும் அமைப்பால் அல்லது பிற முக

வரமைப்பால் மேற்கொள்ளப்படும் பொருளாதார வளர்ச்சிப் பணிகள் தொடர்பான திட்டப்பணிகள், திட்டங்கள், நடவடிக்கைகள் ஆகியவற்றைச் செயற்படுத்தும் பொறுப்பை ஊராட்சி ஒன்றியக் குழுக்களிடம் ஒப்படைத்தல்.

(3) ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியக் குழுவிற்குச் சொந்தமான அல்லது அவற்றிடம் நிலைபெற்றுள்ள புதிய கிராமச்சாலை அல்லது ஊராட்சி ஒன்றியச் சாலை, பூங்கா, விளையாட்டுத்திடல், பேருந்து நிலையம் அல்லது சொத்து ஆகிய வற்றிற்கு உயிரோடிருக்கும் ஒருவரின் பெயரைச் (அவரின் சமூக நிலை என்னவாக இருப்பினும் அல்லது அவர் எப்பதவி வகித்தாலும் சூட்டுவதற்குள்ள தடையை நீக்குதல்.

(4) ஊராட்சிகள், ஊராட்சி (ஒன்றியக்குழுக்கள்) ஆகியவற்றின் நிதிநிலை குறித்து ஆய்வு செய்து அவற்றின் நிதி நிலைகளை மேம்படுத்துவதற்கான பரிந்துரை களைச் செய்வதற்காக ஐந்தாண்டிற்கொருமுறை வல்லுநர் குழு ஒன்றை அமைத்தல்.

25. தமிழ்நாடு 1989ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாம் திருத்த சட்டம் 32/1989):

எதிர்பாராச் செலவு நிதியைத் தற்காலிகமாக எழுபத்தைந்து கோடி ரூபா யிலிருந்து இருநூறு கோடி ரூபாயாக உயர்த்த தமிழ்நாடு 1954ஆம் ஆண்டு எதிர் பாராச் செலவு நிதிச் சட்டத்தைத் (திருத்த தமிழ்நாடு சட்டம் 2/1954) திருத்து வதற்காக இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

26. தமிழ்நாடு 1989ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 33/1989):

1—6—1989ஆம் நாள் முதல் பேரவைத் துணைத்தலைவர் முதலமைச்சரின் பேரவைச் செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் சம்பளத்தைத் தங்க வொன்றுக்கு ரூ. 1,700 ரூபாயிலிருந்து 1,900 ரூபாயாக உயர்த்தவும் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு வழங்கத் தக்க ஈட்டுப்படியை ரூபாய் 500-லிருந்து 700 ரூபாயாக உயர்த்தவும் இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

27. தமிழ்நாடு 1989ஆம் ஆண்டு மாநகராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 34/1989.)

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாநகராட்சிகளின் தனி அலுவலர் களின் பதவிக்காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு, அதாவது 31—3—1990ஆம் நாள் வரையிலும் நீட்டிப்பதற்கு வகை செய்ய இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

28. தமிழ்நாடு 1989ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்களை நியமித்தல்) சட்டத்தின் (குடியரசுத் தலைவரின் சட்டம் 25/1976) 4ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை, அரசு 9—10—1989 ஆம் நாளுக்குப் பின்னர் மேலும் ஒன்பது மாத கால அளவிற்கு நீட்டிக்க இயலும் வண்ணம், இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

29. தமிழ்நாடு 1989ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 36/1989);

தமிழ்நாடு 1983ஆம் ஆண்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 30/1983) உள்ள கூட்டுறவுச் சங்கத் தேர்தல் தொடர்பான கட்டுப்பாடு விதித்துறைகளை நீக்குவதற்கும், பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங் களின் இயக்குநர்கள் குழுவிலும் திராவிடர் பழங்குடியினருக்கு பதினெட்டு சதவீதமும் பிரதிநிதித்துவம் அளிப்பதற்கு வகை செய்யவும் பதிவு செய்யப்பட்ட சங்கத்தை திரு வகிப்பதற்கு அரசுக்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஏதேனும் ஓர் அமைப்பின் நிருவாகியாக அல்லது தனி அலுவலராக நியமனம் செய் வதற்கு வகை செய்யும் மேற்படி சட்டத்தைத் திருத்துவதற்கு இச்சட்டம் இயற்றப் பட்டுள்ளது.

30. தமிழ்நாடு 1989ஆம் ஆண்டு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்களை நியமித்தல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 37/1989):

தமிழ்நாடு 1986ஆம் ஆண்டு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்களை நியமித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1986) 4 ஆம் பிரி வைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்களின் நியமனக் கால அளவை 27—9—1989 ஆம் நாளுக்குப் பின்னர் மேலும் ஐந்து திங்கள் கால அளவிற்கு நீட்டிக்க அரசுக்கு இயலும் வகையில் இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

31. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்களை அமைத்தல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 38/1969).

பணியாளர் மற்றும் மாணவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் வீட்டு வசதி பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை நீங்கலாக, தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தின் குழுக்கள் அல்லது இயக்குநர்கள் பதிவாக. 26—2—1990 ஆம் நாள் வரையிலும் அந்த நாள் உட்படவும் தனி அலுவலர்களை நியமிப்பதற்கு இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

32. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) இரண்டாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 39/1989).

வழங்கப்படும் குடிநீரின் அளவை அதிகரிப்பதற்காக கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டும் வகையில், சென்னை மாநகராட்சிப் பகுதியிலும், அதன் புற எல்லைகளிலிருந்து 32 கிலோ மீட்டர் தொலைவிற்குள் உள்ள பகுதிகளிலும், விற்பனை வரி மீது ஐந்து சதவீத வீதத்தில் கூடுதல் மேல் வரி விதிக்க இயலும் வகையில் தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டத்தைத் (தமிழ்நாடு சட்டம் 24/1971) திருத்த, இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

33. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு கேளிக்கை வரி உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச் (திருத்தம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 40/1989).

தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின்கீழ், திரைப்படக் காட்சி அனுமதிக் கட்டணம் மீதான வரி திரைப்படக்காட்சி (காட்சி வரி) மீதான கூடுதல் வரி, திரைப்படக் காட்சி அனுமதிக் கட்டணம் மீதான கூடுதல் மேல்வரி, காட்சி வரி மீதான கூடுதல் மேல்வரி ஆகியவற்றையும், தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச் சட்டத்தின் கீழ் விதிக்கவரும் திரைப்படக் காட்சி அனுமதிக் கட்டணம் மீதும் திரைப்படக் காட்சி மீதும் மேல் வரிகள் விதித்தல் ஆகியவற்றையும், வரித்தொகை உட்பட திரைப்படக் காட்சிக்கான மொத்த அனுமதிக் கட்டணத்தில் நாற்பது சதவீதம் என்ற வீதத்தில் ஒரே வரியாகத் தொடக்க இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

(1) திரைப்படக் காட்சிகள் மீது விதிக்கப்படும் வரியின் சதவீதத்தைக் குறைத்தல்.

(2) தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு 10 ஆம் சட்டத்தைச் சேர்ந்த 4 ஆம் பிரிவின் கீழ்வரி விதிக்கும் திட்டத்தை, மேற்சொன்ன 4ஆம் பிரிவு செயலில் உள்ள பகுதியிலும் அப்பகுதியின் வெளிப்புற எல்லைகளிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவிற்குள் உள்ள பகுதியில் அமைந்துள்ள தற்காலிக திரையரங்குகள் (டூரிங்) நிறைந்த வெளி திரையரங்குகள் அல்லாத பிற திரையரங்குகளுக்கு நீட்டித்தல்.

(3) திரைப்படக்காட்சி அனுமதிக் கட்டணத்தின் மீது வரிவிதிக்கும் திட்டத்தின் கீழ் திரையரங்குகளிடமிருந்து வசூலிக்கப்படும் கேளிக்கை வரி மூலம் இடைக்கும் மொத்தத் தொகையை அரசும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றமும் 30 : 70 என்ற விகிதத்தில் பங்கிட்டுக் கொள்ளவேண்டும்.

(4) தமிழ்நாடு 10/1939 ஆம் ஆண்டுச் சட்டத்தைச் சேர்ந்த 1 விவர அட்டவணையின் 'A' பகுதியில் தேர்வுநிலை நகராட்சி பட்டியலில் புதுக்கோட்டையையும் அதே அட்டவணையின் 'B' பகுதியில் முதல்நிலை நகராட்சிகளின் பட்டியலில் குன்னூரையும் சேர்க்க வேண்டும்.

34. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் (வெளியேற்றப் படுவதிலிருந்து தடுத்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 41/1989).

30—9—1986 ஆம் நாளன்று சேர்ந்து வந்த குத்தகைப் பாக்கித் தொகையையும் அதன் பின்னர் 20—9—1989 ஆம் நாள் வரையிலான கால அளவிற்குரிய குத்தகைப் பாக்கித் தொகையையும் செலுத்தாததற்காக, பயிரிடும் குத்தகைதாரர்களை அவர்கள் பயிரிடும் நிலங்களிலிருந்து வெளியேற்றுவதினின்றும் 31—3—1990 ஆம் நாள் வரை தடுப்பதற்காகவும் மேற்சொன்ன கால அளவிற்குரிய குத்தகைப்பாக்கியைச் செலுத்தாமலுள்ள பயிரிடு குத்தகைதாரர் ஒருவரை வெளியேற்றுவதற்கான மனுக்கள் வழக்குகள் ஆகியவற்றுக்குத் தடையாணை பிறப்பிக்கவும் குத்தகைப் பாக்கிச் செலுத்துவதற்காக 1—10—1986 ஆம் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் உத்தேசச் சட்டம் தமிழ்நாடு அரசிதழின் வெளியிடப்படும் முன்னர் குத்தகைப் பாக்கி செலுத்தாததற்காக நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்ட பயிரிடு குத்தகைதாரர்களிடம் நிலங்களை மீட்டளிக்கவும் இந்தச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

35. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டுக் கால்நடை மருத்துவம் — அறிவியல் பல்கலைக்கழகம் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 42/1989) :

கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியலின் மேம்பாட்டுக்காகவும், கால்நடை மருத்துவம், மற்றும் அறிவியல் குறித்த கல்வியை மேலும் மேம்படுத்தவும் அது தொடர்பாக ஆய்வைத் தொடர்ந்து மேற்கொள்ளவும் தமிழ்நாடு கால்நடை விலங்கு அறிவியல் பல்கலைக்கழகம் என்ற பெயரில் 20—9—1989 ஆம் நாளிலிருந்தும் அந்நாள் முதற் கொண்டும் பல்கலைக்கழகம் ஒன்றை ஏற்படுத்த இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

36. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டும் கடன் நிவாரணச் (திருத்த) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 43/1989) :

கடன் பெற்றவர்கள், தமிழ்நாடு 50/1982 ஆம் ஆண்டு சட்டத்தின்கீழ் நிவாரணம் பெறுவதற்காக மனுக்கள் தாக்கல் செய்வதற்குரிய கால வரம்பை 23—8—1988 ஆம் நாளுக்குப் பின்னர் மேலும் ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிப்பதற்காகவும் தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டுக் கடன் நிவாரணம் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 50/1982) திருத்தம் செய்வதற்காக இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

37. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் (திருத்த) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 1/1990) :

மேற்சொன்ன சட்டத்தைத் தக்கவாறு திருத்துவதன் மூலம், அரசியலமைப்புச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள சமத்துவத்தை எய்துவதற்காக, ஓர் இந்துக் கூட்டுக் குடும்பத்தில், மகனுக்குள்ள அதே உரிமைகளை அந்த இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த மகளுக்கும் அளிப்பதற்காக இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இந்த உத்தேசத் திருத்தச் சட்டம் செயலுக்கு வரும் நாளுக்கு முன்னர் மணமான மகள்களுக்கும் இந்த உத்தேசத் திருத்தச் சட்டம் செயலுக்கு வரும் நாளுக்குச் செய்து கொள்ளப்பட்ட பாகப்பிரிவினைக்கும் இச்சட்டம் பொருந்தாது.

38. தமிழ்நாடு (விளை பொருள்) 1990 ஆம் ஆண்டு வேளாண்மை (தனி அங்காடிகள் நியமனம்) தமிழ்நாடு திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1990) :

தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு வேளாண்மை (விளை பொருள்) அங்காடிகள் திருத்தம் (சிறப்பு விதித்துறைகள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1989) 5 ஆம் பிரிவையும், தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் (திருத்தம்) தனியதிகாரிகள் நியமனத்திற்குச் செயல்திறன் அளித்தல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1989) 3 ஆம் பிரிவையும் திருத்தவும், மேற்சொன்ன சட்டங்களின்படி நியமிக்கப்பட்ட அங்காடிக் குழுக்களின் தனி அதிகாரிகளின் பதவிக்காலத்தை 5—12—1989 ஆம் நாளுக்கு பிறகு மேலும் ஓராண்டிற்கு நீட்டிப்பதற்கும் இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

39. தமிழ்நாடு 1990 ஆண்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) சட்டங்கள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 1990/3) :

தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) சட்டம் (குடியரசுத் தலைவரின் சட்டம் 25/1976) தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு வேளாண் பணிக்கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 17/1987), தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 38/1989) சட்டம் ஆகும். சட்டங்களின் படி நியமிக்கப்பட்ட தனி அதிகாரிகளின் படிவம் காலத்தை முறையே 27—2—1990, 28—2—1990, 9—7—1990 ஆம் நாளுக்குப் பிறகு மேற்கொண்டும் 10 நிங்கள் கால அளவிற்கு நீட்டிக்க வகை செய்யும் பொருட்டு மேற்படி சட்டங்களின் விதித்துறையினை திருத்தும் நோக்குடன் இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

40. தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டுச் சம்பளம் வழங்கல் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 4/1990) :

சட்டமன்ற உறுப்பினராகி உள்ள யாதொரு நபர் அவருடைய பதவிக்காலத்தில் இறந்து போனால் அத்தகையோரின் குடும்பத்திலருக்கு ஒரு மொத்தத் தொகையாகிய ரூ. 50,000 வழங்குவதற்கு வகை செய்து இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டம் 27—1—1989 அன்றும் அந்நாளிலிருந்தும் செயலுக்கு வரும்.

41. தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு எதிர்ப்பாராச் செலவு நிதி (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 5/1990) :

22—12—1989 முதல் 31—3—1990 ஆம் நாள் முடிய உள்ள காலத்தில், எதிர்ப்பாராச் செலவு நிதியை தற்காலிகமாக 300 கோடி ரூபாயாக உயர்த்துவதற்கு வகை செய்து தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு எதிர்ப்பாராச் செலவு நிதிச் சட்டத்தைத் (தமிழ்நாடு சட்டம் 2/1954) திருத்துவதற்காக இச்சட்டம்.

42. தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 61/990) மாநிலத் தொகு நிதியிலிருந்து, கீழ்கண்டவற்றுக்காகத் பணம் ஒதுக்க வகை செய்து இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது) :

(அ) 1—4—1948 ஆம் நாளன்று தொடங்கிய நிதி ஆண்டில் மாநில அரசு செலவிடுவதற்காக தமிழ்நாடு சட்டப்பேரவை அனுமதித்த துணை மானியம்.

(ஆ) அக்கால அளவிற்காக மாநிலத் தொகு நிதியில் சாட்டப்பட்ட துணைச், செலவுகள் ;

43. 1990 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீர் அகற்றுதல் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 7/1990) :

'' குடிநீர் வழங்கல் '' என்னும் பொருளைக் கவனிக்கும் துறையைச் சார்ந்த அரசு செயலாளர் அல்லாத வேறு அனுவலர் ஒருவரை வாரியத்தின் தலைவராக நியமிப்பதற்கு வகை செய்யும் பொருட்டு, 1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்றல் சட்டத்தைத் (தமிழ்நாடு சட்டம் 28/1978) திருத்துவதற்காக இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

44. 1990 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழகம், அட்டவணையிடப்பட்ட பொதுப் பொறுப்புக்கழகங்கள் அறக்கட்டளைகள் (நிருவாகத்தை எடுத்துக்கொள்ளுதல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 8/1990) :

தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழகம் அச்சட்டத்தின் அட்டவணையிலிடப்பட்ட பொதுப் பொறுப்புக் கழகங்கள் நிருவாகத்தை எடுத்துக் கொள்ளுதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1981) அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள அறக்கட்டளை ஆகியவை 21—12—1989 ஆம் நாளுக்குப் பிறகு மேலும் ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிக்கும் வகையில் மேற்படி சட்டத்தின் 3, 8 ஆம் பிரிவுகளை திருத்துவதற்காக இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

45. தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் (அனுமதியளித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 9/199) :

(அ) 1990]91 ஆம் (நிதி) ஆண்டின் ஒரு பகுதிக்கான மாநில அரசின் மதிப்பீட்டுச் செலவுக்காக தமிழ்நாடு மாநிலச் சட்டம் பேரவை முன்கூட்டியே அனுமதித்த மானியங்கள் :

(ஆ) மேற்சொன்ன நிதி ஆண்டின் அதே கால அளவுக்கு மேற்சொன்ன நிதியிலிருந்து சாட்டப்பட்ட செலவு ஆகியவற்றிற்காகத் தேவைப்படும் தொகையை மாநிலம் தொகு நிதியிலிருந்து பெறுவதற்கும் மேற்படி தொகைகளை ஒதுக்குவதற்கும் வகை செய்ய இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

46. தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு மாநகராட்சிகள் சட்டத்தின் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1990).

தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை மேற்கொண்டும் ஆறு திங்கள் கால அளவிற்கு அதாவது 30—9—1990 வரை நீட்டிப்பதற்கு வகை செய்யும் பொருட்டு, 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 4/1919)) 1919 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 15/1971), 1971 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 1981 ஆம் ஆண்டு 25/1989) ஆகியவற்றைத் தகுந்தவாறு திருத்தும் நோக்குடன் இச்சட்டம் இயற்றப் பட்டுள்ளது.

47. தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு நிதியொதுக்கச் (எண். 2) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 11/1990).

(அ) 1—4—1989 ஆம் நாளன்று தொடங்கிய நிதி ஆண்டிற்கு மாநில அரசின் செலவுக்காக தமிழ்நாடு மாநிலச் சட்டப் பேரவை அனுமதித்த துணை மானியங்கள் ;

(ஆ) அக்கால அளவிற்கு மாநிலத் தொகுதியில் சாட்டப்பட்ட துணைச் செலவு ;

ஆகியவற்றிற்குத் தேவைப்படும் தொகையை மாநிலத் தொகுநிதியிலிருந்து நிதி ஒதுக்கம் செய்வதற்கு வகை செய்யும் நோக்குடன் இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

அத்தியாயம்—19.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை செயலகம்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

•

•

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை—அமைப்பு.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தேர்ந்தெடுக்கப்பட்ட 234 உறுப்பினர்களை மற்றும் ஒரு நியமன உறுப்பினரையும் கொண்டதாகும். ஒன்பதாவது சட்டமன்றப் பேரவையில் ஒவ்வொரு அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

1. திராவிட முன்னேற்றக் கழகம்	144
2. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்	29
3. இந்திய தேசியக் காங்கிரஸ்	26
4. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) ...	15
5. அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (ஜானகி எம்.ஜி.ஆர், இராமச்சந்திரன் குரூப்)	1
6. ஜனதா தள் ...	4
7. இந்திய யூனியன் முஸ்லீம் லீக் (எல்)	4
8. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி	3
9. தமிழ்நாடு ஜனதா	2
10. தமிழ்நாடு பார்வேடு பிளாக்	1
11. இந்திய உழவர்கள் மற்றும் உழைப்பாளர்கள் கட்சி	1
12. இந்திய ஐக்கிய பொதுவுடமை கட்சி	1
13. கயேட்சை	2
14. நியமனம்	1
15. மாண்புமிகு பேரவைத் தலைவர்	2
	235

2, கூட்டத் தொடர்கள் மற்றும் கூட்டங்கள் :

இவ்வறிக்கை கால கட்டத்தில் மூன்று கூட்டத் தொடர்கள் நடைபெற்றன.

இரண்டாவது கூட்டத் தொடர் 30—10—1989 அன்று துவங்கப் பெற்று 2—11—1989 அன்று ஒத்தி வைக்கப்பெற்று, 5—12—1989 அன்று இறுதி செய்யப் பெற்றது.

மூன்றாவது கூட்டத் தொடர் 18—1—1990 அன்று துவங்கப் பெற்று 27—1—1990 அன்று ஒத்தி லவக்கப்பெற்று, 6—2—1990 அன்று இறுதி செய்யப்பெற்றது.

நான்காவது கூட்டத் தொடர் 17-3-1990 அன்று துவங்கப் பெற்று 12—5—1990 அன்று ஒத்திவைக்கப்பெற்று, 23—5—1990 அன்று இறுதி செய்யப்பெற்றது.

மேற்சொன்ன மூன்று கூட்டத் தொடர்களிலும் பேரவை 51 நாட்கள் கூடியது, அதாவது இரண்டாவது கூட்டத் தொடரில் 4 நாட்களும், மூன்றாவது கூட்டத் தொடரில் 7 நாட்களும் மற்றும் நான்காவது கூட்டத் தொடரில் 40 நாட்களும் கூடியது.

6—2—1989 முதல் 12—5—1989 முடிய நடைபெற்ற அலுவல்கள் 1—4—1988 முதல் 12—5—1989 முடிய உளள சுருக்கக் குறிப்பில் ஏற்கனவே கொடுக்கப் பெற்றுள்ளன.

3. ஆளுநர் உரை :

இக்கால கட்டத்தில் தமிழ்நாடு ஆளுநர் திரு. பி. ஸி. அலெக்ஸாண்டர் அவர்கள் 1990 ஆம் ஆண்டு ஜூலை 18 ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10-00 மணி அளவில் சென்னை, தலைமைச் செயலகத்தில் அமைந்துள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் உரையாற்றினார்கள்.

19—1—1990 ஆம் நாள் அன்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று திரு. பெ. சு. திருவேங்கடம் அவர்கள் கொண்டு வந்தார்கள், டாக்டர் த. சாந்தகுமாரி அவர்கள் இதை வழிமொழிந்தார்கள்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் ஐந்து நாட்கள் நடைபெற்றது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் விவாதத்திற்கு பதில் அளித்தார். பின்னர் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் எவ்வித மாற்றமும் இன்றி 24—1—1990 ஆம் நாளன்று பேரவையில் நிறைவேற்றப் பட்டது.

நிதி நிலை அலுவல்கள் :

இவ்வறிக்கை கால கட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள நிதிநிலை அலுவல்கள் நடைபெற்றன :—

	அவைக்கு அளிக்கப்பெற்ற நாள்.	விவாதம் வாக்கெடுப்பு நடைபெற்ற நாட்கள்.
(1)	(2)	(3)
1. 1989-90 ஆம் ஆண்டிற்கான முதல் துணை நிதி அறிக்கை.	23—1—1990	25—1—1990
2. 1990-91 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம்.	17—3—1990	பொது விவாதம் 7 நாட்கள் மற்றும் மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும் 24 நாட்கள் நடைபெற்றன.
3. 1990-91 ஆம் ஆண்டிற்கான முன் பண மானியக் கோரிக்கைகள்.	17—3—1990	20—3—1990
4. 1989-90 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை நிதி அறிக்கை.	28—3—1990	30—3—1990

சட்டமியற்றும் அலுவல்கள் :

இவ்வறிக்கை கால கட்டத்தில், 48 சட்டமுன்வடிவுகள் பேரவையில் அறிமுகம் செய்யப்பெற்று அவற்றில் 45 ஆய்வு செய்யப்பெற்று நிறைவேற்றப்பட்டன.

வினாக்கள் :

இக்கால அளவில் பேரவையில் விடையளிக்கப் பெற்ற உடுக்குறியிட்ட மற்றும் குறுகிய கால வினாக்களின் எண்ணிக்கை மற்றும் உடுக்குறியிடாத வினாக்களின் விடைகள் அவையில் வைக்கப்பெற்ற விவரங்கள் பின்வருமாறு :—

உடுக்குறியிட்ட வினாக்கள்	861
குறுகிய கால வினாக்கள் ...	7
அவையில் வைக்கப்பெற்ற உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள்.	1,049

ஒத்திவைப்புத் தீர்மானங்கள் :

இக்கால அளவில் 10 ஒத்திவைப்புத் தீர்மானங்கள் பேரவையில் எழுப்ப அனுமதி கோரப்பெற்றது. சம்பந்தப்பட்ட உறுப்பினர்களின் கருத்துக்களையும், மாண்புமிகு அமைச்சர்களின் விளக்கங்களையும் கேட்ட பின்னர் அத்தீர்மானங்களை அவையில் விவாதிக்க அனுமதி மறுக்கப்பெற்றது.

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பின் மீது மாண்புமிகு அமைச்சர்களின் அறிக்கைகள்

இக்கால அளவில், சட்டமன்றப் பேரவையில் 55-வது விதியின் கீழ், எழுப்பப் பெற்ற, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பின் மீது, மாண்புமிகு அமைச்சர்கள் 66 விவர அறிக்கைகளைப் பேரவையில் அளித் தார்கள்.

அரசினர் தனித் தீர்மானங்கள் :—

இக்கால அளவில் 4 அரசினர் தனித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குழுக்கள் அமைத்தல் :

1. அலுவல் ஆய்வுக்குழு	9—5—1990
2. மதிப்பீட்டுக்குழு	9—5—1990
3. பொதுக்கணக்குக்குழு	9—5—1990
4. பொது நிறுவனங்கள் குழு	9—5—1990
5. உரிமைக்குழு	9—5—1990
6. விதிகள் குழு	10—5—1990
7. அவைக்குழு	10—5—1990
8. சட்ட விதிகள் ஆய்வுக்குழு	10—5—1990
9. அரசு உறுதிமொழிக்குழு	9—5—1990
10. மனுக்கள் குழு	12—5—1990
11. பேரவை நூலகக் குழு	12—5—1990
12. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்குழு	12—5—1990

அவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்:

இக்கால அளவில், 651 ஏடுகள் பேரவையில் வைக்கப்பெற்றன—

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்	389
(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.	262
	651

அத்தியாயம் 20

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

கோயம்புத்தூர் மாநகராட்சி.

முன்னுரை :

கோவை மாநகராட்சி 1981-ம் ஆண்டு 6 பஞ்சாயத்துக்களையும், சிங்காநல்லூர் நகராட்சியையும் இணைத்து ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசு ஆணை எண். 786 நாள் 30—4—1981-ன்படி 1—5—1981 முதல் மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இது ஒரு பொது நிர்வாக அமைப்பாக நிர்வாக அலுவலர் ஆணையரின் கீழ் பல பிரிவுகளைக் கொண்டு பிரிவுத்தலைமை அலுவலர்களுடன் செயல்பட்டு வருகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்றம் இன்னும் அமைக்கப்படவில்லை. ஆதலால் மாவட்ட ஆட்சியாளரை தலை அலுவராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இம்மாநகராட்சி மக்களின் பொது நலன்களுக்காக குடிநீர், மின்சாரம், சுகாதாரம், சாலை அமைப்பு ஆகியவைகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

செயல்பாடு :

மாநகராட்சியின் செயல் பொது மக்களின் நன்மையைக் கருதி பொது மக்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு, சுகாதாரம் பராமரிப்பு, சாலை பராமரிப்பு, சாக்கடை பராமரிப்பு, குடிநீர் விநியோகம், மின் விநியோகம் ஆகியவைகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. மாநகராட்சியின் முக்கிய வருமானம் வரியினங்கள் மூலம் வருகிறது. இந்தப் பிரிவு முதன்மை வருவாய் அலுவலரைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

குறியிட்டு செயலை திட்டத்தின் கீழ் பொருளாதாரத்திலோ செயல்பாட்டிலோ குறியீடு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

நிட்டங்கள் :

இம்மாநகராட்சியால் 598 கி.மீ. நீளத்திற்கு சாலை பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. அவற்றில் 469 கி.மீ. நீளம் தார் சாலைகளாகவும், காங்கிரீட் சாலைகளாகவும் உள்ளது. 1076 வேலைகளுக்காக இந்த ஆண்டில் 534 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. சுண்டக்காமுத்தூர் ரோடு, பொள்ளாச்சி ரோடு இணைப்பு சாலை போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதற்காக பொள்ளாச்சி ரோடு சுண்டக்காமுத்தூர் ரோடு பிரிவில் பெரிய குளம் ஏரியை ஒட்டி, சாலை ஒன்று அமைக்கப்பட்டது. அரசு தனது ஆணை எண் 486, நெடுஞ்சாலை மற்றும் நகர் அபிவிருத்தித் துறையின் மூலமாக ரூ. 20 லட்சம் அனுமதித்துள்ளது. மேற்படி பாதை 12.84 லட்சம் செலவில் 1990-ம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் முடிக்கப்பட்டுள்ளது.

சிரியன் சர்ச் பாதையில் புதிதாக ஒரு பூங்கா அமைக்கப்பட்டது. இதற்கு அரசு ஆணை எண் 486 வீட்டுவசதி மற்றும் நகர அபிவிருத்தி துறை நாள் 27—3—86-ல் 5 லட்சம் அனுமதித்தது. 1989-90-ம் ஆண்டில் இந்த பூங்கா பலவகை செடிகள் மற்றும் குழந்தைகளுக்கான விளையாட்டு சாதனங்களைக் கொண்டு முடிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

காந்திபுரம் நகர பேருந்து நிலையம் :

பேருந்து நிலையத்தில் 6.4, 3.6 மீட்டர் அளவில் 21 கடைகளும் 94.5,33 மீட்டர் அளவில் பயணிகள் நிற்கும் இடமும் கட்டப்பட்டது. இதன் மதிப்பீடு ரூ. 22.5 லட்சம், இவையன்றி, நகர பேருந்து நிலையத்தில் அபிவிருத்தி செய்வதற்காக 2.5 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இவை நகர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 26—8—1989-ல் முடிக்கப்பட்டு 30—9—1989 முதல் பொது உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு உபயோகிக்கப்பட்டு வருகிறது. இவைகளுக்கான செலவு ரூ. 20,15,267.

பாதாள சாக்கடை :

1 மற்றும் 2 திட்டப்பணி பாதாள் சாக்கடை மற்றும் குடிநீர் திட்ட அலுவலகத்தால் ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் மூலம் ரூ. 6 கோடி செலவில் செலவிடப்பட்டு முடிக்கப்பட்டுள்ள மூன்றாவது திட்டப்பணி செயல்பாட்டில் உள்ளது.

மாநகராட்சியில் 54.675 குடிநீர் குழாய் இணைப்புகள் வீடுகள், உணவு விடுதிகள், தங்கும் அறைகள் ஆகியவற்றிற்காக கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றில் 1857 பொது குழாய்களும் அடங்கும். இவையன்றி குடிநீர்த் திட்டம் விண்தரிக்கப்படாத இடங்களுக்கு 12 லாரிகள் மூலமும் 2 டிராக்டர்கள் மூலமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

பொது சுகாதாரம் :

சுகாதாரப் பிரிவு 34 பிரிவுகளாக 34 சுகாதார ஆய்வாளர்களைக் கொண்டும் 1,857 துப்புரவு பணியாளர்களைக் கொண்டும் செயல்பட்டு வருகிறது. குப்பைகளைச் சேமித்து வைக்க சாலையோரங்களில் 844 குப்பை தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளது. குறுகலான தெருக்களில் சேரும், சூப்பைகளை மாட்டு வண்டிகள் மூலம் எடுத்து உப கிடங்குகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது. உப கிடங்குகளில் இருந்து லாரிகள் மூலம் குப்பைகளை எடுத்து மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள மையக் கிடங்கில் கொட்டப்படுகிறது. இராமநாதபுரம், பாப்பாநாயக்கன் பாளையம் பகுதிகளில் குப்பைகளை அகற்றும். கால்நடைகள் தங்குவதற்காக கிடங்கு கட்டப்பட திட்டம் உள்ளது. இம்மாநகராட்சியில் 193 பொது கழிப்பிடங்கள் உள்ளன. இவையன்றி 22 நவீனக்கட்டணக் கழிப்பிடங்களும் உள்ளது.

நகரமைப்பு, திட்ட விதி பிரிவு 11(1) (3)-படி (அரசு ஆணை எண் 1103 உள்ளாட்சித்துறை நாள் 7—6—1976) அமைக்கப்பட்டது. நகரமைப்புத் திட்ட விதி 26-ன் கீழ் (பெருந் திட்டம்) (Master plan) கோவை மாநகராட்சிக்கு தயாரித்து விளம்பரப்படுத்தப்பட்டது.

சாலையோரங்களில் பெட்டிக்கடைகள், தடுப்புகள், விளம்பர பலகைகள் ஆகிய 1,255 ஆக்கிரமிப்புகளை அகற்றியுள்ளது. இதன் மூலம் சுமார் இரண்டு ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டு சாலைகள் அகலப்படுத்தப்பட்டது. இவையன்றி பெரிய ஆக்கிரமிப்புகளை அகற்றியதன் மூலம் மாநகராட்சிக்கு சொந்தமான சுமார் பத்து கோடி பெறும் இடங்களை மாநகராட்சியால் கைப்பற்றப்பட்டுள்ளது. 1971 ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி திட்டத்தின் படி 129 விஸ்தரிப்பு அபிவிருத்தி திட்டங்கள் விளம்பரப்படுத்தப்பட்டது. அவற்றில் பத்து அபிவிருத்தி திட்டங்களுக்கு கூட்டம் நடத்தப்பட்டது. உள்ளூர் திட்ட அபிவிருத்திக் குழுவால் விஸ்தரிப்பு திட்டங்களை செயல்படுத்துவதற்கு நடவடிக்கையில் உள்ளது.

மின்சாரம் :

கோயம்புத்தூர் மாநகராட்சி மின் வாரியத்திடமிருந்து அரசு ஆணை எண் 193 (W.R.S.) நாள் 24—1—1933-ன் படி உரிமைதாரராயிருந்து (Licences) மின்சாரம் பெற்று வருகிறது. பழைய நகராட்சிப் பகுதியில் 8,495 தெரு விளக்குகளும், இணைப்பட்ட பகுதிகளில் 7,671 தெரு விளக்குகளும் உள்ளன.

மின் விளக்குகளை அட்டைகளில் கணக்கிட்டு கொடுத்து இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை வசூல் செய்யப்பட்டு வருகிறது. குறைந்த மின் அழுத்தும் ஏற்படுவதை தவிர்க்க ரூபாய் 20 லட்சம் மதிப்பில் 20 டிரான்ஸ் பார்மர்களை நிறுவ திட்டமிடப் பட்டுள்ளது. மேலும் 19 லட்சம் செலவில் நெடுஞ்சாலைதுறை சாலைகளில் சோடியம் வேப்பர் விளக்குகள் பொறுத்தப்பட்டுள்ளது. இவையன்றி, முக்கியமான சாலைகளில் 17 லட்சம் செலவில் அதிக மின் ஒளிவிளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது. பூங்காக்களில் பாதாள மின் இணைப்பு மூலம் (Underground Cables) ரூபாய் பத்து லட்சம் செலவில் விளக்குகள் அமைக்கப்படவுள்ளது. மாநகராட்சியின் முக்கிய வரு மானம் வரியினங்கள் மற்றும் வரியில்லாத இனங்களாகும். இவற்றின் ஆண்டு வரு மானம் ரூபாய் 775 லட்சம். இவையன்றி அரசு மானியமும் கிடைக்கிறது. மாநகராட்சியின் மொத்த ஆண்டு வருமானம் ரூபாய் 1,851 லட்சங்கள். செலவு 1,900 லட்சங்கள்.

உலக வங்கி மூலம் ரூபாய் 400 லட்சம் செலவில் டவுன்ஹால் அருகில் உள்ள காலி இடத்தில் வணிக மையம் கட்டுலதற்கும், போத்தனூர் சாலையில் டிரக் டர்மினல் 50 லட்சம் செலவிலும் கட்டப்படவுள்ளது. மேலும் 50 லட்சம் செலவில் 75 கழிப்பிடங்கள் கட்டவும் உள்ளது. இவையன்றி அவிநாசி சாலையில் உள்ள வணிக மையத்தில் 30 லட்சம் செலவில் கடைகள் கட்டி அபிவிருத்தி செய்ய வுள்ளது. மேலும், பூங்காக்கள் அபிவிருத்திக்காக ரூபாய் 40 லட்சம் செலவு செய்யப் படவுள்ளது.

இம்மாநகராட்சி மக்களுக்கு அவர்களது பகுதிகளில் தேவைப்படும் செய்யுக் கூடிய அனைத்து வசதிகளையும் அவ்வப்போது உடனடியாக கவனித்து செய்து வருகிறது. மாநகராட்சி நிர்வாகம் மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலங்களின் ஒத்துழைப்புடன் நன்கு செயல்பட்டு வருகிறது.

சென்னை மாநகராட்சி.

முன்னுரை :

(குறிக்கோள், நோக்கங்கள் பணியின் தன்மை, முதலியன குறித்த பொதுவான தகவல்கள்) :

சென்னை மாநகராட்சி பிழக்கிந்திய கம்பெனி வெளியிட்ட சாசனத்தின்படி 1688 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29 ஆம் நாளன்று ஏற்படுத்தப்பட்டது. 1792 ஆம் ஆண்டு நாடாளுமன்றச் சட்டம், மாநகரில் நகராட்சி வரிகளை விதிக்க. மாநகராட்சிக்கு அதிகாரம் அளித்தது. 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகர் மாநகராட்சிச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள சட்டப்படியான அதிகாரங்களை இம்மாநகராட்சி பெற்றுள்ளது.

சாலை பராமரிப்பு, தெரு விளக்கு போடுதல், தொடக்கக்கல்வி, மழைநீர் வடிகால் பராமரிப்பு, பொதுச்சுகாதாரம், துப்புரவு சுகாதாரம், கொள்ளை, நோய்களைக் கட்டுப்படுத்துதல், பூங்காக்கள், தோட்டங்கள், விளையாட்டுத்திடல்கள், விளையாட்டு அரங்குகள், இடுகாடு, சுடுகாடு ஆகியவற்றுக்கு வகை செய்தல் போன்ற அடிப்படை நகர வசதிகளை அளிப்பது மாநகராட்சியின் முதன்மை பொறுப்பாகும்.

அலுவல்கள் :

பணிகளையும், அலுவல்களையும் செய்வதற்கும், இம்மாநகராட்சியிடம் நிலை பெற்றுள்ள அலுவல்களை முறைப்படுத்துவதற்கும், பொறியியல் துப்புரவு, மின் சாதனம், வருவாய் மற்றும் மக்கள் நல்வாழ்வு ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கும் மண்டல அதிகாரிகள் வட்ட அதிகாரிகள் எனப் பெயரிடப்பட்டு 10 துணை ஆணையாளர்களுக்கு வகை செய்து சென்னை மாநகராட்சியின் நிருவாக அமைப்பு பிரித்து வடிவமைக்கப்பட்டுள்ளது.

கணக்குத் தலைப்புகள் திட்டப் பணிகளின்கீழ் திட்ட வகைகளிலும் நிதி வகைகளிலும் ஏற்பட்ட பணி முன்னேற்றம் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு எய்திய சாதனைகள் :

சென்னை மாநகரில் 1989–90 ஆம் ஆண்டில் போக்குவரத்து அதிகமாகவுள்ள சாலைகள் முக்கியமான சாலைகள் போக்குவரத்து மிக்க சாலை சந்திப்புகள் ஆகியவற்றில் பெரும்பாலான இடங்களில் சுமார் 1380 சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கப்பட்டன. 1989–90 ஆம் ஆண்டு வரை போடப்பட்ட சோடியம் ஆவி விளக்குகளின் மொத்த எண்ணிக்கை சுமார் 7,185 ஆகும். மாநகரின் பல்வேறு பகுதிகளில் புதிதாக 3,065 தெரு விளக்குகள், அமைக்கப்பட்டன. 1989 ஆம் ஆண்டில் ரூபாய் 39.37 இலட்சம் செலவில் சென்னை மாநகரில் பல்வேறு பகுதிகளில் பழைய நிலத்தடி புதைமின் கம்பி வடங்களுக்குப் பதிலாக 75 கி.மீ. நீளத்திற்கு புதிய நிலத்தடி புதைமின் கம்பி வடங்கள் நிறுவப்பட்டன.

1988–89 ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட மொத்த சொத்து வரி ரூ. 2,248.34 இலட்சமாகும். ஆனால் இது 1989–90 ஆம் ஆண்டில் ரூ. 2,640.89 இலட்சமாக இருந்தது. இவ்வாறாக 1989–90 ஆம் ஆண்டில் ரூ. 392.55 இலட்சம் சொத்து வரி வகையில் வசூல் அதிகரித்துள்ளது.

மேலும் இவ்வாண்டில் ஏனைய வரி கட்டணங்கள், வகையில் அதாவது தொழில் வரி கம்பெனி வரி உரிமங்கள் மற்றும் விளம்பர வரி, 244-ஏ மற்றும் வாகனம் நிறுத்துவதற்கான கட்டணங்கள் முதலியன வகையில் மொத்தம் ரூ. 368.57 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

1989 ஏப்ரல் முதல் 1990 மார்ச்சு வரையில் கட்டிட உரிமக் கட்டணங்கள் வகையில் ரூ. 3,29,98,996.50 சதவீதம் வசூலிக்கப்பட்டது.

தார் சரளைக்கல் கலவையின் தயாரிப்பு முந்தைய ஆண்டின் தயாரிப்பு அளவு 26582.7 மெ. டன்னாக இருந்தது. 1989–90 ஆம் ஆண்டில், 30,878.8 மெ. டன் அளவிற்கு கணிசமாக உயர்ந்துள்ளது. கட்டிட கலைஞர்களுக்கு மொத்தம் 73 உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. 1989–90 ஆம் ஆண்டில் மத்திய தயாரிப்புக் கூடத்தில் தயாரிக்கப்பட்ட சிமிட்டி கற் கலவை குப்பைத் தொட்டிகளின் மொத்த மதிப்பு ரூ. 5,71,358 ஆகும். சாலைப் பணிக்காக சேகரிக்கப்பட்ட மாதிரிகள், ஐ.ஏ.பி.யிலுள்ள சென்னை மாநகராட்சியின் தரக் கட்டுப்பாட்டு சோதனைக் கூடத்தில் 467 வகை கலவை சாலைப் பணிகளுக்கான சோதனை செய்யப்பட்டு, சரியான

வீதித்தில் கலவையை சேர்க்குமாறு தல அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப் பட்டது. 1989–90 ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சியின் அனைத்து மோட்டார் வாகனங்களுக்கு அதிவேக டீசல் எண்ணெய் 1519 கிலோ லிட்டரும் 40 கி. லிட்டர் பெட்ரோலும் வழங்கப்பட்டன.

மாநகரின் பல்வேறு பகுதிகளில் மொத்தம் 3.18 கி. மீட்டர் நீளமுள்ள மழைநீர் வடிகால், வாய்க்கால்கள் புதிதாகக் கட்டப்பட்டன. இவை தவிர 4.57 கி. மீ நீளமுள்ள மழைநீர் வடிகால் வாய்க்கால்கள் பழுது பார்க்கப்பட்டன. இம்மா நகரில் மொத்தம் மழை நீர் வடிகால் வாய்க்கால்கள் 14 கட்டப்பட்டுள்ளன. ரூ. 60·71 கோடி கெலவில் (ஐந்தாம்) இந்தியு மக்கள் தொகை செயற் திட்டம், சென்னை மாநகராட்சியிலும், அதன் புறநகரிலும் வாழும் குடிசை வாழ் மக்களின் நலனுக்காக பல திட்டங்களை செயலாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இது மக்கள் நல் வாழ்வு மற்றும் குடும்ப நலத் திட்டத்தின்கீழ் நகருக்கு வெளிப் பகுதிகளில் வசதிகளை அளிக்கும் முன்னோடி முயற்சியாகும். இவ்வாறு பணிகளை அளிப்பதற்கான பயிற்சி அளித்தல், புதிய முறைகளை உருவாக்குதல் ஆகியவற்றில் தனியார் தொண்டு நிறு வனங்களைப் பங்கு பெறச் செய்வதன்மூலம் இது செயற்படுத்தப்படும்.

சிறப்புத் தகவல் :

சென்னை மாநகராட்சியின் பல்வேறு பணியாளர்களின் நடவடிக்கைகளைக் கண் காணிப்பதும் முறைகேடுகளை விசாரித்து கண்டுபிடிப்பதும், அவ்வாறு தவறு செய்கின்ற அதிகாரிகள் மீது துறை நடவடிக்கை எடுக்க வேண்டிய சருத்து தெரிவிப் பதும் சிறப்புப் பணிபிரிவின் பணியாகும், இப்பிரிவு உரிமம் பெறாது வணிகம் நடத்திய இனங்களையும் குறைவாக வரி மதிப்பிடப்பட்ட 25 இனங்களையும் கண்டு பிடித்துள்ளது.

சென்னை மாநகரிலுள்ள சட்டப்பிரிவு இது நாள் வரை சென்னை மாநகராட்சியில் சட்டப்பணிகளை செய்து கொண்டிருந்த பணிகளைத் தொடர்ந்து செயற்படுத்தி வந்துள்ளது.

விதிமுறைகளுக்கு இணங்க கட்டுமானத்தில் மேற்கொள்ளப்படவில்லை என்று சென்னை பெருநகர் வளர்ச்சிக்கு மட்டும் ஏனைய முகவரமைப்புகளையும் அறிவித்துக் கொள்ளவும் மாநகராட்சிக்குச் சொந்தமான நிலங்கள், நடைபாதைகள், சாலை ஓரங்கள் ஆகியவற்றிலிருந்து சேர்ந்துள்ள ஆக்கிரமைப்புகளையும் கட்டுமானங்களையும் சென்னை மாநகர் (MCMC Act) சட்டத்தில் வரையறுத்துள்ளன, விதிகளின்படி குற்றவியல் தடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் அகற்றும் பணியை மேற் கொள்ளப்படுகின்றன, இத்துடன் நெரிசல் மிகுந்த மற்றும் முதன்மை சாலை சுவிலிருந்து குப்பைகளையும் கழிவுப் பொருட்களையும் அகற்றும் பணி. சிறப்பு துப்புரவுப்பணி ஆகியவற்றை மேற்கொள்வதன்மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. சென்னை மாநகரிலுள்ள வரிவிதிப்பு மேல் முறையீட்டுக்குழு. 259 மேல் முறையீடுகளில் 206,06 மீட்டர் நீளமுள்ள ஒரு கட்டுமானப் பணியை சென்னை மாநகராட்சி முடித் துள்ளது. 1,450 மீட்டர் நீளமுள்ள 7 பணிகள் நடந்தேறி வருகின்றன, இவ் வாண்டில் இதற்காக செலவிடப்பட்டத் தொகை ரூபாய் 6·76 இலட்சமாகும்.

மண்டல அதிகாரிகளின் கட்டுப்பாட்டின்கீழ் அங்காடிகள், கடைத் தொகுதிகள் ஆகிய இடங்களில் உள்ள குப்பைகளைத் துப்புரவு செய்யும் பணி இரவு நேர துப்புரவு பணி. சிறப்புத் துப்புரவுப்பணி, ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது,

மாம்பலத்தில் உள்ள மேட்லி சாலையில் குறைந்தபட்ச உபயோகத்திற்கான கரங்கப்பாதையை ரூபாய் 80·00 இலட்சம் செலவில் கட்டி முடிக்கும் பணி விரைவில் மேற்கொள்ளப்படவிருக்கிறது, நிலம் கையகப்படுத்தும் பணி முடிந்துள்ளது.

குடும்ப நலத்திட்டத்தில் சென்னை மாநகராட்சிக்கான இலக்கின் சதவீதமும் சாத னையும் பின்வருமாறு :—

முறை. (1)	ஆண்டு இலக்கு. (2)	சாதனை. (3)	சதவீதம். (4)
1. கருத்தடை அறுவைச் சிகிச்சை	58,000	61,141	105,4
2. கருத்தடை வளையம் பொருத்தல்	67,000	86,146	128·6
3. கருத்தடை மாத்திரை உப யோகிப்போர்	22,100	6,216	28·1
வழக்கமான கருத்தடை சாத னங்களை உபயோகிப்போர்	31,000	22,620	73·0

1989–90ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் 3,53,002 பேருக்கு காலரா நோய் தடுப்பூசி போடப்பட்டது, 1964ஆம் ஆண்டு உணவு கலப்படத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட 2,529 உணவுப்பொருள் மாதிரிகளில் அதில் 22 உணவு பொருள் மாதிரிகளில் கலப்படம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

•

புதிய திட்டங்கள் :

1988–89 வரையிலான ஆண்டுகளில் உலக வங்கியின் உதவியோடு 196 முறை மீடுகளுக்குத் தீர்ப்பு வழங்கியுள்ளது. இறந்து போன 10,857 பேர்களில் 56 பேர்கள் காலரா, சின்னம்மை, தட்டம்மை போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்டு இறந்துள்ளனர்.

நிதி நிலைமை :

இவ்வாண்டில் பொது நிதியின்கீழ் மாநகராட்சிக்குக் கிடைக்கப் பெற்ற வருவாய் ரூ, 7,343·05 இலட்சமாகும், இவ்வாண்டில். பொது நிதியின் கீழ் ஏற்பட்ட செலவினம் ரூ, 8.047·69 இலட்சமாகும், 1989–90ஆம் ஆண்டில் வருவாய் செலவுக்கணக்கில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறை ரு, 704,64 இலட்சமாகும், இப்பற்றாக்குறையால் மாநகராட்சியின் சொத்துக்களுக்கு ஏற்பட்டுள்ள தேய்மானமும் அடங்கும். 3–3–1990 அன்றுள்ளபடி சேர்ந்து வந்த பற்றாக்குறை ரு, 4.739·70 இலட்சமாகும்.

இவ்வாண்டில் ரு, 12,271·70 இலட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் அதாவது சாலைகள், கட்டிடங்கள், பாலங்கள், தெரு விளக்குகள் முதலியன சேர்க்கப்பட்டது. 31–3–1990 அன்றுள்ளபடி சென்னை மாநகராட்சியின் சொத்துக்களின் இறுதி மதிப்பு ரூபாய் 4,838·80 இலட்சமாக இருந்தது. தொடக்கக்கல்வி நிதியின் கீழ் இடைக்கப்பெற்ற வருவாய் ரூபாய் 906,00 இலட்சமாகும், செலவு 1,627·00 இலட்சமாகும், இவ்வாண்டில் தொடக்கக்கல்வி நிதியின் மீது ஏற்பட்ட பற்றாக்குறை ரூபாய் 720,92 இலட்சம் ஆகும். 31—3—1990 ஆம் நாளன்றுள்ளபடி தொடக்கக்கல்வி நிதியின்கீழ் சேர்ந்து வந்த தொகை ரு, 2,395·99 இலட்சமாகும்.

முடிவுரை : முடிவாக. தற்போதுள்ள பொது அமைப்பு மிகுந்த மனநிறைவளிக்கும் வகையில் உள்ளது, நகராட்சி, மாநகராட்சி அமைப்புகளின் அதிகாரங்களைப் பரவலாக்குவதன் மூலம் நிறம்படவும் மக்களுக்கு பயனளிக்கும் வகையிலும் எதிர் காலத்தில் இவ்வமைப்பு செயல்படும் என்று கருதப்படுகிறது.

மதுரை மாநகராட்சி.

நடப்பு ஆண்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்றம் இல்லாததால் தனி அலுவலர் அவர்களின் கட்டுப்பாட்டில் மாநகராட்சி இயங்கி வருகிறது. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் தனி அலுவலராகச் செயல்படுகிறார். தனி அலுவலர் அவர்களால் 14 சாதாரண கூட்டங்களும், 8 அவசரக் கூட்டங்களும் நடக்கப்பெற்று 645 பொருட்கள் பரிசீலித்து முடிவெடுக்கப்பட்டன. நிலைக் குழுக்களின் கூட்டம் நடத்தப்பெற்று 1687 பொருள்களும் பரிசீலித்து 1989–90-ல் முடிவெடுக்கப் பட்டுள்ளது.

சரித்திரச் சிறப்புப் பெற்றதும் கோவில் நகரம் என்ற புகழ்பெற்றதுமான மதுரை மாநகரின் மக்கள் தொகை 9,95,200 ஆகும். வளர்ந்துவரும் மக்கட் தொகைக்கேற்ப சுகாதாரம், மருத்துவம், குடிநீர், சாக்கடை, மின்சாரம், தெருவிளக்கு மற்றும் சாலை பராமரிப்பு போன்ற பணிகளையும் செவ்வனே செய்து வருகிறது. சத்துணவுத் திட்டத்துடன் 88 பள்ளிகளை மாநகராட்சி நடத்தி வருகிறது.

சுகாதாரம் (மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலம்) :

நடப்பாண்டில் குழந்தைப் பேறு ..	6,981
மகப்பேறு தாய்சேய் நலம் பேணப்பட்ட இனம்	26,108
இரத்தப் பரிசோதனை செய்யப்பட்டது	6,783
இரதத்க் கோளாறு உள்ளதென கண்டுபிடிப்பு	42
இரத்தக் கோளாறு உள்ள இனங்களின் சிகிச்சை அளிக்கப்பட்ட இனங்கள்.	42
மகப்பேற்றின்போது இறந்த தாய்மார்கள்	231
மகப்பேற்றில் இறந்த குழந்தைகள்	71
முத்தடுப்பூசி போட்ப்பட்ட இனங்கள்	18,683

தெருவிளக்குகள் அமைந்ததற்கான விபரப்பட்டியல்கள்:

சோடியம் ஆவி விளக்குகள்	600
மெர்க்குரி ஆவி விளக்குகள்..	1,800
குழல் விளக்குகள்	8,500
சாதாரண விளக்குகள்	1,500
ன்வாரியப் பகுதி மூலமாக (அமைந்துள்ள பகுதியில்) மின்விளக்கு வசதி செய்துதரப்பட்டது.	5,102

கல்வி (ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகள்) விவரம் :

ஆடவர்கள் உயர்நிலைப்பள்ளிகள்	7
பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள்	5
ஆண்கள் மேல்நிலைப் பள்ளிகள் ..	3
பெண்கள் மேல்நிலைப் பள்ளிகள்	5
நடுநிலைப்பள்ளிகள்	13
ஆரம்ப பள்ளிகள	54
உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள்	14,840
ஆரம்ப மற்றும் நடுநிலைபபள்ளி மாணவர்கள் —	24,359
புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். சத்துணவு திட்டம் மூலமாக பயன் பெறும் மாணவ மாணவியர் .. .. .. —	33,389

சாலை வசதிப் பராமரிப்பு :

	இலோ மீட்டர்கள்
(1) தார் சாலைகள்	279.738
(2) மெட்டல் சாலைகள்	66,792
(3) கிராமம், சாலைகள்	31,008
(4) கருங்கல் தளம், அல்லது சிமிண்ட் சிலாப் பாவியசாலைகள்	56,168
(5) கருங்கல் தளம் அல்லது சிலாப் பாவிய நடைபாதைகள்	42,929

குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் :

(1) பாதுகாக்கப்பட்ட குடிநீர் குழாயில் ஏற்பட்ட கசிவுகள் சரி செய்யப்பட்டவை	2,140
(2) சாலை மட்டத்திற்கு கீழே உள்ள குடிநீர் குழாய் இணைப்பை சாலை மட்டத்திற்கு உயர்த்திய இனங்கள்	90
(3) பாதுகாப்பு குடிநீர் வீட்டு இணைப்புகள்	210
(4) பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள்	806
(5) பாதாள சாக்கடை இணைப்புக் குழாய்களை சாலை மட்டத்திற்கு உயர்த்தியவை	70
(6) பாதாள சாக்கடை கசிவு சரிசெய்யப்பட்டவை	8,768
(7) குடிநீர் மற்றும் கிணற்று நீர் மெயின் பதித்த தூரம்	9055 மீட்டர்
(8) வைகை வடகரை பாதாள சாக்கடை இணைப்பு தூரம்	190மீட்டர்
(9) இதற்கான செலவு	0.25 லட்சம்

வருவாய் இனங்கள் (ரூபாய் இலட்சத்தில்)

வரி விவரம்	கேட்பு	வசூல்	நிலுவை
சொத்துவரி	2,507.86	840.87	1,634.89
	தள்ளுபடி	12.49	
தொழில் வரி	57.66	21.31	36.35
விளம்பர வரி	5.17	4.25	0.92
மார்கெட் கட்டணம்	240.81	95.94	144.87
குடிநீர் கட்டணம்	253.88	71.64	182.24
வண்டி வாகனாதி வரி	0.71	0.71	

நகராட்சி நிர்வாகம்

தமிழ்நாட்டில் 98 நகராட்சிகளும் 9 நகரியங்களும் உள்ளது. அனைத்து நகராட்சி நகரியங்களின் பரப்பளவு 1,476 ச.கி.மீ. ஆகும். 1981 மக்கட்தொகை கணக்கெடுப் பின்படி. அனைத்து நகராட்சி நகரியங்களில் உள்ள மொத்தம் மக்கள் தொகை 72,20,594 ஆகும். இதில் தாழ்த்தப்பட்டோர் மக்கள் தொகை 6,62,504 ஆகும். நகராட்சி குடிசைப் பகுதி வாழ் மக்கட்தொகை 12,00,000 ஆகும்.

நகராட்சிகளின் வகைப்பாடு :

தமிழ்நாட்டில் 98 நகராட்சிகளும், 8 நகரியங்களும உள்ளன. அரசு ஆணை எண். 400, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள் 23 3-1983ன்ப

நகராட்சிகளின் வருடாந்திர வருமானம் அடிப்படையில் நகராட்சிகள், நகரியங்கள் கீழ்க்கண்டவாறு பகுக்கப்படுகின்றன.

நகராட்சியின் நிலை.	எண்.	கடந்த 3 ஆண்டுகளில் எல்லா இடங்களுக்கான சராசரி மொத்த வருமானம் (மின்துறை வருமானம் உட்பட).
(1)	(2)	(3) (ரூபாய் இலட்சத்தில்).
சிறப்பு நிலை	7	100.00
தேர்வு நிலை	11	50.00
முதல்நிலை	29	25.00
இரண்டாம் நிலை	32	10.00
மூன்றாம் நிலை	19	5.00
மொத்தம்	98	

நகரிய நிலை.	எண்.	மொத்த ஆண்டு வருமானம்.
(1)	(2)	(3) (ரூபாய் இலட்சத்தில்).
தேர்வு நிலை	5	10.00 மேல்.
முதல் நிலை	1	5.00-க்கு மேல் 10.00-க்குள்.
இரண்டாம் நிலை	2	5.00 வரை.
மொத்தம்	8	

நகராட்சிகளின் பணிகள்:

ஒரு நகராட்சி மற்றும் நகரியங்கள் கீழ்க்கண்ட விவரப்படி சுகாதாரம், போக்குவரத்து, கல்வி மற்றும் அத்தியாவசியமான அடிப்படை விருப்பப்பட்ட பணிகளை நிறைவேற்றுவது குறித்து ஆகும் செலவினங்கள் நகராட்சி நிதியிலிருந்து செலவழிக்க வேண்டும், நகராட்சிகள் செய்ய வேண்டிய பணிகள் விபரம் வருமாறு :—

1. கட்டாயப் பணிகள் :

(1) வறட்சி மற்றும் பற்றாக்குறை காலங்களில் நிவாரணப் பணி.

(2) பொது சாலைகள், தெருக்கள், சந்துகள், சிறுபாலங்கள், மற்றும் குறுக்கு சாலைகள், பராமரித்தல்.

(3) இடைநிலை தவிர்த்த கல்வி.

(4) படிப்பறைகள் பராமரித்தல்.

(5) பூங்காக்களும், தோட்டங்களும் பராமரித்தல்.

(6) விளையாட்டு திடல் மற்றும் மனமகிழ் மன்றங்கள், பொது மன்றங்கள் பராமரித்தல்.

(7) பொருட்காட்சி மற்றும் விழாக்கள் நடத்துதல்.

(8) தெருக்கள், வடிகால் மற்றும் சாக்கடைகள் சுத்தம்செய்து தூய்மைப்படுத்துதல்.

(9) மருத்துவ மனைகளும், மற்றும் மருந்தகங்களும் பராமரித்தல்.

(10) தொற்று நோய்கள் தடுப்பு.

(11) பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல்.

(12) பயன்தரும் மரங்கள் இருபுறங்களிலும் அமைத்து பாதைகள் பராமரிப்பு.

(13) தெரு மின் விளக்குகள் பராமரித்தல்.

(14) தொடக்கக்கல்வி.

(15) குடிநீர் விநியோகம், பொதுமக்கள் மற்றும் தனியார்க்கு குடிநீர் இணைப்பு குழாய்கள்.

(16) வடிகால்கள்.

(17) நகரமைப்பு.

2. விருப்பப்பட்ட பணிகள் :

(1) இடைநிலை கல்வி நூலகங்கள் மற்றும் அருங்காட்சியங்கள் அமைத்தல்.

(2) ஏழை எளிய அனாதைகள் இல்லங்கள்.

(3) வீட்டு வசதி.

(4) கால்நடை மருத்துவ மனைகள் ஏற்படுத்துதல்.

நகராட்சிகளும் மற்றும் நகரியங்களின் நிதி நிலைமை :

நகராட்சிகளின் நிதி நிலை உயர வேண்டுமானால், நகராட்சிகளுக்கு பெரும் வருவாயை ஈட்டித் தரும் சொத்து வரியை உயர்த்துவது தான் சிறந்த ஒரே வழி யாகும். மேலும், நகராட்சிகளுக்கு வருவாயை ஈட்டித் தரும் கட்டிடங்கள், பேருந்துகள், அங்காடிகள் முதலியவை அமைப்பதற்கு நகராட்சிகள், மைய மாநில அரசுகளிட்மிருந்து நிதி உதவியை நாடி இருக்கின்றன. மாநில அரசும், தெருக்களை சீரமைப்பதற்கும், நிதி உதவி செய்து வருகிறது. மொத்தத்தில் நகராட்சிகள் மக்களுக்கு அத்தியாவசியத் தேவையான குடிநீர் வசதி, தெரு விளக்கு வசதி முதலி யவைகளைச் செய்வதற்கு வசதியற்ற நிலையிலுள்ளது என்பதே இன்றைய நிலை.

கல்வி.

1,028 ஆரம்ப (மற்றும்) நடுநிலைப்பள்ளிகள், 32 உயர்நிலைப்பள்ளிகள், 34 மேல்நிலைப்பள்ளிகள் நகராட்சிகளால் பராமரிக்கப்படுகின்றன. நகராட்சிகளில் 11,051 ஆசிரியர்களும், 1,252 ஆசிரியல்லாத பணியாளர்களும் பணிபுரிகின்றனர். 1989–90-ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட்ட கல்வி மான்யம் வருமாறு :—

ஆரம்பக் கல்வி	1,279 இலட்சம்.
மேல்நிலைக் கல்வி	327 இலட்சம்.
	1,606 இலட்சம்.

வீடுகட்ட முன்பணம் வழங்கும் திட்டம் :

1983–84-ம் ஆண்டு முதல் நகராட்சி பணியாளர்களுக்கு வீடு கட்ட முன் பணம் வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் இத்திட்டத்தின் கீழ், ரூ. 50 லட்சம் அரசு கடன் பெறப்படுகிறது 1989–90-ம் வருடமும் இத்திட்டத்தின் கீழ் ரூ. 50 லட்சம் பெறப்பட்டு நகராட்சி பணியாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. இதன் மூலம் இவ்வருடம் 192 நகராட்சி பணியாளர்கள் பயன் அடைந்தனர்.

தமிழக அரசு சத்துணவுத் திட்டம்:

5—9 மற்றும் 10—15 வயதுடைய குழந்தைகளுக்கு சத்துணவு திட்டத்தின்படி தமிழ்நாட்டிலுள்ள 100 நகராட்சிகள் மற்றும் சென்னை மதுரை மற்றும் கோயம் புத்தூர் ஆகிய 3 மாநகராட்சிகளில் உணவளிக்கும் பணி நகராட்சி நிர்வாக இயக்கு நருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நகராட்சிகளால் 2,955 சத்துணவு மையங்கள் பராமரிக்கப்பட்டு 2.36 லட்சம் குழந்தைகள் பயன்பெற்றுள்ளார்கள்.

இதற்கான, நிதியானது, நகராட்சி நிர்வாக இயக்குநரால் பெறப்பட்டு சம்பந்தப்பட்ட நகராட்சிகள் நகரியங்கள் மற்றும் மாநகராட்சிகளுக்கு மூன்று மாதங் களுக்கு ஒரு முறை விதம் முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. 1989–90-ம் வருடத்தின் 5—9 வயதுடையோருக்கு ரூ. 177 இலட்சமும் 10—15 வயதுடையோருக்கு ரூ. 36 இலட்சமும் திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது தவிர, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தால், சென்னை மாநக ராட்சிக்கு வழங்கப்பட்ட உணவுப் பொருட்களுக்கான தொகை இயக்குநரகத்தால் வழங்கப்பட்டுள்ளது. சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளால் நடத்தப்பெறும் 5—9 மற்றும் 10—15 வயதுடையோருக்கான சத்துணவு மையங் களுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநரால் முன்தொடர் மான்யமும் கூட வழங்கப் பட்டுள்ளது. மூன்று மாநகராட்சிகளிலும் மொத்தம் 1,36,309 குழந்தைகள் பயன் பெற்றுள்ளனர்கள்.

வறட்சி.

வடமேற்கு பருவ மழை பொய்த்ததினால் 1989–90 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் கடுமையான வறட்சி நிலவியது. அதனால் தமிழக அரசு வறட்சி நிவாரண நிதியாக ரூ. 532.388 இலட்சம் நிதி வழங்கியுள்ளது.

தெரு விளக்கு,

அனைத்து நகராட்சி மற்றும் நகரியங்களிலும் 1989–90-ல் தெரு விளக்குகளை நகராட்சியே பராமரித்து வருகிறது. அரசு ஆணையின்படி மின் பராமரிப்பை மின்சார வாரியத்திடமிருந்து ஏற்று நகராட்சியே பணியாளர்களை நியமித்தும், தெரு விளக்கு களுக்கான உபகரணங்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர் நிர்ணயித்த விலையில் வாங்கப் பட்டும் வருகிறது. நகராட்சி தெருவிளக்குகளை பராமரிப்பதை 15–9–1989 முதல் நகராட்சிகள் மற்றும் நகரியங்கள் ஏற்றுக் கொண்டன. 98 நகராட்சி மற்றும் நகரியங்களில் தோராயமான 1,63,000 குழல் விளக்குகள் உள்ளன.

தமிழகத்திலுள்ள 98 நகராட்சிகளிலும், 8 நகரியங்களிலும் நகர்புற கலவை உரத்திட்டம் இந்த ஆண்டுக்கு (1989–90) 2,56,650 டன் என்ற குறியீட்டுடன் செயல் படுகின்றன.

நகர்ப்புறக் கழிவு பொருட்களை அப்போதைக்கப்போது எடுத்துச் சென்று அதிக அளவில் கலவை உரத்திற்கு பயன்படுத்துவதற்கு தேவையான அதிகப்படியான லாரி களை வாங்கவும், கலவை உரத்திடல் பராமரிக்கவும் இத்திட்டத்தில் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது.

கழிவு நீர்ப்பண்ணைகள்.

நகராட்சிப் பகுதிகளில் சேகரிக்கப்படும் கழிவு நீரினை தேக்கி சீர்செய்து அதை பலவிதமான பயிர்கள் சாகுபடி செய்ய பயன்படுத்த கழிவு நீர் பண்ணைத் திட்டம் 23 நகராட்சிகளில் செயல்படுகிறது. தீவனப் புல் வகைகள், தென்னை, பயன் தரும் பழவகைகள், சிறுதானியங்கள் மற்றும் கரும்பு போன்ற பயிர்கள் கழிவுநீர்ப் பண்ணை யில் பயிரிடப்படுகின்றது.

மத்திய ஒருங்கிணைந்த நகர மேம்பாட்டுத்திட்டம்.

ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு குறைவாக உள்ள சிறிய மற்றும் நடுத்தர நகரங்களை குறிப்பாக மாவட்டம் மற்றும் வட்டத் தலைமையிடங்களாக உள்ள நகரங் களை மேம்படுத்தும் நோக்கத்துடன் மத்திய அரசின் நிதி உதவியுடன் ஒருங்கிணைந்த நகர மேம்பாட்டுத் திட்டம் செயற்படுத்தப்பட்டது. அதாவது ஐந்தாண்டு திட்டத்தில் 28 நகராட்சிகளில் 1985-86 முதல் 1989-90 வரை இத்திட்டம் செயலாக்கப்பட்டது. இத்திட்டத்தில் முக்கிய நோக்கம் பின்வருமாறு :—

(1) நிலைய வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்.

(2) கிராமப்புறங்களிலிருந்து நகர்புறங்களுக்கு குடிபெயர்வதை தடுத்தல்.

(3) நகரங்களில் சிறந்த வாழ்க்கைத் தரத்தை அளித்தல்.

இத்திட்டத்தின் கீழ்க்கண்ட பணிகள் செயல் படுத்தப்பட்டன:

(1) வீட்டு மனைகள் மேம்பாட்டுத் திட்டம் ;

(2) மண்டிகள் மற்றும் மார்க்கெட் அபிவிருத்தி ;

(3) பேருந்து நிலையங்கள் கட்டுதல் ;

(4) சாலைகளை அபிவிருத்தி செய்தல்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தினால் 168 பணிகள் ரூ. 2,155.16 இலட்சத்தில் செயலாக்கப்பட்டது.

ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தினால் 7 நகரங்களில் ரூ. 743.70 இலட்சத்தில் செயலாக்கப்பட்டன.

3. மத்திய அரசின் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் ஒருங்கிணைந்த முன்னேற்ற திட்டம்:

இத்திட்டம் 28 நகராட்சிகளில் நடைமுறையில் உள்ளது. இந்த 28 நகராட்சிகளிலிருந்து தேர்ந்தெடுத்த 6 நகரங்களில் குறைந்த செலவில் கழிப்பிடம் கட்டும் திட்டம் செயல்முறையில் உள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 150.00 இலட்சமாகும். இதிலிருந்து 19.376 தனியார் கழிப்பிடங்களும் 22 சமுதாய கழிப்பிடங்களும் உள்ளது. இத்திட்டத்தில் கட்டப்பட உள்ள கழிப்பிடங்களுக்காக பான்ஸ் மற்றும் வளையங்கள் ரூ. 100 மதிப்பீட்டில் இலவசமாக வழங்க யுனிசெப் நிறுவனம் முன் வந்துள்ளது. 28–2–1990 முடிய 10,746 தனியார் கழிப்பிடங்கள் ரூ. 106.18 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

7-வது ஐந்தாண்டு திட்டத்தில் மத்திய ஒருங்கிணைந்த முன்னேற்ற திட்டத்தில் மேலும் 5 நகராட்சிகளில் குறைந்த செலவில் கழிப்பிடம் ரூ. 103.37 இலட்சம் மதிப்பீட்டில் 4,008 கழிப்பிடங்கள் கட்ட இத்திட்டம் எடுத்துக் கொள்ளப்பட உள்ளது. 28–2–1990 முடிய 2,787 தனியார் கழிப்பிடங்கள் ரூ. 55.90 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த குறைந்த செலவில் கழிப்பிடம் மற்றும் துப்புரவுப் பணியாளர்கள் விடுவிக்கப்படும் திட்டம் :

ஹட்கோ நிறுவனத்தின் நிதியுதவியுடனும் மத்திய அரசின் மான்யங்களுடனும் மேற்கண்ட திட்டம் 21 நகராட்சிகளில் நிறைவேற்றப்பட உள்ளது. இதற்கான அறிக்கை நகராட்சிகளிடமிருந்து பெறப்பட்டு ஹட்கோ நிறுவனத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

குறைந்த செலவிலான கழிவறை கட்டும் திட்டம் :

எல்லா நகராட்சிகளிலும் பாதாள சாக்கடை அமைப்பது அதிக நிதி வேண்டுவதோ உல்லாமல் நீண்ட காலத்தையும் எடுத்துக் கொள்கிறது. நகராட்சிகளில் நிதிப்பற்றாக்குறை காரணமாக பாதாள சாக்கடை அமைக்க வழிவகை இல்லை. எனவே நகராட்சி வாழ் குறைந்த மற்றும் மத்திய வருவாய் தரப்பினரின் வீடுகளில் கீழ்க்காணும் திட்டங்களின் மூலம் குறைந்த செலவிலான நீர்ஊற்றும் கழிப்பிடங்கள் கட்டப்படுகின்றன, மேலும் இத்திட்டத்தின் மூலம் உலர் கழிவறைகளிலிருந்து மலத்தை அகற்றும் துப்புரவு பணியாளர்களின் இந்த இழிவு தொழிலை அகற்றும் இதன் நோக்கமாகும்.

1. உலக வங்கியின் உதவியுடன் செயல்புரியும் திட்டம் :

அரசாணை எண். 483 ஊர்வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள் 31-3-1983 படி இத்திட்டம் 14 நகராட்சிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது, இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூ. 709.55 இலட்சமாகும், இதில் கடன் மற்றும் மானியம் முறையே, ரூ. 447,02 இலட்சம் மற்றும் ரூ, 262,33 இலட்சமாகும். இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நடைபெற்றுக் கொண்டு வருகிறது, 29,807 தனியார் வீடுகளில் நீர் ஊற்றும் கழிவறைகளும். 1,201 சிட்டுகள் கொண்ட சமுதாய கழிவறைகள் கட்டப்பட உள்ளது, 18–2–1990 முடிய 25.122 தனியார் கழிப்பிடங்கள் ரூ, 666,00 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ளது,

2. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் செயல்புரியும் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசின் 50 சதவிகித மானியத்துடன் அம்பத்தூர் விழுப்புரம் மற்றும் நாகர்கோயில் நகராட்சிகளில் ரூ, 1.11.27.900 மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதற்காக மத்திய அரசின் முதல் கட்ட மானியத் தொகை ரூ. 27.81.975 விடுவிக்கப்பட்டுள்ளது, இதுவரையில் 1.247 தனியார் கழிப்பிடங்கள் ரூ, 22,59 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ளன.

நகர்ப்புறத்தில் உள்ள குடிசைகளில் வாழும் ஏழை மற்றும் நடுத்தர மக்களின் தாய் சேய் நலம் மற்றும் சுகாதாரப் பணிகளில் அவசர அத்தியாவசிய தேவைகளைக் கருத்தில் கொண்டு மத்திய மாநில அரசுகள். சுகாதாரப் பணிகளின் மூலம் சத்துணவு மற்றும், ஊட்டச்சத்து, நோய் தடுப்பு ஆகியவைகளை மேம்படுத்தி பிறப்பு, இறப்பு விகிதங்களை மேம்படுத்த எண்ணியுள்ளன,

கீழ்க்கண்ட மருந்தகங்கள் ஏற்கனவே நகராட்சிகள் மற்றும் நகரியங்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.—

வரிசை எண்.	மருத்துவ முறைகள்	மருந்தகங்கள் எண்ணிக்கை.	மருத்துவ அலுவலர் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
1	ஆங்கிலம் (பொது)	56	56
2	ஆங்கிலம் (குடும்பநலம்)	78	78
3	சித்தா ...	34	34
4	ஆயுர்வேதம்	14	14
5	யுனானி	3	3

தமிழ்நாடு நகரியம் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர்.

தமிழ்நாடு நகரியம் பயிற்சி நிறுவகம், அரசாணை எண் 1950, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை—. நாள் 24-11-1981-ல் கோயம்புத்தூரில் நிறுவப்பட்டுள்ளது. இந்நிறுவனம் சொசைட்டி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூடுதல் நகராட்சி நிர்வாக இயக்குநர் நிலையில் உள்ள அதிகாரியை இயக்குநராகக் கொண்டு பயிற்சி நிறுவனம் நடத்தப்படுகிறது.

பயிற்சி நிறுவனத்தின் நோக்கங்கள் :

(1) நகராட்சி மற்றும் மாநகராட்சியிலுள்ள அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்;.

(2) உள்ளாட்சி நிறுவனங்களில் பெருமளவில் திறமையை மேன்மையடையச் செய்தல்.

இப்பயிற்சி நிறுவனம் வெகு விரைவில் முதுநிலைப் பட்டப் படிப்பிற்காக ஆராய்ச்சி யமையாகவும் நகராட்சிகளின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவிடும் வகையில் புள்ளியியல் விவர னமையாகவும் செயல்பட உள்ளது.

நகராட்சிகளில் வங்கிகள் மூலம் சொத்துவரி வசூல் செய்தல் :

நகராட்சிகளில் வங்கிகள் மூலம் சொத்துவரி வசூல் செய்யும் முறை 1-10-1989 முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. இத்திட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டதின் காரணமாக வரித் தண்டலர்கள் வரி செலுத்துவோர் வீட்டிற்கு சென்று வசூல் செய்யும் முறை கைவிடப்பட்டு வரி செலுத்துவோர் தாங்களாகவே வங்கிகளில் சொத்துவரி செலுத்த முன் வந்துள்ளது வரவேற்கத்தக்க தாகும்.

1988-89 ஆம் ஆண்டைக் காட்டிலும் 1989-90 ஆம் ஆண்டில் ரூ. 361.64 இலட்சம் அதிகமாகவே வசூல் செய்யப்பட்டது. விரைவில் வரி இல்லா இனம், தொழில் வரி மற்றும் வரியில்லா வங்கிகள் மூலம் வசூல் செய்யப்படும் திட்டம் அமுல் படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

நகராட்சி மற்றும் தேர்தல்கள்

தமிழ்நாட்டிலுள்ள 98 நகராட்சிகளிலும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட நகர மன்ற தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலம் 31—3—1991-ல்தான் முடிவடைகிறது. எனவே, இந்த காலக்கட்டத்தில் நகராட்சிகளுக்கு தேர்தல்கள் எதுவும் நடைபெறவில்லை. எனினும், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் உள்ள மாநகராட்சி மன்றங்களுக்கு தேர்தல்கள் நடத்துவதற்கு அரசு முடிவு எடுத்து 1—1—1990-ஐ தகுதிபெறும் வயதாக கொண்ட வாக்காளர் பட்டியல்களை வீட்டுக்கு—வீடு சென்று தயாரித்து புதிய மாநகராட்சி வாக்காளர் பட்டியல்களை தயாரிக்க அரசு ஆணைகள் வெளியிட்டது.

அத்தியாயம் 21.

பளியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை.

அண்ணா மேலாண்மை நிறுவனம்

அண்ணா மேலாண்மை நிலையம் ஒரு தன்னாட்சி பெற்ற நிறுவனமாக 1975-ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகிறது. இது மாநில அரசின் மேலான பயிற்சி நிறுவனமாகவும் மேலாண்மை இயல் நிலையமாகவும் விளங்கி வருகிறது. பயிற்சி, கல்வி, வளர்ச்சி ஆலோசனைகள் மற்றும் விரிவாக்கப் பணிகள் ஆகிய இந்நிலையம் மேற்கொள்ளும் வேலைத் திட்டங்களாகும்.

2. பயிற்சி :

இந்நிலையம் செயல்பட ஆரம்பித்த நாளிலிருந்து பல்வேறு துறை அமைப்புகளுக்காக 350 பயிற்சிகள் நடத்தியுள்ளது. இந்தப் பயிற்சிகளில் ஒரு குறிப்பிட்ட நிறுவனம் அல்லது ஒரு துறை அல்லது அமைப்புக்கு மட்டும் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட பயிற்சிகளுக்கு எல்லா நிறுவனங்கள் அமைப்புகள் அல்லது துறைகள் ஆகியவைற்றுக்கும் பொதுவான பயிற்சிகளும் அடங்கும். இந்நிலையம் தேசிய அளவிலான அலுவலர்களுக்கும் அதாவது இந்திய ஆட்சித்துறை, இந்திய வனத்துறை, போன்ற அகில இந்திய அளவிலான அலுவலர்களுக்கும் பயிற்சிகள் நடத்து நிறது தொழில் நுணுக்கத்தில் தலைநிறந்து விளங்கும் சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, சென்னை அணுமின்சாரத் திட்டம், எண்ணெய் மற்றும் இயற்கை வாயு கமிஷன் ஆகியவையும் அண்ணா மேலாண்மை நிலையத்தில் பயிற்சிகளால் பயன் பெற்று வரும் நிறுவனங்களாகும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. 1989–90 ஆண்டில் இந்நிறுவனம் 58 பயிற்சித் திட்டங்கள் நடத்தியது. மைய அரசின் குடிசைத் தொழில் வளர்ச்சி ஆணையருக்காக மாவட்ட தொழில் மையங்களின் பணியாளர்களுக்காக முதன்முறையாக இந்நிலையம் பயிற்சி ஒன்று நடத்தியது. தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சமூக நலத்துறை ஆகியவற்றுக்கு சிறப்புப் பயிற்சி திட்டங்களும் இந்த நிலையத்தால் நடத்தப்பட்டு உள்ளது. 'தொழில் நலிவு மற்றும் தொழிலை உயிர்ப்பிக்க யுக்திகள்' என்பது பற்றிய புதிதாக ஓர் பயிற்சியும் நடைபெற்றது. மைய அரசின் புள்ளி விவரத் துறை பணியாளர்களுக்காக, இந்த நிலையம் நடத்திய பயிற்சித் திட்டம் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

3. கல்வி :

இந்நிறுவனம் கல்வித்துறையிலும் தன்னைத் தீவிரமாக ஈடுபடுத்தி வருகிறது. கடந்த ஏழு ஆண்டுகளாக அண்ணா மேலாண்மை நிலையம் ஒராண்டு 'மேலாண்மை இயல் நுட்ப பட்ட மேல் படிப்பு' நடத்தி வருகிறது, ஈராண்டு முன் அனுபவம் உள்ள பட்டதாரி நிர்வாக அலுவலர்களுக்கான பகுதி நேர பட்ட மேல்படிப்புத் திட்டமாகும், இது, போக்குவரத்து மற்றும் பொருளாதார மேலாண்மைத்துறைகளில் ஆராய்ச்சி படிப்புக்கு (Ph.D.) சென்னை பல்கலைக் கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மாநில அரசு பயிற்சி நிலையம் அண்ணா மேலாண்மை நிலையம் மட்டுமே.

4. ஆலோசனை மற்றும் விரிவாக்கப் பணிகள்:

உலக வங்கி, ஸ்வீடன் அகில உலக அபிவிருத்தி இணையம், டென்மார்க் அகில உலக அபிவிருத்தி நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்த பல்வேறு பெரும் திட்டங்களுக்கான சுமார் 30-க்கும் மேற்பட்ட ஆலோசனை மற்றும் விரிவாக்கப் பணிகளை இந்நிறுவனம் மேற்கொண்டு நடத்தியிருக்கிறது. மத்திய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களுக்கும் ஆலோசனை மற்றும் விரிவாக்கப் பணிகளையும் இந்நிலையம் ஏற்றுக்கொண்டு வெற்றிகரமாக நடத்தியிருக்கிறது, 1989–90 ஆம் ஆண்டில் இந்த நிலையம் எடுத்துக் கொண்ட ஆலோசனை மற்றும் விரிவாக்கப் பணிகளின் விவரம் பின்வருமாறு:—

(1) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும எல்லைக்குள் உள்ள தனியார் மருத்துவர்களின் குடும்ப நலப்பணிகளைப் பற்றிய ஆய்வு,

(2) ஓர் முறை உபயோகத்திற்கான மகப்பேறு மருத்துவ சாதனத்தினைப் பற்றிய ஆய்வு,

இம்மாதிரி ஆலோசனை மற்றும் விரிவாக்கப் பணிகள் பல்வேறு வாடிக்கை நிறுவனங்களால் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளன.

5. பொருளாதார மேம்பாடு :

மத்திய அரசின் பொருளாதார நிதி உதவியீடன் இந்நிறுவனம் இதுவரை சிறு தொழில் துறை, பொதுத்துறை மேலாண்மை, மனித வள மேம்பாட்டு துறை, தொழில் நலிவு மற்றும் உயர் கல்வி ஆகியவற்றில் பொருளாதார மேம்பாடு மற்றும் சமுதாய முன்னேற்றங்களை ஏற்படுத்த முயற்சி எடுத்துள்ளது. தற்போது வேளாண்மைத் துறை பற்றி இந்த நிலையம் சுவனம் செலுத்தி வருகிறது. பொருளாதார முன்னேற்றத்தில் வேளாண்மை முக்கிய பங்கு வகிப்பதால் அதன் முக்கியத்துவத்தைக் கருதி வேளாண்மை துறையில் பயிற்சியின் தேவைகளை அறிய தனியாக நுண்திறன் குழுவினை உருவாக்கியுள்ளது.

6. கம்ப்யூட்டர் துறை :

இந்த நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள கம்ப்யூட்டர் நிலையத்தில் 1990–91 ஆம் ஆண்டிலிருந்து கம்ப்யூட்டர் பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன.

7. இதர பணிகள் :

மத்திய நிர்வாகம் மற்றும் பயிற்சித் துறைக்காக இரண்டு வண்ணத் திரைப் படங்களை இந்த நிலையம் உருவாக்கி கொடுத்துள்ளது.

8. நூலகம் :

அண்ணா மேலாண்மை நிலையம் விலை மதிப்புள்ள சுமார் 5000-க்கும் மேற்பட்ட நூல்களைக் கொண்ட நூலகத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த நூலகத்திற்கு 60-க்கும் மேற்பட்ட பத்திரிகைகள் வருகின்றன. இங்கு ஒரு வீடியோ லைப்ரரியும் உள்ளது.

9. பேராசிரியர் குழு :

அண்ணா மேலாண்மை நிலையத்தில் சிறந்த கல்வியறிவும் போதிய முன் அனுபவமும் உடைய எட்டு பேராசிரியர்கள் உள்ளனர். இவர்களில் இருவர் முதன்மை வாய்ந்த பல்கலைக் கழகம் மற்றும் தேசிய கல்வி நிலையங்களிலிருந்து டாக்டர் பட்டம் பெற்றவர்கள், மேற்படி பேராசிரியர்கள் அனைவரும் கம்ப்யூட்டர். பொருளாதாரம் போன்ற பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்குபவர்கள், அண்ணா மேலாண்மை நிலைய இயக்குநர் வேளாண்மை சம்பந்தப்பட்ட தொழில்கள், துறைமுக வளர்ச்சி, இரசாயனத் தொழில் போன்ற பல வேறு பெரும் தொழில் சம்பந்தப்பட்டவற்றில் ஒரு கால் நூற்றாண்டுக்கும் மேலாக பல்வேறு உயர் பதவிகள் வகித்த, தொழில் அனுபவம் பெற்ற நிபுணர், தலிர இந்தியாவில் உள்ள புகழ்மிக்க கல்வி நிலையங்களுடன் தொடர்பு கொண்டவர் மட்டுமல்லாது தலைசிறந்த பொருளாதார சஞ்சிகைகளின் கட்டுரையாளருமாவார்.

10. விடுதி :

அண்ணா மேலாண்மை நிலையத்தில் பயிற்சி பெறுவோர் தங்குவதற்காக ரூ. 30 லட்சம் செலவில் விடுதி ஒன்று கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

11. பொது :

அண்ணா மேலாண்மை நிலைய் வளர்ச்சிக்காக ரூ. 663.25 லட்சம் செலவில் 'மாஸ்டர் பிளான்' ஒன்று தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு அரசின் திட்ட ஒப்பு தலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

குடிமுறைப் பணியாளர் பயிற்சி

ஊரக அலுவலர் பயிற்சி நிலையம், பலாலிசாகர் :

மாநில் அரசுப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக பெரியார் மாவட்டம், பலானிச்சாகரில் அரசு அலுவலர் பயிற்சி நிலையம் ஒன்றை அரசு 1974-ல் ஏற்படுத்தியது. தமிழ்நாடு அமைச்சுப் பணி, தமிழ்நாடு நீதித் துறை அமைச்சுப் பணி ஆகியவற்றிற்கு நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இளநிலை உதவியாளர்கள், உதவியாளர்கள் ஆகியோருக்கும், பொது மக்களோடு தொடர்பு கொண்டுள்ளவர்களும், நிர்வாக, செயல் அலுவல்களை ஆற்றுபவர்களுமான வருவாய், காவல் துறை, வணிக வரிகள், கூட்டுறவு, வேளாண்மை, கல்வி, கால்

தடை வளர்ப்பு போன்ற துறைகளில் உள்ள அதிகாரிகளுக்கும், அடிப்படைப் பயிற்சியை இந்த நிலையம் அளிக்கிறது. வட்டத் துணை ஆட்சியர்களுக்கு பணியிடை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

2. மேலும் இப்பயிற்சி நிலையம் தமிழ்நாடு தேர்வாணைக் குழு 1977-ஆம் 1991லும் நடத்திய நிறப்புத் தகுநித் தேர்வில் தேர்ச்சி பெற்ற தமிழ்நாடு அமைச்சுப்பணி மற்றும் தமிழ்நாடு நீதித் துறை அமைச்சுப்பணி ஆகியவற்றில் பணியாற்றும் இளநிலை உதவியாளர்களுக்கு 28 வேலை நாட்களைக் கொண்டு நினைவுகூர் பயிற்சி அளிக்கிறது.

3. மாவட்ட வருவாய் அதிகாரி பதவித் தரத்தில் முதல்வர் ஒருவரைக் கொண்டு இந்த நிலையம் செயல்படுகிறது. இப்பயிற்சி நிலையத்தில் பணியாற்றும் விரிவுரையாளர்கள், வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித் அறை, கருவூலம்-கணக்குத் துறை மற்றும் தலைமைச் செயலகத் அறைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பயிற்சி பெறுபவர்களுக்குப் பணி விதிகள், அலுவலக நடைமுறை கணக்குகள், தணிக்கை, ஊரக வளர்ச்சி, பொது மக்கள் தொடர்பு ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

4. இந்த நிலையம் இதுவரை 14,665 இளநிலை உதவியாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளித்துள்ளது. 14,665 இளநிலை உதவியாளர்களுக்கு தமிழ்நாடு முழுவதும் கருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி அளித்துள்ளது. 1,132 அலுவலர்களுக்கு அடிப்படைப் பாடமுறைத் திட்டம் அ-ல் பயிற்சி அளித்துள்ளது. 1906 அலுவலர்களுக்கு அடிப்படைப் பாடமுறைத் திட்டம் 'ஆ' வில் பயிற்சி அளித்துள்ளது. 1,032 துணை வட்டாட்சியர்களுக்கு பணியிடைப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இந் நிலையத்தில் 56 சத்துணவுத் திட்ட அலுவலர்களுக்கும் வணிகவரித் துறையைச் சார்ந்த 463 அதிகாரிகளுக்கும் 201 இளநிலை உதவியாளர்களுக்கும் மற்றும் மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சிப் பிரிவு அமைச்சுப் பணியாளர் 79 நபர்களுக்கும் நினைவுகூர் (Refresher Course) பயிற்சியும் மற்றும் தமிழ்நாடு மின்வாரியத்தைச் சார்ந்த 370 நபர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

5. அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தை நடத்துவதற்காக 1990–91 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 16,25,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை

அமைப்பு மற்றும் செயல் முறைப் பிரிவின் தற்போதைய அமைப்பு:

அமைப்பு மற்றும் செயல்முறைப் பிரிவின் தற்போது 6 குழுக்கள் பணியாற்றுகின்றன. அவற்றுள் ஒரு பொறியியல் குழுவும் அடங்கும். ஒவ்வொரு குழுவிலும் ஒரு அமைப்பு மற்றும் செயல் முறை வல்லுனரும் இரண்டு ஆராய்ச்சி அலுவலர்களும் ஒரு சுருக்கெழுத்து தட்டச்சரும் உள்ளனர். பொறியியல் குழுவில் ஒரு செயற் பொறியாளரும் இரண்டு உதவிச் செயற் பொறியாளரும் ஒரு களப்பணியாளரும் உள்ளனர்.

2. அமைப்பு : (ORGANISATION STRUCTURE)

அமைப்பு மற்றும் செயல் முறைப்பிரிவு, ப.ம.நீ.சி. துறைச் செயலரின் நேர்முக மான மேற்பார்வையில் உள்ளது. செயலருக்கு அடுத்து துணைச் செயலர் உள்ளார். துணைச் செயலர் ஒரு குழுவின் தலைவராக மட்டுமின்றி மற்ற குழுக்களின் பணிதளை மேற்பார்வை செய்துவரும் ஒருங்கிணைப்புச் செய்யும் பணியும் மேற்கொள்கிறார்.

3. மேற்பார்வைக்குழு

அமைப்பு மற்றும் செயல்முறை அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை குறிப்பிட்டுள்ள துறைகள் நடைமுறையில் கொண்டு வருகின்றனவா என்று மேற்பார்வை இடுவதற்கு மேற்பார்வை குழு (Monitoring Committee) என்று ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ப.ம.நீ.சி. துறையின் செயலர் அவர்களே. இக்குழுவின் தலைவராக உள்ளார். நீதித் துறையின் செயலர் குழுவில் உறுப்பினராக உள்ளார். எந்த துறையின் அறிக்கை மேற்பார்வைக்கு வருகிறதோ அத்துறையின் செயலர் மற்றும் சம்பந்தப்பட்ட தலைமைத் துறையின் (Head of the Department) தலைவரும் உறுப்பினர்களாக இயங்குவர்.

4.–மேற்பார்வைப் பிரிவு :

மேற்பார்வைப் பிரிவில் ஒரு ஆராய்ச்சி அலுவலரும் ஒரு உதவிப் பிரிவு அலுவலரும் மேற்பார்வை குழுவிற்கு (Monitoring Committee) தேவையான பணிகளைச் செய்கின்றனர். அது மட்டுமின்றி அமைப்பு மற்றும் செயல் முறைப் பிரிவிற்குத் தேவையான நினப் பணிகளையும் (House Keeping Functions) மேற்கொண்டு வருகிறது.

5. அறிக்கையின் நோக்கம் :

நிர்வாக அமைப்பில் தோன்றும் இடர்பாடுகளான பணி அளவீடு (Work Norms) ஆவணங்கள் காப்பு, தேவையற்ற எழுத்துப் பணி குறைத்தல், அன்றாடப் பணிகள், (Routine), அதிகாரப் பகிர்மானம் (Delegation of Power) ஆகியவைகளை உள்ளடக்கிய அறிக்கையை தேவையான துறைகளுக்கு ஒவ்வொரு குழுவும் தயாரிக்கின்றன. அலுவலகத்தின் பணி மேம்பாட்டிற்கு தேவையான உத்திகளையும் மற்றும் பணி அளவை ஆதாரமாகக் கொண்டு துறைக்குத் தேவையான பணியாளர்களை நிர்ணயம் செய்வதும் இவைகளை மையமாகக் கொண்டே அறிக்கைகள் தயாரிக்கப் படுகின்றன. செயலகத் துறைகளையும் மற்றும் தலைமை அலுவலகங்களையும் ஆண்டு தோறும் நிர்வாக அமைப்பில் இடர்பாடுகள் உள்ளனவா அவற்றைப் பற்றி ஆய்வறிக்கை தேவையான துறைகளுக்கு மட்டும் ஆய்வு நடப்பதற்கான பட்டியல் மூன் கூட்டியே தயாரிக்கப்பட்டு அவ்வண்ணமே ஆய்வு செய்து அறிகைகள் தயாரிக்கப் படுகின்றன.

6. பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல் :

குழுக்கள் அறிக்கைகளை தயாரித்தவுடன் நகல்கள் சம்பந்தப்பட்ட (Secretariat department) செயலகத் துறைக்கும், மற்றும் துறைத் தலைவர்களும் (Head of the Department) அனுப்பப்படுகின்றன. அவ்வறிக்கைகளைக் கூறப்பட்ட பரிந்துரைகள் செயல் வடிவம் அளிப்பதற்கான அறிக்கையின் நகல்கள் அனுப்பப்படுகின்றன. பரிந்துரைகளை செயலாக்குவதற்குத் தேவையான வழிகாட்டிகளையும் மற்றும் (Guidelines) அரசு ஆணை நிலை எண். 542 ப.ம.நி.சீ. (வி.ம.செ.), துறை நாள் 29—9—1989-ல் அமைக்கப்பட்டுள்ளன. வெளியிடப்பட்டுள்ளன.

மேற்பார்வைக் குழு (Monitoring Committee) அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகளை செவ்வனே செயலாக்கப்படுகின்றனவா என்று மேற்பார்வை இடுகிறது.

7. அறிக்கைகள், தயாரிப்புத் திட்டம் (Programes of Studies) 1990 மார்ச் திங்கள் வரையில் அமைப்பு மற்றும் செயல்முறைப் பிரிவில் 18b அறிக்கைகள்டு தயாரிக்கப்பட்டுள்ளன. 1990-91 ஆண்டில் 18 அறிக்கைகள் தயாரிக்க குறியீடு நிபணயிக்கப்பட்டது. 1989-90 ஆண்டில் 18 அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு பரிந்துறைகளை செயலாக்க அனுப்பப்பட்டுள்ளன.

தமிழ்நாடு குடிமுறைப் பணிகளில் கூட்டுக் குழு.

இங்கிலாந்து நாட்டில் இயங்கி வருகின்ற ''விட்லி குழுவின்'' (Whitley Council) அடிச்சுவட்டில் தமிழ்நாடு சிவில் பணிகளின் கூட்டுக்குழு 1955-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ம் நாளிட்ட பொது(பணிகள்)துறை, அரசு ஆணை எண் 3300ல் தோற்றுவிக்கப்பட்டது. அதனுடைய முதல் கூட்டம் 1956-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ம் நாளன்று நடைபெற்றது. கூட்டுக் குழுவின் அறுதி யிட்ட அமைப்பு 1957-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 2-ம் நாளிட்ட பொதுப்பணி துறை, அரசு ஆணை எண் 1918 பிற்சேர்க்கையில் தரப்பட்டு உள்ளது. இன்று கூட்டுக் குழு மொத்தம் 22 உறுப்பினர்கள் கொண்டுள்ளது. அவர்களில் ஒரு பாதி உறுப்பினர்கள் (அலுவலர் பக்கம்) அரசினராலும் மறுபாதி உறுப்பினர்கள் (பணியாளர்கள் பக்கம்) அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் சங்கங்களாலும் நியமிக்கப்படுகின்றனர். அரசுத் தலைமை செயலாளர் அலுவலர் குழுவின் தலைவராகவும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை யைச் சார்ந்த சார்புச் செயலர் தன் அலுவலால் குழுவின் செயலாளராகவும் உள்ளனர்.

2. குழுவின் கூட்டம் நடைபெறுவதற்கு குழுவில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்த பட்சம் ஆறு உறுப்பினர்களாவது இருக்க வேண்டும். குழுவின் சாதாரண கூட்டங்கள் அவ்வப்பொழுது தேவை ஏற்படும்போதும், குறைந்த பட்சம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவதும் கூட்டப்படவேண்டும். ஆண்டு இறுதிக் கூட்டம் ஆண்டு தோறும் டிசம்பர் திங்களில் நடைபெறும். குழுவின் அமைப்பு திருத்தப்பட வேண்டிருப்பின் ஆண்டுக் கூட்டத்தில் மட்டுமே திருத்தப்படலாம்.

3. பொதுப்பணியில் திறமையினை அதிகரிக்கச் செய்யவும், பணியாளர்கள் தங்களைக் குறித்து அவர்களின் குறைகளைக் கவனிக்கவும், சார்நிலை பணியாளர்களின் (Subordinate Service) பிரதிநிதிகளுடைய பல்வேறு கருத்துக்கள், அலுவலர்களின் அனுபவங்கள் ஆகியவைகளை ஒருமுகப்படுத்தவும் சிவில் பணியாளர்களை பாதிக்கும் விஷயங்களை கவனிக்க வழிவகை செய்வதோடு அரசு மற்றும் பணியாளர் ஆகிய இருவர் இடையேயும் அதிகபட்ச கூட்டுறவினை நிலவச் செய்வதே இக்குழுவின் நோக்கமாகும்.

4. பணியாளர்களின் பணிநிலைகளைப் பாதிக்கும் எல்லா விஷயங்களும் குழுவின் பார்வைக்கு உட்பட்டதாகும். குழுவின் பரிந்துரைகள் தகுந்த நடவடிக்கைகளுக்காக அரசிற்கு தெரிவிக்கப்படுகின்றன. அப் பரிந்துரையின் மீது அரசின் இறுதி முடிவுகள் குழுவிற்கு அறிவிக்கப்படுகின்றது. குழு அதன் கூட்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்து வைக்கின்றது.

5. பெரிய திட்டங்கள், விதிகளைத் தளர்த்துவது போன்ற கொள்கைப் பற்றிய முடிவுகள் நீங்கலாக ஏனைய சார்நிலைப் பணிகளைச் சார்ந்த அன்றாட நிர்வாகச் பிரச்சனைகளைப் பற்றி துறைத் தலைவர்களும், அங்கீகரிக்கப்பட்ட பணிச் சங்கங்களின் பிரதிநிதிகளும் விவாதிப்பதற்காக கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என எல்லா அரசுச் செயலாளர்களுக்கும் 20—6—1978 நாளிட்ட பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பணி—சே) துறை அரசு ஆணை எண். 717ல் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. இக்கூட்டங்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூட்டப்பட வேண்டுமென்று 6-10-1978-ஆம் நாளிட்ட பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த (பணி-சே) துறையின் அரசாணை எண் 1134-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

6. தமிழ்நாடு சிவில் பணிகளின் கூட்டுக் குழுவைப் போலவே மாவட்டக்கூட்டுக் குழு 1969-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 9-ஆம் நாளிட்ட பொது (பணிகள் துறை, அரசு ஆணை எண். 2386ன்படி 1—1—1969 முதல் தோற்றுவிக்கப்பட்டது. மாவட்டக் கூட்டுக் குழுவின் அறுயிட்ட அமைப்பு 1968-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 9-ஆம் நாளிட்ட பொது (பணிகள்) துறை அரசு ஆணை எண் 2386—ன் பிற்சேர்க்கையில் தரப்பட்டுள்ளது. மாவட்டக் கூட்டுக் குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடும். கூட்டுக் குழுவின் நடவடிக்கைகள் பற்றிய காலமுறை பருவ வெளியீட்டை குழுவின் தலைவர் அரசுக்கு அனுப்பவேண்டும்.

7. பணியாளர்களின் பிரதிநிதிகளும், அதிகாரிகளும் ஒருவரையொருவர் சந்தித்து சம்பந்தப்பட்ட பிரச்சனைகளைப் பற்றிப் பேசவும், நிர்வாகத்தை செம்மைப்படுத்தக் கூடிய வழிகளை வகுக்கவும் மாவட்டக்கூட்டுக் குழு பயன்படுகிறது. உள்ளூர் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளையும் குறைகளையும் அவர்கள் கவனிக்கலாம். ஆனால் மாநில அளவில் மட்டுமே கவனிக்கக்கூடிய ஊதிய உயர்வு, படிகள் உயர்வு போன்றவைகள அக்குழுவின் பார்வைக்கு அப்பாற்பட்டவையாகும்.

8. மாவட்டக் கூட்டுக் குழு 12 உறுப்பினர்களைக் கொண்டது. ஆறு பேர் அலுவலக பிரதிநிதிகளாகும். மற்ற ஆறுபேர் பணியாளர்களின் பிரதிநிதிகளாகவும் இருப்பர். மாவட்ட ஆட்சியர் தன் அலுவலால் மாவட்டக் கூட்டுக் குழுவின் தலைவர் ஆவார். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) குழுவின் செயலர் ஆவார்.

9. 1—4—1989 முதல் 31—3—1990 வரையில் தமிழ்நாடு சிவில் பணிகளின் கூட்டுக்குழு மூன்று முறை கூடியுள்ளது. அக் கூட்டங்களில் 23 பொருட்களைப் பற்றி விவாதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

நோக்கமும், செய்கடமைகளும் :

அரசுப் பணியாளர் தேர்வாணையங்களுக்கு தொடர்புடைய காப்புரை இந்திய அரசியலமைப்பு பிரிவுகள் 315 முதல் 323 வரை அடங்கியுள்ளன. (இயல் 11; பகுதி XIV) அரசியலமைப்பு பிரிவுகள் 315 முதல் 323 வரை அடங்கியுள்ளன. (இயல் 11; பகுதி XIV) தேர்வாணையங்கள் செய்ய வேண்டிய பணிகள் பிரிவு 320ல் வரையறுக்கப்பட்டுள்ளன. அரசுப் பணியாளர் தேர்வாணையம் கீழ்க்கண்ட பொருள்கள் மீது கலந்தாலோசிக்கப்பட வேண்டும்.

(அ) பணியாளர் தேர்வு முறைகள் :

(ஆ) ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு பணிமாற்றம் செய்தல் மற்றும் பதவி உயர்வு அளித்தல் ஆகியவற்றில் பின்பற்றப்பட வேண்டிய கோட்பாடுகள்.

(இ) ஒழுங்கு நடவடிக்கை முறைகள்.

(ஈ) அரசு ஊழியர் ஒருவர் தன் மீது தொடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகளி லிருந்து பாதுகாப்பு பெற ஏற்பட்ட செலவினங்களை கோருதல்.

(உ) பணிக் காலத்தில் பணியாளருக்கு ஏற்பட்ட தீங்குகளுக்காக ஒய்வூதியம் அளிப்பு குறித்த கோரிக்கை.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள் 1954 தேர் வாணைய அலுவலர் மற்றும் அதன் ஊழியர் ஆகியோரின் அமைப்பு முறை மற்றும் பணி முறைமைகளை தொகுத்துக் கூறுகின்றது.

அறிக்கைக்குரிய காலத்தில் தேர்வாணையம் மாநிலத்தின் பல பணிகளிலடங்கிய 110 பதவிகளில் 2379 பணியிடங்களுக்கு விண்ணப்பங்களை வரவேற்று 46 அறிவிக்கை விளம்பரங்கள் தந்துள்ளது.

மாநில சார்நிலைப் பணிகளில் 60 வகை பதவிகளுக்கான 2837 பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்ப தேர்வாணையம் பணி வேட்பாளர்களை தெரிவு செய்து பரிந்துரை செய்துள்ளது.

தொகுதிப் பணிகள்.

தொகுதி—1987—89

தொகுதி ஒன்று பணிக்கு நேர்முக தேர்வுக்கு 144 விண்ணப்பதாரர்களை அனுமதித்து அவர்களுக்கு 7—7—1989 அன்று முதல் பல்துறை வல்லுநர் மற்றும் துறை தலைவர் உதவியோடு வாய்மொழித் தேர்வு நடத்தப்பட்டு 72 விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தொகுதி I—1989—90.

தொகுதி ஒன்றிற்கான 91 பணியிடங்களை நிரப்புவதற்காக 21—9—1989 விளம் பரம் செய்யப்பட்டது. 34,969 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. முதல்நிலைத் தேர்வு 24—2—1990 அன்று நடத்தப்பட்டதில் 26,574 விண்ணப்பதாரர்கள் கலந்து கொண்டனர்.

தொகுதி II—1988—89

815 பணி வேட்பாளர்கள் தொகுதி இரண்டு வாய்மொழித் தேர்வுக்கு அனுமதிக்கப் பட்டனர். வாய்மொழித் தேர்வு 19—6—1989 அன்று முதல் நடந்தது. 758 பேர் கலந்து கொண்டனர். 364 நபர்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் பதவிகளுக்கான எழுத்துத் தேர்வு 29—12—1989-ல் நடத்தப்பட்டு 1454 நபர்கள் நியமனத்திற்காக தெரிவு செய்யப்பட் டனர். தமிழ்நாடு அரசு தலைமை செயலக பணியில் உதவியாளர் பதவிக்காக 138 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்வரும் தொகுதிப் பணி தேர்வுகளுக்காக தேர்வாணையம் அறிவிக்கை வினம் பரங்களை வெளியிட்டது.

தேர்வு	அறிவிக்கை நாள்.	பணி காலி யிடங்கள்.	பெறப்பட்ட விண்ணப் பங்கள்.	முதல்நிலை தேர்வு நாள்.
(1)	(2)	(3)	(4)	(5)
தொகுதி II	21—09—1989	141	65,000	24—06—1990
தொகுதி III	21—09—1989	67	82,604	23—06—1990
தொகுதி VII	21—09—1989	9	5,028	07—04—1990
தொகுதிVIII	21—09—1989	10	12,030	31—03—1990
தொகுதி IX	21—09—1989	5	3,709	08—04—1990

அறிக்கைக்குரிய காலத்தில் தேர்வாணையம் மாநிலப் பணியில் 16 வகைப் பணி களில் 54 வகை பதவிகளுக்கான 300 தகுதியும் பொருத்தமுடைய பணியாளர்கள் சார்பு நிலைப் பணியிலிருந்து மாநிலப் பணிக்கு பணிமாற்றம் மூலமோ அல்லது மாநிலப் பணியிலேயே பதவி உயர்வு மூலமோ பணியில் அமர்த்தப் பெற வந்த கோரிக்கைகள் ஆராயப்பட்டு முடிவுகள் தெரிவிக்கப்பட்டன.

356 மேல் முறையீடுகள், 40 மனுக்கள் மற்றும் மறு ஆய்வு மனுக்கள் மற்றும் 205 ஒழுங்குமுறை நடவடிக்கைகள் இதான தனது அறிவுரையை தேர்வாணையம் அரசுக்கு தெரிவித்தது.

அறிக்கைக்குரிய இவ்வாண்டில் அரசு 90 நிகழ்வுகளில் வயது வரம்பு மற்றும் கல்வி சம்பந்தப்பட்ட விதிகளை தளர்த்தி ஆணைகள் பிறப்பித்துள்ளது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள் 1954-ன் ஒழுங்குமுறை விதி 16(பி) பிற்பகுதி அடிப்படையில் தேர்வாணையம் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளில் 366 நபர்களின் பணி முறைப்படுத்தப்பட தன் இசைவினை அளித்துள்ளது.

தமிழைத் தாய்மொழியாக பெறாத அகில இந்தியப் பணியைச் சார்ந்த ஆட்சித் துறை, காவல் துறை மற்றும் வனத் துறை அலுவலர்களுக்கான ஜூலை 1989 இல் விளம்பரப்படுத்தப்பட்டதற்கு ஒருவரும் விண்ணப்பிக்கவில்லை.

இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்திற்காக இத்தேர்வாணையம் 1989-ம் ஆண்டு மார்ச் மற்றும் அக்டோபர் திங்களில் தேர்வு நடத்தியது. இதில் மார்ச் திங்கள் நடத்திய தேர்வில் 107 விண்ணப்பதாரர்கள் கலந்து கொண்டதில் இருவர் தெரிவு செய்யப்பட்டனர். அக்டோபர் திங்கள் நடத்திய தேர்வில் 65 விண்ணப்ப தாரர்கள் கலந்து கொண்டதில் ஒருவரும் தெரிவு செய்யப்படவில்லை. இத்தேர்வினை இத்தேர்வாணையம் 1990-ஆம் ஆண்டு மார்ச் திங்களிலும் நடத்தியது. இத்தேர்வு களில் 34 விண்ணப்பதாரர்கள் கலந்து கொண்டனர். இத்தேர்வின் முடிவுகள் எதிர் பார்க்கப்படுகிறது.

ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயம்.

ஒழுங்கு நடவடிக்கை ஆணையர், சென்னை.

சென்னையிலுள்ள மதுரை வட்டார ஒழுங்கு நடவடிக்கை.

1. சென்னை, ஒழுங்குமுறை நடவடிக்கை ஆணையாளர், சென்னையிலுள்ள மதுரை வட்டார ஒழுங்கு நடவடிக்கை ஆணையாளர் ஆகியோரால் நிர்வகிக் கப்படும் வழக்குகள்.

சென்னை, ஒழுங்கு நடவடிக்கை ஆணை யாளர் சென்னையிலுள்ள மதுரை வட்டார ஒழுங்கு நடவடிக்கை ஆணை யாளர் ஆகியோரின் கவனிக்கும் வழக் குகளின் வகைகள் மேலே கொடுக்கப் பட்டுள்ளன :—

1. சென்னையிலுள்ள விழிப்புப்பணி.— இலஞ்ச ஒழிப்பு இயக்கத்தால் புலன் விசாரணை செய்யப்பட்டு விழிப் புப் பணிக்குழுவின் பரிந்துரையின் பேரில், அரசால், நடுவர் மன்றங் களுக்கு அனுப்பப்படுகின்ற A,B,C,D தொகுதிகளைச் சேர்ந்த அலு வலர்கள் சம்பந்தப்பட்ட ஊழல் வழக்குகள் அனைத்தும் அரசின் முன் ஒப்புதலுடன், துறைகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் வகைப் பாடு, கட்டுப்பாடு, மேல்முறை யீடு, விதிகளின் 17 (ஏ) விதியின்கீழ் குறிப்பிட்டுள்ள வழக்குகள் :—

2. தமிழ்நாடு அரசுப்பணியாளர் வகைப் பாடு, கட்டுப்பாடு, மேல்முறையீடு விதிகளின் 17-ஏ விதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் (பணியாளர். என்) 23-9-1977 ஆம் நாளிட்ட 1171 ஆம் எண் அரசாணையில் கொண்டுவரப் பட்ட வழக்குகள், இவ்விரு நடுவர் மன்றங்களால் பணியிலுள்ள ஒருவர் அல்லது மாநில அரசு சிவில் பதவியிலுள்ள ஒருவரைப்பொறுத்த மட்டில் மேற்சொன்ன விதிகளின் 17(பி). ( ) விதியின்கீழ், எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

3. 1989—90 ஆம் ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமலுள்ள வழக்குகளின் விவரங்கள் :—

விவரங்கள்.	மதுரை.	ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம். சென்னையிலுள்ள மதுரை வட்டாரம்.	கோயம்புத்தூர்.
(1)	(2)	(3)	(4)
(a) 1—4—1989 ஆம் நாள் நிலவரப்படி முடிவுறாமலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை.	260	155	202
(b) 1989—90 ஆம் ஆண்டில்வரப் பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை (1—4—1989 முதல் 31—3—1990 வரை).	66	71	49
(c) முடிவு செய்யப்படவேண்டிய வழக்குகளின் மொத்த எண்ணிக்கை.	326	226	251
(d) 1989—90 ஆம் ஆண்டில் தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	516	27	54
(e) 1—4—1990 ஆம் நாள் நிலவரப்படி, முடிவுறாமலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை.	269	199	187

* தீர்ப்பளிக்கப்பட்டவழக்குகள் 51

மதுரை வட்டாரத்திற்கு மாற்றப்பட்ட வழக்குகள். 66

57

(1) ஒழுங்கு நடவடிக்கைகள் ஆணையர், கோயம்புத்தூர்.

1. முன்னுரை :

கோயம்புத்தூர் ஒழுங்கு நடவடிக்கைகள் ஆணையர் அலுவலகம் கடந்த 4—1—1984 முதல் பணிபுரிந்து வருகிறது. தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் நடைமுறை (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள் 1955-ன்படி அரசு குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி அரசுப்பணியாளர்களின் மீது துறை விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு இத்தீர்ப்பாயம் நிறுவப்பட்டது. மேலும் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் நடைமுறை (சி.சி.ஏ.) விதி 17ஏ-ன்கீழ் துறைத் தலைமைகள் அனுப்பி வைக்கும் அரசுப்பணியாளர்களின் வழக்குகளையும் இத்தீர்ப்பாயம் விசாரணை மேற்கொண்டு வருகிறது. சென்னை ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநர் அலுவலத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும் இரகசிய பார்ட்—பி அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு இத்தீர்ப்பாயத்தில் விசாரணைகள் நடைபெறுகின்றன.

3. பணிகள்

கோயம்புத்தூர், நீலகிரி, பெரியார், காயிதே மில்லத், தருமபுரி, சேலம் மற்றும் திருச்சி ஆகிய 7 மாவட்டங்கள் இத்தீர்ப்பாய அதிகார வரம்புக்குள் அடங்குபவை. அரசிடமிருந்து சம்பந்தப்பட்ட விசாரணை நடத்த ஆணை வரப்பெற்றதும் தேவையான குற்றச்சாட்டுகள் சம்பந்தப்பட்ட குற்ற அலுவலர் மீது தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டு குற்ற அலுவலர்கள் மீது சார்வு செய்யப்படும் ஒரு நீதிமன்றத்தில் நடைபெறுவது போலவே இத்தீர்ப்பாயத்திலும் வழக்குகள் விசாரிக்கப்படுகின்றன. வழக்குகளில் குற்றத்தரப்பு மற்றும் தற்காப்பு தரப்பு ஆகிய இரு தரப்புகளிலிருந்தும் வழக்குரைஞர்கள் ஆஜராகி விசாரணை செய்கின்றனர். சாட்சிகளின் விசாரணை முடிவுற்றதும் சாட்சிகள் கூறிய வாக்குமூலங்களை பரிசீலித்தும், குற்றத்தரப்பு மற்றும் தற்காப்புத் தரப்பு ஆகிய இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும் தீர்ப்பாயம் தனது முடிவான கருத்துடன் அறிக்கையை அரசிற்கு அனுப்புகிறது. அதன்பேரில் முடிவான உத்திரவுகள் அரசினால் பிறப்பிக்கப்படுகிறது.

4. துறைகள் மற்றும் இட்டங்கள்

ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயம் துவக்கத்தில் அரசுப்பணியாளர்கள் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிந்து வந்தது. அதன்பின் அரசுக் கடிதம் எண் 266, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை(பணி-ஜே)நாள் : 29-4-1988-ன் தீர்ப்பாயம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் வரப்பெற்ற அவர் வழக்குகள் விரைவில் முடிவுக்குக் கொண்டுவர அவற்றின் முன்னேற்றத்தை ஆய்வு செய்து வருகிறார். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை ஆணையர் 1988 ஆம் ஆண்டும் மே திங்களில் ஆய்வுமேற்கொண்டு தற்போது பணி நீக்கம் செய்யப்பட்ட குற்ற அலுவலர்கள் மற்றும் பணி ஒய்வு நிலையிலுள்ள குற்ற அலுவலர்களின் வழக்குகளை விசாரணை செய்து முடிக்க முன்னுரிமை வழங்க வேண்டுமென்ற அறிவுரைகளை வழங்கினார். அவரின் அறிவுரைகளின்படி 54 வழக்குகள் முன்னுரிமைப் பட்டியல் 3-ன் கீழ் கொண்டுவரப்பட்டு கண்காணிப்பு ஆணையரால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. முன்னுரிமைப் பட்டியல் 1-ல் உள்ள 56 வழக்குகளில் இதுகாறும் 50 வழக்குகளும், முன்னுரிமைப்பட்டியல் 2-ல் 37 வழக்குகளும் விசாரணை முடிவுறப்பெற்று அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளன.

8. முடிவுரை

தற்போது இத்தீர்ப்பாயத்தில் 197-க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன. வழக்குகள் விசாரணையில் பல சட்டபூர்வ விதிமுறைகள் அனுசரிக்கவேண்டியுள்ளதால், வழக்குகள் முடிவு செய்ய காலம் அதிகம் தேவைப்படுகிறது. ஓராண்டில் சராசரியாக 40 முதல் 50 வழக்குகள் முடிவு செய்யப்படுகின்றன. அது

5. முடிவுரை—தொடர்ச்சி.

போலவே 1-4-1989 முதல் 30-3-1990 வரை 56 வழக்குகள் விசாரணை மேற்கொள்ள இத்தீர்ப்பாயத்திற்கு அரசிடமிருந்து வரப்பெற்றன. இவை களை சுருக்கில் எடுத்துக்கொள்ளும் போது இத்தீர்ப்பாயத்தில் நிலுவையி லுள்ள வழக்குகள் பெரும்பாலும் ஒரே நிலையிலுள்ளன. மேலும் குறி யீட்டை எய்தினால் கூட முன்னுரி மைப் பட்டியலில் சேராத வழக்கு களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள ஒரிரு ஆண்டுகள் ஆகும் நிலையிலுள்ளன. எனவே மேலும் சில தீர்ப்பாயங்களை அமைக்கும்பட்சத்தில் நிலுவையிலுள்ள வழக்குகளை குறைப் பதற்கும், வழக்குகளை வெகுவிரை வில் முடிவு செய்யவும் உதவியாக இருக்கும்.

ஊழல் தடுப்பு கண்காணிப்பு

இவ்வியக்ககம், காவல்துறை இயக்குநர் அந்தஸ்தில் உள்ள அலுவலர் தலைமை யில் இயங்கி வருகின்றன. காவல்துறை நுணைத் தலைவர் அந்தஸ்தில் ஒரு துணை இயக்குநரும், மற்றும் மூன்று காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் பல்வேறு மாவட்டங்களிலுள்ள இவ்வியக்ககப் பிரிவுகளில் புலனாய்வு அதிகாரிகளின் பணியினை மேற்பார்வை புரிந்து இயக்குநருக்கு உதவி புரிந்து வருகின்றனர்.

2. பொது அரசு நிர்வாகத்தில் ஊழலை தடுப்பதற்காக முதன் முதலாக ஒரு அமைப்பு முறையில் தமிழ்நாடு அரசு 1964 ஆம் ஆண்டு, ஊழல் தடுப்பு கண்காணிப்புத் துறை இயக்ககத்தை ஒரு தனித் துறையாக தோற்றுவித்தது.

3. மாநில அரசு அலுவலர்கள் மீதான கையூட்டு மற்றும் ஊழல் குற்றங்கள் குறித்த புகார்கள் / தகவல்கள் மீது இவ்வியக்ககம் விசாரணைகள் மேற்கொள்கிறது. மாநில அரசு கட்டுப்பாட்டிலுள்ள பொதுத்துறை நிறுவனங்களின் ஊழியர்கள் மீதும் இவ்வியக்ககம் விசாரணைகளையும், வழக்குகளையும் நடத்துகின்றன. 1988 ஆம் ஆண்டின் ஊழல் தடுப்புச் சட்டம், (சட்டம் 49/88) பிரிவு 2 (c)(2)ன் விரிவான விளக்கத்தின்படி ''பொது ஊழியர்கள்'' என்ற அடிப்படையில் (1) அரசிடமிருந்து பொருளாதார உதவி பெறும் ஒரு பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கத்தின் தலைவர், செயலாளர், மற்றும் அலுவலக நிர்வாகிகள் (2) பணியாளர் தேர்வு ஆணையத்தின் தலைவர், உறுப்பினர் அல்லது அலுவலர்கள் அல்லது பணியாளர் தேர்வு ஆணையத்தினால் நியமிக்கப்பட்ட தேர்வு குழுக்களில் உறுப்பினர் (3) துணைவேந்தர் அல்லது ஆட்சிக் குழு உறுப்பினர், பேராசிரியர், துணைப் பேராசிரியர், விரிவுரையாளர் அல்லது வேறு ஆசிரியர் அல்லது பல்கலைக் கழக அலுவலர்கள், மற்றும் பல்கலைக் கழகத்தினால் யாருடைய பணிகள் பயன்படுத்தப் பட்டதோ அந்த நபர்கள், (4) அரசாங்கத்திடமிருந்து நிதி உதவி பெறும் கல்வி, அறிவியல், சமூகம், கலை மற்றும் ஏனைய நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் அலுவலர்கள் மற்றும் (5) எந்த ஒரு பணியில் இருப்பதால் ஒருவர் பொதுப்பணி புரிய வேண்டியுள்ளதோ அல்லது பணிக்கப்பட்டுள்ளாரோ அந்த நபர்கள் ஆகியவர் களும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு இயக்கத்தில் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

4. பொதுப்பணிகளில் உள்ள கையூட்டு மற்றும் ஊழல்களை குறித்த தகவல் களை சேகரிப்பது இவ்வியக்ககத்தின் ஒரு முக்கிய பொறுப்பாகும். எனவே, இவ்வியக்ககத்தின் புலனாய்வு அலுவலர்களுக்கு அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங் களை பிரித்து தனிப்பட்ட முறையில் கண்காணிக்கவும், ஊழலில் ஈடுபடும் அலுவலர் களை தெரிதெடுத்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள தகவல் அறிக்கைகள் அனுப்ப பணிக்கப்பட்டுள்ளனர். இவ்வியக்கக அலுவலர்கள் சேகரித்து தகவல் களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட வழக்குகள் விசாரணைகளில் பல குறிப்பிடத்தக்கவையாகும்.

5. தனிப்பட்ட தகவல்கள் புகார்கள் மீது விசாரணைகள் மேற்கொள்வதுடன் கூட இவ்வியக்ககம், தனிப்பட்ட லஞ்சம் கேட்டது குறித்த தகவலின் பேரில் லஞ்சம் உடனே ஏற்றுக்கொள்ளப்படும் என்று உறுதியாகத் தெரிந்தால் அத்தகைய புகார்களின் மீது பொறி வைத்து பிடிக்கும் வழக்குகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்கிறது. ஊழல் புரியும் அதிகாரியை பொறி வைத்து பிடிப்பது மற்றும் அவரை கையூட்டு கேட்டு பெற்றுக்கொண்டபின் கையும் களவுமாக கைது செய்வது, அன்றாட வாழ்க்கையில் பொது மக்களை பாதிக்கக்கூடிய கொடுமையான ஊழலை ஒழிக்கும் ஒரு நிறை மிக்க ஆயுதமாகும்.

6. இவ்வாண்டில் பதிவு செய்யப்பட்ட விசாரணைகள்/வழக்குகளின் விவரம் வருமாறு :—

விசாரணைகள்/வழக்குகள் விவரம்.	வழக்குகள் எண்ணிக்கை.	நபர்கள் பிரிவுகள்.	
		ஏ.பி.	பி.டி.
(1)	(2)	(3)	(4)
(அ) முன் விசாரணைகள்	253	222	171
(ஆ) விரிவான விசாரணைகள்	153	198	227
(இ) முறையான வழக்குகள்	147	174	228
(ஈ) பொறி வைத்து பிடித்த வழக்குகள்	58	17	131
மொத்தம்	611	611	757

7. (அ) சமீபத்தில் பதிவு செய்யப்பட்ட விசாரணைகள்/வழக்குகளில் அகில இந்திய பணி மற்றும் அரசுத் துறை/நிறுவன தலைவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட 16 விசாரணைகளும்/வழக்குகளும் அடங்கும். (ஆ) மேலும், இவ்வாண்டில், முறையான வழக்குகளால் மேற்கொள்ள இயலும் தொடர் நடவடிக்கைகளின் வாய்ப்புக்களை கருத்திற்கொண்டு, முறையான வழக்குகள் பதிவு செய்வதில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

8. ஊழல் தடுப்புக் கண்காணிப்புத் துறையின் விசாரணைகளின் மீதான நடவடிக்கைகள் கீழ்க்கண்டவாறு முடிவுறுகின்றன :—

(1) நீதிமன்றத்தின் முன் வழக்கு அல்லது

(2) தீர்ப்பாயங்களின் முன்பு விசாரணை

அல்லது

(3) துறைத் அதிகாரிகள் முன்பு ஒழுங்கு நடவடிக்கை.

அல்லது

(4) சம்மந்தப்பட்ட அலுவலரை, வெகுதூரத்திற்கோ அல்லது முக்கியத்துவம் இல்லாத ஒரு பிரிவுக்கோ மாற்றுதல் போன்ற நிர்வாக நடவடிக்கை.

அல்லது

(5) போதுமான ஆதாரங்கள் இல்லாததால், மேல்நடவடிக்கைகளை நிறுத்தி விடுதல்.

9. இவ்வாண்டு 19 நபர்கள், இவ்வியக்கச வழக்குகளில் நீதிமன்றத்தில் தண்டனை பெற்றனர். அவர்களின் விவரம் வருமாறு :—

(அ) மேல்முறையீட்டு உதவி ஆணையர்	1
(ஆ) துணை வணிக வரி அலுவலர்	1
(இ) மாவட்ட நூலக அதிகாரி	1
(ஈ) இளநிலை பொறியாளர்	1
(உ) உதவியாளர்கள்	2
(ஊ) தலைமை ஸ்ரீத்தர்	1
(எ) விருவாய் ஆய்வாளர்	1
(ஏ) இளநிலை உதவியாளர்	1
(ஐ) கிராம் நிர்வாக அதிகாரி	4
(ஒ) மண்டல போக்குவரத்து அலுவலகத்திலுள்ள இடைத் தரகர்கள்.	2
(ஓ) ஒப்பந்தக்காரர்கள் மற்றும் தனி நபர்கள்	4
	19

மேற்கூறிய அலுவலர்கள் பெற்ற சிறைத் தண்டனையின் கால அளவு நீதிமன்றம் அன்று முடிவு அடையும் வரையிலும் முதல் 2 ஆண்டு கடுங்காவல் வரையிலும் மேலும் அபராத தொகை ரூ. 250—லிருந்து ரூ. 1,500 வரை ஒவ்வொரு வருக்கும் வெவ்வேறாக அளிக்கப்பட்டுள்ளது.

10. இவ்வாண்டு, தீர்ப்பாயம் மற்றும் துறை விசாரணைகளின் முடிவில் தண்டனை மற்றும் தண்டனை பெற்றவர்கள் விவரம் :—

தண்டனை விவரம்.	தண்டனை பெற்றவர் எண்ணிக்கை.
(1)	(2)
(அ) பணி நீக்கம்	21
(ஆ) பணி விலக்கல்	13
(இ) கட்டாய ஓய்வு — —	5
(ஈ) பதவி இறக்கம்	7
(உ) ஊதிய இறக்கம்	16
(ஊ) ஓய்வு ஊதியம் பிடித்தம்	5
(எ) ஊதிய உயர்வு தள்ளி வைத்தல்	236
(ஏ) கண்டனம் மற்றும் இதர சிறிய தண்டனை	95

11. 1989—90 ஆம் ஆண்டில் துவக்கத்திலுள்ள எல்லா விசாரணைகளையும் முடிக்க தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு விழிப்புப் பணி ஆணையருக்கு அதிகமான எண்ணிக்கையில் அறிக்கை அனுப்பியும், இதர முடிவுகள் எடுக்கப்பட்டும் குறிப்பிடத்தக்க அளவில் நிலுவையிலிருந்த விசாரணைகளும் மற்றும் வழக்குகளும் முடிக்கப்பட்டன. இவ்வாறு முடிவு செய்யப்பட்ட விசாரணைகளின் விவரம் வருமாறு :—

விசாரணைகள்.	முடிக்கப்பட்ட விசாரணை/ வழக்குகள்.
(1)	(2)
(அ) முன் விசாரணைகள்	277
(ஆ) விரிவான விசாரணைகள்	217
(இ) முறையான வழக்குகள்	43
(ஈ) பொறி வைத்து பிடித்த வழக்குகள்	63
	600

12. மரபு வழியான புலனாய்வு செயல்பாட்டினை தவிர ஊழல் தடுப்பு கண்காணிப்புத் துறையானது, பொதுப்பணிகளில் நிலவும் ஊழலை தடுப்பதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து அறிவித்து பொதுப்பணிகளில் ஊழல் தடுப்பு நடவடிக்கைகளில் உத்வேகத்துடன் செயல்படுகின்றது.

13. பொதுப் பணிகளில் ஊழலை தடுப்பதற்கான ஒரு நடவடிக்கையாக ரூ. 3 இலட்சம் அதற்கு அதிகமான தொகை அளிக்கப்பட்ட அரசு பணிகளை நிறைவேற்றுவதில் ஊழல் ஏற்படாமல் இருக்க கண்காணிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

14. வரும் ஆண்டுகளில் அரசு அலுவலகங்களில் ஏற்படும் ஊழலை தடுப்பதற்கான எல்லாவிதமான முயற்சிகளும் மேற்கொண்டு அரசு செய்து வரும் நல்ல திட்டங்களின் பலன்கள் சாதாரணமான மனிதனை அடைய இவ்வியக்கம் பாடுபடும்.

அத்தியாயம் 22

திட்டமிடல் மற்றும் வளர்ச்சித்துறை

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி.

மாநில மதிப்பீடு குழுவின் பரிந்துரையின்படியும், அரசின் ஆணையின்பேரிலும் மதிப்பீட்டு ஆய்வுகளை இத்துறை மேற்கொள்கிறது. திட்ட மதிப்பீடு, திட்ட அமைப்பு பணிகளுடன் 'தமிழ்நாடு பொருளாதார ஆய்வுமிக்கை' தமிழக அரசின் வரவு–செலவு திட்ட கணக்குகளைப் பொருளாதார பணி வாரியாக வகைப்படுத்துதல் எனும் ஆண்டு வெளியீடுகள் இரண்டினை வெளியிடும் பணியினையும் நிகழ்த்துகிறது. இது தவிர உலக வங்கியின் உதவியால் செயல்படுத்தப்படும் பெரியார் வைகை மேம்பாட்டுத் திட்டம் 'ஐரோப்பிய பொருளாதார சமுதாய' நிறுவனத்தின் (EEC) உதவியுடன் செயல்படுத்தப்படும் கண்மாய் நவீனப்படுத்தும் திட்டம் ஆகிய இரு திட்டங்களையும் மதிப்பீடு செய்கிறது.

முடிக்கப்பட்ட மதிப்பீட்டு ஆய்வு அறிக்கை :

1989–90 ஆம் ஆண்டில் இத்துறையினரால் கணக்குறித்த 14 மதிப்பீட்டு ஆய்வு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன,

1. இம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் வளர்ச்சியின் வேறுபாடுகளை கண்டறிய சில முன்னேற்றக் குறியீடுகள் தொகுத்தல்.

2. திரைப்படத் துறையில் குறைந்தபட்ச ஊழியர் சட்டத்தை அமுலாக்குதல்.

3. ஆதி திராவிடர்களுக்கான வீட்டு வசதித் திட்டம்.

4. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கருப்பா நதித் திட்டம்.

5. கால்நடை மேம்பாட்டுத் திட்டம்.

6. முதலமைச்சரின் வாழ்க்கை வழிக்கல்வித் திட்டம்.

7. (வளர்ப்பு) முத்து தயாரிக்கும் திட்டம்.

8. நடமாடும் கால்நடை சுருத்தரங்குகள்.

9. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அரசு வழங்கும் மானியம்.

10. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு எதிர்ப்புள்ள பகுதிகளுக்கான திட்டம்,

மற்றும் மகப்பேறு காலத்தில் தாய்மார்களின் இறப்பு விகிதத்தை குறைக்கும் திட்ட அடிப்படை ஆய்வு.—

1. கிராமப்புற சாலைகளுக்கு முதலீடு,

2. நீர்ப்பாசனத்திற்கென முதலீடு,

3. சேலம், வட ஆற்காடு, தர்மபுரி மாவட்டங்களில் மலைவாழ் மக்களுக்கென திட்டங்கள்,

4. இடைவெளி நிறைவு மற்றும் பாசனம் செய்யப்பட்ட கூடுதல் பரப்பு பற்றிய அறிக்கை,

5.2. இதேக்குறிப்பிட்ட மதிப்பீடு ஆய்வுகள் தொடங்கப்பட்டு. ஆண்டின் இறுதியில் பல்வேறு முன்னேற்ற நிலைகளில் உள்ளன.

1. நடமாடும் கால்நடை மருந்தகங்கள் குறித்த கூடுதல் ஆய்வு.

2. திண்டுக்கல் வட்டத்தில் உள்ள சிறுமலையில் அமைந்துள்ள பழத்தோட்டம்.

3. மலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தேயிலை சம்பந்தமாக திட்டங்கள் மீதான உடன் நிகழ் ஆய்வு.

4. நீலகிரி மாவட்டத்தில் மலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள தடுப்பு அணைகள் மீதான ஆய்வு.

5. உவர் நிலங்கள் புனரமைப்புத் திட்டம்.

6, கசிவுநீர்க் குட்டைகளைக் கட்டுவதற்கான செலவினை ஒப்பிடுதல் மற்றும் அவைகளின் பயன் அறிதல்.

7, மாவட்ட தொழில் மையம், திருச்சி.

8, சிறப்பு சிறு பாசனத் திட்டம்.

9, மத்திய அரசின் உதவியுடன் சர்வோதய நிலையங்களால் அமுலாக்கப்படும் கதர் மற்றும் கிராமத் தொழில் திட்டம்.

10, வணிகவரி வசூலிக்கும் பணியாளர் தொகுப்பை ஒழுங்குபடுத்தல்.

11, கிராமப்புற இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்பிற்கான பயிற்சி திட்டம்.

12, கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின்கீழ் கிராமப்புற சுகாதாரக் கழிவறைகள்,

13. கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் பத்து லட்சம் கிணறுகள் திட்டம்.

14. கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உதவித் திட்டத்தின் கீழ் சிறு பாசனம்.

15. குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்திற்கு எதிர்ப்புள்ள பகுதிகளுக்கான இட்டம் மற்றும் மகப்பேறு காலத்தில் தாய்மார்களின் இறப்பு விகிதத்தைக் குறைக்கும் திட்டம் பயன் அறியும் ஆய்வு.

16. மரவள்ளிக் கிழங்கு சாகுபடி விரிவாக்கத் திட்டத்தின் மீது திட்ட விளக்கம்.

17. இடைப்படு காடு திட்டம்.

18. தரிசு நிலங்களில் சமூக மர வளர்ப்புத் திட்டம்.

மேலே குறிப்பிடப்பட்ட ஆய்வுத் திட்டப்பணி பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

செயல்முறை மற்றும் கண்காணிப்பு விரிவு பெரியார் வைகை மேம்பாட்டுத் திட்டம், மதுரை :—

1. பயன் மதிப்பீட்டு அறிக்கை 1988—89.
2. பயன் மதிப்பீட்டு அறிக்கை 1989—90.
3. சிறப்பாய்வு திட்டத்தின் நில புலனாய்வு,
4. நீர்ப்பாய்ச்சப்பட்ட பரப்பு—சிறப்பாய்வு.

கண்மாய்கள் திட்ட மதிப்பீடு அலுவலகம், திருச்சி.

மூன்று பருவக்காலங்களிலும் 20 மாதிரி கண்மாய்குறித்து பயன் மதிப்பீட்டு ஆய்வு.

மேற்கூறிய மதிப்பீட்டு ஆய்வுகள் தவிர கீழ்க்குறிப்பிட்ட பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவ அலுவலர்கள் தங்கியிருப்பதை பாதிக்கும் காரணங்கள் குறித்து விவரப்பட்டியல் தயாரித்து அரசுக்கு அனுப்பப் பட்டது.

சிறுசேமிப்பு மீதான சமூக வாய்ப்பிற்காக ஆய்வு மேற்கொள்வதற்கான குறிப்புரை.

திருஷ்ணமூர்த்தி பௌண்டேசன் மேற்கொண்ட மதிப்பீட்டாய்வு சம்பந்தமான ஒருங்கிணைப்பு பணி மேற்கொள்ளப்பட்டது.

இரசாயன சோதனை நிலையத்தில் வசூலிக்கும் கட்டணங்களை மாற்றியமைத்தல்.

ஆண்டு வெளியீடு :

இத்துறை தமிழ்நாடு, பொருளாதார ஆய்வு மற்றும் தமிழக அரசின் வரவு-செலவு திட்ட கணக்குகளைப் பொருளாதார பணிவாரியாக வகைப்படுத்தல் எனும் இரண்டு வெளியீடுகளை ஆண்டுதோறும் வெளியிடுகிறது. 1989-ம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டது. தமிழக அரசின் 1989-90 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டங்களைப் பொருளாதார பணிவாரியாக வகைப்படுத்தல் வெளியிடப்பட்டது.

விலைவாசி புள்ளிகள்

தமிழ்நாடு மொத்த விலைக் குறியீட்டெண்.

தமிழ்நாடு மொத்த விலைக் குறியீட்டெண்கள் 1970–71-ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு ஒவ்வொரு வாரமும் கணக்கிடப்படுகின்றன. முதன்மைப் பொருட்கள், எரிபொருள், மின்சக்தி, உற்பத்திப் பொருட்கள் ஆகிய மூன்று பகுதிகளில் உள்ளிட்ட 117 பொருட்களையும், அவற்றின் 510 விலை விவரங்களையும் அடிப்படையாகக் கொண்டு இக்குறியீட்டெண்கள் கணக்கிடப்படுகின்றன. வாராந்திர குறியீட்டெண்களை அடிப்படையாகக் கொண்டு மாதாந்திர மொத்த விலைக் குறியீட்டெண்கள் கணக்கிட்டப்பட்டு வெளியிடப்படுகின்றன.

1989–90 ஆம் ஆண்டில் அனைத்துப் பொருட்களுக்கான மொத்த விலைக் குறியீட்டெண் 10 விழுக்காடு அதிகரித்துள்ளது. 1989 ஏப்ரல் திங்களில் 469.52-லிருந்து மார்ச் 1990 திங்களில் 516.48 ஆக உயர்ந்துள்ளது. 1988–89 ஆம் ஆண்டில் இக்குறியீட்டெண் 3.47 விழுக்காடு அதிகரித்திருந்தது.

முதன்மைப் பொருட்களுக்கான பகுதிக் குறியீட்டெண் 1989 அக்டோபர் திங்களில் 517.85 அதிகபட்ச அளவினை அடைந்துள்ளது. இக்குறியீட்டெண் 1989 ஏப்ரல் திங்களில் 482.20–லிருந்து 1990 மார்ச் திங்களில் 508.03 ஆகஉயர்ந்து 5.36 விழுக்காடு அதிகரித்துள்ளது.

எரிபொருள் மற்றும் மின்சக்திப் பகுதிக்கான குறியீட்டெண் 7.21 விழுக்காடு அதிகரித்து 1989 ஏப்ரல் திங்களில் 496.94 லிருந்து 1990 மார்ச் திங்களில் 532.24 ஆக உயர்ந்துள்ளது.

உற்பத்திப் பொருட்களுக்கான பகுதி குறியீட்டெண்ணும் நடப்பு ஆண்டில் 16.16 விழுக்காடு உயர்ந்துள்ளது. இக்குறியீட்டெண் 1989 ஏப்ரல் திங்களில் 452.31 லிருந்து 1990 மார்ச் திங்களில் 525.41 ஆக உயர்ந்துள்ளது.

நுகர் பொருள் விலைக் குறியீட்டெண்கள் :

1948 ஆம் ஆண்டு குறைந்த பட்ச ஊதிய சட்டத்தின் பிரிவு 2 (டி)-ல் ஆணையிட்டபடி தொழிலாளர் பிரிவினருக்கான நுகர்பொருள் விலை குறியீட்டெண்கள் தொடர்ந்து கணிக்கப்பட்டு கடலூர் மற்றும் நாகர்கோவில் மையங்களுக்கு புள்ளி இயல் இயக்குநரால் தொகுத்து 1990 மார்ச் வரை வெளியிடப்பட்டுள்ளன. மேலும் மதுரை, கோவை, குன்னூர், திருச்சி, சேலம் மையங்களுக்கான நுகர்பொருள் விலை குறியீட்டெண்கள் சிம்லா தொழிலாளர் செயலக இயக்குநரிடமிருந்து பெறப்பட்டு புள்ளி இயல் இயக்குநரால் வெளியிடப்படுகிறது. இவற்றில் ஏற்கனவே உள்ள பணி ஏற்பாட்டின்படி ஒவ்வொரு மாதமும் சென்னை நகர் நுகர்பொருள் விலை குறியீட்டெண் புள்ளி இயல் இயக்குநரால் தொகுத்து அனுப்பப்படுகிறது. அங்கிருந்து உறுதி செய்யும் பொருட்டு தந்தி கிடைக்கப் பெற்ற பின் குறியீட்டெண் புள்ளி இயல் இயக்குநரால் வெளியிடப்படுகிறது.

1989–90 ஆம் ஆண்டின் தமிழ் நாட்டில் பல்வேறு மையங்களுக்கான நுகர்பொருள் விலை குறியீட்டெண்களின் போக்கு பற்றிய ஆய்வுரை பின்வருமாறு:—

சென்னை நகரம் :

1982–100சென்னை நகர நுகர்பொருள் விலை குறியீட்டெண் 1989 ஏப்ரல் மாதம் நிலவிய 165 புள்ளிகளிலிருந்து படிப்படியாய் உயர்ந்து டிசம்பர் 1989 வரை 175 புள்ளிகளாக இருந்தது. பின் ஜனவரி 1990-ல் 174 புள்ளிகளாகக் குறைந்து மார்ச் மாதத்தில் 177 புள்ளிகளாக உயர்ந்து காணப்பட்டது.

கடலூர் :

1960–100 இம் மைய நுகர்பொருள் விலை குறியீட்டெண் 1989 ஏப்ரல் மாதத்தில் நிலவிய 847 புள்ளிகளிலிருந்து படிப்படியாக உயர்ந்து நவம்பர் திங்களில் 936 புள்ளிகளாகக் காணப்பட்டது. டிசம்பர் 1989-ல் 972 புள்ளிகளிலிருந்து ஜனவரி 1990-ல் 896 புள்ளியை அடைந்தது. பின் பிப்ரவரி மற்றும் மார்ச் மாதத்தில் 920 புள்ளிகளாக உயர்ந்துள்ளது.

திருச்சிராப்பள்ளி :

1982 — 100 இம்மைய நுகர்பொருள் விலை குறியீட்டெண் 1989 ஏப்ரல் மாதத்தில் 175 புள்ளிகளிலிருந்து செப்டம்பர் மாதத்தில் 186 புள்ளியினை அடைந்தது. பின் அக்டோபர் 1989-ல் 184 புள்ளிகளாகக் குறைந்து நவம்பர் 1989-ல் 189 புள்ளிகளாக உயர்ந்து காணப்பட்டது. டிசம்பர் திங்களில் 186 புள்ளிகளாகக் குறைந்து படிப்படியாக உயர்ந்து மார்ச் 1990-ல் 195 புள்ளிகளாகக் காணப்பட்டது.

மதுரை :

1982 — 100 இம் மைய நுகர்பொருள் விலை குறியீட்டெண் 1989 ஏப்ரல் மாதம் நிலவிய 172 புள்ளிகளாகவே ஜூன் 1989 வரை மாற்றம் ஏதுமின்றி நிலவியது. பின் ஜூலையில் 174 புள்ளிகள்ாக உயர்ந்து செப்டம்பர் 1989-ல் 177 புள்ளிகளாக உள்ளது. அக்டோபர் 1989-ல் குறைந்து 176 புள்ளிகளாகக் குறைந்து காணப்பட்டது. பிப்ரவரி 1990-ல் 178 புள்ளிகளிலிருந்து 181 புள்ளிகளாகவே அதிகபட்சமாக உயர்ந்துள்ளது.

கோயம்புத்தூர் :

1982 — 100 இம் மைய நுகர்பொருள் விலைக் குறியீட்டெண் ஏப்ரல் 1989-ல் 164 புள்ளிகளிலிருந்து செப்டம்பர் 1989-ல் 171 புள்ளிகளாக உயர்ந்துள்ளது. பின் 167 புள்ளிகளாகக் குறைந்து ஜனவரி 1990-ல் 166 புள்ளிகளாக குறைந்து காணப்பட்டது. மார்ச் 1990-ல் 171 புள்ளிகளாக உயர்ந்து காணப்படுகிறது.

நாகர்கோவில் :

1960 — 100 இம் மைய நுகர்பொருள் விலை குறியீட்டெண் 1989 ஏப்ரல் திங்களில் 952 புள்ளிகளிலிருந்து சூலை 1989-ல் 987 புள்ளிகளாக உயர்ந்தது. இது 1989 ஆகஸ்ட்டில் 985 புள்ளிகளாகக் குறைந்து செப்டம்பர் திங்களில் 944 புள்ளியினை அடைந்துள்ளது. இது 1989 டிசம்பரில் 955 புள்ளியாக உயர்ந்து பிப்ரவரி 1990-ல் 977 புள்ளிகளாக அதிகபட்சமாக உயர்ந்து காணப்பட்டது. தொடர்ந்து மார்ச் 1990-ல் 975 புள்ளிகளாகக் குறைந்து காணப்பட்டது.

குன்னூர் :

1982 — 100 இம் மைய நுகர் பொருள் விலை குறியீட்டெண் 1989 ஏப்ரல் மாதத்தில் நிலவிய 175 புள்ளிகளிலிருந்து 181 புள்ளிகளாக, 187 புள்ளிகளாக உயர்ந்து காணப்பட்டது. பின் அக்டோபர் மாதத்தில் 185 புள்ளிகளாகவே குறைந்து மார்ச் 1990-ல் 188 ஆக உயர்ந்துள்ளது.

சேலம் :

1982—100 இம்மைய நுகர்பொருள் விலை குறியீட்டெண் 1989 ஏப்ரலில் 163 புள்ளிகளிலிருந்து நவம்பர் வரை 172 புள்ளிகளாக அதிகபட்சமாக காணப்பட்டது. பின் 169 புள்ளியாக டிசம்பர் மாதத்தில் குறைந்து மார்ச் 1990-ல் 171 புள்ளிகளாக உயர்ந்து காணப்பட்டது.

மழைப்புள்ளி விவரம் :

1989–90 ஆம் ஆண்டில் (1989 ஏப்ரல் முதல் 1990 மார்ச் வரை தமிழ்நாட்டில், இயல்பான மழையே (Normal) பெய்துள்ளது. மதுரை, திண்டுக்கல்,–காயிதே மில்லத் காமராசர் ஆகிய மாவட்டங்களில் கூடுதல் மழையும் புதுக்கோட்டை கன்னியாகுமரி, நீலகிரி ஆகிய மாவட்டங்களில்குறைவான மழையும் ஏனைய மாவட்டங்களில் சாதாரண மழையும் பெய்துள்ளது.

தென்மேற்குப் பருவம் :

(ஜூன் 1989 முதல் செப்டம்பர் 1989 முடிய).

தென் மேற்கு பருவத்தில் தமிழ்நாட்டில் சாதாரண மழை (Normal rain fall) பெய்துள்ளது. சென்னை, சேலம், கோயம்புத்தூர், பெரியார், மதுரை, திண்டுக்கல் காயிதே மில்லத், இராமநாதபுரம், காமராசர், பசும்பொன் தேவர் திருமகன், திருநெல்வேலி, வ.உ.சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களில் கூடுதல் மழையும், தென் ஆற்காடு, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் குறைவான மழையும் ஏனைய ஏழு மாவட்டங்களில் சாதாரண மழையும் பெய்துள்ளது.

வடகிழக்குப் பருவம் :

(அக்டோபர் 1989 முதல் டிசம்பர் 1989 வரை)

வடகிழக்குப் பருவத்தில் தமிழ்நாட்டில் குறைவான மழை (Deficient Rain fall) பெய்துள்ளது. சென்னை, செங்கை-அண்ணா, மதுரை, திண்டுக்கல் - காயிதேமில்லத் இராமநாதபுரம், காமராசர், வ.உ.சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களில் சாதாரண மழையும், ஏனைய மாவட்டங்களில் குறைவான மழையும் பெய்துள்ளது.

குளிர்காலப் பருவம் :

(ஜனவரி 1990 முதல் பிப்ரவரி 1990 முடிய)

குளிர்காலப் பருவத்தில் தமிழ்நாட்டில் மிகவும் கூடுதலாக (Excess Rain fall) பெய்துள்ளது. (i.e.—80.0 சதவீதம்) தர்மபுரி, பெரியார், நீலகிரி, ஆகிய மாவட்டங்களில் சாதாரண மழையும், செங்கை-அண்ணா மாவட்டத்தில் குறைவான மழையும், சென்னை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் சொற்ப மழையும் ஏனைய 14 மாவட்டங்களில் கூடுதல் மழையும் பெய்துள்ளது.

பயிர் நிலைமையும், வேளாண்மை உற்பத்தியும் :

பொதுவாக, வேளாண்மை உற்பத்தியைப் பொறுத்தமட்டில் 1989–90ஆம் ஆண்டு பயனுள்ள ஆண்டாகும். அரிசி உற்பத்தி குறிப்பிடத்தக்கதாகும். 1988–89 ஆம் ஆண்டில் நெல் சாகுபடி பரப்பு 18.87 இலட்சம் ஹெக்டேர். இதனை 1989–90ஆம் ஆண்டுடன் பார்க்கும்போது 1.28 இலட்சம் ஹெக்டேர் பரப்பு அதிகரித்துள்ளது. 1989–90ஆம் ஆண்டில் நெல் சாகுபடி பரப்பு 20.15 இலட்சம் ஹெக்டேராகும்.

1989-90ஆம் ஆண்டில் சோளம், கேழ்வரகு பயிர்களின் பரப்பு சிறிதளவு அதிகரித்துள்ளது. ஆனால், கம்புப் பயிரின் பரப்பு இதற்குத் தகுந்தாற்போல் குறைந்து காணப்படுகிறது.

இதைப்போலவே, 1989–90ஆம் ஆண்டில் மொத்தப் பருப்பு வகைகளின் கீழ் சாகுபடி செய்யப்பட்ட பரப்பளவானது 1988–89ஆம் ஆண்டில் பரப்பளவைவிட சிறிதளவு கூடுதலாக உள்ளது. இதரப் பருப்பு வகைகளின் சாகுபடிப் பரப்பளவானது 1988–89, 1989–90ஆம் ஆண்டுகளில் கிட்டத்தட்ட அதிக வேறுபாடில்லாமல் உள்ளது.

பொதுவாக, வேளாண்மை உற்பத்தியைப் பொறுத்தவரை 1989–90ஆம் ஆண்டு சிறந்த ஆண்டாகும். அரிசி உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது. 1988–89 ஆம் ஆண்டில் அரிசி உற்பத்தி 55.90 இலட்சம் டன்கள். 1989–90ஆம் ஆண்டில் அரிசி உற்பத்தி 62.31 இலட்சம் டன்களாகும். இது 1988–89ஆம் ஆண்டைவிட 6.41 இலட்சம் டன்கள் கூடுதல் உற்பத்தியாகும். இது ஒரு சாதனையாகும்.

1989–90ஆம் ஆண்டில் சோளம், கம்பு மற்றும் கேழ்வரகு பயிர்களின் உற்பத்தி போற்றத்தக்க அளவு உயர்ந்துள்ளது. இதைப்போலவே 1989–90ஆம் ஆண்டில் மொத்த பருப்பு வகைகளின் உற்பத்தி 1988–89ஆம் ஆண்டின் உற்பத்தியைவிட குறைவாக உள்ளது. இதர பருப்பு வகைகளின் உற்பத்தி 1988–89 மற்றும் 1989-90 ஆம் ஆண்டுகளில் கிட்டத்தட்ட அதிக வேறுபாடில்லாமல் ஒரே சீராக உள்ளது.

அயல்நாட்டு வாணிபப் புள்ளி விவரங்கள்:

அயல் நாட்டு வாணிப புள்ளி விவரங்கள் சென்னை சுங்கத் துறையினரால் வெளியிடப்படும் அன்றாட நாட்பட்டியல்களிலிருந்து ஏற்றுமதி/இறக்குமதி செய்யப்பட்ட விவரங்கள் அறிக்கை, காலத்தில் சேகரிப்க்கபட்டன. மற்றும் கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி, குளச்சல்,இராமேஸ்வரம் துறைமுக அலுவலர்களிடமிருந்தும் திருச்சி விமான தள அதிகாரிகளிடமிருந்தும் விவரங்கள் சேகரிக்கப்பட்டது.

1987–88ஆம் ஆண்டு தமிழ்நாட்டு துறைமுகங்கள் மூலமாக அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி/இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1988–89ஆம் ஆண்டில் தமிழ் நாட்டிலுள்ள துறைமுகங்கள் மூலமாக அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி/இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஆண்டு 1988—89

(ரூபாய் இலட்சத்தில்.)

வரிசை எண்.	துறைமுகத்தின் பெயர்.	இறக்குமதி.	ஏற்றுமதி.
(1)	(2)	(3)	(4)
1	சென்னை (கடல்)	2,92,832	1,54,351
2	சென்னை (விமானம்)	58,374	52,824
3	தூத்துக்குடி (கடல்)	32,664	8,228
4	நாகப்பட்டினம் (கடல்)	1,216	1,101
5	இராமேஸ்வரம் (கடல்)		48
6	கடலூர் (கடல்)	14	
7	குளச்சல் (கடல்)		366
8	திருச்சிராப்பள்ளி (விமானம்)	..	15
	மொத்தம்	3,85,100	2,16,933

மாநில வருவாய் — தமிழ்நாடு.

1988–89ஆம் ஆண்டில் நடப்பு விலைகளின் மாநில நிகர வருமானம் ரூ. 19,599.97 கோடியாகும். இது 1987–88ஆம் ஆண்டின் வருமானமான ரூ. 18,235.74 கோடியை விட 7.48 சதவீதம் அதிகமாகும். 1987–88ஆம் ஆண்டில் இந்த வளர்ச்சி விகிதம் 19.04 சதவீதம் ஆக இருந்தது.

1987–88ஆம் ஆண்டிற்கு நிலையான விலையில் (1980–81) ரூ. 10,394.99 கோடியாக இருந்த மாநில வருமானம் 1988–89ஆம் ஆண்டில் ரூ. 11,075.24 கோடியாக உயர்ந்துள்ளது. 1988–89ஆம் ஆண்டின் மதிப்பீடு முந்தைய ஆண்டை விட 6.54 சதவீதம் அதிகமாகும். 1987–88ஆம் ஆண்டின் வருமான வளர்ச்சியை ஒப்பிட்டுப் பார்க்கும்போது அது 8.18 சதவீதம் ஆக இருந்துள்ளது.

தனிநபர் வருமானம் :

நடப்பு விலையில் 1987–88ஆம் ஆண்டில் ரூ. 3,386 ஆக இருந்த தனிநபர் வருமானம் 1988–89ஆம் ஆண்டில் ரூ. 3,593 ஆக உயர்ந்துள்ளது. நிலையான (1980–81) விலையில் அது ரூ. 1,930லிருந்து ரூ. 2,030 ஆக உயர்ந்துள்ளது.

மாநிலத் திட்டக் குழு.

1. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வீரைவு தயாரித்தல் :

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவு தயாரிக்க பல வல்லுநர்களைக் கொண்ட 19 பணிக்குழுக்கள் மாநிலத் திட்டக் குழுவில் ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு பணிக் குழுவிற்கும் திட்டக் குழு உறுப்பினர் அல்லது சம்பந்தப்பட்ட துறையின் செயலர் அல்லது சிறந்த வல்லுநரின் தலைமையின்கீழ் அமைக்கப்பட்டது. மேற்கண்ட பணிக் குழுக்களின் உயர் அதிகாரிகள் மட்டுமின்றி, அலுவல் சாராப்பற்ற சிறந்த வல்லுநர்களையும் உள்ளடக்கியதாகும். இப்பணிக்குழுக்கள் தயாரித்த அறிக்கையை மாநிலத் திட்டக் குழுவின் உறுப்பினர்கள் அடங்கிய சாதாரண கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அப்பணிக்குழுக்களின் பரிந்துரைகளும் கொள்கை மாறுதல்களையும் கருத்தில் கொண்டு திட்டக் குழு உறுப்பினர்கள் தத்தம் பகுதி அறிக்கைகளைத் தயாரித்து மாநிலத் திட்டக் குழுத் தலைவர் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவு அறிக்கை விவாதிக்கப்பட்டது.

2. ஆண்டுத் திட்டம் 1990-91 வரைவு தயாரித்தல் :

1990–91 ஆம் ஆண்டுக்கான பகுதி-2 (புதிய) திட்டங்களை அரசு அமைத்த துணைக் குழுவினால் விவாதிக்கப்பட்டது. நிதித்துறை மற்றும் திட்ட வளர்ச்சித் துறையின் துணை கொண்டு 1990–91 ஆம் ஆண்டு திட்ட வரைவு தயாரிக்கப்பட்டு மத்திய திட்ட குழுவிற்கு அனுப்பப்பட்டது. இவ்வாண்டு எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் முதலாவது ஆண்டாக இருப்பதால் சில செலவினங்களை திட்டம் சாரா இனத்திற்கு மாற்றப்பட்டது.

3. மாநிலத் திட்டக் குழு கூட்டங்கள் :

முதலமைச்சர் மற்றும் தலைவர், மாநிலத் திட்டக் குழு அவர்கள் தலைமையில் திருத்தி அமைக்கப்பட்ட மாநிலத் திட்டக் குழுவின் கூட்டங்கள் முறையே 12–07–1989. 12–10–1989 மற்றும் 27–02–1990 ஆகிய நாட்களில் நடைபெற்றது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டங்களை இக்குழுக் கூட்டங்களில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

4. கிராமப்புற பகுதிகளில் அடிப்படை வேலை சம்பந்தப்பட்ட ஆய்வு :

27–02–1990 அன்று நடைபெற்ற மாநிலத் திட்டக் குழுவின் கூட்டத்தில் எடுக்கப் பட்ட முடிவுகளின்படி. கிராமப்புறங்களில் அடிப்படை தேவை வசதிகள் எந்த அளவில் உள்ளன என்பதை அறியும் பொருட்டு ஒரு விரிவான ஆய்வினை மேற்கொள்ளும் பொருட்டு சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுடன் விவாதத்தினை தொடங்க முயற்சிகளை மேற்கொள்ளப்பட்டது.

5. மாநில நில பயன்பாட்டு வாரியம் :

27–02–1990 அன்று நடைபெற்ற கூட்ட முடிவின்படி மாநில நில பயன்பாட்டு வாரியம். திரு. எம். எஸ். சுவாமிநாதன் தலைமையில் திருத்தி அமைக்கப்பட்டது.

6. மாநில மதிப்பீட்டுக் குழு :

கடந்த 11–09–1989 அன்று மாநில மதிப்பீட்டுக் குழு திருத்தி அமைக்கப்பட்டது. இதன் முதல் கூட்டம் 07-03-1990 அன்று கூடி மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை தயாரித்த கீழ்க்கண்ட அறிக்கைகளின் மீது விவசாயத்துறை அமைச்சர் தலைமையில் விவாதிக்கப்பட்டது:—

(1) புன்செய் நில மேம்பாட்டுத் திட்டத்தின் மீதான மதிப்பீட்டு அறிக்கை,

(2) சிறு குறு விவசாயிகள் விவசாய உற்பத்திப் பெருக்க உதவித் திட்டத்தின் மீதான மதிப்பீட்டு அறிக்கை,

(3) விதை உற்பத்தி மீதானதொரு குறிப்பு.

7. திட்டத்திற்கான அடிப்படை விவரங்களைக் கேகரித்தல் :

திரு. ஜி. சிதம்பரம், முழுநேர உறுப்பினர், மாநிலத் திட்டக் குழு அவர்கள் தலைமையில், மேற்கொண்ட பணிகளுக்காக செப்டம்பர், 1989-ல் ஒரு குழு அமைக்கப் பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

8. திட்ட ஆய்வுகள் :

மாநிலத் திட்டக் குழு உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட துறை செயலர்கள் மற்றும் தலைவர்களுடன் திட்ட ஆய்வுகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து காலாண்டு அடிப்படையில் நடைபெற்று வருகிறது.

9. தமிழ்நாட்டில் தோட்டப் பயிர் வளத்தினை முழுமையாகப் பயன்படுத்தும் பொருட்டு தரிசு நிலங்களில் தோட்டப் பயிர்களை வளர்ப்பது குறித்து ஒரு செயற்குழு அமைக்கப்பட்டது.

10. கடலோரப் பகுதிகளில் விவசாயம், கால்நடை, மீன்வளம், மற்றும் வனவளம் ஆகியவைகளை மேம்படுத்த அமைக்கப்பட்ட செயற்குழுவின் கருத்துக்களின் மீது மாநிலத் திட்டக் குழுவில் மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

11. நெடுஞ்சாலை துறையினால் மேற்கொள்ளப்பட்ட சில பணிகளின் மீதான செலவு மற்றும் கால அளவு பற்றிய ஆய்வினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப் பட்டது.

12. அலுவலர்களுக்குப் பயிற்சி:

மாநிலத் திட்டக் குழுவிலிருந்து இரண்டு நுட்ப உதவியாளர்களுக்குக் கணிப்பொறி பயிற்சி அளிக்கப்பட்டது.

அத்தியாயம் 23

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

மதுவிலக்கு ஆயத் துறை.

இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முழு மதுவிலக்கை முதன் முதலில் கொண்டு வந்த மாநிலமாகும். இங்கு, 1937 ஆம் ஆண்டில் தொடங்கி 1947 ஆம் ஆண்டுக்குள் படிப்படியாக முழு அளவில் மதுவிலக்குச் செயலுக்கு வந்தது. 1971 ஆகஸ்டில், இம்மாநிலத்தில் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு வகை மது, சாராயம், கள் முதலியவை விற்பனை செய்ய தியலும் வகையில், மதுவிலக்குச் சட்டங்கள் செயற்படுத்தப்படுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, 1974 செப்டம்பரில் மீண்டும் மதுவிலக்கு கொண்டு வரப்பட்டது. முழு மதுவிலக்குக் கொள்கை 1981 மே திங்களில் மாற்றியமைக்கப்பட்டது. மது அருந்துவதற்காக தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் அனுமதியின் பேரில் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது, சாராயம், கள் ஆகியவற்றை விற்பனை செய்யுமாறு ஆணையிடப்பட்டது. எனினும், சாராயம், கள் விற்பனை 01—01— 1987 முதல் தடைச் செய்யப்பட்டது. இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது மட்டும் அனுமதி வைத்திருப்போருக்கு விற்பனை செய்யப்படுகிறது.

2. மதுவிலக்கு-ஆயத் துறை மாநில அரசின் வருவாய் ஈட்டும் துறைகளில் மிக முக்கியமான ஒன்றாகப் பங்காற்றி வந்துள்ளது. ஆயத்தீர்வை வருமானம் பெரும்பாலும் உரிமக் கட்டணங்கள், ஆயத்தீர்வை, விற்பனைக் கட்டணம், கூடுதல் விற்பனைக் கட்டணம் முதலியவற்றிலிருந்து கிடைக்கிறது. இவை 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம், 1955 ஆம் ஆண்டு மருத்து-ஒப்பனைப் பொருள் சட்டம் ஆகியவற்றின்கீழ் வழங்கப்பட்டு நிர்வகிக்கப்பட்ட பல்வேறு உரிமங்களின்கீழ் பயன்படுத்தப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்ட அல்லது நுகரப்பட்ட ஆல்கஹால், விரியம் குறைக்கப்பட்ட சாராவி, இயல்பு மாற்றப்பட்ட சாராஸி இந்தியாவிலே தயாரிக்கப்பட்ட நாட்டு வகை மது, பீர் முதலியவை குறித்து விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டன.

3. அரசுக்குக் கிடைக்க வேண்டிய வருவாயில் இழப்பு ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு, அரசு ஆய்வு செய்து இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது தயாரிக்கும் பிரிவுகளுக்கு அளிக்கப்பட்ட பல்வேறு சலுகைகளைத் திரும்பப் பெற்றது. அதன்படி, இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு வகை மதுவை உற்பத்தி செய்யும் பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட வீரியம் குறைக்கப்பட்ட சாராவி குறித்து அளிக்கப்பட்ட ஆயத்தீர்வை விற்பனைக் கட்டணம் விலக்கு திரும்பப் பெறப்பட்டது. தயாரிப்பாளர் முனையிலேயே ஆயத்தீர்வை குறித்த விற்பனைவரி, மேல்வரி ஆகிய வற்றை வசூலிக்கும் பொருட்டு, மொத்த விற்பனையாளர் செலுத்தும் ஆயத்தீர்வை, தயாரிப்பாளர் முனைக்கு மாற்றப்பட்டது. ஏனைய மாநிலங்களில் நிலவிய விதங்களைக் கருத்திற்கொண்டு, இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு வகை பீர் குறித்த ஆயத்தீர்வையையும் உள்ளூரில் அருந்துவதற்கான பீர் குறித்த விற்பனைக் கட்டணத்தையும், இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகை, பீர் குறித்து I.L.F. -வும், பீர் முதலியவற்றின் ஏற்றுமதி குறித்து, ஆயத்தீர்வை விற்பனைக் கட்டணத்தையும் அரசு அதிகரித்துள்ளது.

மதுவிலக்குக் கொள்கையும், விதிகளின்கீழ் வழங்கப்பட்ட பல்வேறு உரிமங்களின் செயல்பாடும்.

தமிழ்நாடு மதுவிலக்குக் கொள்கை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட சில காலங்களைத் தவிர, மாநில முழுவதும் மதுவிலக்குக் கொள்கையைச் செயற்படுத்தி உள்ளது. தற்போது மாற்றியமைக்கப்பட்ட மதுவிலக்குக் கொள்கையின்படி, 25 வயதுக்கு மேற்பட்டவர்கள், அவர்கள் பெறும் தனி அனுமதியின்பேரில் மது அருந்தலாம். இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவை அருந்துவதற்கான அனுமதிக் கட்டணம் நபர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 1: ஆகும். அனுமதிக் கட்டணத்தை 07— 03— 1990-லிருந்து அரசு திரும்பப் பெற்றுள்ளது.

இந்தியத் தயாரிப்பான வெளிநாட்டு மதுவை தயாரிப்பதற்கு 5-இல் பிரிவுகளும்; திராட்சை மது (ஒயின்) தயாரிப்பதற்கு இரு பிரிவுகளும் இம்மாநிலத்தில் உள்ளன, இத்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு சாராவி/பீர் ஆகியவற்றை தயார் துறையில் தயாரிக்க உரிமங்கள் வழங்குவதில்லை என்பதே அரசின் கொள்கையாகும், தற்போதுள்ள உற்பத்தி பிரிவுகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்க அனுமதிக்கப்படமாட்டாது, முறைகேடுகளைத் தடுப்பதற்கும் கள்ளத்தனமாக அவற்றைக் கொண்டு செல்வதைத் தடுப்பதற்கும் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது பீர் புட்டிகளில் ஆய்சீட்டுகள் ஒட்டும் முறை செயலிலுள்ளது.

இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகையின் சில்லரை விற்பனை :

கருவூலத்திற்கு அதிக வருவாய் கிடைக்கும் பொருட்டும், சில்லறை உரிமம். வழங்குவதில் அரசு குறிப்பிட்டவர்களுக்குச் சார்பாக நடந்துக் கொண்டது என்று வருகின்ற புகார்களைத் தவிர்ப்பதற்கும் அனைவருக்கும் வாய்ப்பு அளிக்கும் பொருட்டும் மதுக்கடைகள் நடத்துவதற்காக எப், எல், 1 உரிமங்கள் வழங்கும் முறை 31–5–1989 அன்றிலிருந்து நிறுத்தப்பட்டது, அரசு நிறுவனங்களுக்கும் கூட்டுறவு களுக்கும் பொது ஏலம் ஒப்பந்தம்— நியமன அடிப்படையிலான புதுமுறை 1–6–1989 —லிருந்து கொண்டுவரப்பட்டது, புதுமுறை கொண்டு வரப்படும் முன்னர் இம்மாநிலத்தில் 2,037 மதுக்கடைகளுக்கு எப், எல், 1 உரிமம் அளிக்கப்பட்டிருந்தது, ஒவ்வொரு ஆண்டும் முன்னாள் உரிமதாரரிடமிருந்து ரூ. 4,20 கோடி வருவிக்கப் பட்டது, புதுமுறையின் கீழ் மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த 3,369 கடைகளில் 3,369 உரிமங்கள் வழங்கப்பட்டன, அதாவது. பொது மக்களுக்கு 2.428 உரிமங்களும், தமிழ்நாடு அரசு விற்பனைக் கழகத்திற்கு 150 உரிமங்களும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு 334 உரிமங்களும், கூட்டுறவுகளுக்கு 457 உரிமங்களும் வழங்கப்பட்டன. விண்ணப்பக் கட்டணம், உரிமக் கட்டணம், உரிமமக் கட்டணம் ஆகியவை மூலமாக 1989–90–ஆம் ஆண்டுக்கு ரூ. 35·58 கோடி வசூலிக்கப்பட்டது,

வருவாய் உயர்ந்து நிற்றல் :

1990 மார்ச் முடிய உள்ள ஆண்டுக்கு வருவாய் ரூ. 301,71 கோடியாகும். ஆயத் துறை வரலாற்றில் இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும்,

கருப்பஞ் சாற்றுக் கசண்டு :

சர்க்கரை தயாரிப்பில் கருப்பஞ்சாற்றுக் கசண்டு துணைப் பொருளாகும், இது வீரியம் குறைக்கப்பட்ட சாராவி தயாரிப்பதற்கான அடிப்படை மூலப் பொருளாகும். இச் சாராவி மது, மருந்துப் பொருள், இரசாயனப் பொருள் ஆகியவை தயாரிப்பதற்கான அடிப்படை மூலப் பொருளாகும், இம்மாநிலத்தில் 27 சர்க்கரை ஆலைகள் உள்ளன, 1989–90–ஆம் ஆண்டுக்கு எடுத்துச் சென்ற தொடக்க இருப்பு 0.88 இலட்சம் மெட்ரிக் டன்னாகும், எதிர்பார்க்கப்பட்ட கருப்பஞ்சாற்றுக் கசண்டு உற்பத்தி சர்க்கரை ஆணையாளர் மதிப்பிட்டவாறு 4,57 இலட்சம் மெட்ரிக் டன் னாகும், எனவே. மொத்தம் 5,45 இலட்சம் மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு கிடைக்கும். மலிவு விலை மதுவைக் கொண்டுவரச் கருதிய பின்னர் கிடைக்கும் கரும்புச்சாற்றுக் கசண்டு குடிக்கும் நோக்கத்திற்காக வீரியம் குறைக்கப்பட்ட சாராவி தயாரிப்பதற்காக கலிசமான அளவு அனுப்பப்பட வேண்டியுள்ளது, சர்க்கரை ஆலைகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட கருப்பஞ்சாற்றுக் கசண்டு உற்பத்தியைத் தற்போதுள்ள இரசாயனத் தொழிற்சாலைகளுக்கும் இனிமேல் அமைக்கப்பட விருக்கும் பிரிவுகளுக்கும் வீரியம் குறைக்கப்பட்ட சாராவியை நியாயமாக வழங்க மாநிலத்தால் இயலும்,

ஏனைய உரிமங்கள் :

இயல்பு மாற்றப்பட்ட சாராவியை அடிப்படைப் பொருளாகப் பயன்படுத்தி வார்னிஷ். பிரஞ்சு பாலிஷ். பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்றவற்றைத் தயாரிக்க வும், அதற்காக பயன்படுத்தவும். டி, எல், வரிசை உரிமங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன, மருந்து, அழகு சாதனப் பொருட்கள் தயாரிக்கவும், வீரியம் நீக்கப் பட்ட சாராவியைப் பயன்படுத்தி ஏனையப் பொருட்கள் தயாரிக்கவும் உரிமங்கள் வழங்கப்படுகின்றன,

மதுபானங்களுக்கு விலை நிர்ணயம் செய்தல் :

இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது பானங்களுக்கும் பீருக்கும் உள் (மது விலக்கு ஆயத்) துறையில் 14–2–1989–ஆம் நாளிட்ட 217–ஆம் எண் அரசாணைக்கிணங்க விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன, இவ்வாறு உற்பத்தி யாளர்களும் சில்லறை விற்பனையாளர்களும் கட்டுப்படுத்தப்படுவதுடன் சில்லறை விற்பனையாளர்களிடையே வணிகப் போட்டியும் தவிர்க்கப்படுகிறது,

நிருவாக அமைப்பு :

மதுவிலக்கு— ஆயத்துறை தலைவர் என்ற முறையில். மதுவிலக்கு— ஆயத்துறை ஆணையருக்குத் தமிழ்நாடு 1937–ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் கீழும் அதன்கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள விதிகள். அறிவிக்கைகளின்படியும் பல்வேறு அதிகாரங் கள் வழங்கப்பட்டுள்ளன.

மதுவிலக்கு—ஆயத்துறை ஆணையருக்கு அவருடைய நிருவாகப் பணிகளில் மாநிலம் முழுவதும் அதிகார வரம்பினைக் கொண்ட இரு இணை ஆணையர்களும் ஒரு நிதி கட்டுப்பாட்டு அதிகாரியும் உதவி செய்கின்றனர். அவர்கள் வடிசாலைகள் ஆயத் தீர்வை விதிப்புக்கு உட்பட்ட மது தயாரிப்பு தொழிற்சாலைகள் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளி நாட்டு சாராவி. பீர் உற்பத்தித் தொழிற்சாலைகள் ஆகிய ஹாலை அடிப்படையாகக் கொண்டு பெரியளவில் இயங்கும் தயாரிப்புத் தொழிற் சாலைகள். டாஸ்மாக் நிறுவனத்தின் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளி நாட்டு சாராவி மொத்த விற்பனைக் கிடங்குகள் முழுவதையும் பார்வையிடுகின்றனர். தலைமை அலுவலகத்தில் மதுவிலக்கு—ஆயத்துறை ஆணையருக்கு அவருடைய கடமைகளை நிறைவேற்றுவதில். 4 உதவி ஆணையர்கள். ஒரு உதவி கணக்கு அதிகாரி. கணக்கு தணிக்கைப் பிரிவுஉட்பட 12 பிரிவுகள் உதவி புரிகின்றன.

மாவட்ட அளவில் மதுவிலக்கு ஆயத் தீர்வைத்துறை நிருவாகம் மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாட்டின் கீழ் நடைபெறுகிறது, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு உதவி ஆணையரும் (மதுவிலக்கு) ஏனைய துணைப் பணியாளர்களும் மாவட்ட ஆட்சியருக்கு உதவியாக செயல்படுகின்றனர், சென்னை மாவட்டத்தில் வட்டாட்சியர் பதவித்தரத்தில் ஒவ்வொரு வட்டாட்சிப் பகுதியிலும் ஆயத் தீர்வைத் வட்ட அதிகாரி ஒருவரும். உதவியாளர் பதவித்தரத்தில் ஒரு வருவாய் ஆய்வாளரும் துணைப் பணியாளர்களுடன் செயல்பட்டு வருகின்றனர், ஏனைய மாவட்டங்களில், வட்டாட்சியர் பதவித்தரத்தில் கோட்ட ஆயத் தீர்வை அதிகாரிகளும் துணைப் பணியாளர்களும், ஒவ்வொரு வட்டாட்சிப் பகுதியில் ஒரு வருவாய் ஆய்வாளரும் மதுவிலக்கு—ஆயத் தீர்வைத் துறையின் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மதுவிலக்கைச் செயல்படுத்தும் பிரிவின் பணிகள் :

தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தில் பல்வேறு விதித் துறைகள் அதன் கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகள் ஆகியவற்றைக் செயல்படுத்த காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரலின் தலைமையின் கீழ் மாநிலத்தில் ஒரு மதுவிலக்கு செயல்படுத்தும் பிரிவு செயல்பட்டு வருகின்றது, பரங்கிமலை. சேலம். தஞ்சாவூர். மதுரை. திருநெல்வேலி ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு காவல் துறை உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஐந்து மண்டல காவல் துறை கண்காணிப்பாளர்கள் இவர்களின் கீழ் செயல்படும் காவல்துறை அதிகாரிகள் ஆகியோர் அவருக்கு உதவியாகச் செயல்படுகின்றனர்,

1—7—1988-ம் நாளிலிருந்து மதுவிலக்கைச் செயல் படுத்தும் பொறுப்பு உள்ளூர் காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது, மதுவிலக்கைச் செயல் படுத்தும் பொறுப்பை காவல் துறையினரிடம் ஒப்படைக்குமாறும். மதுவிலக்கைச் செயல்படுத்தும் பிரிவின் பணியாளர்களை உடனடியாகக் காவல் துறையுடன் இணைக்குமாறும் 6—4—1990-ஆம் நாளன்று அரசு ஆணை பிறப்பித்தது.

" டாஸ்மாக் " (TASMAC) :

இது தமிழ்நாடு அரசுக்கு முழுவதும் சொந்தமான ஒரு அரசு நிறுவனமாகும் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளி நாட்டு சாராவி, பீர். விற்பனைக்கு இதுவே மாறில அளவிலான ஒரே மொத்த விற்பனை முகவராகும், இது ஒரு பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும், ஒவ்வொன்றும் 1.000 ரூபாய்க் கொண்ட 50 ஆயிரம் சரி ஒதே பங்குகளைக் கொண்ட ஐந்து கோடி ரூபாய் அனுமதித்த மூல தனத்துடன் இந் நிறுவனம் செயல்பட்டு வருகின்றது, இக் கழகம் 1956-ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 22—5—1983 நாளன்று தமிழ்நாடு அரசுக்கு முழு வதும் சொந்தமான ஒரு கம்பெனியாக நிறுவப்பட்டது.

இந்த அலுவலகத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் உள்ளது, இது இந்தியாவில் தயாராகும் வெளிநாட்டு சாராவி, பீர் கொள்முதல். விநியோக நடவடிக்கைகளைக் கண்காணித்து வருகிறது, தலைமை அலுவலகத்தில் இக்கழகத் தலைவரின் தலைமையின் கீழ் அவருக்கு உதவியாக நிருவாக இயக்குநர், பொது மேலாளர் பணிமூப்பு மேலாளர் (வணிகம்) போன்றோரும். மாவட்ட அளவில் மண்டல நிருவாகிகளும் செயல்பட்டு வருகின்றனர்,

தமிழ்நாடு சாரவிக் கழகம் (TamiNladu Spirit Corporation):

1989 ஆம் ஆண்டு தொடக்கத்தில் தமிழ்நாடு அரசு மாநிலத்தில் மதுவிலக்குக் கொள்கை செயல்படுவதை மறுஆய்வு செய்து. ஏனையவற்றிற்கிடையே தனியார்துறையில் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு சாராவி, பீர் உற்பத்திற்கானை கூடுதலாக்க அனுமதி வழங்குவதில்லையென்று தீர்மானித்தது. தமிழ்நாடு சாராவிக்கழகம் என்ற தனிப்பட்ட பொதுத்துறை நிறுவனம் ஒன்றை ஏற்படுத்துவதென்றும் அதனை 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் உருவாக்குவதென்றும் அரசு தீர்மானித்தது,

அரசு ஒப்புதல் வழங்கியவாறு மது தயாரிப்பு தொழிற்சாலை ஒன்றை தமிழ் நாடு சாராவிக் கழகம் தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டதுடன் ஒப்பந்தத்தை யும் விற்பனைப் பத்திரத்தையும் இறுதி செய்தது, இந்த மது தயாரிப்புத் தொழிற் சாலை 1—7—1989 ஆம் நாளன்று இக்கழகத்தின் பொறுப்பில் எடுத்துக்கொள்ள

பட்டது, இதன் மதிப்பு ரூ. 7.82 கோடியாகும், இதில் சாராவி காய்ச்சும் ஆலைக்கும் சொந்தமான பிணையமுள்ள. பிணையமற்ற கடன்' பொறுப்புகளும் அடங்கும். தொடர்புனவாயுள்ள முடிக்கப்பட்டு முடிக்கப்படாத ஒப்பந்தங்கள் அனைத்தும் இதனிடம் மாற்றப்பட்டுள்ளன. தமிழ்நாடு சாராவிக் கழகம் 10—11—1989-ல் சாராவிக் காய்ச்சும் பணியைத் தொடங்கியது. 32—12—1989-ம் நாளன்று புட்டிகளில் அடைக்கப்பட்டது. உற்பத்தி விற்பனை விவரங்கள் வருமாறு :—

காலம்,	உற்பத்தி — கேஸ்கள் அல்லது சிப்பங்கள் எண்ணிக்கை		விற்பனை — கேஸ்கள் அல்லது சிப்பங்கள் எண்ணிக்கை		மதிப்பு (ரூபாய் லட்சத்தில்).
	லண்டன், பிஸ்ட்னர்,	லண்டன் பிரிமியம்,	லண்டன் பிஸ்ட்னர்,	லண்டன் பிரிமியம்,	
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1989 டிசம்பர்	7.179		5,600	...	5,10
1990 ஜனவரி	56,477	5,285	57,750	5,250	57,69
1990 பிப்ரவரி	96.543	5,199	54.900	5,200	91,47
1990 மார்ச்	61.859	10,177	61,095	10,180	65,52

ஆயத்தீர்வைச் சீட்டுக்கள் அச்சிடுதல். இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளி நாட்டு சாராவிபீர் ஆகியவற்றை உற்பத்திச்செய்யும் தயாரிப்புப் பிரிவுகள் தயாரித்து மற்றும் தமிழ்நாடு மாநில வாணிப்க்கழகம் ஏனைய மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்த மதுப்புட்டிகளில் ஒட்டப்படவேண்டிய ஆயத்தீர்வைச் சீட்டுகளை அச்சிட்டு வழங்குவதற்காக தனி ஆணையாளர். மதுவிலக்கு-ஆயத்துறை ஆணையாளர் இக்கழகத்திற்கு அதிகாரமளித்துள்ளார். ஆயத்தீர்வை செலுத்தாமல் வரி ஏய்ப்பு செய்வதையும் உரிமம் பெற்ற மதுக்கடைகளில் போலியான மதுவகைகள்ளச்சாராயம் முதலியவற்றை விற்பனை செய்வதையும் தடுக்கும்பொருட்டே இவ்வாறு ஆயத்தீர்வை சீட்டுகள் அவற்றின் மீது ஒட்டப்படுகின்றன. இத்தகைய சீட்டுகள் அச்சிடும் பணி அதனை முன்னர் செய்து வந்து தமிழ்நாடு மாநில வாணிபக்கழகத்திடமிருந்து 11—11—1989 முதல் மதுவிலக்கு-ஆயத்துறைக்கு மாற்றப்பட்டுள்ளது. ஆயத்தீர்வைச் சீட்டுக்கள் அச்சிடுவதற்கான இரண்டு எந்திரங்கள் ஏழிலகம் வளாகத்தினும் நிறுவப்பட்டுள்ளன. அண்மையில் கர்நாடக அரசு இத்தகைய ஆயத்தீர்வைச் சீட்டுகள் முறையைக் கொண்டு வந்துள்ளது. கர்நாடக அரசு. சீட்டுகள் அச்சிடும் எந்திரங்களை வாங்கி அவற்றை நிறுவும் வரையில் தொடர்க்க நிலையில் கர்நாடக அரசிற்கு உதவி செய்யும் வகையில் நான்கு திங்களுக்கு, திங்கள் ஒன்றுக்கு 1 கோடி சீட்டுகள் அச்சிட்டு, வழங்குவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது.

1989—90 ஆம் ஆண்டிற்கு ''0039— மாநில ஆயத்தீர்வை'' என்பதன் கீழ் வருவாய் வரவுகள் (01—04—1989-லிருந்து 31—03—1990 வரையில்),

		வரவினம், ரூபாய்
101	நாட்டுச் சாராவி	2,19,39,071
102	நொதித்த நாட்டு மது	1,67,02,276
103	மரத்தேறல் (Malt Liquor) ...	12,15,13,260
105	அயல்நாட்டு மதுவகைகளும். சாராவியும்	2,52,92,95,938
106	வணிகப் பயனுக்குரிய மற்றும் இயல்பு நீக்கப்பட்ட சாராவியும் மருந்து கலந்த மதுவும்	25,32,38,713
107	ஆல்கஹால், அபின் முதலியன அடங்கிய மருத்துவ ஒப்பனைத் தயாரிப்புகள்	2,54,68,375
108	கஞ்சா. அபின் ஏனைய மருந்துப் மொருள்கள்	3,44,676
150	அபராதம். பறிமுதல் வகையில் ...	1,70,13,764
501	பணிகள்-பணிக்கட்டணங்கள்	47,54,674
800	ஏனைய வரவுகள்	2,57,74,390
	மொத்தம்	3,01,60,45,137

அத்தியாயம் 24.

பொதுத்துறை.

கர்நாடக உதவித் தொகை.

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பதவிவழி கர்நாடக மாளியம் வழங்கும் அலுவலர் ஆவார். மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்கள் பதவிவழி உதவி ம்பள அலுவலராவார். இவ்வலுவலகத்தில் பின்வரும் அலுவலர்கள் பணிபுரிகின்றனர் :—

1. மேலாளர் (உதவியர் நிலையில்)		1
2. பதிவுரு எழுத்தர்	..	1
3. அலுவலக உதவியர்	...	1

மேற்கண்ட பணியாட்கள் சென்னை வட்டாட்சியர் அலுவலகம் பணிப் பட்டியலிலிருந்து இவ்வலுவலகத்திற்கு பணிக்காக அனுப்பப்படுகின்றனர். சம்பள அலுவலர் அரசு தலைமைச் செயலாளர். அவர்களின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள ஒரு ''துணைத் தலைவர்'' ஆவார். இவ்வலுவலக கணக்கும் இரண்டு ஆண்டுகளுக் கொருமுறை மாநில முதன்மைக் கணக்காயர் அவர்களால் தணிக்கை செய்யப்படுகிறது.

2. 1855ஆம் ஆண்டு முதல் இன்றுவரை கர்நாடக மாளியத் தொகை எவ்வித உயர்வோ மாற்றமோ இன்றி முதல் ஆற்காடு இளவரசரின் குடும்பத்தாருக்கும் சந்ததியினருக்கும் மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகின்றது.

3. கர்நாடக மானியத்தில் இரண்டு வகைகள் உள்ளன. அவையாவன :—

(அ) நிரந்தர மானியம். (ஆ) நிரந்தரமற்ற மானியம்.

(ஆ) நிரந்தர மானியம், பெற்று வந்தவர் இறந்த பின்பு அன்னாரது வாரிசுதாரர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

(இ) நிரந்தரமற்ற மானியம், அரசால் அறிவிக்கை செய்யப்படும் நபர்களுக்கு வாழ்வு காலம் வரை மட்டுமே வழங்கப்படுகின்றது.

4. 31—3—1990 அன்றைய தேதியில் நிரந்தர மானியம் பெறுவோரின் மொத்த எண்ணிக்கை 109 ஆகும். வழங்கப்பட்ட நிரந்தர மானியத் தொகை ரூ. 1,46,632.49 ஆகும்.

5. 31—3—1990 நிரந்தரமற்ற மானியத் தொகையினைப் பெறுவோரின் மொத்த எண்ணிக்கை 5 ஆகும். 1—4—1989 முதல் 31—3—1990 வரை வழங்கப்பட்ட மானியத் தொகை ரூ. 1,080.00 ஆகும்.

6. நிரந்தர மற்றும் நிரந்தரமற்ற மானியத் தொகையைப் பெறும் ஆடவர்கள் குறித்த நேரடி ஆய்வு (மஸ்டர்) ஆண்டுக்கு இருமுறை (சனவரித் திங்கள் இரண்டாம் நாள் மற்றும் ஜூலைத் திங்கள் முதல் நாள்) உதவி சம்பள அலுவலரால் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே நிரந்தர மானியத் தொகைப் பெறும் ''பெண்டிர்'' குறித்த நேராய்வு ஆண்டிற்கொருமுறையும் மேற்கொள்ளப்படுகின்றது.

7. ஆற்காடு இளவரசர் மாதந்தோறும் பட்டப்படியாக ரூ. 6,096-ம் கல்லறைகள் படியாக ரூ. 444.08-ம் பெறுகின்றார். திரு. ஜி. எம். அப்துல்காதர் என்பவர் தற்போதைய ஆற்காடு இளவரசராக ஏற்புடைந்து அரசாணை என் பல்வகை 2415, பொதுத் (அரசியல்)துறை, நாள்: 22—10—1969-ன்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

8. சம்பள அலுவலர் அலுவலகத்தில் பணி அமைப்புச் செலவு தமிழ்நாடு அரசால் முகமைப்பணிக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்னர் நடுவண் அரசால் செலவு ஈடு செய்யப்படுகின்றது.

9. ஒவ்வொரு நிதியாண்டுதோறும் நடுவண் அரசால் ஒதுக்கப்படும் நிரந்தர ஆண்டு ஈவு ரூ. 1,50,000-லிருந்து இந்த கர்நாடக மான்யம் வழங்கப்பட்டு வருகின்றது.

பொதுத் தேர்தல் துறை.

மக்கள் தொகை மற்றும் தேர்தல்கள்.

1. வாக்காளர் பட்டியல் திருத்தம்:

வாக்குரிமை வயதை 21-லிருந்து 18 ஆகக் குறைக்கும் அரசியல் சட்டத்திருத்த மசோதா சட்டமாக நிறைவேற்றுவதை எதிர்பார்த்து, வாக்காளர் பட்டியலில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களின் பெயர்களையும் சேர்க்கும் நோக்குடன் 1—4—1989 நாளை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு சிறப்புத் திருத்தப்பணி மேற்கொள்ள தேர்தல் ஆணைக்குழு பணித்தது.

2. சிறப்புத் திருத்தப்பணி கீழ்வரும் கால அட்டவணையின்படி மேற்கொள்ளப் பட்டது :—

(1) வீடுதோறும் சென்று வாக்காளர் கணக்கெடுப்பு.	10–2–1989 வெள்ளி முதல் 25–3–1989 சனி வரை.
(2) துணைப்பட்டியல் தயாரித்தல் மற்றும் அச்சடித்தல்.	26–3–1989 ஞாயிறு முதல் 26–4–1989 புதன்வரை.
(3) வரைவுப்பட்டியல்கள் வெளியீடு	27–4–1989 வியாழன்.
(4) பெயர்களைச் சேர்க்கவும் நீக்கவும் குறிப்பிடப்பட்ட காலம்.	27–4–1989 வியாழன் முதல் 15–5–1989 திங்கள் வரை.
(5) பெயர்களை சேர்க்கவும், நீக்கவும் முடிவெடுக்கப்பட்ட காலம் மற்றும் துணைப் பட்டியல் தயாரித்தல்/அச்சடித்தல்.	16–5–1989 செவ்வாய் முதல் 14–6–1989 புதன் வரை.
(6) பட்டியல்கள் இறுதி வெளியீடு	15–6–1989 வியாழன்.

2. இந்த சிறப்புத் திருத்தத்திற்குப்பின், அதாவது 15—6—1989 அன்று தமிழ் நாட்டிலுள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 4,00,25,559. இதில் ஆண்கள் 2,02,90,646. பெண்கள் 1,97,34,913. இந்த சிறப்புத் திருத்தத்தின் காரணமாக வாக்காளர் பட்டியலின் எண்ணிக்கையில் 45,62,992 பேர் அதிகரித்தனர். இதில் 18 முதல் 21 வயதுடையோரின் எண்ணிக்கை 34,74,834 ஆகும். இதில் ஆண்கள் 17,45,233, பெண்கள் 17,29,151 ஆகும், இது 1988 ஆம் ஆண்டின் வாக்காளர் எண்ணிக்கையைவிட 12.86 விழுக்காடு அதிகமாகும். இந்த வாக்காளர் துணைப் பட்டியல்கள் 1989 ஆம் ஆண்டு மக்களவை தொகுதிகளுக்கு நடந்த பொதுத் தேர்தல் போது பயன்படுத்தப்பட்டன. 18 முதல் 21 வயது வரம்பிற்குட்பட்ட 54,74,383 இளம் வாக்காளர்கள் இத்தேர்தலில் முதன்முறையாக வாக்களிக்கும் உரிமை பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இது இந்திய அரசியலமைப்பு 61 வது திருத்தச் சட்டத்தின் மூலம் ஏற்பட்டதாகும்.

பழனி மக்களவை தொகுதிக்கு மறு தேர்தல் நடக்கும்முன் அத்தொகுதியில் அடங்கிய கீழ்கானும் சட்டமன்றத் தொகுதிகளில் 1–1–1990-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் மேற்கொள்ள இந்திய தேர்தல் ஆணைக்குழு பணித்தது.

113. வெள்ளக்கோயில்
117. காங்கேயம்
129. பழனி (தனி)
130. ஒட்டன்சத்திரம்
147. நத்தம்
150. வேடசந்தூர்

இந்தச் சிறப்புத் திருத்தப்பணி கீழ்வரும் கால அட்டவணைப்படி நடந்தேறியது:—

(1) வரைவுப்பட்டியல்களை வெளியிடுதல்	29–12–1989 வெள்ளிக்கிழமை.
(2) பெயர்களைச் சேர்க்கவும் நீக்கவும் குறிப்பிடப்பட்ட காலம்.	8–1–1990 திங்கட்கிழமை.
(3) பட்டியல்கள் இறுதி வெளியீடு	18–1–1990 வியாழக்கிழமை.

18—1—1990 அன்று 22. பழனி மக்களவைத் தொகுதியில் அடங்கிய மேற் காணும் ஆறு சட்டமன்றத் தொகுதிகளின் வாக்காளர் எண்ணிக்கை 10,33,981. இதில் ஆண்கள் 5,20,070. பெண்கள் 5,23,911.

4. 16–5–1989 அன்று இத்தொகுதிகளின் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 10,32,200 நபர்கள் ஆகும். இச்சிறப்புத் திருத்தம் நடைபெற்றபின் வாக்காளர் பட்டியலின் எண்ணிக்கையில், 1,781 நபர்கள் அதிகரித்தனர், இது 16–5–1989 அன்று உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையில் 0.17 விழுக்காடு அதிகமாகும். இந்த 1990-ஆம் ஆண்டின் இறுதித் திருத்த வாக்காளர் பட்டியல் பிப்ரவரி 1990-ல் நடந்த பழனி மக்களவைத் தொகுதி மறுதேர்தலின்போது பயன்

படுத்தப்பட்டது. கருக்கமுறையில் வாக்காளர் பட்டியல் திருத்தும் பணிக்கு மாநிலத்தி அள்ள வருவாய் கோட்டாட்சியர் வட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங் களுக்கு சிறப்பு பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

2. மக்கட் தொகை கணக்கெடுப்பு, 1991.

மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி இந்தியா முழுவதும் தழுவியதாகும். தமிழ்நாட்டிற்கென தனியாக ஒரு மக்கட் தொகை கணக்கெடுப்பு இயக்குநர் உள்ளார். இவர் இந்திய அரசின் அலுவலராவார். மக்கட்தொகை கணக்கெடுப்புப் பணியைச் சீராக நடைபெறுவதற்கு தேர்தல் துறை மத்திய அரசின் மாறில பிரதிநிதியாக உள்ள மக்கட் தொகைக் கணக்கெடுப்பு நீரகத்திற்கும். மாவட்ட அலுவலகங்களுக்கு மிடையே ஒரு ஒருங்கிணைப்பு துறையாக செயல்படுகிறது, 1991 ஆம் ஆண்டு பிப்ரவரி-மார்ச் மாதங்களில் நடைபெறவிருக்கும் கணக்கெடுப்பு பணிக்கு முன்னோடியாக பல்வேறு ஏற்பாடுகளைச் செம்மையாக செய்ய முடிப்பதற்கு தகுந்த அறிவுரைகள் இவ்வரசால் வெளியிடப்பட்டன. கணக்கெடுப்புப் பணியைச் சிறப்பாக நடத்தி முடிக்கும் நோக்கத்தில தமிழ்நாட்டில் உள்ள வருவாய் அமைப்புகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் 31-5-1991 வரை எவ்வித மாறுதல்களும் செய்யக்கூடாதென தடை இத்துறையின் 30-6-1989 ஆம் நாளிட்ட நிலை ஆணை எண் 1096- பிறப்பிக்கப் பட்டது. முதலாவது மற்றும் இரண்டாவது முன்னோடி சோதனைக் கணக்கெடுப்புகள் நட்த்தப்பட்டன, வீட்டுப்பட்டியல் மற்றும் நிறுவனப் பட்டியல் சம்பந்தப்பட்ட வினாப்பட்டியல் தொகுப்பு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டன. கணக்கெடுப்புப் பணியின் வேகம் இக்கால கட்டத்தின்போது அதிகரித்தது.

3. தேர்தல் நடத்துதல் :

மக்களவைக்கான பொதுத் தேர்தல், 1989 :

9-வது மக்களவைக்கான பொதுத் தேர்தலை நடத்துவதற்கு 1989 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட தேர்தல் நிகழ்ச்சி நிரலை இந்தியத் தேர்தல் ஆணையம் நிர்ணயித்தது :—

(1) வேட்புமனுக்களை பெற்றுக்கொள்ள ஆரம்ப நாள் —	23-10-1989
(2) வேட்புமனுக்களை பெற்றுக்கொள்ள இறுதி நாள்	30-10-1989
(3) வேட்புமனுக்கள் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளும் நாள்	31-10-1989
(4) வேட்பு மனுக்களை விலக்கிக் கொள்ள இறுதி நாள் ...	2-11-1989
(5) தேர்தல் நாள்	24-11-1989
(6) தேர்தல் முடிவுபெறும் நாள் ...	4-12-1989

வாக்குப்பதிவு நேரம் காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை, மக்களவைக்கான பொதுத் தேர்தலை நடத்தக்கோரும் குடியரசுத் தலைவரின் அறிவிக்கை மற்றும் தேர்தல் நிகழ்ச்சிநிரல், வாக்குப்பதிவு நேரம் ஆகியவை அடங்கிய இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிக்கை ஆகியவை தமிழ்நாடு அரசிதழில் 23-10-1989 அன்று மறு வெளியிடு செய்யப்பட்டது.

மொத்தம் 731 பேர் வேட்புமனுக்கள் தாக்கல் செய்தனர். இவர்களில் 21 பேர் களின் வேட்பு மனுக்கள் பரிசிலனை நாளன்று நிராகரிக்கப்பட்டது. போட்டியி லிருந்து 242 பேர் விலகிக்கொண்டனர். 2-11-1989 அன்று வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட்டனர், பழனி நாடாளுமன்ற தொகுதியின் சுயேட்சை வேட் பாளர் ஒருவர் 19-11-1989 அன்று மரணமடைந்ததால். இத்தொகுதியில் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. பழனி நாடாளுமன்றத் தொகுதியில் 13 வேட்பாளர் நீங்கலாக. மீத்முள்ள 38 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் மொத்தம் 455 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

தமிழ்நாட்டில் 24-11-1989 அன்று அனைத்துத் தொகுதிகளிலும் ஒரே நாளில் வாக்கு பதிவு நடைபெற்றது. தர்மபுரி நாடாளுமன்றத் தொகுதியில் அடங்கிய மொரப்பூர் சட்டமன்றத் தொகுதியில் ஏற்பட்ட சிறு அசம்பாவிதம் நீங்கலாக தமிழ் நாட்டில் வாக்குப் பதிவு அமைதியாக நடைபெற்றது.

தமிழ்நாட்டில் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 4,00,24,830 ஆகும். இதில் 2,67,63,345 வாக்காளர்கள் வாக்களித்தனர், 26-11-1989 அன்று முற்பகல் 11 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கப்பட்டு 27-11-1989 அன்று பிற்பகல் 1 மணியளவில் அனைத்துத் தொகுதிகளின் தேர்தல் முடிவுகளும் வெளியிடப்பட்டன. தேர்தல் நடைபெற்ற 38 தொகுதிகளில். இந்திய காங்கிரஸ் 26 தொகுதிகளிலும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 11 தொகுதிகளிலும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒரு தொகுதியிலும் வெற்றிபெற்றது.

11. பெரணமல்லூர் சட்டமன்ற பேரவைக்கான இடைத்தேர்தல்:

பெரணமல்லூர் சட்டமன்றப் பேரவைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டமன்ற பேரவை உறுப்பினரான திரு. ஆர். எட்டியப்பன் அவர்கள் 12–10–1989 அன்று மரணமடைந்ததால் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் காலியிடம் ஒன்று ஏற்பட்டது. இத்தொகுதிக்கும் மக்களவைத் தேர்தலுடன் இடைத் தேர்தல் நடத்த இந்திய தேர்தல் ஆணையம் முடிவு செய்தது. மக்களவைக்கான பொதுத் தேர்தலின் நிகழ்ச்சி நிரலை இத்தொகுயின் இடைத்தேர்தலுக்கும் பின்பற்றப் பட்டது. தேர்தல் நிகழ்ச்சி நிரல் மற்றும் வாக்குப்பதிவு நேரம் ஆகியவை அடங்கிய இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிக்கைகள் தமிழ்நாடு அரசிதழில் 23–10–1989 அன்று வெளியிடப்பட்டது. இத்தொகுதியில் 13 பேர் வேட்புமனுக்கள் தாக்கல் செய்தனர், பரிசீலனையில் அனைத்து நபர்களின் வேட்புமனுக்களும் ஏற்றுக்கொள்ளப் பட்டது. போட்டியிலிருந்து 7 பேர் விலகிக்கொண்ட பின்னர் 6 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட்டனர், இத்தொகுதியில் மக்களவைக்கும். சட்டசபைக்கும் சேர்ந்தே 24–11–1989 அன்று வாக்கெடுப்பு நடைபெற்றது. 26–11–1989 அன்று வாக்குகள் எண்ணப்பட்டு வாக்கு எண்ணிக்கையின் முடிவு அன்றே அறிவிக்கப் பட்டது, அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வேட்பாளர் திரு. எம். சின்னக்குழந்தை அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டது. திரு. சின்னக்குழந்தை சட்டமன்றப் பேரவை உறுப்பினராக தேர்ந்தெடுக் கப்பட்டதின் அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் 29–11–1989 அன்று வெளியிடப் பட்டது.

12. பழனி நாடாளுமன்ற தொகுதிக்கான ஒத்திவைக்கப்பட்ட தேர்தல் :

பொதுத்தேர்தலின்போது, சுயேட்சை வேட்பாளராக திரு. வி. எஸ். மாரியப்ப கவுண்டர் அவர்கள் மரணமடைந்ததால், பழனி நாடாளுமன்ற தொகுதியின் தேர்தல் 19–11–1989 அன்று ஒத்திவைக்கப்பட்டது. மேற்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி பழனி நாடாளுமன்ற தொகுதிக்கு தேர்தலை நடத்த இந்திய தேர்தல் ஆணையம் பணித்தது :—

(1) வேட்புமனுக்களை பெற்றுக் கொள்ள ஆரம்பநாள்	27–1–1990
(2) வேட்புமனுக்களை பெற்றுக்கொள்ள இறுதிநாள்	3–2–1990
(3) வேட்புமனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் நாள்.	5–2–1990
(4) வேட்புமனுக்களை விலக்கிக்கொள்ள இறுதிநாள்	7–2–1990
(5) தேர்தல் நாள்	27–2–1990
(6) தேர்தல் முடிவுபெறும் நாள் ... — ...	3–3–1990

வாக்குப் பதிவு நேரம் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை. மத்திய அரசின் தேர்தல் அறிவிக்கையும் தேர்தல் நிகழ்ச்சி நிரல் மற்றும் வாக்குப் பதிவு நேரம் ஆகியவை அடங்கிய இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிக்கையும் தமிழ்நாடு அரசிதழில் 27–1–1990 அன்று மறுவெளியீடு செய்யப்பட்டன.

மொத்தம் 56 பேர் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்தனர். இவர்களில் 2 நபர் களின் வேட்புமனுக்கள் பரிசீலனையின்போது நிராகரிக்கப்பட்டது. போட்டியிலிருந்து 3 பேர் விலகிக்கொண்டனர். இத் தேர்தலில் 51 வேட்பாளர்கள் போட்டி யிட்டனர். 27–2–1990 அன்று வாக்குப் பதிவு நடைபெற்றது. காங்கேயம் சட்டமன்றத் தொகுதியில் ஏற்பட்ட சிறு அசம்பாவிதம் நீங்கலாக, பொது வாக வாக்குப் பதிவு அமைதியாக நடைபெற்றது. மொத்தமுள்ள 10,33,652 வாக் காளர்களில், 4,32,454 பேர் வாக்களித்தனர். 28—2—1990 அன்று வாக்கு எண் ணிக்கை தொடங்கப்பட்டு 1–3–1990 காலை தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டது. இந்திய தேசிய காங்கிரசைச் சேர்ந்த திரு ஏ. சேனாபதி கவுண்டர் மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஈராண்டுகளுக்கொருமுறை நடைபெறும் மாநிலங்களவைக்கான தேர்தல் :

(1) தமிழ்நாட்டிலிருந்து மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 6 உறுப்பினர் களின் பதவிக்காலம் 24–7–1989 அன்று முடிவுற்றது. மாநிலங்களவையில் ஏற்பட்ட இந்த 6 காலியிடங்களுக்கும் தேர்தலை நடத்த 13–7–1989 அன்று வாக்குப்பதிவு நாளாக இந்திய தேர்தல் ஆணையம் நிர்ணயித்தது. 6 நபர்கள் மட்டுமே வேட்பு மனுக்கல் தாக்கல் செய்தனர். அனைவரின் வேட்புமனுக்களும் பரிசீலனையில் ஏற்கப்

பட்டது. இத்தேர்தலில் போட்டியின்மையால் வேட்புமனுக்களை விலக்கிக்கொள்ளும் கடைசி நாளான 6-7-1989 அன்று, ஆறு வேட்பாளர்களும் மாநிலங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு:—

திருவாளர்கள் :

(1) ஜே. எஸ். ராசு (தி.மு.க.).
(2) ஏ. நல்லசிவன் (இந்திய மார்க்சிய கம்யூனிஸ்ட்).
(3) முரசொலிமாறன் (தி.மு.க.).
(4) எஸ். கே. டி. இராமச்சந்திரன் (இந்திய தேசிய காங்கிரஸ்).
(5) எஸ். விடுதலைவிரும்பி (தி.மு.க.).
(6) ஜி. வெங்கட்ராமன் (தி.மு.க.).

(") தமிழ்நாட்டிலிருந்து மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 6 உறுப்பினர்களின் பதவிக்காலம் 2-4-1990 அன்று முடிவடைந்தது. மாநிலங்களவையில் ஏற்பட்ட இந்த 6 காலியிடங்களுக்கு தேர்தலை நடத்த 29-3-1990 அன்று வாக்குப் பதிவு நாளாக இந்திய தேர்தல் ஆணையம் நிர்ணயித்தது. 6 நபர்கள் மட்டுமே வேட்புமனுக்கள் தாக்கல் செய்தனர். அனைவரின் வேட்பு மனுக்களும் பரிலனை நாளன்று ஏற்கப்பட்டது. இத்தேர்தலில் போட்டியில்லாததால், வேட்புமனுக்களை விலக்கிக்கொள்ளும் கடைசி நாளான 22—3—1990 அன்று, ஆறு வேட்பாளர்களும் மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்கள் விவரம் பின்வருமாறு :—

திருவாளர்கள் :

(1) மிசா ஆர். கணேசன் என்றழைக்கப்படும் ஆர். கணேசன் (தி.மு.க.).
(2) தா. கிருட்டிணன் (தி.மு.க.).
(3) வி. கோபால்சாமி (தி.மு.க.).
(4) எஸ். மாதவன் (அ.இ.அ.தி.மு.க.).
(5) டி. ஏ. முகமது சகி (தி.மு.க.).
(6) கே. கே. வீரப்பன் (தி.மு.க.).

4. தேர்தல் வழக்குகள் :

1989 ஆம் ஆண்டில் நடைபெற்ற சட்டமன்ற பேரவைத் தேர்தல் குறித்து 16 தேர்தல் வழக்கு மனுக்களில் தூத்துக்குடி சட்டமன்றப் பேரவைத் தேர்தல் வழக்கு மனுவை உயர்நீதிமன்றம் 2-3-1990 அன்று தள்ளுபடி செய்தது. மீதமுள்ள 15 தேர்தல் வழக்கு மனுக்களும் தீர்க்கப்படாமல் 31-3-1990 வரை நிலுவையில் இருந்தன. 1986-ல் தமிழ்நாட்டிலிருந்து மாநிலங்களவைக்கு நடைபெற்ற தேர்தல் சம்பந்தமாக தொடுத்த மேல்முறையீடு தேர்தல் வழக்கு மனு டில்லி உச்சநீதிமன்றம் 1-3-1990 அன்று தள்ளுபடி செய்தது. சோழவந்தான் மற்றும் ஆண்டிப்பட்டி சட்டப்பேரவை குறித்த மேல்முறையீடு தேர்தல் வழக்கு மனுக்கள் தீர்வு காணப்படாமல் டில்லி உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தன.

5. பொதுத் தேர்தல்—அறிக்கை தயாரித்தல் :

இத்துறையினால் தமிழ்நாடு சட்டபேரவைக்கு 1977, 1980, 1984, மற்றும்1989ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களின் முடிவுகள் அடங்கிய நூல் வெளியிடப்பட்டது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு 1989 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல் பற்றிய அறிக்கை தயாரிக்கத் தேவையான புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டன. மேலும் தமிழ்நாட்டில் 1952 முதல் 1984 முடிய நடைபெற்ற அனைத்து தேர்தல்கள் பற்றிய புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு கணிப்பொறியில் (Computer) பதிவுசெய்யப்பட்ட பல்லவன் போக்குவரத்து கலந்தரி நிறுவனத்திற்கு அனுப்பப் பட்டன.

6. தொலைபேசி வசதி மற்றும் தேர்தல் செலவினம் :

(i) இந்திய நாடாளுன்றத்திற்கு 1989 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் பொது தேர்தல் நடைபெற்றபோது தலைமைத் தேர்தல் அதிகாரியின் அலுவலகத்திற்கும் மாவட்ட தேர்தல் அதிசாரிகளின் அலுவலகங்களுக்கும் இந்திய தேர்தல் ஆணையத்திற்கும் இடையே நேரடி தொலைபேசி இணைப்புள் பொருத்தப்பட்டன. மக்களவை பொதுத் தர்தலுக்காக சுமார் ரூ. 10,04,84,000 செலவிடப்பட்டது. தேர்தல் செலவினங்களுக்காக மத்திய அரசிடம் அதன் பங்குத்தொகையாக ரூ. 12,51,49,000 கேட்கப்பட்டது. மத்திய அரசு ரூ. 3,00,00,000 தற்காலிகமாக வழங்கியது. 1989-90 ஆம் ஆண்டின் இறுதிவாக்கில் மேலும் ரூ. 5,33,10,000 மத்திய அரசு தேர்தல் செலவினங்களுக்கான தனது பங்கினை மேலும் வழங்கியது.

முதலமைச்சரின் தனிப்பிரிவு.

முதலமைச்சரின் சிறப்பு அலுவலகம் 1974 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இவ்வலுவலகத்தில் துணைச் செயலாளர் பதவித் தரத்தில் உள்ள தனி அலுவலரின்கீழ் மூன்று பிரிவுகள் உள்ளன. பொது மக்களின் குறைகளை சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு தீர்த்து வைப்பதே இத்தனி அலுவலகத்தின் பணியாகும்.

2. பொது மக்களிடமிருந்து முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்படும் நேரில் வழங்கப்படும் குறைகள் அடங்கிய மனுக்கள் மற்றும் தனி அலுவலரால் அலுவலகத்தில் நேரில் பெறப்படும் மனுக்கள் ஆகியவை எந்த அதிகாரிகளால் தீர்க்கப்படவேண்டுமோ அவர்களுக்கு தனி அலுவலரால் அனுப்பி வைக்கப்படும். எடுத்த நடவடிக்கை குறித்த அறிக்கைகள் அவர்களிடமிருந்து பெறப்படுகின்றன. மாநில அரசின் எந்த அதிகாரிகளையும் நேரடியாகத் தொடர்புகொள்ள தனி அலுவலர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

3. ஓய்வூதியம், பணிக்கொடை ஆகியவைகளைப் பெற்றுத் தருமாறு கேட்டு ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள், சமுதாயத்தில் நலிவுற்றவர்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள், விதவைகளின் கோரிக்கைகள், முதியோர் ஓய்வூதியம் கேட்டுவரும் விண்ணப்பங்கள், விபத்து நிவாரண நிதி கேட்டு வரும் மனுக்கள் மற்றும் தீர்வு காணப்படாத நிலையில் நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள பொது மக்களின் கோரிக்கைகள் ஆகியவை ஒரு தனிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தனி நடவடிக்கைக்காக அனுப்பப்படுகின்றன. அவர்களிடமிருந்து முடிவான அறிக்கைப் பெறும் வரையோ அல்லது மனுதாரர்களின் குறைகள் தீர்க்கப்படும் வரையோ உரிய தொடர் நினைவூட்டுக் கடிதங்கள் அவ்வப்போது அனுப்பப்படுகிறது.

4. மனுக்கள் மீதான தொடர் நடவடிக்கையினை சிறப்பாகவும் திறமையாகவும் கவனிப்பதற்காக கீழ்க்காணும் புதிய சிறப்புப் பதிவேடுகள் நடைமுறையில் உள்ளன:—

(1) தொடர் நடவடிக்கையினைக் காணவிரும்பும் மனுக்களுக்கான பதிவேடு.

(2) முதலமைச்சரிடம் நேரில் கொடுக்கப்பட்ட மனுக்களுக்கான பதிவேடு,

(3) உடல் ஊனமுற்றோர் அளித்த மனுக்களுக்கான பதிவேடு மற்றும்

(4) மந்தனம் மற்றும் கூர் உணர்வுகளுக்கான பதிவேடு.

இத்தகைய மனுக்கள் தீர்வு செய்யப்படுவதற்கு சிறப்பு படிவம் ஒன்று நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுளளது.

5. 1—4—1989 முதல் 31—3—1990 வரையிலான ஓராண்டில் பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 5,41,329. தொடர் நடவடிக்கை எடுத்த மனுக்களின் எண்ணிக்கை 78,620.

1—4—1989 முதல் 31—3—1990 முடிய ஓராண்டில் பெறப்பட்ட மொத்த மனுக்களில் (அதாவது 5,41,329) 5,22,367 மனுக்களில் மீதான நடவடிக்கை முடிவுற்றது. முடிவான அறிக்கைகளுக்காக 18,962 மனுக்கள் மீதான நடவடிக்கை நிலுவையில் உள்ளன.

முறையீட்டுப் பிரிவு.

பொது மக்களுக்கும் அரசுப் பணியாளர்களுக்கும் உள்ள குறைகளைப் பரிவோடு கவனித்து அவற்றை நிவர்த்தி செய்ய தனி அமைப்பு இருக்க வேண்டுமென்ற நோக்கத்தைக் கருதித் தலைமைச் செயலகத்தில் ஒரு முறையீட்டுப் பிரிவு இயங்கி வருகின்றது.

அரசுப் பணியாளர்களிடமிருந்து கீழ்க்காணும் முறையீடுகள் பொதுவாக இப்பிரிவிற்கு வருகின்றன:—

(அ) சம்பளம், ஓய்வூதியம், படிகள் கொடுக்கப்படவில்லை அல்லது கொடுப்பதில் தாமதம் ஏற்படுவதாகக் கூறும் முறையீடுகள்.

(ஆ) பதவிகளில் பணியை உறுதி செய்யாமல் நீண்ட காலத்திற்கு தற்காலிகமாகவே பணியாற்ற அனுமதிப்பதாகக் கூறும் முறையீடுகள்.

(இ) சம்பளம் நிர்ணயம் பற்றிய முறையீடுகள்.

(ஈ) ஓய்வுதியத்தை முடிவு செய்வதிலும் அல்லது ஆண்டுதோறும் ஊதியம் வழங்குவதிலும் தாமதம் ஏற்படுவதாகக் கூறும் முறையீடுகள்

(உ) மாற்றல் கோரி வரும் வேண்டுகோள்கள், அடிக்கடி மாற்றுவதாகக் கூறும் முறையீடுகள்.

(ஊ) பயணப்படி, பொது வருங்கால வைப்பு நிதி முதலியவற்றைக் கொடுப்பதில் தாமதம் ஏற்படுவதாகக் கூறும் முறையீடுகள்.

பொது மக்களிடமிருந்து மனுக்கள் இப்பிரிவிற்கு வருகின்றன. பட்டாக்கள் வழங்கும்படியும், புறம்போக்கு நிலங்களையும் வீட்டுமனைகளை ஒதுக்கித் தரும்படியும் உயிருக்குப்பாதுகாப்பு அளிக்கும்படியும், வேலை வாய்ப்புக் கோரியும் நிதி உதவி கோரியும் தியாகிகள் ஓய்வூதியம் அடிப்படை வசதிகள் கோரியும் முறையீடுகள் வருகின்றன.

அரசுப்பணியாளர்களிடமிருந்து பொது மக்களிடமிருந்தும் ஆளுநர் மற்றும் முதலமைச்சர் ஆகியோர் முகவரியிட்டு வருகின்ற புகார்கள் தவிர, தலைமைச் செயலாளருக்கும், மத்திய அமைச்சர்களுக்கும் தலைமை அமைச்சருக்கும், குடியரசுத் தலைவருக்கும் முகவரியிட்டு வருகின்ற புகார்களைப் பொதுத் துறையிலுள்ள முறையீடுகள் மற்றும் முன்பணம் பிரிவு கவனிக்கின்றது. அந்த புகார்கள் மீது மேல் நடவடிக்கை எடுக்க வேண்டி அவை தலைமைச் செயலகத் துறைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

பொதுவாக அரசுப் பணியாளர்களும், பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களும், இறந்துவிட்ட அரசுப் பணியாளர்களின் குடும்பத்தினருக்கும் பொது மக்களுக்கும் சட்டப்படி தங்களுக்குச் சேரவேண்டியவற்றை வாங்கித் தருவதில் அல்லது அவர்களின் குறைகளை உடனுக்குடன் கலைவதில் இப்பிரிவு ஒரு கர்த்தாவாக செயல்பட்டு வருகிறது.

நாளொன்றுக்கு ஏறத்தாழ 100 மனுக்கள் மத்திய அரசின் பல்வேறு துறைகளிலிருந்து இத்துறையில் பெறப்படுகிறது. இவை செயலகத் துறையிலுள்ள ''குறை தீர்க்கும் அலுவலகத்திற்கு'' தக்க நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. அம் மனுக்களின் மீதான குறைகளை பரிசீலனை செய்வது குறித்த அறிவுரைகள் இத்துறையின் நேர்முகக்கடிதம் எண் 8590/88.3 பொது (புகார் மற்றும் முன்பணம்) துறை நாள் 23—2—1988 மூலம் சில அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

1—4—1989 முதல் 31—3—1990 வரையிலான காலத்திற்கு இக்குழுவிற்கு எத்தனை மனுக்கள் வந்தன. எத்தனை மனுக்கள் மீது மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைத் கீழ்க்காணும் புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம்.

	வந்த மனுக்கள்:	மேல் நடவடிக்கை எடுத்து முடிக்கப்பட்ட மனுக்கள்:
மாநில மனுக்கள்	26,473	26,473
மத்திய மனுக்கள்	30,357	30,357

முன்னாள் படை வீரர் நலத்துறை.

போர் விதவைகள். ஊனமுள்ள படைவீரர்கள் அவர்தம் குடும்பத்தாரின் மறுவாழ்வு மற்றும் புனர்வாழ்வு மற்றும் படைவீரர்களின் குடும்ப நலனை கவனித்திடும் மகத்தான பொறுப்பு மாநில அளவில் முன்னாள் படைவீரர் நல இயக்குனரகத்திற்கு. மாவட்ட அளவில் துணை உதவி இயக்குநர் அலுவலகங்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. முன்னாள் படைவீரர்களுக்கான பல்வகையான நிதியுதவிகள் இத்துறையால் நிருவகிக்கப்படும் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி மற்றும் தொகுப்பு நிதி என்ற நிதிகளிலிருந்து வழங்கப்படுகிறது.

1. நிருவாகச் செலவினம் :

இத்துறையின் அனைத்து நிருவாகச் செலவினங்களும் மத்திய மற்றும் தமிழக அரசால் 50 : 50 விகிதத்தில் செலவிடப்படுகிறது.

கொடி நாள் :

மேதகு தமிழக ஆளுநர் அவர்களைத் தலைவராகக் கொண்ட கொடிநாள் நிதியின் ஆளுகைக்குழு ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் கூடி கொடிநாள் கொண்டாடுவதற்கான வழிமுறைகளை வகுக்கின்றது. அதன்படி ஒவ்வொரு வருடமும் டிசம்பர் திங்கள் 7 ஆம் நாள் கொடி நாள் கொண்டாடப்படுகிறது. 1989 ஆம் ஆண்டு இலக்காக ரூ. 1.30 கோடிக்குப் பதிலாக ரூ. 1.47 கோடி நிதி திரப்பட்டது.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நலநிதி:

தமிழ்நாட்டிலுள்ள முன்னாள் படைவீரர் மற்றும் அவரைச் சார்ந்தோர் மறுவாழ்வுத் திட்டங்களுக்கென இந்நிதி பயன்படுத்தப்படுகிறது. 1-4-1989 முதல் 31-3-1990 தேதியுடன் முடிவுறும் நிதியாண்டில் பல்வேறு உதவிகளுக்கான ரூ. 86.23 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இந்நிதி அரசு இணைச் செயலாளர், பொது (முன்னாள் படைவீரர்)த் துறை அவர்களைத் தலைவராகக் கொண்ட குழுவினால் நிருவகிக்கப்படுகிறது.

முன்னாள் படைவீரர் நல தொகுப்பு நிதி :

இந்நிதி மேதகு தமிழக ஆளுநர் தலைவராகக் கொண்ட மேலாண்மைக்குழு ஒன்றால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இந்நிதியிலிருந்து முன்னாள் படைவீரர் மற்றும் அவரைச் சார்ந்தோரின் தேவைக்கேற்ப வட்டி மானிய வங்கி கடனுதவி கல்வி, உபகாரச் சம்பளம் போன்ற உதவிகள் வழங்கப்படுவதுடன் போரில் உயிரிழந்தோர் கைம்பெண்களுக்கு வருடாந்திர வாழ்க்கைச் செலவு மானியம் போன்ற நிதி உதவிகளும் வழங்கப்படுகின்றன.

புதிய நிட்டங்கள்:

ஆண்டுதோறும் முன்னாள் படைவீரர் மற்றும் அவரைச் சார்ந்தோரின் நலனில் தேவைக்கேற்ப பல புதிய திட்டங்கள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவற்றில் முக்கியமானவை பின்வருமாறு :—

1. தையல் பயிற்சி நிலையங்கள் :

இத்துறையின் கீழ் தையற்பயிற்சி நிலையங்கள் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நலநிதியிலிருந்து நிதியுதவி அளிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையங்களில் முன்னாள் படைவீரர் மற்றும் படைவீரர்களின் பெண்டிருக்கு இலவசமாக 6 மாத பயிற்சி மற்றும் ஓராண்டு பயிற்சி அளிக்கப்படுகிறது.

). பெட்டிக் கடைகள் :

முன்னாள் படைவீரர் மற்றும் அவர் தம் விதவைகளுக்கு சுயவேலை வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 305 பெட்டிக்கடைகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. இக்கடையினை நடத்துபவர்கள் மாதம் ரூ. 800-ல் இருந்து ரூ. 1,000 வரை பொருவீட்டுகின்றனர்.

3. படைவீரக் மாளிகை :

நமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியின் வருமானத்தை பெருக்கிட வேண்டி திருச்சிராப்பள்ளி, வேலூர், சேலம், கோவை, தஞ்சாவூர், மதுரை சிவகாசி, மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் 104.25 லட்சம் ரூபாய் செலவில் படை வீரர் மாளிகைகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றின் மூலமாக சராசரியாக வரு டத்திற்கு ரூ. 16 இலட்ச ரூபாய் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதிக்கு வரு வாய் கிடைக்கலாகிறது.

4. மாவட்ட முன்னாள் படைவீரர் நிலையங்கள் கட்டுதல் :

பல்வேறு காரணங்களை முன்னிட்டு மாவட்ட தலைமையிடத்திற்கு வருகை தரும் முன்னாள் படைவீரர் மற்றும் அவரைச் சார்ந்தோர்களுக்கு வசதியாக மா வட்ட படைவீரர் மையங்கள் கன்னியாகுமரி புதுக்கோட்டை, பெரியார், இராம நாதபுரம், திண்டுக்கல், காயிதே மில்லத், திருவண்ணாமலை சம்புவராயர் மற்றும் திம்பரனார் ஆகிய மாவட்டங்கள் தவிர மற்ற மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட் டுள்ளது. குறைந்த வாடகையில் தங்கும் வசதிகள் உள்ளன.

5. தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பள்ளி

முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவரைச் சார்ந்தோர்கள் பயிற்சி பெறும் வகை யில் தஞ்சாவூர் மற்றும் கன்னியாகுமரி (இ) நாகர்கோயில் ஆகிய மாவட்டங்களில் முன்னாள் படைவீரர் நல துணை/உதவி இயக்குநர் அலுவலகங்களில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சி நிலையங்கள் நடைபெற்று வருகின்றன. இப்பயிற்சிகளுக் குத் தொகுப்பு நிதியிலிருந்து ரூ. 120 பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதுவரை 1,445 பேர் பயன்பெற்றுள்ளனர். இந்த ஆண்டில் 120 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

6. முன்னாள் படை வீரர்களுக்கான 12 படுக்கைகள் கொண்ட வார்டுகள் கட்டுதல் :

முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவரைச் சார்ந்தோர் பயன்பெறும் பொருட்டு மருத்துவமனைகளில் முன்னாள் படை வீரர்களுக்கென 12 படுக்கைகள் கொண்ட வார்டுகள் கட்டும் திட்டத்தின் கீழ் 18 தாலுக்கா தலைமை மருத்துவமனை களில் வார்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கென நல நிதியிலிருந்து ரூ. 10 லட்சம் செலவிடப்பட்டது.

7. சுய வேலைவாய்ப்பு (பெக்ஸ்)

முன்னாள் படை வீரர்களுக்கு சுய வேலைவாய்ப்புப் பெறும் பொருட்டு மோட் டார் ரீவைண்டிங், வெல்டிங், பால்பண்ணை, கோழிப்பண்ணை அமைத்தல், தொலைக் காட்சிபெட்டி பழுது பார்த்தல் போன்ற துறைகளில் பயிற்சி அளிக்கும் திட்டத்தினை செயல்படுத்த புதுதில்லி மத்திய புனரமைப்புஇயக்கம் தேர்ந்தெடுத்த ஆறு மாநிலங் களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இத் திட்டத்தின் கீழ் 591 முன்னாள் படை வீரர்களும் படையில் பணிபுரியும் 10 பேரும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர்.

8. சுயவேலைவாய்ப்பு (கெம்பெக்ஸ்)1 :

இத்திட்டத்தின்கீழ் 57 வயதிற்கு மிகாத முன்னாள் படை வீரர்கள் சுயத் தொழில் செய்திட ஏதுவாக எவ்வித சொந்த ஜாமினுமின்றி ரூ. 12 லட்சம் வரை சிறு தொழில் சாலைகள் அமைத்திட கடனுதவி அளிக்கப்படும். இவர்களின் பங்கு மூலதனம் 10 சதவீதமேயாகும். இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வாயிலாக, 515 முன்னாள் படை வீரர்கள் விதவைகளுக்கு ரூ. 1701.12 இலட்சங்கள் கடனுதவி அனுமதியாகியுள்ளது.

9. கெம்பெக்ஸ் 2 :

இத் திட்டத்தின் கீழ் கிராமப் புறங்களில் உழவுத் தொழில் மற்றும் அதன் சார்பு டைய குடிசைத் தொழில்களை முன்னாள் படை வீரர்கள் துவங்கிட ரூ. 5 இலட்சம் வரை வங்கியில் கடன் வசதி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 52 முன்னாள் படை வீரர்களுக்கு 12.82 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

10. முன்னாள் படைவீரர்களை வேலையில் அமர்த்தும் அதிகாரம் :

இயக்கம் மற்றும் மாவட்ட முன்னாள் படை வீரர் நல அலுவலகங்களில் 1-4-92 முதல் சிறப்பு வேலை வாய்ப்புப் பிரிவு இயங்கி வருகின்றது. 17,352 முன்னாள் படை வீரர்கள் இப் பிரிவுகளில் தமது பெயர்களைப் பதிவு செய்து தனியார் நிறுவனம். மாநில மற்றும் மத்திய அரசுத் துறைகளில் வேலைகளுக்குப் பரிந்துரை செய்யப்படு கின்றனர். இப்பிரிவின் மூலம் இதுவரை 8,651 முன்னாள் படைவீரர்கள் பொருத்த மான பணிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

11. மறுவாழ்விற்கான பயிற்சிகள் :

முன்னாள் படை வீரர் மற்றும் அவர்தம் விதவைகளை சுயதொழில் செய்து மறுவாழ்வு பெற்றிட வழிவகை செய்யும் பொருட்டு அவர்களுக்குப் பல துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். இத் திட்டத்தின் கீழ் 26 முன்னாள் படை வீரர்கள் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்திலும் 12 பேர் தொலைக் காட்சி மற்றும் வி.சி.ஆர். பழுது பார்த்தலிலும் 50 பேர் கம்ப்யூட்டர் இயக்குதலிலும் 30 விதவைகள் தோலாடை தைத்தலிலும் 10 விதவைகள் வானொலி/தொலைக்காட்சி பெட்டிகளை பழுது பார்த்தலிலும் பயிற்சி பெற்றனர். பயிற்சி காலத்தில் இவர்களுக்கு உதவி தொகையும் அளிக்கப்பட்டது.

12. கேண்டீன் வசதிகள் :

முன்னாள் படை வீரர்கள் அவர்களுக்குத் தேவையான பொருட்களை குறைந்த விலையில் சி.எஸ்.டி. காண்டீன்களில் பெறுப் பொருட்டு தமிழ்நாட்டில் வட ஆற்காடு, சென்னை, செங்கை அண்ணா, திருச்சி, நீலகிரி, திருநெல்வேலி கட்டபொம்மன், மதுரை, பசும்பொன் தேவர் திருமகன், காமராஜர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் காண்டீன் வசதிகள் உள்ளன.

13. தேசியக் கல்வியறிவு புகட்டும் திட்டத்தில் முன்னாள் படைவீரர்களை பயன் படுத்துதல்

தேசியக் கல்வியறிவு புகட்டும் திட்டத்தில், தமிழகத்தில் தென்னாற்காடு மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் சில வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிற்வியளிக்கும் பணியில் 1543 முன்னாள் படை வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். முன்னாள் படை வீரர்களின் இப்போது நலப்பணி அனைவராலும் பாராட்டப்பட்டது.

14. முன்னாள் படைவீரர்கள் கழகம் :

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம் ஒன்று தனியே ஆரம்பிக்கப்பட்டு 1956-ம் ஆண்டு கம்பெனி சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி யின் கீழ் இயங்கி வரும் வாகனப் பிரிவு, பல்லவன் போக்குவரத்து கழக பேருந்து கட்டணம் வழங்கும் பிரிவு மற்றும் அச்சகம் இக்கழகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

15. அகில இந்தியா வானொலி வாயிலாக முன்னாள் படைவீரர்களுக்கு வேலை வாய்ப்பு செய்தி வாசித்தல் :

முன்னாள் படை வீரர்களுக்கான வேலை வாய்ப்பு செய்திகள் மற்றும் நலத் திட்டங்கள் பற்றி ஒவ்வொரு சனிக்கிழமையும் அகில இந்திய வானொலியில் 5 நிமிடங்கள் காலை 6.55 முதல் 7-00 மணி வரை செய்திகள் வாசிக்கப்படுகின்றன. மேலும், முன்னாள் படைவீரர்களுக்கான நலத் திட்டங்கள் தொலைக்காட்சி வாயிலாகவும் ஒளி பரப்பப்படுகிறது.

16. குடியரசு தின விழாவின் பொழுது அலங்கார வண்டிகள் ஊர்வலம் செல்லுதல் :

26–1–1990 அன்று சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்ற குடியரசு தின விழாவின்போது 50 முன்னாள் படை வீரர்கள் அணிவகுப்பில் கலந்து கொண்டனர். இத்துடன் முன்னாள் படைவீரர் நலத் துறையின் வாயிலாக செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள் பற்றிய அலங்கார ஊர்தியும் இடம் பெற்றது.

பர்மா இலங்கை மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்புவோரின் மறுவாழ்வு.

1. இத்துறை பர்மா, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு மறு வாழ்வு வசதியும் மற்றும் இலங்கையிலிருந்து அகதிகளாக இந்தியா வருபவர்களுக்கு நிவாரண உதவியும் வழங்கப்படுகிறது. பர்மாவிலிருந்து இந்திய வம்சா வழியினர் தாயகம் திரும்புவது 1–6–1983-ல் தொடங்கியது. 1–6–1983 முதல் 1988 மார்ச் மாதம் முடிய மொத்தம் 1,44,445 பேர்கள் தாயகம் திரும்பி வந்துள்ளனர். இலங்கையிலிருந்து இந்திய வம்சா வழியினர் 1–11–1964 முதல் தாயகம் திரும்பத் தொடங்கியது முதல் 1989 மார்ச் மாதம் முடிய 4,60,660 நபர்கள் அடங்கிய 1,15,844 குடும்பங்கள் இந்தியா வந்து சேர்ந்திருக்கின்றனர். இந்திய வம்சா வழியினர் 1975 ஜூலை மாதம் முதல் வியட்நாமிலிருந்து தாயகம் திரும்பத் தொடங்கினர். இதுவரை 2055 நபர்கள் அடங்கிய 501 குடும்பங்கள் வியட்நாமிலிருந்து தாயகம் திரும்பியுள்ளனர்.

1989-90ம் ஆண்டில் இத் துறை இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் அகதி களின் பிரச்சனைகளையே சுவனித்து வந்தது. எதிர்பாராதவிதமாக இவ்வகையில் 24–7–1983 முதல் ஏற்பட்டுள்ள இனக் கலவரத்தினால் பாதிக்கப்பட்டவர்கள்

படகு மூலமாகவும், ஆகாய விமானம் மூலமாகவும் இந்தியா வரத் தொடங்கியுள்ளனர் 25—7—1983 முதல் 31—3—1990 வரை மொத்தம் 1,37,392 அகதிகள் இந்தியா வந்துள்ளனர். அவ்வாறு வந்த அகதிகளில் ஆதரவற்றவர்களை அகதிகளுக்கான முகாம்களில் தங்க வைத்து நிவாரண உதவி அளிக்கப்பட்டு வந்தது.

4. அகதிகள் இராமேஸ்வரம் வந்தடைந்ததும் உணவளிக்கப்பட்டு முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். தாயகம் திரும்புவோருக்கு வழங்கப்படுவதற்கு இணையாக சொக்கத் தொகை, ஊக்கு தவி தொகையில் அரிசி முதலியவை வழங்கப் படுகிறது. மேலும் அவர்களுக்கு உடுக்கத் துணி, சமையல் பாத்திரங்களும் படுக்கை விரிப்பு முதலானவைகளும் குடும்பத்திற்கு ஏற்ற அளவில் இலவசமாக வழங்கப்படு கிறது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிகபட்சமாக ரூ. 540 மதிப்புள்ள மேற்கண்ட பொருட்கள் வழங்கப்படுகின்றது. மேலும் பிரதி மாதம் இவர்களுக்கு பெரியவர் ஒவ்வொருவருக்கும் ரூ. 110-ம் சிறியவர்களுக்கு ரூ. 55-ம் நாளொன்றுக்கு பெரியவர் ஒவ்வொருவருக்கும் 400 கிராம் மற்றும் சிறுவர்களுக்கு 200 கிராம் அரிசியும், ஒரு கிலோ 57 பைசா விலையில் வழங்கப்படுகிறது. இவர்களுக்கு இந்தியாவில் நிரந்தர மாக இருக்க மறுவாழ்வு உதவி ஏதும் வழங்குவதற்கு இல்லை. இலங்கையில் சகஜ நிலை ஏற்பட்டவுடன் இவர்கள் மீண்டும் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

5. ஏற்கனவே இந்தியா வந்தடைந்த தாயகம் திரும்பியவர்களை வணிகக் கடன், கூட்டுறவு நூற்பாலைகளில் வேலை வாய்ப்பு, தோட்டத் தொழில் நிட்டங்கள், பால் பண்ணைத் திட்டங்கள், சுய வேலை வாய்ப்புத்திட்டங்கள். தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் வளர்ச்சி வங்கித் திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்படுகின்றனர்.

6. இடைத்தங்கல் முகாம் :

தமிழ்நாட்டில் மொத்தமாக மூன்று இடைத்தங்கல் முகாம்கள் உள்ளன. இவை திருச்சி மாவட்டத்தில் கொட்டப்பட்டு என்ற இடத்திலும், மதுரை மாவட்டத்தில் விளாங்குடி என்ற இடத்திலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் மண்டபம் முகாம் என்ற இடத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. இம்முகாம்களில் தாயகம் திரும்பியோரின் குடும்ப அங்கத்தினரின் எண்ணிக்கையைப் பொறுத்து மாதம் ஒன்றுக்கு ரூ. 110 முதல் ரூ. 357.50 ம் அதற்கு மேலும் அங்கத்தினர்களின் எண்ணிக்கைக்கு தக்கவாறு தொக்கப் பணம் அளிக்கப்படுகிறது. பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியோர் 7 மாத காலத்திற் கும், இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர் ஒரு மாத கால வரையிலும் அத்தியாவசி யமாக இனங்களில் மூன்று மாத காலத்திற்கும் இடைத்தங்கல் முகாம்களில் தங்கலாம். இந்த காலத்திற்குள் இவர்களுக்கு நிவாரண உதவியும், அவர்களது தகுதி அடிப்படையில் ஏதாவது ஒரு மறுவாழ்வு உதவி (வணிகக்கடன்/ நூற்பாலையில் வேலை வாய்ப்பு/ மலைத்தோட்டத் தொழில்/பால்பண்ணைத்திட்டம்/ சுயவேலை வாய்ப்புத் திட்டம்/ தாயகம் திரும்பியோரின் வங்கித்திட்டம்/மற்றும் பல) அளிக்கப்பட்டு முகாம்களிலிருந்து அனுப்படுகின்றனர். இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோரைப் பொறுத்தவரை யில், அவர்களுடைய குடும்ப அட்டையில் கண்டியிலுள்ள இந்திய உதவித் தூதரகத் தில் செய்துள்ள பொரிஜின்படி மறுவாழ்வு; உதவிகள் அளிக்கப்பட்டு முகாமைவிட்டு அனுப்பப்படுகின்றனர். ஒரு கிலோ அரிசி 0.57 பைசா வீதம் வழங்கப்படுகின்றன. 8 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஒரு நாளைக்கு 400 கிராமும் 8 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ஒரு நாளைக்கு 200 கிராமும் வழங்கப்படுகிறது. இலவச மருத்துவ வசதிகளும் அளிக்கப்படுகின்றன. முகாம்களில் தாயகம் திரும்பியோர் தங்கியிருக்கும் காலத்தில் திருமணம் செய்து கொள்பவர்களுக்கும், திடீரென இறந்து விடுபவர்களை அடக்கம் செய்வதற்கும், இவர்களது தேவையை ஒட்டிய உதவித் தொகைகள் அளிக்கப் படுகின்றன.

7. மறுவாழ்வு உதவி பெற்று குடியமர்த்த பின்பு தற்காலிக குடிசை அமைத்துக் கொள்வதற்காக சில இனங்களில் ரூ. 70 குடிசை மான்யமாக வழங்கப்படுகிறது. மேலும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நிரந்தர வீடு கட்டுவதற்காக ரொமப்புறங்களில் வசிப்பவருக்கும் ரூ. 6,000—ம் நகர்புறங்களில் வசிப்பவர்க்கு ரூ. 10,000 அதிக பட்ச கடனுதவி அளிக்கப்படுகிறது. தகுதி வாய்ந்த அரசு நிலம் கிடைக்கப்பெற்றால் அவற்றை வீடு கட்ட இலவசமாக தாயகம் திரும்பியவர்களுக்கு நில ஒப்படை செய்து கொடுக்கப்படுகிறது. வீட்டுக்கடன் மூன்று தவணைகளாக வழங்கப்படுகிறது. ஒவ் வொரு தவணையை சரியான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளதா? என்று சரிபார்த்த பின்பே அடுத்த தவணை வழங்கப்படுகிறது.

8. தாயகம் திரும்பியோரின் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி அளிப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. பள்ளியோடு இணைந்த விடுதிகளில் தங்கிப் படிப்பவர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 60 முதல் ரூ. 90 வரை உதவிப் பணமாக அளிக்கப்படுகிறது. இவர் கள் கல்வி பெறும் படிவத்தைப் பொறுத்து ஆண்டு ஒன்றிற்கு ரூ. 15 முதல் ரூ. 150வரை புத்தகங்களுக்கான மான்யம் வழங்கப்படுகிறது. மாநிலத்திலுள்ள எல்லா அரசுக் கல்லூரிகளிலும் தாயகம் திரும்புவோரின் குழந்தைகளுக்காக இரண்டு இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. தொழில் துறை பட்டப்படிப்புக்களுக்கு பின்வருமாறு இட ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

கல்வியின் பிரிவின் பெயர்.	பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு ஒதுக்கப் பட்ட இடங்கள்.	இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு ஒதுக்கப் பட்ட இடங்கள்.
(1)	(2)	(3)
1. மருத்துவப் பட்டப்படிப்பு	4	2
2. பொறியியல் பட்டப்படிப்பு	1	1
3. கால்நடை மருத்துவப் பட்டப்படிப்பு	2	1
4. சட்டத்துறை பட்டப்படிப்பு	2	2
5. தொழில் நுட்பப்படிப்பு	2	3

மேலும் இந்த மாநிலத்தில் இயங்கும் தொழில் பயிற்சி நிலையங்களில் 5 சதவீதம் இடம் தாயகம் திரும்பியோரின் குழந்தைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

9. கீழ்க்கண்ட மறுவாழ்வு திட்டங்களில் தாயகம் திரும்பியவர்களுக்கு குடியமர்த்தப்படுகின்றனர்.

(1) மலைத்தோட்டத் திட்டங்கள்.

(2) வேளாண்மைத் திட்டங்கள்.

(3) தொழில் திட்டங்கள்.

(4) வணிகக்கடன்/சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள்.

10. மலைத் தோட்டத் தொழிலில் குடியமர்த்தப்படுதல் :

இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோரின் பெரும்பாலோர் தொழிலாளர்கள். இவர்களை மலைத்தோட்டத் தொழில் குடியமர்த்துவதற்குத் தனியாக திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மலைத்தோட்டத் தொழிலில் ஈடுபடுபவர்கள் இலவசமாக தங்குமிடம் அளிக்கப்பட்டு தொழிலாளர்களாக வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். இவர்களுக்கு மற்ற எல்லா வசதிகளும் இங்கு அளிக்கப்படுகிறது. இதுவரையில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 2 338 குடும்பங்களுக்கு தேயிலைத் தோட்டத் தொழிலில் மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

இரப்பர் பயிரிடும் திட்டம், கன்னியாகுமரி :

கன்னியாகுமரி மாவட்டத்தில் 200 ஏக்கர் நிலப்பரப்பில் இரப்பர் பயிரிடுவதற்கான ஒரு திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 285 குடும்பங்களிலுள்ள தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கப்பட்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

சின்கோனா தோட்ட திட்டம் :

ஆனைமலையில் அரசு சின்கோனா தோட்ட திட்டத்தின் கீழ் 125 தாயகம் திரும்பிய குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பளிக்கப்பட்டு குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

அனைத்து தோட்ட திட்டங்களிலும் குடும்பம் ஒவ்வொன்றிலும் இரண்டு நபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கப்படுகிறது. இவர்களுக்கு இலவச குடியிருப்பு, மருத்துவ வசதி போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்படுகிறது.

11. வேளாண்மை திட்டம் :

வேளாண்மைத் திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்படும் தாயகம் திரும்பிய குடும்பம் ஒவ்வொன்றிற்கும் 3 ஏக்கர் தரிசு நிலம் ஒப்படை செய்யப்பட்டு அந்நிலத்தை செப்பனிட, நீர்ப்பாசனக் கிணறு வெட்ட, காளைமாடுகள் வாங்க, விதைகள் உரம்

மற்றும் விவசாயத்திற்கு தேவைப்படும் உபகரணங்கள் வாங்க, ரூ. 5,990 கடனாக வழங்கப்படுகிறது. நிலத்தில் பயிரிட்டு அறுவடை செய்யும்வரை முதல் 9 மாதங்களுக்கு முழு பராமரிப்புபடி கொடையாகவும் அடுத்த ஓராண்டுக்கு பராமரிப்பு படி கடனாகவும் வழங்கப்படுகிறது. இதைத் தவிர இவர்களுக்கு வீடு கட்ட கடனும், மாட்டு வண்டி வாங்க, கோழி வளர்ப்பு, காய்கறி தோட்டம் முதலானவை அமைக்க கடனுதவியும் வழங்கப்படுகிறது.

அண்ணா மாவட்டம், கொடைக்கானல் வட்டத்தில் கூக்கல் கிராமத்தில் மிராடா என்னும் தனியார் நிறுவனம் பங்கேற்கும் 180 தாயகம் திரும்பிய குடும்பங்களை குடியமர்த்தப்பட ஒரு புதிய வேளாண்மை திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

12. தொழில் கூடங்களில் வேலை வாய்ப்பு :

இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசு, கூட்டுறவு நூற்பாலைகளில் தாயகம் திரும்பியோரைக் குடியமர்த்தும் பொருட்டு கடன் வழங்கியுள்ளது. மத்திய அரசு ரூ. 547.32 இலட்சம் நிதி உதவிகளை நேரடிக் கடனாக அளித்து, இத்தொகை 18 நூற்பாலைகளில் சம பங்குகளாக முதலீடு செய்யப்பட்டு நூற்பாலைகளை விரிவுபடுத்தவும் 3,685 தாயகம் திரும்பிய குடும்பங்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கவும் ஏற்பாடுகள் செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 3,893 குடும்பத்தினர் 31—3—1990 வரையில் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

பயிற்சி காலத்தில் இத்திட்டத்தில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களுக்கு ?பணு வதற்கு படியும், பயிற்சிபெறும் தொழிலாளர்களுக்கு மத்திய அரசினால் நிர்ணயிக்கப்பட்ட விதிப்படிதொடர்ந்து 6 மாதங்கள் வரைபயிற்சி உதவிப்பணமும் வழங்கப்படுகிறது. பயிற்சி காலம் முடிந்த பின்னர் இவர்கள் நூற்பாலைகளில் நிரந்தரமாக வேலை வாய்ப்பினைப் பெறுவார்கள்.

13. வணிகக்கடன் :

இத்திட்டத்தின் கீழ் ரூ. 7,500 வரை கடனுதவி பெற தகுதி உடையவராகிறார்கள். சிறு வியாபாரங்களை ஆரம்பிக்க முதல் தவணையாக ரூ. 5,000-மும் இரண்டாவது தவணையாக ரூ. 2,500—ம் மொத்தம், ரூ. 7,500 கடனாக வழங்கப்படுகிறது. இக்கடன் பெற்ற தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு 12 ஆண்டு தவணைகளில் வட்டியுடன் இப்பணத்தை அரசிற்கு திருப்பிச் செலுத்த வேண்டும். கடந்த 31—3—1990 முடிய மொத்தமாக 42,870 பர்மாவிலிருந்து தாயகம் திரும்பிய குடும்பத்தினருக்கும் இத்திட்டத்தின் கீழ் வணிகக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

14. சுய வேலை வாய்ப்புத் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் குடும்பங்கள் பலவற்றை தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் பால்பண்ணைத் திட்டம், விசை சைக்கிள் ரிக்ஷா ஆகிய திட்டங்களில் குடியமர்த்தப்படுகின்றனர். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 7,500 வியாபாரக் கடனாகவும், ரூ. 2,500 வியாபார ஸ்தலக் கடனாகவும் அளிக்கப்படுகிறது. இத்தொகையை தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஒன்றில் சுமார் 5 அல்லது 7 ஆண்டு காலத்திற்கு வைப்புத் தொகையில் சேர்க்கப்படுகிறது. இதற்குப் பதிலாக வங்கி ஒவ்வொரு குடும்பத்திற்கும் கடன் வசதி உயர்த்தப்பட அனுமதி அளித்து கூறவை மாடுகள், விசை சைக்கிள் ரிக்ஷா வாங்கித் தருகிறது. பணியில் சேர்க்கப்படும் தீப்பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலைகளில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் வியாபாரக் கடனாக ரூ. 7,500 வழங்கப்பட்டு அதனை தொழிற்கூட மையங்கள் கீழ் உள்ள தீப்பெட்டித் தொழில் சங்கத்தில் பங்குத் தொகையாக வைப்பு நிதியில் சேர்க்கப்படுகிறது.

சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் குடியமர்த்தப்படும் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் தற்காலிக குடிசை மான்யம் மற்றும் வீட்டுக் கடன் வழங்கப்படுகிறது. பாண் பண்ணைத் திட்டத்தின் கீழ் 303 குடும்பங்களுக்கும் விசை சைக்கிள் ரிக்ஷா திட்டத்தின் கீழ் 52 குடும்பங்களும் இதுவரை குடியமர்த்தப்பட்டுள்ளனர். 23 குடும்பங்களுக்கு தீப்பெட்டி தொழிற்சாலையில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு அளிக்கப்பட்ட மறுவாழ்வு பற்றிய புள்ளி விவர அட்டவணை 31—3—1990 வரையில்.

(1) தாயகம் திரும்பியவர்கள் எண்ணிக்கை	1,44,445
(2) வணிகக் கடன் அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை	42,870
(3) வணிகக் கடன் வழங்கப்பட்ட மொத்த தொகை ..	59,137.28 இலட்சம் (தற்காலிகமானது)

(4) வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டோரின் எண்ணிக்கை	7,266
(5) (அ) வேளாண்மை திட்டத்தில் குடியமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை	5,905
(ஆ) வேளாண்மை திட்டத்தில் குடியமர்த்தப்பட்டவர்களுக்கு செலவிடப்பட்ட மொத்த தொகை	ரூ. 52 இலட்சம்
(6) (அ) நிலக் குடியிருப்பு திட்டத்தில் குடியமர்த்தப் பட்டோரின் எண்ணிக்கை ..	375
(ஆ) கலம் (5) (அ)-ல் விவரிக்கப்பட்ட திட்டத்தின்கீழ் குடியமர்த்தப்பட்டவர்களுக்கு செலவிடப்பட்ட மொத்த தொகை	ரூ. 11.36 இலட்சம்.
(7) உள்ளாட்சியினரால் தாயகம் திரும்பியவர்களுக்கான ஒதுக்கப்பட்ட பங்கு/ஸ்டார்ல்கள் மொத்த எண்ணிக்கை ..	423
(8) பங்கு/ஸ்டால் கட்டப்பட்ட உள்ளாட்சியருக்கு வழங்கப் பட்ட கடன் தொகை	ரூ. 7.82 இலட்சம்
(9) (அ) வீட்டுக் கடன் வழங்கப்பட்ட தாயகம் திரும்பிய குடும்ப பங்களின் எண்ணிக்கை	19,540
(ஆ) தாயகம் திரும்பியவர்களுக்கு வீட்டுக் கடனாக வழங்கப்பட்ட மொத்த தொகை	ரூ. 47,305.03 இலட்சம் (தற்காலிகமானது)

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு அளிக்கப்பட்ட மறுவாழ்வு பற்றிய புள்ளி விவர அட்டவணை 31—3—1990 வரையில்.

	குடும்பங்கள்.	உறுப்பினர்கள்.
(1) குடும்பங்கள்/உறுப்பினர்கள் வருகை	1,15,844	4,60,660
(2) வணிகக் கடன் அளிக்கப்பட்டவரின் எண்ணிக்கை	76,049	
(3) வணிகக் கடன் வழங்கப்பட்ட மொத்த தொகை	2,316.82 இலட்சம் (தற்காலிகமானது)	
(4) வேண்டலாய்ப்பு அளிக்கப்பட்டோரின் எண்ணிக்கை	10,153	
(5) நிலக்குடியிருப்பு திட்டம் :		
(அ) நிலக்குடியிருப்புத் திட்டத்தில் குடியமர்த்தப் பட்டோரின் எண்ணிக்கை	2,332	158.71 இலட்சம் (இதில் தனியாரிடமிருந்து வாங்கிய நிலங்கள் தாயகம் திரும்பியோருக்கு சொந்தமான நிலங்கள் உபதொழில்கள் ஆகிய வற்றிற்காக செலவுகள் அடங்கும்.)
(6) நீலகிரி தேயிலைத் தோட்டத் தொழில் திட்டம் :		
(அ) தேயிலைப் பயிர் செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு ..	1,674.03 ஹெக்டேர்	
(ஆ) தொழிலாளர்களாக வேலைக்கு அமர்த்தப் பட்டவர்களின் எண்ணிக்கை	2,338	

(7) கன்னியாகுமரி மாவட்ட ரப்பர் பயிரிடும் திட்டம் :

(இ) ரப்பர் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பு	804.40 ஹெக்டேர்
(ஈ) தொழிலாளர்க்ளாக வேலைக்கு அமர்த்தப் பட்டவர்களின் எண்ணிக்கை	285
(8) ஆனைமலை, சின்கோனா பயிர் செய்கை திட்டத் தில் குடியமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை	125
(9) வீட்டு வசதிக் கடன் வழங்கப்பட்டோரின் எண்ணிக்கை	42,596
தாயகம் திரும்பியோருக்கு வீட்டுக் கடன் வசதிகள் வழங்க அளிக்கப்பட்ட சடன் தொகை ..	ரூ. 2,506.43 இலட்சம் (தற்காலிகமானது)
இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு வீட்டு மனைகள் அபிவிருத்திக்கு அளிக்கப்பட்ட தொகை	ரூ. 6,12,249
	குடும்பங்கள். உறுப்பினர்கள்
கூட்டுறவு நூற்பாலைகளில் வேலைக்கு அமர்த்தப்பட்ட வர்கள் எண்ணிக்கை	3,893
அந்தமானில் சுச்சல் ரப்பர் பயிர் செய்கைத் திட்டத் தில் குடியமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை ..	91
பால் பண்ணைத் திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை	303
விசை சைக்கிள் ரிக்ஷா திட்டத்தின் கீழ் குடியமர்த்தப் பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை	52
கேப்பெட்டி தொழிற்சாலைகளில் பணியில் அமர்த் தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை	23

பிராந்தியப் படை

117. காலாட் படை அணி (உள் நாட்டுப் பாதுகாப்பு படை) திருச்சிராப்பள்ளி :

1989–90ஆம் ஆண்டு அதிகாரிகள், இளநிலை கமிஷன் அதிகாரிகள், ஏனைய பதவித் தரத்திலுள்ளவர்கள் ஆகியோருக்கு ஆர்வமும் விறுவிறுப்பும் நிறைந்த ஆண்டாகத் தொடங்கியது. இவ்வாண்டில், தனிப்பட்ட வீரர்கள் ஒவ்வொருவருக்கும் அளிக்கப் படும் பயிற்சிக்கும் ஒட்டு மொத்தமாக அணிமுழுவதற்கும் அளிக்கப்படும் பயிற்சிக்கும் அதனை மேற்கொண்டும் மேம்படுத்துவது பற்றி முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. துணைப்படைப்பிரிவுகள் (Sub Unit) ஒவ்வொன்றும் மிகஉயர்ந்த திறமை வாய்ந்தாகவும் அணியிலிருந்து பிரித்துக் காணவியலாத அளவிற்கு அணியின் ஓர் அங்கமாக, அதன் வலிமையும், நிறமையும் தன்னகத்தே கொண்டதாக அவற்றை உருவாக்க வேண்டுமென்பதே பயிற்சியின் நோக்கமாக இருந்தது, இவ்வாண்டில் திட்டமிட்டவாறு, உள்நாட்டுப் பாதுகாப்புப் படை நாள் கொண்டாடவும், மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும் உரிய கவனம் செலுத்தப்பட்டது.

ஆள்தேர்வும், புதுமுகப் பயிற்சியும் (Recruitment and Recruitment Training) :

1989–90 ஆம் ஆண்டில் இப்படைப்பிரிவில் 64 பேர் சேர்க்கப்பட்டனர். அவர் களுக்கு 30 நாட்கள் புதுமுகப் பயிற்சி அளிக்கப்பட்டது. அதன் பின்னர், ஆண்டுக் கொருமுறை அளிக்கின்ற பயிற்சி 2 மாத காலத்திற்கு அளிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சியாளர்களுக்கு 7.62 மி. மீ. 2எ 1 ஆயுதங்களை கடுவதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதனால் கிடைத்த பயன்கள் நிறைவளிப்பதாக இருந்தன.

ஆண்டுச் சரக வகைப்பாடு :

நீரஞ்சூரில் உள்ள பசுமலைப்பட்டி நெடுந்தொலைவு சுடும் களப்பயிற்சியில் (Long Range) இந்தப் படையில் அனைத்து வீரர்களும் ஆண்டுக்கொருமுறை நடைபெறும் பல்வகை நெடுந்தொலைவு படைக்கலங்கள் சுடும் பயிற்சியை (Range Classification) முடித்துள்ளனர்.

விளையாட்டுகள், போட்டி விளையாட்டுகள் :

இந்த அணியில் கம்பெனிகளுக்கடையிலயான போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் அனைத்தும் கம்பெனிகளுக்கிடையிலான தலைமைப்போட்டி (Inter Coy Championship Benner) மற்றும் 'இன்டீரியர் எக்கானமி பேனர்'' (Inter Eccnomy Benner) போட்டிக்கும் நடைபெற்ற ஆண்டுப் பயிற்சி முகாமில் நடந்தேறின.

முனைப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், பொது மக்களிட மிருந்தும் தனியார் துறைகளிடமிருந்தும், இதற்குச் சரியான வரவேற்பில்லை. உள் நாட்டுப் பாதுகாப்புப் படைகளின் செயல், ஆற்றல் வளம் பற்றியும், கட்டுப்பாடு, கடின உழைப்பு, எழுச்சி பொங்கும் ஆற்றல் ஆகியவை ஒருங்கே அமையப்பெற்ற இப்படைவீரர்களைத் தங்களுடைய நிறுவனங்களில் பணிக்கு நியமிப்பதால் அவர் களுக்குக் கிடைக்க கூடிய அனுகூலங்கள் பற்றியும் பொது மக்களுக்குத் தெரியப் படுத்துவது அவசியமாகும்.

உள்நாட்டு பாதுகாப்புப் படைகள் விழா :

1989—90 ஆம் ஆண்டு உள்நாட்டுப் பாதுகாப்புப் படை நாள் விழா 8—10—1989 முதல் 11—10—1989 வரையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவைக் குறித்து தேசிய உள்ளூர் செய்தித் தாள்கள், தொலைக்காட்சி, அகில இந்திய வானொலி ஆகியவற்றின் மூலம் விரிவாக விளம்பரம் செய்யப்பட்டது விழாவின் போது முக்கியமாக இறம் பெற்ற ஒரு சில நிகழ்ச்சிகள் பின்வருமாறு :—

(1) வானொலியின் சிறப்பு நிகழ்ச்சி.

(2) பத்திரிகையாளர்கள் கூட்டம்.

(3) சிறப்பு வழிபாடு.

(4) குடும்ப நலன்.

(5) அணிவகுப்பு)Ceremonial Parade)

(6) கொடி அணிவகுப்பு.

இப்படைப் பிரிவிலிருந்து 34 பேர் இராணுவ படைப்பிரிவுகளில் சேர்க்கப்பட்டனர். ஒருவகையில் பார்த்தால் இவர்கள் உள்நாட்டுப் பாதுகாப்புப் படை பிரிவிலிருந்து சென்று விட்டது இப்படை விரிவிற்கு இழப்பாக இருக்கலாம். எனினும் அதே நேரத்தில் இங்குப் பணிபுரிந்து வந்தவரையில் இவர்கள் பகுதி நேரப் படைவீரர்கள்தான். இனி இவர்கள் நிரந்தரப் படைவீரர்கள் ஆகிவிடுகிறார்கள் என்பது ஆதாயமாகக் கருதப்படலாம், இப்படைப்பிரிவில் நலனுக்கே எப்போதும் முன்னுரிமை அளிக்கப் பட்டது.

முடிவு :

மாவட்ட அளவில், சிவில் நிருவாகத்துடன் நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது. உள்நாட்டு பாதுகாப்புப் படையின் செயல்பாடு குறித்து விரிவான விளம்பரம் கொடுக் கப்பட்டு வருகிறது. உள்நாட்டுப் பாதுகாப்புப் படை பற்றி உள்ளூர் நிறுவனங்கள் தொழிற்சாலைகள் பலவற்றின் தொழிலாளர்கள் அறியச் செய்யும் வகையில் அவற்றை அணுகி எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதற்குச் சரியான ஆதரவு இல்லை. இப்படைப் பிரிவில் கட்டுப்பாட்டுணர்வு உயரியதாகும்.

(ii) காலாட்படைப்பிரிவு (உள்நாட்டுப்பாதுகாப்புப்படை)

பொது :

அறிக்கையாண்டில் வழக்கமான பயிற்சி நடவடிக்கைகள் இயக்க நடவடிக்கைகள் ஆகியவற்றுடன் பின்வரும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

உள்நாட்டுப் பாதுகாப்புப் படை நாள் விழாக்கள் :

2. கோயம்புத்தூரில் உள்நாட்டுப் பாதுகாப்புப் படை நாள் 1989 அக்டோபர் 8ம் நாள் முதல் 10 ஆம் நாள்வரையில் கொண்டாடப்பட்டது.

3. 8—10—1989 அன்று காலை 7-30 மணிக்கு சிறப்பு வழிபாட்டுடன் இப்படைப் பிரிவின் கோவிலில் இவ்விழா தொடங்கியது. இவ்விழாவில் இந்த அணியைக் கொண்டாடினர். படைப்பிரிவுத் தலைமை அதிகாரி (Commanding Officer) இவ்விழாவின் போது சிறப்புப் படைவீரர் கட்டம் (Special Sainik Sammelan) ஒன்றை நடத்தினார். பல்வேறு பாடமுறைகளிலும் ஏனைய நடவடிக்கைகளிலும் சிறப்பாகத் தேறிய இப்படைப்பிரிவில் வீரர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

அக்டோபர் 9ம் நாளன்று காலையில் படைப்பிரிவின் வாத்திய இசைக் குழுவும் தமிழ்நாடு காவல்துறை வாத்திய இசைக்குழுவும் இசையமைக்க, வண்ணமிகு கொட்டி அணிவகுப்பு ஒன்று நடைபெற்றது. இவ்வாண்டின் முக்கியமான அம்சம் பழங்கால ஆடைகளுடன் தமிழக படைவீரர் (அன்றுமுதல் இன்று வரை (Madras Soldiers down the Ages) என்பதைத் சித்தரிக்கும் ஒரு காட்சி விளக்க நிகழ்ச்சியாகும் (காட்சி) இந்த அலங்கார வண்டிகளை பெருந்திரளாகக் குழுமியிருந்த பொது மக்களின் பாராட்டு தலைப் பெற்றன. பளளி, கல்லூரி மாணவர்களும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த குடிமக்களும் உளநாட்டுப் பாதுகாப்புப் படைவீரர்கள தூய பெருமிதத் தோற்றம்தரும் உடைகளையும் கண்கவரும் அணி வகுப்பையும் கண்டு பெரிதும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

திரைப்படத் துண்டுபடங்கள், பத்திரிகைகள் அகில இந்திய வானொலி ஆகியவை மூலமாக உள்நாட்டுப் பாதுகாப்புப் படைக்கு விரிவான விளம்பரம் கொடுக்கப்பட்டது. பல்வேறு இராணுவ நடவடிக்கைகளில் உள்நாட்டுப் பாதுகாப்புப் படையினரின் பணிகளில் விளக்கக் குறிப்புரை இணைந்த துண்டுத் திரைப்படங்கள கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள திரையரங்குகள் அனைத்திலும் 1989 ஆம் ஆண்டு செப்டம்பர் 25 முதல் அக்டோபர் 7 வரை காட்டப்பட்டன.

விளையாட்டு நடவடிக்கைகள் :

பல்வேறு அணிகளுக்கிடையேயான போட்டி விளையாட்டுகளில் இந்த அணியின் திறமை, மன நிறைவளிக்கும் வகையில் இருந்ததது.

இப்பிரிவு, தன்னுடைய துப்பாக்கிச்சுடும் திறமையைக் கணிசமான அளவுக்கு உயர்த்தியுள்ளது. இவ்வாண்டுப்படைப் பிரிவுகளுக்கிடையே நடைபெற்ற காலாட்படை (உள்நாட்டுப்பாதுகாப்புப்படை) படைக் கலன் திறமைப்போட்டியில் இது நன்றாகத் தனது ஆற்றலை வெளிப்படுத்தியது.

விளம்பரம் ((Special Sanik Sammelan)

சீர்மக்கள் வருகை, ஆட்கள் தேர்ந்தெடுத்தல், உள்நாட்டுப் பாதுகாப்பு படை நாள், கொண்டாட்டங்கள, ஆகியவற்றிற்குப் பரவலாக விளம்பரம் கொடுக்கப்பட்டது.

இவ்வாண்டில் நிருவாகம் பயிற்சி, பொருளாதாரம், விளையாட்டுகள் ஆகியவற்றின் இப்பிரிவின் சாதனை மிகவும் மன நிறைவளிப்பதாக இருந்தது. இப்பிரிவிற்கு வருகை தந்த அதிகாரிகள் அனைவரும் இதனைப் பராட்டினர்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மத்திய சங்கீத நாடக அகாதெமியின் கலைவளர்ச்சித் திட்டங்களை மாநில அளவில் நிறைவேற்றுவதற்காகவும், தொண்மை வாய்ந்த தமிழ்க் கலைகளைப் போற்றி பாதுகாத்து மேம்பாடு அடையச் செய்யவும், மாநில அரசால் தோற்றுவிக்கப்பட்ட தன்னாட்சிக் கலைநிறுவனமாகும். இந்நிறுவனம் தமிழ் மரபைப் பேணிக் காத்து வளர்ப்பதற்காகவும், இயல், இசை, நாட்டியம் நாடகம், கிராமியக் கலைகளின் மரபைப் பேணிப் போற்றிக் காப்பதற்காகவும் செவ்வனே இயங்கி வருகின்றது.

2. இந்தியத் துணைக் கண்டத்தில் மாநிலங்களிடையே கலைக் குழுக்களைப் பரிவர்த்தனை செய்தல், வறுமையில் வாடும் அகவை முதிர்ந்த புகழ்பெற்ற கலைஞர்களுக்கு நிதி உதவி வழங்குதல், புகழ்பெற்ற மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்குக் குடும்பக் காப்பு நிதி வழங்குதல், திறமைமிக்க புத்திளம் கலைஞர்களுக்கு ஆதரவு அளித்தல், கலைத் துறையில் அரும்பெரும் சாதனை படைத்திட்ட புகழ்பெற்ற கலைப் பெருமக்களை அடையாளம் கண்டு அவர்கட்கு 'கலைமாமணி' என்ற மாநில விருது வழங்கிச் சிறப்பு செய்தல், தமிழ்ப் பண்பாட்டினைச் சித்தரித்துத் தயாரிக்கும் சிறந்த தமிழ் நாடகங்களை உருவாக்கும் தொழில் துறை நாடகக் குழுக்களுக்கு நாடகத் தயாரிப்பு மானியம் வழங்குதல், அரும்பெரும்கலை நூல்களை வெளியிட நூல் வெளியீட்டு மானியம் வழங்குதல், கலைப் பெருமேதைகளின் நினைவு விழாக்களைநடத்திடும் தொண்டு கலைநிறுவனங்களுக்கு மானியம் வழங்குதல், மறைந்துவரும் தொன்மைச் சிறப்புமிக்க கலை அம்சங்களை வருங்காலச் சந்ததியினரும் கண்டு உணரும் வண்ணம் அவைகளை ஆவணமாக்கவும், புகழ்பெற்ற முதுபெரும் இசைக் கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளைப் பதிவு செய்து பாதுகாத்தல், நம் மரபு வழிக் கிராமியக் கலைகள மற்றும் கவின்மிகு நுண்கலைகளைப் பற்றிய ஆய்வுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தல் மறைந்து வரும் நம் மரபு வழிச் சிறப்புமிக்க கிராமியக் கலைகளின் பெருமை மற்றும் அதன் சிறப்பினை அனைவரும் உணரும் வண்ணம் தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் கிராமிய கலைவிழாக்களை நடத்தி கிராமியக் கலைஞர்களுக்கு கலைநிகழ்ச்சிகள நடத்திட வாய்ப்புக்கள் வழங்குதல், அரசு இசைக் கல்லூரிகள் மற்றும் தமிழ்நாடு திரைப்படத் தொழில்நுட்ப நிறுவனத்தில் பயிலும் ஏழ்மை நிலையிலுள்ள திறமையான மாணவர்கட்குப் படிப்புதவித் தொகை வழங்குதல் ஆகிய பலதரப்பட்ட இன்றியமையா பணிகளை மன்றம் கடந்த 35 ஆண்டுகளாகச் செம்மையுறச் செய்து வருகின்றது.

விருது வழங்கும் விழா :

கலைத் துறையில் செய்ததற்கரிய சேவை செய்த புகழ்மிக்க கலைஞர்களைப் பாராட்டிச் சிறப்புச் செய்யும் முகத்தான் 1989—90 ஆம் ஆண்டு வரை 688 கலைஞர்களுக்கு கலைமாமணி விருதுவழங்கப்பட்டுள்ளது.கலைமாமணி விருதுவழங்கும் விழாவில் இதுவரை 186 மறைந்த புகழ்பெற்ற கலைமேதைகளின் திருவுருவப் படங்களை, மன்றம் திறந்து வைத்துள்ளது. மேலும் அவ்விழாக்களில் ஏற்கனவே கலைமாமணி விருது பெற்றுத் தற்போது நலிந்த நிலையிலுள்ள கலைஞர்களுக்கு பொற்கிழி (பண முடிப்பு) ரூ.1,000 வழங்கும் வகையில் இதுவரை 147 கலைஞர்கள் பயன்பெற்றுள்ளனர்.

மாநிலங்களிடையே கலைக்குழுக்கள் பரிமாற்றம் திட்டம் :

இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு மாநிலத்தில் கலை உணர்வு மற்றும் பண்பாட்டினை அடுத்த மாநிலம் அறிந்து கொள்வதுடன், இவ்வகையில் தேசிய ஒருமைப்பாட்டினை உருவாக்கும் எண்ணத்தில் இத்திட்டத்தினை மத்திய சங்கீத நாடக அகாதெமியின் துணையுடன் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாகச் செயற்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தினால் எண்ணற்ற தமிழகக் கலைக் குழுக்கள் வெளிமாநிலங்களுக்குச் சென்று பயன்பெற்றுள்ளன. ஆண்டு தோறும் இரண்டு அல்லது மூன்று தமிழகக் கலைக்குழுக்களை வெளிமாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றது. அதேபோல் வெளிமாநில கலைக் குழுக்களையும் மற்றும் தமிழகத்திற்கு வரவேற்று மாவட்டத் தலைநகர்களில் அதன் கலை நிகழ்ச்சிகளை நடத்திட ஏற்பாடு செய்துவருகின்றது.

இத்திட்டத்தின்கீழ் 1989—90 ஆம் ஆண்டில் 30 கலைஞர்கள் கொண்ட இரு கலைக் குழுக்களை மன்றம் பீகார், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களுக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்துள்ளது. மன்றம் தமிழக அரசின் சார்பில் குஜராத், மகாராஷ்டிரா ஆகிய மாநிலக் கலைக் குழுக்களை வரவேற்று சென்னையிலும் பிற மாவட்ட தலைநகரங்களிலும் நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளது.

வாழ்வில் நலிந்த அகவை முதிர்ந்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் நிதிஉதவிவழங்குதல் :

தம் வாழ்நாள் முழுவதும் கலைத் தொழிலையே செய்து வந்து தற்போது அகவை முதிர்ந்த நிலையில் நலிந்து வாடும் கலைஞர்களுக்கு மாதந்தோறும் வழங்கிவந்த நிதியுதவி ரூ. 150 தொகையை 1—4—1989 முதல் ரூ. 250 ஆக உயர்த்தி வழங்கப் பட்டது. இத்திட்டத்தினால் அறிக்கை ஆண்டுவரை 2,467 கலைஞர்கள் பயன்பெற்றுள்ளனர். இத்திட்டம் இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகம் மட்டுமே செயல் படுத்துன்றது என்பது குறிப்பிடத்தக்கது.

புகழ்பெற்ற மறைந்த கலைஞர்களின் குடும்பத்திற்குக் குடும்பப் பாதுகாப்பு நிதி வழங்குதல்

புகழ்பெற்ற கலைஞர்களின் திடீர் மறைவினால் சிரமப்படும் குடும்பங்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்கும்பொருட்டு ரூ. 2,000 தொகையைக் குடும்பப் பாதுகாப்பு நிதியாக வழங்கும் திட்டத்தினை மன்றம் செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தினால் அறிக்கை ஆண்டு வரை 20க்கும் மேற்பட்ட கலைக் குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன.

தரமான தமிழ் நாடகங்கள் தயாரித்து மேடையேற்ற தொழில் முறை நாடகக் குழுக்களுக்கு மானியம் வழங்குதல் :

தமிழ் பண்பாட்டினைச் சித்தரித்துத் தயாரிக்கப்படும் புதிய தமிழ் நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றம் செய்யத் துணியும் தொழில்முறை நாடகக் குழுக்களுக்கு நாடகத் தயாரிப்பு மானியமாக ரூ. 10,000 தொகை வரை வழங்கும் திட்டத்தினை மன்றம் பல ஆண்டுகளாகச் செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தினால் அறிக்கை ஆண்டுவரை பெருபான்மையான தொழில்முறை நாடகக் குழுக்கள் பயன்பெற்றுள்ளன.

கலை மேம்பாட்டிற்கு அரும் பெரும் சேவை செய்து மறைந்த கலை மேதைகளின் நினைவு நாளினைக் கொண்டாடுதல் :

வாழ்நாள் முழுவதும் கலை மேம்பாட்டிற்காக உழைத்து மறைந்துள்ள பழம்பெரும் கலை மேதைகளான கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், பாபநாசம் சிவன், சங்கரதாஸ் சுவாமிகள் டி. ஏன். இராசரத்தினம் பிள்ளை ஆகியோர்களின் நினைவுநாட்களை மன்றம் ஆண்டுதோறும் கொண்டாடி வந்துள்ளதைப் போன்று அறிக்கை ஆண்டிலும் மேற்சொன்ன விழாக்களைக் கொண்டாட நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் கலைமேதைகளை நினைவுகூறும் வண்ணம் தொண்டு கலைநிறுவனங்கள் நடத்தும் விழாக்களுக்கு மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் அறிக்கை ஆண்டில் 5 நிறுவனங்களுக்கு மன்றம் மானியம் வழங்கியுள்ளது.

தமிழக மரபு வழிக் கலைகளை ஆவணமாக்கிப் பாதுகாக்கும் திட்டம் :

தமிழக மரபு வழிக் கலைகளை இளைய தலைமுறையினர் அறியும் வண்ணம் அக்கலைகளை ஒலி, ஒளி வடிவில் படம் பிடித்து ஆவணமாகப் பாதுகாக்க வேண்டிய நடவடிக்கைகளை மன்றம் மேற்கொண்டது. இவ்வகையில் தற்போது மறைந்துவரும் மூலைவாழ் மக்களின் நடன வடிவங்களையும், முதுபெரும் புகழ் வாய்ந்த இசைக் கலைஞர்களின் வாய்ப்பாட்டு இசை நிகழ்ச்சிகளையும் ஆவணமாக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வாழ்ந்து வரும் புகழ்பெற்ற கலைஞர்களைப்பற்றி "யார்-எவர்" நூல் பதிப்பித்து வெளியிடுதல் :

தமிழகத்தினைச் சேர்ந்த புகழ்பெற்ற வாழ்ந்துவரும் கலைஞர்களின் வாழ்க்கைக் குறிப்புகளைத் தொகுத்து 'யார்—எவர்' என்ற நூலைத் தொகுத்து வெளியிடத் தீர்மானித்து, முதற்கண் பரதநாட்டியம், இசைக் கலைஞர்களின் வாழ்க்கைக் குறிப்புகளைத் தொகுத்து வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அரிய கலை நூல்களை வெளியிட நிதி உதவி செய்தல் :

தமிழில் அரிய கலை மற்றும் பண்பாட்டு நூல்கள் வெளியிட மன்றம் தாராளமாக நிதி உதவி செய்துவருகின்றது. இத்திட்டத்தினால் அறிக்கை ஆண்டுவரை சுமார் 80க்கும் மேற்பட்ட கலை நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

காலையில் பயிற்சி பெற்ற புத்தெளிய கலைஞர்களுக்குத்தக்க வாய்ப்புகள் நல்குதல் :

வாய்ப்பாட்டு மற்றும் இசை பரதநாட்டியம் ஆகிய கலைத் துறைகளில் பயிற்சி பெற்ற புத்தெளிய கலைஞர்கள் அறிமுகம் செய்யும் வண்ணம் தமிழகத்தில் செம்மையுடன் இயங்கிவரும் கலைநிறுவனங்களுக்கு மன்றம் தேவையான நிதி உதவி செய்து அதன் வாயிலாகக் கலைநிகழ்ச்சிகள் நடத்திடச் செய்து ஊக்குவித்து வருகின்றது.

அறிக்கை ஆண்டுவரை ஆயிரக்கணக்கான கலைஞர்களை தமிழகத்தில் சிறந்த முறையில் இயங்கிவரும் அனைத்துக் கலைநிறுவனங்களின் வாயிலாக நிகழ்ச்சிகள் நடத்திட மன்றம் வாய்ப்புக்களை ஏற்படுத்தி உள்ளது. 1989—90 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் விளைவாக 40 கலைஞர்கள் அதற்கென அமைக்கப் பெற்ற வல்லுநர் குழுக்களால் தேர்வு செய்யப்பெற்று 11 கலைநிறுவனங்களின் வாயிலாக தமிழகத்து அனைத்துப் பகுதிகளிலும் கலைநிகழ்ச்சிகள் நடத்திட ஏற்பாடு செய்யப்பட்டது.

பொதுப்பணித் துறை.

கொதி கலன்கள்

இவ்வாண்டு இந்திய கொதிகலன்கள் சட்டம் 1923–ன்படி நீராவி கொதிகலன்கள் ஆய்வாளர் மற்றும் மூன்று துணைத் தலைமை நீராவி கொதி கலன்கள் நிர்வாகம் நடத்தி வருகின்றது.

1989–90 ஆம் ஆண்டு இறுதியில் செயற்படும் பட்டியலின்படி தமிழ்நாட்டில் உள்ள மொத்த கொதிகலன்கள் மற்றும் எக்னாமைசிகளின் எண்ணிக்கை 2183 ஆகும். இவற்றில் 2142 கொதிகலன்கள் மற்றும் எக்னாமைசர்கள் இயங்கும் நிலையைப் பொறுத்து இயங்குவதற்கு சான்றிதழ்கள் இத்துறையால் வழங்கப்பட்டுள்ளன. சில கொதிகலன்கள் பழுது பார்க்க வேண்டியுள்ளதாயும் மற்றும் சில வணிக சூழ்நிலையை பொறுத்தும் இயங்காமல் இருக்கின்றன. பழுது பார்க்க வேண்டிய கொதிகலன்களை வட்ட நீராவி கொதிகலன்கள் ஆய்வாளர் பழுது பார்ப்பதற்கு முன்பும் பின்பும் ஆய்வு செய்கிறார்கள்.

கொதிகலன்களை ஒருவாக ஆய்வு செய்தல்.

இந்திய கொதிகலன்கள் விதி வரம்புகள் 1950க்கு சமீபத்தில் விதி வரம்பு பிரிவு 391 ஏக்கு மத்திய அரசால் திருத்தம் வழங்கப்பட்டது அதன்படி கொதிகலன்கள் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 50 ஆண்டுகள் முடிவுற்ற கொதிகலன்களை உலோக ஆய்விற்கு (மெகானிக்கல் டெஸ்ட், கெமிகல் டெஸ்ட், மெட்டலோகிராபிக் டெஸ்ட்) உட்படுத்தப்பட்டு, மத்திய அரசுக்கு சொந்தமான பொது நிறுவனமாகிய பாரதி கனரக தொழிற்சாலையின் சோதனை கூடத்தின் சோதனை செய்யப்பட்டு சோதனை யில் தேறிய கொதிகலன்களை மேற்கொண்டு இயங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

கொதிகலன்களை பழுது பார்ப்பதற்கு உரிய தரமுள்ள பொருட்களையே பயன் படுத்த வேண்டும் என்பதற்காக இந்த கொதிகலன்கள் விதிகள் 1950ன்படி வரையறுக்கப் பட்ட வேலையின் தரத்திற்கும் பொது நல பாதுகாப்பின் அடிப்படையாகக் கொண்டு கொதிகலன்களில் மாற்றப்படும் அனைத்து பொருட்களுக்கும் உரிய சோதனைச் சான்றிதழ்களில் படிவம் 3ஏ, 3பி, 3 சி மற்றும் எஃகு தயாரிப்பாளர்கள் வழங்கும் படிவம் 4 சான்றிதழ்கள் உடன் ஒப்புதலுக்கு அனுப்பப்படவேண்டும் என்று வலியுறுத்தப் படுகின்றன.

கொதிகலன்களை பழுது பார்க்க தயாரிக்க நீராவிக் குழாய்கள் அமைத்தல் மற்றும் குழாய்கள் அடைப்பான்கள், தயாரிக்கும் பயன்படுத்தப்படும் பற்ற வைப்பாளர்களின் (வெல்டர்ஸ்) வேலைத்திறன் தகுதியை, உரிய வழி முறையில் செயல்முறையாக சோதிக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

இந்திய கொதிகலன் விதி 7ன்படி பதிவு செய்யப்பட்ட கொதிகலன்களின் விவரமும் பிற மாநிலத்திலிருந்து கொண்டுவரப்பட்ட கொதிகலன்களும் மற்றும் வெளிமாநிலத் திற்கு அனுப்பப்பட்ட கொதிகலன்களின் எண்ணிக்கையும் கீழ் வருமாறு குறிக்கப் பட்டுள்ளன:—

சென்ற ஆண்டின் முடிவில் உள்ள மொத்த கொதிகலன்கள் மற்றும் எக்னாமைசர்களின் எண்ணிக்கை	2100 எண்ணம்
சேர்த்து—	
இவ்வாண்டு பதிவு செய்யப்பட்ட கொதிகலன்களின் மொத்த எண்ணிக்கை, எக்னாமைசர்கள்	82
பிற மாநிலத்திலிருந்து கொண்டு வரப்பட்ட கொதிகலன்களின் எண்ணிக்கை.	12
கழிக்க—	
நடந்த நிதியாண்டில் (89.90)ல் கொதிகலன்களினால் விபத்து ஏற் பட்ட விவரங்கள்	
52—4—1989 அன்றுகொதிகலன் எம்.எம். 3844க்குக்கு இந்த விபத்து ஏற்பட்டு கொதிகலன் பயனற்றதென கழிக்கப்பட்டது.	
இவ்வாண்டின் புதிதாக தயாரிக்கப்பட்ட கொதிகலன்களின் இனங் களை இத்துறையின் ஆய்வு செய்து சான்றளிக்கப்பட்ட விவரங்கள்	

திருச்சி பாரத கனரக மின்கல நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட உயர் அழுத்த கொதிகலன்களின் எண்ணிக்கை .. .. .. 31 எண்ணம்

கே. சி. பி. நிறுவனத்தாரால் உற்பத்தி செய்யப்பட்ட கொதிகலன் களின் எண்ணிக்கை 6

பிற கொதிகல உற்பத்தி நிறுவனங்கள் தயாரித்த கொதிகலன்களின் எண்ணிக்கை வருமாறு:—

ஜெயா பாய்லர் ; கோயம்புத்தூர்	7	
கெமி பாய்லர்ஸ், ராணிப்பேட்டை	3	,,
கனவேரிஎஞ்சினியரிங் எண்டர்பிரைசஸ்	6	,,
வி. கே.என். ஸ்டச்சுரல்ஸ்	2	
ஐ. ஏ. சி. சி. ராணிப்பேட்டை	10	
சிற்றார் வெல்ஸ், திருச்சிராப்பள்ளி	27	
வீசன்ஸ், திருச்சிராப்பள்ளி	2	
இக்லி புரூட், பெருங்குடி	1	
எர்னோ டைன்ஸ், கும்மிடிபூண்டி	7	

எக்னாமைசர்கள் :

எர்கோடைன்ஸ், சென்னை	2	

திருச்சி கனரக பெல் நிறுவனத்தில் தயாரிக்கப்பட்டவை :

நீர் மற்றும் நீராவி உலோக பீப்பாய்கள்	62	எண்ணம்
பாதுகாப்புஅடைப்பான் மற்றும் அடைப்பான்கள்	55547	
நீராவி சேமிப்பிடங்கள்	404	,,
தகட்டால் செய்யப்பட்ட குழாய்கள்	542	டன்
அமைக்கப்பட்ட குழாய்கள்	839	டன்
கேடு விளைவிக்கும் மற்றும் கேடு விளைவிக்காத சோதனைகளும் மற்றும் கதிர் அச்சு முறையில் சோதனைகளும் செய்யப்பட்ட எண்ணிக்கை	2958	எண்ணம்
பாதுகாப்பு அடைப்பான் திறன் ஆய்வு	6860	டன்
புதிய குழாய்கள் எஸ்.எஸ்.டி.பி. திருச்சிராப்பள்ளி	5662	மெட்ரிக் டன்.
டியூப் பிராடக்ட்ஸ், சென்னை	3,500	டன்

இத்துறையின் மற்ற வைப்பாளர்களுக்கு (வெல்டர்ஸ்) கோட்பாடு முறையிலும் செயல் முறையிலும் சோதனை செய்யப்பட்டு இந்திய கொதிகலன்கள் விதிகளுக்குட் பட்ட சான்றிதழ்கள் நடப்பு ஆண்டில் வழங்கிய விவரங்கள் பின்வருமாறு :

பற்ற வைப்பாளர்கள் விவரங்கள் :

சோதனை செய்யப்பட்ட பற்ற வைப்பாளர்கள்	654	நபர்கள்
தேர்ச்சி பெற்றவர்கள்	605	
தேர்ச்சி பெறாதவர்கள்	49	

வரவுகளும் செலவுகளும் :

கொதிகலன் ஆய்வுக் கட்டணம், பதிவு கட்டணம், கொதிகலன் தயாரிக்கப்படும் ஒவ்வொரு நிலையிலும் ஆய்வுக் கட்டணம், எஞ்சினீடர் ஆலோசனைகளின் இயந்திர

சோதனைக் கட்டணம் பற்றாள்வப்பாளர்களுக்கு (வெல்டர்ஸ்) நடத்தப்படும் தேர்வுக் குரிய் கட்டணம் வரைபட ஆய்வுக் கட்டணம் ஆகிய வகையராக்கள் மூலம் வருவிக்கப்பட்ட மொத்த கட்டணத் தொகை.

வரவு ரூபாய்.	62,60,714.35
இத்துறையில் இவ்வாண்டில் செலவழிக்கப்பட்ட் தொகை	23,05,3 4.00

மின் ஆய்வுத் துறை

1910 ஆம் ஆண்டு இந்திய மின்னியல் சட்டத்தின் கீழ் இந்த மின் ஆய்வுத் துறை ஒரு சட்ட ரீதியான அமைப்பாக இயங்கி வருகிறது. மின் விபத்துகளிலிருந்து பொது மக்களையும் தொழிலாளர்களையும் பாதுகாப்பதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு இத்துறை செயல்படுகிறது. மற்ற மாநிலத்திலும் இத்தகைய சட்ட ரீதியான அமைப்பு களை உளளன.

பொதுவாக தொழிற்சாலை—ஆய்வுத் துறை (Inspectorate of Factories) மற்றும் கொதிகல ஆய்வுத் துறை (Inspectorate of Steam Boilers) ஆகிய வற்றின் செயல்பாட்டுக்கு இத்துறை செயல்பர்ட்டினை ஒப்பிடலாம்.

தொழில் வளர்ச்சி மற்றும் சினிமா துறை வளர்ச்சிக்கு உறுதுணையாக இத்துறை செயல்பட்டு வருகிறது. அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ ரூ. 527.35 லட்சம் வருவாய் ஈட்டித்தருகிறது.

1910 ம் ஆண்டின் இந்திய மின்சார சட்டம், பிரிவு 36-ன்கீழ் மாநில அரசால் ''மின்சார ஆய்வாளராக'' தமிழ்நாடு முழுவதற்கும் அரசுத் தலைமை மின்சார ஆய்வா ளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவரது அதிகாரப் பரப்பு மின் வாரியத்துக்குஉட்பட்ட தாகவும், மத்திய அரசின் கீழ் இயங்கும் சுரங்கம், எண்ணெய் வயல்கள் மற்றும் இருப்புப் பாதைகள் நீங்கலாயும் உளளது. இவர் மின் ஆய்வுத் துறைக்கு தலைவராக உள்ளார். நிர்வாகம் சம்பந்தப்பட்ட அளவில் பொதுப் பணித் துறை செயலாளரின் கீழ் வருகிறார். பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர்களின் பதவிக்கு சமமாகும் இவரது பதவி யாகும்.

முதுநிலை மின் ஆய்வாளர், மின் ஆய்வாளர், உதவி மின் ஆய்வாளர் மற்றும் இளநிலை மின் ஆய்வாளர் ஆகியோர் இந்திய மின்னியல் சட்டத்தின் கீழ் ''பொறுப்பில் Officers appointed to assist the Electrical Inspector'' என்கிற பொறுப்பில் 'மின் ஆய்வாளர்' (Electrical Inspector) என அரசு தலைமை மின் ஆய்வாளருக்கு உறுதுணை யாக இருந்து செயல்படுகின்றனர். அரசு தலைமை மின்ஆய்வாளர் மற்றும் இந்த இதர ஆய்வாளர்களாலும் மேற்கொளளப்படும் ஆய்வுகளாவன :

1. உயர் அழுத்த மின் அமைப்புகள், அதில் அடங்கிய நடுத்தர மின் அமைப் புகள், மற்றும் மின் வாரிய பவர், ஹவுஸ், துணை மின் நிலையங்கள, பகிர்மான மின் மாற்றிகளின் ஆய்வுகள புதியதாக நிறுவப்பட்டு செயல்பாட்டுக்கு கொண்டுவரப்படும் போது விதி 63-ல் கீழும் ஏற்கனவே பயன்பாட்டின் உளளவை 3 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் ஆய்வு செய்தல்.

2. இந்திய மின்னியல் விதி 46, 1956-ன் படி உயர் அழுத்த மின் அமைப்பு களையும் அவற்றில் அடங்கிய நடுத்தர மின் அமைப்புகளையும் ஆய்வு செய்தல்.

3. நியான் விளக்கு, எக்ஸ்ரே போன்றவற்றை பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு முன் ஆய்வு செய்தல்.

4. 1910 இந்திய மின்னியல் சட்ட பிரிவு 30-ன் கீழ் பொருட்காட்சி, சர்க்கஸ் மற்றும் பொதுக்கூட்டம் நடைபெறும் இடங்களில் தற்காலிகமாக அமைக்கப்படும் மின் அமைப்புகள் மற்றும் ஜனாதிபதி உப ஜனாபதி, பிரதமர், முதல்வர் மற்றும் முக்கிய பிரமுகர்களின் வருகையை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சிகள தொடர்பாக அமைக்கப்படும் தற்காலிக மின் அமைப்புகளை ஆய்வு செய்தல்.

5. பிரிவு 80-ஏ-ன் கீழ் 15 மீட்டரும் அதற்கு மேலும் உயரமுள்ள பல மாடிக் கட்டிடங்களில் மின் விதியோக முறையை ஆய்வு செய்து நன்னிலை சான்று வழங்குதல்.

மின் ஆய்வுத்துறை அமைப்பு ((Set up)) :

ஒரு வட்ட அலுவலகம் (மேற்பார்வை பொறியாளர் நிலையில்) முதுநிலை மின் ஆய்வாளரை தலைமையாகக் கொண்டு கோயம்புத்தூரில் செயல்பட்டு வருகிறது. இவரது அதிகார வரம்பு 13 மாவட்டங்களுக்குட்பட்டதாகும். கோயம்புத்தூரில் ஒரு பிரிவும், மதுரையில் மற்றொரு பிரிவும் தலைமையாகக் கொண்டு இரு கோட்டங்கள் முதுநிலை மின் ஆய்வாளரின் நேரடி கண்காணிப்பின் கீழ் செயல்படுகிறது.

அரசுத் தலைமை மின் ஆய்வாளரின் நேரடிப் பார்வையின் கீழ் மூன்று கோட்டங்கள மின் ஆய்வாளரை தலைமையாகக் கொண்டு (கோட்டப் பொறியாளர் நிலையில்) திருச்சி, சென்னை, வேலூர். ஆகிய மூன்று இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்த மூன்று மின் ஆய்வாளர்களின் அதிகார வரம்பில் ஏழு மாவட்டங்கள அடங்கும்.

21 உபகோட்டங்கள, உதவி மின் ஆய்வாளரை தலைமையாகக் கொண்டு (உதவிக் கோட்டப் பொறியாளர் நிலையில்) இயங்கி வருகின்றது. மேலும் இரண்டு உபகோட்ட அலுவலகங்கள அமைக்க அரசாணை பெறப்பட்டுள்ளது.

தலைமை அலுவலகத்தில், மின் ஆய்வாளர், தொழில் நுட்பம் தொழில் நுட்பப் பிரிவின் தலைவராக (கோட்டப் பொறியாளர் நிலையில்) அரசுத் தலைமை மின் ஆய்வாளருக்கு தொழில் நுட்ப சம்பந்தப்பட்ட நடவடிக்கையில் உதவியாக செயல்பட்டு வருகிறார்.

அரசு தர நிர்ணய ஆய்வுக்கூடம் (Government Electrical Standard Laboratory) ஒன்று தொழில் நுட்பப் பிரிவின் கீழ் செயல்பட்டு வருகிறது. பொது மக்களிடமிருந்து பெறப்படும் மீட்டர் மற்றும் இதர மின் கருவிகளை பரிசோதனை செய்வதும், அதன் திறன் நல்ல நிலையில் உளளதா என சோதிப்பதும் பழுது பார்த்தலும் இந்த ஆய்வுக் கூடத்தில் மேற்கொளளப்படுகிறது. மற்ற மாநிலங்களிலிருந்தும், தமிழ்நாடு வாரியத் திடமிருந்து பெறப்படும் மீட்டர்களும், கருவிகளும் இந்த ஆய்வுக் கூடத்தில் சோதனை செய்யப்படுகிறது.

1910, இந்திய மின்னியல் சட்டம், பிரிவு 33-ன் கீழ் மின் விபத்துக்கள புலனாய்வு செய்யப்படுகிறது.

தமிழக அரசின் கீழ்க்கண்ட சட்டம் மற்றும் விதிகள் இத்துறையால் அமுல் படுத்தப்படுகின்றன :—

(1) 1939-ம் ஆண்டு மின் தீர்வை சட்டம் மற்றும் விதிகள்;

(2) 1953-ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்க சட்டம் மற்றும் விதிகள.

(3) 1962-ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வு வரிச் சட்டம் மற்றும் விதிகள்.

(4) 1973-ஆம் ஆண்டு தமிழ்நாடு நாட்டுடைமை சட்டம் மற்றும் விதிகன்.

மேற் குறிப்பிட்ட ஒவ்வொரு சட்ட விதிகளின் கீழ் இத்துறையின் செயல்பாடு கீழே சுருக்கமாக தரப்பட்டுள்ளது :—

1. தமிழ்நாடு திரையரங்க (ஒழுங்குமுறை) விதிகள், 1957 :

நிரந்தர, பகுதி நிரந்தர மற்றும் நகரும் திரையரங்குகள இயங்க வசதியாக அவற்றை ஆய்வு செய்து, அவற்றில் உள்ள மின் அமைப்புகள பாதுகாப்பாக உளளது என்பதற்கான சான்றிதழ் (D Form Certificate) வழங்கியதன் அடிப்படையில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சென்னை நகர காவல் ஆணையரால் திரையரங்கும் இயங்கிட சான்றிதழ் (Form Certificate) வழங்கப்படுகிறது.

திரையரங்கிலுள்ள அமைப்புகள், பொது மக்களின் பாதுகாப்புக்கு உகந்ததாக உள்ளனவா எனவும் ஆண்டுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகிறது.

2. 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் தீர்வை சட்டம் :

மாநிலத்தின் வருவாயைப் பெருக்கும் நோக்கத்துடன் ஒரு மின் அலகின் விலை 20 பைசாவுக்கு மேல் விற்பனை செய்யப்படும் சில இனங்களுக்கு ஒரு மின் அலகுக்கு மூன்று பைசா வீதம் தீர்வை விதிக்கப்படுகின்றது. இங்கள் தோறும் இத்தீர்வை மின் வழங்கு நிறுவனத்தாரால், அவர்களது சொந்த வருவாயிலிருந்து செலுத்தப்படுகிறது. ஐந்து நகராட்சி மின் வழங்கு நிறுவனங்களும், நெய்வேலி லிக்னைட் கம்பெனி கும்பகோரணம், திருமயம் மற்றும் வத்தலாசி கிராம கூட்டுறவு மின் வழங்கு சங்கங்கள், 3 மின் தீர்வை செலுத்த வேண்டும்.

1962-ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வு வரிச் சட்டம் :

இச்சட்டத்தின் கீழ் உயர் மின் அழுத்த நுகர்வோர் மின் வரி செலுத்த வேண்டும். இந்த வரியானது மின்சாரம் வழங்குபவரால் வசூல் செய்யப்பட்டு அரசுக்கு செலுத்தப்படுகிறது.

தமிழ்நாடு மின் வாரியம், மற்றும் மின் உரிமைதாரர்களிடமிருந்து மாதாந்திர அறிக்கை பெறப்பட்டு சரிபார்க்கப்பட்டு வரி பதிவுகள் மேற்கொண்டு மின் வரி அரசுக்கு முறையாக செலுத்தப்படுகிறதா என்றும் கண்காணிக்கப்படுகிறது. நுகர்வோரிட மிருந்து மின் வரி பெற்று அரசுக்குச் செலுத்துவதற்காக 1|2 சதவீதம் மின் வரித்தண்டக் கட்டணம் அரசால் மின் வாரியம்: மின் உரிமைதாரர்[2] ஆகியோருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

4. தனியார் மின் சக்தி வழங்குவோர் நாட்டுடைமையாக்கப்பட்ட சட்டமும் விதி களும் :

மேற்கண்ட சட்டத்தின்படி அரசுத் தலைமை ஆய்வாளர் நாட்டுடைமை அலுவல ராக அரசால் நியமிக்கப்பட்டு நாட்டுடைமையாக்கப்படும் நிறுவனங்களுக்கு சட்டத் தின்படி உரியவரிடம் கொடுப்பதும் மற்றும் தொடர்புடைய பணிகளை கவனிக்க வேண்டியவராகிறார்.

மின் ஆய்வுத் துறை.

1. பொது :

திரு. இல. அ. சிநிவாசன், பி.ஈ., எப்.ஐ.ஈ. தொடர்ந்து இவ்வாண்டும் அரசுத் தலைமை மின் ஆய்வாளராக செயல்பட்டு வருகிறார்.

1. கீழ்க்கண்டுள்ளவைகள் மின் ஆய்வுத்துறை பணிகளின் சிறப்பியல்புகளாகும் :

2. . வருவாய் :

அ. தமிழ்நாடு மின்சார (நுகர்வு வரி) சட்டம் 1962-ன் கீழ் வசூலிக்கப்பட்ட வரி விவரம் :

	(இலட்சங்களில்)
1. தமிழ்நாடு மின் வாரியத்தின் மின் சக்தி விற்பனை மூலமாக.	5.80
2. மின் உரிமங்கள் மூலமாக	இல்லை.
3. மின் சக்தியை உற்பத்தி செய்ய நுகர்வு மூலமாக	290.59
ஆ. 1956-ஆம் ஆண்டு இந்திய மின் விதிகளின்படி வசூலான கட்டணத்தொகை	146.91
3. 1939-ம் ஆண்டு தமிழ்நாடு மின்சார தீர்வைச் சட்டத்தின்படி தீர்வை வசூல் தொகை	84.05
மொத்தம்	527.35

	(ரூபாய் இலட்சங்களில்)
3. செலவினம் :	
அ. 2045 கணக்குத் முதன்மை தலைப்பில்	88,97,171.71
ஆ. 2045 கணக்குத் வீதி தலைப்பில் ..	4,78,094.00
இ. வசூல் பணிக்கான கட்டணத் தொகை (தமிழ்நாடு மின் வாரியம்)	5,737
ஈ. வசூல் பணிக்கான கட்டணத் தொகை (மின் வழங்கும் உரிமம் பெற்ற நிறுவனங்கள்)	
4. 1982-ம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வு வரிச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்	
அ. தமிழ்நாடு மின் வாரிய வருவாய் பிரிவுகள் மட்டும் திட்ட அலுவலகங்கள்	14
ஆ. மின் வழங்கும் உரிமம் பெற்ற நிறுவனங்கள்	9
இ. 1939-ம் ஆண்டு தமிழ்நாடு தீர்வைச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்	

		ரூபாய் இலட்சங்களில்
5.	தமிழ்நாடு திரையரங்கம் (ஒழுங்குமுறை) விதிகள் 1957 :	
1.	மொத்தத் திரையரங்கங்கள் (காலாண்டு முடிவில்) (31—3—1990-ல்)	
	அ. குளிர்சாதன வசதியுள்ள நிலையான திரையரங்குகள் ..	124
	ஆ. குளிர்சாதன வசதியற்ற நிலையான திரையரங்குகள்	1,292
	இ. பகுதி நிரந்தரம் திரையரங்குகள்	218
	ஈ. இடம் பெயர் திரையரங்குகள்	953
	உ. திறந்தவெளி திரையரங்குகள்	7
2.	மின் சான்றிதங்கள் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் தொடர்பான விவரங்கள்—வீடியோ—இல்லை.	
	அ. புதியதாக வழங்கப்பட்டவை ..	188
	ஆ. புதுப்பிக்கப்பட்டவை	924
6.	திரைப்படக்கருவி இயக்குநர் உரிமம் தொடர்பான விவரங்கள்—	
	அ. புதியதாக வழங்கப்பட்டவை	381
	ஆ. புதுப்பிக்கப்பட்டவை	850
	இ. இரண்டாம்படியாக வழங்கப்பட்டவை	28
7.	இந்திய மின் விதிகள் 1956 மற்றும் இந்திய மின் சட்டம் 1910 ஆகியவைகளின்படி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் :	
	அ. துணை மின் நிலையங்கள்	158
	ஆ. மின் மாற்றிகள் 27,761— 604—	28,365
	இ. விதிகள் 63 மற்றும் 64-ன்கீழ்	1,524
	ஈ. விதி 46-ன் கீழ்	2,772
	உ. மின் வழித் தடங்கள்	21
	ஊ. மின்னாக்கி	981
	எ. ஒளியுமிழ் விளக்குகள்	36
	ஏ. ஒளிக்கதிர்	17
	ஐ. பிரிவு 30-ன்கீழ்	114
	ஒ. இந்திய மின்சாரச் சட்ட பிரிவு 5-ன் கீழ் ஆய்வு	11
	ஓ. மற்றவை	74
	ஔ. மின் விபத்துப் புலனாய்வு	471
	தமிழ்நாடு திரையரங்க விதிகளின்படி திரையரங்க ஆய்வுகள்:	
	அ. நிலையான திரையரங்குகள்	1,580
	ஆ. இடம் பெயர் திரையரங்குகள்	1,089
	16/35 எம்.எம். திரைப்படக் கருவிகள்	2
	திறந்தவெளி திரையரங்குகள்	5
	இ. பகுதி நிரந்தரம் திரையரங்குகள் ...	229
8.	காலாண்டு முடிவில் மொத்த உயர் மின் அழுத்த நுகர்வாளர்கள்	2,632

		ரூபாய் இலட்சங்களில்
9.	உயர் அழுத்த மின் தடங்கள் மற்ற மின் செயல்முறை அமைப்புகள் ஆகியவற்றிற்கான ஒப்புதல் வழங்குதல் தொடர்பான விவரங்கள்	
அ.	ஒப்புதல் வழங்கப்பட்ட செயல்முறை அமைப்புகள்	1,297
ஆ.	ஒப்புதல் வழங்கப்பட்ட உயர் அழுத்த மின் தடங்கள்	19
இ.	புதியதாக வழங்கப்பட்ட மற்றும் மறு உயிர்ப்பு வழங்கப் பட்ட அனுமதிகள்	49
ஈ.	வழங்கப்பட்ட பாதுகாப்புச் சான்றிதழ்கள்	
உ.	ஒப்புதல் வழங்கப்பட்ட சோதனைச் சான்றிதழ்கள	10
ஊ.	நகராட்சி மன் நிறுவனங்களுக்கு இந்திய மின் சட்டப் பிரிவு 27-ன்படி வழங்கப்பட்ட ஒப்பளிப்புகள் ..	808
எ.	வழங்கப்பட்ட மின்னாக்கி அனுமதிகள்	102
ஏ.	வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்பளிப்புகள்	
10.	அரசு மின்சார தர நிர்ணய ஆய்வுக் கூடத்தில் மேற் கொள்ளப்பட்ட சோதனைகள் :	
அ.	சோதனை செய்யப்பட்ட ஆர்.எஸ்.எஸ். மீட்டர்கள்	689
ஆ.	சோதனை செய்யப்பட்ட தியணைப்புக் கருவிகள்	1,507
இ.	உயர் அழுத்த மற்றும் இதரக் கருவிகளின் ஆய்வுகள்	2,303
11.	1989—90-ஆம் ஆண்களில் ஏற்பட்ட 439 மொத்த மின் விபத்துக்கள் விவர அறிக்கை இணைக்கப்படுகிறது.	உயிரிழப்பு. 299 உயிரிழப்பில்லாதது. 140

12. மின் உரிமம் வழங்கும் வாரியம் :

	வழங்கப்பட்டவை.	
	புதியதாக.	புதுப்பித்து.
எஸ். ஏ. உரிமம்	8	4
அ. எஸ்.பி. உரிமை ஒப்பந்தக்காரர் மின் உரிமங்கள்	35	166
ஆ. இ.பி. ஒப்பந்தக்காரர் மின் உரிமங்கள்	330	2,794
இ. மேற்பார்வையாளர் தகுதிச் சான் றிதழ்கள்	1121	1479
ஈ. மின் கம்பியாளர் தகுதிச் சான்றிதழ்கள்.	1,697	5,082
பவர் ஜெனரேட்டின்ஸ்டேஷன் தகுதிச் சான்றிதழ்	11	..
எக். பி. உரிமம்	76	58

நிலத்தடி நீர்

1989-90 ஆம் பொதுப்பணித் துறையின் நிலநீர்ப் பிரிவில் நிலநீர் ஆய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1 மழை பெய்யளவு ஆய்வு :

380 மழை பெய்யளவு நிலையங்களிலிருந்து விவரங்கள் சேகரிக்கப்பட்டு மழை பெய்யளவு மாறுபாடுகள் நீர்மட்ட ஏற்ற இறக்கங்களுடன் ஒப்புமை செய்யப்பட்டிருக்கின்றன. மழை பெய்யளவு விவரங்கள் ஆவணம் செய்யப்பட்டு பலவிதமான உபயோகப்படுத்தும் முகமைகளான தமிழ்நாடு நீர்வழங்கும் மற்றும் கழிவு நீர் வாரியம் விவசாயத் துறை நீர்பாசனம் முதலியவற்றிற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

1. நீர்வடி நில ஆய்வு :

மழையளவு நீர் ஆவியாதல் மண் ஈர அளவுகளுக்கு இடையே உள்ள தொடர்புகளை அறிய வேண்டி இத்துறை தமிழ்நாடு முழுவதும் பரவலாக பலவித மண் பகுதியில் 13 இடங்களில் நீர்வடிநில ஆய்வகங்கள் நிறுவியுள்ளது. இந்த ஆய்விலிருந்து சேகரிக்கப்படும் விவரங்கள் நிலத்தடிநீர் இருப்பைக் கணக்கிட உபயோகிக்கப்படுகின்றன.

2. நீர்மட்டம் கவனித்தல் :

தமிழ்நாட்டில் தற்போது இட்டத்தட்ட 2,100 பார்வைக் கிணறுகள் ஆய்வுக் கிணறுகளாக தேர்வு செய்யப்பட்டு ஒவ்வொரு திங்களும் பார்வைக் கிணறுகளில் நீர் மட்டம் கவனித்தல் தொடரப்படுகின்றது. நீர்மட்ட ஏற்ற இறக்க அளவுகளின் ஆய்வு ஒரு இடத்தில் நிலத்தடி நீரின் இருப்பைக் கணக்கிட வெகுவாக உதவுகின்றது. நீர்மட்ட விவரங்களைக் கொண்டு நிலநீர் செய்தி வெளியீடு ஒவ்வொரு திங்களும் தயாரிக்கப்பட்டு உபயோகப்படுத்தும் முகமைகளான தமிழ்நாடு நீர் வழங்கும் மற்றும் கழிவுநீர் வாரியம், விவசாயப் பொறியியற்துறை அண்ணா பல்கலைக்கழகம் முதலியவற்றிற்கு அனுப்பப்படுகின்றன.

3. நில அமைப்பு புகைப்பட ஆய்வு :

விண்வெளி மற்றும் தொலை உணர்வுப் புகைப்படங்களைக் கொண்டு ஒரு குறிப்பிட்ட இடத்தின் நிலவியல்/நில அமைப்பியல்/நில உபயோகம் முதலியவற்றை ஆய்ந்தறிந்து வரைபடங்கள் தயாரிக்கப்படுகின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு வரைபடங்களில் நிலத்தடி நீர் கிடைக்க வாய்ப்புள்ள இடங்கள் குறிக்கப்படுகின்றன.

4. நிலத்தடிநீர் ஸ்ரிஙாக்கத் திட்டம் :

நிலத்தடிநீர் ஆய்விலிருந்து சேகரிக்கப்பட்ட விவரங்களைக் கொண்டு கிராமத்தில் நிலத்தடிநீர் நிலைமை ஏந்தஷிதமான கிணறுகள் எடுக்கலாம் போன்ற விவரங்கள் விவசாயிகளுக்கு இத்திட்டத்தின் மூலம் தெரிவிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் 1,140 கிராமங்கள் 1989-90 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

5. கிணறுகளுக்கு இடையே உள்ள தூரத்தைக் குறைக்க நீர் இறவைச் சோதனை :

நிதியளிக்கும் நிறுவனங்கள் சிறுபாசனத் திட்டங்களுக்கு கடன் உதவி செய்கின்றன. இரண்டு கிணறுகளுக்கு இடையே உள்ள தூரங்கள் 150 மீட்டரிலிருந்து 200 மீட்டர் வரை இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. சில வாய்ப்புள்ள இடங்களில் இதனை மேலும் குறைக்கும் வாய்ப்பும் இருக்கிறது. இதை மனத்தில் கொண்டு தமிழ்நாடு முழுவதும் 473 நீர்இறைவைச் சோதனைகள் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதனைக் கொண்டு இடைவெளித் தூரத்தைக் குறைக்க "நபார்டு" நிறுவனத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இது மிகவும் உபயோகமாக இருக்கும்.

6. நில இயற்பியல் ஆய்வு :

நிலத்தடி நீர் ஆய்வில் நில இயற்பியல் ஆய்வு நிலத்திற்கு அடியில் உள்ள நிலநீரியல் தன்மைகள் அதாவது நீர்ப் படிவத்தின் ஆழம் வேறுபட்ட ஊடுசெல் நீர்த் தரம் ஆகியவற்றை அறிய ஆற்றப்படுகின்றது. நிலத்தடி ஆய்வின் மூலம் துளை கிணறுகளின் ஆய்வு பரிந்துரை செய்ய முடிகிறது. நிலப்பரப்பு ஆய்வின் 3,851 இடங்கள் இந்த ஆண்டில் ஆய்வு செய்யப்பட்டிருக்கின்றன.

7. புனி வேதியியல் ஆய்வு:

பார்வைக் கிணறுகள் துலை கிணறுகள் ஆறுகள் இவற்றிலிருந்து அவ்வப்பொழுது சேகரிக்கப்பட்ட நீர் மாதிரிகள் வேதியியல் பூர்வமாக விவசாயத்திற்கும் குடிப்பதற்கும் ஏற்றவையாக இருக்கின்றனவா என்று பகுத்தாய்ந்து உணரப்படுகின்றன. இப்பணி சென்னை மற்றும் தஞ்சாவூர் ஆய்வகங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த ஆண்டில் 11,555 நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டிருக்கிறது.

ஆலோசனைப்பணி :

பொதுப்பணித் துறையின் நிலத்தடிநீர் பிரிவு ஆலோசனைப் பணியை விவசாயிகளுக்கும் பொது மக்களுக்கும் அரசு துறைகளுக்கும் பௌதீக ஆய்வின் மூலம் ஆய்வு செய்து, கிணறுகள் தோண்டவும், துளைக்கிணறுகள் துளையிடவும் இருக்கும் கிணறுகளை ஆழப்படுத்தவும் தகுதியான இடங்கள் தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்படுகின்றன. விவசாயப் பெருமக்கள் இத்திட்டத்தினால் வீணான செலவை குறைக்க முடிகிறது. இந்தக் காலகட்டத்தில் 2,711 கலந்தறிதல் பணிகளை விவசாயிகளுக்கும் அரசுக்கும் மற்ற துறைகளுக்கும் செய்து கொடுக்கிறது.

கடல்நீர் உட்புகு ஆய்வு :

மீஞ்சூர் மற்றும் தமிழ்நாடு கிழக்குக் கடற்கரைப் பகுதியில் அதிகமான அளவு நீர் எடுக்கப்படுகிறது. இப்பகுதியில் கடல்நீர் உட்புகு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நவீன நீர்படிவங்கள் இப்பகுதியில் இருப்பதால் அதிகப்படியான அளவில் நிலத்தடிநீர் எடுக்கப்படுகின்றது. இது பின்னர் கடல்நீர் உட்புகுதலுக்கு மூல காரணமாகலாம். இதைக் தடுக்க 1989-90 ஆம் ஆண்டில் 250 சதுர கிலோ மீட்டர் அளவில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துளையிடும் பணி :

ஆய்வின் ஒரு பகுதியாக துளை கிணறுகள் போடும் பணி நிலத்தடிநீர்ப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. மண் படிவங்களை அடிப்படையாகக் கொண்டு சோதனைக் கிணறுகள் அமைக்கப்பட்டு நீர் இறைவைச் சோதனைகள் செய்யப்படுகின்றன. பின்னர் இத்துறை கிணறுகள் உபயோகிப்போர் முகமைகளான தமிழ்நாடு நீர்வழங்கும் மற்றும் கழிவு நீர் வாரியம் பஞ்சாயத்து ஒன்றியம் முதலியவற்றிற்கு குடிநீர் உபயோகிப்பதற்காக ஒப்படைக்கப்படுகின்றன. இந்த ஆண்டில் 219 துளைக் கிணறுகள் துளையிடப்பட்டிருக்கின்றன.

1. நிலப்பரப்பு நீரும் நிலத்தடி நீரும் ஒருங்கிணைந்து உபயோகித்தல் :

நீர்த்தேக்கக் கட்டுப்பாட்டு பகுதிகளில் நிலநீர் மற்றும் மேம்பரப்பு நீர் இரண்டும் இணைத்துச் செயல்படும் திட்டம் பற்றி எல்லா மாவட்டங்களிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டில் தமிழ்நாட்டில் 20 இடங்களில் பாலைப் பகுதிகளிலும் 10 நீர்த்தேக்கக்கட்டுப்பாட்டு பகுதிகளிலும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் 5 இடங்களில் செயற்கை முறையில் நீர் பெருக்கும் திட்டம் பற்றிய ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது.

கழிவுநீர்க் குட்டையினால் ஊற்றின் தன்மை ஊற்றுக்களில் ஆய்வும் ஆயிவற்றை அறியவேண்டி இத்துறை 10 கழிவு நீர்க் குட்டைகளில் இவ்வாய்வுப் பணி மேற்கொண்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட கிணறுகளின் நீர்மட்ட ஏற்ற இறக்கங்கள் அறியப்படுகின்றன. நீர் இறைவைச் சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

நீரின் தாய்மைக்கேடு ஆய்வு :

தொழிற்சாலை நீரியற் கழிவுகளாலும் உரங்களினாலும் நீரில் தூய்மைக்கேடு ஏற்படுகிறது. நிலத்தடிநீர் தூய்மைக்கேடு ஆவதால் இதற்காக ஒரு முன்னோடித் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொன்னையாறு, காவேரி, தாமிரபரணி ஆற்றுப்படுகைகளில் தொழிற்சாலை நீரியற் கழிவினால் ஏற்படும் பாதிப்பை அறிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவற்றிற்காக நீர்மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பகுத்தாயப்பட்டிருக்கிறது.

நீர் ஆய்வு நிறுவனம் :

தமிழ்நாட்டிலுள்ள எல்லா ஆற்றுப் படுகைகளின் நீர் உள்ளாற்றலை கணித்து மதிப்பிடவும் நீர் ஆய்வு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி கழக உதவியுடன் நீர் மேலாண்மையை ஏற்படுத்த இந்நீர் ஆய்வு நிறுவனம் விரை

புயர்ந்த கருவிகளையும் மேலைநாடு சென்ற முற்போக்கு தொழில் நுட்பங்களை அறிந்து வந்த அதிகாரிகளையும் பெற்றிருக்கிறது. வைகை படுகையின் நீர் வாய்ப்பு ஆய்வு பற்றி முதல் இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட்டு ஐக்கிய நாடுகள் அபிவிருத்திக் கழகத்திற்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த ஆய்வு பாம்பார் கோட்டக் கரையார், குண்டார், தாமிரபரணி, வெள்ளார், வைப்பார் மற்றும் நம்பியார் ஆற்றுப் படுகைகளில் முடிக்கப்பட்டிருக்கிறது.

விவரங்கள் கணித்தல் :

நிலத்தடிநீர் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தின் விவரங்களைப் பெற்று ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும் கருவி ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. இக் கருவியைக் கொண்டு நிலத்தடிநீர் கணக்கிடுதலுக்குத் தேவையான விவரங்களாக மழையளவு நீர்மட்ட அளவு முதலிய ஆவன வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நிலத்தடி நீர் 1989-90

வரிசை எண்,			
1.	**நிலத்தடி நீர் ஆய்வு :**		
1,	நிலத்தடி நீர் ஆய்வு	எண்ணிக்கை	13
2,	நீர் மட்டம் கவனித்தல்	கிணறுகளின் எண்ணிக்கை	2.100
3,	நில அமைப்பு புகைப்பட ஆய்வு	ச,கி,மீ,	29.000
4,	நிலத்தடி நீர் விரிவாக்கத் திட்டம்	கிராம எண்ணிக்கை	1.140
5,	கிணறுகளுக்கு இடையே உள்ள தூரத்தைக் குறைக்க நீர் இறைவைச் சோதனை	எண்ணிக்கை	473
6,	நில இயற்பியல் ஆய்வு	எண்ணிக்கை	3,851
7,	புவிவேதியியல் ஆய்வு	மாதிரிகளின் எண்ணிக்கை	11,555
8,	ஆலோசனைப் பணி	எண்ணிக்கை	2,711
9,	கடல்நீர் உட்புகு ஆய்வு	ச,கி,மீ,	250
10,	துறையிடும் பணி	எண்ணிக்கை	219
11,	நிலப்பரப்பு நீரும் நிலத்தடி நீரும் ஒருங்கிணைந்து உபயோகித்தல்	அறிக்கை	20
12,	தூய்மைக்கேடு ஆய்வு	இடங்களில் எண்ணிக்கை	50
13,	நீர் ஆய்வு நிறுவனம்	ஆற்றுபடுகைகளின் எண்ணிக்கை	11

நொய்யல் ஓரத்துப்பாளையம் நீர்த்தேக்கம் :

பெரியார் மாவட்டம், பெருந்துறை தாலுகா, ஓரத்துப்பாளையம் கிராமத்திற்கு அருகில் நொய்யல் ஆற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் கட்டும் பணியும் மற்றும் திருச்சி மாவட்டம், கரூர் தாலுகா, ஆத்துப்பாளையம் பிரதான கால்வாயில் 32.75 கி.மீ. முதல் 60 கி.மீ. வரை நீட்டிப்பு கால்வாய் அமைக்கும் பணியும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஜூன் 1984ல் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூ. 877 இலட்சங்கள். நீர்த்தேக்கத்தின் கொள்திறன் 616 மி.க. அடி. இத்திட்டம் நிறைவடையும்போது பெரியார் மாவட்டத்தில் 500 ஏக்கரும் மற்றும் திருச்சி மாவட்டத்தில் 9,875 ஏக்கரும் பயன்பெறும். இந்நீர்த்தேக்கத்தின் திட்டப்பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

பொதுப்பணித்துறை (கட்டிடங்கள்)

பொதுப்பணித்துறையானது, சில கிளைப் பிரிவுகளை உள்ளடக்கிய ஒரு பொதுச் சேவை நிறுவனம் ஆகும், பொதுப்பணித்துறையின் கட்டிடப் பிரிவானது, அரசுத் துறைகள் சம்பந்தப்பட்ட கட்டிடங்களில் கட்டுமீளப் பணிகளையும், அவற்றை பராமரிக்கும் பொறுப்புகளையும் ஏற்று செயல்படுத்தி வருகின்றது.

பொதுப்பணிக்கட்டிடம் பிரிவு அரசு சார்பு நிறுவனங்கள் சுயாட்சி அமைப்புகள் மற்றும் அரசுத் தொடர்புடைய E.S.T./I.U.D.P. போன்ற அமைப்புகளில் கட்டிடங்களில் கட்டுமானப் பணிகளையும் நூற்று வீதக் கட்டணம் பெற்று செய்து வருகின்றது. ஒரு சிறிய கணிப்பொறியின் உதவியுடன். கட்டுமானப் பணிகளை திட்டமிட்டு வடிவமைத்துக் கட்டி முடிப்பதற்கான எல்லா வசதிகளையும் இப்பிரிவு பெற்றுள்ளது, பொதுப்பணித்துறை கட்டிட மைய ஆய்வுக்கூடம் சிறப்புக் கட்டுமானப் பணிகளில் புதிய மூலப்பொருட்களை புகுத்தி வருகின்றது,

1989–90ஆம் ஆண்டின் இப்பிரிவுக்கான நிதி ஒதுக்கீடு ரூ, 789.28 இலட்சமாகும், இதில். முன்னேற்றப்பணிகள் பராமரிப்பு மற்றும் புனரமைப்புக்கான தொகை ரூ, 789.28 லட்சமும் அடங்கும், மேலும். பல்வேறு துறைகளின் கட்டடங்களுக்கான மேம்பாட்டிற்காகவும். பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பதற்காகவும் அந்தந்தத் துறைகளின் வரவு–செலவுத் திட்டத்தில் ரூ, 328.18 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இத்தொகையை. இப்பிரிவு செலவு செய்யும், மேலும் பல் வேறு துறைகளுக்கான புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கான ரூ, 2.042.47 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது,

பொதுப்பணித்துறையால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு துறைகளின் கட்டிடங்களின் கட்டுமான பணிகளின் விவரம் :—

1, மூன்றாகப் பிரிக்கப்பட்ட இராமநாதபுரம் மாவட்டத்தின் சிவகங்கை. விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய தலைமையிடங்களில் அனைத்து முக்கிய அரசு கட்டிடங்கள்,

2, மேற்சொன்ன மூன்று இடங்களில் காவல் நிலையங்கள், மாவட்ட ஆட்சியர் குடியிருப்பு நீதிபதிகள் குடியிருப்பு,

3, திண்டுக்கல் மற்றும் வேலூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம். திருவண்ணாமலையிலும். தூத்துக்குடியிலும். சென்னையிலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டும் பணி விரைவிலேயே மேற்கொள்ளப்பட உள்ளது,

4, தமிழ்நாட்டிலும் பல்வேறு இடங்களில் தாலுகா அலுவலகங்கள். வருவாய் கோட்ட அலுவலகங்கள் மற்றும் வேளாண்மை வருமானவரி அலுவலகங்கள் கட்டும் பணி,

5, மதுரையில் உள்ள சம்பளம் மற்றும் கணக்குத்துறை அலுவலகத்திற்கு கூடுதலாக இரண்டாவது மற்றும் மூன்றாவது தளம் கட்டும் பணி.

6, சார்பதிவாளர் அலுவலகம். தெள்ளாறு. வட ஆற்காடு மாவட்டம் (முடிவடைந்தது) மற்றும் சேத்தியாதோப்பு (முன்னேற்றத்தில் உள்ளது),

7, பல்வேறு இடங்களில் நீதி மன்ற கட்டிடங்கள்,

8. வணிகவரித்துற அலுவலகம். நாகர்கோவில்,

9. ஆரம்ப சுகாதார மையங்கள்—பல்வேறு இடங்கள்.

10. பல்வேறு இடங்களில் கல்விக் கூடங்கள்.

11. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நீராவிக் கலவைக் கூடம் கட்டும் பணி, சென்னை அரசு பொது மருத்துவமனையில் கூடுதலாக ஏழு மாடிக் கட்டிடம் கட்டும் பணி, ஸ்டான்லி மருத்துவமனையில் எட்டுமாடிக் கட்டிடம், கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி கோபால்ட் கதிர்வீச்சுப் பிரிவு.

12. அரசுஅலுவலர்களுக்கு பல்வேறு இடங்களில் குடியிருப்புகளும் விருந்தினர் மாளிகை ஆய்வுமாளிகைகளும் கட்டும் பணி.

13. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்வரும் கட்டிடங்கள், மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையினரின் நல்வாழ்வு திட்டங்கள்.

14. மத்திய சிறை மற்றும் இணை சிறை மேம்பாட்டுத் திட்டம்.

15. திருப்பூர் குமரன், முன்னாள் முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன், கண்டி அரசன் விக்ரமசிங்கன் (வேலூர்) ஆகியோருக்கு நினைவகங்கள்.

16. IUDP வைப்புத் தொகை பணிகள் இதில் பேருந்து நிலையம், கடைகள் வளாகம் மற்றும் வாரச் சந்தைகள் கட்டும் பணிகள் அடங்கும்.

17. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் கால்நடை மற்றும் விலங்கியல் விஞ்ஞான பல்கலைக்கழகத்தின் கட்டிடப் பணிகள்.

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்

புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி ஆதாரங்களை பயன்படுத்துவதையும், அவற்றை நன்கு பிரபலப்படுத்துவதையும் பிரதான குறிக்கோளாக கொண்டு தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் 1989–90 ஆம் ஆண்டிலும் சூரிய சக்தி, காற்றுச் சக்தி, நீர்ம சக்தி முதலான திட்டங்களில் தொடர்ந்து தனது கவனத்தை செலுத்தி வருகிறது. குறிப்பாக, காற்றுச் சக்தி திட்டங்களை நிறைவேற்றுவதில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

உணவு விடுதிகளில் மற்றும் சிற்றுண்டிச் சாலைகளிலும் உணவு சமைப்பதற்கும், தேநீர் தயாரிக்கவும், பாத்திரங்களை சுத்தப்படுத்துவதற்கும், தொழிற்சாலைகளின் பல்வேறு செயல் முறைகளுக்கும், மருத்துவமனைகளில், சுத்தம் செய்யும் பணிகளுக்கும் குடியிருப்பு மனைகளில் வீடுகட்டுமான உபயோகங்களுக்கும், வேண்டிய சுடுதண்ணீரை அளித்திட நிறுவப்படுகிற சூரிய சக்தி சுடுநீர் அமைப்புகள் (Solar Water Heating Systems) மிகச் சீரியவையாக உள்ளன. சூரிய சக்தி சுடுநீர் அமைப்புகளை நீறுவுவதன் மூலம் கணிசமான அளவு எரிபொருள் மற்றும் மின் சாரத்தை மிச்சப்படுத்த முடியும்.

1989–90 ஆம் ஆண்டில் பெரிய அளவிலான 29 அமைப்புகள் நிறுவ மேற் கொள்ளப்பட்டதில், 28 முடிக்கப்பட்டுள்ளன. வீடுகளுக்கான சூரிய சக்தி சுடுநீர் அமைப்புகளின்கீழ் 200 அமைப்புகள் நிறுவப்பட்டிருக்கின்றன.

சாண எரிவாயு ஒரு சுத்தமான மலிவான வாயுப் பொருளாக கிடைக்கும் எரிபொருள் ஆகும். இதுவரை சுமார் ரூ. 46.54 இலட்சம் செலவில் நிறுவப்படக் கூடிய 53 திட்டக் கருத்துக்கள் மரபு வழிசாரா எரிசக்தி துறைக்கு அனுப்பப்பட் டிருக்கின்றன. இவற்றில் 59 திட்டப் பணிகள், ரூ. 45·08 இலட்சம் செலவில் அமைத்திட ஒப்பளிப்பு வழங்கப் பெறப்பட்டது. சுமார் ரூ. 24.54 இலட்சம் செல வில் 28 சாண எரிவாயுக் கலன்கள் முழுமையாக நிறுவி இயக்கப்பட்டன. சுமார் ரூ. 5,15 இலட்சம் செலவில் 4 சாண எரிவாயுக் கலன்கள் நிறுவும் பணி பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றது.

வருடம் முழுவதும் மொத்த தமிழக மாநிலம் மிகவும் நல்ல காற்றினை அனு பவிப்பதனால், நீரிறைக்கும் காற்றாலைகளுக்கு அதிகத் தேவை ஏற்பட்டிருக்கிறது. இக்காற்றாலைகள், குடிப்பதற்கான நீரை இறைக்கும் பணிகளுக்கும், விவசாயத்திற் காகவும் நிறுவப்பட்டு வருகின்றன. இதுவரை, 1990 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முடிய 552 நீரிறைக்கும் காற்றாலைகள் நிறுவப்பட்டிருக்கின்றன.

ஒருமுகப்படுத்தப்பட்ட ஆதாரங்களிலிருந்து போதிய மின் ஆற்றல் பெருக்கம் ஏற்படாதிருக்கும் நிலைமை நீங்காதிருக்கும்போது, வழக்கமான மின் வழங்குதலில் ஏற்படும் குறையை நிரப்பும் எண்ணத்துடன் காற்றுச் சக்தியை மின் ஆற்றல் உற்பத்திக்கு பயன்படுத்துவதில் குறிப்பிடத்தக்க ஆர்வம் ஏற்பட்டுள்ளது. காற்று பற்றிய அடிப்படை குறிப்புகளை வலுவாக்குவதற்கும், காற்றினால் மின் ஆற்றல் பெருக்குகிற செயல் விளக்க திட்டத்திற்கான அமைப்புகளை நிறுவுவதற்கும் புதிய அவக்க நிலை முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

டானிடா மானியத் திட்டத்தின்கீழ் ரூ. 17.5 கோடி மதிப்புள்ள 6 மெகாவாட் மற்றும் 4 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு பெரிய காற்றாலைத் தொகுப்பு களுக்கு மரபு வழி சாரா எரிசக்தி துறையினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இவை திண்டுக்கல் மாவட்டத்தில் கயத்தாறிலும் கன்னியாகுமரி மாவட்டத்திலும் முப்பந்தலிலும் அமையப்பெற்றுள்ளன. இதற்காக கணக்கிடப்பட்டுள்ள உள்ளூர் செலவுகள் ரூ. 4.50 கோடி ஆகும். இச்செலவினை தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனமும், தமிழ்நாடு மின்வாரியமும் சமமாக பகிர்ந்து மேற்கொள்கின்றன. இந்த இரு காற்றாலைத் தொகுப்புகளும் 30–3–1990 அன்று நிறுவப்பட்டு இயக்கப் பட்டன. கயத்தாறிலும், முப்பந்தலிலும் 31–7–1990 முடிய முறையே ரூ. 75.47 இலட்சம் மற்றும் 40.67 இலட்சம் யூனிட்டுகள் மின்சக்தி உற்பத்தி செய்யப் பட்டுள்ளன. தமிழ்நாட்டில் தற்போது, மின்சக்தி உற்பத்திக்காக, அமைக்கப்பெற் றுள்ள காற்றாலைத் தொகுப்புகளின் மொத்த நிறுவப்பட்ட சக்தித் திறன் 13.88 மெகாவாட் ஆகும்.

இந்திய அரசின் திட்டக் குழுவின் பரிந்துரைகளின்படி ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தி செயல்முறை திட்டங்கள் தமிழ்நாட்டில் 1983–84 ஆம் ஆண்டில், தெரிவு செய்யப்பட்ட இரண்டு வட்டாரங்களில் அறிமுகப்படுத்தப்பட்டன.

1989–90 ஆம் ஆண்டில் இத்திட்டம், கீழ்க்காணும் மூன்று வட்டாரங்களில் செயற்படுத்தப்பட்டது:—

1. வாலாஜா — வட ஆற்காடு–அம்பேத்கார் மாவட்டம்.
2. பழனி — திண்டுக்கல்–காயிதே மில்லத் மாவட்டம்.
3. அரூர் — தர்மபுரி மாவட்டம்.

இத்திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கிராமப்புறத்தில் இருக்கும் பலவிதமான சக்திகளில், அவை அங்கு கிடைப்பதைப் பொறுத்து, மிக உகந்த கலவைக்காக, பல்வேறு வழிமுறைகள் ஏற்படச் செய்வதும் உள்ளூர் மக்கள் இத்தகைய அமைப்புகளை தங்களது குறிப்பிடக்கூடிய தேவைகளுக்கு உபயோகிக்கவும் வேண்டிய பயிற்சி அளிப்பதும் ஊர்ஜாகிராமம் (சக்தி கிராமம்) என்பதின் அடிப்படை கருத்தாகும். பல்வேறு செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் இந்திய அரசிடமிருந்தும் மாநில அரசிடமிருந்தும் மதிப்பு மிக்க உதவியினைப் பெற்று வருகிறது.

அத்தியாயம் 26.

வருவாய்த் துறை.

வேளாண்மை வருமான வரி :

தமிழ்நாடு வேளாண்மை வருவமான வரிச் சட்டம், 1955 ஆம் ஆண்டு முதல் செயலிலுள்ளது. காப்பி, தேயிலை, ரப்பர், ஏலக்காய், சின்கோனா போன்ற மலைத் தோட்டப் பயிர்கள் மீதுதான் முதற்கண் வேளாண்மை வருமானவரி விதிக்கப்பட்டது. இம்மாநிலம் முழுவதிலும் மலைத் தோட்டப் பயிர் அல்லாத பயிர்களுக்கும் வேளாண்மை வருமான வரி விதிப்பதற்கு, 1958 ஆம் ஆண்டு திருத்தச் சட்டம் வகை செய்கிறது. முந்தைய ஆண்டின் மொத்த வேளாண்மை வருமானத்தின் அடிப்படையிலோ அல்லது மொத்த வேளாண்மை வருமானத்தின் அடிப்படையிலோ அல்லது வைத்திருக்கும் நிலப்பரப்பை அடிப்படையாகக் கொண்டோ, ஒவ்வொரு வருடமும் வேளாண்மை வருமான வரி விதிக்கப்படுகிறது. தற்போது, வருமான அடிப்படையில் வரி விலக்கு வரம்பு ரூ. 10,000 ஆகும். இணக்கமுறை அடிப்படையில் வரி விலக்கு வரம்பு 20 தர ஏக்கராகும். மலைத் தோட்டப் பயிர்களைப் பொறுத்த வரை 100 தர ஏக்கர் வரையில் இணக்கம் செய்து கொள்ளும் வசதி உள்ளது. ஆனால் மலைத் தோட்டப் பயிரல்லாத ஏனைய பயிர்களுக்கு அத்தகைய வரம்பு ஏதுமில்லை. பயிரிடப்பட்ட பயிர்களின் தன்மையைப் பொறுத்து தர ஏக்கர் கணக்கிடப்படுகிறது.

1. வருமானத்தின் அடிப்படையிலும் மற்றும் இணக்கமுறை அடிப்படையிலும் விதிக்கப்படும் தற்போதைய வீதங்கள் வருமாறு :—

வருமான அடிப்படையில் உள்ள வரி வீதங்கள்.

1.	மொத்த வேளாண்மை வருமானத்தில் முதல் ரூ. 8,000-க்கு	வரி கிடையாது
2.	மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 7,000-க்கு	ஒரு ரூபாயில் 25 காசு.
3.	மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 5,000-க்கு	ஒரு ரூபாயில் 30 காசு.
4.	மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 5,000-க்கு	ஒரு ரூபாயில் 35 காசு.
5.	மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 5,000-க்கு	ஒரு ரூபாயில் 45 காசு.

6. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 20,000-க்கு .. ஒரு ரூபாயில் 55 காசு.

7. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 50,000க்கு .. ஒரு ரூபாயில் 60 காசு.

8. மொத்த வேளாண்மை வருமானத்தில் எஞ்சிய தொகைக்கு ஒரு ரூபாயில் 65 காசு.

ஆனால்,

(1) ரூபாய் 10,000க்கு மேற்படாத வேளாண்மை வருமானத்திற்கு வரி செலுத்தப்பட வேண்டியதில்லை.

(2) மொத்த வேளாண்மை வருமானம் ரூபாய் 10,000-க்கு மேற்பட்டு ஆனால் ரூபாய் 11,100க்கு மேற்படாத பொழுது அது குறித்து செலுத்தத்தக்க வேளாண்மை வருமான வரியானது மொத்த வேளாண்மை வருமானம் ரூபாய் 10,000ஐ விட எவ்வளவு அதிகமாக உள்ளதோ, அத்தொகையில் எழுபது விழுக்காட்டிற்கு மேற்படக் கூடாது.

(3) மேலும் ஒவ்வொரு கம்பெனியைப் பொறுத்த வரையில் மொத்த வேளாண்மை வருமானம் முழுவதற்கும், உயரளவு வீதத்தில் வேளாண்மை வருமானவரி விதிக்கப்பட வேண்டும்.

நிலப்பரப்பின் அடிப்படையிலான இணக்க வரி விதங்கள்:

நிலப்பரப்பு.	தர ஏக்கர் ஒன்றுக்கு வரி வீதம் ரூபாய். பை.
1. முதல் 20 தர ஏக்கருக்கு ..	வரி கிடையாது.
2. அடுத்த 5 தர ஏக்கருக்கு	15 00
3. அடுத்த 5 தர ஏக்கருக்கு	20 00
4. அடுத்த 5 தர ஏக்கருக்கு	30 00
5. அடுத்த 5 தர ஏக்கருக்கு	40 00
6. அடுத்த 10 தர ஏக்கருக்கு	50 00
7. அடுத்த 10 தர ஏக்கருக்கு	60 00
8. அடுத்த 10 தர ஏக்கருக்கு	70 00
9. அடுத்த 10 தர ஏக்கருக்கு	80 00
10. எஞ்சிய தர ஏக்கருக்கு	100 00

ஒவ்வொரு கம்பெனியைப் பொறுத்த வரையில் செலுத்தத்தக்க ஒட்டு மொத்தத் தொகை மொத்த நிலப்பரப்பு முழுவதற்கும் உயர்ந்தளவு வீதத்தில் விதிக்கப்படும். இதனை பொறுத்தமட்டில் வேளாண்மை வருமான வரியை இணக்கம் செய்வதற்கு கம்பெனி அனுமதிக்கப்படுகிறது.

வேளாண்மை வருமான வரியில் பெருமளவு வருவாய் மலைத் தோட்டங்களிலிருந்து கிடைக்கின்றது. தற்பொழுது மொத்த வருவாயில் 90 விழுக்காட்டிற்கு மேல் மலைத் தோட்டப் பணியிலிருந்து கிடைக்கின்றது. 1981–82 முதல் 1989–90

வரையிலான வரி விதிப்பு ஆண்டுகளில் வருமானத்தின் அடிப்படையிலும் இனைக்க முறையின் மேலும் வரி விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மேலே கொடுக்கப்பட்டுள்ளது:

ஆண்டு.	மலைத் தோட்டப்பகுதி.		
	வருவாய் அடிப்படை.	இணைக்க முறை.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
1981–82	1,020	3,550	4,570
1982–83	1,000	3,660	4,660
1983–84	920	3,714	4,634
1984–85	918	3,705	4,618
1985–86	878	3,798	4,676
1986–87	827	3,831	4,658
1987–88	791	3,899	4,690
1988–89	768	3,916	4,684
1989–90 (31–10–1989 முடிய).	775	3,940	4,715

ஆண்டு.	மலைத் தோட்டமல்லாத பகுதி.		
	வருவாய் அடிப்படை.	இணைக்க முறை.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
1981–82	3,992	28,621	32,613
1982–83	3,901	26,360	30,261
1983–84	3,814	26,216	30,030
1984–85	3,736	23,824	27,560
1985–86	3,678	24,758	28,436
1986–87	3,644	25,777	29,421
1987–88	3,526	24,935	28,461
1988–89	3,297	24,110	27,407
1989–90 (21–10–1989 முடிய).	3,302	23,810	27,112

இத்துறையில் புதியதாக வந்த அனைத்து வேளாண்மை வருமான வரி உதவி ஆணையர்களுக்கும், வேளாண்மை வருமான வரி அலுவலர்களுக்கும் விரிவான பயிற்சித் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் தயாரிக்கப்பட்டு, வேளாண்மை வருமான வரி தொடர்பான பல்வேறு சட்டங்கள், சுணக்குகள் குறித்து ஒன்பது நாட்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதில் பங்கு கொள்வோர்க்கு பல்வேறு தொழில்களில் வல்லுநத்துவம் பெற்ற வல்லுநர்கள் பயிற்சி வகுப்புகள் நடத்துகின்றனர். ஏனைய உதவி ஆணையர்களுக்கும் வேளாண்மை வருமான வரி அலுவலர்களுக்கும் திணைஊட்டுப் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. வேளாண்மை வருமான வரி விதிப்பு ஆணைகள் தொடர்பாக முடிவு காண்பதில் இப்பயிற்சி அவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

நிலமற்ற ஏழை மக்களுக்குப் பயிரிடத்தக்க நிலம் ஒப்படை செய்தல்

பயிரிடத்தக்க தரிசு நிலங்கள் தகுதி வாய்ந்த நிலமற்ற ஏழை மக்களுக்கு இலவசமாக் ஒப்படை செய்யப்படுகின்றன. 5 நபர்களோ அல்லது அதற்குக் குறைவாகவோ உள்ள ஒரு குடும்பத் தலைவருக்கு மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் அல்லது அதற்கு குறைவாக வருமானமிருப்பின் அவர் "ஏழை" எனக் கருதப்படுகிறார். அவ்வாறே, ஒரு குடும்பத்தில் 5 நபர்களுக்கு மேல் இருப்பின் அக்குடும்பத்தின் மாத வருமானம் ரூபாய் 250 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் குடும்பத் தலைவர் "ஏழை" என்று கருதப்படுகிறார்.

2. போரில் வீரமரணமடைந்த அல்லது இயலாமையுற்ற எல்லைப் பாதுகாப்புப் படையினர், பிரதேச இராணுவத்தினர் உட்பட்ட முன்னாள் இராணுவத்தினர் குடும்பங்களுக்கு அடுத்து உயர் முன்னுரிமை நிலமற்ற ஏழை ஆதி திராவிடர்கள், பழங்குடியினருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

3. கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும் நிலத்தின் உயரளவு பரப்பும் அவர் ஏற்கனவே வைத்திருக்கும் நிலப் பரப்பும் சேர்ந்து மொத்தம் 3 ஏக்கர் புன்செய் நிலமாக அல்லது 1 ஏக்கர் நன்செய் நிலமாக உள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலங்களின் விலை அதிகமானதால், அங்கு ஒருவருக்கு உயரளவு புன்செய் நிலமாயிருந்தால் ஒரு ஏக்கர் புன்செய் நிலமோ, நன்செய் நிலமாயிருந்தால் அரை ஏக்கர் நன்செய் நிலமோ ஒப்படை செய்யப்படுகின்றது.

4. நிலங்கள் மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்படை செய்யப்படுகின்றன. நிலம் ஒப்படை பெற்றவர் ஒப்படை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு காலத்திற்குள் நிலத்தில் பயிர் செய்ய வேண்டும். 10 ஆண்டு காலத்திற்குள் அந்நிலத்தை விற்கவோ அன்றி உருமை மாற்றம் செய்யவோ கூடாது. ஆனால் பயிரிடுவதற்காக கடன் வாங்கும் பொருட்டு வங்கியில் அடமானம் வைக்கலாம், நிலம் ஒப்படை பெற்றவரே நிலத்தை பயிரிட வேண்டும். அல்லது அவருடைய குடும்ப உறுப்பினர்களினாலோ அல்லது கூலி பெறும் தொழிலாளர்களைக் கொண்டோதான் அந்த நிலத்தை பயிரிட வேண்டும். வேறு எவரும் அந்நிலத்தைப் பயிரிடக் கூடாது. ஒப்படை நிபந்தனை மீறப்பட்டால் எவ்வித நஷ்ட ஈடும் கொடுக்காமல் நிலத்தை மீண்டும் அரசு எடுத்துக் கொள்ளலாம்.

5. பொது நிலங்களுக்கு உரிய சமுதாய நிலங்கள் யாவும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில், காலவாய், ஓடை மற்றும் நீர்ப்பரப்பு நிலங்கள் போன்றவனைத்து நீர் வழிப்புறம்போக்குகளையும் மாட்டுத் தொழுவம், மந்தைவெளி மற்றும் மேய்க்கால் புறம்போக்குகளையும் ஒப்படை செய்ய திலிருந்து அரசு தடை விதித்துள்ளது.

6. 1—4—1989 முதல் 31—1—1990 வரை 2324-52-8 எக்டேர் ஏக்கர் மொத்தப் பரப்பளவு உள்ள நிலங்களுக்கு 5,335 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

வெள்ளம்

1989 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மூன்றாவது வாரத்தில் தென்மேற்கு பருவக் காற்று மிகவும் எழுப்பெற்றது. இப்பருவக் காற்று 22-7-1989 மற்றும் 23-8-1989 ஆகிய இரண்டு நாட்களில் தீவிரமடைந்து நீலகிரி மாவட்டத்தில் 211.05 மி.மீ. அளவிற்கு மிக பலத்த மழை பெய்துள்ளது. இம் மாவட்டத்தின் மாத சாதாரண மழை அளவு 378.90 மி. மீட்டர் ஆகும். பலத்த சூறாவளிக் காற்றினாலும், பெய்த இடி மழையினாலும், வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு அதனால் சாலை அரிப்பு ஏற்பட்டு மரங்கள் வேரோடு சாய்ந்து மலைப் பாதை மற்றும் நெடுஞ்சாலைகளில் வண்டிகளின் போக்குவரத்து வெகுவாக பாதிச்சப்பட்டது. இதனால் தொலைபேசி கம்பங்களும், மின்சாரக் கம்பிகளும்கூட பாதிக்கப்பட்டன. இதனால் தொலை பேசி மற்றும் மின்சாரம் வழங்குவது துண்டிக்கப்பட்டது. மின்சார பாதிப்பினால குடிநீர் வசதியும் தடைப்பட்டது. மேலும், இருப்புப் பாதைகளில் நீர் வசதியும் தடைப்பட்டது. மேலும் இருப்புப் பாதைகளில் மரங்கள் பெயர்ந்து விழுந்ததினால் ரயில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. பல குடும்பங்களின் வீடுகள் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப் பட்டதினால், பலர் வீடிழந்து நின்றனர். மேலும் மின்சாரத்தினாலும், வெளளத்தினாலும் மரங்கள் விழுந்ததினாலும் ஆறு பேர் உயிரிழந்தனர்.

நீலகிரி மாவட்டத்தில் நிவாரணப் பணிக்காக மத்திய அரசு ரூ. 68.61 இலட்சம் உச்ச வரம்புத் தொகையாக வழங்கியுளளது.

1—10—1989 முதல் 31—12—1989 வரையிலுள்ள நாட்களில் பெய்த மழையினால் பல்வேறு மாவட்டங்களில் இருபது பேர்கள் உயிரிழந்தனர். மேலும், 11,786 குடும்பங்கள், இந்த மழையினால் பாதிக்கப்பட்டனர். மொத்தம், 3,618 குடிசைகள் பகுதியாகவும் 8,389 குடிசைகள் முழுமையாகவும் பாதிக்கப்பட்டது. இவ்வாறு வீடிழந்தவர்களுக்கு உணவு வழங்குவதற்காக ரூ. 2 18,800 செலவிடப்பட்டது. மேலும்

பலத்த மழையினால் மிகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு கருணைத்தொகையாக ரூ. 15,11,800 சென்னை, செங்கை-அண்ணா, தென்ஆற்காடு, காமராசர், சிதம்பரனார், பெரியார், திருநெல்வேலி–கட்டபொம்மன, நீலகிரி மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டது. இந்தப் பருவ மழையினால் தஞ்சாவூர் மாவட்டத்தில் மொத்தம் 1,200 ஏக்டேர் நிலத்தில பயிரிடப்பட்ட பயிர்கள் வெள்ள நீரில் மூழ்கி பெருத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

இதுவரை நிகழாத அளவில் காமராசர், புசும்பொன் தேவர் திருமகன், இராம நாதபுரம், சிதம்பரனார், பசுஞ்சர திண்டுக்கல்-காயிதே மில்லத் ஆகிய தென் மாவட்டங்களில் சனவரி 1990-ல் ஏற்பட்ட கனத்த மழையினால் உயிர் மற்றும் கால்நடை சேதம் மற்றும் தனியார் மற்றும் பொது உடமைக்கு மிகுந்த பாதிப்பு ஏற்பட்டது. 29 பேர் உயிரிழந்தனர். 1,213 கிராமங்களும், 4,68 இலட்சம் மக்களும், பாதிக்கப்பட்டனர். 11,653 வீடுகள் முழுமையாகவும, 25,741 வீடுகள் பகுதியாகவும் பாதிக்கப்பட்டன. 20,131 எக்டேர் நிலத்தில் பயிர்கள் சேதமடைந்தன. இராமநாதபுரம மாவட்டம் கமுதி வட்டத்தில் வெள்ளத்தால் சூழப்பட்ட மக்கள் கடற்படை ஹெலிகாப்டர்களில் மீட்கப்பட்டனர். அரசு ரூ. 50 இலட்சம் உடனடியாக நிவாரணப் பணிக்கு வழங்கியது. மேலும் இது குறித்து மத்திய அரசுக்கு உதவி கோரி ரூ. 19.80 கோடிக்கான பிரேரணை அனுப்பியுள்ளது.

ஐந்து பேர்கள் அடங்கிய மத்திய நிபுணர் குழு தென் மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை 12–3–1990 அன்று பார்வையிட்டுள்ளது. மத்திய அரசின் நிதியுதவி எதிர் பார்க்கப்படுகிறது.

நிலச் சீர்திருத்தம்

1.1. விவசாய நிலங்கள் சிலரது வசம் குவிந்து அதன் மூலம் விவசாய நில உடமைகளில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகளைப் போக்குவதற்திற்காக 1961 ஆம் ஆண்டிய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்ச வரம்பை நிர்ணயித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 58/61) இயற்றப்பட்டது. இச்சட்டம் 6–4–1960 ஆம் நாளி விருந்து செயலுக்கு வந்தது. முதன் முதலில் 5 பேர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு உச்சவரமபு 30 தர ஏக்கராக நிர்ணயிக்கப்பட்டது. ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் 5 தர ஏக்கர் வைத்துக் கொள்ளலாம். இருப்பினும், குடும்ப மொத்த உச்சவரம்பு 60 தர ஏக்கருக்கு மேற்பட்டலாகாது. ஆனால் தற்போது 5 அல்லது அதற்கும் குறைவான பேர்கள் கொண்ட குடுமபத்திற்கு உச்சவரம்பு 15 தர ஏக்கர் என்றும் குடும்பத்தில் மொத்த உச்சவரம்பு 30 தர ஏக்கர் என்றும் நிர்ணயிக்கப்டுள்ளது.

உச்சவரம்பிற்கு மேற்பட்ட நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, நிலமற்ற ஏழைகளுக்கு 3 ஏக்கர் புன்செய் அல்லது 1½ ஏக்கர் நன்செய் என்ற அளவில் வழியோகிக்கப்படுகின்றன.

31–12–1989 ஆம் நாள் வரையில் நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் அண்டந் தூன்றேற்றம் பின்வருமாறு :—

	ஏக்கர்.
1. உபரியாக அறிவிக்கப்பட்ட நிகரப் பரப்பு ஒப்படை நடவடிக்கைகளுக்கு முன்பும், பின்பும் நீக்கவரவு செய்யப்பட்ட பரப்பு நீங்கலாக	1,72,984
. ஒப்படை நடவடிக்கைக்கு முன்பும், பின்புமாக தடையாணையின் கீழ் உள்ள பரப்பு	26,657
3. மிகை நிலமாக அறிவிக்கப்பட்டதில் முடிவு செய்யப்பட்ட நிலப்பரப்பின் விவரம்	
(அ) மிகை நில விதியோக விதிகள் 13 ஆம் விதியின் கீழ் பொது நலனுக்காக ஒதுக்கி வைக்கப்பட்ட நிலப் பரப்பு	9,97

(ஆ) பயனடைந்தோர் விபரம்—

பயனடைந்தோர் இனவாரியாக—	நபர்கள்.	ஒப்படை செய்யப்பட்ட பரப்பு
(1)	(2)	(3)
		(ஏக்கரில்)
ஆதி திராவிடர்	46,435	51,453
பழங்குடியினர்	93	136
ஏனையோர்	59,167	80,288
	1,05,695	1,31,877

விநியோகிக்கப்படவேண்டிய பரப்பு—4,744 ஏக்கர்

2. தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட மிகை நில ஒப்படை பெற்றவருக்கு நிதி உதவி செய்யும் திட்டம்.

2.1. தமிழ்நாடு நிலச்சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட மிகை நிலங்களை ஒப்படை பெறுவோருக்கு நிதி உதவி அளிக்கும் திட்டத்தை 1975 ஆம் ஆண்டு முதல் மைய அரசு செயல்படுத்தத் தொடங்கியது. மிகை நில ஒப்படை பெறுவோர்களில் பெரும்பான்மையோர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்த விவசாயத் தொழிலாளர்களாக இருப்பதால், உடனடியாக விவசாயத்திற்குத் தேவையான உபகரணங்களை மற்றும் பொருள்கள் வாங்குவதற்காக நிலைமையில் இல்லாதவர்களாக இருக்கக்கூடும் எனக் கருதப்பட்டது. மேலும் பொதுவாக ஒப்படை செய்யப்படும் நிலங்களை வெற்று நிலங்களாகவோ மற்றும் அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலையிலோ இருக்கும். இக்காரணங்களால் குறுகிய மற்றும் நீண்ட கால நிதி உதவிக்காக இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது.

2.2. 1979—80 ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசின் நிதி உதவி பெறும் இத் திட்டம், முழுமையான மானியம் கொடுக்கக்கூடிய திட்டமாக மாற்றப்பட்டது. திருத்தப்பட்ட திட்டப்படி, அரசு வழங்கும் நிதி உதவி முழுவதும் மானியமாக மாற்றப்பட்டது. வழங்கப்படும் தொகையும் ஒரு ஹெக்டேருக்கு ரூ. 1.000 என ஆக்கப்பட்டது. 1980-81 ஆம் ஆண்டு முதல் இத் திட்டம் மேலான செலவினத்தை மைய அரசும் மாநில அரசும் 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. முன்பு கொடுக்கப்பட்ட நிதி உதவியான ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 1,000 1984-85 முதல் ரூபாய் 2,500 ஆக உயர்த்தப்பட்டது. இந்தத் தொகையில் 80 விழுக்காடு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உரமாகவும், மீதம் 20 விழுக்காடு ரொக்கமாகவும் அளிக்கப்படுகிறது. இத் திட்டத்திற்குள்ளேயே தாழ்த்தப்பட்ட இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்குவதற்கு தனியாக வகை செய்யப்பட்டுள்ளது.

2.3. நிதி தேவைகள் குறித்த விளக்கங்கள்:

1989-90ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், அரசு ரூபாய் 24 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

2.4. இதுவரை எய்திய திட்ட இலக்கு:

வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டிருந்த ரூபாய் 24,00,000 31—3—1990க்குள் முடிய செலவிடப்பட்டுள்ளது.

3. இலக்கு

3—1—1989-90ஆம் நிதி ஆண்டிற்கு, நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் மிகைநிலை ஒப்படைக்கு குறியீடாக 5,000 ஏக்கரா நிர்ணயம் செய்யப்பட்டது. இவற்றில் வடபாதி மங்களம் தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்திடமிருந்து பெறப்பட்ட 365 ஏக்கர் நிலங்களும் இதில் அடங்கும். 31—3—1990 வரை இக்குறியீட்டில் அடைந்த முன்னேற்றம் வருமாறு:—

பயனடைந்தவர்களின் விவரம்.	பயனடைந்தோர் எண்ணிக்கை	பரப்பளவு (ஏக்கரில்)
(1)	(2)	(3)
ஆதி திராவிடஇனத்தவர்	5,926	4,522
பழங்குடியினர்	4	12
மற்றவர்கள்	2,487	1,266
மொத்தம்	8,417	6,800

3—2—1984-85 ஆம் ஆண்டிலிருந்து 1988-89 வரையிலான காலத்திற்கு பயனடைந்தவர்களின் விபரம்:—

பயனடைந்தோர் விவரம். (1)	1984-85. (2)	1985-86. (3)	1986-87. (4)	1987-88. (5)	1988-89. (6)
ஆதி திராவிட இனத்தவர்	1,761	1,428	982	1,152	1904
பழங்குடியினர்		2	7		9
மற்றவர்கள்	1,403	1,190	1,009	1,635	1,334
	3,164	2,620	1,998	2,787	3,247

4. 1990-91 ஆம் தேதி நிதி ஆண்டிற்கான இலக்கும் திட்டமும்.

இந்த நிதி ஆண்டில் மைய அரசின் உதவியால் நடத்தப் படும் திட்டத்திற்கு 24.00 இலட்ச ரூபாயும், மற்றும் சிறப்பு உள்ளடக்கத் திட்டத்திற்கு 4.80 இலட்ச ரூபாயும் செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(i) 1990—91 நிதி ஆண்டில் தகுதியான நபர்களுக்கு ஒப்படை செய்வதற்கான 2,400-00 ஏக்கர் நிலம் குறியீடாக நிர்ணயம் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் 1955 :

1.1. இந்தச் சட்டத்தின்படி எந்த ஒரு பயிரிடும் குத்தகைதாரரும், குத்தகைப் பணத்தை சரிவர செலுத்தாதபோதும், நிலத்திற்கோ அல்லது அதிலுள்ள பயிர்களுக்கோ சேதம் விளைவிக்கும் செயல்களைச் செய்தாலும் மற்றும் நிலத்தை சாகுபடி செய்யாமல் இருந்தாலும், விவசாயமற்ற மற்ற காரியங்களுக்கு நிலத்தைப் பயன்படுத்தினாலும், நில உரிமையாளருக்கு நிலத்தின் உரிமையை எந்த ஒரு பட்சத்திலும் மறுக்கும் வகையில் செயல் புரிந்தாலும் தவிர, நிலத்திலிருந்து வெளியேற்றப்பட இயலாது. பாதுகாப்புப் படையினரைத் தவிர வேறு எந்த நில உடமையாளாலும் மேலே குறிப்பிட்ட காரணங்களின்றி மற்ற காரணங்களுக்காக குத்தகைதாரிடமிருந்து நிலத்தை மீளப்பெற முடியாது. நில உரிமையாளருக்கும், குத்தகைதாரர்களுக்கும் ஏற்படக் கூடிய வழக்குகளைத் தீர்த்து வைக்க வருவாய் நீதிமன்றங்கள் உள்ளன.

2. தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை செலுத்துதல்) சட்டம் 1956 :

2.1. இச் சட்டத்தின்படி, குத்தகைதாரர்களால் நிலச் சொந்தக்காரர்களுக்கு அவிக்கப்பட வேண்டிய குத்தகைத் தொகையானது, தவிப்பட்ட நிலச் சொந்தக்காரர்களாக இருந்தாலும் அல்லது பொதுப் பொறுப்புக் கழகங்களாக இருந்தாலும் ஆண்டொன்றில் மொத்தவிளைச்சலில் 25 விழுக்காடு ஆகும். அரசுக்கு செலுத்த வேண்டிய நிலவரி மற்றும் நிலத்தின் மீதான இதர இனங்களை நிலத்தின் உரிமையாளர் செலுத்துவார். ஆனால் விவசாயத்திற்கான செலவு முழுவதையும் பயிரிடும் குத்தகைதாரர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும். இது பற்றிய வழக்குகளும் வருவாய் நீதிமன்றங்களால் தீர்த்து வைக்கப்படும்.

3. 1951-ம் ஆண்டைய தமிழ்நாடு பொது நிறுவனங்கள் வேளாண்மை நிலங்களின் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 57/61 :

3.1. தமிழ்நாடு பொதுப் பொறுப்புக் கழகங்கள் வைத்துள்ள விவசாய நிலங்களின் நிருவாகத்தை முறைப்படுத்துவதற்காக இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

3.2. எந்த ஒரு பொதுப் பொறுப்புக் கழகமும் தன்னுடைய சொந்த சாகுபடிக்கு 20 தர ஏக்கர் வரை நிலத்தினை வைத்துக் கொள்ளலாம். அதற்கு மேலுள்ள நிலத்தினை உண்மையிலேயே பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு குத்தகைக்கு விட வேண்டும்.

4. தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவணச் சட்டம் 1969 :

தமிழ்நாட்டில் நிலச் சொந்தக்காரர்களிடம் அல்லது பொதுப் பொறுப்புக் கழகங்களிடம் உள்ள விவசாய நிலங்களைப் பயிரிடும் குத்தகைதாரர்கள், தங்களது பெயரினை பதிவு செய்வதற்கான இச் சட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச் சட்டத்தின் வட்டாட்சி ர். இதற்கான பதிவுக்களை வைத்துக் கொள்ளக் கூடிய அலுவலராவார். அவர் பயிரிடும் குத்தகைதாரர்களின் நலங்களை பாதுகாப்பதற்காக குத்தகை உரிமைப் பதி

வுரிக்களை பராமரிக்க வேண்டும். வட்டாட்சியருக்கு உதவி புரிவதற்காக அலுவல் சார்பற்ற குழு ஒன்று அமைக்க சட்டப் பிரிவு 5-ஏ இல் வகை செய்யப்பட்டுள்ளது இந்தக் குழுவில் நிலமற்ற ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த ஒருவரும் பயிரிடும் குத்தகை கைதாரர் ஒருவரும் மற்றும் சமூக நல ஊழியர்கள் மூவரும் உறுப்பினர்களாக இருப்பர். இந்தக் குழு தற்சமயம் 57 வட்டங்களில் இயங்குகிறது. கடந்த 31-12-1969 வரை தமிழகத்தில் 4,94,008 நபர்கள் பயிரிடும் குத்தகைதாரர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் வசமுள்ள நிலம் 6,84,496 ஏக்கர்களாகும். அவற்றின் விபரம் வருமாறு:—

இனம்.	நபர்களின் எண்ணிக்கை.
(1)	(2)
ஆதிதிராவிடர்	1,74,651
பழங்குடியினர்	718
பிற்படுத்தப்பட்டோர்	1,64,653
மற்றவர்கள்	1,53,986
மொத்தம்	4,94,008

5. தமிழ்நாடு உழவுத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம், 1969 :

5.1. இச்சட்டம், தமிழ் நாட்டில் விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கப் படும் ஊதியத்தை முறைப்படுத்துவதற்கும் அது பற்றி விசாரித்து ஆணை செய்வதற்கும் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டம் பெரும் பயிரிடும் நிலையங்களுக்கு மட்டும் பொருந்தும். திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள மேற்கண்ட 11 வட்டங்கள் மட்டும் இச்சட்டம் செயல்படுத்தப்படுகிறது :—

1. மன்னார்குடி.
2. திருத்துறைப்பூண்டி.
3. மயிலாடுதுறை
4. சீர்காழி
5. நாகப்பட்டிணம்
6. நன்னிலம்
7. திருவாரூர்
8. வேதாரண்யம்
9. நீடாமங்கலம்
10. தரங்கம்பாடி.
11. குடவாசல்.

5.2. தற்போது உழவுத் தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க ஊதிய விபரம் பின் வருமாறு:—

உரிய வயது வந்தோர் :—

(அ)	உழுதல், விதைத்தல், நாற்றுபறித்தல், செப்பனிடுதல், கத்தரித்து ஒழுங்குபடுத்துதல், நிலங்களையும், வாய்க்கால்களையும் பராமரித்தல், விதைப்பதற்கும், நடவு நடுவதற்கும் நிலத்தை தயார் செய்தல்.	7 லிட்டர் நெல்லுடன் ரூ. 6.90 அல்லது ரூ. 16.00 நாளொன்றுக்கு வீதம்.
(ஆ)	நாத்து நடுதல் அல்லது நிட்டமிடப்படாத ஏனைய வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு	7 லிட்டர் நெல்லுடன் ரூ. 5.90 அல்லது நாளொன்றுக்கு ரூ. 15.00 வீதம்.
(இ)	களையெடுத்தல்.	7 லிட்டர் நெல்லுடன் ரூ. 4.90 அல்லது நாளோன்றுக்கு ரூ. 14.00 வீதம்.

(உ) உரிய வயதடையாதவர்கள்.

	அனைத்துவகை வேளாண்மைத் தொழில்களுக்கும்	4 லிட்டர் நெல்லுடன் ரூ. 2.80 அல்லது நாளொன்றுக்கு ரூ. 8.00 வீதம்.

5.3. உழுதல் தவிர ஏனைய வேளாண்மைப் பணிகளுக்குரிய வேலை நேரம் நாளொன்றுக்கு ஏழு மணி நேரமாகும். உழவுக்கு மட்டும் நாள் ஒன்றுக்கு 5 மணி நேரமாகும்.

6. தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகாதார்கள் (உடமை உரிமை அளித்தல்) சட்டம் 1971 :

6.1. இச்சட்டம், குடியிருப்புகள் அனுபோகதாரர்களுக்கு உடமை உரிமை அளிக்கிறது. அதன்படி, 19—6—1971 அன்று குத்தகைதாரர் அல்லது உரிமைதாரர் என்கிற முறையில் குடியிருப்பு மனையை அனுபோகத்தில் வைத்திருந்த உழவர் ஒருவர் அல்லது உழவுத் தொழிலாளர் ஒருவர் இச்சட்டம் செயலுக்கு வந்த நாளிலிருந்து உரிமையாளராக இருப்பார். அக்குடியிருப்பு வில்லங்கம் எதுவுமின்றி அவரிடமே நிலைபெற்றிருக்கும்.

6.2. 31—12—1989 வரை வழங்கப்பட்டுள்ள குடியிருப்பு பட்டாக்கள் விவரம் பின்வருமாறு :

இனம்.	நபர்களின் எண்ணிக்கை.
(1)	(2)
ஆதிதிராவிடர்	99,010
பழங்குடியினர்	244
பிற்பட்டோர்	48,938
ஏனையோர்	32,025
மொத்தம் —	1,80,217

858 இனங்கள் விசாரணையில் உள்ளன. 128 வழக்குகள் நீதிமன்ற விசாரணையில் உள்ளன.

7. தமிழ்நாடு கிராமக் கைவினைஞர்கள் (குடியிருப்பு அறுபோக உரிமைகள் வழங்குதல்) சட்டம் 1976 சட்டம் 38/1936) :

7.1. குத்தகைதாரர் அல்லது உரிமைதாரர் என்ற முறையில் 1—7—1975 அன்று தமிழ்நாட்டில் குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள கிராமப்புற கைவினைஞர்களுக்கு உடமை உரிமை வழங்க இச்சட்டம் வகை செய்கிறது.

31 டிசம்பர் 1989 ஆம் நாள் வரையிலும் வழங்கப்பட்ட குடியிருப்புப் பட்டாக்கள் வருமாறு ;

இனம்.	நபர்களின் எண்ணிக்கை.
(1)	(2)
ஆதிதிராவிடர்	43
பழங்குடியினர்	15
பிற்பட்டோர்	227
ஏனையோர்	122
மொத்தம் —	407

7.3. 405 இனங்கள் விசாரணையில் உள்ளன.

நிலவரி

1.1 ஒரு நிலத்தின் இனம், மண்வளம், தரம் ஆகியவைகளைப் பொறுத்து நிர்ணயிக்கப்பட்டு அடிப்படை வரியே நிலவரி என்பதாகும். நிலவரியின் மேல் விதிக்கப்படும் உள்ளூர் செஸ்மேல்வரி கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர் வரி போன்றன நிலவரி மதிப்பீட்டின் ஒரு பகுதியாக அமைகின்றன. 1—7—1967-லிருந்து புஞ்சை நிலங்கள் அனைத்திற்குமான அடிப்படை வரி தள்ளுபடி செய்யப்பட்டது. 5 இதேபோன்று 5 ஏக்கர் அல்லது அதற்குக் குறைவாக நன்செய் நிலம் வைத்திருப் போருக்கு, ஒருங்கிணைந்த நன்செய் தீர்வைகளிலிருந்து நிலவரி மட்டும் 1—7—1971 முதல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

1.2. 1987—88 மற்றும் 1988—89 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கடுமையான வறட்சி விவசாயிகளின் வகைமுறை வாய்ப்பினைக் குறைத்துவிட்டது. இதன் காரண மாக அவர்களிடம் நிலவரியை சுமுகமான முறையில் மட்டுந்தான் வசூலிக்கப்பட்டுள்ளது நிலவரி வசூலில் ஜப்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. கடந்த மூன்று விளைச்சல் ஆண்டுகளின் நிலவரி வசூலின் நடப்பு மற்றும் நிலுவைக்கான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

	விளைச்சல் ஆண்டு 1396 (1—7—1986 30—6—1987)	விளைச்சல் ஆண்டு 1397 (1—7—1986 30—6—1987)	விளைச்சல் ஆண்டு 1398 (1—7—1988 30—6—1989)
		(ரூபாய் கோடியில்).	
நடப்பு—			
கேட்பு	24.60	22.25	23.95
வசூல்	18.11	20.28	20.00
பாக்கி	6.49	1.97	3.95
நிலுவை—			
கேட்பு	39.94	37.44	33.99
வசூல்	6.47	7.52	4.39
பாக்கி	33.47	29.92	29.50
மொத்தம் :			
கேட்பு	64.54	59.69	57.84
வசூல்	24.58	27.80	24.39
பாக்கி	39.96	31.89	33.46

1986—87 மற்றும் 1987—88ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் வறட்சி நிலவியது. இருப்பினும், நிலவரி வசூலில் வருவாய்த்துறை அலுவலர்களால் கடைப்பிடிக்கப்பட்ட சுமுகமான அணுகுமுறையின் காரணமாக நிலவரி வசூல் நடப்பு கேட்பில் விளைச்சல் ஆண்டு 1396இல் 94 சதவிதமும் விளைச்சல் ஆண்டு 1397 இல் 91.1 சதவிகமும் விளைச்சல் ஆண்டு 1398-இல் 83.50 சதவிதமும் வசூலாகியுள்ளது. இருந்தபோதிலும் நிலவரி நிலுவை கேட்பில் கணிசமான அளவு வசூலிக்க முடியவில்லை.

2.1. பாதகச் சூழ்நிலைக்கேற்ப தள்ளுபடி செய்தல் :

உழவர் ஒருவர் குறிப்பிட்ட காரணத்திற்காகத் தன் நிலத்தில் வரி தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று விரும்பினால் அவர் எந்த நிலத்திற்கு வரி தள்ளுபடி செய்ய வேண்டுமென்று விரும்புகிறாரோ அந்த நிலத்தைக் குறிப்பிட்டு உரிய நேரத்தில் சம்பந்தப்பட்ட வருவாய் அலுவலருக்கு எழுத்து மூலமாக விண்ணப்பிக்க வேண்டும். பின்னர் பயிராய்வு அலுவலரின் கருத்தின் அடிப்படையில் அந்காரமளிக்கப்பட்ட வருவாய் அலுவலர் வரியை தள்ளுபடி செய்வார். பாதிக்கப்பட்ட உழவர்களுக்குப் பாதகச் சூழலுக்கேற்ப வரித் தள்ளுபடி செய்யப்படுமே தவிர செஸ்வரியும் கூடுதல் செஸ்வரியும் தள்ளுபடி செய்யப்படுவதில்லை.

அசாதாரண சூழ்நிலைகளில் நிலவரியை தற்காலிகமாக நிறுத்தி வைத்தலும் தள்ளுபடி செய்தலும் :

2.2 வழக்கத்திற்கு மாறுபட்ட இயற்கைச் சீற்றங்களினால் ஏற்படும் வறட்சி அல்லது பஞ்ச காலங்களில் பொதுவாக பயிருக்கு இழப்பு ஏற்படும் போது அரசு

வரி விதிப்பைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கிறது. அல்லது தள்ளுபடி செய்கிறது. அவ்வாறான நேர்வுகளில் அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலவரி பாக்கி மற்றும் ஒரு குறிப்பிட்ட (—) நிலத்தில் நடப்பு விளைச்சல் ஆண்டில் பயிர் விளைச்சல் 50 விழுக்காடும் அதற்கு குறைவாகவும் இருக்குமானால் அந்நிலத்தை பொருத்தவரையில் வசூலிக்கப்படவேண்டிய நிலவரியும் உள்ளூர் தலைமேல் வரியும், அரசுக் கடன்களும் அடுத்த விளைச்சல் ஆண்டுக்கு தள்ளி வைக்கப்படும். 1992 ஆம் விளைச்சல் ஆண்டில் கீழ்கண்ட 12 மாவட்டங்களில் மட்டும் 571.87 இலட்சத்திற்கு நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. (1) காமராசர் (2) இரா மதாதபுரம் (3) பசும்பொன் தேவர் திருமகன் (4) திருச்சிராப்பள்ளி (5) மதுரை (6) புதுக்கோட்டை (7) திண்டுக்கல்-காயிதே-மில்லத் (8) திருநெல்வேலி கட்டபொம்மன் (9) பெரியார் (10) தெய்வநாயகம் (11) வடஆற்காடு மற்றும் (12) தஞ்சாவூர்.

2.3. பயிராய்வு சான்றிதழ் வழங்குதல் :-

பயிர் விளைச்சல் 50 சதவீதமும் அதற்கு குறைவாகவும் இருக்குமானால் அந்தகைய நிலங்களுக்கு கிராம வாரியாக பயிராய்வு சான்றிதழ் வழங்குவதற்கான அதிகாரம் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகள் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் இதர நிதி நிறுவனங்கள் மூலம் பெற்ற கடன்களை மாற்றியமைக்கலாம்.

மக்கள் தொடர்பு திட்டம்—மனுநீதி திட்டம்

மக்கள் தொடர்பு திட்டம் மற்றும் மனுநீதி திட்டத்தின்கீழ் மாவட்டாட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர், பல்வேறு துறைத் தலைவர்களுடன் தனது ஆட்சியெல்லைக்குட்பட்ட ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஒவ்வொரு மாதம் என்று, சுழற்சி முறையில் சென்று அந்தந்த கிராம மக்களின் குறைகளை அந்தந்த இடத்திலேயே தீர்வு செய்கின்றனர். அது போன்றே கோட்டாட்சியர்கள் தங்களது ஆட்சியெல்லையில் வட்டத்திற்குட்பட்ட கிராமங்களுக்குச் சென்று குறைகளை தீர்ப்பர்.

தற்போதுள்ள அறிவுரைகளின்படி. ஒரு சார்நிலை அலுவலர், ஒரு குறிப்பிட்ட கிராமத்திற்கு மனுநீதி நாள் நடப்பதற்கு ஆறு வாரங்களுக்கு முன்னதாகச்சென்று பொது மக்களுக்கு மனுநீதி நாள் குறித்து அறிவிப்பு செய்து விட்டு, பொது மக்களிடம், விண்ணப்பங்களைப் பெற்று அவற்றைத் தொடர்புடைய குறிப்பிட்ட துறை அலுவலர்களுக்கு குறைகளை நீக்க ஏதுவாக அனுப்பி விடுகிறார். மக்கள் தொடர்பு நாள் அன்று இந்த அலுவலர் ஏனையத் துறை அலுவலர்களுடன் கிராமத்திற்குள் சென்று முடிவான பதில்களை மனுதாரர்களுக்கு தெரிவிக்கிறார். மேலும் மனுநீதி திட்ட நாளில் பெறப்படும் மனுக்களின் மீதும் நடவடிக்கை எடுத்து மனுதாரருக்கு முடிவான பதில்களை அனுப்பப்படுகின்றன.

மாவட்ட வருவாய் அதிகாரியும், மாவட்டாட்சித் தலைவரும் பிரதி மாதம் ஒரு கோட்டத்தில் ஒரு கிராமத்தில் சுழல் முறையில் மனுநீதி திட்டம் நடத்த வேண்டும். அதாவது ஒரு மாதத்தில் இரண்டு மனுநீதி திட்ட நிகழ்ச்சிகள் முறையே மாவட்ட வருவாய் அலுவலரால் ஒரு கோட்டத்திலுள்ள ஒரு கிராமத்திலும், மாவட்டாட்சித் தலைவரால் பிரிதொரு கோட்டத்தில் உள்ள ஒரு கிராமத்திலும் தனித் தனியே நடத்தப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நில அளவை மற்றும் பதிவுறுக்கள் பராமரிப்பு

நில அளவை மற்றும் பதிவுறுக்கள் துறை, வேளாண்மைப் பகுதிகள் மற்றும் நகர்ப் பகுதிகளில் தேவைக்கேற்ப முதல் நில அளவை, மறு நில அளவை மற்றும் துணை நில அளவை ஆகியவற்றை மேற்கொள்கிறது. விற்பனை மாற்றம், உரிமை வழி மாற்றம், அன்பளிப்பு பரிமாற்றம், நீதிமன்ற உத்தரவு, பாகப்பிரிவினை முதலிய நிகழ்வுகள் மூலம் அன்றாடம் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் மேற்கொண்டு நிரந்தர நில உடமை ஆவணங்களில் பிரதிபலிக்கும் வகையில் மாற்றங்கள் மேற்கொண்டு நாளது வரை பராமரிப்பதும் ஆய்வு செய்வதும், இத்துறையின் பொறுப்பாகும்.

2. இத்துறை அரசின் பிற துறைகளுக்கு நில அளவை குறித்து புல எல்லைகளின் விவரங்கள், விளக்கிகள், நிலத்தின் உரிமம், தரம் மற்றும் வரைபடங்கள் போன்ற அனைத்து உள்ளமைப்புகளைத் தயாரித்து வழங்குவதுடன், பொதுமக்களுக்கும் நில உடமை குறித்து தொண்டு நோக்குடன் பணியாற்றுகிறது.

3. பொது நிர்வாகத்திலும், பொதுநல நோக்குடன் மக்களுக்காக மேற்கொள்ளப்படும் பலவித அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவைப்படும் விளக்கிகள் அடங்கிய படம். மாநில மாவட்ட வட்ட சாலை நிலப்படங்களும் மற்றும் சுற்றுலா வழிகாட்டி நிலப்படங்களும் தொகுக்கப்பட்டு பல வண்ணங்களில் அச்சடிக்கப்படுகின்றன.

4. கீழ்க்கண்ட திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அவை முன்னேற்றத்தில் உள்ளன:—

(1) நத்தம் மற்றும் வேளாண்மைக்கல்லாது பிறவற்றிற்குப் பயன்படுத்தப்பட்டு வரும் வேளாண்மை நிலங்களை அளவை செய்தல்.

(2) சென்னை பழைய நகரம் நீங்கலாக அனைத்து நகராட்சிகள், நகரியங்கள் மற்றும் மாநகராட்சிகளில் நகர அளவை மேற்கொள்ளல்.

(3) மலைக் கிராமங்களின் அள்வை.

நத்தம் மற்றும் வேளாண்மைக்கல்லாத பிறவற்றிற்குப் பயன்படுத்தப்பட்டு வரும் வேளாண்மை நிலங்களை அளவை செய்தல்.

5. மேற்கண்ட நிலங்கள் இதுவரை விரிவாக நில அளவை செய்யப்படவில்லை. இதன் காரணமாக நத்தம் பகுதிகளிலும் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படாமல் பிற பயன்களுக்கு உபயோகப்படுத்தப்படும் விவசாய நிலங்களிலும் விரிவான நில அளவை செய்ய நீர்மானிக்கப்பட்டது. இந்த அளவையின்போது நத்தத்தில் உள்ள சாலை, தெரு, சந்துகள் ஆியவற்றின் எல்லைகள் வரையறுக்கப்பட்டு நில அளவை செய்யப் படுகிறது. தங்கள் சொத்தின் மீதான உரிமையையும், பாத்தியத்தையும் நிலைநாட்ட பொது மக்களுக்கு நத்தம் நில அளவை பெரிதும் பயன்படுகிறது.

6. இத்திட்டத்தின் கீழ் சுமார், 14,000 ச.கி.மீ. பரப்பளவை 5 ஆண்டு காலத்திற் குள் அளவை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அரசு ஆணை 1971, வருவாய் (எஸ்.எஸ். 2), நாள் 14—10—1988-ன்படி நத்தம் அல்லது கிராமக்குடியிருப்புகளாக முன்னரே வகைப்படுத்தப்பட்ட தனியார் நில உடமைகள் மற்றும் விவசாயத்திற்குப் பயன்படுத்தாமல் பிறவற்றிற்குப் பயன்படுத்தப்படும் விவசாய நிலங்களுக்கும் மனைவரி நிர்ணயம் செய்ய இந்த அளவையின் மூலம் சாத்தியமாகிறது. இத்திட்டத் தில் 31—12—1989 வரை 1523.59 ச.கி.மீ. பரப்பளவு அளவைப் பணி முடிக்கப் பட்டுள்ளது.

நகர அளவை.

7. சுமார் 1900 சதுர கிலோ மீட்டர் பரப்பளவை உள்ளடக்கி தமிழ்நாட்டில் 109 நகராட்சிகள் மற்றும் நகரியங்கள் உள்ளன. இவற்றில் 1200 ச.கி.மீ. பரப்பில் 76 நகராட்சிகள் 1901—1930 காலக்கட்டத்தில் நகர அளவை செய்யப்பட்டுள்ளது. சுமார் 700 ச.கி.மீ. பரப்பில் 33 நகராட்சிகளில் இதுவரை விரிவான நகர அளவை செய்ய எடுத்துக்கொள்ளப்படவில்லை. முன்னரே அளவை செய்யப்பட்ட நகராட்சி களில் நகர அளவை அப்போது இருந்த நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில்மட்டுமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. பிற்பாடு அனைத்து நகராட்சிகளிலும் விரிவாக்கப்பட்ட பகுதி மொத்த பரப்பில் 1/3 பகுதியாகவும், சுமார் 400 ச.கி.மீ. பரப்பளவை யும் கொண்டதாக உள்ளது. கோயம்புத்தூர் திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி போன்ற பெரு நகரங்கள் வேகமாக விரிவடைவதால், விவசாய நிலங்கள் குடியிருப்பு மனைகளாகவும் தொழிற்கூடங்களாகவும் உருமாறி வருகின்றன. எனவே, இந்நிவ உடமைகளின் எல்லைகள் வரையறை செய்ய விரிவான நகர அளவை மேற்கொள்வது அவசியமாகிறது. இச்சூழ்நிலையில், தமிழ்நாட்டில் உள்ள 109 நகராட்சிகளிலும், 3, மாநகராட்சிகளிலும் மூல தூண நகர அளவை ஆவணங்கள் மேம்படுத்துதல் பணி மேற்கொள்ளப்படுகிறது. 31—12—1989 முடிய இத்திட்டத்தின்கீழ். 185.43 ச.கி.மீ. பரப்பில் நில அளவைப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

மலைக்கிராம அளவை :

8. மலைக் கிராமப் பகுதிகளில் 1899—1910 ஆம் வருட காலக் கட்டத்தில் அப் போதைய வழக்கில் இருந்த நடைமுறைகளையொட்டி நில அளவை செய்யப்பட் டுள்ளது. இந்நில அளவை ஆவணங்கள் காலாவதியாகி, நடைமுறைக்கு ஒவ்வாதவை யாகிவிட்டன. அரசு தரிசு நிலங்கள் நில அளவை செய்யப்பட்டு கிராம எல்லைக்குள் சேர்க்கப்படவில்லை. இத்தகைய தரிசு நிலங்கள் சுமார் 50 முதல் 80 வருட காலமாக பெரும்பாலும் ஆதிவாசிகளால் விவசாயம் முறையில் இப்போது சாகுபடியை மேற் கொள்ளும் ஆதிவாசி அடையாளங்காண இயலவில்லை, இந்நிலங்களின் மேல் மக்களுக்கு உள்ள உரிமைகள் உறுதியாக அங்கீகரிக்க முடியவில்லை. இதனால் பட்டா வழங்க வும் இயலவில்லை. தவறான ஆக்கிரமங்களைத் தடுக்க கிராம எல்லை மற்றும் ஒதுக்கக்காடுகள் ஆியவற்றில் எல்லைகள் வரையறுப்பது அவசரத் தேவையாகிறது. அதே நேரத்தில் ஒதுக்கக் காடுகள் என அறிவிப்பு செய்ய பிரேரேபிக்கப்படும் எல்லைக் குள் உள்ள அரசு தரிசு நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கவோ அல்லது வனத் துறை புதிதாக தோட்டப் பயிர்களை நடவோ, பயன்படுத்தலாம். இத்த அம்சங்களை எல்லாம் மனத்தில் கொண்டுதான் இதை ஆதிவாசிகளின் நலவாழ்வுத் திட்டமாக அரசு கருதி, வடாற்காடு, திருச்சி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் இப்பணி யை மேற்கொள்ள ஆணை வழங்கியது. 31—12—1990 வரை 436.59 ச.கி.மீ. பரப்பில் அளவைப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

வருவாய் பதிவேடுகளும் பதிவுகளும். பராமரித்தல் :

கிராம மாவட்டத்திலிருந்து, மாநில அளவை வரை எல்லைகள் அடையாளம் காண்பதற்கு உன்னிப்பாக பராமரிப்புப் பணி மிக அவசியமான ஒன்றாகும். பராமரிப்பு நில அளவை ஆவணங்களில் அன்றாட மாற்றங்கள் செய்து பதிவேடுகளைச் செவ்வனே பராமரிக்கும் பொருட்டு குறுவட்டம் மற்றும் பீட்டங்களில் பணியாளர்களின் அமைப்பைக் கூடுதலாக நியமித்து பராமரிப்புப் பணியை வலுப்படுத்தியுள்ளது.

அச்சக வசதிகள் :

10 சென்னை நில அளவைப் பதிவுறுக்கள் துறையுடன் இணைந்துள்ள நில அளவை மத்திய அலுவலகத்தில் வரைப்படங்கள் அச்சிடுவதற்கான வசதிகள் உள்ளன. இத்துறையில் வரைபடங்கள் கருப்பு, வெள்ளைகளிலும் மற்றும் ஆறு வண்ணங்களிலும் அச்சிடப்படுகின்றன. மேலும், லித்தோ பணியையும் இத்துறையால் ஏற்க இயலும். நிழற்பட அச்சுமூலம் வரைபடம் தயாரித்து அச்சிட இத்துறை நவீன தொழிற்நுட்ப உத்திகளை உபயோகிக்கிறது. வரைபடங்கள் நகல் எடுப்பதற்கு நிழற்பட நகல் எடுக்கும் இயந்திரம் உபயோகிப்பது போன்றவற்றின் மூலம் இத்துறை ஏற்கனவே இயந்திரமயமாக்குதலை அறிமுகப்படுத்தியுள்ளது.

எஸ்டேட் நிலவரித் திட்டம்.

முன்னுரை :

நிலவரித் திட்டத்துறை, ஜமீந்தார்கள் மற்றும் இனாம்தாரர்கள் போன்ற இடைத்தரகர்களின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளை அரசின் ஆளுகைக்குக் கொண்டு வருவதற்காகவும் மற்றும் ரயத்துவாரி முறையை மேற்படி பகுதிகளில் அமல் செய்வதற்காகவும் ஏற்படுத்தப்பட்டது, இதற்கென கீழ்க்காணும் ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றும் சட்டங்கள் இயற்றப்பட்டு அமல் செய்யப்பட்டுள்ளது.

(1) தமிழ்நாடு சட்டம் 26/48 (தமிழ்நாடு எஸ்டேட் ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1948.

(2) தமிழ்நாடு சட்டம் 26/63 (தமிழ்நாடு இனாம் உடைமை ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1963.

(3) தமிழ்நாடு சட்டம் 30/1983 தமிழ்நாடு சிறு இனாம்கள் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1963.

(4) தமிழ்நாடு சட்டம் 27/1963 (தமிழ்நாடு குத்தகை உடைமைகள் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1963.

(5) தமிழ்நாடு சட்டம் 30/1964

(6) தமிழ்நாடு சட்டம் 31/1964

(7) தமிழ்நாடு சட்டம் 32/1964

(8) தமிழ்நாடு சட்டம் 33/1964

(9) தமிழ்நாடு சட்டம் 11/1972

தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்ட கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டம் செங்கோட்டை வட்டத்தை சேர்ந்தது.

(10) தமிழ்நாடு சட்டம் 24/1969 தமிழ்நாடு ஜென்மம் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1969.

(11) தமிழ்நாடு சட்டம் 31/1973 வரியில்லா உடைமை நிலங்களுக்கு ரயத்துவாரி தீர்வை விதிக்கும் சட்டம், 1973.

ப. செயல்பாடுகள் :

தமிழகம் முழுமைக்கும் தஞ்சையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு நிலவரித் திட்ட அலுவலரும் அவரின் கீழ் பணி புரிய துணை ஆட்சியர் தகுதியில் ஐந்து நிலவரித் திட்ட உதவி அலுவலர்களும் உள்ளனர்.

ஆதீன மற்றும் இனாம் உடைமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் உடைமைதாரர் அரசினரால் எடுத்துக் கொள்ளப்படும் அறிவிப்பு செய்யப்பட்டபின் தமிழ்நாடு நில அளவைத் துறையினரால் நில அளவை சட்டத்தின் கீழ் அளவை செய்து நில அளவை ஆவணங்கள் நிலவரித் திட்டத் துறைக்கு அளிக்கிறார்கள்.

இவற்றை அடிப்படையாக வைத்து நிலவரித் திட்ட பல கட்டப் பணிகள் மேற் கொள்ளப்படுகின்றன. இனாம் ஒழிப்புச் சட்டங்களில் உள்ள விதிகளின் கீழ் நில உடைமையாளர்களின் நில உரிமைகள் சட்டப் பூர்வமாக நிர்ணயம் செய்யப் படுகின்றன. நிலவரித் திட்டம் அமல் செய்யப்பட்ட பின் அன்றாட நிருவாக பணிக்காக 'அ' பதிவேடு சிட்டா முதலிய நிலவரி திட்ட ஆவணங்கள் வருவாய்த் துறையில் பராமரிப்புப் பணிகாக ஒப்படைக்கப்படுகிறது. தற்சமயம் டெல்லி உச்ச நீதி மன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றம் தடைகள் நீக்கம் பெற்ற உடைமைகளில் நிலவரித் திட்டப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்படி ஒழிப்புச் சட்டங்களின் கீழ் செய்யப்பட்டு வந்த பணிகள் தவிர கீழ்க்காணும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

(1) புதுக்கோட்டை மாவட்டம் இணைந்த பகுதியில் மறு நிலவரித் திட்டம் அமல் செய்தல்.

(2) கன்னியாகுமரி மாவட்டம் இணைந்த பகுதியில் தமிழ்நாடு சட்டம் 30/1964-ன் கீழ் நிலவரித் திட்டம் அமல் செய்தல்.

(3) வருவாய் பின்தொடர் பணியின்கீழ் ரயத்துவாரி பகுதியில் பட்டாதாரர்களின் பெயர்களைச் சரியானபடி பதிவு செய்து புதிய அ-பதிவேடுகள் வருவாய்த் துறையின் அன்றாட நிருவாகத்திற்காக அளிக்கப்படுதல்.

(4) ஜமீன் நத்தத்தில் குடியிருப்போர் விவசாய காரியங்களுக்கு பயன்படுத்தாத விவசாய நிலங்களில் குடியிருப்போர் ஆகியோருக்கு பட்டா வழங்குதல்.

நில அளவை பதிவேடுகளை மேம்படுத்துவதற்கான நகர நில அளவையும் மலைகளில் நத்தம் பகுதியில் மறு நில அளவை மேற்கொண்டு பட்டா வழங்கவும், மனை வரி விதிக்கவும் சம்பந்தமான நிலவரித் திட்டப் பணிகளை மேற்கொள்ளுதல்.

5. பணி முன்னேற்றம் :

1989–90ல் நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட கீழ்க்கண்ட நிலவரித் திட்டப் பணிகள் பல, ஒழிப்புச் சட்டம் மற்றும் வருவாய் பின் தொடர் பணியின் கீழ் 31–3–1990 முடிய நிறைவேற்றப்பட்டுள்ளன:—

சட்டம்.	கிராமங்களின் எண்ணிக்கை.	பரப்பளவு. (ச.கி.மீ.)
(1)	(2)	(3)
சட்டம் 26/63	11	18.40
சட்டம் 31/73	1	6.62
சட்டம் 30/63	1	0.30
வருவாய் பின்தொடர்பணி	109	510.54

6. புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டது :

அரசு ஆணை எண் 1177 (வணிகவரி மற்றும் அறநிலையத்துறை), நாள் 30–10–1978 இல் நத்தம் அளவை நிலஅளவை மற்றும் விவசாயம் இல்லாமல் பயன்படுத்தும் நிலங்களையும் நிலஅளவை செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. நிலவரித் திட்டம் செயல்படுத்துவதற்கென அறிவிக்கை அரசு ஆணை என் 1971 வருவாய்த்துறை, நாள் 14–10–1988ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு 9–11–1988 ஆம் நாளிட்ட அரசிதழில் வெளம்பரப்படுத்தப்பட்டது. 1,16,00.35 ச.கி.மீ பரப்பில் நிலவரித் திட்டப்பணி செயலாக்கத்தில் உள்ளது. இப்பணியின் கீழ் முதல் கட்டமாக 20 லட்சம் பேர்கள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி கணிசமான வருமானம் (வீட்டு மனைவரி) அரசுக்கு கிட்டும் இது ஒரு பொது நலத் திட்டம். இதனால் பயன் அடைவோர் தங்கள் குடியிருப்புக்கு உரிமை பிடைப்பது மட்டும் அல்லாமல் அபிவிருத்தி மற்றும் கடன் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாகும். இத்துடன் நில அளவைப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ள நகர்ப்புறங்களில் மற்றும் மலை கிராமங்களில் மறு நில அளவை செய்யப்பட்ட இடங்களில் உடைமைகளின் மேம்பாடுகள் செய்யவும், நத்தம் நிலவரித் திட்ட அறிவிக்கையின்படி மனைவரி விதிப்பு மேற் கொள்ளவும் நிலவரித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

வீ. நெற்புத் தகவல்கள் :

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் அரசுக்கும் நில உரிமையாளர்களுக்கும் இடையில் இருந்து வந்த இடைத்தரகர்களை நிலவரித் திட்டத்* துறையானது ஒழிப்புச் சட்டங்கள் மூலம் நீக்கம் செய்தது. இதனால் ரயத்துக்கள் தங்களுடைய நிலத்தின் மீது தங்களுக்கு இருக்கும் உரிமையை தெரிந்து கொள்வதற்கும் இனாம் உடைமை இராமங்களில் ரயத்துவாரி செட்டில்மெண்ட் செய்ததினால் அரசுக்கு நிலவரி மூலமாக ஒரு கணிசமான வருவாய் ஈட்டுவதற்கும் வழி ஏற்பட்டது. சிறு ரயத்துக்களுக்கு அந்தஸ்து வழங்கப்பட்ட காரணத்தினால் அவர்கள் உத்வேகம் பெற்று அரசு வழங்கிய வசதிகளைப் பயன்படுத்தவும் இதனால் அபிவிருத்தி அடைந்த புதிய சாகுபடி முறைகளைக் கையாண்டு விவசாய உற்பத்தியைப் பெருக்கவும் பெருமளவிற்கு உந்துதலாக உள்ளது.

நகர்ப்புற நிலவரி மற்றும் நகர்ப்புற நில உச்சவரம்பு

நகர்ப்புற நிலவரி

நகர்ப்புற நிலவரிச் சட்டம் :

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், சென்னை நகரில் 1966 ஆம் ஆண்டு முதலும் மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி முதலிய நகரங்களில் 1971 ஆம் ஆண்டு முதலும், சென்னைப் புறநகர்ப்பகுதிகளில் 1975-ம் ஆண்டு முதலும், சென்னை திருநெல்வேலி நகருக்கும் மதுரை, திருச்சி, சேலம் மற்றும் கோவை நகர்களில் நீட்டிக்கப்பட்ட பகுதிகட்கும் 1981ம் ஆண்டு முதலும் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இச் சட்டத்தின் பிரிவு 29-ன் கீழ் பொது வழிபாட்டிற்கு உபயோகப்படும் நிலங்கள், மத்திய மாநில அரசுகளால் நிதி உதவி பெறும் மருத்துவ மனைகள், இறந்தவர்களை எரியூட்டும் மற்றும் புதைக்குமிடங்கள், பொதுமக்கள் உபயோகிக்கும் பாதை மற்றும் பொது மக்கள் உபயோகப்படுத்தும் நிலங்கள் மாநில அரசால் அங்கீகாரம் பெற்ற பள்ளிகள், மற்றும் கல்லூரிகள் பல்கலைக்கழகங்கள் பூங்கா நூலகம் மற்றும் அருங்காட்சியகம் முதியோர் மற்றும் சால்தடைப்பராமரிப்பு இல்லம், காருகேளாதோர் மற்றும் ஊமை கணுக்கான பள்ளி, உள்ள நிலங்களுக்கு தன்னியல்பு வரிச்சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

தர்ம ஸ்தாபனம் மற்றும் பொது அறக்கட்டளைக்குச் சொந்தமான நிலங்களுக்கு நகர்ப்புற நிலவரி செலுத்துவதில் இடர்பாடு இருப்பின் அரசு பிரிவு 27 (1)ன் கீழ் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கிறது.

1975-ல் நகர்ப்புற நிலவரி அதிகரிக்கப்பட்டதை எதிர்த்து பல முறையீடுகள் பொது மக்களிடமிருந்து செய்யப்பட்டதன் பேரில், அரசாணை எண் 2625, வருவாய்த்துறை, நாள் 27—12—1976இல் அரசு பல சலுகைகளை அளித்தது. அதன்படி 1—7—1971ஆம் தேதி சந்தை மதிப்பீட்டின் அடிப்படையில் நகர்ப்புற நிலவரி விதிக்கப்படும் விவரம் கீழ் வருமாறு :—

சென்னை நகர்ப்புறப்பகுதி தவிர ஏனைய நகர்ப்புறங்களில் உள்ள நிலங்கள்.		சென்னை புறநகர்ப்பகுதியில் உள்ள நிலங்கள்.	
(1)		(2)	
1. முதல் இரண்டு மனைகள்	வரி இல்லை.	1. முதல் மூன்று மனைகள்	வரி இல்லை.
2. இரண்டு மனைக்கு மேல் ஐந்து மனைக்குள்.	சந்தை மதிப்பில் 0.7 சதவீதம்.	2. மூன்று மனைக்கு மேல் ஏழு மனைக்குள்.	சந்தை மதிப்பில் 0.7 சதவீதம்.
3. ஐந்து மனைக்கு மேல் பத்து மனைக்குள்.	1 சதவீதம்.	3. ஏழு மனைக்கு மேல் பத்து மனைக்குள்.	1 சதவீதம்.
4. பத்து மனைக்கு மேல் இருபது மனைக்குள்.	1.5 சதவீதம்.	4. பத்து மனைக்கு மேல் இருபது மனைக்குள்.	1.5 சதவீதம்.
5. இருபது மனைக்கு மேல்	2 சதவீதம்.	5. இருபது மனைக்கு மேல்.	2 சதவீதம்.

மேலும், சிறுதொழில் சான்றிதழ் பெற்றுள்ள தொழில் கூடங்களுக்கு 25 சதவீதம் வரிச்சலுகையும், ஏனைய தொழிற்கூடங்களுக்கு 10 சதவீதம் வரிச்சலுகையும் சங்கீத நாடக சபாக்கள் மற்றும் சொந்தக்காரர் குடியிருப்புக்களுக்கு 50 சதவீதம் வரிச் சலுகையும், திரையரங்கங்களுக்கு 10 சதவீதம் வரிச்சலுகையும் 1971-ஆம் ஆண்டைய தமிழ்நாடு குடிசை குடியிருப்பு ஒழிப்புச் சட்டத்தின் பிரிவு 3 (பி)-ன் கீழ் குடிசைக் குடியிருப்பாக அறிவிக்கப்பட்ட நிலங்களுக்கு நகர்ப்புற நிலவரியிலிருந்து விலக்கும் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்றம் 10—1—1985-ஆம் தேதி தீர்ப்பில் நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் பிரிவு 6-பி செல்லத்தக்கதல்ல என்று தீர்ப்பளித்ததால் ஒருங்கிணைந்த விதிக்கும் நகர்ப்புற நிலவரிக்குப் பதிலாக புல எண் வாரியாக தனித்தனியாக சென்னை புறநகர்ப்பகுதியில் மூன்று மனைகளுக்கு மேலும் உள்ள நிலங்களுக்கு தனித்தனியாக வரிவிதிக்கப்பட வேண்டுமென அரசாணை எண். 1165 வருவாய்த்துறை நாள், 27—7—1987-ம் ஆண்டில் ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி தற்காலிக வரி விதிப்பு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன.

31—1—1990 வரை தற்காலிக வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ள இனங்களின் விபரம் பின்வருமாறு :—

சட்டம்	மொத்த இனங்கள்.	வரிவிதிப்புத் தொகை (1) பசலி ஆண்டுக்கு
(1)	(2)	(3)
		(ரூபாய் இலட்சத்தில்)
1971	38,744	104.00
1972	17,122	52.47
1973	31,362	157.16

(ii) நகர்ப்புற நில உச்சவரம்பு :

1. நிராமப் புறங்களிலிருந்து பெருமளவில் மக்கள் வெளியேறி வேலை மற்றும் இதர வசதிகளைத் தேடி நகர்ப்புற பகுதிகளுக்கு வந்துள்ளதால் நகர்ப்புற பகுதிகளில் உள்ள நிலங்களுக்குத் தேவை அதிகமாக உள்ளது. எனவே அரிதாக கிடைக்கும் நகர்ப்பகுதிகளை பயன்படுத்துவதை முறைப்படுத்தி முறையாக மேம்படுத்துவது, ஒரு சிலரிடமே நிலங்கள் குவிந்து அதனை அதிக விலைக்கு விற்பது போன்றவற்றைத் தடுக்கும் பொருட்டு, தனிப்பட்ட ஒருவர் வைத்துள்ள நிலங்களுக்கு உச்சவரம்பு விதிக்க லாம் என்றும், நியாயமான அளவிற்கு அதிகமாக நகர்ப்புற நிலங்களைச் சொந்தமாக வைத்திருப்பதைத் தடை செய்ய வேண்டும் என்று கருதப்பட்டது. இந்நோக்கத்துடன் தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1976 (குடியரசுத் தலைவர் சட்டம் 34/1976) இயற்றப்பட்டது 3—8—1976 முதல் அமுலாக்கப்பட்டது.

2. இச்சட்டத்தின் மூன்று முக்கிய அம்சங்கள் வருமாறு :

1) தனிப்பட்ட ஒருவர், ஒரு குடும்பம், ஒரு நிறுவனம், ஒரு கம்பெனி அல்லது ஒரு குழு அல்லது தனிப்பட்டவர்கள் சேர்ந்த ஒரு சங்கம் வைத்திருக்கின்ற காலி நிலத்தின் மீது உச்சவரம்பு விதித்தல்;

(2) எதிர் காலத்தில் கட்டப்படும் வீடுகளின் பரப்புக்கு உச்சவரம்பு விதித்தல்;

(3) நகர்ப்பகுதி சொத்தை உரிமை மாற்றம் செய்து கொடுப்பதை முறைப் படுத்துதல் ஆகியவையாகும்.

3. இச்சட்டத்தைச் செயலாக்குவதில், பொதுமக்கள் அடைந்த இடர்பாடுகள் குறித்து, எண்ணற்ற முறையீடுகளும் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட செய்திகளும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. இவற்றைக் கருத்திற் கொண்டு குடியரசுத் தலைவரின் 1976 ஆம் ஆண்டு 34 ஆம் சட்டத்தை ரத்து செய்து, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில உச்சவரம்பு கட்டுதல், முறைப்படுத்துதல் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 24/1978) அரசு இயற்றியது.

4. தமிழ்நாட்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டமும் 3—8—1976 முதல் சென்ற காலம் உள்பட அமுலுக்கு வந்தது. (Retrospective effect)

5. இச்சட்டம் பின்வரும் நகர் கூட்டுப் பகுதிகளில் செயலில் உள்ளது. நகர் கூட்டுப் பகுதிகளின் பெயர்

(1) சென்னை,
(2) மதுரை,
(3) கோயம்புத்தூர்,
(4) திருச்சிராப்பள்ளி,
(5) சேலம் மற்றும்
(6) திருநெல்வேலி.

6. கீழே குறிப்பிட்டுள்ள நகர் கூட்டுப்பகுதி ஒவ்வொன்றும் தனிப்பட்ட ஒருவரோ ஒரு குடும்பமோ, ஒரு தொழில் நிறுவனமோ நிலம் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படக் கூடிய உச்சவரம்பின் விவரம் வருமாறு:

தமிழ்நாடு சட்டம் 24/1978.

நகர் கூட்டுப் பகுதி.	வகைப் பாடு.	தனிப் பட்ட ஒருவர்.	ஒரு குடும்பம்.	தொழில் நிறுவனம்.
(1)	(2)	(3)	(4)	(5)
	I	ச.மீ.	ச.மீ.	ச.மீ.
சென்னை		500	2,000	2,000
மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம்.	II	1,500	3,000	3,000
திருநெல்வேலி	III	2,000	4,000	4,000

7. இச்சட்டம் செயலுக்கு வந்த நாளன்று உச்ச வரம்புக்கு மிகையாக காலி நிலம் வைத்துள்ள நபர் எவரும் அவ்வாறு மிகையாக வைத்துள்ள நிலம் குறித்த விவர அறிக்கை ஒன்றை மேற்படி சட்டப் பிரிவு 7 (1)ன்கீழ் அப்பகுதியின் மீது அதிகார வரம்பினைக் கொண்டுள்ள தகுதிவாய்ந்த அதிகாரியிடம் தாக்கல் செய்ய வேண்டும். தகுதிவாய்ந்த அதிகாரி அதனை பரிசீலனை செய்து சட்டப்பிரிவு 9-11 இன்கீழ் நடவடிக்கை எடுத்து, அறிக்கை தாக்கல் செய்த மனுதாரரிடம் உள்ள மிகை வெற்று நிலத்தைக் கணக்கிட்டு அதனைக் கையகப்படுத்துவோர்க்கு தகுதிவாய்ந்த அதிகாரியின் உத்தரவினால் அவர் பாதிக்கப்பட்டிருந்தால், அவர் சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர், நிலச்சீர்திருத்த துறை அவர்களுக்கு சட்டப்பிரிவு 33-ல் கீழ் மேல் முறையீடு மனு தாக்கல் செய்யலாம். நிலச்சீர்திருத்த ஆணையரின் முடிவு இறுதியானதாகும்.

8. மத்திய, மாநில அரசுகள், அரசு நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள் அட்டவணையிடப்பட்ட வங்கிகள், வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள், சமய அறக் கட்டளை நிறுவனங்கள் முதலியன வைத்துள்ள நிலங்களுக்கு இச்சட்டத்தின் விதித் துறைகள் பொருந்தாது.

9. தனி நபரோ, நிலையங்களோ அல்லது தொழில் நிறுவனங்களோ அவர்களிட முள்ள மிகை வெற்று நிலங்களை பொதுக் காரியங்களுக்கு உபயோகப்படுத்துவதாக இருந்தால் அவர்கள் சட்டப் பிரிவு 21 (1) (எ)-ன்கீழ் விலைக்கு கோரலாம். அதே போல் தனி நபருக்கு ஏற்படுகின்ற எதிர்பாராத இடர்களின் அடிப்படையிலும், அரசு, சட்டப்பிரிவு 21 (1) (பி)-ன்கீழ் விலக்களிக்கிறது.

10. மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட மிகையான காலி நிலங்கள், மேற்சொன்ன சட்டத்தின் 24 ஆம் பிரிவின் விதித்துறைகள், மேற்சொன்ன சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகளின் 23 ஆம் விதி ஆகியவற்றின்படி தொழில் விரிவாக்கம் பொருட்டு, தனி நபருக்கோ, தொழிற்சாலையில் வேலை பார்ப்போருக்கு வீடு கட்டும் பொருட்டோ, மேற்படி நிலங்களை நன்மை அளிக்கும் பொருட்டு யாருக்கும் அரசு ஒதுக்கீடு செய்யலாம். அரசு கீழ்க்கண்ட முதன்மையில் ஒதுக்கீடு செய்கிறது.

(1) மாநில அரசுத்துறைகள்.
(2) மாநில அரசின்கீழ் உள்ள நகராட்சி மன்றங்கள், மாநகராட்சிகள் மற்றும் பொது நிறுவனங்கள்.
(3) மத்திய அரசுத் துறைகள்.
(4) மத்திய அரசின் கீழ் உள்ள கூட்டு நிறுவனங்கள் மற்றும் பொது நிறுவனங்கள்.
(5) வீட்டு வசதி நிறுவனங்கள்.
(6) தொழிற்சாலைகள்.
(7) தொழிற்சாலையில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்கு.
(8) பிற நிறுவனங்கள்/நிலையங்கள்.
(9) தனியார்.

11. மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட காலி நிலங்களின் 31 1—1990 வரை 158 ஹெக்டேர், 08 ஏக்கர், 24 சதுர மீட்டர் நிலத்தை அரசுத் துறைகள் அரசுக் கழகங்கள், வீட்டு வசதி வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. 446 ஹெக்டேர், 79 ஏக்கர், 97 சதுர மீட்டர் நிலங்கள் ஒதுக்கீடு செய்வதற்குத் தயார் நிலையில் உள்ளது.

அத்தியாயம்: 27

ஊரக வளர்த்தித்துறை

பூமிதானம் மற்றும் கிராமதானம்

முன்னுரை :

பூமிதான சட்டம் 1958ன்படி தமிழ்நாடு பூமிதான வாரியம் 1959ல் ஆச்சார்ய வினோபாவே அவர்கள் பெற்று பூமிதான நிலங்களை முறைப்படுத்துவதற்காக துவக்கப்பட்டது.

பூமிதானம் :

பூமிதான இயக்கம் ஆரம்பித்த காலத்தில் 20,290 ஏக்கர் நிலம் பூமிதானமாகப் பெறப்பட்டது. இந்த வருடம் 92 ஏக்கர் நிலம் 65 நிலமில்லா ஏழைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது. இன்னும் 18,000 ஏக்கர் நிலங்கள் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது.

கிராமதானம் :

தமிழ்நாட்டில் இதுவரை 2,049 கிராமங்களில் 1,30,185 ஏக்கர் நிலங்கள் கிராம தானத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இதில் 808 கிராமங்கள் கிராமதான கிராமங்களாக அரசால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

பூமிதான அபிவிருத்திப் பணிகள் :

பூமிதான வாரியமானது, சில சேவை ஸ்தாபனங்களின் உதவியுடன் அதாவது, சர்வ சேவாப்பண்ணைக் குழுமம், தமிழ்நாடு சர்வோதயமண்டல், மதுரை மாவட்ட நிர்மான சங்கம், தமிழ்நாடு பூமிதான/கிராமதான அபிவிருத்தி டிரஸ்ட் ஆகிய சேவை ஸ்தாபனங்களின் உதவியுடன் பூமிதான நில அபிவிருத்திப் பணிகளைக் கவனித்து வருகிறது.

இந்த சேவை ஸ்தாபனங்களின் மூலம் செய்யும் அபிவிருத்திப் பணிகளுக்கு தாட்கோ ஐ.ஆர்.டி.பி. மற்றும் மாசில் திட்டத்தின்கீழ் மானியம் பெற்று அபிவிருத்திப் பணிகள் நடைபெற்று வருகிறது.

மதுரை மாவட்டத்தில் மாணிக்கம்பட்டி என்ற கிராமத்தில் ஆதிதிராவிட குடும்பத்தினருக்கு சர்வோதய மண்டல் மூலம் அபிவிருத்திப்பணி நடைபெறுகிறது. இது இரண்டு கட்டப்பணிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டம் 4.46 இலட்ச மதிப்பீடாகும். இதில் 2.14 இலட்சம் மானியமாக பயனடையும் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டப் பணிக்கு திட்ட மதிப்பீடு ரூ. 2,07,000 ஆகும். இதற்கு தாட்கோ மூலம் 1,03,700 மானியமாகப் பெறப்பட்டு பயனடைவோருக்கு வழங்கப்பட்டுளளது. இந்த வருடத்தில் புதிய மானியம் பெறப்படவில்லை. இந்தத் திட்டப்பணி இவ்வருடம் முடிவடைந்துளளது.

மதுரை மாவட்டத்தில் காந்திபுரம் என்ற கிராமத்தில் 20 ஆதிதிராவிடர் குடும்பங்களை கொண்ட ஒரு பண்ணை சர்வசேவாப் பணி குழுமத்தால் நடைபெற்று வருகிறது. இதில் 40 ஏக்கர் நிலம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இதில் திட்ட மதிப்பீடும் 3.76 இலட்சமாகும். இதற்கு தாட்கோ மூலம் ரூ. 88,750 மானியம் அனுமதிக்கப்பட்டது, அதில் ரூ. 66,718 சென்ற ஆண்டு விடுவிக்கப்பட்டது. இந்த ஆண்டு இத்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டது.

மதுரை மாவட்டம், ஜானி உசிலம்பட்டி கிராமத்தில் 71 ஆதிதிராவிடக் குடும்பங்களை கொண்ட ஒரு பண்ணை சர்வ சேவாப்பண்ணை குழுமத்தால் நடைபெற்று வருகிறது. இதற்கு மானியமாக அரசுக்கு ரூ. 1,28,548 வழங்கி உத்திரவிட்டுளளது. பின்னர், இரண்டாவது தவணையாக ரூ. 1,21,152 மானியமாக தாட்கோ மூலம் சென்ற ஆண்டு பெறப்பட்டுள்ளது. இப்பணத்தின்மூலம் ஆரம்பிக்கப்பட்ட திட்டப் பணி இந்த ஆண்டு முடிக்கப்பட்டது.

பூமிதான கிராமதான சர்வோதயக் கூட்டுறவுச் சங்கங்கள் :

தமிழ்நாட்டில் மொத்தம் 31 கிராமதான சர்வோதயக் கூட்டுறவுச் சங்கங்கள் 3,565 உறுப்பினர்களைக் கொண்டு 46,488 பங்குத் தொகையுடன் இயங்கி வருகிறது. இது தவிர, 14 பூதான சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள், 716 உறுப்பினர்களுடன் ரூ. 1,525 பங்குத் தொகையுடன் இயங்கி வருகிறது.

31—3—1990 இல் ரூ. 1,17,000 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் வழங்கிய கடன் நிலுவையிலுள்ளது. மேலும் நீண்டகால மற்றும் குறுகிய காலக் கடன் வழங்கக் கேட்டு வங்கிக்கு எழுதப்பட்டுள்ளது. ரூ. 50,000ம் விவசாயக் கடன் வஜா சட்டத்தின் கீழ் தள்ளுபடி செய்யப்பட்டது. 31—3—1990 இல் அரசுக் கடன் ரூ. 1,45,000 நிலுவையில் இருந்தது. இந்த வருடம் வசூல் இல்லை. இந்தக் கடனை தள்ளுபடி செய்ய அரசுக்கு எழுதப்பட்டுள்ளது.

பூமிதான/கிராமதான அபிவிருத்திக்காக ரூ. 4 கோடி அரசால் 1986 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டது. ஆனால், இது பயன்படுத்தப்படவில்லை. இந்த ஆண்டு அதைப் புதுப்பிக்க அரசுக்கு எழுதப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுக்கு புதிய கிணறுகள் வெட்ட '' ஜீவன்தாரா '' என்ற புதிய திட்டத்தின் மூலம் பூமிதான வாரியத்துக்கு 980 கிணறுகள் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. இந்த ஆண்டு இக்கிணறுகள் வெட்டி முடிக்கப்பட்டது.

ஊராட்சி வளர்ச்சி.

பொது நிர்வாக அமைப்பு :

கிராம நிலையில் ஊராட்சிகளாகவும் வட்டார நிலையில் ஊராட்சி ஒன்றியங்களாகவும் அமைத்து 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி சட்டம் இயற்றப்பட்டது. ஊராட்சி ஒன்றியமானது ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளின் இணையமாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மற்றும் பேரூராட்சி தலைவர்கள் ஊராட்சி ஒன்றியத்தில் அங்கத்தினர்களாக இருப்பார்கள். ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் பொது மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

தமிழ்நாடு ஊராட்சி அமைப்பு கிராம அளவில் ஊராட்சி, வட்டார அளவில் ஊராட்சி ஒன்றியம், மாவட்ட அளவில் மாவட்ட வளர்ச்சி மன்றம் என்ற மூன்றடுக்கு முறையினை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வருகிறது. மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் சட்டரீதியான அமைப்பாக இருப்பினும், செயற் கடமைகள் எதுவும் அவற்றிற்கு ஒப்படைக்கப்படவில்லை. அம்மன்றங்கள் கிராமம் மற்றும் வட்டார அளவில் ஊரக மக்கள் மேம்பாட்டிற்கான உற்பத்தி பெருக்கும் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு அரசுக்கு ஆலோசனை கூறும் ஒரு அமைப்பாக செயல்படுகின்றது. மேலும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து அவ்வப்போது ஆய்வு செய்கின்றன. கிராமம் மற்றும் வட்டார அளவிலான இரண்டு அடுக்குகளாலே செயலாக்கக் கடமைகள நிறைவேற்றப்படுகின்றன.

1. நடைமுறையிலுள்ள நிர்வாகம் :

ஊரக வளர்ச்சித்திட்ட பொறுப்பிலுள்ள ஊரக வளர்ச்சி இயக்குநரே மாநில அளவில் சமுதாய முன்னேற்றம் மற்றும் ஊராட்சி அமைப்புகளின் செயல்திட்டங்களை, இயக்கவும், இவற்றைக் கண்காணிக்கவும் பொறுப்புள்ளவராகிறார். அவர் மாநில அளவில் ஊரக வளர்ச்சித்துறையின் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்பார்வையிடுகிறார். மாநிலம், மாவட்டம், கோட்டம், வட்டாரம் மற்றும் கிராம அளவில் ஊரக வளர்ச்சித் திட்டங்களை செயலாக்கும் பொறுப்பு கீழ்க்கண்டவர்களிடம் உள்ளது.

(அ) மாநில அளவில்	ஊரக வளர்ச்சி இயக்குநர்.
(ஆ) மாவட்ட அளவில்	மாவட்ட ஆட்சியாளர்கள்.
(இ) கோட்ட அளவில்	கோட்ட வளர்ச்சி அலுவலர்கள்.
(ஈ) வட்டார அளவில்	வட்டார வளர்ச்சி அலுவலர்கள்.
(உ) கிராம அளவில்	ஊராட்சி மன்றத் தலைவர்கள்.

ஊரக வளர்ச்சி இயக்குநர் ஊராட்சி ஒன்றிய ஆய்வாளர் என்ற முறையில் மாநில அளவில் ஊராட்சி ஒன்றியங்கள் ஆய்விடுவதற்கு சட்டபூர்வமான அதிகாரமளிக்கப்பட்டுள்ளார். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாவட்ட அளவில் ஊராட்சிகளின் ஆய்வாளராகச் செயல்படுகின்றனர். அதற்கிணங்க அவர்கள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் நடவடிக்கைகளை கண்காணிக்கின்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் அளவில் வழித் தலைவர்களாகவும் உளளனர்.

தமிழ்நாட்டில் தற்சமயம் 25 மாவட்ட வளர்ச்சி மன்றங்களும், 58 வளர்ச்சிக் கோட்டங்களும் உள்ளன. 385 வளர்ச்சி வட்டாரங்களும் உள்ளன. அவற்றுள் கலராயன் மலை வட்டாரம் நீங்கலாக 384 ஊராட்சி ஒன்றியங்கள், 12,616 ஊராட்சிகளை உள்ளடக்கி, இயங்கி வருகின்றன.

2. வரித்தண்டல் :

தமிழ்நாட்டில் மொத்தம் 12,616 ஊராட்சிகள் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு ஊராட்சி சட்டம் 1958 பிரிவு 119 (1)ன்படி ஒவ்வொரு ஊராட்சியிலும் வீட்டு வரி, தொழில் வரி மற்றும் வாகன வரி வசூலிக்கப்படுகின்றன. அவ்வாறு 1989–90 ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட தொகை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(அ) வீட்டு வரி	ரூ. 438.24 இலட்சங்கள்.
(ஆ) தொழில் வரி	ரூ. 44.89 இலட்சங்கள்.
(இ) வாகன வரி	ரூ. 21.53 இலட்சங்கள்.

3. நிதி நிலைமை :

1989–90க்கான ஊராட்சி ஒன்றியங்களின் பொதுக் கணக்கு வரவு மற்றும் செலவு இன்னும் முடிவுசெய்யப்படவில்லை. அவற்றின் 1988–89ஆம் ஆண்டு வரவு மற்றும் செலவு முறையே ரூ. 4,722.03 இலட்சங்கள் மற்றும் ரூ. 4,326.71 இலட்சங்கள் ஆகும். 1988–89இல் ஒரு ஊராட்சி ஒன்றியத்தின் சராசரி பொதுக் கணக்கு வரவு மற்றும் செலவு முறையே ரூ. 12.30 இலட்சங்கள மற்றும் ரூ. 11.27 இலட்சங்கள் ஆகும்.

4. பயன்தரும் தொழில் முயற்சிகள் மூலம் வருவாய் :

1988–90ஆம் ஆண்டில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து பயன்தரும் தொழில் முயற்சிகள் மூலம் கிடைத்த மொத்த நிகர வருவாய் இன்னும் முடிவு செய்யப்படவில்லை. 1988–89இல் அவற்றிற்குப் பயன்தரும் தொழில் முயற்சிகள் மூலம் கிடைத்த நிகர வருவாய் ரூ. 126.11 இலட்சங்களாகும்.

ஊரக வளர்ச்சித் திட்டங்கள்:

ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் செயற்படுத்தப்படும் ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்களின் 1989–90ஆம் ஆண்டில் எய்திய சாதனைகள் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகின்றன.

1. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் :

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் 1980–81ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட குறிக்கோளை எய்துவதற்காக தமிழ்நாட்டில் அனைத்து வட்டாரங்களிலும் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

கிராமப்புறங்களில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களைக் கண்டறிந்து அவர்களை வறுமைக்கோட்டிற்கு மேல் கொண்டுவருதல், கிராமப்புறங்களில் கணிசமான அளவில் கூடுதல் வேலை வாய்ப்பு வசதிகளை உருவாக்குதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஏழைகளுக்குள் ஏழையாக வாழும் குடும்பங்களுக்கு நிலையான வருவாய் அளிக்கும் சொத்துக்களை உருவாக்குவதற்கும், சுய வேலை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும், இத்திட்டத்தின் மூலம் நிதி உதவி அளிக்கப்படுகிறது. இவ்வுதவி அரசு மானியம் மற்றும் வங்கிகளுடன் வழங்குதல் மூலம் அளிக்கப்படுகிறது.

மானியத் தொகையினை மத்திய/மாநில அரசுகள் 50 : 50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றது. கடன் பகுதி நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் வர்த்தக வங்கிகள் மூலம் வழங்கப்படுகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1982–83 முதல் 1984–85 வரையிலுள்ள ஆண்டுகள்) நிதியுதவி அளிக்கப்பட்டு பல்வேறு காரணங்களால் வறுமை கோட்டினை கடக்க இயலாத. பழைய பயனாளிக் குடும்பங்களுக்கும் மத்திய அரசு வழங்கியுள்ள வீழ்முறைகளுக்கேற்ப நிதியுதவி அளிக்கப்பட்டது. மேலும் புதிய பயனாளி குடும்பங்களை கண்டறிந்து, அவர்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டது. ஒவ்வொரு பயனாளிக் குடும்பத்திற்கும் ரூ. 3,000 வரை மானியம் வழங்கப்பட்டது.

1989–90ஆம் ஆண்டில் புதிய பயனாளிக் குடும்பங்கள் இலக்கு 1,92,337 ஆகும். இலக்கினைக் கடந்து 2,21,509 குடும்பங்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டது. இதில் 1,10,470 குடும்பங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவை 77,336 பெண் பயனாளிகள் பயன் அடைந்தனர். 1,24,173 குடும்பங்கள் பல்வேறு தொழிற் பள்ளிகள் (ஐ.எஸ்.பி.) பிரிவின் கீழ் நிதியுதவி பெற்றுள்ளனர். 1989–90–இல் இத்திட்டத்திற்காக 5,159.635 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்தொகையில் 4,080.120 இலட்சங்கள் பயனாளிக் குடும்பங்களுக்கு மானியமாக வழங்கப்பட்டது. மேற்கண்ட மொத்த பனயாளிக் குடும்பங்களுக்கும் 8,148.660 இலட்சங்கள் வங்கிக் கடனாக வழங்கப்பட்டது.

2. கிராமப்புற இளைஞர் சுய வேலைவாய்ப்புப் பயிற்சித்திட்டம் (டிரைசம்)

கிராமப்புறங்களில் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 18 முதல் 35 வயது வரை உள்ள இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு பயிற்சி அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ஒரு அம்சமாகும். பயிற்சி காலத்தில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு உதவிப் பணம் அளிக்கப்படுகிறது. இத்தொகை ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. .. ..

1989–90ஆம் ஆண்டில் 13,230 நபர்களுக்கு பயிற்சி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், இலக்கினைக் கடந்து, 13,252 கிராமப்புற இளைஞர்கள் இத்திட்டத்தில் பயிற்சியளிக்கப்பட்டனர். அவர்களில் 5,613 நபர்கள் தாழ்த்தப்பட்டோர் வகுப்பையும், 68 நபர்கள் பழங்குடியினரும் ஆவர். பயிற்சி பெற்றவர்களில் 2,710 நபர்கள் தாங்களாகவே சுய வேலை வாய்ப்புக்களை அமைத்துக் கொண்டனர். 6,646 நபர்கள் கூலி பெறும் வேலையில் அமர்ந்துள்ளனர்.

3. கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித்திட்டம் :

இத்திட்டம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் துணைத் திட்டமாகும். கிராமப்புற பெண்களுக்கு வருவாய் அளிக்கும் தொழில்களை உருவாக்கி, அவர்களின் குடும்ப பொருளாதார நிலைபெறுமேம்படுத்துவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். மாவட்டங்களில் பின்தங்கிய நிலைமை, அம்மாவட்டங்களில் நிலவும் குழந்தைகள் இறப்பு விதம் மற்றும் கல்வியறிவு பெற்றோர் எண்ணிக்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் செயற்படுத்துவதற்கான மாவட்டங்களின் தேர்வு செய்யப்படுகின்றது. தற்போது இத்திட்டம் தர்மபுரி, பெரியார், திருச்சி, தென்னார்காடு, வடார்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை சிவபுவராயர், புதுக்கோட்டை மற்றும் சேலம் மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகின்றன.

1989–90ஆம் ஆண்டு முடிய 2,253 மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டு 38,389 பெண்கள் பயனடைந்துள்ளார்கள்.

4. ஐவஹர் வேலைவாய்ப்புத்திட்டம் :

1—4—1989 முதல் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டம் ஆகிய இரண்டும் ஒருங்கிணைக்கப்பட்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம்என்ற சீரிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஊரகப் பகுதியில் வாழும் வேலையற்ற மற்றும் குறைந்த வேலைவாய்ப்புள்ள ஆண்கள் மற்றும் பெண்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவதே இத்திட்டத்தின் முதல் நோக்கமாகும். ஊரகப் பகுதிகள் உள்ள வறுமையில் வாழும் மக்கள் பயனடையும் வகையில் உற்பத்தி நல்கும் சமுதாயச் சொத்துக்களை உருவாக்குவதும் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதும் இத்திட்டத்தின் பிற நோக்கங்களாகும். இத்திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீட்டில் 80 சதவீதத்தை மத்தியஅரசும் 20 சதவீதத்தை மாநில அரசும் ஏற்கின்றன. இத்திட்டத்தின் கீழ் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பெறும் நிதி ஒதுக்கீட்டில் 6 விழுக்காடு " இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் " ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு தொகுப்பு வீடுகள் கட்ட ஒதுக்கீடு செய்யப்படுகிறது. எஞ்சியுள்ள தொகையில் 80 விழுக்காடு ஊராட்சிகளுக்கும், 20 விழுக்காடு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் பங்காக வட்டாரங்களிலேயே கிராமங்களிடையே இது பொதுவான பணிகளுக்காக பகிர்ந்தளிக்கப்படுகிறது. ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள ஊராட்சி தொகுப்பு நிதிக் கணக்கில் வைக்கப்படுகின்றது.

1988–89இல் இத்திட்டத்தில் வேலைவாய்ப்பு அளிக்கும் பொது (ஆண் மற்றும் பெண் உள்பட) ஒவ்வொருவருக்கும் தினக்கூலியாக பணம் மற்றும் அரிசி கோதுமை கீழ்க்கண்ட விகிதத்தில் வழங்கப்பட்டது.

1—7—1989 வரை.

	ரூ.பை.
(அ) பணம் — — —	6.90
(ஆ) அரிசி 1 கிலோ	2.20
(இ) கோதுமை 1/2 கிலோ	0.90
மொத்தம்	10.00

10—7—1989 வரை.

	ரூ.
(அ) பணம் ..	11.70
(ஆ) அரிசி 1½ கிலோ (மலிவு விலையில்) ..	3.30
மொத்தம்	15.00

ஊராட்சி மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஆகியவற்றுக்கு அளிக்கப்படும் மானியத்தின் பங்கில் பின்வரும் செலவினம் முதன்மையானது ஆகும்.

(அ) நிர்வாகச் செலவினம் .. 5 விழுக்காடுவரை.

(ஆ) பராமரிப்புச் செலவினம் 10 விழுக்காடுவரை.

எஞ்சியுள்ள தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு பயன்படுத்தப்படும்.

(அ) பொருளார்தார உற்பத்திப் பணிகள் 35 விழுக்காடு.

(ஆ) சமூகக் காடுகள் பணிகள் 25 விழுக்காடு.

(இ) தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் தனிநபர் பயன்பெறும் திட்டம் (ஜீவன்தாரக் கிணறுகள் உட்பட) ... . 15 விழுக்காடு.

(ஈ) சாலைகஸ் மற்றும் கட்டிடங்கள் உட்பட பிற பணிகள் .. .. 25 விழுக்காடு.

இத்திட்டத்தின் கீழ் ஒப்பந்தக்காரர்கஸ் பணிகளைச் செய்து அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

1989—90ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு, செலவின விபரம் பின்வருமாறு :—

	மத்திய அரசின் பங்கு.	மாநில அரசின் பங்கு.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
(அ) ஆண்டு ஒதுக்கீடு	14,127.71	3,531.93	17,659.64
(ஆ) வழங்கப்பட்ட தொகை (உணவு தானிய மதிப்புடன்)	14,632.80	3,531.93	18,164.76
(இ) கான்கிரீட் கூரை போட	—	1;680.00	1,680.00
மொத்தம் —	14,632.80	4,211.93	19,844.761
செலவினம்			20,162.766

மனித சக்தி நாட்கள் :

(அ) இலக்கு 776.39 இலட்ச நாட்கள்.

(ஆ) சாதனை 910.814 இலட்ச நாட்கள்.

1989–90இல்—

எடுத்துக்கொள்ளப்பட்டப் பணிகள்.	இலக்கு.	சாதனை.
(1)	(2)	(3)
(அ) ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கான தொகுப்பு வீடுகள்	42,070	41,666
(ஆ) பள்ளிக்கட்டடங்கள்	178	141
(இ) இதரக் கட்டடங்கள்	3,132	2,929
(ஈ) ஜீவன்தாரா கிணறுகள்	2,968	2,692
(உ) சாலைப் பணிகள்	37,787	37,084
(ஊ) வடிகால் பணிகள்	9,206	9,191
(எ) சிறுபாசனப் பணிகள்	16,839	16,790
(ஏ) பிற பணிகள்	14,308	13,375
	1,26,488	1,24,468

இத்திட்டப்பணிகளில் ஈடுப்படுத்தப்பட்ட தொழிலாளர்களுக்கு ஊதியத்தின் ஒரு பகுதி உணவு தானியங்களாக வழங்கப்பட்டது. இவ்வகையில் 93,963.190 மெட்ரிக் டன் அரிசியும் 22,848.131 மெட்ரிக்டன் கோதுமையும் வழங்கப்பட்டன. இத்திட்ட பணிகளில் 19,959 ஊரக சுகாதார கழிப்பறைகள் தொகுப்பு வீடுகளின்மேற் கட்டப் பட்டுள்ளன.

4. (11) சமூகக் காடுகள் :

சமூகக்காடுகள் திட்டத்திற்காக 1989–90 ஆம் ஆண்டில் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ. 979.690 இலட்சத்தில் ரூ. 910.350 இலட்சம் செலவிடப்பட்டு 339.680 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. 14,010.78 ஹெக்டேர் பரப்பளவு மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன

5. வேளாண்மை பெருந்திட்டம் :

வேளாண்மைப் பெருந்திட்டம், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நிதியுதவி அளிப்பதன் மூலம் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்திற்காக, 1983–84 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் அனைத்து வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு தரமான விதைகள் வழங்குதல், சிறுபாசன வசதிகள் மற்றும் அவர்களது விவசாய நிலங்களை மேம்படுத்துதல் போன்றவை இத்திட்டத்தின்மேற் முக்கிய குறிக்கோளாகும்.

1989–90-ஆம் ஆண்டில் வட்டாரம் ஒன்றுக்கு ரூ. 5 இலட்சம் வீதம் இத்திட்டத் திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்நிதியை மத்திய மாநில அரசுகள் 50/50 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கின்றன. இத்திட்டத்தின் கீழ் :—

(அ) பாசனக்கிணறுகள் மற்றும் பம்புசெட்டுகள் அமைக்கவும் ;

(ஆ) நில மேம்பாடு மற்றும் பணியாளர் செலவுக்காகவும் ;

(இ) எண்ணெய் வித்துக்கள் பருப்பு வகைகள் ; மற்றும்

மூரட்டு தானியங்களுக்கான மினிகிட்ஸ் (Mini Kits) வழங்கவும் நிதியுதவியளிக்கப் படுகிறது. சிறுபாசனம் மற்றும் நில மேம்பாடு ஆகிய பணிகள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. பருப்பு மற்றும் தானிய வகைகளுக்கான மினிகிட்ஸ் (Mini Kits) வேளாண்மைத் துறையினராலும், எண் ணெய் வித்துக்களுக்கான மினிகிட்ஸ் வழங்குதல் எண்ணெய் வித்துக்கள் துறையினர் மற்றும் தோட்டக்கலை துறையினராலும் நிறைவேற்றப்படுகின்றது.

1989–90 ஆம் ஆண்டில் சிறுபாசனம் நிலமேம்பாடு மற்றும் பணியாளர்கள் செலவு பணிகளுக்கு ரூ. 1,113.58 இலட்சங்கள் நிதி விடுவிக்கப்பட்டது, அத்தொகையில் மேற்கண்ட சிறுபாசன பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூ. 614.80 இலட்சங்கள் செலவிடப்பட்டது. இதனால் 18,470 விவசாயக் குடும்பங்கள் பயனடைந்தனர். 19,104 ஹெக்டேர் நிலம் இதன் மூலம் கூடுதல் பாசன வசதி பெற்றது.

நிலமேம்பாடு மற்றும் பணியாளர் செலவு ஆகிய பணிகளுக்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 167.04 இலட்சமாகும். இதன் மூலம் 7,436 விவசாய குடும்பங்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டது. 6,350 ஹெக்டேர் நிலம் மேம்படுத்தப்பட்டது.

6. தேசிய கரிமவாயு திட்டம் :

தேசிய கரிமவாயு திட்டம் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் மத்திய அரசு திட்டமாகும். கரிமவாயு ஒரு பெரும் புதுப்பித்துக் கொள்ளத்தக்க எரிசக்தியாக இருப்பதால் தேசிய கரிமவாயுத் திட்டம் இருபது அம்சத் திட்டத்தில் ஒரு அம்சமாக சேர்க்கப்பட்டுள்ளது.

1989–90 ஆம் ஆண்டில் 12,400 கரிமவாயுக்கலன்கள் அமைக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயம் செய்தது. அதில் 11,315 கலன்கள் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டன. 1989–90 ஆம் ஆண்டில் கரிமவாயுக்கலன்கள் அமைக்கும் பயனாளிகளுக்கு மானியத் தொகையாக ரூ. 322.40 இலட்சம் மத்திய அரசால் விடுவிக்கப்பட்டது. கரிமவாயுக் கலன்கள் அமைத்தல் மற்றும் பராமரித்தல் பற்றி கொத்தனார்களுக்கு பயிற்சியளிக்கப் பட்டன.

7. தேசிய சூளா அடுப்புத்திட்டம் :

தேசிய சூளா அடுப்புத் திட்டம் மத்திய அரசு திட்டமாகும். கிராமப்பகுதிகளில் சமையலுக்காக தேவைப்படும் எரிசக்தி தட்டுப்பாட்டினை தீர்க்க வழிவகை செய்யும் பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் குறைந்தது 25 சதவீதம் எரிபொருளை சிக்கனப்படுத்தும் — நிலையான மற்றும் கொண்டு செல்லக்கூடிய ஆகிய இரு மாதிரிகளில் சூளா அடுப்புக்கள் மாநில முழுவதும் அமைக்கப் பட்டன. 1989–90 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மொத்தம் 1,00,000 சூளா அடுப்புகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 98,002 சூளா அடுப்புகள் அமைக்கப் பட்டன. இத்திட்டத்தின் பயனாக 1989–90 ஆம் ஆண்டில் 579 புகையில்லாக் கிராமங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

8. கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் :

சமுதாயம் நலம்பெற பாதுக்காக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் மிகவும் அத்தியாவசியமானதாகும். கடந்த சில ஆண்டுகளில் இம்மாநிலத்தில் பருவமழை தவறியதால் குடிநீர் வழங்கும் திட்டம் மேலும் முக்கியத்துவம் பெற்றது. எனவே இம்மாநிலத்தில் வாழும் மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு முடிவு செய்தது. இதற்காக தேவையான பகுதிகளில் கைப்பம்புகள் விசைப்பம்புகள் அமைக்கப்பட்டன. மேலும் இத்திட்டத்தை ரீதிய முறையில் செயல்படுத்தும் பொருட்டு கைப்பம்புகள் மற்றும் மின்சாரத்தால் இயங்கும் பம்புகளை பராமரிக்க ஓர் மூன்றடுக்கு நிர்வாக அமைப்பு ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதன்படி கிராம அளவில் பயனாளிக் குடும்பங்களிலிருந்து ஒருவரை காப்பாளராகவும், வட்டார அளவில் பில்டர் மெக்கானிக் ஒருவரையும், கோட்ட அளவில் இளநிலை பொறியாளர் ஒருவர் தலைமையிலான நடமாடும் வண்டியுடன் கூடிய குழு ஒன்றும் பம்புகள் பராமரிப்புக்காக செயல்பட்டு வருகிறது. தவிர ஒவ்வொரு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலும் உதவி செயற்பொறியாளர் ஒருவர் தலைமையில் தனிப்பிரிவும் அமைக்கப்பட்டுள்ளது.

31—03—1990 அன்று தமிழ்நாட்டில் செயல்பட்ட மொத்த பம்புகளின் எண்ணிக்கை 1,10,536 ஆகும். விசைப் பம்புகளின் எண்ணிக்கை 20,397 ஆகும். கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் பராமரிப்பு தினந்தோறும் வட்டார வளர்ச்சி அலுவலராலும், வாரந்தோறும் கோட்ட வளர்ச்சி அலுவலராலும் இருவாரம் ஒரு முறை மாவட்ட ஆட்சித் தலைவராலும் ஆய்வுரை செய்யப்படுகிறது. அளவில் 15 நாட்களுக்கு ஒருமுறை ஊரக வளர்ச்சி இயக்குநராலும் இப்பராமரிப்புப் பணி ஆய்வுரை செய்யப்படுகிறது.

9. தொலைக்காட்சி பெட்டிகள் நிறுவுதல் :

அரசின் கொள்கைகளை பொதுமக்களுக்கு விளக்கிக்கூறும் ஒரு பெறும் தகவல் தொடர்பு சாதனமாக தொலைக்காட்சிப் பெட்டி விளங்குகிறது. தொலைக்காட்சிப் பெட்டி ஒரு பொழுதுபோக்கும் சாதனம் மட்டுமின்றி, வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, கல்வி, சமூகக்கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பொருளாதாரம் ஆகிய துறைகளில் பொதுமக்களுக்கு அறிவூட்டும் சாதனமாகவும் விளங்குகிறது. தமிழ்நாடு

அரசு சமுதாய தொலைக்காட்சிப் பெட்டிகளை படிப்படியாக கிராமப்புறங்களில் நிறுவ தீர்மானித்தது. 31—3—1990 வரை 10,155 சமுதாய தொலைக்காட்சிப் பெட்டிகள் நிறுவப்பட்டுள்ளன.

10. வானொலிப் பெட்டிகள் நிறுவுதல் :

வானொலிப் பெட்டி ஒரு பெரும் தகவல் தொடர்பு சாதனமாகும். வானொலி மூலம் கிராமப்புறங்களில் மூலை முடுக்குகளில் வாழும் மக்களையும் தொடர்புகொள்ள முடியும். வானொலிப் பெட்டி ஒரு பொழுதுபோக்கு சாதனமாக விளங்குவதோடன்றி வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, சமூகக்கல்வி, கதாதரம், கல்வி, சமூகப் பொருளாதாரம் முதலிய துறைகளில் மக்களுக்கு அறிவூட்டுவதில் ஒரு முக்கிய பங்கேற்கிறது. சமுதாய வானொலிப் பெட்டிகளை பராமரிக்கும் பணி தமிழ்நாடு உள்ளாட்சி வானொலி மற்றும் தொலைக்காட்சி பராமரிப்பு நிறுவனத்தைச் சார்ந்தது. 31—3—1990 வரை 46,038 சமுதாய வானொலிப் பெட்டிகள் கிராமம் மற்றும் குக்கிராமங்களில் நிறுவப்பட்டுள்ளன. 1989–90-ல் வானொலிப் பெட்டிகள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பராமரிப்புக்காக பெறப்பட்ட தொகை ரூ. 12.75 இலட்சம் ஆகும்.

11. பயிற்சி திட்டம் :

கிராமப்புறங்களில் மனித சக்தியை மேம்படுத்துவதற்கு பயிற்சிவழி ஒரு தூண்டு கோலாகும். சமுதாய வளர்ச்சிப்பணி துவக்கத்திலிருந்து இப்பயிற்சி ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் தேவையான பயிற்சி யளிப்பதற்காக ஊரக வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

சென்னையில் மாதில ஊரக வளர்ச்சி நிலையம் இயங்கி வருகிறது. மேலும் ஐந்து ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்கள் சத்திய விஜய நகரம், தே. கல்லுப்பட்டி, திருஷ்ணகிரி, பட்டுக்கோட்டை, பவானிசாகர் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

மேற்கண்ட ஐந்து விரிவாக்கப் பயிற்சி நிலையங்களிலும் தொழில் பட்டறை பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. ஊரக இளைஞர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஊரக இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதில் மேற்கண்ட நிலையங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தே. கல்லுப்பட்டி மற்றும் சத்திய விஜய நகர பயிற்சி நிலையங் களில் மனை இயல் பிரிவுகள் இயங்கி வருகின்றன. அவற்றில் பாலசேவிகாக்கள் மற்றும் சமூகநலத் துறை பெண் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

செல்வையிலுள்ள மாதில ஊரக பயிற்சி நிலையத்திலும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளைச் சேர்ந்த உதவி திட்ட அலுவலர்கள் விரிவாக்க அலுவலர்கள் (ஊராட்சி), பேரூராட்சி நிர்வாக அலுவலர், சமூகக்கல்வி மற்றும் மக்கள் தொடர்பு விரிவாக்க அலுவலர்கள் ஆகியோருக்கு 15 நாட்களுக்கு புத்தூட்டுப் பயிற்சி நடத்தப் படுகிறது. வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தொழில்) ஆகியோருக்கு ஒருமாத கால பணிப்பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படு கின்றன.

மேலும், மேற்கண்ட பயிற்சி நிலையத்தில் உதவித்திட்ட அலுவலர்கள், கோட்ட வளர்ச்சி அலுவலர்கள், நேர்முக உதவியாளர் (ஊரக வளர்ச்சி) ஊரக வளர்ச்சித் துறை யிலுள்ள பிற சம நிலை அலுவலர்கள், பிற துறையை சேர்ந்த நடுத்தர நிலை அலுவலர்கள் மற்றும் சுயசேவை நிறுவனங்களில் அலுவலகப் பணியாளர்கள் ஆகியோருக்கு புத்தூட்டுப்பயிற்சி அளிக்கப்படுகிறது. நடுத்தர நிலை அலுவலர் களுக்கு 15 நாட்களுக்கு ஒருங்கிணைந்த பயிற்சியும் நடத்தப்படுகிறது. ஒரு பணி விதியின் கீழ் உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள் ஆகிய 732 நபர்களுக்கு 2 மாதகால பயிற்சியும் 213 ஊர் நல அலுவலர்களுக்கு ஒருமாத கால பயிற்சியும் அளிக்கப்பட்டது.

மேற்கண்ட பயிற்சிகள் தவிர மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளால் அனுப்பி வைக்கப்படும் ஊரக இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்பு பயிற்சித் திட்டத்தின்கீழ் பல்வேறு தொழில் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1989-90 ஆம் ஆண்டில் 13,252 ஊரக இளைஞர்களுக்கு இவ்வலுவலக பயிற்சி அளிக்கப்பட்டது.

12. கால்நடை பராமரிப்புத் திட்டம் :

1989–90 ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் கால்நடை மருந்தக கட்டி டங்கள் கட்டுவதற்காக ரூ. 7.25 இலட்சம் மானியமாக அரசு ஒதுக்கீடு செய்தது. அதில் ரூ. 5.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

13. மீன்வளர்ப்புத் திட்டம் :

தீவிர மீன் வளர்ப்புத் திட்டம் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப் பாட்டில் உள்ள குளங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் திருச்சிராப்பள்ளி, தென்னார்காடு, புதுக்கோட்டை, திருநெல்வேலி மற்றும் சிதம்பரனார் ஆகிய மாவட்டங் களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக 1989–90 ஆம் ஆண்டில் ரூ. 6·00 இலட்சம் மான்யமாக அரசு ஒதுக்கீடு செய்தது. இத்தொகை முழுவதும் 1989–90-ல் இத்திட்டத்தின்கீழ் செலவிடப்பட்டது.

•

14. ஊரக சுகாதாரம் :

சிறப்பு பெருந்திட்டத்தின்கீழ் 16,000 வருவாய் கிராமங்களில் ஆண், பெண் இரு பாலருக்கும் பொதுக் கழிப்பிடங்கள் 1982–83 ஆம் ஆண்டு முதல் மூன்று கட்டங் களில் கட்டப்பட்டு வருகின்றன. 1988–89 ஆம் ஆண்டுவரை மொத்தம் 11,317 பொதுக் கழிப்பிடங்கள் ரூ. 1,742.85 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டது. 1989–90 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை.

ஆனால் மைய அரசு சுகாதாரத் திட்டத்தின் கீழ் (CRSP) 1989–90 ஆம் ஆண்டில் 7,000 பொதுக்கழிப்பிடங்கள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ரூ. 112.00 இலட்சம் செலவில் 7,456 பொதுக் கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. மேலும், பெரியார் மாவட்டத்தில் தீவிர சுகாதாரத் திட்டத்தின் கீழ் 1989–90 ஆம் ஆண்டில் 10,000 கிராமக் கழிப்பிடங்கள் ரூ. 160.00 இலட்சம் செலவு செய்து கட்டப்பட்டன.

15. சமூக கல்வி மாலியம் :

1989–90 ஆம் ஆண்டில் ரூ. 15.20 இலட்சம் சமூகக் கல்வி மாலியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்தொகையிலிருந்து 12,616 சமூகக்கல்வி நிலையங்களிலும், 384 தகவல் நிலையங்களிலும் பொதுமக்களுக்கு பயனளிக்கக்கூடிய தமிழரசு, கூட்டுறவு, திட்டம் மற்றும் பஞ்சாயத்து செய்தி ஆகிய மாத இதழ்கள் வாங்கப்படுகின்றன.

16. ஈமச்ச டங்கு நிதி உத வி :

இத்திட்டத்தின்கீழ் 1989–90 ஆம் ஆண்டில் 53 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டது. இத்திட்டத்தின்படி ஆண்டு வருமானம் ரூ. 3,000-க்கு கீழே உள்ள தாழ்த்தப் பட்டோர் மற்றும் பழங்குடியினர் மற்றும் இருத்துவ மதத்திற்கு மதம் மாற்றம் பெற்ற வர்கள் ஆகியோரது குடும்பத்தில் இறப்பு நேரிட்டால் ஈமச்சடங்குகளை மேற் கொள்ள ரூ. 100 நிதி உதவி சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையர்களால் வழங்கப்படுகின்றது.

பஞ்சாயத்துக் காடுகள்.

தமிழ்நாட்டின்., சமூகக் காடுகள் திட்டம் 1985–86 முதல் அமுலில் உள்ளது. இத்திட்டம் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை உறுதி திட்டத்தின் கீழ் மக்கள் இயக்கமாக செயல்படுத்தப்பட்டு வந்தது. 1989–90 முதல் இவ்விரு திட்டங்களையும் ஒருங்கிணைத்து அமல்படுத்தப்பட்ட ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் ஒரு பகுதியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் நோக்கங்களாவன :—

1. கிராமப்புற வேலையில்லாதோருக்கு வேலை வாய்ப்பளித்தல்:

2. கிராமப்புற ஏழைமக்களின் தேவைகளான விறகு மற்றும் பிராணிகளுக்கான தீவனம் கிடைக்கச் செய்தல்:

3. சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்தல்:

இத்திட்டத்திற்கு தேவைப்படும் நாற்றுகளை கிராமப்புறங்களில் ஊராட்சி ஒன்றி யங்களுக்கு சொந்தமான இடங்களில் நாற்றங்கால்கள் அமைத்து உற்பத்தி செய்யப்படு கிறது.

கீழே குறிப்பிட்டுள்ள இடங்கள் மரக்கன்றுகள் நட தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

1. சமுதாயப் புறம்போக்கு நிலங்கள்.

2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களின் நிலங்கள் கொத்தடிமையி லிருந்து விடுபட்டவர்களின் நிலங்கள் உச்சவரம்பு சட்டத்தின் கீழ் நிலம் ஒதுக்கப் பட்டோர் நிலங்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள விவசாயிகள்.

3. காசநோய் மருத்துவ நிலையங்கள், மறுவாழ்வு மையங்கள், அனாதை மற்றும் வயோதிகர் இல்லங்களைச் சேர்ந்த நிலங்கள்.

4. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பின்தங்கிய வகுப்பினர் மற்றும் வறுமை கோட்டிற்கு மேழ்ள்ள இதர வகுப்பிவர் குடியிருப்புகளுக்குச் சுற்றியுள்ள காலி இடங்கள்.

சமூக நல காடுகள் அமைப்பது அவசியம், கிராம மக்களுக்குத் தேவையான விறகுகளை தருவதோடு நிலங்களை வளப்படுத்தவும், சுற்றுப்புறச்சூழ்நிலை மேம் படுத்தவும், சுத்தப்படுத்தவும் மரங்கள் பயன்படுகின்றன. சமூகக் காடுகள் திட்டத்தை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு சில புதிய வழிமுறைகள் வழங்கப்பட் டுள்ளன.

1989–90 ஆம் ஆண்டின் முக்கிய நெறிமுறைகள் கீழ்க்கண்டவாறு வகுக்கப்பட் டுள்ளது. (1 முதல் 7).

1. கடந்த ஆண்டுகளில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக நில மற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் மற்றும் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின் மூலமாக நிறைவேற்றப்பட்டுள்ள சமூகக் காடுகளை தொடர் பராமரிப்பு செய்ய முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

2. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் மூலம் செடிகள் நட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் வரை பாதுகாத்து பராமரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

3. ஊரக வளர்ச்சித் துறையினரால் நிறைவேற்றப்பட்டுள்ள சமூகக் காடுகள் திட்டத்தினை மூன்று ஆண்டுகளுக்கு பிறகு சம்பந்தப்பட்ட ஊராட்சி மற்றும் பொது நிறுவனங்களுக்கு ஒப்படைத்து தொடர் பராமரிப்பு செய்ய அவர்களிடம் உறுதிமொழி பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. எங்கெங்கு வாய்ப்பும் வசதிகளும் உள்ளதோ அந்த இடங்களில் சமூகக் காடுகள் திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

5. உயிருடன் இருக்கும் செடிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் காவலாளி களுக்கு கூலி வழங்க வேண்டும். 90 சதவீதம் செடிகள் உயிருடன் இருக்க கண்காணிக்க வேண்டும்.

6. 1990–91-ல் நிறைவேற்றப்படும் சமூகக் காடுகள் திட்டத்தில் தோப்புகளை சுற்றி உயிர் வேலி அமைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1989–90 ஆண்டில் சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ் தேவைப்படும் நாற்றுகளை உற்பத்தி செய்ய ஊராட்சி ஒன்றிய இடங்கள் ஊராட்சிக்கு சொந்தமான இடங்களில் வட்டார வளர்ச்சி அலுவலர் (திட்டம்) மற்றும் விரிவாக்க அலுவலர் (ச.கா.) ஆகியோர் மேற்பார்வையிலும் நேரடி கவனத்திலும் செய்ய வேண்டும் என அறிவுரைகள் வழங்கப் பட்டுள்ளன. ஒன்றியங்களில் நாற்றங்கால்களை அமைத்து மக்களுக்கு தேவையான பலவித கன்றுகளை அதில் வளர்க்க செய்து இந்த கன்றுகளை சாலை ஓரங்களிலோ அல்லது ஏரிகளிலோ நடலாம். இவைகளை பராமரிக்க காவலாளிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 350 வீதம் கூலி வழங்கப்பட்டுள்ளது. தோப்பு நடவானால் 10.50 ஏக்க ருக்கு ஒரு காவலாளி வீதமும் கூலி வழங்கப்பட்டுள்ளது. தோப்பு நடவானால் 10.50 ஏக்கருக்கு ஒரு காவலாளி வீதமும் வரிசை நடவானால் 3 முதல் 5 கி.மீட்டருக்கு ஒரு காவலாளி வீதம் மரங்களின் வகைக்கு ஏற்ப அமர்த்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சமூகக் காடுகள் திட்டம் 1989-90.

முன்னேற்ற அறிக்கை 31—3—1990.

	இலக்கு.	சாதனை.	சாதனை விழுக்காடு.
(1)	(2)	(3)	(4)
1. நாற்றங்காலின் செடிகள் உற்பத்தி (இலட்சத்தில்.)	345.21	362.25	104
2. செடிகள் நடுதல் (இலட்சத்தில்.)	320.786	339.68	105
3. பயனடைந்தோர் பரப்பளவு (எக்டேர்)	12,411.90	14,010.78	113
4. நிதி பயன்படுத்தியது (ரூ. லட்சத்தில்)	981.681	910.350	93

அத்தியாயம் 27

ஊரக் வளர்ச்சித்துறை

பேருநாட்கிகள் நிர்வாகம்.

முன்னுரை :

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் தொடக்கத்தில் தற்போதுள்ள பஞ்சாயத்து நிர்வாகம் உருவானது. இதற்கு முன் நாட்டாண்மைக் கழகங்கள், ஊராட்சிகள், சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள் ஆகியவை தனி அலகுகளாக இயங்கி வந்தன. 1958 ஆம் வருட தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், தமிழ்நாட்டில் தற்போதுள்ள ஊராட்சி நிர்வாக நடைமுறையை அறிமுகப்படுத்தியது. நிர்வாக நலன் கருதி 7—5—1981 ஆம் ஆண்டு முதல் பேரூராட்சிகள் துறைத் தனித் துறையாக இயங்கி வருகிறது. மாநில மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்காக சுமார் ஒரு கோடி மக்கள் பேரூராட்சிகளில் வாழ்கின்றனர். பேரூராட்சிகளின் எண்ணிக்கையும் அவற்றின் தரமும் கீழ்வருமாறு ஆகும்.

(1) இரண்டாம் நிலை	20
(2) முதல் நிலை	263
(3) தேர்வு நிலை	289
(4) நகரியங்கள்	16
மொத்தம் — —	648

1. பேரூராட்சிகளின் கடமைகள் :

பேரூராட்சிப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அடிப்படை வசதிகளை செயது கொடுக்க வேண்டிய பொறுப்பு, பேரூராட்சிகளுடையது. அவற்றிலும் கடப்பாட்டு உரிமைப் பணிகள் (Obligatory Discretion) ஒப்படைக்கப்பட்டுள்ளன. சாலைகள் பராமரிப்பு, குடிநீர் வழங்குதல், தெரு விளக்குகள் அமைத்தல், தெருக்களை சீர்அமைப்பு படுத்துதல் ஆகியவை பேரூராட்சிகளின் கடப்பாட்டுப் பணிகளில் சிலவாகும்.

2. பேரூர்ட்சிகளின் நிதி ஆதாரங்கள் :

கீழ்க்கண்டவை பேரூராட்சிகளின் முக்கிய நிதி ஆதாரங்களாகும்.

(1) வீட்டு வரி.

(2) தொழில் வரி.

(3) வாகன வரி.

இவை தவிர முத்திரை வரி மீதான மேல்வரி, கேளிக்கை வரி, அபாயகரமானதும், ஆபத்து விளைவிக்கக் கூடிய உரிமங்கள், பயன்தரத்தக்க தொழில்கள் ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் வருவாய் முதலியவை பேரூராட்சியின் இதர வருவாய்களாகும். மேலும் பேரூராட்சிகளின் நிதி ஆதாரங்களை பெருக்குவதற்குரிய வழிவகைகளை கண்டறிய தமிழ்நாடு அரசு ஓர் உயர்நிலைக் குழுவை அமைத்து அக்குழு தனது பரிந்துரைகளை முடிவு செய்து அரசுக்கு அனுப்பியுள்ளது.

3. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் :

மொத்தம் உள்ள 648 பேரூராட்சிகளில் 257 பேரூராட்சிகளில் கூட்டு குடிநீர்த் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 114 பேரூராட்சிகளில் கூட்டுக் குடிநீர் திட்டத்தை செயல்படுத்தத் தேர்வு செய்யப்பட்டு வேலைகள் முன்னேற்ற நிலையில் உள்ளன. எஞ்சியுள்ள 277 பேரூராட்சிகளில் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் நிதியுதவியுடனும், அரசின் நிதியுதவியுடனும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

44 பேரூராட்சிகளில் உள்ள வங்கி நிதியுதவியுடன் ரூபாய் 42.84 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தப்படுகிறது. ஐரோப்பிய பொருளாதாரக் குழு வளர்ந்து வரும் நகர்ப் பகுதிகளில் குடிநீர்த் திட்டத்தை மேம்படுத்த நிதியுதவி அளித்து வருகிறது. இப்பணிகள் தற்பொழுது முன்னேற்றத்தில் உள்ளன.

புதியதாக மேம்படுத்தப்பட்ட பகுதிகளில் மக்களின் உடனடித் தேவைகளை நிறைவு செய்ய கை பம்புகளை பேரூராட்சிகளில் பராமரித்து வருகின்றன. இந்த கை பம்புகள், மற்றும் விசை பம்புகளை பழுதுபார்க்கவும் பராமரிக்கவும், 1989-90 ஆம் ஆண்டுக்கு குறைந்த பட்ச தேவைகள் திட்டத்தின் கீழ் ரூபாய் 41.16 இலட்சம் முழு மான்ய நிதி உதவி அனுமதிக்கப்பட்டுள்ளது.

4. துப்புரவு:

முறையான துப்புரவு இன்மையும், கழிவுநீர், வடிகால் நீர் அகற்றப்படாததும் தான் பேரூராட்சியின் முக்கிய பிரச்சினைகளாகும். பேரூராட்சிகளில் உள்ள மொத்தம் 10,271 கி. மீ. நீளமுள்ள சாலைகளில் 4,736 கி. மீ. நிளத்திற்கு மட்டும் வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1989-90-ஆம் ஆண்டில் பேரூராட்சிப் பகுதிகளில் வடிகால்கள் அமைப்பது முக்கிய குறிக்கோளாக எடுத்துக் கொள்ளப்பட்டு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்ட நிதியை பயன்படுத்தி இத்திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும் இப்பிரச்சினையின் ஒரு பகுதியை மட்டுமே தற்போது தீர்க்க முடிந்துள்ளது.

பேரூராட்சிகளின் எல்லைக்குள் 1,02,958 உலர் கழிப்பிடங்கள் உள்ளன. இந்த உலர் கழிப்பிடங்கள் 629 துப்புரவு பணியாளர்கள் மூலம் சுத்தம் செய்யப்படுகின்றன. இன்னமும் மலத்தை மனிதன் தலையில் சுமந்துச் செல்லும் அவலநிலை இருந்து வருகிறது. இந்த நிலையை அறவே ஒழிக்க மாநில மற்றும் மத்திய அரசு, பேரூராட்சிகளில் உள்ள உலர் கழிப்பிடங்களை, சுகாதார நீராவி கழிப்பிடங்களாக மாற்றுவதற்கு உதவி செய்துவருகின்றன.

துப்புரவு பணிகளை நல்ல முறையில் கவனிக்க கீழ்க்கண்ட திட்டங்கள் மூலம் நிதி ஆதாரம் அளிக்கப்பட்டுவருகின்றது.

(1) மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உதவி (மத்திய அரசு திட்டம்) (மத்திய அரசு 50 சதவீதம் மாநில அரசு 50 சதவீதம்).

(2) மாநில அரசு மான்யம், கடன் பெறுவோர் பங்கு (40—40—20).

(3) சிறிய நடுத்தர நகரங்களில் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் (கடன்).

மேற்கண்ட நான்கு திட்டங்கள் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டால் ஏறக் குறைய 23,000 கழிப்பிடங்கள் மாற்றியமைக்கப்படும். இவை தவிர வீட்டு வசதி நகர்ப் பகுதி வளர்ச்சி வாரிய (அட்கோ) கடன் உதவியுடன் பேரூராட்சிகளில் தனியார் வீடுகளில் கழிப்பிடங்கள் அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

பெருமளவு எண்ணிக்கையில் பொதுமக்கள் கூடுமிடங்களில் ரூபாய் 1.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டண கழிப்பிடங்கள் கட்டப்பட்டு, பொதுமக்கள் சுகாதார சூழ்நிலையில் வாழ வசதி செய்யப்பட்டுள்ளன. 1989-90-ஆம் ஆண்டில் 10 பேரூராட்சிகளில் கட்டணக் கழிப்பிடங்கள் அமைக்க ரூபாய் 10.00 இலட்சம் அரசு நிதி உதவி அனுமதிக் கப்பட்டுள்ளது.

5. சாலைகள் பராமரித்தல்

பேரூராட்சிகள் கீழ்க்கண்டவாறு சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

	கிலோ மீட்டர்.
(1) மண் சாலைகள்	5,264
(2) சரளைக்கல் சாலைகள்	2,341
(3) கப்பிச் சாலைகள்	3,018
(4) தார்ச் சாலைகள்	1,416
(5) சிமிட்டி சாலைகள் ..	312

பேரூராட்சிகளில் நிதி ஆதாரம் மிகவும் நலிந்த நிலையில் இருப்பதால், பேரூராட்சிகளில் சாலைகள் பராமரிப்பது மிகவும் கடினமாக உள்ளது. இந்த நிலையை, தவிர்க்க தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மூலம் நிதி உதவி அளிக்கப்பட்டு, பேரூராட்சிகளில் சாலை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் 1989-90-ஆம் ஆண்டில் நிதி வசதியற்ற பேரூராட்சிகளில் உள்ள சாலைகளின் தரத்தை உயர்த்த அரசு ரூபாய் 40.00 இலட்சம் நிதி உதவி அளித்துள்ளது.

8. பயன்தரத்தக்க முயற்சிகள் :

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மத்திய அரசு ஆண்டிப்பட்டி, அரியலூர் மற்றும் இராமேஸ்வரம் நகரங்களில் ஒருங்கிணைந்த சிறு—நடுத்தர நகர் மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்த அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட ரூ. 300.00 இலட்சத்தில் ரூ. 297.26 இலட்சம் செலவு செய்யப்பட்டுப் பெருந்து நிலையம், வணிக வளர்கங்கள், சந்தைகள், கட்டண கழிப்பிடங்கள் போன்ற பயன்தரத்தக்க இனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

9. ஜவஹர் வேலை வாய்ப்புத்திட்டம் :

தற்போது இத்திட்டம் அனைத்து பேருரர்ட்சிகளிலும் செயற்படுத்தப்படுகிறது பேருராட்சி பகுதிகளில் போதிய வேலை வாய்ப்பு அறவே இல்லாத ஆண்களுக்கும், பெண்களுக்கும் பயன்தரத்தக்க அளவில் வேலை வாய்ப்பை உருவாக்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம். 1989-90-ஆம் ஆண்டில் பேருராட்சிகளில் ரூ. 1,354.88 இலட்சம் செலவில் 8,226 நிலையான சமுதாய உடைமைகளை உருவாக்க பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன.

இவை தவிர சாலைகளை மேம்படுத்துதல், சிறு பாலங்கள் அமைத்தல், போதிய குடிநீர் வழங்குதல், வணிக வளாகங்கள் கட்டுதல், வடிகால் வசதிகள் செய்தல், பேருராட்சி அலுவலகங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

10. அடிப்படை புள்ளி விபரங்கள் :

பேருராட்சிகளின் தனி நபர் வருமானம்.	பேருராட்சிகளின் எண்ணிக்கை.
ரூ. 25 க்குகீழ்	145
ரூ. 26 முதல் ரூபாய் 50 வரை	226
ரூ. 51 முதல் ரூபாய் 75 வரை	131
ரூ. 76க்கு மேல்	146
	648

குடிநீர் வினியோகம் :

ஒழுங்குபடுத்தப்பட்ட குடிநீர் திட்டம் உள்ள பேருராட்சிகளின் எண்ணிக்கை	257
ஆயுள் காப்பீட்டுக் கடன் மற்றும் அரசு மான்யத்துடன் நடைமுறையில் உள்ள குடிநீர் திட்டங்களின் எண்ணிக்கை	114
உலக வங்கி உதவியுடன் செயல் குடிநீர் திட்டங்களின் எண்ணிக்கை	44

மதிப்பீடு :

கை பம்புகள்	12,065
விசை பம்புகள்	2,908
மேல்நிலை தொட்டிகள்	1.729
நரைமட்ட நீர் தேக்கங்கள்	1,118
தானியங்கி அழுத்தத் தொட்டிகள்	165
ஆழமற்ற கிணறுகள்	3,026
ஆழ்கிணறுகள்	4,561
திறந்த கிணறுகள்	11,936

பேரூராட்சிகளில் பராமரிக்கப்படும் சாலைகள் :—		கி.மீ.
இரண்டு சாலைகள்		312
தார் சாலைகள்		1,416
கருங்கல் ஜல்லி சாலைகள்		3,018
சரளைக்கல் சாலைகள்		2,341
மண்சாலைகள்		3,264
பராமரிக்கப்படும் தெரு விளக்குகள் :—		
சோடியம் ஆவி விளக்குகள்		1,782
பாதரச விளக்குகள்		4,469
4' குழல் மின் விளக்குகள்		1,68,437
2' குழல் மின் விளக்குகள்		801
சாதாரண விளக்குகள்		7,333
	மொத்தம்	1,82,822
பணியாளர் குடியிருப்புகள்		937
தெருக்களின் நீளம்	கி.மீ.	10,271
வடிகால்களின் நீளம் கி.மீ.		4,736
அலுவலக கட்டிடம் உள்ள பேரூராட்சிகள்		537
பயன்தரும் இனங்கள்		
பேருந்து நிலையங்கள்		245
தனியார் சந்தைகள்		63
பேரூராட்சி அங்காடிகள்		2,128
வாரச் சந்தைகள்		296
வண்டிப்பேட்டைகள்		84
ஆடு அடிக்கும் தொட்டிகள்		296
பயணிகள் விடுதிகள்		74
கட்டணக் கழிப்பிடங்கள்		311
சலவைத் துறைகள்		126
வானொலிப் பெட்டிகள்		3,110
தொலைக்காட்சி பெட்டிகள்		904
படிப்பகங்கள்		847
திரையரங்குகள்		671

அத்தியாயம் 28

சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறை

சீர்திருத்தப்பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்பு.

சீர்திருத்தப்பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறை (தற்போது சமூகப் பாதுகாப்புத் துறை) 1986ம் ஆண்டின் இளைஞர் நீதிச் சட்டத்தின்படி நிறுவனங்களில் பயிற்சி பெற வேண்டி அனுப்பப்படும் ஆதரவற்ற புறக்கணிக்கப்பட்ட கட்டுக்கடங்காத மற்றும் தவறிழைத்த சிறார்களைப் பொறுப்பேற்று அவர்களை நெறிப்படுத்தி மறுவாழ்வு ஏற்படுத்தித்தரும் குறிக்கோளினைக் கொண்டு செயல்படுகிறது. 1986ம் ஆண்டின் சமய அரசினால் ஏற்படுத்தப்பட்ட இளைஞர் நீதிச்சட்டத்தின் மூலம் ஏற்கனவே நடைமுறையிலிருந்த 1920ம் ஆண்டின் தமிழ்நாடு குழந்தைகள் சட்டம் மாற்றியமைக்கப்பட்டது. இப்புதிய சட்டத்தின்படி இளைஞர் நலக்குழுமம் என்றும் ஒரு புதிய அமைப்பு உருவாக்கப்பட்டு (ஒரு தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்களுடன்) இவை ஆதரவற்ற மற்றும் புறக்கணிக்கப்பட்ட சிறார்களின் வழக்குகளை தீர்வு செய்கின்றன. இப்புதிய சட்டத்தின் அறிமுகம் காரணமாக இம்மாநிலத்தில் 13 இளைஞர் நலக் குழுமங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தவறிழைத்த சிறார்கள் குறித்த வழக்குகள் அதற்கென அமைக்கப்பட்ட இளைஞர் நீதிமன்றங்களினால் வழக்கறியப் படுகின்றன.

இளைநர் சிறப்பு இல்லங்கள் :

இத்துறையின்கீழ் பத்து அரசினர் சிறப்பு/இளைஞர் இல்லங்கள் இயங்கி வருகின்றன. சிறுவர்களுக்காக எட்டு இல்லங்களும், சிறுமிகளுக்காக இரண்டு இல்லங்களும் இதில் அடங்கும். இவற்றுடன் சிறுவர்களுக்கான சிறப்பு/தவறிழைத்த இல்லங்கள் மூன்று ஆகும். எஞ்சிய ஏழு இல்லங்கள் அனாதை மற்றும் ஆதரவற்ற சிறார்களுக்கான இளைஞர் இல்லங்கள் ஆகும். சென்னையில் அமைந்துள்ள சிறுமிகளுக்கான சிறப்பு இல்லத்தில் இளநிலை மற்றும் முதுநிலை சிறுமிகள் அனுமதிக்கப்படுகின்றனர். அரசினரின் மான்யம் பெற்ற சமூக சேவை நிறுவனங்களில் நடத்தப்படும் பத்து தனியார் இளைஞர் இல்லங்களும் இத்துறையின்கீழ் இயங்கி வருகின்றன. ஆதரவற்ற மற்றும் புறக்கணிக்கப்பட்ட சிறுவர்களுக்கென இவை அமைந்துள்ளன.

தூர்நோக்கு இல்லங்கள் :

கூர்நோக்கு இல்லங்கள் விசாரணைக் காலத்தில் சிறுவர் மற்றும் சிறுமியரின் பொறுப்பினை ஏற்கின்றன. இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்களில் சிறார்கள் அனுமதிக்கப்படுவதற்கான நுழை வாயில்களை இவை செயல்படுகின்றன.

செங்கல்பட்டு மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களிலுள்ள சிறப்பு/இளைஞர் இல்லத்துடன் இணைந்த கூர்நோக்கு இல்லங்களையும் சேர்த்து மொத்தம் பதினொரு அரசினர் கூர்நோக்கு இல்லங்கள் இயங்கி வருகின்றன. இவற்றைத் தவிர அரசினரின் மான்ய உதவியுடன் தனியார் நிறுவனங்களின்கீழ் மூன்று கூர்நோக்கு இல்லங்கள் இயங்கி வருகின்றன.

பிற்காப்பு நிறுவனங்கள் :

இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்களினின்று இல்ல நீக்கம் பெறும் சிறுமிகள் மறறும் பெண்களுக்கென வடாற்காடு மாவட்டம் வேலூரில் ஒன்றும் சிறுவர்களுக்கென செங்கல்பட்டு மாவட்டம் ஆத்தூர் மற்றும் மதுரையிலும் ஆக மூன்று பிற்காப்பு நிறுவனங்கள் இத்துறையின்கீழ் இயங்கி வருகின்றன.

வேலூரில் இயங்கும் அரசினர் பிற்காப்பு நிறுவனம் இளைஞர் இல்லங்களிலிருந்தும் மகளிர் காப்பகங்களிலிருந்தும் இல்ல நீக்கம் பெற்ற சிறுமிகள் மற்றும் பெண்களுக்காவும் மாநில சிறையினின்றும் வெளியனுப்பப்படும் பெண்களுக்காகவும் அமைக்கப்பட்டதாகும். இப்பிற்காப்பு நிறுவனத்துடன் ஒரு தொழிற்பயிற்சி கூடம் (அரசினர் ஆடைகள் மற்றும் உள்ளடக்கிகள் செய்தலுமான பயிற்சி நிலையம்) அதில் ஆடைகள் மற்றும் ஹோல்டால் செய்வதற்கான பயிற்சியும் இல்லவாசிகளுக்கு அளிக்கப்படுகிறது.

செங்கல்பட்டு மாவட்டம் ஆத்தூர் மற்றும் மதுரையில் அமைந்துள்ள மாணவர் பிற்காப்பு நிறுவனங்கள் இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்களினின்று இல்ல நீக்கம் பெற்ற சிறார்களுக்கானவையாகும். செங்கல்பட்டு, ஆத்தூர் பிற்காப்பு நிறுவனத்தில் கருமார்ப்பணி மற்றும் புத்தகம் கட்டும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இளைஞர் வழிகாட்டி நிறுவனங்கள் :

சென்னை, மதுரை மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் அமைந்துள்ளன. இவைகளில் உளவியல் சோதனைகளுக்காக அனுப்பப்படும் சிறார்களைக் கலந்தாய்வு உளவியல் அறிக்கைகளை இந்நிறுவனங்கள் வழங்கி வருகின்றன.

எண்ணிக்கை :

1—4—1989 அன்று அனைத்து இளைஞர்/சிறப்பு இல்லங்களிலும் 1834 சிறுவர்கள மற்றும் 538 சிறுமிகள் இருந்தனர். 1,494 சிறுவர்களும் 183 சிறுமிகள் இவ்வாண்டில் புதியதாக சேர்க்கப்பட்டு 999 சிறுவர்களும் 114 சிறுமிகளும் இல்ல நீக்கம் செய்யப்பட்டதன் விளைவாக 31—3—1990ல் 2,329 சிறுவர்களும் 607 சிறுமிகளும் மேற்குறித்த நிறுவனங்களில் இருந்துள்ளனர்.

வரவேற்பு இல்லங்கள் :

1—4—1989 அன்று அனைத்து கூர்நோக்கு இல்லங்களிலும் சேர்த்து 575 சிறுவர்களும் 24 சிறுமியர்களும் இருந்தனர். 5,486 சிறுவர்களும் 303 சிறுமிகளும் புதியதாக அனுமதிக்கப்பட்டு 5059 சிறுவர்களும் 293 சிறுமிகளும் இல்ல நீக்கம் செய்யப்பட்டதன் விளைவாக 31—3—1990-ல் 502 சிறுவர்களும் 34 சிறுமிகளும் கூர்நோக்கு இல்லங்களில் இருந்துள்ளனர்.

அரசினர் மகளிர் பிற்காப்பு இல்லம், வேலூர் :

1—4—1989 அன்று 33 பெண்கள் இருந்தனர். இவ்வாண்டில் 53 பெண்கள் புதியதாக சேர்க்கப்பட்டு58 பெண்கள் இல்ல நீக்கம் செய்யப்பட்டதின் விளைவாக 31—3—1990 அன்று 28 இல்லவாசிகள் இல்லத்தில் இருந்தனர்.

அரசினர் சிறுவர் பிற்காப்புஇல் லம், மதுரை :

1—4—1989 அன்று 17 சிறுவர்கள் இல்லத்தில் இருந்தனர். ஆண்டு முழுவதும் 56 சிறுவர்கள் அனுமதிக்கப்பட்டு 56 சிறுவர்கள் இல்ல நீக்கம் செய்யப்பட்டதின் விளைவாக 31—3—1990 அன்று 17 சிறுவர்கள் இல்லத்தில் இருந்தனர்.

அரசினர் சிறுவர் பிற்காப்பு இம்லம், செங்கல்பட்டு :

1—4—1989 அனறு 29 சிறுவர்கள் இல்லத்தில் இருந்தனர். ஆண்டு முழுவதும் 48 சிறுவர்கள் அனுமதிக்கப்பட்டு 35 சிறுவர்கள் இல்ல நீக்கம் செய்யப்பட்டதின் விளைவாக 31—3 1990 அன்று 42 சிறுவர்கள் இல்லத்தில் இருந்தனர்.

சுகாதாரம் :

இந்த ஆண்டில் அரசு மற்றும் தனியார் சீர்திருத்தப் பள்ளிகளில் மாணவ மாணவியரின் உடல்நலம் பொதுவாக திருப்தி அளிப்பதாக இருந்தது.

கல்வி :

இத்துறையின் கீழியங்கும் இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்களில் (பாலவிகார் நிறுவனத்தின் கீழியங்கும் இளைஞர் இல்லம் மற்றும் பாலமந்திர் கீழியங்கும் இளைஞர் இல்லத்தின் 5 வயதுக்குட்பட்ட சிறார்களை தவிர) மாணவ/மாணவிகளுக்கு எட்டாம் வகுப்புவரைபொதுக் கல்வி கற்பிக்கப்படுகிறது, செங்கல்பட்டில் அமைந்துள்ள சிறப்பு இல்லத்தில் உயர்நிலைப் பள்ளிப்பிரிவு இயங்கி வருகிறது. ஏனைய இளைஞர்/சிறப்பு இல்லங்களில் எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களை உயர்கல்வி பெறுவதற்காக வெளிப்பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர்.

சென்னை பெண்கள் சிறப்பு இல்லத்தில் 1986 87 ஆம் ஆண்டு முதல் இல்லவாசிகளுக்கு பத்தாம் வகுப்பு வரை கல்வி கற்பிக்கப்படுகிறது. மாணவர்களுக்கான மத போதனைகள் அவர்கள் சார்ந்துள்ள மதங்களின் அடிப்படையில் பயனுள்ள வகையில் நடத்தப்படுகின்றன.

தொழிற்கல்வி :

பொதுக்கல்வி தவிர மாணவர்களின் திறமை மற்றும் விருப்பம் ஆகியவைகளின் அடிப்படையில் அவர்களுக்கு தொழிற்கல்வியிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்துறையின்கீழ் அமைந்த இளைஞர்/சிறப்பு இல்லங்களில் பின்வருமாறு தொழிற்கல்விப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

தச்சு, மின்தச்சு, கைத்தறி, விசைத்தறி, தையல், உலோகப்பணி, கருமார்ப்பணி, புத்தகம் கட்டுதல், பாய் நெசவு, கொளத்துப் பணி, இசை, வாத்திய இசைப்பயிற்சி, விவசாயம், சோப்பு தயாரித்தல் மற்றும் கால்நடை வளர்ப்பு.

உடல்பயிற்சிக் கல்வி :

மாணவர்கள் அவர்களது உடல்நலத்தை பேணவும், வலிமை பெருக்கவும் உடலைப் பராமரிக்க உடற்பயிற்சி செய்ய தேவையான எல்லா வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன; மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகளில் இல்லங்களிலுள்ள மாணவர்கள் பங்கு கொண்டு பரிசுகளுடன் பதக்கங்களும் பெறுகின்றனர்.

பெழுது போக்கு :

அரசினரின் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்களில் ஒலிஒளியுடன் கூடிய திரைப் பட கருவிகள் உள்ளன. இவற்றின் மூலமாக ஒழுக்கம், மற்றும் கல்வி சம்பந்தப்பட்ட சிறந்த திரைப்படச் சுருக்கம் மாணவர்களின் பயனுக்காக திரையிடப்படுகின்றன. பெரும்பான்மையான நிறுவனங்களில் வானொலி வசதியும் உள்ளது. நிறுவனங்களில் தொலைக்காட்சி வசதிகள் அமைக்கப்பட்டு மாணவ மாணவிகள் இதன் மூலம் பயன் பெறுகின்றனர்.

நிதி :

அரசினர் மற்றும் தனியார் இளைஞர் இல்லம், சிறப்பு இல்லம், கூர்நோக்கு இல்லங்கள், வேலூர், அரசினர் ஆடைகள் ஹோல்டால்கள் செய்தலுமான பயிற்சி நிலையம், இளைஞர் வழிகாட்டி நிலையம் ஆகியவைகளில் பராமரிப்புக்காக ரூ. 2.27 கோடி இத்துறையினால் செலவழிக்கப்படுகிறது. இந்நிறுவனங்களின் தொழிற் பிரிவு களிலிருந்தும் பல்வேறு இதர பிரிவுகளிலிருந்தும் அரசினருக்கு வருவாயாக ரு. 18.00 இலட்சம் பெறப்பட்டது.

பொது :

அரசு மற்றும் தனியார் இளைஞர் இல்லங்கள்/சிறப்பு இல்லங்கள், கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் பிற்காப்பு நிறுவனங்களுடன் இந்த அறிக்கையின் ஆண்டில் திருப்தி கரமாக செயல்பட்டு வந்தன.

1956ம் ஆண்டின் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நிறுவப்படுள்ள நிறுவனங் களின் 1—4—1989 முதல் 31—3—1990 முடிந்த காலத்திற்கான செயலாக்க சுருக்கம்,

சீர்திருத்தப்பள்ளிகள் மற்றும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத்துறை (சமூகப் பாதுகாப்புத் துறை) இரண்டு முக்கிய பிரிவுகளைக் கொண்டு இயங்குகிறது, 1986ம் ஆண்டின் இளைஞர் நீதிச்சட்டத்தின் கீழியங்கும் கூர்நோக்கு இல்லங்கள் இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்கள் மற்றும் பிற்காப்பு நிறுவனங்கள் ஆகியவையும் 1956ம் ஆண்டின் சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமை தடுப்புச் சட்டத்தின் கீழியங்கும் மகளிர் காப்பகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவை இவற்றுள் அடங்கும் 1956ம் ஆண்டின் சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமை தடுப்புச் சட்டம் தற்போது திருத்தம் செய்யப்பட்டு 1986ம் ஆண்டின் பரத்தமைத் தடுப்புச் சட்டம் என அழைக்கப் பட்டு வருகிறது,

தமிழ்நாட்டில் இச்சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள இல்லங்களின் விவரம் பின்வருமாறு :—

(1) மகளிர் காப்பகங்கள்,

(2) ஸ்திரி சதனா மீட்பு இல்லம்,

(3) மகளிர் மீட்பு நிலையம் மற்றும் மகளிர் வரவேற்பில்லம்,

(4) மணமாகாத தாய்மார்கள் இல்லம்,

மகளிர் காப்பகங்கள் :

1986ம் ஆண்டின் பரத்தமை தடுப்புச் சட்ட விதிகளின்படி நீதிமன்றங்களினால் தண்டிக்கப்படும் சிறுமியர் மற்றும் பெண்கள் இவ்வகையான இல்லங்களில் பயிற்சி மற்றும் மறுவாழ்வு ஏற்பாடுகளுக்கென சேர்க்கப்படுகின்றனர்,

ஸ்திரி சதனா மீட்பு இல்லம் :

பரத்தையர் விடுதிகளிலின்று மீட்கப்படும் 14 வயது முதல் 21 வயது வரையி லான சிறுமிகள் கடத்தப்பட்ட மற்றும் ஒழுக்கக்கேடுக்குட்பட்ட அல்லது ஒழுக்கக் கேடிற்கு ஏதுவான சூழ்நிலையில் உள்ள சிறுமிகள் ஆகியோர் இந்நிறுவனங்களில் சேர்க்கப்படுகின்றனர், இந்நிறுவனங்கள் மேற்குறித்த இனங்களுக்குள்ளான சிறுமியர் மற்றும் பெண்டிருக்கு பயிற்சி அளித்து அவர்களது மறுவாழ்வுக்கு வழிவகை செய் கின்றன,

மகளிர் மீட்பு நிலையங்கள் மற்றும் மகளிர் வரவேற்பு இல்லங்கள்:

1986ம் ஆண்டின் பரத்தமைத் தடுப்புச் சட்ட விதிகளின்படி நீதிமன்றங்களின் ஆணைகளுக்கிணங்கவும் பெண்கள் மற்றும் சிறுமிகளை விசாரணைக் காலங்களில் தற்காலிகமாக பொறுப்பேற்று இந்நிலையங்கள் பராமரிக்கின்றன.

மணமாகாத தாய்மார்கள் இல்லம் :

மணமாகாத தாய்மார்கள் இல்லம். சென்னை அரசினர் விழிப்புப்பணி இல்லம் மற்றும் ஸ்திரி சத்தன் வளாகத்தினுள் அமைந்துள்ளது, இது ஒழுக்க நெறியினின்று நழுவி மகப்பேறு அடைந்த கன்னித்தாய்மார்களுக்கான இல்லமாகும், அரசினர் மான்ய உதவியுடன் தனியார் பொறுப்பில் திருநெல்வேலி மாவட்டம், அடைக்கலா புரத்தில் புனித பிரான்சிஸ் சேவியர் மீட்பு இல்லமும் கன்னித்தாய்மார்களுக்கான இயங்கி வருகிறது.

நிறுவனங்கள் :

இம்மாநிலத்தில் இரண்டு விழிப்புப்பணி இல்லங்கள் சென்னையிலும் மதுரை யிலும் இயங்கி வருகின்றன;

இம்மாநிலத்தில் மகளிர் பாதுகாப்பு இல்லங்கள் சென்னை, திருச்சி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன,

மகளிர காப்பகங்களுடன் சென்னை. மதுரை. திருச்சி. சேலம். கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் அவற்றுடன் இணைந்து மீட்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன, வேலூர். மகளிர் பிற்காப்பு நிறுவனத்துடன் மகளிர் வரவேற்பு இல்லம் ஒன்றும் இயங்கி வருகிறது, இவற்றைத் தவிர பாதுகாப்பு தேவைப்படும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான சென்னை மாநகரில் தனியார் பொறுப்பில் அபய நிலையம் எனும் நிறுவனம் இயங்கி வருகிறது,

சேர்க்கையும் நீக்கமும் :

மகளிர் காப்பகங்கள் :

இந்த அறிக்கைக்கான ஆண்டில் துவக்கத்தில் 142 பெண்கள் இருந்தனர், 212 பெண்டிர்கள் மற்றும் குழந்தை ஆகியோர் அனுமதிக்கப்பட்டு 238 பெண்டிரும் 1 குழந்தையும் இல்லத்தினின்றும் நீங்கிய வகையில் ஆண்டின் இறுதியில் 31—3—1990 அன்று 116 பெண்டிர் பராமரிக்கப்பட்டனர்,

ஸ்திரி சத்தா மீட்பு இல்லம்!மகளிர் காப்பகம் :

1—4—1989ல் ஆண்டின் ஆரம்பத்தில் 73 இல்லவாசிகள் இருந்தனர், இவ் வாண்டில் 74 இல்லவாசிகள் சேர்க்கப்பட்டும் 96 இல்லவாசிகள் வெளியேறியும் உள்ளனர், ஆண்டின் இறுதியில் 31—3—1990 அன்று 51 இல்லவாசிகள் இருந்தனர்

மகளிர் மீட்பு இல்லங்கள்!வரவேற்பில்லங்கள் :

ஆண்டின் ஆரம்பத்தில் துவக்க எண்ணிக்கையாக 154 இல்லவாசிகள் இருந்தனர். ஆண்டின் இடைப்பட்ட காலத்தில் 3,886 இல்லவாசிகளும் 56 குழந்தைகளும் அனுமதிக் கப்பட்டனர், இந்த ஆண்டில் 3,842 பெண்டிரும் 49 குழந்தைகளும் விடுவிக்கப்பட்டு ஆண்டின் இறுதியில் 31—3—1990 அன்று இறுதியில் 198 இல்லவாசிகள் மற்றும் 7 குழந்தைகள் இருந்தனர்,

மணமாகாத தாய்மார்களின் இல்லம் :

1—4—1989 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 3 பெண்கள் இருந்தனர். இவ்வாண்டில் 6 பெண்கள் அனுமதிக்கப்பட்டு 5 பெண்கள் இல்லத்திலிருந்து வெளியேறியதால் ஆண்டின் 31—3—1990 அன்று இறுதியில் 4 இல்லவாசிகள் இருந்தனர்.

சுகாதாரம் :

நிறுவனங்களில் உறையும் இல்லவாசிகளின் சுகாதாரம் பொதுவாக திருப்தி யூட்டும் வகையில் இருந்தது.

கல்வி :

மகளிர் காப்பகங்கள் மற்றும் விழிப்புப் பணி இல்லங்களில் இல்லவாசிகளுக்கு எட்டாம் வகுப்பு வரை பொதுக் கல்வி கற்பிக்கப்படுகிறது.

தொழிற்பயிற்சி :

பொதுக் கல்வி தவிர இல்லவாசிகளுக்கு நெசவு, தையல், எத்தையல் ஆயத்த ஆடைகள் செய்தல் ஆகியவைகளில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

ஒழுக்கம் :

பொதுவாக அனைத்து நிறுவனங்களிலும் இல்லவாசிகளிடையே ஒழுக்கமும், கட்டுப்பாடும் செம்மையாக பேணப்பட்டது காணப்பட்டது.

உடற்பயிற்சி கல்வி :

சென்னை அரசினர் விழிப்புப் பணி இல்லம் மற்றும் மணமாகாத தாய்மார்களின் இல்லத்தில் முறையாக தகுதி பெற்ற உடற்பயிற்சி ஆசிரியை மூலம் இல்லவாசிகளுக்கு உடற்பயிற்சி கல்வி கற்பிக்கப்படுகிறது.

மறுவாழ்வு :

அறிக்கை வழங்கும் இவ்வாண்டில் இல்லவாசிகளுக்கு மேற்கண்ட மறுவாழ்வு வசதிகள் தரப்பட்டுள்ளன :

(1) பெற்றோர்கள் மற்றும் கணவர்களிடம் ஒப்பளிக்கப்பட்டவர்கள்	84
(2) வேலூர் அரசினர் மகளிர் பிற்காப்பு இல்லத்தில் அனுமதிக்கப்பட்டவர்கள்.	29
(3) வேலையில் அமர்த்தப்பட்டவர்கள்	11
(4) திருமணம்	—

நிதி :

1-4-1989 முதல் 31-3-1990 முடிய உள்ள காலத்தில் மேற்படி நிறுவனங்களில் இல்லவாசிகளைப் பராமரிக்க குறிப்பிட்ட செலவினம் ரூ. 32.24 இலட்சம் ஆகும். இந்நிறுவனங்களிலிருந்து அரசுக்கு வருவாயாக தொழிற் பிரிவு :றறும் ஏனைய பல்வகை வரவினமாக ரூ. 0.38 இலட்சம் பெறப்பட்டது.

முடிவுரை :

இந்த அறிக்கை ஆண்டின் விழிப்புப்பணி இல்லங்கள் மற்றும் மகளிர் காப்பகங்கள் தொடர்ந்து திருப்திகரமாக செயல்பட்டு வந்துள்ளன.

முதியோர் உதவித்தொகைத் திட்டம்.

இந்தத் திட்டம் முதியோர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய முக்கியத் துவம் வாய்ந்தவை ஆகும், உற்றார், உறவினர் ஆதரவின்றி வாழ வழியற்றவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு கீழ்க்கண்ட இனங்களின்கீழ் இத்திட்டத்தை மாநில அரசு செயல்படுத்துகிறது:—

(அ) முதியோர் உதவித்தொகை (சாதாரணம்) திட்டம் 1—4—1962 முதல் :

கண் பார்வையற்றோர். தொழுநோய் மனநோய், பாரிச வாய்வு மற்றும் அவய மிழந்து வருவாய் ஈட்டமுடியாத நபர்கள் உதவித் தொகைப் பெற குறைந்தபட்சம் வயது வரம்பு 60 ஆகும், மற்ற ஆதரவற்ற நபர்களுக்கு குறைந்தபட்ச வயது வரம்பு 65 ஆகும், இத்திட்டம் 1—4—1982 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்) திட்டம் 1—11—1974 வரை.

1—11—1974 முதல் இந்தத் திட்டம் 45 வயது நிரம்பிய ஆதரவற்ற உடல் ஊன முற்றோர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது, இந்த குறைந்தபட்ச வயது வரம்பு கண் பார்வையற்றோர்களுக்கு பொருந்தாது என அரசால் ஆணையிடப்பட்டது,

(இ) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற விதவை) திட்டம் 1—6—1975 முதல் :

1—6—1975 முதல் இந்தத் திட்டம் ஆதரவற்ற விதவைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது, குறைந்தபட்சம் வயது வரம்பு 40 ஆகும், அரசாணை 257, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 24—5—1990-இல் மேற்கண்ட வயது வரம்பை நீக்கி அரசு ஆணையிட்டுள்ளது.

(ஈ) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள்) திட்டம் 31—8—1981 முதல்

இந்தத் திட்டம் 21—8—1981 முதல் 60 வயது நிரம்பிய ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு அமலாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(உ) கணவரால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு உதவித்தொகை திட்டம் 25-4-1986 முதல்.

25—4—1986 முதல் 30 வயது நிரம்பிய கணவரால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் அமலாக்கப்பட்டு, செயல்படுத்தப் பட்டு வருகிறது.

(2) உதவித்தொகை ஒப்பளிப்பு அளிக்கப்படும் முறை :

மேற்கண்ட திட்டத்தின்கீழ் உதவித்தொகை ஒப்பளிப்பு அதிகாரம் கோட்டாட்சி யர்களுடையது, அரசாணை எண் 440, சமூக நலத்துறை, நாள் 8—5—1989-இன்படி மேற்கண்ட அதிகாரம் வட்டாட்சியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அரசாணை எண்.1080, சமூக நலத் துறை நாள் 18—7—1989-ன்படி. மேற்கண்ட ஒப்பளிக்கும் அதிகாரம் தலித்தோர் நலம் வட்டாட்சியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

3. உதவித்தொகை வழங்கப்படும் முறை :

முதியோர் உதவித்தொகைத்திட்டம் அமல்படுத்தப்பட்ட நாளாகிய 1—4—1962 முதல் 31—3—1979 வரை ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ, 20 உதவித்தொகையாக அளிக்கப்பட்டது, 1—4—1979 முதல் 31—3—1982 வரை மாதம் 25 எனவும் 1—4—1982 முதல் 30—4—1989 வரை மாதம் ரூ. 35 ஆகவும் வழங்கப்பட்டது. 1—5—1989 முதல் இதுநாள் வரை மாதம் ரூ, 50 ஆகவும் வழங்கப்படுகிறது, இத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவித்தொகை பெறுபவர்களின் முகவரிக்கு வட்டாட்சி யரால் அனுப்பப்படுகிறது. இதற்கான பண அஞ்சல் கட்டணச் செலவையும் மாநில அரசு ஏற்றுக் கொள்கிறது.

4. இலவச கைத்தறி ஜனதா, ஆடைகள் வழங்குதல்:

ஆண்டுக்கு இருமுறை பொங்கல் பண்டிகை மற்றும் சுதந்திர நாள் அன்று உதவித் தொகை பெறும் ஆண்களுக்கு தலா ஒரு கைத்தறி ஜனதா வேட்டியும், பெண்களுக்கு தலா ஒரு கைத்தறி ஜனதா வண்ண வெள்ளைச் சேலையும் 1979 சுதந்திர நாள் முதல் அளிக்கப்பட்டு வருகிறது.

5. மற்றபடி சத்துணவு வழங்குதல் :

அனைத்து முதியோர் உதவித்தொகை பெறுபவர்களுக்கு நாள்தோறும் மதிய சத்துணவு இலவசமாக சத்துணவுக் கூடங்களில் வழங்கப்படுகிறது.

6. முதியோர் உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் பயனடைவோர் எண்ணிக்கை :

(அ) முதியோர் உதவித்தொகை (சாதாரணம்) திட்டம்	2,21,681
(ஆ) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்) திட்டம்	26,351
(இ) முதியோர் உதவித்தொகை ஆதரவற்ற விதவைகள் திட்டம்	1,77,121
(ஈ) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற வேளாண்மை தொழிலாளர்கள்) திட்டம் ..	66,100
(உ) முதியோர் உதவித்தொகை (கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்கள் திட்டம்) ..	21,230
	5,12,483

7. ஒவ்வொரு காலாண்டிற்கும் காத்திருப்போர் பட்டியலில் உள்ள நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்குத்திட்டம் :

அரசாணை எண் 440, சமூக நலத்துறை, நாள் 8—5—1989-ல் ஒவ்வொரு காலாண்டிலும் முதியோர் உதவித்தொகை கேட்டு காத்திருப்போர் பட்டியலுள்ளவர்களுக்கு முதியோர் உதவித்தொகை வழங்கும் புதிய முறையை அரசு அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம்.

தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம் கீழே குறிப்பிடப்பட்ட துறைகளின் கீழ் செயல்பட்டுவருகின்றது:

1. பள்ளிக் கல்வி இயக்கம்.
2. தொடக்கக் கல்வி இயக்கம்,
3. நகராட்சி நிர்வாக இயக்கம்.
4. சமூக நல இயக்கம்.
5. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்கம்.
6. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்கம்.

முன்னுரை :

தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் என்ற பெயரில் 1—7—1982 முதல் வயது 2 முதல் 4 வரையிலும் வயது 5 முதல் 9 வரையிலும் உள்ள கிராமப்புறப் பகுதிகளிலுள்ள குழந்தைகளுக்கும் மாணவர்களுக்கும் பயனளிக்கும் வகையில் தொடங்கப்பட்டது. இத்திட்டம் 15—9—1982 முதல் நகரப் பகுதிகளிலுள்ள குழந்தைகளுக்கும் 15—1—1983 முதல் முதியோர் உதவித் தொகை பெறுவோருக்கும் 1—1—1984 முதல் முன்னாள் படை வீரருக்கும் அவர்தம் விதவையருக்கும் 15—9—1984 முதல் 15 வயது வரை பள்ளி மாணவர்களுக்கும் பயனளிக்கும் வகையில் தொடங்கப்பட்டது.

சத்துணவு கீழ்க்கண்ட அளவும் பொருள்களைக் கொண்டு சமைக்கப்படுகிறது:—

வரிசை எண் மற்றும் சேர்க்கப்பட்ட உணவுப் பொருளின் பெயர்.	2 முதல் 4 வயதினருக்கு.	5 முதல் 7 வயதினருக்கு.	10 முதல் 15 வயதினருக்கு.	முதியோருக்கு.
(1)	(2)	(3) (கிராம் கணக்கில்)	(4)	(5)
1 அரிசி	80	100	120	200
2 பருப்பு	10	15	15	15
3 எண்ணெய் ..	1	1	1	
4 காய்கறி மற்றும் சுவையூட்டும் பொருள்கள்	50	50	50	50

சத்துணவு அளிக்கும் முறை :

குழந்தைகள் நல மையங்களில் உணவு பெறும் 2 முதல் 4 வயது வரையுள்ள மாணவர்களுக்கும் மற்றும் முதியோர்களுக்கும் வருடம் முழுவதும் உணவு வழங்கப் படுகிறது. அரசு விடுமுறை நாட்களுக்கும், பண்டிகை நாட்களுக்கும், முந்தைய நாளே சிறப்பு உணவு தயாரிக்கப்பட்டு பொட்டலமாக அளிக்கப்படுகிறது. 11 வயது முதல் 13 வயதுள்ளோருக்கு சராசரியாக 220 நாட்களுக்கும் உயர்நிலைப்பள்ளி மாணவர் களுக்கு சராசரியாக 200 நாட்களுக்கும் உணவு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் பயன் பெறுவோரின் எண்ணிக்கை—

பயன்பெறுவோரின் வகை. (1)	எண்ணிக்கை. (2) (லட்சங்களில்.)
பள்ளி சாராக் கல்வி பயிலும் குழந்தைகள் (2 முதல் 4 வயது வரை)	18.55
பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் (8 முதல் 14 வயது வரை)	67.24
	85.79 அல்லது
மொத்தம்	85.80
முதியோர் உதவித் தொகை பெறுவோரின் எண்ணிக்கை	2.25 லட்சம்.

இத்திட்டத்தின்கீழ் 3—6—1989 முதல் குழந்தைகள் நல மையங்களில் பயன் பெறும் குழந்தைகளுக்கும் பள்ளி மையங்களில் பயன்பெறும் மாணவர்களுக்கும் 2 வாரங்களுக்கு ஒருமுறை முட்டை வழங்கப்படுகிறது. மொத்த எண்ணிக்கையில் 85.30 லட்சம் குழந்தைகள் இதனால் பயன் பெறுகின்றனர்.

	(இலட்சங்கள்)
இத்திட்டத்திற்காக 1989—90-ம் ஆண்டு கணக்குப்படி சத்துணவு வழங்க செலவிடப்பட்ட தொகை.	171.62
முட்டை வழங்குவதற்கு செலவிடப்பட்ட தொகை.	8.96
மொத்தம்	180.58

இத்திட்டத்தில் மொத்தம் 2.02 லட்சம் பணியாளர்கள் பணி செய்கின்றனர். கீழே குறிப்பிட்டவாறு அவர்களுக்கு மதிப்பூதியம் வழங்கப்படுகிறது:—

1. குழந்தைகள் நல அமைப்பாளர் ரூ. 240 பிரதி மாதம் (தொகுப்பு)
2. குழந்தைகள் நல உதவியாளர் ரூ. 100
3. சத்துணவு மைய அமைப்பாளர் ரூ. 210 பிரதி மாதம் (தொகுப்பு)
4. சமைப்பவர் ரூ. 100 பிரதி மாதம் (தொகுப்பு).
5. உதவியாளர் ரூ. 60 பிரதி மாதம் (தொகுப்பு).

அவர்கள் சிறப்புப் படியாக ரூ. 10 அல்லது 5 தொகுப்பூதியத்தின் அடிப்படையில் பெறுகிறார்கள்.

இத்திட்டம் திருட்டுகள் நடைபெறாமலும் தடுக்கவும் அறிவுரைகள் வழங்கப் பட்டுள்ளது. திடீர் ஆய்வுகள் செய்யவும் தேவையான அறிவுரைகள் கொடுக்கப்பட் டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தேர்முக உதவியாளர்கள் (ச.தி.) மற்றும் ஆய்வு அலுவலர், மேலாய்வு அலுவலர் ஆகியோரின் ஆய்வறிக்கைகள், மாதந்தோறும் அரசால் பெறப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது.

அத்தியாயம் 28

சமூகநலம் மற்றும் சத்துணவுத் துறை

சமூகநலம் மற்றும் குழந்தை நலம்.

தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம் :

தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டத்தின் கீழ், தற்போது 68.000 மையங்கள் செயல்படுகின்றன, இத்திட்டத்தின் கீழ் 85,00 இலட்சம் குழந்தைகளும். 2,13 இலட்சம் முதியோர் உதவித் தொகை பெறுபவர்களும். பயனடைகின்றனர், 1980-90 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில். 2,02 இலட்சம் பணியாளர்கள் ஈடுபட்டிருந்தனர். 1989-90 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் 186,89 கோடி ரூபாய் செலவிடப் பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த குழந்தை நல மேம்பாட்டுப் பணித்திட்டம் :

1989-90 ஆம் ஆண்டு வரை அனுமதிக்கப்பட்ட 65 ஒருங்கிணைந்த குழந்தை நல மேம்பாட்டுப் பணித் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுகின்றன.

இந்த 65 திட்டங்களில். பின்வரும் தொகுப்புப் பணிகள். வழக்கம்போல் அங்கன் வாடிகள் மூலமாக அளிக்கப்படுகின்றன,—

(1) துணைச் சத்துணவு;
(2) நோய்த் தடுப்பு மருந்து அளித்தல். மருந்து ஊசி போடுதல்;
(3) உடல்நலச் சோதனை மற்றும்
(4) நோயாளிகளை பெரிய மருத்துவமனைக்கு அனுப்புதல் (Referral Services),
(5) சத்துணவு சுகாதாரக் கல்வி
(6) பள்ளிசாராக் கல்வி,

இந்த 65 திட்டங்களில் 2 முதல் 4வயது வரையுள்ள குழந்தைகளுக்கு முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் மூலம் உணவு வழங்கப்படுகிறது. இரண்டு வயதிற் குள் உள்ள குழந்தைகளுக்கும். கருவுற்றிருக்கும் மகளிரிருக்கும் பாலூட்டும் தாய் மார்களுக்கும் ஊட்டச்சத்து (Supplementary Feeding) அளிக்கப்படுகிறது. இவ் வாறாக. முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் மூலம் 2.14.347 குழந்தைகளும். ஊட்டச்சத்து வழங்கல் மூலம் 1.01.354 குழந்தைகளும். 68.551 கருவுற்ற மகளிர். பாலூட்டும் தாய்மார்களும் பயனடைந்துள்ளனர். இவை தவிர. வழக்கம்போல முறை யான உடல்நலச் சோதனை மகப் பேற்றிற்கு முன்னரும். பின்னரும் மேற் கொள்ளப் படும் மருத்துவ கவனிப்பு. நோயாளிகளை அனைத்து துறைகளும் அடங்கிய பெரிய மருத்துவமனையில் சிகிச்சை முறை பெற அனுப்புதல். போன்ற பணிகளும் மேற் கொள்ளப்படுகின்றன, மேலும் நடைபெற்று வரும் திட்டங்களாக முத்தடுப்பு ஊசி போடுதல். 'ஏ' வைட்டமின் கொடுத்தல் போன்ற பணிகளும் மேற் கொள்ளப்படு கின்றன,

அனைவருக்கும் நோய்த் தடுப்பு மருந்தளித்தல். ஊசி போடுதல் திட்டத்தின் (UIP) வாயிலாக இளம்பிள்ளை வாத நோய்த் தடுப்புச் சொட்டு மருந்து கொடுப் பதற்குரிய (OPV) பேரளவு நோய்த் தடுப்பு மருந்து செலுத்தும் பணித் திட்டங்கள் நடைபெறுகின்றன.

தூணை உணவு பெறுகின்ற குழந்தைகளுக்கும். கருவுற்றிருக்கும் மகளிருக்கும். பாலூட்டும் தாய்மார்களுக்கும். இரும்புச் சத்துள்ள மாத்திரைகளும். ''போலிக்'' அமிலச் சத்துள்ள மாத்திரைகளும் அளிக்கப்படுகின்றன,

ஆதரவற்ற குழந்தைகள் நலத் திட்டம் :

ஆதரவற்ற குழந்தைகளைப் பதிவு பெற்ற தொண்டு நிறுவனங்கள் மூலமாக கவனித்துப் பேணுவதற்காக திட்டமொன்றை மத்திய அரசு தொடங்கியுள்ளது, ''இத் திட்டம் ஒவ்வொரு பிரிவிலும் 25 குழந்தைகள் தங்கியிருக்கக்கூடிய ''குடில் முறையை'' (Cottage System) அடிப்படையாகக் கொண்டதாகும்,
31-3-1979 வரை செலவில் 90 சதவீதத்தை மத்திய அரசு மானியமாக அளித்தது 1-4-1979 லிருந்து, 45 சதவீத செலவுத் தொகையை மாநில அரசும் 45 சதவீத செலவுத் தொகையை மத்திய அரசும் எஞ்சிய 10 சதவீதத்தை அந்நிறுவனமும் ஏற்று வருகின்றன. குழந்தைகளுக்கு இடவசதி செய்து கொடுப்பதற்காக ஒவ்வொரு குடிலுக்கும் கட்டிட மானியமாக 1,50,000 ரூபாயும் அளிக்கப்படுகிறது.

1989-90 ஆம் ஆண்டில் 158 நிறுவனங்களுக்கு 363,68 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது.

மகளிர் நலன் :

தாம்பரம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சேலம் பசும்பொன் முத்துராம லிங்கம் மாவட்டத்தில் திருப்பத்தூர் ஆகிய ஆறு இடங்களில் சேவை இல்லங்கள் இத்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன. ஆதரவற்ற மகளிர் 18 லிருந்து 50 வயது வரையுள்ள உடல் ஊனமுற்ற பெண்கள் ஆகியோருக்கு உணவு வழங்கி அவர்களுக்கு மேல்நிலைப் பள்ளிப் படிப்பு வரை கல்வியும், தட்டச்சு, சுருக் கெழுத்து ஆகியவற்றில் பயிற்சியும் அளிப்பதே இதன் நோக்கமாகும். இந்த சேவை இல்லத்தில் தங்கியிருக்கும் பெண்கள் தங்கள் இரண்டு அல்லது மூன்று குழந்தைகளுடன் அதிகபட்சம் 3 ஆண்டுகளுக்குத் தங்கியிருக்க அனுமதிக்கப்படுகின்றனர். தங்கியிருக்கும் மகளிருக்கும் குழந்தைகளுக்கும் மாநில அரசின் முழுச் செலவில் தங்குமிடம், உணவு, துணி, பாடப் புத்தகங்கள், குறிப்பேடுகள் மருத்துவச் சிகிச்சை ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன.

1986–87 ஆம் ஆண்டில் வயது வந்தோர் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும், ஆண்டொன்றுக்கு துணிப்படிகள் முறையே ரூ. 60 லிருந்து ரூ. 100 ஆகவும், ரூ. 35 லிருந்து ரூ. 60 ஆகவும் உயர்த்தப்பட்டது. 1989–90 ஆம் ஆண்டு திட்ட நிதி இலக்கும் சாதனைகளும் பின்வருமாறு.—

திட்ட வகையில்.		நிதி வகையில்.	
இலக்கு.	சாதனை.	இலக்கு.	சாதனை.
(1)	(2)	(3)	(4)
		(ரூபாய் இலட்சத்தில்.)	
வயது வந்தோர் 810 பேர். குழந்தைகள். 265	வயது வந்தோர் 619 பேர் குழந்தைகள். 148	29.88	37.20

ஆசிரியர் பயிற்சி மையம் :

ஆசிரியர் பயிற்சியில் 2 ஆண்டு பட்டயப் பயிற்சி அளிக்க 1966–67 ஆம் ஆண்டில் தாம்பரத்தில் தொடங்கப்பட்ட ஆசிரியர் பயிற்சி மையம், இளநிலை, முதுநிலை பிரிவுகள் ஒவ்வொன்றிலும் முறையே 50, 40 பேர்களைக் கொண்டு இப்போது பல்லாவரத்தில் செயல்பட்டு வருகிறது. இத்துறை மூலம் மாநில அரசின் நிதியுதவி பெற்ற துறையின் சேவை இல்லங்கள் மூலமாகவும் தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 18 முதல் 30 வயதுடைய மகளிர் இப்பயிற்சி மையத்தில் அனுமதிக்கப்படுகின்றனர். இரண்டாண்டுப் பயிற்சிக் காலத்தின் போது, பயிற்சி பெறுஒவருக்கு மாதமொன்றுக்கு தலா ரூ. 75 பயிற்சி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

திட்ட வகையில்.		நிதி வகையில்.	
இலக்கு.	சாதனை.	இலக்கு.	சாதனை.
(1)	(2)	(3)	(4)
		(ரூபாய் இலட்சத்தில்.)	
100	100	3.54	4.21

பணிபுரியும் மகளிர் இல்லம் :

பணி புரியும் மகளிருக்குப் பாதுகாப்பு அளிப்பதன் அவசியத்தைக் கருத்திற்கொண்டு சென்னை, கீழ்ப்பாக்கம் (சென்னை), திருச்சி, மதுரை, ஒசூர் (தருமபுரி) ஆகிய இடங்களில் பணிபுரியும் மகளிர் இல்லங்கள் 6 இத்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன. இவற்றில் கீழ்ப்பாக்கம் இல்லத்தில் 35 பேர் தங்கியிருக்க இயலும். மற்ற 5 இடங்களிலும் உள்ள இல்லங்கள் ஒவ்வொன்றிலும் 50 பேர் தங்கியிருக்க இயலும். இந்த இல்லங்களின் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கல், இல்லக் கட்டிடத்தின் வாடகை ஆகியவை தொடர்பாக செலவு, அரசு நிதியிலிருந்து செய்யப்படுகிறது. செலவுத் தொகையை பகிர்ந்து கொள்ளும் முறையில் உணவகம், மின்சாரம் ஆகியவற்றின் கட்டணங்களும், கட்டிடத்திற்கான மின்சார வாடகையும் இவற்றில் தங்கியிருக்கும் பணிபுரியும் மகளிரிடம் வசூலிக்கப்படுகின்றன.

1986–87 ஆம் ஆண்டில் கடலூரில் 30 மகளிர் தங்கும் வகையில் ஒரு இல்லம் தொடங்கப்பட்டது.

நிதி வகையில்.		திட்ட வகையில்.	
இலக்கு.	சாதனை.	இலக்கு.	சாதனை.
(1)	(2)	(3)	(4)
(ரூபாய் இலட்சத்தில்.)			
5.17	6.17	340 (பணிபுரியும் மகளிர்.)	240 (பணிபுரியும் மகளிர்)

மகளிர் மன்றங்கள் :

கிராமப்புறத்திலுள்ள மகளிரை பல்வேறு சமூக பொருளாதார ஏற்றத் தாழ்வு எல்லைகளைக் கடந்து மகளிர் மன்றங்களில் ஒன்று சேர்ப்பதற்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் உயரளவில் 30 என்ற வீதத்தில் மொத்தம் 11,520 மகளிர் மன்றங்கள் உள்ளன. மகளிர் மன்றங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் அமைப்பாளர்களுக்குப் காலாண்டிற்கு ரூ. 15 என்ற வீதத்தில் மதிப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது. அமைப்பாளர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியம் தொடர்பாகவும், பல்வேறு நடவடிக்கைகள் அதாவது சத்துணவு செயல் விளக்கங்கள் குறித்து மகளிருக்கான பயிற்சி முகாம் நடத்துதல், ஆரோக்கியமான குழந்தைகள் காட்சிப் போட்டிகள், கல்வி, சுற்றுலா மேற்கொண்டும், சமூகக் கல்வி குறித்த புத்தகங்கள் வழங்குதல் ஆகிய பல்வேறு நடவடிக்கைகள் தொடர்பாகவும் சமூக நல நிதியின் கீழ், ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் ஆண்டொன்றுக்கு ரூ. 4,000 செலவு செய்யப்படுகிறது.

நிதி வகையில்.		திட்ட வகையில்.	
இலக்கு.	சாதனை.	இலக்கு.	சாதனை.
(1)	(2)	(3)	(4)
(ரூபாய் இலட்சத்தில்.)			
49.83	49.44	11,520 (மகளிர் மன்றங்கள்.)	11,520

விதவைகளின் குழந்தைகளுக்கு பாடநூல் புத்தகங்களும், குறிப்பேடுகளும் இலவசமாக வழங்குதல்:

ஆண்டொன்றுக்கு ரூ. 3,000-க்கும் குறைவாக குடும்ப வருமானம் உடைய விதவைகளின் குழந்தைகளுக்கும், பயனளிக்கும் வகையில் பாடப் புத்தகங்களும், குறிப்புப் புத்தகங்களும் இலவசமாக வழங்கும் திட்டம் 1978–79 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி தொடக்கப் பள்ளியில் படிக்கும் குழந்தை ஒன்றுக்கு, ரூ. 15 என்ற வீதத்திலும், இடைநிலைப் பள்ளியில் படிக்கும் குழந்தை ஒன்றுக்கு, ரூ. 40 என்ற வீதத்திலும், உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் குழந்தை ஒன்றுக்கு ரூ. 90 என்ற வீதத்திலும் பாடப் புத்தகங்களும், குறிப்பேடுகளும், இலவசமாக வழங்கப்படும். 1981–82 ஆம் ஆண்டு முதல் மேல் நிலைப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. குழந்தை ஒன்றுக்கு ரூ. 100 என்ற வீதத்தில் ஒவ்வொரு ஆண்டும் 1,000 குழந்தைகள் பயனடையும் வகையில் ரூபாய் ஒரு லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நிதி (ரூபாய் இலட்சத்தில்.)		திட்டம்.	
இலக்கு.	சாதனை.	இலக்கு.	சாதனை.
3.47	3.25	4,000	3907

ஏழை விதவைகளின் மகளிருக்கான திருமண நிதியுதவித் திட்டம் :

போதிய நிதி வசதி இல்லாததால் ஆதரவற்ற விதவைகள் அவர்களுடைய பெண் மக்களின் திருமணத்தை நடத்த மிகவும் அல்லலுறுகின்றனர். அவர்களுடைய இடர்ப்பாடுகளைத் தீர்க்கும்வகையில் 1981–82 ஆம்ஆண்டில்அரசு ஒரு திட்டத்திற்கு அனுமதி அளித்துள்ளது. அதன்படி ஏழை விதவைகளின் 18 முதல் 30வயது உடைய பெண்களின் திருமணம் தொடர்பான செலவுக்கு நிதியுதவி வழங்கப்படும். ஒரு வருக்கு ரூ. 1,000 என்ற வீதத்தில் விதவைகளின் ஒரே ஒரு மகள் மட்டுமே இந்த நிதியுதவியைப் பெறுவதற்கு தகுதியுடையவராவர், பயன்பெறுவோர் மாவட்ட அளவிலும் சென்னை மாநகரத்தைப் பொறுத்தமட்டில் சமூக நல இல்லங்களிலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

நிதி (ரூபாய் இலட்சத்தில்,)

இலக்கு,	சாதனை,
12,30	10,44

திட்டம்,

இலக்கு,	சாதனை,
1.230	1.044

ஆதரவற்றப் பெண்களுக்குத் திருமண உதவி

ஏழ்மை நிலையிலுள்ள விதவைத் தாய்மார்களின் பெண்கள் பயனடையும் வகையில், அவர்களுக்குத் திருமண உதவி ஏற்கெனவே அளிக்கப்பட்டுள்ளது. ஏழ்மை நிலையிலுள்ள ஆதரவற்ற அனாதைப் பெண்களுக்கு உதவுவதற்காக (தமிழக அரசு) தனியானதொரு திட்டத்திற்கு அனுமதியளித்துள்ளது, 1985-86 ஆம் ஆண்டிலிருந்து ஒரு பெண்ணுக்கு ரூ, 1.000 என்ற வீதத்தில் 1.000 அநாதை. ஆதரவற்ற பெண்களுக்கு திருமண உதவி அளிக்கப்படுகிறது, இந்த உதவி ஆண்டு வமானம் ரூ, 3.000க்குற மிகாமல் உள்ள 18க்கும் 30க்கும் இடைப்பட்ட வயதுடைய அனாதை ஆதரவற்ற பெண்களுக்கும். குடும்பத்திலுள்ள ஒரே ஒரு பெண்ணுக்கும் அளிக்கப்படும்,

நிதி (ரூபாய் இலட்சத்தில்,)

திட்டம்,

இலக்கு,	சாதனை,
2,00	1,58

இலக்கு,	சாதனை,
200	158

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம் :

இத்திட்டம்.. ஏழ்மை நிலையிலுள்ள குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு பண உதவி அளிக்கும் வகையில் 3—6—1989லிருந்து செயல்படுத்தப்படுகிறது, இந்த உதவி கருவுற்ற நாளிலிருந்து கடைசி இரண்டு மாதங்களுக்கும். குழந்தை பிறந்ததி லிருந்து இரண்டு மாதங்களுக்கும் வழங்கப்படுகிறது, கருவுற்ற தாய்மார்களுக்கு அரசு நிதியுதவியாக மொத்தமாக ரொக்கம் ரூ, 200 வழங்கப்படுகிறது, இத்தகைய பண உதவி முதல் இரண்டு குழந்தைப் பெற்றவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்,

1989-90ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ, 3,68 கோடி செலவிடப்பட்டது, இதன் மூலம் 1.83.918 தாய்மார்கள் பயனடைந்தனர்,

சமூக நலம்—சத்துணவுத் திட்டத்துறை சமூக நலத் திட்டங்கள்

1. மூவலூர் ஐராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம் :

சமுதாயத்தில் பெண்களின் தகுதியை உயர்த்தும் நோக்கமும் பெண்களில் எழு தப்படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கையை உயர்த்தும் வகையிலும் தமிழக அரசு இத்திட்டத்தைக் கொண்டு வந்தது. இத்திட்டத்தின் கீழ், ஏழ்மை நிலைமையிலுள்ள குடும்பங்களை சேர்ந்த 8ஆம் வகுப்பு வரையிலும் அதற்கு மேலும் படித்துள்ள பெண் களின் திருமணத்திற்கு நிதியுதவியாக ரூ, 5.000 வழங்கப்படுகிறது, பழங்குடியின மக்களுக்கு இதற்கான குறைந்த அளவு கல்வித் தகுதி 5ஆம் வகுப்பு என்று குறைக்கப் பட்டுள்ளது, வருமான வரம்பு ஆண்டொன்றுக்கு ரூ, 5.000 ஆகும். இந்த நிதி யுதவி பெற க்ப்ண்ணின் வயது 18 ஆண்டுகள் முடிந்திருக்க வேண்டும். இத்திட்டம் 3—6—1984லிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கு 1989-90ஆம் ஆண்டில் ரூ, 7.60 கோடி வழங்கப்பட்டது, இதன் மூலம் 14.800 ஏழைப் பெண்கள் பயனடைந்தனர்.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவை மறுமணத் திட்டம் :

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் விதவைகளுக்கு மறுமணம் செய்வித்தலாகும், இத்திட்டம் 18 வயதிற்கும் இடைப்பட்ட வயதுடைய விதவைகளுக்கு மட்டுமே பய னளிக்கும் வகையில் வரையறுக்கப்பட்டுள்ளது, வருமான வரம்பு ஆண்டொன்றுக்கு ரூ, 6.400 ஆகும், விதவைகளின் மறுமணத்திற்காக ரூ, 5.000 ஏழு ஆண்டு காலத்திற்கு பின்னர் பணமாகப் பெற்றுக் கொள்ளும் வகையில் கணவன்-மனைவி ஆகிய இருவரின் பெயரில் தேசிய சேமிப்புச் சான்றிதழாக வழங்கப்படுகிறது, தேசிய சேமிப்புச் சான் றிதழின் முதிர்வுக் காலம் 6 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது,

குழந்தைகள் நலம், அரசு நடத்தும் ஆதரவற்றோர் இல்லங்கள்:

இத்துறை 5,18 வயதுடைய அனாதை ஆதரவற்ற சிறுவர்களுக்காக 22 அனாதை இல்லங்களை நடத்துகிறது, ஒவ்வொரு இல்லத்திலும் 250 சிறுவர்கள் அனுமதிக்கப் படுகின்றனர்.

இத்தகைய ஆதரவற்றோர் இல்லங்களிலுள்ள சிறுவர்களுக்கு உணவு, உடை உறைவிடம், புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள், மருத்துவ உதவி மற்றும் அவர்கள் வளர்ச்சிக்கான கல்வி ஆகியவை இலவசமாக அளிக்கப்படுகின்றன. அனைதைச் சிறுவர்களுக்கு 5ஆம் வகுப்பு வரையில் இடைநிலை ஆசிரியர்களைக் கொண்டு இந்த இல்லங்களிலேயே கல்வி புகட்டப்பட்டு அதன் பின்னர் அவர்கள் 5ஆம் வகுப்பிற்கு மேல் பயில அரசு அல்லது மாநகராட்சி அல்லது நகராட்சிப் பள்ளிகளுக்கு அனுப்பப் படுகின்றனர்.

சென்னை-1, மதுரை, கன்னியாகுமரி, சேலம் ஆகிய இடங்களிலுள்ள ஆதரவற்றோர் இல்லங்களின் 1986–87ஆம் ஆண்டில், தையல், ஏனைய கைத்திறத் தொழில்கள் ஆகிய வாழ்க்கைத் தொழில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பெண் கைதிகளில் சிறார்களும் இத்தகைய ஆதரவற்றவர்களுக்கான அரசு இல்லங்களில் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

நிதி,		திட்டம்,	
இலக்கு,	சாதனை,	இலக்கு,	சாதனை,
85,91	116,476	5.200	4.781

ஊனமுற்றோருக்கான கல்வி :

கண்பார்வையற்றோர், காது கோளாதவர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சி குன்றியோர் ஆகிய ஊனமுற்றவர்களிடம் சிறப்புக் கவனமும் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு அக்கறையும், அவர்களுக்குக் கல்வி அளிக்கப்படுவதும் அவசியமாகும். இவர்களுக்கு அளிக்கப்படும் கல்வியிலிருந்து வேறுபட்டதாகும், இவர்களுக்குக் கல்வி புகட்ட சிறப்பு ஆசிரியர்களை அமர்த்த வேண்டும், இத்தகைய சிறப்பான அவசியத்தைக் கருத்தில் கொண்டு. ஊனமுற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளை நடத்தி வருகிறது. இத்தகைய சிறப்புப் பள்ளிகள் 48. 22 அரசுப் பள்ளிகளும் 26 அரசு உதவி பெறும் பள்ளிகளும் ஆகும்.

தொடர் எண்.	வகை	அரசுப் பள்ளிகள்.	அரசு உதவி பெறும் பள்ளிகள்.	ஊராட்சிப் பள்ளிகள்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
	கண்பார்வையற்றோருக்கானப் பள்ளி	11	9		20
2	காது கேளாதோர்களுக்கானப் பள்ளி	10	11		20
3	மனவளர்ச்சி குன்றியோர்க்கான பள்ளி	1	2		3
4	தொழுநோய் தாக்கியவர்களுக்கானப் பள்ளி				..
5	உடல் ஊனமுற்றோருக்கானப் பள்ளி	1	2		2
	மொத்தம்	23	24	2	49

4,500 உடல் ஊனமுற்ற சிறுவர்களுக்கு உணவு, உறைவிட வசதிகளுடன் சிறப்புக் கல்வியும் இலவசமாக அளிக்கப்படுகிறது. உடல் ஊனமுற்ற சிறுவர் ஒவ்வொருவருக்கும் ஆண்டிற்கு இரண்டு ஜோடி சீருடை இலவசமாக வழங்கப்படுகிறது. 1985–86ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி பார்வையற்ற பெண்களுக்கான பள்ளி ஒன்றை அரசு தனியாக ஏற்படுத்தியது. இங்கு ஆசிரியர்களை அமர்த்தியுள்ளது. தற்போது இப் பள்ளியில் 150 பார்வையற்ற பெண்கள் பயின்று வருகின்றனர்.

9ஆம் வகுப்பிலிருந்து 12ஆம் வகுப்பு வரையில் பயனில் பார்வையற்ற மாணவர்களுக்கு உதவும் வகையில் தேர்வு நடைபெறும்போது அவர்கள் வினாக்களுக்கான விடைகளும், அவர்கள் சொல்லச்சொல்ல எழுதுவோருக்கு, நாள் ஒன்றுக்கு ரூ. 6 உதவித் தொகை வழங்குவதற்கும் அரசு அனுமதித்துள்ளது. இத்தகைய உதவியைப் பூவிருந்தவல்லியிலுள்ள பார்வையற்றோர் மேனிலைப்பள்ளியில் பயிலும் மாணவர்களும் பெறுவர். பார்வையற்றவர்களுக்கான லிட்டில் பிளவர் கான்வென்ட்டில் பார்வையற்றவர்களுக்கான செயின்ட்லூயில் இன்ஸ்டிட்யூட் சென்னை, ஆகிய பள்ளிகளில் இத்திட்டத்தின் கீழ் 200 மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டம் 1984–87ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

காதுகேளாத மாணவர்கள் தங்கள் கல்வியை மேலும் தொடர இயலும் வகையில் 1986–87ஆம் ஆண்டில் தஞ்சாவூரிலுள்ள காது கேளாதவர்களுக்கான அரசினர் மேல்நிலைப் பள்ளியில் XIஐ வகுப்பு தொடங்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவில் காது கேளாத 10 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அரசு வட்டார ப்ரெய்லி அச்சகம் :

பார்வையற்றவர்களுக்கான ப்ரெய்லி புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுவதற்காக பூவிருந்தவல்லி பார்வையற்றோருக்கான அரசினர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் தனி அச்சகம் ஒன்று இயங்கி வருகிறது. இந்த அச்சகம், பள்ளிகளில் பார்வையற்றோருக்கும் கற்பிக்கப்படுகின்ற. பல்வேறு பாடங்கள் தொடர்பான 4 தென் மாநிலங்களுக்குத் தேவைப்படுகின்ற ப்ரெய்லி புத்தகங்களை அச்சிட்டு வழங்குகிறது. இந்த அச்சகத்தைப் பராமரிப்பதற்கான செலவை முதலில் தமிழ்நாடு அரசு ஏற்றது. பின்னர் 4 தென் மாநிலங்களில் இச்செலவை ஏற்றுக்கொண்டன. 1989–90ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தில், பிரெய்லி அச்சகத்திற்காக ஒதுக்கக் கருதப்பட்ட மொத்த நிதியொதுக்கம் 3.68 இலட்சம் ரூபாயாகும்.

பார்வையற்றோர், காதுகேளாதோர், மனவளர்ச்சி குன்றியவர்கள் ஆகியோருக்கான ஆசிரியப் பயிற்சி :

உடலூனமுற்றோருக்கான ஆசிரியர்களுக்குரிய சிறப்புப் பயிற்சி வகுப்புகளுக்கு. அந்தத் துறையில் வல்லமை பெற்ற நிறுவனங்களின் மூலம் அரசு ஏற்பாடு செய்கிறது.

கீழே விளக்கியுள்ளவாறு 3 பயிற்சி மையங்கள் தமிழ்நாட்டில் உள்ளன :—

தொடர் எண்.	வகைப்பாடு.	அரசுக்குச் சொந்தமானவை.	மானியம் பெறுபவை.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)
1	பார்வையற்றோருக்கான பயிற்சி மையம்	1		1
2	காதுகேளாதாருக்கான பயிற்சி மையம்		1	1
3	மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான பயிற்சி மையம்		1	1
	மொத்தம்	1	2	3

பார்வையற்றோருக்கான அரசினர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பார்வையற்ற மாணவர்களுக்கான ஆசிரியர்களுக்குரிய வட்டாரப் பயிற்சி மையம் ஒன்று மத்திய அரசின் உதவியுடன் நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் 20 ஆசிரியர்கள் இந்தப் பயிற்சி வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். ஆசிரியர்களுக்கு உரிய இடங்களை நான்கு தென் மாநிலங்களிலும் பங்கிட்டுக் கொள்கின்றன. மாநில அரசும் தனி பிரிவு ஒன்றை நடத்துகிறது. இதில் ஒவ்வோராண்டும் 15 ஆசிரியர்களுக்கான வரவு–செலவுத் திட்ட நிதியொதுக்கத்தில், இந்தப் பயிற்சித் திட்டத்திற்கு நிதியொதுக்கம் 4.56 இலட்சம் ரூபாயாகும்.

தகுதிபெற்ற ஆசிரியர்கள், சென்னையிலுள்ள காது கேளாதவர்களுக்கான பள்ளி மூலம் காது கேளாதோருக்கு கல்வி கற்பிப்பதற்கான நவீன உத்திகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் தகுதி பெற்ற 10 ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்த இந்நிறுவனத்திற்கு மானிய உதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 1989–90 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட நிதியொதுக்கத்தில் 1.30 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மனவளர்ச்சி குன்றியவர்களுக்குக் கல்வி கற்பிப்பதற்காக சென்னையிலுள்ள பால விஹாரில் ஒவ்வொரு ஆண்டும் 20 ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. மேற் சொன்ன நோக்கத்திற்காக, இந்நிறுவனத்திற்கு மானிய உதவி அளிக்கப்படுகின்றது.

உடல் ஊனமுற்றோர் நலன் :

1. அபாயகரமான வேலையில் ஈடுபட்டிருந்தபோது, நிரந்தரமாக உடலூனம் அடைந்தவர்களுக்கு உதவி :

அபாயகரமான வேலையில் ஈடுபட்டிருந்தபோது நிரந்தரமாக உடலூனம் ஏற்பட்டோருக்கு நிதியுதவி அளிக்கப்பட்டது.

2. வட்டார மறுவாழ்வு மையங்களின் மூலம் உதவி :

மாநிலம் முழுவதையும் உள்ளடக்கும் வகையில், சென்னை, வேலூர், தஞ்சாவூர், கோயம்புத்தூர், மதுரை ஆகியவற்றைத் தலைமையிடமாகக் கொண்ட வட்டார மறுவாழ்வு நிலையங்களின் மூலம் உடலூனமுற்றோருக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. பொருளாதாரம் மற்றும் சமூகம் சார்ந்த மறுவாழ்வுக்கான உதவியை இத்தகைய உதவி கோரி, இந்நிலையத்தை அணுகுகின்ற உடலூனமுற்றோருக்கு அளிக்க ஏற்பாடு செய்கின்றன.

3. செங்கல்பட்டில் மாவட்ட மறுவாழ்வு நிலையத்தை நிறுவுதல் :

செங்கல்பட்டில் மாவட்ட மறுவாழ்வு மையம் ஒன்று இயங்கி வருகிறது. இந்நிலையம், திட்டப்பகுதியான காட்டாங்குளத்தூர் திருக்கழுக்குன்றம் ஆகிய இடங்களில் உடலூனமுற்றோருக்காக விரிவான மறுவாழ்வு குறித்தப் பணிகளை மேற்கொள்வதை நோக்கமாக கொண்டுள்ளது. இதிற்திட்டத்திற்கு மத்திய அரசு நிதியுதவி அளிக்கிறது. திட்டப்பகுதியில் குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை மதிப்பீட்டு ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. உடலூனமுற்றோரின் தேவைகள் சண்டறியப்பட்டு தேவையான உதவி அளிக்கப்படுகின்றது.

4. சுயவேலை வாய்ப்பு முயற்சிகளுக்கு உதவி அளித்தல் :

பெரும்பாலான உடலூனமுற்றோர் கிராமப் பகுதிகளிலிருந்து வருகின்றனர். அவர்களில் பலர் கல்வித் தகுதியோ, தொழில் நுட்பத்திறமையோ பெற்றவர்களாக இருப்பதில்லை. அவர்களுக்குத் தகுந்த ஊதியம் கிடைக்கின்ற வேலையில் அவர்களை அமர்த்துவது கடினமாக ஒன்றாக உள்ளது. பெட்டிக் கடைகளை அமைக்கின்ற மற்றும் பொதுத் தொலைபேசியகங்களை அமைக்கின்ற அவற்றில் உடலூனமுற்றோர் தொலைபேசிகளைப் பயன்படுத்துவோரிடமிருந்து கட்டணம் வசூலிப்பர். சுயவேலைவாய்ப்பு முயற்சிகளுக்கு வெவ்வேறு வட்டி விதங்களில் வங்கிக்கடன் வழங்க ஏற்பாடு செய்வது அவர்களுக்கு உதவக்கூடிய ஒரே வழியாகும்.

ஆண்டில் 1820 பேருக்கு சுயவேலைவாய்ப்பு முயற்சிக்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள வேலை வாய்ப்பு கிடைக்காத பார்வையற்றோர்க்கு வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் தொகையை அளித்தல்:

மாநிலத்திலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள பார்வையற்றோருக்கு வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை அளிக்கப்பட்டுள்ளது. சமூக நலத்துறையின் நிதியுதவியுடன் சாதாரண நபர்களுக்கு வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத்தொகை வழங்கும் திட்டத்துடன் இத்திட்டத்தையும் வேலைவாய்ப்பு பயிற்சி இயக்குநர் செயல்படுத்துகிறார். ஒவ்வொரு ஆண்டும் பார்வையற்றோர் 723 பேர் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுகின்றனர்.

பார்வையற்றவரை மணந்து கொண்ட ஊனம் இல்லாதவர்களுக்கு வேலை :

கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதியினருக்கு வழங்குகின்ற சலுகையை பார்வையற்றோரை மணந்து கொண்ட ஊனம் அல்லாதவர்களுக்கும் அரசு நீட்டித்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 20 பேர் இத்திட்டத்தின் கீழ் பயனடைகின்றனர்.

7. தொழிற்பயிற்சி நிறுவனத்தில் ஊனமுற்றோர்க்குப் பயிற்சி :

பொருத்துநர் தொழிலில் காதுகேளாதோருக்கு பயிற்சியளிக்க கிண்டியில் தொழிற்பயிற்சி நிறுவனத்தில் தனி பிரிவு ஒன்று இயங்குகிறது. இதில் 4 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

•

பொருத்துநர் எந்திரவல்லுநர், வரைவாளர் (சுட்டிடம்), குழாய் பொருத்துபவர் ஆகிய தொழில்களில் உடலூனமுற்றோருக்குப் பயிற்சியளிக்க அம்பத்தூர் மற்றும் வட சென்னையிலுள்ள தொழிற்பயிற்சி நிறுவனங்களில் மூன்றாவது முறை மாற்றுப்பணி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த 4 தொழில்களில் 34 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

• •

8. மதுரையில் கை—கால் ஊனமுற்றோருக்கான பள்ளியுடன் இணைக்கப்பட்ட செயற்கை உறுப்புகள் பொருத்தும் துணை நிலையம்:

மதுரையில் முடநீக்கியல் மருத்துவரைத் தலைவராகக் கொண்டு செயற்கை உறுப்புகள் பொருத்தும் துணை நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. இந்நிலையம் மதுரையில் கடுமையான கைகால் ஊனமுற்றோருக்கான பள்ளியில் பயிலுகின்ற 100 மாணவர்களுக்கு இயல்முறை மருத்துவப் பயிற்சிகள் அளித்தல் கருவிகள் மற்றும் சாதனங்களை வழங்குதல் உள்ளிட்ட மருத்துவ உதவியை அளிக்கிறது.

மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள் மற்றும் காதுகேட்க உதவும் கருவிகளும் சாதனங்களும் ஊனமுற்றோரின் ஊனமடைந்துள்ள தன்மையைப் பொறுத்து வழங்கப்படுகின்றன.

மூன்று சக்கர வண்டிகள் :

வறுமையில் வாடும் கால் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. 1989—90 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 15.00 இலட்சம் ரூபாய் செலவில் மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

சக்கர நாற்காலி :

உடம்பின் கீழ்ப்பகுதிப் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்குச் சக்கர நாற்காலிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. 1989—90 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 1 இலட்சம் ரூபாய் செலவில் 100 சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டுள்ளன.

காது கேட்க உதவும் கருவி :

வறுமையில் வாடும் காது கேளாதோருக்கு காது கேட்க உதவும் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. 1989—90 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 20 இலட்சம் ரூபாய் செலவில் 5,243 காது கேட்க உதவும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

உடலூனமுற்றோருக்குப் படிப்பு உதவித்தொகை :

9 ஆம் வகுப்பு மற்றும் அதற்கும் மேல் கல்வியைத் தொடருகின்ற மாணவர்களுக்கும் தொழில் நுட்பத் தொழிற்சாலையில் பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்கும் மத்திய அரசின் திட்டத்தின்கீழ் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது.

1989—90 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 2,000 மாணவர்கள் பயனடைந்தனர். இதற்கான செலவு 19.30 இலட்சம் ரூபாயாகும்.

இது தவிர பாடநூல்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்களை வாங்குவதற்கு 1 முதல் 8 வரை மாணவர்களுக்கு மாநில அரசு படிப்புதவித் தொகை வழங்குகிறது. 1989—90 ஆம் ஆண்டில் இந்தத்திட்டத்தின் கீழ் 10,000 மாணவர்கள் பயன்பெற்றனர். இதற்கான செலவு 8 இலட்சம் ரூபாயாகும்.

உடலூனமுற்ற குழந்தைகளுக்கு இலவச பயணச் சலுகை :

பள்ளிச் செல்லும் உடலூனமுற்ற குழந்தைகளுக்கு அவர்களின் வீட்டிலிருந்து பள்ளிக்குச் செல்வதற்கும் அவர்கள் சிகிச்சை பெறுகின்ற மருத்துவமனைக்குச் செல்வதற்கும் பேருந்து இலவசப் பயண அனுமதிச் சீட்டு வழங்கப்படுகின்றன. 1989—90 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் உடலூனமுற்ற மாணவர்கள் பயன்பெறுகின்றனர். இதற்கான செலவு 5.00 இலட்சம் ரூபாயாகும்.

நவீன பயிற்சி உற்பத்தி பணிக்களரி முட்டுக்காடு :

முட்டுக்காட்டிலுள்ள நவீன பயிற்சி உற்பத்தி பணிக்களரி, இரும்பிலான மேசை நாற்காலிகள் பெட்டிக் கடைகளுக்கான ஸ்டால்கள், மூன்று சக்கர வண்டிகள் போன்ற வற்றை தயாரிக்கின்றன. இந்தப் பணிக்களரியில் சுமார் 77 உடலூனமுற்றவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. 1989–90 ஆம் ஆண்டில் இந்தப் பணிக்களரிக்கு 20.20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

தமிழ்நாடு சமூக நல வாரியம் :

தொண்டு நிறுவனங்கள், தாங்கள் ஏற்கனவே செயற்படுத்தி வரும் பணிகளை மேம்படுத்தவும், விரிவு படுத்தவும், வலுப்படுத்தவும், புதிய பணிகள் முதலியவற்றைத் தொடங்கி சோதனை அடிப்படையில் செயல்படுத்தவும் சமூக நல வாரியம் நிதியுதவியும் தொழில்நுட்ப ஆலோசனையையும் அளித்து வருகிறது. மகளிர், குழந்தைகள், முதியோர் உடலூனமுற்றோர் ஆகியோருக்கான நலப்பணிகளுக்கான இவ்வாரியம் உதவி மானியமும் வழங்கி வருகிறது.

தமிழ்நாடு மாநில சமூக நல வாரியம் ஏனைய வாரியங்களைப் போல் அல்லாமல் தனித்துவம் வாய்ந்த ஓர் அமைப்பாகும். இவ்வாரியம் 1961-ல் சமூக நல இயக்கத்துடன் இணைக்கப்பட்டது. அரசு, வாரியம் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் இடையில் முறையிலான ஒத்துழைப்பும் கருத்துடன்பாடும் நிலவுவதற்கு இது உறு துணையாக அமைகிறது.

தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் திட்டங்கள் பற்றிய விவரங்கள் வருமாறு :

ஆண்டு மானியமும் திட்ட கால மானியமும்:

பாலர் பள்ளிகள், குழந்தைகள் மற்றும் உடலூனமுற்றவர்களுக்கான இல்லங்கள் ஆகியவற்றை நடத்துவதற்காக, 50 சதவீத இணை மானிய அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட தொண்டு நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் மானியங்கள் வழங்கப் படுகின்றன. முதியோர் இல்லங்கள், குடும்ப நல பணிகள், கை வினைப்பொருள்கள் தாயாரிப்புத் திட்டங்கள், மறுவாழ்வுத்திட்டம், குழந்தைகள் நல மருத்துவமனைகள் முதலியவற்றிற்காக ஆண்டு மானியத்திட்டத்தின் கீழ் உயரளவுத் தொகையாக ஒராண்டிற்கு ரூ. 5,000-மும் திட்டக் கால மானியத்திட்டத்தின் கீழ் ஓராண்டிற்கு ரூ. 10,000-மும் வழங்கப்படுகிறது. 1989–90ல் சுமார் 155 நிறுவனங்களுக்கு ஆண்டு மானியத் திட்டத்தின் கீழ் ரூபாய் 2.99 லட்சமும், 33 நிறுவனங்களுக்குத் திட்டக்கால மானியத் திட்டத்தின் கீழ் ரூ. 2.78 லட்சமும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அரசு மானியம் :

தொண்டு நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்க மாநில அரசு 1989–90-ல் ரூ. 5.00 இலட்சம் அனுமதித்துள்ளது. வாரியம், இத்தொகையை முழுமையாக பயன் படுத்தியது. இந்த மானியத்தின் கீழ் 171 நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது.

	திட்டச்சாதனை.		நிதிச்சாதனை.	
	(1)		(2)	
ஆண்டு.	இலக்கு.	சாதனை.	இலக்கு.	சாதனை.
			(ரூபாய் இலட்சத்தில்.)	
1989–90		171	299.99	153.53

தமிழ்நாடு மாநில சமூக நல வாரியத்தில் உள்ள தொண்டுப் பணி பிரிவு 4–5–1984 அன்று தொடங்கப்பட்டது. இந்தப் பணிகளில் வழிகாட்டவும், உதவி புரியவும் சிறந்த சமூக நலப் பணியாளர்கள் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், காவல்துறை, மருத்துவத்துறை, சட்டத்துறை ஆகியவற்றின் வல்லுநர்கள் ஆகியோர் அடங்கிய ஆறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கைவிடப்பட்ட பல இளம்பெண்கள், விதவைகள், வேலை வாய்ப்பு கோரியும், சுயவேலை வாய்ப்புக்குக் கடன் கேட்டும், தையல் எந்திரங்கள் வேண்டியும் தங்கள் பிள்ளைகளை ஆதரவற்றோர் இல்லங்களில் சேர்க்குமாறு கோரியும், சீருடை முதலியவை வேண்டியும் தொண்டுப் பணி பிரிவை அணுகுகின்றனர். தீயில் கருகும் மணப் பெண் பிரச்சினை தென் மாநிலங்களில் குறைவு என்றாலும் பெண்கள் இங்கு பிற வகைகளில் வரதட்சணைக்கொடுமையை எதிர்கொள்கின்றனர்.

தொண்டு நிறுவனங்கள் ஆலோசனை வழங்கி வழி காட்டுவதால் முதலில் இப் பிரச்சினைகளை வெளியில் சொல்ல தயங்கிய பெண்கள் மெதுவாக பெரும் எண்ணிக்கையில் இந்நிறுவனத்தை அணுகி சட்ட உதவியையும், காவல் துறைப் பாதுகாப்பு முதலியவற்றையும் கோருகின்றனர். பின்னர் ஏழை பெண்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க தக்க ஆலோசனை அமைப்புகளின் உதவிப் பெறப்படுகிறது. பெண்களின் சமூக பொருளாதார உளவியல் வளர்ச்சி குறித்து கலந்தாய்வுகள் நடத்தப்படுகின்றன.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்.

அரசின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரப் பணிகளின் செயல்திறனை அதிகரிப்பது, செயல் எல்லைப் பகுதியை விரிவுபடுத்தல். பயன்பாட்டை மேம்படுத்தல் ஆகியன உலக வங்கியின் நிதியுதவிப்பெறும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் நோக்கங்களாகும். ஊட்டச்சத்து இன்மையால் மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினர் மீது அதாவது 6 முதல் 36 மாதம் வரையிலான குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து அளிப்பது பற்றி முறையாக கவனம் செலுத்துவதன் மூலம் இத்திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்படவேண்டும். இத்திட்டம் கரு வளரும் தன்மையை மேம்படுத்துவதுடன் அதிக ஊட்டச்சத்து வேண்டப்படுகிற கருவுற்றத் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், பள்ளி மாணவர்கள் ஆகிய ஏனைய தொகுதியினருக்கு ஊட்டச்சத்து அளிக்கவும் வகை செய்யும் தற்போதைய ஊட்டச்சத்துத் திட்டத்துடன் ஒப்பிடுகையில், இத்திட்டம் இரண்டு புதிய அம்சங்களைக் கொண்டுள்ளது. அவையாவன :—

(1) ஊட்டச்சத்து கண்காணிப்பு முறை ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் திட்டம் செயல் படுத்தப்படுகிறச் மாவட்டங்களை சேர்க்க கிராமப்பகுதிகளில் தகுதிவாய்ந்த அனைத்து குழந்தைகளையும் கண்டறிந்து அவர்களின் உடல்நல முன்னேற்றம் குறித்து முறையாகக் கண்காணித்தல்;

(2) இது குழந்தைகளுக்குத் தேவையான கால அளவுவரை போதிய ஊட்டச்சத்தைத் தொடர்ந்து அளித்தல், இத்திட்டத்தின் கீழ் வருகின்ற குடும்பத்தின் முக்கிய மான உறவினர்களுக்கு, அவர்களின் சக்திக்குட்பட்ட மேம்பட்ட உணவு முறைகள் பற்றி அறிவுறுத்தல்.

திட்டத்தின் செயல்பாடு :

இத்திட்டம் மதுரை, அண்ணா, பசும்பொன் முத்துராமலிங்கம், காமராசர். இராமநாதபுரம், புதுக்கோட்டை, திருநெல்வேலி, வட ஆற்காடு, செங்கற்பட்டு ஆகியவற்றில் 173 வளர்ச்சி வட்டாரங்களில் படிப்படியாக நிறுவப்படுகிறது.

புதுக்கோட்டை,மாவட்டத்தில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத்திட்டம் முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1—5—1986 முதல் திருத்தப்பட்ட வளர்ச்சித் திட்டமாக இயங்கி வருகிறது.

ஊட்டச்சத்து வழங்கும் பணிகளின் கீழ் வருகிற சமுதாய ஊட்டச்சத்துணவு மையம், கிராம அளவில் அனைத்து பணிகளும் நிறைவேற்றப்படுகின்ற முக்கிய மையமாகும். 1,500 பேருக்கு ஒரு மையம் என்ற விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மையமும், சமுதாய ஊட்டச்சத்து பணியாளர் ஒருவரின் பொறுப்பில் செயல்படுகிறது. இந்த வகையில் 9,000 மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. 6 முதல் 36 மாதம் வரையிலான அனைத்துக் குழந்தைகளின் எடையும் பார்க்கப்படுகிறது. ஊட்டச்சத்து குறைவாக உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட குழந்தைகள், கருவுற்றத் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கு ஊட்டச்சத்து அளிக்கப்படுகிறது. தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துப்பற்றி அறிவுறுத்தலோடு ஊட்டச்சத்து உணவும் சேர்த்து அளிக்கப்படுகிறது. தற்போது சத்துணவில் ஒரு பகுதி பெங்களூர், சென்னை, கருநாடக மாநில வேளாண் தானிய உற்பத்திப் பொருட்கள் நிறுவனத்திலிருந்தும் ஒரு பகுதி பெண்கள் பணித் தொகுதிகள் மூலம் உள்ளூரிலும் தயாரிக்கப்படுவதிலிருந்தும் பெறப்படுகிறது.

சமுதாய ஊட்டச்சத்துப் பணியாளர்கள் ஊட்டச்சத்து தொடர்புடைய சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளப்படுகின்றனர். குழந்தைகளுக்கு ஒரு முறை வயிற்றுப் பூச்சிகளை அழிக்கும் மருந்துகளும் அளிக்கப்படுகின்றன. மக்கள் நல்வாழ்த்துறையின் பல நோக்கு சுகாதார பணியாளர்கள் குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போடுகின்றனர்.

மாநில அளவில் பின்பற்றப்பட்ட ஏற்பாட்டின் ஒரு பகுதியாக திட்டப்பகுதிகளில் பல நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் மூலமாக சுகாதாரப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. 5,000 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு சுகாதாரத் துணை மையம் இருக்கும். இதனை பெண் ஒருவரும் பலநோக்கு சுகாதார ஆண் பணியாளர் ஒருவரும் நிர்வகிப்பார்.

சுகாதாரப் பணிக்கூறுகளின் பெரும் பகுதி கட்டிடப் பணிகள் ஆகும். தலைமை பொறியாளர் (நெ.சா.கி.ப.) சுகாதாரத்துறை மையங்களின் கட்டுமானப் பணிகளுக்குப் பொறுப்பு வகிக்கிறார். திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத்திட்டத்தின் கீழ் படிப்படியாக 5 கட்டிடங்களில் 1,600 சுகாதாரத் துணை மையக்கட்டிடங்கள் 1984-86 ஆம் ஆண்டு வரையில் கட்டப்பட்டிருக்க வேண்டும். 1986-87-ல் 4,118 கட்டிடங்கள் கட்டப்பட்டன. 482 கட்டிடங்களில் 480 கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. 2 இனங்களைப் பொறுத்தவரையில் தகராறு காரணமாக பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பணியை மேற்கொள்ள இயலும் வகையில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

நிதி :

1988 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வரையில் இத்திட்டத்திற்காக மொத்தம் ரூ. 105.67 கோடி செலவிடப்பட்டுள்ளது. மொத்தத் தொகையில் கொடுக்கப்பட்டுள்ள 80 சதவீதமாகிய ரூ. 38.44 கோடி இந்திய அரசிடம் 1989 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வரையில் கோரப்பட்டு ஈடுசெய்யப்பட்டுள்ளது.

அத்தியாயம் 29

தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத்துறை

தொல்பொருள் ஆய்வுத்துறை

அகழாய்வுப் பிரிவு :

தொல்பொருள் ஆய்வுத்துறை அகழாய்வுப் பிரிவு தமிழ் நாட்டிலுள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடங்களில் அகழாய்வினை மேற்கொண்டு வருகிறது. தஞ்சை சீனிவாசபுரத்தில் அகழாய்வு செய்வதற்காகக் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பூம்புகார் ஆழ்கடல் அகழாய்வுப் பணி மேற்கொள்வது குறித்து வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கங்கை கொண்ட சோழபுரம் உட்கோட்டைப் பகுதியில் ஆய்வு செய்யப்பெற்றது. வரலாற்றுக்கு முந்தைய கால ஓவியங்கள் திட்டப்பெற்றுள்ள கீழ்வாலை, உடையாநத்தம் ஆகிய பகுதிகள் ஆய்வு செய்யப்பெற்றன. திருச்சி மாவட்டம் கரூர், அகழாய்வு அறிக்கை தயார் செய்யப்பட்டது. அத்துடன் பூண்டி அகழ்வைப்பக கையேடு தயார் செய்யப்பட்டது. இத்துறையின் பல்வேறு பணியினை வீடியோ மூலம் படம்எடுத்து செயலாளர்கள் கூட்டத்தில் காண்பிக்கப்பட்டது.

வரலாற்றுக்கு முற்பட்ட கால அகழாய்வுப் பிரிவு :

நீலகிரி, கோயம்புத்தூர், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் மேற்பரப்பு ஆய்வு செய்யப்பட்டது. கோவை மாவட்டத்தில் இடையார் பாளையம் பகுதியில் சிஸ்ட் பிரியல் வகையைச் சார்ந்த ஈமச் சின்னங்கள் இருப்பதும், அமராவதி அணைக்குச் செல்லும் வழியில் ஒன்பதாறு பகுதியில் கல்திட்டைகள் பெரும் பரப்பளவில் அமைந்துள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டது.

தர்மபுரி மாவட்டத்தில் பாலக்கோடு வட்டத்தில் அமைந்துள்ள திருமல்வாடி பகுதியில் குத்துக்கல் வகையைச் சார்ந்த பெருங்கற்காலச் சின்னம் கண்டுபிடிக்கப்பட்டது. தர்மபுரி மாவட்டத்தில் இப்பகுதியிலே முதன் முறையாக குத்துக்கல் ஈமச் சின்னம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. மேலும், பச்சகாள்புள்ளி (கிருஷ்ணகிரி வட்டம்) பகுதியில் கல்திட்டைகள் பல ஏக்கர் பரப்பளவில் பரவியிருப்பதும். கங்களேரி (கிருஷ்ணகிரி வட்டம்) பகுதியில் கல்பதுக்கைகள் (Dolmens) நான்கு மிக பெரிய அளவில் காணப்படுவதும் கண்டுபிடிக்கப்பட்டது.

தர்மபுரி மாவட்டத்தில் தீர்த்தமலைப்பகுதியில் இரும்புத்தாது, கிடைப்பது கண்டறியப்பட்டது. இம்மலைப் பகுதியைச் சுற்றியமைந்துள்ள இரும்புக் கால மக்கள் வாழ்ந்த பகுதிகளில் இரும்புத் தாதுகள் கிடைக்கப் பெறுவதால் தங்களுக்குத் தேவையான இரும்புத்தாதுவை இங்கிருந்து எடுத்திருக்கக் கூடும் என்பது தெரிய வருகின்றது.

தொல்பொருள் அலுவலர்கள் பிரிவு :

இத்துறையில் மீம் எட்டு தொல்பொருள் அலுவலர்கள் பணியாற்றி வருகின்றார்கள். இவர்கள் தமது ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் 580 ஊர்கள் **ஆய்வு** மேற்கொண்டு 744 தொல்பொருள்கள் சேகரிக்கப்பட்டு இத்துறையின் அகழ்வைப்பகங்களுக்கு அளித்துள்ளனர். தொல்பொருள் அலுவலர்கள் இதுவரை சேகரிக்கப்பட்ட ஓலைச்சுவடிகளில் 1,822 படித்து எழுதப்பட்டுள்ளது. இச்சுவடிகளில் மருத்துவசுவடி, பஞ்சகும்மி, நல்லதங்காள் கதை, பேசாமடந்தை, திங்களூர் நொண்டி நாடகம், மதுரை வீரன், வண்ணிய் ராஜாக்கதை, துறை முப்பது மனை நூல், இராமாயணம், நமசிவயா மாலை, நாயகர் பள்ளு, அம்மானை ஆகிய சுவடிகள் குறிப்பிடத்தக்கவை. தொல்பொருள் அலுவலர்கள் 88 ஆய்வு கட்டுரை களையும் 73 சொற்பொழிவுகளையும் நிகழ்த்தியுள்ளார்கள். அந்தந்த மாவட்டத்தின் வரலாற்று சிறப்புக்களைப் பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டு வருகிறது. இது மட்டுமல்லாமல் ஆண்டுதோறும் நம் துறையால் நடத்தப்படுகின்ற கோடைக்காலக் கல்வெட்டுப் பயிற்சியில் பங்கு கொண்டு பயிற்சி பெறும் மாணவர்களுக்கு இவர்களால் வகுப்புகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இரசாயனப் பிரிவு :

மதுரை, குற்றாலம், ஆற்காடு, இராமநாதபுரம், சிதம்பரம், தருமபுரி, கரூர், தஞ்சை ஆகிய இடங்களில் இருந்து பெறப்பட்ட 537 செப்புக் காசுகள் இராசயன முறையில் சுத்தம் செய்யப்பட்டு பாதுகாப்புப் பூச்சிடப்பட்டது. இது தவிர 65 பானை ஓடுகள் இரசாயன முறையில் சுத்தம் செய்யப்பட்டு பூச்சிடப்பட்டது. போலுவரம்பட்டி அகழாய்வில் இருந்து பெறப்பட்ட இரும்பாலான 20 தொல்பொருள்கள் இராசயன முறையில் சுத்தம் செய்யப்பட்டு பாதுகாப்புப் பூச்சிடப்பட்டது. அகழாய்வில்இருந்து டைக்கப்பெற்ற 22 கனை உருவங்கள் காகிதக் கூழ் முறையைக் கையாண்டு சுத்தம் செய்யப்பட்டது. பாதுகாப்புப் பூச்சிடப்பட்டது. பெரியார் மாவட்டம் பாரியூரில் கோயிலில் கண்டெடுக்கப்பட்ட 10 செப்பு திருமேனிகள் இரசாயன முறையில் சுத்தம் செய்யப்பட்டு பாதுகாப்பு பூச்சிடப்பட்டது. இத்துடன் கோடைக்கால கல்வெட்டுப் பயிற்சி மாணவர்களுக்கு இரசாயன முறை சம்பந்தமான வகுப்புகள் நடத்தப்பெற்றன.

நிழற் படப் பிரிவு :

கரூர், கொற்கை, கங்கைகொண்ட சோழபுரம், அழகன் குளம், வசவ சமுத்திரம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பெற்று அகழாய்வுப் பொருள்கள் நிழற் படம் எடுக்கப்பட்டன, இது தவிர அத்துறையால் கண்டுபிடிக்கப்பட்ட அரும் பொருள்களுக்கும் நிழற்பட பிரதிகள் எடுக்கப்பட்டன, செங்கம், ஓவியங்கள், குறிஞ்சிப்பாடி, காசு திருவலம், கல்தொட்டி, தருமபுரி தங்கக்காசு ஆகியவைகளுக்கும் நிழற்படங்கள் எடுக்கப்பட்டன, இது தவிர விற்பனை செய்யப்பட்டன, தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு கோவில்களிலுள்ள செப்புத் திருமேனிகள், சிற்பங்கள், ஓவியங்கள், ஆகியவைகளுக்கும் புகைப்படம் எடுக்கப்பெற்று விற்பனைக்கு அனுப்பட்டன. தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு, காசுகள், சுடுமண் பொம்மை, சிற்பங்கள், ஆகியவை நிழற்படம் எடுக்கப்பட்டன. இவ்வாண்டு ரூ. 2,491–க்கு நிழற்படம் பிரதிகள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டது, 740 நிழற்படங்கள் எடுக்கப்பட்டுள்ளது. 2,150 நிழற்பட பிரதிகள் எடுக்கப்பட்டன. இதற்கு 88 கருள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. 5 நிழற்பட்த தொகுப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

நூச்சுப் பிரிவு :

இவ்வாண்டு தமிழக வரலாற்று இன்னங்கள் 1,000 பிரதிகள். சித்திரை விழா குறிப்பு நூல் 3,000 பிரதிகள். கல்வெட்டு காலாண்டு இதழ்கள் 22 மற்றும் 23,24 ஆகியவைகளுக்கு 500 பிரதிகள், ஆர்க்காடும் அகழ்வைப்பகமும் என்ற நூலுக்கு 100 பிரதிகள், கண்டி மன்னர் கல்லறை பற்றிய நூல் இராமாயண ஓவியக் குறிப்புகள் 1,000 பிரதிகள் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன, இது தவிர துறை பொறுப்பிலுள்ள திருமலை நாயக்கர் அரண்மனை இராமலிங்க விலாசம், தரங்கம்பாடி அகழ்வைப்பகம் ஆகிய அகழ்வைப்பகங்களுக்கு நுழைவுச் சீட்டுகள் அச்சடிக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டது, இது தவிர, இத்துறை நூலகத்தைச் சார்ந்த புத்தகங்கள் பைண்டிங் செய்யப்பட்டன,

நூலகப் பிரிவு :

இவ்வாண்டு புதிதாக 171 புத்தகங்கள் விலைக்கு வாங்கப்பட்டன. தொல்பொருள் ஆய்வுத்துறை நூலகத்திற்குப் பல்வகை ஆய்வாளர்களும், டாக்டர் பட்டம் பெறுவதற்கு ஆய்வு செய்யும் மாணவர்களும் வந்து இந் நூலகத்தைப் பயன்படுத்தி உள்ளனர்.

கல்வெட்டுப் பிரிவு :

இத்துறையின் கீழ் பணிபுரியும் கல்வெட்டாய்வாளர்கள் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு மாவட்டங்களில் ஊராய்வுப் பணியினை மேற்கொண்டு கல்வெட்டுகளைப் படியெடுத்து வருகின்றார்கள், இந்த ஆண்டு 144 ஊர்கள் ஆய்வு செய்யப் பெற்றன. 89 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு மொத்தம் 744 கல்வெட்டுகள் படிக்கப் பெற்றன, இது தவிர ஓலைச்சுவடிகளில் 186 பாடல்கள் படிக்கப்பெற்றன, அத்துடன் செங்கை, தஞ்சை மாவட்ட வரலாற்றுக் கையேடு தயாரிப்பது தொடர்பாக ஏழு ஊர்களுக்கு வரலாறு எழுதப்பெற்றுள்ளன, கல்வெட்டு தயாரிப்பது குறித்த பணியும் மேற்கொள்ளப்பட்டது,

பாதுகாப்புப் பிரிவு :

மதுரை, திருமலை நாயக்கர் அரண்மனை தஞ்சை அரண்மனைக் கட்டிடங்கள், தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை, இராமநாதபுரம் இராமலிங்க விலாசம் இன்னும் பல கோயில்கள் போன்று முக்கிய சின்னங்கள் இத்துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்றன, வேலூர் சிங்கள மன்னர் கல்லறை பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டது, திருமலை நாயக்கர் அரண்மனைப் பகுதிகள் தேசிய தொண்டு அமைப்பு மாணவர்களைக் கொண்டு துப்புரவு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது, கழுகு கோட்டை, டச்சுக் கல்லறை, திருப்பருத்திக்குன்றம், திருவோக்ய நாதசுவாமி கோயில் ஆகியவை ஆய்வு செய்யப்பெற்று பராமரித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நினைவுச் சின்னங்கள் பராமரிப்பு குறித்த மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டன, தென்னாற்காடு மாவட்டம் விழுப்புரம் திருவாமாத்தூர், கோலியனூர், ஆலம்பாடி, திருக்கோவிலூர், கீழ்வாலை, எண்ணாயிரம், உலகாபுரம் ஆகிய சின்னங்கள் ஆய்வு செய்யப்பெற்றன,

அகழ்வைப்பகப் பிரிவு :

இத்துறையின் கீழ் தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் 14 அகழ்வைப் பகங்கள் இயங்கி வருகின்றன, இவ்வகழ்வைப்பகங்கள் இராமேச்சுரம், கரூர், பூண்டி, மதுரை, தரங்கம்பாடி, மரபாட்டியர், தஞ்சை அரண்மனை, தஞ்சை இராசராசன் அகழ்வைப்பகம், இராமநாதபுரம் அகழ்வைப்பகம் (இராமலிங்க விலாசம்), கங்கை கொண்டசோழபுரம், ஆர்க்காடு, குற்றாலம், கொற்கை, தர்மபுரி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன,

இராமேச்சுவரம் :

இராமேச்சுவரம் பகுதியில் தொல்பொருள்கள் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வாலாந்தரவை என்ற இடத்திலிருந்து காசுகள் சேகரிக்கப்பட்டன, தங்கச்சி மடம் என்ற பகுதியில் தொல்பொருள் சேகரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பகுதியிலிருந்து மூன்று தொல்பொருட்கள் சேகரிக்கப்பட்டன. அத்துடன் இராமேசுவரம் பற்றிய ஆய்வு நூல் எழுதுவதற்கு வேண்டிய குறிப்புகள் சேகரிக்கப்பட்டன. அத்துடன் ஆய்வுக் கட்டுரைகள் எழுதுவதற்கு வேண்டிய குறிப்புகள் சேகரிக்கப்பட்டன. அத்துடன் ஆய்வுக் கட்டுரைகள் எழுதுவதற்கு வேண்டிய குறிப்புகளும் சேகரிக்கப் பட்டன.

கரூர் :

அரவக்குறிச்சி முகாம் மேற்கொண்டு அழகிய சுடுமண் பொம்மை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. ரமாடக்கா கோவிலூர் ஆகிய ஊர்களுக்கு முகாம் மேற் கொள்ளப்பட்டுள்ளது. இத்துடன் கொங்கு நாட்டுத் தொல்லியல் சம்பந்தமாகச் செய்திகள் சேகரிக்கப்பட்டன. இத்துடன் ஆய்வு கட்டுரைகள் எழுதுவதற்கு குறிப்புகள் சேகரிக்கப்பட்டன. வெட்டமங்கலம் ஊராய்வு மேற்கொள்ளப்பட்டது.

பூண்டி :

இவ்வகழ்வைப்பகத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பொருள்கள் அத்திரம் பாக்கம், குடியம், நம்பாக்கம் போன்ற பகுதிகளிலிருந்து சேகரிக்கப்பட்டக் கற்காலக் கருவிகள் காட்சிக்கு வைக்கப்பட்டன. தொல் பழங்காலமான விலங் கினங்கள் பற்றிய குறிப்புகள் சேகரிக்கப்பட்டன, தொல் பழங்கால வரலாறு மற்றும் பொன்னூர் சிற்பங்கள் திருக்காரிக்கரை ஆகியவை பற்றிய கட்டுரை எழுதப்பட்டது.

மதுரை :

இப்பகுதியிலிருந்து கல்தாளியக் காசுகள் 3 சேகரிக்கப்பட்டன. இத்துடன் நாயக்கர். சோழர் பிற்காலப் பாண்டியர் காலத்தைச் சார்ந்த பதினெட்டுக் காசுகள் கல்லூரி மாணவர் இடமிருந்து அகழ்வைப்பகத்திற்காகப் பெறப்பட்டது. வண்டியூரி லிருந்து நாயக்கர் காலக் காசுகள் பெறப்பட்டன,

திருமலையில் பிராமி கல்வெட்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

பூலாங்குறிச்சியிலிருந்து சுடுமண் உருவம் ஒன்று கண்டறியப்பட்டது.

தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை அகழ்வைப்பகம் :

தொல்பொருள் சேகரிப்பது குறித்து ஆங்கூர், கடல் ஆகிய ஊர்களுக்கு முகாம் மேற்கொள்ளப்பட்டு மூன்று தொல்பொருள்கள் சேகரிக்கப்பட்டன. ஆக்கூர், மயிலாடுதுறை. இல்லையாடி; பகுதியில் முகாம் மேற்கொண்டு இரண்டு காசுகள் சேகரிக்கப்பட்டன, கிடங்கில் நத்தம். ஆகிய ஊர்களிலிருந்து இரண்டு டச்சுக் காசுகள் சேகரிக்கப்பட்டன, முத்திரைக் காசு ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. இது தவிர பொறையாறு கல்லூரி மாணவர்களுக்கு சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தப் பட்டது.

மராட்டியர் அரண்மனை அகழ்ளைப்பகம் (தஞ்சாவூர்):

இவ்வகழ்வைப்பகத்திற்கு நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட பேனா ஒன்று சேகரிக்கப்பட்டது. திருமுல்லைவாசலில் இருந்து கல்வெட்டு ஒன்று காட்சியகத்திற்கு கொண்டு வந்து வைக்கப்பட்டது. பனையூர். சுடுவெளி ஆகிய ஊர்களுக்கு முகாம் மேற்கொள்ளப்பட்டது. மராட்டியர் அரண்மனை குறித்து துணை மடல் ஒன்று எழுதப்பட்டது.

இராமநாதபுரம் அகழ்வைப்பகம் :

இவ்வகழ்வைப்பகத்திற்காக நாயக்கர் காலக் காசுகள் சேகரிக்கப்பட்டன. இத்துடன் ஆய்வுக் கட்டுரை எழுதும் பணி மேற்கொள்ளப்பட்டது, மாணவர் களுக்குச் சிறப்பு சொற்பொழிவுகள் நடத்தப்பட்டது.

(தஞ்சை) இராசராசன் அரண்மனை :

செக்கமேடு சீவிவாசபுரம். வல்லம் ஆகிய இடங்களுக்குச் சென்று கன ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தொல்பொருள் சேகரிக்கப்பட்டன.

கங்கை கொண்ட சோழபுரம் :

அகழ்வைப்பகத்தில் காட்சிக்கு வைப்பதற்காகக் கதை உருவங்கள், விநாயகர் சிற்பம், சடுமண் மூடி ஆகியவை சேகரிக்கப்பட்டன, அரியலூரில் இருந்து கல்லாலி விட்ட நத்தை (Fossils) சேகரிக்கப்பட்டது, இத்துடன் கல்லூரி மாணவர் களுக்குத் தொல்லியல் பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டது.

ஆர்க்காடு

''வரலாற்றில் ஆர்க்காடு'' என்னும் தலைப்பில் துணைமடல் தயாரிக்கப்பட்டது. இத்துடன் நவாப் காலத்தில் கோட்டைகள் பற்றிய குறிப்புகள் எழுதப்பட்டன. அகழ்வைப்பகத்திற்காக உரோமானியப் பானை ஓடுகளும், சோழர் காலக் கூரை ஓடுகளும், மூன்று கற்சிலைகளும் சேகரிக்கப்பட்டன. இத்துடன் சோழவரம் என்ற பகுதியிலிருந்து கலைப் பொருள்கள் சேகரிக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டன; ஆய்வுக் கட்டுரை எழுதப்பட்டன,

குற்றாலம் :

இவ்வகழ்வைப்பகத்திற்காக 16 தொல்பொருள்கள் சேகரிக்கப்பட்டன, ஆய்வுக் கட்டுரை எழுதப்பெற்றது, சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது,

சேற்கை :

திப்பாச்சி என்ற ஊரிலிருந்து தாழிகள் கொண்டு வரப்பட்டன, தொல் பொருள்கள் சேகரிக்கப்பட்டன. அகழ்வைப்பகத்திற்கு வரும் பார்வையாளர் களுக்கு விளக்கக் குறிப்புகள் அளிக்கப்பட்டன,

கோவை :

அகழ்வைப்பகத்திற்கு வேண்டிய உதிரி சிற்பம் சேகரிக்கும் பணி மேற்கொள்ளப் பட்டது. வல்லாளன் கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. பேரூர் பகுதியில் சிற்பங்கள் ஆய்வு செய்யப்பெற்றன. திருவாட்சி செப்பேடு படிக்கப்பெற்றது, இத்துடன் ஊர்ச் சாவடியில் உள்ள ஓவியங்கள் ஆய்வு செய்யப்பெற்றன. இத் துடன் ஆய்வு கட்டுரை எழுதப்பெற்றது,

தர்மபுரி :

தொல்லியல் வழிகாட்டி நூலுக்கு கட்டுரை எழுதும் பணி மேற்கொள்ளப் பட்டது. மோனூர் கோயிலூர் திருகம். கோட்டூர். ஆகிய ஊர்கள் ஆய்வு செய்யப்பெற்றன. தீர்த்த மலையில் சிறப்புக் கண்காட்சி ஒன்று ஏலக்க ஏற்பாடு செய்யப்பெற்றன. இத்துடன் ஆய்வுக் கட்டுரைகளும் எழுதப்பெற்றன.

திங்கள் ஆய்வுப்பொழிவு :

திங்கள் தோறும் தொல்லியல் துறை வல்லுநர்களை அழைத்து ஆய்வுப் பொழிவு நடத்தப்படுகிறது,

தொல்லியல்துறை ஆலோசனைக் குழு :

இத்துறைக்கென ஆலோசனைக் குழு ஒன்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை தலைமையாகக் கொண்டு அமைக்கப்பட்டு முதற்கூட்டம் 1989 ஜூன் திங்கள் முதல் நாள் நடத்தப்பெற்றது,

துறையின் செயற்பாடு குறித்த வீடியோ படம் :

இத்துறையின் செயற்பாடு விளக்க வீடியோ படம் தயாரிக்கப்பட்டு அரசு தலைமைச் செயலாளர் அவர்களுக்கும் ஏனைய துறைச் செயலாளர்களுக்கும் காண்பிக்கப்பட்டது,

பழம்பொருள் பதிவுப் பிரிவு :

இத்துறையின் கீழ் சென்னை. சிதம்பரம். திருச்சி. திருநெல்வேலி ஆகிய இடங் களை தலைமை இடங்களாகக் கொண்டு நான்கு பிரிவு அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள். பதிவு அலுவலர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட கோயில்கள் மற்றும் தனியாரிடமிருந்து நூறு ஆண்டுகளுக்கு மூற்பட்ட தொல்பொருள்களை பதிவு செய்து வருகின்றனர். இந்த ஆண்டு பதிவுப் பணி சம்பந்தமாக 563 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இதோடு 719 தொல்பொருள்கள் பதிவு செய்யப் பெற்று சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

அரசு அருங்காட்சியகம்.

அரசு அருங்காட்சியகம், உதகமண்டலம், 12–9–1989 அன்று துவக்கி வைக்கப் பட்டது.

அரசு அருங்காட்சியகம் கடலூரில் துவக்கி வைக்கப்பட்டது.

அரசு அருங்காட்சியகம் கோயம்புத்தூர் 21–2–1990 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

கலீவிப் பிரிவு.

பதினைந்து பள்ளி மாணவர்களுக்கு இவ்வருங்காட்சியகத்தை விளக்கங்களுடன் சுற்றிக் காண்பித்து படக்காட்சிகள் காண்பிக்கப்பட்டது. ஏழு பள்ளிகளுக்கு இவ்வருங் காட்சியகப் பொருட்களை அவர்கள் பள்ளி கண்காட்சிக்காக கடனாக அளிக்கப்பட்டன. ஒவ்வொரு சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மணி 3 முதல் 4 வரை இலவசப் படக்காட்சிகள் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

தொல்பொருள் பிரிவு.

புதைப் பொருட்களாக :

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், கீழாத்தூர் கிராமத்திலிருந்து மன்று பீடங்கள், சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம், நல்லூர் கிராமத்திலிருந்து சிதைந்து நிற்கும் விஷ்ணு சிலை ஒன்று, தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், ஜாம்புவனோடை கிராமத்திலிருந்து ஒரு முக்காலி மற்றும் படிமச் சிதைவுகள் சில; தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், உதயமார்த்தாண்டபுரம் கிராமத்திலிருந்து ஒரு சோமஸ்கந்தர் படிமம், செங்கை-அண்ணா மாவட்டம், திருப் பெரும்புதூர் வட்டம், பாக்கம் கிராமத்திலிருந்து ஒரு முக்காலி; இராமநாதபுரம் மாவட்டம், முதுகளத்தூர் வட்டம், மேலக்கிடாரம் கிராமத்திலிருந்து மூன்று கலைப் பொருட்கள்—ஒரு தவமும் கிருஷ்ணன், ஒரு உடைந்த ஸ்டேண்டு மற்றும் ஒரு சலங்கைக் கூடு; தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம், நந்தவனம்பட்டி கிராமத்திலிருந்து ஏழு கலைப் பொருட்கள் ஒரு தேவி, ஒரு விஷ்ணு, ஒரு பாம்புச் சுருள் தட்டு, உத்தரணி எடப்பாளையம் கிராமத்திலிருந்து பதினொன்று கலைப் பொருட்கள் இரண்டு தவமும் கிருஷ்ணர்கள், ஒரு தேவி, ஒரு கிண்டி, ஒரு அபிஷேகத் தொட்டி ஒரு முக்காலி இரண்டு பாத்திரங்கள், ஒரு தூபக்கால், இரண்டு வங்கிகள், தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், பவுண்டரீகபுரம் கிராமத்திலிருந்து நான்கு கலைப் பொருட்கள் —திருஞானசம்பந்தர், கணேசர், பைரவர் மற்றும் ஒரு கிண்ணம்; தஞ்சாவூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம் மற்றும் கிராமத்திலிருந்து நான்கு படிமங்கள்—ஒரு நடராஜர் மற்றும் மூன்று தேவிகள், தென்னார்க்காடு மாவட்டம், காட்டுமன்னார் கோயில் வட்டம், எல்லோரி கிராமத்திலிருந்து ஆறு படிமங்கள் ஒரு கணேசர், ஒரு அமர்ந்திருக்கும் தேவி, ஒரு நிற்கும் தேவி, ஒரு அமர்ந்திருக்கும் காளி மற்றும் ஒரு அமர்ந்திருக்கும் சிவன்.

காயிதே மில்லத் திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், வேடசந்தூர் கிராமத்திலிருந்து ஒரு அமர்ந்திருக்கும் காளி; ஒரு பெரிய முக்காலி, ஒரு சிறிய முக்காலி, ஒரு தண்ணீர் பாத்திரத்தின் உடைந்த ஐந்து பாகங்கள், ஒரு ஸ்தூபி, ஒரு விளக்கு யாளி (யானை) தாங்கியுடன் கூடியது. கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரத்திலிருந்து ஒரு தொங்கும் விளக்கின் மேல் பகுதி மட்டும்; வட ஆற்காடு மாவட்டம், ஆரணி வட்டம், கண்ணமங்கலம் கிராமத்திலிருந்து லிங்க வடிவமுள்ள சதுரத்தகடு, சந்திரம் பொறிக்கப்பட்ட ஈயத்தகடு, இயந்திர எழுத்துக்களை உடைய செப்புத் தாம்பாளம் ஒன்று, வட்ட வடிவ பீடத்தில் நின்ற நிலையிலுள்ள சிவன் ஒன்று, திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், விரகனூர் கிராமத்திலிருந்து 15 கலைப் பொருட்கள் விஷ்ணு, தேவி, வேணுகோபாலர், ருக்மிணி, சத்யபாமா, காளிய கிருஷ்ணர், பால கிருஷ்ணர், ஸ்ரீநிவாசர், ஸ்ரீதேவி, பூதேவி மற்றும் பூஜைப் பொருட்கள்; வட ஆற்காடு மாவட்டம், வந்தவாசி வட்டம், சளுக்கை கிராமத்திலிருந்து பன்னிரெண்டு கலைப் பொருட்கள்—இரண்டு தீர்த்தங்கரர்கள், ஒரு மகாவீரர், ஒரு பார்ஸ்வநாதர், இரண்டு தேவிகள், இரண்டு சாமரம் வீசுபவர்கள், ஒரு முக்குடை, ஒரு பீரபாவளி, ஒரு அலங்கரிக்கப்பட்ட முதுகு தாங்கி ஆகியவை; தஞ்சாவூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டம், வடபாதி மங்கலம் கிராமத்திலிருந்து மூன்று தேவி கற்சிலைகள்.

பறிமுதல் மூலமாக :

தஞ்சை மாவட்டம்; சீர்காழி வட்டத்திலிருந்து உரிமை கோரப்படாத ஒரு குதிரை சிற்பம், வலங்கைமான் வட்டாட்சியரிடமிருந்து ஒரு திருஞானசம்பந்தர் சிலை; சென்னை ஜார்ஜ் டவுன் ஏழாவது மாநகர மாஜிஸ்ட்ரேட் மன்றத்திலிருந்து ஒரு சிதைந்த

தேவி சிலை; இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் நடுவர் நீதிமன்றத்திலிருந்து நான்கு கலைப் பொருட்கள் ஒரு யசோதா கிருஷ்ணன், ஒரு பீடம், ஒரு முக்தாலி மற்றும் இதர பொருட்கள், தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், மேல் மருதாந்தநல்லூர் கிராமத்திலிருந்து ஜியேஷ்டா கற்சிலை ஒன்று பெறப்பட்டன.

பேராசிரியர் டி. பாலகிருஷ்ணன் நாயர் அவர்களின் நினைவு சொற்பொழிவு (1988) திரு. கே. ஜி. கிருஷ்ணன் (ஓய்வு பெற்ற தலைமை கல்வெட்டுத்துறை, கண் காணிப்பாளர், மைசூர்) அவர்களால் நவம்பர் திங்களில் 6 மற்றும் 7 ஆகிய நாட்களில் அளிக்கப்பட்டது. திரு. அத்து மூலர், தெர்மானிய நாட்டு உதவி தூதுவருக்கு படிமங் களைப்பற்றி விளக்கங்கள் அளிக்கப்பட்டது. ஆஸ்திரேலிய நாட்டின் தூதுவருக்கு படிமங்களின் விவரங்கள் 7–11–1989 அன்று அளிக்கப்பட்டது.

மைசூரில் பிப்ரவரி 1990-ல் நடந்த அனைத்திந்திய கல்வெட்டியல் வருடாந்திரக் கருத்தரங்கில் ''காப்பாட்சியர் கலந்து கொண்டு Sel ct terms in Sanskrit, Tamil, Telugu and Kannada Inscriptions என்ற தலைப்பிலும், கோவாவில் 1–3–1990-ல் நடைபெற்ற அனைத்திந்திய கல்வெட்டியல் வருடாந்திரக் கருத்தரங்கில் காப்பாட்சியர் பங்குகொண்டு '' Some proper names and place names in the Inscription in and arcund Kaverpcoan Kaniapakkam என்ற தலைப்பில் கட்டுரை வாசித்தார்.

12–2–1990 அன்று திரு. கிரிஸ்லெட்கர் என்கிற பி.பி.சி. உதவித் தயாரிப்பாள ருக்கு படிமக்கூடத்தில் அர்த்தநாரீஸ்வரர் படிமமும், நடராசர் (கண் கொடுத்த வனிதம்) படிமமும் ஒளிப்படம் பிடிக்க வசதிகள் செய்து தரப்பட்டது. 26, 27 மற்றும் 28–3–1990 ஆகிய நாட்களில் ரோம் நாட்டைச் சேர்ந்த பாள்-ஜெனித் நிறுவனத்திற்கு கூடங்களில் ஒளிப்படம் பிடிக்க வசதிகள் செய்து தரப்பட்டது.

மானிடவியல் பிரிவு.

இராமன், சீதை, இராட்சதன், கட்டியங்காரன் ஆகிய தெருக்கூத்துப் பாத்திரங் களின் உடைகள், அணிகலன்கள் உட்பட பதினாறு கிராமிய கலைப் பொருட்கள், வேலூரைச் சேர்ந்த திரு. வி. கண்ணபிரான் அவர்களிடம் இருந்து விலைக்கு வாங்கப் பட்டன. மதுரை 18-ல் இருந்து ஒரு தீச்சட்டி காப்பாட்சியரால் விலைக்கு வாங்கப் பட்டது. கருப்சாமி (16 செ.மீ.), வீரபத்திரன் (17.5 செ.மீ.), மதுரை வீரன் (17 செ.மீ.) ஆகிய மூன்று பித்தளைச் சிலைகள் புதையல் மூலம் திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம், அரியலூர் தெற்குக் கிராமத்திலிருந்து பெறப்பட்டன. உலோகத் திலான அம்மன் உருவக் கவசம் (187 கிராம்) புதையல் மூலம் ஊனையூர் கிராமம், திருமயம் வட்டம், புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து பெறப்பட்டன. மாநில அரசி னால் கைப்பற்றப்பட்ட (Confiscated) மதுரை வீரன் உட்பட ஆறு கிராமியச் சிறிய உலோகச் சிலைகள், இரண்டாம் மெட்ரோபாலிட்டன் மாஜிஸ்ட்ரேட், சென்னை எழும்பூர் அவர்களிடமிருந்து பெறப்பட்டன. முனியப்பன் கிராமியச் சிறிய உருவச் சிலை புதையல் மூலம் சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், சங்ககிரி கிராமத்தி லிருந்து பெறப்பட்டது. காடர் பழங்குடியினரின் 14 அரும் பொருட்களும், புலையர் மற்றும் மலசர் பழங்குடியினரின் அரும் பொருட்களும் காப்பாட்சியரின் ஆனமலைப் (தேசாவை) பயணத்தின் பயனாய் பெறப்பட்டன.

ஆறடி நீளமுள்ள பழைய பீரங்கி ஒன்று (புதையலில் கிடைத்தது) சென்னை மாநகராட்சி இராயபுரம் உதவிப் பொறியாளரிடமிருந்து பெறப்பட்டது.

காலஞ்சென்ற திரு. எஸ். பரமசிவம் வெகுமதியாக வழங்கிய பல வரலாற்றுத் தலங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட 33 வண்ணப் பானை ஓடுகள் இப்பிரிவுக்காகப் பெறப்பட்டன.

தங்கப்பொட்டு, குண்டுமணி, காது வளையம், மோதிரம், பித்தளைக் குமிழ் உள்ளிட்ட எட்டுப் புதையல் நகைகள், திருச்சி மாவட்டம், உடையார் பாளையம் வட்டம், திருக்களப்பூர் கிராமத்திலிருந்தும், உருக்கப்பட்ட பொன் துண்டுகள், காதணிகள் உட்பட நான்கு புதையல் நகைகள், பெரியார் மாவட்டம், சத்திய மங்கலம் வட்டம், இக்கலூர் கிராமத்திலிருந்தும், உடைந்த தங்க ஒட்டியாணம், திருமாங்கல்யம், உலோகக் கிண்ணம் உட்பட மூன்று புதையல் நகைகள் தென்னாற் காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம், சேந்தமங்கலம் கிராமத்திலிருந்தும், தங்க அருணாக்கொடி, காதணி, சங்கிலித் துண்டுகள், கம்பீகள் மற்றும் வெள்ளி மிஞ்சி, காப்புத் துண்டுகள் ஆகிய இருப்பத்தி நான்கு புதையல் நகைகள் அண்ணா மாவட்டம், திண்டுக்கல் வட்டம், மேற்கோட்டை கிராமத்திலிருந்தும்; மட்டத்தங்க உட்கழுத்துச் சரடு மற்றும் மட்ட வெள்ளி மொட்டுகள் ஆகிய புதையல் நகைகள் தஞ்சாவூர் மாவட் டம், திருவாரூர் வட்டம், வெங்கிடங்கால் கிராமத்திலிருந்தும், தங்க மோதிரம், மூக்குத்தி, தங்கத் தகடு, ஊதாக்கல், மணிக்குண்டுகள் ஆகிய பதினாறு புதையல் நகைகள் இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் வட்டம், வண்ணாங் குண்டு கிராமத்திலிருந்தும்; வெள்ளிக்காப்புகள், மிஞ்சி, கைத்தண்டை ஆகிய இருபத் தைந்து புதையல் நகைகள் மதுரை மாவட்டம், பெரியகுளம் வட்டம், ரெங்கராம்பட்டி கிராமத்திலிருந்தும்; வெள்ளி உலோகத் துண்டுகள், தாலிக்குண்டுகள், உடைந்த சிறுமண் கலயம் ஆகிய புதையல் பொருட்கள் திருச்சி மாவட்டம், முசிறி வட்டம்,

வாழவந்தி கிராமத்திலிருந்தும்; ஒரு தங்கக் காது வளையம், அண்ணா மாவட்டம், திண்டுக்கல் வட்டம், டி. பஞ்சம்பட்டி கிராமத்திலிருந்தும்; பொன் குண்டுகள் தங்கத் தகடுகள் ஆகிய இருபத்து நான்கு புதையல் நகைகள், திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம், கண்டிராதித்தம் கிராமத்திலிருந்தும்; தங்க மோதிரம், காசோலை, பொன் குண்டுகள் ஆகிய நான்கு புதையல் நகைகள் மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், பாலக்கோம்பை கிராமத்திலிருந்தும்; தங்கச் சரடுகள் தங்கக் காசுகள், சரடு மோப்பு, கொலுசு, காற்சங்கிலி, சங்கிலி, கைவளையல் பலவிதச் சிறிய வெள்ளை மற்றும் நீலக் கற்கள் ஆகிய இருநூற்று எழுபத்தைந்து புதையல் நகைகள், வடாற்காடு மாவட்டம், வாணியம்பாடி வட்டம், ஆம்பூரிலிருந்தும் பெறப்பட்டன.

உடற்கூறு மானிடவியல் கூடம் மீண்டும் அமைக்கப்பட்டு 25—5—1989 முதல் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட்டது. ஜெர்மானியப் போர்க் கப்பல் எம்டன் சென்னை நகரைத் தாக்கிய 75ஆம் ஆண்டு நினைவை ஒட்டி நான்கு காட்சிப் பொருட்கள் ஒளிப்படங்களும் ஆயுதக் கூடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டன.

தாவரவியற் பகுதி.

31 வண்ண ஓவியங்கள் வகைபாட்டுத் தாவரக் கூடத்திற்காக வரையப்பட்டன. 20 கடற்கணைகள் திரு. டி. ஐ. விக்டர் அவர்களால் பாம்பன் பகுதியில் இருந்து சேகரிக்கப்பட்டு, தாவர இயற் பகுதியில் சேர்க்கப்பட்டது.

38 பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட மரச்சாதனங்களில் வண்ண ஓவியங்களும் மற்றும் உயர்ந்த செடிகொடிகளும் பார்வைக்கு வைக்கப்பட்டது. மேலும், அட்டையில் வெட்டப்பட்ட எழுத்துக்கள் முதல் காட்சிப் பெட்டியில் பொருத்தப்பட்டது.

சிறுவர் அருங்காட்சியகம்.

இமாச்சல் பிரதேச மாநில ஆடை அணிந்த ஒரு ஜோடி (ஆண், பெண்) பொம்மைகளும், அசாம் மாநில ஆடை அணிந்த ஒரு ஜோடி (ஆண், பெண்) பொம்மைகளும், வாங்கப்பட்டு சேகரிக்கப்பட்டது. சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் இருந்து நன்கொடையாகப் பெறப்பட்ட, ''சென்னை மெரினா கடற்கரையை அழகுபடுத்துதல்'' தொடர்பான ஒரு ஓவியமும், மேற்கு ஜெர்மனி (F.R.G.) அன்பளிப்பாக அளித்த ஒரு இயங்கும் நீராவி என்ஜின் மாதிரியும் சேமிப்பில் சேர்க்கப்பட்டன. அறிவியல் காட்சிக் கூடத்தில் ஒரு ''மின் அணு ஆர்மோனியம்'' காட்சிக்கு வைக்கப்பட்டது. ''மெரினா கடற்கரையை அழகுபடுத்துதல்'' தொடர்பான ஓவியம் காட்சிக்கூடத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டது. ஒரு இயங்கும் எரிமலையின் மாதிரி தயாரிக்கப்பட்டது. கூடத்தில் உள்ள செயற்கை கோளுக்கு ஒரு அணைந்து எரியும் LEAD பொருத்தப்பட்டு இயங்குமாறு அமைக்கப்பட்டது. (F.R.G.) இரயில் மாதிரியில் சின்னலுக்கான சிவப்பு பச்சை விளக்குகள் மின்னணு முறையில் தானாகவே இயங்குமாறு செய்யப்பட்டது.

விலங்கியல் பிரிவு.

மீழ்க்கண்ட உயிரிகள் சேகரிக்கப்பட்டு, பதப்படுத்தப்பட்டு, பொருத்திவைக்கப்பட்டன. எறும்புத் தின்னை ஒன்று, 46 கடற்பஞ்சுகள், 12 பவளங்கள், 37 நட்சத்திர மீன்கள், 8 கடல் அர்ச்சின்கள், ஒரு வெள்ளை கொக்கு, ஒரு சிறு நாரை ஒரு வாற்காகம், ஒரு பனங்காடை, ஒரு பவளங்கால் உள்ளான் மற்றும் 30 வண்ணத்துப் பூச்சிகள், உதகமண்டலம், கூடலூர், கோயம்புத்தூர் ஆகிய மாவட்ட அருங்காட்சியகங்களுக்கு காப்பாட்சியரால் பயணம் மேற்கொண்டு அருங்காட்சியக அமைப்பு பணிகளையும் திறப்புவிழா பணிகளையும் மேற்கொள்ளப்பட்டது.

வளர்கலைக்கூடம்.

அருங்காட்சியகத்திற்கென்று கொள்முதல் குழுவால் வாங்கப்பட்ட ஓவியங்களில் சிறந்தவைகளைத் தேர்ந்தெடுத்து ஆகஸ்டு திங்கள் 1989—இல் கண்காட்சியினை வளர் கலைக் கூடத்தில் வைக்கப்பட்டது.

நாணயவியல் பிரிவு.

புதைப்பொருட்களாக :

மூப்பத்திமூன்று செப்பு நாணயங்கள் தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், மேலையூர் கிராமம், எண்பத்து ஒன்று தென்னிந்தியப் பணம் (மட்ட தங்கம்) சேலம் மாவட்டம், மேட்டூர் தாலுக்கா, சின்னம்பட்டி கிராமம், பத்து கிலோ ஐம்பது ராம்கி

(10.50 கிலோ கிராம்) செப்பு நாணயங்கள் தஞ்சை மாவட்டம், வலங்கைமான் வட்டம், 46 வலங்கை கிராமம், இருபத்து ஏழு கிலோ கிராம் செப்பு நாணயங்கள் தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுக்கா, குன்னூர் கிராமம், இருபத்து நான்கு செப்பு நாணயங்கள் கிராமநாதபுரம், முதுகளத்தூர் தாலுக்கா, ஏர்வாடி கிராமம், நாற்பத்து ஏழு உலோக நாணயங்கள் கிராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை தாலுக்கா, மண்டலூக் கோட்டையூர் கிராமம், நாற்பத்து இரண்டு செப்பு நாணயங்கள் கிராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை தாலுக்கா, காவியாநகர் கிராமத்தில் நூற்றி ஆறு செப்பு நாணயங்கள் அண்ணா மாவட்டம், திண்டுக்கல் தாலுக்கா, சிறுவத்தூர் கிராமம், நூறு வெள்ளி நாணயங்கள் தென்னாற்காடு மாவட்டம், உளுந்தூர் வட்டம், பூகோவை கிராமம் அறுபத்து இரண்டு செப்பு நாணயங்கள் தென்னாற்காடு மாவட்டம், விருத்தாச்சலம் வட்டம், கள்ளக்குறிச்சி வட்டம் அறும்பாரம் பட்டு கிராமம், பத்து தென்னிந்திய பணம், நான்கு தங்க நாண்யங்கள் தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் வட்டம், புஷ்பவனம் கிராமம், இருநூற்று நாற்பத்தி ஆறு தென்னிந்திய (மட்ட தங்கம்) நாணயங்கள் மதுரை மாவட்டம், பெரியகுளம் வட்டம், பாலக்கோம்பை கிராமத்தில் இருந்து பெறப்பட்டன. நாற்பத்தி எண்பது அஞ்சல் தலைகள், முதல் தாள் உரை மற்றும் நாற்பத்து ஒன்பது தகவல் தாள்கள் அஞ்சல் அலுவலர், அண்ணா சாலை, தலைமை அஞ்சலகத்திலிருந்து பெறப்பட்டன.

இரசாயனப் பாதுகாப்புப் பிரிவு.

கீழ்க்கண்டப் பொருட்கள் இரசாயன முறையில் பாதுகாக்கப்பட்டன :—

(1) 38 தொல்பொருட்களான படிமங்கள், மரச்சிற்பங்கள், ஓவியங்கள் மற்றும் ஓலியங்கள், (2) 97 மானிடவியல் பொருட்களான ஆடைகள், இரும்பு மற்றும் படிமப்பொருட்கள், (3) 140 நாணயங்கள் மற்றும் வெள்ளியிலானது நாணயவியலை சார்ந்தவைகள், (4) கலைப் பிரிவைச் சார்ந்த 10 ஓவியங்கள், (5) தாவரவியலைச் சார்ந்த மரத்துண்டு, (6) அரசு அருங்காட்சியகம், திருச்சியைச் சார்ந்த 3 படிமங்கள், (11) கற்சிலைகள் மற்றும் 12 போட்டோக்கள், (7) ராஜ்பவனைச் சார்ந்த 14 ஓவியங்கள், 6 பிளாஸ்டர் மாடல்கள், 11 கற்சிலைகள், (8) டி.டி.கே. கம்பெனியைச் சார்ந்த ஒரு ஓவியம்.

உதகமண்டலத்தில் துவக்கவிருக்கும் அருங்காட்சியகத்திற்காக 10 மரச்சிற்பங்கள் இரசாயன முறையில் பாதுகாக்கப்பட்டன. பாதுகாத்தல் பற்றி புகைப்படங்கள் தயாரித்து கொடுக்கப்பட்டன.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.

கருத்தரங்குகள் :

உலக தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இங்கள் கருத்தரங்குகளாக 12 கருத்தரங்குகள் ஏப்ரல் 1989 முதல் மார்ச்சு 1990 முடிய நிகழ்ந்துள்ளன. இவையனைத்தும் தமிழ் ஆராய்ச்சியில் எழும் சிக்கல்கள் எனும் தலைப்பிலமைந்தனவாகும். நிறுவன ஆய்வுக் கருத்தரங்குகள் 12 இங்களில் நிகழ்த்தப்பெற்று 36 கட்டுரைகள் படிக்கப் பெற்றுள்ளன.

52 வாரக் கருத்தரங்குகள் நிகழ்த்தப்பட்டு நிறுவன ஆய்வாளர்களின் கட்டுரைகள் படிக்கப்பெற்றுள்ளன.

அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் :

டாக்டர் மு.வ. அறக்கட்டளை, கழகம் வ. சுப்பையாப்பிள்ளை அறக்கட்டளை, டாக்டர் ம.பொ.சி. அறக்கட்டளை, கிறிஸ்தவமும் தமிழும் அறக்கட்டளை, தேவ நேயப் பாவாணர் அறக்கட்டளை, டாக்டர் உ.வே.சா. அறக்கட்டளை ஆகியவற்றின் சார்பில் தேர்ந்த அறிஞர்களால் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

ஆய்வரங்குகள் :

பண்பாட்டு நோக்கில் பாவேந்தர் பாரதிதாசன் என்ற தலைப்பிலமைந்த ஆய்வரங்கம் 1989 அக்டோபர்த் திங்களில் நடைபெற்றன. 'தமிழ்ப் பண்பாட்டில் சிற்பக்கலை, என்ற தலைப்பிலமைந்த ஆய்வரங்கம் 1989 டிசம்பர்த் திங்களில் இரண்டு அமர்வுகளாக நிகழ்த்தப்பெற்றன.

மொழிப் பெயர்ப்பியல் கருத்தரங்கும் மார்ச்சுத் திங்களில் நிகழ்த்தப்பெற்றது. 'புதினங்களில் தமிழ்ப் பண்பாடு' என்ற கருத்தரங்கமும் மார்ச்சுத் திங்களில் நடத்தப் பெற்றது. 'தமிழ் நாட்டியப் பண்பாடு' என்ற கருத்தரங்கமும் 1990 பிப்ரவரியில் திருவண்ணாமலையில் நடத்தப்பெற்றது.

தமிழ் பயிற்சி வகுப்பு :

ஒன்பது வெளிநாட்டு மாணவர்கள் இக்கால கட்டத்தில் தமிழ்ப் பயிற்சி பெற்றுள்ளனர். மேற்கு ஜெர்மனி, இங்கிலாந்து, கனடா, இஸ்ரேல், அமெரிக்கா, தென் அமெரிக்கா நாடுகளிலிருந்து இவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

பட்டய வகுப்பு :

எட்டு மாணவர்கள் சுவடியியல் மற்றும் மொழி பெயர்ப்பியல் பட்டய வகுப்பு மூலம் பயன் பெற்றுள்ளனர்.

முனைவர் பட்ட ஆய்வு :

ஏப்ரல் 1989 முதல் மார்ச்சு 1990 முடிய நான்கு ஆராய்ச்சி மாணவர்களுக்கான முனைவர் பட்ட வாய் மொழித் தேர்வு நடைபெற்றுள்ளன. ஆறு பேர் முனைவர் பட்டத்திற்கு பதிவு செய்துள்ளனர்.

கலாச்சாரப் பரிவர்த்தனைத் திட்டத்தின் கீழ் மைய அரசு மனிதனை மேம்பாட்டுத் துறையின் நிதியுதவியுடன் மூன்று சில மாணவர்கள் தமிழ்ப் பயிற்சி பெற்றுள்ளனர்.

நூலகம் :

ஏப்ரல் 1989 முதல் மார்ச்சு 1990 முடிய நிறுவன நூலகத்திற்குப் புதிதாக 1,266 நூல்கள் வாங்கப் பெற்றுள்ளன. இதழ்கள் மற்றும் பரிவர்த்தனைத் திட்டத்தின்கீழ் வாங்கப்பெறும் நூல்களும் நூலகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

வெளியீடுகள் :

நிறுவனத்தில் இக்காலக் கட்டத்தில் ஆறு நூல்கள் வெளியிடப் பெற்றுள்ளன. தமிழியல் பருவ இதழ் இரண்டு வெளியிடப் பெற்றுள்ளன. செய்திக் கதிர் 7 வெளியிடப்பெற்றுள்ளன.

கலந்துரையாடல் :

சிங்கப்பூர், யூனியன் தீவுகள் மற்றும் செக்கோஸ்லேவியா ஆகிய நாடுகளில் இருந்து வந்த தமிழ் அறிஞர்கள் நிறுவனத்தில் சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றிக் கலந்துரையாடினார்.

வளர்ந்து வரும் நடைமுறை திட்ட பணிகள் :

19 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாறு. தமிழா சமூகவியல், தமிழ் அறிமுக நிலை சென்னை நகரக் கிளை மொழிகள் ஆய்வு மொழி பெயர்ப்பியல் பயிற்சிக் கையேடு. 18 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாறு சென்னை மாநகர வரலாறு பெயர்கள். தெருக்கூத்து. தமிழரல்லாதாருக்கான எளிய இலக்கணம். தமிழ் வேற்றுமையுருபுகளும் ஆங்கில முன்னொட்டுகளும்; அரசியல். தமிழில் மொழி பெயர்ப்பு முன்னோடிகள். உலகில் தமிழ். தமிழா. தமிழ்ச் சங்கங்கள் என்ற வகையிலமைந்த திட்டப் பணிகளுக்கான நிதிகள் ஒதுக்கீடுகள் திரட்டப் பெற்று பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன.

அத்தியாயம் 29

தமிழ் வளர்ச்சித் துறை

தமிழ் வளர்ச்சி துறை :

அரசு நிருவாகத்தில் தமிழ் ஆட்சி மொழித் திட்டத்தினை முழுமூச்சுடன் மேற் கொள்ளுதல் தமிழ் வளர்ச்சித்துறையின் முதன்மையான பணியாகும்.

1. ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் :

தமிழ் ஆட்சி மொழித் திட்டச் செயலாக்க முன்னேற்றம் குறித்து துறைத் தலைமை அலுவலகங்கள் தன்னாட்சி நிறுவனங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் ஆகிய வற்றைச் தமிழ் வளர்ச்சி இயக்குநரும், மாவட்டங்களில் அமைந்துள்ள சார்நிலை அலுவலகங்களை மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்களும் ஆய்வு செய்து வருகின்றனர்.

2. மொழியாக்கப் பணி :

பல்வேறு அரசுத் துறைகளைச் சார்ந்த படிவங்கள் பதிவேடுகள், விதிகள், விதித் தொகுப்புகள் ஆகியவை விரைந்து தமிழாக்கம் செய்யப்பட்டு அத்துறைகளுக்குத் தரப்பட்டுள்ளன. இப்பணிக்கென ஒதுக்கப்பட்ட 5 கூர்ந்தாய்வுக் கண்காணிப்பாளர்கள் இவ்வாண்டில் 2,655 பக்கங்கள் கொண்ட ஆங்கிலப் படிவங்களையும், விதிகளையும் தமிழில் மொழி பெயர்த்துள்ளனர். முன்னரே மொழியாக்கம் செய்யப்பட்டவற்றின் 1,248 பக்கங்களைக் கூர்ந்தாய்வு செய்துள்ளனர்.

3. தமிழ்த் திட்டச் செயலாக்கப் பயிற்சி :

இவ்வாண்டில் உள்ளாட்சித்துறை, பொதுப்பணித்துறை, வணிகவரித்துறை, ஊரக வளர்ச்சித்துறை வனத்துறை, வேளாண்மைப்பிரிவுத்துறைப் பணியாளர்களுக்கான துறை, பயிற்சியின் போது தமிழ் திட்டச் செயலாக்கப்பயிற்சியினை தமிழ்வளர்ச்சி உதவி இயக்குநர்கள் அளித்துள்ளனர். மேலும் திங்கள் தோறும் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடைபெற்று வரும் அறநிலை உதவியாளர்களுக்கான அடிப்படைப் பயிற்சியில் தமிழ்த் திட்டச் செயலாக்கப்பயிற்சியும் 6 முறை அளிக்கப்பட்டது. இ.ஆ.ப., அலுவலர்களுக்கும், துணை ஆட்சியர்களுக்கும், அரசின் பயிற்சித் திட்ட அடிப்படையில் தமிழ்த் திட்டச் செயலாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது.

4. அலுவல முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் :

இத்திட்டத்தின்படி ஆண்டுதோறும் அகவை முதிர்ந்த 30 தமிழர்கள் நிதியுதவிக்குத் தெரிவு செய்யப்படுகின்றனர். ஒவ்வொருவருக்கும் திங்கள் தோறும் ரூ. 350 உதவித் தொகை வழங்கப்பெறுகிறது. அதன்படி 17 தமிழறிஞர்கள் 1989—90 ஆம் ஆண்டிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவல் 15—1—1990 ஆம் நாளன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் காசோலை வழங்கிச் சிறப்பிக்கப்பட்டனர் இத்திட்டத்தின் படி இதுவரை 339 தமிழறிஞர்கள் பயன்பெற்றுள்ளனர்.

5. தமிழில் சிறந்த நூல்கள் வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டம் :

இத்திட்டத்தின்படித் தமிழில் சிறந்த நூல்களை வெளியிடுவதற்கு நூலாசிரியர் களுக்கு நிதியுதவி வழங்கப்பெறுகிறது. நிதியுதவி வேண்டி நூலாசிரியர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் அரசால் அமைக்கப்பெற்ற வல்லுநர் குழுவில் பரிந் துரையின் அடிப்படையில் நிதியுதவிக்கு ஏற்கப்பெறுகின்றன. இரு தவணைகளில் இந்நிதி யுதவி வழங்கப்பெறுகின்றது. நூலாசிரியருக்குப் பெரும் அளவாக ரூ. 8,000 அல்லது வெளியீட்டிற்கென அமையும் செலவில் 50 சத விகிதம் ஆகிய இவற்றில் எது குறைவோ, அத்தொகை நிதியுதவியாக வழங்கப்பெறுகிறது.

இத்திட்டத்தின்படி இந்த ஆண்டில் 28 நூல்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டு வரலாறு எழுதும் பணி :

இத்திட்டத்தினை விரைவுபடுத்தவேண்டி வல்லுநர்குழு ஒன்று பேராசிரியர் டாக்டர் சி.ப. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டு மூன்றாம் தொகுதி யாக பல்லவர்-பாண்டியர் காலம் (முதல் பகுதி) அச்சிடப்பட்டு வெளியிடுவதற்கு ஏற்ற நிலையில் உள்ளது. இரண்டாம் பகுதியை விரைவில் வெளியிட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

7. மொழியாக்கத் திட்டம் :

முன்னர் இருந்து வந்த சிறப்பிலக்கிய மொழிபெயர்ப்புத் திட்டத்தையும், சித்தர் பாடல்கள், சங்க இலக்கியங்கள், கம்பராமாயணம் ஆகியவற்றில் ஆங்கில மொழி பெயர்ப்பு திட்டத்தையும் இணைத்து மொழியாக்கத் திட்டம் அமைக்கப்பட்டு அதற்கென வல்லுநர் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. கம்பராமயணத்தில் அயோத்தியா காண்டம் ஆரணியகாண்டம் ஆகியவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்கள் அச்சிற் பட்டுவெளியீடும் நிலையில் உள்ளது.

8. தட்டச்சு மாற்றம்:

தமிழ் ஆட்சிமொழி முனைப்புத்திட்டத்தின்படி அரசு துறைத் தலைமை அலுவலகங்களில் 75 சதவீதம் தமிழ்த் தட்டச்சும், சார்நிலை அலுவலகங்களின் 100 சதவீதம் தமிழ்த் தட்டச்சும் இருக்க வேண்டும் என்ற கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

9. ஆட்சிக் சொல்லகராதி :

அரசு அலுவலகங்கள், வாரியங்கள், கழகங்கள் பயன்பாட்டிற்கு ஆட்சிச் சொல் லகராதிகள் தேவைப்படுகின்றமையால் அதன் மறுபதிப்பையும் புதிய கையடக்கப் பதிப்பு ஒன்றினையும் அச்சிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

10. பிற மாநிலங்களிலுள்ள கல்வி நிறுவனங்களுக்கு நல்கை :

தமிழகத்திலும் பிற மாநிலங்களிலுமுள்ள கல்வி நிறுவனங்கள் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றிற்குத் தமிழில் சான்றிதழ் வகுப்பு பட்டய வகுப்பு ஆகியவற்றை நடத்தவும், தமிழிருக்கை நிறுவவும் அரசு ஆண்டுதோறும் நல்கை அளித்து வருகிறது. மேலும் அரசின் ஆர்வத்தைக் குறிக்கும் வகையிலும் கொள்கை அடிப்படையிலும், தமிழ்ச் சங்கங்களுக்கும் கட்டடம் கட்ட நல்கை அளிக்கப்பட்டு வருகிறது. இதன்படி 1989–90ஆம் ஆண்டில் ரூ. 8,90,000 பல்வேறு நிறுவனங்களுக்கு நல்கையாக அளிக்கப்பெற்றது.

11. தமிழில் சிறந்த நூல்களுக்கு பரிசு வழங்கும் திட்டம் :

தமிழில் சிறந்த நூல்களுக்கு ஆண்டு தோறும் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன்படி 1988ம் ஆண்டில் வெளியிடப்பட்ட சிறந்த நூல்களுக்கு 18 தலைப்புகளில் 36 நூல்களுக்குப் பரிசுத் தொகையாக ரூ. 53,000 வழங்கப்பட்டது. இப்பரிசுத் தொகையானது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 15—2—1990 அன்று திருவள்ளுவர் திருநாள் விழாவில் வழங்கப்பட்டது.

12. தமிழில் சிறந்த விரைவுகள் குறிப்புகள் எழுதுவோர்க்குப் பரிசு :

தமிழில் சிறந்த வரைவுகள் குறிப்புகள் எழுதும் அரசுப் பணியாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் 1989ம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டது. இத்தொடர்பில் தோப்பு களை அனுப்புமாறு துறைத் தலைமை அலுவலகங்கள், தன்னாட்சி நிறுவனங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மாநகராட்சி அலுவலகங்கள் ஆகியன வேண்டப் பட்டுள்ளன. அரசுச் செயலகப் பணியாளர்களுக்குப் பரிசுகள் வழங்க அரசுக்குத் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

தமிழை முழு அளவில் பயன்படுத்தும் மாவட்ட அலுவலகங்களுக்குக் கேடயம் பாராட்டுச் சான்றிதழ் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

13. விழாக்களும் விருதுகளும் :

திருவள்ளுவர் திருநாள் விழா :

திருவள்ளுவர் திருநாள் விழா தமிழ் வளர்ச்சித் துறையால் ஆண்டுதோறும் அரசு விழாவாக நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு திருவள்ளுவர் திருநாள் விழா தமிழ் வளர்ச்சித் துறையால் சனவரித் திங்கள் 15 ஆம் நாள் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடத்தப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு தமிழக கல்வியமைச்சர் அவர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினர்.

13. (1) திருவள்ளுவர் விருது :

திருக்குறள் நெறிபரப்பும் பெருந்தகையாளர் திருவரைத் தெரிவு செய்து அரசு சார்பில் அவருக்குத் திருவள்ளுவர் திருநாளில் திருவள்ளுவர் விருது வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது பெறுவோர்க்கு ரூ. 10,000ஐ பணப் பரிசாக வழங்கியும் பொன்னாடை போர்த்தியும் தகுதியுரை வழங்கியும் அரசு சிறப்புச் செய்கிறது.

இதன்படி இவ்விருது 1989ஆம் ஆண்டிற்கு டாக்டர் வ.சு.ப. மாணிக்கம் அவர்கள் சார்பில் அவர்களின் துணைவியார்க்கும் 1990ஆம் ஆண்டிற்கு திரு. சு. கு. ஆனந்தன் அவர்களுக்கும் வழங்கப்பட்டது.

13 (2) பாவேந்தர் பாரதிதாசன் விருது :

தமிழக அரசு ஒவ்வொரு ஆண்டும் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழாவில் சிறந்த கவிஞர் ஒருவருக்கு ரூ. 10,000ஐ பணப்பரிசாக வழங்கியும் சிறப்புச் செய்கிறது.

இடையில் வழங்கப்பெறாதிருந்து இவ்விருது 1987 ஆம் ஆண்டிற்கு கவிஞர் முடியரசன் அவர்களுக்கும், 1988 ஆம் ஆண்டிற்குக் கவிஞர் பொன்னிவளவன் அவர்களுக்கும், 1989ஆம் ஆண்டிற்கு கவிஞர் அப்துல் ரகுமான் அவர்களுக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 29—4—1989 அன்று வழங்கப்பட்டது.

13 (3) திரு. வி. கா விருது :

தமிழ்த் தென்றல் திரு. வி. கல்யாண சுந்தரனார் அவர்கள் பெயரில் விருது ஒன்றினை நிறுவி ஆண்டுதோறும் சிறந்த தமிழ் எழுத்தாளர் ஒருவருக்கு ரூ. 10,000 பணப் பரிசாக வழங்கியும், பொன்னாடை போர்த்தியும் தகுதியுரை வழங்கியும் சிறப்பிக்கப்படுகிறது. 1989க்கான இவ்விருது 27—8—1989ஆம் நாளன்று டாக்டர் தமிழன்னல் அவர்களுக்குத் தமிழக முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டது.

14. தமிழ் நூல் விவர அட்டவணை :

1936 முதல் 1940 ஆம் ஆண்டு வரை தமிழில் அச்சேற்றப்பட்ட நூல்களுக்குரிய எட்டாம் தொகுதிக்கான தயாரிப்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

15. சங்கப் புலவர்களுக்கு நினைவுத் தூண் நிறுவுதல் :

சங்கப் புலவர்களின் நினைவைப் போற்றும் வகையில் நினைவுத் தூண் அமைக்கும் இட்டம் செயற்பாட்டில் உள்ளது. சங்கப் புலவர்களின் சற்றொப்ப 200 புலவர்கள் பிறந்த இடங்கள் தெரிய வந்துள்ளன. இப்புலவர்கள் பிறந்த ஊர்களில் அரசு சார்பில் நினைவுத் தூண்கள் அமைக்கப்பெறும். அத்தூண்களில் அப்புலவர்களுடைய சிறப்பான பாடல் வரிகள் பொறிக்கப்பெறும்;

பின்வரும் நான்கு மாவட்டங்களில் நினைவுத் தூண்கள் நிறுவ முடிவெடுக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1. சென்னை—அண்ணா மாவட்டம்

இடைக்கழிநாட்டு நல்லூர்—நல்லூர் நத்தத்தனார்

2. திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம்

மாங்குடி—மாங்குடி மருதனார்.

3. திருச்சி மாவட்டம்

கருவூர்—கருவூர் கிழார் முதலிய எண்மர்

4. பசும்பொன் தேவர் திருமகனார் மாவட்டம் :

ஒக்கூர்— ஒக்கூர் மாசாத்தியார்

ஒக்கூர் மாசாத்தியார்

ஒவ்வொரு தூண் அமைக்கவும் அடித்தளம் உட்பட ரூ. 1,27,500 ஆக நான்கு நூல்களுக்கும் ரூ. 5,10,000 அரசால் வழங்கப்பெற்றுள்ளது.

16. நிலவியல் பெயர்கள் :

நிலவியல் பெயர்களுக்கான தமிழ் எழுத்துக் கூட்டை தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப்பட்டு வருகிறது. மைய நிலவியல் துறை இருப்பூர்த்தித் துறை அஞ்சல் துறை ஆகியவற்றால் வேண்டப்படும் ஊர்களுக்குரிய நிலவியல் பெயர்களுக்கு எழுத்துக் கூட்டல் வழங்கப்பட்டு வருகிறது.

17. தமிழ் மொழிக் காலவலர்களுக்கு நிதியுதவி வழங்குதல் :

தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாட்டினைப் பாதுகாப்பதற்குத் தம் இன்னுயிரையும் பொருட்படுத்தாது பாடுபட்டவர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 350 நிதியுதவி வழங்க இத்திட்டம் வகை செய்கிறது. இந்த ஆண்டு மொழிக் காவலர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு இத்திட்டத்தின்படி நிதியுதவி வழங்கப்பட்டுவருகிறது.

அட்டவணை I

வரிசை எண்ணும் பல்கலைக்கழகம்/கல்வி நிலையத்தின் பெயரும்,	நோக்கம்	வழங்கப்பட்ட மானியத்தொகை, (ரூபாய்)
(1)	(2)	(3)
1 பஞ்சாப் பல்கலைக் கழகம். பஞ்சாப் ...	சான்றிதழ் படிப்பு. படிப்புக்கான உதவித் தொகை மற்றும் புத்தகங்கள் வாங்குவதற்கு,	5.000
2. ஆதியவியல் கல்வி நிறுவனம். சென்னை-600041,	தமிழ் ஆராய்ச்சி வகுப்பு மேற்கொள்ளுதல்,	1.50.000
3. திருவேங்கடவன் பல்கலைக் கழகம். திருப்பதி	தமிழ் இருக்கை நிறுவுதல்	50.000
4. தென்னிந்திய மொழிகள் புத்தக நிறுவனம். சென்னை-31,	யுனெஸ்கோ கூரியர்'' தமிழில் வெளியிடல்,	80.000
5. பெங்களூர் தமிழ்ச்சங்கம். பெங்களூர்	தமிழ் வகுப்புகள் நடத்துவதற்கு,	10.000
6. மதுரை தமிழ்ச்சங்கம். மதுரை	நூல்கள் வாங்குவதற்கு மற்றும் நூல் நிலைய பராமரிப்பிற்கு,	25.000
7. பண்ணாட்டு திராவிட மொழியியற்பள்ளி திருவனந்தபுரம்,	தமிழ் வளர்ச்சி வகுப்பிற்காக.	3.00.000

தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு

முன்னுரை :

1. 1989 மே திங்கள் 19ஆம் நாளிலிருந்து ஒரு வார காலத்திற்கு தமிழ் நாட்டில் சிறந்த ஓவிய சிற்ப படைப்பாளர்களின் படைப்புகள் அடங்கிய ஒரு கலைக் காட்சியை உதகமண்டலத்தில் நடத்தியது. இக்காட்சியை தமிழ் வளர்ச்சி. பண்பாட்டுத்துறையின் செயலாளர் டாக்டர் ஒளவை நடராசன் அவர்கள் துவக்கி வைத்தார்.

2. மாநிலங்களுக்கிடையே கலைக்காட்சி நடத்துதல் திட்டத்தின்கீழ். புதுடில்லி சாகித்ய கலா பரிஷத்துடன் இணைந்து புதுடில்லியில் ஆகஸ்ட் திங்கள் 21ஆம் நாளிலிருந்து ஒரு வார காலத்திற்கு தமிழ்நாட்டுக் கலைஞர்களின் ஓவிய சிற்பப்படைப்புகள் கலைக்காட்சியாக நடத்தப்பட்டது. அச்சமயம் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையில் பண்பாட்டு கலையுறவுப் பிரிவின் சார்பில் நாட்டிய கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

3. கோயம்புத்தூர் சி. எஸ். ஐ. செயலக பணி மையத்தின் சார்பில் நடைபெற்ற சிறப்புப் பயிற்சியில் செயல்விளக்கப் பொழிவுகள் வழங்குவதற்காக தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு நவம்பர்த் திங்களில் கலைஞர்களை கோயம்புத்தூருக்கு அனுப்பி வைத்தது.

4. பள்ளிகளில் பயிலும் திறமை மிக்க மாணவர்களிடையே உள்ள கலைத் திறமையை வெளிப்படுத்தி மேம்படுத்தும் வகையில் நெய்வேலி கலைஞர்கள் சங்கத்துடனும் இணைந்து நெய்வேலியில் 50 சிறுவர்களுக்கு ஒரு வார காலத்திற்கு சிறப்புப்

பயிற்சியளிக்கப்பட்டது, சிறப்புப் பயிற்சியின்போது உருவாக்கப்பட்ட கலைப்படைப்பு களின் கண்காட்சியும். சிறப்புப் படைப்புகளை உருவாக்கிய மாணவர்களுக்கு பரிசு களும் வழங்கப்பட்டன, துவக்க விழாவின்போது கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டது.

5. ஓவிய சிற்பக் கலைகளின் இன்றைய வளர்ச்சியையும் தமிழ்நாட்டுக் கலைஞர்கள் தமிழ் நாட்டின் பண்பாடு மேம்பாடு ஆகியவற்றை விளக்கும் கட்டுரைகள் கொண்ட ''நுண்கலை'' என்னும் கலையிதழ் ஏப்ரல் திங்களில் வெளியிடப்பட்டது.

6. ஓவிய நுண்கலைக் குழு தனது வருடாந்திரக் கலைக்காட்சியை 1990 ஆம் ஆண்டு மார்ச் திங்களின்போது சென்னை லலித கலா அகாதமியில் பிராந்திய அலுவலகத்தில் நடத்தியது, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இக்காட்சியை துவக்கி வைத்து ''மூத்தக் கலைஞர்கள்'' பிரிவைச் சார்ந்த கலைஞர்களுக்கு தலா ரூ. 5,000 வீதம் 6 கலைஞர்களுக்கும். ''இளங்கலைஞர்கள்'' பிரிவைச் சார்ந்த கலைஞர்களுக்கு தலா ரூ. 2.000 வீதம் 5 கலைஞர்களுக்கும் ரொக்க விருதுகளை வழங்கினார்,

7. 1989–90 ஆம் ஆண்டின் சிறந்த ஓவிய. சிறப்படைப்பாளர்களாகத் தேர்ந் தெடுக்கப்பட்டிருந்த திரு. சி. ஜே. அந்தோணிதாஸ். திரு. எல். முருகேசன். ஆலியோரின் சீரிய கலைப் பணிகளைப் பாராட்டும் வகையில் தலா ரூ. 8,000 ரொக்க விருதும் கலைச் செம்மல்' விருதும் வழங்கப்பட்டது.

8. மார்ச் திங்களின் போது சென்னை லலித கலா அகாதமியின் பிராந்திய அலுவலகத்தில் 10 நாட்களுக்கு ''கலைஞர்கள் முகாம்'' நடத்தப்பட்டது, இம்முகாமில் தமிழ்நாட்டின் 10 கலைஞர்கள் (நான்கு ஓவியர்கள், மூன்று சிற்பிகள், இரண்டு பதிப்போவிய கலைஞர்கள். மற்றும் ஒரு பீங்கான் படைப்புகளை உருவாக்கும் கலை ஞர்கள்) பங்கு கொண்டனர், சோழமண்டலம் கலைஞர்கள் கிராமத்தைச் சார்ந்த திரு. கே. எம். கோபால் அவர்கள் இம்முகாமிற்கு அமைப்பாளராக பணிபுரிந்தார்,

9. தமிழ்நாட்டில் 35 ஓவிய சிற்பக் கலைஞர்களது படைப்புகள் ஓவிய நுண்கலைக் குழுவின் திரட்டலுக்காக வாங்கப்பட்டது,

10. இளங்கலைஞர்களுக்கு படிப்புதவி வழங்கும் திட்டத்தின் கீழ். சென்னை அரசு கலைக் கைத்தொழிற் கல்லூரியில் பயிலும் 20 மாணவர்களுக்கும் கும்பகோணம் அரசு கலைக் கைத்தொழிற் கல்லூரியில் பயிலும் ஏழு மாணவர்களுக்கும். மாமல்லபுரம் சிற்ப. கட்டடக் கல்லூரியில் பயிலும் 22 மாணவர்களுக்கும். சென்னை கலாக்ஷேத்திர கல் லூரியில் பயிலும் 2 மாணவர்களுக்கும். சென்னை ஸ்டெல்லாமோரிஸ் கல்லூரியில் கலைத்துறையில் பயிலும் ஒரு மாணவிக்கும் உதவித் தொகை வழங்கப்பட்டது. மேலும் இராசத்தானியிலுள்ள பணஸ்தாயியில் சிறப்புப் பயிற்சி பெற்று வந்த சென்னை கலைக் கைத்தொழிற் கல்லூரியின் மாணவர் ஒருவருக்கும் உதவித் தொகை வழங்கப் பட்டது.

11. ஆர்ட்டிஸ்ட் ஹாண்டிகிராப்ஸ் அசோசியேஷன். சென்னை நெல்லை. நெல்லை மாவட்ட கலைஞர்கள் சங்கம். திருநெல்வேலி தமிழ்நாடு ஆர்ட்ஸ் அண்ட் கிராப்ட்ஸ் அசோசியேஷன் சென்னை தருமபுரி மாவட்ட ஓவிய கலைக்குழு தருமபுரி மற்றும் யுனைடெட் பெயிண்டர்ஸ் அசோசியேஷன், திருச்சி, ஆகிய கலை நிறுவனங் களுக்கு மானிய உதவி அளிக்கப்பட்டது,

12. தமிழ்நாட்டிலுள்ள ஆறு கலைஞர்களுக்கு ''கலைஞர்கள் நிதி உதவி தொகையிலிருந்து ரூ. 25.000 வழங்கப்பட்டது.

அத்தியாயம் 30

போக்குவரத்துத் துறை

நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை

1, துறைத் தலைமையகத்தின் பெயர் : நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் அறை நெடுஞ்சாலைப் பிரிவு,

2. முகவுரை நோக்கங்கள், குறிக்கோள்கள், ஒப்படைக்கப்பட்ட பணியின் தன்மை போன்றவற்றைப்பற்றிய பொதுத் தகவல்,

நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறையானது, தமிழ்நாட்டிலுள்ள அரசு சாலைகள் மற்றும் பாலங்களை திட்டம் இடுதல், வடிவமைத்தல், கட்டுதல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளுக்கும் ஊரகப் பணிகள் திட்டத்தை செயலாக்குவதற்கு தேவையான தொழில்நுட்ப வழிக்காட்டுதலை ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்குவதற்கும் பொறுப்பு வகிக்கின்றது, இத்தத் துறையில் ஆறு தலைமைப் பொறியாளர்கள் பணியாற்றுகின்றனர்,

அவர்களின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

1, தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறை),

2, தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை)

3, தலைமைப்பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை–45)

(தேசிய நெடுஞ்சாலை 45ல் தாம்பரம் முதல் விழுப்புரம் வரையிலான தேசிய நெடுஞ்சாலைப் பகுதியை அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணிக்கு,

4, தலைமைப் பொறியாளர் கிழக்கு கடற்கரை சாலைகள் மற்றும் ஊரகச் சாலைகள் (ஊரகச் சாலைகள் திட்டம். கரும்புச் சாலை வளர்ச்சித் திட்டம் மற்றும் சென்னையிலிருந்து கடலூர் வரை கிழக்கு கடற்கரை சாலையை அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணிகளுக்கு,)

5, (தலைமைப் பொறியாளர் நிலைக்கு நிகரான) இயக்குநர், நெடுஞ்சாலை, ஆராய்ச்சி நிலையம்,

6, தலைமைப் பொறியாளர் (தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்) (தமிழ் நாட்டிலுள்ள பெரும் நகரங்களில் அமைந்துள்ள நகர்ப்புற சாலைகள் மற்றும் பாலங்கள் மேம்பாடு செய்யும் பணிகளுக்கு) :

நெடுஞ்சாலைத் துறையின் அனைத்து உட்பிரிவுகளுக்கும் தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை ஊரகப் பணித் துறை) அவர்களே நிறுவனம். நிதி ஒதுக்கீடு மற்றும் இதர பொது கொள்கை சம்மந்தப்பட்டவைகளுக்கும் முதன்மை பொறுப்பு வகிக்கிறார்,

2, செயல் கூறுகள் :

கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி, 31–3–1990ஆம் தேதிய நிலவரப்படி நெடுஞ்சாலைப் பிரிவால், பராமரிக்கப்படும் பல்வேறு இன சாலைகளின் மொத்த நீளம் 47,552 கி.மீ. ஆகும்,

சாலைகளின் நீளம் :

	நீளம் (கிலோமீட்டரில்)
மாநில நெடுஞ்சாலைகள்	1,896
பெரிய மாவட்டச் சாலைகள்	13,923
இதர மாவட்டச் சாலைகள்	31,733
மொத்த நீளம்	47,552

கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி, அரசால் பல்வேறு திட்டங்களின்கீழ் அங்கீகரிக்கப் பட்ட, இம்மாநிலத்தில் இடம் பெறும். பெரும்பாலங்கள் மற்றும் சாலைப் பணிகள் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையின் நெடுஞ்சாலைப் பிரிவால் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மாநில சாலைகள் திட்டத்தின்கீழ் (அ) மாநில நெடுஞ்சாலைகள். (ஆ) பெரிய மாவட்டச் சாலைகள். (இ) இதர மாவட்ட சாலைகள். (ஈ) இதர சாலைகள் திட்டம். (உ) மேம்பாலம்:சுரங்கப்பாதைகள் கட்டுதல் (ஊ) கருவிகளும், தளவாடங்களும். (எ) மரங்கள் நடுதல். (ஏ) அரசு நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்

3. (அ) திட்ட பணிகள் இலக்கும் சாதனையும் நிதி மற்றும் செயல்பாடு :

தலைமைப்புகள் திட்டங்கள்.	பணியின் தன்மை.	செயல்பாடு. இலக்கு.	செயல்பாடு. சாதனை.	நிதி பற்றியது. இலக்கு.	நிதி பற்றியது. சாதனை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
				(ரூபாய் இலட்சத்தில்).	
1. மாநில நெடுஞ் சாலை.	1. சாலைகளை அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல். — வேலை எண்கள்.	15	16		
	சாலை நீளம்.	88 கி. மீ.	157.63 88 கி. மீ.	157.63	2) 4.27
	பாலங்களை திரும்பக் கட்டுதல். — வேலை எண்கள்.	4	4		
2. பெரிய மாவட்ட சாலைகள்.	1. சாலைகளை அகலப்படுத்தி உறுதிபடுத்துதல். — வேலை எண்கள்	6	6		
	சாலை நீளம்.	34 கி.மீ	34 கிமீ	420.17	423.1
	2. பாலங்களை திரும்பக். கட்டுதல் — வேலை எண்கள்.	14	14		
3. இதர மாவட்ட சாலை.	1. சாலைகளை அகலப்படுத்த உறுதிப்படுத்துதல் — வேலை எண்கள்.	12	14		
	சாலை நீளம்	110கி.மீ.	128கிமீ.	450.84	546.91
	2. பாலங்களை திரும்பக் கட்டுதல். — வேலை எண்கள்.	9	9		
4. இதரச் சாலைகள்.	1. சாலைகளை அகலப்படுத்த உறுதிபடுத்துதல். — வேலை எண்கள்.	5	5		
	நீளம்.	35 கி.மீ	36 கி.மீ	300.00	281.38
	2. பாலங்கள் திரும்பக் கட்டுதல். — வேலை எண்கள் சாலை	9	10		
5. கருவிகளும் தளவாடங்களும்.				54.55	48.51
6. மரங்கள் நடுதல்.	1. பனைமரங்கள் வளர்த்தல் (எண்கள்).	1.45 கோடி.	1.45 கோடி.	37.60	40.55
	2. இதர மரங்கள் வளர்த்தல் (எண்கள்).	55,000	55,000		
7. தற்போதுள்ள இருப்பு பாதை கடவு களுக்கு பதிலாக மேம்பாலம் சுரங்கப் பாதைகள் கட்டு தல்.	...	1	1(—)	343.58	233.90

(அ) மதுரை-அருப்புக்கோட்டை சாலையில் கி.மீ. 1:6-ல் புதிதாக கட்டப் பட்டுள்ள இரயில்வே மேம்பாலம் 11-8-89 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர். அவர்களால் போக்குவரத்திற்குத் திறந்து வைக்கப்பட்டது.

(ஆ) திட்டம் சார்ர் பணிகள் 1989—90 :

[அரசு சாலைகளைப் பராமரித்தல் (மாநில அரசு நிதி [

(நிதி பற்றியது லட்சத்தில்)

	இலக்கு,	சாதனை,
(1) மாநில அரசு சாலைகள் ..	4,986,00	5.494,22
(2) கருவிகளும் தளவாடங்களும்	369,00	578,23
(3) கட்டிடங்கள்	79,50	92,52

சிறப்புத் தகவல் :

மைய அரசு சாலை நிதியில் சேரும் நிதியை சாலைக்கள் மற்றும் பாலங்கள் மேம் பாட்டிற்கு அந்நிதியைப் பயன்படுத்தும் விதம் பற்றிய விதிகள் குறித்து நாடாளு மன்றத்தில் திருத்திய நிர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது, இந்திய அரசின் சாலைப் போக்குவரத்து அமைச்சகம் கோரியபடி 1989 முதல் 1995 வரையிலான கால கட்டத்தில் முக்கியமான சாலை மற்றும் பாலப் பணிகளை மேற்கொள்வதற்காக மைய அரசு சாலை நிதித் திட்டத்தின் கீழ் ரூ. 231,00 கோடி மதிப்பிலான பிரேரணைகள் மாநில அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன, அப்பிரேரணைகள் மாநில அரசின் பரிசீலனைக்கு பின்னர் மைய அரசின் ஒப்புதலைப் பெறுவதற்காக அப்பிரேரணைகள் மாநில அரசால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது, இந்திய அரசின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றதும் ஒவ்வொரு ஆண்டும் வரவு. செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் நிதி வசதிக்கேற்ப 1989 முதல் 1995 வரையிலான கால கட்டத்தில் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்,

6. முடிவுரை :

இந்தியத் திட்டக்குழு 1985—90 ஏழாம் ஐந்தாண்டு திட்டக் காலத்தில் மாநில அரசு திட்டங்களில் சாலைகளும் பாலங்களும் என்று ரூ, 130,00 கோடி மூலதன செலவினத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது, 7-வது திட்ட காலத்தில் மொத்த செலவுத் தொகை ரூ, 194.76 கோடியாகும்,

(ii) நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையின் தேசிய நெடுஞ்சாலை பிரிவு,

முன்னுரை :

நெடுஞ்சாலைத் துறையின் ஒரு பிரிவான தேசிய நெடுஞ்சாலை 1971-ல் துவக்கப் பட்டு தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) கட்டுப்பாட்டின் கீழ் நடத்தப் படுகிறது;

2. நிகழ்ச்சிகள் :

தேசிய நெடுஞ்சாலை நகர்ப்புற இணைப்புகள் நீளமான 125.86 கி.மீ. சேர்த்து தமிழ்நாட்டிலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளின் நீளம் மொத்தம் 2002.464 கி.மீ. ஆகும்,

மொத்த நீளம் அடியிற் கண்டவாறு அமைந்துள்ளது :—

	கி.மீ.
பலவழிப்பாதை அகலம் ..	64.335
இருவழிப்பாதை அகலம் ..	1,787.119
ஒருவழிப்பாதை அகலம் ..	125.010
ஒருவழிப்பாதை அகலத்தை விட குறைவானது	26.000
மொத்தம் ... —	2,002.464

தற்போது, இந்தப் பிரிவின் கீழ் செயலாக்கப்படும் திட்டங்கள் கீழ்க்கண்டவாறு ஆகும் :—

1. தேசிய நெடுஞ்சாலைகள் (மத்திய பகுதி திட்டம்) 2. மத்திய சாலை நிதித் திட்டம் (மாநில அரசுப் பகுதி), 3. தேசிய நெடுஞ்சாலைகள் நகரப்பகுதி இணைப்புகள் மூல வேலைகள் (மாநில பகுதி திட்டம்), 4. பழங்குடியினர் பகுதி வளர்ச்சித் திட்டம் (மாநில அரசு பகுதி திட்டம்), 5. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (நீலகிரி மாவட்டம்) (மத்திய ஆதரவு திட்டம்), 6. மேற்கு மலைத் தொடர் அபிவிருத்தித் திட்டம் (மத்திய ஆதரவுத் திட்டம்).

4. எல்லாத் தலைப்புகள்/திட்டங்கள் கீழ் தனியாக செயல் மற்றும் நிதி இரண்டுக்கும் பணி முன்னேற்றத்தில் இலக்கு மற்றும் சாதனைகள்.

அ. திட்டப் பணிகள்.	வகை	செயல்.		நிதி.	
		இலக்கு.	சாதனை.	இலக்கு.	சாதனை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
			(ரூபாய் இலட்சத்தில்.)		
1. தேசிய நெடுஞ்சாலைகள் (மூல வேலைகள்).	1. செமிடென்ஸ் கார்பெட் மற்றும் பிரிமிக்ஸ் கார்பெட்-நீளம் (கி.மீ.).	77.80	36.13	828.00	828.38
	2. பாலங்கள் (எண்கள்)	6.00	2.00		
2. மத்திய சாலை நிதி திட்டம்.	1. தார் பரப்பு (கி.மீ.)	12.68		27.98	28.94
	2. பாலங்கள் (எண்கள்)	1.00			
3. தேசிய நெடுஞ்சாலைகள் நகர்ப்புற இணைப்புகள் (மூலப்பணிகள்).	1. தார் பரப்பு (கி.மீ.)	2.40		20.25	20.43
	2. பாலங்கள் (எண்கள்).				
4. பழங்குடியினர் பகுதி வளர்ச்சித் திட்டம்.	1. தார் பரப்பு (கி.மீ.)	65.00	36.30	162.42	162.23
	2. பாலங்கள் (எண்கள்)	6.00	2.00		
5. மலைப்பகுதிமேம்பாட்டுத் திட்டம்.	1. தார் பரப்பு(கி.மீ.)	70.00	56.50	80.35	80.35
	2. பாலங்கள் (எண்கள்)	1.00	—	—	—
6. மேற்கு மலைத்தொடர் அபிவிருத்தித் திட்டம்.	1. தார் பரப்பு (கி.மீ.)	1.90	0.80	25.12	25.13
	2. பாலங்கள்(எண்கள்)	7.00	4.00		
7. வனத்துறை நிதிகள் (மேற்கு மலைத்தொடர் அபிவிருத்தி கோட்டத்தினால் செயலாக்கம்).	சாலைப்பணி	முடிந்தது	15.00		15.00
	பாலப்பணி.	முன்னேற்றத்திலுள்ளது.			

ஆ. திட்டமில்லாத பணிகள் 1989-90 :

	நிதி.	
	இலக்கு.	சாதனை.
	(ரூபாய் லட்சங்களில்)	
1. தேசிய நெடுஞ்சாலை பராமரிப்பு—		
சாதாரண பழுது பார்த்தல் ..	193.03	194.5
காலமுறை புதுப்பித்தல் ..	451.08	449.75
வெள்ளச் சேதங்கள் பழுதுபார்த்தல் (தொடர்ச்சி)	89.23	89.88
வெள்ளச் சேதங்கள் பழுதுபார்த்தல் (புது)	22.00	17.05
தனிப் பழுது பார்த்தல் (புது)	4.16	4.16
தனி பழுது பார்த்தல் (தொடர்ச்சி)	60.74	60.88
2. தேசிய நெடுஞ்சாலை நகர்ப்புற இணைப்புகள் பராமரிப்பு (மைய அரசு பங்கு 19.69 லட்சங்கள்)	41.00	41.16

மைய அரசு தரை வழிப் போக்குவரத்து அமைச்சகம், புதுடில்லி தனது கடித எண் என். எச். 12013/57/89, டி.என். நாள் 12-5-1989-ல் பெங்களூர் முதல் ஒசூர் வரை தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல் கர்நாடக மாநிலத்தில் 27 கி.மீ. நீளமும் தமிழ்நாடு மாநிலத்தில் 9 கி.மீ. நீளமும் (மொத்தம் 36 கி.மீ.) 4 வழித்தடமாக அகலப்படுத்தி வலுப்படுத்தும் பணி செயல்படுத்த உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 1989 ஏப்ரல் மாதம் ஆகிய மேம்பாட்டு கழகத்தினர் வருகை தந்தபோது இந்த பணிக்கான ஆய்வு அறிக்கையை ஆசிய வளர்ச்சி வங்கிநிதித் திட்டத்தில் தயார் செய்யவும், ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கி.மீ. 33/015 (தமிழ்நாடு எல்லை) முதல் கி.மீ. 41. (ஒசூர் வரை) தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல் (பெ.சே.ம. பிரிவு) 9 கி.மீ. நீளம் 4 வழித்தடமாக அகலப்படுத்தி வலுப்படுத்தும் இத்திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 8.59 கோடிகள்.

3. முடிவுரை :

தேசிய நெடுஞ்சாலைகள் பராமரிப்பு மற்றும் காலமுறை பழுதுபார்த்தல் முழுவதும் முடிந்துள்ளது. தேசிய நெடுஞ்சாலை பணிகள் மற்றும் மத்திய ஆதரவுத் திட்டங்கள் மைய அரசிடமிருந்து ஒவ்வொரு ஆண்டும் பெறப்படும் ஒதுக்கீடுபடியும் நிர்ணயித்த இலக்கு படியும் செயலாக்கப்படுகின்றன. தொடர்ப்பற்ற மலைப்பகுதிகள் மற்றும் மேற்கு மலைத்தொடரில் வாழும் பொது மக்களுக்கு மேற்கு மலைத்தொடர் அபிவிருத்தித் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், பழங்குடியினர் பகுதி மேம்பாட்டு திட்டம் ஆகிய திட்டங்கள் மிகவும் நன்மையளிக்கும் திட்டங்களாகும்.

(iii) தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்.

முன்னுரை :

பொதுவான தகவல் : தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டப் பணிகள் உலக வங்கியின் கடனுதவியுடன் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருப்பூர், சேலம், ஈரோடு மற்றும் வேலூர் ஆகிய நகரங்களில் செயற் படுத்தப்படுகிறது.

நெடுஞ்சாலைத்துறையின் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டப் பிரிவினரால் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாகிய போக்குவரத்து மற்றும் போக்குவரத்து மேம்பாட்டுப் பணிகள் (TRAMP) செயற்படுத்தப்படுகிறது.

போக்குவரத்து மற்றும் போக்குவரத்து மேம்பாட்டுப்பகுதி (TRAMP) திட்டத்தின் மதிப்பீடு ரூ. 100.30 கோடியாகும்.

இத்திட்டம் 1988-89-ம் வருடம் முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. மார்ச் 1995-ல் முடிக்கப்படவேண்டும்.

31-3-1990 முடிய செலவினம் ரூ. 6.76 கோடி.

குறிக்கோள் மற்றும் நோக்கம் : நகர்ப்புற சாலைகளின் கொள்திறனை அதிகரிக்கும் போக்குவரத்து ஒழுங்குமுறைகளை நன்கு பாதுகாப்பு அமுல்படுத்தும் நோக்கத்துடனும் பணிகள் தேர்வு செய்யப்படுகின்றன.

திட்டம் தேர்வு முறை : போக்குவரத்து கணிப்பு மற்றும் சமூக நன்மையின் அடிப்படையில் இத்திட்டத்தின் பணிகள் தெரிவு செய்யப்படுகின்றன. கணிப்பில், 12 விழுக்காடு உள்பயன் நிறன் அளிக்கக்கூடிய பணிகள் தெரிவு செய்யப்படுகின்றன. தேர்வு செய்யப்படும் பணிகள் அனைத்திற்கும் உலக வங்கியின் ஒப்புதல் தேவை.

பணிகளின் தன்மை : இத்திட்டத்தின் கீழ் வட்டச்சாலைகள், புறவழிப்பாதைகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல், சாலை மேம்பாலங்கள், சாலை கீழ்ப்பாலங்கள் கட்டுதல், நடைமுறையில் உள்ள சாலைகள் பாலங்களை அபிவிருத்தி செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

செயற்பாடுகள் : தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டப் பணிகள், சென்னை நகர வளர்ச்சித் திட்டம் 1, மற்றும் 2 மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டப் பணிகள் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டப் பிரிவின் பொறுப்பில் சொலாக்கப்பட்டு வருகின்றன.

செயல் இலக்கு :

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் :

(1) ரூ. 1968 இலட்சம் மதிப்பீட்டில் 6 புதிய பணிகளின் செயலாக்கம் துவங்கப் பட்டுள்ளது. 1989-90-ல் 7 பணிகள் ரூ. 2143 இலட்சங்கள் ஒதுக்கீடு பெற்று வந்தன.

(2) சாலை அமைப்பு 15.30 கி.மீ. நீளத்திற்கு முடிக்கப்பட்டன. 10.60 கி.மீ. நீளத்திற்கு சரளைக்கல் அடைக்கும் பணி முடிவுற்றுள்ளது. 37 சிறு பாலங்கள் கட்டப் பட்டுள்ளன.

சென்னை நகர வளர்ச்சி திட்டம் :

உள்வட்டச்சாலை கி.மீ. 0/0-11/7-ல் நிலம் கையகப்படுத்தப்படாமலுள்ள சிறு பகுதி மற்றும் வைத்தியநாத முதலி சாலை மேம்பாலம் தவிர அனைத்துப் பணிகளும் முடிவடைந்துவிட்டன.

வைத்திய நாத முதலி சாலை மேம்பாலப்பணி நல்ல முன்னேற்றத்தில் உள்ளது.

சென்னை நகர்ப்புறவ ளர்ச்சித் திட்டம்—2

உள்வட்டசசாலை கி.மீ. 11/7/17/4-ல் இரண்டு சிறிய பாலங்கள் தவிர அனைத்துப் பணிகளும் முடிவடைந்து விட்டன. இரண்டு சிறிய பாலங்களும் 1990-91-ல் முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் :

நில ஆர்ஜிதம் காரணமாக பணி செய்ய முடியாத ஒரு சிறு பகுதி மற்றும் ஒரு பாலம் தவிர எல்லா பணிகளும் முடிவடைந்து விட்டன.

• நிதி இலக்கு :

திட்டம்.	ஒதுக்கீடு.	செலவு. (ரூபாய் இலட்சத்தில்)
1. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் ...	510.66	510.63
2. சென்னை நகர வளர்ச்சித் திட்டம்-1	47.00	47.35
3. சென்னை நகர வளர்ச்சித் திட்டம்-2	9.00	9.08
4. ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் ...	8.40	8.47

முடிவுரை :

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டப் பிரிவு 31—10—1989-ல் துவக்கப்பட்டது. இக்கால அளவில் இப்பிரிவானது பணிகளைத் துவக்குவதிலும், மதிப்பீடுகள் தயாரிப்பதிலும், திட்ட மதிப்பீட்டு ஆய்வு அறிக்கை தயாரித்தல் மற்றும் தேர்வு செய்தல் போன்ற பணிகளில் சிறப்பான முன்னேற்றம் காண்பித்துள்ளது.

(iv) நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்.

முன்னுரை.—மேற்கொள்ளப்பட்ட பணியின் தன்மை, பொருள், நோக்கத்தைப் பற்றிய பொதுவான தகவல்.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், 1957 ஆம் ஆண்டு மத்திய சாலை நிதியின்கீழ் புது டெல்லியிலுள்ள மத்திய சாலை ஆராய்ச்சி நிலையத்திற்கு ஒப்ப தோற்றுவிக்கப் பட்டது. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் தமிழ்நாட்டில் அமைந்துள்ள சாலைகள் பாலங்களுக்கான புலனாய்வு, கட்டுமானம், பராமரிப்பு தொடர்பான செயல்முறை ஆராய்ச்சிகளை மேற்கொண்டு செயல்படுகிறது.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், சாலை மற்றும் பாலங்கள் அமைப்பதில் ஏற்படும் செலவுகளைச் சிக்கனப்படுத்தும் வகையில் அறிவியல் அடிப்படையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்துகிறது. நெடுஞ் சாலை ஊரகப் பணித்துறை திட்டங்களை அமைப்பதிலும் பராமரித்தலிலும் ஈடு பட்டுள்ளது.

செயல்திட்டங்களை கீழ்க்கண்டவாறு நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தலாம்:—

(1) மண் மற்றும் அடிதளப் பொறியியல்.

(2) கற்கலவை மற்றும் கட்டுமானம்.

(3) நிலக்கல் மற்றும் சரளைக்கற்கள்.

(4) போக்குவரவு மற்றும் போக்குவரத்து.

இந்நிலையம், அதி நவீன அறிவியல் கருவிகளோடு கூடிய நன்முறையில் அமைந்த ஆய்வகங்களைக் கொண்டுள்ளது.

ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை உயர்த்தும் பொருட்டு, சாலை மற்றும் பாலம் அமைக்கப் பயன்படும் பொருள்களை பரிசோதனை செய்து தரக் கட்டுப்பாட்டைப் பராமரிப்பதற்காகவும், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, கோயம் புத்தூர் ஆகிய இடங்களில் மண்டல ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளது. மேலும் சேலம், கடலூர், சென்னையிலும் மண்டல ஆய்வகங்கள் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

மண் ஆய்வகம் :

நடவடிக்கைகள் :

போக்குவரத்து அளவை அடிப்படையாகக்கொண்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆங்காங்கே கிடைக்கப்பெறும் பொருட்களைக் கொண்டு குறைந்த செலவில் தள வடிவமைப்பை மேம்படுத்துவதிலும், அடித்தளப் பகுப்பாய்விலும் மண் ஆய்வகம் ஆராய்ச்சி நடத்தி வருகிறது. பல திட்டங்களுக்காக, மண் புலனாய்வுத் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு, கோரப்படும் திட்டங்களுக்கு கருத்துக்கள் வழங்கப்படு கிறது.

கற்கலவை ஆய்வகம் :

கற்கலவை மற்றும் கட்டுமான ஆய்வகம் கற்கலவைப் பணிகளில் மட்டும் ஆராய்ச் சித் திட்டங்களை மேற்கொள்வது மட்டுமின்றி, சிமெண்ட், மணல், இரும்பிலும் வாலாய முறைப்படியான பரிசோதனைகள் நடத்தப்பட்டு, ஆய்வுத் திட்டங்களும் மேற்கொள்ளப்படுகிறது. தமிழகக் கோவில்களிலும் பாலங்களிலும் ஏற்படும் கட்டு மானச் சீர்குலைவுகள் புலனாய்வு செய்து தீர்வு நடவடிக்கைகளுக்கு கருத்துக்கள் கூறு கிறது.

நிலக்கீல் ஆய்வகம் :

இவ்வாய்வகத்தில் நிலக்கீலில் ஆய்வுத் திட்டங்களை நடத்துவது மட்டுமின்றி எல்லாவிதமான நிரளைகளும் பரிசோதனை செய்யப்படுகிறது. சாலை அமைப்புப் பணிகளில் அவற்றின் நிலைப்பாடு உறுதியாகக் கூறப்படுகிறது. விமானத் தளம் அமைக்க புகைக்கீல், கற்கலவை அடர் கற்கலவை இவைகளின் வடிவமைப்பும் கண்டறியப்படு கிறது. நகரத்திலும் பிற இடங்களிலும் மேற்பரப்பு தளம் அமைப்பதில் தரக் கட்டுப் பாட்டுப் பணிகள் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

போக்குவரவு மற்றும் போக்குவரத்து ஆய்வகம் :

சாலை விபத்து அடிக்கடி நிகழும் இடங்களில் வியூத்துப் பகுப்பாய்வும், போக்கு வரத்துக் கணக்கெடுப்பும் எடுக்கப்பட்டு, நீர்வு நடவடிக்கைகளுக்கு கருத்துக்கள் கூறப் படுகிறது. புதிதாக அமைக்கப்படும் சாலையிலும், புதுப்பிக்கப்படும் சாலையிலும், சாலை அமைப்புத்தரம் பற்றி மதிப்பீடு செய்ய சாலைத் தளங்களின் ஒட்டுதற்குரிய தரம் பற்றிய ஆய்வையும் இவ்வாய்வகம் மேற்கொள்கிறது. கொடுக்கப்படுகின்ற போக்குவரத்துக் பிரச்சினைகள் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இது தவிர. இந்திய அரசு ஆதரவு பெற்ற பல ஆராய்ச்சித் திட்டங்கள் இவ்வாய்வகத்திற்கு கொடுக் கப்பட்டுள்ளது.

நூலகப் பயன்கள் :

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் 20,000-க்கும் மேற்பட்ட புத்தகங்களையும், பருவ இதழ்களின் தொகுதிகளையும் கொண்ட மிகச் சிறந்த நூலகத்தைக் கொண்டுள் ளது. ஆண்டுதோறும் 120 தொழில் நுட்ப இதழ்களுக்கு சந்தா செலுத்தப்படுகிறது. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் 10 இந்திய நிறுவனங்களிலும், 4 அயல்நாட்டு நிறு வனங்களிலும் உறுப்பினராக உள்ளது. புது டெல்லியிலுள்ள இந்திய அரசின் தரைப் போக்குவரத்து அமைச்சகத்தின் மானியம் பெற்ற திட்டம் மற்றும் செயல்படுத்தும் பிரிவின் ஆராய்ச்சி மேம்பாட்டுத் திட்டங்களிலும், இந்தியச் சாலைக் குழாமின் (ஐ.ஆர்.சி.) பல்வேறு குழுக்களிலும், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் உறுப்பினராக உள்ளது. அவ்வப்போது கட்டப்படுகின்ற கட்டங்களில் தமிழக அரசின் பிரதிநிதி களாக ியக்குநரும், துணை இயக்குநரும் பங்கேற்கின்றனர்.

பணி முன்னேற்றம் :

அனைத்துத் திட்டங்களின் குறிக்கோளும், அடைந்த பயன்களும் நிதிநிலை நடப்பும் தனித்தனியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு 1989–90-ல், 30 ஆராய்ச்சித் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. அவற்றில் 10 ஆராய்ச்சித் திட்டங்கள் இந்திய அரசின் .ரவு பெற்றவை.

கீழ்க்கண்ட ஆராய்ச்சித் திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளது.—

(1) சாலைகளின் பருமன் குறித்து இணை மாற்றுக் கூறுகள் பற்றி ஆராய்தல்.

(2) சாலை அமைப்புப் பணிகளில் இயந்திரக் கருவிகளையும், மனித உழைப்பை யும் உகந்த அளவு பயன்படுத்தும் வகையில் அமைப்பு முறைகளை வகுத்தல் பற்றி ஆராய்தல்.

(3) நெல்சன் மாணிக்கம் சாலையில் அமைந்துள்ள போக்குவரத்து சுரங்கப் பாதையில் பதிக்கப்பட்டுள்ள கருவிகளின் செயல்முறையினைக் கண்டு, திறன் ஆராய்தல்.

1989–90-ல் கீழ்க்கண்ட நான்கு புதிய திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

(1) நெடுஞ்சாலைத் தளங்களின் மேற்பரப்பு நயம் பற்றிய ஆய்வு.

(2) ஆர். 42 நிலக்கீல் இடுக்குகள் நீண்ட நாள் உழைக்கவும், வலிமையைப் பெருக்குவதற்காக நிலக்கீலில் சேர்க்கை கூறுகளை சேர்ப்பதின் பயன்.

(3) பாலத்தின்மேல் தளங்களின் வெப்பப் பகிர்வு பற்றிய நீண்ட கால ஆய்வு.

(4) கற்கலவை கட்டுமானங்களைப் பழுது பார்க்கப் பயன்படும் பொருள்கள் குறித்து ஆராய்தல்.

மற்றும் 23 ஆராய்ச்சித் திட்டங்கள் முந்தைய ஆண்டுகளிலிருந்து தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது.

1989-90 ஆம் ஆண்டு ஆசிய மேம்பாட்டு வங்கியில் தொழில் நுட்ப அலுவலர் துணைக் கொண்டு சாலைப் பராமரிப்பு மேலாண்மைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. மாநில நெடுஞ்சாலையில் 1,985 கி.மீ. நீளமும், மாவட்ட நெடுஞ்சாலைகளில் 5,000 கி.மீ. நீளமும் சோதனைக்காக எடுக்கப்பட்டு பல தொழில் நுட்பக் கோட்பாட்டின்படி ‘ரமரிப்பு செலவினைக் குறைத்து சிறந்த முறையில் மேம்பாட்டு முறைகளை செயல் படுத்த் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. இத்திட்டம் ஆகஸ்டு 1989 இல் ஆரம்பிக்கப் பட்டது. இதன் கீழ், இத்துறையின் 30 பொறியாளர்களுக்கு புதிய தொழில் நுட்பங் ளை கணிப் பொறியின் மூலம் பயன்படுத்துவது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் பகுதி-2 திட்டத்தின் கீழ் ஆராய்ச்சி மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ. 26.00 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதில் ரூ. 19.83 இலட்சங்கள் அறிவியல் கருவிகள் வாங்குவதற்கும், ஆய்வக வசதிகளைப் பெருக்குவதற்கும் செலவிடப்பட்டது.

1989–90 இல் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய செயல்முறைகளுக்காகவும், பராமரிப்புப் பணிகளுக்காகவும் ரூ. 13.00 இலட்சம் செலவிடப்பட்டது.

சிறப்புத் தகவல் :

நடப்பாண்டில் 29 ஆம் ஆராய்ச்சி அறிவுரை அவைக் கூட்டம் 29–12–1989 இல் நடைபெற்றது.

புதிய முன்னேற்றங்களை பற்றிய கூடுதல் அறிவு வளர்ச்சிக்காக, தொழில் நுட்பக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டது.

இத்துறையைச் சார்ந்த கோட்டப் பொறியாளர், உதவிக் கோட்டப் பொறியாளர், உதவிப் பொறியாளர், இளநிலைப் பொறியாளர் போன்ற பணிநிலைப் பிரிவுகளில் நான்கு புதிய பயிற்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டது.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து மூன்று உயர் அலுவலர்கள் டில்லியிலுள்ள மத்திய சாலை ஆராய்ச்சி நிலையத்தில் பயிற்சிக்காகவும், இருவர் கருத்தரங்குக்காகவும் அனுப்பப்பட்டனர்.

முடிவுரை :

தென் மண்டலத்தில், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், புலம் சார்ந்த ஆராய்ச்சியினைத் தொடர்ந்து நடத்துவதிலும், இந்திய அரசின் ஆதரவு பெற்ற பல ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு நடத்துவதிலும் ஈடுபட்டுள்ளது. ஆராய்ச்சி மேம்பாட்டுத் திட்டங்களை வளர்ப்பதற்காகவும், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய மண்டல ஆய்வகங்களுக்கு கூடுதல் நிதியும் சிறப்பு அலுவலர்களும், கூடுதல் அலுவலர்களும் அனுமதிக்கப்படுவதற்காக தமிழக அரசுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளது.

தேசிய நெடுஞ்சாலை, 45,

முன்னுரை :

தேசிய நெடுஞ்சாலை எண் 45, தமிழ்நாட்டின் ஒரு முக்கியமான சாலை வழியாகும். இதனுடைய மொத்த நீளம் 421.60 கி.மீ. இந்த நெடுஞ்சாலை சென்னையில் ஆரம்பமாகி திண்டுக்கல் வரை முடியும்.

தேசிய நெடுஞ்சாலை 45-ல் உள்ள மிகக் கூடுதலான போக்குவரத்தின் காரணமாக உலக வங்கித் திட்டத்தின் உதவியுடன் தாம்பரத்திலிருந்து விழுப்புரம் வரை உள்ள 132.40 கி.மீ. சாலையை மேம்படுத்தவும், அகலப்படுத்தவும் செய்ய எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்தத் திட்டத்தில் கி.மீ. 27/8 முதல் கி.மீ. 67/0 வரை நான்கு வழி சாலையாகவும், செங்கல்பட்டு நகரத்திற்கு கி.மீ. 54/4 முதல் கி.மீ. 61/8 வரை புறவழிச் சாலை அமைக்க உள்ளது. கி.மீ. 67/0 முதல் கி.மீ. 160/2 வரை உள்ள இருவழிச் சாலையில் 7.5 மீட்டர் அகலத்திற்கு விரிவாக்கம் செய்து சாலையின் இரு பக்கமும் 2.5 மீட்டர் அகலத்திற்கு சாலையின் ஓரங்களை பலப்படுத்தவும் ஆகும்.

2. செயல்பாடுகள்.—இத்திட்டம் ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. இதில் இரு பகுதிகளின் வேலைகள் முழுமையாக முடிக்கப்பட்டும் இரு பகுதிகள் வேலைகள் முடிவுறும் நிலையிலும் மற்ற இரு பகுதிகளின் வேலைகள் தொடக்க நிலையிலும் உள்ளன.

வேலையின் முன்னேற்றம் (வேலையின் முன்னேற்றத்தில் இலக்கு மற்றும் சாதனை)

பகுதி 1	தேசிய நெடுஞ்சாலை 45-ல் கி.மீ. 27/8 முதல் கி.மீ. 54/4 வரை உள்ள சாலையை நான்கு வழிப் பாதையாக விரிவாக்கம் செய்து மேம்பாடு செய்தலும் ஆகும்.
செயல் குறித்து (1989–90).	3.12 சதவீதவேலைகள் முடிக்கப்பட்டது.
பகுதி 2	தேசிய நெடுஞ்சாலை 45-ல் கி.மீ. 54/4 முதல் கி.மீ. 67/0 வரை உள்ள சாலையை நான்கு வழிப் பாதையாக விரிவாக்கம் செய்து மேம்பாடு செய்தலும் ஆகும்.
செயல் குறித்து (1989-90).	2 சதவீத வேலைகள் முடிக்கப்பட்டது.

பகுதி 3	கி.மீ. 62/4–5-ல் பாலாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்.
செயல் குறித்து (1989–90).	18 சதவீத வேலைகள் முடிக்கப்பட்டது.
பகுதி 4	தாம்பரம் மற்றும் பரனூரில் இரு வழிப்பாதை கூடுதலாகப் பாலங்கள் கட்டுதலும், செங்கல்பட்டு புறவழிச் சாலையின் நான்கு வழிப்பாதை பாலம் கட்டுதல்.
செயல் குறித்து	25 சதவீத் வேலைகள் முடிக்கப்பட்டது.
பகுதி 5	தேசிய நெடுஞ்சாலை 45-ல் கி.மீ. 67/0 முதல் கி.மீ. 104/0 வரை உள்ள் சாலையை அகலப்படுத்தலும், மேம்பாடு செய்தலும் ஆகும்.
செயல் குறித்து .. (1989–90).	36 சதவீத் வேலைகள் முடிக்கப்பட்டது.
பகுதி 6	தேசிய நெடுஞ்சாலை 45-ல் கி.மீ. 104/0 முதல் கி.மீ. 160/2 வரை உள்ள் சாலையை அகலப்படுத்தலும் மேம்பாடு செய்தலும் ஆகும்.
செயல்குறித்து	38 சதவீத வேலைகள் முடிக்கப்பட்டது.

4. இந்த வருடம் எடுக்கப்பட்ட புது திட்டங்கள் (குறிக்கோள் இலக்கு சாதனைகள்.—

இவ்வட்டம் உலக வங்கித் திட்டத்தின் வேலைகள் செய்ல் படுத்தும் சிறப்பு வட்டம் என்பதால் புதிய திட்டங்கள் ஏதும் செயல்படுத்தவில்லை.

5. பொருள்தார ஒதுக்கீடு மற்றும் செலவினங்களும்.—

பகுதி.	1989–90-க்கான நிதி ஒதுக்கீடு	1989–90-க்கான செலவு.
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்.)	
பகுதி 1	200.00	190.64
பகுதி 2	150.00	143.21
பகுதி 3	30.00	30.92
பகுதி 4	0.01	
பகுதி 5	325.00	297.19
பகுதி 6	450.00	457.75

6. சிறப்புத் தகவல்.—இத்திட்டம் உலக வங்கி மூலமாக மேற்கொள்ளப்படும் பன்னாட்டு ஒப்பந்தப் புள்ளிகள் மூலம் தமிழ் நாட்டில் செய்ல்படுத்தப்படும் முதல் திட்டமாகும்.

7. முடிவுரை.—இத்திட்டம் வேலை தொடங்கியநாட்களில் இருந்து 36 மாதங்களில் முடிக்கப்பட வேண்டும். நில கையகப்படுத்தலும் வனத்துறை நிலங்களை மாற்றுதல் செய்வதிலும் சில தடங்கல்கள் இருந்த போதிலும் இத்திட்டம் நன்றாக செயல்பட்டு வருகின்றது.

(vi) கிராமச் சாலைத் திட்டம்.

கிராமச் சாலைத் திட்டம் 1972–73 ஆண்டு முதல் தமிழக அரசால் செயலாக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் மக்கள் தொகை 1500ம் அதற்கு மேலும் உள்ள இராம்மமல்ல் அரசு சாலைகளுடன் எல்லா பருவத்திற்கும் ஏற்ற சாலைகளால் இணைக்க உத்தேசிக்கப்பட்டுளளது. இத்திட்டத்தினால் மேம்படுத்தப்படும் ஊராட்சி சாலைகள் பணி முடிந்த பின்னர் அரசு இதர மோவட்ட சாலை பராமரிக்கப்படுகிறன. கடற்கரைக்கு அருகாமையில்உள்ள கிராமங்கள் மலைவாழ் பகுதி

பழங்குடியினர் வசிக்கும் பகுதி இவைகளுக்கு கூட்டாக 1,500 மக்கள் தொகை, 1 கி.மீ. வட்டத்திற்குள் இருக்கும் குடியிருப்புகளில் ஒட்டுமொத்த மக்கள் தொகை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

இந்திய அரசு மக்கள் தொகை 1971 கணக்கெடுப்பின்படி, 1500-க்கு மேல் இருக்கும் கிராமங்கள் அனைத்தும் முற்றிலும் இணைக்கப்படல் வேண்டும் என்றும், மக்கள் தொகை 1000–1500-க்குள் இருக்கும் கிராமங்களுக்கு 50 விழுக்காடு கிராமங்கள் இணைப்பு சாலை வசதி 7-ம் திட்ட கால 1 கட்டத்திற்குள் அதாவது 1989–1990-க்குள் பெறப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறது.

நிறைவுக் கூறுத் திட்டம்:

ஆதி திராவிட மக்கள் மிகுதியாக வசிக்கின்ற கிராமங்களுக்கு ஆதி திராவிட மக்களின் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றம் காணும் வகையில், நிறைவுக் கூறுத் திட்டம் 1980–81 முதல் அமுலில் உள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்கள் அதிகம் வசிக்கும் கிராமங்களுக்கு எல்லா காலங்களுக்கும் ஏற்ற சாலைகள் வசதி செய்து தரப்படுகின்றன.

பேருந்து தட சாலை மேம்பாடு மற்றும் ஏற்புத் திட்டம்.

இந்த திட்டமில்லா தொகுப்பில், மூன்று ஆண்டுகளுக்கு மேல் பேருந்துகள் ஓடிய பஞ்சாயத்து மற்றும் ஒன்றிய சாலைகள், படிப்படியாக மேம்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இத்திட்டம் 1960–61-ம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் மேம்பாடு செய்யப்படும் சாலைகள், அரசால், ''இதர மாவட்ட சாலைகளாக'' பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. 1986–87-ம் ஆண்டு முடிய, 24,831 கி.மீ. நீள பஞ்சாயத்து/பஞ்சாயத்து ஒன்றிய சாலைகள் மேம்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

பொருளாதார மற்றும் பன்மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டம்:

இது இந்திய அரசால் நபார்டு உதவி பெற்ற முன்னோடி திட்டமாகும். மாநிலங்களிடையே பொருளாதார பன்மாநில முக்கியத்துவம் வாய்ந்த சாலை மற்றும் பாலங்களை கட்டவும் மேம்பாடு செய்யவும் ஏற்படுத்தப்பட்டது. இது 4-ம் திட்ட காலத்திலிருந்து மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும். 6–ம் திட்ட காலத்தில், இழக்குக் கடற்கரைச் சாலையின் சில தொகுதிகளை மேம்பாடு செய்ய, சூலை 1982-ல், ரூ. 300 லட்சத்திற்கு இந்திய அரசு அனுமதியளித்துள்ளது. இத்திட்டத்தில், மத்திய அரசின் நிதி உதவி 50 விழுக்காடும், மீதம் மாநில அரசும் ஈடு செய்யப்பட வேண்டும். இந்தத் திட்டத்தில் அநேகமாக எல்லா வேலைகளும் முடிவுற்றன.

கரும்பு சாலை அபிவிருத்தி திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் மூல வேலைகளுக்கு 1—4—1989 அன்று ரூ. 600 இலட்சம் அளவிற்கு வேலை பளு உள்ளது. இவ்வேலைகள் 1989–90-ம் ஆண்டு எடுத்துக் கொள்ளப்பட்டு வரும் ஆண்டுகளில் முடிவுறும். மேலும், ரூ. 60 கோடி மதிப்பீட்டிற்கு பெருந்திட்ட தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த பெருந்திட்டத்திலிருந்து மேற்படி வேலைகள் பல கட்டங்களில் மேற்கொள்ளப்படும்.

(vii) இழக்கு கடற்கரைச் சாலை.

இழக்கு கடற்கரை சாலையை திருவான்மியூரிலிருந்து கடலூர் வரை இருவழிப் பாதை வசதிக்காக முன்னேற்றம் செய்ய ஒரு ஒப்பந்தம் ஆசிய வளர்ச்சி வங்கியுடன் 27—12—1988-ல் செய்து கொள்ளப்பட்டது. இந்தக் கடன் உதவி ரூ. 36.70 கோடி (24.47 மில்லியன் டாலர்களாகும்.) *மேம்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சாலையின் நீளம் சுமார் 166 கி.மீ. ஆகும். இந்த திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 53 கோடியாகும். இந்த திட்டத்தை நான்கு வருடங்களில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 1989-90 ஆம் ஆண்டில் ரூ.20 லட்சங்கள் சேவை வசதிகளை மாற்றி அமைப்பதற்காக செலவழிக்கப்பட்டுள்ளது. கட்டுமான வேலைக்கான ஒப்பந்தப் புள்ளிகள் 21—3—1991-ல் ஏற்கப்பட்டுள்ளன. இந்த சாலையின் கட்டுமானப் பணிகள் 1991–92 ஆம் ஆண்டில் தொடங்கப்படவுள்ளன.

செயல்பாடுகள் :

எல்லா திட்டப் பணிகளுக்கும் இத் துறை முன்னுரிமை அடிப்படையில் எல்லா மாவட்டங்களுக்கும் வேலைகளின் பட்டியலை அரசின் ஒப்புதலுக்கு அனுப்புகிறது.

அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டபின், எல்லா சாலைப்பணிகளுக்கும் களப் பணியாளர்களும் விரிவானவிளக்கப்படங்களுடன் விவர மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு. உரிய அலுவலர்களால் தொழில் நுட்ப அங்கீகாரம் அளிக்கப்படுகிறது. பின்பு, வேலைகள் ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தங்கள் மூலமாக ஒப்படைக்கப்பட்டு, செய லாக்கப்படுகின்றன. வேலைகள் முடிவுற்றபின், நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறையினருக்கு '' இதர மாவட்டச் சாலைகளாகப் '' பராமரிக்கப்பட ஒப்படைக்கப்படுகின்றன.

கரும்பு சாலை மேம்பாட்டுப்பணிகளினால் மேம்பாடு செய்யப்படும் சாலைகள், இந்த துறையினரால் பராமரிக்கப்படுகின்றன.

எல்லா திட்டங்களின் நிதி மற்றும் செயல் இலக்கு/சாதனை நிதிநிலை முன்னேற்றம்.

	இலக்கு.	சாதனை.
கிராமச் சாலைத் திட்டம்	650	651.68
சிறப்பு உறுப்புத் திட்டம்	71.70	71.78
பேருந்து தட சாலை ஏற்புத் திட்டம்.	1,000	999.82
கிழக்குக் கடற்கரை சாலைகள்	20	20.00
பல மாநில பொருளாதார முன்னேற்றப் பணி.	15	15.01

செயல் முன்னேற்றம் :

	இலக்கு.		சாதனை.	
	நீளம். (கி.மீ.)	குறுக்கு வடிகால் வேலைகள் எண்ணிக்கை.	நீளம் (கி.மீ.)	குறுக்கு வடிகால் வேலைகள் எண்ணிக்கை.
கிராமச் சாலைகள் திட்டம்	344.40	380	323.42	507
சிறப்பு உறுப்புத் திட்டம்	40.00	41	38.00	60
பேருந்து தடசாலை திட்டம் ..	500.00	876		

முடிவுரை :

கிராம சாலைகள் :

7-ம் கட்ட குறைந்த பட்ச திட்டத்தில் ரூ. 60 கோடி நிறுவனச் செலவையும் சேர்த்து இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 7-ம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நிர்வாகச் செலவையும் சேர்த்து ரூ. 43.54 கோடி செலவீனம் ஆகியுள்ளது.

பேருந்து தட சாலைகள் ஏற்புத்திட்டம் :

ஒவ்வொரு ஆண்டும் சாலைப் பராமரிப்பு நிதி ஒதுக்கிட்டின்றி திட்டமிடப்படா பணிகளுக்கு அரசினால் ரூ. 10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 1988–89ஆம் ஆண்டிற்கு அரசு ரூ. 9.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

1984 முதல் 1989 வரையில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 2,500 கி.மீ.வீதம் சுமார் 12,500 கி.மீ. நீளமுள்ள சாலைகள் பேருந்து சாலைகள் திட்டத்தில் மேம்பாட்டிற்கு எடுத்துக் கொள்ள ஏற்புடையதாகின்றன. இந்த சாலைகளை மேம்பாடு செய்ய சுமார் 406.25 கோடி தேவைப்படும். எனவே, ஆண்டு நிதி ஒதுக்கீடு இதன் அடிப்படையில் திருத்தியமைக்கப்பட வேண்டும்.

சாலை போக்குவரத்து நிறுவனம்

சாலை போக்குவரத்து நிறுவனமானது 1960 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு சங்கப்பதிவு விதியின் கீழ் 1976-ம் ஆண்டு துவங்கப்பட்டது. இந்நிறுவன ஆராய்ச்சிப் பிரிவு மேலாளர் மற்றும் மேற்பார்வையாளர்களுக்காக பயிற்சி அளித்தல். பேருந்து களை கவனித்து ஆய்வு செய்தல் மற்றும் ஓட்டுநர்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகியவை தமிழ்நாடு அரசு போக்குவரத்து தொழில் நிறுவனங்களின் நன்மைக்காக நடத்தப்பட்டு வருகிறது.

1989–90 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் பல்வேறு துறைகளில் புரிந்த சாதனைகள் மேலே கொடுக்கப்பட்டுள்ளன:—

அ. ஆராய்ச்சி :

(1) இந்த ஆண்டின் பணிமனைகளின் வடிவமைப்பு குறித்த ஆய்வு முடிக்கப் பட்டன.

(2) பாதசாரிகள் மற்றும் போக்குவரத்து பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு ஆகியவற்றின் மீதான அறிக்கைகள் முடிக்கப்பட்டன.

(3) காவல் துறையினரால் கொடுக்கப்பட்ட புள்ளிவிவரங்களின் அடிப்படையில் 16 மாவட்டங்களுக்கான விபத்து அறிக்கைகள் முடிக்கப்பட்டன. முந்தைய ஆண்டே மூன்று மாவட்டங்களுக்கான விபத்து அறிக்கைகள் வெளியிடப்பட்டன.

(4) அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கான விபத்து அறிக்கைகளை 1989 ஆம் ஆண்டிற்கான விபத்து அறிக்கையுடன் ஒப்பிடப்பட்டு அதுபற்றிய அறிக்கை முடிக்கப்பட்டு தக்க நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட போக்குவரத்துக் கழகங்களுக்கு அனுப்பப்பட்டன.

(5) இந்த நிறுவனத்தின் மூலம் செய்யப்பட்ட விபத்து பற்றிய ஆய்வின் அடிப்படையில் விபத்து புலனாய்வு படிவங்கள் பயன்படுத்தப்பட்டு அதன் மூலமாக காவல் துறையினரால் புலனாய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(6) 46 மாவட்ட காவல் துறை அதிகாரிகளுக்காக, மேல்குறித்த படிவங்களை பூர்த்தி செய்வதற்காக பயிற்சி, சென்னை மற்றும் மதுரையில் நடத்தப்பட்டன.

(7) போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த 187 நபர்களுக்கு அறிவியல் முறையில் விபத்து பற்றிய ஆய்வுகளை நடத்துவதற்கான பயிற்சி அளிக்கப்பட்டது.

(8) இயந்திரவியல் ஆய்வும் பிரிவினரால் ஓட்டுநர் திறன் பரிசோதனைக் கருவி மூலம் ஓட்டுநரின் செயல்திறன் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆ. உதிரி பாகங்கள் பரிசோதனை :

(1) கவனிப்பு ஆய்வுக் கூடத்தில் 29 பேருந்து பாகங்களுக்கான தரக் கட்டுப்பாடு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த சோதனைக்கான மாதிரி சோதனைகள் போக்குவரத்துக் கழகங்களிடமிருந்தும் சிறு தொழில் நிறுவனங்களிடமிருந்தும் பெறப்பட்டன.

(2) 1989-90 ஆம் ஆண்டில் போக்குவரத்துக் கழகங்களிடமிருந்து 32 பேருந்து பாகங்கள் பெறப்பட்டு 30 பாகங்களுக்கான சோதனைகள் செய்யப்பட்டன.

இ. பயிற்சி :

1989-90 ஆம் ஆண்டில் பல்வேறு நிலைகளில் உள்ள அதிகாரிகளுக்கான 30 பயிற்சி பற்றிய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

ஓட்டுநர் பயிற்சி :

(1) கும்மிடிப்பூண்டியில் செயல்பட்டுவரும் இந் நிறுவனத்தில் ஓட்டுநர் பயிற்சிப் பிரிவு கனரக பயணிகள் வாகனங்களின் ஓட்டுநர்களுக்கான ஊக்குவிப்புப் பயிற்சியை அளித்து வருகிறது.

(2) இந்த வருடம் 600 பயிற்சியாளர்கள் ஓட்டுநர் பயிற்சி பிரிவில் 31-3-1989 வரை நான்கு பிரிவுகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(3) ஓட்டுநர் பயிற்சியாளர்களுக்கான ஓட்டும் திறன் பற்றிய மாதிரி படிவம் தயாரித்தல், போக்குவரத்துக்கல்வி மற்றும் வண்டிகளின் இயந்திரவியல் பற்றிய அறிக்கை ஆகியவை இந்த ஆண்டில் குறிப்பிடத்தக்க சாதனை ஆகும். கனரக பயணிகள வாகனங்களில் ஓட்டுநர்களுக்கான '' அடிப்படை ஓட்டு பயிற்சி '' மற்றும் 'திறன் அபிவிருத்தி பயிற்சி' என்ற நூல் இந்த ஆண்டில் தயாரிக்கப்பட்டது.

(4) பல்வேறு போக்குவரத்துக் கழகங்களிடமிருந்து வந்த 126 பயிற்சியாளர்களுக்கு 9 நினைவூட்டுப் பயிற்சி மற்றும் தொடக்க நிலை பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

(5) பிற நிறுவனங்களைச் சேர்ந்த 94 ஓட்டுநர்களுக்கு 7 சிறப்பு பயிற்சிகள் நடத்தப்பட்டன.

(6) நினைவூட்டுப் பயிற்சி மற்றும் சிறப்புப் பயிற்சிகள் தவிர சேரன் பயிற்சி நிலையம் மற்றும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த 102 ஓட்டுநர் பயிற்சியாளர்களுக்காக 15 நாட்கள் பயிற்சிகள் நடத்தப்பட்டு மற்றும் தேர்வுகளும் நடத்தப்பட்டன.

(7) 9 போக்குவரத்துக் கழகங்களின் பாதுகாப்பு மருந்தகம் பற்றிய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

சிறு துறைமுகங்கள்

தமிழ்நாடு துறைமுகத் துறை தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத் துறையின் ஆட்சிக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. கடலூர், நாகப்பட்டினம் ஆகிய இரு இடைநிலைத் துறைமுகங்களும், இராமேசுவரம், பாம்பன், மேக்கரை, வாலிநோக்கம், குளச்சல் மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஆறு சிறு துறைமுகங்களும் இத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள மாநிலத் துறைமுக அலுவலர் அவர்கள் இத்துறையின் தலைவர் ஆவார்.

வானிலை :

கடலூர் துறைமுகம் :

ஆண்டு முழுவதும் வழக்கமான பருவநிலை காணப்பட்டது. இந்த ஆண்டில் பருவநிலைக் கோளாறு ஏதும் ஏற்படவில்லை.

நாகப்பட்டினம் துறைமுகம் :

நவம்பர் 1989 மற்றும் டிசம்பர் 1989 ஆகிய மாதங்கள் தவிர மற்ற மாதங்களில் வானிலை சாதாரணமாக இருந்தது.

இராமேஸ்வரம் துறைமுகம் :

வடகிழக்கு பருவ காற்று காரணமாக வானிலையில் மாறுதல் ஏற்பட்டது தவிர மற்ற காலங்களில் வானிலை சாதாரணமாக இருந்தது.

பாம்பன் துறைமுகம் :

வடகிழக்கு பருவ நிலையினால் வானிலையில் மாற்றம் ஏற்பட்டது தவிர மற்ற காலங்களில் வானிலை சாதாரணமாக இருந்தது.

குளச்சல் துறைமுகம் :

தென்கிழக்கு பருவ நிலையினால் வானிலையில் மாற்றம் ஏற்பட்டது தவிர மற்ற காலங்களில் வானிலை சீராக இருந்தது.

மற்ற துறைமுகங்கள் :

(கன்னியாகுமரி, மேக்கரை மற்றும் வாலிநோக்கம்.)

வானிலை சாதாரணமான பருவகாலத்தை ஒட்டியே இருந்தது.

போக்குவரத்து :

கடலூர் துறைமுகம் :

இவ்வாண்டில் இத்துறைமுகத்திற்கு 20 கப்பல்கள் வந்தன. 20 கப்பல்கள் வெளிச் சென்றன. சென்ற ஆண்டில் 19 கப்பல்கள் வந்தன. 16 கப்பல்கள் வெளிச் சென்றன.

இந்த ஆண்டில் இத்துறைமுகத்தில் 268062 மெ. டன் எடையுள்ள சரக்குகள் கையாளப்பட்டன. சென்ற வருடம் 200726 மெ. டன் எடையுள்ள சரக்கு கையாளப் பட்டது. இவ்வாண்டில் ஏற்றுமதியான சரக்கு ஏதுமில்லை. உரம் 249204 மெ. டன் எடையும் மற்றும் பிளோர்ஸ்பார் (Flourspar) 18858 மெ. டன் எடையும் இந்த ஆண்டின் முக்கிய சரக்காக இறக்குமதி செய்யப்பட்டது.

இலங்கையில் தங்கியிருக்கும் இந்திய அமைதிப் படையினருக்கு உபயோகத் திற்காக 2002 எண்கள் செம்மறியாடு மற்றும் ஆடுகள் பாய்மரக் கப்பல்கள் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

நாகப்பட்டினம் துறைமுகம் :

அறிக்கைக்குரிய இவ்வாண்டில் 28 கப்பல்கள் வருகை புரிந்தன. 28 கப்பல்கள் இத்துறைமுகத்திலிருந்து வெளிச் சென்றன. சென்ற ஆண்டு இவை முறையே 23 கப்பல்கள் மற்றும் 24 கப்பல்கள் என இருந்தன.

இவ்வாண்டு மொத்தம் 71579 மெ. டன் எடையுள்ள சரக்கு கையாளப்பட்டது. சென்ற ஆண்டு இது மொத்தம் 80505 மெ. டன் சரக்கு என இருந்தது. இவ்வாண்டில் 58220 மெ. டன் எடையுள்ள சரக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. 13359 மெ. டன் எடையுள்ள சரக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இறக்குமதியில் உரங்கள் முக்கிய சரக்காகவும், ஏற்றுமதியில் பெல்ஸ்பார் (Feldspar) வெங்காயம் மற்றும் பொதுச் சரக்கு ஆகியவை முக்கிய சரக்காகவும் இருந்தது.

பயணிகள் கப்பல் ''எம்.வி. சிதம்பரம்'' தீ விபத்துக்குள்ளான காரணத்தால் சிங்கப்பூர் மற்றும் மலேயியாவிற்கு செல்லும் பயணிகள் போக்குவரத்து 12-2-1985 முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் தங்கியிருக்கும் இந்திய அமைதிப் படையினரின் உபயோகத்திற் காக 61219 எண்கள் ஆடுகள் மற்றும் செம்மறியாடுகள் இலங்கைக்கு பாய்மரக் கப்பல்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டது. 1.5 மெ. டன் எடையுள்ள ஆட்டுத் தோல் பாய்மரக் கப்பல்கள் மூலம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

இராமேசுவரம் துறைமுகம் :

இலங்கையில் ஏற்பட்ட இன வன்முறை காரணமாக இராமேசுவரத்திற்கும தலைமன்னாருக்குமிடையே படகு போக்குவரத்து 1985 சனவரி முதல் மைய அரசினரால் நிறுத்தப்பட்டது.

இலங்கையில் தங்கியிருக்கும் இந்திய அமைதிப் படையினரின் உபயோகத்திற் காக 23835 எண்கள் செம்மறியாடுகள் மற்றும் ஆடுகள் பாய்மரக் கப்பல்கள் மூலம் இலங்கைக்கு அனுப்பப்பட்டது. 2.8 மெ. டன் எடையுள்ள செம்மறியாட்டுத் தோல் பாய் மரக்கப்பல்கள் மூலம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

பாம்பன் துறைமுகம் :

இந்த ஆண்டில் 84 கலங்கள் பாம்பன் காவையை கடந்து செல்ல வழிகாட்டப்பட் டுள்ளன. இத்துறைமுகத்தில் சரக்கு மற்றும் பயணிகள் போக்குவரத்து இடையாது.

சூளச்சல் துறைமுகம் :

இந்த ஆண்டில் இரண்டு கப்பல்கள் இத்துறைமுகத்திற்கு வந்தன. ஒரு கப்பல் இத்துறைமுகத்தை விட்டுச் சென்றது. 28200 மெ. டன் எடையுள்ள இல்லுமினைட் மணல் ஏற்றுமதி செய்யப்பட்டது. சென்ற ஆண்டு 25200 மெ. டன். எடையுள்ள இல்லுமினைட் மணல் ஏற்றுமதி செய்யப்பட்டது.

வாலிநோக்கம் துறைமுகம் :

இத்துறைமுகம் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சிறு துறைமுகம் ஆகும். கப்பல்கள் இத்துறைமுகத்திற்கு உடைத்தெடுப்பதற்காக வருகின்றன. இதுவரை 4 கப்பல்கள் உடைத்தெடுப்பதற்காக இத்துறைமுகத்திற்கு வந்துள்ளன.

கீழக்கரை துறைமுகம் :

சரக்கு ஏற்றுமதியோ அல்லது இறக்குமதியோ இத்துறைமுகத்தில் நடைபெறுவ தில்லை. இந்த ஆண்டில் கப்பல்கள் ஏதும் இத்துறைமுகத்தின் வழிகாட்டப்பட்டு செல்லவில்லை.

கன்னியாகுமரி துறைமுகம் :

படகுப் போக்குவரத்தினை கட்டுப்படுத்தி மேற்பார்வையிடுவது மற்றும் பூம்பு கார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தினால் கரைக்கும், விவேகானந்தா நினைவு பாறைக்கும் இடையே நடத்தப்படும் பயணிகள் போக்குவரத்தினை மேற்பார்வை யிடுவது ஆகிய பணிகளை இத்துறைமுகம் முக்கியமாக கவனித்து வருகிறது.

தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்பு

(1) மோட்டார் வாகன பராமரிப்புத் துறை வருவாய் வாரியத்தின் கீழ் 1955 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு இயங்கியது. 1977-ஆம் ஆண்டு முதல் ஒரு இயக்குநரைக் கொண்டு தனித்துறையாக செயல்பட்டுக் கொண்டு வருகிறது. இத்துறை 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் பணித்துறைபாக இயங்கிக் கொண்டு வருகிறது. தற்பொழுது இத்துறையில் கட்டுப்பாட்டின் கீழ் 16 தானியங்கி பணிமனைகளும், ஒரு சுத்திகரிப்பு நிலையமும் தமிழ்நாடு அரசின் பல துறைகளுக்கு சொந்த மான சுமார் 7000 வாகனங்களை பழுது பார்த்தும் பராமரித்தும் இயங்கி வருகிறது.

(2) மேற்குறிப்பிட்டுள்ள 16 பணிமனைகளில் இரண்டு அரசு தானியங்கி பணி மனைகள் ஒன்று தேவர் திருமகன் மாவட்டம் சிவகங்கையிலும் மற்றொன்று இராம நாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரத்திலும் முறையே ஜனவரி 1990 மற்றும் பிப்ரவரி 1990ல் திறக்கப்பட்டது.

(3) இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 10 எரிபொருள் வழங்கும் நிலையங்கள் (சென்னையில் இரண்டும் தஞ்சாவூர், சேலம், மதுரை, கோயம்புத்தூர், கடலூர், திருச்சி, தர்மபுரி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் ஒவ்வொன்று வீதமும்) அரசுத் துறைக்குச் சொந்தமான வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கும் பொருட்டு இயங்கி வருகின்றன.

(4) வாகனங்களின் செலவினங்களுக்கான கணக்குகள் அதன் தொடர்பான பதிவேடுகள் ஆகியவற்றை தணிக்கை செய்யவும், எரிபொருள் தவறான முறையில் பயன்படுத்துவதை கண்டு பிடிக்கவும், மற்றும் வாகனங்களை முறையற்ற வகையில் பராமரிப்பதை கண்டு பிடிக்கவும் இதன் மூலமாக வாகனங்களை நல்ல முறையில் பயன் படுத்துவதிலும், பராமரிப்பதிலும் முன்னேற்றம் காண வேண்டும் என்ற நோக் குடன், திட்டம் தீட்டப்பட்டு அதன் தொடர்பாக வாகனங்கள் தணிக்கை முழு செயலாற்றிக் கொண்டு வருகிறது.

(5) 1989-90 ஆண்டில் இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்து பணிமனைகளிலும் மொத்தமாக 18,112 வாகனங்கள் பழுது பார்ப்பதற்கான பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

(6) புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டையிலும், பெரியார் மாவட்டத் தில் ஈரோட்டிலும் மற்றும் காமராஜர் மாவட்டத்தில் விருதுநகரிலும் புதிய பணிமனை கள் நிறுவிட அரசு ஒப்புதல் பெறப்பட்டு தக்க நடவடிக்கைகளை எடுக்கப்பட்டு வருகின்றன

(7) 1—4—83 முதல் வாகனங்கள் பராமரிக்க பொது வரவு செலவுத் திட்டம் இத்துறையில் புகுத்தப்பட்டு அதன் மூலம் பராமரிக்க முழு தொகையினையும் இத் துறைக்கு பிரித்து கொடுக்கப்பட்டதன் மூலம், இதுநாள் வரை வண்டிக்கு சொந்தமாக அதிகாரிகளால் பராமரிக்கப்பட்டு வந்த முறைக்கு பதிலாக இத்துறையே எல்லா வாகனங்களையும் பழுது பார்ப்பதையும் பராமரிப்பதையும் செயல்படுத்தி வருகிறது. இந்த வாகனங்கள பராமரிக்க பொது வரவு—செலவு திட்டத்தினை இத்துறையில் புகுத்தப்பட்டதின் மூலம், கீழ்க்குறிப்பிட்டுள்ள பயன்களை அடைந்துள்ளன :—

(அ) தரமான பழுதுகள் நீக்கம் செய்யப்படுவதை கருத்தில் கொண்டு வாகனங் களுக்கான பழுதுகள் முறையாக நீக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) உதிரி பாகங்கள் மொத்தமாக உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்கப்படு வதன் மூலம் தரம் நிலைநாட்டப்படுகிறது.

(இ) உதிரி பாகங்கள உற்பத்தியாளர்களிடமே உற்பத்தியாளர் விலையிலேயே வாங்குவதால் கணிசமான தொகை சேமிப்பு ஏற்படுகிறது.

(ஈ) தனியார் பணிமனைகளில் செய்யப்படும் தேவையில்லாத பழுதுகள் தவிர்க் கப்பட்டுள்ளன.

(உ) தனியார் பணிமனைகளில் காலம் முடிவதற்கு முன்னரே உதிரி பாகங்களை மாற்றுதல் தவிர்க்கப்பட்டுள்ளது.

(ஊ) ஒவ்வொரு பாகத்தின் ஆயுட்காலமும் நிலை நாட்டப்பட்டுள்ளது.

(எ) வாகனங்களுக்கான உதிரி பாகங்களில் செலவும மிக்கனப்படுத்தப்பட்டு உளளன.

(ஏ) தொழிலாளியின் நேரத்தை நல்ல முறையில் உபயோகப்படுத்திக் கொள்ள தின் மூலம் இத்துறையில் உள்ள பணிமனைகளில் தொழிலாளியின் பணியின் நேரம் குறைக்கப்பட்டுள்ளது

(ஐ) வாகனங்கள் குறித்த சரித்திரம் பராமரிக்கப்பட்டு வருவதால் முந்தைய பழுதுகள் செய்யப்பட்ட விவரம் ஆராயப்பட்டு வாகனங்களில் பழுதுகள் விரைவாக நீக்கப்பட்டு வருகின்றன.

(8) இத்துறையில் திறமையை முடுக்கி விடுவதற்காகவும், வாகனங்களை பராமரிப்புத் திட்டத்தினை அபிவிருத்தி அடையச் செய்வதற்காகவும் அடுக்கு பாகங்களை பொருத்தும் முறை புகுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் மேலே குறிப்பிட்டுள்ள பயன்களையும் இத்துறை அடைந்துள்ளது.

(அ) வாகனங்கள பணிமனைகளில் நிறுத்தப்பட்டிருக்கும் காலம் குறைக்கப்பட்டுளளது.

(ஆ) வாகனங்களுக்கு தேவையான பழுதுகளை நீக்கும் பொருட்டு, பழுதடைந்த அடுக்கு பாகங்கள எடுக்கப்பட்டு முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

(இ) அடுக்கு பாகங்களை முழுவதுமாக பழுதுபார்க்கும் பணி சிறப்பாக தேர்ச்சி பெற்ற தொழிலாளிகளைக் கொண்டும் பார்க்கப்படுவதால் பூரணமாக பழுது பார்க்கும் நிலை உறுதியாக்கப்பட்டுளளது.

(ஈ) அடுக்கு பாகங்கள் பூரணமாக பழுதுகள் நீக்கப்படுவதால் வாகனங்கள் ஓடிக் கொண்டு இருக்கும்பொழுது பழுதடைவது தவிர்க்கப்பட்டுளளது.

(உ) வாகனங்களுக்கு விரைவாக பழுதுகள் நீக்கப்படுவதால் அலைகளை சாலையில் ஓடும் நாட்களின் எண்ணிக்கை அதிகரித்துளளது.

(ஊ) வாகனங்கள சாலையில் ஓடும் நாட்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் செயல் அலுவலர்கள் அதிகமான திட்டப் பணிகளை ஆய்வு செய்ய முடிவதோடு தரமான பணிகள புரியும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

(9) இவ்வாறு குவிக்கப்பட்ட வரவு-செலவு திட்டத்தின் மூலம் அரசுக்கு வாகனங்களைப் பராமரிப்பதன் மூலம் ஏற்படும் செலவுகள் குறைவதோடுமட்டும் அல்லாமல் வாகனங்கள ஆண்டில் அதிகமாக சாலையில் ஓடும் நாட்கள அதிகப்படுத்தி இருப்பதன் மூலம் பல துறைகள திட்ட பணிகளை செவ்வனே நிறைவேற்றிட உதவி புரிய முடிகிறது.



அரசு மைய அச்சகம், சென்னை-600 079